உ

சிவமயம்

சேக்கிழார் சுவாமிகள் பாடிய

பெரிய புராணம்

என்னும்

திருத்தொண்டர் புராணம்

உரையுடன்

பகுதி 5

வம்பருவரி வண்டுச்சருக்கம் II

வெள்ளானைச் சருக்கம் ஈறாக

எம்பிரான்

சுந்தரர்

அவர்களுடைய தமிழ்மறையுடன் கூடியது

உரையாசிரியர்

வை. நல்லையா

பிரசுரம்

இலங்கைமணி சைவநூற் பதிப்பகம்

சிவமயம்

சேக்கிழார் சுவாமிகள் பாடிய

பெரிய புராணம்

என்னும்

திருத்தொண்டர் புராணம்

உரையுடன்

பகுதி 5

வம்பருவரி வண்டுச்சருக்கம் 1

வெள்ளானைச் சருக்கம் ஈறுக

எம்பிரான்

சுந்தரர்

அவர் ஒதிய தமிழ்மறையுடன் கூடியது

உரையாசிரியர்

வை. நல்லையா

பிரசுரம்

இலங்கைமணி சைவநூற் பதிப்பகம்

திருவெண்காட்டு ஈசனே சுந்தரமூர்த்தி சுவாமிகள்
பாடியருளிய திருப்பதிகத்தை இங்கு தருகின்றேம்

திருவெண்காடு

பண்—இந்தளம்

திருச்சிற்றம்பலம்

படங்கொள்நாகம் சென்னிசேர்த்திப் பாய்புலித்தோல் அரையில்வீக்கி
அடங்கலார்ஊர் எரியச்சிறி அன்றுமூவர்க் கருள்புரிந்தீர்
மடங்கலானைச் செற்றுகந்தீர் மணிகள்தோறும் தலைகையேந்தி
விடங்கராகித் திரிவதென்னே வேலைசூழ்வெண் காடனீரே. 1

இழித்துகந்தீர் முன்னைவேடம் இமையவர்க்கும் உரைகள்பேணி
தொழித்துகந்தீர் நீர்முன்கொண்ட உயர்தவத்தை அமரர்வேண்ட
அழிக்கவந்த காமவேளை அவனுடைய தாதைகாண
விழித்துகந்த வெற்றிஎன்னே வேலைசூழ்வெண் காடனீரே: 5

படைகள்ஏந்திப் பாரிடமும் பாதம்போற்ற மாதும்நீரும்
உடையோர்கோவ ணத்தராகி உண்மைசொல்லீர் உம்மையன்றே
சடைகள்தாழக் கரணம்இட்டுத் தன்மைபேசி இல்பலிக்கு
விடையதேறித் திரிவதென்னே வேலைசூழ்வெண் காடனீரே: 3

பண்ணுளீராய்ப் பாட்டும்ஆளீர் பத்தர்சித்தம் பரவிக்கொண்டீர்
கண்ணுளீராய்க் கருத்தில்உம்மைக் கருதுவார்கள் காணும்வண்ணம்
மண்ணுளீராய் மதியம்வைத்தீர் வானநாடர் மருவிஏத்த
விண்ணுளீராய் நிற்பதென்னே வேலைசூழ்வெண் காடனீரே: 4

குடம்எடுத்து நீரும்பூவும் கொண்டுதொண்டர் ஏவல்செய்ய
நடம்எடுத்தொன் முடிப்பாடி நல்குவீர்நீர் புல்கும்வண்ணம்
வடம்எடுத்த கொங்கைமாதோர் பாகமாக வார்கடல்வாய்
விடம்மிடற்றில் வைத்ததென்னே வேலைசூழ்வெண் காடனீரே: 2

மாறுபட்ட வனத்தகத்தில் மருவவந்த வன்களிற்றைப்
பிறிஇட்ட மாகப்போர்த்தீர் பெய்பலிக்கென் றில்லந்தோறும்
கூறுபட்ட கொடியும்நீருங் குலாவிஏற்றை அடரஏறி
வேறுபட்டுத் திரிவதென்னே வேலைசூழ்வெண் காடனீரே: 6

காதலாலே கருந்தொண்டர் காரணத்த ராகிநின்றே
பூதம்பாடப் புரிந்துநட்டம் புவனிஏத்த ஆடவல்லீர்
நீதியாக ஏழில்ஓசை நித்தராகிச் சித்தர்சூழ
வேதம்ஓதித் திரிவதென்னே வேலைசூழ்வெண் காடனீரே: 7

குரவுகொன்றை மதியம்மத்தம் கொங்கைமாதர் கங்கைநாகம்
விரவுகின்ற சடைஉடையீர் விருத்தர்ஆனீர் கருத்தில்உம்மைப்
பரவும்என்மேற் பழிகள்போக்கீர் பாகமாய மங்கைஅஞ்சி
வெருவவேழம் செற்றதென்னே வேலைசூழ்வெண் காடனீரே: 8

மாடங்காட்டுங் கச்சியுள்ளீர் நிச்சயத்தால் நினைப்புளார்பாற்
பாடுங்காட்டில் ஆடல்உள்ளீர் பரவும்வண்ணம் எங்ஙனேதான்
நாடுங்காட்டில் அயனும்மாலும் நணுகாவண்ணம் அனலும்ஆய
வேடங்காட்டித் திரிவதென்னே வேலைசூழ்வெண் காடனீரே: 9

விரித்தவேதம் ஓதவல்லார் வேலைசூழ்வெண் காடுமேய
விருத்தனாய வேதன்தன்னை விரிபொழில்திரு நாவலூரன்
அருத்தியால்ஆ ரூரன்தொண்டன் அடியன்கேட்ட மாலைபத்தும்
தெரித்தவண்ணம் மொழியவல்லார் செம்மையாளர் வானுளாரே: 10

திருச்சிற்றம்பலம்

முன்னுரை

ஓ ஏதும் இல்லாது எனது செய்பணிகள் கொண்டருளும் தாயான கற்பகத்தின் பூங்கழல் போற்றி என் வாழ்வில் உற்ற பெரும் பேற்றினுல் பெரியபுராணத்து ஐந்தாவது பகுதியும் அச்சிட்டு வெளியாக்குவதுடன் பெரிய புராணம் முழுமையும் உரையுடன் அச்சிட்டு வெளியாகின்றது. எமது இப்பதிப்பில் நாயன்மாரது தமிழ் மறையும் அங்கங்கு சேர்க்கப்பட்டுள்ளன. பெரும்பாலும் 8வது பகுதியில் எம்பெருமான் சுந்தரரது திருப்பதிகங்கள் தரப்பட்டுள்ளன.

சுந்தபுராணம் ஆறுகாண்டங்களையும் உரையுடன் அச்சிட்டு வெளியாக்கியபின்னர் பெரிய புராணத்திற்கும் ஓர் உரை எழுதி அதனை இலங்கையில் அச்சிட்டு அதனுடன் தேவாரப்பதிகங்களையும் சேர்த்துப்பதிப்பித்து வெளியாக்கி எமது இலங்கை மக்கள் வாசித்து இன்புற வேண்டும்; எமது நாயன்மாரது தேவாரப் பதிகங்களில் உள்ள கருத்துக்களை நன்குசேர உணர்ந்து நல்நெறிப்படலாம் என்ற எண்ணத்தால் இந்த ஒரு பணியைப் புரிந்துள்ளேன். எனது எண்ணத்தில் இன்றைய மக்கள் நிலையில் எமது நாயன்மாரது கொள்கையும் சிவதொண்டின் மாண்பும் பெரிதும் யாவர்க்கும் தெரியப்படாதே உள்ளது என்பது தெளிவாகிற்று. இன்றைய இருபதாம் நூற்றாண்டில் மக்கள் மனதில் வேரூன்றிப் பரவுகின்றது சினிமாக்கலையே. ஏதேனும் ஒரு நன்மை எக்காலமுமே தராத இந்த சினிமாக்கலையை பெருக்கும் நோக்கமாக; வளர்க்கும் நோக்கமாக; பனுவல்களும் இலக்கியமும் செய்துளர் இக்காலத்து அறிஞர் எனப்படுபவர். ஏன் உலகத்து மகான்கள் பற்றற்ற சந்நியாசிகள் என்பவரும் கூட இப்பொழுது சினிமாவில் நடிக்கிறார்கள்; நடிக்க முயன்று கொள்கிறார்கள்; தமக்கு நடிப்பதற்கு ஓர் வாய்ப்புக் கொடுத்திடும் படி அத்துறையில் உள்ளவர்களை இரகசியமாகக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பது வெளிப்படத் தெரிகிறது. சினிமாக்கலை பொய்மையைப் பெருக்க வாய்ப்பளிக்குமே ஒழிய ஒருபோதும் உண்மையை உணர வாய்ப்புத் தராது! அது உண்மை உணர்ந்த பல பெரியோர்கள் துணிபாகும். இதுபற்றியே மூதாதையரும் ''கூத்துப்பார்க்க விரும்பாதே,, என்றும் ''கூத்தாடுவதும் பின்புற அங்கம் நெளிப்பதும் ஆத்தாதவன் செயல்'' எனவும் கூறினர். இந்த வாக்கியங்களின் உண்மையைப் பாருங்கள். கூத்துப் பார்க்க விரும்பாதே என்றபோது நீகூத்தைப் பார்ப்பது கூடாது என்றளவில் விட்டுவிடவில்லை. அந்தவிருப்பத்தையே கொள்ளாதே என்ற போது, அது உலகிற்கு எத்துணை நீங்கானது என்பதை நீங்கள் உணர்ந்து தெளிந்து கொள்ளுங்கள். அடுத்து அச் செயல் புரிவோரை ஆத்தாதவன் செயல்! என்கின்றபோது இந்த உலகில் பெறுதற்கரிய பிறவியைப் பெற்று ஒன்றில் தனக்கோ அல்லது பிறர்க்கோ ஏதும் ஒரு பிரயோசனமான செயலைச் செய்திட முடியாதவனுடைய செயல்தான் நடிகனது தொழில் என்பதாகின்றது. ஒரு சினிமாவில் அல்லது கூத்தில் ஒரு பெண் கற்புக்கரசியாக நடிக்கிறார். அவளதுபேச்சில் நடிப்பில் நீங்கள் மயங்குகின்றீர்களே ஒழிய அவளது உண்மைக் கொள்கையை விளங்க முடியுமா? அல்லது உண்மையான கற்பு நெறியைக் கடைப்பிடிக்கிடும் எந்த ஒரு பெண்ணும் மேடையில் ஏறுவாளா! மேடையில் எல்லாம் எத்தனையோ நடிகர்கள் நாவலர் பாவலர் முழக்கி மேடை அதிர பெரும் கரகோசத்திடையே பேசுவார். அவரது பேச்சு அப்போது வசீகரம். கூத்தில் சண்டைகள் நடக்கின்றது. அற்புதமாக வீரனுகத் திகழ்ந்து வாய்ப்பேச்சின் வசனங்களால் கூசாது பேசிப் போரிடுகின்றனன்! அந்த நடிகன் உண்மையில் ஓர்யுத்த களத்தில் நெஞ்சில் உரத்துடன் போரிடுவானு? போர் ஒன்று வந்தால் அவன் நிலை எப்படி? சிந்தித்துப் பாருங்கள். உண்மை கற்பனையில் ஒருபோதும் உருப்படுவதில்லை. உண்மையில்தான் உண்மை வெளிப்படும். பல கற்பனைக் கதைகளை எத்தனையோ எழுத்தாளர் சிருட்டித்துக் கதை எழுதுகிறார். இந்தக் கற்பனையில் உண்மை இருக்கிறதா? இல்லை. ஆகவே கற்பனைக்கதைகளை நாம் ஓர் உண்மையான புண்ணியம் நிறைந்த ஓர் கதையாக ஏற்றிட முடியாது. அந்தக் கதைகளை வாசித்தல்கேட்டல் இவையாவும் எம்பிறவியில் செலவு செய்யும் வீணை நேரங்களாகும். இதை மக்கள் தமது சிந்தனையில் கொள்வதில்லை. கொள்ள முயன்றலும் அதில் சலிப்பு ஏற்படுகிறது. இந்தவகை கற்பனைக் கதைகள் கூடாதுஎன்றுகூறிடும் பொழுது கேட்க வேதனையாகவும் இருக்கும்.

எமது வாழ்க்கையில் உண்மை தரும்ம் அன்பு எமக்குநன்மை தரும் தவத்தின் வரவாறை. இவை இலேசாகப் பெற்றுக் கொள்ள முடியாத பொருள். எத்துணைச்

நிறப்புகளுடன் உலகம் வளர்ந்து கொண்டு போனலும் மக்களிடையே முன் சொல்லிய மூன்றும் வளர்வது மிக அரிது. இந்த மூன்றும் யாரிடம் பொருந்திடக் காணலாம் என்றல் சிவனருளின் தாகமுடையாரிடமே நாம் கண்டு கொள்ள முடியும். அதுவன்றி ஏனைய உலகார்த்த பந்தங்களிலே மிகுந்துள்ளவரிடத்து நாம் இவைகளைக் கண்டு கொள்ள முடியாது. வாயால் எல்லாரும் நன்குடன் போதிப்பார்கள். ஆனல் தமது போதனையை தமது செயலில் கூடக் கடைப்பிடிக்கமுடியாது தவிப்பவரை நாம் உணர்வோம். நாயன்மாரது பதிகத்தின் உட்கருத்தைக் உணர்வதானல் அது எமக்குஎத்தனையோ அறிவுரைகளை தருகின்றன. தேவாரப் பண்களின் இசை ஓசையிலும் கருத்தில் வரும் அறவுரையின் நன்மையே கொள்ள வேண்டும். இதனை பண்ணினை ஓதிவளர்க்கின்றனம் என்பவர் தமது கருத்தில் கொள்ளல்நலம்.

சிலத்தான் பெரிதும் உகப்பவன் சிவன் என்றும் சிலந்தான் சிவனது வடிவமாகும் என்றும் எமது முன்னோர் எமக்கு வழிவழியாகக் கொண்டிடும்படி மொழிந்துவிட்டுச் சென்றிருக்கிறார். தற்புகழ்ச்சி அகந்தையின் ஆணிவேர் என்று சொன்னல் அதை நாம் மிகைபடச் சொல்லவில்லை. அது உண்மை. அதனை ''தினைத்தனையோர் பொறையிலா உயிர்போம் கூட்டை (எமது உடலை) பொருள் என்று மிகஉன்னிமதியால் இந்த அனைத்துலகும் ஆளலாம் என்றே பேசும் ஆங்காரம் தவிர் நெஞ்சே'' என; தமக்கே புத்திபுகட்டுகிறார் திருநாவுக்கரசர். இந்த ஒரு வாக்கியமே எம்மை மேலான ஒருநிலைக்குத் தூக்கிச்செல்ல உதவிடும். நாம் ஏதோ வகையாக பிறந்தோம் இவ்வுலகில்; பல பெரிய காரியங்களுடன் மதிப்புடன் வாழ்கின்றோம்; வாழமுற்பட்டோம்; என்கின்ற அதற்காக நல்ல தொரு வீடு கட்டி நடப்பாக நடந்து நன்கு உடுத்து பின்னர் நரைத்து முடிவில் இறந்த பொழுது ஒருவரைப் பலரும் அந்தமனிதன் இருந்தாலும் கெட்டிக்காரன் ஏதோ இருக்கும்தனையும் பாடுபட்டுத் தேடி வீடுவாசல் கட்டி கொஞ்சம் மதிப்பாக வாழ்ந்து இப்ப செத்துப்போச்சு. பரவாயில்லை. செத்தாலும் இது எல்லாம் சரியாய் நடத்திப்போட்டே செத்தது என்று பலபடப் பாராட்டிப் பேசுவார். ஆனல் அப்படி வாழ்ந்த அவர் செத்த பின் எப்படியானர் என்பதைப் பற்றிப் பேச்சு இல்லை, பேசவும் முடியாது. அல்லது இப்படி பேசுபவர் எல்லாம் தமக்கும் ஓர் சாவரும் என்ற நினைப்புடன் பேசுவதில்லை. அதைப் பற்றி குசாலாகப் பேசும் போது அங்கு அக்கறையும் வருவதில்லை. அந்த ஒரு அக்கறையை சுந்தரர் கொள்கின்றார். தமது ஒரு தேவாரத்தில் சொல்கின்றார் ''நல்வாயில் செய்தார் நடந்தார் உடுத்தார் நரைத்தார் இறந்தார்'' என்ற சொல்லாய் அல்லவோ வாழ்க்கை முடிகின்றது என்பதை நான் உணர்ந்து சிவனே! உன்னைத் தொடர்ந்தேன். தொடர்ந்து ஓடிவரும் எனக்கு உய்கின்ற ஒருமார்க்கம் நீ சொல்லு என்று சிவனையே கேட்கிறார். இதைப் பற்றி நாமும் கொஞ்சம் சிந்தித்தால் நல்லதல்லவோ? இன்னமும் பெரிய புராணம் என்றதன் கருத்து அறியாமை எனும் உள்ளத்துஇருளைப்போக்க வல்லது என்பதே. புற இருள் நீங்க சூரியன் வரலும் எமக்கு எத்துணை மகிழ்ச்சி ஏற்படுகிறது. இதே போன்று உள்ளத்தில் சிவ ஒளிபெருகியபோது; அளவற்ற ஆநந்தம் பிறக்கிறது. அதுவன்றி அதுகாறும் அங்கு குடியிருந்த இருளாய வஞ்சனை பொறுமை உலோபம் சுயநலம் அதிகாரம் யாவும் நீங்கி அன்பு இரக்கம் கண்ணியம் கட்டுப்பாடு ஒழுக்கம் இவை பெருகுவன. இத்தகை உள்ளத்து இருளை; மீள மீளத் தெரியாமல் எம்மைத் துயரத்து பிறரைத் துயரத்து சமூகத்தைத் துயரத்து ஒருங்கே ஆழ்த்துகின்ற அவைகளை இப்பெரியபுராணம் நீக்கும் என்பது உறுதி.

சிலரிடத்தே ஒருகொள்கைஒன்று உண்டு. தமக்கு உலகில் சிலவாய்ப்புக்களால் நல்ல பேறுகள் அரசாங்கத்திலோ அல்லது சமய ரீதியாகவோ வந்தடைந்து கொண்டால் அப்போது அவர்கள் தம்மிடமுள்ள பெருமைகளை பொருளாக எண்ணி தோசைக்கு சம்பல் தொடுவது போல சில சில வேளை பெரிய புராணத்தையும் எடுத்துக் கொள்கின்றனர். ஆனல் இதில் ஊறி அன் புகொண்டு இதன்வழி ஒழுகுவாரைக் கீழாகவும் மதிக்கிறார். ஏனெனில் தம்மைப்போல் பெருமையான நிலையில் இப்புராண சீலத்தைநன்குணர்ந்து கடைப்பிடிக்கும் தூய உளரீமுடைய அன்பர் இல்லை என்ற நினைப்போ; அல்லது இத்தகையோரால் தமது பெருமைக்குச் சிறப்புக்கள் இல்லை என்ற எண்ணமோ தெரியவில்லை.

இன்றைய உலகில் பெரும்பானலும் சிவவழிபாட்டின் மகத்துவத்தை இத்தகையோர் உணரத் தவறுகின்றார் என்பதே கருத்தில் கொள்ளவேண்டியிருக்கிறது. இத்தகையோரது அகம்பாவத்தை நினைத்தால் யோகசுவாமிகள் தம்மிடம் சென்ற ஒருவரிடம் ''சற்றே விலகிஇரும் பிள்ளாய் சந்நிதானம் மறைக்குதாம்'' என மொழிந்த பரிபாசையின் கருத்தை நினைவில் கொள்ளலாம். இதனை நாம் இங்கு குறிப்பிடாமல் விடலாம். ஆனல் மக்கள் நலன்கருதி அடியார்கள் மேன்மையை உணரவும்; சிவன் அன்றி வேறுதெய்வம் இல்லை என்பதை மக்கள் உணரவும்; நாம் இதனை குறிப்பிட்டுள்ளோம்; வேறுயாரிலும் குறைகாண்பதற்கன்று.

பெரிய புராணம் முழுவதையும் ஒருவர் ஓதிட முடியுமானல் உண்மையில் அது அவரிடம் நன்மையை பெருக்குவிக்கும். இந்த நீலியினை சேக்கிழார் இப்புராணத்து பல இடங்களில் எடுத்து ஆளுகிறார். இதன்வகைகளை இவர்பாடல் பலவில்காண முடியும். ''நன்மைதரும் அருள்நெறியே வந்தணைந்து'' என்ற ஒருவார்த்தையே அருள் நெறியின் நிறப்பை பெறுதல் எவ்வளவு மேன்மையானது என்பது தெளிவாகிறது. சேக்கிழாரை ஏனைய உலகில் உள்ள புலவர் வரிசையில் நாம் எண்ணமுடியாது; அவரை நன்மை நிமை யாவும் கடந்த ஓர் முனிவராகவே கருதமுடியும். அன்றியும் ஓர் புலவர் மற்றையோரிடத்து எதிர்பார்க்கின்ற மதிப்பையோ பாரட்டுதலையோ எதிர்பார்த்து இப்புராணத்தைச் செய்தாரல்லர். இவர் தமது உய்தியின் பொருட்டு அடியார்கள் செய்த திருத்தொண்டைத் தாம்போற்றிடும் தொண்டராகவே கொள்பவர். பெரும்பான்மையில் இதனை ''மொழிந்தேன் உய்ந்தேன்'' என்றெல்லாம் பேசுதலைக் காண்க. திருஞான சம்பந்த சுவாமிகள புராணத்து இவர்பாடிய அற்புதம் நோக்கி நமதுதுயரை போக்கிட நாம்ஓதி உய்ந்திட அப்பகுதிஏற்ற தொன்றுவது.

இன்னமும் இப்புராணத்துஇவர் தாம்வழிபடும் குருமூர்த்தமாகச் சுந்தரர் பெருமானைக் கொள்கின்றார். ஒவ்வொரு சருக்க முடிவிலும் ஒவ்வொரு துதி காணப்படும். அதில்தான் அடியார் தொண்டினைப் பரவுவது தமது பாச வினையை எம்பிரான் சுந்தரர் பறிப்பார் என்னும் பற்றாலே என்ற கருத்துக்கள் தென்படுவன. முதலிலவாய் பிள்ளையை மீட்ட அரும்செயலைச் சொல்லிப் போற்றும் போது பிறவி எனும் பெருவாயில் நின்று எம்மை மீட்டார் அவர் என்ற துணிபுகள் அற்புதமாகப் பேசப்படுகின்றன.

தமக்கு இப்புராணம் பாடற்கு தகுதியா; என்அறிந்து பாடுவீர்? எனக் கேட்பார்க்கு ''வான்நிழல்'' அசரீரி தந்த உலகெலாம் என்பதே பொருளாகும் என்பது தெளிவாக மொழிகின்றார். இன்னமும் இப்புராணத்து தனது அறிவிற்கு உன்மை இவை எனத் தெளிவுகண்டுதான் அடியார்கள் வரலாறு பாடி இருக்கின்றார். அடியார்களது சீலம் அற்புதமாகப் பேசப்படுகின்றது. பேசும்போது பொற்புடையதாகவே பேசுகின்றார். வேறு புராண காவியம் செய்யும் புலவர் போன்று நல்லதை மட்டும் மிகைப்படச் சொல்லி குற்றமுடையனமாற்றி இல்லாதனவற்றை முகமனுல் எடுத்து இங்கு மொழியப் படவில்லை. யாவும் மேன்மையாகவும்; உணர்ந்த பெரியோர்கள் உண்மையாக ஏற்றுக்கொள்ளும் படியாகவும் வரலாறுகள் தரப்பட்டுள்ளன.

பெரியபுராணத்தை நாம்உணர்ந்து தெளிந்து கொள்வதென்றல் முதற்கண் நாம் சீலமுடைய வராக இருக்கவேண்டும். எனது எண்ணப்படி உலக பந்தங்களில் நன்கு அழுந்திவிட்டு பிறகு பெரிய புராணத்தின் நாயன் மாரது கதைகளை படிப்போமாக இருந்தால் ஒருக்கால் நமக்கு அவை அப்படி நடந்திருக்க முடியுமோ! அவை ஒருகால் கற்பனையாக இருக்காதோ என்ற ஐயப்பாட்டின் முனைப்புக்கள் தோன்றும். நம்வாழ்க்கையில் ஒரளவாகுதல் உள்ளும் புறம்பும் சைவத்தின் சீலமுடையார்க்கு நாயன்மார்கள் எப்படி அருள் நிலைகொண்டிருப்பார் என்பது தத்தமது அந்த சீல முடைய வாழ்வின் நிகழ்ச்சிகளைக் கொண்டே அனுமானிக்கலாம். அல்லாதவர் என்ன செய்யலாம்? அவர் பெரிய புராணத்தின் பாடலை இலக்கிய இலக்கண வரம்பிற்குள் வைத்து தமக்கு கட்டுரைவரைய மேடையில் பேச உதாரணமாகக் கொள்வதற்கு ஏற்றதொன்றாக வைக்கலாமே ஒழிய இப்புராணத்தை தமக்கு இருவருள் கூட்டிடும் ஓர் வழித்துணை நூலாகக் கொள்வது சிரமம். இதனை நான் இங்கு குறிப்பிடும் தன்மையின் சுருக்கக் கருத்து பெரிய புராணப் பாடல் அருளுடையது என்பதை விளக்கிடும் பொருட்டே யாகும். அது சாதாரண பாடல் போன்றதல்ல. அது பெரியோர்களால் திருமுறை எனக்கொள்ளப் பெறுவது. ஆதலின் ஆசிரியர் சேக்கிழாரது நோக்கப்படி எம்பிரான் சிவனது அருளைப் பெற்று உலகம எக்காலமும் ஓர்ந்திடும் வழியாகவே இப்புராணம் பாடப் பெற்றிருக்கிறது.

சேக்கிழாரது 'காலத்தைப்பற்றி தக்கசான்றுடன் என்னுல் இங்கிருந்துதிடமாக துணிந்து சொல்ல முடியாது. அல்வாறே நாயன் மாரது காலங்களையும் துணிந்து சொல்ல முடியாது. கல்வெட்டுகளைக் கொண்டு சிலர்வரலாற்றை சொல்கிறார்கள். ஆனல் எமக்கு அவைதான் உண்மையோ எனத்துணிய முடியாது இருக்கின்றது. இந்த கால ஆராய்ச்சிகளுக்கு தெய்வகடாட்ச முடன் அறிகின்ற அறிவு பெற்றுக் கொண்டால் ஒழிய ஏனையவகையால் அவைதெளிந் தறியமாட்டாது. முற்காலங்களில் இப்புராணங்கள் ஏடாகவே எழுதப்பட்டு இருந்தன. அப்போது அவற்றைப் பலரும் வாசித்து இன்புறும் வாய்ப்பு குறைவாகவே இருந்தும்கூட: மக்கள் இப்புராணத்தை மிகு மேன்மையாகக் கொண்டனர். என்றும் மெய்ப்பொருளாம் சிவனை அறிதற்கு இப்புராணம் ஓர் உறுதுணை என்பது எமது உறுதி. அதனை; ''மெய்ப் பொருட்கு உரியார் கொள்வர் மேன்மையால்'' என்றமையே தக்க சான்றாகும்.

உண்மையில் சிவனடியார்களுடைய மேன்மை பற்றி சேக்கிழார் இல்லாதிருந்தால் நாம் உணர்ந்திருக்க முடியாது. எவர்க்குமே அது முடியாது. மனிதனுடைய உணர்வு திருவருளுடன் இணைந்து பாடல் செய்திடும்போது தான் உண்மை புலனாகும். சேக்கிழாரது புராணப்பாடல் ஒவ்வொன்றையும் நாம் உற்று நோக்கினால் அது மனித இயல்பிற்கு அப்பாலாயுத்தான் விளங்குகின்றது. இந்த நிலம்பற்றிய வரலாறு இப்பால் தருகின்றோம்.

சண்டேஸ்வர நாயனார் புராணத்தில் அந்தணர்களது நிலம் அற்புதமாகப் பேசுகிறார். செம்மையாயது வெண்ணீறு. அந்த வெண்ணீற்றின் சார்பினால் தம்மையும் இன்னும் அவ்வழிச் சார்ந்தாரையும் ஒன்றுகக் கருதிடும் ஒருமைப்பாட்டினைக் கொண்டார் என்று; செம்மை வெண்ணீற்று ஒருமையினர் என்றும்; தாம் பிராமணராகப் பிறந்தால் உயர்ந்த சாதி மற்றையவர் இழிந்த குலத்தவர் என்பதை எண்ணுது தமது வருணச்சிரம முறைப்படி வேதத்தின் எல்லாப் பொருளாய சிவனை உணரும் பூணூல் (உபநயனம்) அணியப் பெறலால் அக்கருணையின் சிறப்பால் ஏனைய உலக மக்கள் போலவே அந்தணர் குலத்தில் அவதரித்தாலும் முற்றிலும் தம்மைத் தெய்வப் பணிக்கே ஆளாக்கும் அறிவின் பயனை கண் போன்ற நூல் அணிவதலால்; இரண்டு பிறப்பின் சார்பினர் என்றும்; உலகில் என்றும் நெருப்பு குப்பைகளை கட்டு எரிப்பது. நாள் தோறும் எமது இல்லத்தை கூட்டித்துப்புரவாக்கி குப்பைக்கு நெருப்புவைப்போம். அதே போன்று உலகம் பந்தம் மேற் கொண்டு போதலாலே கலியே மிகும். அவாவே மிகும். அன்றியும் காமம் குரோதம்லோபம் போன்ற அறப்செயலும் தேவையற்ற கருமங்கட்கெல்லாம் சரீரனைக் கோபம் கொள்ளலும்; தமது சொந்த முதன்மைக்காக ஏனையரை இகழ்தலும் இறுமாப்படைதலும் வஞ்சித்தலும் ஆன இந்த குப்பை போன்றவண்ணங்கள் அகத்தே மிகுவது இயல்பு. அன்றாடு அவர்செய்யும் தொழிலில் இவை பெருகுவன. பெருகப் பெருக தம்மிடம் வளரக் கூடிய பாவங்கள் இவற்றை எரிப்பதற்காக; ஆகவனீயம் காருகபத்தியம் தக்கிணாக்கினியம் என்னும் மூன்று அக்கினிகளையும் அந்தணர் வளர்ப்பார் என்பதை; மும்மைத்தழல் ஓம்பிய நெறியார் என்றும்; வேதங்கள் முதல்வன் சிவனுல் அருளப்பட்டன, அவை தருமத்தின் பாலாவன. அவைகள் பின்பு நான்காக வகுக்கப்பட்டன; இந்த நான்கு வேதங்களையும் ஒழுக்க முறையாகவே கற்றார்கள். கற்று அடங்கியவர்கள். அதனைப் போற்றிடும் ஒருவராகவும்: அவையாவும் இறைவனுக்குச் செய்யும் தொண்டிற்கேஉள்ளன என்று அவ்வேதம் விதித்த நிலங்களை மேற்கொண்டு பயின்றார் என்பதாக; நான்கு வேதம் முறையாகப் பயின்றார் என்றும்; புலன்கள் ஐந்தான கண் மூக்கு செவி நாக்கு உடம்பு இவையாவும் தத்தமது தொழிற்பாட்டால் எமது சத்தியை ஒயாது விரயம் செய்வன. இவ்வகை எமது சத்தியை விரயமாக்கி அழிக்கும் அவ்வழி அவை வேண்டியதையே புரிந்து ஓடி ஆடி பார்த்து கேட்டு சுவைத்து மணந்து திரிந்த போது உடலும் மெலிந்து வயதும் முதிர்ந்து விடும் காலத்தில்; ஏனைய மக்களுக்கு; உலகிற்கு நாம் ஓர் பாரச் சுமையாகின்றோம். வாழை மரம் குலைபோட்டு தனக்குத் தான் அது பழுக்கும் என்று காத்திருந்த தன்மை போலத்தான் ஆகும். அதனாலே இதன் தாற்பரியத்தை உணர்ந்து ஐந்து புலன்களையும் வேதம் கற்றுத் தெளிந்த போதே அதன் வழிச் செல்லாது புலன்கள் தமது வேதநெறிக்கே ஆளாகும் படி கட்டுப்பாடு செய்து அவைகள் தமது ஏவல் கேட்கும்படி செய்கின்றார் என்பதை; தம்மை ஐந்து புலனும் பின் செல்லும் தகையார் என்றும்; உலகில் ஓதல் ஓதுவித்தல் யாகம் செய்தல் செய்வித்தல் ஈதல் ஏற்றல் என்னும் ஆறுதொழிலும் அறவாணராகும் அவர்க்கு உரியன. இவ்வகைத் தொழில் ஆறினிலும் மெய்ம்மை விளங்கிய ஒழுக்கம் மிக வேண்டும். இந்த ஒழுக்கத்தின் சிறப்பாலே தான் உலகம் இன்புறும் என்பதால் அதனை; அறு தொழிலின் மெய்ம்மை ஒழுக்கம் ஏழுலகும் விளங்கும் மறையோர்; என்ற உண்மையை சொல்கின்றார் சேக்கிழார். இதன் நிலத்தை நாம் உணர்ந்தால் அது எத்துணை உயர்வையே நமக்கு தரும் என்பதையும்: அன்று உலகம் முழுவதையும் ஆண்ட எமது தமிழினம் எவ்வளவு மேன்மையை அடையும் என்பதையும் நீங்கள் உணர்வீர்களாக.

ஆசிரியர்தமது புராணத்து தமிழ் அரசர்கள்உலகம் முழுவதையும் தமது குடைக்கீழ்வைத்து ஆண்டார்கள் என்றும்; அவ்வாறு எல்லா உலகையும் அரசாள்வது அருள்வலிகொண்டு என்றே பேசுவார். திருவருளின் கடாட்சம் உண்டேல் படைவலி நமக்கு உண்மையில் சேரும். இதற்கு ஓர் உதாரணமாக ஒன்றை எமக்கு இங்கு காட்டுகின்றார். பரஞ்சோதியார் எனப்படும் சிறுத்தொண்டநாயனார் முன்பு அரசனுடைய சேனைதிபதி. அவர் வடக்கே வாதாபிநகரைச்சென்று போரிடப் போகின்றார். போரிட்டபோது மிகப் பிரமாதமான வெற்றிகொண்டார். பரஞ்சோதியார் சேனையை வழிநடத்தி வடநாட்டின் தலைநகர் வாதாபியைத் துகள்கண்டு வந்த அற்புதத்தைக் கேள்விப்பட்டதும் அரசனுல் அதை மறக்கமுடிய வில்லை. மிகவியந்து பேசும்போது அருகிருந்த மந்திரிகள் அரசனைநோக்கி இந்த வெற்றியில் ஓர் இரகசியம் உளது என்றார். என்னென என ஆச்சரியமுடன் அரசன் கேட்கிறான். அவர்கள் பதில் எதுவாயது தெரியுமோ! சேக்கிழார் தருகிறார்: "மதி அணிந்தார் திருத்தொண்டு வாய்த்தவலி உடைமையினால் எதிர் இவருக்கு இவ்வுலகில் இல்லை" என்றதாக. எப்படிச் சிந்தித்துப் பாருங்கள். ஓர் நாடு அது தாழ்ந்திருப்பதை மீட்டு நன்னிலைப்படுத்தவேண்டில் அது ஓர் சிவன்பால் பத்தி உடையவராய் பெருந்தொண்டு உடையவரால் தான் முடிந்திடும். அருள்வலி உடையார்முன் எதிரி வீசிய படையும் அகலும்: நேர்வராது. அதுதான் உண்மை. இந்தவகை பல இடமும் பேசப்படல் இப்புராணத்துக் காணலாம்.

அரசனுடைய அரசாட்சியின் பெருமையை கூறுகின்றபோது "மண்ணில் வாழ்தரும் மன் உயிர்கட்கு எவ்வாம் கண்ணும் ஆவியும்போல்வரும் காவலான்" என்று சொல்லுகின்றார். எப்படி இருப்பது அரசாட்சி? சிந்தியுங்கள். இப்படி நடந்தால் உலகமக்கள் எத்துணை நயம்பெற வாழ்வார்கள். அடுத்து அரசராக இருப்பினும் குடிகளிடத்து அளவிறந்த அன்புடையராகவே இருக்கின்றார்கள். உதாரணமாக கழறிற்றறிவார் சேரஅரசர் வீதியில் குதிரைமீது உலாவிவருகின்றார். அவ்வேளை தனது துறையில் தனது சீலைகளைத் தோய்த்து உப்புமண் மேனியில்பட்டு, மேனி முழுவதும் வெண்மையாகி ஓர் வண்ணன் அந்தவழியாக வருகின்றான். வருகின்ற அவனை சேரஅரசர் பெருமான் கண்டதும் ஓர் சிவனடியார் அவரென எண்ணிக் குதிரைநின்றும் இறங்கி முன்சென்று வணங்குகின்றார். வண்ணன் பயந்து ஐயோ யாராக என்னை எண்ணி வணங்கியது; நான் அடித்தொண்டு செய்யும் வண்ணன் என்றலுமே சேரஅரசாபிரான் என்ன பதில் சொல்லுகின்றார் தெரியுமோ? சேக்கிழார் தருகின்றார் பாருங்கள். "அடிச்சேரன் அடியேன்" என்றும் பின்னரும் வண்ணனை நோக்கி, நீர் எம்பிரானுடைய அற்புதமான நான்விரும்பும் திருநீற்றின் கோலத்தை நினைப்பித்தீர் பயப்படாது நீர்செல்லும் என்பதை "வாரவேடம் நினைப்பித்தீர் வருந்தாது ஏகும்" என்பதாக. இந்தவகை பாடி அநபாயச்சோழ அரசன்முன்பு இருந்து இதை ஒதிநிற்கிறார் சேக்கிழார்பெருமான் என்றால் அதை எவ்வாறு என்ற நலத்தை நீங்களே சிந்தியுங்கள். குடிமக்கள் அரசர்களிடத்து அளவிறந்த பக்தி உடையவராக இருந்திருக்கின்றனர். உதாரணமாக தனது உயிரிலும் மேலாக அரசரை மதித்துள்ளனர். எந்த ஒருகுடிமகனை அரசகருமம் புரிபவரோ ஒருக்காலமும் அரசகட்டளையை மீறுவோராக வஞ்சனை செய்வோராக இருந்திருக்கவில்லை. அரசன்பால்கொண்ட விசுவாசத்தை கழறிற்றறிவார் சேரமான் பெருமாள திருக்கைலாயமலை செல்லும்போது அவர்பிரிவைத் தாங்காத சேனைவீரர் தத்தமது உடைவாளால் தம்மைக் குற்றிவீழ்த்திய வரலாறு சான்றாகுதே! அரசர்கள் எப்பொழுதும் செங்கோலாட்சி தமது நாட்டில் நிகழ்த்துவதுமல்லாது; அயல் நாடுகளிலும் அத்தகைய செங்கோலாட்சி நிகழ்வுற அந்த அரசரைத் தமக்கு திறைகொடுக்கும் அரசராகக் கொண்டனர். இந்தவகை புகழ்ச் சோழஅரசர் ஆண்ட காலத்து அவரது ஆட்சிக்குட்படாது சிங்கள அரசர் ஒருவர் பெரும் கொடுங்கோன்மையாக தனதுநாட்டை ஆண்டபொழுதில் அந்த சிங்களநாட்டின் மலைஅரணைப் பொடிசெய்து அங்குவாழும் மக்களை அரசன் செவ்வனே ஆளுமாறுசெய்து வெற்றிகொண்ட வரலாறு திருத்தொண்டர் அந்தாதியிலும் இப்புராணவாயிலாகவும் பெறுகின்றோம். இன்னமும் அரசர் தமது அரசாட்சியில் தமது ஆட்சிக்குட்பட்ட சிவாலயங்கள் யாவும் சிறப்புறத் தொண்டுகொண்ட வரலாறுகள் பெரும்பாலாக நாங்கள் காணலாம்.

வணிகர்கள் என்பவர் எப்பொழுதும் உற்பத்தி செய்வார்க்கும் வாங்குவார்க்கும் தொடர்பு ஏற்படுத்தும் இடைப்பட்டவராக இருந்திருக்கின்றனர். அவர்களுடைய நிலத்தை அளப்பரிதாகச் சேக்கிழார் மொழிகிறார். தமது வாணிபத்திலும் தருமத்திற்கே முதலிடம் கொடுத்தார்கள் வணிகர் அவர்கள். மிகைப்பட்ட இலாபம்பெற்று உற்பத்தி செய்வாரையும் வாங்குவாரையும் துயர்படுத்தவில்லை என்பதும் நாயன்மாரது புராணத்துப் பேசப்படுகின்றது. தங்கள் மரபிலே ஏதேனுமாகுதல் வடு ஏற்படக்கூடாது என்பது அவர்களது குறிக்கோளாக இருந்தமையை "மானமிகு தருமத்தின் வழவந்த குடிமரபின் ஞானமில்சீர் பெருவணிகர்" எனக் குறிப்பிடுவதை நீங்கள் சிந்தித்துப் பாருங்கள். நாப்பிளக்கப் பொய்சொல்லி ஒருபோதும் அவர் பொருள்தேடவில்லை. நாட்டின் நலன்கருதியே தமது வாணிபத்தை மேற்கொண்டனர். அது ஒரு தொண்டாகக் கருதினர் என்பதும் இப் பெரிய புராணத்து சொல்லப்பெறுகிறது. ஈசன் சிவன் பசுவிடத்துப்பெறும் ஐந்து பொருள்கள், சாணம் சலம் பால் தயிர் நெய் இவற்றை விரும்பித் திருமஞ்சனம் ஆடுபவர். ஆனால் ஆசிரியர் தாம் குறிப்பிடும் அவ்வூரில் வாழும் மக்கள் கொடுத்திடும் பொருள்களாவன தருமமாக நடத்தலும் நீதியாக நடத்தலும் அன்றியும் உயர்ந்த நிலையை எல்லோரும் அடைதல்வேண்டும் என்ற சால்பு எனும் குணமும்கொண்டு

அவற்றைப் புரிதல் சிவதொண்டாகவே கொண்டனர் என்பதை ''ஆன் ஐந்தும் உகந்து ஆடுவார்க்கு அவ்வூர்தான் அளிப்பன தருமமும் நீதியும் சான்பும்'' என்று எத்துணைச் சிறப்புற எமது முன்னோர் பண்பை எடுத்து மொழிகின்றார்.

வேளாளர்களது சிறப்பு இப்புராணத்து மிகவும் தெளிவுபெற விளக்கப்படல் காண்க. வேளாளர்களது பெருமையில் சத்தியம் முதலிடம் பெறுவது, சொன்ன சொற்காத்தல் மிகவும் ஓர் தலையான பண்பு. விருந்தோம்பல் அடுத்ததொன்று ரும். இன்னும் நீங்கு என்பனசிந்தையில் அறியார் என மொழிகின்றபோது அதன் உயர்ச்சி எல்லாறு அறிக. வேளாளரது உழவுத்தொழில் தாழ்வுதராதது என்றும்; கையின் உறுதிக்குத் துணையாவது என்பதை தாளாண்மை உழவுதொழில் தன்மை வளம் தலைசிறந்த வேளாளர்'' என்றும் வேளாண்குடிகள் நீடித்த சந்ததியினராக வாழ்ந்து வருபவர் என்றும்; அவர் வாழ்வில் எல்லாநலனும் பெற்றேவருபவர் என்பதை ''அனைத்துவித நலத்தின்வழுதாத நடைமரபிற்குடி'' என்று வேளாளரது நன்மை தரும் மரபுகளை சிறப்புறக் காட்டுகிறார். இவர்கள் குடிகள் ஓங்கிச் சிறந்துற்ற வரிசை உடைய மாடங்கள், வீதிகள் நயமுடன் விளங்குதலையும் ஆடல் பாடல் இன்பப்பொலிவு அழகு இவையாவும் இயல்குன்றுவதை நாட்டில் நகரத்தில்பெருகி நின்றன என்றும் இவையாவும் சிவம் பெருக்கும் திருவே உறுதியாகக் கொண்டன என்றும் மொழியப்பெறல் காணலாம்.

அடுத்து எல்லா மக்களும் நலனுற வாழவேண்டும் என்றால் சைவம் தழைத்தல் வேண்டும். நீற்றன்பு பாதுகாக்கப்படல் வேண்டும். நிலம்பணிந்த சேவடியுடைய பெருமானுக்கு உற்ற அன்பே பெருகவேண்டும்; அதுவே ஞானம் என்பது என்றதை ''ஞானம் ஈசன்பால் அன்பு'' என்று சுருக்கமாக நயமுடனுக மொழிகின்றார். சிவன்பால் அன்புடையார் எப்பொழுமே வஞ்சனை அறியார். உலகபந்தங்களில் அவதியுற்று ஓடி அலையார்கள். சுண்ட பொருளில் மனம்வையார். அறநெறியில் வழுவார்கள். அன்பர்கட்கு பணிசெய்ய மறவார்கள். சிவன் திருவடிகளேயன்றி பிறிதொன்றும் அறியார்கள். இன்னும் பிறிதொரு சங்கடம் வந்தாலும் அதனால் அயரார்கள் என்ற இதன் தன்மையே இப்புராணத்து பேசப்படக் காணலாம். உலகியல் நீரூயில் பஞ்சம் போர் இவைவரினும் கண்ணுதற் கடவுளின் உண்மை அடியார்க்கு அன்பர்க்கு கவலை அடையாது என்பதை ''கண்ணுதலான் அன்பர்க்கும் கவலைவருமோ'' என்று எடுத்தாண்டு எம்மை எம்ஐயன் சிவன் திருவடிப்பற்றில் ஊன்றிநிற்கவழிப்படுத்தும் தன்மையானநயமுடையன இப்புராணத்து காணப்பெறும்,

இந்த உலகில் சைவத்தைக் காத்துப்பேணல் பெரும் தொண்டாகிறது என்பது ஆசிரியரது கொள்கையாகிறது. வேதங்களின் பயன் அதுதான் சைவம். அது உலகம் எங்கும் விளங்கிநிற்பது என்றதை ''வேதப்பயனும் சைவமும்போல்'' என்றும் ''உலகெங்கும் நிரம்பிய சைவம் மன்ன'' என்றும் எடுத்தாளும பதங்கள் காண்க.

எங்கள் நாயன்மார்கள் மூவரும்பெறும் திருநடன தரிசனத்தை இந்தப் புராணத்தில் மிக அற்புதமாகப் பேசுகிறார். சுந்தரமூர்த்திசுவாமிகள் தரிசித்திடும் பொழுது ''வையகம் பொலிய மறைச்சிலம்பார்ப்ப மன்றுளே மால்அயன் தேட ஐயர்தாம் வெளியே ஆடுகின்றாரை'' என்றும் ''அடுத்தாற்று நன்நெறிக்கண் நின்றார்கள்வழுவி நரகடையா வண்ணம் தடுப்பா லே'' என்றும், உரணுறு திருக்கூத்து உள்ளம் ஆர்தரப்பெருகி நெஞ்சில் கரவிலாதவரைக் கண்ட நீலறுதும் கருத்தில் கொள்ள'' என்றும்; திருநாவுக்கரசுவாமிகள் திருநடம் கும்பிடும்பொழுது ''மெய்யும் படிமிசை விழுமுன்பு எழுதரும் மின்தாழ் சடையுடன் நின்றுடும் ஐயன் திருநடம் எதிர்கும்பிடும் அவர் ஆர்வம் பெருகுதல் அளவின்றால்'' என்றும சம்பந்தசுவாமிகள் திருநடம் தரிசித்திடும்பொழுது ''உணர்வில் நோவரும் சிவபோகத்தை ஒழிவின்றி உருவின்கண் அணையும் ஐம்பொறி அளவினும் வர அருளினை'' என்று திருக்கூத்தின் சிறப்பை எத்துணை அருமைபடச் சொல்கின்றார்.

இந்த வகையான முறையால் இப்பெரும் புண்ணியப் பொருளாய திருமுறையை சேக்கிழார் நமக்குத் தந்துள்ளார். இதன் பெருமை விரித்திடற்கு எனக்கு ஆற்றல் இல்லை! எவர்க்குமே முடியாத தொன்று.

இத்தகைய புராணத்தை அச்சிட்டு உதவிட பலவகையாலும் உதவிய பெருமக்கள் அனைவர்க்கும் எனது வணக்கம் உரித்தாகுக.

இலங்மைணிசைவநூற்பதிப்பகம் இங்ஙனம்
உயரப்புலம் வை.நல்லையா
கொக்குவில்
பிங்களவருடம் புரட்டாசிமாசம் மேற்கதி திங்கட்கிழமை

உ

ஏயர்கோன்கலிக்காம நாயனார் புராணம்

நீடு வண்புகழ்ச் சோழர்நீர் நாட்டிடை நிலவும்
மாடு பொன்கொழி காவிரி வடகரைக் கீழ்பால்
ஆடு பூங்கொடி மாடநீ டியஅணி நகர்தான்
பீடு தங்கிய திருப்பெரு மங்கலப் பெயர்த்தால்.

நீடித்த கொடையின் சிறப்பால் புகழ்கொண்ட சோழஅரசர்களது நீர் குன்றுத நாட்டிடையாக நிலவுகின்ற தனது கரை இருமருங்கும் பொன்கொழித்திடும் காவிரி ஆற்றின் வடக்குக் கரையின் கிழக்குப் பக்கமாகப் பூங்கொடிகள் ஆடிடப் பொருந்திய மாடங்கள் நீளவரிசையாக இருப்ப அதனால் அழகு நீடித்த நகர் ஒன்றுளது அந்த நகர்தான் பெருமைதங்கிய திருப்பெருமங்கலம் என்னும் பெயருடையது. 1

இஞ்சி சூழ்வன எந்திரப் பந்திசூழ் ஞாயில்
மஞ்சு சூழ்வன வரைஎன உயர்மணி மாடம்
நஞ்சு சூழ்வன நயனியர் நளினமெல் லடிச்செம்
பஞ்சு சூழ்வன காளையர் குஞ்சியின் பரப்பு.

அந்த நகரில் உள்புற மதில் சூழ்வன பகைவரைத் தாக்குவதற்கு நாட்டப்பெற்ற எந்திரங்களின் பந்திகள் சூழ இருக்கும் பெருமதில்கள். மேகங்கள் வந்து படிந்து சூழ்ந்த வண்ணம் இருப்பன மலை என உயர்ந்த அழகிய மாடங்கள். நஞ்சு சூழ்வன போன்ற அழகிய கண்களை உடைய இளம் பெண்களின் தாமரை மலர்போலும் செம்பஞ்சின் குழம்பு தீட்டிய மிருதுவாய பாதங்களைச் சூழ்வன தம்மைக் காதலால் அணைத்திட வேண்டி நிற்கும் காதலரது குடுமிக் கூந்தலின் பரப்பு.

இதனால் நாட்டின் அரண் உறுதியும்; நகரத்தின் அழகும்; இன்பத்துறையின் போகபோக்கிய நலன்களும் மொழிகின்றார். 2

விழவ ருதன விளங்கொளி மணிநெடு வீதி
முழவ ருதன மொய்குழ லியர்நட அரங்கம்
மழவ ருதன மங்கலம் பொலிமணி முன்றில்
உழவ ருதநல் வளத்தன ஓங்கிருங் குடிகள்.

விழாக்கோலம் நீங்காதன ஒளிவிளங்கும் அழகிய நெடிய வீதி எங்கும்; முரசமேளத்தின் ஓசை நீங்காதன வண்டினம் மொய்க்கும் கூந்தலுடைய பெண்கள் நடமாடும் அரங்குகள் எங்கும். மழலைச் சொல் ஓவாத குழந்தைகள் நீங்காதன மங்கலம் பொலியும் அழகிய முற்றங்கள் எங்கும்; உழவின் வளமான உணவின் செல்வம் நிறைய உள்ளன சீர் ஓங்கிட வாழும் பெரும் குடிகள். 3

நீரி னிற்பொலி சடைமுடி நெற்றிநாட் டத்துக்
காரி னில்திகழ் கண்டர்தம் காதலோர் குழுமிப்
பாரின் மிக்கதோர் பெருமையால் பரமர்தாள் பரவும்
சீரின் மிக்கது சிவபுரி எனத்தகும் சிறப்பால்.

அந்த நகரம்; கங்கை ஆற்று நீரினைப் பொலியும் சடைமுடியும் நெற்றிக் கண்ணும் மேகம்போல் கருமையின் அழகு பொலியும் நீலகண்டமும் உடைய தேவாதி

தேவன் சிவனது அன்பர்கள் கூடி இப்பூமியில் எல்லாச் செயலிலும் மிக்கது இது வென்ற பெருமையால் பரம்பொருளாய ஈசன் திருவடி வணங்கிடும் சீரினுல் மீகுந் துள்ளமையின்; அது சிவபுரி எனப்படும் சிறப்பால் ஒங்கி உள்ளது.

சிறப்புடைய அரணுடையதாய் திருவுடையதாய் வளம்பெருகியதாக அந்த நகரம் திருப்பெரு மங்கலம் என்பது விளங்குவதாயினும் அங்கு வாழ்வு சிவனே பரம் பொருள் எனக் கொண்டு தெய்வம் பரவும் சீருடன் விளங்கலால் சிவபுரி எனத் தகுவது என்றுயிற்று: 4

இன்ன வாழ்பதி அதனிடை ஏயர்கோக் குடிதான்
மன்னி நீடிய வளவர்சே ஞபதிக் குடியாம்
தொன்மை மேவிய தொடர்ச்சியால் நிகழ்வது தூய
பொன்னிநாட்டு வேளாண்மையில் உயர்ந்த பொற்பினதால்.

இவ்வாருக வாழ்வுடைய அந்த திருப்பெரு மங்கலமாய அப்பகியதனிடத்தாக ஏயர்கோக்குடி எனும் சிறப்புப் பெயர் பூண்ட அப்பகுதி மக்கள் தாம்; சீர் மன்னி நீளவிளங்கிய சோழ அரசர்களுடைய சேனுபதிக் குடியாகிய மிகும் பழைமை அடைந்த வரலாறு உடையதாய் என்றும் நிறைந்திருப்பது. இந்த ஏயர் கோக்குடி என்னும் இனம் தூயதான சோழநாட்டு வேளாண்குலத்தில் மிகு உயர்ந்த பொற்புடையதாகும். 5

அங்கண் மிக்கஅக் குடியினில் அவதரித் துள்ளார்
கங்கை வாழ்முடி யார்தொண்டர் கலிக்காமர் என்பார்
தங்கள் நாயகர் அடிபணி வாரடிச் சார்ந்து
பொங்கு காதலின் அவர்பணி போற்றுதல் புரிந்தார்.

அங்கு அத்திருபெருமங்கலப் பதியதனிடத்தாக வாழும் மிக்க பெரும் அவ் ஏயர்கோக்குடியில் வந்து அவதரித்துளளார் ஒருவர். அவர் கங்கைநதி வாழும் முடியுடைய பெருமான்தொண்டராவர். கலிக்காமர் எனப்படுவார். அவர் தங்கள் நாயகன் சிவனடியே பெறும் பேருகக் கொண்டு வாழும் அடியார்கள் திருவடித் தொண்டே தமது பற்றுகச் சேர்ந்து; தம்உள்ளத்து பெருகும் காதலால் அந்த அடியார்கள் பணியினைப் போற்றுதல் செய்வார். 6

புதிய நாண்மதிச் சடைமுடி யார்திருப் புன்கூர்க்
கதிக மாயின திருப்பணி அனேகமும் செய்து
நிதிய மாவன நீறுகந் தார்கழல் என்று
துதியி னுற்பர வித்தொழு தின்புறு கின்ருர்.

அவர் தேய்ந்தபின் புதிய வளரும் நாள் தோன்றும் ஒற்றைக் கலையுடைய பிறை சூடும் சடைமுடியுடைய பெருமான் வாழும் திருப்புன்கூர் என்னும் சிவாலயத் திற்கு அதிகமான திருப்பணிகள் அநேகமும் செய்து; ''என்பெரும் செல்வமாவன திரு நீற்றை உகந்து அணியும் அப்பன் சிவன் திருக்கழலே'' என்று நித்தலும் அவரை துதிகளாற் போற்றித் தொழுது அவ் வழிபாட்டால் வரும் இன்பத்தில் உறுகின்ருர்.

நாவ லூர்மன்னர் நாதனைத் தூதுவிட் டதனுக்
கியாவர் இச்செயல் புரிந்தனர் என்றவர் இழிப்பத்
தேவர் தம்பிரான் அவர்திறம் திருத்திய அதற்கு
மேவ வந்தஅச் செயலினை விளம்புவா னுற்றேன்.

அவ்வணம் வாழும் ஏயர்கோன் கலிக்காமநாயனுர் ஓர்நாள் எம்பெருமான் திருநாவலூர் அரசர் சுந்தரமூர்த்தி சுவாமிகள் சிவபெருமானை தனது காதலி

பரவைபால் தூதுவிட்டதனிற்காக ''இயாவர் எமக்கருளும் பெருமானையே காதலியிடம் தூதுசெலச் செய்யும் செயல் புரிவார் இது பெரும் தவருயிற்று'' என சுந்தரமூர்த்தி சுவாமிகளை இகழ்ந்துரைப்ப அவர் திறமுணர்ந்த தேவர்கட்கும் பெருமான் சிவன் அந்த ஏயர்கோன் கலிக்காமனுருடைய தன்மையைத் திருத்தி அடியார்க்கு எளியவன் தாம் என உணரவைத்த அந்தச் செயலிற்கு ஏற்கும்படி வந்த அற்புதமாய வரலாற்றினை இனி அடியேன் எடுத்து சொல்லல் உற்றேன். 8

திருத்தொண்டத் தொகையருளித் திருநாவ லூராளி
கருத்தொன்று காதலினுல் கனகமதில் திருவாரூர்
ஒருத்தர்கழல் முப்பொழுதும் உருகியஅன் பொடுபணிந்து
பெருத்தெழுமெய் அன்பினுல் பிரியாதங் குறையுநாள்.

திருநாவலூரை ஆண்டு கொள்ளும் அருளாளர் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாரூரில் தங்கியிருந்து அடியார் சீர்போற்றும் திருத்தொண்டத் தொகைப் பதிகத்தைப் பாடியருளிய பின்னர் தம் எண்ணம் யாவும் பல்வேருகச் சிதைபடாது ஒருமைப்பாடய் சிவன்பால் கொண்ட அக் காதலால் பொன்மதில் சூழும் திருவாரூரில் வாழும் ஏகனுய எம்பெருமான் திருவடிகளை காலை மத்தியானம் மாலை எனும் முக்காலமும் சென்று உருகிய அன்பொடும் பணிந்து உள்ளத்து பெருத்து எழுகின்ற மெய் அன்பினுல் எம்பிரான் திருவாரூர் விட்டுப் பிரியாது அங்கு குறையும் நாட்களில். 9

தாளாண்மை உழவுதொழில் தன்மைவளம் தலைசிறந்த
வேளாளர் குண்டையூர்க் கிழவரெனும் மேதக்கோர்
வாளார்வெண் மதியணிந்தார் மறையவராய் வழக்கினில்வென்று
ஆளாகக் கொண்டவர்தாள் அடைந்தன்பால் ஒழுகுவார்.

தாழ்வு என்னும் தன்மை வராது தம்மை மேல்நிலை உய்த்திடக் கொள்ளும் ஆண்மை உயர்ச்சியைத் தந்திடும் உழவு தொழிலின் தன்மையால் செல்வம் தலை சிறந்த ஓர் வேளாளர் அவர் குண்டையூர்க்கிழவர் என்னும் பேருடைய மேலாம் பெரியவர்; அவர் ஒளி ஆர்ந்து விளங்கும் வெண்மதி சூடிய பெருமான் இவ்வுலகில் அந்தணராய் வடிவுகொண்டு வந்தருளி வழக்கினில் வென்று ஆண்டருளப் பெற்ற சுந்தரமூர்த்திசுவாமிகள் திருவடியே பற்றுகக்கொண்டு அன்பினுல் அவர்க்குத் தொண்டுகள் செய்து வருவார் எவ்வாறெனில், 10

செந்நெல்லும் பொன்னன்ன செழும்பருப்பும் திங்கரும்பின்
இன்னல்ல அமுதும்முதல் எண்ணில்பெரும் பலவளங்கள்
மன்னியசீர் வன்றொண்டர்க் கமுதாக வழுவாமல்
பன்னெடுநாள் பரவையார் மாளிகைக்குப் படிசமைத்தார்.

செந்நெல்லும் பொன்போன்ற செழுமையான பருப்பும் தித்திப்பாய கரும்பின் இனிய நல்ல அமுதும் முதலாக எண்ணற்ற பெரும் பலவகையான வளங்கள் யாவும் சீர் விளங்கிய சுந்தரமூர்த்தி சுவாமிகட்குத் திருவமுதாக அமைந்திட தவறின்றி பல நெடு நாட்கள் வரையும் தமது இடத்திருந்து பரவை அம்மையார் மாளிகைக்கு படித்திறனைச் சென்று சேரும்படி ஒழுங்குகள் செய்தார். 11

ஆனசெயல் அன்பின்வரும் ஆர்வத்தால் மகிழ்ந்தாற்ற
வானமுறை வழங்காமல் மாநிலத்து வளஞ்சுருங்கப்
போனகநெற் படிநிரம்ப எடுப்பதற்குப் போதாமை
மானமழி கொள்கையினுல் மனமயங்கி வருந்துவார்.

இவ்வாரூன படித்திறனின் செய்கை அன்பினுல் வரும் ஆர்வத்தால் மகிழ்ந்து செய்திடலும் அங்கொருகால் வானம் தனது மழை பொழியும் தன்மை செய்யாமல் விடுதலால் இப்பெரு நிலத்து பூமியின் வளம் சுருங்கிடலால் எம்பிராட்டி பரவையார் மாளிகைக்கு திருவமுதிற்கு வேண்டிய நெல் எடுத்தற்கு போதாமையால் மானம் அழிந்த கொள்கையால் மதிகெட்டு மயங்குவார் அந்த குண்டையூர்க்கிழவர் என்னும் பெரியவர். 12

வன்றொண்டர் திருவாரூர் மாளிகைக்கு நெல்லெடுக்க
இன்றுகுறை யாகின்ற தென்செய்கேன் எனநினைந்து
துன்றுபெருங் கவலையினுல் துயரெய்தி உண்ணுதே
அன்றிரவு துயில்கொள்ள அங்கணர்வந் தருள்புரிவார்.

வன்றொண்டராம் சுந்தரரின் திருவாரூர் மாளிகைக்கு நெல் எடுத்துச் சென்றிட இன்று குறையாகின்றதே என் செய்கேன்; என நினைத்திடப் பெருகும் கவலை மிகுதியால் துயரடைந்து தாம் உணவும் அருந்துதலின்றி அன்று இரவு குண்டையூர்க் கிழவர் துயில்செய்ய அதுவேளை நெற்றிக்கண்ணுடைய கடவுள் சிவமூர்த்தி அவர் கனவில் தோன்றி வந்து அருள் செய்கின்றார் எவ்வாறெனில். 13

ஆரூரன் தனக்குன்பால் நெல்தந்தோம் என்றருளி
நீரூரும் சடைமுடியார் நிதிக்கோமான் தனைஏவப்
பேரூர்மற் றதன்எல்லை அடங்கவும்நெல் மலைப்பிறங்கல்
காரூரும் நெடுவிசும்பும் கரக்கநிறைந் தோங்கியதால்.

நம்பியாரூரனுக்கு உன்பாலாக நெல் கொடுத்துள்ளோம் என்று குண்டையூர்க் கிழவருக்கு அருள் செய்து அதன்படியே நெல்கொடுத்திடுமாறு கங்கைநீர் உலவும் சடைமுடியுடைய கடவுள் நிதிகட்கெல்லாம் தலைவன் குபேரனைத் தனது அருளின் படியாய பணிசெய்யுமாறு எவிடலும் குபேரனது செயலால் அந்த பெரும் ஊராய குண்டையூர் முழுவதின் எல்லை அடங்கவும் நெல்லின் மலையாகவே பொலிந்து மேகம் ஊரும் நெடிய வானமும் மறைய எங்கும் நிறைய அந்த நெல்மலை ஓங்கியது. 14

அவ்விரவு புலர்காலை உணர்ந்தெழுவார் அதுகண்டே
எவ்வுலகின் நென்மலைதான் இது?என்றே அதிசயித்துச்
செவ்வியபொன் மலைவளைத்தார் திருவருளின் செயல்போற்றிக்
கொவ்வைவாய்ப் பரவையார் கொழுநரையே தொழுதெழுவார்.

அன்றைய இரவு விடியும் காலத்து நித்திரை நீங்கி உணர்ந்து எழும் குண்டையூர்க் கிழவர் இந்த நெல்மலையின் பெருக்கம் கண்டு ''எவ்வுலகின் நெல்மலைதான் இது'' என்றே கூறி அதிசயம் கொண்டு செவ்விய பொன்மலையாம் மேருவை வில்லாக வளைத்த பெருமானின் திருவருளின் செயலைப் போற்றி செய்து அப்பால் கொவ்வைப் பழம்போலும் வாயுடைய பரவை அம்மையார் நாயகர் சுந்தரரையே நினைந்து தொழுதெழுவார்.

சுந்தரது தியானம், பணிவிடை, அன்பு, அதுதான் இந்த அற்புதம் விளைத்தது என்றமையால் கொவ்வைவாய்ப் பரவையார் கொழுநரையே தொழு தெழுவார் என்று கொள்ளப்பெறுவது. 15

நாவலூர் மன்ன னுர்க்கு நாயனுர் அளித்த நெல்லிங்கு
யாவரால் எடுக்கலாகும் இச்செயல் அவர்க்குச் சொல்லப்
போவன்யான் என்றுபோந்தார்; புகுந்தவாறருளிச் செய்து
தேவர்தம் பெருமான் ஏவ நம்பியும் எதிரே சென்றார்.

தொழுது எழுந்து என் நாவலூர் அரசர்க்கு இறைவனுல் நரப்பட்ட இந்த நெல் மலையை இங்கு யாவரால் அவ்விடத்திற்கு எடுத்துச் சொல்லமுடியும்? ஆதலால் இந்த அற்புதச் செயலை நான் நேரில் அவர்க்குச் சொல்லப்போவன் யான் என்று திருவாரூர் போனுர் குண்டையூர்க்கிழவர். இவர் செய்கை இப்படியாக எம் பெருமானும் எம் சுந்தரமூர்த்தி சுவாமிகட்கு அங்கு நிகழ்ந்த தன்மையை அருள் புரிந்து சுந்தரரையும் குண்டையூர் செல்லுமாறு ஏவிட தேவர்களது பெருமான் அருளைப்பெற்று சுந்தரமூர்த்தி சுவாமிகளும் தம்பால் வரும் கிழவர் எதிரே சென்று கொள்கின்றார். 16

குண்டையூர்க் கிழவர் தாமும் எதிர்கொண்டு கோதில் வாய்மைத்
தொண்டனுர் பாதம் தன்னில்தொழுது வீழ்ந்தெழுந்து நின்று
பண்டெலாம் அடியேன் செய்த பணிஎனக் கின்று முட்ட
அண்டர்தம் பிரானுர் தாமே நெல்மலை அளித்தார் என்று.

தம்பதிநோக்கி எதிர்வரும் சுந்தரமூர்த்தி சுவாமிகளை குண்டையூர்க் கிழவரும் எதிர்கொண்டு; கோதில்லாத வாய்மை மொழியால் உலகுய்யத் தரும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாதம் தன்னில் நேராகத் தொழுது வீழ்ந்து எழுந்து நின்று பெருமானே ''முன்னெல்லாம் அடியேன் உமக்குச் செய்தபணி இன்று செய்திட முடியாது தவறிட அதற்கு தேவாதி தேவன் சிவனே வேண்டிய நெல் மலையைத் தந்துள்ளார்.'' என மொழிந்து பின்னரும். 17

மனிதரால் எடுக்கும் எல்லைத்தன்று நெல்மலையின் ஆக்கம்
இனிஎனுற் செய்ய லாகும் பணியன்றிது என்னைக் கேட்டுப்
''பனிமதி முடியா ரன்றே பரிந்துமக் களித்தார் நெல்''லென்று
இனியன மொழிந்து தாமும் குண்டையூர் எய்த வந்தார்.

மேலும் ஐயனே! அந்த நெல் மலையின் பெருக்கம் மனிதரால் எடுத்திடும் எல்லையில் அடங்குவது அன்று இனி அது என்னுல் செய்யக்கூடிய பணியும் அன்று என்று குண்டையூர்க்கிழவர் மொழிந்திட அதனைக்கேட்ட சுந்தரமூர்த்தி சுவாமிகள் அவரை நோக்கி குளிர்ந்த இளம்பிறை முடியுடைய பகவானேயல்லவோ உம்பால் பரிந்து உமக்கு நெல் கொடுத்தார் என்று இனியன பலவார்த்தைகள் கூறி தாமும் கிழவருடன் கூடி குண்டையூர்ப்பதியை அடைந்திட வந்தார். 18

விண்ணினை அளக்கும் நெல்லின் வெற்பினை நம்பி நோக்கி
அண்ணலைத் தொழுது போற்றி அதிசயம் மிகவும் எய்தி
''எண்ணில்சீர்ப் பரவைஇல்லத் திந்நெல்லை எடுக்க ஆளும்
தண்ணிலவு அணிந்தார் தாமே தரிலன்றி ஒண்ணுது'' தென்று.

அங்கு சேர்ந்து வானினை அளக்கும்படி உயர்வுடன் நின்ற நெல்மலையை சுந்தரமூர்த்தி சுவாமிகள் நோக்கியருளி எம்பெருமானைத் தொழுது போற்றிசெய்து அதிசயம் மிகவும் கொண்டு ''இந்த நெல்மலையை எண்ணமுடியாத சிருடைய பரவையின் மாளிகைக்கு எடுத்துச் செல்ல ஆளினையும் குளிர்ந்த பிறையணிந்த பெருமானே தந்தால் அன்றி இது எம்மால் எடுக்கமுடியாது'' என மொழிந்து. 19

ஆளிடவேண் டிக்கொள்வார் அருகுதிருப் பதியான
கோளிலியில் தம்பெருமான் கோயிலினை வந்தெய்தி
''வாளனகண் மடவாள் வருந்தாமே'' எனும்பதிகம்
மூளவரும் காதலுடன் முன்தொழுது பாடுதலும்.

நெல்மலையை எடுத்திட ஆட்களையும் போடும்படி வேண்டிக்கொள்வாராய் அதற்கு அருகாக உள்ள சிவாலயமான திருக்கோளிலி என்னும் தமது பெருமான் கோயிலினை வந்து சேர்ந்து திருமுன் நின்று எம்பிராணை வணங்கி ''வாள்போலும் நீண்ட வரிவிழியாள் மடமெனும் குணச்சிறைப்புடைய பரவை வருந்தாது'' எனத் தொடங்கும் திருப்பதிகத்தை எம்பெருமான்பால் மூள வருகின்ற அன்பினுடன் தொழுது பாடுதலும். 20

அவர் பரவைமணைக்கு நெல் எடுக்க ஆளிடவேண்டி நெல் தந்த பெருமானை திருக்கோளிலி என்னும் தலத்தில் பாடிய திருப்பதிகம் இதுவாகும்.

திருக்கோளிலி

பண் – நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

நீள நினைந்தடியேன் உமை நித்தலும் கைதொழுவேன்
வாளன கண்மடவாள் அவள் வாடி வருந்தாமே
கோளிலி எம்பெருமான் குண்டை யூர்ச்சில நெல்லுப்பெற்றேன்
ஆளிலை எம்பெருமான் அவை அட்டித் தரப்பணியே. 1

வண்டம ருங்குழலாள் உமை நங்கையோர் பங்குடையாய்
விண்டவர் தம்புரமூன் றெரி செய்தளம் வேதியனே
தெண்திரை நீர்வயல்சூழ் திருக் கோளிலி எம்பெருமான்
அண்டம தாயவனே அவை அட்டித் தரப்பணியே. 2

பாதியோர் பெண்ணை வைத்தாய் படருஞ்சடைக் கங்கைவைத்தாய்
மாதர்நல் லார் வருத்தம் அதுநீயும் அறிதியன்றே
கோதில் பொழில்புடைசூழ் குண்டையூர்ச் சிலநெல்லுப் பெற்றேன்
ஆதியே அற்புதனே அவை அட்டித் தரப்பணியே. 3

சொல்லுவ தென்னுனைநான் தொண்டை வாயுமை நங்கையைநீ
புல்கி இடத்தில் வைத்தாய்க் கொரு பூசல்செய் தார்உளரோ
கொல்லை வளம்புறவிற் குண்டையூர்ச் சிலநெல்லுப் பெற்றேன்
அல்லல் களைந்தடியேற் கவை அட்டித் தரப்பணியே. 4

முல்லை முறுவல்உமை ஒரு பங்குடை முக்கணனே
பல்லயர் வெண்டலையிற் பலி கொண்டுழல் பாசுபதா
கொல்லை வளம்புறவில் திருக் கோளிலி எம்பெருமான்
அல்லல் களைந்தடியேற் கவை அட்டித் தரப்பணியே. 5

குரவம ருங்குழலாள் உமை நங்கைஓர் பங்குடையாய்
பரவை பசிவருத்தம் அது நீயும் அறிதியன்றே
குரவம ரும்பொழில்சூழ் குண்டை யூர்ச்சில நெல்லுப்பெற்றேன்
அரவம் அசைத்தவனே அவை அட்டித் தரப்பணியே. 6

எம்பெரு மானுனையே நினைந் தேத்துவன் எப்பொழுதும்
வம்பம ருங்குழலாள் ஒரு பாகம் அமர்ந்தவனே
செம்பொனின் மாளிகைசூழ் திருக் கோளிலி எம்பெருமான்
அன்பது வாயடியேற் கவை அட்டித் தரப்பணியே. 7

அரக்கன் முடிகரங்கள் அடர்த் திட்டஎம் ஆதிப்பிரான்
பரக்கும் அரவல்குலாள் பர வையவள் வாடுகின்றாள்
குரக்கினங்கள் குதிகொள் குண்டையூர்ச்சில நெல்லுப்பெற்றேன்
இரக்கம தாயடியேற் கவை அட்டித் தரப்பணியே. 8

பண்டைய மால்பிரமன் பறந் தும்மிடந் தும்அயர்ந்தும்
கண்டில ராயவர்கள் கழல் காண்பரி தாயபிரான்
தெண்திரை நீர்வயல்சூழ் திருக் கோளிலி எம்பெருமான்
அண்டம தாயவனே அவை அட்டித் தரப்பணியே. 9

கொல்லை வளம்புறவில் திருக் கோளிலி மேயவனை
நல்லவர் தாம்பரவுந் திரு நாவல வூரனவன்
நெல்லிட ஆட்கள்வேண்டி நினைந் தேத்திய பத்தும்வல்லார்
அல்லல் கழைந்துலகின் அண்டர் வானுல காள்பவரே. 10

திருச்சிற்றம்பலம்

''பகற்பொழுது கழிந்ததன்பின் பரவைமணை அளவன்றி
மிகப்பெருகு நெல்லுலகில் விளங்கியஆ ரூர்நிறையப்
புகப்பெய்து தருவனநம் பூதங்கள்'' எனவிசும்பில்
நிகர்ப்பரிய தொருவாக்கு நிகழ்ந்ததுநின் மலனருளால்.

இத்திருப்பதிகம் பாடுதலும் அதுவேகூ ''பகற்பொழுது கழிந்ததற்பின் பரவை மணை அளவில் அல்லாது மிகப்பெருக விளங்கிடும் இந்த நெல் உலகில் விளங்கிய சிறப்புடைய திருவாரூர் நிறைய வந்து சேரும்படி கொண்டு சேர்ப்பன நம்பூதங்கள்'' என வானத்தில் யாவிற்கும் நிகர் சொல்லமுடியாததொரு அசரீரிவாக்கு நிகழ்ந்தது அங்குறையும் மலப்பற்று இலாத சிருடைய சிவபிரான் திருவருளால். 21

தம்பிரான் அருள்போற்றித் தரையின்மிசை விழுந்தெழுந்தே
உம்பரால் உணர்வரிய திருப்பாதம் தொழுதேத்திச்
செம்பொனேர் சடையாரைப் பிறபதியும் தொழுதுபோய்
நம்பர்ஆ ரூர்அணைந்தார் நாவலூர் நாவலனார்.

தமது பெருமானின் இத்திருவருளைக் கேட்ட திருநாவலூர் வந்த அரசர் நாவன்மையில் சிறந்த சுந்தரமூர்த்தி சுவாமிகள் அந்த அருளிப் பாட்டைத் தொழுது போற்றி நீலமீது விழுந்து எழுந்து தேவராலும் உணர ஒன்னுத திருப்பாதத்தைத் தொழுது வணங்கி அங்கு நீங்கி செம்பொன்னை ஒத்த சடைமுடியுடைய பெருமானைபிற தலங்களிலும் சென்று வணங்கிப்போய் எம்பெருமானுடைய திருவாரூரை அணைந்து கொண்டார். 22

பூங்கோயில் மகிழ்ந்தருளும் புராதனரைப் புக்கிறைஞ்சி
நீங்காத பெருமகிழ்ச்சி யுடனேத்திப் புறம்போந்து
பாங்கானூர் புடைசூழ்ந்து போற்றிசைக்கப் பரவையார்
ஓங்குதிரு மாளிகையின் உள்ளணைந்தார் ஆரூரர்.

திருவாரூர் சென்றருளும் எம் சுந்தரமூர்த்திசுவாமிகள் பூங்கோயில் எனப்படும் அத்தலத்து அமர்ந்தருளிய மிகவும் முன்னைய பெருமானை முன் சென்று வணங்கி அம்மை விட்டு நீங்காத பெருமகிழ்ச்சியுடன் துதித்து வெளிவந்து பாங்குடைய

அடியார்கள் தம்மைப் பக்கரில் குழ்ந்து போற்றிப் புகழ்ந்து பாடிவர பரவை அம்மையாரின் மேலோங்கிய திருவுடைய மாளிகையின் உள்ளாக வந்து சேர்ந்தருளினர்.

23

கோவைவாய்ப் பரவையார் தாமகிழும் படிகூறி
மேவியவர் தம்மோடு மிகஇன்புற் றிருந்ததற்பின்
சேவின்மேல் உமையோடும் வருவார்தந் திருவருளின்
ஏவலினுல் அவ்விரவு பூதங்கள் மிக்கெழுந்து.

மாளிகையின் உட்புகுந்த எம்பெருமான் சுந்தரர் அங்கு கொவ்வைப்பழம் போலும் வாயுடைய பரவை அம்மையார் தாமும் நெல் வந்த அற்புதம் கேட்டு மகிழும்படி கூறி அவருடன் கூடி மிக இன்புற்று இருந்த பிற்பாடு இடபத்தின்மேல் உமையுடன் எழுந்தருளி வரும் எம்பெருமான் சிவனது திருவருளின் ஏவலினுல் அன்று இரவு பூதங்கள் மிக எழுந்தன எழுந்து.

24

குண்டையூர் நென்மலையைக் குறட்பூதப் படைகவர்ந்து
வண்டுலாம் குழற்பரவை மாளிகையை நிறைவித்தே
அண்டர்பிரான் திருவாரூர் அடங்கவும்நெல் மலையாக்கிக்
கண்டவர்அற் புதமெய்தும் காட்சிபெற அமைத்தனவால்.

குண்டையூரில் வந்த நெல் மலையை குறள் வடிவான பூதப்படை ஒருவர்க்கும் தெரியாது அள்ளி எடுத்து வண்டுகள் உலாவி விளங்கிடும் மாலையணிந்த கூந்தலையுடையபரவையின் மாளிகை முழுவதும் சேர நிறைவித்தே அதனுடன் அமையாது தேவாதி தேவனது திருவாரூர் முழுவதும் நெல்லின் மலையேயாக்கி இதனைக்கண்டவர் அற்புதமெய்தும்படியான காட்சி பெற எங்கும் நெல்மலையாக அமைத்தன.

அவ்விரவு புலர்காலை ஆரூரில் வாழ்வார்கண்டு
''எவ்வுலகில் விளைந்தனநெல் மலைஇவை''என் றதிசயித்து
நவ்விமதர்த் திருநோக்கின் நங்கைபுகழ்ப் பரவையார்க்கு
இவ்வுலகு வாழவரும் நம்பிஅளித் தனஎன்பார்.

அன்று இரவு விடிந்த நேரத்து திருவாரூரில் வாழ்வார் அந்த நெல்மலை வந்த அற்புதம் கண்டு எந்த உலகில் விளைந்தன இந்த நெல்மலை இவையென நினைந்து அதிசயம்கொண்டு ஓகோ இவைதாம் மான்பார்வை போலும் சிறப்புடைய திருநோக்கின் நங்கை; பெரும் புகழுடைய பரவை நாச்சியார்க்கு இந்த உலகம் வாழவருகின்ற எம்பெருமான் சுந்தரர் கொடுத்தனவாகும் என்று மொழிவார்கள்.

நீக்கரிய நெற்குன்று தனைநோக்கி நெறிபலவும்
போக்கரிதா யிடக்கண்டு மீண்டும்தம் இல்புகுவார்
பாக்கியத்தின் திருவடிவாம் பரவையார்க் கிந்நெல்லுப்
போக்குமிடம் அரிதாகும் எனப்பலவும் புகல்கின்றூர்.

தம்முயற்சியால் அகற்றுதற்கு அரிய நெல்மலைதனை அவர்கள் பார்த்து அதனுல் தம்மூரில் பலபாதையாலும் வெளிப்போக முடியாது திரும்பித்தம் இல்லங்களில் செல்வார்கள் சொல்லிக் கொள்கிறூர்கள் ''நாம் செய்த புண்ணியத்தின் திருவடிவாயிய பரவை அம்மையார்க்கு இந்த நெல்லு இவ்வளவும் கொண்டு சேர்ப்ப அவரது மாளிகையில் இடம் இல்லை அது அரிதாகும்'' என பலமொழிகள் பேசிக் கொள்வார்கள்.

37

வன்றொண்டர் தமக்களித்த நெற்கண்டு மகிழ்சிறப்பார்
''இன்றுங்கள் மனைஎல்லைக் குட்படுநெற் குன்றெல்லாம்
பொன்றங்கு மாளிகையிற் புகப்பெய்து கொள்க''என
வென்றிமுர சறைவித்தார் மிக்கபுகழ்ப் பரவையார்.

வன் தொண்டர் எனப்படும் சுந்தரமூர்த்தி சுவாமிகட்கு இறைவனுல் கொடுக்கப்பட்ட நெல் மலையை, மிக்க புகழுடைய பரவையம்மையார் கண்டு மனம் களி கூர்ந்து சிறப்படையராய், அந்த நெல் மலையில் இன்று உங்கள் மனைகளின் எல்லைக்குட்பட்ட நெல் மலை எல்லாவற்றையும் பொன் தங்கிய நயமுடைய உங்கள் உங்களது மாளிகைகளில் சேரும்படி எடுத்துச் சேர்த்துக் கொள்ளுங்கள்'' என்று வெற்றியின் விழைவுடைய முரசப் பறையை முழங்கிச் செய்தார்.

பரவை அம்மையார்க்கு அந்த நெல் மலை தமது மாளிகை உள்ளாகமுழுவதும் சேர்க்க முடியாமையின் உங்கள் மனை எல்லைக்குட்பட்ட நெல்யாவும் நீங்களே எடுத்துச் சேமியுங்கள் என மொழிந்தவாறு என்க.

28

அணியாரூர் மறுகதனில் ஆளியங்கப் பறையறைந்த
பணியாலே மனைநிறைத்துப் பாங்கெங்கும் நெற்கூடு
கணியாமற் கட்டிநகர்களிகூரப் பரவையார்
மணியாரம் பூணைமார்பின் வன்றொண்டர் தமைப்பணிந்தார்.

அழகிய திருவாரூர் வீதிகள் அதனிடத்து ஆட்கள் நடமாட்டம் கொள்வதற்கு தடையாயிருந்த நெல்மலையை எடுத்து ஆள் இயங்க வைத்திட பரவை அம்மை பறை அறைவித்த அப்பணியாலே தங்கள் தங்கள் மனைகளில் நெல் நிறைவித்து பக்கரில் எங்கும் நெற்கூடுகளிலும் குறைவிலாது நெற்கட்டி வைத்து தமக்கு கிடைத்த பேரருளின் நெல் திறம் நோக்கி திருவாரூர் நகரமே களி கூர்ந்திடலும், அது கண்டு பரவை அம்மையாரும் அழகியமுத்தின் ஆரம்பூண்ட மார்புடைய சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்பாதம் பணிவுற்றூர்.

29

நம்பியா ரூரர்திரு வாரூரில் நயந்துறைநாட்
செம்பொற்புற் றிடங்கொண்டு வீற்றிருந்த செழுந்தேனைத்
தம்பெரிய விருப்பினெடுந் தாழ்ந்துணர் வினுற்பருகி
இம்பருடன் உம்பர்களும் அதிசயிப்ப எத்தினுர்.

இப்படியாக எம் சுந்தர மூர்த்திசுவாமிகள் திருவாரூரில் நயந்துவாழும் காலமதில் செம்பொன் மயமான கறையான் புற்றில் இடம் கொண்டு வீற்றிருந்த செழுமை மிக்கதேனுய எம் சிவனை, தமது உள்ளத்து பெருகிய விருப்பினெடும் தாழ்ந்து பணிந்து அறிதற்கரிய அம்மூர்த்தியை தமது உணர்வினுல் பருகி இவ்வுலகில் உள்ள மனிதர்களுடன் தேவர்களும் அவர் வணங்கிப் பெறுகின்ற பேரின்ப நிலையைக்கண்டு அதிசயித்திடத்துதித்துவருவார்.

சிவனருளுணர்வினுல் பருகினுல் அங்கு அப்பொழுது எழும் ஆனந்த விளைவு அளப்பரியது. இதனை ஆனந்தத்தேன் சொரியும் கூத்துடையான் என்கிறூர் மாணிக்க வாசகர்;

30

குலவுபுகழ்க் கோட்புலியார் குறையிரந்து தம்பதிக்கண்
அலகில்புகழ் ஆரூரர் எழுந்தருள அடிவணங்கி
நிலவியவன் றொண்டரைந்திசைந்ததற்பின் நேர் இறைஞ்சிப்
பலர்புகழும் பண்பினுர் மீண்டும்தம் பதி அணைந்தார்.

இவாறுய அருள் நிலையுடன் இவர் இருப்ப புகழ் விளங்கும் கோட்புலியார் என்னும் நாயனார் (இவர் ஒரு சேனாதிபதி) திருவாரூர் வந்து தமது ஊராகிய நாட்டியத்தான் குடிக்கு எழுந்தருளி வருமாறு குறைவிலாத புகழுடைய சுந்தர மூர்த்தி சுவாமிகளை மிகு மன்மூட்டத்துடன் வேண்டி அவர் திருபாதத்துப் பணிதலும் அதற்கு என்றும் புகழ் நிலவிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் இணங்கமுடன் சம்மதித்தலும் அதுகண்டு அவரை நேராக வணங்கி பலரும் புகழும் பண்புடைய கோட்புலி நாயனார் அவர் வருகையை எதிர் நோக்கி மீண்டும் தம் பதியில் புகுந்தார். 31

தேவரொதுங்கத் திருத்தொண்டர் மிடையுஞ் செல்வத் திருவாரூர்
காவல் கொண்டு தனியாளுங் கடவுட் பெருமான் கழல்வணங்கி
நாவ லூரர் அருள்பெற்று நம்பர் பதிகள் பிற நண்ணிப்
பாவைபாகர் தமைப்பணிந்து பாடும் விருப்பிற் சென்றணைவார்.

தேவர்கள் கண்டு வழிவிட்டு ஒதுங்கிட சிலமுடைய திருத்தொண்டர் நெருங்கிச் சூழும் அருட் செல்வமுடைய திருவாரூர் நகரினைக்காவல் கொண்டு தனி ஆண்டு கொள்ளும் கடவுளர்க்கெல்லாம் பெருமான் சிவமூர்த்தி திருவடிகளை வணங்கி சுந்தரர்கோட்புலியார் நகரம் நாட்டியத்தான்குடி சென்றிட அருள் பெற்று அங்குநீங்கி எம்பெருமானுடைய பிறதலங்களும் சென்றடைந்து அங்குபெண்ணெருபாகராய்பெருமானைப் பணிந்து பாடும் விருப்பினுடன் சென்று சேர்வார். 32

மாலும் அயனும் உணர்வரியார் மகிழும் பதிகள் பல வணங்கி
ஞாலம் நிகழ்கோட்புலியார் தம் நாட்டியத்தான் குடி நண்ண
ஏலும் வகையால் அலங்கரித்தங் கவரும் எதிர்கெண்டினிதிறைஞ்சிக்
கோல மணி மாளிகையின் கண் ஆர்வம் பெருகக் கொடுபுக்கார்

திருமாலும் பிரமனும் உணர்வரிய சிவபெருமான் இனிதுறையும் பதிகள் பல உள்ளன சென்று வணங்கி அப்பால் போய் இப்பூமியில் என்றும் நிகழ விளங்கிடும் கோட்புலி நாயனரது நாட்டியத்தான் குடி என்னும் ஊரிடை வந்து சுந்தரமூர்த்தி சுவாமிகள் சேர்தலும், அவர் வருகை உணர்ந்த கோட்புலியார் தமது நகரைப் பொருந்தும் வகையால் அலங்கரித்து தமது நகர் வாய்தலில் வந்து சுந்தரமூர்த்தி சுவாமிகளை எதிர்கொண்டு இனிது வணங்கி தமது கோலம் மிக்க மணி மாளிகையினிடத்து அழைத்துக்கொண்டு புகுந்தார். 33

தூய மணிப்பொற் றவிசிலெழுந் தருளி இருக்கத் தூநீரால்
சேயமலர்ச்சே வடிவிளக்கித் தெளித்துக் கொண் டச் செழும் புனலால்
மேய சுடர்மாளிகை எங்கும் விளங்க வீசி உளங்களிப்ப
ஏய சிறப்பில் அர்ச்சனைகள் எல்லாம் இயல்பின் முறைபுரிவார்.

மாளிகையில் சேர்ந்ததும் தூய அழகிய முத்து ஆசனத்து அவர் இருந்திடச் செம்மை வாய்ந்த எம்பிரான் சுந்தரமூர்த்தி களுடைய மலர்ப் பாதங்களை நீரால் விளக்கி அப்பாத தீர்த்தத்தால் அழகின் ஒளி வீசும் மாளிகை எங்கும் விளங்கிட வீசி தம் உள்ளம் களிபுற இன்னும் நன்மை பொருந்திய சிறப்பினுல் அர்ச்சனைகள் யாவற்றையும் அதன் இயல் பால் முறையாக புரிகின்றார் கோட்புலிநாயனார். 34

பூந்தண் பனிநீர் கொடுசமைத்த பொருவில் விரைச்சந் தனக்கலவை
,வாய்ந்த அகிலின் நறுஞ்சாந்து வாசம் நிறைமான் மதச்சேறு
,தோய்ந்த புகைநா வியின்நறுநெய் தூய பசுங்கர்ப்பூரமுடன்
,ஏய்ந்த அடைக்காய் அமு தினைய எண்ணில் மணிப்பாச னத்தேந்தி

பின்னர்; பூவினில் வடித்தெடுத்த குளிர்ந்த பன்னீர் கொண்டு பதம் பண்ணிய நிகரற்ற வாசச் சந்தனக் கலவையையும் வாய்ப்புடைய அகில் கட்டையைத் தேய்த்தலால் வந்த சாந்தினையும் வாசம் நிறைந்த மானின் கத்தூரிக்குழம்பும் இவைகளின் வாசனை உடைய தூபப் புகையும் நாவியின் வாசனையுடைய புனுகு பசும் கற்பூரம் ஆகிய இவற்றுடன் நன்மைதரும் வாய்ப்புடைய பாக்கு வெற்றிலை திருவமுது இவையெலாம் எண்ணற்ற பொன்னின் பாத்திரங்களில் எடுத்து ஏந்திவந்து. 35

வேறு வேறு திருப்பள்ளித் தாமப் பணிகள் மிகஎடுத்து
மாறி லாத மணித்திருவா பரண வருக்கம் பலதாங்கி,
ஈறில் விதத்துப் பரிவட்டம் ஊழின் நிரைத்தே எதிரி றைஞ்சி,
ஆறுபுனைந்தார் அடித்தொண்டர் அளவில் பூசை கொள அளித்தார்.

இன்னமும் வேறு வேறு வகையான பூமாலைகளினுல் அணிந்திடக் கொள்ளும் அலங்காரப் பணிகளையும் மிக சிறப்பாக எடுத்தும்; மாறுபாடிலாத திருஆபரணங்களின் வகைகள் இவையும் பல தாங்கிச் சென்றும் முடிவுசொல்லொணாத அழகின் பரிவட்டங்களையும் முறையாக நிரை நிரை நாட்டி வணங்கி கங்கையாறு அணிந்த பெருமான் சிவமூர்த்தியின் திருவடித்தொண்டர் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அளவற்ற இப் பூசைகள் கொள்ளும்படி செய்தருளினார் கோட்புலிநாயனர். 36

செங்கோல் அரசன் அருளுரிமைச் சேனை பதியாங் கோட்புலியார்,
நங்கோ மானை நாவலூர் நகரார் வேந்தை நண்பினுல்,
தங்கோமனையில் திருஅமுது செய்வித் திறைஞ்சத்,தலைசிறந்த
பொங்கோதம்போல் பெருங்காதல் புரிந்தார் பின்னும் போற்றுவார்.

செங்கோன்மை உடைய சோழ அரசனின் அருளிற்கு உரிமைச் சேனாதிபதியாகும் கோட்புலிநாயனர்; இவ்வகையே; நமது தலைவனை திருநாவலூராரர்க்கு அருள் அரசை சுந்தரமூர்த்தி சுவாமிகளை நட்பு முறையால் தமது தலைமைப்படான திருவுடைய மனையில் திருவமுது செய்வித்து வணங்கி; தலை சிறந்த பொங்கும் கடல போல் உளம் பெரும் காதல்கொண்டு பின்னரும் சுந்தரமூர்த்தி சுவாமிகளைப் போற்றுகின்றார் எவ்வாறெனில். 37

ஆலு விருப்பின் மற்றவர்தாம் அருமையால் முன்பெற் றெடுத்த,
தேனுர் கோதைச் சிங்கடியார் தமையும் அவர் பின் திருவுயிர்த்த'
மானுர் நோக்கின் வனப்பகையார் தமையும்கொணர்ந்து வன் றொண்டர்
தூநாண் மலர்த் தாள் பணிவித்துத் தாமும் தொழுதுசொல்லுவார்.

குறைவுபடாத நல்விருப்பத்தால் தாம் முன்னர்ப் பெற்றெடுத்த தேன் சொரியும் மலர் சூடிய கூந்தலுடைய பெண்கள் சிங்கடியார் என்பவளும் அவள் பிறந்த பின் திருவுடன் பெற்றெடுத்த மான் போலும் பார்வையால் சிறந்த வனப்பகையார் என்பவளையும் சுந்தரமூர்த்தி சுவாமி முன்பு கொணர்ந்து அவரது தூய நாள் மலர்ந்த மலர்போலும் திவ்விய பாதங்களைப் பணியச் செய்து தாமும் அவரைத் தொழுது சொல்கின்றார்: 38

அடியேன் பெற்ற மக்களிவர் அடிமையாகக் கொண் டருளிக்
கடிசேர் மலர்ந்தாள் தொழுதுய்யக் கருணை அளிக்கவேண்டும் எனத்,'
தொடிசேர் தளிர்க்கை இவர் எனகுத் தூயமக்கள்'' எனக் கொண்டப்
படியே மகண் மை யாக்கொண்டார் பரவையார்தங் கொழுநனார்.

பெருமானே! அடியேன் பெற்ற மக்களிவர். உமக்கு பணிவிடை செய்யு மக்களாகக் கொண்டருளி தேவரீரது வாசம் நிறந்த மலர்த்தாள் தொழுது உய்ந் திட கருணை கொடுத்தருளவேண்டும் என்னலும்; அப்போது அது கேட்டு ஓகோ! இந்த வளையல் அணிந்த தளிர்போலும் மிருதுவாய கைகளுடைய இப்பிள்ளைகள் எனக்குத்தூய மக்களாவர் என மொழிந்து ஏற்று அவர்களை தமது மக்களாகக் கொண்டார் பரவை அம்மையாரின் நாயகர் சுந்தரமூர்த்தி சுவாமிகள். 39

கோதை சூழ்ந்த குழலாரைக் குறங்கின் வைத்துக் கொண்டிருந்து
காதல் நிறைந்த புதல்வியராங் கருத்துட் கசிவால் அணைத்துச்சி
மீது கண்ணீர் விழமோந்து வேண்டு வனவுங் கொடுத்தருளி,
நாதர் கோயில் சென்ற டைந்தார் நம்பி தம்பி ரான்தோழர்.

மாலை சூடிய கூந்தலுடைய அம் மக்களை தமது மடி மீது வைத்துக் கொண்டி ருந்து; அவர்களை தம் காதல் நிறைந்த புதல்வியராகும் கருத்துட் கொண்டு கசிவால் அணைத்து உச்சியில் மீது கண்ணீர் விழ முத்தமிட்டு; குழந்தை அன்பினால் அவர்கள் விரும்பியதெல்லாம் கொடுத்து பின்னர் எழுந்தருளிச் சென்று தனது நாதனைய சிவபிரான் கோவில் சென்றடைந்தார் எம் தலைவர், எம் பெருமான் தோழர்; சுந்தரமூர்த்தி சுவாமிகள். 40

வென்றி வெள்ளே றுயர்த்தருளும் விமலர் திருக்கோ புரம் இறைஞ்சி
ஒன்றும் உள்ளத் தொடும் அன்பால் உச்சி குவித்த கரத்தோடும்,
சென்று புக்குப் பணிந்துதிருப் பதி கம்''பூணண்''என்றெடுத்துக்,
கொன்றை முடியார் அரு ளுரிமை சிறப்பித் தார்கோட் புலியாரை.

வெற்றி தரும் விழைவுடைய இடபக் கொடியை உயர்த்தி அருளும் எம்பெரு மான் சிவனது திருக்கோயிலின் அழகிய கோபுரத்தை வணங்கி எம பிரான்பால் ஒருமைப்பட்ட உள்ளத்தொடும் அன்பினால் உச்சியில் சூடிய திருக்கரத்தோடும் எம் பெருமான் கோயில் உள் சென்று எம்பெருமானைப் பணிந்து அங்கு திருப்பதிகம் பூணன் எனத் தொடங்கிப் பாடியருளி கொன்றை மலர் முடிமேலு டைய பெருமானின் அருளுக்கு உரிமையால் கோட்புலியாரை அப்பதிகத்து சிறப் பித்தார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

அவர் திருநாட்டியத்தான் குடியில் இருந்திடும் பெருமானைப் பாடியருளும் பொழுது கோட்புலி நாயனரையும் சிறப்பித்த அந்தப் பதிகத்தை இப்பால் தரு கிறோம். இதில் கோட்புலியாரது வீரமும் அவரது அன்பின் வைராக்கியப் பற் றும் பேசப்படல் காண்க. 41

திருநாட்டியத்தான்குடி

பண்—தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

பூணண் ஆவதோர் அரவங்கண் டஞ்சேன் புறங்காட் டாடல்கண் டிகழேன்
பேணி ராகிலும் பெருமையை உணர்வேன் பிறவே ஞகிலும் மறவேன்
காணி ராகிலுங் காண்பனென் மனத்தால் கருதி ராகிலுங் கருதி
நானே லும்மடி பாடுதல் ஒழியேன் நாட்டியத் தான்குடி நம்பீ. 1

கச்சேர் பாம்பொன்று கட்டினின் றிடுகாட் டெல்லியில் ஆடலைக் கவர்வன்
துச்சேன் என்மனம் புகுந்திருக்கின்றமை சொல்லாய் திப்பிய மூர்த்தீ
வைச்சே இடர்களைக் களைந்திட வல்ல மணியே மாணிக்க வண்ணா
தச்சேன் ஒருவரை நான்உமை அல்லால் நாட்டியத்தான்குடி நம்பீ. 2

அஞ்சா தேஉமக் காட்செய வல்லேன் யாதினுக் காசைப் படுகேன்
பஞ்சேர் மெல்லடி மாமலை மங்கை பங்கா எம்பர மேட்டீ
மஞ்சேர் வெண்மதி செஞ்சடை வைத்த மணியே மாணிக்க வண்ணா
நஞ்சேர் கண்டா வெண்டலை ஏந்தீ நாட்டியத் தான்குடி நம்பீ. 3

கல்லே னல்லேன் நின்புகழ் அடிமை கல்லா தேபல கற்றேன்
நில்லே னல்லேன் நின்வழி நின்னூர் தம்முடை நீதியை நினைய
வல்லே னல்லேன் பொன்னடி பரவ மாட்டேன் மறுமையை நினைய
நல்லே னல்லேன் நானுமக் கல்லால் நாட்டியத் தான்குடி நம்பீ. 4

மட்டார் பூங்குழல் மலைமகள் கணவனைக் கருதா தார்தமைக் கருதேன்
ஒட்டீ ராகிலும் ஒட்டுவன் அடியேன் உம்மடி அடைந்தவர்க் கடிமைப்
பட்டே னாகிலும் பாடுதல் ஒழியேன் பாடியும் நாடியும் அறிய
நட்டேன் ஆதலால் நான்மறக் கில்லேன் நாட்டியத் தான்குடி நம்பீ. 5

படப்பாற் றன்மையில் நான்பட்ட தெல்லாம் படுத்தாய் என்றல்லல் பறையேன்
குடப்பாச் சில்லுறை கோக்குளிர் வானே கோனே கூற்றுதைத் தானே
மடப்பாற் றயிரொடு நெய்மகிழ்ந் தாடும் மறையோதீ மங்கை பங்கா
நடப்பீ ராகிலும் நடப்பன்உம் அடிக்கே நாட்டியத் தான்குடி நம்பீ. 6

ஐவாய் அரவினை மதியுடன் வைத்த அழகா அமரர்கள் தலைவா
எய்வான் வைத்ததோர் இலக்கினை அணைதர நினைந்தேன் உள்ளமுள் ளளவும்
உய்வான் எண்ணிவந் தும்மடி அடைந்தேன் உகவீ ராகிலும் உகப்பன்
நைவா னன்றுமக் காட்பட்ட தடியேன் நாடியத் தான்குடி நம்பீ. 7

கலியேன் மானுட வாழ்க்கைஓன் றுகக் கருதிடிற் கண்கணீர் பில்கும்
பலிதேர்ந் துண்பதோர் பண்புகண் டிகழேன் பசுவே ஏறிலும் பழியேன்
வலியே யாகிலும் வணங்குதல் ஒழியேன் மாட்டேன் மறுமையை நினையேன்
நலியேன் ஒருவரை நானுமை அல்லால் நாட்டியத் தான்குடி நம்பீ. 8

குண்டா டிச்சமண் சாக்கியப் பேய்கள் கொண்டா ராகிலுங் கொள்ளக்
கண்டா லுங்கரு தேன்எரு தேறும் கண்ணு நின்னல தறியேன்
தொண்டா டித்தொழு வார்தொழக் கண்டு தொழுதேன் என்வினை போக
நண்டா டும்வயல் தண்டலை வேலி நாட்டியத் தான்குடி நம்பீ. 9

கூடா மன்னரைக் கூட்டத்து வென்ற கொடிறன் கோட்புலி சென்னி
நாடார் தொல்புகழ் நாட்டியத் தான்குடி நம்பியை நாளும் மறவாச்
சேடார் பூங்குழற் சிங்கடி யப்பன் திருவா ரூரன் உரைத்த
பாடிராகிலும் பாடுமின் தொண்டீர் பாடநும் பாவம்பற் றறுமே. 10

திருச்சிற்றம்பலம்

சிறப்பித் தருளுந் திருக்கடைக்காப் பதனி லிடைச்சிங்கடியாரைப்
பிறப்பித் தெடுத்த பிதாவாகத் தம்மை நினைந்த பெற்றியினால்
மறபில்வகைச்சிங் கடியப்பன் என்றே தம்மைவைத்தருளி
நிறப்பொற் புடைய இசைபாடிநிறைந்த அருள்பெற் றிறைஞ்சுவார்.

கோட்புலி நாயனாரைச் சிறப்பித்தருளும் திருக்கடைக்காப்பாகிய பதிகம் அதனிலே சிற்றிடையுடைய சிங்கடி என்னும் பிள்ளையை பிறப்பித் தெடுத்த பிதாவாக தம்மை நினைந்த அத்தன்மையினால் அப்பதிகத்து மறப்பில் வகைச் சிங்கடி அப்பன் என்றே தம்மை வைத்தருளி; பலவகை நிறைவுகளின் சிருடைய இசை பாடி எம்பிரானிடம் நிறைந்த அருள்பெற்று எம் பெருமானை சுந்தரமூர்த்தி சுவாமிகள் வணங்குவார். 42

அங்கு நின்றும் எழுந்தருளி அளவில் அன்பின் உள் மகிழச்,
செங்கண் நுதலார் மேவுதிரு வலிவ லத்தைச் சேர்ந்திறைஞ்சி,
மங்கை பாகர் தமைப்பதிகம் ''வலிவ லத்துக் கண்டேன், என்று)
எங்கும் நிகழ்ந்த தமிழ் மாலை எடுத்துத் தொடுத்த இசை புனைவார்

அங்கு நின்றும் எழுந்தருளி அப்பால் செல்பவர் அளவில்லாத அன்பினால் உள்ளம் மகிழ்ந்திட சிவந்த ஒரு கண்ணால் பொலியும் நெற்றியுடைய எம்பெருமான் மேவிய திருவலிவலம் என்னும் தலத்தைச் சேர்ந்து வணங்கி பெண் ஒரு பாகராய பெருமானைத் திருப்பதிகமும் ''வலிவலத்துக் கண்டேன்'' என்று எங்கும் பெருமையுடன் நிகழ்ந்த தமிழ் மாலை எடுத்துத் தொடுத்துப்பாடி இன்புற்றார் எம் சுந்தர மூர்த்திசுவாமிகள் 43

அவர் பாடிய அருள் நிறைந்த அப்பதிகத்தை கீழே தருகிறோம்.

திருவலிவலம்

பண்–தக்கேசி

ஊனங் கத்துயிர்ப் பாய்உல கெல்லாம் ஒங்கா ரத்துரு ஆகிநின் றூனே
வானங் கத்தவர் கும்அளப் பரிய வள்ளலேஅடி யார்கள்தம் உள்ளத்
தேனங் கத்தமு தாகிஉள் ளூறும் தேச னேத்திஎத் தற்கினியானே
மானங் கைத்தலத் தேந்தவல்லானே வலிவலந்தனில் வந்துகண்டேனே.1

பல்லடியார்பணிக் குப்பரிவானைப் பாடி ஆடும்பத்தர்க் கன்புடையானைச்
செல்லடி யேநெருக் கித்திறம் பாது சேர்ந்தவர்க்கேசித்தி முத்திசெய்வானை
நல்லடி யார்மனத் தெய்ப்பினில் வைப்பை நானுறு குறைஅறிந் தருள்புரி வானை
வல்லடி யார்மனத் திச்சையு ளானை வலிவலந்தனில் வந்துகண் டேனே.2

ஆழிய னுய்அகன் றேஉயர்ந் தானை ஆதிஅந் தம்பணி வார்க்கணி யானைக்
கூழைய ராகிப்போய் யேகுடி ஓம்பிக் குழைந்து மெய்யடி யார்குழுப் பெய்யும்
வாழியர்க் கேவழு வாநெறி காட்டி மறுபிறப் பென்னை மாசறுத் தானை
மாழையொண் கண்ணுமை யைமகிழ்ந் தானை வலிவலந்தனில் வந்துகண் டேனே3

நாத்தான் உன்திறமேநிறம் பாதுநண்ணிஅண் ணித்தமுதம்பொதித்தூறும்
ஆத்தானேஅடியேன்றனக்கென்றும் அளவிறந்தபல தேவர்கள்போற்றும்
சோத்தா னேச்சுடர் மூன்றிலும் ஒன்றித் துருவி மால்பிர மன்னறி யா
மாத்தா னேமாத் தெனக்குவைத் தானேவலிவ லந்தனில் வந்துகண்டேனே 4

நல்லிசை ஞானசம் பந்தனும் நாவினுக் கரசரும் பாடிய நற்றமிழ் மாலை
சொல்லிய வேசொல்லி ஏத்துகப் பாலைத் தொண்ட னேன்அறி யாமை அறிந்து
கல்லி யல்மனத் தைக்கசி வித்துக் கழலடி காட்டிஎன் கோகோ அறுக்கும்
வல்லியல் வானவர் வணங்கதின் றூனை வலிவ லந்தனில் வந்துகண்டேனே 5

பாடுமாபாடிப் பணியுமா றறியேன் பனுவுமாபனுவிப் பரவுமாறறியேன்
தேடுமாதேடித் திருத்துமா றறியேன் செல்லுமா செல்லச் செலுத்துமா றறியேன்
கூடுமா றெங்ஙன மோஎன்று கூறக் குறித்துக் காட்டிக் கொணர்ந்தெனை ஆண்டு
வாடிநீ வாளா வருந்தல்என் றானை வலிவலந்தனில் வந்துகண்டேனே 9

பந்தித்த வல்வினைப் பற்றறப் பிறவிப் படுகடற்பரப் புத்தவிர்ப் பானைச்
சந்தித் ததிற லாற் பணி பூட்டித் தவத்தை ஈட்டிய தம்மடி யார்க்குச்
சிந்தித் தற்கெளி தாய்த்திருப் பாதஞ் சிவலோ கந்திறந் தேற்றவல் லானை
வந்திப் பார்தம் மனத்தினுள் ளானை வலிவ லந்தனில் வந்துகண் டேனே.7

எவ்வவர் தேவர் இருடிகள் மன்னர் எண்ணிறந் தார்கள்மற் றெங்கும் நின் றேத்த
அவ்வவர் வேண்டியதே அருள் செய்து அடைந்தவர்க் கேஇட மாகிநின்றூனை
இவ்வவர் கருணைஎம் கற்பகக்கடலை எம்பெரு மான்அரு ளாய்என்ற பின்னை
வவ்வினை ஆவி மனங்கலந் தானை வலிவ லந்தனில் வந்துகண் டேனே.8

திரியும் முப்புரஞ் செற்றதுங் குற்றத் திறலரக்கனைச் செறுத்ததும் மற்றைப்
பெரிய நஞ்சமு துண்டதும் முற்றும் பின்னையாய் முன்ன மேமுளைத் தானை
அரிய நான்மறை அந்தணர் ஒவா தடிப ணிந்தறி தற்கரி யானை
வரையின்பாவை மணாளன்எம் மானைவலிவ லந்தனில்வந்துகண்டேனே.9

ஏன்ற அந்தணன் தலையினை அறுத்து நிறைக்க மாலுதி ரத்தினை ஏற்றுத்
தோன்று தோள்மிசைக்களேபரந் தன்னைச் சுமந்தமாவிர தத்தகங் காளன்
சான்று காட்டுதற் கரியவன் எளியவன் தன்னைத் தன்னி லாமனத் தார்க்கு
மான்றுசென் றணை யாதவன் தன்னை வலிவலந்தனில் வந்துகண்டேனே 10

கலிவ லங்கெட ஆரழல் ஓம்பும் கற்ற நான்மறை முற்றனல் ஓம்பும்
வலிவ லந்தனில் வந்துகண் டடியேன் மன்னும் நாவலா ரூரன்வன் றொண்டன்
ஒலிகொள் இன்னிசைச் செந்தமிழ் பத்தும் உள்ளத் தால்உகந் தேத்தவல் லார்போய்
மெலிவில் வானுல கத்தவர் ஏத்தவிரும்பி விண்ணுல கெய்துவர் தாமே.11

திருச்சிற்றம்பலம்

நன்று மகிழுஞ் சம்பந்தர் நாவுக் கரசர் பாட்டு கந்தீர்''
என்று சிறப்பித் திறைஞ்சிமகிழ்ந் தேத்தி அருள் பெற்றெழுந்தருளி
மன்றி னிடையே நடம்புரிவார் மருவு பெருமைத் திருவாரூர்,
சென்று குறுகிப் பூங்கோயிற் பெருமான் செம்பொற் கழல் பணிந்து.

அத்திருப்பாடலில் ''நன்று உம்மைப் பரவி மகிழும் சம்பந்தப் பெருமானதும் திருநாவுக்கரசரதும் பாடல்களைக் கேட்டுகந்தீர்'' என்று இந்தப் பதிகத்து மொழிந்து வணங்கித் துதித்து அருள் பெற்று எழுந்தருளி மீண்டு சென்று கனகசபையில் நடனம் புரியும் பெருமான் வீற்றிருக்கும் பெருமை உடைய திருவாரூர் சென்ற ணைந்து அங்கு பூங்கோயில் உறையும் பெருமானின் செம்பொன்னின் சிலம்பணிந்த சேவடிகள் பணிந்தருளி. 44

இறைஞ்சிப் போந்து பரவையார் திருமா ளிகையில் எழுந்தருளி,
நிறைந்த விருப்பின் மேவுநாள் நீடு செல்வத் திருவாரூர்,
புறம்பு நணிய கோயில்களும் பணிந்து போற்றிப் புற்றிடமாய்,
உறைந்த பெருமான் கழல்பிரியா(து) ஓவாஇன்பம் உற்றிருந்தார்.

வணங்கி அங்கு கோயில் நின்றும் மீண்டருளி பரவை அம்மையார் திருமாளி கையில் எழுந்தருளிச் சென்று அங்கு தங்கி உள்ளம் அருள் நிறைந்தவிருப்புடன் இருக்கும் காலத்தில் மீடித்த செல்வமுடைய திருவாரூரின் வெளியே அணிமையா கப் பொருந்திய கோவில்களும் சென்று பணிந்து போற்றிப் புற்றின் இடமாக உறைந்த பெருமான் திருவடிகள் பிரியாது வணங்கி என்றும் ஒழியாத இன்பம் பெற்றிருந்தார் சுந்தரமூர்த்தி சுவாமிகள். 45

செறிபுன் சடையார் திருவாரூர்த் திருப்பங் குனியுத் திரத்திருநாள்
குறுக வரலும் பரவையார் கொடைக்கு விழாவில்குறை வறுக்க,
நிறையும் பொன்கொண்டணைவதற்கு நினைந்து நம்பி திருப்புகலூர்,
இறைவர் பாதம் பணிய எழுந்தருளிச் சென்றங் கெய்தினார்.

இவ்வாறு சுவாமிகள் அமரும் காலத்தில் எங்கும் செறியும் புரிபுன் சடையு டைய ஈசன் அமர்ந்த திருவாரூர்த் திருப்பங்குனி உத்திரத்திருநாள் குறுக வந்து கொண்டிருப்ப; அப்பங்குனி உத்திரத் திருநாளில் பரவை அம்மை நிகழ்த்தும் கொடைக்கு பொருட்குறைவு நிகழாதபடி பார்த்திட நிறைந்த பொன்கொண்ட ணைவதற்கு எம் தலைவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்புகலூர் தலத்து ஈசன் பாதம் பணிய எழுந்தருளிச்சென்று அங்கு சேர்ந்தார். 46

சென்று விரும்பித் திருப்புகலூர்த் தேவர் பெருமான் கோயில்மணி,
முன்றில் பணிந்து வலங்கொண்டு முதல்வர் முன்பு வீழ்ந்திறைஞ்சித்,
தொன்று மரபின் அடித்தொண்டு தோய்ந்தஅன்பில் துதித்தெழுந்து,
நின்று பதிக இசை பாடி நினைந்த கருத்து நிகழ்விப்பார்.

திருப்புகலூர் சென்று அத் திருப்புகலூரில் அமர்ந்த தேவர்கள் பெருமான் கோவிலின் அழகிய திரு முற்றத்தில் பணிந்து வலங்கொண்டு வந்தருளி தம் முத ல்வர் முன்பாக வீழ்ந்து வணங்கி முன்னியகால மெல்லாம் நீள வரும் முறை மரபின் அடிமையாகித் திருவடித்தொண்டு செய்துவரும் சிறப்பினில் முழுவதும் மூழ்கிய அன்பால் துதித்து எழுந்து திரு முன்பு நின்று திருப்பதிக இசைபாடி தாம் நினைந்தகருமத்தை பரவைக்குப் பொன்வேண்டியதை எப் பெருமானிடமே சொல்லிக் கொள்வார். 47

சிறிது பொழுது கும்பிட்டுச் சிந்தை முன்னம் அங்கொழிய,
வறிது புறம்போந் தருளி அயல் மடத்தில் அணையார் வன்றொண்டர்,
அறிவு கூர்ந்த அன்பருடன் அணிமுன் றிலின் ஓர் அருகிருப்ப
மறிவண் கையார் அருளேயோ மலர்க்கண் துயில்வந் தெய்தியதால்.

சிறிதுநேரம் கும்பிட்டுச் சிந்தை முன் பிருந்தே அங்கு பெருமானிடம் • நிறை வுற்றுலும் வேண்டியபடி பொருள் பெறுது வறிதே வெளியில் வந்தருளி அருகாக உள்ள திருமடத்தில் சுந்தர மூர்த்தி சுவாமிகள் சென்றிடாராய் அறிவு கூர்ந்த அன் பருடன் எம்பிரான் தருக்கோவிலின் அழகிய திருமுற்றத்தின் ஓர் அருகே இருந் திட அப்போது மான்கன்றை ஏந்திய கடவுளின் அருளேயோ எமக்கு இது அறி யோம் அவருடைய மலர் போன்ற கண்ணில் துயில்வந்து கொண்டது. 48

துயில்வந் தெய்தத் தம்பிரான் தோழர் அங்குத் திருப்பணிக்குப்,
பயிலுஞ் சுடுமட் பலகைபல கொணர்வித் துயரம் பண்ணித்தேன்,
அயிலுஞ் சுரும்பார் மலர்ச்சிகழி முடிமேல் அணியா உத்தரிய,
வெயிலுந்திய வெண் பட்ட தன்மேல் விரித்துப் பள்ளி மேவினார்.

நித்திரை வந்து சேர்தலும் உடன் எம்பெருமான் தோழரவர் அங்கு அப்ப னுடைய கோவில் திருப்பணிக்கு வேண்டுமெனப் பாவித்திடும் சுட்டமண் கல்லுக் கட்டிகள் பல அங்கு கொண்டுவரச் செய்து தலையணையாக உயரம் செய்து, தேன் விரும்பும் வண்டினங்கள் மொய்த்திடும் மலர் கூந்தலையுடைய திருமுடிமேல் அணிந் திருந்த உத்தரியமாகும்; ஒளி சிந்திடும் வெண் பட்டாடையை அணையாகச்செய்த செங்கற்கள் மீது அதனை விரித்து பள்ளிகொண்டார். 49

சுற்றும் இருந்த தொண்டர்களும் துயிலும் அளவில் துணைமலர்கண்,
பற்றுந் துயில் நீங்கிடப்பள்ளி உணர்ந்தார்;பரவை கேள்வனார்,
வெற்றி விடையார் அருளாலே வேமண் கல்லே விரிசுடர்ச்செம்,
பொற்றிண் கல்லா யினகண்டு புகலூர் இறைவர் அருள்போற்றி.

அந்த நேரத்தில் சுற்றுக இருந்த தொண்டர்களும் துயில்கின்ற அளவில் சுந்தர மூர்த்திசுவாமிகட்கு துணையாக உள்ள மலர்க்கண பற்றிய நித்திரை நீங்கிட திருப்பள்ளி உணர்ந்து எழுந்து நின்றார் பரவை அம்மை நாயகர் அவர், எழுந்த பொழுது வெற்றிதரும் இடபவாகன முடைய எம்பெருமான் அருளாலே வெந்திடச் சுட்ட கல்லே விரிந்த ஒளியுடைய செம்பொன் திண்கல்லாயிட இருந்தமை கண்டு திருப்புகலூர் இறைவர் அருளே நினைந்து தொழுது வணங்கி. 50

தொண்டர் உணர மகிழ்ந்தெழுந்து துணைக்கைக் கமல முகை தலைமேல்,
கொண்டு கோயி லுட்புக்குத் குறிப்பில் அடங்காப் பேரன்பு,
மண்டு காத லுறவணங்கி வாய்ந்த மதுர மொழிமாலை
பண்டங் கிசையில்தம்மையே புகழ்ந்'தென் றெடுத்துப் பாடி

அடியார்களும் துயில் உணரத்தாமும் மகிழ்ந்து எழுந்து துணையான திருவு டைய செந்தாமரையின் முகை போலும் திருக்கைகளைத்தலை மேல்கொண்டு ராயி லுட் புகுந்து குறிப்பின் அளவில் அடங்காத பேரன்பு பெருகும் காதல் கொளள வணங்கி தமக்கு அந்நிலையில் வாய்த்த மதுரம் போலும் மொழியுடைய தேவாரப் பதிக வாலை பண் தங்குய இசையால் ''தம்மையே புகழ்ந்து'' என்று தொடங்கி எடுத்து பாடியருளி
அவர்பாடியருளிய அற்புதமுடைய திருப்பதிகத்தினை இப்பால் தருகின்றோம். 51

திருப்புகலூர்
பண்-கொல்லி
திருச்சிற்றம்பலம்

தம்மை யேபுகழ்ந் திச்சை பேசினும் சார்வி னுந்தொண்டர் தருகிலாப்
பொய்மை யாளரைப் பாடா தேபெயந்தை புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மை யேதரும் சோறுங் கூறையும் ஏத்த லாம்இடர் கெடலுமாம்
அம்மை யேசிவ லோகம் ஆள்வதற் கியாதும் ஐயுற வில்லையே. 1

மிடுக்கி லாதானை வீம னேவிறல் விசய னேவில்லுக் கிவனென்று
கொடுக்கி லாதானைப் பாரி பேரெயென்று கூறி னுங்கொடுப் பார்இலை
பொடிக்கொள் மேனியெம் புண்ணி யன்புக லூரைப் பாடுமின் புலவீர்காள்
அடுக்கு மேல்அமர் உலகம் ஆள்வதற் கியாது மையுற வில்லையே. 2

காணி யேற்பெரி துடைய னேகற்று நல்லனே சுற்றம் நற்கினே
பேணி யேவிருந் தோம்பு மேயென்று பேசி னுங்கொடுப் பார்இலை
பூணி பூண்டுழப் புட்சி லம்புந்தண் புகலூர் பாடுமின் புலவீர்காள்
ஆணி யாம்அமர் உலகம் ஆள்வதற் கியாது மையுற வில்லையே. 3

நரைகள் போந்துமெய் தளர்ந்து மூத்துடல் நடுங்கி நிற்கும்இக் கிழவனே
வரைகள் போல்திரள்தோள னேயென்று வாழ்த்தி னுங்கொடுப் பார்இலை
புரைவெள் ளேறுடைப் புண்ணி யன்புக லூரைப் பாடுமின் புலவீர்காள்
அரைய ஞ்அமர் உலக மாள்வதற் கியாது மையுற வில்லையே. 4

வஞ்ச நெஞ்சனே மாச ழக்கனைப் பாவி யைவழக் கில்லியைப்
பஞ்ச துட்டனைச் சாது வேயென்று பாடி னுங்கொடுப் பார்இலை
பொன்செய் செஞ்சடைப் புண்ணி யன்புக லூரைப் பாடுமின் புலவீர்கள்
நெஞ்சில் நோயறுத் துஞ்சு போவதற் கியாது மையுற வில்லையே. 5

நலம்இ லாதானை நல்ல னேயென்று நரைத்த மாந்தரை இனையனே
குலம்இ லாதானைக் குலவ னேயென்று கூறி னுங்கொடுப் பார்இலை
புலமெ லாம்வெறி கமழும் பூம்புக லூரைப் பாடுமின் புலவீர்காள்
அலம ராதமர் உலகம் ஆள்வதற் கியாது மையுற வில்லையே.

நோய னைத்தடந் தோள னேயென்று நொய்ய மாந்தரை விழுமிய
தாயன் றேபுல வோர்க்கெ லாமென்று சாற்றி னுங்கொடுப் பார்இலை
போயு ழன்றுகண் குழியா தேயெந்தை புகலூர் பாடுமின் புலவீர்காள்
ஆயம் இன்றிப்போய் அண்டம் ஆள்வதற் கியாது மையுற வில்லையே.

எள்வி ழுந்திடம் பார்க்கும் ஆகிலும் ஈக்கும் ஈகிலன் ஆகிலும்
வள்ள லேயெங்கள் மைந்த னேயென்று வாழ்த்தி னுங்கொடுப் பார்இலை
புள்ளெ லாஞ்சென்று சேரும் பூம்புக லூரைப் பாடுமின் புலவீர்காள்
அள்ளற் பட்டழுந் தாது போவதற் கியாது மையுற வில்லையே. 8

கற்றி லாதானைக் கற்று நல்லனே காம தேவனை ஒக்குமே
முற்றி லாதானை முற்ற னேயென்று மொழியி னுங்கொடுப் பார்இலை
பொத்தில் ஆந்தைகள் பாட்ட ருப்புக லூரைப் பாடுமின் புலவீர்காள்
அத்த ஞ்அமர் உலகம் ஆள்வதற் கியாது மையுற வில்லையே. 6

தைய லாருக்கோர் காம னேயென்றும் சால நல்வழக் குடையனே
கையு லாவிய வேல னேயென்று கழறி னுங்கொடுப் பார்இலை
பொய்கை ஆவியின் மேதி பாய்புக லூரைப் பாடுமின் புலவீர்காள்
ஐய ஞ்அமர் உலகம் ஆள்வதற் கியாது மையுற வில்லையே. 10

செறுவி னிற்செழுங் கமலம் ஓங்குதென் புகலூர் மேவிய செல்வனே
நறவம் பூம்பொழில் நாவ லூரன் வனப்பகை அப்பன் சடையன்றன்
சிறுவன் வன்றொண்டன் ஊரன் பாடிய பாடல் பத்திவை வல்லவர்
அறவ னூர்அடி சென்று சேர்வதற் கியாது மையுற வில்லையே. 11

திருச்சிற்றம்பலம்.

பதிகம் பாடித் திருக்கடைக்காப் பணிந்து பரவிப் புறம்போந்தே,
எதிரில் இன்பம் இன்மையே தருவார் அருள் பெற் றெழுந்தருளி,
நிதியின் குவையும் உடன்கொண்டு நிறையும் நதியும் குறைநதியும்,
பொதியுஞ் சடையார் திருப்பனையூர் புகுவார் புரிநூல் மணிமார்பர்.

எம் பெருமானை இத் திருப்பதிகம்பாடி அப்பதிகத்திற்கு திருக்கடைக் காப்பும் அணிந்து போற்றி வெளியே வந்து பிறிது நிகரிலாத இன்பம் இப்பிறவியில் தரும் பெருமான் அருள்பெற்று அப்பால் எழுந்தருளிச் சென்று எம்பிரான் அருளால் பெற்ற பொன்குவியலும் உடன் கொண்டு நீர் நிறைந்த கங்கைநதியும் குறைந்த இளம்பிறையும் பொதிந்த சடையுமுடைய பெருமானின் திருப்பனையூர் என்னும் தலம் சென்று சேர்கின்றார் முப்புரி நூலணிந்த மார்புடன் அழகிய மார்புடைய சுந்தரமூர்த்தி சுவாமிகள். 52

செய்ய சடையார் திருப்பனையூர்ப் புறத்துத் திருக்கூத் தொடுங்காட்சி
எய்தஅருள எதிர்சென்றங் கெழுந்த விருப்பால் விழுந்திறைஞ்சி,
ஐயர் தம்மை "அரங்காட வல்லார் அவரே அழகியார்" என்(று),
உய்ய உலகு பெறும்பதிகம் பாடி அருள் பெற்றுடன் போந்தார்.

செம்மையாய சடையுடைய பெருமான், தமதுகோயில் சென்று புகும் இவர் திருமுன்பாக கோவிலின் வெளிப்புறத்துத் திருக்கூத்தொடுங் காட்சி காணும் படி அருள் செய்திடலும் எம் ஐயன் எதிர் னென்று அங்கு எழுந்த விருப்பால் விழுந் துவணங்கி எம்பெருமானை அரங்காட வல்லார் அவரே அழகியர் என்று இந்த உலகம் உயந்திடப் பெறும்படியான திருப்பதிகம் பாடி அருள் பெற்று உடன்திருப னையூர்த் தலத்து நின்று போயினர். 53

திருப்பனையூர் செல்லும் அவர் முன்பு எம்பெருமான் திருக்கூத் தொடும் காட்சி காணும் படி அருள் செய்யக் கண்டுசிறந்து பணிந்து பாடிய திருப்பதிகம்இதுவாகும்.

திருப்பனையூர்
பண்—சீகாமரம்
திருச்சிற்றம்பலம்

மாடமாளிகை கோபுரத்தொடு மண்டபம்வள ரும்வளர்பொழில்
பாடல் வண்டறையும் பழனத் திருப்பனையூர்த்
தோடுபெய்தொரு காதினிற்குழை தூங்கத்தொண்டர்கள்
ரூடு மாறுவல்லார் அவரே அழகியரே. [துள்ளிப்பாடநின்

நாறுசெங்கழு நீர்மலர்நல்ல மல்லிகை சண்பகத்தொடு
சேறுசெய் கழனிப் பழனத் திருப்பனையூர்
நீறுபூசிநெய் யாடிதன்னை நினைப்பவர் தம்மனத்தன் ஆகிநின்
ரூறு சூடவல்லார் அவரே அழகியரே. 2

செங்கண் மேதிகள் சேடைறிந்து தடம்படிதலிற் சேலினந்தொடு
பைங்கண் வாளைகள்பாய் பழனத் திருப்பனையூர்த்
திங்கள்சூடியசெல்வனுரடியார் தம்மேல்வினை தீர்ப்பராய்விடி
லங்கிருந் துறைவார் அவரே அழகியரே. 3

வாளைபாய மலங்கிளங்கயல் வரிவரால்உக ளுங்கழனியுள்
பாளைஒண் கமுகம் புடைசூழ் திருப்பனையூர்த்
தோளுமாகமுந் தோன்றநட்டமிட் டாடுவாரடித் தொண்டர்தங்களை
ஆளு மாறுவல்லார் அவரே அழகியரே. 4

கொங்கை யார்பலருங்குடைந் தாடநீர்க்குவளை மலர்தரப்
பங்கயம் மலரும் பழனத் திருப்பனையூர்த்
தங்கைபாகமும் மாலொர்பாகமுந் தாமுடையவர் மான்மழுவினை
டங்கைத் நிகப்பார் அவரே அழகியரே. 5

காவிரிபுடை சூழ்சோணாட்டவர் தாம்பரவிய கருணையங்கடல்ப்
பாவிரி புலவர் பயிலுந் திருப்பனையூர்
மாவிரிமட நோக்கிஅஞ்ச மதகரிஉரி போர்த்துகந்தவர்
ஆவில்ஐந் துகப்பார் அவரே அழகியரே. 6

மரங்கள்மேல்மயி லாலமண்டப மாடமாளிகை கோபுரத்தின்மேல்
நிரங்கல்வன் முகவன் புகப்பாய் திருப்பனையூர்த்
துரங்கன்வாய்பிளந் தானுந்தூமலர்த் தோன்றலுமறியா மற்றோன்றினின்
றரங்கில் ஆடவல்லார் அவரே அழகியரே. 7

மண்ணெலாம்முழ வம்மதிர்தர மாடமாளிகை கோபுரத்தின்மேல்
பண்ணி யாழ்முரலும் பழனத் திருப்பனையூர்
வெண்ணிலாச்சடை மேவியவிண் ணவரொடுமண் ணவர்தொழ
அண்ணல் ஆகிநின்றூர் அவரே அழகியரே, 8

குரக்கினங்குதி கொள்ளத்தேனுகக் குண்டுதண்வயற்கெண்டைபாய்தரப்
பரக்குந் தண்கழனிப் பழனத் திருப்பனையூர்
இரக்கமில்லவர் ஐந்தொடைந்தலை தோளிருபது தாள்நெரிதர
அரக்கனை அடர்த்தார் அவரே அழகியரே. 9

வஞ்சிநுண்ணிடை மங்கைபங்கினர் மாதவர் வளரும் வளர்பொழில்
பஞ்சின் மெல்லடியார் பயிலுந் திருப்பனையூர்
வஞ்சியும்வளர் நாவலூரன் வனப்பகையவ ளப்பன் வன்றொண்டன்
செஞ்சொற் கேட்டுகப்பார் அவரே அழகியரே. 10

திருச்சிற்றம்பலம்

வளமல் கியசீர்த் திருப்பனையூர் வாழ்வார் ஏத்த எழுந்தருளி,
அளவில் செம்பொன் இட்டிகைகள் ஆள்மேல் நெருங்கி அணிஆரூர்த்,
தளவ முறுவல் பரவையார் தம்மாளிகையில் புகுத்தாமும்,
உளமன் னியதம் பெருமானூர் தம்மை வணங்கி உவந்தணைந்தார்.

திருப்பனையூர் நீங்கிச் செல்லும் எம்பெமான் சுந்தரரை வளம் நிறைந்த சீர்உடை திருப்பனையூர் என்னும் அத்தலத்து வாழ்வார் வழிக் கொண்டு வணங்கிட எழுந்தருளிப் போய்,அளவற்ற செம்பொன் கட்டிகைகள் யாவற்றையும் ஆட்கள் தலைமேல் சுமந்து நெருங்கிவந்து முன்னுக அழகிய திருவாரூரில் முல்லை மலர் போலும் நகையுடைய பரவையம்மையார் மாளிகையில் புகுந்திட தாமும் உள்ளத்துப் பொருந்திய தம்பெருமானை திருவாரூர்சென்று வணங்கி பெருமகிழ்வுடன் வந்து சேர்வுற்றார். 54

வந்து பரவைப் பிரட்டியார் மகிழ வைகி மருவுநாள்,
அந்தண் ஆரூர் மருங்கணிய கோயில் பலவும் அணைந் திறைஞ்சி,
சிந்தை மகிழ விருப்பினெடுந் தெய்வப் பெருமாள் திருவாரூர்,
முந்தி வணங்கி இனிதிருந்தார் முனைப்பாடியர் தங் காவலனார்.

இவ்வாறு திருவாரூர் மீண்டுவந்து அப்பொருளுடன் பரவைப் பெருமாட்டியார் மகிழ்தங்கி இருந்து அவளுடன் கூடிமகிழும் நாட்களில், அழகிய திருவாரூரின் அருகில் சமீபமாக உள்ள கோயில்கள் பலவும் சென்று வணங்கிச் தம் சிந்தை மகிழும் விரும்பிநேடும் தெய்வங்கட்கு எல்லாம் மகாதேவனுகிய எம் திருவாரூர் அப்பனை முன்னுகச் சென்று வணங்கி, நாள்தோறும் அதுவே முதற்கருமமாகப் புரிந்து இனிதே திருவாரூரில் இருந்தருளினார் திருமுனைப்பாடி நாட்டினிற்கே அருட் காவலராகிய எம் சுந்தர மூர்த்திசுவாமிகள். 5

பல நாள் அமர்வார் பரமர்திரு அருளால் அங்கு நின்றும் போய்ச்,
சிலைமா மேரு வீரனூர் திருநன் னிலத்துச் சென்றிறைஞ்சி,
வலமா வந்து கோயிலினுள் வணங்கி மகிழ்ந்து பாடினூர்,
தலமார் கின்ற"தண்ணியல் வெம்மையினுன்"என்னுந் தமிழ்மாலை.

பல நாள் திருவாரூரில் தங்கி வாழும் அவர் எம்பெருமான் திருவருளால் அங்கு நின்றும் போயருளி பெருமலையான மேருவை வில்லாகக்கொண்டு திரிபுர மெரி செய்த வீரனூர் சிவன் அமர்ந்த திரு நன்னிலம் என்னும் கோயிலைச் சென்றடைந்து அக்கோயிலை வலமாக வந்தருளி கோயிலுட் புகுந்து வணங்கி மகிழ்ந்து எம் பிரானைப்பதிகம் பாடுகின்றூர் எப்படிஎனில் இப்பூமி சிறப்புடன் போற்ற விளங்கும் "தண்ணியல் வெம்மையினுன் எனத்தொடங்கி வரும் தமிழாலாய தேவார மாலை அவர் பாடிய உலகில் என்றும் அழியாத திருவுடையஅப் பெருங் கோயில் தமிழ் மாலையை இப்பால் தருகிறேம்

திருநன்னிலம்
பண்-பஞ்சமம்
திருச்சிற்றம்பலம்

தண்ணியல் வெம்மையினுன் தலையிற்கடை தோறும்பலி
பண்ணியல் மென்மொழியார் இடக் கொண்டுழல் பண்டரங்கன்
புண்ணிய நான்மறையோர் முறையால்அடி போற்றிசைப்ப
நண்ணிய நன்னிலத்துப் பெருங்கோயில் நயந்தவனே. 1

வலங்கிளர் மாதவஞ்செய் மலைமங்கையோர் பங்கினனுய்ச்
சலங்கிளர் கங்கைதங்கச் சடைஒன்றிடை யேதரித்தான்
பலங்கிளர் பைம்பொழில்தண் பனிவெண்மதி யைத்தடவ
நலங்கிளர் நன்னிலத்துப் பெருங்கோயில் நயந்தவனே. 2

கச்சிய லின்கருப்பூர் விருப்பன்கரு திக்கசிவார்
உச்சியன் பிச்சைஉண்ணி உலகங்கள்எல் லாம்உடையான்
நொச்சியம் பச்சிலையான் துரைதீர்புன லால்தொழுவார்
நச்சிய நன்னிலத்துப் பெருங்கோயில் நயந்தவனே. 3

பாடிய நான்மறையான் படுபல்பிணக் காடரங்கா
ஆடிய மாநடத்தான் அடிபோற்றிஎன் றன்பினராய்ச்
சூடிய செங்கையினூர் பல தோத்திரம் வாய்த்தசொல்லி
நாடிய நன்னிலத்துப் பெருங்கோயில் நயந்தவனே. 4

பிலந்தரு வாயினெடு பெரிதும்வலி மிக்குடைய
சலந்தரன் ஆகம்இரு பிளவாக்கிய சக்கரமுன்
நிலந்தரு மாமகள்கோன் நெடுமாற்கருள் செய்தபிரான்
நலந்தரு நன்னிலத்துப் பெருங்கோயில் நயந்தவனே. 5

வெண்பொடி மேனியினன் கருநீல மணிமிடற்றன்
பெண்படி செஞ்சடையான் பிரமன்சிரம் பீடழித்தான்
பண்புடை நான்மறையோர் பயின்றேத்திப் பல்கால்வணங்கும்
நண்புடை நன்னிலத்துப் பெருங்கோயில் நயந்தவனே. 6

தொடைமலி கொன்றைதுன்றுஞ் சடையன்சுடர் வெண்மழுவாட்
படைமலி கையன்மெய்யிற் பகட்டீருரிப் போர்வையினன்
மடைமலி வண்கமலம் மலர்மேல்மட வன்னம்மன்னி
நடைமலி நன்னிலத்துப் பெருங்கோயில் நயந்தவனே. 7

குளிர்தரு திங்கள்கங்கை குரவோடரக் கூவிளமும்
மிளிர்தரு புன்சடைமே லுடையான்விடை யான்விரைசேர்
தளிர்தரு கோங்குவேங்கை தடமாதவி சண்பகமும்
நளிர்தரு நன்னிலத்துப் பெருங்கோயில் நயந்தவனே. 8

கமர்பயில் வெஞ்சுரத்துக் கடுங்கேழற்பின் கானவனாய்
அமர்பயில் வெய்திஅருச் சுனனுக்கருள் செய்தபிரான்
தமர்பயில் தண்விழவில் தகுசைவர் தவத்தின்மிக்க
நமர்பயில் நன்னிலத்துப் பெருங்கோயில் நயந்தவனே. 9

கருவரை போல்அரக்கன் கயிலம்மலைக் கீழ்க்கதற
ஒருவிர லால்அடர்த்தின் னருள்செய்த உமாபதிதான்
திரைபொரு பொன்னிநன்னீர்த் துறைவன்திகழ் செம்பியர்கோன்
நரபதி நன்னிலத்துப் பெருங்கோயில் நயந்தவனே. 10

கோடுயர் வெங்களிற்றுத் திகழ்கோச்செங்க ணான்செய்கோயில்
நாடிய நன்னிலத்துப் பெருங்கோயில் நயந்தவனைச்
சேடியல் சிங்கிதந்தை சடையன்திரு வாரூரன்
பாடிய பத்தும்வல்லார் புகுவார்பர லோகத்துள்ளே. 11

திருச்சிற்றம்பலம்

பாடி அங்கு வைகியபின் பரமர் வீழிமிழலையினின்,
நீடுமறையால் மேம்பட்ட அந்த ணாளர் நிறைந்தீண்டி,
நாடும் மகிழ அவ்வளவு நடைக்கா வணம்பா வாடையுடன்,
மாடு கதலி பூகநிரை மல்க மணித்தோரணம் நிரைத்து.

பாடி அத்திரு நன்னிலம் என்னும் தலத்தில் தங்கி இருந்த பின்னை எம் பெருமானுடைய திருவீழிமிழலை என்னும் தலத்து நீடித்த வேதமுறையால் மேம்பட்டு ஒழுகிடும் அந்தணர்கள் நிறையக் கூடி வந்து இந்த இந்த நாடெல்லாம் மகிழ அவ்வளவு தூரமும் அவரது திருவீழிமிழலை யிருந்து திருநன்னிலம் வரைக்கும் உள்ள பாதை எல்லாம் நிலத்தில் நீளவிரிக்கின்ற நடைக்காவணப் பாவாடையுடன் வழியின் இருமருங்கும் கதலிவாழை கமுகு இவை இவை நிரை நிரையாக விளங்கிட நாட்டி எங்கெங்கும் அழகிய தோரண முகப்புக்களும் நிரைத்து 57.

வந்து நம்பி தம்மைஎதிர் கொண்டு புக்கார் மற்றவருஞ் சிந்தை,
மலர்ந்து திருவீழி மிழலை இறைஞ்சிச் சேண்விசும் பின்,
முந்தை இழிந்த மொய்யொளிசேர் கோயில் தன்னை முன் வணங்கிப்,
பந்தம் அறுக்குந் தம்பெருமான் பாதம் பரவிப் பணிகின்றார்.

இப்படியாக தமது நகரமெல்லாம் அலங்கரித்து வந்து சுந்தரமூர்த்தி சுவாமிகளை எதிர்கொண்டு அழைத்து தமது நகரில் சேர்க்கின்றார்கள். அப்போது எமது சுந்தரமூர்த்தி சுவாமிகளும் சென்று தமது சிந்தை மலர்ந்து திருவீழிமிழலை என்னும் தலத்தை வணங்கி மிகத்தூரமாய வானில் நின்றும் முன்பொருகால் இறங்கி வந்த மிக அற்புமாய ஒளி கொண்டகோயிலை முன்னுக வணங்கி பந்தம் யாவையும் அறுத்திடும் தமது பெருமான் அங்கிருப்பாரின் திருப்பாதத்தைப் பரவிப் பணிகின்றார் .58

படங்கொள் அரவில் துயில்வோனும் பதுமத் தோனும் பரவரிய,
விடங்கன் விண்ணோர் பெருமானை விரவும் புளக முடன் பரவி,
அடங்கல் வீழி கொண்டிருந்தீர் அடியேனுக்கும் அருளும்எனத்,
தடங்கொள் செஞ்சொற் றமிழ் மாலை சாத்தி அங்குச் சாருநாள்.

படங்கொண்ட பாம்பில் துயில்கின்ற நாராயணக் கடவுளும் செந்தாமரை மலரில் இருந்திடும் பிரமனும் வணங்கிடற்கு அரிதாய மேலான கடவுள் தேவர்கள் பெருமானை உடம் பெல்லாம் செறியும் கூச்சமுடன் வணங்கி ''அப்பரே அழகில் அடங்காத திருவீழிமிழலை கோயில் கொண்டிருந்தீர் உமது அடியேனுக்கும் அருளும் என மிகவும் அருளால் விசாலித்த செஞ் சொல்லின் தமிழ் பதிகமாலை சாத்தி அங்கு சார்கின்ற நாட்களில்;
அவர் பாடிய அத்தேவாரப் பதிகத்தை இப்பால் தருகிறோம். 59

திருவீழிமிழலை
பண்—சிகாமரம்
திருச்சிற்றம்பலம்

நம்பி னார்க்கருள் செய்யு மந்தணர் நான்ம றைக்கிட மாயா வேள்வியுள்
செம்பொ னேர்மட வாரணி பெற்ற திருமிழலை
உம்ப ரார்தொழு தேத்த மாமலை யாளொடும் உடனே உறைவிடம்
அம்பொன் வீழிகொண் டீர்அடி யேற்கும் அருளுதிரே. 1

விடங்கொள் மாமிடற் றீர்வெள்ளைச் சுருள்ஒன் றிட்டுவிட்ட காதினீர்என்று
நிடங்கொள் சிந்தையி னர்கலி காக்குந் திருமிழலை
மடங்கல் பூண்ட விமானம் மண்மிசை வந்திழிச்சிய வான நாட்டையும்
அடங்கல் வீழிகொண் டீர்அடி யேற்கும் அருளுதிரே. 2

ஊனை உற்றுயிர் ஆயினீர் ஒளிமூன்று மாய்த்தெளி நீரோ டானஞ்சின்
தேனை ஆட்டுகந் தீர்செழு மாடத் திருமிழலை
மானை மேவிய கையினீர் மழுவேந்தினீர் மங்கை பாகத் தீர்விண்ணில்
ஆனை வீழிகொண் டீர் அடி யேற்கும் அருளுதிரே. 3

பந்தம் வீடிவை பண்ணினீர் படிறீர் மதிப்பிதிர்க் கண்ணி யீரென்று
சிந்தை செய் திருக்குஞ் செங்கை யாளர் திருமிழலை
வந்து நாடகம் வான நாடியர் ஆட மாலயன் ஏத்த நாடொறும்
அந்தண் வீழிகொண் டீர்அடி யேற்கும் அருளுதிரே. 4

புரிசை மூன்றையும் பொன்றக் குன்றவில் ஏந்தி வேதப் புரவித் தேர்மிசை
திரிசெய் நான்மறை யோர்சிறந்த தேத்துந் திருமிழலைப்
பரிசி னாலடி போற்றும் பத்தர்கள் பாடி ஆடப் பரிந்து நல்கினீர்
அரிய வீழிகொண் டீர்அடி யேற்கும் அருளுதிரே. 5

எறிந்த சண்டி இடந்த கண்ணப்பன் ஏத்து பத்தர்கட் கேற்றம் நல்கினீர்
செறிந்த பூம்பொழில் தேன்துளி வீசுந் திருமிழலை
நிறைந்த அந்தணர் நித்த நாடொறும் நேசத் தாலுமைப் பூசிக் குர்மிடம்
அறிந்து வீழிகொண் டீர்அடி யேற்கும் அருளுதிரே. 6

பணிந்த பார்த்தன் பகீரதன் பல பத்தர் சித்தர்க்குப் பண்டு நல்கினீர்
திணிந்த மாடந் தொறுஞ் செல்வம் மல்கு திருமிழலைத்
தனிந்த அந்தணர் சந்தி நாடொறும் அந்தி வானிடு பூச்சிறப்பவை
அணிந்து வீழிகொண் டீர்அடி யேற்கும் அருளுதிரே. 7

பரந்த பாரிடம் ஊரிடைப்பலி பற்றிப் பார்த்துணுஞ் சுற்ற மாயினீர்
தெரிந்த நான்மறை யோர்க்கிடம் ஆகிய திருமிழலை
இருந்து நீர்தமிழோ டிசைகேட்கு மிச்சையாற் காசு நித்தல் நல்கினீர்
அருந்தண் வீழிகொண் டீர்அடி யேற்கும் அருளுதிரே. 8

தூய நீரமு தாய வாறது சொல்லு கென்றுமைக் கேட்கச் சொல்லினீர்
தீய ராக்குலை யாளர் செழுமாடத் திருமிழலை
மேயநீர்பலி ஏற்றதென் னென்றுவிண் ணப்பஞ் செய்பவர்க்கு மெய்ப்பொருள்
ஆய வீழிகொண் டீர்அடி யேற்கும் அருளுதிரே. 9

வேத வேதியர் வேத நீதியர் ஓது வார்விரி நீர்மிழலையுள்
ஆதி வீழிகொண் டீர்அடி யேற்கும் அருளுகென்று
நாத கீதம்வண் டோதுவார் பொழில் நாவலூரன்வன் றொண்டன் நற்றமிழ்
பாதம் ஓதவல் லார்பர னோடு கூடுவரே. 10

திருச்சிற்றம்பலம்

வாசி யறிந்து காசளிக்க வல்ல மிழலை வாணர்பால்,
தேசுமிக்க திருவருள்முன் பெற்றுத் திருவாஞ் சியத்தடிகள்,
பாசமறுத்தாட் கொள்ளுந்தாள் பணிந்து ''பொருவனூர்'' என்னும்,
மாசில் பதிகம் பாடி அமர்ந் தரிசிற் கரைப்புத் தூரணைந்தார்.

வட்டம் பெற்ற தறிந்து அந்தவாசிக் குறைபாடு நீங்க காசு கொடுத்திட வல்ல திருவீழிமிழலை அமர்ந்த எம் பெருமான் சிவன் பால் ஒளிமிக்க திருவருள் முன்னுகப்பெற்று அப்பால் சென்று திருவாஞ்சியம் என்னும் தலத்து அமர்ந்த சிவ பெருமானது பாசங்கள் யாவையும் அறுத்து ஆட்கொள்ளும் திருவடி பணிந்து; எம் பெருமானை அங்கு ''பொருவனூர்'' என்னும் மாசில்லாத புகழுடைய திருப் பதிகம்பாடி அங்கு தங்கி அப்பால் சென்று திரு அரிசிற்கரைப்புத்தூர் என்னும் பதியை வந்தடைந்தார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.
அவர் திருவாஞ்சியத்து எம்பெருமானைப் பாடிய திருப்பதிகம் இதுவாகும். 60

திருவாஞ்சியம்
பண்–பியந்தைக் காந்தாரம்
திருச்சிற்றம்பலம்

பொருவ னூர்புரி நூலர் புணர்முலை உமையவ ளோடு
மருவ னூர்மரு வார்பால் வருவதும் இல்லைநம் அடிகள்
திருவ னூர்பணிந் தேத்தும் திகழ்திரு வாஞ்சியத் துறையும்
ஒருவ னூர்அடி யாரை ஊழ்வினை நலியஓட் டாரே. 1

தொறுவில் ஆனிளை ஏறு துண்ணென இடிகுரல் வெருவிச்
செறுவில் வாளைகள் ஓடச் செங்கயல் பங்கயத் தொதுங்கக்
கறுவி லாமனத் தார்கள் காண்தகு வாஞ்சியத் தடிகள்
மறுவி லாதவெண் ணீறு பூசுதல் மன்னுமொன் றுடைத்தே 2

தூர்த்தர் மூவெயில் எய்து சுடுநுனைப் பகழிய தொன்முல்
பார்த்த னுர்திரள் தோள்மேற் பன்னுனைப் பகழிகள் பாய்ச்சித்
தீர்த்த மாமலர்ப் பொய்கைத் திகழ்திரு வாஞ்சியத் தடிகள்
சாத்து மாமணிக் கச்சங் கொருதலை பலதலை உடைத்தே. 3

சள்ளை வெள்ளையங் குருகு தானது வாம்மெனக் கருதி
வள்ளை வெண்மலர் அஞ்சி மறுகியொர் வாளையின் வாயில்
துள்ளு தெள்ளுநீர்ப் பொய்கைத் துறைமல்கு வாஞ்சியத் தடிகள்
வெள்ளை நுண்பொடிப் பூசும் விகிர்தம்ஒன் றெழிகிலர் தாமே 4

மைகொள் கண்டர்எண் தோளர் மலைமக ளுடனுறை வாழ்க்கைக்
கொய்த கூவிள மாலை குலவிய சடைமுடிக் குழகர்
கைதை நெய்தலங் கழனி கமழ்புகழ் வாஞ்சியத் தடிகள்
பைதல் வெண்பிறை யோடு பாம்புடன் வைப்பது பரிசே 5

கரந்தை கூவிள மாலை கடிமலர்க் கொன்றையுஞ் சூடிப்
பரந்த பாரிடஞ் சூழ வருவர்நம் பரமர்தம் பரிசால்
திருந்து மாடங்கள் நீடு திகழ்திரு வாஞ்சியத் துறையும்
மருந்த னுர்அடி யாரை வல்வினை நலியஓட் டாரே. 6

அருவி பாய்தரு கழனி அலர்தரு குவளையங் கண்ணுர்
குருவி யாய்கிளி சேப்பக் குருகினம் இரிதரு கிடங்கில்
பருவ ரால்குதி கொள்ளும் பைம்பொழில் வாஞ்சியத் துறையும்
இருவ ராலறி யொண்ணு இறைவன தறைகழல் சரணே. 7

களங்கள் ஆர்தரு கழனி அளிதரக் களிதரு வண்டு
உளங்க ளார்கலிப் பாடல் உம்பரில் ஒலித்திடும் காட்சி
குளங்க ளானிழற் கீழ்நற் குயில்பயில் வாஞ்சியத் தடிகள்
விளங்கு தாமரைப் பாதம் நினைப்பவர் வினைநலி விலரே 8

வாழை யின்கனி தானும் மதுவிம்மு வருக்கையின் சுளையும்
கூழை வானரந் தம்மிற் கூறிது சிறிதெனக் குழறித்
தாழைவாழையந் தண்டாற் செருச்செய்து தருக்குவாஞ்சியத்துள்
ஏழை பாகனை அல்லால் இறையெனக் கருதுத லிலமே. 9

செந்நெ லங்கலங் கழனித் திகழ்திரு வாஞ்சியத் துறையும்
மின்ன லங்கலட் சடைஎம் இறைவன தறைகழல் பரவும்
பொன்ன லங்கனல் மாலை பாடுமின் பத்தரு ளீரே. 10

செழுநீர் நறையூர் நிலவுதிருச் சித்தீச் சரமும் பணிந்தேத்தி,
விழுநீர் மையினில் பெருந்தொண்டர் விருப்பி னேடும் எதிர்கொள்ள,
மழுவோ டிளமான் கரதலத்தில் உடையார் திருப்புத் தூர்வணங்கித்,
தொழுநீர் மையினில் துதித்தேத்தித் தொண்டர் சூழ உறையுநாள்.

வந்தணையும் அவர் அரிசிலி என்னும் ஆற்றின் செழுமையாய நீர்வளமுடைய திருநறையூர் என்னும் ஊரில் நிலவி இருக்கும் சித்தீச்சரம் என்னும் தலத்தையும் பணிந்து போய்; பெருமையுடைய மங்கலச் சிறப்பாய் பெரும் அடியார்கள் விருப் பத்துடன் நேர் வந்து எதிர் கொள்ள, மழுவாயுதத்தோடு இளமான் கன்றையும் திருக்கையில் உடையபெருமான் வாழும் திருப்புத்தூர் என்னும் அத்தலத்தை பணி ந்து தான் வணங்கிடும் அம் முறையால் தொழுது போற்றி அடியார் சூழ திருப் புத்தூரில் இருந்திடும் காலத்து; 61

புனித னுர்முன் புகழ்த்துணையார்க் கருளுந் திறமும் போற்றிசைத்து,
முனிவர் போற்ற எழுந்தருளி மூரி வெள்ளக் கங்கையினில்,
பலிவெண் டிங்கள் அணிசடையார் பதிகள் பலவும் பணிந்து போந்(து),
இனிய நினைவில் எய்தினர்;இறைவர் திருவா வடுதுறையில்.

திருப்புத்தூரில் இருக்கும் கடவுள் முன்னர் புகழ்த்துணை என்னும் நாயனுர்க்கு அருள் புரிந்த வரலாற்றையும் எம்பிராணைத்தாம் பாடிடும் அப்பதிகத்து வைத்து சிறப்புடன் போற்றிப்பாடி; அங்குள்ள முனிவர்கள் போற்றிட எழுந்தருளி அப் பால் சென்று பெருகும் வெள்ளக் கங்கையாற்றின் புறத்தே குளிர்ந்த வெண்பிறை அணியும் சடையுடைய பெருமான் வாழும் தலங்கள் பலவும் பணிந்து அப்பால் போய் இனிமை கூர்ந்த நினைவில் வந்து சேர்கின்றார் எம் பெருமானுடைய திரு வாவடுதுறை என்னும் கோவிலில்
அவர் திருப்புத்தூரில் இருக்கும் பெருமானைப் போற்றிடும் பொழுது புகழ்த்துணை நாயனுர்க்கு அருளிய திறத்தை மொழிகின்ற அப்பதிகம் இதுவாகும்.

திருஅரிசிற்கரைப்புத்தூர்
பண்—இந்தளம்
திருச்சிற்றம்பலம்

மலைக்கு மகள்அஞ்ச மதகரியை உரித்தீர் எரித்தீர் வருமுப் புரங்கள்
சிலைக்குங் கொலைச்சே வடந்தேற் றெழியீர் சில்பலிக் கில்கள்தொறுஞ்
செலவொழியீர்
கலைக்கொம் புங்கரி மருப்பும் இடறிக் கலவம் மயிற்பீலியுங் காரகிலும்
அலைக்கும் புனல்சேர் அரிசில் தென்கரை அழகார் திருப்புத்தூர்அழகனீரே 1

அருமல ரோன்சிரம் ஒன்றறுத் தீர்செறுத் தீரழற் சூலத்தில் அந்தகனைத்
திருமகள் கோன்நெடு மால்பல நாள்சிறப் பாகிய பூசனை செய்பொழுதில்
ஒருமலர் ஆயிரத் நிற்குறை வாசஓர் கண்மலர் சூட்டலுமே
பொருவிறல் ஆழி புரிந்தளித் தீர்பொழில் ஆர்திருப்புத்தூர்ப்புனிதனீரே 2

தரிக்குந் தரைநீர் தழல்காற் றந்தரம் சந்திரன் சவிதா இயமானன் ஆனீர்
சரிக்கும் பலிக்குத் தலைஅங்கை ஏந்தித் தையலார் பெய்யக்கொள் வது
தக்க தன்றுல்
முரிக்குந் தளிர்ச்சந் தனத்தொடு வேயும் முழங்குந் திரைக்கைக ளால்
வாரிமோதி
அரிக்கும் புனல்சேர் அரிசில் தென்கரை அழகார் திருப்புத்தூர் அழகனீரே 3

கொடியுடை மும்மதில் வெந்தழி யக்குன்றம் வில்லா நாணியிற் கோல்
ஒன்றினுல்
இடிபட எய்தெரித் தீர்இமைக் கும்அளவில் உமக்கார் எதிர்எம் பெருமான்
கடிபடு பூங்கணை யான்கருப் புச்சிலைக் காமனை வேவக் கடைக்கண்ணினுல்
பொடிபட நோக்கிய தென்னை கொல்லோ பொழிலார் திருப்புத்தூர்ப்
புனிதனீ ரே,4

வணங்கித் தொழுவா ரவர்மால் பிரமன் மற்றும் வானவர் தானவர்
மாமுனிவர்
உணங்கல் தலையிற் பலிகொண் டல்என்னே உலகங்கள் எல்லாம்உடையீர்
உரையீர்
இணங்கிக் கயல்சேல் இளவா ளைபாய இனக்கெண் டைதுள்ளக் கண்டி
ருந்த அன்னம்
அணங்கிக் குணங்கொள் அரிசில் தென்கரை அழகார் திருப்புத்தூர்
அழகனீரே'5

அகத்தடிமை செய்யும் அந்தணன் முன்அரி சிற்புனல் கொண்டுவந் தாட்டு
கின்முன்
மிகத்தளர் வெய்திக் குடத்தையும் நும்முடி மேல்விழுத் திட்டுநடுங்குதலும்
வகுத்தவ னுக்கு நித்தற் படியும் வருமென் றெருகாசினை நின்றநன்றிப்
புகழ்த்துணைப்புகச் செய்துகந்தீர்பொழிலார்திருப்புத்தூர்ப்புனிதனீரே 6

பழிக்கும் பெருந்தக்கன் எச்சம் அழியப் பகலோன் முதலாப் பலதே
வரையும்
தெழித்திட் டவரங் கஞ்சிதைத் தருளும் செய்கைஎன்னைகொலோமை
கொள்செம்மிடற்றீர்
விழிக்குந் தழைப்பீலி யொடேலம் உந்தி விளங்கும் மணிமுத் தொடு
பொன் வரன்றி
அழிக்கும் புனல்சேர் அரிசில் தென்கரை அழகார் திருப்புத்தூர்அழகனீரே 7

பறைக்கண் நெடும்பேய்க் கணம்பாட.ல் செய்யக் குறட்பா ரிடங்கள்
பறைதாம் முழக்கப்
பிறைக்கொள் சடைதா ழப்பெயர்ந்து நட்டம் பெருங்கா டரங்காக
நின்றுடல் என்னே
கறைக்கொ மணிகண் டமும்தின் டோள்களும் கரங்கள் சிரந்தன்னி
லுங்கச்சு மாகப்
பொறிக்கொள் அரவம் புனைந்தீர் பலவும் பொழிலார் திருப்புத்தூர்
புனிதனீரே.8

மழைக்கண் மடவாளை ஓர்பாகம் வைத்தீர் வளர்புன் சடைக்கங் கையை
வைத் துகந்தீர்
முழைக்கொள் அரவோ டென்பணி கலனு முழுநீறு மெய்பூ சுதல்என்னை
கொலோ
கழைக்கொள் கரும்புங் கதலிக் கனியும் கமுகின் பழுங்காயுங் கவர்ந்து
கொண்டிட்டு
அழைக்கும் புனல்சேர் அரிசில் தென்கரை அழகார் திருப்புத்தூர்அழகனீரே 9

கடிக்கும் அரவால் மலையால் அமரர் கடலைக் கடைய எழுகாள கூடம்
ஒடிக்கும் உலகங் களைஎன்றதனை உமக்கே அமுதாக உண்டீர் உமிழீர்
இடிக்கும் மழைவீழ்த் திழுத்திட்டருவி இருபாலும்ஒடிஇரைக்குந்திரைக்கை
அடிக்கும் புனல்சேர் அரிசில்தென்கரை அழகார் திருப்புத்தூர்அழகனீரே.10

காரூர் மழைபெய் துபொழி அருவிக் கழையோ டகிலுந் திட்டிரு கரையும்
போரூர் புனல்சேர் அரிசில் தென்கரைப் பொழிலார் திருப்புத்தூர்ப்
புனிதர் தன்மை
ஆரூரன் அருந்த மிழைந்திணைடைந் தழகால்உரைப்பார்களுங்கேட்பவரும்
சீரூர் தருதே வர்கணங் களொடும் இணங்கிச் சிவலோகம தெய்துவரே. 11

திருச்சிற்றம்பலம்

விளங்குந் திருவா வடுதுறையில் மேயார் கோயில் புடை வலங்கொண்(டு)'
உளங்கொண் டுருகும் அன்பினுடன் உள்புக் கிறைஞ்சி ஏத்துவார்,
வளங்கொள்பதிகம்"மறையவன்என்றெடுத்துவளவன் செங்கணண்,
தளங் கொள் பிறப்புஞ் சிறப்பித்துத் தமிழ்ச்சொன் மாலை சாத்தினர்.

அருள் விளங்கும் திருவாவடுதுறையில் வீற்றிருந்த பெருமானர் கோயிலினை வலங்கொண்டு வந்து உள்ளம் அப்பன் பால் கொண்டு உருகும் அன்பினுடன் திருக் கோயில் உள்ளே சென்று வணங்கி ஏத்தும் எம் தலைவர் சுந்தரர் தாம்பாடுகின்ற வளம் கொண்ட திருப்பதிகம் ''மறையவன்,, எனத் தொடங்கி எடுத்துப்பாடி கோட்செங்கச்சோழ அரசனுடைய: இப்பூமி செய்த புண்ணியத்தின்விளைவாக அவ னது பிறப்பையும் சிறப்பித்து தேவாரமாய தமிழ் சொன் மாலை பாடி எம்பிராற்கு சாத்தினர்
அவர் பாடிய அப்பதிகத்தை இப்பால் தருகின்றேம் கோச்செங்கச்சோழ அரசன் வரலாறு இரண்டாவது பாடலாக அமைந்து இருப்பதைக் காண்க. 63

திருவாவடுதுறை
பண்—தக்கேசி
திருச்சிற்றம்பலம்

மறைய வனெரு மாணிவந் தடைய வார மாய்அவன் ஆருயிர் நிறுத்தக்
கறைகொள் வேலுடைக் காலனைக் காலாற் கடந்த காரணங் கண்டுகண்
டடியேன்
இறைவன்எம்பெருமான்என்றெப்போதும்ஏத்திஏத்திநின்றஞ்சலிசெய்துன்
அறைகொள்சேவடிக்கன்பொடும்அடைந்தேன்ஆவடுதுறைஆதிஎம்மானே1.

தெருண்ட வாயிடை நூல்கொண்டு சிலந்தி சித்தி ரப்பந்தர்சிக்கன இயற்றச்
சுருண்ட செஞ்சடை யாய்அது தன்னைச் சோழன் ஆக்கிய தொடர்ச்சி
கண் டடியேன்
புரண்டு வீழ்ந்துநின் பொன்மலர்ப் பாதம் போற்றி போற்றிஎன் றன்
பொடு புலம்பி
அருண்டென் மேல்வினைக் கஞ்சிவந் தடைந்தேன் ஆவ டுதுறை ஆதி
எம்மானே. 2

திகழும் மாலவன் ஆயிர மலரால் ஏத்து வான்ஒரு நீள்மலர் குறையப்
புகழினுல்அவன்கண்இடந்திடலும் புரிந்துசக்கரங்கொடுத்தல்கண்டடியேன்
திகழும்நின்திருப்பாதங்கள் பரவித் தேவ தேவநின் திறம்பல பிதற்றி
அகழும் வல்வினைக்கஞ்சிவந் தடைந்தேன் ஆவடுதுறை ஆதிஎம் மானே.3

வீரத் தால்ஒரு வேடுவனுகி விசைத்தொர் கேழலைத் துரந்து சென்றணைந்து
போரைத் தான்விச யன்றனக் கன்பாய்ப் புரிந்து வான்படை கொடுத்தல்
கண் டடியேன்
ரத்தால்உனநாமங்கள் பரவி வழிபட் டென்திற மேநினைந்துருகி
ஆர்வத் தோடும்வந் தடியினை அடைந்தேன் ஆவடுதுறை ஆதிஎம்மானே. 4

ஒக்க முப்புரம் ஒங்கெரி தூவ உன்னை உன்னி மூவர்நின் சரணம்
புக்கு மற்றவர் பொன்னுல காளப் புகழி னுல்அருள் ஈந்தமை அறிந்து
மிக்க நின்கழ லேதொழு தரற்றிவேதி யா ஆதி மூர்த்திநின் அரையில்
அக்க ணிந்தஎம் மான்உனை அடைந்தேன் ஆவடுதுறை ஆதிஎம் மானே5

திருச்சிற்றம்பலம்

சாத்தி அங்கு வைகுநாள் தயங்கும் அன்ப ருடன்கூடப்
போர்த்தும் இறைஞ்சி அருள்பெற்றுப் பெண்ணேர் பாகத் தண்ணலார்
தீர்த்தப் பொன்னித் தென்கரைமேல் திகழும் பதிகள் பலபணிந்து
மூர்த்தி யார்தம் இடைமருதை அடைந்தார் முனைப்பா டித்தலைவர்.

இப்பதிகமாகும் தேவாரமாலையைச் சாத்தி அங்கு தங்கி இருக்கும் காலத்தில் விளங்கும் அன்பருடன் கூடி மீண்டும் வணங்கி அருள் பெற்று பெண்ணெரு பாக முடைய அண்ணலாரின் தீர்த்தமாகும் காவிரியாற்றின் தென்கரைமேலாகத் திக ழும் தலங்கள் பல பணிந்து அப்பால் எம்பெருமானது திருவிடைமரு தூரைச் சென்று சேர்ந்தருளினர் திருமுனைப்பாடித்தலைவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள். 64

மன்னு மருதின் அமர்ந்தவரை வணங்கி மதுரச் சொன் மலர்கள்
பன்னிப் புனைந்து பணிந்தேத்திப் பரவிப் போந்து தொண்டருடன்
அந்நற் பதியில் இருந்தகல்வார் அரனூர் திருநாகேச்சரத்தை
முன்னிப்புக்கு வலங்கொண்டு முதல்வர் திருத்தாள் வணங்கினர்

விளங்கும் திருவிடைமரு தூரில் அமர்ந்த பெருமானை வணங்கி; மதுரம் மிக்க சொல் மலர்கள் சொல்லிப்புனைந்த திருப்பதிம் பாடிப்போற்றி வணங்கி அப்பால் போய் அடியார்களுடன் அந்த நற்பதியில் இருந்தும் நீங்கிச் செல்வார் எம் பெரு மானுடைய திருநாகேச்சரம் என்னும் தலத்தை நினைந்து அங்கு சென்று கோவிலை வலங்கொண்டு எம்பெருமானுடைய திருவடிகளை வணங்கினர். 65
அவர் திருவிடைமருதூரில் பாடிய தேவாரப்பதிகம் இப்பால் தருகிறேம்

திருவிடைமருதூர்
பண்—தக்கேசி
திருச்சிற்றம்பலம்

கழுதை குங்குமந் தான்சுமந் தெய்த்தாற் கைப்பர் பாழ்புக மற்றதுபோல
பழுது நான்உழன் றுட்தடு மாறிப் படாது மித்தலைப் பட்டனன் எந்தாய்
அழுது நீஇருத் தென்செய்தி மனனே அங்க ணரை னேயென மாட்டா
இழுதை யேனுக்கோர் உய்வகை அருளாய் இடைம ருதுறை எந்தைபி ரானே; 1

நரைப்பு மூப்பொடு பிணிவரும் இன்னே நன்றி யில்வினை யேதுணிந் தெய்த்தேன்
அரைத்த மஞ்சள தாவதை அறிந்தேன் அஞ்சி னேன்நம ணரவர் தம்மை
உரைப்பன் நான்உன சேவடி சேர உணரும் வாழ்க்கையை ஒன்றறி யாத
இரைப்ப னேனுக்கோர் உய்வகை அருளாய் இடைம ருதுறை எந்தைபி ரானே. 2

புன்னு னைப்பணி வெங்கதிர் கண்டாற் போலும் வாழ்க்கை பொருள்இ லைநாளும்
என்னை னக்கினி இற்றைக்கு நாளை என்றி ருந்திடர் உற்றனன் எந்தாய்
முன்ன மேஉன சேவடி சேரா மூர்க்க ணகிக் கழிந்தன காலம்
இன்னம் என்றனக் குய்வகை அருளாய் இடைம ருதுறை எந்தைபி ரானே 3

முந்திச் செய்வினை இம்மைக்கண் நலிய மூர்க்க ணகிக் கழிந்தன காலம்
சிந்தித் தேமனம் வைக்கவும் மாட்டேன் சிறுச்சிறி தேஇரப் பார்கட்கொன் றீயேன்
அந்தி வெண்பிறை சூடும்எம் மானே ஆரூர் மேவிய அமரர்கள் தலைவா
எந்தை நீஎமக் குய்வகை அருளாய் இடைம ருதுறை எந்தைபி ரானே. 4

அழிப்பர் ஐவர் புரவுடை யார்கள் ஐவ ரும்புர வாசற ஆண்டு
கழித்துக் காற்பெய்து போயின பின்னைக் கடைமு றைஉனக் கேபொறை ஆனேன்
விழித்துக் கண்டனன் மெய்ப்பொருள் தன்னே வேண்டேன் மானுட வாழ்க்கைஈ தாகில்
இழித்தேன் என்றனக் குய்வகை அருளாய் இடைம ருதுறை எந்தைபி ரானே.5

குற்றந் தன்னெடு குணம்பல பெருக்கிக் கோல நுண்ணிடை யாரொடு மயங்கிக்
கற்றி லேன்கலை கள்பல ஞானங் கடிய ஆயின கொடுமைகள் செய்தேன்
பற்ற லாவதோர் பற்றுமற் றில்லேன் பாவி யேன்பல பாவங்கள் செய்தேன்
எற்று ளேன்எனக் குய்வகை அருளாய் இடைம ருதுறை எந்தைபி ரானே. 6

கொடுக்க கிற்றிலேன் ஒண்பொரு ளன்னைக் குற்றம் செற்றம் இவைமுத லாக
விடுக்க கிற்றிலேன் வேட்கையும் சினமும் வேண்டில் ஐம்புலன் என்வசம் அல்ல
நடுக்கம் உற்றதோர் மூப்புவந் தெய்த நமன்த மர்நரகத்திடல் அஞ்சி
இடுக்கண் உற்றனன் உய்வகை அருளாய் இடைம ருதுறை எந்தைபி ரானே. 7

ஐவ கையர் ஐயரவ ராகி ஆட்சி கொண்டொரு காலவர் நீங்கார்
அவ்வ கையவர் வேண்டுவ தானுல் அவர வர்வழி ஒழுகிநான் வந்து
செய்வ கைஅறி யேன்சிவ லோகா தீவ ணாசிவ னேஎரி யாடீ
எவ்வ கைஎனக் குய்வகை அருளாய் இடைம ருதுறை எந்தைபி ரானே. 8

ஏழை மானுட இன்பினை நோக்கி இளைய வர்வலைப் பட்டிருந் தின்னம்
வாழை தான்பழுக் குந்நமக் கென்று வஞ்ச வல்வினை யுள்வலைப் பட்டுக்
கூழை மாந்தர்தம் செல்கதிப் பக்கம் போக மும்பொருள் ஒன்றறி யாத
ஏழை யேனுக்கோர் உய்வகை அருளாய் இடைம ருதுறை எந்தைபி ரானே. 9

அரைக்குஞ் சந்தனத் தோடகில் உந்தி ஐவ னஞ்சுமந் தார்த்திரு பாலும்
இரைக்குங் காவிரித் தென்கரை தன்மேல இடைம ருதுறை எந்தைபி ரானை
உரைக்கும் ஊரன் ஒளிதிகழ் மாலை உள்ளத் தால்உகந் தேத்தவல் லார்கள்
நரைப்பு மூப்பொடு நடலையும் இன்றி நாதன் சேவடி நண்ணுவர் தாமே. 1

திருச்சிற்றம்பலம்

பொருகும் பதிகம் பிறையணிவாள் நுதலாள் பாடிப் பெயர்ந்துநிறை,
திருவின் மலியுஞ் சிவபுரத்துத் தேவர் பெருமான் கழல்வணங்கி,
உருகுஞ் சிந்தை யுடன் போந்தே உமையோர்பாகர் தாம்மகிழ்ந்து,
மருவும் பதிகள் பிறபணிந்து கலைய நல்லூர் மருங்கணைந்தார்.

திருநாகேச்சரத்து சென்று முதல்வர் திருவடிகள் வணங்கி; அருள் பெருகும் திருப்பதிகம் ''பிறையணி வாள் நுதலாள்,, எனத் தொடங்கி தேவாரப்பதிகம் பாடி அங்கு நின்று நீங்கிச் சென்று திருவினுல் சிறந்துற்ற சிவபுரம் என்னும் தலத்துவாழும் தேவர் பெருமான் சிவன் திருப்பாதம் போற்றி உருகும் சிந்தை யுடன் அப்பால் வந்து உமையொரு பாகராய எம்பெருமான் மகிழ்ந்து உறையும் பதிகள் பிறவும் பணிந்து திருக்கலயநல்லூர் என்னும் தலத்தின் அருகாக வந்தார் எம் சுந்தரமூர்த்திசுவாமிகள். 67
அவர் திருநாகேச்சரத்து பாடிய பதிகத்தை இப்பால் தருகிறோம்

திருநாகேச்சரம்

பண் – பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

பிறையணி வாள்நுதலாள் உமையாளவள் பேழ்கணிக்க
நிறையணி நெஞ்சனுங்க நீலமால்விடம் உண்டதென்னே
குறையணி குல்லைமுல்லை அலைந்துதுகுளிர்மாதவிமேல்
சிறையணி வண்டுகள்சேர் திருநாகேச் சரத்தானே. 1

அருந்தவ மாமுனிவர்க் கருளாகியொர் ஆலதன்கீழ்
இருந்தற மேபுரிதற் கியல்பாகிய தென்னைகொலாம்
குருந்தய லேகுரவம் மரவின்னெயி றேற்றரும்பச்
செருந்திசெம் பொன்மலருந் திருநாகேச் சரத்தானே. 2

பாலன தாருயிர்மேற் பரியாது பகைத்தெழுந்த
காலனை வீடுவித்துக் கருத்தாக்கிய தென்னைகொலாம்
கோல மலர்க்குவளைக் கழுநீரவயல் சூழ்கிடங்கில்
சேலொடு வாளைகள்பாய் திருநாகேச் சரத்தானே. 3

குன்ற மலிக்குமரி கொடியேரிடை யாள்வெருவ
வென்றி மதகரியின் உரிபோர்த்ததும் என்னைகொலாம்
முன்றில் இளங்கமுகின் முதுபாளை மதுவளைந்து
தென்றல் புகுந்துலவுந் திருநாகேச் சரத்தானே.

அரைவிரி கோவணத்தோ டரவார்த்தொரு நான்மறைநூல்
உரைபெரு கவ்வுரைத்தன் றுகந்தருள் செய்ததென்னே
வரைதரு மாமணியும் வரைச்சந்தகி லோடும்உந்தித்
திரைபொரு தண்பழனத் திருநாகேச் சரத்தானே. 5

தங்கிய மாதவத்தின் தழல்வேள்வியி னின்றெழுந்த
சிங்கமும் நீள்புலியுஞ் செழுமால்கரி யோடலறப்
பொங்கிய போர்புரிந் துபியந்தீருரி போர்த்ததென்னே
செங்கயல் பாய்வயல்சூழ் திருநாகேச் சரத்தானே. 6

நின்றஇம் மாதவத்தை ஒழிப்பான்சென் றணைந்துமிகப்
பொங்கிய பூங்கணைவேள் பொடியாக விழித்தலென்னே
பங்கய மாமலர்மேல் மதுவுண்டுவண் தேன்முரலச்
செங்கயல் பாய்வயல்சூழ் திருநாகேச் சரத்தானே. 7

வரியர நாணதாக மாமேரு வில்லதாக
அரியன முப்புரங்கள் அவையாழல் ஊட்டல்என்னே
விரிதரு மல்லிகையும் மலர்ச்சண்பக மும்அலைந்து
திரிதரு வண்டுபண்செய் திருநாகேச் சரத்தானே. 8

அங்கியல் யோகுதன்னை அழிப்பான்சென் றணைந்துமிகப்
பொங்கிய பூங்கணைவேள் பொடியாக விழித்தல்என்னே
பங்கய மாமலர்மேல் மதுவுண்டுபண் வண்டறையச்
செங்கயல் நின்றுகளுந் திருநாகேச் சரத்தானே. 6

குண்டரைக் கூறையின்றித் திரியும்சமண் சாக்கியப்பேய்
மிண்டரைக் கண்டதன்மை விரவாகிய தென்னைகொலோ
தொண்டிரைத் துவணங்கித் தொழில்பூண்டடி யார்பரவும்
தெண்டிரைத் தண்வயல்சூழ் திருநாகேச் சரத்தானே. 10

கொங்கணை வண்டரற்றக் குயிலும்மயி லும்பயிலும்
தெங்கணை பூம்பொழில்சூழ் திருநாகேச் சரத்தானை
வங்கம் மலிகடல்சூழ் வயல்நாவலா ரூரன் சென்ன
பங்கமில் பாடல்வல்லா ரவர்தம்வினை பற்றறுமே. 11

திருச்சிற்றம்பலம்

செம்மை மறையோர் திருக்கலைய நல்லூர் இறைவர் சேவடிக்கீழ்,
மும்மை வணக்கம் பெறஇறைஞ்சி முன்பு பரவித் தொழுதெழுவார்,
கொம்மை மருவு குரும்பைமுலை உமையாள் என்னுந் திருபதிகம்,
மெய்ம்மைப் புராணம் பலவுமிகச் சிறப்பித்(து)இசையின் விளம்பினார்.

செம்மை வாய்ந்த அந்தணர் வாழும் திருக்கலய நல்லூரில் அமர்ந்தருளிய கடவுள் சேவடிக்கீழாக மும்மையான வணக்கம் பெற வணங்கி எம் பெருமான் திருமுன்பு போற்றித் தொழுதெழும் அவர் எம் பெருமானை அருளின் தலைமை பொருந்திய ''குரு பைமுலை மலர்க் குழலி உமையவள்'' எனத் தொடங்கி உண்மையான புராண வரலாறுகள் பலவும் அப்பதிகத்து வைத்து சிறப்பித்து இசையால் பாடியருளினார்
அவர் பாடிய புராண வரலாறுடைய தேவாரப் பதிகம் இப்பால் தருகிறோம்

திருக்கலயநல்லூர்

பண்–தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

குரும்பைமுலை மலர்க்குழலி கொண்ட தவங் கண்டு
குறிப்பினெடுங் சென்றவள்தன் குணத்தினைநன் கறிந்து
விரும்புவரங் கொடுத்தவனீ வேட்டருளிச் செய்த
விண்ணவர்கோன் கண்ணுதலோன் மேவியவூர் வினவில்
அரும்பருகே சுரும்பருவ அறுபதம்பண் பாட
அணிமயில்கள் நடமாடும் அணிபொழில்சூழ் அயலின்
கரும்பருகே சுருங்குவனீ கண்வளருங் கழனிக்
கமலங்கள் முகமலருங் கலயநல்லூர் காணே. 1

செருமேவு சலந்தரனைப் பிளந்தசுடர் ஆழி
செங்கண்மலர் பங்கயமாச் சிறந்தானுக் கருளி
இருள்மேவும் அந்தகன்மேல் திரிசூலம் பாய்ச்சி
இந்திரனைத் தோள்முரித்த இமையவன்ஊர் வினவில்
பெருமேதை மறையொலியும் பேரிமுழ வொலியும்
பிள்ளையினம் துள்ளிவிளை யாட்டொலியும் பெருகக்
கருமேதி புனல்மண்டக் கயல்மண்டக் கமலம்
களிவண்டின் கணம்இரியும் கலயநல்லூர் காணே: 2

இண்டைமலர் கொண்டுமணல் இலிங்கமது வியற்றி
இனத்தாவின் பாலாட்ட இடறியதா தையைத்தாள்
துண்டமிடு சண்டியடி அண்டர்தொழு தேத்தத்
தொடர்ந்தவனைப் பணிகொண்ட விடங்கனதூர் வினவில்
மண்டபமும் கோபுரமும் மாளிகைசூ ழிகையும்
மறைஒலியும் விழவொலியும் மறுகுநிறை வெய்திக்
கண்டவர்கண் மனங்கவரும் புண்டரிகப் பொய்கைக்
காரிகையார் குடைந்தாடுங் கலயநல்லூர் காணே. 3

மலைமடந்தை விளையாடி வளையாடு கரத்தால்
மகிழ்ந்தவள் கண் புதைத்தலுமே வல்லிருளாய் எல்லா
உலகுடன்மூன் மூடவிருள் ஓடும்வகை நெற்றி
ஒற்றைக்கண படைத்துகந்த உத்தமனூர் வினவில்
அலைஅடைந்த புனல்பெருகி யானைமருப் பிடறி
அகிலொடுசந் துந்திவரும் அரிசிலின்தென் கரைமேல்
கலையடைந்து கலிகடியந் தணர்ஓமப் புகையால்
கணமுகில்போன் றணிகிளருங் கலயநல்லூர் காணே. 4

நிற்பானும் கமலத்தில் இருப்பானும் முதலா
நிறைந்தமரர் குறைந்திரப்ப நினைந்தருளி யவர்க்காய்
வெற்பார்வில் அரவுநாண் எரிஅம்பால் விரவார்
புரமூன்றும் எரிவித்த விகிர்தனூர் வினவில்
சொற்பால பொருட்பால சுருதிஒரு நான்கும்
தோத்திரமும் பலசொல்லித் துதித்திறைதன் திறத்தே
கற்பாருங் கேட்பாரு மாயெங்கும் நன்கார்
கலைபயில்அந் தணர்வாழுங் கலயநல்லூர் காணே. 5

பெற்றிமைஒன் றறியாத தக்கனது வேள்விப்
பெருந்தேவர் சிரந்தோள்பல் கரங்கண்பீ டழியச்
செற்றுமதிக் கலைசிதையத் திருவிரலால் தேய்வித்
தருள்பெருகு சிவபெருமான் சேர்தரும்ஊர் வினவில்
தெற்றுகொடி முல்லையொடு மல்லிகைசெண் பகமும்
திரைபொருது வருபுனல்சேர் அரிசிலின்தென் கரைமேல்
சுற்றினம்நன் கரும்பின்மூளை கறிகற்கக் கறவை
கமழ்கழுநீர் கவர்கழனிக் கலயநல்லூர் காணே. 9

இலங்கையர்கோன் சிரம்பத்தோ டிருபதுதிண் தோளும்
இற்றலற ஒற்றைவிரல் வெற்பதன்மேல் ஊன்றி
நிளங்கிளர்நீர் நெருப்பொடுகாற் றுகாசம் ஆகி
நிற்பனவும் நடப்பனவாம் நின்மலன்ஊர் வினவில்
பலங்கள்பல திரைஉந்திப் பருமணிபொன் கொழித்துப்
பாதிரிசந் தகிலிஞெடு கேதகையும் பருகிக்
கலங்குபுனல் அலம்பிவரும் அரிசிலின்தென் கரைமேல்
கயல்உகளும் வயல்புடைசூழ் கலயநல்லூர் காணே. 7

மாலயனுங் காண்பரிய மால்எரியாய் நிமிர்ந்தோன்
வன்னிமதி சென்னிமிசை வைத்தவன்மொய்த் தெழுந்த
வேலைவிடம் உண்டமணி கண்டன்விடை ஊரும்
விமலன்உமை யவளோடு மேவியஊர் வினவில்
சோலைமலி குயில்கூவக் கோலமயில் ஆலச்
சுரும்பொடுவண் டிசைமுரலப் பசுங்கிளிசொல் துதிக்கக்
காலையிலும் மாலையிலும் கடவுள்அடி பணிந்து
கசிந்தமனத் தவர்பயிலுங் கலயநல்லூர் காணே. 8

பொரும்பலம துடையசுரன் தாரகனைப் பொருது
பொன்றுவித்த பொருளினீ முன் படைத்துகந்த புனிதன்
கரும்புவிலின் மளர்வாளிக் காமன்உடல் வேவக்
கனல்விழித்த கண்ணுதலோன் கருதும்ஊர் வினவில்
இரும்புனல்வெண் திரைபெருகி ஏலம்இல வங்கம்
இருகரையும் பொருதலைக்கும் அரிசிலின்தென் கரைமேல்
கரும்புனைவெண் முத்தரும்பப் பொன்மலர்ந்து பவளக்
கவின்காட்டுங் கடிபொழில்சூழ் கலயநல்லூர் காணே. 6

தண்கமலப் பொய்கைபுடை சூழ்ந்தழகார் தலத்தில்
தடங்கொள்பெருங் கோயில்தனில் தக்கவகை யாலே
வண்கமலத் தயன்முன்னுள் வழிபாடு செய்ய
மகிழ்ந்தருளி இருந்தபரன் மருவியஊர் வினவில்
வெண்கவரி கரும்பீலி வேங்கையொடு கோங்கின்
விரைமலரும் விரவுபுனல் அரிசிலின்தென் கரைமேல்
கண்கமுகின் பூம்பாளை மதுவாசங் கலந்த
கமழ்தென்றல் புகுந்துலவு கலயநல்லூர் காணே. 10

தண்புனலும் வெண்மதியும் தாங்கியசெஞ் சடையன்
தாமரையோன் தலைகலனுக் காமரமுன் பாடி
உண்பலிகொண் டுழல்பரமன் உறையும்ஊர் நிறைநீர்
ஒழுகுபுனல் அரிசிலின்தென் கலயநல்லூர் அதனை
நண்புடைய நன்சடையன் இசைஞானி சிறுவன்
நாவலர்கோன் ஆரூரன் நாவின்நயந் துரைசெய்
பண்பயிலும் பத்தும்இவை பத்திசெய்து பாட
வல்லவர்கள் அல்லலொடு பாவம்இலர் தாமே. 11

திருச்சிற்றம்பலம்

அங்கு நின்று திருக்குடமூக் கணைந்து பணிந்து பாடிப் போய்,
மங்கை பாகர் வலஞ்சுழியை மருவிப் பெருகும் அன்புருகத்,
தங்கு காத லுடன் வணங்கித் தமிழாற் பரசி அரசினுக்குத்,
திங்கள் முடியார் அடியளித்த திருநல் லூரைச் சென்றணைந்தார்.

அங்கு நின்றும் நீங்கி திருக்குடமூக்கென்னும் தலத்தைச் சேர்ந்து எம்பெரு மானைப் பணிந்து பாடி அப்பால்போய் பெண்ணெருபாகராய பெருமான் அமர்ந்த திருவலஞ்சுழி என்னும் தலத்தைச் சேர்ந்து பெருகும் அன்பு உருகும்படி எம்பிரான் பால் தங்கிய காதலுடன் வணங்கித்; தமிழாற் போற்றிப் புகழ்ந்து அப்பால் திருநாவுக்கரசர் பெருமானுக்கு திங்களோ சடைமீதணிந்த கடவுள் திருவடி சூட்டி அருள் புரிந்த திரு நல்லூரைச் சென்றணைந்தார். 98

நல்லூர் இறைவர் கழல்போற்றி நவின்று நடுவு நம்பர் பதி,
எல்லாம் இறைஞ்சி ஏத்திப்போந் திசையாற் பரவுந் தம்முடைய,
சொல்லூ தியமா அணிந்தவர்தஞ் சோற்றுத் துறையின் மருங்கெய்தி,
அல்லூர் கண்டர் கோயிலினுள் அடைந்து வலங்கொண் டடிபணிவார்.

திருநல்லூரில் வீற்றிருக்கும் கடவுளது திருவடிகள் பணிந்துபாடி; அவ்வூரின் நடுவில் இறைவனுடைய தலங்கள் எல்லாம் வணங்கிப் போற்றிச் சென்று தம் மை இசை பாடிடும் அடியார்களது சொல்லே தமக்கு தேடரிய செல்வமாகக் கொண்டு அப்பாமாலை அணிந்த பெருமானுடைய திருச்சோற்றுத்துறை என்னும் கோயிலினுள் சென்று கோயிலினை வலங் கொண்டு எம்பெருமான் பாதம்பணி வார். 69

அழல்நீர் ஒழுகி அனைய எனும் அஞ்சொற் பதிகம் எடுத்தருளிக்,
கழல்நீடிய அன் பிலிற்போற்றுங் காதல் கூரப் பரவியபின்,
கெழுநீர் மையினில் அருள் பெற்றுப் போந்து பரவை யார்கேள்வர்,
முழுநீ றணிவார் அமர்ந்தபதி பலவும் பணிந்து முன்னுவார்.

அங்குள்ள எம்பெருமானை அழல் நீர் ஒழுகி அனைய என்னும் அழகிய சொற்களுடைம் பதிகம் பாட எடுத்தருளி எம்பெருமான் திருவடிகள் பால் நீடித்த அன்பினால் போற்றும் காதல் கூர்ந்திட வணங்கிய பின்; நட்பின் உரிமையால் அருள்பெற்றும போய் எம் பரவை அம்மைநாயகர் சுந்தரமூர்த்தி சுவாமிகள்; முழுவதும் நன்மை யாய நீறணிந்த சிவபெருமான் அமர்ந்த தலங்கள் பிறவும் பணிந்து செல்கின்றார்

திருச்சோற்றுத்துறை என்னும் கோவிலில் அவர் பாடிய அந்த திருப்பதிகப் இதுவாகும்: 70

திருச்சோற்றுத்துறை

பண் – கௌசிகம்

திருச்சிற்றம்பலம்

அழல்நீர் ஒழுகி அனைய சடையும்
உழையீர் உரியும் உடையான் இடமாம்
கழைநீர் முத்துங் கனகக் குவையும்
சுழல்நீர்ப் பொன்னிச் சோற்றுத் துறையே. 1

பண்டை வினைகள் பறிய நின்ற
அண்ட முதல்வன் அமலன் இடமாம்
இண்டை கொண்டன் பிடைஅ ருத
தொண்டர் பரவும் சோற்றுத் துறையே. 2

கோல அரவங் கொக்கின் இறகும்
மாலை மதியும் வைத்தான் இடமாம்
ஆலும் மயிலும் ஆடல் அளியும்
சோலை தருநீர்ச் சோற்றுத் துறையே. 3

பளிக்குத் தாரை பவள வெற்பில்
குளிக்கும் போல்நூற் கோமாற்கிடமாம்
அளிக்கும் ஆத்தி அல்லால் மதுவம்
துளிக்கும் சோலைச் சோற்றுத் துறையே; 4

உதையுங் கூற்றுக் கொல்கா விதிக்கு
வதையுஞ் செய்த மைந்தன் இடமாம்
திதையுந் தாதுந் தேனுஞ் ஞிமிறும்
துதையும் பொன்னிச் சோற்றுத் துறையே. 5

ஒதக் கடல்நஞ் சினைஉண் டிட்ட
பேதைப் பெருமான் பேணும் பதியாம்
சீதப் புனல்உண் டெரியைக் காலும்
சூதப் பொழில்சூழ் சோற்றுத் துறையே. 6

இறந்தார் என்பும் எருக்குஞ் சூடிப்
புறங்காட் டாடும் புனிதன் கோயில்
பிறந்தார் சுற்றந் திருவென் றின்ன
துறந்தார் சேருஞ் சோற்றுத் துறையே. 7

காமன் பொடியாக் கண்ஒன் றிமைத்த
ஓமக் கடலார் உகந்த இடமாம்
தேமென் குழலார் சேக்கை புகைத்த
தூமம் விசும்பார் சோற்றுத் துறையே. 5

இலையால் அன்பால் ஏத்தும் அவர்க்கு
நிலையா வாழ்வை நீத்தார் இடமாம்
தலையால் தாழுந் தவத்தோர்க் கென்றும்
தொலையாச் செல்வச் சோற்றுத் துறையே. 9

சுற்றூர் தருநீர்ச் சோற்றுத் துறையுள்
முற்ற மதிசேர் முதல்வன் பாதத்
துற்றூர் அடியார் அடிநாய் ஊரன்
சொற்றூன் இவைகற் றூர்துன் பிலரே; 10

திருச்சிற்றம்பலம்

தேவர் பெருமான் கண்டியூர் பணிந்து திருவை யாற தனை,
மேவி வணங்கிப் பூந்துருத்தி விமலர் பாதந் தொழு திறைஞ்சிச்
சேவில் வருவார் திருவாலம் பொழிலிற் சேர்ந்து தாழ்ந்திரவு,
பாவு சயனத் தமர்ந்தருளிப் பள்ளி கொள்ளக் கனவின்கண்.

அப்பால் சென்று தேவர்கள் பெருமானின் திருக்கண்டியூர் பணிந்து திருவை யாறு என்னும் தலத்தைச் சென்றடைந்து வணங்கி அதன்பின் திருப்பூந்துருத்தியில் எம்பெருமான் திருப்பாதம் தொழுது வணங்கி; பின்னர் இடபத்தில்வரும் பெரு மானின் திருவாலம் பொழில் என்னும் கோவிலில் சென்று வணங்கி அன்று இரவு அங்கு தங்கி சயனம் செய்தருளி சுந்தரமூர்த்தி சுவாமிகள் நித்திரை செய்திடலும் அவர் கனவினிலே. 71

மழபா டியினில் வருவதற்கு நினைக்க மறந்தா யோ?என்று,
குழகா கியதம் கோலம்எதிர் காட்டி அருளக் குறித்துணர்ந்து,
நிழலார் சோலைக் கரைப் பொன்னி வடபால் ஏறி நெடுமாடம்,
அழகார் வீதி மழபாடி அணைந்தார் நம்பி ஆரூரர்.

''திருமழபாடியில் வருவதற்கு நினைக்க நீ மறந்தனையோ'' என்று தோடனிந்த திருக்காதுடன் விளங்கும் திவ்விய திருக்கோலமுடன் எம் பெருமான் எழுந்தருளி வந்து உணர்த்தியருளலும் அக்கனநிலை நீங்கி அதன் தன்மை குறித்து உணர்ந்து கொண்டு; நிழல் ஆரவிளங்கிய சோலைகள் உடைய காவிரிஆற்றின் வடக்குப் பக்கமாக ஏறிச்சென்று நெடிய மாடங்களுடன் அழகாரும் வீதியுடைய திருமழபா டியை அணைந்தார் எம் பிரான் சுந்தர மூர்த்தி சுவாமிகள்; 72

ஆணைந்து திருக்கோ புரம் இறைஞ்சி அன்பர் சூழ உடன் புகுந்து,
பணங்கொள் அரவம் அணிந்தார் முன் பணிந்து வீழ்ந்து பரங்கருணைக்,
குணங்கொள் அருளின் திறம்போற்றிக் கொண்ட புளகத் துடனுருகிப்.
புணர்ந்த இசையால் திருப்பதிகம் பொன்னூர் மேனி என் றெடுத்து,

திருமழபாடித்தலத்தைச் சென்று சேர்ந்து எம்பிரான் கோவிலின் திருக்கோபுரத்தை வணங்கி அன்பர்கள் சூழ்ந்துவர உடன் உள்ளே சென்று படங்கொண்ட பாம்பை அணிந்த பெருமான் முன்னுகப் பணிந்து வீழ்ந்து பரங்கருணையின் குணங்கொண்ட எம்பெருமானது அருளின் திறத்தைப் போற்றிக் கொண்ட புளகாங்கிதத்துடன் உருகிப் பணிந்து எம்பெருமானுடன் கூடிப் புணர்ந்த இசையால் பாட எடுத்த திருப்பதிகம் பொன்னூர் மேனியனே எனத் தொடங்கிப்பாட எடுத்து. 74

அன்னே உன்னை அல்லால்யான் ஆரை நினைக் கேன் எனஏத்தித்,
தன்னே ரில்லாப் பதிகமலர் சாத்தித் தொழுது புறம்பணைந்து,
மன்னும் பதியில் சிலநாள்கள் வைகித் தொண்டருடன் மகிழ்ந்து,
பொன்னிக் கரையின் இருமருங்கும் பணிந்து மேல்பாற் போதுவார்.

அன்னே உன்னையல்லால் இனி யாரை நினைக்கேன் எனப் பாடிப்போற்றி தனக்குநேரில்லாத அப்பதிகமாய மலரினைச் சாத்தி தொழுது வெளியே வந்து பொருந்திய அப்பதியில் சில நாள்கள் தங்கித் அடியாருடன் மகிழ்ந்து காவிரியாற்றங்கரையின் இரு புறமும் உள்ள தலங்கள் எல்லாம் பணிந்து மேற்குப் புறமாகச் செல்கின்றார் எம் சுந்தரமூர்த்திசுவாமிகள்.

தாய்போல் பரிந்துவந்து, என்னை நினைக்க மறந்தாயோ'' என கேட்டருளிய பெருமானை உள்ளம் களி கூர்ந்து பாடியருளிய திருப்பதிகம் இதுவாகும். 73

திருமழபாடி

பன் – நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

பொன்னூர் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து
மின்னூர் செஞ்சடைமேல் மிளிர்கொன்றை அணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால் இனியாரை நினைக்கேனே. 1

கிளார் கோவணமும் திருநீறு மெய் பூசிஉன்தன்
தாளே வந்தடைந்தேன் தலைவாஎனை ஏன்றுகொள்நீ
வாளார் கண்ணிபங்கா மழபாடியுள் மாணிக்கமே
ஆளாய் நின்னையல்லால் இனியாரை நினைக்கேனே. 2

எம்மான் எம்மனையென் தனக்கெட்டனைச் சார்வாகார்
இம்மா யப்பிறவி பிறந்தே இறந்தெய்த்தொழிந்தேன்
மைம்மாம் பூம்பொழில் சூழ் மழபாடியுள் மாணிக்கமே
அம்மான் நின்னையல்லால் இனியாரை நினைக்கேனே. 3

பண்டே நின்னடியேன் அடியாரடி யார்கட்கெல்லாம்
தொண்டேபூண்டொழிந்தேன் தொடராமைத்துரிசறுத்தேன்
வண்டார் பூம்பொழில்சூழ் மழபாடியுள் மாணிக்கமே
அண்டா நின்னையல்லால் இனியாரை நினைக்கேனே. 4

கண்ணுய் ஏழுலகுங் கருந்தாய அருத்தமுமாய்ப்
பண்ணூர் இன்தமிழாய்ப் பரமாய பரஞ்சுடரே
மண்ணூர் பூம்பொழில்சூழ் மழபாடியுள் மாணிக்கமே
அண்ணு நின்னையல்லால் இனியாரை நினைக்கேனே. 5

நாளார் வந்தனுகி நலியாமுனம் நின்தனக்கே
ஆளா வந்தடைந்தேன் அடியேனையும் ஏன்றுகொள்நீ
மாளா நாளருளும் மழபாடியுள் மாணிக்கமே
ஆளா நின்னையல்லால் இனியாரை நினைக்கேனே. 6

சந்தா ருங்குழையாய் சடைமேற்பிறை தாங்கிநல்ல
வெந்தார் வெண்பொடியாய் விடைஏறிய வித்தகனே
மைந்தார் சோலைகள் சூழ் மழபாடியுள் மாணிக்கமே
எந்தாய் நின்னையல்லால் இனியாரை நினைக்கேனே. 7

வெய்ய விரிசுடரோன் மிகுதேவர் கணங்களெல்லாம்
செய்ய மலர்கள்இட மிகுசெம்மையுள் நின்றவனே
மையார் பூம்பொழில்சூழ் மழபாடியுள் மாணிக்கமே
ஐயா நின்னை அல்லால் இனியாரை நினைக்கேனே. 8

நெறியே நின்மலனே நெடுமால் அயன் போற்றிசெய்யும்
குறியே நீர்மையனே கொடியேரிடை யாள் தலைவா
மறிசேர் அங்கையனே மழபாடியுள் மாணிக்கமே
அறிவே நின்னையல்லால் இனியாரை நினைக்கேனே. 9

ஏரார் மூப்புரமும் எரியச்சிலை தொட்டவனை
வாரார் கொங்கையுடன் மழபாடியுள் மேயவனைச்
சீரார் நாவலர்கோன் ஆரூரன் உரைத்ததமிழ்
பாரோர் ஏத்தவல்லார் பரலோகத் திருப்பாரே. 10

திருச்சிற்றம்பலம்

செய்ய சடையார் திருவானைக் காவில் அணைந்து திருத் தொண்டர்,
எய்த முன்வந் தெதிர்கொள்ள இறைஞ்சிக் கோயி லுட்புகுந்தே,
ஐயர் கமலச் சேவடிக்கீழ் ஆர்வம் பெருக விழுந்தெழுந்து,
மெய்யும் முகிழ்ப்பக் கண்பொழி நீர் வெள்ளம் பரப்ப விம்முவார்.

அப்பால் செம்மையாய சடையுடைய பெருமான் வாழும் திருவானைக்கா என்னும் தலத்தில் வந்தருளிடனும் அங்கு வாழும் அடியார்கள் இவர் வருகையறிந்து களிகூர்ந்து நகர எல்லையில் வந்து கூடிஎதிர் கொள்ள தாம் வணங்கி அவருடன் எம்பெருமானது கோயிலுட் சென்று ஆனைக்காவுடைய அண்ணல் எம் சிவனுடைய சேவடிக்கமலத்தின் கிழ் ஆர்வம் பெருக வீழ்ந்து எழுந்து மேனியும் உரோமம் முகிழ்த்திட கண்ணும் பொழியும் வெள்ளம் திருமேனி எங்கும் பரந்து வழிய விம்முவார் எம் பெருமான் சுந்தர மூர்த்தி சுவாமிகள். 75

மறைக ளாய நான்கும் என மலர்ந்த செஞ்சொற் றமிழ்ப்பதிகம்,
நிறையுங் காத லுடன்எடுத்து நிலவும் அன்பர் தமைநோக்கி,
இறையும் பணிவார் எம்மை யும் ஆளுடையார் என்றென் றேத்துவார்,
உறையூர்ச் சோழன் மணியாரஞ் சாத்துந் திறத்தைஉணர்ந்தருளி.

விம்மி கனிந்துருகி அழுது போற்றுவார் மறைகளாய நான்கும் என மலர்ந்து வரும் செஞ்சொல் கொண்ட தமிழ்பதிகம் உள்ளம் நிறை கின்ற காதல் திருவானைக்காவுடைய கடவுள் மேல் பெருக பாடஎடுத்து; தம் முடன் நின்று வழிபடும் அன்பர்கள் யாவரையும் நோக்கி சொல்பவராய்; எம்பெருமானை ஓர் இறையளவு பணிவார்கள் எம்மையும் ஆளுடையார்கள் என்று மகிழ்வுடன் போற்றுவார். அத்தலத்து முன் வழிபாடு புரிந்த உறை யூர்ச் சோழ அரசனின் முத்துமாலையை இறைவன் தீர்த்தக் குடத்துள் வரச்செய்து அணிந்தருளிய அதனை உனர்ந்தருளி. 76

வளவர் பெருமான் மணியாரம் சாத்திக் கொண்டு வரும் பொன்னிக்,
கிளருந் திரைநீர் மூழ்குதலும் வழுவிப் போகக் கேதமுற,
அளவில் திருமஞ் சனக்குடத்துள் அதுபுக் காட்ட அணிந்தருளித்,
தளரும் அவனுக் கருள் புரிந்த தன்மை சிறக்கச் சாற்றினார்.

சோழ அரசர் பெருமான் அழகிய முத்துமாலை அணிந்து கொண்டு வேகமுடன் வரும் காவிரியாற்றின் பெருகும் நீரில் மூழ்குதலும் அவரது முத்துமாலை கழுத்தால் வழுவிப் போக துன்பமுற்று அப்பனே உன் அபயம் எனலும் அது போது எம்பெருமான் திருமஞ்சனக்குடத்தில் அது போய்ச் சேரும்படி செய்வித்து தம்மை திருமஞ்சனமாட்டக் கொணர்ந்த காவிரி நீருடன் அம்மாலையையும் அணிந்தருளி; மாலை இழந்து தளர்வுறும் சோழஅரசனுக்கு அருள் புரிந்த தன்மையையும் அப்பதிகத்து மொழிந்தருளினார் சுந்தரமூர்த்தி சுவாமிகள். 77
சோழஅரசனுடைய அருள் தம்மையை சிறப்பித்து பாடிய அப்பதிகம் இதுவாகும்

திருவானைக்கா

பண்—காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

மறைகள் ஆயின நான்கும் மற்றுள பொருள்களு மெல்லாம்
துறையும் தோத்திரத் திறையும் தொன்மையும் நன்மையும் ஆய
அறையும் பூம்புனல் ஆனைக் காவுடை ஆதியை நாளும்
இறைவன் என்றடி சேர்வார் எம்மையும் ஆளுடையாரே. 1

வங்கம் மேவிய வேலை நஞ்செழ வஞ்சர்கள் கூடித்
தங்கள் மேல்அட ராமை உண்ணென உண்டிருள் கண்டன்
அங்கம் ஓதிய ஆனைக் காவுடை ஆதியை நாளும்
எங்கள் ஈசனென் பார்கள் எம்மையும் ஆளுடை யாரே. 2

நில வண்டறை கொன்றை நேரிழை மங்கைஓர் நிங்கள்
சால வாள் அர வங்கள் தங்கிய செஞ்சடை எந்தை
ஆல நீழலுள் ஆனைக் காவுடை ஆதியை நாளும்
ஏலு மாறுவல் லார்கள் எம்மையும் ஆளுடை யாரே. 3

தந்தை தாயுல குக்கோர் தத்துவன் மெய்த்தவத் தோர்க்குப்
பந்த மாயின பெருமான் பரிசுடை யவர்திரு வடிகள்
அந்தண் பூம்புனல் ஆனைக் காவுடை ஆதியை நாளும்
எந்தை என்றடி சேர்வார் எம்மையும் ஆளுடை யாரே. 4

கணைசெந் தியர வந்நாண் கல்வலை புஞ்சிலை யாகத்
துணைசெய் மும்மதில் மூன்றும் சுட்டவ னேஉல குய்ய
அணையும் பூம்புனல் ஆனைக் காவுடை ஆதியை நாளும்
இணைகொள் சேவடி சேர்வார் எம்மையும் ஆளுடை யாரே. 5

விண்ணின் மாமதி சூடி விலையிலி கலன்அணி விமலன்
பண்ணின் நேர்மொழி மங்கை பங்கினன் பசுவுகந் தேறி
அண்ண லாகிய ஆனைக் காவுடை ஆதியை நாளும்
எண்ணு மாறுவல் லார்கள் எம்மையும் ஆளுடை யாரே. 6

தார மாகிய பொன்னித் தண்டுறை ஆடி விழுந்தும்
நீரில் நின் றடி போற்றி நின்மலா கொள்என ஆங்கே
ஆரங் கொண்டனம் ஆனைக் காவுடை ஆதியை நாளும்
ஈரம் உள்ளவர் நாளும் எம்மையும் ஆளுடை யாரே. 7

உரவம் உள்ளதோர் உழையின் உரிபுலி அதளுடை யானை
விரைகொள் கொன்றையினானை விரிசடை மேற்பிறை யானை
அரவம் விக்கிய ஆனைக் காவுடை ஆதியை நாளும்
இரவும் எல்லியும் பகலும் ஏத்துவார் எம்மைஉடை யாரே. 8

வலங்கொள் வாரவர் தங்கள் வல்வினை தீர்க்கும் மருந்து
கலங்கக் காலனைக் காலாற் காமனைக் கண்சிவப் பானை
அலங்கல் நீர்பொரும் ஆனைக் காவுடை ஆதியை நாளும்
இலங்கு சேவடி சேர்வார் எம்மையும் ஆளுடையாரே. 9

ஆழி யாற்கருள் ஆனைக் காவுடை ஆதிபொன் னடியின்
நீழ லேசரணாக நின்றருள் கூர நினைந்து
வாழ வல்லவன் ருெண்டன் வண்தமிழ் மாலைவல்லார்போய்
ஏழு மாபிறப் பற்று எம்மையும் ஆளுடை யாரே. 10

திருச்சிற்றம்பலம்

சாற்றி அங்குத் தங்குநாள் தயங்கும் பவளத்திருமேனி,
நீற்றார் கோயில் எம்மருங்குஞ் சென்று தாழ்ந்து நிறை விருப்பால்,
போற்றி அங்கு நின்றும்போய்ப் பொருவில் அன்பர் மருவியதொண்(டு),
ஆற்றும் திருப்பாச்சிலாச்சி ராமஞ் சென்றடைந்தார்.

இப்பதிகம்பாடி அங்கு திருவானைக்காவில் தங்கும் நாட்களில் விளங்கும் பவளத் திருமேனியில் தருநீற்றின் சிறப்புடைய சிவபெருமானது கோயில் அதன் மருங்கும் எப்பக்கரிலு முள்ளன சென்று வணங்கி நிறைந்தவிருப்பால் போற்றி அங்கு நின்றும் போய் நிகரிலாத அன்பர்கள் இறைவனை அணைந்து தொண்டு செய்யும் பெருமையுடைய திருப்பாச்சிலாச்சிராமம் என்னும் தலத்தைச் சென்றடைந்தார் சுந்தரமூர்த்தி சுவாமிகள். 78

சென்று திருக்கோ புரம்இறைஞ்சித் தேவர் மலிந்த திருந்துமணி,
முன்றில் வலங்கொண் டுள்ளணைந்து முதல்வர் முன்னம் வீழ்திறைஞ்சி,
நன்றும் பெருகும் பொருட் காதல் நயப்புப் பெருக நாதரெதிர்,
நின்று பரவி நினைந்த பொருள் அருளா தொழிய நேர்நின்று.

திருப்பாச்சிலாச்சிராமத் தலம் சென்று திருக்கோபுரம் வணங்கி; தேவர்கள் மலிந்து கூடும் திருந்திய மணிகள் பதித்த கோயிலின் திருமுற்றத்தினை வலங்கொண்டு வந்து உள்ளாகச் சென்று முதல்வராய பெருமான் திருச்சந்நிதி முன்னமாக வீழ்ந்து வணங்கி நன்றும் தமது உள்ளத்து பெருகும் பொருளின் விருப்பத்தின் நயப்பு பெருகிட; அப்பொருளைப் பெறவேண்டி எம்பெருமான் எதிராக நின்று வணங்கினும் தாம் நினைந்த பொருளை பகவான் தமக்குகொடுத்தருளாத வகையால் நேராக வந்து நின்று; 79

அன்பு நீங்கா அச்சமுடன் அடுத்த திருத்தோ ழமைப்பணியால்,
பொன்பெருத திருவுள்ளம் புழுங்க அழுங்கிப் புறம்பொருபால்,
முன்புநின்ற திருத்தொண்டர் முகப்பே முறைப்பா டுடையார்போல்,
என்பு கரைந்து பிரானுர்மற் றிலையோ என்ன எடுக்கின்றார்.

அன்பும் நீங்கிடாத அச்சமுடன் எம்பிராற்கு உற்ற திருவுடைய தோழமையாய அப்பணியால் தாம் வேண்டிய பொன் பெற்றுக் கொள்ளாது அவரது திருவுள்ளம் மிகவும் வேதனையால் புழுங்கி தம்முன்பாக நின்ற திருத்தொண்டர்களை முன்னிலையாகக் கொண்டு அவர் களிடமே தமது முறைப்பாட்டைச் சொல்லிக் கொள்வார் போல் எலும்பும் கரைந்துருக என்னுடைய கடவுள் இவரலாது மற்று இல்லையோ என்றே பாட எடுக்கின்றார். 80

நித்தமும் நீங்கா நிலைமையின் நீங்கி நிலத்திடைப் புலங்கெழும் பிறப்பால்
உய்த்தகா ரணத்தை உணர்ந்து நொந்தடிமை ஒருமையாம் எழுமையும் உணர்த்தி,
எத்தனை அருளாதொழியினும் பிரானுர் இவரலாதில்லையோ என்பார்
வைத்தனன் தனக்கே தலையும் என்நாவும் எனவழுத் தினர்வன்தொண்டர்

நித்தலும் தாம் திருக்கைலாய மலையில் விட்டு நீங்கிடாத பேரின்ப நிலையில் நின்றும் நீங்கி இப்பூமியிடத்து ஐந்து புலங்களால் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து அறியும் பிறப்பினை வாய்புடைய தாகக் கொடுத்த காரணத்தை உணர்ந்து நொந்து இப்படியும் இங்கு வரச்செய்து என்னைத் தவித்திடவைத்தடலாமோ என வருந்தி; அடிமைத்திறமும் இப்பிறப்பன்று எழுமைக்கும் நான் அடிமை என்பதை உணர்த்தி (எத்தனை தான் இவர் அருளாதொழிந்தாலும் இவரலாது பிரானுர் எனக்கு இல் லையோ என எண்ணினரோ என்பவராய்) வைத்தனன் தனக்கே தலையும் என் நாவும் என்ற அத்திருப்பதிகத்தால் போற்றிசெய்தார் வன்றொண்டராகும் சுந்தரமூர்த்தி சுவாமிகள். 81

அவர் பாடிய அந்த திருப்பதிகத்தை இப்பால் தருகிறோம்.

திருப்பாச்சிலாச்சிராமம்

பண்—தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

வைத்தனன் தனக்கே தலையும்என் னுவும் நெஞ்சமும் வஞ்சம்ஒன் றின்றி
உய்த்தனன் தனக்கே திருவடிக் கடிமை உரைத்தக்கால் உவமனே ஒக்கும்
பைத்தபாம் பார்த்தோர் கோவணத் தோடு பாச்சிலாச் சிராமத்தெம் பரமர்
பித்தரே ஒத்தோர் நச்சில ராகில் இவரலா தில்லையோ பிரானுர். 1

அன்னையே என்னென் அத்தனே என்னேன் அடிகளே அமையுமென் றிருந்தேன்
என்னையும் ஒருவன் உளன்என்று கருதி இறையிறை திருவருள் காட்டாய்
அன்னமாம் பொய்கை சூழ்தரு பாச்சி லாச்சிர மத்துறை அடிகள்
பின்னையே அடியார்க் கருள்செய்வ தாகில் இவரலா தில்லையோ பிரானுர் 2

உற்றபோ தல்லால் உறுதியை உணரேன் உள்ளமே அமையும்என் றிருந்தேன்
செற்றவர் புரமூன் றெரிஎழச் செற்ற செஞ்சடை நஞ்சடை கண்டர்
அற்றவர்க் கருள்செய் பாச்சிலாச் சிராமத் தடிகள்தா மியாதுசொன் னுலும்
பெற்றபோ துகந்து பெருவிடில் இகழில் இவரலா தில்லையோ பிரானுர். 3

நாச்சில பேசி நமர்பிறர் என்று நன்றுதி தென்கிலர் மற்றோர்
பூச்சில நெஞ்சே பொன்னினை கழனிப் புள்ளினஞ் சிலம்புமாம் பொய்கைப்
பாச்சிலாச் சிராமத் தடிகளென் றிவர்தாம் பலரையும் ஆட்கொள்வர் பரிந்தோர்
பேச்சிலர் ஒன்றைத் தரவில ராகில் இவரலா தில்லையோ பிரானுர். 4

வரிந்தவெஞ் சிலையால் அந்தரத் தெயிலை வாட்டிய வகையின ரேனும்
புரிந்தஅந் நாளே புகழ்தக்க அடிமை போகுநாள் வீழுநா ளாகிப்
பரிந்தவர்க் கருள்செய் பாச்சிலாச் சிராமத் தடிகள்தா மியாதுசொன் னுலும் 5
பிரிந்திறைப் போதிற் பேர்வதே ஆகில் இவரலா தில்லையோ பிரானுர். 5

செடித்தவஞ் செய்வார் சென்றுழிச் செல்லேன் தீவினை செற்றிடும் என்று
அடித்தவம் அல்லால் ஆரையும் அறியேன் ஆவதும் அறிவர்எம் அடிகள்
படைத்தலைச் சூலம் பற்றிய கையர் பாச்சிலாச் சிராமத்தெம் பரமர்
பிடித்தவெண் ணீறே பூசுவ தானுல் இவரலா தில்லையோ பிரானுர். 6

கையது கபாலம் காடுறை வாழ்க்கை கட்டங்கம் ஏந்திய கையர்
மெய்யது புரிநூல் மிளிரும்புன் சடைமேல் வெண்திங்கள் சூடிய விகிர்தர்
பையர வல்குற் பாவையர் ஆடும் பாச்சிலாச் சிராமத்தெம் பரமர்
மெய்யரே ஒத்தோர் பொய்செய்வ தாகில் இவரலா தில்லையோ பிரானுர். 7

நினைம்படும் உடலை நிலைமையென் றேரேன் நெஞ்சமே தஞ்சமென் றிருந்தேன்
கணம்படிந் தேத்திக் கங்குலும் பகலும் கருத்தினுற் கைதொழு தெழுவேன்
பணம்படும் அரவம் பற்றிய கையர் பாச்சிலாச் சிராமத்தெம் பரமர்
பிணம்படு காட்டில் ஆடுவ தாகில் இவரலா தில்லையோ பிரானுர். 8

குழைத்துவந் தோடிக் கூடுதி நெஞ்சே குற்றேவல் நாள்தொறுஞ் செய்வான்
இழைத்தநாள் கடவார் அன்பில ரேனும் எம்பெரு மான்என்றெப் போதும்
அழைத்தவர்க் கருள்செய் பாச்சிலாச் சிராமத் தடிகள்தா மியாதுசொன் னுலும்
பிழைத்தது பொறுத்தொன் றீகில ராகில் இவரலா தில்லையோ பிரானுர். 9

துணிப்படும் உடையுஞ் சுண்ணவெண் ணீறும் தோற்றமுஞ் சிந்தித்துக் காணில்
மணிப்படு கண்டனை வாயினுற் கூறி மனத்தினுல் தொண்டனேன் நினைவேன்
பணிப்படும் அரவம் பற்றிய கையர் பாச்சிலாச் சிரமத்தெம் பரமர்
பிணிப்பட ஆண்டு பணிப்பில ராகில் இவரலா தில்லையோ பிரானுர். 10

ஒருமையே அல்லேன் எழுமையும் அடியேன் அடியவர்க் கடியனும் ஆனேன்
உரிமையால் உரியேன் உள்ளமும் உருகும் ஒன்மலர்ச் சேவடி காட்டாய்
அருமையாம் புகழார்க் கருள்செயும் பாச்சிலாச் சிராமத்தெம் அடிகள்
பெருமைகள் பேசிச் சிறுமைகள் செய்யில் இவரலா தில்லையோ பிரானுர். 11

ஏசின அல்ல இகழ்ந்தன அல்ல எம்பெரு மானென்றெப் போதும்
பாயின புகழான் பாச்சிலாச் சிராமத் தடிகளை அடி தொழப் பன்னுள்
வாயினுற் கூறி மனதினுல் நினைவான் வளவயல் நாவலா ரூரன்
பேசின பேச்சை பொறுக்கில ராகில் இவரலா தில்லையோ பிரானுர். 12

திருச்சிற்றம்பலம்

இவ்வகை பரவித் திருக்கடைக் காப்பும் ஏசின வல்ல என்றிசைப்ப,
மெய்வகை விரும்பு தம்பெரு மானுர் விழுநிக்குவை அளித் தருள,
மைவளர் கண்டர் கருணையே பரவி வணங்கி அப்பதியிடைவைகி,
எவ்வகை மருங்கும் இறைவர்தம் பதிகள் இறைஞ்சி அங்கிருந்தனர் சிலநாள்.

இவ்வகை போற்றி அப்பதிகத்தின் திருக்கடைக் காப்பும் நான் ஏசினவல்ல இவை என்று பாடியருளிட, உண்மையான அன்பின் வாழ்வை விரும்பும் அவரது பெரு மானும் வேண்டிய பெரும் பொருட்குவை கொடுத்தருளலும்; நஞ்சுவளரும் கண்ட முடைய பெருமானின் திருக்கருணையே போற்றித் தொழுது வணங்கி அப்பதியிடை தங்கி அவ்விடத்து எந்தப்பக்கரிலும் உள்ள ஈசனுடைய கோயில்கள் சென்று வணங்கி அங்கிருந்தனர் சில நாள். 82

அப்பதி நீங்கி அருளினுற் போகி ஆவின்அஞ் சாடு வார் நீடும்,
எப்பெயர்ப் பதியும் இருமருங் கிறைஞ்சி இறைவர்பைஞ் ஞீலியை எய்திப்,
பைப்பணி அணிவார் கோபுரம் இறைஞ்சிப் பாங்கமர் புடைவலங் கொண்டு,
துப்புறழ் வேணி யார்கழல் தொழுவார் தோன்றுகங் காள ரைக் கண்டார்.

அந்த தலத்தை விடுத்து நீங்கி அருளின் தொடர்ச்சியால் சென்று பசுவிடத் துப் பெறும் ஐந்து பொருள்களையும் விரும்பி திருமஞ்சனம் ஆடும் பெருமான் நீட உறைகின்ற எந்த பெயருடைய பெரும்பதியும் இருபுறத்துமுள்ளன வணங்கி ஈசனுடைய திருப்பைஞ்ஞீலி என்னும் தலத்தை அடைந்து அங்கு பாம்பின் பணி அணிந்த பரமேசுவரனுடைய கோவிலின் கோபுரம் வணங்கி பக்கராக உள்ள திருமுற்றத்தை வலமாக வந்து பவளம் போலும் சடைகொண்ட பகவானைத் தொழும் அவர் தமது முன்னுகத் தோன்றும் எம் பெருமானை கங்காள வேடமுடன் நேருக்கு நேராகக் கண்டார். 83

கண்டவர் கண்கள் காதல்நீர் வெள்ளம் பொழிதரக் கைகுவித் திறைஞ்சி,
வண்டறை குழலார் மனங்கவர் பலிக்கு வருந்திரு வாடிவுகண் டவர்கள்'
கொண்டதோர் மயலால்வினவுகூற்றுகக் குலவுசொற் காருலா வியஎன்(று),
அண்டர்நா யகரைப் பரவி ஆரணிய விடங்கராம் அருந்தமிழ் புனைந்தார்.

கண்டு கொண்டதும்; அவர் கண்கள் காதலின் நீர் வெள்ளம் பொழிந்திட; கைகளைக் கூப்பிவணங்கி; வண்டுகள் பாடும் பூச்சூடிய பெண்கள நல்லாரின் மனம் கவரும்படி அவர்பால் பிச்சைக்கு வருகின்ற எம்பெருமானுடைய இந்த வடிவு கண்டு அவர்கள் அப்பன்பால் கொண்டதோர் மயக்க மிகுதியால் அப்போ விஞ்சு விடும் வார்த்தையாக விளங்கும் சொல்லுடைய பதிகம் காருலாவிய நஞ்சை எனத் தொடங்கி தேவாதி தேவர்க்கெலாம் நாயகரை எம் கடவுளே போற்றி ஆரணிய விடங்காரம் இவர் என முடிவுறும் வார்த்தையாக அத் தமிழ்பதிகத்தை 84
பாடி முடித்தார்.

அவர் எம்பெருமானே கங்காள வேடமுடன் கண்டு பாடிய அருந்தமிழாய பதிகம் இது வாகும்.

திருப்பைஞ்ஞீலி

பண்–கொல்லி

திருச்சிற்றம்பலம்

காரு லாவிய நஞ்சை உண்டிருள் கண்டர் வெண்டலை யோடுகொண்(டு)
ஊரெ லாந்திரிந் தென்செய் வீர்பலி ஓரி டத்திலே கொள்ளும்நீர்
பாரெ லாம்பணிந் தும்மை யேபர விப்ப ணியும்பைஞ் ஞீலியீர்
ஆர மாவது நாக மோசொலும் ஆர ணீய விடங்கரே. 1

சிலைத்து நோக்கும்வெள் ளேறு செந்தழல் வாய பாம்பது மூசெனும்
பலிக்கு நீர்வரும் போது நுங்கையிற் பாம்பு வேண்டா பிரானிரே
மலைத்த சந்தொடு வேங்கை கோங்கமும் மன்னு காரகில் சண்பகம்
அலைக்கும் பைம்புனல் சூழ்பைஞ் ஞீலியில் ஆர ணீய விடங்கரே. 2

தூய வர்கண்ணும் வாயும் மேனியும் துன்ன ஆடை சுடலையில்
பேயொ டாடலைத் தவிரும் நீரொரு பித்த ரோஎம் பிரானிரே
பாயும் நீர்க்கிடங் கார்கமலமும் பைந்தண் மாதவி புன்னையும்
ஆய பைம்பொழில் சூழ்பைஞ் ஞீலியில் ஆர ணீய விடங்கரே. 3

செந்த மிழ்த்திறம் வல்லி ரோசெங்கண் அரவ முன்கையில் ஆடவே
வந்து நிற்குமி தென்கொ லோபலி மாற்ற மாட்டோம் இடகிலோம்
பைந்தண் மாமலர் உந்து சோலைகள் கந்தம் நாறுபைஞ் ஞீலியீர்
அந்தி வானமும் மேனியோ சொலும் ஆர ணீய விடங்கரே. 4

நீறு நுந்திரு மேனி நித்திலம் நீணெ டுங்கண்ணி னுளொடும்
கூற ராய்வந்து நிற்றி ராற்கொணர்ந் திடுகி லோம்பலி நடமிலே
பாறு வெண்டலை கையில் ஏந்திப்பைஞ் ஞீலி யேனென்றீர் அடிகள்நீர்
ஆறு தாங்கிய சடைய ரோசொலும் ஆர ணீய விடங்கரே. 5

குரவம் நாறிய குழலி னர்வளை கொள்வ தேதொழில் ஆகிநீர்
இரவும் இம்மனை அறிதி ரேஇங்கே நடந்து போகவும் வல்லிரே
பரவி நாடொறும் பாடு வார்வினை பற்ற றுக்கும்பைஞ் ஞீலியீர்
அரவம் ஆட்டவும் வல்லி ரோசொலும் ஆர ணீய விடங்கரே. 6

ஏடு லாமலர்க் கொன்றை சூடுதிர் என்பெ லாமணிந் தென்செய்வீர்
காடு நும்பதி ஓடு கையது காதல் செய்பவர் பெறுவதென்
பாடல் வண்டிசை ஆலுஞ் சோலைப்பைஞ் ஞீலி யேன்என்று நிற்றிரால்
ஆடல் பாடலும் வல்லி ரோசொலும் ஆர ணீய விடங்கரே. 7

மத்த மாமலர் கொன்றை வன்னியுங் கங்கை யாளொடு திங்களும்
மொய்த்த வெண்டலை கொக்கி றகொடு வெள்ளெ ருக்கமுஞ் சடையதாம்
பத்தர் சித்தர்கள் பாடி ஆடும்பைஞ் ஞீலி யேன்என்று நிற்றிரால்
அத்தி யீர்உரி போர்த்தி ரோசொலும் ஆர ணீய விடங்கரே. 8

தக்கை தண்ணுமை தாளம் வீணை தகுணிச் சங்கிணை சல்லரி
கொக்க ரைகுட முழவி னோடிசை கூடிப் பாடிநின் ருடுவீர்
பக்க மேருயில் பாடுஞ் சோலைப்பைஞ் ஞீலி யேன்என்று நிற்றிரால்
அக்கும் ஆமையும் பூண்டி ரோசொலும் ஆர ணீய விடங்கரே; 9

கையொர் பாம்பரை ஆர்த்தொர் பாம்பு கழுத்தொர் பாம்பவை பின்புதாழ்
மெய்யெ லாம்பொடிக் கொண்டு பூசுதிர் வேதம் ஓதுதிர் கீதமும்
பையவே விடங்காக நின்று பைஞ்ஞீலியேன் என்றீரடிகளீர்
ஐயமேற்குமி தென்கொலோ சொலுமார ணீய விடங்கரே. 10

அன்னஞ் சேர்வயல்சூழ் பைஞ்ஞீலியிலாரணீய விடங்கரை
மின்னும் நுண்ணிடை மங்கைமார்பலர் வேண்டிக்காதல் மொழிந்தசொல்
மன்னுதொல்புகழ் நாவலூரன் வன்றொண்டன் வாய்மொழி பாடல்பத்
துன்னியின்னிசை பாடுவாருமைகேள்வன் சேவடிசேர்வரே. 11

திருச்சிற்றம்பலம்

பரவிஅப்பதிகத் திருக்கடைக் காப்புச்சாத்திமுன் பணிந்(து) அருள் பெற்றுக்
கரவில் அன்பர்கள் தங்கூட்டமுந் தொழுது கலந்தினி திருந்து போந்தருளி,
விரவிய ஈங்கோய் மலைமுத லாக விமலர்தம் பதிபல வணங்கிக்,
குரவலர் சோலை அணிதிருப் பாண்டிக் கொடுமுடி அணைந்தனர் கொங்கில்

அவ்வாறு போற்றியருளி அப்பதிகத்திற்கு திருக்கடைக்காப்பும் சாத்தி திரு முன்பே பணிந்து அருள்பெற்று; வஞ்சனை நீக்கிய அன்பர்களது கூட்டத்தையும் முன்னுக வணங்கி அவர்களுடன் கலந்து இனிதிருந்து அப்பால் போய்: அருள் பொருந்திய திருஈங்கோய்மலை முதலாக எம்பெருமானுடைய பதிகள் பலபணிந்து அப்பால் சென்று குராமரங்கள் மலரும் சோலையுடைய அழகில் சிறந்த திருப்பாண்டிக் கொடுமுடி என்னும் கொங்கநாட்டிலுள்ள கோயிலைச் சென்று சேர்ந்தார் எம் சுந்தரமூர்த்திசுவாமிகள் 85

கொங்கினிற் பொன்னித் தென்கரைக் கறையூர்க் கொடுமுடிக் கோயில்
முன் குறுகிச்,
சங்கவெண் குழையார் உழைவலஞ் செய்து சார்ந்தடி அன்பினில் தாழ்ந்து,
பொங்கிய வேட்கை பெருகிடத் தொழுது புனிதர்பொன் மேனியை நோக்கி.
இங்கிவர்தம்மைமறக்கவொண்ணுதென்றெழுந்தமெய்க்குறிப்பினில்எடுப்ப,

கொங்க நாட்டில் காவிரியாற்றின் தென்கரையில் உள்ள கறையூரில் திருப்பாண்டிக் கொடுமுடி என்னும் கோயில் முன்னுகச் சென்று சங்குகளினுல் ஆயவெண்தோடணிந்த பெருமானது கோயிலை வலமாக வந்து உட்சென்றருளி எம்பெருமானைச் சார்ந்து திருவடிகளை அன்பால் தாழ்ந்து வணங்கி எம்பெருமான்பால் பொங்கிடும் வேட்கை பெருகிடத் தொழுது புனிதனுடைய அம்மூர்த்தியின் பொன் மேனியை நோக்கி இங்கு இவர் தம்மை மறக்கமுடியாது என்று எழுந்த உண்மை உரம் குறிப்பால் திருப்பதிகம் பாட எடுத்திட்டு. 86

அண்ணலார் அடிகள் மறக்கினும் நாம அஞ்செழுத் தறியஎப் பொழுதும்
எண்ணிய நாவே இன்சுவை பெருக இடையறு நியம்பும்என் றிதனைத்,
திண்ணிய உணர்விற் கொள்பவர் மற்றுப் பற்றிலேன் எனச்செழுந்தமிழால்,
நண்ணிய அன்பில் பிணிப்புற நவின்றூர் நமச்சிவா யத் திருப் பதிகம்.

எம்பெருமானுடைய திருவடிகளே என்மனம் ஐயமெனும் நோய் வாய்ப்பட்டு மறந்தாலும் அவருடைய நாமமாய ஐந்தெழுத்தினை அறிந்திட எப்பொழுதும் எண்ணிய என் நாவே இனிய சுவை பெருக இடையறுது சொல்லிடும் என்ற இதனை தமது நிண்மையான உணர்வினிற் கொள்பவர் மற்றுப்பற்றிலேன் என்று செழுமையாய தமிழால் வருகின்ற அன்பினுல் எம் ஈசனுடன் தாம் பற்றிக் கொண்டிட பாடியருளினுர் நமச்சிவாயத் திருப்பதிகம். 87
என் சிந்தை மறந்தாலும் நாவே எம் பெருமான் நாமம் இடையறுது இயம்பும் என மொழிந்தருளிய அந்த திருப்பதிகத்தை இப்பால் தருகின்றோம்.

திருப்பாண்டிக்கொடுமுடி

பண்–பழம்பஞ்சுரம்

திருச்சிற்றம்பலம்

ற்றுப் பற்றெனக் கின்றி நின்திருப்பாத மேமனம் பாவித்தேன்
பற்ற லும்பிறந் தேன்இ னிப்பிறவாத தன்மைவத் தெய்தினேன்
ற்ற வர்தொழு தேத்துஞ் சீர்க்கறையூரிற் பாண்டிக் கொடுமுடி
ற்ற வாஉனை நான்ம றக்கினும் சொல்லும் நாநமச்சி வாயவே, 1

இட்ட னும்மடி ஏத்து வார்இகழ்ந்திட்ட நாண்மறந் திட்டநாள்
கெட்ட நாள்இவை என்றலாற்கரு தேன்கி ளர்புனற் காவிரி
வட்ட வாசிகை கொண்ட டிதொழுதேத்து பாண்டிக் கொடுமுடி
நட்ட வாஉனை நான்ம றக்கினும் சொல்லும் நாநமச்சி வாயவே. 2

ஒவு நாள்உணர் வழியும் நாள்உயிர் போகும் நாள்உயர் பாடைமேல்
காவும் நாள்இவை என்றலாற்கரு தேன்கி ளர்புனற் காவிரிப்
பாவு தண்புனல் வந்தி ழிபாஞ்சோதி பாண்டிக் கொடுமுடி
நாவ லாஉனை நான்ம றக்கினும் சொல்லும் நாநமச்சி வாயவே. 3

எல்லை யில்புகழ் எம்பி ரான்எந்தை தம்பி ரான்என்பொன் மாமணி
கல்லை உந்தி வளம்பொ ழிந்திழி காவிரியதன் வாய்க்கரை
நல்ல வர்தொழு தேத்துஞ் சீர்க்கறை யூரிற் பாண்டிக் கொடுமுடி
வல்ல வாஉனை நான்மறக்கினும் சொல்லும் நாநமச்சி வாயவே 4

அஞ்சி னர்க்கரண் ஆகி என்றடி யேனும் நான்மிக அஞ்சினேன்
அஞ்சல் என்றடித் தொண்ட னேற்கருள் நல்கி னுய்க்கழி கின்றதென்
பஞ்சின் மெல்லடிப் பாவைமார் குடைந்தாடு பாண்டிக் கொடுமுடி
நஞ்ச னிகண்ட நான்மறக்கினும் சொல்லும் நாநமச்சி வாயவே. 5

ஏடு வான்இளந் திங்கள் சூடினை என்பின் கொல்புலித் தோலின்மேல்
ஆடு பாம்பத ரைக்க சைத்த அழக னேஅந்தண் காவிரிப்
பாடு தண்புனல் வந்தி ழிபரஞ் சோதி பாண்டிக் கொடுமுடிச்
சேட னேஉனை நான்ம றக்கினும் சொல்லும் நாநமச்சி வாயவே. 6

விரும்பி நின்மலர்ப் பாத மேநினைந் தேன்வி னைகளும் விண்டன
நெருங்கி வண்பொழில் சூழ்ந்தெ ழில்பெற நின்ற காவிரிக் கோட்டிடைக்
குரும்பை மென்முலைக் கோதைமார் குடைந்தாடு பாண்டிக் கொடுமுடி
விரும்ப னேஉனை நான்ம றக்கினும் சொல்லும் நாநமச்சி வாயவே. 7

செம்பொ னேர்சடை யாய்தி ருபுரம் தியெ ழச்சிலை கோலினாய்
வம்பு லாங்குழ லாளைப் பாகம் அமர்ந்து காவிரிக் கோட்டிடைக்
கொம்பின் மேற்குயில் கூவ மாமயில் ஆடு பாண்டிக் கொடுமுடி
நம்ப னேஉனை நான்ம றக்கினும் சொல்லும் நாநமச்சி வாயவே. 8

சார ணன்தந்தை எம்பி ரான்எந்தை தம்பிரான் என்பொன் மாமணியென்று
பேரெ ழுயிர கோடி தேவர் பிதற்றி நின்று பிரிகிலார்
நார ணன்பிர மன்தொ ழுங்கறை யூரிற் பாண்டிக் கொடிமுடிக்
கார ணஉனை நான் மறக்கினும் சொல்லும் நாநமச்சி வாயவே. 9

கோணி யபிறை சூடி யைக்கறை யூரிற் பாண்டிக் கொடுமுடி
பேணி யபெரு மானைப் பிஞ்ஞகப் பித்த னைப்பிறப் பில்லியைப்
பாணு லாவரி வண்ட றைதொன்றைத் தார னைப்படப் பாம்பரை
நாண னைத்தொண்டன் ஊரன் சொல்இவை சொல்லு வார்க்கில்லைத் துன்பமே. 10

திருச்சிற்றம்பலம்

உலகெலாம் உய்ய உறுதியாம் பதிகம் உரைத்து மெய்உணர்வரு ஒருமை,
நிலவிய சிந்தை யுடன் திருவருளால் நீங்குவார் பாங்குநற் பதிகள்,
பலமுன்பணிந்து பரமர்தாள் போற்றிப் போந்துதண்பனிமலர்ப் படப்பைக்
குலவும்அக் கொங்கிற் காஞ்சிவாய்ப் பேரூர்குறுகினர் முறுகும் ஆதரவால்.

உலகெலாம் ஒதி உய்ய உறுதியாய அப்பதிகத்தைப் பாடியருளி உண்மையாம் உணர்வினில் ஒருமைப்பாடு நிலவிய சிந்தையுடன் திருவருளின் பேற்றால் நிறைந்து எம்பெருமானது சந்நிதி நீங்கிச் சென்றிடும் அவர் அத்திருக்கோவிலின் புறத்தாக உள்ள பல நல்ல தலங்களும் முன்சென்று பணிந்து எம் பெருமானுடைய திருவடிகளைப் பணிந்து அப்பால் போய் குளிர்ந்த நல் மலர்கள் நெருங்கிச் செறிந்த அந்த கொங்க நாட்டில் காஞ்சிவாய் பேரூர் என்னும் தலத்தைச் சென்று எம் சுந்தரமூர்த்தி சுவாமிகள் மிக முதிர்ந்த அன்பின் எழுச்சியுடன் சென்று சேர்வுற்றார். 88

அத்திருப் பதியை அணைந்துமுன் தம்மை ஆண்டவர் கோயிலுட் புகுந்து,
மெய்த்தவர் சூழ வலங்கொண்டு முன்பு மேவுவார் தம்மெதிர் விளங்க,
நித்தனர் தில்லை மன்றுள் நின்றுடல் நீடிய கோலம்நேர் காட்டக்,
கைத்தலங் குவித்துக் கண்கள் ஆனந்தக் கலுழிநீர் பொழி தரக் கண்டார்.

அந்த திருவுடைய கோயில் அணைந்து முன்னைத் தம்மை ஆண்டருளிய பெருமானது கோயில் முன்பு சேர்ந்து உண்மை நின்ற தபோதனர் கூட்டம் சூழ்ந்திட வலங்கொண்டு வந்து எம்பிரான் திருமுன்பு சென்றிடும் அவரது எதிராக விளக்க முற நித்தியப்பொருளாய ஈசன் தில்லையில் நிறைந்து நின்று ஆடிடும் நீடிய கோலத்தை நேராக இவர்தரிசிக்கும் படி காட்டிடக் கண்டருளி தம் கைத்தலங்களை உச்சி மீது குவித்து கண்கள் ஆற்றப்பெறுகின்ற நீர் சொரிந்திடக் கண்டருளினார். 89

கார்ண்டலுந்தொழுது வீழ்ந்துடன் எழுந்துகரையில்அன் பென்பினைஉருக்கப்
பூண்டஐம் புலனில்புலப்படாஇன்பம்புணர்ந்துமெய்யுணர்வினில்பொங்கத்,
தாண்டவம் புரியுந் தம்பிரா னுரைத் தலைப்படக்கிடைத்த பின் சைவ,
ஆண்டகை யாருக் கடுத்தஅந் நிலைமை விளைவையார் அளவறிந்துரைப்பார்.

காண்டலும் தொழுது வீழ்ந்து உடன் எழுந்து கரையிலாது எழும் அன்பு என் பினையும் உருக்கிட; தம்மிடத்துக் கொண்ட ஐந்து புலன்களுக்கும் புலப்படாத இன்பத்தை அடைந்த இன்பம் உண்மை உணர்வினில் பொங்கிட; நடமாடுகின்ற கடவுளைத் தலைப்படும் படி அப்பேறு கிடைத்த பின் சைவ ஆண்டகை யாராய எம் சுந்தர மூர்த்தி சுவாமிகட்கு அடுத்து நேர்ந்து கொண்ட அருளின் பேற்றையும் அந்த நிலமையை ஆர் அளவறிந்து உரைப்பார்கள் 90

அந்நிலை நிகழ்ந்த ஆரருள் பெற்ற அன்பனார் இன்ப வெள்ளத்து,
மன்னிய பாடல்மகிழ்ந்துடன் பரவி வளம்பதி அதனிடை மருவிப்,
பொன்மணி மன்றுள் எடுத்தசேவடி யார் புரிநடங் கும்பிடப் பெற்றுள்,
என்இனிப்புறம்போய் எய்துவ தென்று மீண்டெழுந் தருளுதற்கெழுவார்.

அவ்வாறுக மறவா நினையா அளவிலா மாறுத இன்பநிலை நிகழ்ந்த ஆரருள் பெற்ற என் அன்பனார் சுந்தர மூர்த்தி சுவாமிகள் தமது இன்ப வெள்ளத்து மலர்ந்த பாடல் மகிழ்ந்து உடன் போற்றி, வளம் சிறந்த அப்பதியினிடை பொருந்தி பொன் மணியாய அடைதற்கரிய கனகசபையில் எடுத்து நின்றருடிய திருவடி கும் பிடப்பேற்றுள் என்ன இனி நான் புறம்பு சென்றுபோற்றுவது என்று திரும்பி மீண்டு எழுந்தருளிச் செல்வதற்கு எழுந்து கொள்வார். 91

ஆயிடை நீங்கி அருளினற் செல்வார் அருவரைச் சுரங்ஙளும் பிறவும்,
பாயுநீர் நதியும் பலபலகடந்து பரமர்தம் பதிபல பணிந்து,
மேயவண் டமிழால் விருப்பொடும் பரவி வெஞ்சமாக் கூடலும் பணிந்து,
சேயிடை கழியப் போந்துவந் தடைந்தார் தென்றிசைக் கற்குடி மலையில்.

அவ்வாறுக அந்த இடத்தை நீங்கி அருளினுல் சென்றிடும் எம் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அரிய மலைச்சுரங்களும் பிறவும் பாயும் நீருடைய ஆறும் பலபல கடந்து எம் பெருமானுடைய பதிகள் பல பணிந்து பொருந்திய வண் தமிழால் விருப்பி னுடன் போற்றி திருவெஞ்சமாக் கூடல் என்னும் தலமும் பணிந்து மிக தூரதேச ம் கழிந்திடச் சென்று வணங்கி வந்து சேர்கின்றூர் தென்திசையில் உள்ள திருக் கற்குடிமலையில். 92

திருவெஞ்சமாக் கூடல் என்னும் தலத்து அவர் பாடிய பதிகம் இதுவாகும்

திருவெஞ்சமாக்கூடல்

பண்–கொல்லிக்கௌவாணம்

திருச்சிற்றம்பலம்

எறிக்குங் கதிர்வே லுதிர்மூத் தமொடே லம்இல வங்கந் தக்கோலம் இஞ்சி
செறிக்கும் புனலுட் பெய்துகொண்டுமண்டித் திளைத்தெற்றுசிற்ருறதன்கீழ்க்கரைமேல்
முறிக்குந் தழைமா முடப்புன்னை ஞாழல் குருக்கத் திகள்மேற் குயில்கூ வலரு
வெறிக்குங் கலிமா வெஞ்சமாக் கூடல் விகிர்தா அடியே னேயும்வேண் டுதியே. 1

குளங்கள் பலவுங் குழியுந் நிறையக் குடமா மணிசந் தனமும் அகிலும்
துளங்கும் புனலுட் பெய்துகொண்டுமண்டித் திளைத்தெற்று சிற்ருறதன் கீழ்க்கரைமேல்
வளங்கொள் மதில்மா ளிகைகோ புரமும் மணிமண் டபமும் இவைமஞ்சு தன்னுள்
விளங்கும் மதிதோய் வெஞ்சமாக்கூடல் விகிர்தா அடியேனேயும் வேண்டுதியே. 2

வரைமான் அனையார்மயிற்சாயல் நல்லார் வடிவேற்கண் நல்லார்பலர்வந் திறைஞ்சக்
திரையார்புனலுட் பெய்துகொண்டு மண்டித் திளைத்தெற்று சிற்ருறதன்கீழ்க்கரைமேல்
நிரையார் கமுகுந் நெடுந்தாள் தெங்கும் குறுங்காட் பலவும் விரவிக் குளிரும்
விரையார் பொழில்சூழ் வெஞ்சமாக் கூடல் விகிர்தா அடியேனேயும் வேண்டுதியே. 3

பண்ணேர் மொழியாளை யொர்பங் குடையாய் படுகாட்டகத்தென்றும் ஓர்பற்
றெழியாய்
தண்ணுர் அகிலுந் நலசா மரையும் அலைத்தெற்று சிற்ருறதன்கீழ்க் கரைமேல்
மண்ணுர் முழவுங் குழலும் இயம்ப மடவார் நடமா டுமணி யரங்கில்
விண்ணுர் மதிதோய் வெஞ்சமாக் கூடல் விகிர்தா அடியேனேயும் வேண்டுதியே. 4

துளைவெண் குழையுஞ் சுருள்வெண் தோடும் தூங்குங் காதில் துளங்கும் படியாய்
கனையே கமழும் மலர்க்கொன் றையினுய் கலர்ந்தார்க் கருள்செய் திடுங் கற்பகமே
பிளைவெண் பிறையாய் பிறங்குஞ் சடையாய் பிறவாதவனே பெறுதற் கரியாய்
வெளைமால் விடையாய் வெஞ்சமாக் கூடல் விகிர்தா அடியேனேயும் வேண்டுதியே. 5

தொழுவர்க் கெளியாய் துயர்தீர நின்ருய் சுரும்பார் மலர்க்கொன் றைதுன்னுஞ்
உழுவார்க் கரிய விடையேறி ஒன்னுர் புரந்தீவழ ஓடுவித்தாய் அழகார் [சடையாய்
முழவார் ஒலிபா டலொடா டல்அரு முதுகா டரங்கா நடமாட வல்லாய்
விழவார் மறுகில் வெஞ்சமாக் கூடல் விகிர்தா அடியேனேயும் வேண்டுதியே. 6

கடமா களியா னைஉரித் தவனே கரிகா டிடமா அனல்வீசி நின்று
நடமா டவல்லாய் நரையே றுகந்தாய் நல்லாய் நறுங்கொன்றை நயந்தவனே
படம்ஆ யிரமாப் பருந்துத் திப்பைங்கண் பருவா யெயிற்ருே டழலே உமிழும்
விடவார் அரவா வெஞ்சமாக் கூடல் விகிர்தா அடியே னேயும்வேண் டுதியே. 7

காடும் மலையுந் நாடும் மிடறிக் கதிர்மா மணிசந் தனமும் அகிலும்
சேடன் னுறையும் மிடந்தான் விரும்பித் திளைத்தெற்று சிற்ருறதன்கீழ்க் கரைமேல்
பாடல் முழவுங் குழலும் மியம்பப் பணைத்தோ ளியர்பாடலொடா டல்அரு
வேடர் விரும்பும் வெஞ்சமாக் கூடல் விகிர்தா அடியேனேயும் வேண்டுதியே. 8

கொங்கார் மலர்கொன் றையந்தா ரவனே கொடுகொட்டியோர் வீணைஉடை யவனே
பொங்கா டரவம் புனலுஞ் சடைமேற் பொதியும் புனிதா புனஞ்சூழ்ந் தழகார்
துங்கார் புலனுட் பெய்துகொண்டு மண்டித் திளைத்தெற்று சிற்ருறதன்கீழ்க் கரைமேல்
வெங்கார் வயல்சூழ் வெஞ்சமாக்கூடல் விகிர்தா அடியேனேயும் வேண்டுதியே. 9

வஞ்சிநுண் ணிடையார் மயிற்சாயலன்னுர் வடிவேற் கண்நல்லார் பலர்வந்திறைஞ்சும்
வெஞ்சமாக் கூடல் விகிர்தா அடியேனேயும் வேண்டுதியே என்றுதான் விரும்பி
வஞ்சியா தளிக்கும் வயல்நா வலர்கோன் வனப்பகையப்பன்வன்றெண்டன் சொன்ன
செஞ்சொல் தமழ்மாலைகள்பத்தும் வல்லார்சிவலோகத் திருப்பதுதிண்ணமன்றே. 10

திருச்சிற்றம்பலம்

வீடு தரும்இக் கற்குடியில் விழுமி யாரைப் பணிந் திறைஞ்சி,
நீடு விருப்பில் திருப்பதிகம் நிறைந்த சிந்தை யுடன் பாடிப்,
பாடும் விருப்பில் தொண்டருடன் பதிகள் பலவும் அணைந்திறைஞ்சித்,
தேடும் இருவர் காண்பரியார் திருவா றைமேற் றளிசென் றணைந்தார்.

முத்திதரும் கற்குடி மலையில் நினைத்திடற்கு மிகு இனிமையுடைய எம்பெரு மான் சிவனைப் பணிந்து போற்றி நீடித்த விருப்பில் திருப்பதிகம் நிறைந்த சிந் தையுடன் பாடியருளி இன்னமும் எம் பெருமானைப் பாடும் விருப்பில் அடியார் களுடன் பலபதிகளும் சென்று வணங்கி; தேடுகின்ற பிரமன் திருமால் இருவர்க் கும் காண்டற் கரிய கடவுளின் திருவாறை மேற்றளி என்னும் தலத்தைச் சென்று சேர்ந்தார் எம் சுந்தரமூர்த்தி சுவாமிகள். 93

திருக்கற்குடி மலையில் அவர் பாடியபதிகம் இதுவாகும்.

திருக்கற்குடி

பன் – நட்டராகம்

திருச்சிற்லம்பலம்

விடையாருங்கொடியாய் வெறியார் மலர்க்கொன்றையினுய்
படையார் வெண்மழுவா பரமாய பரம்பரனே
கடியார் பூம்பொழில்சூழ் திருக்கற்குடி மன்னிநின்ற
அடிகேள் எம்பெருமான் அடியேனேயும் அஞ்சலென்னே. 1

மறையோர் வானவரும் தொழுதேத்தி வணங்கிநின்ற
இறைவா எம்பெருமான் எனக்கின்னமு தாயவனே
கறையார் சோலைகள்சூழ் திருக்கற்குடி மன்னிநின்ற
அறவா அங்கணனே அடியேனேயும் அஞ்சலென்னே. 2

சிலையால் முப்புரங்கள் பொடியாகச் சிதைத்தவனே
மலைமேல் மாமருந்தே மடமாதிடங் கொண்டவனே
கலைசேர் கையின்னே திருக்கற்குடி மன்னிநின்ற
அலைசேர் செஞ்சடையாய் அடியேனேயும் அஞ்சலென்னே. 3

செய்யார் மேனியனே திருநீல மிடற்றினனே
மையார் கண்ணிபங்கா மதயானை உரித்தவனே
கையார் சூலத்தினுய் திருக்கற்குடி மன்னிநின்ற
ஐயா-எம்பெருமான் அடியேனேயும் அஞ்சலென்னே. 4

சந்தார் வெண்குழையாய் சரிகோவண ஆடையனே
பந்தா ரும்விரலாள் ஒருபாகம் அமர்ந்தவனே
கந்தார் சோலைகள்சூழ் திருக்கற்குடி மன்னிநின்ற
எந்தாய் எம்பெருமான் அடியேனேயும் ஏன்றுகொள்ளே(5

அரையார் கிளொடுகோ வணமும்மர வும்மசைத்து
விரையார் கொன்றையுடன் விளங்கும்பிறை மேலுடையாய்
கரையா ரும்வயல்சூழ் திருக்கற்குடி மன்னிநின்ற
அரையா எம்பெருமான் அடியேனையும் அஞ்சலென்னே. 6

பாரார் விண்ணவரும் பரவிப்பணிந் தேத்தநின்ற
சீரார் மேனியனே திகழ்நீல மிடற்றினனே
காரார் பூம்பொழில்சூழ் திருக்கற்குடி மன்னிநின்ற
ஆரா இன்னமுதே அடியேனையும் அஞ்சலென்னே. 7

நிலனே நீர்வளிதீ நெடுவானகம் ஆகிநின்ற
புலனே புண்டரிகத் தயன்மாலவன் போற்றிசெய்யும்
கனலே கற்பகமே திருக்கற்குடி மன்னிநின்ற
அனல்சேர் கையினனே அடியேனையும் அஞ்சலென்னே. 8

வருங்கா லன்உயிரை மடியத்திரு மெல்விரலால்
பெரும்பா லன்றனக்காய்ப் பிரிவித்த பெருந்தகையே
கரும்பா ரும்வயல்சூழ் திருக்கற்குடி மன்னிநின்ற
விரும்பா எம்பெருமான் அடியேனையும் வேண்டுதியே. 9

அலையார் தண்புனல்சூழ்ந் தழகாகி விழவமரும்
கலையார் மாதவர்சேர் திருக்கற்குடிக் கற்பகத்தை
சிலையார் வாள்நுதலாள் நல்லசிங்கடி யப்பன்உரை
விலையார் மாலைவல்லார் வியன்மூவுல காள்பவரே. 10

திருச்சிற்றம்பலம்

செம்பொன் மேருச் சிலைவளைத்த சிவனார் ஆறை மேற் றளியில்,
நம்பர் பாதம் பணிந்திறைஞ்சி நாளும் மகிழ்வார்க் கருள் கூட,
உம்பர் போற்றுந் தானங்கள் பலவும் பணிந்து போந்தணைவார்,
இம்பர் வாழ இன்னம்பர் நகரைச் சேர எய்தினார்.

செம்பொன்னை மேருமலையை வில்லாக வளைத்த சிவபெருமான் உறையும் திருஆறை மேற்றளி என்னும் தலத்தில் எம்பெருமானுடைய பாதம் பணிந்து வணங்கி நாளும் மகிழ்கின்ற சுந்தர மூர்த்தி சுவாமிகட்கு திருவருள் கூடிட; அப்பாலும் சென்று தேவர்கள் போற்றும் இன்னமும் வேறுள்ள கோயில்கள் எல்லாம் சென்று பணிந்து போய் வந்தணைவார்; இவ்வுலகும் வாழ திரு இன்னம்பர் என்னும் நகரைச் சேரும் படி சென்றடைந்தார். 94

ஏரின் மருவும் இன்னம்பர் மகிழ்ந்த ஈசர்கழல்வணங்கி,
ஆரும் அன்பிற் பணிந்தேத்தி ஆரா அருளால் அங்கமர் வார்,
போரின் மலியுங் கரியுரித்தார் மருவும் புறம்ப யம் போற்றச்,
சேரும் உள்ளம் மிக்கெழுமெய்ப் பதிகம் பாடிச் செல்கின்றார்.

அழகால் சிறந்துற்ற திருஇன்னம்பர் என்னும் தலத்தில் மகிழ்ந்தருளி இருக்கும் கடவுள் திருவடி பணிந்து உள்ளம் ஆர்ந்து நிறையும் அன்பினுல் போற்றி செய்து தவிராத அருளின் பெருக்கால் இன்புற்று அங்கு அமரும் எம்பிரான் சுந்தரமூர்த்திசுவாமிகள் போரினுல் மிகுவிருப்பங்கொண்டு திரியும் கயாசுரன் என்னும் யானையை உரித்த கடவுள் சிவன் வீற்றிருக்கும் திருப்புறம்பயம் என்னும் தலத்தைச் சென்று போற்றிடப் பொருந்திய உள்ளம் மிகவும் வேட்கைகொள்ள அங்கு செல்பவர்; செல்லும்போது திருப்பதிகம் பாடியே செல்கின்றார். 95

அங்கம் ஓதியோர் ஆறை மேற்றளி என்றெடுத் தமர் காதலில்,
பொங்கு செந்தமிழால் விரும்பு புறம்ப யந்தொழுப் போதும் என்,
றெங்கும் மன்னிய இன்னி சைப்பதி கம்புனைந்துடன் எய்தினார்,
திங்கள் சூடிய செல்வர் மேவு திருப்பு றம்பயஞ் சேரவே.

''அங்கம் ஓதி ஓர் ஆறைமேற்றளி'' எனப்பாட எடுத்துக்கொண்டு எம்பிரானிடமே பொருந்திய காதலில் பொங்கி எழும் செந்தமிழால் தாம் விரும்பிய ''புறம்பயம் தொழப்போவோம்'' என்று எங்கும் பரவிய இன்னிசை உடைய தேவாரப் பதிகம்பாடி உடனே வந்துசேர்ந்தார் சுந்தரமூர்த்திசுவாமிகள் திருப்புறம்புயம் என்னும் கோவிலைச் சேரும்படியாக.

அவர் திருப்புறம்பயம் சேரப் பாடிவந்தருளிய பதிகம் இதுவாகும். 96

திருப்புறம்பயம்

பண் – கொல்லி

திருச்சிற்றம்பலம்

அங்கம்ஓ திஓர் ஆறைமேற்றளி நின்றும்போந்துவந் தின்னம்பர்த்
தங்கினேமையும் இன்னதென்றிலர் ஈசனூர்எழு நெஞ்சமே
கங்குல்ஏமங்கள் கொண்டு தேவர்கள் ஏத்திவானவர் தாந்தொழும்
பொங்குமால்விடை ஏறிசெல்வப் புறம்புயந் தொழப் போதுமே. 1

பதியுஞ்சுற்றமும் பெற்ற மக்களும் பண்டையாரலர் பெண்டிரும்
நிதியிலிம்மனே வாழும் வாழ்க்கையும் நினைப்பொழிமட நெஞ்சமே
மதியஞ்சேர்சடைக் கங்கையாளிடம் மகிழும் மல்லிகை செண்பகம்
புதியபூமலர்ந் தெல்லிநாறும் புறம்பயந்தொழப் போதுமே 2

புறந்திரைந்து நரம்பெழுந்து நரைத்து நீயுரை யால்தளர்ந்
தறம்புரிந்து நினைப்பதாண்மை அரிதுகாண்இஃ தறிதியேல்
திறம்பியாதெழு நெஞ்சமேசிறு காலைநாமுறு வாணிபம்
புறம்பயத்துறை பூதநாதன் புறம்பயந்தொழப் போதுமே: 3

குற்றமுருவரைக் கூறைகொண்டு கொலைகள்சூழ்ந்த களவெலாம்
செற்றமுருவரைச் செய்த தீமைகள் இம்மையே வருந் தின்னமே
மற்றமுருவரைப் பற்றிலேன்மற வாதெழுமட நெஞ்சமே
புற்றரவுடைப் பெற்றம்ஏறி புறம்பயந்தொழப் போதுமே. 4

கள்ளிநீசெய்த தீமை உள்ளன பாவமும்பறை யும்படி
தெள்ளிதாஎழு நெஞ்சமே செங்கண் சேவுடைச்சிவ லோகனூர்
துள்ளிவெள்ளிள வாளைபாய்வயல் தோன்றுதாமரைப் பூக்கள்மேல்
புள்ளிநள்ளிகள் பள்ளி கொள்ளும் புறம்பயந்தொழப் போதுமே: 5

படையெலாம்பக டார ஆளிலும் பௌவஞ்சூழ்ந்தர சாளிலும்
கடையெலாம் பிணைத் தேரைவால்கவ லாதெழுமட நெஞ்சமே
மடையெலாங்கழு நீர்மலர்ந்து மருங்கெலாங்கரும் பாடத்தேன்
புடையெலாம்மணம் நாறுசோலைப் புறம்பயந்தொழப் போதுமே, 6

முன்னைச்செய்வினை இம்மையில்வந்து மூடும்ஆதலின் முன்னமே
என்னை நீதியக் காதெழுமட நெஞ்சமேஎந்தை தந்தையூர்
அன்னச்சேவலோ டுடிப்பேடைகள் கூடிச்சேரு மணிபொழில்
புன்னைக்கன்னி கழிக்கணுறும் புறம்பயந்தொழப் போதுமே: 7

மலமெலாம் அறும்இம்மையேமறு மைக்கும்வல்வினை சார்கிலா
சலமெலாம்ஒழி நெஞ்சமேஎங்கள் சங்கரன்வந்து தங்கும்ஊர்
கலமெலாங்கடல் மண்டுகாவிரி நங்கைஆடிய கங்கைநீர்
புலமெலாம்மண்டிப் பொன்விளைக்கும் புறம்பயந்தொழப் போதுமே: 8

பண்டரியன செய்ததீமையும் பாவமும்பறை யும்படி
கண்டரியன கேட்டியேற்கவ லாதெழுமட நெஞ்சமே
தொண்டரியன பாடித்துள்ளிநின் முடிவானவர் தாந்தொழும்
புண்டரீக மலரும் பொய்கைப் புறம்பயந்தொழப் போதுமே. 9

துஞ்சியும்பிறந் துஞ்சிறந்துந் துயக்கறுத மயக்கிலை
அஞ்சிஹரன் திருப்புறம்பயத் தப்பனேத்தமிழ்ச் சீரினல்
நெஞ்சினுலே புறம்பயந்தொழு துய்தும்என்று நினைத்தன
வஞ்சியாதுரை செய்யவல்லவர் வல்லவானுல காள்வரே: 10

திருச்சிற்றம்பலம்

அப்ப திக்கண் அமர்ந்த தொண்டரும் அன்றுவெண் ணெய்நல் லூரினில்)
ஒப்ப ருந்தனி வேதி யன்பழ ஓலை காட்டி நின் முண்டவர்,
இப்ப திக்கண்வந் தெய்த என்ன தவங்கள் என்றெதிர் கொள்ளவே,
முப்பு ரங்கள் எரித்த சேவகர் கோயில் வாயிலின் முன்னினுர்.

திருப்புறம்பயம் என்னும் அத்தலத்தில் வாழும் தொண்டரும் இவர் வருகை அறிந்து 'அன்று திருவெண்ணெய்நல்லூரினில் அமர்ந்த பிறர் ஒப்பில்லாத தனி அந்தணனுய சிவபெருமான் பழமையான ஓலை ஒன்றினைக்காட்டி ஆண்டுகொள்ளப் பெற்ற போருளாளராய சுந்தரமூர்த்திசுவாமிகள் இந்த தலத்திடையாக வந்து சேர்ந்திட என்ன தவங்கள் நாம் செய்தனம்'' எனப் போற்றிச்சென்று அவரை எதிர்கொண்டிடலும் அவருடன்கூடி மூன்றுபுரங்களையும் எரிசெய்த சிவமூர்த்தி அமர்ந்த அக்கோயிலின் திருவாயிலைச்சென்று சேர்ந்தார் சுந்தரமூர்த்திசுவாமிகள். 97

நீடு கோபுர முன்பி றைஞ்சி நிலாவு தொண்டரொ டுள்ளணைந்,
தாடல் மேவிய அண்ணலாரடி போற்றி அஞ்சலி கோலிநின்(று),
ஏடு லாமலர் தூவி எட்டிஞை டைந்து மாகும் உறுப்பினுல்,
பீடு நீடு நிலத்தின் மேற்பெரு கப்பணிந்து வணங்கினுர்.

அக்கோயிலின் நீண்ட கோபுரத்தின் முன்பாக வணங்கி தம்முடன்கூடிய அடியாருடன் உள்ளாகச்சென்று அங்கு உலகெலாம் உய்ய நடமாடும் பெருமான் திருவடி வணங்கி கைகள்கூப்பிநின்று வாசனையுடைய இதழ்விரிந்த மலர்தூவி எட்டுடன் ஐந்துமாகும் அங்கம் பெருமை நீடிய நிலமிசைப் பொருந்த பலமுறை பெருகப் பணிந்து வணங்கினுர் சுந்தரமூர்த்திசுவாமிகள். (98)

அங்கு நீடருள் பெற்றுள் ஆர்வம் மிகப்பொழிந் தெழும் அன்பினுல்,
பொங்கு நாண்மலர்ப்பாத முன்பணிந் தேத்தி மீண்டு புறத்தணைந்(து)
எங்கு மாகி நிறைந்து நின்றவர் தாமகிழ்ந்த இடங்களில்,
தங்கு கோலம் இறைஞ்சு வார் அருள் தாவில் அன்பரோ டெய்தினுர்.

அங்கு நீடித்த அருள்பெற்று உள்ளே ஆர்வம் மிகப்பொழிந்து எழுகின்ற அன்பினுல் பொங்கி மலர்ந்திடும் பூப்போன்ற திருப்பாதம் முன்பாகப் பணிந்துபோற்றி மீண்டு வெளியேவந்து எங்குமாகி நிறைந்துநின்ற பெருமான் மகிழ்ந்து உறைகின்ற கோயில்களில் ஆங்காங்கு அவர்தங்கிய கேரலம் பணிந்திடுவாராகி அருள்நிறைந்த குறைவிலாத அன்பருடன் அத்தலங்கள் எல்லாம் சென்றூர் எம்பெருமான் சுந்தரமூர்த்திசுவாமிகள். (99)

வேறு

வம்புநீ டலங்கல் மார்பின் வன்றொண்டர் வன்னி கொன்றை,
தும்பைவெள் ளடம்பு திங்கள் தூயநீ ரணிந்த சென்னித்,
தம்பிரான் அமர்ந்த தானம் பலபல சார்ந்து தாழ்ந்து,
கொம்பனூர் ஆடல் நீடு கூடலை யாற்றூர் சார.

வாசனை நீடித்த பூமாலை அணிந்த மார்புடைய சுந்தரமூர்த்திசுவாமிகள் வன்னி கொன்றை தும்பை வெள்ளெருக்கு இளம்பிறை தூய கங்கைநீர் அணித்த சடைமுடியுடைய கடவுள்பெருமான் அமர்ந்த கோயில்கள் பலப்பல வணங்கிப் பூங்கொடியின் வனப்புடைய பெண்கள் நடமாடல் நீடித்த கூடலையாற்றூரைச் சேர்ந்திடலும். (100)

செப்பரும் பதியில் சேரார் திருமுது குன்றை நோக்கி
ஒப்பரும் புகழார் செல்லும் ஒருவழி உமையா ளோடு
மெய்ப்பரம் பொருளாய் உள்ளார் வேதிய ராகி நின்றூர்
முப்புரி நூலுந் தாங்கி நம்பியா ரூரர் முன்பு.

ஆனல் அந்த சொல்லற்கரிய பெருமையுடைய திருக்கூடலையாற்றூரில் சேரா ராகி திருமுதுகுன்றம் என்னும் தலத்தை நோக்கி பிறிது நிகரிலாத புகழுடைய சுந்தரமூர்த்திசுவாமிகள் செல்லலுய; அதுவேனே ஒருவழியாக உமையம்மையாரோடு தான் ஒருவனுகி உண்மையாம் பரம்பொருளாய் நின்ற சிவன் தாம் ஓர் அந்தணனுய் வடிவுகொண்டு முப்புரியாய பூணூலும் அணிந்து அவ்வழி நின்றூர். (101)

நின்றவர் தம்மை நோக்கி நெகிழ்ந்தநிந் தையராய்த் தாழ்வார்,
இன்றியாம் முதுகுன்றெய்த வழிஎமக் கியம்பும் என்னக்,
குன்றவில் லாளி யாரும் கூடலை யாற்றூர் ஏறச்,
சென்றதிவ் வழிதான் என்று செல்வழித் துணை யாய்ச் செல்ல.

அவ்வழிநின்ற அந்தணர்பெருமானை எம் சுந்தரமூர்த்திசுவாமிகள் நோக்கி நெகிழ்ந்த சிந்தையுடையராகி தாழ்ந்துவணங்கி இன்று யாம் திருமுதுகுன்றம் என்னும் கோயில்சேர வழி எதுவாகும் என்று சொல்லும் என்னலும் அதுபோது மேருமலையை வில்லாக உடையபெருமானும் சுந்தரரை நோக்கி கூடலை ஆற்றூர் சேரப்போகின்ற இந்தவழியேதான் என்று கூறியருளித் சுந்தரமூர்த்தி செல்வழிலும் யாக தாமும் அவர்க்கு வழித்துணையாகச் சென்றிடலும். (102)

கண்டவர் கைகள் கூப்பித் தொழுதுபின் தொடர்வார்க் காணுர்,
வண்டலர் கொன்றை யாரை வடிவுடை மழு என்றேத்தி,
அண்டர்தம் பெருமான் போந்த அதிசயம் அறியேன் என்று,
கொண்டெழும் விருப்பி னேடுங் கூடலை யாற்றூர் புக்கார்.

அத்தணனுய எம்பிரான் முன்னுக வழி இதுதான் எனக் காண்பித்து முன்போகக் கண்டு கைகள்கூப்பித் தொழுது பின்னுகச் செல்பவர் முன்போன அந்தணரைக் காணுதவராகி வண்டுகள் அலரமொய்த்திடும் கொன்றைமலர் சூடிய கடவுளை உடன் நீனைந்து தொழுது; 'வடிவுடை மழு' எனத் தொடங்கிப் பாடிப்போற்றி தேவர்கள் பெருமான் சிவன் இவ்வழிபோந்த அதிசயம் நான் அறியேன் என அப்பதிகத்து மொழிந்து எம்பிரான்மீது கொண்டெழுகின்ற பெருவிருப்பத்துடன் திருக்கூடலையாற்றூர் என்னும் அக்கோயிலினிடை புகுந்துகொண்டார்.

அவர் அந்தணர் மறைந்ததுகண்டு உணர்ந்து தமது பெருமானே வழித்துணையாக வந்த அற்புததீதை உணரேன் எனப்பாடிய அப்பதிகம் இதுவாகும். 103)

திருக்கூடலையாற்றூர்

பண் – புறநீர்மை

திருச்சிற்றம்பலம்

வடிவுடை மழுவேந்தி மதகரி உரிபோர்த்துப்
பொடிஅணி திருமேனிப் புரிகுழல் உமையோடும்
கொடிஅணி நெடுமாடக் கூடலை யாற்றூரில்
அடிகள்இவ் வழிபோந்த அதிசயம் அறியேனே.

வையகம் முழுதுண்ட மாலொடு நான்முகனும்
பையர விளவல்குற் பாவையொ டும்முடனே
கொய்யணி மலர்ச்சோலைக் கூடலை யாற்றூரில்
ஐயனிவ் வழிபோந்த அதிசயம் அறியேனே. 1

ஊர்தொறும் வெண்டலைகொண் டுண்பலி இடுமென்று
வார்தரு மென்முலையாள் மங்கையொடு டும்முடனே
கூர்நுனை மழுவேந்திக் கூடலை யாற்றூரில்
ஆர்வன்இவ் வழிபோந்த அதிசயம் அறியேனே. 3

சந்தண வும்புனலுந் தாங்கிய தாழ்சடையன்
பந்தண வும்விரலாள் பாவையொ டும்முடனே
கொந்தண வும்பொழில்சூழ் கூடலை யாற்றூரில்
அந்தணன் வழிபோந்த அதிசயம் அறியேனே. 4

வேதியர் விண்ணவரும் மண்ணவ ரும்தொழுநற்
சோதிய துருவாகிச் சுரிகுழல் உமையோடும்
கோதிய வண்டறையுங் கூடலை யாற்றூரில்
ஆதிஇவ் வழிபோந்த அதிசயம் அறியேனே. 5

வித்தக வீணையொடும் வெண்புரி நூல்பூண்டு
முத்தன வெண்முறுவல் மங்கையொ டும்முடனே
கொத்தல ரும்பொழில்சூழ் கூடலை யாற்றூரில்
அத்தன்இவ் வழிபோந்த அதிசயம் அறியேனே. 9

மழைநுழை மதியமொடு வாளர வஞ்சடைமேல்
இழைநுழை துகில்அல்குல் ஏந்திழை யாளோடும்
குழையணி திகழ்சோலைக் கூடலை யாற்றூரில்
அழகன்இவ் வழிபோந்த அதிசயம் அறியேனே. 7

மறைமுதல் வானவரும் மாலயன் இந்திரனும்
பிறைநுதல் மங்கையொடும் பேய்க்கண முஞ்சூழக்
குறள்படை யதனேடுங் கூடலை யாற்றூரில்
அறவன்இவ் வழிபோந்த அதிசயம் அறியேனே. 8

வேலியின் நஞ்சுண்டு விடையது தான்ஏறிப்
பாலன மென்மொழியாள் பாவையொ டும்முடனே
கோலம துருவாகிக் கூடலை யாற்றூரில்
ஆலன்இவ் வழிபோந்த அதிசயம் அறியேனே. 9

கூடலை யாற்றூரிற் கொடியிடை யவளோடும்
ஆடலு கந்தானை அதிசயம் இதுவென்று
நாடிய இன்றமிழால் நாவல வூரன்சொல்
பாடல்கள் பத்தும்வல்லார் தம்வினை பற்றறுமே. 10

திருச்சிற்றம்பலம்

கூடலை யாற்றூர் மேவுங் கொன்றைவார் சடையி னர்தம்
பீடுயர் கோயில் புக்குப் பெருகிய ஆர்வம் பொங்க
ஆடகப் பொதுவில் ஆடும் அறைகழல் வணங்கிப் போற்றி
நீடருள் பெற்றுப் போந்து திருமுது குன்றில் நேர்ந்தார்.

திருக்கூடலையாற்றூர் என்னும் தலத்தைச் சேர்ந்திடும் கொன்றைமலர் விளங்கும் சடையுடைய பெருமானது பெருமைமிகுந்த கோயிலினைப் புகுந்து உள்ளத்துப் பெருகிய ஆர்வம் பொங்கிட பொன்னைய சிற்சபையில் ஆடிடும் அப்பனின் சிலம் பொலிக்கும் திருவடிகள் வணங்கிப்போற்றி நீடித்த அருள்பெற்றுப்போய் அப்பால் திருமுதுகுன்று என்னும் தலம்சென்று சேர்ந்தார் எம்பிரான் சுந்தரமூர்த்திசுவாமிகள். (104)

தடநிலைக் கோபு ரத்தைத் தாழ்ந்துமுன் இறைஞ்சிக் கோயில்,
புடைவலங் கொண்டு புக்குப் போற்றினர் தொழுது வீழ்ந்து,
நடநவில் வாரை நஞ்சியிடை எனுஞ் செஞ்சொன் மாலைத்,
தொடைநிகழ் பதிகம் பாடித் தொழுதுகை சுமந்து நின்று.

பெருத்த நிலையுடைய திருமுதுகுன்றம் என்னும் அத்தலத்துக் கோபுரத்தைத் தாழ்ந்து முன்இறைஞ்சி கோயிலைப் பக்கராக வலம்வந்து புகுந்து அப்பனே திருமுதுகுன்றுச் செல்வனைக் கண்டதுமே தொழுதுவீழ்ந்து எங்குமாக நடம்புரியும் கடவுளே ''நஞ்சியிடை'' எனத் தொடங்கி எழும் தேவாரப்பதிகம் பாடித் தொழுது தலைமேல் கைகூப்பித் தொழுதபடியே சுமந்து நின்று.

அவர் திருமுதுகுன்றின் கண்மணியைக் கண்டு பரவசமாகிப் பாடியருளிய பதிகம் இதுவாகும்: (105)

திருமுதுகுன்றம்
பண்-கொல்லிக் கௌவாணம்
திருச்சிற்றம்பலம்

நஞ்சி யிடையின்று நாளுளன் றும்மை நச்சுவார்
துஞ்சி யிட்டாற்பின் னுனச்செய்வ தென்னடி கேள்சொலீர்
பஞ்சி யிடைப்புட்டில் கீறு மோபணி யீர்அருள்
முஞ்சி யிடைச்சங்க மார்க்குஞ் சீர்முது குன்றரே. 1

ஏரிக் கனகக் கமல மலர் அன்ன சேவடி
ஊரித் தனையுந் திரிந்தக் காலவை நோங்கொலோ
வாரிக் கட்சென்று வளைக்கப் பட்டு வருந்திப்போய்
மூரிக் களிறு முழக்க ருமுது குன்றரே. 2

தொண்டர்கள் பாட விண்ணோர்கள் ஏத்த உழிதர்வீர்
பண்டகந் தோறும் பலிக்குச் செல்வதும் பான்மையே
கண்டகர் வாளிகள் வில்லி கள்புறங் காக்குஞ்சீர்
மொண்டகை வேல்வி முழக்க ருமுது குன்றரே 3

இளைப்பறி யீர்இம்மை ஏத்துவார்க் கம்மை செய்வதென்
விளைப்பறி யாதவெங் கால னுயிர் வீட்டினீர்
அளைப்பிரி யாஅர வல்கு லாளொடு கங்கைசேர்
முளைப்பி றைச்சென் னிச்சடை முடிமுது குன்றரே. 4

ஆடி அசைந்தடி யாரும் நீரும் அகந்தொறும்
பாடிப் படைத்த பொருள்எ லாம்உமை யாளுக்கோ
மாட மதிலணி கோபு ரம்மணி மண்டபம்
மூடி முகில்தவழ் சோலை சூழ்முது குன்றரே. 5

இழைவளர் நுண்ணிடை மங்கை யோடிடு காட்டிடைக்
குழைவளர் காதுகள் மோத நின்று குனிப்பதே
மழைவள ருந்நெடுங் கோட்டி டைமத யானைகள்
முழைவளர் ஆளி முழக்க முமுது குன்றரே. 6

சென்றி லிடைச்செடி நாய்கு ரைக்கச் சேடிச்சிகள்
மன்றி லிடைப்பலி தேரப் போவது வாழ்க்கையே
குன்றி லிடைக்களி முளி கொள்ளக் குறத்திகள்
முன்றி லிடைப்பிடி கன்றி டும்முது குன்றரே. 7

அந்தி திரிந்தடி யாரும் நீரும் அகந்தொறும்
சந்திகள் தோறும் பலிச்சுச் செல்வது தக்கதே
மந்தி கடுவனுக் குண்பழம் நாடி மலைப்புறம்
முந்தி அடிதொழ நின்ற சீர்முது குன்றரே. 8

செட்டிநின் காதலி ஊர்கள் தோறும் அறஞ்செய
அட்டு மின்சில் பலிக்கென் றகங்கடை நிற்பதே
பட்டிவெள் ளேறுகந் தேறு வீர்பரி சென்கொலோ
முட்டி அடிதொழ நின்ற சீர்முது குன்றரே. 9

எத்திசை யுந்திரிந் தேற்றக் காற்பிறர் என்சொலார்
பத்தியி னுல்இடு வாரி டைப்பலி கொள்மினே
எத்திசை யுந்திரை ஏற மோதிக் கரைகள்மேல்
முத்திமுத் தாறு வலஞ்செயும்முது குன்றரே. 10

முத்திமுத் தாறு வலஞ்செ யும்முது குன்றரைப்
பித்தனெப் பான்அடித் தொண்ட னூரன் பிதற்றிவை
தத்துவ ஞானிகள் ஆயி னுர்தடு மாற்றிலார்
எத்தவத் தோர்களும் ஏத்து வார்க்கிடர் இல்லையே. 11

திருச்சிற்றம்பலம்

நாதர்பால் பொருள்தாம் வேண்டி நண்ணியவண்ணம் எல்லாம்,
கோதறு மனத்துட் கொண்ட குறிப்பொடும் பரவும்போது,
தாதவிழ் கொன்றை வேய்ந்தார் தர அருள் பெறுவார்சைவ,
வேதியர் தலைவர் மீண்டும் மெய்யில் வெண் பொடி யும்பாட..

கைகள் கூப்பியபடியேநின்று தனது நாயகன்பால் பொருள்வேண்டி வந்தவண்ணம் எல்லாம் குற்றம்அற்ற தனது மனதிலே கொண்ட குறிப்போடும் வணங்கிடும் போது; மகரந்தப் பொடிபறக்கும் கொன்றைமலர் சூடிய பெருமான் பொருள்தர அருள்பெறுவாராய சைவ அந்தணர்களது தலைவர் எம் சுந்தரமூர்த்திசுவாமிகள் மீண்டும் திருமுதுகுன்றத்து அப்பனே ''மெய்யில் வெண்பொடி'' எனத் தொடங்கிப் பதிகம் பாடிடலும்;

அவர் பொருள்வேண்டி மீண்டும் பாடியருளும் திருப்பதிகம் இதுவாகும். (106)

பண் – தக்கேசி

திருச்சிற்றம்பலம்

மெய்யைமுற் றப்பொடிப் பூசியோர் நம்பி வேதம்நான் கும்விரி த்தோதியோர் நம்பி
கையில்ஓர் வெண்மழு ஏந்தியோர் நம்பி கண்ணு மூன்று முடை யாயொரு நம்பி
செய்ய நம்பிசிறு செஞ்சடை நம்பி திரிபுரந் தீயெழச் செற்றதோர் வில்லால்
எய்த நம்பிஎன்னை ஆளுடை நம்பி எழுபிறப் பும்எங்கள் நம்பிகண் டாயே. 1

திங்கள் நம்பிமுடி மேல்அடி யார்பாற் சிறந்த நம்பிபிறந் தஉயிர்க் கெல்லாம்
அங்கண் நம்பியருள் மால்விசும் பாளும அமரர் நம்பிகும ரன்முதல் தேவா
தங்கள் நம்பிதவத் துக்கொரு நம்பி தாதை என்றுன் சரண்பணிந் தேத்தும்
எங்கள் நம்பிஎன்னை ஆளுடை நம்பி எழுபிறப் பும்எங்கள் நம்பிகண் டாயே. 2

வருந்த அன்றுமத யானை உரித்த வழக்கு நம்பிமுழக் குங்கடல் நஞ்சம்
அருந்தும் நம்பிஅம ரர்க்கமு தீந்த அருளெ னம்பிபொரு ளாய்வரு நட்டம்
புரிந்த நம்பிபுரி நூலுடை நம்பி பொழுதும் விண்ணும்முழு தும்பல வாகி
இருந்த நம்பிஎன்னை ஆளுடை நம்பி எழுபிறப் பும்எங்கள் நம்பிகண் டாயே. 3

ஊறு நம்பிஅமு தாஉயிர்க் கெல்லாம் உரிய நம்பிதெரி யம்மறை அங்கம்
கூறு நம்பிமுனி வர்க்கருங் கூற்றைக் குமைத்த நம்பிகுமை யாப்புலன் ஐந்தும்
சீறு நம்பிதிரு வெள்ளடை நம்பி செங்கண்வெள் ளேச்செழுங் கோட்டெரு தென்றும்
ஏறு நம்பிஎன்னை ஆளுடை நம்பி எழுபிறப் பும்எங்கள் நம்பிகண் டாயே. 4

குற்ற நம்பிகுறு கார்எயில் மூன்றைக் குலைத்த நம்பிசிலை யாவரை கையில்
பற்று நம்பிபர மானந்த வெள்ளம் பணிக்கும் நம்பிஎனப் பாடுத லல்லால்
மற்று நம்பிஎனக் கென்செய வல்லேன் மதியி லேன்படு வெந்துயர் எல்லாம்
எற்று நம்பிஎன்னை ஆளுடை நம்பி எழுபிறப் பும்எங்கள் நம்பிகண் டாயே. 5

அரித்த நம்பிஅடி கைதொழு வார்நோய் ஆண்ட நம்பிமுன்னை ஈண்டுல கங்கள்
தெரித்த நம்பிஒரு சேவுடை நம்பி சிலபலிக் கென்றகந் தோறுமெய் வேடம்
தரித்த நம்பிசம யங்களின் நம்பி தக்கன்றன் வேள்விபுக் கன்றிமை யோரை
இரித்த நம்பிஎன்னை ஆளுடை நம்பி எழுபிறப் பும்எங்கள் நம்பிகண்டாயே. 6

பின்னை நம்பும்புயத் தான்நெடு மாலும் பிரமனும் என்றிவர் நாடியுங் காணு
உன்னை நம்பிஒரு வர்க்கெய்த லாமே உலகு நம்பிஉரை செய்யும தல்லால்
முன்னை நம்பிபின்னும் வார்சடை நம்பி முழுதிவை இத்தனை யுந்தொகுத் தாண்ட
தென்னை நம்பிஎம் பிரானுய நம்பி எழுபிறப் பும்எங்கள் நம்பிகண் டாயே. 7

சொல்லை நம்பிபொரு ளாய்நின்ற நம்பி தோற்றம் ஈறுமுத லாகிய நம்பி
வல்லை நம்பிஅடி யார்க்கருள் செய்ய வருந்தி நம்பிஉனக் காட்செய கில்லார்
அல்லல் நம்பி படுகின்றதென் நாடி அணங்கொரு பாகம்வைத் தெண்கணம் போற்ற
இல்ல நம்பியிடு பிச்சைகொள் நம்பி எழுபிறப் பும்எங்கள் நம்பிகண் டாயே. 8

காண்டு நம்பிகழற் சேவடி என்றும் கலந்துனைக் காதலித் தாட்செய்கிற் பாரை
வீண்டு நம்பியவர் முன்கதி சேர அருளும் நம்பிகுரு மாப்பிறை பாம்பைத்
தீண்டு நம்பிசென்னி யிற்கன்னி தங்கத் திருந்து நம்பிபொய்ச் சமண்பொரு ளாகி
ஈண்டு நம்பிஇமை யோர்தொழு நம்பி எழுபிறப் பும்எங்கள் நம்பிகண் டாயே. 9

கரக்கும் நம்பிகசி யாதவர் தம்மைக் கசிந்த வர்க்கிம்மையோ டம்மையில் இன்பம்
பெருக்கு நம்பிபெரு கக்கருத்தா.....
(இதன் மேல் இப்பாடல் கிடைத்திலது) 10

திருச்சிற்றம்பலம்

பனிமதிச் சடையார் தாமும் பன்னிரண்டாயி ரம்பொன்
னனியருள் கொடுக்கும் ஆற்ருல் நல்கிட உடைய நம்பி
தனிவரும் மகிழ்ச்சி பொங்கத் தாழ்தெழுந் தருகு சென்று
கனிவிடமிடற்றி னுர்முன் பின்னென்று கழற லுற்றூர்.

அதுவேளை அப்பாடலிற்காக குளிர்ந்த பிறையணிந்த சடைமுடியுடைய கடவுளும் அவர்க்குப் பன்னிரண்டாயிரம் பொன்னினை மிகவும் அருள் கொடுத்திடும் அத்தன்மையால் கொடுத்திடலும்; எம்மை ஆளுடைய அப்பன் சுந்தரமூர்த்திசுவாமிகளும் அதுகண்டு தனித்து தமது உள்ளத்துவரும் மகிழ்ச்சி பொங்கிட எம் பெருமானைத் தாழ்ந்து வணங்கி எழுந்து அருகாகச் அங்குசென்று கனிந்த நஞ்சை உண்டருளிய கண்டத்து கடவுள் முன்புநின்று பின்னுக இதுவொன்றும் சொல்ல லுற்றூர்.

(107)

அருளும்இக் கனக மெல்லாம் அடியனேற் காரூர் உள்ளோர்,
மருளுற வியப்ப அங்கே வரப்பெற வேண்டும் என்னத்,
தெருளுற எழுந்த வாக்கால் செழுமணி முத்தாற் றிட்டிப்,
பொருளினை முழுதும் ஆரூர்க் குளத்திற் போய்க் கொள்க என்றார்.

தேவரீர் எனக்குத் தந்தருளும் இப்பொன் எல்லாம் அடியேற்காக திருவாரூரில் உள்ளார் கண்டுமயங்கி அதிசயித்திடும்படியாக; அங்கு வரும்படி செய்தல்வேண்டுமென்று வேண்டிடலும், அப்போது அவர் தெளிவுகொள்ளும்படி எழுந்த திருவாக்கால் '' ஆரூரனே செழுமையான மணிமுத்தாற்றில் போட்டு இந்தப் பொருளினை எல்லாம் (முழுவதும்) திருவாரூர்க் குளத்தில் போய் எடுத்திடுவாய் '' என்னலும்; (108)

என்றுதம் பிரானார் நல்கும் இன்னருள் பெற்ற பின்னர்,
வன்றொண்டர் மச்சம் வெட்டிக் கைக்கொண்டு மணிமுத் தாற்றில்,
பொன்றிரள் எடுத்து நீருள் புகவிட்டுப் போது கின்றார்,
அன்றெனை வலிந்தாட் கொண்ட அருள் இதில் அறிவேன் என்று.

என்று தமது பெருமானார் கொடுத்திடும் இனிய அருளால் சிறந்த அசரீரி வாக்கியம் பெற்ற பின்பாக வன்றொண்டராம் எம் சுந்தரமூர்த்திசுவாமிகள் அது கேட்டு அதில் ஓர்மாதிரி அடையாளம் வெட்டி அதனைக் கையில்கொண்டு ஏனைய பொன்னின் திரளை அழகிய முத்தாற்றின் நீருள் சேருமாறு விடுத்து திருவாரூர் நோக்கிப் போகின்றார். '' அன்று என்னை தாமே வலியவந்து ஆண்டருளும் அருள் என்னிடம் இன்னமும் உண்டாமோ என்று இதில் அறிவேன் '' என மொழிந்தருளியவாறு. 109

மேவிய காதல் தொண்டு விரவுமெய் விருத்தி பெற்றார்,
ஆவியின் விருத்தி யான அந்தணர் புலியூர் மன்றில்,
காவியங் கண்டர் கூத்துக் கண்டுகும் பிடுவ தென்று,
வாவி சூழ் தில்லை மூதூர் வழிக்கொள்வான் வணங்கிப் போந்தார்.

எம்பிரான்பால் மேவிய காதலின் தொண்டுகொண்ட உண்மை விருத்திபெற்ற எம் சுந்தரமூர்த்திசுவாமிகள்; உடம்பின் விருத்தி நினையாது உயிரின் விருத்தியே நினையும் அந்தணர்கள் போற்றும் புலியூரெனும் சிதம்பரத்தில் கனகசபையில் நீல நிறமுடைய கண்டத்துக் கடவுளின் திருக்கூத்தை நான் கண்டு கும்பிடுவது இனியாக என்று, குளங்கள் சூழ்ந்த தில்லை என்னும் ஊரிற்கு வழிக்கொண்டிடும் நோக்கமாக திருமுதுகுன்றை வணங்கிப்போயினர். (110

மாடுள பதிகள் சென்று வணங்கிப்போய் மங்கை பாகர்
நீடிய கடம்பூர் பேற்றி நிறைந்த ஆனந்தக் கூத்தர்
ஆடிய தில்லை மூதூர்அணைந்தணி வாயில் புக்குப்
சேடுயர் மாடம் மன்னுஞ் செழுந்திரு வீதி சார்ந்தார்.

போகும் வழியில் பக்கராக உள்ள கோயில்கள் எல்லாம் சென்று வணங்கிப் போய்; பெண்ஒருபாகராய சிவபெருமான் நீடித்திருக்கும் திருக்கடம்பூர் என்னும் கோவிலைச் சென்று போற்றி அப்பால் சென்று; உள்ளம் நிறைந்த ஆநந்தம் தரும் கூத்துடைய பெருமான் ஆடியருளும் தில்லைச்சிதம்பரம் என்னும் முதிய ஊரை அணைந்து; அழகிய திருவாயிலின் ஊடாக உள்புகுந்து மிகமேல் உயர்ந்த மாடங்கள் விளங்கும் செழுமையாய திருவீதியைச் சேர்ந்தார் சுந்தரமூர்த்து சுவாமிகள். 111

பொற்றிரு வீதி தாழ்ந்து புண்ணிய விளாவாய் ஒங்கும்,
நற்றிரு வாயில் நண்ணி நறைமலி அலங்கல் மார்பர்,
மற்றதன் முன்புமண்மேல் வணங்கிஉட் புகுந்து பைம்பொற்,
சுற்றுபா ளிகைசூழ் வந்து தொழுதுகை தலைமேற் கொள்வார்.

பொன்மயமான திருவுடைய அவ்வீதியைத் தாழ்ந்து வணங்கி புண்ணியத்தின் விளாவாய் ஓங்கிய நல்ல திருவுடைய கோவிலின் வாய்தலை அடைந்து; வாசனை மலிந்த மாலை சூடும் மார்புடைய சுந்தரமூர்த்தி சுவாமிகள்; மற்று அந்த திருவாயிலின் முன்பாக மண்மேல் வணங்கி உள்ளே புகுந்து பசிய பொன்னால் சிறந்த சூழ உள்ள மாளிகைகளையும் வலமாகச் சூழ்ந்து வந்து தொழுத கையை தலைமேல் கொள்கின்றார். 112

ஆடிய திருமுன் பான அம்பொனின் கோபுரத்தின்
ஊடுபுக் கிறைஞ்சி ஓங்கும் ஒளிவளர் கனக மன்றில்
நாடகச் செய்ய தாளை நண்ணுற உள்நிறைந்து
நீடும் ஆனந்த வெள்ளக் கண்கள்நீர் நிரந்து பாய.

எம்பெருமான் ஆடியருளிய திருமுன்பான அழகிய பொன்னின் கோபுரத்தின் ஊடாக உள்புகுந்து வணங்கி; ஒளி ஓங்கிவளரும் கனகசபையில் நடனமாடும் எம்பெருமானுடைய செவ்விய திருவடிகளை சமீபமாக வந்தடைய உள்ளத்து நிறைந்து நீடஓங்கும் ஆநந்த வெள்ளமாக; கண்கள் நீரினை நிரந்து வெளியே பாய்ந்திட. 113

பரவுவாய் குளறிக் காதல் படிதிருப் படியைத் தாழ்ந்து
விரவுமெய் அங்கம் ஐந்தும் எட்டினும் வணங்கி வேட்கை
உரனுறு திருக்கூத் துள்ளம் ஊர்தரப் பெருகி நெஞ்சில்
கரவிலா தவரைக் கண்ட நிறைவுதங் கருத்திற் கொள்ள.

போற்ற எடுத்திடும் வாய் குளறி அப்பன்பால் காதல் பெருகும் திருப்படியைத் தாழ்ந்து பொருந்திய வகையால் உடலின் ஐந்து உறுப்பும் எட்டு உறுப்பும் நிலமிசைப் பொருந்த வணங்கி உண்மையின் திடம்பிகுந்த திருக்கூத்து உள்ளத்து பெருக நிறைந்திட; தம்து உள்ளத்தே வஞ்சியாது நிள நிறைந்து நின்ற சோதியை கண்டுகொண்ட நிறைவு தமது மனதில் பெருக்கிக் கொள்ள. 114

வேறு

'மடித்தாடும் அடிமைக்கண்' என்றெடுத்து மன்னு யிர்கட் கருளும் ஆற்ருல் அடுத்தாற்று நன்னெறிக்கண் நின்ருர்கள் வழுவிநர கணையா வண்ணம், தடுப்பானைப் பேரூரிற் கண்ட நிலை சிறப்பித்துத் தனிக்கூத் தென்றும், நடிப்பானை நாம்மனமே பெற்றவா றெனுங்களிப்பால் நயந்து பாடி.

''மடிந்தாடும் அடிமைக்கண்'' எனத் தொடங்கிப்பாட எடுத்து மேலான உயிர்கட்கு அருள்புரிந்திடும் அத்தகவால் அடுத்து செய்திடும் நல்ல நெறியில் ஒழுகிநிற் பார்கள் தவறி நரகுத்து சேராதபடி தடுக்கின்ற பெருமானை திருக்காஞ்சிவாய்ப் பேரூரில் கண்ட நடனநிலை சிறப்பித்து தன்னந்தனியான கூத்து என்றும் நடிப்பானை நாம் மனமே பெற்றுக்கொண்ட அதிசய வரலாற்றை பார் என்று மிகுநயப்புடன் பாடியருளி. 115

சுந்தரமூர்த்தி சுவாமிகள் உள்ளம் நிறையவைத்து கரவாது காட்சி கொடுத்து கிய வைத்த பெருமையை உணர்ந்து உண்மையாய அடிமைத்திறம் போற்றுவார்க்கு அருளும்சிறப்பை உலகறிந்துய்யப் போற்றிய அந்தப்பதிகம் இதுவாகும்.

கோயில்

பண்—குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

மடித்தாடும் அடிமைக்கண் அன்றியே மனனேநீ வாழும் நாளும்
தடுத்தாட்டித் தருமனார் தமர்செக்கில் இடும்போது தடுத்தாட் கொள்வான்
கடுத்தாடு கரதலத்தில் தமருகமும் எரிஅகலுங் கரிய பாம்பும்
பீடித்தாடி புலியூர்ச்சிற் றம்பலத்தெம் பெருமானைப் பெற்ரு மன்றே. 1

பேராது காமத்திற் சென்றுற்போல் அன்றியே பிரியா துள்கிச்
சீரார்ந்த அன்பராய்ச் சென்றுமுன் அடிவீழும் திருவினுரை
ஓராது தருமனுர் தமர்செக்கில் இடும்போது தடுத்தாட் கொள்வான்
பேராளர் புலியூர்ச்சிற் றம்பலத்தெம் பெருமானைப் பெற்ரு மன்றே. 2

நரியார்தங் கள்ளத்தாற் பக்கான பரிசொழிந்து நாளும் உள்கிப்
பிரியாத அன்பராய்ச் சென்றுமூன் அடிவீழும் சிந்தை யாரைத்
தரியாது தருமனுர் தமர்செக்கில் இடும்போது தடுத்தாட் கொள்வான்
பெரியோர்கள் புலியூர்ச்சிற் றம்பலத்தெம் பெருமானைப் பெற்ரு மன்றே. 3

கருமையார் தருமனுர் தமர்நம்மைக் கட்டியகட் டறுப்பிப் பானை
அருமையாம் தன்னுலகம் தருவானை மண்ணுலகம் காவல் பூண்ட
உரிமையாற் பல்லவர்க்குத் திறைகொடா மன்னவரை மறுக்கஞ் செய்யும்
பெருமையார் புலியூர்ச்சிற் றம்பலத்தெம் பெருமானைப் பெற்ரு மன்றே.

கருமானின் உரியாடைச் செஞ்சடைமேல் வெண்மதியக் கண்ணி யானை
உருமன்ன கூற்றத்தை உருண்டோட உதைத்துகந் துலவா இன்பம்
தருவானைத் தருமனுர் தமர்செக்கில் இடும்போது தடுத்தாட் கொள்வான்
பெருமானுர் புலியூர்ச்சிற் றம்பலத்தெம் பெருமானைப் பெற்ரு மன்றே; 5

உயித்தாடித் திரியாதே உள்ளமே ஒழிகண்டாய் ஊன்கண் ஓட்டம்
எத்தாலுங் குறைவில்லை என்பர்காண் தெஞ்சமே நம்மை நாளும்
பைத்தாடும் அரவினன் படர்சடையன் பரஞ்சோதி பாவந் தீர்க்கும்
பித்தாடி புலியூர்ச்சிற் றம்பலத்தெம் பெருமானைப் பெற்ரு மன்றே. 6

முட்டாத முச்சந்தி மூவா யிரவர்க்கு மூர்த்தி என்னப்
பட்டானைப் பத்தராய்ப் பாவிப்பார் பாவமும் வினையும் போக
விட்டானை மலையெடுத்த இராவணனைத் தலைபத்தும் நெரியக் காலால்
தொட்டானைப் புலியூர்ச்சிற் றம்பலத்தெம் பெருமானைப் பெற்ரு மன்றே. 7

கற்ருனுங் குழையுமா றன்றியே கருதுமா கருத கிற்ரூர்க்
கெற்ருலுங் குறைவில்லை எண்பர்காண் உள்ளமே நம்மை நாளுஞ்
செற்ருட்டித் தருமனுர் தமர்செக்கில் இடுமபோது தடுத்தாட் கொள்வான்
பெற்றேறிப் புலியூர்ச்சிற் றம்பலத்தெம் பெருமானைப் பெற்ரு மன்றே. 8

நாடுடைய நாதன்பால் நன்றென்றுஞ் செய்மனமே நம்மை நாளும்
தாடுடைய தருமனுர் தமர்செக்கில் இடும்போது தடுத்தாட் கொள்வான்
மோடுடைய சமணர்க்கும் முடையுடைய சாக்கியருக்கும் மூடம் வைத்த
பீடுடைய புலியூர்ச்சிற் றம்பலத்தெம் பெருமானைப் பெற்ரு மன்றே: 9

பாரூரும் அரவல்குல் உமைநங்கை யவள்பங்கன் பைங்கண் ஏற்றன்
ஊரூரன் தருமனுர் தமர்செக்கில் இடும்போது தடுத்தாட் கொள்வான்
ஆரூரன் தம்பிரான் ஆரூரன் மீகொங்கில் அணிகாஞ் சிவாய்ப்
பேரூரர் பெருமானைப் புலியூர்ச்சிற் றம்பலத்தே பெற்ரு மன்றே: 10

திருச்சிற்றம்பலம்

மீளாத அருள்பெற்றுப் புறம்போந்து திருவீதி மேவித் தாழ்ந்தே,
ஆளான வன்றெண்டர் அந்தணர்கள் தாம் போற்ற அமர்ந்து வைகி,
மாளாத பேரன்பாற் பொற் பதியை வணங்கிப் போய் மறலி வீழத்
தாளாண்மைகொண்டவர்தம்கருப்பறியலூர்வணங்கிச்சென்றுசார்ந்தார்.

தில்லையில் ஆடியருளும் சிற்பரனின் மீளாத அருள் பெற்று வெளியே போய் கோயிலின் திருவீதியை அணைந்து அங்கு தாழ்ந்து வணங்கி எம்பிராற்கு ஆளான சுந்தரமூர்த்தி சுவாமிகள் தில்லையில் வாழும் அந்தனர்கள் தம்மைப் போற்றுதல் புரிய அருளுடன் அங்கமர்ந்து இருந்து, பின்பு மாளாதபேரன்பினுல் பொற்பதியாம் சிதம்புரத்தை வணங்கி அப்பால் போய் இயமன் உதைத்த உதையில் வீழ்ந்திடத் திருப்பாதம் ஒச்சியருளிய பெருமானது திருக்கருப்பறியலூர் என்னும் கோயிலை வணங்கி அப்பால் சென்று சேர்கின்ரூர்: 116

கூற்றுதைத்தார் திருக்கொருடிக் கோயில் நண்ணிக் கோபுரத்தைத் தொழுது புகுந் தன்பர் சூழ, ஏற்றபெருங் காதலினுல் இறைஞ்சி ஏத்தி எல்லையிலாப் பெருமகிழ்ச்சி மனத்தில் எய்தப், போற்றிசைத்துப் புறந்தணைந்தப் பதியில் வைகிப் புனிதரவர் தமைநினையும் இன்பங் கூரிச், சாற்றியமெய்த் திருப்பதிகம் சிம்மாந்(து) என்னும் தமிழ்மாலை புனைந்தங்குச் சாரும் நாளில்.

அடுத்து, இயமனை உதைத்தருளிய பெருமான் வாழும் திருக்கொருடிக் கோயில் என்னும் தலத்தையும் சென்று சேர்ந்து, கோபுரத்தை தொழுது உள்புகுந்து அன்பர்கள் சூழ்ந்துவர இறைவனை போற்றிக்கொண்ட பெருங்காதலினுல் வணங்கிப் போற்றி எல்லையில்லாத பெருமகிழ்ச்சி மனதில் அடைந்து கொள்ள எம்பெருமானைப் போற்றிப்பாடி வெளியே வந்தணைந்து அந்தத் தலத்தில் இருந்திடும் நாளில் புனிதயை எம்பெருமானை நினைவதால் வரும் இன்பப்பெருக்கினை எடுத்து மொழிந்தருளும் திருப்பதிகம் ''சிம்மாந்து'' எனத்தொடங்கிப்பாடிடும் தமிழ் மாலையாகப் பாடி கடவுட்குச்சாத்தி அங்கு இருந்திடும் காலத்தில்

அவர் எம்பெருமான் சிவனை நினைவதால் வரும் இன்பத்தை உலகறிய மொழியும் அந்த தேவாரமாலையை இப்பால் தருகின்ரோம். 117

திருச்கருப்பறியலூர்

பன் – நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

சிம்மாந்து சிம்புளித்துச் சிந்தையினில் வைத்துகந்து திறம்பா வண்ணம்
கைம்மாவின் உரிவைபோர்த் துமைவெருவக் கண்டானைக் கருப்ப றியலூர்க்
கொய்ம்மாவின் மலர்ச்சோலைக் குயில்பாட மயில்ஆடுங் கொருடிக் கோயில்
எம்மானை மனத்தினுல் நினைந்தபோ தவர்நமக் கினிய வாறே. 1

நீற்ரூரும் மேனியராய் நினைவார்தம் உள்ளத்தே நிறைந்து தோன்றும்
காற்ரூனைத் தீயானைக் கதிராளை மதியானைக் கருப்ப றியலூர்க்
கூற்ரூனைக் கூற்றுதைத்துக் கோல்வளையாள் அவளோடுங் கொருடிக் கோயில்
ஏற்ரூனை மனத்தினுல் நினைந்தபோ தவர்நமக் கினிய வாறே. 2

முட்டாமே நாள்தோறும் நீர்முழ்கிப் - பூப்பறித்து மூன்று போதும்
கட்டார்ந்த இண்டைகொண் டடிச்சேர்த்தும் அந்தணர்தங் கருப்ப றியலூர்க்
கொட்டாட்டுப் பாட்டாகி நின்ரூனைக் குழகனைக் கொருடிக் கோயில்
எட்டான மூர்த்தியை நினைந்தபோ தவர்நமக் கினிய வாறே. 3

விருந்தாய சொன்மாலை கொண்டேத்தி வினைபோக வேலி தோறும்
கருந்தாள வாழைமேற் செங்கனிகள் தேன்சொரியும் கருப்ப றியலூர்க்
குருந்தாய முள்எயிற்றுக் கோல்வளையாள் அவளோடுங் கொருடிக் கோயில்
இருந்தானை மனத்தினுல் நினைந்தபோ தவர்நமக் கினிய வாறே. 4

பொடியேறு திருமேனிப் பெருமானைப் பொங்கரவக் கச்சை யானைக்
கடிநாறும் பூம்பொய்கைக் கயல்வாளை குதிகொள்ளும் கருப்ப றியலூர்க்
கொடியேறி வண்டினமுந் தண்தேனும் பண்செய்யுங் கொருடிக் கோயில்
அடியேறு கழலானை நினைந்தபோ தவர்நமக் கினியவாறே. 5

பெரியாத வாய்மையாற் பொடிபூசிப் போற்றிசைத்துப் பூசை செய்து
கையினுல் எரிஓம்பி மறைவளர்க்கும் அந்தணர்தங் கருப்ப றியலூர்க்
கொய்யுலாம் மலர்ச்சோலைக் குயில்கூவ மயில்ஆலுங் கொருடிக் கோயில்
ஐயனென் மனத்தினுல் நினைந்தபோ தவர்நமக் கினிய வாறே. 9

செடிகொள்நோய் உள்ளனவுந் தீவினையுந் தீர்ந்தொழியச் சிந்தை செய்மின்
கடிகொள்பூந் தடமண்டிக் கருமேதி கண்படுக்குங் கருப்ப றியலூர்க்
கொடிகொள்பூ நுண்இடையாள் கோல்வளையாள் அவளொடுங் கொருடிக் கோயில்
அடிகளென் மனத்தினுல் நினைந்தபோ தவர்நமக் கினிய வாறே: 7

பறையாத வல்வினைகள் பறைந்தொழியப் பன்னளும் பாடி ஆடிக்
கறைஆர்ந்த கண்டத்தன் எண்தோளன் முக்கண்ணன் கருப்ப றியலூர்க்
குறையாத மறைநாவர் குற்றவேல் ஒழியாத கொகுடிக் கோயில்
உறைவாளை மனத்தினுள் நினைந்தபோ தவர்நமக் கினிய வாறே. 8

சங்கேந்து கையானுந் தாமரையின் மேலானுந் தன்மை காணாக்
கங்கார்ந்த வார்சடைகள் உடையானை விடையானைக் கருப்ப றியலூர்க்
கொங்கார்ந்த பொழிற்சோலை சூழ்கனிகள் பலவுதிர்க்குங் கொகுடிக் கோயில்
எங்கோனை மனத்தினுள் நினைந்தபோ தவர்நமக் கினிய வாறே. 9

பண்டாழின் இசைமுரலப் பன்னளும் பாவித்துப் பாடி ஆடிக்
கண்டார்தங் கண்குளிருங் களிக்கமுகம் பூஞ்சோலைக் கருப்ப றியலூர்க்
குண்டாடுஞ் சமணருஞ் சாக்கியரும் புறங்கூறுங் கொகுடிக் கோயில்
எண்டோள்எம் பெருமானை நினைந்தபோ தவர்நமக் கினிய வாறே. 10

கலைமலிந்த தென்புலவர் கற்றேர்ந்தம் மிடர்தீர்க்குங் கருப்ப றியலூர்க்
குலைமலிந்த கோட்டெங்கு மட்டொழுகும் பூஞ்சோலைக் கொகுடிக் கோயில்
இலைமலிந்த மழுவானை மனத்தினுள் அன்புசெய் தின்பம் எய்தி
பலைமலிந்த தோள்ஊரன் வனப்பகையப் பன்னுரைத்த வண்த மிழ்களே. 11

திருச்சிற்றம்பலம்

கண்ணுதலார் விரும்புகருப் பறிய லூரைக் கைதொழுது நீங்கிப்போய்க் கயல்கள் பாயும், மண்ணிவளம் படிக்கரையை நண்ணி அங்கு மாதொருபா கத்தவர்தாள் வணங்கிப் போற்றி, எண்ணில்புகழ்ப் பதிகமும் முன்னவன் என்றேத்தி ஏகுவார் வாழ்கொளிபுத் தூர்எய் தாது, புண்ணியனூர் போம் பொழுது நினைந்து மீண்டு புகு கின்றூர் தலைக்கலன் என்றெடுத்துப் போற்றி.

நெற்றியில் கண் உடைய எம்பெருமானூர் விரும்பி உறைகின்ற திருக்கருப்பறிய; லூரென்னும் கோயிலை பின்னர்சென்று கைதொழுது அங்கு நீங்கிச் சென்று கயல்மீன்கள் பாய்ந்து திரியும் மண்ணியாற்றின் வளமுடைய திருமண்ணி படிக் கரை என்னும் கோயிலைச் சேர்ந்து, அங்கு பெண்ணொரு பாகமுடைய பெருமான் திரு வடிபணிந்து போற்றுபவர் நாம் நினைக்கமுடியாத புகழுடைய பதிகம் ''முன்ன வன்'' எனத் தொடங்கிப் பாடிச்செல்பவர் அடுத்த தலமாய வாழ்கொளிபுத்தூர் என்னும் கோயிலிற்குச் செல்லாது எம்புண்ணியனூய சுந்தரமூர்த்திசுவாமி செல்கின்ற போது திருவாழ்கொளிபுத்தூரை நினைந்து மீண்டு அங்கு போகின்றூர்; போகும் போது ''தலைக்குத் தலைக்கலன்'' எனப்பாட எடுத்துப் போற்றியவாறு (118)

அவர் திருமண்ணிப்படிக்கரை என்னும் தலத்தில் பாடிய பதிகம் இதுவாகும்.

திருமண்ணிப்படிக்கரை

பண் – நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

முன்னவன் எங்கள்பிரான் முதல்காண்பரி தாயபிரான்
சென்னியின் எங்கள்பிரான் திருநீலமிடற் றெம்பிரான்
மன்னிய எங்கள்பிரான் மறைநான்குங்கல் லால்நிழற்கீழ்ப்
பன்னிய எங்கள்பிரான் பழமண்ணிப் படிக்கரையே. 1

அண்டக பாலஞ்சென்னி அடிமேல்அலர் இட்டுநல்ல
தொண்டங் கடிபரவித் தொழுதேத்திநின் ரூடும்இடம்
வெண்டிங்கள் வெண்மழுவன் விரையார்கதிர் மூவிலைய
பண்டங்கன் மேயவிடம் பழமண்ணிப் படிக்கரையே. 2

ஆடுமின் அன்புடையீர் அடிக்காட்பட்ட தூளிகொண்டு
சூடுமின் தொண்டருள்ளீர் உமரோடெமர் சூழவந்து
வாடும்இவ் வாழ்க்கைதன்னை வருந்தாமல் திருந்தச்சென்று
பாடுமின் பத்தருள்ளீர் பழமண்ணிப் படிக்கரையே. 3

அடுதலை யேபுரிந்தான் அவைஅந்தர மூவெயிலும்
கெடுதலை யேபுரிந்தான் கிளருஞ்சிலை நாணியிற்கோல்
நடுதலை யேபுரிந்தான் நரிகான்றிட்ட எச்சில்வெள்ளைப்
படுதலை யேபுரிந்தான் பழ மண்ணிப் படிக்கரையே. 4

உங்கைக ளாற்கூப்பி உகந்தேத்தித் தொழுமின்தொண்டிர்
பங்கையோர் கூறுடையான் வானோர்முத லாயபிரான்
அங்கையில் வெண்மழுவன் அலையார்கதிர் மூவிலைய
பங்கய பாதனிடம் பழமண்ணிப் படிக்கரையே.

செடிபடத் தீவினைதான் சிலையார்மதிற் செம்புனஞ்சேர்
கொடிபடு மூரிவெள்ளை எருதேற்றையும் ஏறக்கொண்டான்
கடியவன் காலன்தன்னைக் கறுத்தான்கழற் செம்பவளப்
படியவன் பாசுபதன் பழமண்ணிப் படிக்கரையே. 6

கடுத்தவன் தேர்கொண்டோடிக் கயிலாயனன் மாமலையை
எடுத்தவன் ஈரைந்துவாய் அரக்கன்முடி பத்தலற
விடுத்தவன் கைநரம்பால் வேதகீதங்கள் பாடலுறப்
படுத்தவன் பால் வெண்ணீற்றன் பழமண்ணிப்படிக்கரையே. 7

திரிவன மும்மதிலும் மெரித்தான்இமை யோர்பெருமான்
அரியவன் அட்டபுட்பம் அவைகொண்டடி போற்றிநல்ல
கரியவன் நான்முகனும் அடியும்முடி காண்பரிய
பரியவன் பாசுபதன் பழமண்ணிப் படிக்கரையே. 8

வெற்றரைக் கற்றமணும் விரையாதுவிண் டாலை முண்ணும்
துற்றரைத் துற்றறுப்பான் துன்னஆடைத் தொழிலுடையீர்
பெற்றரைப் பித்தரென்று கருதேன்மின் படிக்கரையுள்
பற்றரைப் பற்றிநின்று பழிபாவங்கள் தீர்மின்களே. 9

பல்லுயிர் வாழுந்தெண்ணீர்ப் பழமண்ணிப் படிக்கரையை
அல்லியந் தாமரைத்தார் ஆரூரன் உரைத்ததமிழ்
சொல்லுதல்கேட்டல் வல்லாரவர்க் குந்தமர்க் குங்கிளைக்கும்
எல்லியும் நன்பகலும் இடர்கூருதல் இல்லையன்றே. 10

திருச்சிற்றம்பலம்

அவர் திருவாள்கொளிபுத்தூர்க்குச் செல்ல மறந்து பின் நினைத்து போகும்போது பாடிய ''தலைக்கலன்'' எனத் தொடங்கிடும் திருப்பதிகம் இதுவாகும்.

திருவாள்கொளிபுத்தூர்

பண் – தக்கேசி

திருச்சிற்றம்பலம்

தலைக்க லன்தலை மேல்தரித் தானைத் தன்னைஎன் னைநினைக் கத்தரு வானைக்
கொலைக்கையா னைஉரி போர்த்துகந் தானைக் கூற்றுதைத் தகுரை சேர்கழ லானை
அலைத்தசெங் கண்விடை ஏறவல் லானை ஆணை யால்அடி யேன்அடி நாயேன்
மலைத்தசெந்தெல்வயல்வாழ்கொளிபுத்தூர் மாணிக்கத் தைமறந்தென் நினைக்கேனே

படைக்கட் சூலம் பயிலவல் லானைப் பாவிப் பார்மனம் பாவிக்கொள் ளானைக்
கடைக்கட்பிச் சைக்கிச்சை காதலித் தானைக் காமன்ஆ கந்தனைக் கட்டழித் தானைச்
சடைக்கட் கங்கையைத் தாழவைத்தானைத் தண்ணீர்மண் ணிக்கரை யானைத்தக்கானை
மடைக்கண் நீலம்அலர் வாழ்கொளி புத்தூர் மாணிக்கத்தைமறந் தென்நினைக்கேனே.

வெந்த நீறுமெய் பூசவல் லானை வேத மால்விடை ஏறவல் லானை
அந்தம் ஆதிஅறி தற்கரி யானை ஆறலைத் தசடை யானைஅம் மானைச்
சிந்தை யென்தடு மாற்றறுப் பானைத் தேவ தேவன்என் சொல்முவி யாதே
வந்தென்உள் ளம்புகும் வாழ்கொளி புத்தூர் மாணிக்கத் தைமறந்தென்நினைக்கே னே

தடங்கை யால்மலர் தூய்த்தொழு வாரைத் தன்னடிக் கேசெல்லு மாறுவல் லானைப்
படங்கொள்நா கம்அரை ஆர்த்துகந் தானைப் பல்லின்வெள் ளோத்தலறு டையானை
நடுங்கஆ னைஉரி போர்த்துகந் தானை நஞ்சம் உண்டுகண் டங்கறுத் தானை
மடந்தை பாகனை வாழ்கொளி புத்தூர் மாணிக்கத் தைமறந் தென்நினைக் கேனே

வளைக்கைமுன் கைமலை மங்கை மணாளன் மார னுர்உடல் நீறெழச் செற்றுத்
தளைத்தஅங் கத்தொடுதாமலர்க் கொன்றை தோளும்நூ லுந்துகைந்தவரை மார்பன்
நிளைக்குந் தெவ்வர் திரிபுரம் மூன்றும் அவுணர் பெண்டிரும் மக்களும் வேவ
வளைத்த வில்லியை வாழ்கொளி புத்தூர் மாணிக்கத் தைமறந் தென்நினைக் கேனே

திருவின் நாயகன் ஆகிய மாலுக் கருள்கள் செய்திடும் தேவர் பிரானை
உருவி னானொன் றுவறி வொண்ணு மூர்த்தி யையிச யற்கருள் செய்வான்
செருவில் ஏந்திஓர் கேழற்பின் சென்று செங்கண் வேடனுய் என்னெடும் வந்து
மருவி னன்தனை வாழ்கொளி புத்தூர் மாணிக்கத் தைமறந் தென்நினைக் கேனே

எந்தையை எந்தை தந்தை பிரானை ஏதமாய இடர் தீர்க்கவல் லானை
முந்கி யாகிய மூவரின் மிக்கமூர்த்தி யையுதல் காண்பரி யானைக்
கந்தின் மிக்ககரி யின்மருப் போடு கார கிலகல ரிம்மயிர் மண்ணி
வந்து வந்திழி வாழ்கொளி புத்தூர் மாணிக்கத் தைமறந் தென்நினைக் கேனே.

தேனை ஆடிய கொன்றையி னானைத் தேவர் கைதொழுந் தேவர் பிரானை
ஊனம் ஆயின தீர்க்கவல் லானை ஒற்றை ஏற்றனை நெற்றிக்கண் ணானைக்
கான ஆனையின் கொம்பினைப் பீழ்ந்த கள்ளப் பிள்ளைக்குங் காண்பரி தாய
வான நாடனை வாள்கொளி புத்தூர் மாணிக்கத் தைமறந் தென்நினைக் கேனே.

காளை யாகி வரைஎடுத் தான்றன் கைகள் இற்றவன் மொய்தலை எல்லாம்
மூளை போத ஒருவிரல் வைத்த மூர்த்தி யையுதல் காண்பரி யானைப்
பாளை தெங்கு பழம்விழ மண்டிச் செங்கண் மேதிகள் சேடெறிந் தெங்கும்
வாளை பாய்வயல் வாழ்கொளி புத்தூர் மாணிக்கத் தைமறந் தென்நினைக் கேனே

திருந்த நான்மறை பாடவல் லானைத் தேவர்க் குந்தெரி தற்கரி யானைத்
பொருந்த மால்விடை ஏறவல் லானைப் பூதிப் பைபுலித் தோலுடை யானை
இருந்துண் தேரரும் நின்றுணும் சமணும் ஏச நின்றவன் ஆருயிர்க் கெல்லாம்
மருந்த னன்தனை வாழ்கொளி புத்தூர் மாணிக்கத் தைமறந் தென்நினைக் கேனே

மெய்யனை மெய்யின் நின்றுணர் வானை மெய்யிலாதவர் தங்களுக் கெல்லாம்
பொய்ய னைப்புரம் மூன்றெரித் தானைப் புனித னைப்புலித் தோலுடை யானைச்
செய்ய னைவெளி யதிரு மீற்றில் திகழு மேனியன் மான்மறி ஏந்தும்
மைகொள் கண்டனை வாழ்கொளி புத்தூர் மாணிக்கத் தைமறந் தென்நினைக்கேனே

வளங்கி ளர்பொழில் வாழ்கொளி புத்தூர் மாணிக்கத் தைமறத் தென்நினைக்
கேனென்(று)
உளங்கு ளிர்தமிழ் ஊரன்வன் றொண்டன் சடையன் காதலன் வனப்பகை அப்பன்
நலங்கி ளரவயல் நாவலர் வேந்தன் நங்கை சிங்கடி தந்தை பயந்த
பலங்கி ளர்தமிழ் பாடவல் லார்மேற் பறையுமாஞ் செய்த பாவங்க டானே.

திருச்சிற்றம்பலம்

திருப்பதிகம் பாடியே சென்றங் கெய்தித் தேவர்பெரு மானுர்தம் கோயில் வாயில், உருப்பொலியும்மயிர்ப்புளகம் விரவத் தாழ்ந்தே உள்ளணைந்து பணிந்தேத்தி உருகும் அன்பால், பொருப்பரையன் மடப்பாவை இடப்பா லானைப்பேற்றிசைத்துப் புறம்போந்து தங்கிப் பூமென், கரும்புவயல்வாழ் கொளிபுத் தூரை நீங்கிக் காளுட்டு முள்ளூரிற் கலந்தபோது.

இந்தத் திருப்பதிகம் பாடியவாறே சென்று திருவாழ்கொளிபுத்தூர் என்னும் கோவிலைச் சேர்ந்து; தேவர் பெருமானுர் தம்முடைய திருக்கோயில் வாய்தலில் திருமேனி பொலியும் புளகாங்கிதமுடன் சென்று தாழ்ந்து உள்ளாகச்சென்று பணிந்து போற்றி உருகுகின்ற அன்பினுல் மலையரசன் புத்திரியாய உமையம்மையாரை இடப் பாகத்திற்கொண்ட சிவபெருமானை வணங்கிப் போற்றிப்பாடி வெளியேவந்து அங்கு தங்கிப் பின்னர் பூக்கள் மிருதுவாய கரும்பின் வயல்நிறைந்த வாழ்கொளி புத்தூரை விடுத்துநீங்கி திருக்காளுட்டுமுள்ளூர் என்னும் கோவிலைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் சேர்ந்தபோது; (119)

காளுட்டு முள்ளூரைச் சாரும் போது கண்ணுதலார் எதிர்காட்சி கொடுப் பக்கண்டு, தூநாண்மென் மலர்க்கொன்றைச் சடையார் செய்ய துணைப் பாத மலர்கண்டு தொழுதேன் என்று, வானுளுந் திருப்பதிகம் வள்வாய் என்னும் வண்டமிழின் தொடைமாலை மலரச் சாத்தித், தேனுரும் மலர்ச் சோலை மருங்கு சூழ்ந்த திரு எதிர்கொள் பாடியினை எய்தச் செல்வார்.

திருக்காளுட்டு முள்ளூர் என்னும் கோவிலை அவர் சேர்ந்திடும்போது கண்ணு தற் பெருமான் சிவன் எதிரே தோன்றி காட்சி கொடுப்பக் கண்டு போற்றுவார் ''தூயநாள் அலர்ந்த மெல்லிய மலராகும் கொன்றை மாலையைச் சடைமீது அணிந்து கொண்ட பெருவாழ்வாம் என் பெருமானது செம்மையான என்றும் துணையுடைய திருப்பாத மலரினை நேரில் கண்டு தொழுதேன் என்று வான உலகமெல்லாம் ஆள வைத்திடும்; திருப்பதிகம் ''வள்வாய்'' எனத் தொடங்கிய அப்பதிகத் தமிழ் மாலை உள்ளம் மலரப் பாடி எம்பிரான்கு அணிந்து அப்பால் தேன் வண்டு கள் இரைந்து ஆரவாரித்திடும் மலர் நிறைந்த சோலைகள் புறத்தே சூழ்ந்த திரு எதிர்கொள்பாடி என்னும் கோவிலைச் சென்று சேர்ந்தார் சுந்தரமூர்த்தி சுவாமி கள். 120

அவர் திருக்காளுட்டு முள்ளூரில் பாடிய திருப்பதிகம் இதுவாகும்:

திருக்காளுட்டுமுள்ளூர்
பண் – கொல்லிக்கௌவாணம்
திருச்சிற்றம்பலம்

வள்வாய மதிமிளிரும் வளர்சடையி னானை
மறையவனை வாய்மொழியை வானவர்தங் கோனைப்
புள்வாயைக் கீண்டுலகம் விழுங்கிஉமிழ்ந் தானைப்
பொன்னிறத்தின் முப்புரிநூல் நான்முகத்தி னானை
முள்வாய மடல்தழுவி முடத்தாழை ஈன்று
மொட்டலர்ந்து விரைநாறும் முருகுவிரி பொழில்சூழ்
கள்வாய கருங்குவளை கண்வளருங் கழனிக்
காளுட்டு முள்ளூரிற் கண்டுதொழு தேனே. 1

ஒருமேக முகிலாகி ஒத்துலகந் தானுய்
ஊர்வனவும் நிற்பவனும் ஊழிகளுந் தானுய்ப்
பொருமேவு கடலாகிப் பூதங்கள் ஐந்தாய்ப்
புனைந்தவனைப் புண்ணியனைப் புரிசடையி னானைத்
திருமேவு செல்வத்தார் தீமூன்றும் வளர்த்த
திருத்தக்க அந்தணர்கள் ஓதுநகர் எங்கும்
கருமேதி செந்தாம ரைமேயுங் கழனிக்
காளுட்டு முள்ளூரிற் கண்டுதொழு தேனே. 2

இரும்புயர்ந்த மூவிலைய சூலத்தி னானை
இறையவனை மறையவனை எண்குணத்தி னானைச்
சுரும்புயர்ந்த கொன்றையொடு தூமதியஞ் சூடும்
சடையானை விடையானைச் சோதியெனும் சுடரை
அரும்புயர்ந்த அரவிந்தத் தணிமலர்கள் ஏறி
அன்னங்கள் விளையாடும் அகன்துறையின் அருகே
கரும்புயர்ந்து பெருஞ்செந்நெல் நெருங்கிவிளை கழனிக்
காளுட்டு முள்ளூரிற் கண்டுதொழு தேனே. 3

பூளைபூனை கொன்றையொடு புரிசடையி னைனைப்
புனலாகி அனலாகிப் பூதங்கள் ஐந்தாய்
நாளைஇன்று நெருநலாய் ஆகாயம் ஆகி
ஞாயிறுய் மதியமாய் நின்றஎம் பரனைப்
பாளைபடு பைங்கமுகின் சூழ்விளந் தெங்கின்
படுமதஞ்செய் கொழுந்தேறல் வாய்மடுத்துப் பருகிக்
காளைவண்டு பாடமயில் ஆலும்வளர் சோலைக்
காஞ்சட்டு முள்ளூரிற் கண்டுதொழு தேனே.

செருக்குவாய்ப் பைங்கண்வெள் அரவரையி னைனைத்
தேவர்கள்சூ ளாமணியைச் செங்கண்விடை யானை
முருக்குவாய் மலர்ஒக்குந் திருமேனி யானை
முன்னிலையாய் முழுதுலகம் ஆயபெரு மானை
இருக்குவாய் அந்தணர்கள் எழுபிறப்புள் எங்கும்
வேள்வியிருந் திருநிதியம் வழங்குநகர் எந்தம்
கருக்குவாய்ப் பெண்ணையொடு தெங்கமலி சோலைக்
காஞ்சட்டு முள்ளூரிற் கண்டுதொழு தேனே. 5

விடைஅரவக் கொடிஏந்தும் விண்ணவர்தம் கோனை
வெள்ளத்து மாலவனும் வேதமுத லானும்
அடியிணையுந் திருமுடியுங் காணஅரி தாய
சங்கரனைத் தத்துவனைத் தையல்மட வார்கள்
உடைஅவிழக் குழல்அவிழக் கோதைகுடைந் தாடக்
குங்குமங்கள் உந்திவரும் கொள்ளிடத்தின் கரைமேல்
கடைகள்விடு வார்குவளை களைவாருங் கழனிக்
காஞ்சட்டு முள்ளூரிற் கண்டுதொழு தேனே. 6

அருமணியை முத்தினை ஆன் அஞ்சும் ஆடும்
அமரர்கள்தம் பெருமானை அருமறையின் பொருளைத்
திருமணியைத் தீங்கரும்பின் ஊறலிருந் தேனைத்
தெரிவரிய மாமணியைத் திகழ்தருசெம் பொன்னைக்
குருமணிகள்கொழித்திழிந்துசுழித்திழியுந்திரைவாய்க்
கோல்வளையார் குடைந்தாடுங் கொள்ளிடத்தின்கரை மேல்
கருமணிகள் போல்நீலம் மலர்கின்ற கழனிக்
காஞ்சட்டு முள்ளூரிற் கண்டுதொழு தேனே. 7

இழைதழுவு வெண்ணூலும் மேவுதிரு மார்பின்
ஈசன்தன் எண்மோளாள்கள் வீசியெரி ஆடக்
குழைதழுவு திருக்காதிற் கோளரவம் அசைத்துக்
கோவணங்கொள் குழகனைக் குளிர்சடையி னைனைத்
தழைதழுவு தண்ணிறத்த செந்நெலதன் அயலே
தடந்தரள மென்கரும்பின் தாழ்கிடங்கின் அருகே
கழைதழுவித் தேன்தொடுக்குங் கழனிசூழ் பழனக்
காஞ்சட்டு முள்ளூரிற் கண்டுதொழு தேனே. 8

குளிவினிய கதிர்மதியம் சூடுசடை யானைக்
குண்டலஞ்சேர் காதவனை வண்புனங்கள் பாடப்
பனிஉதிருஞ் சடையானைப் பால்வெண்ணீற் றினைனைப்
பலஉருவுந் தன்உருவே ஆயபெரு மானைத்

துளிவினிய தூயமொழித் தொண்டைவாய் நல்லார்
தூநீலங் கண்வளருஞ் சூழ்கிடங்கின் அருகே
கனிவினிய கதலிவனந் தழுவுபொழிற் சோலைக்
காஞ்சட்டு முள்ளூரிற் கண்டுதொழு தேனே. 9

தேவியம்பொன் மலைக்கோமான் தன்பாவை ஆகத்
தனதுருவம் ஒருபாகஞ் சேர்த்துவித்த பெருமான்
மேவியவெந் நரகத்தில் அழுந்தாமை நமக்கு
மெய்ந்நெறியைத் தான்காட்டும் வேதமுத லானைத்
தூவிவாய் நாரையொடு குருகுபாய்ந் தார்ப்பத்
துறைக்கெண்டை மிளிர்ந்துகயல் துள்ளிவிளை யாடக்
காவிவாய் வண்டுபல பண்செய்யுங் கழனிக்
காஞ்சட்டு முள்ளூரிற் கண்டுதொழு தேனே, 10

திரையினுர் கடல்சூழ்ந்த தென்னிலங்கைக் கோனைச்
செற்றவனைச் செஞ்சடைமேல் வெண்மதியி னைனைக்
கரையினுர் புனல்தழுவு கொள்ளிடத்தின் கரைமேற்
காஞ்சட்டு முள்ளூரிற் கண்டுகழல் தொழுது
உரையினுர் மதயானை நாவலா ரூரன்
உரிமையால் உரைசெய்த ஒண்தமிழ்கள் வல்லார்,
உரையினுர் வகைஞாலம் ஆண்டவர்க்குந் தாம்போய்
வானவர்க்குந் தலைவராய் நிற்பரவர் தாமே. 11

திருச்சிற்றம்பலம்

எத்திசையுந் தொழுதேத்த மத்த யானை எடுத்(து) எதிர்கொள் பாடியினை அடைவோம் என்னும், சித்த நிலைத் திருப்பதிகம் பாடிவந்து செல்வமிகு செழுங்கோயில் இறைஞ்சி நண்ணி, அத்தர் தமை அடிவணங்கி அங்கு வைகி அருள் பெற்றுத் திருவேள்விக் குடியில் எய்தி, முத்தி தரும் பெருமானைத் துருத்தி கூட மூப்பதிலை எனும் பதிகம் மொழிந்து வாழ்ந்தார்.

சேர்ந்திடும்பொழுது எத்திசையும் தொழுது போற்ற மத்தயானை எனத் தொடங்கிப் பாடஎடுத்து நாம் சென்று திருஎதிர்கொள்பாடி என்னும் கோவிலைச் சேர்வோம் என்னும் தமது சித்தத்தினை நிலைக்கொள்ளும்படி வைத்திடும் திருவுடைய பதிகம் பாடி வந்து செல்வம் மிகுந்த செழுமையான கோவிலினை வணங்கி உள் புகுந்து எம்பெருமானைத் திருப்பதிகம்பாடி அங்குதங்கி அருள்பெற்று திருவேள்விக் குடி என்னும் கோவிலில் சென்றடைந்து எமக்கு முத்தியின்பத்தைத் தருகின்ற பெருமானைத் திருத்துருத்தி என்னும் தலமும் சேர்ந்திட "மூப்பதில்லை" என மொழிந்திடும் திருப்பதிகம் பாடியருளி வாழ்ந்தார் எம் சுந்தரமூர்த்திசுவாமிகள்.

அவர் திருஎதிர்கொளபாடி என்னும் கோவிலைச் சென்றுசேரும்போது பாடிச் சென்ற சித்தநிலைத் திருப்பதிகம் இதுவாகும். (111)

திருஎதிர்கொள்பாடி
பண் – இந்தளம்
திருச்சிற்றம்பலம்

மத்தயானை ஏறிமன்னர் சூழ வருவீர்காள்
செத்தபோதில் ஆரும்இல்லை சிந்தையுள் வைம்மின்கள்
வைத்த உள்ளம் மாற்றவேண்டா வம்மின் மனத்திரே
அத்தர் கோயில் எதிர்கொள்பாடி என்ப தடைவோமே.

தோற்றம் உண்டேல் மரணம்உண்டு துயரம் மனிவாழ்க்கை
மாற்றம் உண்டேல் வஞ்சம்உண்டு நெஞ்ச மனத்திரே
நீற்றர்ஏற்றர் நீலகண்டர் நிறைபுனல் நீள்சடைமேல்
ஏற்றர்கோயில் எதிர்கொள்பாடி என்ப தடைவோமே. 2

செடிகொளாக்கை சென்றுசென்றுதேய்ந் தொல்லை வீழாமுன்
வடிகொள்கண்ணுர் வஞ்னையுட் பட்டு மயங்காதே
கொடிகொள்ஏற்றர் வெள்ளநீற்றர் கோவண ஆடையுடை
அடிகள்கோயில் எதிகொள்பாடி என்ப தடைவோமே. 3

வாழ்வர்கண்டீர் நம்முள்ளவர் வஞ்ச மனத்திரே
யாவராலும் இகழப்பட்டிங் கல்ல லில்வீழாதே
மூவராயும் இருவராயும் முதல்வன் அவனேயாம்
தேவர்கோயில் எதிர்கொள்பாடி என்ப தடைவோமே. 4

அரித்துநம்மேல் ஐவர்வந்திங் காறலைப் பான்பொருட்டால்
சிரித்தபல்வாய் வெண்தலைபோய் ஈப்புறஞ் சேராமுன்
வரிக்கொடுத்திவ் வாள்அரக்கர் வஞ்ச மதில்மூன்றும்
எரித்தவில்லி எதிர்கொள்பாடி என்ப தடைவோமே. 5

பொய்யர்கண்டீர் வாழ்க்கையாளர் பொத்தடைப் பான்பொருட்டால்
மையல்கொண்டீர் எம்மோடாடி நீரும் மனத்திரே
நையவேண்டா இம்மைஏத்த அம்மை நமக்கருளும்
ஐயர்கோயில் எதிர்கொள்பாடி என்ப தடைவோமே 6

கூசம்நீக்கிக் குற்றம்நீக்கிச் செற்ற மனம்நீக்கி
வாசம்மல்கு குழலினுர்கள் வஞ்ச மனிவாழ்க்கை
ஆசைநீக்கி அன்புசேர்த்தி என்பணிந் தேறேறும்
ஈசர்கோயில் எதிர்கொள்பாடி என்ப தடைவோமே. 7

இன்பம்உண்டேல் துன்பம்உண்டு ஏழை மனிவாழ்க்கை
முன்புசொன்ன மோழையான் முட்டை மனத்திரே
அன்பரல்லால் அணிகொள்கொன்றை அடிக ளடிசேரார்
என்பர்கோயில் எதிர்கொள்பாடி என்ப தடைவோமே. 8

தந்தையாரும் நல்வையாரும் எட்டனைச் சார்வாகார்
வந்துநம்மோ டுள்ளளாவி வான நெறி காட்டும்
சிந்தையீரே நெஞ்சினீரே திகழ்ம தியஞ்சூடும்
எந்தைகோயில் எதிர்கொள்பாடி என்ப தடைவோமே. 9

குருதிசோர ஆனையின்தோல் கொண்ட குழற்சடையன்
மருதுகிறி ஊடுபோன மாலய னும்மறியாச்
சுருதியார்க்குஞ் சொல்லஒண்ணாச் சோதிஎம் ஆதியான்
கருதுகோயில் எதிர்கொள்பாடி ஏன்ப தடைவோமே· 10

முத்துநீற்றுப் பவளமேனிச் செஞ்சடை யான்உறையும்
பத்தர்பந்தத் தெதிர்கொள்பாடிப் பரமனை யேபணியச்
சித்தர்வைத்த தொண்டர்தொண்டன் சடையனவன் சிறுவன்
பத்தன்ஊரன் பாடல்வல்லார் பாதம் பணிவாரே. 11

திருச்சிற்றம்பலம்

அடுத்து அவர் திருவேள்விக்குடியில் சென்றுபாடிய திருப்பதிகம் இதுவாகும்.

திருவேள்விக்குடி

பண் – நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

மூப்பதும் இல்லை பிறப்பதும் இல்லை இறப்பதில்லை
சேர்ப்பது காட்டகத் தூரினு மாகச்சிந் திக்கினல்லால்
காப்பது வேள்விக் குடிதண் துருத்தி எங் கோன் அரைமேல்
ஆர்ப்பது நாகம் அறிந்தோமேல் நாமிவர்க் காட்படோமே. 1

கட்டக் கட்டில்நடம் ஆடுவரி யாவர்க்கும் காட்சியொண்ணுர்
கூட்டவெண் ணீறணிந் தாடுவர் பாடுவர் தூயநெய்யால்
வட்டக்குண் டத்தில் எரிவளர்த் தோம்பி மறைபயில்வார்
அட்டக்கொண் டுண்ப தறிந்தோமேல் நாமிவர்க் காட்படோமே. 2

பேருமோர் ஆயிரம் பேருடை யார்பெண்ணே டானும்அல்லர்
ஊருமை தொற்றியூர் மற்றையூர் பெற்றவா நாம்அறியோம்
காருங் கருங்கடல் நஞ்சமு துண்டுகண் டங்கறுத்தார்க்
காரம்பாம் பாவ தறிந்தோமேல் நாமிவர்க் காட்படோமே. 3

ஏனக்கொம் பும்மிள ஆமையும் பூண்டங்கோர் ஏறும்ஏறிக்
கானக்காட் டிற்றெண்டர் கண்டன சொல்லிபுங் சாமுறவே
மானத்தோல் ஒன்றை உடுத்துப் புலித்தோல் பியற்குமிட்டு
யானைத்தோல் போர்ப்பதறிந் தோமேல் நாமிவர்க் காட்படோமே. 4

ஊட்டிக்கொண் டுண்பதோர் ஊனிலர் ஊரிடு பிச்சை அல்லால்
பூட்டிக்கொண் டேற்றினை ஏறுவர் ஏறியோர் பூதந்தம்பால்
பாட்டிக்கொண்டு டுண்பவர் பாழிதொறும்பல பாம்புபற்றி
ஆட்டிக்கொண் டுண்ப தறிந்தோமேல் நாமிவர்க் காட்படோமே. 5

குறவனுர் தம்மகள் தம்மக னர்மண வாட்டிகொல்லை
மறவனு ராயங்கோர் பன்றிப்பின் போவது மாயங்கண்டீர்
இறைவனுர் ஆதியார் சோதிய ராயங்கோர் சோர்வுபடா
அறவனுர் ஆவ தறிந்தோமேல் நாமிவர்க் காட்படோமே. 6

பித்தரை ஒத்தொரு பெற்றியர் நற்றவை என்னைப்பெற்ற
முற்றவை தம்மனை தந்தைக்குந் தவ்வைக்குந் தம்பிரானுர்
செத்தவர் தந்தலை யிற்பலி கொள்வதே செல்வமாகில்
அத்தவம் ஆவ தறிந்தோமேல் நாமிவர்க் காட்படோமே. 7

உம்பரான் ஊழியான் ஒங்கி மலர் உறைவான்
தம்பரம் அல்லவர் சிந்திப் பவர்தடு மாற்றறுப்பார்
எம்பரம் அல்லவர் என்நெஞ்சத் துள்ளும் இருப்பதாகில்
அம்பரம் ஆவ தறிந்தோமேல் நாமிவர்க் காட்படோமே. 8

இந்திர னுக்கும் இராவண னுக்கும் அருள்புரிந்தார்
மந்திரம் ஓதுவர் மாமறை பாடுவர் மான்மறியர்
சித்துரக் கண்ணனும் நான்முக னும்முட னுய்த்தனியே
அந்தரஞ் செல்வ தறிந்தோமேல் நாமிவர்க் காட்படோமே. 9

கூடலர் மன்னன் குலநாவ லூர்க்கோன் நலத்தமிழைப்
பாடவல் லபர மன்னடி யார்க்கடி மைவழுவா
நாடவல் லதொண்டன் ஆரூரன் ஆட்படு மாறுசொல்லிப்
பாடவல் லார்பர லோகத் திருப்பது பண்டமன்றே. 10

திருச்சிற்றம்பலம்

வேறு

காட்டுநல் வேள்விக் கோலங் கருத்துற வணங்கிக் காதல்,
நாட்டிய உள்ளத் தோடு நம்பி அரூரர் போற்றி,
ஈட்டிய தவத்தோர் சூழ அங்குநின் றேகி அன்பு,
பூட்டி ஆட் கொண்டார் மன்னும் தானங்கள் இறைஞ்சிப் போந்து.

அப்பதிகம்பாடி வாழ்வுற்று அத்தலமாய திருவேள்விக்குடியில் காட்டப்பெற்ற நல்ல வேள்வித் திருக்கோலம் கருத்துடன் வணங்கிக் காதல்மிக்க எழும் உள்ளத் துடன் சுந்தரமூர்த்திசுவாமிகள் எம்பெருமானைப் போற்றிசெய்து; தவத்தைப் பெருக்கிக்கொண்ட முனிவர்கள் தம்மைச் சூழ்ந்துவர அங்குநின்றும் நீங்கியருளி தம்மிடத்து அன்புகொள்ளவைத்து ஆட்கொண்டருளிய பெருமான் வீற்றிருக்கும் கோயில்கள் பல வணங்கிப்போய். (122)

எஞ்சாத பேரன்பில் திருத்தொண்டர் உடனெய்தி
நஞ்சாரு கறைமிடற்றூர் இடம்பலவும் நயந்தேத்தி
மஞ்சாரும் பொழிலுடுத்த மலர்த்தடங்கள் புடைசூழ்ம்
செஞ்சாலி வயல்மருதத் திருவாரூர் சென்றடைந்தார்.

குறைவுபடாத பேரன்பால் தம்முடன்வரும் திருத்தொண்டருடன்வந்து நஞ்சு விளங்கும் கறையுடைய கழுத்துடன் பொலியும் கடவுள்பெருமான் இடங்கள் பல வும் நயப்புடன்போற்றி மேகங்கள் தங்கி ஆர்கின்ற சோலைகளைச் சூழக்கொண்ட மலர்ப்பொய்கைகள் புறத்தே சூழ்ந்திருக்கும் செஞ்சாலி நெல்விளையும் லயல்கள் சிறந்த மருதநிலத்தில் விளங்கிடும் திருவாரூர் கோயிலைச்சென்று சேர்ந்தருளினர் சுந்தரமூர்த்திசுவாமிகள். (123)

செல்வமலி திருவாரூர்த் தேவரொடு முனிவர்களும்
மல்குதிருக் கோபுரத்து வந்திறைஞ்சி உள்புக்கங்(கு)
எல்லையிலாக் காதல்மிக எடுத்தமலர்க் கைகுவித்துப்
பல்குதிருத் தொண்டருடன் பரமர்திரு முன் அணைந்தார்.

எம்பிரான் சுந்தரமூர்த்திசுவாமிகள் செல்வம் மலிந்து விளங்கிய திருவாரூரில் தேவர்களுடன் முனிவர்களும் நெருங்கிச் சூழும் கோபுரத்துவந்து வணங்கியருளி உள்ளேபுகுந்து அங்கு திருவாரூர் புற்றிடம்கொண்ட பெருமான்மீது எல்லையில்லாத காதல் மிகுந்திட: கும்பிட எடுத்த மலர்க்கையினைக் குவித்து பெருகும் திருத்தொண் டருடன் சிவபிரான் திருமுன்பாகச் சென்றுசேர்ந்தார். (124)

மூவாத முதலாகி நடுவாகி முடியாத
சேவாருங் கொடியாரைத் திருமூலட் டானத்துள்
ஓவாத பெருங்காத லுடன் இறைஞ்சிப் புறம்போந்து
தாவாத புகழ்ப்பரவை யார்திருமா ளிகைசார்ந்தார்.

திருமுன்பு சேர்ந்து மூவாதமுதலாகி; நடுவாகி; ஆனால் என்றும் முடிவிலாத புண்ணியமூர்த்தியாகும் இடபம் பிறந்திடும் கொடியுடைய சிவனைத் திருமூலட்டா னத்தில் ஒருப்பவனை; ஒழியாத பெருங்காதலுடன் வணங்கி அருளுடன் வெளியே வந்தருளிக் குறையாத புகழ்உடைய பரவைஅம்மையாரது திருமாளிகையைச் சென்று சேர்ந்தார் சுந்தரமூர்த்திசுவாமிகள். (125)

பொங்குபெரு விருப்பினெடு புரிகுழலார் பலர்போற்றப்
பங்கயக்கண் செங்கனிவாய்ப் பரவையார் அடிவணங்கி
எங்களையும் நீனைந்தருளிற் றெனஇயம்ப இனிதளித்து
மங்கைநல்லார் அவரோடு மகிழ்ந்துறைந்து வைகுநாள்.

சுவாமிகள் மாளிகைவருதலும்; பொங்கும் பெருவிருப்புடன் அழகிய கூந்த லுடைய பெண்கள் பலரும் போற்றும்படியாக; தாமரைமலாபோலும்கண்உடைய வளும் செங்கனிபோலும் வாயினையும் உடைய பரவைஅம்மை எதிர்வந்து சுவாமி களை திருவடி பணிந்தருளி; ''எங்களையும் நீனைந்தருளிற்று'' என மொழிந்திடலும் அம்மைபாலாக சுவாமிகள் இனிய அருள்புரிந்து பெண்கள் நல்லாராம் அவருட னுக மகிழ்ந்துகூடித் தங்கியிருக்கும் காலத்தில்: (126)

நாயனார் முதுகுன்றர் நமக்களித்த நன்னிதியம்
தூயமணி முத்நாற்றிற் புகவிட்டேம் துணைவரவர்
கோயிலின்மா ளிகைமேல்பாற் குளத்தில் அவர் அருளாலே
போயெடுத்துக் கொடுபோதப் போதுவாய் எனப்புகல.

ஓர்நாள் பரவைஅம்மையை சுவாமி நோக்கியருளி, ''எனது நாயகனை திரு முதுகுன்றத்து அப்பனர் எனக்குக் கொடுத்த நல்ல பொன்னின் குவியல் எல்லாம் அவரது முத்தாற்றில் போகுமாறு விடுத்தோம்; என் துணையாய திருவாரூர் அப்ப ாது கோயிலின் மேற்குப்புறத்து உள்ள குளத்தில் அவரது அருளாலே அதனை போய் எடுத்து உனக்குத் தருவதற்கு நீ என்னுடன் வருவாய்'' எனப் புகலு தலும்: (127)

என்ன அரி சயம்இதுதான் என்சொன்ன வா றென்று,
மின்னிடையார் சிறுமுறுவ லுடன்விளம்ப மெய் யுணர்ந்தார்,
நன்னுதலாய் என்னுடைய நாதன் அருளாற்குளத்தில்,
பொன்னனைய எடுத்துனக்குத் தருவது பொய்யா தென்று.

சுந்தரமூர்த்திசுவாமிகளது திருவாக்கின் அதிசயம் உணர்ந்த பரவைஅம்மை அவரைநோக்கி: ''என் நாதனே என்ன அதிசயம் இதுவாகும்! என்ன சொன்ன வாறு இது!'' என்று சிறு புன்சிரிப்புடன் கேட்டலும்; அதுபோது உண்மையினை உணர்ந்த சுந்தரமூர்த்திசுவாமிகள் பரவைஅம்மையை நோக்கி ''நல்ல நெற்றி யுடையவளே! என்னுடைய நாயகன் சிவன் அருளாலே அக்குளத்தில் ஆற்றில் போட்ட பொன்முழுவதும் எடுத்துத் தருவது பொய்யாகாது என்று கூறியருள (128)
னார்,

ஆங்கவரும் உடன்போத அளவிறந்த விருப்பினுடன்
பூங்கோயில் உள்மகிழ்ந்த புராதனரைப் புக்கிறைஞ்சி
ஓங்குதிரு மாளிகையை வலம்வந்தங் குடன்மேலப்
பாங்குதிருக் குளத்தணைந்தார் பரவையார் தனித்துணைவர்.

அதுகேட்ட பரவைஅம்மையும் அவருடனைக் கூடிவந்திட; அளவுகடந்த விருப் பத்துடன் திருவாரூர் பூங்கோயிலுள் அமர்ந்த சுடரொளியாய சிவனை உள்ளே புகுந்து வணங்கி; மேலோங்கிய கோயில் மாளிகையை வலமாகவந்து உடனை மேற்குப்புறத்தாக விளங்கிடும் திருக்குளத்து வந்துற்றார் பரவைஅம்மையாரின் தனித்துணைவர் சுந்தரமூர்த்திசுவாமிகள். (129)

மற்றதனில் வடகீழ்பாற் கரைமீது வந்தருளி
முற்றிழையார் தமைநிறுத்தி முனைப்பாடித் திருநாடர்
கற்றைவார் சடையாரைக் கைதொழுது குளத்தில் இழிந்(து)
அற்றைநாள் இட்டெடுப்பார் போல்அங்குத் தடவுதலும்.

மற்று அந்தக் குளத்தினில் வடகிழக்குக் கரையின் மேலாக வந்தருளி முழுவதும் நல்ல ஆபரணமணிந்த பரவையாரை அங்குநிறுத்தி பின்னர் திருமுனைப்பாடி என் னும் திருநாட்டைத் தமக்குப் பிறப்பிடமாக உள்ள சுந்தரமூர்த்திசுவாமிகள்: கற் றையாக வார்ந்துவிளங்கும் சடையுடைய பெருமானைக் கைதொழுது குளத்துள் இறங்கி அன்றைய நாளில் பொன்னைப்போட்டு எடுப்பார்போன்று அங்கு பொன் தடவுதலும். (130)

நீற்றழகர் பாட்டுவந்து திருவிளையாட்டினில்நின்று,
மாற்றுரு செம் பொன்குளத்து வருவியா தொழிந்தருள,
ஆற்றினில் இட்டுக்குளத்தில் தேடுவீர் அருள்இது வோ,
சாற்றும் எனக் கோற்றொடியார் மொழிந்தருளத் தனித்தொண்டர்.

நீற்றினால் அழகுபொலியும் திருமேனி உடைய பெருமான் அதுவேளை சுந்தர மூர்த்திசுவாமிகளது திருப்பாட்டை விரும்பி உவந்து தாம் அவருடன் ஒரு திரு

விளையாட்டில் நின்று; சிறந்த மாற்றுடைய செம்பொன்னைக் குளத்தில் வருவியாது செய்து ஒழித்தருளலும் அதுகண்டு கரையில் நின்ற வணிகர் அணிந்த பரவை அம்மை சுந்தரமூர்த்தி சுவாமிகளைநோக்கி ஆற்றில்போட்டு குளத்தில் தேடுகிறீரே என் ஐயனே! உம் அருள் இதுதானு? சொல்லும் எனக் கேட்டருளலும் அதுகண்டு தனித்தொண்டராம் சுந்தரமூர்த்திசுவாமிகள். (131)

முன்செய்த அருள்வழியே முருகலர்பூங் குழற்பரவை
தன்செய்ய வாயில்நகை தாராமே தாரும் என
மின்செக நூல்மார்பின் வேதியர்தாம் முதுகுன்றில்
பொன்செய்த மேனியினீர் எனப்பதிகம் போற்றிசைத்து.

"எம்பெருமானே வேண்டி; தேவரீர் முன்னர் அசரீரியாகச் செய்த அருள்வழியே அழகு விளங்கும் பூச்சூடிய கூந்தலுடைய பரவையினது செய்மையான வாயில் இகழ்ச்சியின் சிரிப்பு சேராமே "பொன்னினைத் தந்தருளும்" என்று மின்னல் ஒளி ரும் நூல் அணிந்த மார்புடைய சுந்தரமூர்த்திசுவாமிகள் முதுகுன்றில் அமர்ந்த கடவுளைப் பொன்செய்த மேனியினீர் எனத் தொடங்கிப் பதிகம் போற்றிப்பாடி அவர் பொன்பெறுது வருந்தி திருமுதுகுன்றத்து ஈசனைப் பாடியருளிய அந்தப் பதிகம் இதுவாகும்: (132)

திருமுதுகுன்றம்
பண் – நட்டராகம்
திருச்சிற்றம்பலம்

பொன்செய்த மேனியினீர் புலித்தோலை அரைக்கசைத்தீர்
முன்செய்த மூவெயிலும் மெரித்தீர்முது குன்றமர்ந்தீர்
மின்செய்த நுண்ணிடையாள் பரவையிவள் தன்முகப்பே
என்செய்த வாறடிகேள் அடியேன்இட் டளங்கெடவே. 1

உம்பரும் வானவரும் உடனேநிற்க வேயெனக்குச்
செம்பொனைத் தந்தருளித் திகழும்முது குன்றமர்ந்தீர்
வம்பம ருங்குழலாள் பரவையிவள் வாடுகின்றாள்
எம்பெரு மான்அருளீர் அடியேன்இட் டளங்கெடவே. 2

பத்தா பத்தர்களுக் கருள்செய்யும் பரம்பரனே
முத்தா முக்கணனே முதுகுன்றம் அமர்ந்தவனே
மைத்தா ருந்தடங்கண் பரவையிவள் வாடாமே
அத்தா தந்தருளாய் அடியேன்இட் டளங்கெடவே. 3

மங்கையொர் கூறமர்ந்தீர் மறைநான்கும் விரித்துகந்தீர்
திங்கள் சடைக்கணிந்தீர் திகழும்முது குன்றமர்ந்தீர்
கொங்கைநல்லாள்பரவை குணங்கொண்டிருந்தாள் முகப்பே
அங்கண னேயருளாய் அடியேன்இட் டளங்கெடவே. 4

மையா ரும்மிடற்றாய் மருவார்புரம் மூன்றெரித்த
செய்யார் மேனியனே திகழும்முது குன்றமர்ந்தாய்
பையா ரும்மரவே ரல்குலாள்இவள் வாடுகின்றாள்
ஐயா தந்தருளாய் அடியேன்இட் டளங்கெடவே. 5

நெடியான் நான்முகனும் இரவியொடும் இந்திரனும்
முடியால் வந்திறைஞ்ச முதுகுன்றம் அமர்ந்தவனே
படியா ரும்மியலாள் பரவையிவள் தன்முகப்பே
அடிகேள் தந்தருளீர் அடியேன்இட் டளங்கெடவே. 6

கொந்தண வும்பொழில்சூழ் குளிர்மாமதில் மாளிகைமேல்
வந்தண வும்மதிசேர் சடைமாமுது குன்றுடையாய்
பந்தண வும்விரலாள் பரவையிவள் தன்முகப்பே
அந்தண னேயருளாய் அடியேன்இட் டளங்கெடவே. 7

பரசா ருங்கரவா பதினெண்கண முஞ்சூழ
முரசார் வந்ததிர முதுகுன்றம் அமர்ந்தவனே
விரைசே ருங்குழலாள் பரவையிவள் தன்முகப்பே
அரசே தந்தருளாய் அடியேன்இட் டளங்கெடவே. 8

ஏத்தா திருந்தறியேன் இமையோர்தனி நாயகனே
மூத்தா யுலகுக்கெல்லாம் முதுகுன்றம் அமர்ந்தவனே
பூத்தா ருங்குழலாள் பரவையிவள் தன்முகப்பே
கூத்தா தந்தருளாய் கொடியேன்இட் டளங்கெடவே. 9

பிறையா ருஞ்சடைஎம் பெருமான் அருளாய்என்று
முறையால் வந்தமரர் வணங்கும்முது குன்றர்தம்மை
மறையார் தங்குரிசில் வயல்நாவலா ரூரன்சொன்ன
இறையார் பாடல்வல்லார்க் கெளிதாஞ்சிவ லோகமதே. 10

திருச்சிற்றம்பலம்

முட்டஇமை யோர்அறிய முதுகுன்றில் தந்தபொருள்,
சட்டநான் பெருதொழிந்த தளர்வினுல் கையறவாம்,
இட்டளத்தை இவளெதிரே கெடுத்தருளும் எனுந்திருப் பாட்டு,
எட்டளவும் பொன்காட்டா தொழிந்தருள ஏத்து வார்.

முழுவதும் தேவர் அறிய நீர்திருமுது குன்றில் தந்த பொருள் மிகவும் உடன் நான் பெருதுபோன தளர்ச்சியினுல் வரும் துன்பமாம் அக்கொடுமையை இந்த பரவை முன்னைக் கெடுத்தருளும் என மொழிகின்ற அத்திருப்பாட்டுப் பாடியருள லும் எட்டுணை யேனும் பொன்காட்டாது ஒழிந்தருளலும் பின்னும் துதிக்கின்றார் 133

ஏத்தாதே இருந்தறியேன் எனுந்திருப்பாட்டெவ் வுலகும்,
காத்தாடும் அம்பலத்துக் கண்ணுளனுங் கண்ணு தலைக்,
கூத்தா தந்தருளாய்இக் கோமளத்தின் முன் என்று,
நீத்தாருந் தொடர்வரிய நெறிநின்றார் பரவுதலும்.

எம்பெருமானே உம்மை எக்காலமும் ஏத்தாது நான் இருந்தறியேன் எனவரும் திருப்பாட்டில் எல்லா உலகினையும் அல்லலுறுது அம்பலத்துள் நிறைந்து காத்து ஆடுகின்ற கண்ணுதற் பெருமானையே நினைந்து உருகி கூத்தா! பொன்னினைத் தந்தருள் வாய் இந்த பரவைமுன்பாக என்று; பற்றுக்களை ஆசைகளை எல்லாம் அறுத்தெறிந்த பெரியோர்களும் தொடர்ந்து பற்றுதற்கரிய நெறிநின்ற எம் சுந்தரமூர்த்தி சுவாமி கள் போற்றுதலும்: 134

கொந்தவிழ்பூங் கொன்றைமுடிக் கூத்தனார் திருவருளால்
வந்தெழுபொன் திரளெடுத்து வரன்முறையாற் கரையேற்ற
அந்தரத்து மலர்மாரி பொழிந்திழிந்த(து) அவனியுளோர்
"இந்தஅதி சயம்என்னே! யார்பெறுவார்?" எனத்தொழுதார்.

வாசனை விரிந்த மலராகும் கொன்றைமாலையை முடி மீது சூடியவரும் கூத் தாடுபவருமாய கடவுளின் திருவருளால் அப்பொழுது குளத்தின் கண் வந்து எழுந்த பொன்னின் திரளினை எடுத்து; வரன்முறையால் கரையில் சேர்த்திடலும்; அது போது அந்தரத்திருந்து மலராய மழை பொழிந்து வழிந்தது. இதனைக் கண்ட பூமியில் உள்ளோர்கள் இந்த அதிசயம் என்னவாகும் யார் இதனைப் பெறுவார் எனப் போற்றித் தொழுதார்கள்: 135

ஞாலம்வியப் பெய்தவரு நற்கனக மிடைஎடுத்து
மூலமெனக் கொடுபோந்த ஆணியை முன் உரைப்பிக்க
நீலமிடற்றவர் அருளால் உரைதாழப் பின்னும்நெடு
மாலயனுக் கரியகழல் வழுத்தினார் வன்றொண்டர்.

இந்த பூமி அதிசையிக்கும் படிவந்த நல்லபொன்னின் குவியலில் ஓர் மாதிரி இடை எடுத்து; முன்னர் முத்தாற்றில் இட்டபோது மூலமான பொன் இது வெனக் கொண்டுவந்த அப்பொன்னின்இணையாகஇந்த பொன்னினும் உரைப்பித்த பொழுது அதுவேனே நீலகண்டமுடைய கடவுள் அருளால் அந்தஉரைமுன்னுகக் கொண்டுவந்த பொன்னுக்கு மாற்றுத் தாழ்ந்துதொடுத்திடலும் பின்னரும் நெடிய திருமால் பிரமன் இவர்கட்கும் காணமுடியாத திருவடிகளே சுந்தரமூர்த்தி சுவாமிகள் போற்றினர். 136

மீட்டும் அவர் பரவுதலும் மெய்யன்பர் அன்பில்வரும்
பாட்டுவந்து கூத்துவந்தார் படுவாசி முடிவெய்தும்
ஓட்டறுசெம் பொன்னெக்க ஒருமாவுங் குறையாமல்
காட்டுதலும் மகிழ்ந்தெடுத்துக் கொண்டுகரை ஏறினார்

மீட்டும் சுந்தரமூர்த்திசுவாமிகள் வணங்குதலும் மெய்யான அன்பர்களது அன்பில் வருகின்ற பாட்டினை மகிழ்வுடன் ஏற்று கூத்தினையும் மகிழ்ந்து புரிகின்ற பெருமான்; சுந்தரமூர்த்தி சுவாமிகட்கு தாம் கொடுத்த பொன்னில் குறைவெய்திய அக்குறைபாடுகள் முடிந்து விளங்கிட பிறிது நிகரிலாது செம்பொன் முழுவதும் ஒருமாவிடையும் குறையாமல் காட்டுதலும் அதனை மகிழ்ந்து எடுத்துக் கரை ஏறினர். 137

கரையேறிப் பரவையா ருடன்கனக மானதெலாம்
நிரையேயா ளிற்சுமத்தி நெடுநிலீமா ளிகைபோக்கித்
திரையேறும் புனற்சடிலத் திருமூலட் டானத்தார்
விரையேறு மலர்ப்பாதந் தொழுதணைந்தார் வீதியினில்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் பொன்னுடன் கரையில் ஏறி பரவை அம்மை யாருடன் அந்தப்பொன் எல்லாம் நிரையேயாக ஆட்களின் தலைமேல் சுமத்தி நெடிய நிலையுடைய மாளிகையில் போகுமாறு சேர்த்தி திரைகள் மிகும் நீருடைய கங்கையைச் சடைமேல் உடைய திருவாரூர் திருமூலட்டானத்து அமர்ந்த சிவபெருமானின் வாசனை நிலவும் மலரடி தொழுது வந்து சேர்ந்தார் திருவீதியினில். 138

வந்துதிரு மாளிகையின் உட்புகுந்து மங்கலவாழ்த்(து)
அந்தமிலா வகையெத்தும் அளவிறந்தார் ஓலிசிறப்பச
சிந்தைநிறை மகிழ்ச்சியுடன் சேயிழையா ருடன் அமர்ந்தார்
சந்தமலி மலர்ச்சோலை நாவலர்தங் காவலனார்.

திருவீதியினில் வந்து திருவுடைய மாளிகையில் உட்புகுந்து கொள்ளும் போது; மங்கலவாழ்த்தினை முடிவிலாவகை போற்றிக்கொள்கின்ற அளவிறந்தோருடைய ஓசை சிறந்தெழ; சிந்தை நிறைந்த மகிழ்ச்சியுடன் அழகிய ஆபரணங்களை அணிந்த அம்மையாருடன் அங்குதங்கியருளினர் வாசனைகொண்ட மலர் சிறந்த சோலை உடைய நாட்டில் வாழும்; நாவினுல் சிறந்த வாக்குடையோரின் காவலனர் சுந்தரமூர்த்தி சுவாமிகள். 139

அணியாரூர் மணிப்புற்றின் அமர்ந்தருளும் பரம்பொருளைப்
பணிவார்அங் கொருநாளிற் பாராட்டுந் திருப்பதிகம்
தணியாத ஆனந்தம் தலைசிறப்பத் தொண்டருடன்
துணிவாய பொருள் வினவித் தொழுதாடிப் பாடுவார்.

அழகிய திருவாரூரினில் முத்துமணிபோலும் திவ்விய கறையான் புற்றின்மீது அமர்ந்தருளிக் கொண்ட பரம்பொருளாய சிவனை பணிகின்ற எம் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அங்குஓர்நாள் எம்பிரான் கருணையைப் பாராட்டும் திருப்பதிகம் ஒன்று தமது உள்ளத்து தணியாது எழுகின்ற ஆநந்தம் தலைசிறந்து மேற்பாடலால் அடியாருடன் மகிழ்ந்து: தமது வாழ்விற்கு நற்றுணையாய பொருளினைக் கேட்டுத் தொழுது ஆடிப்பாடுவார். 140

பண்ணிறையும் வகை பாறு தாங்கி என எடுத்தருளி
உண்ணிறையும் மனக்களிப்பால் உறுபுளகம் மயிர்முகிழ்ப்பக்
கண்ணிறையும் புனல்பொழியக் கரைஇகந்த ஆனந்தம்
எண்ணிறைந்த படி தோன்ற ஏத்திமகிழ்ந் தினிபுற்றார்.

பண்ணிறைந்த வகையால் 'பாறுதாங்கி' எனப்பாட எடுத்தருளி உன்மைநிறைந்த மனக்களிப்பால் உடல்மேல் உற்ற புனகாங்கிதமர்க மயிர்கள் கூச்செறிந்திட; கண்ணுல் நிறைகின்ற நீர் பொழிந்திட கரை கடந்த ஆனந்தம் எண்ணத்து நிறைந்த படி தோன்றிட ஏத்திமகிழ்ந்து இன்புற்றார் சுந்தரமூர்த்திசுவாமிகள்.

உவமை கடந்து உள்ளத்து எழுகின்ற ஆநந்தத்தேனே நினைய எழும் களிப்பு அளப்பரியதாக; சிந்தையை மகரும்படிதொடர்ந்து அந்த ஆநந்தமே ஊற்றெடுத்திட எம்பிரானே தரிசித்துப் பாடிய அப்பதிகம் இதுவாகும். 141

பண் – கொல்லி
திருச்சிற்றம்பலம்

பாறுதாங்கிய காடரோபடு தலையரோமலைப் பாவைஓர்
கூறுதாங்கிய குழகரோகுழைக் காதரோதுறுங் கோட்டிளை
ஏறுதாங்கிய கொடியரோசுடு பொடியரோஇலங்கும் பிறை
ஆறுதாங்கிய சடையரோநமக் கடிகளாகிய அடிகளே. 1

இட்டிதாகவந்துரை மினெனுமக்கிசையுமா நினைந்தேத்துவீர்
கட்டிவாழ்வது நாகமோசடை மேலும்நாறு கரந்தையோ
பட்டிஏறுகந் தேறரோபடு வெண்டலைப்பலி கொண்டுவந்
தட்டிஆளவுங் கிற்பரோநமக் கடிகளாகிய அடிகளே. 2

ஒன்றினீர்கள்வந் துரைமினெ நுமக் கிசையுமாநினைந் தேத்துவீர்
குன்றிபோல்வதோருரு வரோகுறிப் பாகிநீறுகொண் டணிவரோ
இன்றியேயிலர் ஆவரோ அன்றி உடையராயிலர் ஆவரோ
அன்றியேமிக அறவரோ நமக் கடிகளாகிய அடிகளே. 3

தேனை ஆடுமுக்கண்ண ரோமிகச்செய்யரோ வெள்ளை நீற்றரோ
பால்னெய் ஆடலும் பயில்வரோதமைப் பற்றினர்கட்கு நல்லரோ
மானை மேவியகண்ணினுள் மலைமங்கை நங்கையை அஞ்சவோர்
ஆனையீர்உரி போர்ப்பரோநமக் கடிகள கிய அடிகளே. 4

கோணல்மாமதி சூடரோகொடு கொட்டிகாலர் கழலரோ
வீணைதானவர் கருவியோவிடை ஏறுவேத முதல்வரோ
நாணதாகஓர் நாகங்கொண்டரைக் கார்ப்பரோநலம் ஆர்தர
ஆணையாகநம் அடிகளோநமக் கடிகளாகிய அடிகளே. 5

வந்துசொல்லு மின்மூடனேனுக்கு வல்லவா நினைந்தேத்துவீர்
வந்தசாயினை அறிவரோதம்மை வாழ்த்தினர்கட்கு நல்லரோ
புந்தியால்உரை கொள்வரோ அதற்பொய்யின்மெய்யுரைத்தாள்வரோ
அன்றியேமிக அறவரோ நமக் கடிகளாகிய அடிகளே. 6

மெய்யெனச்சொல்லுமின் நமரங்காளுமக் கிசையுமா நினைந்தேத்துவீர்
கையிற்சூலம துடையரோகரி காடரோகறைக் கண்டரோ
வெய்யபாம்பரை ஆர்ப்பரோவிடை ஏறரோகடை தோறுஞ்சென்
றையங்கொள்ளுமவ் வடிகளோ நமக்கடிகளாகிய அடிகளே. 7

நீடுவாழ்பதி உடையரோ அயன் நெடியமாலுக்கு நெடியரோ
பாடுவாரையும் உடையரோதமைப் பற்றினார்கட்கு நல்லரோ
காடுதான் அரங் காகவேகைகள் எட்டினேடில யம்பட
ஆடுவாரெனப் படுவரோநமக் கடிகளாகிய அடிகளே. 8

நமணநந்தியுங் கருமவீரனுந் தருமசேனனும் என்றிவர்
குமணமாமலைக் குன்றுபோனின்று தங்கள்கூறைஒன் றின்றியே
ஞமணஞாஞணஞாணஞோணமென் றோதியாரையுநாணிலா
அமணராற்பழிப் புடையரோநமக் கடிகளாகிய அடிகளே 9

படிசெய்நீர்மையிற் பத்தர்காள்பணித் தேத்தினேன் பணியீரருள்
வடிவிலான்திரு நாவலூரன் னெப்பகையப் பன்வன்றொண்டன்
செடியனேகிலுந் தீயனேகிலுந் தம்மையேமனஞ் சிந்திக்கும்
அடியனூரனே ஆள்வரோநமக் கடிகளாகிய அடிகளே. 10

திருச்சிற்றம்பலம்

இன்புற்றங் கமர்நாளில் ஈறில்அரு மறைபரவும்
வன்புற்றின் அரவணிந்த மன்னவனூர் அருள்பெற்றே
அன்புற்ற காதலுடன் அளவிறந்த பிறபதியும்
பொன்புற்கென் றிடஒளிருஞ் சடையாரைத் தொழப்போவார்.

திருவாரூரில் அமர்ந்த நீனைத்தற்கரிய தேனே நீனைந்து பணிந்து இன்புற்றங்கு அமர்கின்ற காலத்தில் முடிவிலாத வேதங்கள் போற்றும் வலிமையாய புற்றின் மீதுள்ள பாம்பணிந்த அரசனூர் கருவடி பணிந்து அருள்பெற்று அன்புகொண்ட காதலுடன் அளவிறந்த பிற தலங்களிலும் பொன்னின் ஒளி சிறந்திட மிளிரும் சடையுடைய பெருமானைத் தொழுதிடப்போவார். 142

பரிசனமும் உடன்போதப் பாங்கமைந்த பதிகள் தொறும்
கரியுரிவை புனைந்தார்தங் கழல்தொழுது மகிழ்ந் தேத்தித்
துரிசறுநற் பெருந்தொண்டர் நள்ளாறு தொழுவதற்குப்
புரிவுறுமெய்த் திருத் தொண்டர் எதிர்கொள்ளப் புக்கணைந்தார்.

தமக்கு ஏவல்ப் பணிபுரிகின்ற பரிசனர்களும் உடன்சென்றிட; பக்கராக அமைந்திருக்கின்ற கோயில்கள் தோறும் சென்று; அத்தலங்களில் எல்லாம் யாண்டும் தோலினைப் போர்த்பெருமானது திருவடி தொழுது: மகிழ்ந்து கும்பிட்டு குற்றம் அற்ற பெரும் தொண்டர் எம் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருநள்ளாறு என்னும் கோவிலினை வணங்கிடுதற்கு; இவர்பால் அன்புற்ற அடியார்கள் அங்கிருப்பார் வந்து எதிர்கொள்ள உள்ளே புகுந்து சென்றார். 143

விண்தடவு கோபுரத்தைப் பணிந்துகரம் மேற்குவித்துக்
கொண்டுபுகுந் தண்ணலார் கோயிலினை வலஞ்செய்து
மண்டியபே ரன்பினெடு மன்னுதிரு நள்ளாறர்
புண்டரிகச் சேவடிக்கீழ்ப் பொருந்தநில மிசைப்பணிந்தார்.

திருநள்ளாறு என்னும் அத்தலத்தின் வானம் அளாவிய கோபுரத்தைத் பணிந்து கைகள் உச்சிமேற் குவித்துக்கொண்டு உட்புகுந்தருளி எம்பெருமானுடையகோயிலினை வலம் செய்து உள்ளத்து பெருகும்பேரன்புடன் சென்றும் அங்கு விளங்கும் திருநள்ளாற்றுப்பெருமானின்செந்தாமரை மலர் போலும் சேவடியின் கீழாக பொருந்திட நிலத்தின் மீது பணிந்தார். 144

அங்கணரைப் பணிந்தேத்தி அருளினுல் தொழுதுபோய்
மங்குலணி மணிமாடத் திருக்கடவூர் வந்தெய்தித்
திங்கள்வளர் முடியார்தந் திருமயா னமும்பணிந்து
பொங்கும்இசைப் பதிகம் "மரு வார்கொன்றை" எனப்போற்றி.

நெற்றியில் கண் உடைய கடவுளை அத்தலத்து பணிந்து போற்றி திருவருளினுல் அவ்விடம் தொழுது நீங்கிப் போய் மேகங்கள் தங்கிய அழகிய மாடங்கள் நிரம்பும் திருக்கடவூர் என்னும் தலத்தை வந்தடைந்து பணிந்து அடுத்து; இளம்பிறை மலரும் சடை முடியுடைய பெருமானது திருமயானம் என்னும் தலமும் பணிந்து பொங்கும் இசையுடைய தேவாரப்பதிகம் மருவார் தொன்றை எனத்தொடங்கி பாடிப் போற்றி செய்து
அவர் திருக்கடவூர் திருமயானம் என்னும் தலத்து எம்பிரானைப் பாடிய மருவார் கொன்றை எனும் பதிகம் இதுவாகும் 145

திருக்கடவூர் மயானம்

பண் — பழம்பஞ்சுரம்
திருச்சிற்றம்பலம்

மருவார் கொன்றை மதிசூடி மாணிக் கத்தின் மலைபோல
வருவார் விடைமேல் மாதோடு மகிழ்ந்து பூதப் படைசூழத்
திருமால் பிரமன் இந்திரற்கும் தேவர் நாகர் தானவர்க்கும்
பெருமான் கடவூர் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே. 1

விண்ணோர் தலைவர் வெண்புரிநூல் மார்பர் வேத கீதத்தர்
கண்ணுர் நுதலர் நகுதலையர் கால காலர் கடவூரர்
எண்ணுர் புரமூன் றெரிசெய்த இறைவ ருமையோர் ஒருபாகம்
பெண் ஆண் ஆவர் மயானத்துப் பெரிய பெருமானடிகளே. 2

காயும் புலியின் அதளுடையர் கண்டர் எண்டோட் கடவூரர்
தாயும் தந்தை பல்லுயிர்க்கும் தாமே ஆய தலைவனுர்
பாயும் விடையொன் றதுவேறிப் பலிதேர்ந் துண்ணும் பரமேட்டி
பேய்கள் வாழும் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே. 3

நறைசேர் மலரைங் கணையானை நயனத் தியாற் பொடிசெய்த
இறையா ராவர் எல்லார்க்கும் இல்லை என்னு தருள்செய்வார்
பறையார் முழவம் பாட்டோடு பயிலுந் தொண்டர் பயில்கடவூர்
பிறையார் சடையார் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே. 4

கொத்தார் கொன்றை மதிசூடிக் கோள்நா கங்கள் பூணுக
மத்த யானை உரிபோர்த்து மருப்பும் ஆமைத் தாலியார்
பத்தி செய்து பாரிடங்கள் பாடி ஆடப் பலிகொள்ளும்
பித்தர் கடவூர் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே. 5

துணிவார் கீளுங் கோவணமுந் துதைந்து கடலைப் பொடி அணிந்து
பணிமேல் இட்ட பாசுபதர் பஞ்ச வடிமார் பினர்கடவூர்த்
திணிவார் குழையார் புரமூன்றுந் தீவாய்ப் படுத்த சேவகனூர்
பிணிவார் சடையார் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே. 6

காரார் கடலின் நஞ்சுண்ட கண்டர் கடவூர் உறைவாணர்
தேரா ரரக்கன் போய்வீழ்ந்து சிதைய விரலா லூன்றினர்
ஊர்தான் ஆவ துலகேழும் உடையார்க் கொற்றி யூராரூர்
பேரோயிரவர் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே. 7

வாடா முலையாள் தன்னோடும் மகிழ்ந்து காலில் வேடுவனுய்க்
கோடார் கேழற் பின்சென்று குறுகி விசயன் தவமழித்து
நாடா வண்ணஞ் செருச்செய்து ஆவ நாழி நிலையருள்செய்
பீடார் சடையார் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே; 8

வேழம் உரிப்பார் மழுவாளர் வேள்வி அழிப்பர் சிரமறுப்பர்
ஆழி அளிப்பர் அரிதனக்கன்(று) ஆனஞ் சுப்பர் அறமுரைப்பர்
ஏழைத் தலைவர் கடவூரில் இறைவர் சிறுமான் மறிக்கையர்
பேழைச் சடையர் மயானதுப் பெரிய பெருமா னடிகளே. 9

மாடம் மல்கு கடவூரில் மறையோர் ஏத்தும் மயானத்துப்
பீடை தீர அடியாருக் கருளும் பெருமா னடிகள்சீர்
நாடி நாவ லாரூரன் நம்பி சொன்ன நற்றமிழ்கள்
பாடும் அடியார் கேட்பார்மேற் பாவம் ஆன பறையுமே. 10

திருச்சிற்றம்பலம்

திருவீரட் டானத்துத் தேவர்பிரான் சினக்கூற்றின்
பொருவீரந் தொலைத்தகழல் பணிந்து ''பொடியார்மேனி''
மருஈரத் தமிழ்மாலை புனைத்தேத்தி மலிவளைத்த
பெருவீரர் வலம்புரத்துப் பெருகார்வத் தொடுஞ்சென்றார்.

திருக்கடவூர் வீரட்டானத்து அமர்ந்த தேவாதி தேவனது கோபமுடைய இயமனின் போரிடும் வீரம் தொலைந்த திருவடிகள் பணிந்து கால சங்காரனுய எம் பெருமானே பொடியார் மேனி எனத் தொடங்கும் கனிந்துருகும் தமிழ்மாலை பாடிப் போற்றி வணங்கி அப்பால் மேருமலையை வளைத்த பெரும் வீரனும் சிவன் அமர்ந்த திருவலம் புரம் என்னும் தலத்து பெருகிய ஆர்வத்தோடும் சென்றார்.

திருக்கடவூர் வீரட்டானத்து அமர்ந்த தித்திக்கும் அமுதான பெருமானின் கூற்றை உதைத்த திருப்பாதம் தொழுதுபாடிய பொடியார் மேனியனே எனத் தொடங்கும் பதிகம் இதுவாகும். 146

திருக்கடவூர் வீரட்டம்

பண் — நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

பொடியார் மேனியனே புரிநூல்ஒரு பாற்பொருந்த
வடியார் மூவிலைவேல் வளர்கங்கையின் மங்கையொடும்
கடியார் கொன்றையனே கடவூர்தனுள் வீரட்டத்தெம்
அடிகேள் என்அமுதே எனக்கார்துணை நீயலதே. 1

பிறையா ருஞ்சடையாய் பிரமன்தலை யிற்பலிகொள்
மறையார் வானவனே மறையின்பொருள் ஆனவனே
கறையா ரும்மிடற்றாய் கடவூர்தனுள் வீரட்டத்தெம்
இறைவா என்அமுதே எனக்கார்துணை நீயலதே. 2

அன்று வின்நிழற்கீழ் அறம்நால்வர்க் கருள்புரிந்து
கொன்றாய் காலனுயிர் கொடுத்தாய்மறை யோனுக்குமான்
கன்று ருங்கரவா கடவூர்த்திரு வீரட்டத்துள்
என்தா தைபெருமான் எனக்கார்துணை நீயலதே. 3

போரா ருங்கரியின் உரிபோர்த்துப்பொன் மேனியின்மேல்
வாரா ரும்முலையாள் ஒருபாகம் மகிழ்ந்தவனே
காரா ரும்மிடற்றாய் கடவூர்தனுள் வீரட்டானத்
தாரா என்அமுதே எனக்கார்துணை நீயலதே. 4

மையார் கண்டத்தினுய் மதமாவுரி போர்த்தவனே
பொய்யா தென்உயிருட் புகுந்தாயின்னம் போந்தறியாய்
கையார் ஆடரவா கடவூர்தனுள் வீரட்டத்தெம்
ஐயா என்அமுதே எனக்கார்துணை நீயலதே. 5

மண்ணீர் தீவெளிகால் வருபூதங்கள் ஆகிமற்றும்
பெண்ணே டாணலியாய்ப் பிறவாஉரு ஆனவனே
கண்ணு ரும்மணியே கடவூர்தனுள் வீரட்டத்தெம்
அண்ணு என்அமுதே எனக்கார்துணை நீயலதே. 6

எரியார் புன்சடைமேல் இளநாகம் அணிந்தவனே
நரியா ருஞ்சுடலை நகுவெண்டலை கொண்டவனே
கரியார் ஈருரியாய் கடவூர்தனுள் வீரட்டத்தெம்
அரியாய் என் அமுதே எனக்கார்துணை நீயலதே. 7

வேரு உன்னடியேன் விளங்குங்குழைக் காதுடையாய்
தேறேன் உன்னையல்லாற் சிவனேயென் செழுஞ்சுடரே
காரூர் வெண்மருப்பா கடவூர்த்திரு வீரட்டத்துள்
ஆரூர் செஞ்சடையாய் எனக்கார்துணை நீயல த. 8

அயனே டன்றரியும் அடியும்முடி காண்பரிய
பயனே எம்பரனே பரமாய பரஞ்சுடரே
கயமா ருஞ்சடையாய் கடவூர்த்திரு வீரட்டத்துள்
அயனே என் அமுதே எனக்கார்துணை நீயலதே. 9

காரா ரும்பொழில்சூழ் கடவூர்திரு வீரட்டத்துள்
ஏரா ரும்மிறையைத் துணையாஎழில் நாவலர்கோன்
ஆரூ ரன்னடியான் அடித்தொண்டன் உரைத்ததமிழ்
பாரோர் ஏத்தவல்லார் பரலோகத் திருப்பாரே. 10

திருச்சிற்றம்பலம்

வரையோடு நிகர்புரிசை வலம்புரத்தார் கழல்வணங்கி
உரையோசைப் பதிகம்''எனக்கினி''ஓதிப் போய்சங்கம்
நிரையோடு துமித்தூப மணித்தீபம் நித்திலப்பூந்
திரையோதங்கொண்டிறைஞ்சுந் திருச்சாய்க்காடெய்தினார்.

மலையோடு ஒத்த மதில் சூழ்ந்த திருவலம் புரம் என்னும் தலத்தில் அமர்ந்த பெருமானது திருவடி வணங்கி சிறந்த ஓசை உடைய திருப்பதிகம் எனக்கினி எனத் தொடங்கி பாடிப் போற்றி அப்பால் சென்று சங்குகளின் நிரைபோடு துளிகளையும் அழகிய திரையுடைய கடல்போற்றிக் கொண்டு வணங்கும் திருச்சாய்க் காடு என்னும் தலத்தில் வந்து சேர்ந்தார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.
அவர் திருவலம்புரத்து ஈசனை பாடிய புகழ் சிறந்த ஓசையுடைய தமிழ் வேதமாகும் எனக்கினி எனத் தொடங்கும் பதிகம் இதுவாகும். 147

திருவலம்புரம்

பண் — காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

எனக்கிலித் தினைத்தனைப் புகலிடம் அறிந்தேன்
பனைக்கனி பழம்படும் பரவையின் கரைமேல்
எனக்கினி யவன்தமர்க் கினியவன் எழுமையும்
மனக்கினி யவன்றன திடம்வலம் புரமே. 1

புரமவை எரிதர வலைந்தவில் லினன் அவன்
மரவுரி புலியதள் அரைமிசை மருவினன்
அரவுரி இரந்தவன் இரந்துண விருப்பினன்(று)
இரவெரி யாடிதன் இடம்வலம் புரமே. 2

நீறணி மேனியன் நெருப்புமிழ் அரவினன்
கூறணி கொடுமழு ஏந்தியோர் கையினன்
ஆறணி அவிர்சடை அழல்வளர் மழலேவெள்
ஏறணி அடிகள்தம் இடம்வலம் புரமே. 3

கொங்கணி சுரும்புண நெருங்கிய குளிர்இளம்
தெங்கொடு பனைபழம் படும்இடந் தேவர்கள்
தங்கிடும் இடந்தடங் கடற்றிரை புடைதர
எங்கள தடிகள்நல் இடம்வலம் புரமே. 4

கொடுமழு விரசினன் கொலைமலி சிலையினன்
நெடுமதில் சிறுமையின் நிரவவல் லவனிடம்
படுமணி முத்தமும் பவளமும் மிகச்சுமந்(து)
இடுமணல் அடைகரை இடம்வலம் புரமே. 5

கருங்கடக் களிற்றுரிக் கடவுள திடங்கயல்
நெருங்கிய நெடும்பணை அடும்பொடு விரவிய
மருங்கொடு வலம்புரி சலஞ்சலம் மணம்புணர்ந்(து)
இருங்கடல் அடைகரை இடம்வலம் புரமே. 6

நரிபுரி காடரங் காநடம் ஆடுவர்
வரிபுரி பாடநின் ருடும்எம் மான்இடம்
புரிகுரி வரிகுழல் அரிவையோர் பால்மகிழ்ந்(து)
எரிஎரி யாடிதன் இடம்வலம் புரமே. 7

பாறணி முடைதலை கலன்என மருவிய
நீறணி நிமிர்சடை முடியினன் நிலவிய
மாறணி வருதிரை வயல்அணி பொழிலது
ஏறுடை அடிகள்தம் இடம்வலம் புரமே. 8

சடசட விடுபெணை பழம்படும் இடவகை
படவட கத்தொடு பலிகலந் துலவிய
கடைகடை பலிதிரி கபாலிதன் இடமது
இடிகரை மணல்அடை இடம்வலம் புரமே. 9

குண்டிகைப் படப்பினில் விடக்கினை ஒழித்தவர்
கண்டவர் கண்டடி வீழ்ந்தவர் கனைகழல்
தண்டுடைத் தண்டிதன் இனமுடை அரவுடன்
எண்டிசைக கொருசுடர் இடம்வலம் புரமே. 10

திருச்சிற்றம்பலம்

தேவர்பெரு மான்தன்னைத் திருச்சாய்க்காட்டினிற்பணிந்து
பாவலர்செந் தமிழ்மாலைத் திருப்பதிகம் பாடிப்போய்
மேவலர்தம் புரம்எரித்தார் வெண்காடு பணிந்தேத்தி
நாவலர்கா வலர்அடைந்தார் நனிபள்ளித் திருநகரில்

திருச்சாய்க் காடு என்னும் தலத்து சென்று தேவரது பெருமானை அங்கு பணிந்து பாடலாக அலரும் தமிழ் வேதம் எனும் செந்தமிழ் மாலைத் திருப்பதிகம் பாடி அப்பால் போய் பகைவர் உடைய முப்புரங்களையும் எரித்த பேருமானின் திருவெண்காடு என்னும் தலமும் பணிந்து போற்றி நாவன்மை உடைய புலவர்க்கு என்றும் காவலராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருநனிபள்ளித் திருநகரிடத்துச் சேர்வுற்றார்

நனிபள்ளி அமர்ந்தபிரான் கழல்வணங்கி நற்றமிழன்
புனிதநறுந் தொடைபுனைந்து திருச்செம்பொன் பள்ளிமுதல்
பனிமதிசேர் சடையார்தம் பதிபலவும் பணிந்துபோய்த்
தனிவிடைமேல் வருவார்தம் திருநின்றி யூர்சார்ந்தார்.

திருநனிபள்ளி என்னும் தலத்து அமர்ந்த சிவபெருமான் திருவடி வணங்கி நல்ல தமிழினால் புனிதமாய் தித்திப்பாய் தமிழ் மாலை தொடுத்து திருப்பதிகம் பாடி; அப்பால் சென்று திருச் செம்பொன் பள்ளி முதலாக உள்ள குளிர்ந்த இளம்பிறை சேர்ந்த சடையுடைய பெருமானது தலங்கள் பலவும் பணிந்து போய் தனியான இடபத்தின்மேல் வரும் பெருமானது திருநின்றியூர் என்னும் தலத்தினைச் சேர்ந்தார். அவர் திருநனிபள்ளியில் வணங்கிப் பாடிய திருப்பதிகம் இதுவாகும். 149

திருநனிபள்ளி

பண் – பஞ்சமம்
திருச்சிற்றம்பலம்

ஆதியன் ஆதிரை யன்அயன் மால்அறி தற்கரிய
சோதியன் சொற்பொரு ளாய்ச்சுருங் காமறைநான்கினையும்
ஓதியன் உம்பர்தங் கோன்உல கத்தினுள் எவ்வுயிர்க்கும்
நாதியன் நம்பெரு மான்நண்ணும் ஊர்நனி பள்ளியதே. 1

உறவிலி ஊன மிலிஉண ரார்புரம் மூன்றெரியச்
செறுவிலி தன்னினை வார்வினை யாயின தேய்ந்தழிய
அறவில கும்அரு ளான்மரு ளார்பொழில் வண்டறையும்
நறவீரி கொன்றையி னான்நண்ணும் ஊர்நனி பள்ளியதே 2

வானுடை யான்பெரி யான்மனத் தாலும் நினைப்பரியான்
ஆனிடை ஐந்தமர்ந்தான் அணுவாகியோர் தீஉருக்கொண் (டு)
ஊனுடை இவ்வுட லம்ஒடுங் கிப்புகுந் தான்பரந்தான்
நானுடை மாடெம் பிரான் நண்ணும் ஊர்நனி பள்ளியதே 3

ஓடுடை யன்கல னுடை கோவண வன்னுமையோர்
பாடுடை யன்பலி தேர்ந்துணும் பண்புடை யன்பயிலக்
காடுடை யன்னிட மாமலை ஏழுங் கருங்கடல்சூழ்
நாடுடை நம்பெரு மான்நண்ணும் ஊர்நனி பள்ளியதே. 4

பண்ணற் கரிய தொருபடை ஆழி தனைப்படைத்துக்
கண்ணற் கருள்புரிந் தான்கரு தாதவர் வேள்விஅவி
உண்ணற் கிமையவ ரைஉருண் டோட உதைத்துகந்து
நண்ணற் கரிய பிரான்நண்ணும் ஊர்நனி பள்ளியதே. 5

மல்கிய செஞ்சடை மேல்மதி யும்மர வும்முடனே
புல்கிய ஆரணன் எம்புனி தன்புரி நூல்விகிர்தன்
மெல்கிய விற்றிருழி லான்விருப் பன்பெரும் பார்த்தனுக்கு
நல்கிய நம்பெரு மான்நண்ணும் ஊர்நனி பள்ளியதே 6

அங்கமொ ராறவை யும்அரு மாமறை வேள்விகளும்
எங்கும் இருந்தந் தணர்எரி மூன்றவை ஓப்பும்இடம்
பங்கய மாமுகத் தாள்உமை பங்கன் உறைகோயில்
செங்கயல் பாயும் வயல்திரு வூர்நனி பள்ளியதே. 7

திங்கட் குறுந்தெரி யல்திகழ் கண்ணியன் நுண்ணியனாய்
நங்கட் பிணிகளை வான்அரு மாமருந் தேழ்பிறப்பும்
மங்கத் திருவிர லால்அடர்த் தான்வலி அரக்கனையும்
நங்கட் கருளும் பிரான்நண்ணும் ஊர்நனி பள்ளியதே. 8

ஏன மருப்பி னெடும்எழில் ஆமையும் பூண்டுகந்து
வான மதிள்அர ணம்மலை யேயிலை யாவனைத்தான்
ஊன மில் காழிதன் னுள்ளுயர் ஞானசம் பந்தர்க்கன்று
ஞானம் அருள்புரிந் தான்நண்ணும் ஊர்நனி பள்ளியதே. 9

காலமும் நாழிசை யுந்நனி பள்ளி மனத்தின்உள்கிக்
கோலம தாய வணைக்குளிர் நாவல ஊரன்சொன்ன
மாலை மதித்துரைப் பார்மண் மற்றுவா னோர் உலகில்
சாலநல் இன்பம்எய் தித்தவ லோகத் திருப்பவரே. 10

திருச்சிற்றம்பலம்

நின்றியூர் மேயாரை நேயத்தாற் புக்கிறைஞ்சி
ஒன்றியஅன் புள்ளுருகப் பாடுவார் உடையஅரசு
என்றும்உல கிடர்நீங்கப் பாடியஏ ழெழுநூறும்
அன்றுசிறப்பித்(து)அஞ்சொல் திருப்பதிகம் அருள்செய்தார்.

திருநின்றியூர் என்னும் தலத்து வீற்றிருந்த பெருமானுரை அன்பினுல் புகுந்து வணங்கி இறைவனுடன் ஒன்றிய அன்பு உள்ளத்தை உருக்க தமிழ் வேதம் பாடும் அவர் ஆளுடைய திருநாவுக்கரசர் என்றும் உலகம் இடர்நீங்கப் பாடியருளவைத்த நாலாயிரத்துதொளாயிரம் பதிகவரலாற்றை அன்று தம்முடைய பதிகத்தில் வைத்துச் சிறப்பித்து அருள் நிறைந்த சொல்லுடைய திருப்பதிகம் பாடினுர் அவர் திருநாவுக்கரசர் பெருமான் உலகிடர் நீங்கப் பாடிவைத்த தேவாரப் பதிகத்தின் மாண்பைக் காண்பிக்கும் திருப்பதிகம் இதுவாகும். 150

திருநின்றியூர்

பண் – தக்கேசி

திருச்சிற்றம்பலம்

திருவும் வலிமையுந் திண்திறல் அரசும் சிலந்தி யார்செய்த செய்பணி கண்டு
மருவு கோச்செங்க ணன்தனக் களித்த வார்த்தை கேட்டுனின் மலரடி அடைந்தேன்
பெருகு பொன்னிவந் துந்துபன் மணியைப் பிள்ளைப் பல்கணம் பணிசெயுள் நண்ணித்
தெருவுந் தெற்றியும் முற்றமும் பற்றித் திரட்டுந் தென்திரு நின்றியூ ரானே. 1

அணிகொள் ஆடையம் பூண்அணி மாலை அமுது செய்தமு தம்பெறு சண்டி
இணைகொள் ஏழெழு நூறிரு பனுவல் ஈன்ற வன்திரு நாவினுக் கரையன்
கணைகொள் கண்ணப்பன் என்றிவர் பெற்ற காத லின்னருள் ஆதரித் தடைந்தேன்
திணைகொள் செந்தமிழ் பைங்கிளி தெரியும் செல்வத் தென்திரு நின்றியூ ரானே

மொய்த்த சீர்முந்நூற் றறுபது வேலி மூன்று நூறுவே தியரொடு நுகர்கு
ஒத்த பொன்மணிக் கலசங்கள் ஏந்தி ஒங்குநின்றியூர் என்றுனக் களிப்பப்
பத்தி செய்தஅப் பரசுரர மற்குப் பாதங்காட்டிய நீதிகண் டடைந்தேன்
சித்தர் வானவர் தானவர் வணங்கும் செல்வத் தென்திரு நின்றியூ ரானே. 3

இரவி நீள்கடர் எழுவதன் முன்னம் எழுந்து தண்முகிழ்க் கலசங்கள் ஏந்திச்
சுரபி பாற்சொரிந் தாட்டிநின் பாதந் தொடர்ந்த வார்த்தை திடம்படக் கேட்டுப்
பரவி உள்கிவன் பாசத்தை அறுத்துப் பரம லர்துனுன் பாதத்தை அடைந்தேன்
நிரவி நித்திலம் அத்தகு செம்பொன் அளிக்குந் தென்திரு நின்றியூ ரானே; 4

வந்தோர் இந்திரன் வழிபட மகிழ்ந்து வான நாடுநீ ஆள்கென அருளிச்
சந்தி மூன்றினுந் தாபரம் நிறுத்திச் சகளி செய்திறைஞ் சகத்தியர் தமக்குச்
சிந்து மாமணி அணிதிருப் பொதியிற் சேர்வு நல்கிய செல்வங்கண் டடைந்தேன்
செந்தண் மாமலர்த் திருமகள் மருவும் செல்வத் தென்திரு நின்றியூ ரானே. 5

காது பொத்தரைக் கின்னரர் உழுவை கடிக்கும் பன்னகம் பிடிப்பருஞ் சீயம்
கோதில் மாதவர் குழுவுடன் கேட்பக் கோல ஆல்கிழற் கீழ்அறம் பகர
ஏதஞ் செய்தவர் எய்திய இன்பம் யாவுங் கேட்டுநின் இணைஅடி அடைந்தேன்
நீதி வேதியர் நிறைபுகழ் உலகில் நிலவு தென்திரு நின்றியூ ரானே; 6

கோடு நான்குடைக் குஞ்சரங் குலுங்க நலங்கொள் பாதம்நின் றேத்திய பொழுதே
பீடு விண்மிசைப் பெருமையும் பெற்ற பெற்றி கேட்டுநின் பொற்கழல் அடைந்தேன்
பேடை மஞ்ஞையும் பிணைகளின் கன்றும் பிள்ளைக் கிள்ளையும் எனப்பிறை நுதலார்
நீடு மாடங்கள் மாளிகை தோறும் நிலவு தென்திரு நின்றியூ ரானே. 7–10

இப்பதிகத்து ஏனைய பாடல்கள் கிடைத்திலது.

திருச்சிற்றம்பலம்

அப்பதியில் அன்பருடன் அமர்ந்தகல்வார் அகலிடத்தில்
செப்பரிய புகழ்நீடூர் பணியாது செல்பொழுதில்
ஒப்பரியஉணர்வினுல் நினைந்தருளித் தொழலுறுவார்
மெய்ப்பொருள் வண்டமிழ்மாலை விளம்பியே மீண்டணைந்தார்.

அந்த தலத்தில் அன்பருடன் தங்கி அப்பால் செல்பவர் அகன்ற இப்பூமியில் சொல்லற்கரிய புகழுடைய திருநீடூர் என்னும் தலத்தை அடுத்துச் சென்று பணியாது செல்கின்ற நேரத்தில் தம்மிடத்தாக ஒப்பரிய அருள்வசப்பட்ட உணர்வினுல் அத்தலத்தை நினைந்தருளித் தொழுகின்றவர் உண்மைப்பொருள் நிறைந்த அருள் வண்மையான தமிழ் மாலைத் திருப்பதிகம் பாடி;மேலும் செல்லாது மீண்டு திரு நீடூர் வருகின்ருர்:

''மடலாரும் புனல்நீடூர் மருவினர்தாள் வணங்காது
விடலாமே'' எனுங்காதல் விருப்புறும்அத் திருப்பதிகம்
அடலார்சூ லப்படையார் தமைப்பாடி அடிவணங்கி
உடலாரும் மயிர்ப்புளகம் மிகப்பணிந்தங் குறைகின்ருர்.

''குளங்களில் தேங்கும் நீருடைய திருநீடூர் என்னும் தலத்து இருந்தருளும் பெருமான் திருப்பாதம் பணியாது நாம் விடலாமே''என்னும் கருத்துடைய ''ஊர் வதோர் விடை'' எனத்தொடங்கிடும் எம்பிராலுபால் மிக்க காதலின் விருப்பமுறும் அத்திருப்பதிகம் போர் விளங்கிய சூலப்படையுடைய பெருமானைப் பாடியருளி திருவடி பணிந்து; பணியும் தோறும் மெய் நிறைந்து சிலிர்க்கும் புனகாங்கிதம் மேல் மேல் எழுந்திடப் பணிந்து அங்கு நங்கியிருக்கிருர்.

திருநீடுராளைப் பணியாது விடலாமே எனப்பாடுவார்க்கும் கூச் செறியவைக்கும் அப்பதிகம் இதுவாகும்:

திருநீடூர்

பண்-தக்கேசி

திருச்சிற்றம்பலம்

ஊர்வ தோர்விடை ஒன்றுடை யானை ஒண்ணுதல் தனிக் கண்ணுத லானைக்
கார தார்கறை மாமிடற் ருனைக் கருத லாபுரம் மூன்றெரித் தானை
நீரில் வாளை வரால்குதி கொள்ளும் நிறைபு னற்கழ னிச்செல்வ நீடூர்ப்
பாரு ளார்பர வித்தெழு நின்ற பரம னைப்பணி யாவிட லாமே. 1

துன்னு வார்சடைத் தூமதி யானைத் துயக்கு ருவகை தோன்றுவிப் பானை
பன்னு நான்மறை பாடவல் லானைப் பார்த்த னுக்கருள் செய்த பிரானை
என்னை இன்னருள் எய்துவிப் பானை ஏதி லார்தமக் கேதிலன் றன்னைப்
புன்னை மாதவி போதலர் நீடூர்ப் புனித னைப்பணி யாவிட லாமே. 2

கொல்லும் மூவிலை வேலுடை யானைக் கொடிய காலனை யுங்குமைத் தானை
நல்ல வாநெறி காட்டுவிப் பானை நாளும் நாம்உகக் கின்றபி ரானை
அல்ல லில்லரு ளேபுரி வானை ஆடு நீர்வயல் சூழ்புனல் நீடூர்க்
கொல்லை வெள்ளெரு தேறவல் லானைக் கூறி நாம்பணி யாவிட லாமே. 3

தோடு காதிடு தூநெறி யானைத் தோற்ற முந்துறப் பாயவன் றன்னைப்
பாடு மாமறை பாடவல் லானைப் பைம்பொ ழிற்குயில் கூவிட மாடே
ஆடு மாமயில் அன்னமோ டாட அலைபு னற்கழ னித்திரு நீடூர்
வேட னுயபி ரானவன் றன்னை விரும்பி நாம்பணி யாவிட லாமே. 4

குற்றம் ஒன்றடி யார்இலர் ஆனுற் கூடு மாறது னைக்கொடுப் பானைக்
கற்ற கலவியி லும்மிலி யானைக் காணப் பேணும வர்க்கெளி யானை
முற்ற அஞ்சுந் துறந்திருப் பானை மூவ ரின்முத லாயவன் தன்னைச்
சுற்று நீள்வயல் சூழ்திரு நீடூர்த் தோன்ற லைப்பணி யாவிட லாமே. 5

காடில் ஆடிய கண்ணுத லானைக் கால னைக்கடிந் திட்ட பிரானைப்
பாடி ஆடும்பரி சேபுரிந் தானைப் பற்றி னேடுசுற் றம்மொழிப் பானைத்
தேடி மாலயன் காண்பரி யானைச் சித்த முந்தெளி வார்க்கெளி யானைக்
கோடி தேவர்கள் கும்பிடு நீடுர்க் கூத்த னைப்பணி யாவிட லாமே. 6

விட்டி லங்கெரி யார்க்கையி னினைவீடி லாத வியன்புக ழானைக்
கட்டு வாங்கந் தரித்தபி ராணைக் காதி லார்கன கக்குழை யானை
விட்டி லங்குபுரி நூலுடை யானை வீந்த வர்தலை ஓடுகை யானைக்
கட்டி யின்கரும் போங்கிய நீடுர்க் கண்டு நாம்பணி யாவிட லாமே: 7

மாய மாய மனங்கெடுப் பானை மனத்து ளேமதி யாய்இருப் பானைக்
காய மாயமும் ஆக்குவிப் பானைக் காற்று மாய்க்கன லாய்க்கழிப் பானை
ஒயு மாறுரு நோய்புணர்ப் பானை ஒல்லை வல்வினை கள்கெடுப் பானை
வேய்கொள் தோள்உமை பாகனை நீடுர் வேந்த னைப்பணி யாவிட லாமே. 8

கண்ட முங்கறுத் திட்டபி ராணைக் காணப் பேணு மவர்க்கெளி யானைத்
தொண்ட ரைப்பெரி தும்முகப் பானைத் துன்ப முந்துறந் தின்பெலி யானைப்
பண்டை வல்வினை கள்கெடுப் பானைப் பாக மாமதி யானவன் தன்னைக்
கெண்டை வாளை பிளர்புனல் நீடுர்க் கேண்மை யாற்பணி யாவிட லாமே. 9

அல்லல் உள்ளன தீர்த்திடு வானை அடைந்த வர்க்கமு தாயிடு வானைக்
கொல்லை வல்லர வம்மசைத் தானைக் கோல மார்கரி யின்னுரி யானை
நல்ல வர்க்கணி ஆனவன் தன்னை நானுங் காதல்செய் கின்ற பிரானை
எல்லி மல்லிகை யேகமழ் நீடுர் ஏத்தி நாம்பணி யாவிட லாமே. 10

பேரோர் ஆயிர மும்முடை யானைப் பேசி னுற் பெரி தும்மினி யானை
நீரூர் வார்சடை நின்மலன் தன்னை நீடுர் நின்றுகந் திட்டபி ராணை
ஆரூ ரன்னடி காண்பதற் கன்பாய் ஆத ரித்தழைத் திட்டஇம் மாலை
பாரூ ரும்பர வித்தொழ வல்லார் பத்த ராய்முத்தி தாம்பெறு வாரே: 11

திருச்சிற்றம்பலம்

அங்கண் இனி தமர்ந்தருளால் திருப்புன்கூர் அணைந்திறைஞ்சிக்
கொங்கலரும் மலர்ச்சோலைத் திருக்கோலக்கா அணையக்
கங்கைசடைக் கரந்தவர்தாம் எதிர்காட்சி கொடுத்தருளப்
பொங்குவிருப் பால்தொழுது திருப்பதிகம் போற்றிசைப்பார்.

அவ்விடத்து இனிதுடன் தங்கி அருளால் திருப்புன்கூர் என்னும் கோவிலையும் சென்று சேர்ந்து வணங்கி அப்பால் சென்று; வாசனை விரியும் மலர்ச்சோலையுடைய திருக்கோலக்கா என்னும் தலத்தையும் சென்று சேர்தலும் அதுவேஓ கங்கை யாற்றைச் சடைமீது மறைத்தருளிய சிவபெருமான் அவருக்கு எதிராகத் தோன்றிக் காட்சிகொடுத்தருளலும்; கண்டு உள்ளத்து பொங்கும் பெருவிருப்புடன் தொழுது; திருப்பதிகமும் போற்றிப் பாடுவார். 153

திருஞான சம்பந்தர் திருக்கைகளகல் ஒற்றிப்
பெருகார்வத் துடன்பாடப் பிஞ்ஞகனூர் கண்டிரங்கி
அருளாலே திருத்தாளம் அளித்தடி சிறப்பித்துப்
பொருள்மாலைத் திருப்பதிகம் பாடியே போற்றிசைத்தார்.

திருஞானசம்பந்தர் தமது திருக்கைகளால் தாளமிட்டு பெருகும் ஆர்வத்துடன் அத்தலத்து முன்னர் பாடிட; அது கண்டு பெருமானர் திருவுள்ளம் இரங்கி திருவருளின் செயலாலே அவர்க்குத் திருத்தாளம் கொடுத்தவரலாற்றை தாம்பாடிய அப்பதிகத்து வைத்துச் சிறப்பித்து பொருள் சிறந்தமாலையாகும் அத் திருப்பதிகம் பாடியே இசையுடன் போற்றி செய்தார்.

அவர் திருஞானசம்பந்தர்க்கு திருத்தாளம் ஈந்தவரலாற்றை எடுத்துப் பாடிய அருளிய அந்தப்பதிகம் இதுவாகும். 154

திருக்கோலக்கா
பண்-தக்கேசி
திருச்சிற்றம்பலம்

புற்றில் வாளர வார்த்தபி ராணைப் பூத நாதனைப் பாதமே தொழுவார்
பற்று வான்துணை எனதெளி வந்த பாவ நாசனை மேவரி யானை
முற்ற லார்திரி புரம்ஒரு மூன்றும் பொன்ற வென்றிமால் வரைஅரி அம்பாக்
கொற்ற வில்லங்கை ஏந்திய கோனைக் கோலக் காவினிற் கண்டுகொண் டேனே;

அங்கம் ஆறும்மா மறைஒரு நான்கும் ஆய நம்பனை வேய்புரை தோளி
தங்கு மாதிரு உருவுடை யானைத் தழல்ம திச்சடை மேற்புனைந் தானை
வெங்கண் ஆனையின் ஈருரி யானை விண்ணு ளாரோடு மண்ணுளார் பரசும்
கொங்கு லாம்பொழிற் குரவெறி காமமும் கோலக் காவினிற் கண்டுகொண் டேனே 2

பாட்ட கத்திசை ஆகிநின் றூனைப் பத்தர் சித்தம் பரிவினி யானை
நாட்ட கத்தே வர்செய்கையு ளானை நட்டம் ஆடியை நம்பெரு மானைக்
காட்ட கத்துறு புலியுரி யானைக் கண்ணெர் மூன்றுடை அண்ணலை அடியேன்
கோட்ட கப்புன லார்செழுங் கழனிக் கோலக் காவினிற் கண்டுகொண் டேனே. 3

ஆத்தம் என்றெனை ஆளுகந் தானை அமரர் நாதனைக் குமரனைப் பயந்த
வார்த்த யங்கிய முலைமட மானை வைத்து வான்மிசைக் கங்கையைக் கரந்த
தீர்த்த னைச்சிவ னைச்செழுந் தேனைத் தில்லை அம்பலத் துள்நிறைந் தாடும்
கூத்த னைக்குரு மாமணி தன்னைக் கோலக் காவினிற் கண்டுகொண் டேனே. 4

அன்று வந்தெனை அகலிடத் தவர்முன் ஆள தாகஎன் றூவணங் காட்டி
நின்று வெண்ணெய்நல் லூர்மிசை ஒளித்த நித்தி லத்திரள் தொத்தினை முத்திக்
கொன்றி னுன்றனை உம்பர்பி ரானை உயரும் வல்லர ணங்கெடச் சிறும்
குன்ற வில்லியை மெல்லிய லுடனே கோலக் காவினிற் கண்டுகொண் டேனே. 5

காற்றுத் தீப்புனல் ஆகிநின் றூனைக் கடவு ளைக்கொடு மால்விடை யானை
நீற்றுத் தீஉரு வாய்நிமிர்ந் தானை நிரம்பு பல்கலை யின்பொரு ளானை
போற்றித் தன்கழல் தொழுமவன் உயிரைப் போக்கு வான்உயிர் நீக்கிடத் தாளாற்
கூற்றைத் தீங்குசெய் குரைகழ லானைக் கோலக் காவினிற் கண்டுகொண் டேனே. 6

அன்ற யன்சிரம் அரிந்ததிற் பலிகொண் டமர ருக்கருள் வெளிப்படுத் தானைத்
துன்று பைங்கழ லிற்சிலம பார்த்த சோதி யைச்சுடர் போல்ஒளி யானை
மின்த யங்கிய இடைமட மங்கை மேவும் ஈசனை வாசமா முடிமேற்
கொன்றை அஞ்சடைக் குழகனை அழகார் கோலக் காவினிற் கண்டுகொண் டேனை. 7

நாளும் இன்னிசை யாழ்தமிழ் பரப்பும் ஞான சம்பந்த னுக்குல கவர்முன்
தாளம் ஈந்தவன் பாடலுக் கிரங்கும் தன்மை யாளனை என்மனக் கருத்தை
ஆளும் பூதங்கள் பாடநின் றாடும் அங்க ணன்றனை எண்கணம் இறைஞ்சும்
கோளி லிப்பெருங் கோயிலு ளானைக் கோலக் காவினிற் கண்டுகொண் டேனை. 8

அரக்கன் ஆற்றலை அழித்தவன் பாட்டுக் கன்றி ரங்கிய வென்றியி னானைப்
பரக்கும் பாரளித் துண்டுகந் தவர்கள் பரவி யும்பணி தற்கரி யானைச்
சிரக்கண் வாய்செவி மூக்குயர் காயம் ஆகித் தீவினை தீர்த்தஎம் மானைக்
குரக்கி னங்குதி கொண்(டு)உகள் வயல்சூழ் கோலக் காவினிற் கண்டு கொண்டேனை 9

கோட ரம்பயில் சடையுடைக் கரும்பைக் கோலக் காவுள்எம் மானைமெய்ம் மானைப்
பாட ரங்குடி அடியவர் விரும்பப் பயிலும் நாவலா ரூரன்வன் றொண்டன்
நாடி ரங்கிமுன் அறியுமந் நெறியால் நவின்ற பத்திவை விளம்பிய மாந்தர்
காட ரங்கென நடம்நவின் றுன்பாற் கதியும் எய்துவர் பதியவர்க் கதுவே. 10

திருச்சிற்றம்பலம்

மூவாத முழுமுதலார் முதற்கோலக் காஅகன்று
தாவாத புகழ்ச்சண்பை வலங்கொண்டு தாழ்ந்திறைஞ்சி
நாவார்முத் தமிழ்விரகர் நற்பதங்கள் பரவிப்போய்
மேவார்தம் புரஞ்செற்றூர் குருகாவூர் மேவுவார்.

என்றுமே மூப்படையாத முழுமுதலாம் சிவபெருமான் அமர்ந்த முதன்மையான திருக்கோலக்கா என்னும் தலத்தை நீங்கி; குறைவிலாத புகழுடைய சீர்காழி நகரையும் வலங்கொண்டு வந்து தாழ்ந்து வணங்கி; அங்குதோன்றிய நாவார்ந்த முத்தமிழின் விருப்பாளர் திருஞானசம்பந்தரது நற்பதங்கள் போற்றி அப்பால் சென்று, பகையசுரர்களது முப்புரமும் எரித்த பெருமானது திருக்குருகாவூர் என்னும் தலத்தைச் சேர்வார் எம் சுந்தரமூர்த்தி சுவாமிகள் 155

உண்ணீரின் வேட்கையுடன் உறுபசியால் மிகவருந்திப்
பண்ணீர்மை மொழிப்பரவை யார்கொழுநர் வரும்பாங்கர்க்
கண்ணீடு திருநுதலார் காதல்வரக் கருத்தறித்து
தண்ணீரும் பொதிசோறும் கொண்டுவழிச் சார்கின்றூர்.

அவ்வாறு செல்லும்போது நீர் உண்ணும் தாகத்துடனும் தமக்குற்றபசியாலும் மிகவும் வருந்தி பண்ணின் இசைபோல் மொழியுடைய பரவை அம்மைநாயகர் அவர் வரும் பக்கராக் கண் பெருக விளங்கும் நெற்றியுடைய கடவுள் தமது அன்பர் பால் உற்ற அன்பு சிறந்திட; அவரின் பசி நீர்வேட்கை இவற்றை அறிந்து தண்ணீரும் பொதிசோறும் திருக்கையில் கொண்டு அவர்வரும் வழியாகத் தாமும் சேர்கின்றார். 156

வேனிலுறு வெயில்வெம்மை தணிப்பதற்கு விரைக் குளிர்மென்
பானல்மலர்த் தடம்போலும் பந்தர்ஒரு பால் அமைத்தே
ஆனமறை வேதியராய் அருள்வேடங் கொண்டிருந்தார்
மானமருந் திருக்கரத்தார் வன்றொண்டர் தமைப்பார்த்து.

அவர் வரும்வழியில் வேனில் காலத்து வெய்யில் வெப்பம் நீக்குவதற்காக; வாசனையுடைய குளிர்ந்த மெல்லிய பாலின் சுவையுடைய மலர் குளம் போலும் குளிர்ந்த தண்ணீர்ப் பந்தரும் ஒருபாலாகச் செய்தே அதில் தாம் விளங்கிடும் வேத அந்தணராய் அருள் வேடம் தாங்கிக் கொண்டு மான் கன்று அமரும் திருக் கரமுடைய கடவுள் சிவமூர்த்தி சுந்தரமூர்த்தி சுவாமிகளை வழிபார்த்திருந்தார். 157

குருகாவூர் அமர்ந்தருளுங் குழகர்வழி பார்த்திருப்பத்
திருவாரூர்த் தம்பிரான் தோழர்திருத் தொண்டருடன்
வருவார் அப்பந்தரிடைப் புகுந்துதிரு மறையவர்பால்
பெருகார்வஞ் செலஇருந்தார் சிவாயநம எனப்பேரி.

திருக்குருகாவூரில் அமர்ந்தருளும் குண்டல மணிந்த எங்கடவுள் அவ்விதம் வழிபார்த்திருப்ப; திருவாரூரில் இருக்கும் எம்பெருமான் தோழர் சுந்தரமூர்த்தி சுவாமிகள் சிவனடியார்களுடன் அவ்வழிவருவார் அந்த தண்ணீர் பந்தரிடையாக உட்புகுந்து; அங்கிருந்த அழகுடைய அந்தணர்பெருமான் பால் தம் கருத்து செல்லும் படி நோக்கி; சிவாய நம எனப் பேசிக்கொண்டு நிலமிசை இருந்தார். 158

ஆலநிழற் கீழிருந்தார் அவர்தம்மை எதிர்நோக்கிச்
சாலமிகப் பசித்தீர்; இப் பொதிசோறு தருகின்றேன்
காலம்இனித் தாழாமே கைக்கொண்டிங் கினிதருந்தி
ஏலநறுங் குளிர்தண்ணீர் குடித்தினைப்புத் தீரும் என.

அதுவேனை கல்லால வீருட்சத்தின் கீழ் இருந்த அந்தணைய வடிவு கொண்ட கடவுள் சுந்தரமூர்த்தி சுவாமிகளை எதிர் நோக்கி; சாலவும் நீர் மிகப் பசித்திருக் கின்றீர்; இந்த எண்ணிடமுள்ள பொதிசோற்றினைத் தருகின்றேன்; இனியும் காலம் தாமதமின்றி இப்பொதி சோற்றைக் கொண்டு இங்கு இனிதுடன் உண்டு; இப் பந்தரிடை குளிர்ந்த தண்ணீரும் குடித்து இளைப்புத் தீரும் என்னலும். 159

வன்றொண்டர் அதுகேட்டு மறைமுனிவர் தரும் பொதிசோ(று)
இன்றுநமக் கெதிர்விலக்கல் ஆகா தென் றிசைந்தருளிப்
பொன்தயங்கு நூல்மார்பர் தரும்பொதிசோ றதுவாங்கிச்
சென்று திருத் தொண்டருடன் திருவமுது செய்தருளி.

வன்றொண்டராம் எம் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அதுகேட்டு இந்த வேதமுனிவர் தரும் பொதிசோறு இன்று நாம் அதை வேண்டாமென விலக்கிக்கொள்ளல் ஆகாது'' என்று எண்ணி அப்பொதி சோறுஉண்டிட இசைந்தருளி; பொன்விளங்கும் நூல் அணிந்த மார்புடைய அந்தணர் கொடுக்கும் பொதிசோற்றினை வாங்கிச் சென்று திருத்தொண்டருடனுக தாம் திருவமுது செய்தருளி. 160

எண்ணிறந்த பரிசனங்கள் எல்லாரும் இனிதருந்தப்
பண்ணியபின் அம்மருங்கு பசித்தணைந்தார் களும் அருந்த
உண்ணிறைந்த ஆரமுதாய் ஒருகாலும் உலவாதே
புண்ணியனார் தாமளித்த பொதிசோறு பொலிந்ததால்.

தம்முடன் வந்த கணக்கிலாத பரிசனர்களும் எல்லாரும் இனிதுடன் உண்ணப் பண்ணிய பின் அதன் அயலே பசித்து அணைந்தார்களும் அருந்திட அப்பொதி சோறு உள்ளத்து நிறைந்த அரிய அமுதாகி ஒருகாலமும் குறைவிலாது; புண்ணிய பொருளாகும் அத்தணன் சிவன்கொடுத்த அப்பொதிசோறுபொலிந்தது; 161

சங்கரனார் திருவருள்போல் தண்ணீரின் சுவை ஆர்ந்து
பொங்கிவரும் ஆதரவால் அவர்நாமம் புகழ்ந்தேத்தி
அங்கயர்வால் பள்ளி அமர்ந் தருகணைந்தார் களுந்துயிலக்
கங்கைசடைக் கரந்தார்அப் பந்தரொடுந் தாங்கரந்தார்.

உண்டபின் சிவன் அருளின் பரமசுகம் போல் அங்குற்ற தண்ணீரினையும் குடித்து அச்சுவையில் திளைத்து உள்ளத்து பொங்கிவரும் ஆதரவால் ஐயர் பெருமானின் திருநாமம் புகழ்ந்து போற்றி; அப்பால் அமுதுண்டகளைப்பால் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பள்ளிகொண்டருள அவருடன் அருகாக உடன் வந்தோரும் படுத்து நித்திரை செய்திட; கங்கையாற்றை சடைமீது மறைத்த சிவபெருமான் தாம் கொண்டுவந்த தண்ணீர்ப்பந்தருடன் மறைந்தருளினர். 162

சித்தநிலை திரியாத திருநாவ லூர்மன்னர்
அத்தகுதி யினிற்பள்ளி யுணர்ந்தவரைக் காணுமை
இத்தனையா மாற்றம் அறிந்திலேன் எனஎடுத்து
மெய்த்தகைய திருப்பதிகம் விளம்பியே சென்றடைந்தார்.

எதுவரினும் தனது சித்தநிலைமாறுத திருநாவலூர் அருள் அரசர் சுந்தர மூர்த்தி சுவாமிகள் அவ்வளவில் தாம் பள்ளி கொண்டதை நீக்கியருளி விழித்து தமக்குப் பொதிசோறு கொடுத்த அந்தணர் மெருமானைக் காணாது இறைவன் செயலாகலே அது இருந்தமை உணர்ந்து உடனே ''இத்தனையாமாற்றம் அறிந் திலேன் எம்பெருமான்'' எனப்பாட எடுத்து மெய்மைவிளங்கிய அத்திருப்பதிகம் பாடியே திருக்குருகாவூர் கோயிலைச் சென்றடைந்தார். 163

அவர்பாடிய அப்பதிகம் இதுவாகும்:

திருக்குருகாவூர் வெள்ளடை

பண் – நட்டராகம்
திருச்சிற்றம்பலம்

இத்தனை யாமாற்றை அறிந்திலேன் எம்பெருமான்
பித்தரே என்றும்மைப் பேசுவார் பிறரெல்லாம்
முத்தினை மணிதன்னை மாணிக்கம் முளைத்தெழுந்த
வித்தனே குருகாவூர் வெள்ளடை நீயன்றே 1

ஆவியைப் போகாமே தவிர்த்தென்னை ஆட்கொண்டாய்
வாவியிற் கயல்பாயக் குளத்திடை மடைதோறும்
காவியுங் குவளையுங் கமலஞ்செங் கழுநீரும்
மேவிய குருகாவூர் வெள்ளடை நீயன்றே 2

பாடுவார் பசிதீர்ப்பாய் பரவுவார் பிணிகளைவாய்
ஓடுநல் கலனுக உண்பலிக் குழல்வானே
காடுதின் இடமாகக் கடுவிருள் நடமாடும்
வேடனே குருகாவூர் வெள்ளடை நீயன்றே 3

வெப்பொடு பிணியெல்லாம் தவிர்த்தென்னை ஆட்கொண்டாய்
ஒப்புடை ஒளிநீலம் ஓங்கிய மலர்ப்பொய்கை
அப்படி அழகாய அணிநடை மடஅன்னம்
மெய்ப்படு குருகாவூர் வெள்ளடை நீயன்றே. 4

வரும்பழி வாராமே தவிர்த்தென்னை ஆட்கொண்டாய்
சுரும்புடை மலர்க்கொன்றைச் சுண்ணவெண் ணீற்றானே
அரும்புடை மலர்ப்பொய்கை அல்லியும் மல்லிகையும்
விரும்பிய குருகாவூர் வெள்ளடை நீயன்றே. 5

பண்ணிடைத் தமிழொப்பாய் பழத்தினிற் சுவையொப்பாய்
கண்ணிடை மணியொப்பாய் கடுவிருட் சுடரொப்பாய்
மண்ணிடை அடியார்கள் மனத்திடர் வாராமே
விண்ணிடைக் குருகாவூர் வெள்ளடை நீயன்றே. 6

போந்தனை தரியாமே நமன்தமர் புகுந்தென்னை
நோந்தனை செய்தாலும் நுண்ணல தறியேன்நான்
சாந்தனை வருமேலுந் தவிர்த்தென்னை ஆட்கொண்ட
வேந்தனே குருகாவூர் வெள்ளடை நீயன்றே 7

மலக்கில்நின் அடியார்கள் மனத்திடை மால்தீர்ப்பாய்
சலச்சல மிடுக்குடைய தருமனூர் தமர்என்னே
கலக்குவான் வந்தாலுங் கடுந்துயர் வாராமே
வீலக்குவாய் குருகாவூர் வெள்ளடை நீயன்றே. 8

படுவிப்பாய் உனக்கேஆள் பலரையும் பணியாமே
தொடுவிப்பாய் துகிலொடுபொன் தோலுடுத் துழல்வானே
கெடுவிப்பாய் அல்லாதார் கேடிலாப் பொன்அடிக்கே
வீடுவிப்பாய் குருகாவூர் வெள்ளடை நீயன்றே 9

வளங்கவி பொழில்மல்கு வயல்அணிந் தழகாய
விளங்கொளீ குருகாவூர் வெள்ளடை உறைவானே
இளங்கீரை ஆரூரன் வனப்பகை யவள்அப்பன்
உளங்குளிர் தமிழ்மாலை பத்தர்கட் குரையாமே 10

திருச்சிற்றம்பலம்

குருகாவூர் அமர்ந்தருளுங் குழகனூர் கோயிலினுக்(கு)
அருகார்பொற் கோபுரத்தை அணைந்திறைஞ்சி உள்புக்கு
வருகாதல் கூரவலங் கொண்டுதிரு முன்வணங்கிப்
பருகாஇன் னமுதத்தைக் கண்களாற் பருகினார். 164

திருக்குருகாவூர் என்னும் தலத்து அமர்ந்தருளும் குண்டல மணிந்தகாதுடைய பரம்பொருளின் கோயிலினுக்கு அருகாகஉள்ள பொற் கோபுரத்தைச் சென்று வணங்கி உள்ளே புகுந்து உள்ளத்து எழுகின்ற காதல் பெருகவலம் கொண்டு வந்து திருமுன் வணங்கி நாம் பருகமுடியா இன்னமுதான பெருமானைத் தனது கண்களால் தரிசித்துப் பருகினார் சுந்தரமூர்த்தி சுவாமிகள். 164

கண்ணார்ந்த இன்னமுதைக் கையாரத் தொழுதிறைஞ்சிப்
பண்ணார்ந்த திருப்பதிகம் பாடியே பணிந்தேத்தி
உண்ணூடும் பெருங்காதல் உடையவர்தாம் புறத்தெய்தி
நண்ணார்வத் தொண்டருடன் அங்கினிது நயந்திருந்தார்.

கண்ணிற்கு இனிமைதரும் அமுதத்தை கையாரக்கும்பிட்டு வணங்கி பண்இசை சொரியும் திருப்பதிகம்பாடியே பணிந்து போற்றி; ஈசனை உள்ளே நாடும் பெரும் காதலுடைய சுந்தரமூர்த்தி சுவாமிகள் வெளியேவந்து அங்கு கூடிய ஆர்வமுடைய அடியவருடன் அத்தலத்து இனிது நயப்புற்றிருந்தார். 165

அந்நாளில் தம்பெருமான் அருள்கூடப் பணிந்தகன்று
மின்னுர்செஞ் சடைமுடியார் விரும்புமிடம் பலவணங்கிக்
கன்னெடும் எயில்புடைசூழ் கழிப்பாலை தொழுதேத்தித்
தென்னவ லூர்மன்னர் திருத்தில்லை வந்தடைந்தார்.

அந்த நாட்களில் தனது பெருமானின் அருள் கூடிடப் பணிந்து அங்கு நீங்கி மின்போல் மிளிரும் செஞ்சடைமுடியுடைய பெருமான் விரும்பி அமர்ந்த இடங்கள் பலவும் வணங்கி கல்லால் அமைத்த மதில் பக்கராகச் சூழ உள்ள திருக்கழிப் பாலை என்னும் கோவிலையும் சென்று வணங்கிப் போற்றி அப்பால் தென்நாட்டில் சிறந்த திருநாவலூர் அரசர் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவுடைய தில்லைச்சிதம் பரத்தை வந்து சேர்ந்தார். 166

சீர்வளருந் திருத்தில்லைத் திருவீதி பணிந்துபுகுந்(து)
ஏர்வளர்பொற் றிருமன்றுள் எடுத்தசே வடிஇறைஞ்சிப்
பார்வளர மறைவளர்க்கும் பதி அதனிற் பணிந்துறைவார்
போர்வளர்மே ருச்சிலையார் திருத்தினைமா நகர்புகுந்தார்.

சீர்வளரும் திருவுடைய தில்லைநாயகன் திருவீதியைப் பணிந்து உள்போய்; அழகு வதியும் பொன்னை திருச்சபையில் ஆட எடுத்த திருவடிகள் வணங்கி இப்பூமி வளர வேதங்களே வளர்த்திடும் தில்லை என்னும் அப்பதியதனில் பணிந்து தங்குவார் போர் வளரவிளக்கும் மேருமலையை வில்லாக உடைய பெருமானின் அடுத்த தலமான திருத்தினை நகர் என்னும் பெரும் கோவிலைச் சென்று சேர்ந்தார்; 167

திருத்தினைமா நகர்மேவுஞ் சிவக்கொழுந்தைப் பணிந்துபோய்
நிருத்தனூர் அமர்ந்தருளும் நிறைபதிகள் பலவணங்கிப்
பொருத்தமிகுந் திருத்தொண்டர் போற்று திரு நாவலூர்
கருத்தில்வரும் ஆதரவால்கைதொழச்சென் றெய்தினார்.

திருத்தினை மாநகரில் வீற்றிருக்கும் சிவக்கொழுந்தைப் பணிந்து போய்; நட மாடவல்ல கடவுள் அமர்ந்தருளிய நிறைவுடைய பதிகள் பல வணங்கிப்போய் திருவருள் பொருத்தம் மிகுந்த திருத்தொண்டர் போற்றி செய்யும் திருநாவலூர்த் தலம் தனது கருத்தில் வரும் ஆதரவால் அதனை கைதொழச்சென்றடைந்தார்168

திருநாவ லூர்மன்னர் சேர்கின்றூர் எனக்கேட்டு
பெருநாமப் பதியோருந் தொண்டர்களும் பெருவாழ்வு
வருநாள் என் றலங்கரித்து வந்தெதிர்கொண் டுள்ளணையச்
செருநாகத் துரிபுனைந்தார் செழுங்கோயில் உள்ளணைந்தார்.

திருநாவலூருக்கு அருள் அரசராகும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அங்குவந்து சேர்கின்றூர் எனக்கேட்டு பெருகும் நாமமுடைய அப்பதியில் உள்ளார்களும் தொண்டர்களும் தங்களுக்கு இன்று பெருவாழ்வு வரு நாள் என்று நகரம் முழுவதும் அலங்கரித்து வந்து எம்பிரான் சுந்தரரை எதிர்கொண்டு வணங்கி அழைத்து உட் சென்றிட அவரும் போர் மிகுந்த யானையின் தோல் போர்த்த பெருமான் திரு வுடைய கோயிலில் உள்ளாகச் சென்றருளினார். 169

மேவிய அத் தொண்டர்குழாம் மிடைந்(து) அரஎன் றெழும் ஓசை
மூவுலகும் போய்ஒலிப்ப முதல்வனூர் முன்பெய்தி
ஆவியினும் அடைவுடையார் அடிக்கமலத்தருள் போற்றிக்
கோவலனூன் முகன் எடுத்துப் பாடியே கும்பிட்டார்.

தம்முடன் கூடவந்த அந்த அடியார் கூட்டம் நெருங்கி அரகரா என மொழிந் திட எழுகின்ற ஓசை மூவுலகும் போய் ஒலித்திட முதல்வனுகும் பெருமானின் திரு வடிவத்தாமரையின் பேரருளின் திறம் போற்றெடுத்து எம்பெருமானே ''கோவல நான் முகன்'' எனத்தொடங்கி எடுத்துப்பாடி கும்பிட்டாரர் அவர் திருநாவலூரில் அமர்ந்த செழுஞ்சுடர்க்குன்றுகும் சிவனே பாடிய திரு பதிகம் இதுவாகும்; 170

திருநாவலூர்

பண் — நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

கோவலன் நான்முகன் வானவர் கோனுங்குற்றேவல்செய்ய
மேவலர் முப்புரம் தீயெழு வித்தவன் ஓரம்பினால்
ஏவல னூர்வெண்ணெய் நல்லூரில் வைத்தெனை ஆளுங்கொண்ட
நாவல னூர்க்கிடம் ஆவது நந்திரு நாவலூரே. 1

தன்மையி னுலடியேனைத்தாம் ஆட்கொண்ட நாட்சபைமுன்
வன்மைகள் பேசிட வன்றொண்டன் என்பதோர் வாழ்வுதந்தார்
புன்மைகள் பேசவும் பொன்னைத்தந்தெனைப் போகம்புணர்த்த
நன்மையி னூர்க்கிடம் ஆவது நந்திரு நாவலூரே. 2

வேகங்கொண் டோடிய வெள்விடை ஏறியோர் மெல்லியலே
ஆகங்கொண் டார்வெண்ணெய் நல்லூரில் வைத்தெனை ஆளுங்கொண்டார்
போகங் கொண்டார் கடற்கோடியின் மோடியைப் பூண்பதாக
நாகங்கொண்ட டார்க்கிடம் ஆவது நந்திரு நாவலூரே 3

அஞ்சுங் கொண்டாடு வராவினிற் சேவினை ஆட்சிகொண்டார்
தஞ்சங்கொண் டாரடிச் சண்டியைத் தாமென வைத்துகந்தார்
நெஞ்சங்கொண் டார்வெண்ணெய் நல்லூரில் வைத்தெனை ஆளுங்கொண்டு
நஞ்சங்கொண் டார்க்கிடம் ஆவது நந்திரு நாவலூரே; 4

உம்பரார்கோனைத்திண்தோள் முரித்தாருரித்தார்களிற்றைச்
செம்பொனூர் தெவண்ணூர் தூவண்ண நீற்றர்ஓர் ஆவணத்தா
லெம்பிரா னூர்வெண்ணெய் நல்லூரில் வைத்தெனை ஆளுங்கொண்ட
நம்பிரா னூர்க்கிடம் ஆவது நந்திரு நாவலூரே; 5

கோட்டங் கொண்டார் குடமுக்கிலுங் கோவலுங் கோத்திட்டையும்
வேட்டங்கொண் டார்வெண்ணெய் நல்லூரில் வைத்தெனை ஆளுங்கொண்டார்
ஆட்டங்கொண் டார்தில்லைச் சிற்றம்பலத்தே அருக்க னேமுன்
நாட்டங்கொண் டார்கிடம் ஆவது நந்திரு நாவலூரே 6

தாயவ ளாய்த்தந்தை ஆகிச் சாதல் பிறத்தலின்றிப்
போயகலாமைத்தன் பொன்னடிக் கென்னைப் பொருந்தவைத்த
வேயலருர்வெண்ணெய் நல்லூரில்வைத்தெனை ஆளுங்கொண்ட
நாயக னூர்க்கிடம் ஆவது நந்திரு நாவலூரே. 7

வாயாடி மாமறை ஓதிஓர் வேதியன் ஆகிவந்து
தீயாடி யார்சினக் கேழலின் பின்சென்றூர் வேடுவனுய்
வேயாடி யார்வெண்ணெய் நல்லூரில் வைத்தெனை ஆளுங்கொண்ட
நாயாடி யார்க்கிடம் ஆவது நந்திருநாவலூரே. 8

படமாடு பாம்பணை யானுக்கும் பாவைநல் லாள்தனக்கும்
வடமாடு மால்விடை ஏற்றுக்கும் பாகனுய் வந்தொருநாள்
இடமாடி யார்வெண்ணெய் நல்லூரில் வைத்தெனை ஆளுங்கொண்ட
நடமாடி யார்க்கிடம் ஆவது நந்திரு நாவலூரே. 9

மிடுக்குண்டென் றேழுடிஓர் வெற்பெடுத் தான்வலி யைநெரித்தார்
அடக்கங்கொண்டாவணங் காட்டிநல் வெண்ணெயூர் ஆளுங்கொண்டார்
தடுக்கஞ்ஞ ணுததோர் வேழத் தினைஉரித் திட்டுமையை
நடுக்கங்கண் டார்க்கிடம் ஆவது நந்திரு நாவலூரே. 10

நாதனுக் கூர்நமக் கூர்நர சிங்க முனையரையன்
ஆதரித் தீசனுக் காட்செயும் ஊர்அணி நாவலூரென்
றேதநம் றக்கவன் றெண்டன்ஆ ரூரன் உரைத்ததமிழ்
காதலித் துங்கற்றுங் கேட்பவர் தம்வினைக் கட்டறுமே. 11

திருச்சிற்றம்பலம்

நலம்பெருகும் அப்பதியில் நாடியஅன் பொடுநயந்து
குலம்பெருகுந் திருத்தொண்டர் குழாத்தோடும் இனிதமர்ந்து
சலம்பெருகுஞ் சடைமுடியார் தாள்வணங்கி அருள்பெற்றுப்
பொலம்புரிநூல் மணிமார்பர் பிறபதியுந் தொழப்போவார்.

நலம் என்றும் பெருகிய அப்பதியில் எம்பெருமானே நாடிக் கொண்ட அன்போடும் பணிந்து நயந்து; நமது குலம் பெருகும் திருத்தொண்டர் கூட்டத்தோடும் இனிதே அங்கு தங்கி நீர்பெருகும் சடைமுடிஉடைய பெருமான் திருவடி வணங்கி அருள்பெற்று நல்லழகுடன் விளங்கும் பொன்னின் பூணூல்மார்பர் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அங்கு நீங்கிப் பிறதலங்களும் தொழுதிடப்போவார். 171

தண்டகமாந் திருநாட்டுத் தனிவிடையார் மகிழ்விடங்கள்
தொண்டர்எதிர் கொண்டணையத் தொழுதுபோய்த் தூயநதி
வண்டுறைபூம் புறவுமலை வளமருதம் பலகடந்தே
எண்டிசையோர் பரவுதிருக் கழுக்குன்றை எய்தினார்.

குளிர்ந்த நீர்வளமுடைய திருநாட்டில் தனித்த இடபவாகனமுடைய பெருமான் மகிழ்ந்த இடங்களில் அடியார்கள் வந்து வந்து எதிர்கொண்டு வணங்கி அழைத்துச் சென்றிடத் தொழுதுபோய் தூய ஆறுகள் வண்டுகள் பாடும் சோலை மலைகள் வளம் தரும் மருதநிலம் பல கடந்தே எட்டுத்திக்கிலுள்ளவர் வணங்கிடும் திருக்கழுக் குன்றம் என்னும் கோயிலை வந்தடைந்தார். 172

தேனுர்ந்த மலர்சோலைத் திருக்கழுக்குன் றடித்தடியார்
ஆனைத விருப்பிலெடும் எதிர்கொள்ள அடைந்தருளித்
தூநாண்வெண் மதியணிந்த சூடர்க்கொழுந்தைத்தொழுதி றைஞ்சிப்
பாநாடும் இன்னிசையின் திருப்பதிகம் பாடினார்.

தேன்வடிந்து சொரியும் மலர்ச்சோலைகளை உடைய திருக்கழுக்குன்றத்து வாழும் அடியார்கள் குறைவிலாத விருப்பத்துடன் வந்து எதிர்கொண்டு வணங்கிட; அவருடன் கூடிக் கோயிலைச் சேர்ந்தருளிதூய ஓர் கூலை உடைய வெண்பிறை யணிந்த சூடர்க்கொழுந்தாகிய சிவனை அத்தலத்து தொழுது வணங்கி பாடலாக விளங்கும் இனிய இசையுடைய திருப்பதிகம் பாடியருளினார்.

அவர் பாடியருளிய திருப்பதிகம் இதுவாகும். இதில் உலகமக்களாகிய நாம் செய்திடும் பாவவினைகளும் அவைகளை நீங்கிக் கொள்ளும் வழிகளும் பேசப்படல் காண்க. 173

திருக்கழுக்குன்றம்

பண்–நட்டபாடை

துருச்சிற்றம்பலம்

கொன்று செய்த கொடுமை யாற்பல சொல்லவே
நின்ற பாவம் வினைகள் தாம்பல நீங்கவே
சென்று சென்று தொழுமின் தேவர் பிரானிடம்
கன்றி னேடு பிடிசூழ் தண்கழுக் குன்றமே. 1

இறங்கிச் சென்று தொழுமின் இன்னிசை பாடியே
பிறங்கு கொன்றைச் சடையன் எங்கள் பிரானிடம்
நிறங்கள் செய்த மணிகள் நித்திலங் கொண்டிழி
கறங்கு வெள்ளை அருவித் தண்கழுக் குன்றமே. 2

நீள நின்று தொழுமின் நித்தலும் நீதியால்
ஆளும் நம்ம வினைகள் அல்கி அழிந்திடத்
தோளும் எட்டும் உடைய மாமணிச் சோதியான்
காள கண்டன் உறையுந் தண்கழுக் குன்றமே. 3

வெளிறு தீரத் தொழுமின் வெண்பொடி ஆடியை
முளிறி லங்குமழு வாளன் முந்தி உறைவிடம்
பிளிறு தீரப் பெருங்கைப் பெய்ம்மதம் மூன்றுடைக்
களிறி னேடு பிடிசூழ் தண்கழுக் குன்றமே. 4

புலைகள் தீரத் தொழுமின் புன்சடைப் புண்ணியன்
இலைகொள் சூலப் படையன் எந்தை பிரானிடம்
முலைகள் உண்டு தழுவிக் குட்டி யொடுமுசுக்
கலைகள் பாயும் புறவில் தண்கழுக் குன்றமே. 5

மடமுடைய அடியார் தம்மனத் தேஉற
விடமுடைய மிடறன் விண்ணவர் மேலவன்
படமுடைய அரவன் முன்பயி லும்மிடம்
கடமுடைய புறவில் தண்கழுக் குன்றமே. 6

ஊனம் இல்லா அடியார் தம்மனத் தேஉற
ஞான மூர்த்தி நட்ட மாடிநவி லும்மிடம்
தேனும் வண்டும் மதுவுண் டின்னிசை பாடியே
கான மஞ்ஞை உறையுந் தண்கழுக் குன்றமே. 7

அந்தம் இல்லா அடியார் தம்மனத் தேஉற
வந்து நாளும் வணங்கி மாலொடு நான்முகன்
சிந்தை செய்த மலர்கள் நித்தலுஞ் சேரவே
கந்தம் நாறும் புறவில் தண்கழுக் குன்றமே. 8

பிழைகள் தீரத் தொழுமின் பின்சடைப் பிஞ்ஞகன்
குழைகொள் காதன் குழகன் முன்உறை யும்மிடம்
மழைகள் சாலக் கலித்து நீடுயர் வேயவை
குழை கொள் முத்தஞ் சொரியுந் தண்கழுக் குன்றமே. 9

பல்லில் வெள்ளைத் தலையன் தான்பயி லும்மிடம்
கல்லில் வெள்ளை அருவித் தண்கழுக் குன்றினை
மல்லின் மல்கு திரள்தோள் ஊரன் வனப்பினுல்
சொல்லல் சொல்லித் தொழுவா ரைத்தொழு மின்களே. 10

பாடியஅப் பதியிலகண் இனிதமர்ந்து பணிந்துபோய்
நாடியநல் லுணர்விலெடுந் திருக்கச்சூர் தனிநண்ணி
ஆடகமா மதில்புடைசூழ் ஆலக்கோயி லின்அமுதைக்
கூடியமெய் அன்புருகக் கும்பிட்டுப் புறத்தணைந்தார்.

தாம் பதிகம் பாடிய திருக்கழுக்குன்றத்து இனிது தங்கி பணிந்து அப்பால் சென்று எம்பிரானை நாடிய நல்ல உணர்வினோடும் திருக்கச்சூர் ஆலக் கோயிலினை அடைந்து அங்கு பொன்னிலுலான பெரிய மதில் பக்கராகச் சூழப்பெற்ற ஆலக் கோயிலின் அமுதாய பெருமானை உள்ளத்தாற் கூடிய மெய்யான அன்புருகக் கும்பிட்டு வெளியே வந்தருளினர் சுந்தரமூர்த்தி சுவாமிகள். 174

அணைந்தருளும் அவ்வேலை அமுதுசெயும் பொழுதாகக்
கொணர்ந்தமுது சமைத்தளிக்கும் பரிசனமுங் குறுகாமைத்
தணந்தபசி வருத்தத்தால் தம்பிரான் திருவாயில்
புணர்ந்தமதிற் புறத்திருந்தார் முனைப்பாடிப் புரவலனார்.

வெளியே வந்தருளிய அந்தநேரம் திருவமுது செய்திடும் பொழுதாகிட; பண்டங்கள் கொண்டுவந்து அமுதினைச் சமைத்துக் கொடுத்திடும் பரிசனரும் அவ்விடம் வந்து சேராமல் போனதால் அவ்வேளை பெருகிய பசியின் வருத்தத்தினால் எம் பெருமானுடைய கோயில் திருவாயிலினைச் சேர்ந்த மதிலின் பக்கராக இருந்தருளினர் திருமுனைப் பாடிநாட்டு பேரருளாளர் சுந்தரமூர்த்தி சுவாமிகள். 175

வன்றொண்டர் பசிதீர்க்க மலையின்மேல் மருந்தானார்
மின்றங்கு வெண்டலையோ(டு) ஓழிந்தொருவெற் றேடேந்தி
அன்றங்கு வாழ்வார்ஓர் அந்தணராய்ப் புறப்பட்டுச்
சென்றன்பர் முகநோக்கி அருள்கூரச் செப்புவார்.

அவ்வணம் பசியுடன் இருந்திடும் சுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய பசியைத் தீர்த்திட கைலைமலைமேல் வீற்றிருக்கும் கொடுமைப்பிணி தீர அருளும் மருந்தாகிய சிவபெருமான் தமது திருக்கரத்து ஏந்திய மின்னல் தங்கிடும் வெண்டலை ஓட்டினை நீக்கி; தாம் கொண்டருளும் அந்தணர் வடிவத் திற்கமைய வேறொரு ஓடு திருக்கையில் ஏந்தி; அன்று அவ்விடத்து வாழும் ஓர் அந்தணர் போலாகிப் புறப்பட்டுச் சென்று சுந்தரமூர்த்தி சுவாமிகளது திருமுகத்தை நோக்கி அருள் கூர்ந்திட இதனைச் சொல்லியருள்வார். 176

மெய்ப்பசியால் மிகவருந்தி இளைத்திருந்தீர் வேட்கை விட
இப்பொழுதே சோறிரந்திங் கியானுமக்குக் கொணர் கின்றேன்
அப்புறம்நீர் அகலாதே சிறுதுபொழு தமரும் எனச்
செப்பிஅவர் திருக்கச்சூர் மனைதோறுஞ் சென்றிரப்பார்.

நீர் உண்மையான பசியால் மிக வருந்தி இளைத்திருக்கின்றீர். உம்முடைய பசிவருத்தம் நீங்கிட இப்பொழுதே நான் சோற்றினை இரந்து உமக்கு கொண்டுவருவேன். நீர் அப்புறம் போகாமல் சிறிது நேரம் இங்கிருங் எனச் சொல்லி எம்பிரான் சுந்தரருக் காகவேண்டி திருக்கச்சூர் என்னும் அந்த நகரில் உள்ள மனைதோறும் சென்று சோறு இரக்கின்றார். 177

வெண்டிருநீற் றணிதிகழ விளங்குநூல் ஒளிதுளங்கக்
கண்டவர்கள் மனம்உருகக் கடும்பகற்போ திடும்பலிக்குப்
புண்டரிகக் கழல்புவிமேல் பொருந்தமனை தொறும்புக்குக்
கொண்டுதாம் விரும்பிஆட் கொண்டவர்முன் கொடுவந்தார்.

அவ்வாறு சோறு இரந்திடும் அந்தணர் வடிவு கொண்ட எம்பெருமான்: வெண்மையான திருநீற்றின் அழகு திகழ; மார்பில் விளங்கிய நூல் ஒளியுடன் பிரகாசித்திட கண்டவர்கள் மனம் காதலால் உருகிட கடும் வெய்யில் உள்ள மத்தியான வேளையில் இடுகின்ற பிச்சைக்காக; தாமரை போலும் திவ்விய திருவடி பூமிமேல் பொருந்திட மனைதொறும் புகுந்து சோறு பெற்றுக் கொண்டு தாம் விரும்பி ஆட்கொண்ட எம் தலைவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாலாகக் கொண்டு வந்தார். 178

இரந்துதாங் கொடுவந்த இன்னடிசி லுங்கறியும்
அரந்தைதரும் பசிதீர அ ந்துவீர் எனஅளிப்பப்
பெருந்தகையார் மறையவர்தம் பேரருளின் திறம்பேணி
நிரந்தபெருங் காதலிலை நேர்தொழுது வாங்கினார்

இரந்து எம்பிரான் தான் கொண்டு வந்த இனிய சோறும் கறியும் எடுத்து சுந்தரமூர்த்தி சுவாமிகளை நோக்கியருளி உமக்குத் துயர்தரும் பசிதீர உண்டிடுவீர் எனக் கொடுத்திடலும்: அது கண்டு எம்பெரும் தகையார் சுந்தரமூர்த்தி சுவாமிகள் இரந்து வந்தவர் இறைவனென அறியாது அவர் ஓர் அந்தணர் என்ற மட்டில் ஐயருடைய சிவ காருண்யத்தின் திறமையை வரவேற்று; உள்ளத்து நிறைகின்ற பெரும் காதலினால் அந்தணரை நேராகத் தொழுது அச்சோற்றை வாங்கினர் 179

வாங்கியஅத் திருவமுது வன்றொண்டர் மருங்கணைந்த
ஓங்குதவத் தொண்டருடன் உண்டருளி உவந்திருப்ப
ஆங்கருகு நின்றூர்போல் அவர்தம்மை அறியாமே
நீங்கினார் எப்பொருளும் நீங்காத நிலைமையினார்.

வாங்கிய அத்திருவமுதை சுந்தரமூர்த்தி சுவாமிகள் தம்பக்கராக அணைந்த மேலொங்கிய தவமுடைய அடியார்களுடன் உண்டருளி பெருமகிழ்ச்சி கொண்டிருப்ப; ஆங்கு அவ்வேளை அவர் அருகே நின்றூர் போல் நின்ற அந்தணரும் அவரை அறியாது மறைந்தருளினர்; ஆனால் எப்பொருளிலும் தாம் நீங்கிடாத நிலையுடைய சிவனாகும் அவ்வந்தணர். 180

திருநாவ லூராளி சிவயோகி யார்நீங்க
வருநாம மறையவனார் இறையவனார் எனமதித்தே
பெருநாதச் சிலம்பணிசே வடிவருந்தப் பெரும்பகற்கண்
உருநாடி எழுந்தருளிற் றென்பொருட்டாம் எனஉருகி.

அது கண்டு திருநாவலூர் மன்னர் சுந்தர மூர்த்தி சுவாமிகளும் சிவயோகியாய அந்தணர் பெருமான் மறைந்திட; தம்முன்பு வந்தருளும் அந்த அந்தணர் எல்லாம் வல்ல ஈசனாகும் என எண்ணி; பெருகும் நாதம் தரும்சிலம்பு ஒலித்திட அணிந்த திருவடிகள் இப்பூமிமேல் நடந்து வருத்த மடைய இந்தப் பெரும் பகல்வேளையில் உருவம் கொண்டு வந்தருளியது என் பொருட்டாமே என உள்ளம் உருகி. 181

முதுவா யோரி என்றெடுத்து முதல்வ னார்தம் பெருங்கருணை
அதுவாம் இதுஎன் றதிசயம்வந் தெய்தக் கண்ணீர் மழை அருவிப்
புதுவார் புனலின் மயிர்ப்புளகம் புதையப் பதிகம் போற்றிசைத்து
மதுவார் இதழி முடியாரைப் பாடி மகிழ்ந்து வணங்கினார்.

''முதுவாய் ஓரி'' எனத் தொடங்கி எடுத்துப் பாடத் தொடங்கி மூல முதல்வனின் சிவனது பெருங்கருணை அதுவாம் இது என்று அதிசயம் வந்தடைய; கண்கள் நீர் மழை அருவிபோல் மேனியில் புது நீராகிட; உரோமங்கள் எங்கும் சிலிர்த்து கூச்செறிய; நற்றமிழின் பதிகம் இசையுடன் பாடிப் போற்றி தேனூர்ந்த கொன்றை மலர் முடிமேல் சூடிய கடவுளைப் பாடி மகிழ்ந்து வணங்கினார். 182

பசியால் வாடும் துயர்தீர சோறு இரந்து கொண்டுவந்து கொடுத்தருளிய மூல முதலாம் சிவனது பெருங்கருணையை வியந்து பாடிய அற்புதமுடைய அப் பதிகம் இதுவாகும்.

திருக்கச்சூர் ஆலக்கோயில்
பண்-கொல்லிக் கௌவாணம்
திருச்சிற்றம்பலம்

முதுவாய் ஓரி கதற முதுகாட் டெரிகொண் டாடல் முயல்வானே
மதுவார் கொன்றைப் புதுவீ சூடும் மலையான் மகள்தன் மணவாளா
கதுவாய்த் தலையிற் பலிநீ கொள்ளக் கண்டால் அடியார் கவலாரே
அதுவே ஆமா றிதுவோ கச்சூர் ஆலக் கோயில் அம்மானே. 1

கச்சேர் அரவொன் றரையில் அசைத்துக் கழலுஞ் சிலம்புங் கலிக்கப் பலிக்கென்
றுச்சம் போதா ஊரூர் திரியக் கண்டால் அடியார் உருகாரே
இச்சை அறியோம் எங்கள் பெருமான் ஏழேழ் பிறப்பும் எனையாள்வாய்
அச்சம் இல்லாக் கச்சூர் வடபால் ஆலக் கோயில் அம்மானே. 2

சாலக் கோயில் உளதின் கோயில் அவளன் தலைமேற் கொண்டாடி
மாலைத் தீர்ந்தேன் வினையுந் துரந்தேன் வானோர் அறியா நெறியானே
கோலக் கோயில் குறையாக் கோயில் குளிர்பூங் கச்சூர் வடபாலை
ஆலக் கோயிற் கல்லால் நிழற்கீழ் அறங்கட் டுரைத்த அம்மானே. 3

விடையுங் கொடியுஞ் சடையும் உடையாய் மின்னேர் உருவத் தொளியானே
கடையும் புடைசூழ் மணிமண் டபமுங் கன்னி மாடங் கலந்தெங்கும்
புடையும் பொழிலும் புனலுந் தழுவிப் பூமேல் நிருமா மகளுள்கி
அடையுங் கழனிப் பழனக் கச்சூர் ஆலக் கோயில் அம்மானே. 4

மேலை விதியே வினையின் பயனே விரவார் புரமூன் றெரிசெய்தாய்
காலை எழுந்து தொழுவார் தங்கள் கவலை கனவாய் கறைக்கண்டா
மாலை மதியே மலைமேல் மருந்தே மறவேன் அடியேன் வயல்சூழ்ந்த
ஆலைக் கழனிப் பழனக் கச்சூர் ஆலக் கோயில் அம்மானே. 5

பிறவாய் இறவாய் பேணுய் மூவாய் பெற்றம் ஏறிப் பேய்சூழ்தல்
துறவாய் மறவாய் சுடுகா டென்றும் இடமாக் கொண்டு நடமாடி
ஒறுவாய்த் தலையிற் பலிநீ கொள்ளக் கண்டால் அடியார் உருகாரே
அறவே ஒழியாய் கச்சூர் வடபால் ஆலக் கோயில் அம்மானே. 6

பொய்யே உன்னைப் புகழ்வார் புகழ்ந்தால் அதுவும் பொருளாக் கொள்வானே
மெய்யே எங்கள் பெருமான் உன்னை நினைவார் அவரை நினைகண்டாய்
மையார் தடங்கண் மடந்தை பங்கா கங்கார் மதியஞ் சடைவைத்த
ஐயா செய்யாய் வெளியாய் கச்சூர் ஆலக் கோயில் அம்மானே. 7

ஊனைப்பெருக்கி உன்னை நினையா தொழிந்தேன் செடியேன் உணர்வில்லேன்
கானக் கொன்றை கமழ மலருங் சுடிநா றுடையாய் கச்சூராய்
மானைப் புரையும் மடமென் னோக்கி மடவாள் அஞ்ச மறைத்திட்ட
ஆனைத் தோலாய் ஞானக் கண்ணுய் ஆலக் கோயில் அம்மானே. 8

காதல் செய்து களித்துப் பிதற்றிக் கடிமா மலரிட் டுனைஏத்தி
ஆதல் செய்யும் அடியார் இருக்க ஐயங் கொள்வ தழகிதே
ஓதக் கண்டேன் உன்னை மறவேன் உமையாள் கணவா எனையாள்வாய்
ஆதற் பழனக் கழனிக் கச்சூர் ஆலக் கோயில் அம்மானே. 9

அன்னம் மன்னும் வயல்சூழ் கச்சூர் ஆலக் கோயில் அம்மானை
உன்ன முன்னும் மனத்தா ரூரன் ஆரூ ரன்போர் முடிவைத்த
மன்னு புலவன் வயல்நா வலர்கோன் செஞ்சொல் நாவன் வன்றொண்டன்
பன்னு தமிழ்நூல் மாலை வல்லார் அவரெந் தலைமேற் பயில்வாரே. 10

திருச்சிற்றம்பலம்

வந்தித் திறைவர் அருளாற் போய் மங்கை பாகர் மகிழ்ந்த இடம்
முந்தித் தொண்டர் எதிர்கொள்ளப் புக்கு முக்கட் பெருமானைச்
சிந்தித் திடவந் தருள்செய்கழல் பணிந்துசெஞ்சொல்தொடைபுனைந்தே
அந்திச் செக்கர்ப் பெருகொளியார் அமருங் காஞ்சி மருங்கணைந்தார்.

இவ்வாறு பதிகம் பாடி வணங்கி எம்பிரானுடைய அருளால் அப்பால் சென்று பெண் ஒருபாகராய பெருமான் மகிழ்ந்த கோயில்கள் வணங்கச் சென்றிடும் போது ஆங்காங்குள்ள அடியார்கள் முன்னுக வந்து எதிர்கொண்டிட அத்தலங்களில் புகுந்து முக்கண உடைய முதல்வன் சிவனின் தியானம் செய்திட வந்து அருள் புரியும் திருப்பாதம் பணிந்து செஞ்சொல்லின் தமிழ்ப்பதிக மாலைசூட்டி அப்பால் அந்திவானத்தின் செக்கர்போலும் சிவந்து பெருகும் ஒளி டைய பெருமான் வீற் றிருக்கும் காஞ்சிபுரத்தின் அருகாக வந்து சேர்ந்தார். 183

அன்று வெண்ணெய் நல்லூரில் அரியும் அயனும் தொடர்வரிய
வென்றி மழவெள் விடைஉயர்த்தார் வேத முதல்வ ராய்வந்து
நின்று சபைமுன்வழக்குரைத்துநேரேதொடர்ந்தாட்கொண்டவர்தாம்
இன்றிங்கெய்தப் பெற்றேரும் என்(று) எயில்சூழ் காஞ்சி நகர்வாழ்வார்.

இவர் வருகை உணர்ந்து; அன்றொரு நாள் திருவெண்ணெய் நல்லூரில் அமர்ந்த; திருமாலும் பிரமனும் தொடர்வரிய பெருமான் வெற்றிதரும் தரும தேவதையாய வெள்ளை இடபக் கொடியை உயர்த்தியவர்; தாம் ஓர் வேதநெறியின் முதல்வராகும் அந்தணர் போல் வடிவு கொண்டுவந்து திருமணச் சபைமுன்பு நின்று வழக்குப் பேசி நேரடியாகத் தொடர்ந்து ஆட்கொண்ட சுந்தரர் தாம் இன்று இங்கு வந்திடப் பெற்றேரும் என்று கூறி மதில் சூழ்ந்த காஞ்சி நகரில் வாழும் மக்கள் யாவரும்; 184

மல்கு மகிழ்ச்சி மிகப்பெருக மறுகு மணித்தோ ரணம் நாட்டி
அல்கு தீபம் நிறைகுடங்கள் அகிலின் தூபங் கொடி எடுத்துச்
செல்வ மனைகள் அலங்கரித்துத் தெற்றி ஆடல் முழவதிரப்
பல்கு தொண்டருடன் கூடிப் பதியின் புறம்போய் எதிர்கொண்டார்

உள்ளத்து நிறையும் மகிழ்ச்சி மிகப் பெருகிட; வீதிகள் தோறும் முத்துத் தோரணமும் நாட்டி; பிரகாசித்திடும் தீபம் நிறை குடங்கள் அகிலின் தூபம் கொடிகள் இவை எடுத்து; செல்வமுடைய தமது மனைகள் எல்லாம் அலங்கரித்து வீதிகளில் நடமாடலிற்குரிய முரசமேளம் முழங்கிட நெருக்கமாகத் திரளும் அடியாருடன் கூடி தமது காஞ்சி என்னும் பதியின் புறம்போய் எதிர்கொண்டார்கள் 185

ஆண்டநம்பி எதிர்கொண்ட அடியார் வணங்க எதிர்வணங்கி
நீண்டமதிட்கோபுரங்கடந்து நிரைமா ளிகைவீதியிற்போந்து
பூண்ட காதல் வாழ்த்தினுடன் புனைமங் கலதூரியம் ஒலிப்ப
ஈண்டு தொண்டர் பெருகுதிரு ஏகாம் பரஞ்சென் றெய்தினார்.

இறைவனுல் ஆண்டருளப் பெற்ற சுந்தரமூர்த்தி சுவாமிகள் தம்மை வரவேற்று எதிர்கொண்ட அடியார் வணங்க தாமும் எதிர் வணங்கி நீண்ட மதிலுடைய கோபுரம் கடந்து நிரையாக உள்ள மாளிகை வீதியூடு சென்று; அன்பினுல் எம் பிரான் பால் பூண்ட காதல் வாழ்த்துகளுடன் விசேட மாகச் சிறந்த மங்கல வாத்தியம் ஒலித்திட நெருங்கிய தொண்டர் பெருகும் திரு ஏகாம்பரம் என்னும் எம்உயிரின் பதியாய சிவன் அமர்ந்த கோவிலைச் சென்றடைந்தார். 186

ஆழி நெடுமால் அயன்முதலாம் அமரர் நெங்கு கோபுரம்முன்
பூமி யுறமண் மிசைமேனி பொருந்த வணங்கிப் புகுந்தருளிச்
சூழு மணிமா ளிகைபலவுந் தொழுது வணங்கி வலங்கொண்டு
வாழி மணிப்பொற் கோயிலினுள் வந்தார் அணுக்க வன்றொண்டர்.

சக்கரைப்படையுடைய நெடிய திருமால் பிரமன் முதலாய தேவர்கள் நெருங்கிடும் கோபுரம் முன்பாக பூமியில் மேனி படிந்திட மண்மிசை வணங்கி உட்புகுந்தருளி; எமபிரான் இருப்பிடத்தைச் சூழ்ந்த அழகிய பல மாளிகைகளையும் தொழுது வணங்கி வலங்கொண்டு வந்து வாழ்வுடைய அழகிய பொற் கோயிலினுள்ளாக வந்தார் ஈசன் பால் என்றும் அணுகியுள்ள சுந்தரமூர்த்திசுவாமிகள். 187

கைகள் கூப்பி முன்அணைவார் கம்பை ஆறு பெருகிவர
ஐயர் தமக்கு மிகஅஞ்சி ஆரத் தழுவிக் கொண்டிருந்த
மையிலாவுங் கருநெடுங்கண் மலையாள் என்றும் வழிபடுபூஞ்
செய்யகமலச் சேவடிக்கீழ்த்திருந்து காதலுடன் வீழ்ந்தார்.

கைகளைக் கூப்பி எம்பிரான்முன் சேர்பவர்; கம்பையாறு பெருகிவர எம்பிரானையும் மூடிடுமோ என மிகப் பயந்து நன்றுக அவரை இறுகத் தழுவிக் கொண்டிருந்த மைதீட்டி விளங்கும் நீண்ட கண்ணுடைய மலையரசன் புத்திரியாகும் காமாட்சி அம்மை என்றும் வழிபடுகின்ற செந்தாமரைப் பூப்போலும் மிருதுவாயஅப்பனுடைய திவ்விய திருவடிக் கீழாகத் திருந்திய காதலுடன் வீழ்ந்தார். 188

வீழ்ந்து போற்றிப் பரவசமாய் விம்மி எழுந்து மெய்யன்பால்
வாழ்ந்த சிந்தை யுடன்பாடி மாறு விருப்பிற் புறம் போந்து
சூழ்ந்த தொண்டருடன் மகவும் நாளில் தொல்லைக் கச்சிநகர்த்
தாழ்ந்த சடையார் ஆலயங்கள் பலவுஞ் சார்ந்து வணங்குவார்.

வீழ்ந்து போற்றிசெய்து பரவசமாகி விம்மி அழுது எழுந்து மெய்யன்பினால் வாழ்வுபெற்ற சிந்தையால் எம்பெருமானைப் பாடி மாறுத விருப்பத்துடன் வெளியே வந்து; தம்மைச் சூழ்ந்த அடியார்களுடன் எம் சுந்தரமூர்த்தி சுவர்மிகள் அங்கு தங்கியிருக்கும் காலத்தில்; மிகவும் பழமையான காஞ்சி நகரில் உள்ள தாழ்ந்து விளங்கும் சடையுடைய பெருமான் ஆலயங்கள் பலவும் சேர்ந்துவண. 189

சீரார் காஞ்சி மன்னுதிருக் காமக்கோட்டம் சென்றிறைஞ்சி
நீரார் சடையார் அமர்ந்தருளும் நீடு திருமேற்றளி மேவி
ஆரா அன்பிற் பணிந்தேத்தும் அளவில் நுந்தா ஒண்சுடரம்
பாரார் பெருமைத் திருப்பதிகம் பாடி மகிழ்ந்து பரவினார்.

அப்பால் சீர்விளங்கும் காஞ்சிப்பதியில் சீருடைய திருக்காமக் கோட்டத்து விளங்கிடும் எம்பிராட்டியையும் சென்று பணிந்து அப்பால் நீரார்ந்த சடையுடைய பெருமான் வாழும் நீடித்த திருவுடைய திருக்கச்சிமேற்றளி என்னும் கோவிலை அடைந்து ஆராத அன்பினால் எம்பிரானைப் பணிந்து போற்றும் இப்பூமிமேல் விளங்கும் அளவில் பெருமையுடைய திருப்பதிகம் நுந்த ஒண்சுடராம் எனத்தொட 190
ங்கிப் பாடி மகிழ்ந்து போற்றினார்.
அவர்பாடியருளிய இப்பூமியில் விளங்கும் பெருமையுடைய திருப்பதிகம் இதுவாகும்

திருக்கச்சிமேற்றளி

பண் – நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

நொந்தா ஒண்சுடரே நுனையே நினைந்திருந்தேன்
வந்தாய் போயறியாய் மனமே புகுந்துநின்ற
சிந்தாய் எந்தைபிரான் திருமேற் றளிஉறையும்
எந்தாய் உன்னையல்லால் இனிஏத்த மாட்டேனே. 1

ஆட்டான் பட்டமையால் அடியார்க்குத் தொண்டுபட்டுக்
கேட்டேன் கேட்பதெலாம் பிறவாமை கேட்டொழிந்தேன்
சேட்டார் மாளிகைசூழ் திருமேற் றளிஉறையும்
மாட்டே உன்னையல்லால் மகிழ்ந்தேத்த மாட்டேனே. 2

மோறுந் தோரொருகால் நினையா திருந்தாலும்
வேறு வந்தென்னுள்ளம் புகவல்ல மெய்ப்பொருளே
சேரூர் தண்கழனித் திருமேற் றளிஉறையும்
ஏறே உன்னையல்லால் இனிஏத்த மாட்டேனே.

உற்றார் சுற்றமெனும் அதுவிட்டு நுன்னடைந்தேன்
எற்றுல் என்குறைவென் இடரைத் துறந்தொழிந்தேன்
செற்றாய் மும்மதிலுந் திருமேற் றளிஉறையும்
பற்றே நுன்னை அல்லால் பணிந்தேத்த மாட்டேனே 4

எம்மான் எம்மனையென் றவனிட் டிறந்தொழிந்தார்
மெய்ம்மால் ஆயினதீர்த் தருள்செய்யும் மெய்ப்பொ(ரே)
கைம்மா வீருரியாய் கனமேற் றளியுறையும்
பெம்மான் உன்னையல்லால் பெரிதேத்த மாட்டேனே.

நானேல் உன்னடியே நினைந்தேன் நினைதலுமே
னானேர் இவ்வுடலம் புகுந்தாயென் ஒண்சுடரே
தேனே இன்னமுதே திருமேற் றளியுறையும்
கோனே உன்னையல்லால் குளிர்ந்தேத்த மாட்டேனே.

கையார் வெஞ்சிலைநா ணைதன்மேற் சரங்கோத்தே
எய்தாய் மும்மதிலும் எரிஉணவு எம்பெருமான்
செய்யார் பைங்கமலத் திருமேற் றளியுறையும்
ஐயா உன்னையல்லால் அறிந்தேத்த மாட்டேனே.

விரையார் கொன்றையினாய் விமலா இனி உன்னையல்லால்
உரையேன் ஆவதனால் உடலில்லுயிர் உள்ளவும்
திரையார் தண்கழனித் திருமேற் றளியுறையும்
அரையா உன்னையல்லால் அறிந்தேத்த மாட்டேனே. 8

நிலையாய் நின்னடியே நினைந்தேன் நினைதலுமே
தலைவா நின்னையப் பணித்தாய் சலமொழிந்தேன்
சிலையார் மாமதில்சூழ் திருமேற் றளியுறையும்
மலையா உன்னையல்லால் மகிழ்ந்தேத்த மாட்டேனே. 9

பாரூர் பல்வனூர் மதிற்காஞ்சி மாநகர்வாய்ச்
சீரூ ரும்புறவில் திருமேற் றளிச்சிவனை
ஆரூ ரன்அடியான் அடித்தொண்டன்ஆ ரூரன்சொன்ன
சீரூர் பாடல்வல்லார் சிவலோகஞ் சேர்வாரே. 10

திருச்சிற்றம்பலம்

ஒண காந்தன் றளிமேவும் ஒருவர் தம்மை உரிமையுடன்
பேணி அமைந்த தோழமையாற் பெருகும் அடிமைத் திறம்பேசிக்
காண மோடு பொன்வேண்டி நெய்யும் பாலும் கூலிவிளங் தம்
யாணர்ப் பதிகம்எடுத் தேந்தி எண்ணில் நிதிபெற்றினிதிருந்தார்.

அடுத்து திரு ஒணகாந்தன் தளி என்னும் கோவிலில் எம்சுந்தரமூர்த்தி சுவாமிகள் சேர்ந்து அத்தலத்து மேவிய எகனுய சிவனே தமக்கு உரிமையாளராகக் கொண்டு அமைந்த தோழன் என்னும் தன்மையால் பெருகும் அடிபைத்திறம் பேசிப் பாடிடுவார் காசுடன் பொன்னும் வேண்டி ''நெய்யும் பாலும்'' எனத் தொடங்கி இசைக் கலையின் சிறப்பு விளங்கும் அழகுடைய திருப்பதிகம் எடுத்துப் பாடிப்போற்றி எம்பிரானிடம் எண்ணற்ற நிதிபெற்றிருந்தார்.

அவர் எம்பிரானிடம் பொன்னும் காசும் வேண்டிப் பாடிய அத்திருப்பதிகம் இதுவாகும். 19

திருஒணகாந்தன் தளி

பண – இந்தளம்

திருச்சிற்றம்பலம்

நெய்யும் பாலுந் தயிருங் கொண்டு நித்தல் பூசனை செய்ய லுற்றார்
கையி லொன்றும் காண மில்லைக் கழல டிதொழு துய்யின் அல்லால்
ஐவர் கொண்டிங் காட்ட ஆடி ஆழ்கு ழிப்பட் டழுந்து வேனுக்
குய்யு மாறொன் றருளிச் செய்யீர் ஒண காந்தன் தளியுளீரே. 1

திங்கள் தங்கு சடைக்கண் மேலோர் திரைகள் வந்து புரள வீசும்
கங்கை யாளேல் வாய்தி றவ ள்ள கபத நியேல் வயிறு தாரி
அங்கை வேலோன் குமரன் பிள்ளை தேவி யார்கொற்ற றட்டி யாளார்
உங்க ளுக்காட் செய்ய மாட்டேம ஒண காந்தன் தளியு ளீரே. 2

பெற்ற போழ்தும் பெறுத போழ்தும் பேணி யும்கழல் ஏத்து வார்கள்
மற்றோர் பறறிலர் என்றி ரங்கி மதியுடை வர் செய்கை செய்வீர்
அற்ற போழ்தும் அலந்த போழ்தும் ஆபத் காலத் கடிகேள் உம்மை
ஒற்றி வைத்திங் குண்ண லாமே ஒண காந்தன் தளியு ளீரே. 3

வல்ல தெல்லாம் செல்லல் உம்மை வாழ்த்தி னலும் வாய்தி றந்தொன்
றில்லை என்னீர் உண்டும் என்னீர் எம்மை ஆள்வான் இருப்ப தென்னீர்
பல்லை யுக்க படுத லையிற் பகல்ள லாம்போய்ப் பலிதி ரிந்திங்
கொல்லை வாழ்க்கை ஒழிய மாட்டீர் ஒண காந்தன் தளியு ளீரே. 4

கூடிக் கூடித் தொண்டர் தங்கள் கொண்ட பாணி குறைப டாமே
ஆடிப் பாடி அழுது நெக்கங் கன்டு டையவர்க் கின்பம் ஓரீர்
தேடித் தேடித் திரிந்தெய்த் தாலும் சித்தம் என்பால் வைக்க மாட்டீர்
ஓடிப் போகீர் பற்றுந் தாரீர் ஒண காந்தன் தளியு ளீரே. 5

வாரி ருங்குழல் வாள்நெ டுங்கண் மலைம கள்மது விம்மு கொன்றைத்
தாரி ருந்தட மார்பு நீங்காத் தைய லாளுல குய்ய வைத்த
காரி ரும்பொழிற் கச்சி மூதூர்க் காமக் கோட்டம்உண்டா நீர்போய்
ஊரி டும்பிச்சை கொள்வ தென்னே ஒண காந்தன் தளியு ளீரே. 6

பொய்ம்மை யாலே போது போக்கிப் புறத்தும் இல்லே அகத்தும் இல்லே
மெய்ம்மை சொல்லி ஆள மாட்டீர் மேலே நாள்ஒன் றிடவுங் கில்லீர்
எம்மைப் பெற்றூல் ஏதும் வேண்டீர் ஏதுந் தாரீர் ஏதும் ஓதீர்
உம்மை என்றே எம்பெ ருமான் ஓண காந்தன் தளியு ளீரே. 7

வஞ்சயம் வைத்த கூற்ற மீவான் வந்து நின்ற வார்த்தை கேட்டுச்
சிலேஅ மைத்த சிந்தை யாலே திருவ டிதொழு துய்யின அல்லால்
கலேஅ மைத்த காமச் செற்றக் குரோத லோப மதவ ருடை
உலேஅ மைத்திங் கொன்ற மாட்டேன் ஓண காந்தன் தளியு ளீரே. 8

வார மாகித் திருவ டிக்குப் பணிசெய் தொண்டர் பெறுவ தென்னே
ஆரம் பாம்பு வாழ்வ தாரூர் ஒற்றி யூரேல் உம்மதன்று
தார மாகச் சங்கை யாளேச் சடையில் வைத்த அடிகேள் உந்தம்
ஊரும் சாடு உடையும் தோலே ஓண காந்தன் தளியு ளீரே. 9

ஓவ ணமேல் எருதொன் றேறும் ஓண காந்தன் தளியு ளார்தாம்
ஆவ ணஞ்செய் தாளுங் கொண்டு அரைது கிலொடு பட்டு வீக்கிக்
கோவ ணமேற் கொண்ட வேடம் கோவை யாகஆ ரூரன் சொன்ன
மாவ ணத்தமிழ் பத்தும் வல்லார் பறையுந் தாஞ்செய்த பாவந் தானே. 10

திருச்சிற்றம்பலம்

அங்கண் அமர்வார் அநேகதங்கா வதத்தை எய்தி உள்ளணைந்து
செங்கண்விடையார்தமைப்பணிந்துதேனெய்புரிந்(து)என்றெடுத்தமிழ்
தங்கும் இடமாம் எனைப்பாடித் தாழ்ந்து பிறவுந் தானங்கள்
பொங்கு காத லுடன்போற்றிப் புரிந்தப் பதியிற் பொருந்துநாள்.

அங்கு தங்கி இருப்பார் திருஅநேகதங் காவதம் என்னும் தலத்தை அடைந்து உள் சென்று செங்கண் இடப வாகனமுடைய பெருமானைப் பணிந்து தேனெய் புரிந்து எனத் தொடங்கிப் பாட எடுத்துக் கொண்ட தமிழ்ப் பதிகம் "எம்பிரான் தங்கும் இடமாம் இது" எனப் பாடித்தாழ்ந்து பிற தலங்களையும் உள்ளத்தே பொங்கும் காதலுட லே போற்றி வணக்கம் புரிந்து அப்பதியில் எம் சுந்தரமூர்த்தி சுவாமிகள் தங்கி இருக்கும் காலத்தில்

அவர் திருஅநேகதங் காவதம் என்னும் தலத்தைப் பாடியருளிய திருப்பதிகம் இதுவாகும். 192

திருக்கச்சி அநேகதங்காவதம்

பண் — இந்தளம்

திருச்சிற்றம்பலம்

தேனெய் புரிந்துழல் செஞ்சடை எம்பெரு மான திடம்திகழ் ஐங்கணையக்
கோனே எரித்தெரி யடி இடங்குல வான திடம்குறை யாமறையாம்
மானே இடத்ததொர் கையன் இடம்மதம் மாறு படப்பொழி யும்மலேபோல்
யானே உரித்தபி ரான திடங்கலிக் கச்சி அனேகதங் காவதமே. 1

கூறு நடைக்குழி கட்பகு வாயன பேய்உகந் தாடநின் ரூரியிட
வேறு படக்குட கக்திலே யம்பல வாணன் நின்முடல் விருப்பும்இடம்
ஏறு விடைக்கொடி எம்பெரு மான்இமை யோர்பெரு மான்உமை யாள்கணவன்
ஆறு சடைக்குடை அப்பன் இடங்கலிக் கச்சி அனேகதங் காவதமே. 2

கொடிக ளிடைக்குயில் கூவும் இடம்மயி லும்ஆலும் இடம்மழு வாளுடை
கடிகொள்புனற்சடைகொண்ட நுதற்கறைக் கண்டன் இடம்பிறைத் துண்டமூடிச்?
செடிகொள் வினேப்பகை தீரும் இடந்திரு வாகும் இடம்திரு மார்பகலத்
தடிகள் இடம்அழல் வண்ணன் இடங்கலிக் கச்சி அனேகதங் காவதமே. 3

கொங்கு நுழைத்தன வண்டறை கொன்றையும் கங்கையுந் திங்களுஞ் சூடுசடை
மங்குல் நுழைமலே மங்கையை நங்கையைப் பங்கினில் தங்க உதந்தருள்செய்
சங்கு குழைச்செவி கொண்டரு வித்திரள் பாய வியர்த்தழல் போலுடைத்தம்
அங்கை மழுத்திகழ் கையன் இடம்கலிக் கச்சி அனேகதங் காவதமே. 4

பைத்தாடத்தலே? ஆடர வம்பயில் கின்ற இடம்பயி லப்புகுவார்
சித்தம் ஒருநெறி வைத்த இடம்திகழ் கின்ற இடந்திரு வானடிக்கே
வைத்த மனத்தவர் பத்தர் மனங்கொள வைத்த இடம் மழு வாளுடைய
அத்தன் இடம்அழல் வண்ணன் இடம்கலிக் கச்சி அனேகதங் காவதமே. 5

தண்ட முடைத்தரு மன்தமர் என்தம ரைச்செயும் வன்துயர் தீர்க்குமிடம்
பிண்ட முடைப்பிற வித்தலே நின்று நினேப்பவர் ஆக்கையை நீக்கும்இடம்
கண்ட முடைக்கரு நஞ்சை நுகர்ந்த பிரான திடங்கடல் ஏழுகடந்
தண்ட முடைப்பெரு மான திடங்கலிக் கச்சி அனேகதங் காவதமே. 6

கட்டு மயக்கம் அறுத்தவர் கைதொழு தேத்தும் இடம்கதி ரோன்ஒளியால்
விட்டும் இடம் விடை ஊர்தி இடம்குயிற் பேடைதன் சேவலொ டாடும்இடம்
மட்டு மயங்கி அவிழ்ந்த மலர்ஒரு மாதவி யோடு மணம்புணரும்
அட்ட புயங்கப் பிரான தடங்கலிக் கச்சி அனேகதங் காவதமே. 7

புல்லி இடந்தொழு துய்தும் என்னுதவர் தம்புர மூன்றும் பொடிபடுத்த
வில்லி இடம்விர வாதுயிர் உண்ணும்வெங் காலனேக் கால்கொடு வீந்தவியக்
கொல்லி இடங்குளிர் மாதவி மல்வல் குராவகு ளங்குருக் கத்திபுன்னே
அல்லி யிடைப்பெடை வண்டுறங் கும்கலிக் கச்சி அனேகதங் காவதமே. 8

சங்கை யவர்புணர் தற்கரி யான்தள வேனகை யாள்தவி ராமிகுசீர்
மங்கைய வள்மறி ழச்சுடு காட்டிடை நட்டம் நின்றுடிய சங்கரன்எம்
அங்கையி னல்அனல் ஏந்து மவன்கனல் சேரொளி அன்னதொர் பேரகலத்
தங்கைய வன்னுறை கின்ற இடங்கலிக் கச்சி அனேகதங் காவதமே. 9

வீடு பெறப்பல ஊழிகள் நின்று நினேக்கும் இடம்வினே தீரும்இடம்
பீடு பெறப்பெரி யோர இடங்கொண்டு மேவினர் தங்களேக் காக்கும்இடம்
பாடும் இடத்தடி யான்புகழ் ஊரன் உரைத்த இம்மாலேகள் பத்தும்வல்லார்
கூடும் இடம்சிவ லோகன் இடங்கலிக் கச்சி அனேகதங் காவதமே. 10

திருச்சிற்றம்பலம்

பாட லிசையும் பணியினுற் பாவை தழுவக் குழைகம்பர்
ஆடல் மருவுஞ் சேவடிகள் பரவிப் பிரியா தமர்கின்ரூர்
நீட மூதூர்ப் புறத்திறைவர் நிலவும் பதிகள் தொழவிருப்பால்
மாட நெருங்கு வன்பார்த்தான் பனங்காட்டூரில் வந்தடைந்தார்.

எம்பிரானே பாடஅருள் பெருகும் அப்பணியினுல் உமையம்மை தழுவ குழைந்து காட்டிய ஏகாம்பரேசுவரது ஆடல்பொருந்திய திவ்விய திருவடிகள் போற்றி ஏகாம்பரம் பிரயாது அமர்கின்ற எம் சுந்தரமூர்த்திசுவாமிகள் நீடித்த வாழ்வுடைய முதிய அவ்வூரின் புறத்தே ஈசன் தங்கிய தலங்களேத் தொழுதிடும் விருப்பாலே மாடங்கள் நெருங்கிய வன்பார்த்தான் பனங்காட்டூரில் வந்தடைந்தார். 193

செல்வ மல்கு திருப்பனங்காட் டூரிற் செம்பொற் செழுஞ் சுடரை
அல்லல் அறுக்கும் அருமந்தை வணங்கி அன்பு பொழிகண்ணீர்
மல்க நின்று விடையின்மேல் வருவான் எனும்வண் தமிழ்ப்பதிகம்
நல்ல இசையி னுடன்பாடிப் போந்து புறம்பு நண்ணுவார்.

செல்வம் விளங்கிய வன்பார்த்தான்திருப் பனங்காட்டூரில் அமர்ந்த செம்பொன்னின் செழுஞ்சுடராய சிவனே; அல்லல் யாவும் அறுத்திடும் அருமருந்தாயவனே; வணங்கி அன்பு பொழியும் கண்ணீர் பெருக நின்று அப்பனே "விடையின் மேல் வருவான்" எனத் தொடங்கிப் பாடிடும் வண்மையாய தமிழ்த் திருப்பதிகம் நல்ல இசையுடன் பாடி அருள் பிறந்து வெளியே வந்தருளுவார். 164

அவர் பாடியருளிய பதிகம் இதுவாகும்.

திருவன்பார்த்தான் பனங்காட்டூர்

பண் — சீகாமரம்

திருச்சிற்றம்பலம்

விடையின்மேல் வருவானே வேதத்தின் பொருளானே
அடியில்அன் புடையானே யாவர்க்கும் அறியொண்ணு
மடையில்வா ளைகள்பாயும் வன்பார்த்தான் பனங்காட்டூர்ச்
சடையிற்கங்கை தரித்தானேச் சாராதார் சார்பென்னே. 1

அறையும்பைங் கழல்ஆர்ப்ப அரவாட அனல்ஏந்திப்
பிறையுங்கங் கையுட்சூடிப் பெயர்ந்தாடும் பெருமானூர்
பறையுஞ்சங் கொலிஓவாப் படிறன்றன் பனங்காட்டூர்
உறையும்எங்கள் பிரானே உனராதார் உனர்வென்னே. 2

தண்ணார்மா மதிசூடித் தழல்போலுந் திருமேனிக்
கெண்ணார்நாள் மலர்கொண்டங் கிசைந்தேத்து மடியார்கள்
பண்ணார்பா டல்அருத படிறன்றன் பனங்காட்டூர்ப்
பெண்ணுரு யிராணைப் பேசாதார் பேச்சென்னே. 3

நெற்றிக்கண் உடையாணை நீறேறுந் திருமேனிக்
குற்றமில் குணத்தாணைக் கோணுதார் மனத்தாணைப்
பற்றிப்பாப் பரைஆர்த்த படிறன்றன் பனங்காட்டூர்ப்
பெற்றென்றே றும்பிராணைப் பேசாதார் பேச்சென்னே 4

உரமென்னும் பொருளாணை உருகில்உள் ளூறைவாணைச்
சிரமென்னுங் கலனாணைச் செங்கண்மால் விடையாணை
வரமுன்னமருள் செய்வான் வன்பார்த்தான் பனங்காட்டூர்ப்
பரமன்எங் கள்பிராணைப் பரவாதார் பரவென்னே. 5

எயிலார்பொக் கம்எரித்த எண்டோள்முக் கண்இறைதன்
வெயிலாய்க்காற் றெனவீசி மின்னுய்த்தீ எனநின்றான்
மயிலார்சோ லைகள்சூழ்ந்த வன்பார்த்தான் பனங்காட்டூர்ப்
பயில்வானுக் கடிமைக்கட் பயிலாதார் பயில்வென்னே. 6

மெய்யன்வெண் பொடிபூசும் விகிர்தன்வே தமுதல்வன்
கையில்மான் மழுவேந்திக் காலன்கா லம்அறுத்தான்
பைகொள்பாம் பரைஆர்த்த படிறன்றன் பனங்காட்டூர்
ஐயன்எங் கள்பிராணை அறியாதார் அறிவென்னே. 7

வஞ்சமற்ற மனத்தாரை மறவாத பிறப்பிலியைப்
பஞ்சிச்சீ றடியாணைப் பாகம்வைத் துகந்தாணை
மஞ்சுற்ற மணிமாட வன்பார்த்தான் பனங்காட்டூர்
நெஞ்சத்தெங் கள்பிரானை நினையாதார் நினைவென்னே. 8

மழையானுந் திகழ்கின்ற மலரோன்என் றிருவர்தாம்
உழையாநின் றவர்உள்க உயர்வானத் துயர்வாணைப்
பழையானைப் பனங்காட்டூர் பதியகத் திகழ்கின்ற
குழைகாதற் கடிமைகட் குழையாதார் குழைவென்னே. 9

பாரூரும் பனங்காட்டூர்ப் பவளத்தின் படியானைச்
சீரூருந் திருவாரூர்ச் சிவன்பேர்சென் னியில்வைத்த
ஆரூரன் அடித்தொண்டன் அடியன்சொல் அடிநாய்சொல்
ஊரூரன் உரைசெய்வார் உயர்வானத் துயர்வாரே. 10

திருச்சிற்றம்பலம்

மன்னு திருமாற் பேறணைந்து வணங்கிப் பரவித் திருவல்லம்
தன்னுள் எய்தி இறைஞ்சிப்போய்ச் சாரும் மேல்பாற் சடைக்கற்றைப்
பின்னல் முடியார் இடம்பலவும் பேணிவணங்கிப் பெருந்தொண்டர்
சென்னி முகில்தோய் தடங்குவட்டுத் திருக்காளத்தி மலைசேர்ந்தார்.

அதன்பின் விளங்கும் திருமாற்பேறு என்னும் சிவாலயத்தை அடைந்து வணங்கிப் போற்றி அதன்பின் திருவல்லம் என்னும் கோவிலையும் அடைந்து வணங்கிப் போய் சார்கின்ற; மேற்குப்புறமாக உள்ள கற்றையாய பின்னல் சடைமுடியுடைய பெருமானது இடங்கள் பலவும் பேணுதலுடன் வணங்கி எம் பெரும் தொண்டர் சுந்தரமூர்த்தி சுவாமிகள்; முடியின் மீது முகில் படியும் அகன்ற சிகரங்களுடைய திருக்காளத்தி மலையினைச் சேர்ந்தார். 195

தடுக்க லாகாப் பெருங்காதல் தலைநின் றருளுங் கண்ணப்பர்
இடுக்கண் களைந்தாட் கொண்டருளும் இறைவர் மகிழ்ந்த காளத்தி
அடுக்கல் சேர அணைந்துபணிந் தருளால் ஏறி அன் பாறு
மடுப்பத் திருமுன் சென்றெய்தி மலைமேல் மருந்தை வணங்கினார்.

தடுக்க முடியாத பெருங்காதல் தலை நின்று சிறந்திட அதனால் அருளுடைய தொண்டு கொண்ட கண்ணப்பநாயனரது இடுக்கண் எல்லாம் களைந்து ஆட்கொண்டருளும் ஈசர் மகிழ்ந்த திருக்காளத்தி மலையினைச் சேரச் சென்று பணிந்து அருளால் அம்மலை மீது ஏறி அன்பெனும் ஆறு கரையது புரளத் காளத்தி அப்பன் திருமுன்பு சென்று அம்மலைமேல் என்றும் எம்பிணிக்கு மருந்தாய ஈசனை வணங்குகின்றார்; 196

வணங்கி உள்ளங் களிகூர மகிழ்ந்து போற்றி மதுரஇசை
அணங்கு செண்டா(டு) எனும்பதிகம் பாடி அன்பாற்கணணப்பர்
மணங்கொள் மலர்ச்சே வடிபணிந்து வாழ்ந்து போந்து மன்னுபதி
இணங்கு தொண்டருடன் கெழுமி இன்புற் றிருக்கும் அந்நாளில்.

வணங்கி உள்ளம் களிகூர்ந்திட மகிழ்ந்து போற்றி; எம்பிராணை காளத்தி அப்பனை மதுரமாய இசை பரவசமாய்ச் சிறந்திடும் செண்டாடும் விடையாய் எனத் தொடங்கிடும் திருப்பதிகம் பாடி அன்பினால் கண்ணப்ப நாயனரது மணம் கொண்டு விளங்கும் தாமரை மலர் போலும் சிவந்த திருவடிகள் பணிந்து வாழ்வு பெற்று வெளியே வந்து விளங்கும் திருக்காளத்தியில் தம்முடன் இணங்கிய அடியாருடன் பொருந்தி இன்புற்று இருக்கும் அந்தநாளில். 197

அவர் காளத்தி நாயனைப் பாடிய மதுர மாய இசை; அற்புதமாய் மலரும் அப்பதிகம் இதுவாகும்.

திருக்காளாத்தி

பண் — நட்டராகம்

திச்சிற்றம்பலம்

செண்டா டும்விடையாய் சிவனேயென் செழுஞ்சுடரே
வண்டா ருங்குழலாள் உமைபாகம் மகிழ்ந்தவனே
கண்டார் காதலிக்குங் கணநாதன்எங் காளத்தியாய்
அண்டா உன்னையல்லால் அறிந்தேத்த மாட்டேனே. 1

இமையோர் நாயகனே இறைவாவென் இடர்த்துணையே
கமையார் கருணையினுய் கருமாமுகில் போல்மிடற்றாய்
உமையோர் கூறுடையாய் உருவேதிருக் காளத்தியுள்
அமைவே உன்னையல்லால் அறிந்தேத்த மாட்டேனே. 2

படையார் வெண்மழுவா பகலோன்பல் லுகுத்தவனே
விடையார் வேதியனே விளங்குங்குழைக் காதுடையாய்
கடையார் மாளிகைசூழ் கணநாதன்எங் காளத்தியாய்
உடையாய் உன்னையல்லால் உகந்தேத்த மாட்டேனே. 3

மறிசேர் கையினனே மதமாவுரி போர்த்தவனே
குறியே என்னுடைய குருவேஉன்குற் றேவல்செய்வேன்
நெறியே நின்றடியார் நினைக்குந்திருக் காளத்தியுள்
அறிவே உன்னையல்லால் அறிந்தேத்த மாட்டேனே. 4

செஞ்சேல் அன்னகண்ணார் திறத்தேகிடந் துற்றலறி
நஞ்சேன் நான்அடியேன் நலம்ஒன்றறி யாமையினால்
துஞ்சேன் நான்ஒருகால் தொழுதேன்திருக் காளத்தியாய்
அஞ்சா துன்னையல்லால் அறிந்தேத்த மாட்டேனே. 8

பொய்யவன் நாயடியேன் புகவேநெறி ஒன்றறியேன்
செய்யவ னேகிவந்திங் கிடர் ஆனவை தீர்த்தவனே
மெய்யவ னேதிருவே விளங்குந்திருக் காளத்தியான்
ஐயநுன் றன்னையல்லால் அறிந்தேத்த மாட்டேனே. 6

கடியேன் காதன்மையாற் கழற்போதறி யாதஎன்னுள்
குடியாக் கோயில்கொண்ட குளிர்வார்சடை எம்குழகா
முடியால் வானவர்கள் முயங்குந்திருக் காளத்தியாய்
அடியேன் உன்னையல்லா தறியேன்மற் றொருவரையே.

நீரூர் மேனியனே நிலாநீள அன்றிமற்றுக்
கூறேன் ஆவதனைக் கொழுந்தேயென் குணக்கடலே
பாரூர் வெண்டலையிற் பலிகொண்டுழல் காளத்தியாய்
ஏறே உன்னையல்லால் இனிஏத்த மாட்டேனே.

தளிர்போல் மெல்லடியாள் தனிஆகத் தமர்ந்தருளி
எளிவாய் வந்தென்உள்ளம் புகுதவல்ல எம்பெருமான்
களியார் வண்டறையுந் திருக்காளத்தி யுள்ளிருந்த
ஒளியே உன்னையல்லால் இனிஒன்றும் உணரேனே. 9

காரூ ரும்பொழில்சூழ் கணநாதன்எங் காளத்தி யுள்
ஆரா இன்னமுதை அணிநாவலா ரூரன்சொன்ன
சீரூர் செந்தமிழ்கள் செப்புவார்விஞ் யாயினபோய்ப்
பேரா விண்ணுலகம் பெறுவார்பிழைப் பொன்றிலரே. 10

திருச்சிற்றம்பலம்

வடமா திரத்துப் பருப்பதமும் திருக்கேதார மலையும்முதல்
இடமா அரனூர் தாம்உவந்த எல்லாம் இங்கே இருந்திறைஞ்சி
நடமா டியசே வடியாரை நண்ணி னுர்போல் உள்நிறைந்து
திடமாங் கருத்தில் திருப்பதிகம் பாடிக் காதல் சிறந்திருந்தார்.

அங்கிருக்கும் காலத்தில் வடதிசையில் உள்ள திருப்பருப்பதம் என்னும் மலைத் தலத்தையும் திருக்கேதாரம் என்னும் மலைத்தலத்தையும் இவை முதலாக உள்ள சிவபெருமான் உவந்து உறைகின்ற இடங்கள் எல்லாம் இங்கிருந்தே வணங்கி; அத்தலங்களில் எல்லாம் நடமாடிய திருவடியுடைய பெருமானே நேரில் அங்கு சென்று வணங்கினர்போல் உள்ளம் நிறைந்து கொண்ட திடமாய கருத்தினுல் எம்பிரானே அத்தலங்களில் திருப்பதிகம் பாடினர். 198

அவர் வடக்கே உள்ள தலமாய திருப்பருப்பதத்தைப் பாடியருளிய பதிகம் இதுவாகும்.

திருப்பருப்பதம்

பண் – நட்டபாடை
திருச்சிற்றம்பலம்

மானும்மரை இனமும்மயில் இனமுங்கலந் தெங்கும்
தாமேமிக மேய்ந்துதடஞ் சுனைநீர்கூம்பப் பருகிப்
பூமாமரம் உரிஞ்சிப்பொழி லூடே சென்று புக்குத்
தேமாம்பொழில் நீழல்துயில் சீபர்ப்பத மலையே. 1

மலைச்சாரலும் பொழிற்சாரலும் புறமேவரும் இனங்கள்
மலைப்பாற்கொணர்ந் திடித்தூட்டிட மலங்கித்தன களிற்றை
அழைத்தோடியும் பிளிறீயவை அலமந்துவந் தெய்த்துத்
திகைத்தோடித்தன் பிடிதேடிடுஞ் சீபர்ப்பத மலையே. 2

மன்னிப்புனங் காவல்மட மொழியாள்புனங் காக்கக்
கன்னிக்கிளி வந்துகவைக் கோலிக்கதிர் கொய்ய
என்னேக்கிளி மதியாதென்று எடுத்துக்கவண் ஒலிப்பத்
தென்னற்கிளி திரிந்தேறிய சீபர்ப்பத மலையே. 3

மையார்தடங் கண்ணுள்மட மொழியாள் புனங்காக்கச்
செவ்வேதிரிந் தாயோஎனப் போகாவிட விளிந்து
கைபாவிய கவணுல்மணி எறியஇரிந் தோடிச்
செவ்வாயன கிளிபாடிடுஞ் சீபர்ப்பத மலையே. 4

ஆனைக்குலம் இரிந்தோடித்தன் பிடிசூழலிற் றிரியத்
தானப்பிடி செவிதாழ்த்திட அதற்குமிக இரங்கி
மானக்குற அடல்வேடர்கள் இலையாற்கலை கோலித்
தேனைப்பிழிந் தினிதூட்டிடுஞ் சீபர்ப்பத மலையே. 5

மாற்றுக்களி றடைந்தாய்என்று மதவேழங்கை எடுத்தும்
ஊற்றித்தழல் உமிழ்ந்தும்மதம் பொழிந்தும்முசுஞ் சுழியத்
தூற்றத்தரிக் கில்லேன்என்று சொல்லிஅயல் அறியத்
தேற்றிச்சென்று பிடிசூழறுஞ் சீபர்ப்பத மலையே. 6

அப்போதுவந் துண்டூர்களுக் கழையாதுமுன் விருந்தேன்
எப்போதும்வந் துண்டால்எமை எமர்கள்சுழி யாரோ
இப்போதுமக் கிதுவேதொழில் என்றோடியக் கிளியைச்
செப்பேந்திள முலையாள்எறி சீபர்ப்பத மலையே. 7

திரியும்புரம் நீறுக்கிய செல்வன்றன கழலை
அரியதிரு மாலோடயன் முனும்மவர் அறியார்
கரியின்இனம் ஓடும்பிடி தேன்உண்டவை களித்துத்
திரிதந்தவை திகழ்வாற்பொலி சீபர்ப்பத மலையே. 8

ஏனத்திள கிலைக்களரி போலமணி சிதறத்
தீயென்றவை மலைச்சாரலில் திரியுங்கர டியும்
மானும்மரை இனமும்மயில் மற்றும்பல எல்லாம்
தேனுண்பொழில் சோலைமிகு சீபர்ப்பத மலையே. 9

நல்லாரவர் பலர்வாழ்தரு வயல்நாவல ஊரன்
செல்லல்லுற அரியசிவன் சீபர்ப்பத மலையை
அல்லலவை நீரச்சொன தமிழ்மாலைகள் வல்லார்
ஒல்லைசெல உயர்வானகம் ஆண்டங்கிருப் பாரே; 10

திருச்சிற்றம்பலம்

அடுத்து அவர் வடக்கே உள்ள திருத்தலம் திருக்கேதாரத்தைப் பாடிய அருமந்த பதிகம் இதுவாகும் ஓதி உணர்ந்து இப்பிறவியை உய்ந்திடக் கொள்ளுங்கள்.

திருக்கேதாரம்

பண் – நட்டபாடை
திருச்சிற்றம்பலம்

வாழ்வாவது மாயம்மீது மண்ணுவது திண்ணம்
பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய்செய்த பறிதான்
தாழாதறஞ் செய்மின்தடங் கண்ணுன்மல ரோனும்
கீழ்மேலுற நின்றுன்திருக் கேதாரமெ னீரே; 1

பறியேசுமந் துழல்வீர்பறி நரிகீறுவ தறியீர்
குறிகூவிய கூற்றங்கொளும் நாளால் அறம்உளவே
அறிவானிலும் அறிவானல நறுநீரொடு சோறு
கிறிபேசிதின் றிடுவார்தொழு கேதாரமே னீரே; 2

கொம்பைப்பிடித் தொருக்காலர்கள் இருக்கால்மலர்தூவி
நம்பன்நமை ஆள்வானென்று நடுநாளையும் பகலும்
கம்பக்களிற் றினமாய்நின்று சுனைநீர்கலைத் தூவிச்
செம்பொற்பொடி சிந்துந்திருக் கேதாரமெ னீரே; 3

உழக்கேஉண்டு படைத்தீட்டிவைத் திழப்பார்களுஞ்சிலர்கள்
வழக்கேயெனிற் பிழைக்கேமென்பர் மதிமாந்திய மாந்தர்
சழக்கேபறி நிறைப்பாரொடு தவமாவது செயன்மின்
கிழக்கேசலம் இடுவார்தொழு கேதாரமெ னீரே; 4

வாளோடிய தடங்கண்ணியர் வலையில்அழுந் தாதே
நாளோடிய நமனுர்தமர் நணுகாமுனம் நணுகி
ஆளாய்உய்ம்மின் அடிசுட்கிடம் அதுவேளனில் இதுவே
கீளோடர வசைத்தானிடம் கேதாரமெ னீரே. 5

தளிசாலைகள் தவமாவது தம்மைப்பெறில் அன்றே
குளியீர்உளங் குருக்கேத்திரங் கோதாவிரி குமரி
தெளியீர்உளம் சீபர்ப்பதந் தெற்குவடக் காகக்
கிளிவாழைஒண் கனிகீறிஉண் கேதாரமெ னீரே; 6

பண்ணின்தமிழ் இசைபாடலின் பழவேய்முழ வதிரக்
கண்ணின்னெளி கனகச்சுனை வயிரம்அவை சொரிய
மண்ணின்றன மதவேழங்கள் மணிவாரிக்கொண் டெறியக்
கிண்ணென்றிசை முரலுந்திருக் கேதாரமெ னீரே; 7

முனைக்கைப்பிடி முகமன்சொலி முதுவேய்களை இறுத்துத்
துனைக்கைக்களிற் றினமாய்நின்று சுனைநீர்கலைத் தூவி
வனைக்கைப்பொழி மழைசூர்தர மயில்மான்பிணை நிலத்தைக்
கினைக்கமணி சிந்துந்திருக் கேதாரமெ னீரே; 8

பொதியேசுமந் துழல்வீர்பொதி அவமாவதும் அறியீர்
மதிமாந்திய வழியேசென்று குழிவீழ்வதும் வினையால்
கதிசூழ்களல் இலங்கைக்கிறை மலங்கவரை அடர்த்துக்
கெதிபேறுசெய் திருந்தாஇடங் கேதாரமெ னீரே; 9

நாவின்மிசை யரையன்னெடு தமிழ்ஞானசம் பந்தன்
யாவர்சிவன் அடியார்களுக் கடியான்அடித் தொண்டன்
தேவன்திருக் கேதாரத்தை ஊரன்னுரை செய்த
பாவின்தமிழ் வல்லார்பர லோகத்திருப் பாரே. 10

திருச்சிற்றம்பலம்

அங்குச் சிலநாள் வைகியபின் அருளாற் போந்து பொரு விடையார்
தங்கும் இடங்கள் எனைப்பலவும் சார்ந்து தாழ்ந்து தமிழ்பாடிப்
பொங்கு புனரிக் கரைமருங்கு புவியுட் சிவலோ கம்போலத்
தெங்கள் முடியார் அமர்ந்ததிரு வொற்றி யூரைச் சென்றடைந்தார்.

அங்கே சிலநாள் இருந்தருளிய பிற்பாடு அருளால் போய் போர்இடபமுடைய பெருமான் தங்கிடும் இடங்கள் ஏனைய பலவும் சேர்ந்து வணங்கித் தமிழ்ப்பதிகம் பாடிச் சென்று; பொங்கும் திரையுடைய சமுத்திரக் கரையோரமாக விளங்கிய இப்பூமியுள் சிவலோகம் போலச் சிறந்துற்ற இளம்பிறையினை முடிமேல் சூடிய சிவபெருமான் அமர்ந்த திருவொற்றியூர் என்னும் தலத்தைச் சென்றடைந்தார். 199

அண்ணல் தொடர்ந்தா வணங்காட்டி ஆண்ட நம்பி எழுந்தருள
எண்ணில் பெருமை ஆதிபுரி இறைவர் அடியார் எதிர் கொள்வார்
வண்ண வீதி வாயில்தொறும் வாழை கமுகு தோரணங்கள்
சுண்ண நிறைபொற் குடந்தூப தீபம் எடுத்துத் தொழஎழுங்கால்.

எம்பெருமான் தானே தொடர்ந்து வந்து உறுதிகாட்டி ஆண்ட தலைவர் சுந்தர மூர்த்தி சுவாமிகள் எழுந்தருளலும்; அது உணர்ந்து எண்ணற்ற பெருமையுடைய ஆதியில் தோன்றிய தலமாகும் திருவொற்றியூர்ப் பெருமான் அடியார்கள் வந்து எதிர் கொள்வார்கள்; வண்ணமான தமது வீதிகளின் வாயில்கள் தோறும் வாழை கமுகு தோரணங்கள் பொற் சுண்ணம் நிறைந்த பொற்குடங்கள் தூபம் தீபம் இவை எடுத்து அலங்கரித்து எம் பெருமான் சுந்தரரைத்தொழுதிட எழுந்த நேரத்து.: 200

வரமங் கலநல் லியம்முழங்க வாச மாலை அணிஅரங்கில்
புரமங் கையர்கள் நடமாடப் பொழியும் வெள்ளப் பூமாரி
அரமங் கையரும் அமர்களும் வீச அன்ப ருடன் புகுந்தார்
பிரமன் தலையிற் பலியுவந்த பிரானர் விரும்பு பெருந்தொண்டர்.

வாய்ப்புறச் சிறந்த மங்கலமுடைய நல்ல வாத்தியம் முழங்கிட வாசமுடை மாலை அணிந்த நாட்டிய அரங்குகளில் லெம்பணிந்த பெண்கள் நடமாடிட எங்கும் பொழியும் மழை வெள்ளம் போல் பூமழையை தேவப்பெண்களும் தேவர்களும் வீசிட; அன்பர்களுடன் திருவொற்றியூரில் புகுந்தார் பிரமனது தலையில் பலிஉவந்து ஏற்ற சிவபெருமான் விரும்பிய பெருந்தொண்டர் சுந்தரமூர்த்தி சுவாமிகள் 201

ஒற்றி யூரின் உமையேடுங் கூட நின்றூர் உயர்தவத்தின்
பற்று மிக்க திருத்தொண்டர் பரந்த கடல்போல் வந்தீண்டிச்
சுற்றம் அணைந்து துதிசெய்யத் தொழுது தம்பிரான் அன்பர்
கொற்ற மழவே றுடையவர்தங் கோயில் வாயில் எய்தினார்.

திருவொற்றியூரில் உமையம்மையோடும் கூட நின்ற சிவபெருமானது உயர்ந்த தவத்தின் பற்றுமிக்க திருத்தொண்டர் பரந்த பெரும் கடல் போல பெருக வந்து கூடி அவரது சுற்றம் போல அணைந்து துதி செய்திடத் தாமும் அவரைத் தொழுது; எம்பெருமான் அன்பர் சுந்தரமூர்த்திசுவாமிகள் கொற்றம் மிகுந்த தரும தேவதையாகும் இடபதேவரை வாகனமாக உடைய பெருமானது கோயில் வாயில் முன்பாக வந்தார். 202

வானை அளக்குங் கோபுரத்தை மகிழ்ந்து பணிந்து புகுந்து வளர்
கூனல்இளவெண் பிறைச்சடையார் கோயில் வலங்கொண்டெதிர்குறுகி
ஊனும் உயிரும் கரைந்துருக உச்சி குவித்த கையினுடன்
ஆன காத லுடன்வீழ்ந்தார் ஆரா அன்பின் ஆரூரர்.

வானினை அளப்பது போலும் கோபுரத்தை மகிழ்ந்து பணிந்து உள்ளே புகுந்து வளரும் கூனிய இளமையான வெண்பிறையை சடைமேல் உடைய பெருமானது கோயிலை வலங்கொண்டு; திருமுன்பு எதிரே சேர்ந்து ஊனும் உயிரும் கரைந்து உருகிட உச்சி மீது குவித்தகையுடன் உள்ளத்து பெருகிய காதலுடன் திருமுன்பு வீழ்ந்தார் ஆராத அன்பினை யுடைய நம்பியாரூரர் சுந்தரமூர்த்திசுவாமிகள்; 203

ஏட்டு வரியில் ஒற்றியூர் நீங்கல் என்ன எழுத்தறியும்
நாட்ட. மலருந் திருநுதலார் நறும்பொற் கமலச் சேவடியில்
கூட்டும் உணர்வு கொண்டெழுந்து கோதில் அமுத இசைகூடப்
பாட்டும் பாடிப் பரவி எனும் பதிகம் எடுத்துப் பாடினர்.

எழுதப்பெற்ற ஏட்டின் வரியில் திருவொற்றியூர் நீங்கல் இவ்வாசகத்திற்கு என எழுத்தறிய வல்ல; திருக்கண் சிறந்து விளங்கிடக் கொண்ட திருநெற்றியுடைய சிவபெருமானது வாசனை கொண்ட பொன்னின் தாமரை போலும் திருவடிக் கீழாக கூட்டிய உணர்வு கொண்டு எழுந்து கோதிலாத அமுதம் போலும் இசை வந்து கூடட''பாட்டும் பாடிப்பரவி''எனத்தொடங்கும் திருப்பதிகம் எடுத்துப் பாடினர். 204

அவர் திருவொற்றியூர் படம்பக்க நாதன் என்னும் புண்ணியச் சுடரை ப்பாடிய கோதிலா அமுதச் சுவைநிரம்பிய அந்தப்பதிகம் இதுவாகும்.

திருவொற்றியூர்

பண் — குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

பாட்டும் பாடிப் பரவித் திரிவார், ஈட்டும் வினைகள் தீர்ப்பார் கோயில்
காட்டுங் கலமுந் திமிலுங் கரைக்கே, ஒட்டுந் திரைவாய் ஒற்றி யூரே: 1

பந்துங் கிளியும் பயிலும் பாவை, சிந்தை கவர்வார் செந்தீ வண்ணர்
எந்தம் அடிகள் இறைவர்க் கிடம்போல், உந்துந் திரைவாய் ஒற்றி யூரே: 2

பவளக் கனிவாய்ப் பாவை பங்கன், கவளக் களிற்றின் உரிவை போர்த்தான்
தவழும் மதிசேர் சடையாற் கிடம்போல், உகளுந் திரைவாய் ஒற்றி யூரே. 3

என்ன தெழிலும் நிறையும் கவர்வான், புன்னை மலரும் புறவில் திகழும்
தன்னை முன்னம் நினைக்கத் தருவான், உன்னப் படுவான் ஒற்றி யூரே. 4

பணங்கொள் அரவம் பற்றிப் பரமன், கணங்கள் சூழக் கபாலம் ஏந்தி
வணங்கும் இடைமென் மடவார் இட்ட, உணங்கல் கவர்வான் ஒற்றி யூரே. 5

படையார் மழுவன் பால்வெண் ணீற்றன், விடையார் கொடியன் வேத நாவன்
அடையார் வினைகள் அறுப்பான் என்னை, உடையான் உறையும் ஒற்றி யூரே. 6

சென்ற புரங்கள் தீயில் வேவ, வென்ற விகிர்தன் வினையை வீட்ட
நன்று நல்ல நாதன் நரையே, றென்றே உடையான் ஒற்றி யூரே: 7

கலவ மயில்போல் வஞ்சக்கை நல்லார், பலரும் பரவும் பவளப் படியான்
உலகின் உள்ளார் வினைகள் தீர்ப்பான், உலவுந் திரைவாய் ஒற்றி யூரே. 8

பற்றி வரையை எடுத்த அரக்கன், இற்று முரிய விரலால் அடர்த்தார்
எற்றும் வினைகள் தீர்ப்பார் ஓதம், ஒற்றுத் திரைவாய் ஒற்றி யூரே. 9

ஒற்றி யூரும் அரவும் பிறையும், பற்றி யூரும் பவளச் சடையான்
ஒற்றி யூர்மேல் ஊரன் உரைத்த, கற்றுப் பாடக் கழியும் வினையே. 10

திருச்சிற்றம்பலம்

பாடி அறிவு பரவசமாம் பரிவு பற்றப் புறம்போந்து
நீடு விருப்பிற் பெருங்காதல் நிறைந்த அன்பர் பலர்போற்றத்
தேடும் அயனும் திருமாலும் அறிதற் கரிய திருப்பாதம்
கூடுங் காலங் களில்அணைந்து பரவிக் கும்பிட் டினிதிருந்தார்.

இப்பதிகம் பாடியருளி அறிவும் பரவசமாய பரிவு கொண்டிட வெளியேவந்து நீடித்த விருப்புடைய பெருங்காதல் நிறைந்த அன்பர் பலர் போற்றிட; தேடுகின்ற பிரமனும் திருமாலும் அறிதற்கு அரிய சிவனது திருப்பாதத்தை பரிவொடுங் கூடிக் கும்பிடும் காலங்களில் சென்றடைந்து போற்றிக் கும்பிட்டங்கு இனிதே திருவொற்றியூரில் இருந்தார் சுந்தரமூர்த்தி சுவாமிகள். 205

இந்த நிலைமை யாரிவரிங் திருந்தார் முன்பே இவர்க்காக
அந்நண் கயிலை மலைநீங்கி அருளாற் போந்த அதிந்திதையார்
வந்து புவிமேல் அவதரித்து வளர்ந்து பின்பு வன்றொண்டர்
சந்த விரைசூழ் புயஞ்சோந்த பரிசு தெரியச் சாற்றுவாம்.

இந்த நிலைமையாக சுந்தரமூர்த்தி நாயனார் இங்கு திருவொற்றியூரில் இருந்தார் ஆனால் முன்னே இவர்க்காக அழகிய திருக்கைலாய மலையை விடுத்து நீங்கி அருளின் செயலால் இவ்வுலகில் வந்து; அநிந்திதை என்னும் எம்பெருமாட்டியின் தோழியார்; அவதரித்து வளர்ந்து பின்னுக சுந்தர மூர்த்தி நாயனரது வாசனை கமழ்ந்திடும் மாலை சூடும் தோளினைச் சேர்ந்த அந்த அற்புதங்களின் செயலை அறிந்தவாறு சொல்லுவோம். 206

நாலாங் குலத்திற் பெருகுநலம் உடையர் வாழும் ஞாயிற்றின்
மேலாங் கொள்கை வேளாண்மை மிக்க திருஞா யிறுகிழவர்
பாலா தரவு தருமகளா ராகிப் பார்மேல் அவதரித்தார்
ஆலால ஞ்சேர் கறைமிடற்றர் அருளால் முன்னே அநிந்திதையார்.

அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் எனப்படும் நான்கு வகையான குலத்தில் நான்காவதாகச் சொல்லப்படும் வேளாளர் குலத்தில் பெருகும் நலமுடையவராய் மக்கள் வாழுகின்ற; உலகிற்கு ஒளிதந்து உதவுகின்ற சூரியனிலும் பார்க்க மேலான கொள்கையான உணவுப் பொருள் தரும் உழவுத் தொழிலாகும் வேளாண்மையில் தலைசிறந்த ஒருவர்; அவர்தான் ஞாயிறுக் கிழவர் என்பவர் அவருடத்தாக அவர்க்கு ஆதரவு தரும் மகளாகி இப்பூமிமேல் அவதரித்தார் நஞ்சு சேரும் கரிய கண்டமுடைய கடவுள் சிவன் அருளாலே முன்பு அநிந்திதை எனசுபடும் அத்தெய்வப் பெண்மணியார். அவர் நாமம் சங்கிலியார் எனப்படுவார். 207

மலையான் மடந்தை மலர்ப்பாதம் மறவா அன்பால் வந்தநெறி
தலையாம் உணர்வு வந்தணையத் தாமே அறிந்த சங்கிலியார்
அலையார் வேற்கட் சிறுமகளிர் ஆயத் தோடும் விளையாட்டு
நிலையா யினஅப் பருவங்கள் தோறும் நிகழ நிரம்புவார்.

முன்புள்ள தொடர்பால் மலையரசன் புத்திரியாய உமையம்மையாரின் மலர்பாதம் மறவாத அன்பினால் வந்த நெறியில் அதுவே உள்ளத்து தலையாய அன்பாய உணர்ச்சியாகவந்து சேர; இன்னொருவருடைய தூண்டுதல் இன்றி தனது நிலையை தாமே அறிந்த சங்கிலியார் கூரிய வேல் போலப் புரளும் நீண்ட வரிவிழிகளுடைய சிறு பெண்கள் கூட்டத்துடன் விளையாடி வரும் நிலைகளாய கழங்காடல் அம்மனை பந்தாடல் முதலிய பருவம் தோறும் அம்பான மறவாத அன்பு தலையெடுப்ப வளர்ந்துவருவார். 208

சீர்கொள் மரபில் வருஞ்செயலே அன்றித் தெய்வ நிகழ்தன்மை
பாரில் எவரும் அதிசயக்கும் பண்பில் வளரும் பைந்தொடியார்
வாரு மணிய அணியவாம் வளர்மென் முலைகள் இடைவருத்தச்
சாரும் பதத்தில் தந்தையார் தங்கண் மனைவி யார்க்குரைப்பார்.

சிறுடைய ஞாயிறு மரபில் வருகின்ற செயலே அல்லாமல் உள்ளத்தில் தெய்வத் தன்மை நிகழும் தன்மை கண்டு இப்பூமியில் எவரும் அதிசயிக்கும் பண்பில் வளரும் பசியவனையல் அணிந்த சங்கிலியார்; வார்அணியும் பருவம் சமீபிப்பவர் வளரும் முலைகள் இடையின வருத்திட வளர்ந்து எழில் திகழும் பருவத்தில் அவரது நிலைகண்டு தந்தை ஞாயிற்றுக் கிழவர் தமது மனைவியார்க்குச் சொல்லுவார். 209

வடிவும் குணமும் நம்முடைய மகட்கு மண்ணு ளோர்க்கிசையும்
படிவ மன்றி மேற்பட்ட பரிசாம் பான்மை அறிகிலோம்
கடிசேர் மணமும் இனிநிகழுங் காலம் என்னக் கற்புவளர்
கொடியே அனைய மனைவியார் ஏற்கும் ஆற்றூற் கொடும் என்றார்.

எமது மகளாரின் வடிவும் குணமும் இந்தப் பூமியில் உள்ள ஏனையபெண்கட்கு பொருந்தும் வடிவேயன்றி மிகமேம்பட்ட திருவாக எழிலுடன் விளங்குவதை நாம் எவ்வாறென அறிகிலோம். அது இருப்ப காவல் என நிகழச் செய்டும் திருமணமும் இனி நிகழும் காலம் இதுவாகும் என்றிடலும்; அது கேட்டு கற்பு வளரும் பூங்கொடிபோலும் மனைவியார் கணவனரை நோக்கி எம் மகளாரை ஏற்கும் முறையாக ஓருவர்கையில் திருமணம் செய்து கொடுப்பீராக என்றார். 210

தாய ரோடு தந்தையார் பேசக் கேட்ட சங்கிலியார்
ஏது மாற்றம் அன்றிதுஎம் பெருமான் ஈசன் திருவருளே
மேய ஒருவர்க் குரியதியான் வேறென் விளையும் என வெருவுற்(று)
ஆய உணர்வு மயங்கிமிக அயர்ந்தே அவனி மேல்விழுந்தார்.

தாயாருடன் தந்தையார் தமது திருமணம் பற்றிய பேச்சினை பேசிடக் கேட்ட சங்கிலி அம்மையார் இந்த இவரது திருமணவார்த்தை எனக்குப் பொருந்தாது அன்று. நானே எம்பெருமான் ஈசன் சிவன் அருளே பொருந்திய ஒருவர்க்கு உரியேன். அப்படி இருப்ப இவரது எண்ணங்களால் வேறு எதேனுக விளைந்திடுமோ? தகாத ஒருவர் கையில் நான் கொடுக்கப் பட்டிடுவேனே? எனப்பயந்து அந்த அச்சநினைவால் உணர்வும் மயங்கி மிகச் சோர்ந்து பூமி மீது விழுந்தார். 211

பாங்கு நின்ற தந்தையார் தாயார் பதைத்துப் பரிந்தெடுத்தே
ஏங்கும் உள்ளத் தினராகி இவளுக் கென்னே வுற்ற தெனத்
தாங்கிச் சீத விரைப்பனிநீர் தெளித்துத் தைவந் ததுநீங்க
வாங்கு சிலைநன் னுதலாரை வந்த துனக்கிங் கென்? என்றார்.

பக்கராக நின்ற தந்தையாரும் தாயாரும் மகளார் வீழ்ந்தமை கண்டு பதைத்து பரிதாபத்துடன் தூக்கி எடுத்து; ஏங்குகின்ற உள்ளமுடையராகி; இவளுக்கு என்ன நேர்ந்தது? என்று கைகளில் அணைத்துத்தாங்கி குளிர்ந்த வாசமுடைய பன்னீர் தெளித்து உடலத்தினை தடவிய பொழுது சங்கிலி அம்மையார் கொண்டமயக்கம் அது நீங்கிடலும் வளைந்தவில போலும் நெற்றியுடைய பிராட்டி யாரை நோக்கிமகளே! உனக்கு இங்கு என்ன நேர்ந்தது எனக்கேட்டலும். 212

என்று தம்மை ஈன்றெடுத்தார் வினவ மறைவிட் டியம்பு வார்
இன்றென் திறத்து நீர்மொழிந்த இதுஎன் பரிசுக் கிசையாது
வென்றி விடையார் அருள்செய்தார் ஒருவர்க்குரியேன் யான்இனிமேல்
சென்று திருவொற் றியூர் அணைந்து சிவனார் அருளிற் செல்வன் என.

என்று தம்மை ஈன்றெடுத்த தாய் தந்தையர் வினவ தனது உள்ளத்துக் கொண்ட மறைப்பை வெளிப்பட அவர்க்கு சங்கிலி அம்மை சொல்கின்றார். இன்று எனது திறத்தாக நீர் சொல்லிய இந்த திருமணப் பேச்சு எனது தன்மைக்குப் பொருந்தாது. நானே வெவில் வெற்றியுடைய இடபக் கொடி ஏந்திய சிவன் இன்னருடன் வாழ்க்கைப் படவேண்டும் என அருள் புரியும் அவர்க்கே உரியேன். ஆதலால் நான் இனிமேலாகத் திரு வொற்றியூர் சென்று சிவன் அருள் வழியே ஒழுகுவேன் என்னலும். 213

அந்த மாற்றங் கேட்டவர்தாம் அபர்வும் பயமும் அதிசயமும்
வந்து வுள்ளத் தினராகி மற்றம் மாற்றம் மறைத்தொழுகப்
பந்தம் நீடும் இவர்தலத்து நிகாரம் ஒருவன் பரிசறியான்
நிந்தை விரும்பி மகட்பேச விடுத்தான் சிலருஞ் சென்றிசைத்தார்.

அந்தவார்த்தை கேட்ட தந்தையும் தாயும் மனதில் சோர்வும் பயமும் அதிசயமும் கொண்டோராகி; சங்கிலிஅம்மையார் தம்மிடம் சொல்லிய வார்த்தையை ஒருவருக்கும் தெரியாதபடி மறைத்துக் கொண்டு தாம் நடந்திட; உலகபந்தங்களில் நீடித்த திருவுடைய இவரது இந்தக் குலத்திற்கு ஏற்ற குலத்தில் உள்ள ஒருவன் சங்கிலி அம்மையாரின் நிலையின உண்மையில் அறியாத வனுய் சங்கிலியார் மேல் மனம் விரும்பி பெண்பேசும்படி சிலரை விடுத்தான். அவரும் ஞாயிற்றுக் கிழவரிடம் சென்று பெண்கேட்டார். 214

தாதை யாரும் அதுகேட்டுத் தன்மை விளம்பத் தகாமையினால்
ஏதம் எய்தா வகைமொழிந்து போக்க அவராங் கெய்தாமுன்
நீதங் நிழைத்தே இறந்தான்போல் செல்ல விடுத்தார் உடன்சென்றுன்
மாத ராரைப் பெற்றூர்மற் றதனைக் கேட்டு மனமருண்டார்.

தந்தை யாரும் அவர்வார்த்தை கேட்டு சங்கிலியம்மையாரின் மனக்கிடக்கை எடுத்துச் சொல்லத்தகாமையினால் ஏதோ ஒருவழியிலும் தவறிலாத படி சில வார்த்தை சொல்லி அவரைப்போக்கலும்; என்ன அதிசயம் அவர்போய் பெண் பேசவிட்டாரிடம் சேர்ந்திடமுன்பு ஏதோ ஒரு நீங்கைச் செய்து இறந்தான் போல சங்கிலியாரிடம் மணம் பேச விடுத்த அத்தனே பேருடன் தானும் இறந்தொழிந் தான். இந்தச் செய்தி கேட்டதும் சங்கிலியம்மையாரைப் பெற்ற தந்தை தாயர் பெரிதும் மனம் கலங்கினர்கள். 215

தைய லார்சங் கிலியார்தந் திறத்துப் பேசத் தகாவார்த்தை
உய்ய வேண்டும் நீனைவுடையார் உரையார் என்றங் குலகறியச்
செய்த விதிபோல் இது நிகழச் சிறந்தார்க் குள்ள படிசெப்பி
நையும் உள்ளத் துடன் அஞ்சி நங்கை செயலே உடன்படுவார்.

தையலார் சங்கிலியாரது திறத்து பேசத் தகாத வார்த்தை இந்த உலகில் உய்ய வேண்டும் நினைவுடையார் சொல்லார் அல்லது நினையார் என்று இங்கு உலகறியச் செய்து வைத்த விதியின் திறம்போல இந்தக்காரியம் நிகழ; தம்மூரில் உள்ள பெரியோர்க்கு சங்கிலியார் தன்மையை உள்ளவாறு வெளப்படுத்தி வருந் திடும் உள்ளத்துடன் பெரும் பயம் கொண்டு சங்கிலியார் விரும்பிய அச்செய்கைக் கே இப்போது உடன்படுவார்கள் தாய் தந்தையர். 216

அணங்கே யாகும் இவள்செய்கை அறிந்தோர் பேச அஞ்சுவரால்
வணங்கும் ஈசர் திறமன்றி வார்த்தை அறியாள் மற்றொன்றும்
குணங்கள் இவையாம் இனிஇவள்தான் குறித்த படியே ஒற்றிநகர்ப்
பணங்கொள்அரவச்சடையார்தம்பாற்கொண்டீனவோம் எனப்பகர்வார்.

பெண்கட்குள் தெய்வமே யாகும் இவளது செய்கை இதனை அறிந்தோர் இவள் பற்றிய வேறு திறம் பேச அஞ்சுவார்கள். நாம் வணங்கும் ஈசனுடைய பெருமை யல்லாது மற்றொரு வார்த்தை பேசஅறியாள். இதுதான் இவளது குணங்களாகும் இனி இப்பெண் எம்மிடம் தெரிவித்த படியே திருவொற்றியூர் நகரிடத்து படம் கொண்ட பாம்பினைச் சடைமேலுடைய படம் பக்க நாயகன் பாலாகச் சேர்த்தி டக் கொண்டு சேர்வோம் எனப்பேசுவார்கள். 217

பண்ணுர் மொழிச்சங் கிலியாரை நோக்கிப் பயந்தா ரொடுங் கிளைஞர்
தெண்ணீர் முடியார் திருவொற்றி யூரிற் சேர்ந்து செல்கதியும்
கண்ணுர் நுதலார் திருவருளா லாகிக் கன்னி மாடத்துத்
தண்ணுர் தடஞ்சூழ் அந்நகரில் தங்கிப் புரிவீர் தவம் என்று.

இவ்வாறு தீர்மானித்து; பண்போலும் இனிய மொழியுடைய சங்கிலி அம்மை யாரை நோக்கி; பெற்ற தாயுடன் சுற்றத்தவரும் சொல்லுவார் அம்மையே! நீ தெளிந்த கங்கை நீர்முடி யார்சிவன் உடைய திருவொற்றியூர் நகரில் சேர்ந்து; இனி உனக்கு செல்கின்ற கதியும் கண்ணுர்ந்த நெற்றியுடைய கடவுளின் திருவரு ளேயாக; அங்கு ஓர் கன்னிமாடத்து குளிர்ந்த குளங்கள் சூழ்ந்த அந்த நகரிடை யாகத் தங்கி; தவத்தினை அங்கு செய்திடுவீர் என்று. 218

பெற்ற தாதை சுற்றத்தார் பிறைசேர் முடியார் விதியாலே
மற்றுச் செயலொன் றறியாது மங்கை யார்சங் கிலியார்தாம்
சொற்ற வண்ணஞ் செயத்துணிந்து துதைந்த செல்வத் தொடும் புரங்கள்
செற்ற சிலையார் திருவொற்றி யூரிற் கொண்டு சென்றணைந்தார்.

பெற்ற தந்தை ஞாயிற்றுக் கிழவர் சுற்றத்தார்கள் பிறை அணிந்த சடை முடியுடைய திருவொற்றியூர்ப் பெருமான் திருவருளாலே மற்றுச் செயல் ஒன்றும் அறியாது இப்படியே தமது பெண் சங்கிலியார் சொல்லிய வண்ணம் செய்திடத் துணிந்து பெருகிய செல்வத்தொடும்; முப்புரங்களையும் எரித்த வில்லுடைய பெருமான் அமர்ந்த திருவொற்றியூரில் கொண்டு சென்று சேர்ந்தார்கள். 219

சென்னி வளர்வெண் பிறையணிந்த சிவனார் கோயி லுட் புகுந்து
துன்னுஞ் சுற்றத் தொடும்பணிந்து தொல்லைப் பதி யோர் இசைவினால்
கன்னி மாடம் மருங்கமைத்துக் கடிசேர் முறைமைக் காப்பியற்றி
மன்னுஞ் செல்வம் தகவகுத்துத் தந்தை யார்வந் தடிவணங்கி.

திருமுடி மீது வளர்கின்ற வெண்பிறை சூடிய பெருமான் சிவன் அமர்ந்த திரு வொற்றியூர்க் கோயிலுக்குள் புகுந்து; நெருங்கிவரும் சுற்றத்தொடும் பணிந்து; மிக முந்திய அத்தலத்துள்ள மக்களது சம்மதத்துடன் எம்பிரானது கோயிலின் அருகே ஓர்கன்னிமாடம் அமைத்து அங்கு ஒருவரும் புகமுடியாத முறைமையால் காவலும் செய்துவைத்து அவைகட்கு வேண்டும் செல்வத்தை தகுதியுடன் அமைத்து; இவை செய்த பிற்பாடு ஞாயிற்றுக் கிழவர் வந்து தமது மகளார் சங்கிலி அம்மையின் திருவடி வணங்கி; 220

"யாங்கள் உமக்குப் பணிசெய்ய ஈசற் கேற்ற பணிவிரும்பி
ஓங்கு கன்னி மாடத்தில் உறைகின் றீர்" என் றுரைக்கின்றார்
தாங்கற் கரிய கண்கள்நீர்த் தாரை ஒழுகத் தரியாதே
ஏங்கு சுற்றத் தொடும் இறைஞ்சிப் போனர் எயில்சூழ் தம்பதியில்.

யாங்கள் உமக்குப் பணி செய்திட நீர் ஈசனுக்கேற்ற பணியினை விரும்பி செய்து மேலோங்கிய கன்னிமாடத்தில் உறைவீராக என்று மொழிகின்றவர் தமது மகளாரின் தெய்வம் பேண நிச்சயித்த துறவின் பெருமையை உணர்ந்து தாங் கற்கரிய கண்ணீர் தாரைதாரையாக ஒழுகத் தரியாதே இப்படியும் இப்பிள்ளையா யிற்றே? என்னுகுமோ அருமந்த இப்பிள்ளையின் வாழ்வு? என ஏங்குகின்ற சுற்றத் தோடும் வணங்கி எழுந்து மதில்சூழ்ந்த தமது ஊருக்குப் போயினர்கள். 221

காதல் புரிந்து தவம்புரியுங் கன்னி யார்அங் கமர்கின்றூர்
பூத நாதர் கோயிலினிற் காலந் தோறும் புக்கிறைஞ்சி
நீதி முறைமை வழுவாது தமக்கு நேர்ந்த பணிசெய்யச்
சீத மலர்ப்பூ மண்டபத்துத் திரைசூழ் ஒருபாற் சென்றிருந்து.

எம்பெருமான்பால் காதல்புரிந்து தவம்புரியும் கன்னிகையாம் சங்கிலிஅம் மை அங்கு திருவொற்றியூர் அமர்கின்றவர்; பூதங்கட்கெல்லாம் நாயகனை சிவனது திருவொற்றியூரில் காலம்தோறும் சென்று வணங்கி; நீதிமுறைமையில் ஏதும் தவ றுது தமக்குற்ற பணியினைச் செய்திடற்கு குளிர்ந்த மலர் கொண்டுவந்து மாலை கட்டும் அத்திருமண்டபத்து திரை சூழ்ந்த ஒரு புறத்து தாம் சென்றிருந்து. 222

பண்டு கயிலைத் திருமலையிற் செய்யும் பணியின் பான்மைமனங்
கொண்ட உணர்வு தலைநிற்பக் குலவு மலர்மென் கொடியனையார்
வண்டு மருவுந் திருமலர்மென் மாலைகாலங் களுங்கேற்ப
அண்டர் பெருமான் முடிச்சாத்த அமைத்து வணங்கி அமருநாள்.

முன்புதிருக்கயிலைத் திருமலையில் செய்திடும் அம் மலர்கட்டும் பணியின் அப் பான்மையால் மனங் கொண்ட உணர்வே தலைநிற்ப; விளங்கிடும் மெல்லிய பூங் கொடி போலும் வனப்புடைய சங்கிலி அம்மை வண்டுகள் மொய்த்திடும் திருவு டைய மலர்கோத்த மிருதுவாய நல்ல மாலைகள் அவ்வக் காலங்களுக்கு விதிமுறை ஏற்ற பண்பினில் தேவர்கள் பெருமான் திருமுடிமேல் சாத்திடக் கட்டிக் கொடு த்து வணங்கி அங்கு கன்னிமாடத்து வாழ்ந்து வரும் நாட்களில்; 223

அந்தி வண்ணத் தொருவர்திரு அருளால் வந்த ஆரூரர்
கந்த மாலைச் சங்கிலியார் தம்மைக் காதல் மணம்புணர
வந்த பருவம் ஆதலால் வகுத்த தன்மை வழுவாத
முந்தை விதியால் வந்தொருநாள் முதல்வர் கோயிலுட் புகுந்தார்.

அந்திக் காலத்து செக்கர் வானத்தின் நிறத்தினை ஒத்த ஏகனை பெருமான் சிவனது திருவருளால் இவ்வுலகில் வந்த சுந்தர மூர்த்தி சுவாமிகள் வாசமுடைய மாலை சூடும் சங்கிலிஅம்மையாரைக் காதல் மணஞ்செய்திட வந்த பருவம் இப் பொழுதாக வருகின்றதாதலால் எவற்றையும் இப்படியென வகுத்த தன்மை வழு வாத முன்னைய விதியின் பிரகாரம் வந்து ஒருநாள் எம் சுந்தர மூர்த்தி சுவாமி கள் முதல்வராம் சிவனது கோயிலுள் புகுந்தார். 224

அண்டர்பெருமான் அந்தணராய் ஆண்ட நம்பி அங்கணரைப்
பண்டை முறைமை யாற்பணிந்து பாடிப் பரவிப் புறம்போந்து
தொண்டு செய்வார் திருத்தொழில்கள் கண்டுதொழுது செல்கின்றூர்
புண்ட ரீகத் தடநிகர்பூந் திருமண்டபத்தின் உட்புகுந்தார்.

இவ்வாறு இன்று திருவொற்றியூர்க் கோவில் புகுந்த; தேவாதிதேவன் சிவன் அந்தணராய வடிவு கொண்டு ஆண்ட சுந்தரமூர்த்தி சுவாமிகள் நெற்றியில் கண் கொண்ட எம்பெருமானை முன்பு நாளெல்லாம் வணங்கிடும் முறைமையால் பணிந்து வெளியே வந்து; ஆங்கு எப்பிராற்குத் தொண்டு செய்யும் அடியார்களது திருவு டைய தொழில்கண்டு பணிந்து செல்கின்றார்; தாமரை மலர்த் தடாகத்தை ஒத்த வனப்புடைய பூக்கள் சுட்டும் திருமண்டபத்தின் உள்ளாகச் சென்றார். 225

அன்பு நாரா அஞ்செழுத்து நெஞ்சு தொடுக்க அலர்தொடுத்தே
என்புள் ளுருக்கும் அடியாரைத் தொழுது நீங்கி வேறிடத்து
முன்புபோலத் திரைநீக்கி முதல்வர் சாத்தும் பணிகொடுத்து
மின்போல் மறையுஞ் சங்கிலியார் தம்மை விதியாற் கண்ணுற்றார்.

அந்த திருப்பூமண்டபத்தில் அன்பே நாராகக் கொண்டு ஐந்தெழுத்தை நெஞ்சம் நினைவால் தொடுத்திட; அத்தன்மையால் தம் கைகளால் மலர் எடுத்துத் தொடுத்தே சிவனை நினைந்து என்பும் உள் உருக இருந்து திருமாலைப் பணி செய்யும் அடியாரைத் தொழுது நீங்கும் பொழுது; முன்பு போல தமது பணியினில் சுட்டிய பூமாலையைக் கைகளில் எடுத்து சூழ இருந்த திரையினை நீக்கி முதல்வர் சிவன் அணிதற்கு அம்மாலைகளைக் கொடுத்து மின்னல் போல் தோன்றி மறையும் சங்கிலி அம்மையாரை விதியால் கண்ணுற்றார். 226

கோவா முத்தும் சுரும்பேறுக் கொழுமென் முகையும் அனையாரைச்
சேவார் கொடியார் திருத்தொண்டர் கண்டபோது சிந்தைநிறை
காவா தவர்பால் போய்வீழத் தம்பாற் காம னுர்துரந்த
பூவா ளிகள்வந் துறவீழத் தரியார் புறமே போந்துரைப்பார்.

கோக்கப் பாடாத முத்தும் வண்டுகள் மொய்த்திடாத நல்ல மிருதுவாய பூமெட்டும் ஒத்த தன்மையுடையவராய சங்கிலி அம்மையாரை இடபம் துலங்கும் கொடியுடைய சிவனது திருத்தொண்டர் சுந்தர மூர்த்தி சுவாமிகள் கண்டபோது தமது சிந்தையின் நினைவு சாக்க முடியாது அம்மையார்பால் காமஉணர்வின் காதல் வசப்பட்டுச் சிந்தை சென்றிட; அத்தருணத்து மன்மதனும் சொரிந்த மலர் அம்புகள் மேல் மேல் வந்து விழ்வுறத்தரியாது வெளியே வந்து சொல்கின்றார். 227

இன்ன பரிசென் றறிவரிதால் ஈங்கோர் மருங்கு திரைக்குள்ளாய்
பொன்னும் பணியும் மலர்ந்தஒளி அமுதில் அளாவிப் புதியமதி
தன்னுள் நீர்மையாற் குழைத்துச் சமைத்த மின்னுக் கொடிபோல்வாள்
என்னை உள்ளந் திரிவித்தாள் யார்கொல் என்றங் கியம்புதலும்.

எனக்கு இது என்ன தன்மை என்று சொல்லமுடியவில்லை. இவ்விடத்து ஓர் புறத்து திரைக்குள்ளாக பொன்னும் முத்தும் மலர்ந்த ஒளி அமுதில் அளைந்து சேர்த்து பின்னர் அவ்வொளியமுதினை புதிய சந்திரனில் உள்ள நிலவாய அமுதின் தன்மையிற் குழைத்து உருச்செய்த மின்னுக் கொடிபோல் பவள். அப்பெண் என்னுடைய சிவன்பால் கொண்ட மனதை மாற்றிவிட்டாள். இப்பெண்ணாராக இருக்கலாம் என மொழிதலும். 228

அருகு நின்றூர் விளம்புவார் அவர்தாம் நங்கை சங்கிலியார்
பெருகுந் தவத்தால் ஈசர்பணி பேணுங் கன்னி யார்என்ன
இருவ ராலிப் பிறவியைஎம் பெருமான் அருளால் எய்துவித்தார்
மருவும் பரவை ஒருத்தி இவள் மற்றை யவளாம் எனமருண்டார்.

அருகே நின்றூர்கள் சொல்லுவார் ''அவர்தான் நங்கை சங்கிலியார் எனப்படுபவர். பெருகும் தவமுடையவர். ஈசன்சிவன் பணி பேணும் கன்னியார்'' என்னலும் அது கேட்டருளிய சுந்தர மூர்த்தி சுவாமிகள் இருவருரால் இப்பிறவியை எம்பெருமான் அருளால் அடையவைத்தார். அலர்தான் நான் அணைந்த பரவை ஒருத்தி சங்கிலியாய் இவள் மற்றையவளாம் என எண்ணி மனம் மறுதலிப்பட்டார். 229

மின்னுர் சடையார் தமக்காளாம் விதியால் வாழும் எனைவருத்தித்
தன்னுர் அருளால் வரும்பேறு தவத்தால் அணையா வகைதடுத்தே
என்னு ருயிரும் எழில்மலருங்கூடப் பிணைக்கும் இவள்தன்னைப்
பொன்னுர் இதழி முடியார்பால் பெறுவேன் என்று போய்ப்புக்கார்.

மின் ஒளிவிளங்கும் சடையுடைய எம்பெருமான் சிவன் அவர்க்கு ஆளாகும் விதியால் வாழும் எனைவருத்தி இறைவனது அருளால் வரும் பேற்றை தவது தவத்தால் என்பால் அணையாவகை தடுத்து எனது அரிய உயிரையும் எழில் மலரையும் சேரப்பிணைத்து இறைவர்க்கு மாலையாக்கும் இவள் தன்னை; பொன்னார்ந்த மலர்க் கொன்றை முடியுடைய பெருமான் பால் விண்ணப்பித்துப் பெறுவேன் என நினைந்து இறைவன் கோயில் உட்சென்று புகுந்தார். 230

மலர்மேய் அயனும் நெடுமாலும் வானும் நிலனும் நினைத்தறியா
நிலவு மலருந் திருமுடியும் நீடுங் கழலும் உடையாரை
உலக மெய்லாந் தாம்உடையா ராயும் ஒற்றியூர்அமர்ந்த
இலகு சோதிப் பரம்பொருளை இறைஞ்சி முன்னின் றேத்துவார்,

தாமரைமலர் மேல் இருந்த பிரமனும் நெடிய உருவுடைய திருமாலும் வானத்திலும் பூமியுள்ளும் ஊடுருவிச் சென்று அறியமுடியாத இளம்பிறை சூடிய திருமுடியும் நீடித்த வண்ணமாகும் திருவடியும் உடைய சிவபிரானை அன்றியும் உலகம் யாவையும் தாமே உடையவராகி இருந்தும் திருவொற்றியூர் தலத்தில் அமர்ந்து என்றும் உறைகின்ற விளங்கும் ஒளிப்பிழம்பாய சோதியாம் முதல்பொருளை வணங்கி அப்பன் திருமுன்பு நின்றுபோற்றுவார். 231

மங்கை யொருபால் மகிழ்ந்ததுவும் அன்றி மணிநீள் முடியின்கண்
கங்கை தன்னைக் கரந்தருளுங் காதல் உடையீர் அடியேனுக்(கு)
இங்கு நுமக்குத் திருமாலை தொடுத்தேன் உள்ளத் தொடைஅவிழ்த்த
திங்கள் வதனச் சங்கிலியைத் தந்தென் வருத்தம் தீரும்என.

பெருமானே! தேவீர் பெண்ணினை உமது ஒருபாகத்து வைத்து மகிந்ததும் அல்லாமல் உமது அழகிய நீண்ட திருமுடியின் இடத்து கங்கை என்னும் பெண்ணையும் நீர்வடிவாக மறைத்துவைத்திருக்கும் காதல் உடையீர்! ஆதலின் உம் அடியேற்கு இங்குமக்குத் திருவுடைய பூமாலை தொடுத்து என் உள்ளத்தின் கட்டுப்பாட்டை அவிழச் செய்த பூரணசந்திரன் போல் முகமுடைய சங்கிலியம்மையாரைத் தந்து அவளால் எனக்குற்ற எனது வருத்தத்தையும் நீக்குவீராக என்னலும். 232

அண்ண லார்முன் பலவும்அவர் அறிய உணர்த்திப் புறம்பணைந்தே
எண்ண மெல்லாம் உமக்கடிமை யாயாறெண்ணும் என்நெஞ்சில்
திண்ண மெல்லாம் உடைவித்தாள் செய்வதொன்றும் அறியேன்யான்
தண்ணி லாமின்னெளிர் பவளச் சடையீர் அருளும் எனத்தளர்வார்.

இன்னது போன்ற பல வாசகங்களை எம்பெருமான் திருமுன்பு நின்று அவர் அறியும்படி உணர்த்தி வெளியேவந்து என் எண்ணம் எல்லாம் உமக்கு அடிமை யாமாறு எண்ணும் எனது நெஞ்சினில் அதன் திண்ணம் எல்லாவற்றையும் உடையச் செய்தாள் இச் சங்கிலி. இனிச் செய்வதொன்றும் அறியேன் யான். குளிர்ந்த நிலவு மின்னிடும் பவளம் போலும் சடையீர் உம் அடியேற்கு அருளும் எனக் கூறித் தளர்வார். 233

மதிவாண் முடியார் மகிழ்கோயில் புறத்தோர் மருங்கு வந்திருப்பக்
கதிரோன் மேலைக் கடல்காண மாலைக் கடலைக் கண்டயர்வார்
முதிரா முலையார் தம்மைமணம் புணர்க்க வேண்டி முளரிவளை
நிதியான் நண்பர் தமக்கருளும் நண்பால் நினைந்து நினைந்தழிய.

இளம்பிறை தவளும் முடியுடைய பெருமான் மகிழ்கின்ற கோயிலின் வெளியே ஓர்புறமாக சுந்தரமூர்த்தி சுவாமிகள் காதலின் கவலையால் வந்திருப்ப; அவ்வேளை சூரிய தேவன்மேற்குப் புறத்து சமுத்திரத்தைக் காணும்படி சென்று அத்தமித்திட; தொடரும் மாலைக்காலத்து கடலினைக் கண்டு மயங்குவார்; முதிராத முலையுடைய சங்கிலியாரைத் தம்முடன் திருமணம் செய்ய வேண்டி பதுமநிதி சங்கநிதி எனும் இரண்டிற்கும் அதிபனய குபேரன் என்னும் நண்பர்க்கு சிவன் அருளும் அதே நட்பாம் தன்மையில் தானும் தோழன் என்பதை நினைந்து நினைந்து தமக்கு அருள்வராத காரணத்தை நினைந்தழிய. 234

உம்பர் உய்ய உலகுய்ய ஓல வேலை விடம்உண்ட
தம்பி ரானுர் வன்றொண்டர் தம்பால் எய்திச் ''சங்கிலியை
இம்பர் உலகில் யாவருக்கும் எய்த ஒண்ணு இருந்தவத்துக்
கொம்பை உனக்குத் தருகின்றோம்''; கொண்ட கவலைஒழி கென்ன.

இவ்வாறு மயங்கும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாலாக தேவர் உய்ய உலகம் உய்ய நஞ்சுண்டருளிய கடவுள் சிவமூர்த்தி வந்தருளி அவரைநோக்கி ''சங்கிலி என்பவளே இந்த உலகில்யாவர்க்கும் அடையமுடியாத பெரும்தவத்தின் பூங்கொடியை உனக்குத்தருகின்றோம். நீ மனதில்கொண்ட கதவலையை ஒழி'' என்னலும். 235

அன்று வெண்ணெய் நல்லூரில் வலிய ஆண்டு கொண்டருளி
ஒன்றும் அறியா நாயேனுக் குறுதி யளித்தீர்; உயிர்காக்க
இன்றும் இவளே மணம்புணர்க்க ஏன்று நின்றீர் எனப்போற்றி
மன்றல் மலர்ச்சே வடியிணைக்கீழ் வணங்கி மகிழ்ந்தார் வன்றொண்டர்.

அது கேட்டருளிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் எம்பிரானே நோக்கி ''அன்று திரு வெண்ணெய் நல்லூரில் வலியவந்து ஆண்டு கொண்டருளி ஒன்றும் அறியாத நாயேனுக்கு உறுதிகொடுத்தீர்; எனது உயிரைக் காத்திட இன்றும் இச்சங்கிலியை திருமணம் செய்துவைப்ப ஏற்று நின்றீர்'' இதுநன்முயது என எம்பிரானைப் போற்றி எம்பெருமானது வாசனையுடைய மலர்ச் சேவடிக் கீழாக வணங்கி மகிழ்வுற்றார். 236

ஆண்டு கொண்ட அந்தணனூர் அவருக் கருளிக் கருணையினால்
நீண்ட கங்குல் யாமத்து நீங்கி வானில் நிறைமதியம்
தீண்டு கன்னி மாடத்துச் சென்று திகழ்சங் கிலியாராம்
தூண்டு சோதி விளக்கனையார் தம்பாற் கனவில் தோன்றினார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகளை ஆண்டுகொண்ட அறிவாழி அந்தணனூர் சிவனும் அவர்க்கு அருள்புரிந்து; கருணையுடன்; நீளப்பெருகிய இரவின்யாமத்து அவ்விடம் நீங்கி வானில் நிறைந்த சந்திரன் தீண்டும் உயர்வுடைய கன்னிமாடத்துச் சென்றருளி அவ்விடத்து திகழும் சங்கிலியார் ஏனப்படும் தூண்டும் சோதிவிளக்கினை ஒத்த அம்மையார் பாலாகக் கனவில் தோன்றினார். 237

தோற்றும் பொழுதிற் சங்கிலியார் தொழுது விழுந்து பரவசமாய்
ஆற்ற அன்பு பொங்கிஎழுந்(து) அடியேன் உய்ய எழுந்தருளும்
பேற்றுக் கென்யான் செய்வ தெனப் பெரிய கருணை பொழிந்தனைய
நீற்றுக் கோல வேதியரும் நேர்நின் றருளிச் செய்கின்றார்.

எம்பிரான் சங்கிலியார் கனவில் தோன்றும் பொழுது அம்மை தொழுது விழுந்து பரவசமாகி மிகவும் அன்பு பொங்கி எழுந்து ''ஐயனே! அடியேன் உய்ய எழுந்தருளி வந்தபேற்றிற்கு என்ன கைம்மாறு செய்வது'' என்னலும்; அதுவேபெரிய கருணையைப் பொழிந்து அந்த திருநீற்றின் கோலமாகிச் சிறந்த அந்தணரும் நேராக நின்று இதனை அவளுக்குமொழிந்து அருள் புரிகின்றார். 238

சாருந் தவத்துச் சங்கிலி கேள்!; சால என்பால் அன்புடை யான்;
மேரு வரையின் மேம்பட்ட தவத்தான்; வெண்ணெய் நல்லூரில்
யாரும் அறிய யான் ஆள உரியான்; உன்னை எனை இரந்தான்;
வார்கொள் முலையாய்! நீஅவனை மனத்தால் அணைவாய் மகிழ்ந்''தென்றார்.

எம்பால் சாரும் தவமுடைய சங்கிலி அம்மையே கேள்! மிகவும் என்பால் அன்புடையன். மேருமலையிலும் மேம்பட்ட தவமுடையன். திருவெண்ணெய் நல்லூரில் யாரும் அறிய யான் ஆண்டுகொள்ள உரிமையுடையவன். உன்னைவேண்டி என்னை இரந்தான். வார்கொண்ட முலை உடையாளே நீ அவனைத் திருமண முறையால் சேர்ந்து மகிழ்ந்து வாழ்வாய் என்னலும்; 239

ஆதி தேவர் முன்நின்றங் கருளிச் செய்த பொழுதின்கண்
மாத ரார்சங் கிலியாரும் மாலும் அயனும் அறிவரிய
சீத மலர்த்தா மரையடிக்கீழ்ச் சேர்ந்து வீழ்ந்து செந்நின்று
வேத முதல்வர் முன்நடுக்கம் எய்தித் தொழுது விளம்புவார்.

ஆதியாகும் தேவன் சிவன் சங்கிலியார் முன்பு நின்று அங்கு இதனை அருளிச் செய்த பொழுதிடத்தாக; பெண்ணரசி சங்கிலியாரும்; திருமாலும் பிரமனும் அறி தற்கரிய குளிந்த மலராய தாமரை போலும் திருவடிக்கீழ் பொருந்த வீழ்ந்து செம்மையுடன் நின்று வேதமுதல்வராம் அவர் முன்பு நடுக்க மடைந்து தொழுது சொல்வார்; 240

எம்பி ரானே! நீர் அருளிச் செய்தார்க் குரியேன் யான் இமையோர்
தம்பி ரானே! அருள்தலைமேற் கொண்டேன்; தக்க விதிமனத்தால்
நம்பி யாரூ ரருக்கென்னை நல்கி அருளும் பொழுதிமயக்
கொம்பின் ஆகங் கொண்டார்க்குக் கூறுந் திறம்ஒன்றுள தென்பார்.

எம்பெருமானே! நீர் அருளிச் செய்த அவர்க்கே உரியவள் நான். தேவர்கள் பெருமானே உமது அருளிப் பாட்டை என் தலை மேற்கொண்டேன். தக்கவிதியுடைய திருமணத்தால் சுந்தரமூர்த்தி நாயனார்க்கு என்னைக் கொடுத்தருளும் பொழுதில் இயமலை அரசன் புத்திரியாய உமையம்மையை அவர்பாலான கருணைபால் உமது திருமேனியில் ஒருபாகமாகக் கொண்டார்க்கு கூறும் ஒருவார்த்தையும் உண்டு; என்கின்றார் சங்கிலி அம்மை. 241

பின்னும் பின்னல் முடியார்முன் பெருக நாணித் தொழுது ரைப்பார்
மன்னுந் திருவா ரூரின்கண் அவர்தாம் மிகவும் மகிழ்ந்துறைவ(து)
என்னுந் தன்மை அறிந்தருளும் எம்பி ராட்டி திருமுலைதோய்
மின்னும் புரிநூல் அணிமார்பீர் என்னூர் குன்று விளக்கனையார்.

பின்னலைக் கொண்ட புரிபுன் சடையுடைய ஈசன் முன்னுகப் பெரிதும் நாணமும் பெருகத் தொழுது சொல்வார். விளங்கும் திருவாரூரின் கண்ணல்லவோ சுந்தர மூர்த்திசுவாமிகள் பரவையாரிடத்தாக மிகவும் மகிழ்ந்து தங்குவது என்னும் தன் மையை அறிந்தருளுக. எம்பெருமாட்டியினது திருமுலைதோய்ந்த மின்னும் முப்புரி நூலணிந்த மார்புடையீரே'' என்னூர் குன்றுத விளக்கினை ஒத்த சங்கிலியார். 242

மற்றவர்தம் உரைகொண்டு வன்றொண்டர் நிலைமையினை
ஒற்றிநகர் அமர்ந்தபிரான் உணர்ந்தருளி உரைசெய்வார்
பொற்றொடியாய்! உனைஇகந்து போகாமைக் கொருசபதம்
அற்றமுறு நிலைமையினால் அவன்செய்வான்''என அருளி.

மற்று சங்கிலி அம்மையாரது வார்த்தையை ஏற்றுக் கொண்டு; சுந்தரமூர்த்தி சுவாமிகளது நிலமையினையும் திருவொற்றியூர் நகர் அமர்ந்த பெருமான் உணர்ந்தருளி சொல்லியருள்கின்றார். பொன் வளையல் அணிந்தவளே! உன்னை விடுத்துப் போகாமைக்கு ஒரு சபதம் இரகசியமாகப் பொருந்திய வகையால் சுந்தரன் செய்வான் என அருள் புரிந்து. 243

வேயனைய தோளியார் பால்நின்று மீண்டருளித்
தூயமனம் மகிழ்ந்திருந்த தோழனூர் பால் அணைந்து
நீஅவளை மணம்புணரும் நிலையுரைத்தோம் அதற்கவள்பால்
ஆயதொரு குறை உன்னல் அமைப்பதுள தென்றருள.

மூங்கிலின் வனப்பினை ஒத்த தோளுடைய சங்கிலி அம்மையார் பாலாக நின்றும் மீண்டருளித் திரும்பலும் தூயதான தனது மனம் மகிழ்ந்திருந்த தோழர் சுந்தரர்பால் சென்று அவரை நோக்கி அவளை மணஞ்செய்திடும் நிலமையை நாம் சொன்னோம். அதற்கு அவள் பாலாகநின்றதொரு குறையுளது; அதனை உன்னல் முடித்துக் கொடுக்க வேண்டிய தாகும் என எம்பெருமான் திருவொற்றியூர் ஈசன் மொழிதலும். 244

வன்றொண்டர் மனங்களித்து வணங்கி அடி யேன்செய்ய
நின்றகுறை யா''தென்ன நீஅவளை மணம்புணர்தற்(கு)
ஒன்றியுட னேநிகழ்வ தொரு சபதம் அவள் முன்பு
சென்றுகிடைத் தீவ்விரவே செய்க என அருள்செய்தார்.

அது கேட்ட சுந்தர மூர்த்தி சுவாமிகள் பெரிதும் மனம் களித்து எம்பெருமானை நோக்கி அவள்பாலாக அடியேன் செய்து கொடுத்திடும்படி நின்ற குறை பாடு யாது எனலும்; எம்பிரான் அவரை நோக்கி நீஅவளைத் திருமணம் செய்திடற்கு அவளுடன் என்றும் ஒருமித்து உடன் உறைவாய் எனநிகழ விருக்கும் ஓர் சபதம் அவள் முன்பாகச் சென்று கிட்டி இன்றிரவே செய்திடுவாய் எனச்சொல்லி அருள் புரிதலும்; 245

என்செய்தால் இதுடிமுயும் அதுசெய்வன் யான் அதற்கு
மின்செய்த புரிசடையீர்! அருள்பெறுதல் வேண்டும் என
முன்செய்த முறுவலுடன் முதல்வரவர் முகநோக்கி
உன்செய்கை தனக்கினிஎன் வேண்டுவ தென் றுரைத்தருள.

எம் பிரானே என் செய்தால் இத்திருமணம் நிகழ்ந்து முடியுமோ அதுசெய் வேன் யான். ஆனல் அவ்வண்ணம் செய்தற்கு மின் ஒளிரும் புரிபுன சடையீர் உமது அருள் பெறுதல் வேண்டும் எனலும். அது கேட்டலுமே முன்கொண்ட புன்முறுவ லுடன் அவரது முகத்தை நோக்கி உனது செயலுக்கு இனி நான் என்ன செய் திடல் வேண்டும் என எம்பிரான் உரைத்தருளலும். 246

வம்பணிமென் முலையவர்க்கு மனங்கொடுத்த வன்றொண்டர்
நம்பரிவர் பிறபதியும் நயந்ததோ லஞ்சென்று
குற்பிடவே கடவேனுக் கிதுவிலக்காம் எனக்குறிப்பால்
தம்பெருமான் திருமுன்பு தாம்வேண்டுங் குறைஇரப்பார்.

அது போது சூது கொண்டு பருத்து விளங்கும் முலையுடைய சங்கிலி அம்மை யார் பால் மனங்கொடுத்த சுந்தரமூர்த்தி சுவாமிகள்; இங்கிருக்கும் எம் பெருமா னது இத்தல மல்லாது பிறதலங்களில் எம்பிரான் நயமுடன் தங்கும் அத்தோலம் சென்று குமபிடும் உரிமைத் தொழில் உடையேனுக்கு இந்த ஒரு சபதம் விலக் காகும் என நினைந்தகுறிப்பினல் தமது கடவுளின் திருமுன்பு தமது சபதற்றிற்கு நேரக் கூடிய குறைபாடுகளைச் சொல்லி அதற்காக இரந்திடுவார். 247

சங்கார்நாள் பணிந்திருந்து தமிழ்வேந்தர் மொழிகின்றார்
மங்கைஅவள் தனைப்பிரியா வகைசபதஞ் செய்வதனுக்(கு)
அங்கவளோ டியான்வந்தால் அப்பொழுது கோயில்விடத்
தங்கும் இடந் திருமகிழ்க்கீழ்க் கொளவேண்டும் எனத்தாழ்ந்தார்.

எம்பெருமானுடைய திருவடிகளைப் பணிந்து முன்னிருந்து; தமிழ் வேந்தரம் எமது சுந்தரர் மொழிகின்றார் எம்பிரானே சங்கிலியாம் அவள்தனை நான் திரும ணம் செய்து பிரியாதிருக்கும் வகை சபதம் செய்வதனிற்கு அங்கு அவளுடன் திருமுன்பு வந்தால் அப்பொழுது தேவரீர் கோவிலை விடுத்து நீங்கித் தங்குகின்ற இடம் திருவுடைய மகிழ மரத்தின் கீழாக அமையவேண்டும் எனவேண்டித் தாழ் ந்து பணிதலும். 248

தம்பிரான் தோழரவர் தாம்வேண்டிக் கொண்டருள
உம்பர்நா யகரும்அதற் குடன்பாடு செய்வாராய்
நம்பீ! நீசொன்னபடி நாஞ்செய்தும்''என்றருள
எம்பிரா னே! அரிய தில்லைனக்கென்? எனஏத்தி.

தமது பெருமானின் தோழர் சுந்தரர் இவ்வணம் இரந்து வேண்டிக்கொண்ட ருளலும் தேவர்கட்கு நாயகர் சிவலும் அதற்கு உடன் பாடுசெய்பவராகி சுந்தர னே! நீசொன்னபடி நாம் செய்வோம் என்று அருளலும் அதனைக் கேட்டருளிய சுந்தரரும் எமது ஈசனை நோக்கி எம்பிரானே இனி எனக்கு அரிய தொரு காரியம் எதுவாகும் எனப் போற்றி செய்து. 249

அஞ்சலிசென் னியில்மன்ன அருள்பெற்றுப் புறம்போதச்
செஞ்சடையார் அவர்மாட்டுத் திருவீளையாட் டினைமகிழ்ந்தோ?
வஞ்சிஇடைச் சங்கிலியார் வழியடிமைப் பெருமையோ?
துஞ்சிருள்மீ ளவும்அணைந்தார் அவர்க்குறுதி சொல்லுவார்.

இருகைகளும் கூப்பியவாறு உச்சியில் விளங்க எம்பிரனிடம் இவ்வகை அருள் பெற்று வெளியே வந்திடலும் அது வேளை செஞ்சடையுடைய சிவ பெருமானும் சுந்தரமூர்த்தி நாயனர் அவரிடத்தாக திருவீளையாடல் புரிவதில் மகிழ்ந்தோ! அல்லது தோன்றியும் தோன்றாது முள்ள சிற்றிடையின் சங்கிலி நாச்சியாரது வழி வழி அடிமைப்பெருமையோ! நாம் அறியோம் தூங்கும் இரவிலே மீண்டும் சங்கி லியார் பால் சென்றார். 250

சங்கிலியார் தம்மருங்கு முன்புபோற் சார்ந்தருளி
நங்கை! உனக் காரூரன் நயந்துசூ ளுறக்கடவன்
அங்குநமக் கெதிர்செய்யும் அதற்குநீ இசையாதே
கொங்கலர்பூ மகிழின்கீழ்க் கொள்க எனக் குறித்தருள.

சங்கிலி அம்மையார் பாலாக முன்பு போலச் சென்றருளி எம்பெருமான் அவளை நோக்கி ''பெண்ணே உனக்கு சுந்தரன் சபதம் செய்யக்கடவன். அந்தச் சபதம் செய்திட எமது சந்நிதி முன்புசெய்திடற்கு நீ இசைவு கொள்ளாதே! பின்னர் நல் வாசனை அலரும் பூவுடைய மகிழ மரத்தின் கீழ் சபதம் செய்திடவே ஏற்றுக் கொள் வாய்'' என்று சபதத்தினும் நேரக் கூடிய குறையைக் குறித்தருளலும் 251

மற்றவரும் கைகுவித்து''மாலயனுக் கறிவரியீர்!
அற்றம்எனக் கருள்புரிந்த அதனில் அடி யேனுகப்
பெற்றதியாது எனக்கண்கள் பெருந்தாரை பொழிந்நிழிய
வெற்றிமழ விடையார்தஞ் சேவடிக்கீழ் வீழ்ந்தெழுந்தார்.

அது கண்டருளிய சங்கிலியாரும் வணங்கி! எம்பிரானைக் கைகூப்பி திரு மாலும் பிரமனும் அறிவரியீர்! சபதத்தில் நிகழ்க் கூடிய குறையை எனக்கு அருள் புரிந்த அத்தன்மையால் தேவரீர்க்கு அடியேனுகப் பெற்றது இதனிலும் வேறுயாது'' என்று கூறி கண்களால் பெரும் தாரைதாரையாகக் நீர்வடிந்திழிய வெற்றிதரும் தரும தேவதையாம் இடபமுடைய பெருமானது திருவடிக்கீழாக பணிந்து வீழ்ந்து எழுந்தார். 252

தையலார் தமக்கருளிச் சடாமகுடர் எழுந்தருள
எய்தியபோ ததிசயத்தால் உணர்ந்தெழுந்தவ் விரவின்கண்
செய்யசடை யார்அருளின் திறம்நினைந்தே கண்துயிலார்
ஐயமுடன் அருகுதுயில் சேடியரை அணைந்தெழுப்பி.

சங்கிலி அம்மையார்க்கு அருள்புரிந்து சடை முடியுடைய பெருமான் எழுந் தருளிச் சென்றிடலும்; இந்த நிசழ்ச்சி கனவில் நிகழப்பெற்றபோது நனவுபோல் உணர்ந்தெழுந்த சங்கிலியார் அந்த இரவின் கண்ணே செம்மையான சடையுடைய பெருமானது திருவருளின் திறத்தை நினைந்து மேலும் கண்துயிலாராகி மனதிப் பெரும் ஐயப்பாட்டுடன் அருகே துயின்றதோழியரை அணைத்து அவரை எழுல் பிடலும் 253

நீங்குதுயில் பாங்கியர்க்கு நீங்கல்எழுத் தறியும்அவர்
தாங்கனவில் எழுந்தருளித் தமக்கருளிச் செய்ததெலாம்
பாங்கறிய மொழியஅவர் பயத்தினுடன் அதிசயமும்
தாங்குமகிழ்ச் சியும்எய்தச் சங்கிலியார் தமைப்பணிந்தார்.

நித்திரை நீங்கிய தனது தோழியருக்கெல்லாம் ஏட்டுவரியில் நீங்கிய எழுத் தறிய வல்ல திருவொற்றியூர்ப் பெருமான் அவர் தாம் தமது கனவில் அருளிச் செய்த அந்த வரவாறு யாவையும் அவர்கள் பாங்குடன் அறியுமாறு மொழிந் திடலும் அதுகேட்ட தோழியர் பயத்தினுடன் அதிசயமும் கொண்டு தம்மை அறியாதுபெற்றுக் கொண்ட மகிழ்ச்சியுடன் சங்கிலி அம்மையாரைப் பணிந்தார்கள் 254

சேயிழையார் திருப்பள்ளி எழுச்சிக்கு மலர்தொடுக்கும்
தூயபணிப் பொழுதாகத் தொழில்புரிவார் உடன்போதக்
கோயிலின்முன் காலமது வாகவே குறித்தணைந்தார்
ஆயசப தஞ்செய்ய வரவுபார்த் தாரூரர்.

அவ்வேளை சங்கிலி அம்மையாருக்கு எம்பிரானுடைய திருப்பள்ளி எழுச்சிக்கு மலர்தொடுக்கும் தூயபணி செய்திடும் பொழுதாகிட; அவர்எழுந்து அத்தொழில் செய்திடும் பெண்களுடன் தாம் கோவில் சென்றிட; அப்பொழுது கோயிலின் முன் பாக அவர்வரும் காலத்தை உணர்ந்து தமது சபதத்தை நிறைவேற்றும் காலம் அதுவாகவே குறித்து வந்து சேர்ந்தார் எம்பிரான் சொல்லியருளிய படி சபதம் செய்திட அவர் வரவு பார்த்திருந்த சுந்தர்மூர்த்தி சுவாமிகள். 255

நின்றவர்அங் கெதிர்வந்த நேரிழையார் தம்மருங்கு
சென்றணைந்து தம்பெருமான் திருவருளின் திறங்கூற
மின்றயங்கு நுண்ணிடையார் விதியுடன்பட் டெதிர்விளம்பார்
ஒன்றியநா ணெடுமடவா ருடன் ஒதுங்கி உட்புகுந்தார்.

அவர் வரவுபார்த்து நின்ற சுந்தரமூர்த்தி சுவாமிகள் அங்கு எதிர்வந்த சங்கிலி யம்மையாரது அருகுசென்று சேர்ந்து எம்பெருமான் திருவருளின் தன்மையினை எடுத்து மொழிந்து சபதம்செய்திட அழைத்தபோது; அதற்கு மின்னல் ஒளிரு நுண்ணிய இடையுடைய சங்கிலியார் சபதம் செய்திடற்கு உற்ற விதியின் உடன் பாட்டினை நேராக எதிர்நின்று சொல்லாராகி உள்ளத்துக்கொண்ட நாணமுடன் முன்நின்ற சுந்தரர்பெருமானை ஒதுங்கி தம்முடன்வந்த தோழியருடன் கோயிலுட் புகுந்தார். (256)

அங்கவர்தம் பின்சென்ற ஆரூரர் ''ஆயிழையீர்!
இங்குநான் பிரியாமை உமக்கிசையும் படிஇயம்பத்
திங்கள்முடி யார்திருமுன் போதுவீர்''எனச்செப்பச்
சங்கிலியார் கனவுரைப்பக் கேட்டடதா தியர்மொழிவார்.

அவர்போகக் கண்டு அங்கு அவர்தம்பின் சென்ற சுந்தாமூர்த்திசுவாமிகள் அவரைநோக்கி அழகிய ஆபரணமணிந்தீர்! இங்கு நான் உம்மைப் பிரியாமைக்கு உமக்கு இசையும்படி சபதம் செய்ய இளம்பிறை அணிந்த முடியுடைப்பெருமான் சிவன் சந்நிதி முன்பு போவீராக என மொழியலும் அது கண்டு சங்கிலி அம்மை யார் கனவு சொல்லக் கேட்ட அவரது தாதியர் சுந்தரர்க்கு சொல் கின்றார்கள். 257

எம்பெருமான்! இதற்காக எழுந்தருளி, இமையவர்கள்
தம்பெருமான் திருமுன்பு சாற்றுவது தகா(து)'' என்ன
நம்பெருமான் வன்றொண்டர் நாதர்செயல் அறியாதே
''கொம்பனீயீர்! யான்செய்வ தெங்(கு)? என்று கூறுதலும்.

எம் பெருமானே! இந்தச் சபதத்திற்காக எழுந்தருளி வந்து தேவர்கள் பெரு மானது திருமுன்பு சபதம் சொல்வது தாகாது என்றலும் அது கேட்டருளி நம் பெருமான் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் தனது பெருமானது செய்கை ஒன்றையும் அறியாது அவரை நோக்கி பூங்கொடி போல்வீர் பின்னர் யான் சபதம் செய்வது எங்கே என்று கூறுதலும். 258

மாதரவர்''மகிழ்க்கீழே அமையும் என மனமருள்வார்
''ஈதலர் ஆகிலும்ஆகும் இவர்சொன்ன படிமறுக்கில்
ஆதலினால் உடன்படவே அமையும் எனத் துணிந்(து)''ஆகில்
போதுவீர்'' எனமகிழ்க்கீழ் அவர்போதப் போய் அணைந்தார்'

அதற்கு அப்பெண்கள் திருமகிழ மரத்தின் கீழே சபதம் செய்ய ஏற்பீர் என் றதும் அது கேட்டு ஈதென்ன இவர் இப்படிச் சொல்கின்றார் என மனம் மயங் குவாராய்; சங்கிலியாரைக் கொடுக்காமல் போனாலும் போவார்கள் யான் இவர் சொன்னபடி செய்ய மறுத்தால். ஆதலால் நான் உடன் படலே பொருந்தும் கரும மாகும் என்று துணிந்து அப்படியாகில் நீர் மகிழ மரத்தடியிற் போதுவீர் என்று அப்பெண்கள் போதலும் தாமும் அங்கு போய் அணைந்தார். 259

தாவாத பெருந்தவத்துச் சங்கிலியா ருங்காண
மூவாத திருமகிழை முக்காலும் வலம்வந்து
''மேவாதிங் கியான் அகலேன்''எனநின்று விளம்பினார்;
பூவார்தண் புனற்பொய்கை முனைப்பாடிப் புரவலனார்.

குறைவிலாத பெரும் தவமுடைய சங்கிலி அம்மையாரும் காண மூப்படை யாத மகிழமரத்தை மும்முறையாக வலம்வந்து நான் இங்கிராது அகன்று போ கேன் என நின்று விளம்பினார் பூக்கள் விளங்கிடத் தோன்றும் குளிர்ந்த நீர்ப் பொய்கை உடைய திருமுனைப்பாடி நாட்டுப் பெருமானார் எமது சுந்தர மூர்த்தி சுவாமிகள். 260

மேவியசீர் ஆரூரர் மெய்ச்சபத வினைமுடிப்பக்
காவியினேர் கண்ணருங் கண்டுமிக மனங்கலங்கிப்
பாவியேன் இதுகண்டேன் தம்பிரான் பணியால்''என்(று)
ஆவிசோர்ந் தழிவார் அங்கொரும ங்கு மறைந்தயர்ந்தார்.

என்றும் பொருந்திய சிறப்பினை உடைய சுந்தர மூர்த்தி சுவாமிகள் உண்மை யாக சபதம் செய்திடும் அச் செயலை முடித்திட நீலோற் பல மலரை ஒத்த கண் ணுடைய சங்கிலி யாரும் இது கண்டு மிக மனம் கலங்கி பாவியேன் இந்த சப தவினை கண்டேன் எம்பெருமான் பணியால் என்று கவலையால் உயிர்சோர்ந்து அழி பவர் அங்கு ஒருபுறம் மறைந்து நின்று தம்மையே நொந்து மனமயர்ந்தார். 261

திருநாவ லூராளி தம்முடைய செயல்முற்றிப்
பொருநாகத் துரிபுனைந்தார் கோயிலினுட் புகுந்திறைஞ்சி
அருள்நாளுந் தரஇருந்தீர் செய்தவா றழகி(து)! எனப்
பெருநாமம் எடுத்தேத்திப் பெருமகிழ்ச்சி யுடன் போந்தார்.

திருநாவலூரினுக்கு அரசனய எம்பிரான் சுந்தரர் தமது சபதம் செய்திடும் செயல் முடிந்து; போர் செயும் யானைத்தோல் போர்த்த சிவபெருமான் கோயிலி னுள் புகுந்து ஐயனே அருள் நாளும் தரும்படி இங்கிருந்தீர் செய்தவாறு அழகா கியது என்று எம்பெருமானுடைய பெருநாமங்களை எடுத்துப் போற்றி இறைவன து திருவினையாடல் உணர்ந்து மகிழ்ந்து பெருமகிழ்ச்சியுடன் வெளியே வந்தருளி னார். 262

வார்புனையும் வனமுலையார் வன்றொண்டர் போனதற்பின்
தார்புனையும் மண்டபத்துத் தம்முடைய பணிசெய்து
கார்புனையும் மணிகண்டர் செயல்கருத்திற் கொண்டிறைஞ்சி
ஏர்புனையுங் கன்னிமா டம்புகுந்தார் இருள்புலர.

வார்பூட்டிய கொடுவண்மையுடைய முலையினைக் கொண்ட அப்பெண் சங்கிலி யார் சுந்தரமூர்த்திசுவாமிகள் சபதம் செய்து போன பிற்பாடு மாலைகட்டும் மண் டபம் சென்று தம்முடைய பணிவிடைகள் செய்து முடித்து கருமையான மேகம் போலும் அழகிய திருக்கண்டமுடைய சிவபெருமான் செயலினை தமது கருத்தில் கொண்டு வணங்கி அழகுபொருந்தும் கன்னிமாடத்துள் புகுந்தார் இருள் நீங்கி விடிந்திட; (சபதச் செயல் மாலை கட்டும் பணியாவும் வைகறை யாமத்தில் நடை பெற்றது.) 263

அன்றிரவே ஆதிபுரி ஒற்றிகொண்டார் ஆட்கொண்ட
பொன் திகழ்பூண் வன்றொண்டர் புரிந்தவினை முடித்தருள
நின்றபுகழ்த் திருவொற்றி யூர்நிலவு தொண்டர்க்கு
மன்றல்வினை செய்வதற்கு மனங்கொள்ள உணர்த்துவார்.

ஆனால் அன்று இரவிலே ஆதியாய தலமாகும் திருவொற்றியூர் ஆட்சிகொண் ட பெருமானும் தாம் ஆட்கொண்ட பொன்திகழ் ஆபரணம் அணிந்த சுந்தர மூர் த்தி சுவாமிகள் செய்த சபதவினையின் பிரகாரம் திருமணம் செய்தருள புகழ் ளை ங்கி நின்ற திருவொற்றியூர் வாழும் தொண்டர்கட்கு சுந்தரர்க்கு சங்கிலி அம்மை யாரை திருமணம் செய்திடற்கு மனம்கொள்ளும்படி கனவில் அருள் செம வார். 264

நம்பியா ரூரனுக்கு நங்கைசங் கிலிதன்னை
இம்பர்ஞா லத்திடைநம் ஏவலினால் மணவினைசெய்(து)
உம்பர்வா ழுலகறிய அளிப்பீர் என் றுணர்த்துதலும்
தம்பிரான் திருத்தொண்டர் அருள் தலைமேற் கொண்டெழுவார்.

'சுந்தரனுக்கு பெண்சங்கிலியை இந்த உலகத்திடையாக நமது ஏவலின் படி திருமணச்சடங்கினைச் செய்து தேவர்கள் வாழும் உலகறியக் கொடுத்திடுவீர்' என் று அவர்கள் அறிந்திட அக்கனவில் உணர்த்துதலும் எம்பெருமானுடைய அடியா ர்கள் அப்பனுடைய அருளைத் தலைமேற் கொண்டு எழுந்து கொள்வார்கள். 265

மண்ணிறைந்த பெருஞ்செல்வத் திருவொற்றி யூர்மன்னும்
எண்ணிறைந்த திருத்தொண்டர் எழிற்பதியோ ருடன்ஈண்டி
உண்ணிறைந்த மகிழ்ச்சியுடன் உம்பர்பூ மழைபொழியக்
கண்ணிறைந்த பெருஞ்சிறப்பிற் கலியாணஞ் செய்தளித்தார்.

திருவருள் பெற்றுக் கொண்டு இப்பூமி நிறைந்த பெருஞ்செல்வமுடைய திருவொற்றியூர் விளங்கும் எண்ணிக்கையில் மிக நிறைந்த திருத்தொண்டர்கள் அழகிய அப்பதியோருடன் கூடி உள்ளத்து நிறைந்த மகிழ்ச்சியுடன் தேவர்கள் பூமழை பொழிந்திட காரிவார் கண்கள் நிறைந்த பெருஞ் சிறப்பினால் சுந்தர மூர்த்தி சுவாமிகட்கு சங்கிலி அம்மையாரைக் கலியாணம் செய்து கொடுத்தார்கள். 266

பண்டுநிகழ் பான்மையினைப் பசுபதிதன் அருளாலே
வண்டமர்பூங் குழலாரை மணப்புணர்ந்த வன்றொண்டர்
புண்டரிகத் தவள்வனப்பைப் புறங்கண்ட தூநலத்தைக்
கண்டுகேட் டுண்டுயிர்த்துற்(று) அமர்ந்திருந்தார் காதலினால்.

முன்னே திருக்கைலாய மலையில் நிகழ்ந்த அத்தன்மையினால் உயிர்கட்கெல்லாம் நாயகனை சிவனது அருளாலே இப்பூமியில் வண்டுகள் மொய்த்திடும் கூந்தலுடைய சங்கிலி அம்மையாரைத் திருமணம் செய்த சுந்தர மூர்த்தி சுவாமிகள்; தாமரை மலர் மேல் இருக்கும் மகாலெக்குமியின் வனப்பையும் புறங்கண்ட அத்தனை அழகுடைய தூய நலமுடைச் சங்கிலியாரை கண்டு கேட்டுப் பெற்று அனைந்து உண்டு உயிர்த்து மலர்ந்தார் காதலினால். 267

யாழின் மொழி எழில்முறுவல் திருகுழைமேற் கடைபிறழும்
மாழைவிழி வனமுலையார் மணியல்குல் துறைபடிந்து
வீழுமவர்க் கிடைதோன்றி மிகும்புலவி புணர்ச்சிக்கண்
ஊழியாம் ஒருகணந்தான் அவ்வூழி ஒருகணமாம்.

யாழினது இனிய மொழியும்; அழகிய முறுவலும் இரு குழைக் காதின் பாலாக பார்வை பாலும் மாவடுப்போன்ற கண்களும் பருத்த முலைகளும் உடைய பெறுதற்கரிய சங்கிலி அம்மையாரை அணைத்து அவருடைய அல்குல் துறையில் தாம் படிந்து வீழ்ந்து புணரும் எம் சுந்தர மூர்த்தி சுவாமிகட்கு அந்த இன்பத் துறையில் இடைகளில் தோன்றிடும் பிரிவு புணர்ச்சி என்ற இக்காலங்கள் ஒரு கணப்பொழுது ஊழியாகவும் அந்த ஊழி ஒரு கணமாகவும் மாறியே வந்து மீளாது பொருந்திக்கொள்வது. 268

இந்நிலையிற் பேரின்பம் இனிதமர்வார் இறையுறையும்
மன்னுபுகழ் ஒற்றியூ ரதனில்மகிழ் சிறப்பினால்
சென்னிமதி புனைவார்தந் திருப்பாதந் தொழுதிருந்தார்
முன்னியகா லங்கள்பல முறைமையினால் வந்தகல.

இந்நிலையில் பேரின்பத் துறையில் சங்கிலியாருடன் இனிதமரும் சுந்தர மூர்த்தி சுவாமிகள்; எம்பிரான் சிவன் உறைகின்ற புகழ்விளங்கும் திருவொற்றியூரதனில் மகிழ்ந்து உறைகின்ற சிறப்பினால் சடையின் மீது இளம் பிறை அணியும் எம் பெருமானது திருப்பாதம் தொழுது அங்கிருந்தார். அவ்வாறு மகிழ்ந்து வந்திட எண்ணிய காலங்கள் பல முறையாக வந்து கழிந்து போயிடலும். 269

பொங்குகமிழ்ப் பொதியமலைப் பிறந்துபூஞ் சந்தனத்தின்
கொங்கணைந்து குளிர்சார லிடைவளர்ந்த கொழுந்தென்றல்
அங்கணியக் திருவாரூர் அணிவீதி அழகரவர்
மங்கலநாள் வசந்தம்எதிர் கொண்டருளும் வகைநினைந்தார்.

ஓர் நாள் தமிழ் பொங்கி மலரும் பொதிய மலையில் தோன்றி; பூக்கள் மலரும் சந்தனத்தின் மரங்களின் அடுக்கலில் அணைந்து; குளிர்ந்த மரச்சாரலிடையாக வளர்ந்து வந்து சேரும் மிருதுவாய தென்றல் காற்று அங்கு சேர்ந்திடலும் அக் காற்றின் நலம் கண்டு அதனாலே திருவாரூரின் அழகிய வீதியில் எழுந்தருளி உலாப்போகும் பெருமான் எதிராக அன்றை மங்கல நாளில் வசந்தக் காற்று எதிர் கொண்டு சேவிக்கும் தன்மையை உணர்ந்து கொண்டார் சுந்தரமூர்த்தி சுவாமிகள். 270

வெண்மதியின் கொழுந்தணிந்த வீதிவிடங் கப்பெருமான்
ஒண்ணுதலார் புடைபரந்த ஓலக்கம் அதனிடையே
பண்ணமரும் மொழிப்பரவை யார்பாடல் ஆடல்தனைக்
கண்ணுறமுன் கண்டுகேட் டார்போலக் கருதினார்.

வெண்பிறையின் கொழுந்து அணிந்த வீதி விடங்கன் திருவாரூர் பெருமான் அழகிய நெற்றியுடைய பெண்கள் பக்கராகச் சூழ்ந்திட கொலுவீற்றிருந்த திருமண்டப மதலைடையாக பண் பொருந்தும் மொழியுடைய பரவை அம்மையாரது பாடல் ஆடல் இவைகளை தன் கண்முன்னுகக் கண்டு கேட்டார் போல எண்ணினார் சுந்தரமூர்த்திசுவாமிகள். 271

தென்றல் காற்று திருவாரூர் தியாகராசப் பெருமானது விழா கொலு இருப்பின் அற்புதம் பரவையாரது நடனம் பாடல் அவையெலாம் நேரில் கண்டது போல நினைய வைத்தது.

பூங்கோயில் அமர்ந்தாரைப் புற்றிடங்கொண் டிருந்தாரை
நீங்காத காதலினால் நினைந்தாரை நினைவாரைப்
பாங்காகத் தாம்முன்பு பணியவரும் பயன்உணர்வார்
''ஈங்குநான் மறந்தேன்என்(று) ஏசறவால் மிக அழிவார்.

பூங்கோயில் என்னும் அத்தலத்து அமர்ந்த புண்ணியனை கறையான் புற்றில் இடம் கொண்டிருந்த கண்ணுதற்கடவுளை நீங்காத காதலினால் நினைந்தாரை நினைவாரை பாங்குடனே தாம் முன்பு பணிதலினால் வருகின்ற இன்பப் பயன் உணர்வார் அவர் அந்தோ! என் அப்பனை இங்கே நான் மறந்தேனே என எண்ணிய கவலை பெருகப் பெருகத் தவித்திடும் பாதைப்பால் மிகவும் மனம் அயர்வார். 272

மின்னெளிர் செஞ்சடையானை வேதமுதல் அருளானை
மன்னுபுகழ்த் திருவாரூர் மகிழ்ந்தானை மிகநினைந்து
பன்னியசொற் ''பத்திமையும் அடிமையையும் கைவிடுவான்''
என்னும்இசைத் திருப்பதிகம் எடுத்தியம்பி இரங்கினார்.

மின்போல் ஒளிரும் செஞ்சடையுடைய பெருமானை; வேதங்கட்கெல்லாம் முதற் பொருளாயினானை; சீர் மன்னிய புகழுடைய திருவாரூரில் மகிழ்ந்திருந்த பெருமானை தியாகராசனை மிகவும் நீள நினைந்து தாம் மொழிகின்ற தமிழ் சொற்பதிகம்; பத்திமையும் அடிமையையும் கைவிடுவான் எனத்தொடங்கிடும் இசையுடைய அப்பதிகம் பாடி மிகவும் திருவாரூர்ப் பெருமானை காணுமைக்கு இரங்கினார் அவர்.

திருவாரூர் எம் ஈசனைப்பணியா திருந்தமை நினைந்து பாடியருளிய பதிகம் இதுவாகும் இப்பதிகத்து காம உணர்வால் மனிதன் பொத்தப்பட்டு அதன்வசமாக நோயுறும் தன்மை பேசப்படல் காண்க. 273

பண் – பழம்பஞ்சுரம்
திருச்சிற்றம்பலம்

பத்திமையும் அடிமையையும் கைவிடுவான் பாவியேன்
பொத்தினநோ யதுவிதனைப் பொருளறிந்தேன் போய்த்தொழுவேன்
முத்தினைமாமணி தன்னைவயிரத்தை மூர்க்கனேன்
எத்தனைநாட் பிரிந்திருக்கேன் என்ஆரூர் இறைவனையே. 1

ஓணைமாச பகழியுடை அடல்மதனன் பொடியாகச்
செவ்வணமாம் திருநயனம் விழிசெய்த சிவமூர்த்தி
மையணவும் கண்டத்து வளர்சடைஎம் ஆரமுதை
எவ்வணம்நான் பிரிந்திருக்கேன் என்ஆரூர் இறைவனையே. 2

சங்கலக்குந் தடங்கடல்வாய் விடஞ்சுடவந் தமரர்தொழ
அங்கலக்கண் தீர்த்துவிடம் உண்டுகந்த அம்மானை
இங்கலக்கும் உடற்பிறந்த அறிவிலியேன் செறிவின்றி
எங்குலக்கப் பிரிந்திருக்கேன் என்ஆரூர் இறைவனையே. 3

இங்ஙனம்வந் திடர்ப்பிறவிப் பிறந்தயர்வேன் அயராமே
அங்ஙனம்வந் தெனைஆண்ட அருமருந்தென் ஆரமுதை
வெங்கனல்மா மேனியனை மான்மருவுங் கையானை
எங்ஙனம்நான் பிரிந்திருக்கேன் என்ஆரூர் இறைவனையே. 4

செப்பரிய அயனெடுமால் சிந்தித்துந் தெரிவரிய
அப்பெரிய திருவினையே அறியாதே அருவினையேன்
ஒப்பரிய குணத்தானை இணையிலியை அணைவின்றி
எப்பரிசு பிரித்திருக்கேன் என்ஆரூர் இறைவனையே 5

வன்னுகம் நாண்வரைவில் அங்கிகணை அரிபகழி
தன்ஆகம் உறவாங்கிப் புரம்எரித்த தன்மையனை
முன்னுக நினையாத மூர்க்கனேன் ஆக்கைசுமந்(து)
என்னுகப் பிரிந்திருக்கேன் என்ஆரூர் இறைவனையே. 6

வன்சயமாய் அடியான்மேல் வருங்கூற்றின் உரங்கிழிய
முன்சயமார் பாதத்தால் முனிந்துகந்த மூர்த்திதனை
மின்செயும்வார் சடையானை விடையானை அடைவின்றி
என்செயநான் பிரிந்திருக்கேன் என்ஆரூர் இறைவனையே 7

முன்னெறிவர னவர்கூடித் தொழுதேத்தும் முழுமுதலை
அந்நெறியை அமரர்தொழும் நாயகனை அடியார்கள்
செந்நெறியைத் தேவர்குலக் கொழுந்தைமறந் திங்ஙனம்நான்
என்னறிவான் பிரிந்திருக்கேன் என்ஆரூர் இறைவனையே. 8

கற்றுளவான் கனியாய கண்ணுதலைக் கருத்தார
உற்றுளனும் ஒருவனைமுன் இருவர்நினைந் தெரிதேத்தப்
பெற்றுளனும் பெருமையனைப் பெரிதடியேன் கையகன்றிட் (டு)
எற்றுளனுய்ப் பிரிந்திருக்கேன் என்ஆரூர் இறைவனையே. 9

ஏழிசையாய் இசைப்பயனுய் இன்னமுதாய் என்னுடைய
தோழனுமாய் யான்செய்யும துரிசுகளுக் குடனுகி
மாழைஒண்கண் பரவையைத்தந் தாண்டானை மதியில்லா
ஏழையேன் பிரிந்திருக்கேன் என்ஆரூர் இறைவனையே. 10

வங்கமலி கடல்நஞ்சை வானவர்கள் தாம்உய்ய
நுங்கிஅமு தவர்க்கருளி நொய்யேனைப் பொருட்படுத்துச்
சங்கிலியோ டெனைப்புணர்த்த தத்துவனைச் சழக்கனேன்
எங்குலக்கப் பிரிந்திருக்ககேன் என்ஆரூர் இறைவனையே. 11

பேரூரும் மதகரியின் உரியானைப் பெரியவர்தம்
சிரூருந் திருவாரூர்ச் சிவன்அடியே திறம்விரும்பி
ஆரூரன் அடித்தொண்டன் அடியன்சொல் அகலிடத்தில்
ஊரூரன் இவைவல்லார் உலகவர்க்கு மேலாரே. 12

திருச்சிற்றம்பலம்

பின்னெருநாள் திருவாரூர் தனைப்பெருக நினைந்தருளி
உன்னஇனி யார்கோயில் புகுந்நிறைஞ்சி ஒற்றிநகர்
தன்னை அகலப்புக்கார் தாஞ்செய்த சபதத்தால்
முன்னடிகள் தோன்முது கண்மறைய மூர்ச்சித்தார்.

பத்திமையும் அடிமையையும் இவ்வணம் பாடி திருவாரூர் நினைந்து வருந்திய அவர் பின் பொரு நாள் திருவாரூரினைப் பெருக எண்ணியருளி; நினைக்க இனிமைதரும் பெருமானரது திருவொற்றியூர்கோவில் சென்று பணிந்து; தாம் திருவாரூர்போக எண்ணி வழிக்கொண்டு; திருவொற்றியூர் நகரை அகன்றிடும்படி போபவர் உடன் திருவொற்றியூர் எல்லை தாண்டியபோது தாம் செய்த சபகத்தால் முன்வைத்த காலின்கண் அடிகள்தோன்முது பார்வை மறையலும் அந்தோ! என வீழ்ந்து மூர்ச் சித்தார்;

செய்வதனை அறியாது திகைத்தருளி நெடிதுயிர்ப்பார்
''மைவிரவு கண்ணுர்பால் சூளுறவு மறுத்ததனால்
இவ்வினைவந் தெய்தியதாம்'' எனநினைந்(து)''எம் பெருமானை
எய்திய இத் துயர் நீங்கப் பாடுவேன்'' எனநினைந்து.

திருக்கண்பார்வை இழந்து செய்வதறியாது திகைத்தருளி நெடிது பெருமூச் செறிபவர் மையூசிய கண்உடைய சங்கிலியார் பாலாகச் செய்த சபதம் மறுத்த லால் இந்த வினைவந்து எனக்கு நேர்ந்தது என எண்ணி; எம்பெருமானை எனக் குற்ற இத்துயர் தீரப் பாடுவேன் என நினைந்தார் நினைந்து. 275

அழுக்குமெய்கொ(டு) என்றெடுத்தசொற்பதிகம்ஆதிநீள்புரிஅண்ணலை ஒதி,வழுத்துநெஞ்சொடு தாழ்ந்துநின்றுரைப்பார்மாதொர்பாகனர்மலர்ப் பதம்உன்னி, இழுக்கு நீக்கிடவேண்டும்என்றிரந்தேதெய்து வெந்துயர்க்கை யறவனுக்கும், பழிக்கும்வெள்கிநல்லிசைகொடுபரவிப்பணிந்துசாலவும் பலபல நினைவார்.

நினைந்து பாடிட; அழுக்கு மெய் கொடு என்று பாடஎடுத்த செஞ்சொல் திருப்பதிகம் ஆதியாய பெருங்கோயில் திருவொற்றியூர்க் கடவுளைப் போ ற்றி வணங்கும் நெஞ்சொடு தாழ்ந்து அங்கு நின்று பாடும் அவர் பெண் ஒரு பா கனைய பெருமான் மலர்ப்பாதம் நினைந்து தமக்கு அடைந்த இழுக்கு நீக்கிடவே ண்டும்என்று இரந்து; தமக்கு கண் பார்வை இழந்ததால் வந்த கொடும் துயருக்கு கும் வசையாம் கலங்கும் பழிக்கும் நாணி நல்ல இசைகொண்டு எம் பெருமா னைப் போற்றிப் பணிந்து மிகவும் பல பல நினைவார்.

கண் மறைய கவலை கொண்டு கண்இழந்தால் வரும் வசையும் பெரும் பாலு ம் பெண்கள் தம்மைப்பற்றி நினைப்பதுவும் நன்றுடன் தம்மைப் பாராட்டிய அந்த மக்கள் சுமத்தக் கூடிய வசையையும் சொல்லிப் பாடியருளிய அற்புதமாய பதிக ம் இதுவாகும். 276

திருவொற்றியூர்
பண் — தக்கேசி
திருச்சிற்றம்பலம்

அழுக்கு மெய்கொடுன் திருவடிஅடைந்தேன் அதுவும் நான்படப் பாலதொன் றுனல்
பிழுக்கை வாரியும் பால்கொள்வர் அடிகேள்பிழைப்பன் ஆகிலுந்திருவடிப் பிழையேன்
வழுக்கி வீழினுந் திருப்பெய ரல்லால் மற்று நான்அறி யேன்மறு மாற்றம்
ஒழுக்க எண்கணுக் கொருமருந்து ரையாய் ஒற்றியூரெனும் ஊருறை வானே. 1

கட்ட னேன்பிறந் தேன்உனக் களாயக் காதற் சங்கிலி காரண மாக
எட்டினுல்திக ழுந்திரு மூர்த்தி என்செய் வான்அடி யேன்எடுத் துரைக்கேன்
பெட்டனுகிலுந் திருவடிப் பிழையேன் பிழைப்ப னுகிலும் திருவடிக் கடிமை
ஒட்டினேன்எனை நீசெய்வ தெல்லாம் ஒற்றியூரெனும் ஊருறை வானே. 2

கங்கை தங்கிய சடையுடைக் கரும்பே கட்டி யேபலர்க் குங்கணே கண்ணே
அங்கை நெல்லியின் பழத்திடை அமுதே அத்தா என்னிடர் ஆர்க்கெடுத் துரைக்கேன்
சங்கும் இப்பியுஞ் சலஞ்சலம் முரல வயிரம் முத்தொடு பொன்மணி வரன்றி
ஒங்கு மாகடல் ஓதம்வந் துலவும் ஒற்றி யூரெனும் ஊருறை வானே. 3

ஈன்றுகொண்டதோர் சுற்றமொன் றன்று லியாவ ராகிலென் அன்புடை யார்கள்
தோன்ற நின்றருள் செய்தனித் திட்டாற் சொல்லு வாரை அல் லாதன சொல்லாய்
மூன்று கண்ணுடை யாய்அடி யேன்கண் கொள்வ தேகணக் குவழக் காகில்
ஊன்று கோல்எனக் காவதொன் றருளாய் ஒற்றி யூர்எனும் ஊருறை வானே. 4

வழித்த லைப்படு வான்முயல் கின்றேன் உன்னைப் போல்என்னைப் பாவிக்க மாட்டேன்
சுழித்த லைப்பட்ட நீரது போலச் சுழல்கின்ற தேன்சுழல் கின்றதென் உள்ளம்
கழித்த லைப்பட்ட நாயது போல ஒருவன் கோல்பற்றிக் கறகற இழுக்கை
ஒழித்து நீஅரு ளாயின செய்யாய் ஒற்றி யூர்எனும் ஊர்உறை வானே. 5

மானே நோக்கியர் கண்வலைப் பட்டு வருந்தி யானுற்ற வல்வினைக் கஞ்சித்
தேனே ஆடியகொன்றையி னுய்உன் சீல முங்குண முஞ்சிந்தி யாதே
நானும் இத்தனை வேண்டுவ தடியேன் உயிரொடுந் நரகத்தழுந் தாமை
ஊனம் உள்ளன தீர்த்தருள் செய்யாய் ஒற்றி யூர்எனும் ஊருறை வானே; 6

மற்றுத் தேவரை நினைந்துனை மறவேன் எஞ்சி னுரொடு வாழவும் மாட்டேன்
பெற்றி ருந்து பெருதொழி கின்ற பேதை யேன்பிழைத் திட்டதை அறியேன்
முற்றும் நீஎனை முனிந்திட அடியேன் கடவ தென்னுனை நான்மற வேனேல்
உற்ற நோயுறு பிணிதவிர்த் தருளாய் ஒற்றி யூர்எனும் ஊரறை வானே. 7

கூடி னுய்மலை மங்கையை நினையாய் கங்கை ஆயிர முகம்உடை யானைச்
சூடி னுய்என்று சொல்லிய புக்கால் தொழும்ப னேனுக்குஞ் சொல்லலு மாமே
வாடி நீயிருந் தென்செய்தி மனனே வருந்தி யானுற்ற வல்வினைக் கஞ்சி
ஊடி னுல்இனி ஆவதொன் றுண்டே ஒற்றி யூர்எனும் ஊர்உறை வானே. 8

மகத்திற் புக்கதோர் சனிஎனக் கானுய் மைந்த னேமணி பேமன வாளா
அகத்திற் பெண்டுகள்நான்ஒன்று சொன்னுல் அழையேற் போகுரு டாஎனத் தரியேன்
முகத்திற் கண்ணிழந் தெங்ஙனம் வாழ்கேன் முக்க ணுமுறை யோமறை யோதீ
உகைக்குந் நண்கடல் ஓதம்வந் துலவும் ஒற்றி யூர்எனும் ஊரறை வானே. 9

ஓதம் வந்துல வுங்கரை தன்மேல் ஒற்றியூர்உறை செல்வனே நாளும்
ஞாலந் தான்பர வப்படு கின்ற நான்மறை அங்கம் ஓதிய நாவன்
சீலந் தான்பெரி தும்மிக வல்ல சிறுவன் வன்தொண்டன் ஊரன் உரைத்த
பாடல் பத்திவை வல்லவர் தாம்போய்ப் பரகதி திண்ணம் நண்ணுவர் தாமே. 10

திருச்சிற்றம்பலம்

அங்கு நாதர்செய் யருளது வாகஅங்கை கூப்பிஆரூர்தொழ நினைந்தே,
பொங்கு காதல்மீ ளாநிலை மையினுற்போது வார்வழி காட்டமுன் போந்து,
திங்கள் வேணியார் திருமுல்லை வாயில்சென் றிறைஞ்சி நீடியதிருப் பதிகம்,
சங்கி லிக்காக என்கண்ணை மறைத்தீர் என்று சாற்றிய தன்மையிற் பாடி.

அங்கு திருவொற்றியூர் நாதர் தமக்குச் செய்த அருள் கண்மறைப்பித்த அது வேயாக தமது அழகிய கைகளைக் கூப்பி வணங்கி திருவாரூர் சென்று தொழ விரும்பிப் பொங்கும் காதலால்; திரும்பி மீண்டிடாத நிலைமையினுல் திருவாரூர் வழிக்கொள்ளும் அவர்; முன்போவார் வழிகாட்டிட முன்னுகச் சென்று; செல்லு மார்க்கத்தில் முன்வருகின்ற இளம்பிறைச் சடையுடைய பெருமானின் திருமுல்லை வாயில் என்னும தலம் சென்று வணங்கி அருள் நிடித்த திருப்பதிகம் பாடுவார் சங்கிலிக்காக என் கண்ணை மறைத்தீர் என்று சொலகின்ற தன்மையிற் பாடி 277
யருளி.

அவர் திருமுல்லைவாயிலில் ஈசனைப்பாடிய அத்திருவுடைய பதிகம் இதுவாகும்

வடதிருமுல்லைவாயில்

பண் — தக்கேசி

திருச்சிற்றம்பலம்

திருவும்மெய்ப் பொருளுஞ் செல்வமும் எனக்குன் சீருடைக் கழல்கள்என் றெண்ணி
ஒருவரை மதியா துருமைசள் செய்தும் ஊடியும் உறைப்பனுய்த் திரிவேன்
முருகமர் சோலை சூழ்திரு முல்லை வாயிலாய் வாயினுல் உன்னைப்
பரவிடும் அடியேன் படுதுயர் கனையாய் பாசுப தாபரஞ் சுடரே. 1

கூடிய இலயஞ் சதிபிழை யாமைக் கொடியிடை உமையவள் காண
ஆடிய அழகா அருமறைப் பொருளே அங்கலு எங்குற்றுய் என்று
தேடிய வானேர் சேர்திரு முல்லை வாயிலாய் திருப்புகழ் விருப்பால்
பாடிய அடியேன் படுதுயர் கனையாய் பாசுப தாபரஞ் சுடரே. 2

விண்பணிந் தேத்து வேதியா மாதர் வெருவிட வேழமன் றுரித்தாய்
செண்பகச் சோலை சூழ்திரு முல்லை வாயிலாய் தேவர்தம் அரசே
தண்பொழில் ஒற்றி மாநகர் உடையாய் சங்கிலிக் காளன்கண் கொண்ட
பண்பதின் அடியேன் படுதுயர் கனையாய் பாசுப தாபரஞ் சுடரே. 3

பொன்னலங் கழனிப் புதுவிரை மருவிப் பொறிவரி வண்டிசை பாட
அந்நலங் கமலத் தவிசின்மேல் உறங்கும் அலவன்வந் துலவிட அள்ளல்
செந்நெலங் கழனி சூழ்திரு முல்லை வாயிலாய் திருப்புகழ் விருப்பால்
பன்னலந் தமிழாற் பாடுவேற் கருளாய் பாசுப தாபரஞ் சுடரே. 4

சந்தன வேருங் காரகிற் குறடும் தண்மயிற் பீலியுங் கரியின்
தந்தமுந் தரளக் குவைகளும் பவளக் கொடிகளுஞ் சுமந்துகொ டுந்தி
வந்திழி பாலி வடகரை முல்லை வாயிலாய் மாசிலா மணியே
பந்தனை கெடுத்தென் படுதுயர் கனையாய் பாசுப தாபரஞ் சுடரே. 5

மற்றுநான் பெற்ற தார்பெற வல்லார் வள்ளலே கள்ளமே பேசிக்
குற்றமே செயினுங் குணமெனக் கொள்ளுங் கொள்கையால் மிகைபல செய்தேன்
செற்றுமீ தோடுந் திரிபுரம் எரிதத திருமுல்லை வாயிலாய் அடியேன்
பற்றிலேன் உற்ற படுதுயர் கனையாய் பாசுப தாபரஞ் சுடரே. 6

மணிகெழு செல்வாய் வெண்ணகைக் கரிய வார்குழல் மாமயிற் சாயல்
அணிகெழு கொங்கை அங்கயற் கண்ணுர் அருநடம் ஆடல் அறுத
திணிபொழில் தழுவு திருமுல்லை வாயிற் செல்வனே எல்லியும் பகலும்
பணியது செய்வேன் படுதுயர் கனையாய் பாசுப தாபரஞ் சுடரே. 7

நம்பனே அன்று வெண்ணெய்நல் லூரில் நாயினேன் தன்னைஆட் கொண்ட
சம்புவே உம்ப ராரார்தொழு தேத்துந் தடங்கடல் நஞ்சுண்ட கண்டா
செம்பொன்மா ளிகைசூழ் திருமுல்லை வாயில் தேடியான் திரிதர்வேன் கண்ட
பைம்பொனே அடியேன் படுதுயர் கனையாய் பாசுப தாபரஞ் சுடரே. 8

மட்டுலா மலர்கொண் டடியினை வணங்கும் மாணிதன் மேல்மதி யாதே
சட்டுவான் வந்த காலனை மாளக் காலினுல் ஆருயிர் செகுத்த
சிட்டனே செல்வத் திருமுல்லை வாயிற் செல்வனே செழுமறை பகர்ந்த
பட்டனே அடியேன் படுதுயர் கனையாய் பாசுப தாபரஞ் சுடரே. 9

சொல்லரும் புகழான் தொண்டைமான் களிற்றைச் சூழ்கொடி முல்லைபாற் கட்டிட்
டெல்லையில் இன்பம் அவன்பெற வெளிப்பட் டருளிய இறைவனே என்றும்
நல்லவர் பரவுந் திருமுல்லை வாயில் நாதனே நரைவிடை ஏறீ
பல்கலைப் பொருளே படுதுயர் கனையாய் பாசுப தாபரஞ் சுடரே. 10

விரைதரு மலர்மேல் அயனெடு மாலும் வெருவிட நீண்டளம் மானத்
திரைதரு புனல்சூழ் திருமுல்லை வாயிற் செல்வனே நாவலா ரூரன்
உரைதரு மாலையோர் அஞ்சினை டஞ்சும் உள்குளிர்ந் தேத்தவல் லார்கள்
நரைதிரை மூப்பும் நடலையும் இன்றி நண்ணுவர் விண்ணவர்க் கரசே. 11

திருச்சிற்றம்பலம்

தொண்டை மானுக்கன் றருள்கொடுத் தருளுந் தொல்லைவண் புகழ்முல்
லை நாயகரைக், கொண்ட வெந்துயர் கனைகெனப் பரவிக் குறித்த காதலின்
நெறிக்கொள வருவார், வண்டுலா மலர்ச்சோலைகள் சூழ்ந்து மாடமாளிகை
நீடுவெண்பாக்கம் கண்ட தொண்டர்கள் எதிர்கொள வணங்கிக்காயும் நா
கத்தர் கோயிலை அடைந்தார்.

தொண்டைமான் என்னும் அரசனுக்கு வெளிப்பட்டு அருள் புரிந்தருளும் மிக வும் முன்னைய அருளின் புகழுடைய திரு முல்லை வாயில் கோயிலின் அமர்ந்த நாயகனை நினைந்து ஐயா நான் கொண்ட கொடும் துயர் கனைந்திடுவாய் எனப் போற்றி திருவாரூர் மேல் குறித்த காதலால் வழிக்கொண்டு வருபவர் வண்டுகள் மொய்த்திடும் சோலைகள் சூழ்ந்து மாடங்கள் மாளிகைகள் நீள வரிசையாய்ப் பெருகிய திருவெண்பாக்கம் என்னும் தலத்துள் உள்ள அடியார்கள் நகரெல்லையில் சென்று எதிர்கொண்டிட தாம் அவரை வணங்கி; கொலை புரியும் யானையை உரித்த ஏவபெருமானது அக்கோயிலைச் சென்றடைந்தார். 278

அணைந்ததொண்டர்கள்உடன்வலமாகஅங்கண்நாயகர் கோயில்முன் எய்தி, குணங்கள்ஏய்தியேபரவிஅஞ்சாலியாற்குவித்தகைதலைமேற் கொண்டு நின்று,வணங்கி "நீர்மகிழ்கோயிலுளீரே" என்றவன்றெண்டர்க்கூன்றுகோல் அருளி, இணங்கிலாமொழியால்"உளோம்போகீர்"என்றியம்பினர்ஏதிலார் போல.

தம் பெருமானது திருவெண்பாக்கம் என்னும் கோவிலை தம்முடன் வந்த தொண்டர்களுடன் வலமாகவந்து திருமுன்பு சேர்ந்து; எம்பெருமானது குணங்களைப் போற்றி வணங்கி அஞ்சலியால் கூப்பிய கரங்களைத் தலைமேல் கொண்டு வணங்கி கண் தெரியாத கையறவால் எம்பிரானே நீர் கோவில் உள்ளீரோ என்று கேட்ட சுந்தர மூர்த்தி சுவாமிகட்கு எம்பிரான் ஓர் ஊன்று கோலும் கொடுத்தருளி இதமுடன் எடுத்து செலல்லாத ஒரு வார்தையாக உளோம் நீர் போகிராக என்று எடுத்து மொழிந்தார் தான் ஓர் அன்னியர்போலனு. 276

''பிழையுளன பொறுத்திடுவார்'' என்றெடுத்துப் பெண் பாகம்
விழைவடிவிற் பெருமானே வெண்பாக்கம் மகிழ்ந்தானே
இழைஎனமா சுணம்அணிந்த இறையானைப் பாடினர்
மழைதவழும் நெடும்புரிசை நாவலூர் மன்னவனூர்.

அவ்வாறு அருள் புரிந்த பெருமானே பிழை உள்ளன பொறுத்திடுவீர் என்று பாட எடுத்து; பெண்ஒருபாகமாக விரும்பிக் கொண்ட பெருமானே திருவெண்பாக்கம் என்னும் கோவிலில் அமர்ந்த ஈசனே; தமக்கு ஆபரணமெனப் பாம்பை அணிந்த கடவுளே அருளுடைய திருப்பதிகம் பாடினர் மேகங்கள் தவழ்ந்திடும் நெடிய மதில்களே உடைய திருநாவலூர் அருள்அரசரான சுந்தர மூர்த்தி சுவாமிகள். 280
அவர் பாடிய அப்பதிகம் இதுவாகும்.

திருவெண்பாக்கம்

பண் – சீகாமரம்

திருச்சிற்றம்பலம்

பிழையுளன பொறுத்திடுவர் என்றடியேன் பிழைத்தக்கால்
பழியதனைப் பாராதே படலமென்கண் மறைப்பித்தாய்
குழைவிரவு வடுகாதா கோயிலுளா யேயென்ன
உழையுடையாய் உள்ளிருந்து உளோம்போகீர் என்றனே. 1

இடையறியேன் தலையறியேன் எம்பெருமான் சரணம்என்பேன்
அடையுடையன் நம்மடியான் என்றவற்றைப் பாராதே
விடையுடையான் விடநாகன் வெண்ணீற்றன் புலியின்தோல்
உடையுடையாய் எனையுடையா னுளோம்போகீர் என்றனே. 2

செய்வினைஒன் றறியாதே திருவடியே சரணென்று
பொய்யடியேன் பிழைத்திடினும் பொறுத்திடநீ வேண்டாவோ
பையரவா இங்கிருந்தா யோஎன்னப் பரிந்தென்னை
உய்யஅருள் செய்யவல்லான் உளோம்போகீர் என்றனே. 3

கம்பமரும் கரிஉரியன் கறைமிடற்றன் காபாலி
செம்பவளத் திருவுருவன் சேயிழையோ டுடனாகி
நம்பிஇங்கே இருந்தீரே என்றுநான் கேட்டலுமே
உம்பர்தனித் துணைஎனக்கு உளோம்போகீர் என்றனே. 4

பொன்னிலங்கு நறுங்கொன்றை புரிசடைமேற் பொலிந்திலங்க
மின்னிலங்கு நுண்ணிடையாள் பாகமா எருதேறி
துன்னியிரு பால்அடியார் தொழுதேத்த அடியேனும்
உன்னமுதாய்க் கேட்டலுமே உளோம்போகிரென்றனை. 5

கண்ணுதலாற் காமனையுங் காய்ந்ததிறற் கங்கைமலர்
தெண்ணிலவு செஞ்சடைமேல் நிமலர்ந்த கொன்றையினன்
கண்மணியை மறைப்பித்தாய் இங்கிருந்தா யோஎன்ன
ஒண்ணுதலி பெருமானர் உளோம்போகீர் என்றனே.
பார்நிலவு மறையோரும் பத்தர்களும் பணிசெய்யத்
தார்நிலவு நறுங்கொன்றைச் சடையனூர் தாங்கரிய
கார்நிலவு மணிமிடற்றீர் இங்கிருந்தீ ரேயென்ன
ஊர்அரவம் அரைக்கசைத்தான் உளோம்போகீர் என்றனே. 7

வாரிடங்கொள் வனமுலையாள் தன்னோடு மாயனத்துப்
பாரிடங்கள் பலசூழப் பயின்றுடும் பரமேட்டி
காரிடங்கொள் கண்டத்தன் கருதும்இடந் திருவொற்றி
ஊரிடங்கொண் டுருந்தபிரான் உளோம்போகீ ரென்றனே. 8

பொன்னவிலுங் கொன்றையினுய் போய்மகிழ்க்கீ ழிருவென்று
சொன்னவனைக் காணுமே குளறவு மகிழ்க்கீழே
என்னவல்ல பெருமானே இங்கிருந்தா யோஎன்ன
ஒன்னலரைக் கண்டாற்போல் உளோம்போகீர் என்றனே. 9

மான்திகழுஞ் சங்கிலியைத் தந்துவரு பயன்களெல்லாம்
தோன்றஅருள் செய்தளித்தாய் என்றுரைக்க உலகமெலாம்
ஈன்றவனே வெண்கோயில் இங்கிருந்தா யோஎன்ன
ஊன்றுவதோர் கோல்அருளி உளோம்போகீர் என்றனே. 10

ஏராரும் பொழில்நிலவு வெண்பாக்கம் இடங்கொண்ட
காராரும் மிடற்றனைக் காதலித்திட் டன்பினெடும்
சீராருந் திருவாரூர்ச் சிவன்பேர்சென் னியில்வைத்த
ஆரூரன் தமிழ்வல்லார்க் கடையாவல் வினைதானே. 11

திருச்சிற்றம்பலம்

முன்நின்று முறைப்பாடு போல்மொழிந்த மொழிமாலைப்
பன்னும்இசைத் திப்பதிகம் பாடியபின் ''பற்றுய
என்னுடைய பிரான் அருளிங் கித்தனைகொலாம்'' என்று
மன்னுபெருந் தொண்டருடன் வணங்கியே வழிக்கொள்வார்.

எம்பெருமான் கோவில் முன்பு நின்று அவர்க்கே தனது துயரம் எல்லாம் முறைப் படுவார் போலப் பாடிய தமிழ் மொழிமாலை யாகும் சொல்லப்பெறும் நல்ல இசையுடைய திருப்பதிகம் பாடிய பின்பு; என்னுடைய பற்றுய எம்பெருமானது அருள் இங்கு இத்தனைபோ என்று மொழிந்து தம்முடன் கூடவந்த பெரும் அடியவர்களுடன் வணங்கி அப்பால் திருவாரூர் நோக்கி வழிக்கொள்கின்றார். 281

அங்கணர்தம் பதிஅதனை அகன்றுபோய் அன்பருடன்
பங்கயப்பூந் தடம்பணைசூழ் பழையனூர் உழையணைந்து
தங்குவார் அம்மைதிருத் தலையாலே வலங்கொள்ளும்
இங்கள்முடி யார்ஆடுந் திருவாலங் காட்டின் அயல்.

நெற்றியிற் கண்ணுடைய கடவுளது அத்தலத்தினை நீங்கிப்போய் அன்பர்களுடன் தாமரைப் பூக்கள் நிறைந்த குளங்கள் புறமே சூழஇருக்கும் பண்ணைவயல்கள் உடைய பழையனூர் இடத்து வந்து சேர்ந்து தங்கிஇருக்கின்றார்; காரைக்கால் அம்மை தலையாலே வலங்கொள்கின்ற; இளம்பிறை முடியில் அணிந்த பெருமான் ஆடியருளும் திருவாலங்காடு என்னும் தலத்தின் அயலாக. 282

முன்நின்று தொழுதேத்தி ''முத்தா'' என் றெடுத்தருளிப்
பன்னும்இசைத் திருப்பதிகம் பாடிமகிழ்ந் தேத்துவார்
அந்நின்று வணங்கிப்போய்த்திருவூறல் அமர்ந்திறைஞ்சிக்
கன்னிமதில் மணிமாடக் காஞ்சிமா நகர்அணைந்தார்.

திருவாலங் காட்டின் முன்பாக நின்று தொழுது போற்றி முத்தா என்று தொடங்கிப் பாட எடுத்தருளிப் பாடுகின்ற இசையுடைய திருப்பதிகம் பாடி மகிழ்ந்து போற்றுவாராய் அந்த இடத்தில் நின்றும் வணங்கிப் போய் திருவூறல் என்றும் தலத்து தங்கி வணங்கி அப்பால்சென்று கன்னிகாப்புடைய மதில் சூழ்ந்த அழகிய மாடங்களையுடைய திருக்காஞ்சி மாநகரினை அடைந்தார். 283

அவர் திருவாலங்காட்டு அப்பனைப் பாடியருளிய திருப்பதிகம் இதுவாகும்

திருவாலங்காடு

பண் – பழம்பஞ்சுரம்

திருச்சிற்றம்பலம்

முத்தா முத்தி தரவல்ல முகிழ்மென முலையா ளுமைபங்கா
சித்தா சித்தித் திறங்காட்டும் சிவனே தேவர் சிங்கமே
பத்தா பத்தர் பலர்போற்றும் பரமா பழைய னூர்மேய
அத்தா ஆலங் காடாஉன் அடியார்க் கடியேன் ஆவேனே;

பொய்யே செய்து புறம்புறமே திரிவேன் றன்னைப் போகாமே
மெய்யே வந்திங் கெனையாண்ட மெய்யா மெய்யர் மெய்ப்பொருளே
பையா டரவம் அரைக்கசைத்த பரமா பழைய னூர்மேய
ஐயா ஆலங் காடாஉன் அடியார்க் கடியேன் ஆவேனே. 2

தூண்டா விளக்கின் நற்சோதீ தொழுவார் தங்கள் துயர்தீர்ப்பாய்
பூண்டாய் எலும்மைப்புர மூன்றும்பொடியாச் செற்றபுண்ணியனே
பாண்டாழ் வினைக ளவைதீர்க்கும் பரமா பழைய னூர்மேய
ஆண்டாஆலங் காடாஉன் அடியார்க்கடியேன் ஆவேனே. 3

மறிநேர் ஒண்கண் மடநல்லார் வலையிற் பட்டு மதிமயங்கி
அறிவே அழிந்தேன் ஐயாநான் மையார் கண்டமுடையானே
பறியா வினைக ளவைதீர்க்கும் பரமா பழைய னூர்மேய
அறிவே ஆலங் காடாஉன் அடியார்க் கடியேன் ஆவேனே. 4

வேலங்காடு தடங்கண்ணூர் வலையுட் பட்டுன் நெறிமறந்து
மாலங்காடி மறந்தொழிந்தேன் மணியே முத்தேமரகதமே
பாலங்காடு நெய்யாடு படர்புன் சடையார் பழையனூர்
ஆலங்காடா உன்னுடைய அடியார்க் கடியேன் ஆவேனே. 5

எண்ணூர் தங்கள் எயில்எய்த எந்தாய் எந்தை பெருமானே
கண்ணுய் உலகங் காக்கின்ற கருத்தாம் திருத்த லாகாதாய்
பண்ணுரிசைகளை கொண்டு பலரும் ஏத்தும் பழையனூர்
அண்ணுஆலங் காடாஉன் அடியார்க்கடியேன் ஆவேனே. 6

வண்டார் குழலி உமைநங்கை பங்கா கங்கை மணவாளா
விண்டார் புரங்கள் எரிசெய்த விடையாய் வேதநெறியானே
பண்டாழ்வினைகள் பலதீர்க்கும் பரமா பழைய னூர்மேய
அண்டா ஆலங்காடாஉன் அடியார்க் கடியேன் ஆவேனே. 7

பேழ்வா யரவி னணையானும் பெரிய மலர்மே லுறைவானும்
தாழா துன்றன் சரண்பணியத் தழலாய் நின்ற தத்துவனே
பாழாம் வினைக ளவைதீர்க்கும் பரமா பழைய னூர்தன்னை
ஆள்வாய் ஆலங்காடாஉன் அடியார்க் கடியேன் ஆவேனே. 8

எம்மான் எந்தை மூத்தப்பன் ஏழேழ் படிகால் எமையாண்ட
பெம்மான் ஈமப் புறங்காட்டிற் பேயோ டாடல் புரிவானே
பன்மா மலர்க ளவைகொண்டு பலரும் ஏத்தும் பழையனூர்
அம்மா ஆலங் காடாஉன் அடியார்க் கடியேன் ஆவேனே. 9

பத்தர் சித்தர் பலர்ஏத்தும் பரமன் பழைய னூர்மேய
அத்தன் ஆலங் காடன்றன் அடிமைத் திறமே அன்பாகிச்
சித்தர்சித்தம் வைத்தபுகழ்ச் சிறுவன் ஊரன்ஒண்தமிழ்கள்
பத்தும்பாடி ஆடுவார்பரமன் அடியே பணிவாரே. 10

திருச்சிற்றம்பலம்

தேனிலவு பொழிற்கச்சித் திருக்காமக் கோட்டத்தில்
ஊனில்வளர் உயிர்க்கெல்லாம் ஒழியாத கருணையினல்
ஆனதிரு அறம்புரக்கும் அம்மைதிருக் கோயிலின்முன்
வானில்வளர் திருவாயில் வணங்கினார் வன்றொண்டர்.

தேன்வண்டுகள் உலவிடும் சோலையுடைய காஞ்சி நகரில் திருக்காமக் கோட்டத்தில் ஊனில் வளரும் உயிர்க்கெல்லாம் ஒழியாத கருணையினல் ஆன திரு அறத்தினைப் புரிந்தாளும் எம்பெருமாட்டியின் திருக்கோயிலின் முன்பாக வான் நோக்கி வளரும் திருவாயிலினை வணங்கினார் எம்பிரான் சுந்தர மூர்த்தி சுவாமிகள். 284

தொழுதுவிழுந் தெழுந்தருளால் துதித்துப்போய்த் தொல்லுலகம்
முழுதும்அளித் தழித்நாக்கும் முதல்வர் திரு ஏகம்பம்
பழுதில்அடி யார்முன்பு புகப்புக்குப் பணிகின்றார்
''இழுதையேன் திருமுன்பே என்மொழிவேன்'' என்றிறைஞ்சி.

எம்பெருமாட்டி கோவிலின் திருமுன்பு அம்மையைத் தொழுது விழுந்து எழுந்து அருளாள் துதித்து அப்பால் போய் முன்னை இவ்வுலகம் முழுதும் காத்தும் படைத்தும் அழித்தும் வீரையாடும் முதல்வன் சிவனுடைய திருவேகம்பம் என்னும் தலத்து பழுதிலாத அடியார் முன் செல்ல தாம் பின்னைப் புகுந்து எந் பெருமானைப் பணிகின்றார் ''பேய்போலானேன் ஐயா! தேவரீர் திருமுன்பு என்மொழிவேன்'' என மொழிந்து வணங்கியருளி. 285

''விண்ணுள்வார் அமுதுண்ண மிக்கபெரு விடமுண்ட
கண்ணுளா! கச்சிஏ கம்பனே! கடையானேன்
எண்ணுத பிழைபொறுத்நிங் கியான்காண எழிற்பவள
வண்ணு! கண்ணளித்தருளாய் எனவீழ்ந்து வணங்கினார்.

தேவ உலகங்கள் எல்லாம் ஆள்கின்ற தேவர்கள் அமுது உண்டு இறைவாநிருப்ப மிக்கபெரு நஞ்சுண்ட கருணையாளா! கச்சிஏகம்பம் உறைவானே! கடைப்பட்ட நாயேன் நினைந்து செய்யாத பிழை பொறுத்து இங்த யான்காண எழில் திகழும் பவள வண்ணு கண் தந்தருள்வாய்! எனவேண்டி. வீழ்ந்து வணங்கினார். 286

பங்கயச்செங் கைத்தளிரால் பனிமலர்கொண் டருச் சித்துச்
செங்கயற்கண் மலைவல்லி பணிந்தசே வடி நிணைந்து
பொங்கியஅன் பொடுபரவிப் போற்றிய ஆரூரருக்கு
மங்கைதழு வக்குழைந்தார் மறைந்தஇடக் கண் கொடுத்தார்.

தாமரை மலர் போலும் திவ்விய செங்கைத் தளிரால் எடுத்து குளிர்ந்த மலர் கொண்டு அர்ச்சித்து சிவந்த கயல் மீன ஒத்த கண்ணுடைய மலைக்கொடியாம் உமையம்மை பணிந்த திவ்விய சேவடிகளை மிகவும் நினைந்து பொங்கிடும் அன்புடன் வணங்கிப் போற்றிடும சுந்தர மூர்த்தி சுவாமிகட்கு எம்பிராட்டி தழுவிடக் குழைந்து காட்டிய பகவான் மறைந்த கண்களில் இடக் கண் பார்வை பெறும் படி கொடுத்தார். 287

ஞாலந்தான் இடந்தவனும் நளிர்விசும்பு கடந்தவனும்
மூலந்தான் அறிவரியார் கண்ணளித்து முலைச்சுவட்டுக்
கோலந்தான் காட்டுதலுங் குறுகிவிழுந் தெழுந்துகளித்(து)
''ஆலந்தான் உகந்தவன்''என் றெடுத்தாடிப் பாடினார்.

இப் பூமியைப் பன்றியாய் கீண்டிய திருமாலும் அழகிய வானத்தை கடந்து சென்றபிரமனும் இன்னமுமே திருவடியும் முடியுமாய மூலத்தினை அறிய முடியாத பரம்பொருளானவர் இடக்கண் கொடுத்து; எம்பிராட்டியின் முலைச்சுவடு அணிந்த கோலத்தைக் காண்பித்தலும் எம்பிராணை சமீபித்து விழுந்து எழுந்து மனம்மகிழ்ந்து; ஆலந்தான் உகந்தவன் என்று பாட எடுத்து ஆடிப்பாடியருளினார். 288 இடக்கண் பெற்று எம்பெருமானை அவர் கண்டு தொழுது மகிழ்ந்தாடிய அப்பதிகம் இதுவாகும்.

திருக்கச்சி ஏகம்பம்
பண் — தக்கேசி
திருச்சிற்றம்பலம்

ஆலந்தான்உகந் தமுதுசெய் தானை ஆதியைஅம ரர்தொழு தேத்தும்
சீலந் தான்பெரி தும்முடை யானைச் சிந்திப் பாரவர் சிந்தையு ளானை
ஏல வார்குழ லாள்உமை நங்கை என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
கால காலனைக் கம்பனை மானைக் காணக் கண்அடி யேன்பெற்ற வாறே. 1

உற்ற வர்க்குத வும்பெருமானை ஊர்வதொன்றுடை யான்உம்பர் கோனைப்
பற்றினர்க்கென்றும் பற்றவன் றன்னைப் பாவிப் பார்மனம் பாவிக்கொண் டானை
அற்றமில்புக ழாள்உமை நங்கை ஆதரித்து வழிபட்டப் பெற்ற
சுற்றை வார்சடைக் கம்பனை மானைக் காணக் கண்அடி யேன்பெற்ற வாறே. 2

திரியும் முப்புரம் தீப்பிழம் பாகச் செங்கண் மால்விடை மேற்றிகழ் வானைக்
கரியின் ஈருரி போர்த்துகந் தானைக் காம னைக்கன லாவிழித் தானை
வரிகொள் வெள்வளை யாள்உமை நங்கை மருவி ஏத்தி வழிபடப் பெற்ற
பெரிய கம்பனை எங்கள்பி ரானைக் காணக் கண்அடி யேன்பெற்ற வாறே. 3

குண்ட லந்திகழ் காதுடை யானைக் கூற்று தைத்த கொடுந்தொழி லானை
வண்ட லம்புமலர்க் கொன்றையி னானை வாள ராமதி சேர்சடை யானைக்
கெண்டை யந்தடங் கண்ணுமை நங்கை கெழுமி ஏத்தி வழிபடப் பெற்ற
கண்ட நஞ்சுடைக் கம்பனெம் மானைக் காணக் கண்அடி யேன்பெற்ற வாறே. 4

வெல்லும் வெண்மழு ஒன்றுடை யானை வேலை நஞ்சுண்ட வித்தகன் றன்னை
அல்லல் தீர்த்தருள் செய்யவல் லானை அரும றையவை அங்கம்வல் லானை
எல்லி யில்புக ழாள்உமை நங்கை என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
நல்ல கம்பனை எங்கள்பி ரானைக் காணக் கண்அடி யேன்பெற்ற வாறே. 5

திங்கள் தங்கிய சடையுடை யானைத் தேவதேவனைச் செழுங்கடல் வளரும்
சங்க வெண்குழைக் காதுடை யானைச் சாம வேதம் பெரிதுகப் பானை
மங்கை நங்கை மலைமகள் கண்டு மாலவி ஏத்தி வழிபடப் பெற்ற
கங்கை யாளனைக் கம்பனெம் மானைக் காணக் கண்அடி யேன்பெற்ற வாறே. 6

விண்ண வர்தொழு தேத்தநின் றானை வேதந் தான்விரித் தோதவல் லானை
நண்ணி ரைக்கென்றும் நல்லவன் றன்னை நாளும் நாம்உகக் கின்றபி ரானை
எண்ணில் தொல்புக ழாள்உமை நங்கை என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
கண்ணும் மூன்றுடைக் கம்பனெம் மானைக் காணக் கண்அடி யேன்பெற்ற வாறே. 7

சிந்தித் தென்றும் நினைந்தெழு வார்கள் சிந்தை யில்திக ழுஞ்சிவன் றன்னைப்
பந்தித் தவினைப் பற்றறுப் பானைப் பாலொ டானஞ்சும் ஆட்டுகந் தானை
அந்தமில்புக ழாள்உமை நங்கை ஆதரித்து வழிபடப் பெற்ற
கந்த வார்சடைக் கம்பன்எம் மானைக் காணக் கண்அடி யேன்பெற்ற வாறே. 8

வரங்கள் பெற்றழல் வாளரக் கர்தம் வாலி யபரம் மூன்றெரித் தானை
நிரம்பிய தக்கன் றன்பெரு வேள்வி நீரந்த ரஞ்செய்த நீட்கண் டகனை
பரந்த தொல்புக ழாள்உமை நங்கை பரவி ஏத்தி வழிபடப் பெற்ற
கரங்கள் எட்டுடைக் கம்பன்எம் மானைக் காணக் கண்அடி யேன்பெற்ற வாறே. 9

எள்கல் இன்றிஇமையவர் கோனை ஈசனைவழி பாடுசெய் வாள்போல்
உள்ளத் துள்கி உகந்துமை நங்கை வழிபடச் சென்று நின்றவா கண்டு
வெள்ளங்காட்டி வெருட்டிட அஞ்சி வெருவி ஓடித் தழுவ வெளிப்பட்ட
கள்ளக்கம்பனை எங்கள் பிரானைக் காணக் கண்அடி யேன்பெற்ற வாறே. 10

பெற்றம் ஏறுகந் தேறவல் லானைப் பெரிய எம்பெரு மான்என்றெப் போதும்
கற்ற வர்பர வப்படு வானைக் காணக் கண்அடி யேன்பெற்ற தென்று
கொற்ற வன்கர்ப்பன் கூத்தன்எம் மானைக் குளிர்பொ ழில்திரு நாவலா ரூரன்
நற்றமிழ் இவைஈ ரைந்தும் வல்லார் நன்னெ றிஉல கெய்துவர் தாமே. 11

திருச்சிற்றம்பலம்

பாடிமிகப் பரவசமாய்ப் பணிந்தார்க்குப் பாவையுடன்
நீடியகோ லங்காட்ட நிறைந்தவிருப் புடன் இறைஞ்சிச்
சூடியஅஞ் சலியினராய்த் தொழுதுபுறம் போந்தன்பு
கூடியமெய்த் தொண்டருடன் கும்பிட்டங் கினிதமர்வார்.

திருப்பதிகம் பாடி மிகவும் பரவசமாகி பணிகின்ற சுந்தரமூர்த்திசுவாமிகட்கு உமையம்மையாருடன் நீளப்பொருந்தியிருக்கும் திருக்கோலம் காண்பித்திட காம் கண்டு நிறைகின்ற விருப்பத்துடன் பணிந்து உச்சிகூடிய அஞ்சலியினராய்த் தொழுது வெளியே வந்து; அன்புகூடிய மெய்யடியாருடன் கும்பிட்டு அங்கு காஞ்சியில் இனிதே தங்கியிருப்பார். 298

மாமலையாள் முலைச்சுவடும் வளைத்தழும்பும் அணிந்தமதிப்
பூமலிவார் சடையாரைப் போற்றி அருளதுவாகத்
தேமலர்வார் பொழிற்காஞ்சித் திருநகரங் கடந்தகல்வார்
பாமலர்மா லைப்பதிகம் திருவாரூர் மேற்பரவி.

பெரிய இயம மலையில் தோன்றிய உமையம்மை யாரின் முலைச்சுவடும் வளைய ல்களின் தழும்பும் அணிந்த இளம்பிறை சூடிய கொன்றைப் பூமலிந்த சடையுடை ய பெருமானைப் போற்றிசெய்து; தமக்கு இடக்கண் பெற்ற அருள் அதுவேயாகக் கொண்டு; தேன் சிறந்த மலர் பெருகும் சோலையுடைய காஞ்சித்திரு நகரம் கடந் து அகன்று போகும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடல்கள் மலரும் திருப்பதிகம் திருவாரூர் மேலாகப் பாடி போற்றி செய்து; 290

"அந்தியும்நண் பகலும்" என எடுத்தார்வத் துடன் நசையால்
"எந்தைபிரான் திருவாரூர் என்றுகொல்எய்துவ" தென்று
சந்தஇசை பாடிப்போய்த் தாங்கரிய ஆதரவு
வந்தணைய அன்பருடன் மகிழ்ந்துவழிக் கொள்கின்றார்.

அந்தியும் நண்பகலும் எனப்பாட எடுத்து உள்ளத்து திருவாரூர் போகவே ண்டும் என்னும் ஆர்வத்துடன்; ஆனால் அங்கு போகமுடியாதபடி உடல் மேல் பற் றிக் கொண்ட நோய் காரணமான தளர்ச்சியால் எந்தை பெருமான் திருவாரூர் என்று போய்ச் சேர்வது என்று சந்தம் உடைய இசையினைப் பாடிப்போய்த் தாங்கி டற்கரிய ஆதரவு திருவாரூர் அப்பன் மேல் வந்துசேர அன்பருடன் மகிழ்ந்து வ ழிக்கொள் கின்றார் சுந்தரமூர்த்திசுவாமிகள். 291

அவர் திருவாரூர் மேற்செல்ல எழுந்த ஆவல் மிகுதியையும் தமது தளர்ச்சியை யும் எடுத்து மொழியும் திருப்பதிகம் இதுவாகும்.

பண்—புறநீர்மை

திருச்சிற்றம்பலம்

அந்தியும் நண்பகலும் அஞ்சுப தஞ்சொல்லி
முந்தி எழும்பழைய வல்வினை மூடாமுன்
சிந்தை பராமரியாத் தென்திரு வாரூர்புக் (கு)
எந்தை பிரானரை என்றுகொல் எய்துவதே. 1

நின்ற வினைக்கொடுமை நீங்க இருபொழுதும்
துன்று மலர்இட்டுச் சூழும் வலஞ்செய்து
தென்றல் மணங்கமழும் தென்திரு வாரூர்புக் (கு)
என்றன் மனங்குளிர என்றுகொல் எய்துவதே. 2

முன்னை முதற்பிறவி மூதறி யாமையினால்
பின்னை நினைந்தனவும் பேதுற வும்மொழியச்
செந்நெல் வயற்கழனித் தென்திரு வாரூர்புக் (கு)
என்னுயிர்க் கின்னமுதை என்றுகொல் எய்துவதே. 3

நல்ல நினைப்பொழிய நாள்களில் ஆருயிரைக்
கொல்ல நினைப்பனவுங் குற்றமும் அற்றொழியச்
செல்வ வயற்கழனித் தென்திரு வாரூர்புக் (கு)
எல்லை மிதித்தடியேன் என்றுகொல் எய்துவதே. 4

கடுவரி மாக்கடலுட் காய்ந்தவன் தாதையைமுன்
சுடுபொடி மெய்க்கணிந்த சோதியை வன்தலைவாய்
அடுபுலி ஆடையனை ஆதியை ஆரூர்புக் (கு)
இடுபலி கொள்ளியைநான் என்றுகொல் எய்துவதே. 5

சூழ்ஒளி நீர்நிலந்தித் தாழ் வளி ஆகாசம்
வானுயர் வெங்கதிரோன் வண்தமிழ் வல்லவர்கள்
ஏழிசை எழ்நரம்பின் ஓசையை ஆரூர்புக் (கு)
ஏழுல காளியைநான் என்றுகொல் எய்துவதே. 6

கொம்பன நுண்ணிடையாள் கூறனை நீறணிந்த
வம்பனை எய்வுயிர்க்கும் வைப்பினை ஒப்பமராச்
செம்பொனை நன்மணியைத் தென்திரு ஆரூர்புக் (கு)
என்பொனை என்மணியை என்றுகொல் எய்துவதே. 7

ஆறணி நீள்முடிமேல் ஆடர வஞ்சூடிப்
பாறணி வெண்தலையிற் பிச்சைகொள் நச்சரவன்
சேறணி தண்கழனித் தென்திரு வாரூர்புக் (கு)
ஏறணி எம்மிறையை என்றுகொல் எய்துவதே. 8

மண்ணினை உண்டுமிழ்ந்த மாயனும் மாமலர்மேல்
அண்ணலும் நண்ணரிய ஆதியை மாநிலைஞும்
திண்ணிய மாமதில்சூழ் தென்திரு வாரூர்புக் (கு)
எண்ணிய கண்குளிர என்றுகொல் எய்துவதே. 9

மின்னெடுஞ் செஞ்சடையான் மேவிய ஆரூரை
நன்னெடுங் காதன்மையால் நாவலர் கோன்ஊரன்
பன்னெடுஞ் சொல்மலர்கொண் டட்டின பத்தும்வல்லார்
பொன்னுடை விண்ணுலகம் நண்ணுவர் புண்ணியரே. 10

திருச்சிற்றம்பலம்

மன்னுதிருப் பதிகள்தொறும் வன்னியொடு கூவிளமும்
சென்னிமிசை வைத்துலந்தார் கோயிலின்முன் சென்றிறைஞ்சிப்
பன்னுதமிழ்த் தொடைசாத்திப் பரவியே போந்தணைந்தார்
அன்னமலி வயல்தடங்கள் சூழ்ந்ததிரு ஆமாத்தூர்.

தாம் திருவாரூர் செல்லும் மார்க்கத்தில் விளங்கும் திருப்பதிகள் தோறும் வன்னியுடன் வில்வமும் சடைமீது வைத்து மகிழ்ந்த பெருமானுரது கோயிலின் முன்பாகச் சென்று வணங்கி தாம் பாடும் செந்தமிழ் பாமாலை சாத்தி வணங்கியே வந்து சேர்ந்தார் அன்னப்பறவைகள் மலிந்து காணப்படும் வயல்களும் குளங்களும் சூழ்ந்த திருஆமத்தூர் என்றதலத்தினை 292

அங்கணரை ஆமாத்தூர் அழகர்தமை அடிவணங்கித்
தங்கும்இசைத் திருப்பதிகம் பாடிப்போய்த் தாரணிக்கு
மங்கலமாம் பெருந்தொண்டை வளநாடு கடந்தணைந்தார்
செங்கல்வள வன்பிறந்த சீர்நாடு நீர்நாடு.

அங்கு சென்று திருஆமத்தூரில் வாழ்கின்ற அழகிய பெருமானைத் திருவடி வணங்கி இசை தங்கிடும் திருப்பதிகம் பாடி அப்பால் போய் இப்பூமிக்கு மங்கலமாய பெரும் தொண்டை நாடு என்னும் வளமுடைய நாட்டினைக் கடந்து சேர்ந்தார் செங்கண்உடைய சோழ அரசன் பிறந்த சீர்நாடாய நீர் வளமுடைய சோழ நாட்டின் இடத்தாக; 298
அவர் திருஆமத்தூர் என்னும் தலத்திடை அழகே பொருந்திய கோலமான எம் பெருமானை மிகுபத்திமையுடன் பாடின திருப்பதிகம் இதுவாகும்.

திருவாமாத்தூர்

பண்—கொல்லிக்கௌவாணம்

திருச்சிற்றம்பலம்

காண்டனன் காண்டனன் காரிகை யாள்தன் கருத்தனுய்
ஆண்டனன் ஆண்டனன் ஆமாத் தூர்எம் அடிகட்காட்
பூண்டனன் பூண்டனன் பொய்யன்று சொல்லுவன் கேண்மின்கள்
மீண்டனன் மீண்டனன் வேதவித் தல்லா தவர்கட்கே. 1

பாடுவன் பாடுவன் பார்ப்பதி தன்னடி பற்றிநான்
தேடுவன் தேடுவன் திண்ணெனப் பற்றிச் செறிதர
ஆடுவன் ஆடுவன் ஆமாத் தூர்எம் அடிகளைக்
கூடுவன் கூடுவன் குற்றம தற்றென் குறிப்பொடே. 2

காய்ந்தவன் காய்ந்தவன் கண்ணழ லால்அன்று காமனைப்
பாய்ந்தவன் பாய்ந்தவன் பாதத்தினுல் அன்றுகூற்றத்தை
ஆய்ந்தவன் ஆய்ந்தவன் ஆமாத் தூர்எம் அடிகளார்
ஏய்ந்தவன் ஏய்ந்தவன் எம்பி ராட்டியைப் பாகமே. 3

ஓர்ந்தனன் ஓர்ந்தனன் உள்ளத்துள் ளேநின்ற ஓண்பொருள்
சேர்ந்தனன் சேர்ந்தனன் சென்று திருவொற்றி யூர்புக்குச்
சார்ந்தனன் சார்ந்தனன் சங்கிலி மென்றோள் தடமுலை
ஆர்ந்தனன் ஆர்ந்தனன் ஆமாத் தூர்ஐயன் அருளதே. 4

வென்றவன் வென்றவன் வேள்வியில் விண்ணவர் தங்கோச்
சென்றவன் சென்றவன் சிற்பலித் தென்று தெருவிடை
நின்றவன் நின்றவன் நீதி நிறைந்தவர் தங்கள்பால்
அன்றவன் அன்றவன் செய்யருள் ஆமாத்தூர் ஐயனே; 5

காண்டவன் காண்டவன் காண்டற் கரிய கடவுளாய்
நீண்டவன் நீண்டவன் நாரணன் நான்முகன் நேடவே
ஆண்டவன் ஆண்டவன் ஆமாத் தூரையும் எனையும்ஆட்
பூண்டவன் பூண்டவன் மார்பிற் புரிநூல் புரளவே. 6

எண்ணவன் எண்ணவன் ஏழுல கத்துயிர் தங்கட்குக்
கண்ணவன் கண்ணவன் காண்டும்என் பாரவர் தங்கட்குப்
பெண்ணவன் பெண்ணவன் மேனியோர் பாகமாம்பிஞ்ஞகன்
அண்ணவன் அண்ணவன் ஆமாத் தூர்எம் அடிகளே. 7

பொன்னவன் பொன்னவன் பொன்னேத் தந்தென்னைப் போகவிடா
மின்னவன் மின்னவன் வேதத்தினுட் பொருளாகிய
அன்னவன் அன்னவன் ஆமாத்தூர் ஐயனே ஆர்வத்தால்
என்னவன் என்னவன் என்மனத் தின்புற் றிருப்பனே. 8

தேடுவன் தேடுவன் செம்மலர்ப் பாதங்கள் நாடொறும்
நாடுவன் நாடுவன் நாபிக்கு மேலேயோர் நால்விரல்
மாடுவன் மாடுவன் வன்கை பிடித்து மகிழ்ந்துளே
ஆடுவன் ஆடுவன் ஆமாத் தூர்எம் அடிகளே. 9

உற்றனன் உற்றவர் தம்மை ஒழிந்துள்ளத் துள்பொருள்
பற்றினன் பற்றினன் பங்கயச் சேவடிக் கேசெல்ல
அற்றனன் அற்றனன் ஆமாத்தூர் மேயா னடியார்கட்காள்
பெற்றனன் பெற்றனன் பெயர்த்தும்பெயர்த்தும் பிறவாமைக்கே. 10

ஐயனே அத்தனே ஆரூடை ஆமாத்தூர் அண்ணலே
மெய்யனே மெய்யர்க்கு மெய்ப்பொரு ளான விமலனே
மையனே மையணி கண்டனே வன்றொண்டன் ஊரன்சொல்
பொய்யொன்று மின்றிப் புலம்புவார் பொற்கழல் சேர்வரே.

திருச்சிற்றம்பலம்

அந்நாட்டின் மருங்குதிரு அரத்துறையைச் சென் றெய்தி
மின்னுரும் படைமழுவார் விரைமலர்த்தாள் பணிந்தெழுந்து
சொன்மாலே மலர்க்''கல்வாய் அகில்''என்னுந் தொடைசாத்தி
மன்னுர்வத் திருத்தொண்டருடன் மகிழ்ந்து வைகினர்.

அந்த சோழநாட்டின் அருகே விளங்கிய திருஅரத்துறை என்னும் கோவிலைச் சென்று சேர்ந்து; மின்ஒளி வீசிடும் மழுப்படைஉடைய பெருமானின் வாசமுடைய மலர்பாதம் பணிந்து எழுந்து சொல்லாக மலரும் மாலையாகும் திருப்பதிகம் ''கல்வாய் அகில்'' எனத்தொடங்கிடும் பாமாலை பாடிச் சாத்தி மேலான ஆர்வமுடைய திருத்தொண்டருடன் மகிழ்ந்திருந்தார். 294
திருஅரத்துறையில் வீற்றிருந்த கருணையே வடிவான ஈசனை அவர் பாடிய திருப்பதிகம் இதுவாகும். இங்குள்ளபெருமானே சம்பந்த சுவாமிகட்கு முத்துச்சிவிகை கொடுத்தருளியவர்'

திருநெல்வாயில் அரத்துறை

பண் – இந்தளம்

திருச்சிற்றம்பலம்

கல்வாய் அகி லும்கதிர் மாமணி கலந்துந்தி வருந்திவ வின்கரைமேல்
நெல்வாயில் அரத்துறை நீடுறையும் நிலவெண்மதி சூடிய நின்மலனே
நல்வாயில்செய் தார்நடந் தார்உடுத்தார் நரைத்தார்இறந் தார்என்று நாவிலத்தில்
சொல்லாய்க் கழிகின்ற தறிந்தடியேன் தொடர்ந்தேன் உய்யப் போவதோர்சூழல்
[சொல்லே.

கறிமாமிள கும்மிகு வன்மரமும் மிகஉந்தி வருந்திவ வின்கரைமேல்
நெறிவார்குழலா ரவர்காண நடஞ்செய் நெல்வாயில் அரத்துறை நின்மலனே
வறிதேநில் லாதஇம் மண்ணுலகில் நரனாக வருத்தினை நானிலையேன்
பொறிவாயில்இவ் வைந்தினை யுமவியப் பொருதுன்னடி யேபுகுஞ் சூழல்சொல்லே. 2

புற்றுடர வம்மரை ஆர்த்துகந்தாய் புனிதாபொரு வெள்விடை ஊர்தியினுய்
எற்றேஒரு கண்ணிலன் நின்னையல்லால் நெல்வாயில் அரத்துறை நின்மலனே
மற்றேல்ஒரு பற்றிலன் எம்பெருமான் வண்டார்குழ லாள்மங்கை பங்கினனே
அற்றூர்பிற விக்கடல் நீந்திஏறி அடியேன்உய்யப் போவதோர் சூழல்சொல்லே. 3

கோடுயர் கோங்கலர் வேங்கைஅலர் மிகஉந்தி வருந்நிவ வின்கரைமேல்
நீடுயர் சோலைநெல் வாயில்அரத் துறைநின்மல னேநீவார் மனத்தாய்
ஓடுபுனற்கரை யாம்இளமை உறங்கிவிழித் தால்ஒக்கும் இப்பிறவி
வாடி இருந்து வருந்தல்செய்யா தடியேன்உய்யப் போவதோர் சூழல்சொல்லே. 4

உலவும்முகி லிற்றலை சுற்பொழிய உயர்வேயொ டிழிநிவ வின்கரைமேல்
நிலவும்மயி லாரவர் தாம்பயிலும் நெல்வாயில் அரத்துறை நின்மலனே
புலன்ஐந்தும் மயங்கி அகங்குழையப் பொருவேலோர் நமன்தமர் தாம்நலிய
அலமந்து மயங்கி அயர்வதன்முன் அடியேன்உய்யப் போவதோர் சூழல்சொல்லே. 5

எலம்மில வங்கம் எழிற்கனகம் மிகஉந்தி வருந்நிவ வின்கரைமேல்
நீலம்மலர்ப் பொய்கையில் அன்னம்மலி நெல்வாயில் அரத்துறை யாய்ஒருநெல்
வால்ஊன்ற வருந்தும் உடம்பிதனே மகிழாதழகாவலந் தேன்இனியான்
ஆலந்நிழ லில்அமர்ந் தாய்அமரா அடியேன்உய்யப் போவதோர் சூழல்சொல்லே. 6

கெரம்முகக் கில்நிர லார்அகிலும் மிகஉந்தி வருந்நிவ வின்கரைமேல்
நிகரில்மயி லாரவர் தாம்பயிலுந் நெல்வாயில் அரத்துறை நின்மலனே
மகரக்குழை யாய்மணக் கோலமதே பிணக்கோலம தாம்பிற வித்துதான்
அகரம்முத லின்எழுத் தாகிநின்றாய் அடியேன் உய்யப் போவதோர் சூழல்சொல்லே. 7

திண்டேர்நெடு வீதிஇ லங்கையர்கோன் தரள்தோள்இரு பஃதும் நெரித்தருளி
ஞெண்டாடு நெடுவயல் சூழ்புறவின் நெல்வாயில் அரத்துறை நின்மலனே
பண்டேமிக நான்செய்த பாக்கியத்தாற் பரஞ்சோதி நின்நாமம் பயிலப்பெற்றேன்
அண்டாவம ரர்க்கம ரர்பெருமான் அடியேன்உய்யப் போவதோர் சூழல்சொல்லே. 8

மாணுரு வாகியொர் மண்ணளந்தான் மலர்மேலவன் நேடியும் காண்பரியாய்
நீணீள்முடி வானவர் வந்திறைஞ்சுந் நெல்வாயில் அரத்துறை நின்மலனே
வாணுர்நுத லார்வலைப் பட்டடியேன் பலவின்கனி வீந்தது போல்வதன்முன்
ஆணுடுபெண் ணும்உரு வாகிநின்றாய் அடியேன்உய்யப் போவதோர் சூழல்சொல்லே

நீரூநும் நெடுவயல் சூழ்புறவின் நெல்வாயில் அரத்துறை நின்மலனைத்
தேரூர்நெடு வீதிநன் மாடமலி தென்நாவலர் கோன்அடித் தொண்டன்அணி
ஆரூரன் உரைத்தன நற்றமிழின் மிகுமாலையொர் பத்திவை கற்றுவல்லார்
காரூர்கலி வண்டறை யாணைமன்ன ரவராகியொர் விண்முழு தாள்பவரே, 10

திருச்சிற்றம்பலம்

பரமர்திரு அரத்துறையைப் பணிந்துபோய்ப் பலபதிகள்
விரவிமழவிடை உயர்த்தார் விரைமலர்த்தாள் தொழுதேத்தி
உரவுநீர்த் தடம்பொன்னி அடைந்தன்ப ருடன்ஆடி
அரவணிந்தார் அமர்ந்ததிருவாவடுதண்டுறை அணைந்தார்.

ஈசனுடைய திருவரத்துறை என்னும் தலத்தைப் பணிந்து அப்பால் போய் பல தலங்களில் சேர்ந்து அங்கங்கு தருமதேவதையாய இடபத்தைக் கொடியாக உயர்த்திக் கொண்ட சிவபெருமானது வாசமுடைய மலர்ப்பாதம் தொழுதுபோற்றி! வலிமையுடன் பாயும் நீருடைய குளிர்ந்த காவிரியாற்றைச் சேர்ந்து; அன்பருடன் அதில் நீராடி எழுந்து அப்பால் சென்று பாம்பணிந்த பரமேசுவரன் அமர்ந்த திருஆவடு தன்டுறை என்னும் தலத்தை அணைந்தார். 295

அங்கணவார் தமைஅடியார் எதிர்கொள்ளப் புக்கருளிப்,
பொங்குதிருக் கோயிலினைப் புடைவலங்கொண் டுள்ளணைந்து,
கங்கைவாழ் சடையாய்! ஓர் கண்ணிலேன் எனக்கவல்வார்,
இங்கெனக்கார்உற(வு) என்னுந் திருப்பதிகம் எடுத்திசைத்தார்.

அங்கு திருஆவடுதுறை சேர்கின்ற சுந்தரமூர்த்தி சுவாமிகள் தம்மை அடியார்கள் வந்து எதிர்கொண்டிட உள்ளே புகுந்தருளி பொங்கும் அருளின் சிறப்புடைய அந்த திருக்கோயிலினை பக்கராக வலம் கொண்டு வந்து உள்ளே சென்று; எம்பிரானை நினைந்து ''கங்கைவார் சடையாய் ஓர் கண்ணிலேன்''எனக்கவலைப்படுவார்''என் ஐயா நீயன்றி வேறு இங்கு எனக்கு ஆர் உறவு''என்று சிறந்த ஒரு திருப்பதிகம் எடுத்து பாடியருளினர். 296

அவர் பாடிய அப்பதிகம் இதுவாகும் அப்பதிகத்திடையாக கண்ணில்லாத கவலையும் நோயின் வேதனையும் தெரிவித்தபடி காண்க.

பண் — தக்கேசி

திருச்சிற்றம்பலம்

கங்கை வார்சடை யாய்கண நாதா கால காலனே காமனுக் கனலே
பொங்கு மாகடல் விடமிடற் றுனே பூத நாதனே புண்ணியா புனிதா
செங்கண் மால்விடை யாய்தெளி தேனே தீர்த்த னேதிரு வாவடு துறையுள்
அங்கணனே அஞ்சல்என் றருளாய் ஆர்எ னக்குற வமரர்கள் ஏறே. 1

மண்ணின் மேல்மயங் கிக்கிடப் பேனை வலிய வந்தெனை ஆண்டுகொண் டானே
கண்ணி லேன்உடம் பில்லடு நோயாற் கருத்த ழிந்துனக் கேபொறை ஆனேன்
தெண்ணி லாஎறிக் குஞ்சடை யானே தேவ னேதிரு வாவடு துறையுள்
அண்ண லேயெனை அஞ்சல்என் றருளாய் ஆர்எ னக்குற வமரர்கள் ஏறே 2

ஒப்பி லாமுலை யாள்ஒரு பாகா உத்த மாமத்தம் ஆர்தரு சடையாய்
முப்பு ரங்களைத் தீவளைத் தங்கே மூவ ருக்கருள் செய்ய வல்லானே
செப்ப ஆல்நிழற் கிழிருந் தருளுஞ் செல்வ னேதிரு வாவடு துறையுள்
அப்ப னேயெனை அஞ்சலென் றருளாய் ஆர்எ னக்குற வமரர்கள் ஏறே. 3

கொதியி னல்வரு காளிதன் கோபங் குறைய ஆடிய கூத்துடை யானே
மதியி னேனுடம் பில்லடு நோயால் மயங்கி னேன்மணி யேமண வாளா
விதியி னல்இமை யோர்தொழு தேத்துப விக்கிர னேதிரு வாவடு துறையுள்
அதிப னேயெனை அஞ்சலென் றருளாய் ஆர்எ னக்குற வமரர்கள் ஏறே. 4

வந்த வாளரக் கன்வலி தொலைத்து வாழும் நாள்கொடுத் தாய்வழி முதலே
வெந்த வெண்பொடி பூசவல் லானேவேட னாய்விச யற்கருள் புரிந்த
இந்து சேகர னேஇமை யோர்சிர் ஈச னேதிரு வாவடு துறையுள்
அந்த ணனே அஞ்சல்என் றருளாய் ஆர்எ னக்குற வமரர்கள் ஏறே. 5

குறைவி லாநிறை வேகுணக் குன்றே கூத்த னேகுழைக் காதுடை யானே.
உறவி லேன்உனை அன்றிமற் றடியேன் ஒருபி றைபொறுத் தால்இழி வுண்டே
நிறைவண் டார்பொழில் சூழ்திரு வாரூர்ச் செம்பொ னேதிரு வாவடு துறையுள்
அறவ னேயெனை அஞ்சல்என் றருளாய் ஆர்எ னக்குற வமரர்கள் ஏறே. 6

வெய்ய மாகரி ஈருரி யானே வேங்கை ஆடையி னல்விதி முதலே
மெய்ய னேஅடல் ஆழியன் றரிதான் வேண்ட நீகொடுத் தருள்புரி விகிர்தா
செய்ய மேனிய னேசெழும் ஒளியே செங்க ணதிரு வாவடு துறையுள்
ஐய னேயெனை அஞ்சல்என் றருளாய் ஆர்எ னக்குற வமரர்கள் ஏறே. 7

கோதி லாவமு தேஅமு தள் பெருகு கோல மேஇமை யோர்தொழு கோவே
பாதி மாதொரு கூறுடை யானே பசுப தீபர மாபர மேட்டி
நீதி லாமலை யேதிரு வருள்சேர் சேவ காதிரு வாவடு துறையுள்
ஆதி யேயெனை அஞ்சல்என் றருளாய் ஆர்எ னக்குற வமரர்கள் ஏறே. 8

வான நாடனே வழித்துணை மருந்தே மாசி லாமணி யேமறைப் பொருளே
ஏன மாவெயி முமையும் எலும்பும் ஈடு தாங்கிய மார்புடை யானே
தேனெய் பால்தயிர் ஆட்டுகந் தானே தேவ னேதிரு ஆவடு துறையுள்
ஆனை யேயெனை அஞ்சல்என் றருளாய் ஆர்எ னக்குற வமரர்கள் ஏறே. 9

வெண்த லைப்பிறை கொன்றையும் அரவும் வேரி மத்தமும் விரவுமுன் முடித்த
இண்டை மாமலர்ச் செஞ்சடை யானே ஈச னேத்திரு வாவடு துறையுள்
அண்ட வாணைச் சிங்கடி யப்பன் அணுக்க வன்றொண்டன் ஆர்வத்தால் உரைத்த
தண்த மிழ்மலர் பத்தும்வல் லார்கள் சாத லும்பிறப் பும்அறுப் பாரே. 10

திருச்சிற்றம்பலம்

திருப்பதிகங் கொடுபரவிப்பணிந்துதிரு அருளாற்போய்
விருப்பிலெடுந் திருத்துருத்தி தன்மேவி விமலர்கழல்
அருத்தியினற் புக்கிறைஞ்சி அடியேன்மேல் உற்றபிணி
வருத்தம்எனை ஒழித்தருள வேண்டும் என வணங்குவார்.

இந்த திருப்பதிகம் கொண்டு போற்றி செய்து பணிந்து; எம்பிரான் திருவரு ளால் அப்பால் சென்று; விருப்பத்துடன் திருத்துருத்தி என்னும் கோயிலை அடைந்து எம்பிரான் சினது திருவடிகளை அங்கு அன்பினுல் புகுந்து வணங்கி எம் பிரானே! அடியேன் மேல் உற்ற இந்தநோயின் வருத்தத்தினை எல்லாம் எனக்கு நீக்கியருள வேண்டுமென வேண்டி வணங்குவார் சுந்தர மூர்த்தி சுவாமிகள். 297

பரவியே பணிந்தவர்க்குப் பரமர்திரு வருள்புரிவார்
விரவியஇப் பிணி அடையத் தவிர்ப்பதற்கு வேறுக
வரமலர்வண் டறைதீர்த்த வடகுளத்துக் குளி என்னக்
கரவில்திருத் தொண்டர்தாங் கைதொழுது புறப்பட்டார்.

அவ்வாறு வேண்டிப் போற்றியே பணிகின்ற சுந்தர மூர்த்தி சுவாமிகட்கு பரமனுய சிவன் திருவருள் புரிகின்றார் அசரீரியாக "உன்னை வந்து அடைந்து கொ ண்ட பிணி முழுவதும் தீர்த்திடுவதற்கு இக்கோயிலின் அருகே வேறுக விளங்கிய நல்ல மலர்களில்வண்டுகள் மொய்த்துப்பாட விளங்கும் தீர்த்தமாய வடகுளத்து குளிப்பாய் என அருளிட அது கேட்டருளி வஞ்சனை நீங்கிய திருத்தொண்டர் எம் சுந்தர மூர்த்தி சுவாமிகள் எம்பிரானைக் கைதொழுது குளத்திடம் குளித்திட புறப்பட்டுச் சென்றார். 298

மிக்கபுனல் தீர்த்தத்தின் முன் அணைந்து வேதமெலாம்
தொக்கவடி வாயிருந்த துருத்தியார் தமைத்தொழுது
புக்கதனில் மூழ்குதலும் புதியபிணி அதுநீங்கி
அக்கணமே மணியொளிசேர் திருமேனி ஆயினார்.

மிக்க நீருடைய வடகுளத்து தீர்த்தத்தின் முன்னுக சுந்தரமூர்த்தி சுவாமிகள் சென்று: வேதமெலாம் திரண்ட ஒருவடிவாக இருந்த திருத்துருத்தி அமர்ந்த பெருமா னுரைத் தொழுது; குளத்தில் புகுந்து மூழ்குதலும் அந்தக்கணமே அவர் உடம் பில் பற்றிக் கொண்ட புதிய நோய் நீங்கி முத்தின் ஒளியுடைய திருமேனி உடை யராயினார். 299

கண்டவர்கள் அதிசயிப்பக் கரையேறி உடைபுனைந்து
மண்டுபெருங் காதலினுற் கோயிலினை வந்தடைந்து
தொண்டர்எதிர் மின்னுமா மேகம் எனுஞ் சொற்பதிகம்
எண்டிசையும் அறிந்துய்ய ஏழிசையால் எடுத்திசைத்தார்.

இவரது திருவுருவம் கண்டார்கள் அதிசயித்திட கரையேறி; ஆடைஅணிந்து உள்ளத்து பெருகும் காதலினுல் கோயிலினை வந்து சேர்ந்து; அடியார்கள் திருமு ன்பாக நின்று "மின்னுமா மேகம்,, எனத்தொடங்கி எடுத்த திருப்பதிகம் எட்டு த்திக்கில் உள்ளாரும் இறைவனது அற்புதத்தை அறிந்து உய்ய ஏழிசையும் பொருந் த அப்பதிகத்தை எடுத்துப் பாடினார். 300

அவர் உலகறிந்துய்ய பாடிய திருப்பதிகம் இதுவாகும்.

திருத்துருத்தியும் திருவேள்விக்குடியும்

பண்—காந்தாரம்
திருச்சிற்றம்பலம்

மின்னுமா மேகங்கள் பொழிந்திழிந் தருவி
வெடிபடக் கரையொடுந் திரைகொணர்ந் தெற்றும்
அன்னமாங் காவிரி அகன்கரை உறைவார்
அடியினை தொழுதெழும் அன்பரம் அடியார்.

சொன்னவா றறிவார் துருத்தியார் வேள்விக்
குடியுளார் அடிகளைச் செடியனேன் நாயேன்
என்னைநான் மறக்குமா றெம்பெரு மானை
என்னுடம் படும்பிணி இடர்கெடுத் தானை. 1

கூடுமா றுள்ளன கூடியுங் கோத்துங்
கொய்புன ஏனலோ டைவனஞ் சிதறி
மாடுமா கோங்கமே மருதமே பொருது
மலியெனக் குலைகளை மறிக்குமா றுந்தி
ஓடுமா காவிரித் துருத்தியார் வேள்விக்
குடியுளார் அடிகளைச் செடியனேன் நாயேன்
பாடுமா றறிகிலேன் எம்பெ ருமானைப்
பழவினை உள்ளன பற்றறுத் தானை. 2

கொல்லுமால் யானையின் கொம்பொடு வம்பார்
கொழுங்கனிச் செழும்பயன் கொண்டுகூட் டெய்திப்
புல்கியுந் தாழ்ந்தும் போந்து தவஞ்செய்யும்
போகரும் யோகரும் புலரிவாய் மூழ்கச்
செல்லுமா காவிரித் துருத்தியார் வேள்விக்
குடியுளார் அடிகளைச் செடியனேன் நாயேன்
செல்லுமா றறிகிலேன் எம்பெரு மானைத்
தொடர்ந்தடுங் கடும்பிணித் தொடர்வறுத் தானை. 3

பொறியுமா சந்தனத் துண்டமோ டகிலும்
பொழிந்திழித் தருவிகள் புன்புலங் கவரக்
கறியுமா மிளகொடு தினையும் உந்திக்
கடலுற விளைப்பதே கருதித்தன் கைபோய்
எறியுமா காவிரித் துருத்தியார் வேள்விக்
குடியுளார் அடிகளைச் செடியனேன் நாயேன்
அறியுமா றறிகிலேன் எம்பெரு மானை
அருவினை உள்ளன ஆசறுத் தானை. 4

பொழிந்திழி மும்மதக் களிற்றின மருப்பும்
பொன்மலர் வேங்கையின் நன்மலர் உந்தி
இழிந்திழிந் தருவிகள் கடும்புனல் ஈண்டி
எண்திசை யோர்களும் ஆடவந் திங்கே
சுழிந்திழி காவிரித் துருத்தியார் வேள்விக்
குடியுளார் அடிகளைச் செடியனேன் நாயேன்
ஒழிந்திலேன் பிதற்றுமா றெம்பெரு மானை
உற்றநோய் இற்றையே உறவொழித் தானை. 5

புகழுமா சந்தனத் துண்டமோ டகிலும்
பொன்மணி வரன்றியும் நன்மலர் உந்தி
அகழுமா அருங்கரை வளம்படப் பெருகி
ஆடுவார் பாவந்தீர்த் தஞ்சனம் அலம்பித்
திகழுமா காவிரித் துருத்தியார் வேள்விக்
குடியுளார் அடிகளைச் செடியனேன் நாயேன்
இகழுமா றறிகிலேன் எம்பெரு மானை
இழித்தநோய் இம்மையே ஒழிக்கவல் லானை. 6

வரையின்மாங் கனியொடு வாழையின் கனியும்
வருடியும் வணக்கியும் மராமரம் பொருது
கரையுமா கருங்கடல் காண்பதே கருத்தாய்க்
காம்பீலி சுமந்தொளிர் நித்திலங் கைபோய்
விரையுமா காவிரித் துருத்தியார் வேள்விக்
குடியுளார் அடிகளைச் செடியனேன் நாயேன்
உரையுமா றறிகிலேன் எம்பெரு மானே
உலகறி பழவினே அறவொழித் தானே. 7

ஊருமா தேசமே மனம்உகந் துள்ளிப்
புள்ளினம் பலபடிந் தொண்கரை உகளக்
காருமா கருங்கடல் காண்பதே கருத்தாய்க்
கவரிமா மயிர்சுமந் தொண்பளிங் கிடறித்
தேருமா காவிரித் துருத்தியார் வேள்விக்
குடியுளார் அடிகளைச் செடியனேன் நாயேன்
ஆருமா றறிகிலேன் எம்பெரு மானே
அம்மைநோய் இம்மையே ஆசறுத் தானே. 8

புலங்களே வளம்படப் போக்கறப் பெருகிப்
பொன்களே சுமந்தெங்கும் பூசல்செய் தார்ப்ப
இலங்குமார் முத்தினே டினமணி இடறி
இருகரைப் பெருமரம் பீழ்ந்துகொண் டெற்றிக்
கலங்குமா காவிரித் துருத்தியார் வேள்விக்
குடியுளார் அடிகளைச் செடியனேன் நாயேன்
விலங்குமா றறிகிலேன் எம்பெரு மானே
மேலைநோய் இம்மையே வீடுவித் தானே. 9

மங்கையோர் கூறுகந் தேறுகந் தேறி
மாறலார் திரிபுரம் நீறெழச் செற்ற
அங்கையான் கழலடி அன்றிமற் றறியான்
அடியவர்க் கடியவன் தொழுவனு ரூரன்
கங்கையார் காவிரித் துருத்தியார் வேள்விக்
குடியுளார் அடிகளைச் சேர்த்திய பாடல்
தங்கையால் தொழுதுதம் நாவின்மேற் கொள்வார்
தவநெறி சென்றம ருலகம்ஆள் பவரே. 10

திருச்சிற்றம்பலம்

பண்ணிறைந்த தமிழ்பாடிப் பரமர்திரு வருள்மறவா (து),
எண்ணிறைந்த தொண்டருடன் பணிந்தங்கண் உறைந்தேகி,
உண்ணிறைந்த பதிபிறவும் உடையவர் தாள் வணங்கிப்போய்க்,
கண்ணிறைந்த திருவாரூர் முன் தோன்றக் காண்கின்றார். 301

பண்ணின் இசைநிறைந்த இந்தத் தமிழ்பாடி எம்பெருமானுடைய திருவருள் மறவாது; எண்ணிக்கை கடந்த அடியாருடன் பணிந்து அங்கு தங்கி அப்பாலு சென்று சோழ நாட்டினில் உள்ளம் நிறைய அருள்தரும் திருத்தலங்கள் பிறவு வற்றிலும் தம்மை உடைய பெருமானுரது திருவடிகள் வணங்கி அப்பால் போய் கண்ணிற்கு விருந்தாக நிறையும் திருவாரூர் முன்னுகத் தோன்றக் காண்கின்றார். 301

அன்றுதிரு நோக்கொன்றுல் ஆரக்கண் டின்புரூர்
நின்றுநில மிசைவீழ்ந்து நெடிதுயிர்த்து நேர்இறைஞ்சி
வன்றொண்டர் திருவாரூர் மயங்கு மாலையிற்புகுந்து
துன்றுசடைத் தூவாயர் தமைமுன்னந் தொழஅணைந்தார்.

அன்று தமது ஒருகண்ணால் கொள்ளும் திருப்பார்வை ஒன்றால் திருவாரூரின் அற்புதம் முழுவதும் ஆரக்கண்டு இன்புறமுடியாதவராய் நின்று; நிலத்தின் மீது வீழ்ந்து நெடிதே மூச் செறிந்து நேராக வணங்கி எழுந்து சுந்தரமூர்த்திசுவாமிகள் பொழுது மயங்கும் மாலைக் காலத்தில் திருவாரூர் சென்று அங்கு பரந்த சடை யுடைய தூவாயார் என்னும் நாமமுடைய எம்பிரானே முன்னுகப்பணிய வந்து சேர்கின்றார். 302

பொங்குதிருத் தொண்டருடன் உள்ளணைந்து புக்கிறைஞ்சித்,
துங்கஇசைத் திருப்பதிகம் தூவாயா என்றெடுத்தே,
இங்கெமது துயர்கூர்ந்து கண்காணக் காட்டாய் என்(று),
அங்கணர்தம் முன்நின்று பாடிஅருந் தமிழ்புனைந்தார்.

எம்பிரான் தூவாயருடைய கோவிலில் பொங்கும் அன்புடைய அடியார்களுடன் உள்ளே சேர்ந்து வணங்கி மேலான இசையுடைய திருப்பதிகம் தூவாயா எனப் பாட எடுத்தே; இங்கு எனது துயர் கூர்ந்து கண்காணக் காட்டாய் என்று பாட லாகப் போற்றி மொழிந்து கண்ணுதற் பெருமான் திருமுன்பு நின்று பாடி அரிய தமிழ் மாலை சூட்டினார். 303

அவர் தூவாயா என்னும் நாமமுடன் பளிங்குபோல் விளங்கும் திருமேனி உடைய எம்பெருமானே அற்புதமுடன் பாடிய பதிகம் இதுவாகும்.

திருவாரூர்ப் பரவையுண்மண்டளி

பண் : பஞ்சமம்
திருச்சிற்றம்பலம்

தூவாயா தொண்டுசெய் வார்படு துக்கங்கள்
காவாயே கண்டுகொண் டார்ஐவர் காக்கிலும்
நாவாயால் உன்னையே நல்லன சொல்லுவேற்
காவாஎன் பரவையுண் மண்டளி அம்மானே. 1

பொன்னனே புலவர்க்கு நின்புகழ் போற்றலாம்
தன்னனே தன்னைப் புகழ்ந்திடுந் தற்சோதி
மின்னனே செக்கர் வானத் திளஞாயிறு
என்னனே பரவையுண் மண்டளி அம்மானே. 2

நாமாரு துன்னையே நல்லன சொல்லுவார்
போமாறென் புண்ணியா புண்ணியம் ஆனனே
பேய்மாரும் பிணமிடு காடுகந் தாடுவாய்க்
காமாறென் பரவையுண் மண்டளி அம்மானே. 3

நோக்குவேன் உன்னையே நல்லன நோக்காமைக்
காக்கின்றாய் கண்டுகொண் டார்ஐவர் காக்கிலும்
வாக்கென்னும் மாலைகொண் டுன்னை என்மனத்
தார்க்கின்றேன் பரவையுண் மண்டளி அம்மானே. 4

பஞ்சேரும் மெல்லடி யாளையோர் பாகமாய்
நஞ்சேரும் நன்மணி கண்டம் உடையானே
நெஞ்சேர நின்னையே உள்கி நினைவாரை
அஞ்சேலென் பரவையுண் மண்டளி அம்மானே, 5

அம்மானே ஆகம சீலர்க் கருள்நல்கும்
பெம்மானே பேரரு ளாளன் பிடவூரன்
தம்மானே தண்டமிழ் நூற்புல வாணர்க்கோர்
அம்மானே பரவையுண் மண்டளி அம்மானே. 6

விண்டானே மேலையார் மேலையார் மேலாய
எண்டானே எழுத்தொடு சொற்பொருள் எல்லாமுன்
கண்டானே கண்டனைக் கொண்டிட்டுக் காட்டாயே
அண்டானே பரவையுண் மண்டளி அம்மானே. 7

காற்றுனே கார்முகில் போல்வதோர் கண்டத்தெம்
கூற்றுனே கோல்வளை யாளொர் பாகமாய்
நீற்றுனே நீள்சடை மேல்நிறை வுள்ளதோர்
ஆற்றுனே பரவையுண் மண்டளி அம்மானே. 8

செடியேன்நான் செய்வினை நல்லன செய்யாத
கடியேன்நான்கண்டதே கண்டதே காமுறும்
கொடியேன்நான்கூறுமா றுன்பணி கூறுத
அடியேன்நான்பரவையுண் மண்டளி அம்மானே. 9

கரந்தையும் வன்னியும் மத்தமுங் கூவிளம்
பரந்தசீர்ப் பரவையுண் மண்டளி அம்மானை
நிரம்பிய ஊரன் உரைத்தன பத்திவை
விரும்புவார் மேலையார் மேலையார் மேலாரே; 10

திருச்சிற்றம்பலம்

ஆறணியுஞ் சடையாரைத் தொழுதுபுறம் போந்தங்கண்
வேறிருந்து திருத்தொண்டர் விரவுவார் உடன்கூடி
ஏறுயர்த்தார் திருமூலட்டானத்துள் இடைதெரிந்து
மாறில்திரு அத்தயா மத்திறைஞ்ச வந்தணைந்தார்.

கங்கையாறு அணிந்த சிவமூர்த்தியை அக்கோயிலில் வணங்கி அருள்பெற்று வெளியே வந்து அவ்விடத்து வேருக இருந்து சிவனடியார்கள் வந்து சேர்வாருடன் கூடி; இடபக்கொடி உயர்த்திய பெருமானது பெருங்கோயில் திருமூலட்டானத்தைச் சேர்வதற்கு தக்க அருளுடைய காலத்தை உணர்ந்து மாறிலாத திருவருள் நிறைந்த அத்தயாமத்து வணங்கிட அங்குவந்தணைந்தார். 304

ஆதிதிரு அன்பர்எதிர் அணையஅவர் முகநோக்கிக்
கோதில்இசை யாற்குரு பாய எனக் கோத்தெடுத்தே
ஏதிலார் போல்வினவி ஏசறவால் திருப்பதிகம்
காதல்புரி கைக்கிளையாற் பாடியே கலந்தணைவார்,

திருவாரூர் திருமூலட்டானக் கோவிலில் புற்றின் மீது உறைகின்ற ஆதியாம் சுடரொளியின் அன்பர்கள் வருகின்ற இவர் எதிரில் அங்கு வருவார் முகம் நோக்கி கோதிலாத இசையுடைய பதிகத்தால் குருகுபாய எனத் தொடங்கி எடுத்து அவர்கள் வினவுமுகமாக தாம் அயலவர் (புறம்பானவர்) போல அவர்களைக் கேட்டு தமது கவலை மிகுதியினல் பாடிய பதிகம் எம்பிரான்பால் காதல் புரிய; கைக்கிளை என்னும் திணையில் வைத்துப்பாடியே உள்ளே ஒளியாய ஈசனுடன் கலந்து வந்தருளுவார். 305

அவர் அடியார்களை வினவி தம்மை ஓர் பெண்ணாக நினைந்து தனது காதலன் திருவாரூர் இடங்கொண்ட ஈசன் தம்மை அணைந்திட ஏற்பானே என்று தம்மிடம் அவன்பால் கொண்ட காதலால் ஏற்பட்ட உடலின் மாறுபாடுகள் எடுத்து மொழிந்து பாடிய அருமந்த பதிகம் இதுவாகும். இது கைக்கிளை என்னும் திணையாகக் கொள்ளப் பெறுவது.

பண், கொல்லி
திருச்சிற்றம்பலம்

குருகுபா யக்கொழுங் கரும்புகள் நெரித்தசாறு
அருகுபா யும்வயல் அந்தண் ஆரூரைப்
பருகுமா றும்பணிந் தேத்துமா றுந்நினைந்
துருகுமா றும்மிவை உணர்த்தவல் லீர்களே, 1

பறக்கும்எங் கிள்ளைகாள் பாடும்எம் பூவைகாள்
அறக்கண்என் னத்தகும் அடிகளா ரூரரை
மறக்கிலு மாமையும் வளைகள்நில் லாமையும்
உறக்கம்இல் லாமையும் உணர்த்தவல் லீர்களே. 2

சூழும்ஓ டிச்சுழன் றுழலும்வெண் ணுரைகாள்
ஆளும்அம் பொற்கழல் அடிகளா ரூரர்க்கு
வாழுமா றும்வளை கழலுமா றும்மெனக்
கூழுமா றும்மிதை உணர்த்தவல் லீர்களே; 3

சக்ரவா ளத்திளம் பேடைகாள் சேவல்காள்
அக்ரமங் கள்செய்யும் அடிகளா ரூரர்க்கு
வக்ரம்இல் லாமையும் வளைகள்நில் லாமையும்
உச்ரம்இல் லாமையும் உணர்த்தவல் லீர்களே. 4

இலைகொள்சோ லைத்தலை இருக்கும்வெண் ணுரைகாள்
அலைகொள்சூ ழப்படை அடிகளா ரூரர்க்குக்
கலைகள்சோர் கின்றதுங் கனவளை கழன்றதும்
முலைகள்பீர் கொண்டதும் மொழியவல் லீர்களே. 5

வண்டுகாள் கொண்டல்காள் வார்மணற் குருகுகாள்
அண்டவா ணர்தொழும் அடிகளா ரூரரைக்
கண்டவா றுங்காமத் தீக்கனன் றெரிந்துமெய்
உண்டவா றும்மிவை உணர்த்தவல் லீர்களே. 6

தேனலங் கொண்டதேன் வண்டுகாள் கொண்டல்காள்
ஆனலங் கொண்டஎம் அடிகளா ரூரர்க்குப்
பானலங் கொண்டஎம் பணைமுலை பயந்துபொன்
னனலங் கொண்டதும் உணர்த்தவல் லீர்களே; 7

சுற்றுமுற் றுஞ்சுழன் றுழலும்வெண் ணுரைகாள்
அற்றமுற் றப்பகர்ந் தடிகளா ரூரர்க்குப்
பற்றுமற் றின்மையும் பாடுமற் றின்மையும்
உற்றுமற் றின்மையும் உணர்ந்தவல் லீர்களே. 8

குரவநா றக்குயில் வண்டினம் பாடநின்று
அரவம்ஆ டும்பொழில் அந்தண் ஆரூரைப்
பரவிநா டும்மதும் பாடிநா டும்மதும்
உருகிநா டும்மதும் உணர்த்தவல் லீர்களே. 9

கூடும்அன் னப்பெடை காள்குயில் வண்டுகாள்
ஆடும்அம் பொற்கழல் அடிகளா ரூரரைப்
பாடுமா றும்பணிந் தேத்துமா றுங்கூடி
ஊடுமா றும்மிவை உணர்த்தவல் லீர்களே. 10

நித்தமா கந்நினைந் துள்ளம்ஏத் தித்தொழும்
அத்தன்அம் பொற்கழல் அடிகளா ரூரரைச்
சித்தம்வைத் தபுகழ்ச் சிங்கடி யப்பன்மெய்ப்
பத்தனா ரன்சொன்ன பாடுமின் பத்தரே. 11

சீர்பெருகுந் திருத்தேவா சிரியன்முன் சென்றிறைஞ்சிக்
கார்விரவு கோபுரத்தைக் கைதொழுதே உட்புகுந்து
தார்பெருகு பூங்கோயில் தலைவணங்கிச் சார்ந்தணைவார்
ஆர்வம்மிகு பெருங்காத லால்அவனி மேல்வீழ்ந்தார்.

பாடிச் சென்று; சீர் பெருகிய தேவாசிரியத் திருமண்டபத்தை முன்சென்று வணங்கி; மேகங்கள் படிந்த பெரும் கோபுரத்தைக் கைதொழுது உள்ளே சென்று மாலைகள் மிக விளங்குகின்ற பூங்கோயில் என்னும் பெயர் பூண்ட எம்பிரானது திருமாளிகையினை வணங்கிச் சேர்கின்றவர் எம்பெருமான் திருமுன்பு வந்தவுடன் ஆர்வம் மிகுந்த பெருங்காதலால் பூமிமேல் பரவசமாய் வீழ்ந்தார். 306

வீழ்ந்தெழுந்து கைதொழுது முன்நின்று விம்மியே
வாழ்ந்தமலர்க் கண்ணிணைநீர் ஆராமல் மனம் அழிவார்
ஆழ்ந்ததுயர்க் கடலிடைநின் றடியேனை எடுத்தருளித்
தாழ்ந்தகருத் தினைநிரப்பிக் கண்தாரும் எனத்தாழ்ந்தார்.

வீழ்ந்து எழுந்து கைதொழுது முன்னின்று விம்மி வாழ்வுடைய கண்ணீர் கண்டு திருப்தி கொள்ளாது மனம் அயர்வார்; ஐயனே! திருவாரூராய்! ஆழ்ந்த துயர்க்கடலிடை நின்று அடியேனை எடுத்தருளி தாழ்வுடைய குறையிரக்கும் எனது கருத்தை நிரப்பிக் மற்றைக் கண்ணினைத் தாரீர் எனவேண்டித் தாழ்ந்தார். 307

திருநாவ லூர்மன்னர் திருவாரூர் வீற்றிருந்த
பெருமானைத் திருமூலட்டானம்சேர் பிஞ்ஞகனைப்
பருகாஇன்னமுதத்தைக் கண்களாற் பருகுதற்கு
மருவார்வத் துடன் மற்றைக் கண்தாரீர் என வணங்கி.

திருநாவலூர் அரசர் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாரூரில் வீற்றிருந்த பெருமானை; திருமூலட்டானம் என்னும் அக்கோவிலில் சேர்ந்திருந்த பரம்பொருளை; உண்ணலாகா அமுதத்தை; கண்களால் ஆரப்பருகுதற்கு உள்ளத்துக் கொண்ட ஆர்வத்துடன் ''மற்றைக் கண் தாரீர்'' என வேண்டி வணங்கி. 308

மீளா அடிமை எனஎடுத்து மிக்க தேவர் குலமெல் லாம்,
பாளா மேநஞ் சுண்டருளி மன்னி இருந்த பெருமானைத்,
தாளா தரிக்கும் மெய்யடியார் தமக்காம் இடர்நீர் தரியீர் என்(று),
ஆளாந் திருத்தோ ழமைத்திறத்தால் அஞ்சொற்பதிகம் பாடினார்.

''மீளா அடிமை,,எனத்தொடங்கிப் பாட எடுத்தருளி; மிக்க மேலான தேவர் குலம் எல்லாம் மாண்டுபோகாது அன்றெழுந்த நஞ்சுண்டருளி திருவாரூர் இருந்த பெருமானே அப்பனே உமது திருவடிகளே ஆதரிக்கும் மெய்மையுடைய அடியார்கள் தமக்காக வருகின்ற இடரை நீர்பார்த்திருந்து சகிக்கீரே! என்று அப்பனுக்கே ஆளாயிருக்கின்ற திருநிறைந்த தோழமைத் திறத்தால் அழகிய சொல்லுடைய அந்த திருப்பதிகம் பாடினார். 306

அருளினால் மிகுந்த மற்றைக்கண் தாரீர் என வேண்டிப் பாடிய திருப்பதிகம் இது வாகும். இதில் ஆட்பட்ட அடியார்கட்கு அருளாமைக்கு வரும் துயர நிலைகள் பேசப் படுகின்றன. தோழன் தனது மனதின் துயரத்தை எடுத்து பண்புடன் பேசிடும் பக்குவமும் இப்பதிகத்துக் காண்க.

திருவாரூர்ப் பரவையுண்மண்டளி

பண் — பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

மீளா அடிமை உமக்கே ஆளாய்ப் பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போல் உள்ளே கனன்று முகத்தால் மிகவாடி
ஆளாய் இருக்கும் அடியார்தங்கள் அல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவா ரூரீர் வாழ்ந்து போதீரே. 1

விற்றுக் கொள்ளீர் ஒற்றி அல்லேன் விரும்பி ஆட்பட்டேன்
குற்றம் ஒன்றுஞ் செய்த திலேன் கொத்தை ஆக்கினீர்
எற்றுக் கடிதேள் என்கண் கொண்டீர் நீரே பழிப்பட்டீர்
மற்றைக் கண்தான் தாரா தொழிந்தால் வாழ்ந்து போதீரே. 2

அன்றில் முட்டா தனையுஞ் சோலை ஆரூர் அகத்தீரே
கன்று முட்டி உண்ணச் சுரந்த காலி யவைபோல
ஏன்றும் முட்டாப் பாடும் அடியார் தங்கண் காணுது
குன்றில் முட்டிக் குழியில் வீழுந்தால் வாழ்ந்து போதீரே. 3

துருத்தி உறைவீர் பழனம்பதியாச் சோற்றுத்துறை ஆள்வீர்
இருக்கை திருவா ரூரேஉடையீர் மனமே எனவேண்டா
அருத்தி உடைய அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால்
வருத்தி வைத்து மறுமை பணித்தால் வாழ்ந்து போதீரே. 4

செந்தண் பவளந் திகழுஞ் சோலை இதுவோ திருவாரூர்
எந்தம் அடிகேள் இதுவே ஆமா(று) உமக்காட் பட்டோர்க்கு
சந்தம் பலவும் பாடும் அடியார் தங்கண் காணுது
வந்தெம் பெருமான் முறையோ என்றுல் வாழ்ந்துபோதீரே. 5

தினைத்தாள் அன்ன செங்கால் நாரை சேருந் திருவாரூர்ப்
புனைத்தார் கொன்றைப் பொன்போல் மாலைப்புரிபுன் சடையீரே
தனத்தா லின்றித் தாந்தாம் மெலிந்து தங்கண் காணுது
மனத்தால்வாடி அடியார் இருந்தால் வாழ்ந்து போதீரே. 6

ஆயம் பேடை அடையுஞ் சோலை ஆரூர் அகத்தீரே
ஏயெம் பெருமான் இதுவே ஆமா றுமக்காட் பட்டோர்க்கு
மாயங் காட்டிப் பிறவி காட்டி மறவா மனங்காட்டிக்
காயங் காட்டிக் கண்ணீர் கொண்டால் வாழ்ந்து போதீரே. 7

கழியாய்க் கடலாய்க் கலனாய் நிலனாய்க் கலந்த சொல்லாகி
இழியாக் குலத்திற் பிறந்தோம் உம்மை இகழா தேத்துவோம்
பழிதான் ஆவ தறியீர் அடிகேள் பாடும் பத்தரோம்
வழிதான் காணு தலமந் திருந்தால் வாழ்ந்து போதீரே. 8

பேயோ டேனும் பிறிவொன் றின்னு தென்பர் பிறரெல்லாம்
காய்தான் வேண்டில் கனிதான் அன்றே கருதிக் கொண்டக்கால்
நாய்தான் போல நடுவே நிரிந்தும் உமக்காட் பட்டோர்க்கு
வாய்தான் நிறவீர் திருவா ரூரீர் வாழ்ந்து போதீரே. 9

செருந்தி செம்பொன் மலருஞ் சோலை இதுவோ திருவாரூர்
பொருந்தித் திருமூ லட்டா னம்மே இடமாக் கொண்டீரே
இருந்தும் நின்றுங் கிடந்தும் உம்மை இகழா தேத்துவோம்
வருந்தி வந்தும் உமக்கொன் றுரைத்தால் வாழ்ந்து போதீரே. 10

காரூர் கண்டத் தெண்டோள் முக்கண் கலிகள் பலவாகி
ஆரூர்த் திருமூ லட்டா னத்தே அடிப்பே ராரூரன்
பாரூர் அறிய எண்கண் கொண்டீர் நீரே பழிப்பட்டீர்
வாரூர் முலையாள் பாகங் கொண்டீர் வாழ்ந்து போதீரே. 11

திருச்சிற்றம்பலம்

பூத முதல்வர் புற்றிடங்கொண்டிருந்த புனிதர் வன்றொண்டர்,
காதல் புரியவே தனைக்கிரங்கிக் கருணைத் திரு நோக் களித்தருளிச்,
சீத மலர்க்கண் கொடுத்தருளச் செவ்வே விழித்து முகமலர்ந்து,
பாத மலர்கள் மேற் பணிந்து வீழ்ந்தார் உள்ளம் பரவசமாய்.

பூதங்கட்கெல்லாம் முதல்வர்; கறையான்புற்றின் மீது இடங்கொண்டிருந்த புனிதர்; சுந்தர மூர்த்தி சுவாமிகள் அன்பினுல் எடுத்து மொழியும் இந்த வேதனை கட்கு இரங்கி கருணையால் அவரது திருப்பார்வை கொடுத்தருளி குளிர்ந்த மலர்க் கண்ணைக் கொடுத்தருளலும்; உடன் செப்பமாக இருகண்ணும் பார்த்து முகமலர்ந்து எம் பெருமான் தியாகராசனுடைய பாதமலர் மேலாகப் பணிந்து வீழ்ந்தார் 310
உள்ளம் பரவசமுடையராய்:

விழுந்தும் எழுந்தும் பலமுறையால் மேவிப் பணிந்து மிகப் பரவி,
எழுந்த களிப்பினுல் ஆடிப் பாடி இன்ப வெள்ளத்தில்,
அழுந்தி இரண்டு கண்ணுலும் அம்பொற் புற்றின் இடை எழுந்த,
செழுந்தண் பவளச் சிவக்கொழுந்தின் அருளைப் பருகித் திளைக்கின்றூர்.

விழுந்தும் எழுந்தும் பலமுறையால் ஈசனைப்பொருந்திப் பணிந்துமிகவும் போற்றி மனதில் எழுந்த மகிழ்வால் ஆடிப்பாடி இன்பவெள்ளத்தில் அழுந்தி; இரண்டு கண்ணுலும் அழகிய பொன்னின் புற்றின் இடையாக முளைத்தெழுந்த செழுமையாய தண்ணிளியுடைய பவள ஒளிபரந்த சிவக்கொழுந்தின் அருளைப் பருகித் திளைத்து 311
இன்புறுகின்றூர்:

காலம் நிரம்பத் தொழுதேத்திக் கனகமணிமா ளிகைக் கோயில்,
ஞாலம்உய்ய வரும்நம்பி நலங்கொள் விருப்பால் வலங்கொண்டு,
மாலும் அயனும் முறையிருக்கும் வாயில் கழியப் புறம்போந்து,
சீல முடைய அன்பருடன் தேவா சிரியன் மருங்கணைந்தார்.

அத்தசாம வழிபாட்டுக் காலம் நிரம்பும் வரையும் தொழுது போற்றி; பொன்னுடன் இரத்தினங்களின் ஒளியுடனும் மிளிர்கின்ற அழகிய மாளிகைகளை உடைய கோயிலினை; இப்பூமி உய்ந்திட வரும் சுந்தர மூர்த்தி சுவாமிகள் நலம்கொள்ளும் விருப்பால் வலம் கொண்டுவந்து; திருமாலும் பிரமனும் முறையே தரிசனத்திற் காக காத்திருக்கும் திருவாயில் நீங்கிட வெளியே வந்து; சீலமுடைய அன்பருடன் 312
தேவாசிரிய மண்டபம் பக்கராகச் சேர்ந்தார்.

நங்கை பரவை யார்தம்மை நம்பி பிரிந்து போனதற்பின்
தங்குமணிமா ளிகையின் கண் தனிமைகூரத்தளர் வார்க்குக்
கங்குல்பகலாய்ப் பகல்கங்கு லாகிக்கழியா நாளெல்லாம்
பொங்கு காதல் மீதூரப் புலர்வார் சிலநாள் போனதற்பின்.

இவ்வாறு இவர் இங்கிருப்ப இதன் முன் ஏந்திழையார் பரவை அம்மையும்; தம்மை சுந்தரர் பிரிந்துபோன பிற்பாடு தாம் தங்கிய அழகிய மாளிகையினிடம் தனிமை கூர்ந்திடத் தளர்ந்திடுவார்க்கு இரவு பகலாகவும் பகல் இரவாகவும் கால வேறுபாடு உணராதபடி தனிமையின் துயரால் கழிகின்ற நாள் எல்லாம் சுந்தரர் பால் பொங்கும் காதல் மிகப்பெருக வாடுவார். அவ்வாறு வாட்டமுடன் 313
சில நாள் போன பிற்பாடு.

செம்மை நெறிசேர் திருநாவ லூரர் ஒற்றி யூர்சேர்ந்து,
கொம்மை முலையார் சங்கிலியார் தம்மைக் குலவு மணம் புணர்ந்த,
மெய்ம்மை வார்த்தை தாம் அவர்பால் விட்டார் வந்து கட்டுரைப்பத்,
தம்மை அறியா வெகுளியினுல் தரியா நெஞ்சி னெடும்தளர்வார்.

செம்மையான நெறிசேர்ந்த திருநாவலூர்த் தலைவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவொற்றியூர் சேர்ந்து பெருத்த முலையுடையார் சங்கிலி அம்மையாரைச் சிறந்த துற்ற திருமணம் செய்த உண்மை வார்த்தை; சுந்தர மூர்த்தி சுவாமிகள் நிலை அறிந்திடத் தாம் அவர் பால் விட்ட மக்கள் வந்து செய்தி சொல்ல; அது கேட்டலும் தம்மையும் அறியாது எழுந்த கோபத்தினுல் தாங்கொணுத நெஞ்சமொடும் 314
தளர்ச்சியுறுவார்;

மென்பூஞ் சயனத் திடைத்துயிலும் மேவார் விழித்தும் இனிதமரார்,
பொன்பூந் தவிசின் மிசையினிரார் நில்லார் செல்லார் புறம்பொழியார்,
மன்பூ வாளி மழைகழியார் மறவார் நினையார் வாய்விள்ளார்,
என்பூ டுருக்கும் புலவியா? பிரிவோ? இரண்டின் இடைப்பட்டார்.

இந்தத் துயரத்தால் மெல்லிய பூஞ்சயனத்திலும் துயில் கொள்ளார். கண் விழித்து ஆறுதலாக இனிதும் இரார். பொன்பதித்த பூந்தவிசிலும் மேலும் இருக்க மாட்டார். நில்லார் நடந்திடார் வேறிடம் போகார்; மன்மதனுடைய மலராய மழையிலும் நீங்கார். சுந்தரரை மறவார் ஆனுல் கோபத்தால் நினைக்கவும் மனம் கொள்ளார். இந்நிலையில் என் செய்வார். என்பினையும் ஊடுருக்கும் புலவியோ பிரிவோ இந்த இரண்டாலும் வரும் துயரின் இடைப்பட்டார். 315

ஆன கவலைக் கையறவால் அழியும் நாளில் ஆரூரர்,
கூன்ல் இளவெண் பிறைக்கண்ணிமுடியார் கோயில் முன் குறுகப்,
பானல் விழியார் மாளிகையிற் பண்டு செல்லும் பரிசினுல்,
போன பெருமைப் பரிசனங்கள் புகுதப் பெறது புறம்நின்றூர்.

இவ்வாறான கவலையின் துயரால் அழிகின்ற நாட்களில் நம்பியாரூரர் கூனிய இளம் கோலமுடைய வெண்மைநிறமுடைய பிறைக்கொழுந்தைச் சூடிய முடியுடைய திருவாரூர்ப்பெருமான் கோயில்முன்வந்து இப்பொழுது சேரலும்; பால்போலும் நல்ல கண்ணுடைய பரவையம்மையாரது மாளிகையில் முன்போல சென்றிடும் அத்தன்மையால் அங்குபோன அவரது பெருமையுடைய ஏவலர்கள் யாரும் உள்ளே சென்றிடற்கு அனுமதி இலாது போகமுடியாமையால் வெளியேநின்றூர். 316

நின்ற நிலைமை யவர்கள்சிலர் நிலவு திருவா ரூரர் எதிர்,
சென்று மொழிவார்; திருவொற்றி யூரில் நிகழ்ந்த செய்கைஎலாம்,
ஒன்றும் ஒழியா வகையறிந்தங் குள்ளார் தள்ள மாளிகையில்,
இன்று புறமுஞ் சென்றெய்தப் பெற்றி லோம் என் றிறைஞ்சினர்.

மாளிகையின் உள்ளே செல்லமுடியாதபடி நின்ற நிலைமையால் அவர்களில் சிலர் நிலவிய திருவாரூரர் சுந்தரமூர்த்திசுவாமிகள் எதிர்சென்று சொல்வார்; ''ஐயனே திருவொற்றியூரில் நிகழ்ந்த செய்கை எல்லாம் ஒன்றும் ஒழிபாதவகை அறிந்து அங்குள்ளார் எங்களை உட்புகாதபடி வெளியே தள்ளிட பரவையம்மையாரது மாளிகை முற்றத்தின்வெளியில்கூட நாம் போகமுடியாது போனேம்'' என்று கூறி வணங்கினர். 317

மற்ற மாற்றங் கேட்டழிந்த மனத்தராகி வன்றொண்டர்,
உற்ற இதனுக் கினிஎன்னே? செயல் என் றுணர்வார் உலகியல்பு,
கற்ற மாந்தர் சிலர்தம்தைக் காதற் பரவை யார்கொண்ட,
செற்ற நிலைமை அறிந்துவர்க்குத் தீர்வு சொல்லச் செலவிட்டார்.

மற்று அந்த வார்த்தைகேட்டு அழிந்த மனமுடையராகிய சுந்தரமூர்த்திசுவாமிகள் ''இப்பொழுது வந்துற்ற இதனுக்கு இனி என்னே செயல் என்று உணர்பவர்; அதற்காக உலகின் நீதி இயல்பு கற்றமாந்தர் சிலர் தம்மை அழைத்து தமது காதலி பரவையார்கொண்ட கோபநிலையினைத் தெரிந்து அவர்க்கு நன்மைகூறித் தீர்வு சொல்லுமாறு செல்லவிட்டார். 318

நம்பி அருளாற் சென்றவரும் நங்கை பரவை யார் தமது,
பைம்பொன் மணிமாளிகை அணைந்து பண்பு புரியும் பாங்கினுல்,
வெம்பு புலவிக் கடல்அழுந்தும் மின்னே ரிடையார் முன்னெய்தி,
எம்பி ராட்டிக் கிதுதகுமோ? என்று பலவும் எடுத்துரைப்பார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளால் பரவை அம்மையார் பாலாகச் சென்ற உலகியல்பு கற்ற அப்பெரியோர்களும்; பெண்மணியாம பரவையார் தமது பசிய பொன்மணி மாளிகையினை அணைந்து பண்பு புரியும் பாங்கினுல்; வெம்பிடும் கவலையாய புலவியெனும வெப்பியாரக் கடலில் வீழ்ந்து அழுந்தி கரைகாணுது தவித்திடும் மின்னலை ஒத்த சிற்றிடையுடைய பரவையார் திருமுன்பு சென்று; அவரைநோக்கி ''எம்பிராட்டிக்கு இத்தன்மைதகு மாமோ'' என்று பலவும் எடுத்துச் சொன்னர்கள்; 319

பேத நிலைமை நீதியினுற் பின்னும் பலவும் சொன்னவர் முன்,
மாத ரவரும் மறுத்துமனம் கொண்டசெற்றம் மாற்றுராய்,
ஏதம் மருவும் அவர்திறத்தில் இந்த மாற்றம் இயம்பில் உயிர்,
போதல் ஒழியா தெனவுரைத்தார் அவரும் அஞ்சிப் புறம்போந்தார்.

இவ்வாறு ஊடலினுல் வரும் துயரம் பற்றி எடுத்து அவரின் உள்ளத்தை ஊடல் வெப்பியாரத்தினை நீக்கும் 'டி நீதியுடனுக பலதரும நியாயங்களும் எடுத்து கூறி நின்ற அப்பெரியோர் முன்பாக; பரவையாரும் அவர் உரையை மறுத்து மனத்தில் கொண்ட கோபம் ஆறுதவராய் ''குற்றம் பொருந்திய அவரது திறத்தாக இனியும் இப்படியான வார்த்தை நீர் சொன்னுல் எனது உயிர்போகாது விடாது'' என்று பரவையார் சொல்லலும் அதுகேட்ட அப்பெரியோரும் பயந்து வெளியே போயினர். 320

போந்து புகுந்த படியெல்லாம் பூந்தண் பழன முனைப் பாடி,
வேந்தர் தமக்கு விளம்புதலும் வெருவுற் றயர்வார் துயர்வேலை,
நீந்தும் புனையாந் துணைகாணுர் நிகழ்ந்த சிந்தா குலம்நெஞ்சில்,
காந்த அழிந்து தோய்ந்தெழார் கங்குல் இடையா மக்கடலுள்.

வெளிச் சென்று பரவையார் பால் தாம் சென்று மொழிந்ததும் அவருடைய வார்த்தையுமாக அங்கு நிகழ்ந்த அத்தன்மையாவையும் பூக்கள் மலிந்த குளிர்ந்த வயல்நிலங்களை உடைய திருமுனைப்பாடி நாடர் சுந்தரர்க்கு எடுத்துச் சொல்லுதலும்; அதுகேட்ட அவர் பயந்து அயர்ச்சி கொள்வாராய்; தம்மிடத்து பரவையார் நிலையால் எழுகின்ற கவலைக் கடலினிற்கு கரைகாண முடியாராய், அந்த நிகழ்ச்சியால் ஏற்பட்ட மனவியாகுலம் நெஞ்சினைக் காந்த மனமழிந்து சோர்ந்து அதனினுல் எழமுடியாராய் அன்றைய இரவின் இடையாம மாய அக்கடலின் உள்ளே. 321

அருகு சூழ்ந்தார் துயின்றுதிரு அந்த யாமம் பணி மடங்கிப்,
பெருகு புவனம் சலிப்பின்றிப் பேயும் உறங்கும் பிறங்கிருள் வாய்,
முருகு விரியும் மலர்க்கொன்றை முடி மேல் அரவும் இளமதியும்,
செருகும் ஒருவர் தோழர்தனி வருந்தி இருந்து சிந்திப்பார்.

அந்த இரவின் யாமத்து கவலை மிகுதியால் அழிந்து இவர் சோர்ந்திட; அருகே இருந்த பரிசனர் அவர்கள் நித்திரை கொண்டிட வரும் அத்தயாமத்து நிகழும் வழிபாடும் அடங்கி; பெருகிய இந்தப் பூமியில் உள்ளாரும் தமது நடமாட்டம் ஒழிந்து பேயும் உறங்கிக் கொள்ளும் எல்லாம் ஒய்ந்த பெரும் இருள் இடத்தாக; வாசனை புரியும் மலர்க் கொன்றை சூடிய திருமுடிமேல் பாம்பையும் இளம்பிறையையும் செருகிடும் ஒருவர் சிவனது தோழர்; எம் சுந்தர மூர்த்தி சுவாமிகள் தனியே கவலையால் வருந்தி இருந்து இதனை நினைக்கின்ருர். 322

முன்னை வினையால் இவ்வினைக்கு மூலம் ஆனுள் பால் அணைய,
என்னை உடையாய்! நீனைந்தருளாய் இந்த யாமத் தெழுந்தருளி,
அன்னம் அனையாள் புலவியினை அகற்றில் உய்யலாம்; அன்றிப்,
பின்னை இல்லைச் செயல் என்று பெருமான் அடிகள் தமைநினைந்தார்.

முன்னர் செய்து கொண்டவினையால் இப்பிறவியில் எனது இத்துயரிருகு மூலமான பரவையாள் பால் நான் சென்றிட என்னை உடையவனே! சிவனே! நீ நினைந்தருளாய் அவ்வாறு நினைவுகொண்டு இந்த யாமத்து எழுந்தருளி நீ வந்து அன்னப் பறவையை ஒத்தபரவை அம்மையினது கோபத்தை நீக்கினுல் நான் உய்யலாம் அன்றிப் பின்னை எனக்குச் செயல் இல்லை என்று தனது பெருமானுய குருபரன் சிவனை மிகவும் சிந்தையில் உன்னி நினைந்தார். 323

அடியார் இடுக்கண் தரியாதார் ஆண்டு கொண்ட தோழர் குறை,
முடியா திருக்க வல்லரே முற்றும் அளித்தாள் பொற்றளிர்கைத்,
தொடியார்தழும்பும் முலைச்சுவடும்உடையார் தொண்டர் தாம்காணும்,
படியால் அணைந்தார் நெடியோனும் காணு அடிகள் படிதோய.

அவர் வருத்தம் உணர்ந்து; தனது அடியார் இடுக்கண் தாங்கிடாத திருவாரூர் தியாகராசன்; தான் விரும்பி ஆண்டுகொண்ட தோழராம் இவர்குறையினை முடிக்

காமல் மனம்வலித்திருக்க வல்லமை உடையரோ முழுவதையும் பெற்ற முதல் வியாம் உமையம்மையாரது பொன்னின் தளிர்க்கையின் வளையல் தழும்பும் முலைச் சுவடும் பெற்றிருப்பவர் உடனுக; தனது தொண்டர் தம்மை ஊனக்கண்ணுல் நேராகக் கானும் படியாக வந்தருளினுர் திருமாலும் பன்றியாய்ச் சென்றுணர முடியாததிருவடிகள்இப்பூமியில் படிந்திட. 324

தம்பி ரானுர் எழுந்தருளத் தாங்கற் கரிய மகிழ்ச்சியினுல்
கம்பி யாநின் றவயவங்கள் கலந்த புளகம் மயிர்முகிழ்ப்ப
நம்பி யாரூ ரரும்எதிரே நளின மலர்க்கை தலைக்குவிய
அம்பி காவல்லவர்செய்ய அடித்தாமரையின் கீழ்வீழ்ந்தார்.

தமது பெருமான் சிவன் எழுந்தருளி வந்திடலும்; அவரைக் கண்டு தாங்கிடற்கு அரிதாய மகிழ்ச்சியினுல் உடலம் கிடுகிடென நடுக்கம் கொண்டிட அவயவங்கள் எல்லாம் கலந்த புளகாங்கிதத்தால் மயிர்கூர்செறிந்திட சுந்தரமூர்த்தி சுவாமிகளும் எதிராக எழுந்து; தாமரைமலர்போலும் கைத்தலம் உச்சி குவிய வணங்கி எம் பிராட்டி பாகராய சிவபெருமானது சிவந்த தாமரை போலும் திருவடியின் கீழாக வீழ்ந்தார். 325

விழுந்து பரவி மிக்கபெரு விருப்பி னுடனும் எதிர்போற்றி,
எழுந்த நண்பர் தமைநோக்கி என்நீ யுற்ற(து)? என்றருளத்,
தொழுந்தங் குறையை விளம்புவார் யானே தொடங்குந் துரிசிடைப்பட்,
டழுந்தும் என்னை இன்னம் எடுத் தாளவேண்டும் உமக் கென்று.

வீழ்ந்து வணங்கி மிக்க பெருவிருப்புடன் எதிரே போற்றி எழுந்து முன்நின்ற தோழர் சுந்தரரை எம்பிரான் நோக்கி ''உனக்கு என்ன நேர்ந்தது'' என்று அருள் புரியலும்; அதுவேளை சுந்தரமூர்த்தி சுவாமிகள் தொழுது தனது குறையைச் சொல்கின்ருர் ''எம்பிரானே! யானே தொடங்கிய குற்றத்தின் உட்பட்டு அழுந்தி வேதனையுறும் என்னை இன்னமும் எடுத்தாள வேண்டும். அது உமக்காய செயலாகும்'' என்று பின்னரும். 326

அடியேன் அங்குத் திருவொற்றி யூரில் நீரே அருள் செய்ய,
வடிவேல் ஒண்கண் சங்கிலியை மணஞ்செய் தணைந்த திறமெல்லாம்,
கொடியே ரிடையாள் பரவை தான் அறிந்து தன்பால் யான்குறுகில்,
முடிவேன் என்று துணிந்திருந்தாள்; என்நான் செய்வ(து)? எனமொழிந்து.

அடியேன் அங்கு திருவொற்றியூரில் நீரே அப்படிச் செய்திட அருள்புரிந்திட; வடித்த வேல்போலும் கூரிய கண்உடைய சங்கிலியாரை திருமணம் செய்து கூடிய தன்மை எல்லாவற்றையும் கொடிபோலும் சிறிய இடையுடைய பரவைதான் கேள்வியுற்று; கோபங் கொண்டு தன்பால் யான்போனுல் தான் முடிவேன் என்று துணிந்து கொண்டிருக்கின்ருள்! இதற்கு நான் என் செய்வேன்'' என்று சுந்தரர் கூறியருளி. 327

நாயன் நீரே நான்உமக்கிங் கடியேனுகில் நீர்எனக்குத்
தாயின்நல்ல தோழருமாம் தம்பி ரானு ரேயாகில்
ஆயஅறிவும் இழந்தழிவேன் அயர்வு நோக்கி அவ்வளவும்
போய்இவ் விரவே பரவையுறு புலவி தீர்த்துத் தாரும் என.

எனது நாயகனே! நான் உமக்கு இங்கு அடியேன் என்பதானுல்; அத்துடன் நீர் எனக்கு தாயிலும் பார்க்க கருணை உடைய நல்ல தோழனுமாய தலைவனுகு வீரேயானுல்; எனக்குற்ற அறிவு எல்லாம் பரவைபால்கொண்ட காதலால் சோர்வேனுடையகளைப்பினை நோக்கி; அவ்வளவில் நீர் இவ்விரவே பரவைபால்போய் அவள்கொண்ட கோபத்தினைத் தீரப்பண்ணித்தாரும் என்னலும். 328

அன்பு வேண்டும் தம்பெருமான் அடியார் வேண்டிற் றேவேண்டி,
முன்புநின்று விண்ணப்பஞ் செய்த நம்பி முகநோக்கித்,
துன்பம் ஒழிநீ யாம்உனக்கோர் தூதனுகி இப்பொழுதே,
பொன்செய் மணிப்பூண் பரவைபால் போகின் றேம் என் றருள்செய்தார்.

அடியாரது அன்பினையே வேண்டிநிற்கின்ற அவரது பெருமான் சிவன் தனது அடியார் வேண்டியதையே தாம் செய்திடவிரும்பி; முன்பாகநின்று விண்ணப்பம் செய்த சுந்தரரது முகத்தை நோக்கியருளி சுந்தரனே! உனது துன்பத்தை நீ ஒழித்திடுவாய். யாம் உனக்கு ஓர் தூதனாக இப்பொழுது பொன்னுலகஞ்செய்த அழகிய ஆபரணங்களை அணிந்த பரவைபாலாகப் போகின்றோம் என்று அருள்செய்தார்; 329

எல்லை இல்லாக் களிப்பினராய் இறைவர் தாளில் வீழ்ந்தெழுந்து,
வல்ல பரிசெல் லாந்துதித்து வாழ்ந்து நின்ற வன்றொண்டர்,
முல்லை முகைவெண் ணகைப் பரவை முகில்சேர் மாடத் திடைச்செல்ல,
நில்லா நெஞ்ச எழுந்தருளி நீக்கும் புலவி எனத்தொழுதார்.

சிவனுடைய இந்த அருளிப்பாட்டை சுந்தரர்பெருமான் கேட்டலுமே எல்லை இல்லாத களிப்புடையராகி சிவனுடைய திருப்பாதத்தில் வீழ்ந்து எழுந்து தம்மாலான பரிசெல்லாம் துதித்து வாழ்ந்து அருள்பிறந்துநின்ற நம்பிரான் சுந்தரர் தனது நாதனை நோக்கி "முல்லைமலர்போலும் மிருதுவாய முறுவலுடைய பரவையின் முகில்கள் படிந்த மாடத்திடைச் சென்றிட இங்கு நில்லாது இப்பொழுதே எழுந்தருளுச்சென்று அவள் கோபத்தை நீக்குவீராக" எனத் தொழுதார். 33

அண்டர் வாழக் கருணையினுல் ஆல காலம் அமுதாக
உண்ட நீலக் கோலமிடற் றொருவர் இருவர்க் கறிவரியார்
வண்டு வாழும் மலர்க்கூந்தல் பரவையார்மா ளிகைநோக்கித்
தொண்டனார்தம் துயர்நீக்கத்தூத ராய் எழுந்த ருளி.

அது கேட்டருளித் தேவர்கள் வாழ்ந்திடக் கருணையால் ஆலகாலமாய நஞ்சினை அமுதமாக உண்ட நீலநிறமுடைய அழகிய திருக்கண்டமுடைய ஏகனுய கடவுள்; பிரமன் திருமால் என்னும் இருவரும் காண அரியவர். வண்டுகள் மொய்த்திருக்கும் மலர்சூடிய கூந்தலுடை பரவை அம்மையாரது திருவாளிசையினை நோக்கிப் புறப்பட்டு தனது தொண்டனுர் சுந்தரரது துயர் தீர்ந்திட தாம் ஓர் தூதுவனுகச் எழுந்தருளிச் சென்றருள்வார்; 331

தேவா சிரியன் முறையிருக்குந் தேவ ரெல்லாஞ் சேவித்துப்
போவார் தம்மில் வேண்டுவார் போத ஒழிந்தார் புறத்தொழிய
ஓவா அனுக்கச் சேவகத்தில் உள்ளோர்பூத கணநாதர்
மூவா முனிவர் யோகிகளின் முதலானுர்கள் முன்போக.

தேவாசிரிய மண்டபத்து முறையாகத் தங்கி இருக்கும் தேவர்கள் எல்லாரும் எழுந்து எம்பெருமானைச்சேவித்துப்போவார்கள்; தத்தமில் வேண்டுவார்களில் உடன் போக; போகவிரும்பாதார் வெளியே தங்கிட; ஓயாது எம்பெரும் ஒளிமுதலாம் சிவனின் அணிமையாக நெருங்கித் தொண்டுபுரியும் தொழிலில் உள்ளோர்களும் பூதரும் கணநாதரும் மூப்பினை நீங்கிச் சாவா உடம்பெய்திய தவமுனிவரும் யோகிகளின் முதன்மைபெற்றோர்கள் முதலானவர்கள் முன்னுகச் சென்றிடவும். 332

அருகு பெரிய தேவருடன் அணைந்து வரும்அவ் விருடிகளும்
மருவு நன்பின் நிதிக்கோனும் முதலாயுள்ளோர் மகிழ்ந்தேத்தத்
தெருவும் விசும்பும் நிறைந்துவிரைச் செழும்பூ மாரி பொழிந்தலையப்
பொருவில் அன்பர் விடுந்தூதர் புனித வீதி யினிற்போத,

அருகே நந்திவெம்பெருமானுய பெரிய தேவருடன் அணைந்துவருகின்ற அந்த இருடிகளும், எம்பிரான்பால் பொருந்திய நண்புடைய நிதியின் தலைவன் குபேரனும் முதலாக உள்ளோர் மகிழ்ந்துபோற்றிட; தெருவும் வானும் நிறைந்து வாசமுடைய கொழுமையான பூமழை பொழிந்து நிறைந்து செம்மிட; நிகர் பிறிதிலாத அன்பர் சுந்தரர் விடுகின்ற எங்கள் தூதர் புனிதமாய திருவீதியால் பரவைமனைக்கு தூது போதலும். 333

மாலும் அயனும் காணுதார் மலர்த்தாள் பூண்டு வந்திறைஞ்சும்
காலம்இது என் றங்கவரை அழைத்தால் என்னக் கடல்விளைத்த
ஆலம் இருண்ட கண்டத்தான் அடித்தாமரைமேற் சிலம்பொலிப்ப
நீல மலர்க்கண் பரவையார் திருமாளிகையை நேர்நோக்கி.

இவ்வாறு உருவத் திருமேனி தாங்கி எழுந்தருளிவரும் திருவாரூர்ப் பெருமானின் திருவடியை முன்தேடிக் காணுதாரான திருமாலும் பிரமனும் இப்பொழுது நேராகக் கண்டு கண்குளிர வணங்கிடும் காலம் இது என்று அவரை வாருங்கள் என அழைத்தால் போல; கடல்தோற்றிய ஆலகாலம் என்னும் நஞ்சை உண்டு இருண்ட கண்டமுடைய கடவுளின் திருவடித் தாமரை மலர் மேல்அணிந்த சிலம்புகள் ஒலித்திட; நீலோற்பல மலர் போலும் அழகிய கண்ணுடைய பரவை அம்மையார் திருமாளிகையை நேராக நோக்கி. 334

இறைவர் விரைவின் எழுந்தருள எய்தும் அவர்கள் பின்தொடர
அறைகொள் திரைநீர் தொடர்சடையில் அரவுதொடர அரியஇளம்
பிறைகொள் அருகு நறைஇதழிப் பிணையல் சுரும்பு தொடரஉடன்
மறைகள் தொடர வன்றொண்டர் மனமும் தொடர வரும்பொழுது.

எம்பெருமான் இவ்வணம் விரைவாக எழுந்தருளிச் சென்றிட; அவருடன் வர எழுந்த கணநாதர்கள் பின் தொடர; அரிய இளம்பிறையின் அருகே வாசனையுடைய கொன்றை மலர் மாலையின் மீது வண்டினம் தொடர; உடன் வேதங்களும் ஐயா என ஒங்கித் தொடர சுந்தரமூர்த்தி சுவாமிகளது மனமும் தொடரும்படிவரும் பொழுது; 335

பெருவீ ரையினும் மிகமுழங்கிப் பிறங்கு மதகுஞ் சரம்உரித்து
மருவீர் உரிவை புனைந்தவர்தம் மருங்து சூழ்வார் நெருங்ததலால்
திருவீ தியினில் அழகர்அவர் மகிழுஞ் செல்வத் திருவாரூர்
ஒருவீ தியிலே சிவலோகம் முழுதுங் காண உளதாமால்.

பெரிய கடலினும் பார்க்க மிக முழங்கி பெரும் ஓசைபுரியும் மதயானையை உரித்து; அதனிடம் எடுத்த தோலைப் போர்த்த சிவபெருமானது பக்கரில் சூழ்வார் இவ்வணம் நெருங்குதலால்; திருவீதியில் அழகிய கோலமுடைய விதிவிடங்கனுய எம்பிரான் மகிழ்ந்துறையும் செல்வமுடைய திருவாரூரின்இந்த ஒரு வீதியிலே சிவலோகம் முழுவதும் காணக்கூடியதாக இன்று உள்ளது. 339

ஞாலம் உய்ய எழுந்தருளும் நம்பி தூதர் பரவையார்
கோல மணிமா ளிகைவாயில் குறுகு வார்முன் கூடத் தம்
பாலங் கணைந்தார் புறநிற்பப் பண்டே தம்மை அர்ச்சிக்கும்
சீலம் உடைய மறைமுனிவ ராகித் தனியே சென்றணைந்தார்.

இந்தப் பூமிஉய்ந்திட எழுந்தருளி வரும் சுந்தரரது தூதுவர்; பரவைஅம்மையாரது அழகிய நல்ல திருமாளிகை வாயிலிடம் சேர்வாராகி; முன்னுகத் தம்மை கூடித் தமது புறமாக வந்தார்கள் வெளியே நின்றிட; முன்பே தம்மை அர்ச்சிக்கின்ற சீல ஒழுக்கமுடைய வேதமுனிவராய வடிவு கொண்டு அந்த மாளிகைவாயிலே எம்பிரான் தனியே சென்றடைந்தார். 337

சென்று மணிவா யிற்கதவஞ் செறிய அடைத்த அதன் முன்பு
நின்று பாவாய் திறவாய் என் றழைப்ப நெறிமென் குழலாரும்
ஒன்றுந் துயிலா துணர்ந்தயர்வார் உடைய பெருமான் பூசனைசெய்
துன்றும் புரிநூல் மணிமார்பர்போலும் அழைத்தார் எனத்துணிந்து.

தம்மையே அர்ச்சிக்கும் படியாய அந்தண முனிவர் வடிவுடன் மாளிகைவாயில் சென்று; அழகிய அவ் வாயிலில் கதவம் நன்கு அடைத்த அவ்வாயிலில் நின்று "பாவையே! கதவத்தைத் திறந்திடுவாய்" என்று அழைத்திட; அதுகேட்ட நெறியுடன் சிறந்துற்ற மென் கூந்தலுடைய பரவையும் ஒரு கண் நித்திரையுமிலாது புலவியால் வாடி அயர்வார் இதேது எண்ணை உடைய நாயகன் திருவாரூர்ப் பெருமானது பூசனை செய்திடும் துன்றிடும் முப்புரிநூல் அணிந்த மார்புடைய அந்தணர் போலும் அழைத்தார் எனத் துணிவு கொண்டு. 338

பாதி மதிவாழ் முடியாரைப் பயில்பூ சனையின் பணிபுரிவார்
பாதி இரவில் இங்கணைந்த தென்லே என்று பயமெய்திப்
பாதி உமையாள் திருவடிவிற் பரம ராவ தறியாதே
பாதி மதிவா ணுதலாரும் பதைத்து வந்து கடை திறந்தார்.

பாதியாய இளம்பிறை வாழ் முடியுடைய பெருமானை அர்ச்சிக்கும் பணிபுரியும் பெரியோராம் அந்தணர் நடுயாம இவ்விரவில் இங்கு வந்தது என்ன காரணமோ என்று பெரிதும் பயம் கொண்டு எழுந்து; வாயில் வந்து அழைத்தாலரை பாதி உருவை உமை வடிவாக உடைய சிவனுவதறியாதே; பாதியாய பிறைபோலும் அழகிய நெற்றியுடைய பரவையாரும் பதைப்புடன் வந்து தமது வாயிலின் கத வைத் திறந்தார். 339

மன்னும் உரிமை வன்றொண்டர் வாயில் தூதா வாயிலிடை
முன்நின் ருரைக் கண்டிறைஞ்சி முழுதும் உறங்கும் பொழுதின்கண்
என்னை ஆளும் பெருமான் இங் கெய்தி அருளி ஞர் என்ன
மின்னு மணிநூல் அணிமார்பர் எய்த வேண்டிற் றென் என்றார்.

நித்தலும் நீங்காத உரிமையுடைய தோழனும் சுந்தரரது பாலாக வந்தருளிய தூதர் தமது மாளிகை வாயில் முன்னுக நின்றுரைக் கண்டு வணங்கி; எல்லாம் உறங்குகின்ற பெருயாமத்திடை என்னை யாளும் பெருமான் இங்கு எழுந்தருளி னர் என்னும்படி மின்னும் அழகிய நூலணிந்த மார்புடையீர் நீர் இங்கு வருதல் வேண்டும் காரியம் என்னுகும் என்றார் பரவை அம்மை. 340

வேறு

கங்கைநீர் கரந்த வேணி கரந்தவர் அருளிச் செய்வார்
நங்கைநீ மருது செய்யின் நான்வந்த துரைப்பதென்ன
அங்கயல் விழியி னரும் அதனை நீர் அருளிச் செய்தால்
இங்கெனக் கிசையு மாகில் இசையலாம் என்று சொல்லி.

அதுவேலை கங்கை யாற்றை மறைத்து வைத்த கடவுள் சொல்லி அருளிச் செய்கின்றார் பெண்ணே பரவை! நான் சொல்வதை நீ மறுத்திடாது செய்யின் நான் வந்த காரணம் சொல்வேன் என்றலும் அது கேட்டு அழகிய கயல்மீன்போலும் நீண்ட விழியுடைய பரவையாரும் அக்காரணத்தை நீர் சொல்லியருளினால் அது இங்கு எனக்கு இசையுமாகில் நான் சம்மதம் கொள்ளலாம் என்றலும். 341

என்நினைந் தணைந்த தென்பால் இன்னதென் றருளிச் செய்தால்
பின்னைய தியலு மாகில் ஆம்எனப் பிரானார் தாமும்
மின்னிடை மடவாய் நம்பி வரஇங்கு வேண்டும் என்ன
நன்னுத லாருஞ் சால நன்று நம் பெருமை ஏன்பார்.

ஐயர் பெருமானே! நீர் என் நினைந்து என்பால் வந்தது; அதனை இன்னதென்று சொல்லியருளிச் செய்தால் பின்னர் அது என்னால் முடியுமாகில் நான் செய்திட முடியும் எனக் கூறிடலும் அது கேட்ட எம்பெருமானார் தாமும் மின்னலை ஒத்த சிற்றிடை உடைய பெண்ணே! உன்னிடம் வேண்டுவது சுந்தரன் இங்கு வரப்பெறல் வேண்டும் என்றிடலும்; அது கேட்ட நல்ல நெற்றியுடைய பரவையும் ஐயர் பெருமானை நோக்கி மிகவும் நன்று நம்முடைய பெருமை என்று சொல்வாராய் பின்னரும்: 342

பங்குனித் திருநா ளுக்குப் பண்டுபோல் வருவா ராகி
இங்கெனப் பிரிந்து போகி ஒற்றியூர் எய்தி அங்கே
சங்கிலித் தொடக்குண் டாருக் கிங்கொரு சார்வுண்டோ நீர்
கங்குலின் வந்து சொன்ன காரியம் அழகிது என்றார்.

பங்குனி மாசத்திடை வரும் உத்தரத்திருநாளுக்கு வழக்கம் போல மீண்டு என்னிடம் வருவார் போல இங்கு என்னைத் தனி விடுத்துப் பிரிந்து போய்; திரு வொற்றியூர் சேர்ந்து அங்கே சங்கிலியாருடன் தொடர்பு கொண்ட அவருக்கு இங்கு ஒரு சேர்மதியும் உண்டோ? இந்த இரவிலே நீரும் வந்து சொன்ன இக் காரியம் நன்றுக இருக்கின்றது என்றார் பரவையார். 343

நாதரும் அதனைக் கேட்டு நன்கை நீ நம்பி செய்த
ஏதங்கள் மனத்துக் கொள்ளா தெய்திய வெகுளி நீங்கி
நோதக ஒழித்தற் கன்றே நுன்னையான் வேண்டிக் கொண்டது
ஆதலின் மறுத்தல் செய்ய அடாதென அருளிச் செய்தார்.

எமது பெருமானும் அதனைக் கேட்டு "பெண்ணே நீ உனது தலைவனை சுந்தரன் செய்தகுற்றங்களை மனதில் கொள்ளாது அதனால் விளைந்த வெகுளி நீங்கி; உன்பாலாக உள்ள நோதல்களை ஒழித்திடவன்றே உன்னையான் இப்படி வேண்டிக் கொண்டது. அதனால் இப்படி நீ மறுத்தல் செய்தல் உனக்கு அடாத காரியம் என்று சொல்லியருளினர். 344

அருமறை முனிவரான ஐயரைத் தைய லார்தாம்
கருமப்ர தாக நீர்இக் கடைத்தலை வருகை மற்றுஉம்
பெருமைக்குத் தகுவ தன்றால் ஒற்றியூர் உறுதி பெற்றார்
வருவதற் கிசையேன் நீரும்போம் என மறுத்துச் சொன்னார்.

அது கேட்டலும் அரிய வேகநெறி ஒழுகும் அந்தணராய் வடிவுகொண்ட எம் பெருமானை பரவையும் நோக்கி "இந்த ஒருகாரியத்திற்காக நீர் இங்கு இந்த வாய்தலில் வருகை; எம்பெருமானை அர்ச்சனை புரிந்திடும் மேலாம் திருவுடைய உமக்கு நீர் கொண்ட அப்பணியின் பெருமைக்கு தகுவதான காரியம் அன்று. திருவொற்றியூரில் சங்கிலியிடம் தொடர்பு கொண்டார் அவர் இங்கு வருதற்கு இசையேன். நீரும் திரும்பிப்போம் என்று மறுத்துச் சொன்னார்: 345

நம்பர்தாம் அதனைக் கேட்டு நகையும்உட்கொண்டு மெய்ம்மைத்
தம்பரி சறியக் காட்டார் தனிப்பெருந் தோழனர்தம்
வெம்புறு வேட்கை காணுந் திருவிளை யாட்டின் மேவி
வம்பலர் குழலினர்தாம் மறுத்ததே கொண்டு மீண்டார்.

எம்பெருமானும் அதுகேட்டு உள்ளே சிரிப்பும் கொண்டு உண்மையாய தமது தன்மையை தான் இன்னுரென பரவைக்கு வெளிப் படக்காட்டாராகி; தனது தனிப் பெரும் தோழனர் பரவையால் கொண்ட மோகத்தின் விளைவால் வெம்பிடும் விளைவைக்கண்டு மகிழ்ந்தருளும் திருவிளையாட்டில் நின்று; வாசனை அலரும் கூந்தலுடைய பரவை நாயகியார் மறுத்த அச்சொல்லை ஏற்றுக்கொண்டு மீண்டருளினர். 346

தூதரைப் போக விட்டு வரவுபார்த் திருந்த தொண்டர்
நாதரை அறிவி லாதே நன்னுதல் புலவி நீக்கப்
போதரத் தொழுதேன் என்று புலம்புவார் பரவை யாரைக்
காதலில் இசைவு கொணடு வருவதே கருத்துட் கொள்வார்.

எம்பிரான் மீண்டருளலும் தனது தூதுவரைப் போகவிட்டு வரவு பார்த்திருந்த தொண்டர் சுந்தரரும் நினைவார் "எனது நாதரை நான் அறிவிலாதே நல்ல அழகிய நெற்றியுடைய பரவையின் வெறுப்பு நீக்கிடப்போகும்படி தொழுதேனே! என்ன நான் செய்தேன்! என்று புலம்பி அழுவார். எதுவாயினும் பரவை யாரைத் தம்பால் கொண்ட காதல் பெருக இசைவித்துக் கொண்டு வருவதே தமது கருத்தினில் கொள்வாராய் இவை இவை நினைவார். 347

போயவள் மனையில் நண்ணும் புண்ணியர் என்செய் தாரோ
நாயனர் தம்மைக் கண்டால் நன்னுதல் மறுக்கு மோதான்
ஆயஎன் அயர்வு தன்னை அறிந்தெழுந் தருளி னர்தாம்
சேயிழை துனிதீர்த் தன்றி மீள்வது செய்யார் என்று.

இங்கு நின்றும் சென்று பரவையின் மனையில் சென்ற புண்ணியன் எம்பிரான் என்செய்தாரோ? என்அப்பனைக் கண்டால் பரவையும் பின்னரும் மறுத்துப் பேசுவாளோ? எவ்வாறுயினும் எனது அயர்ச்சி தன்னை அறிந்து எழுந்தருளிச் சென்ற பெருமான் பரவையது கலக்கத்தை நீக்கி ஆறுதல் செய்தன்றி மீண்டு வரமாட்டார் என நினைந்து: 348

வழிஎதிர் கொள்ளச் செல்வர் வரவுகா ணுது மீள்வர்
அழிவுற மயங்கி நிற்பர் அசைவுடன் இருப்பர் நெற்றி
வீழியவர் தாழ்த்தார் என்று மீளவும் எழுவர் மாரன்
பொழிமலர் மாரி வீழ ஒதுங்குவார் புன்க ணுற்றூர்.

திரும்பிவரும் பெருமானே வழியில் எதிர்கொள்ளத்தாம் எழுந்து செல்வார். ஆனால் ஐயருடைய வரவைக்காணுது மீள்வார். அவரைக் காணுத அத்தன்மையால் மனம் அழிவுற மயங்கி நிற்பார். அந்த சஞ்சலத்துடன் ஓர்புறம் இருப்பார். இருந்து என்னே இது நெற்றியில் கண் உடையபெருமான் வரத்தாமதித்தார். நான் சென்று பார்ப்பேனே என்று மீளவும் எழுவார். இந்த நினைவுடையார் மேல் மன்மதன் பொழிகின்ற மலர் மாரி வீழ ஒதுங்குவார். பெரும் துயரமுற்றார். 349

பரவையார் தம்பால் நம்பி தூதராம் பாங்கிற் போன
அரவணி சடையார் மீண்டே அறியுமா றணையும் போதில்
இரவுதான் பகலாய்க்தோன்ற எதிரெழுந் தணைய்விட்ட
உரவுநீர் வெள்ளம் போல ஓங்கிய களிப்பிற் சென்றூர்.

இத்தன்மையால் சுந்தரர் பெருமான் பரவைபால் கொண்ட மோகத்தால் பெரும் அவதியுறலும்; பரவை அம்மையார் பாலாக சுந்தரருடைய தூதர் என்னும் பதவியால் போன பாம்பணிந்த சடையுடைய எம்பெருமான் மீண்டு; தன்னை அறியுமாறு சுந்தரர்பால் வரும்பொழுது; எம்பெருமானது ஒளியால் இராக்காலம் பகலாகித் தோன்றிடலும் அதுகண்டு எதிர்எழுந்து எம்பெருமானது முன்பாக அணைக் கட்டை உடைத்தெழும் வேகமுடைய நீர் வெள்ளம் போன்று; மனதில் பெரும் மகிழ்வுடன் சென்றூர் சுந்தர மூர்த்தி சுவாமிகள். 350

சென்றுதம் பிரானைத் தாழ்ந்து திருமுகம் முறுவல் செய்ய
ஒன்றிய விளையாட் டோரார் உறுதிசெய் தணைந்தார் என்றே
அன்றுநீர் ஆண்டுகொண்ட அதனுக்குத் தகவே செய்தீர்
இன்றிவள் வெகுளி எல்லாந் தீர்த்தெழுந் தருளி என்றூர்.

திரு முன்பு சென்று; தமது பெருமானைத் தாழ்ந்து திருமுகம் மலர்வினுல் முறுவல் செய்திட சுவாமி கொண்ட திருவிளையாட்டினை உணராராகி தமக்காக பரவையைச் சாந்தப்படுத்தி வந்தார் என்று நினைந்து பெருமானை நோக்கி ஐயனே! அன்று நீர் என்னை அடிமையாக ஆண்டு கொண்ட அதனிற்கு ஏற்றதகவாக் இன்று இதனைச் செய்துளீர் பரவையினது கோபமெல்லாம் தீர்த்து இங்கு வந்தருளி'' என மொழிந்தார் சுந்தரர். 351

அம்மொழி விளம்பும் நம்பிக் கையர்தாம் அருளிச் செய்வார்
நம்மைநீ சொல்ல நாம்போய்ப் பரவைதன் இல்லம் நண்ணிக்
கொம்மைவெம் முலேபி னுட்சுன் திறமெலாங் கூறக் கொள்ளாள்
வெம்மைதான் சொல்லி நாமேவேண்டவும் மறுத்தாள் என்றூர்.

அந்த வார்த்தை விளம்பிய எமது தலைவர் சுந்தரர்க்கு எம்பிரான் திருவாரூர் ஐயரும் அருளிச் செய்கின்றூர் ''நம்மை நீ தூதுபோம் படிசொல்ல நாம்போய் பரவையாரது இல்லத்தை அடைந்து பநத்த கொடிய முலையுடைய அவளுக்கு உன்தன்மை எல்லாம் கூறினும் அவள் ஏற்றுக் கொண்டாள் இல்லை. கொடும்வார்த்தைகளையே சொல்லி; நாம் பலகால் வேண்டி நின்றும் மறுத்து நின்றுள்'' என்றூர்: 352

அண்ணலார் அருளிச் செய்ய கேட்டஆ ரூரர் தாமும்
துண்ணென நடுக்கம் உற்றே தொழுது நீர் அருளிச் செய்த
வண்ணமும் அடியா ளான பரவையோ மறுப்பாள் நாங்கள்
எண்ணஆர் அடிமைக் கென்ப தின்றறிவித்தீர் என்று.

எம்பெருமான் இவ்வாறு அருளிச் செய்திடக் கேட்ட சுந்தரரும் திடீரென நடுக்கம் கொண்டு; தொழுது; அப்பனே நீர் அருளிச் செய்த வண்ணம் செய்யாது

உமது அடியாளான பரவையோ மறுத்திடுவாள்! இதனை ஏற்கமாட்டேனே! நாங்கள் உமது அடிமைத் திறத்திற்கு மாறுபட்டோம் என்பதை என்முன்னல் நின்று இன்று அறிவித்தீர் என்று பின்னரும். 353

வானவர் உய்ய வேண்டி மறிகடல் நஞ்சை உண்டீர்
தானவர் புரங்கள்வேவ மூவரைத் தவிர்த்தாட்கொண்டீர்
நான்மறைச் சிறுவர்க் காகக் காலனைக் காய்ந்து கட்டீர்
யான்மிகை உமக்கின் றுனல் என்செய்வீர் போதா தென்றூர்.

எப்பிரானே! தேவர்கள் உய்யவேண்டி மறித்துப் புரளும் திரைக்கடல் நஞ்சை நீர் உண்டீர். அசுரது முப்புரங்களும் எரிந்து அவியும் போது அதனுள் இருந்த மூன்று அசுரர்கட்கு சேதம் வராது தடுத்து ஆண்டு கொண்டீர். நான்கு வேதநெறி ஒழுகிடும் அந்தணச் சிறுவன் மார்க்கண்டர்க்காக இயமனை உதைத்து அழித்தீர். இவ்வாறுன சர்வவல்லமை உடைய உமக்கு எனது இக்காரியம் செய்யமுடியாத தொன்றுகி விட்டால் இதற்குமேல் என்செய்யலாம் நீர் இங்குவராமல் என்றூர் சுந்தரர் பெருமான். 354

ஆவதே செய்தீர் இன்றென் அடிமைநீர் வேண்டாவிட்டால்
பாவியேன் தன்னை அன்று வலியஆட்கொண்ட பற்றென்
நோவுமென் அழிவுங் கண்டீர் நுடங்கிடை அவள்பால் இன்று
மேவுதல் செய்யீ ராகில் விடும்உயிர் என்று வீழ்ந்தார்.

இஃதென்ன உம்மால் ஆகக்கூடிய இதையா இப்படிச் செய்தீர்? தேவரீர் இன்று எனது அடிமைத் தன்மையை வேண்டாது விடுத்தால்; பாவியேனை அன்று வலிய வந்து ஆட்கொண்ட பற்றினுல் என்ன பிரயோசனம்? எனது உடல் நோவையும் அதனுல் விளையும் அழிவையும் நேரில் நீர் கண்டு கொண்டீர்? மீண்டும் சிறுகிய இடையுடைய பரவைபால் நீர் இன்று என்னைக் கூட்டிவைத்திடாவிடில் எனது உயிர்விடப்படும் என்று எம்பிரான் திருமுன்பு வீழ்ந்தார் சுந்தரர்: 355

தம்பிரான் அதனைக்கண்டு தரியாது தளர்ந்து வீழ்ந்த
நம்பியை அருளால் நோக்கி நாம்இன்னம் அவள்பாற்போய் அக்
கொம்பினை இப்போ தேநீ குறுகுமா கூறுகின்றேம்
வெம்புறு துயர்நீங் கென்றூர் வினைஎலாம் விலக்க வல்லார்.

அவருடைய பெருமான் திருவாரூர் அப்பன் அதனைக் கண்டு தன்முன் வேதனை தாங்கொணுது தளர்ந்து வீழ்ந்த எம் தலைவர் சுந்தரரை அருளால் நோக்கி; சுந்தரனே! நாம் இன்னமுமொருகால் பரவைபால் போய் பூங்கொடிபோலும் அவளை இப்பொழுதே நீ சேருமாறு கூறுகின்றேம். வேதனையுறும் உன்துயரம் நீங்குவாய்' என்று கூறியருளினர் எல்லாச் செயலையும் தாமே விளைத்திட வல்லபெருமான். 356

மயங்கிய நண்பர் உய்யவாக் கெனும் மதுர வாய்மை
நயங்கிளர் அமுதம் நல்க நாவலூர் மன்னர் தாமும்
உயங்கிய கலக்கம் நீங்கி உம்மடித் தொழும்ப னேனைப்
பயங்கெடுத் திவ்வா றன்றே பணிகொள்வது என்று போற்ற.

திருமுன்பு வீழ்ந்து மயங்கிய நண்பர் சுந்தரர் உய்ந்திட; தமது இந்த திருவாக்கு என்னும் மதுரமாயவாய்மை மொழியாகும் அமுதினைக் கொடுத்திடலும் திருநாவலூர் அருள் அரசர் சுந்தரரும்; உள்ளத்தை வருத்திய கலக்கம் நீங்கி எழுந்து எம்பிரானே! உமது திருவடிபணியும் தொண்டனேனை நான் கொண்ட பயம் கெடுத்து இவ்வண்ணமாக வன்றே பணிகொள்வது'' எனக் கூறிப் போற்றுதலும். 357

அன்பர்மேற் கருணைகூர ஆண்டவர் மீண்டுஞ் செல்லப்
பின்புசென் றிறைஞ்சி நம்பி பேதுற வோடு மீண்டார்
முன்புடன் போதா தாரும் முறைமையிற் சேவித் தேகப்
பொன்புரி சடையார் மாதர் புனிதமா ளிகையிற் சென்றூர்.

அன்பர் சுந்தரர் மேலாகத் திருக்கருணை கூர்ந்திட ஆண்டு கொண்ட பெரு மானும் மீண்டும் தூதின் மேலாகி பரவையார் மாளிகை சென்றிட; பின் பாகச் சென்று அவரை வணங்கி எம்தலைவர் சுந்தரரும் உள்ளம் பேதலிப்புடன் மீண்டருளி வந்தார். இப்பொழுது தூது செல்லும் எம்பெருமானுடன் முன்னர் சேவித்துச் செல்லாத சிவகணநாதரும் முறைமையாக எம்பிராற்கு சேவகம் செய்துபோக பொன்போல் மிளிரும் சடையுடைய பெருமானும் பரவையாருடைய புனிதம் நிறைந்த மாளிகையில் போயருளினர். 358

மதிநுதற் பரவை யார்தாம் மறையவர் போன பின்பு
முதிர்மறை முனியாய் வந்தார் அருளுடை முதல்வ ராகும்
அதிசயம் பலவுந் தோன்ற அறிவுற்றே அஞ்சிக் கெட்டேன்
எதிர்மொழி எம்பிரான்முன் என்செய மறுத்தேன் என்பார்.

இவ்வாறு எம்பிரான் மறுமுறை தூது செல்லலும்; இதன்முன் பிறைபோலும் நெற்றியுடைய பரவை அம்மையாரும் எம்பிரான் அந்தணவடிவுடன் முதன்முறை தூது வந்து போனபின்பு; முதிய வேதநெறி ஒழுகும் முனிவராய் வந்தபெருமான் அருள் சிறந்த முதல்வராகும் சிவன் என்னும் படியான அதிசயம் பலவும் இப் பொழுது மனதில் தோன்றி அறிவுற அந்த நினைவால் பயந்து; அந்தோ கெட்டேனே நான்! எம்பிரான் முன்னராக எதிர்மொழி மறுத்துப்பேசி என்ன காரியம் நான் செய்தேன் என்றார். 359

கண்துயில் எய்தார் வெய்ய கையற வெய்கி ஈங்கின்று
அண்டர்தம் பிரானார் தோழர்க் காக அர்ச் சிப்பார் கோலம்
கொண்டணைந் தவரை யான்உட் கொண்டிலேன் பாவி யேன்என்
றெண்சுடர் வாயி லேபார்த் துழையரோ டழியும் போதில்.

இந்த வேதனை தரும் நினைவாலே கண்கள் துயில் கொள்ளாராய்; கொடும் துயரம் அடைந்து ''ஈங்கு இன்றிரவு தேவர்தம் பெருமான் தமது தோழர்க்காக தம்மை அர்ச்சிக்கும் முனிவர் கோலம் கொண்டு வந்தருளினர். நான் பாவியேன் அதனை நினைந்துட் கொண்டிலேனே! எனக் கூறி தனது ஒளியுடைய அழகிய திரு வாயிலையே நோக்கியபடி தனது தோழியருடன் மொழிந்து பெரும் மனத்துயரால் மயங்கிடும் பொழுது: 360

வெறியுறு கொன்றை வேணி விமலருந் தாமாந் தன்மை
அறிவுறு கோலத் தோடும் அளவில்பல் பூத நாதர்
செறிவுறு தேவர் யோகர் முனிவர்கள் சூழ்ந்து செல்ல
மறுவில்சீர்ப் பரவை யார்தம் மாளிகை புகுந்தார் வந்து.

வெறித்திடும் தேன் சொரியும் கொன்றை மாலைச் சடையுடைய நின்மலமூர்த் தியாம் எம்பிரான் சிவனும்; தாமே யாய் வருகின்றார் என்னும் தன்மையைப் பரவை அறியக்கொள்ளும் நிசரூபத்துடன் அளவில்லாத பல்பூதர்கள் கணநாதர்கள் நெருங்கி வரும் தேவர்கள் யோகர்கள் முனிவர்கள் இவர்கள்யாவரும் சூழ்ந்துவர குற்றம் எதுவும் இல்லாத சீருடையபரவையாரது மாளிகையில் வந்து புகுந்தருளினர்; 361

பாரிடத் தலைவர் முன்னும் பல்கண நாதர் தேவர்
நேர்வுறு முனிவர் சித்தர் இயக்கர்கள் நிறைத லாலே
பேரரு ளாளர் எய்தப் பெற்றமா ளிகைதான் தென்பால்
சீர்வளர் கயிலை வெள்ளித் திருமலை போன்ற தன்றே.

பூதகணங்களின் தலைவர்கள் முன்னாக பல கணநாதரும் தேவர்களும் என் பிராணை அன்றிஎண்ணுத நியதியுடைய முனிவர்களும் சித்தர்களும் இயக்கர்களும் யாரும் வந்து நிறைதலால் பேரருளாளராய எம்பெருமான் சென்று அடைத் திடப் பெற்ற அம்மாளிகை தான் தென்னாட்டில் விளங்கிடும் சீர்வளரும் திருக்கை லாய வெள்ளித்திருமலை போன்றது; 362

ஐயர்அங் கணைந்த போதில் அகிலலோ கத்துள் ளாரும்
எய்தியே செறிந்து சூழ எதிர்கொண்ட பரவை யார்தாம்
மெய்யுறு நடுக்கத்தோடு மிக்கெழும் மகிழ்ச்சி பொங்கச்
செய்தாளிணைமுன் சேர விரைவினற் சென்று வீழ்ந்தார்.

எம்பெருமான் அங்கு சேர்ந்த போதில் அகில உலகத்துள்ளாரும் வந்து நெருங்கிச் சூழ எம்பெருமானைவந்து எதிர்கொண்ட பரவையாரும் மேனியில்கொண்ட நடுக்கத்துடன் உள்ளத்து மிகுந்து எழும் மகிழ்ச்சிபொங்கிட; எம்பெருமானது செம் மையாய திருவடி முன் பொருந்த மிகுவிரைவினுல் சென்று வீழ்ந்தார் 363

அரிஅயற் கரியார் தாமும் ஆயிழை யாரை நோக்கி
உரிமையால் ஊரன்ஏவ மீளவும் உன்பால் வந்தோம்
முருகலர்குழலாய் இன்னம் முன்புபோல் மறுதே நின்பால்
பிரிவுற வருந்துகின்றூன் வரப்பெற வேண்டும் என்றார்.

திருமுன்பு வீழ்ந்த பரவையாரை திருமால் பிரமனுக்கு அரிய கடவுள் சிவ மூர்த்தியும் பார்த்தருளி தோழன் என்ற உரிமையால் சுந்தரன் என்னைச் செலுத்த மீளவும் நான் உன்பால் வந்தோம். வாசனை அலரும் கூந்தலுடையாளே! இன்ன மும் முன்போல நீ மறுத்திடாது; உன்னுல் பிரிந்து கொள்ளப்பெற்றதால் பெரிதும் வருந்து கின்றுன் சுந்தரன். அவன் இங்கு வரப்பெறுதல் வேண்டும்'' என்றார். 364

பெருந்தடங் கண்ணி னரும் பிராண்முன்பு மிகவும் அஞ்சி
வருந்நிய உள்ளத்தோடு மலர்க்கரங் குழல்மேற் கொண்டே
அருந்நிரு மறையோ ராகி அணைந்தீர்முன் அடியேன் செய்த
இருந்தவப் பயனும் என்ன எய்தியநீரோ என்பார்.

விசாலித்த அழகுடைய கண் கொண்ட பரவையாரும் எம்பெருமான் முன்பு பெரிதும் பயந்து வருந்திய உள்ளத்தினுடன் மலர்போன்ற தமது கைகளை உச்சி மீது சூடியருளி எம்பிரானை நோக்கி ''அரிய திருவுடைய அந்தணராகி வந்தீர்முன் அடியேன் செய்த பெரும் தவத்தின் பயனை இங்கு இப்பொழுது வந்தருளிய நீரோ'' என்பவராய், 365

துளிவளர் கண்ணீர் வாரத் தொழுதுவிண் ணப்பஞ் செய்வார்
ஒளிவளர் செய்ய பாதம் வருந்தஓர் இரவுமாறு(து)
அளிவரும் அன்பர்க்காக அங்கொடிங் குழல்வீராகி
எளிவரு வீருமானுல் என்செய்கேன்இசையாது என்றார்.

பின்னரும் துளிதுளியாக கண்களால் கண்ணீர் வடிந்திட எம்பெருமானைத் தொழுது விண்ணப்பஞ் செய்வார் பரவை அம்மை ''ஒளிவளரும் செவ்விய இத்திருப் பாதம் வருந்திட இன்று ஓர் இரவு மாறுது அன்புகொண்ட உமது அன்பர்க்காக அங்கோடு இங்கு உழல் வீராகி அடியார்க்கு எளியவனுகித் தூதின் மேல் வருவீரு மானுல் நான் இசையாது வேறு என்செய்வேன்'' என்றார். 366

நங்கைநின் தன்மைக் கேற்கும் நன்மையே மொழிந்தாய் என்று
மங்கையோர் பாகம்வைத்த வள்ளலார், விரைந்துபோகத்
திங்கள்வா ணுதலி னருஞ் சென்றுபின் இறைஞ்சி மீண்டார்
எங்களை ஆளும் நம்பி தூதர்மீண் டேகு கின்றார்.

சுந்தரர் பெருமான் தம்பால் வருதற்கு பரவைஅம்மை இசைவு கொண்டதும் அவளை நோக்கியருளி பெண்ணை நினது பெருமையாம் தகவிற்கேற்கும் நன்மையே இப்பொழுது மொழிந்தாய் என்று பெண்ணை ஒருபாகம் வைத்த அருள் வள்ளல் எம்பிரான் திருவாரூர் அப்பன் மீண்டு விரைந்து போதலும்; அதுகண்டு இளம் பிறைபோலும் அழகிய நெற்றியினை உடைய பரவையாரும் என்பிரான் பின்சென்று வணங்கி மீண்டருளினர். இப்பால் எங்களை ஆள்கின்ற சுந்தரர் பெருமான் தூதுர் மீண்டு செல்கின்றார். 368

வேறு

ஆதியும் மேலும் மாலயன் நாடற் கருளாதார்
தூதினில் ஏகித் தொண்டரை ஆளுந் தொழில்கண்டே
வீதியில் ஆடிப் பாடி மகிழ்ந்தே மிடைகின்றூர்
பூதியில் நீடும் பல்கண நாதப் புகழ்வீரர்.

ஆதியாய மூலத்தையும் மேலாய முடிவையும் இன்னமுமே நாடிக் கண்டிட அருள்புரியாத பரம்பொருளாம் சிவன் தூதாகச் சென்று தமது தொண்டர் சுந்தரர் பெருமானே ஆட்கொண்டிடும் தொழில் கண்டு அவர்சென்றருளும் திருவீதியில் ஆடியும் பாடியும் மிக மகிழ்ந்தே நெருங்குகிறூர்கள் நீற்றின் ஒளியால் நீடிதத கோலமுடைய பல கணநாதரும் புகழ் உடைய பூதவீரரும். 368

அன்னவர் முன்னும் பின்னும் மருங்கும் அணைவெய்த
மின்னிடை யார்பால் அன்பரை உய்க்கும் விரைவோடும்
சென்னியில் நீடுங் கங்கை ததும்பத் திருவாரூர்
மன்னவ னூர்அம மறையவ னூர்பால் வந்துற்றூர்.

அவ்வாறுன தன்மையின் அவர்கள் திருமுன்பும் பின்னும் அயலேயும் வந்து கொண்டிட; மின்னல் போல் இடையுடைய பரவை அம்மையார் பாலாக தம் அன்பர் சுந்தரரைச் சேர்த்திடும் பொருட்டுக் கொண்ட விரைவுடனுை; திருமுடி மேல் நெடுகக் கொண்டு விளங்கும் கங்கை ததும்பிட திருவாரூர் ஆளும் அரசர் தியாகராசர் அந்த ஆதிசைவ அந்தணர் சுந்தரர் பாலாக வந்து சேர்ந்தார். 369

அன்பரும் என்பால் ஆவி அளிக்கும் படிபோனூர்
என்செய்து மீள்வார் இன்னமும் என்றே இடர்கூரப்
பொன்புரி முந்நூல் மார்பினர் செல்லப் பொலிவீதி
முன்புற நேருங் கண்ணினை தானும் முகிழாரால்.

அதுவேனே எமது அன்பர் சுந்தரரும் என்பாலாக என் உயிரைத் தந்து காத்திடும் படி போல தூதுவர் எம்பெருமான் இனியும் என் செய்து மீள்வார் என்றே உள்ளத்து இடர்பெருக; பொன்னுல் புரிந்த முப்புரிநூல் அணிந்த திருவாரூர் இறைவர் சென்றிடலால் பொலியும் வீதியினை முன்னுக நோக்கி நிற்கும் அவரது கண் இமைக்காதே நேர் நோக்கி நின்றூர். 370

அந்நிலை மைக்கண் மன்மதன் வாளிக் கழிவார்தம்
மன்னுயிர் நல்குந் தம்பெரு மானூர் வந்தெய்த
முன்னெதிர் சென்றேமூவுல குஞ்சென்றடையுந்தாள்
சென்னியில் வைத்தெதன் சொல்லுவர் என்றே தெளியாதார்.

நேர் வைத்த பார்வையின் மன்மதன் ஓய்வின்றிச் சொரியும் மலர் அம்புகட்கு அழிபவர் தமது கண் காணும் படியாக மேலான அவரது உயிரைத் தந்து காக்கும் தனது நாயகன் வந்து சேர அவர் முன்பு எதிர் சென்று மூன்று உலகமும் சென்று பணியும் பெருமானது திருவடிகளை உச்சி மீது சூடிக் கொள்ள வணங்கி சுவாமி இன்னமும் என்ன சொல்லுவாரோ என்றே தெளியாராகி நின்று. 371

எம்பெரு மான்நீர் என்னுயிர் காவா திடர்செய்யும்
கொம்பனை யாள்பால் என்கொடு வந்தீர் குறைஎன்னத்
தம்பெரு மானும் தாழ்குழல் செற்றந் தணிவித்தோம்
நம்பி இனிப்போய் மற்றவள் தன்பால் நணுகென்ன.

எம்பெருமானே! நீர் என் உயிர் போகாதபடி காக்காது தனது கோபத்தால் இடரே செய்திடும் பூங்கொடி போலும் பரவையிடமிருந்து என்ன பதில் கொண்டுவந்தீர் என்னலும்; எம்பிரான் அவரை நோக்கி தாழ்ந்த கூந்தலுடைய பரவையின் கோபமெல்லாம் தணிவித்தோம்; சுந்தரனே நீ இனிச் சென்று மற்று பரவையிடம் சேர்வாய் என்னலும். 372

நந்தி பிரானூர் வந்தருள் செய்ய நலமெய்தும்
சிந்தையுள் ஆர்வங் கூர்கலி எய்தித் திகழ்கின்றூர்
பந்தமும் வீடும் நீர்அருள் செய்யும் படிசெய்தீர்
எந்தைபி ரானே என்னினி என்பால் இடர்என்றூர்.

மேலான கடவுளர்க்கும் பெருமானூர் திருவாரூர் புற்றிடங் கொண்ட ஈசன் வந்து இவ்வணம் அருள் செய்திட; அது கேட்டருளி நலம் சேரும் தமது சிந்தையில் ஆர்வம் கொண்ட மகிழ்ச்சியடைந்து திகழ்கின்ற சுந்தரர் எம் பிராணே நோக்கி ''எந்தை பிரானே பந்தமும் முத்தியும் நீர் அருள் செய்து உய்யக் கொள்ளும் அத்தகவால் இதுவும் செய்தீர் இதனுல் அடியேன் பாலாக இனி என்ன இடருளது'' என்றூர். 373

என்றடி வீழும் நண்பர்தம் அன்புக் கெளிவந்தார்
சென்றணை நீஅச் சேயினழ பால்என் றருள்செய்து
வென்றுயர் சேமேல் வீதி விடங்கப் பெருமாள்தம்
பொன்திகழ் வாயிற் கோயில் புகுந்தார் புவிவாழ.

என்று கூறித்திருப்பாத முன்பு வீழும் தம் தோழர் சுந்தரர் அன்புக்கு எளிதாக வெளிவந்த பெருமானும் அவரை நோக்கி ''நீ சென்று சேர்ந்து கொள் அந்தப் பரவை பாலாக'' என்று கூறி அருள் புரிந்து வெற்றிதரும் உயர்ந்த இடபமேல் வரும் திருவாரூர் அமர்ந்த தியாகராசப் பெருமான்; தமது பொன் திகழும் வாயிலுடைய கோயில் சென்று புகுந்தார் இப்பூமி இத்தூதின் அருள் உணர்ந்து என்றும் வாழ்ந்திட. 374

தம்பிரா னூர்பின் சென்று வாழ்ந்தெழுந் தருளால் மீள்வார்
எம்பிரான் வல்லவாறென் றெய்திய மகிழ்ச்சி யோடும்
வம்பலர் குழலார் செம்மொன் மாலிகை வாயில் நோக்கி
நம்பியா ரூரர் காதல் நயந் தெழுந் தருளும் போது,

கோவில் சென்றருளும் தமது பெருமான் பின் சென்று தாழ்ந்து எழுந்து அருளால் மீள்பவர் எம்பெருமானுடைய வல்லமை இருந்தவாறு என்று தம்மிடத்துக் கொண்ட மகிழ்ச்சியோடும் வாசனை அலரும் கூந்தலுடைய பரவை அம்மையாரது செம்பொன்னின் மாலிகை வாயிலை நோக்கி எம்பிரான் சுந்தரர் காதலுடன் நயந்து எழுந்தருளிச் சென்றிடும் போதினில். 375

முன்துயில் உணர்ந்து சூழ்ந்த பரிசனம் மருங்கு மொய்ப்ப
மின்றிகழ் பொலம்பூ மாரிவிண்ணவர் பொழிந்து வாழ்த்த
மன்றல்செய் மதுரசித சீகரங் கொண்டு மந்தத்
தென்றலும் எதிர்கொண் டெய்துஞ் சேவகம் முன்புகாட்ட.

செல்லுமுன் துயல் நீங்கி எழுந்து எம்பிரானைச் சூழ்ந்த பரசனர்கள் அருகே மொய்த்துவர; மின்னின் ஒளி திகழும் அழகிய பூமழையை வானவர் பொழிந்து வாழ்த்தெடுப்ப; வாசனையும் இனிமையும் செய்யும் மதுரமாய குளிர்ந்த நீர்த்திவலைகளுடன் கூடி மெல்லிதாய் வீசிடும் தென்றற் காற்று எதிர்கொண்டு எம்பிரான் சுந்தரற்க்கு முன்வந்து பணிகொள்ளும் சேவகத் தன்மையை முன்புகாட்ட. 376

பூமாலைதண் கலவைச் சேறு மான்மதச் சாந்து பொங்கும்
கோலநற் பசுங்கர்ப் பூரங் குங்குமம் முதலாயுள்ள
சாலுமெய்க் கலன்கள் கூடச் சாத்தும்பூண் ஆடைவர்க்கம்
பாலன பிறவும் ஏந்தும் பரிசனம் முன்பு செல்ல.

பூமாலை குளிர்ந்த சந்தனக் கலவைச் சாந்து; கத்தூரிக் குழம்பு பொங்கும் கோலமுடைய பசிய கற்பூரம் குங்குமம் முதலாக உள்ளனவற்றோடு நல்நிலமை சாலும் மெய்மையாய வைரநகைகளும் அணியும் சுந்தரமான பட்டாடை வகைளும் இவையாவும் பிறவும் ஏந்திச் செல்லும் ஏவலாளர் முன்சென்றிட; 377

இவ்வகை இவர்வந் தெய்த எய்திய விருப்பி னோடும்
மைவளர் நெடுங்கண் ணாரும் மாளிகை அடைய மன்னும்
செய்வினை அலங்காரத்துச் சிறப்பணி பலவுஞ் செய்து
நெய்வளர் விளக்குத் தூபம் நிறைகுடம் நிரைத்துப் பின்னும்.

இவ்வகையாய சிறப்புடன் எம்பிரான் சுந்தரர் வந்து சேர; சுந்தரரை அடைந்திடும் விருப்பத்துடன் மைபூசப் பெற்ற நீண்ட வரிவிழி உடைய பரவையாரும் தமது மாளிகை முழுவதும் விளங்கிடச் செய்திடும் அழகிய அலங்காரத்துச் சிறந்த கோலங்கள் பலவும் செய்து; நெய்வார்த்து வளர்ந்தெரியும் விளக்கு தூபம் நிறைகுடம் இவைகள் நிரை நிரை வைத்து பின்னரும். 378

பூமலி நறும்பொற் றூமம் புனைமணிக் கோவை நாற்றிக்
காமர்பொற் சுண்ணம் வீசிக் கமழ்நறுஞ் சாந்து நீவித்
தூமலர் வீதி சூழ்ந்த தோகையர் வாழ்த்தத் தாமும்
மாமணி வாயில் முன்பு வந்தெதிர் ஏற்று நின்றார்.

பூக்கள் மலிந்த பொன் மாலைகள் நன்கு அழகு பெறக் கட்டிய மணிமாலைகள் தூக்கி; அழகிய பொற் சுண்ணம் எங்கும் வீசி வாசனை உடைய சந்தனத்தால் மெழுகி தூய மலர் சிறந்த அத்திருவீதியில் தோழிப் பெண்கள் வாழ்த்துகள் மொழிய; தாமும் பெரிய அழகுடன் சிறந்த முத்து மணிவாயில் முன்பாக வந்து எம்பிரான் சுந்தரரை எதிர் வரவேற்று நின்றார் பரவையார். 379

வண்டுலாங் குழலார் முன்பு வன்றொண்டர் வந்துகூடக்
கண்டபோ துள்ளங் காதல் வெள்ளத்தின் கரைகாணாது
கொண்டநாண் அச்சங்கூர வணங்கஅக் குரிசிலாரும்
தண்டளிர்ச் செங்கை பற்றிக் கொண்டுமா ளிகையுட் சார்ந்தார்.

இவ்வணம் நின்ற வண்டுகள் மொய்த்திடும் கூந்தலுடைய பரவை அம்மையார் திருமுன்பு எம்பிரான் சுந்தரர் வந்து சேர்தலும் கண்டபோது தமது உள்ளத்து எழுந்த காதல் வெள்ளம் பெருகிட கரை காணமுடியாது கொண்ட நாணமுடன் அச்சமும் கொள்ள வணங்கிடலும்: அந்த தலைவராய சுந்தரமூர்த்தி சுவாமிகளும் பரவை அம்மையாரது குளிர்ந்த தளிர்போலும் சிவந்த கையைப் பற்றிக் கொண்டு மாளிகையில் சேர்ந்தார். 380

இருவரும் தம்பி ரானுர் தாம்இடை யாடிச் செய்த
திருவருட் கருணை வெள்ளத் திறத்தினைப் போற்றிச் சிந்தை
மருவிய இன்ப வெள்ளத் தழுந்திய புணர்ச்சி வாய்ப்ப
ஒருவருள் ஒருவர் மேவும் நிலைமையில் உயிர்ஒன்றினார்.

பரவை அம்மையும் அப்பன் சுந்தரரும் தமது பெருமான் தாமும் தம்மிடத்து திருவிளையாடல் புரிந்து செய்தருளிய திருவருளின் கருணைவெள்ளத் திற்றதினைப் போற்றி தத்தமது சிந்தை பொருந்திய இன்பவெள்ளத்து அழுந்திக் கொண்ட புணர்ச்சி வாய்ப்புற ஒருவரில் ஒருவர் அன்பால் மேவிய நிலையில் உயிர் ஒன்றினார்: 381

ஆரணக் கமலக்கோயில் மேவிப்புற் றிடங்கொண் டாண்ட
நீரணி வேணி யாரை நிரந்தரம் பணிந்து போற்றிப்
பாரணி விளக்குஞ் செஞ்சொற் பதிகமா லைகளுஞ் சாத்தித்
தாரணி மணிப்பூண் மார்பர் தாம்மகிழ்ந் திருந்த நாளில்.

இவ்வணம் மகிழ்ந்து பேரின்பமுற்று; வேதங்களாய தாமரைத் தலத்தில் பொருந்தி கறையான் புற்றின் மீது இடங்கொண்டு ஆண்டருளிய கங்கை நீர் அணிந்த சடையுடைய பெருமானுரை நித்தலும் பணிந்து போற்றி இப்பூமிக்கு அழகாக விளங்கிட வைத்திடும் செஞ்சொல்லின் பதிகமாகும் மாலைகளும் பாடிச் சாத்தி மாலையணிந்த அழகிய பூணுடைய மார்பர் எம்பிரான் சுந்தரர் திருவாரூரில் மகிழ்ந்திருந்த நாட்களில்: 382

நம்பியா ரூரர் நெஞ்சில் நடுக்கம்ஒன் றின்றி நின்று
தம்பிரா னுரைத் தூது தையல்பால் விட்டார் என்னும்
இம்பரின் மிக்க வார்த்தை ஏயர்கோ னுர்தாம் கேட்டு
வெம்பினர் அதிச யித்தார் வெருவினர் விளம்ப லுற்றார்.

சுந்தரர் பெருமான் தனது நெஞ்சில் கொஞ்சமும் நடுக்கம் ஒன்றும் இல்லாது வைராக்கியமுடன் நின்று எம்பெருமான் சிவனே தூதாக ஓர் பெண்ணிடம் விட்டார் என்ற இவ்வுலகில் மிகுமேம்பாட்டுடன் பேசப்படும் வார்த்தையை ஏயர்கோன் கலிக்காமர் கேட்டு கவலைக் கையறவால் வெம்பினர்; அதிசயம் கொண்டார்; அச்சமுற்றார் இதனைச் சொல்லலுற்றார். 383

நாயனே அடியான் ஏவுங் காரியம் நன்று சால
ஏயும்என் றிதனைச் செய்வான் தொண்டனும் என்னே பாவம்
பேயனேன் பொறுக்க ஒண்ணாப் பிழைபினைச் செவிபாற் கேட்ப
தாயின பின்னும் மாயா திருந்ததென் ஆவி என்பார்.

எனது நாயகனே அவரது அடியன் சுந்தரன் செய்யும்படி ஏவிய காரியம் நன்றுயிருக்கின்றது. மிகவும் இது பொருந்தும் என இக்காரியத்தைச் செய்தான் ஓர் தொண்டனும்! இது என்ன செயல்! பெரும் பாவமே! பேயனேன் பொறுக்க முடியாத இப்பிழையினைச் என் செவியால் கேட்கும் படியாயின பின்னும் மாயாதிருந்தது எனது உயிர் என்று சொல்வார். 384

காரிகை தன்பாற் செல்லுங் காதலால் ஒருவன் ஏவப்
பாரிடை நடந்து செய்ய பாதா மரைகள் நோவத்
தேரணி வீதி யூடு செல்வது வருவ தாகி
ஓரிர வெல்லாந் தூதுக்(கு) உழல்வராம் ஒருவர், என்று

ஓர் பெண்ணிடத்துச் செல்லும் காதலால் ஒருவன் செலுத்திட இப்பூமியிடையாக நடந்து செம்மையாய பாத தாமரைகள் நோவறும்படி தேர் ஓடும் அழகிய வீதியிலே செல்வதும் வருவதுமாக ஓர் இரவு முழுவதும் தூதிற்கு உழன்று திரிவதாம் எமது ஒரு கடவுள் என ஏயர் கோனுர் மொழிந்து பின்னும். 385

நம்பர்தாம் அடிமை ஆற்றூ ராகியே நண்ணி னூரேல்
உம்பரார் கோனும் மாலும் அயனும்நேர் உணர ஒண்ணு
எமபிரான் இசைந்தால் ஏவப் பெறுவதே? இதனுக் குள்ளம்
கம்பியா தவனே யான்முன் காணுநாள் எந்நாள்? என்று

எம் பெருமான் தமது அடிமையின் துயரம் தாங்கொணாது முன்பு வந்தார் என்றுலும் அத்துடன் தேவர்களது அரசன் இந்திரனும் பிரமனும் திருமாலும் அறிய ஒண்ணாத எம்பிரான் தூது போதற்கு இசைந்தார் என்றுலும் அவரை அவ்வண்ணம் தூது செல்ல விடுத்திடவுமாமோ! இந்த ஒரு செயலிற்கு கொஞ்சமேனும் உள்ளம் நடுக்கமுறுத் அவன் சுந்தரனே யான் என் முன்னிலையில் காணும் நாள் எந்த நாள் என்று எண்ணிய ஏயர் கோனுர். 386

அரிவைகா ரணத்தினாலே ஆளுடைப் பரமர் தம்மை
இரவினில் தூதுபோக ஏவிஅங் கிருந்தான் தன்னை
வரவெதிர் காண்பேனாகில் வருவதென்னுங்கொல்? என்று
விரவிய செற்றம்பற்றி விள்ளும்உள் ளத்தராகி.

பெண் ஒருத்தி காரணத்தினாலே ஆளுடைய பெருமான் தன்னை இரவிலே தூது போம்படி விடுத்து அங்கு வைரமுடன் இருந்த அந்த சுந்தரனை என் எதிரே என்றுதல் ஒரு நாள்வரக் காண்பேன் என்றுல் என்ன அங்கு நடந்திடும் என்பது அறியவருமா? என்று பெருகிய கோபம் பற்றி வெடிப்பது போன்றஉள்ளத்தராகி 387

ஈறிலாப் புகழின் ஓங்கும் ஏயர்கோ னுர்தாம் எண்ணப்
பேறிது பெற்றூர் கேட்டுப் பிழைஉடன் படுவா ராகி
வேறினி இதற்குத் தீர்வுவேண்டுவார் விரிபூங் கொன்றை
ஆறிடு சடைய ருக்கு கதனைவிண் ணப்பஞ் செய்து.

இவ்வகை ஈறில்லாத புகழில் ஒங்கும் ஏயர்கோன் கலிக்காம நாயனுர் எண்ணிடலும் இந்த தூது போகும் பேற்றைப் பெற்ற சுந்தரர் கேட்டு தாம் செய்தது தவறு என்று உடன் பட்டுக் கொண்டு வேறு இந்தப் பிழைக்கு தீர்வினை வேண்டிக் கொள்வாராகிய அலர் வீரிந்த பூங்கொன்றையுடன் கங்கை சூடிய சடையார் சிவனுக்கு அதனை விண்ணப்பம் செய்து. 387

நாடொறும் பணிந்து போற்ற நாதரும் அதனை நோக்கி
நீடிய தொண்டர் தம்முள் இருவரும் மேவும் நீர்மை
கூடுதல் புரிவார் ஏயர் குரிசிலார் தம்பால் மேனி
வாடுறு சூலை தன்னை அருளினுர் வருந்து மாற்றுல்

நாள்தோறும் தனது தவற்றினுல் வந்த வசையை நினைந்து போற்றிட எம்பிரான் சிவனும் அதனை நோக்கி நீடிய அன்புடைய தமது தொண்டர் சுந்தரரும் ஏயர் கோனரும் இருவரும் தம்முள் தாம் அன்பினுல் மேவுகின்ற ஓர் தன்மை சைகூடிடும் படி வகைசெய்வாராய் அதற்காக ஏயர் கோன் கலிக்காமர் தம் பாலாக அவர் உடலம் வாடுறும் சூலை நோயினைச் சேருமாறு அருள் செய்தார் அச்சூலை நோயால் ஏயர் கோனுர் நன்றுடன் வருந்தும் தன்மையாக; 389

ஏதமில் பெருமைச் செய்கை ஏயர்தம் பெருமான் பக்கல்
ஆதியார் ஏவும்சூலை அனல்செய்வேல் குடைவ தென்ன
வேதனைமேன் மேற்செய்ய மிகஅதற்(கு) உடைந்துவீழ்ந்து
பூதநா யகர்தம் பொற்றுள் பற்றியே போற்று கின்ருர்.

குற்றம் ஏதும் இல்லாத பெருமையின் செய்கை உடைய ஏயர் கோன் கலிக்காம நாயனராய பெருமான் இடத்து எவற்றிற்கும் ஆதியாய சிவன் கொடுத்த ருளிய சூலநோய் அவர் வயிற்றை அடைந்து; நெருப்பில் தோய்த்த வேல் வயிற்றைக் குடைவது போன்று வேதனையை மேன் மேல் செய்திட அதனை சகித்திடாது அதற்கு அவர் மிக வருந்திச் சோர்வுற்று வீழ்ந்து பூதங்கட்கெல்லாம் நாயகரான சிவன் திருவடிகளைப் பற்றிக் கொண்டு போற்றுகின்ருர். 390

சிந்தையால் வாக்கால் அன்பர் திருந்தடி போற்றி செய்ய
எந்தமை யாளும் ஏயர் காவலர் தம்பால் ஈசர்
வந் துனைவருத்துஞ் சூலை வன்றொண்டன் தீர்க்கில் அன்றி
முந்துற ஒழியாதென்று மொழிந்தருள் செய்யக் கேட்டு

சிந்தையாலும் மனதாலும் அன்பர் ஏயர் கோன் கலிக்காமர் எம்பெருமானுடைய திருந்திய திருவடியினைப் போற்றி செய்திடலும்; எங்களை ஆளும் பெருமானை ஏயர்கோனர் தம்பால் எம் ஈசன் தோன்றிவந்து ஏயர்கோனே உன்னை வருத்திடுகின்ற சூலநோயை சுந்தரன் தீர்த்தால் அன்றி அதன் முன் அது நீங்காது என்று மொழிந்து அருள் செய்திட அது கேட்டு; 391

எம்பிரான் எந்தை தந்தை தந்தைஎங் கூட்ட மெல்லாம்
தம்பிரான் நீரே என்று வழிவழி சார்ந்து வாழும்
இம்பரின் மிக்க வாழ்க்கை என்னைநின் றிருஞ் சூலை
வம்பென ஆண்டு கொண்டான் ஒருவனே? தீர்ப்பான்வந்து.

எம்பிரான் ஏயர்கோனர் ஈசனிடம் சொல்வார் ''எம்பெருமானே எந்தந்தை அவர் தந்தை இவர் முதலாகஎம் கூட்டமெல்லாம் நமது தலைவன் நீரே யென்று வழிவழிச் சார்ந்து வாழும் இந்த உலகில் மிக மேலான செயலின் வாழ்க்கையுடைய என்னை நின்று அறுத்திடும் இச் சூலநோயை வம்பாகும் படி ஆட்கொள்ளப் பெற்ருன் ஒருவன் சுந்தரன் அவனே வந்து தீர்ப்பான்'': 392

மற்றவன் தீர்க்கில் தீரா தொழிந்தெனை வருத்தல் நன்றுல்
பெற்றம்மேல் உயர்த்தீர் செய்யும் பெருமையை அறிந்தார் யாரே?
உற்றவன் றொண்டற் கே ஆம் உறுதியே செய்தீர் என்னைக்
கற்றைவார் சடையார் தாமும்.அவர்முன்பு கரந்தார் அன்றே.

எம்பிரானே மற்று அந்த சுந்தரன் தீர்ப்பதில் இச்சூலநோய் தீராதொழிந்து எனை வருத்துதல் நன்றுகும். இடபத்தை கொடியாக மேலே உயர்த்திக்கொண்டவரே ! நீர் செய்திடுகின்ற பெருமைகளை உணர்ந்தவர் யார்தான் உளர்! இன்னும் உம்பால் உற்ற சுந்தரர்க்கே மேன்மையான உறுதியும் செய்தீர்!. என்னலும் அவ்வளவில் சுற்றையாக வார்ந்தசடையுடைய பெருமானும் அவர் முன்பு நின்றும் மறைந்தருளினுர். 393

வன்றொண்டர் தம்பால் சென்று வள்ளலார் அருளிச் செய்வார்
இன்றுநம் ஏவ லாலே ஏயர்கோன் உற்றசூலை
சென்றுநீ தீர்ப்பா யாகென் றருள்செயச் சிந்தையோடு
நன்றுமெய்ம் மகிழ்ந்து போற்றி வணங்கினுர் நாவலூரர்.

சுந்தர மூர்த்தி சுவாமிகள் முன்பு அருள்வள்ளலாம் இறைவன் சென்று அருளிச் செய்கின்ருர் சுந்தரனே! இன்று நமது ஏவலால் ஏயர்கோன் கலிக்காமனுர் பெற்றுக் கொண்ட சூலை நோயைச் சென்று நீ தீர்ப்பாயாக என்று அருள் புரிந்திட; அது கேட்டருளி தம்மனதுடன் நன்று உடலமும் பூரிப்ப மகிழ்ந்து போற்றி வணங்கினுர் திருநாவலூர் தோன்றிய சுந்தரர். 394

அண்ணலார் அருளிச் செய்து நீங்கஆ ரூரர் தாமும்
விண்ணவர் தம்பி ராஞர் ஏவலால் விரைந்து செல்வார்
கண்ணிய மனத்தின் மேவுங் காதலால் கலிக்கா மர்க்குத்
திண்ணிய சூலை தீர்க்க வருதிறஞ் செப்பி விட்டார்.

இவ்வாறு எம்பெருமான் அருள்புரிந்துமறைந்திட; சுந்தரர்பெருமானும் தேவாதி தேவனுடைய அந்த ஏவலின் படி விரைந்து செல்வாராய் தமது கண்ணிய முடைய மனதில் ஏயர்கோனுர் பால் கொண்ட காதலால் அவர்க்கு கொடுமைபடுத்திடும் வலுவுடைய சூலைநோயை தாம் தீர்த்திட வரும் தன்மையை முன் சென்று அறிவித்திடச் சொல்லிவிட்டார்: 395

நாதர்தம் அருளால் நண்ணுஞ் சூலையும் அவர்பாற்கேட்ட
கேதமும் வருத்த மீண்டும் வன்றொண்டர் வரவும் கேட்டுத்
தூதனையே எம்பி ராஞை ஏவினுன் சூலை தீர்க்கும்
ஏதம்இங் கெய்த எய்தில் யாசெய்வ தென்னும்? என்பார்

முன் அறிவித்த வார்த்தை கேட்டு எம்பெருமானது அருளால் வந்திடும் சூலையும் அவர்பால் சுந்தரரே அது தீர்ப்பான் என்ற தமக்கு பொருந்தாத வாக்கும்இரண்டும் உடலிற்கும் மனத்திற்கும்வருத்திட; இத்துடன் திரும்பவும் சுந்தரர் சூலைநோய் தீர்த்திட வருகின்ருர் என்ற வார்த்தையும் கேட்டு; தூதனுக எம்பெருமானைச் செலுத்திய சுந்தரன் எனக்குற்ற சூலை நோய் தீர்த்திடும் பிழை இது நேர்ந்தால் யான் என்ன செய்வது என்ருர் ஏயர் கோனுர். 396

மற்றவன் இங்கு வந்து தீர்ப்பதன் முன்நான் மாயப்
பற்றிநின் றென்னை நீங்காப் பாதகச் சூலை தன்னை
உற்றஇவ் வயிற்றி னேடும் கிழிப்பன் என் றுடைவாள் தன்னுல்
செற்றிட உயிரி னேடும் சூலையுந் தீர்ந்த தன்றே.

மற்று அந்த சுந்தரன் வந்து இச்சூலை நோயைத் தீர்ப்பதன் முன்நான் மாய்ந்திட என்னைப்பற்றி நின்று குடையும் பாதகச் சூலை நோயை அது அடைந்த இந்த வயிற்றோடும் கிழிப்பேன் என்று கூறி உடன் சேனபதியாம் ஏயர் கோனுர் தனது உடையில் செருகியிருந்த வாளை இழுத்து தன் வயிற்றில் குற்றிட அவரது உயிருடன் சூலை நோயும் தீர்ந்தது 397

கருதரும் பெருமை நீர்மைக் கலிக்காமர் தேவியாரும்
பொருவருங் கணவ ரோடு போவது புரியுங் காலை
மருவி இங்கணைந்தார் நம்பி என்றுமுன் வந்தார் கூற
ஒருவரும் அழுதல் செய்யா தொழிக என் றுரைத்துப் பின்னும்

நாம் நினைக்க முடியாத பெரு நீர்மை உடைய கலிக்காம நாயனார் மனைவி யாரும் அது கண்டு தனது நிகரற்ற கணவரோடு தன் உயிர்நீங்கிப் போவது துணிந்து அதற்கென ஆயத்தம் செய்திடும் வேளை; அவர்முன்னுக வந்தார் சிலர் எம்பிரான் சுந்தரர் சமீபமாக அணைந்து வந்தார் என்னலும் அதுகேட்ட அம்மனை யீயார் ஒருவரும் இங்கு அழுதல் செய்யக் கட்டாது என்று கூறிப் பின்னரும். 398

கணவர்தஞ் செய்கை தன்னைக் கரந்துகா வலரை நம்பி
அணைவுறும் பொழுது சால அலங்கரித் தெதிர்போம் என்னப்
புணர்நிலை வாயிற் தீபம் பூரண கும்பம் வைத்துத்
துணர்மலர் மாலை தூக்கித் தொழுதெதிர் கொள்ளச் சென்றார்

கணவனார் ஏயர்கோனாரது செயலை மறைத்து தனது மாளிகை ஏவலாளர்களை நோக்கி எம்பெருமான் சுந்தரரை அவர் எம் கணவரை அணையும் பொழுது நன்கு இம்மாளிகையை அலங்கரித்துவர வேற்றிடுவோம் என்று கூறிட அவர் விரும்பிய வாறே அழகு சிறந்த அம்மாளிகைவாயிலில் தீபம் பூரணகும்பம வைத்து பசிய மரகந்தப் பொடிபரக்கும் மலர்மாலை தூக்கி வணங்கி எதிர் கொண்டிட முன் சென்றார்கள். 399

செம்மைசேர் சிந்தை மாந்தர் சென்றெதிர் கொண்டு போற்ற
நம்மைஆ ளுடைய நம்பி நகைமுகம் அவர்க்கு நல்கி
மெய்ம்மையாம் விருப்பி னோடும் மேவிஉட் புகுந்து மிக்க
மொய்ம்மலர்த் தவிசின் மீது முகமலர்ந் திருந்த போது.

செம்மை சேர்ந்த சிந்தை உடைய அம்மனிதர் சென்று எம்பிரான் சுந்தரரை எதிர் கொண்டு போற்றிட; நம்மை ஆளுடைய நம்பி சுந்தரர் மலர்ந்த புன்முறுவல் கூடிய முகத்தால் மகிழ்வித்து உண்மையாம் விருப்பினோடும் சென்று மாளிகை உள்ளே புகுந்து மிக்க திருவுடைய பூந்தவிசினிடம் முகமலர்ச்சியுடன் இருந்த போது. 400

பான்மைஅர்ச் சனைகள் எல்லாம் பண்பினில் வாழாமை ஏய்ந்த
நான்மறை தொடர்ந்த வாய்மை நம்பியா ரூரர்கொண் டிங்
கியான்மிக வருந்து கின்றேன் ஏயர்கோ னூர்தாம் உற்ற
ஊனவெஞ் சூலை நீக்கி உடன் இருப்பதனுக் கென்றார்.

எம்பெருமான் அவர்களுக்குச் செய்திடும் பாங்குடைய அர்ச்சனைகள் எல்லாம் அதன் பண்பினில் வழாது செய்திட; பொருந்திய நான்கு வேதங்களையே தொடர்ந்து தமிழ் வாய்மையான தேவாரம்பதிகமாக அருளிய சுந்தரர் ஏற்றுக்கொண்டு ''இங்கு இனியும் இருப்ப யான் மிக வருந்துகின்றேன். ஏனெனில் ஏயர் கோனார்க்கு உற்ற மிகக் கொடுமையாய சூலைநோயை நீக்கி அவருடன் இருந்திட வாய்ப்பிலாமையால்,, என்றார். 401

மாதர்தம் ஏவ லாலே மனைத்தொழில் மாக்கள் மற்றிங்
கேதமொன் றில்லை உள்ளே பள்ளிகொள் கின்றார் என்னத்
தீதனை வில்லை யேனும் என்மனந் தெருளா தின்னம்
ஆதலால் அவரைக் காண வேண்டும் என்றருளிச் செய்தார்.

ஏயர் கோனார் திருமனையியாரின் ஏவலால் மனையில் பணிபுரிந்திடும் மக்கள் எம் பிரான் சுந்தரரை நோக்கி மொழிவார் ஐயனே மற்று இங்கு எதும் குறை ஒன்று மில்லை. அவர் உள்ளே பள்ளி கொள்கின்றார் என்றிடலும் எம்பிரான் சுந்தரர் அது கேட்டுச் சொல்வார் ''அவர்க்கு தீங்கு சேரவில்லை என்றலும் எனது மனம் இன்ன மும் தெளிந்த பாடில்லை ஆதலால் நான் அவரை உடன் காணவேண்டும்'' என்று சொல்லி அருளிச் செய்தார் 402

வன்றொண்டர் பின்னும் கூற மற்றவர் தம்மைக் காட்டத்
துன்றிய குருதி சோரத் தொடர்குடர் சொரிந்துள்ளாவி
பொன்றியே கிடந்தார் தம்மைக் கண்டபின் புகுந்த வாறு
நன்(று) என மொழிந்து நானும் நண்ணுவேன் இவர்முன்பு என்பார்.

சுந்தரர்பெருமான் பின்னரும் அவரைக் காணவேண்டு மென மொழிந்திட அவரை அழைத்துச் சென்று; வடிந்திட்ட இரத்தம் சோர்ந்திடக் தொடர்ந்த குடல் அறுபட்டு வெளியே வந்து உள்ளே உயிரும் நீங்கிக் கிடந்த எம்பிரான் ஏயர் கோனரை சுந்தரர்பெருமான் கண்ட பின் ''இங்கு நேர்ந்தவாறு நன்று'' என்று மொழிந்து நானும் இவர்முன் செல்வேன் என்பார். 403

கோளுறு மனத்த ராகிக் குற்றுடை வாளைப் பற்ற
ஆளுடைத் தம்பி ரானார் அருளினுல் அவரும் உய்ந்து
கேளிரே யாகிக் கேட்டேன் எனவிரைந் தெழுந்து கையில்
வாளினைப் பிடித்துக் கொள்ள வன்றொண்டர் வணங்கி வீழ்ந்தார்.

இவ்வணம் கூறி வைரமனம் கொண்ட சுந்தரர் பெருமான் ஏயர்கோனருடைய குற்றும் உடைவாளை எடுத்திட அப்போது ஆளுடைய பெருமான் அருளினுல் ஏயர் கோனர் உயிர்பெற்றெழுந்து சுந்தரரைக் கண்ட மாத்திரத்தே ''என் சுற்றமானாரே இவர் அந்தோ நான் கெட்டேன்'' என்று விரைந்து எழுந்து சுந்தரர் பெருமானு டைய திருக்கையில் வாளினைப் பிடித்திட சுந்தரர் பெருமான் ஏயர்கோன் பெரு மானை வணங்கி அவர் முன்பு வீழ்ந்தார். 404

மற்றவர் வணங்கி வீழ வாளினை மாற்றி ஏயர்
கொற்றவ னும் நம்பி குரைகழல் பணிந்து வீழ்ந்தார்
அற்றைநாள் நிகழ்ந்த இந்த அதிசயங் கண்டு வானோர்
பொற்றட மலரில் மாரி பொழிந்தனர் புவனம் போற்ற.

சுந்தரர் பெருமான் வணங்கி விழ; ஏயர்கோன் பெருமான் தான் எடுத்த வாளினை வீசி எறிந்து விட்டு சுந்தரர் பெருமானது மெல்லென இசைத்திடும் சிலம் பணிந்த திருப்பாத மலர்மீது பணிந்து வீழ்ந்தார். அன்றைய நாளில் நடந்த இந்த அதிசயம் கண்டு தேவர்கள் பொன்னின் பெருமலரின் மழை பொழிந்தார் இந்த உலகெலாம் போற்றிட; 405

இருவரும் எழுந்து புல்லி இடைவிடா நண்பி னுலே
பொருவரும் மகிழ்ச்சி பொங்கத் திருப்புன் கூர்ப் புனிதர் பாதம்
மருவினர் போற்றி நின்று வன்றொண்டர் தம்பிரானார்
அருளினை நினைந்தே அந்த ணுளன் என்றெடுத்துப் பாடி

இருவருமெழுந்து ஒருவரை ஒருவர்தழுவி இடைவிடாத நட்பினுலே நிகரற்ற மகிழ்ச்சி பொங்கிட திருப்புன்கூர்க்கோயில் சேர்ந்து அங்கு வீற்றிருந்த புனிதன் சிவலோக நாதனின் செவ்விய பாதம் அணைந்து போற்றி நின்றபோது; வன்தொண் டராம் சுந்தரர் பெருமான் எம்பெருமானது திருவருளினை நினைந்து அந்தணுளன் என எடுத்து திருப்பதிகம் பாடியருளி

தமக்கு எம்பிரான் ஈந்த கருணையின் திறம் உணர்ந்து சுந்தரர் பாடியருளிய நான்கு வேதத்தின் வாய்மையாய திருப்பதிகம் அது இதுவாகும். இத்தேவாரத்து இத்தலத்து இறைவர் செய்த அற்புதம் காண்க. 407

திருப்புன்கூர்
பண் — தக்கேசி
திருச்சிற்றம்பலம்

அந்த ணுளன்உன் அடைக்கலம் புகுத அவனைக் காப்பது காரண மாக
வந்த காலன்தன் ஆருயி ரதனை வவ்வினுய்க் குன்தன் வண்மைகண் டடியேன்
எந்தை நீஎனை நமன்தமர் நலியின் இவன்மற் றென்அடி யான்என விலக்கும்
சிந்தை யால்வந்துன் திருவடி அடைந்தேன் செழும்பொ ழில்திருப் புன்கூர் உளானே 1

வையக முற்றும் மாமழை மறந்து வயலில் நீரிலை மாநிலந் தருகோம்
உய்யக் கொள்கமற் றெங்களை என்ன ஒளிகொள் வெண்முகி லாய்ப்பரந் தெங்கும்
பெய்யு மாமழைப்பெருவெள்ளந்தவிர்த் துப்பெயர்த் தும்பன்னிருவேலிகொண்டருளும்
செய்கை கண்டுநின் திருவடி அடைந்தேன் செழும்பொ ழில்திருப் புன்கூர் உளானே. 2

ஏத நன்னிலம் ஈரறு வேலி ஏயர் கோன்உற்ற இரும்பிணி தவிர்த்துக்
கோத னங்களின் பால்கறந் தாட்டக் கோல வெண்மணற் சிவன்தன்மேற் சென்ற
தாதை தாள்அற எறிந்தசண் டிக்குன் சடைமி சைமலர் அருள்செயக் கண்டு
பூத ஆளினின் பொன்னடி அடைந்தேன் பூம்பொ ழில்திருப் புன்கூர் உளானே. 3

நற்ற மிழ்வல்ல ஞானசம் பந்தன் நாவி னுக்கரையன் நாஞ்சோ வானும்
கற்ற சூதன்நற் சாக்கியன் சிலந்தி கண்ணப் பன்கணம் புல்லனென் றிவர்கள்
குற்றஞ்செய்யினும்குணம்எனக்கருதும்கொள்கைகண்டுநின்குரைகழல்அடைந்தேன்
பொற்றி ரளமணிக் கமலங்கள் மலரும் பொய்கை சூழ் ஏருப் புன்கூர் உளானே.

கோல மால்வரை மத்தென நாட்டிக் கோளரவு சுற்றிக் கடைந்தெ ழுந்த
ஆல நஞ்சுகண் டவர்மிக இரிய அமரர் கட்கருள் புரிவது கருதி
நீலம் ஆர்கடல் விடந்தனை உண்டு கண்டத் தேவைத்த பித்தநீ செய்த
சீலங் கண்டுநின் திருவடி அடைந்தேன் செழும்பொ ழில்திருப் புன்கூர் உளானே.

இயக்கர் கின்னரர் யமனொடு வருணர் இயங்கு தீவளி ஞாயிறு திங்கள்
மயக்கம் இல்புலி வானரம் நாகம் வசுக்கள் வானவர் தானவர் எல்லாம்
அயர்ப்பொன் றின்றிநின் திருவடி யதனை அர்ச்சித் தார்பெறும் ஆரருள் கண்டு
திகைப்பொன்றின்றிநின் திருவடிஅடைந்தேன்செழும்பொழில்திருப்புன்கூர்உளானே 6

போர்த்த நீள்செவி யாளர்அந் தணர்க்குப் பொழில்கொள் ஆல்நிழற் கீழறம் புரிந்து
பார்த்த னுக்கன்று பாசு பந்கொடுத் தருளி னுய்ப்பண்டு பகீரதன் வேண்ட
ஆர்த்து வந்திழி யும்புனற் கங்கை நங்கை யாளைநின் சடைமிசைக் கரந்த
தீர்த்த னேநின்தன் திருவடி அடைந்தேன் செழும்பொ ழில்திருப் புன்கூர் உளானே. 7

மூவெ யில்செற்ற ஞான்றுய்ந்த மூவரில் இருவர் நின்திருக் கோயிலின் வாய்தல்
காவ லாளர்என் றேவிய பின்னை ஒருவ நீகரி காடரங் காக
மானை நோக்கியோர் மாநடம் மகிழ மணிமு ழாமுழக் கருள் செய்த
தேவ தேவநின் திருவடி அடைந்தேன் செழும்பொ ழில்திருப் புன்கூர் உளானே. 8

அறிவி னுல்மிக்க அறுவகைச் சமயம் அவ்வ வர்க்கங்கே ளாருள் புரிந்து
எறியு மாகடல் இலங்கையர் கோனைத் துலங்க மால்வரைக் கீழ்அடர்திட்டுக்
குறிகொள் பாடலின் இன்னிசை கேட்டுக் கோல வாளொடு நாளது கொடுத்த
செறிவு கண்டுநின் திருவடி அடைந்தேன் செழும்பொ ழில்திருப் புன்கூர் உளானே. 9

கம்ப மால்களிற் றின்னுரி யானைக் காமற் காய்ந்ததோர் கண்ணுடை யானைச்
செம்பொ னேஒக்குந் திருவுரு வானைச் செழும்பொ ழில்திருப் புன்கூர் உளானை
உம்ப ராளியை உமையவள் கோனை ஊரன் வன்றொண்டன் உள்ளத் தால்உகந்
தன்பி னுற்சொன்ன அருந்தமிழ் ஐந்தோ டைந்தும் வல்லவர் அருவினை இலரே. 10

திருச்சிற்றம்பலம்

சிலபகல் கழிந்த பின்பு திருமுனைப் பாடி நாடர்
மலர் புகழ்த் திருவா ரூரில் மகிழ்ந்துடன் வந்த ஏயர்
குலமுதற்றலைவ னுருங் கூடவே குளிர்பூங் கோயில்
நிலவினுர் தம்மைக் கும்பிட் டுறைந்தனர் நிறைந்த அன்பால்

வணங்கி அருள் பெற்று சில நாள் அங்கிருந்து நீங்கிய பின்பு திருமுனைப்பாடி நாடுடைய சுந்தரர் பெருமான் திருவாரூர் மீண்டிட அவருடன் மகிழ்ந்து உடன் வந்த ஏயர் குலத்தாரின் முதற் தலைவராய கலிக்காமரும் கூடிச் சென்று முதிர்ந்த பூங்கோயிலில் புற்றின் மீது நிலவிய பெருமானரைக் கும்பிட்டு அங்கு சுந்தரருடன் நிறைந்த அன்பால் தங்கியிருந்தார்; 408

அங்கினி தமர்ந்து நம்பி அருளினுல் மீண்டும் போந்து
பொங்கிய திருவின் மிக்க தம்பதி புகுந்து பொற்பில்
தங்கிநாள் ஏயர் கோனுர் தமக்கேற்ற தொண்டு செய்தே
செங்கண்மால் விடையார் பாதஞ் சேர்ந்தனர் சிறப்பி னோடும்

அங்கு இனிதே தங்கி எம்பிரான் சுந்தரரது அருளால் மீண்டும் போய்பொங்கிய செல்வத்தின் மிகுந்த தமதுபதி திருப்பெருமங்கலம் புகுந்து பொற்பினுடன் அங்கு தங்கி இருக்கும் காலத்தில் ஏயர்கோன் கலிக்காம நாயனுர் தமக்கு ஏற்ற தொண்டினை எம்பிரான்பால் புரிந்து அதன்பின் சிவந்த கண்ணுடைய இடபவாகன முடையபெருமான் திருப்பாதம் சேர்ந்தார் சிறப்புடனே; 408

நள்ளிருள் நாயனுரைத் தூதுவிட் டவர்க்கே நண்பாம்
வள்ளலார் ஏயர்கோனுர் மலரடி வணங்கிப் புக்கேன்
உள்ளுணர் வான ஞானம் முதலிய ஒருநான் குண்மை
தெள்ளுதீந் தமிழாற் கூறுந் திருமூலர் பெருமை செப்ப

நடுவிருள் யாமத்திலே தனது நாயனுரை பரவை அம்மைபாலாகத் தூது விட்ட எம்பிரான் சுந்தரர் அவர்களே நண்பான வள்ளலான ஏயர்கோன் கலிக்காம நாயனுருடைய மலரடிகளை வணங்கி இனி செல்கின்றேன் உள்ளத்து உணர்வினுல் ஞானம் யோகம் கிரியை சரியை என்னும் நான்கின் உண்மையை தெள்ளிய தீந்தமிழினுல் கூறுகின்ற பெருமான் திருமூலநாயனுரின் பெருமை சொல்லிட.. 409

ஏயர்கோன் கலிக்காம நாயனுர் புராணம் முற்றும்

திருமூல தேவ நாயனுர் புராணம்

அந்தி இளம் பிறைக்கண்ணி அண்ணலார் கயிலையினில்
முந்தைநிகழ் கோயிலுக்கு முதற்பெருநா யகமாகி
இந்திரன்மால் அயன்முதலாம் இமையவர்க்கு நெறியருளும்
நந்திதிரு வருள்பெற்ற நான்மறை யோகிகள்ஒருவர்

அந்தி தோன்றும் இளம்பிறைக் கண்ணி சூடிய கடவுள் சிவமூர்த்தியினது திருக்கைலாய மலையினில், முன்னே தொட்டு நிகழ்கின்ற கோயிலுக்கு முதற்பெரும் தலைவராகி; இந்திரன் திருமால் பிரமன் முதலாய தேவர்கட்கு இறைவனை அடைகின்ற நெறியின் வழி அருள் செய்கின்ற குருமூர்த்தமாகும் நந்தியெம் பெருமான் திருவருள் பெற்ற நான்கு வேதங்களை உணர்ந்த யோகிகளில் ஒருவர். 1

மற்றவர்தாம் அணிமாதி வருஞ்சித்தி பெற்றுடையார்
கொற்றவனுர் தி க்கயிலை மலைநின் றுங்குறுமுனிபால்
உற்றதொரு கேண்மையினுல் உடன்சிலநாள் உறைவதற்கு
நற்றமிழின் பொதியமலை நண்ணுதற்கு வழிக்கொண்டார்

அந்த சிவயோகியார்தாமும் அணிமா முதலாக வரும் எட்டுவகைச் சித்திகளையும் பெற்றுடையவர். அவர் எம் முதல்வரது திருக்கைலாய மலைநின்றும் புறப்பட்டு தென்திசையில் பொதிய மலையில் இருந்த அகத்திய முனிவர் பாலாகக் கொண்ட தொரு நட்புரிமையால் அவருடன் சிலநாள் தங்குதற்கு விரும்பி நல்ல தமிழின் பிறப்பிடமாய பொதிய மலையில் சேர்வதற்கு வழிக் கொண்டு வந்தார். 2

மன்னுதிருக் கேதாரம் வழிபட்டு மாமுனிவர்
பன்னுபுகழ்ப் பசுபதிநே பாளத்தைப் பணிந்தேத்தித்
துன்னுசடைச் சங்கரனுர் ஏற்றதூ நீர்க்கங்கை
அன்னமலி அகன்துறைநீர் அருங்கரையின் மருங்கணைந்தார்

பொதிய மலை நோக்கி வழிக்கொண்டுவரும் சிவயோகியார் முன்னுல் வருகின்ற; விளங்கிய திருக்கேதாரம் என்னும் தலமும் வழிபட்டு; அப்பால் வந்து பெருமுனிவர்கள் தங்கிய பெரும் புகழ் வாய்ந்த பசுபதி நேபாளம் என்னும் பதியைப் பணிந்து போற்றி அதன்பின் புறப்பட்டுவந்து சிறந்துற்ற தமது திருச்சடையில் எம்பிரான் சிவன் ஏற்ற புனித மாய கங்கையாற்றில்; அன்னப் பறவைகள் மலிந்த அகன்ற தீர்துறைகளை உடைய அதன் கரையின் அருகேவந்தார். 3

கங்கைநீர்த் துறையாடிக் கருத்துறைநீள் கடலேற்றும்
அங்கணர்தாம் மகிழ்ந்தருளும் அவிமுத்தம் பணிந்தேத்தி
மங்குல்வளர் வரைவிந்த மன்னுபருப் பதம்இறைஞ்சித்
திங்களணி சடையார்தம் திருக்காளத்தி மலைசேர்ந்தார்.

வந்து கங்கையாற்றின் நீர்த்துறையில் நீராடி பின்னர் அங்கு ஓர்தாயின் வயிற்றில் சென்று சென்று நீண்ட பிறவிக்கடலில் புகுவாரை அக்கடல் நின்றும் கரை ஏற்றும் கண்ணுதற் பெருமான் அமர்ந்த காசி என்னும் தலத்தைப் பணிந்து போற்றி அப்பால் சென்று மேகங்கள் படியும் விந்தமலையினை ஒத்த சிபருப்பதமலையையும் வணங்கி அதன்பின்னர் தொடர்ந்து பிறையணிந்த பெருமானது திருக்காளத்தி மலையினைச் சேர்ந்தார் அந்த சிவயோகியார். 4

நீடுதிருக் காளத்தி நிலவுதா னுவைவணங்கி
ஆடுதிரு அரங்கான ஆலவனந் தொழுதேத்தித்
தேடும்இரு வர்க்கரியார் திருஏகாம் பரம்பணிந்து
மாடுயர்மா மதிற்காஞ்சி வளநகரின் வைகினார்.

நீடித்த திருவுடைய காளத்தி மலையில் வீற்றிருந்த சோதிப் பிழம்பான ஈசனை வணங்கி; அப்பால் சென்று ஆடுகின்ற மன்றுள திருஆலங்காடு என்னும் தலத்தை தொழுது வணங்கி; அதன்பின் சென்று தேடுகின்ற பிரமன் திருமால் இருவர்க்கும் காண்டற்கரிய பெருமானது திருக்கச்சி ஏகம்பம் பணிந்து; பக்கராக உயர்ந்த மதிலுடைய காஞ்சி என்னும் வளமுடைய அந்த நகரில் தங்கினர் இந்த சிவயோகியார். 5

நற்பதிஅங் கமர்யோக முனிவர்களை நயந்துபோய்க்
கற்புரிசைத் திருவதிகை கலந்திறைஞ்சிக் கறைக்கண்டர்
அற்புதக்கூத் தாடுகின்ற அம்பலஞ்சூழ் திருவீதிப்
பொற்பதியாம் பெரும்பற்றப் புலியூரில் வந்தணைந்தார்.

நல்ல பதியாய காஞ்சியதனில் அங்கு வாழ்கின்ற யோக முனிவர்களை நயந்து அவருடன் அன்பாய் கலந்து அப்பால் சென்று கல்லின் மதிலுடைய திருவதிதை தலத்தைச் சேர்ந்து இறைவனைக் கண்டு வழிபட்டு அப்பால் நஞ்சுண்ட கண்டமுடைய பெருமான் அற்புதத் தனிக் கூத்தாடுகின்ற கனகசபையைச் சூழ்ந்த திருவீதி உடைய பொற் பதியாகும் பெரும் பற்றுப்புலியூரெனும்சிதம்பரத்தை வந்து சேர்ந்தார் எமது சிவயோகியார். 6

எவ்வுலகும் உய்யஎடுத் தருளியசே வடியாரைச்
செவ்வியஅன் புறவணங்கிச் சிந்தைகளி வரத்திளைத்து
வவ்வியமெய் யுணர்வின்கண் வரும்ஆனந் தக்கூத்தை
அவ்வியல்பிற் கும்பிட்டங் காராமை அமர்ந்திருந்தார்.

அங்கு பெரும்பற்றம்புலியூர் எனும் சிதம்பரத்தில் எவ்வுலகுமுய்ய எடுத்து ஆடியருளிய சேவடி உடைய எம்பெருமானை செவ்விய அன்பு கொள்ள வணங்கி சிந்தையில் பெருகிய ஆனந்தம் வரத்திளைத்து எம்பிரானைந்பற்றிய மெய் உணர்வினிடத்து தாமே தோன்றிவரும் ஆனந்தக் கூத்தை சிவயோகியார் அவ்வாறு தாம்பெறுகின்ற அந்த பேரின்ப இயல்பில் கும்பிட்டு அந்த இன்ப வினையின் ஆராமையால் அங்கு தங்கி இருந்தார். 7

தடநீலமா ளிகைப்புலியூர் தன்னிலுறைந் திறைஞ்சிப்போய்
அடல்விடையின் மேல்வருவார் அமுதுசெய அஞ்சாதே
விடம்அளித்த தெனக்கருதி மேதினிக்கு வளம்நறைத்தே
கடல்வயிறு நிறையாத காவிரியின் கரைஅணைந்தார்.

ஒளி நீல மடாங்களை உடைய சிதம் பரத்தில் சிவ யாகியார் தங்கி இருந்து வணங்கி. அப்பால்சென்று வலிமையாய இடபத்தின் மேலாகவரு கின்ற பெருமான் அமுதுசெ; கொஞ்சமும் அச்சமின்றி நஞ்சினைக் கொடுத்தது இக்கடல் எனக்கருதி அக் கடலிடய ஓடிச்சென்று சேராது இப்பூமிக்கு நீர்வளத்தை நிறையக்கொடுத்து கடலின்வயிற்றை நிறையாத காவிரி ஆற்றின் கரையினை அணைந்தார். 8

காவிரிநீர்ப் பெருந்தீர்த்தம் கலந்தாடிக் கடந்தேறி
ஆவின்அருங் கன்றுறையும் ஆவடுதன் டுறைஅணைந்து
சேவில்வரும் பசுபதியார் செழுங்கோயில் வலம்வந்து
மேவுபெருங் காதலினுல் பணிந்தங்கு விருப்புறுவார்,

காவிரியின்நீரின் பெரும் தீர்த்தத்தில் கலந்து நீராடி ஆற்றைக் கடந்து மறு கரை ஏறி; பசுவின் கன்றுக உமையம்மையார் சென்றுதவம் செய்து எம்பிரானைம் பூசித்த ஆவடு தண்டுறை என்னும் தலம் சேர்ந்து; இடபத்தில் எழுந்தருளிவரும் ஆன்மாக் களுக்கெல்லாம் தலைவராய எம்பெருமானது அழகிய அக்கோயிலை வலம் வந்து அங்கே இயல்பில் தோன்றும் பெரும் காதல் பெருக்கால் ஆவடு தண்டுறையும் அப்பனைப்பணிந்து அங்கு தங்கியிருப்ப விரும்புவார். 9

அந்நீலமைத் தானத்தை அகலாத தொருகருத்து
முன்னிஎழுங் குறிப்பினுல் மூளும்ஆ தரவெய்தப்
பின்னும்அகன் றேகுவார் பேணவருங் கோக்குலங்கள்
பொன்னிநதிக் கரைப்புறவிற் புலம்புவன எதிர்கண்டார்.

அந்தநீலையில் அந்த ஆவடு தண்டுறையை விட்டு நீங்காத ஒருகருத்து உள்ளத்து தாமாகத் தோன்றி எழும் எண்ணத்தால் ஒது எம்பெருமானது திருவருள் செயலாகும் என்னும் குறிப்பினல்; எழுந்தபெரும் ஆதரவு கொண்டு விளங்கிட்டாலும் பின்னரும் பொதிய மலைசேரும் விருப்பால் அத்தலம் நீங்கிப்போகும் சிவயோகியார்; மேய்த்துக் காத்திடவருகின்ற பசுவினங்கள் காவிரியாற்றின் கரையினுள்ள ஓர் சோலையில் புலம்புவதைத் தாம் கண்டருளினர். 10

அந்தணர்தஞ் சாத்தனூர் ஆமேய்ப்பார் குடித்தோன்றி
முந்தைமுறை நிரைமேய்ப்பான் மூலன்எனும் பெயருடையான்
வந்துதனி மேய்க்கின்றுன் வினைமாள வாழ்நாளை
வெந்தொழில்வன் கூற்றுண்ண வீடிநிலத் திடைவீழ்ந்தான்,

அவைகளின்செயல்தான்; அந்தணர்கள் வாழுகின்ற சாத்தனூர் என்னும் இடத்தில் பசுமேய்ப்பவரின் குடியில் வந்து பிறந்து முன்புள்ள முறையாக பசுவினங்களை மேய்க்கின்ற ஒருவன் மூலன் என்னும் பெயருடையவன் இந்த காவிரிக் கரையில் வந்து தனியே பசுக்களை மேய்ப்பவன் தனது வினைப்பகுதி மாண்டிட அவன் வாழ் நாளை கொடும் தொழில் இயமன் புரியும் வலியாய உண்டிட அத்தன்மையால் இறந்து நிலத்திடையாக வீழ்ந்தான். 11

மற்றிவன்தன் உடம்பினைஅக் கோக்குலங்கள் வந்தணைந்து
சுற்றமிகக் கதறுவன சுழல்வனமோப் பனவாக
நற்றவயோ கியர்காணு நம்பர்அரு ளாலேஆ
உற்றதுயர் இவைநீங்க ஒழிப்பன்என உணர்கின்றார்.

அவ்வாறெழிறந்துவீழ்ந்தமூலன் என்னும் இடையனின் உடம்பினை அந்தப் பசுக் கூட்டங்கள் வந்து அணைத்து சுற்றி அன்பினல் மிகக்கதறுவன உடலைச் சுழல்வனவாய் மணப்பனவாய் நிற்ப; அதனை நல்லதவயோகியார் இவர் கண்டு; எம்பெருமானுடைய அருளாலே இப்பசுக்கள் உற்றதுயர் நீங்கிட நான் ஒழித்திடுவேன் என்று எண்ணு கின்றார். 12

இவனுயிர்பெற் றெழிலன்றி ஆக்களிடர் நீங்கா என்று
அவனுடலிற் றம்முயிரை அடைவிக்க அருள்புரியும்
தவமுனிவர் தம்முடம்புக்(கு) அரண்செய்து தாம்முயன்ற
பவனவழி அவனுடலில் தம்முயிரைப் பாய்த்தினர்.

இந்த இடையன் உயிர்பெற்றெழுந்தால் அன்றி இப்பசுக்கள் தமது துயர் நீங்கி ஏழா என்று மூலனுடைய உடலில் தனது உயிரை சேர்விக்க அருள் செய்யும் சிவயோகியார்; தமது உடல் தீங்குருதவகை காவல் செய்து தாம் பழகிக் கொண்ட யோகசாதனையின் (காற்றைப் பிடித்து எங்கும் ஓடாமல் சாதிக்கும் வழியால்) அம் மூலனுடைய உடலிற் தனது உயிரைச் சேர்த்தினர். 13

பாய்த்தியபின் திருமூல ராய்எழலும் பசுக்களெலாம்
நாத்தழும்ப நக்கிமோந் தணைந்துகனைப் பொடுநயந்து
வாய்த்தெழுந்த களிப்பினுல் வாலெடுத்துத் துள்ளிப்பின்
நீத்ததுய ரினவாகி நிரைந்துபோய் மேய்ந்தனவால்'

தமது உயிரை மூலன் உடலில் பாய்ச்சிய பின்பு சிவயோகியார் மூலனது உடலில் திருமூலராயவடிவாய் எழலும் பசுக்கள் எல்லாம் அதுகண்டு நாத்தழும்ப அவரை நக்கி மகிழ்ந்து அணைந்து கணைப்பொடு நயந்து வாய்ப்புற்றெழுந்த மகிழ்ச்சியால் வால் எடுத்துக் துள்ளிப்பின் நீங்கிய துயருடையன வாகி திரும்ப நிரையாகச் சென்று மேய்ந்தன. 14

ஆவின்நிரை மகிழ்வுறக்கண் டளிசூர்ந்த அருளினராய்
மேவியவை மேய்விடத்துப் பின்சென்று மேய்ந்தவைதாம்
காவிரிமுன் துறைத்தண்ணீர் கலந்துண்டு கரைஏறப்
பூவிரிதண் புறவின்நிழல் இனிதாகப் புறங்காத்தார்.

பசுக்களின் கூட்டம் மகிழ்வுற்றது கண்டு அன்பு கூர்ந்த கருணை உடையவராய் அப்பசுக்கள் சென்று மேயும் இடத்து பின்னுகச் சென்று; மேய்ந்த அப்பசுக்கள் எல்லாம் காவிரியாற்றின் துறையில் சென்று தண்ணீர் விரும்பி உண்டு கலைநீர்ந்து கரைஏற அவைகளை பூக்கள் விரிந்த சோலையின் நிழலில் இனிதாக அவை தங்கிட காம் காவல் செய்தார்; 15

வெய்யசுடர்க் கதிரவனும் மேல்பாலை மலைஅணையச்
சைவநெறி மெய்புணர்ந்தார் ஆனினங்கள் தாமேமுன்
பையநடப் பனகன்றை நினைந்துபடர் வனவாகி
வையநீகழ் சாத்தனூர் வந்தெய்தப் பின்போனர்,

இப்பால் வெப்பமாய சுடருடைய சூரியனும் மேற்குப் புறத்துள்ள அத்தமலை யிடத்துச் சேர்தலும்; அதுவேனை சைவ மார்க்கத்தின் மெய்மையை உணர்ந்த திரு மூலநாயனாரும்; அப்பசுக்கள் தாங்கனாகவே முன் எழுந்து பையப்பைய நடப்பன வாகியும் கன்றை நினைந்து போவன வாகியும் பூமியில் விளங்கும் சாத்தனூரைப் போய்ச்சேர்ந்திட; தாம் அவை பின்னுகச் சென்றார். 16

போனவர்தாம் பசுக்களெலாம் மனைநோறும் புகநின்றார்
மானமுடை மனையாளும் வைகியபின் தாழ்ந்தார்என்று
ஆனபயத் துடன்சென்றே அவர்நின்ற வழிகண்டாள்
ஈனம்இவர்க் கடுத்ததென மெய்தீண்ட அதற்கிசையார்,

பின்போன திருமூலநாயனார் பசுக்கள் எல்லாம் தத்தமது மனைகள்சேர தாம் மூலன் இருப்பிடம் செல்லாது நின்றார். இப்பால் மானமுடைய மூலன் மனைவியும் மூலன் வரக்காணுமையால் "பொழுது போனபின்பும் என் கணவர் வரத் தாழ்த் தாரே என்று மனதிலான பயத்துடன் தேடிச் சென்று திருமூல நாயனார் அவர் நின்ற தெய்வ வழியின் நிலையுடன் அவரைக் கண்டாள் அவர் தன்மை உணராத அவள். கண்டதும் இவர்க்கு நேர்ந்த தென்னஎன்று அவர் மேனியில் தீண்டுதலும் அவர் அதற்கு இசையாரானார் 17

அங்கவளும் மக்களுடன் அருஞ்சுற்றம் இல்லாதாள்
தங்கிவெரு வுறமயங்கி என்செய்தீர் எனத்தளர
இங்குனக்கென் னுடன் அணைவொன் றில்லைஎன எதிர்மறுத்துப்
பொங்குதவத் தோர்ஆங்கோர் பொதுமடத்தி னுட்புகுந்தார்,

அங்கு மூலன் மனைவியும் பிள்ளைகளுடன் நெருங்கிய சுற்றத்தவருமில்லாதவள்' அவர் நிலைகண்டு பயந்து மிகமயங்கி இதென்னசெய்தீர் என்று உண்மையறியாது தளர்ந்து இடலும்; அப்போது எம்பிரான் திரு மூலரும் அவளைநோக்கி ஈங்கு உனக்கு என்னுடன் சேர்மதி ஒன்றில்லை. என்று அணையமுற்படும் அவளைநேராக மறுத்து பொங்கும் தவமுடைய அவர்அங்கு அவ்வூர்க்குப் பொதுவாய மடத்தின் உள்ளே சென்று சேர்ந்தார். 18

இல்லாளன் இயல்புவே முனைமைகண்டு இரவெல்லாம்
சொல்லாடா திருந்தவர்பால் அணையாது துயிலாதாள்
பல்லார்முன் பிற்றைநாள் இவர்க்கடுத்த பரிசுரைப்ப
நல்லார்கள் அவர்திறத்து நாடியே நயந்துரைப்பார்'

தனது கணவன் எனப்படுவானின் மனைநீலை இன்று இப்படி வேறுனது என்னும் தன்மை கண்டு எவ்வளவோ அவருடன் உரையாட முயன்றாலும் ஒருவார்த்தையுமே பேசாதிருப்பார் நிலைகண்டு அவருடன் அணையாமல் தான் துயில் செய்யாத அவள் மறுநாள் காலை தமது ஊரில் பலபெரியோரிடம் அவர்க்கு நேர்ந்த மன மாற்றத்தை எடுத்துச் சொல்ல அந்த நல் நிலையுடைய பெரியோர் வந்து அவருடைய நிலையில் அவர்தன்மைகளை நாடி அவர் போக்கினை நயந்து அவளுக்குச் சொல்வார். 19

பித்துற்ற மயலன்று பிறிதொருசார் புளதன்று
சித்தவிகற் பங்களைந்து தெளிந்தசிவ யோகத்தில்
வைத்தகருத் தினராகி வரம்பில்பெரு மையிலிருந்தார்
இத்தகமை அளப்பரிதால் யாராலும் எனஉரைப்பார்,

பெண்ணே! நீ நினைந்தவாறு போல இவர் பைத்தியமுடையரல்ல; அல்லது பிறிது ஒர்பேய் முதலியவற்றின் சார்பினால் வரும் மனமாறுட்டமான பீடையும் அன்று; இதுதான் மனதில் எழுகின்ற சங்கற்பம்விகற்பம் எனும் சங்கடங்களை நீக்கித் தெளிவுற்ற சிவயோகத்தில் வைத்த கருத்துடையராகி எல்லையில்லாத பெருமையில் இவர் இருந்தார். இந்த இவரது சிவயோக நிலையின் தன்மை யாராலும் அளந்திட முடியாது என்று அவளிடம் சொன்னார்கள். 20

பற்றறுத்த உபதேசப் பரமபதம் பெற்றார்போல்
முற்றும்உணர்ந் தனராகும் முன்னைநிலை மையில்உங்கள்
சுற்றஇயல் பினுக்கெய்தார் என்றுரைப்பத் துயர்எய்தி
மற்றவளும் மையலுற மருங்குள்ளார் கொண்டகன்றார்.

பற்றுக்களை எல்லாம் நீக்கிய மேலான உபதேசத்தினாலே ஈசன் திருவடிகள் பெற்றுடைய ஞானிகளைப் போன்று இவர் முழுவதும் உணர்ந்த முனிவராகும். முன்னைய நிலைமையில் உங்களது சுற்ற இயல் தொடர்பிற்கு இவர்வந்து கொள்ள மாட்டார் என்று அவர்கள் எடுத்துக் கூறிட; அதுகேட்டு பெரும் துயரடைந்து மற்று மூலன் மனைவியும் மயங்கிச் சோர பக்கரில் உள்ளார் அவளைக் கொண்டு அவ்விடம் நீங்கிப் போயினர்கள். 21

இந்தநிலை மையிலிருந்தார் எழுந்திருந்தாங் கான்நிரைகள்
வந்தநெறி யேசென்று வைத்தகாப் பினில்உய்த்த
முந்தையுடற் பொறைகாணார் முழுதுணர்ந்த மெய்ஞ்ஞானச்
சிந்தையினில் வந்தசெயல் ஆராய்ந்து தெளிகின்றார்,

இந்த நிலமையில் அங்கு சாத்தனூர் பொதுமடத்தில் இருந்த திருமூலதேவர் எழுந்திருந்துஅங்கு பசுநிரைகள் வந்தவழியே திரும்பிச் சென்று; தான் காவலாக வைத்தமுன்னைய உடலைத் தேடிப்பார்த்தபோது அந்த உடற்பொறையைக் காணு ராகி அதனால் எல்லாம் உணர்ந்த மெய்ஞானமாய தன்சிந்தையில் அப்படி யாக வந்த அச்செயலை ஆராய்ந்து தெளிகின்றார். 22

தண்ணிலவார் சடையார்தாம் தந்தஆ கப்பொருளை
மண்ணின்மிசைத் திருமூலர் வாக்கினால் தமிழ்வகுப்பக்
கண்ணியஅத் திருவருளால் அல்வுடலைக் கரப்பிக்க
எண்ணிறைந்த உணர்வுடையார் ஈசர்அருள் எனஉணர்ந்தார்.

தெள்ளிய நிலவணிந்த திருச்சடையுடைய சிவபெருமான் தாம் தந்தருளிய ஆகமப்பொருளை இந்தப் பூமியின்மீது திருமூலர் வாக்காலே தமிழால் செப்பிவதைத் தும்படியாகக் கருணையால் எடுத்துக்கொள்ளும் திருவருட் செயலால் அந்த சிவயோகியாராக இருந்த அந்த உடலை மறைப்பிக்க; எண்ணங்கள் யாவும் எய் தொணாத பேரறிவின் திறமுடையார் அந்த உடல் காணுமைப்போயது ஈசர் அரு ளாகும என உணர்ந்தார். 23

சுற்றியக் குலத்துள்ளார் தொடர்ந்தார்க்குத் தொடர்வின்மை
முற்றவே மொழிந்தருள அவர்மீண்டு போனதற்பின்
பெற்றமீ துயர்த் தவர்தாள் சிந்தித்துப் பெருகார்வக்
செறமுதல் கடிந்தவர்தாம் ஆவடுதண் டுறைசேர்ந்த ார்.

ஈசர் அருளெனஉர்ணந்த பிற்பாடு மூலன் உடலில் இவர் இருப்பதால் அந்த மூலன்பால் நெருங்கிய தொடர்புடைய இடையர் குலத்துள்ளார் கம்மை இப் பொழுதுவந்து சூழ்ந்துநின்றூர்க்கு அவர்களுடன் தாம் தொடர்பு இல்லையென்ற அத் தன்மையை மூலனுக்கு நேர்ந்த கதிமுதல் முழுவதுமே எடுத்துப் பேசியருள அதுகேட்டு அவர்களும் அங்கிருந்து போனபின்பு இடபத்தை மேலாகக் கொடியாகக்கொண்ட பெருமானது திருவடி சிந்தித்து அதனால் பெருகிய காமம் கோபம் முதல் பெரும் கொடுமைகளை எல்லாம் அறவே நீக்கிய நம்பிரான் திரு மூலர் திருஆவடுதண்டுறை என்னும் தலத்தை அடைந்தார். 24

ஆவடுதண் டுறைஅணைந்தங் கரும்பொருளை உறவணங்கி
மேவவார் புறக்குடபால் மிக்குயர்ந்த அரசின்கீழ்த்
தேவிருக்கை அமர்ந்தருளிச் சிவயோகம் தலைநின்று
பூவலரும் இதயத்துப் பொருளோடும் புணர்ந்திருந்தார்,

திருஆவடுதண்டுறை என்னும் கோவிலை அடைந்து அங்கு அரும்பொருளாய் உள்ள சோதியைச் சிந்தைஉற வணங்கி அங்கு மேவும் அவர் கோவிலின் புறத்தே மேற்குத் திக்கில் நின்ற மிக உயர்ந்த அரசமரத்தின்கீழ் தெய்வீகமாய யோகா சனத்தில் வீற்றிருந்தருளி சிவயோகநிலையில் தலைநின்று பூப்போல மலரும் தமது இதயத்துப் பொருளாய சிவத்துடன் கலந்து இருந்தார்: 25

ஊனுடம்பிற் பிறவிவிடந் தீர்ந்துலகத் தோர்உய்ய
ஞானமுதல் நான்குமலர் நற்நிருமந் திரமாலை
பானைமுறை ஓராண்டுக் கொன்றுகப் பாம்பொருளாம்
ஏனஎயி றணிந்தாரை ஒன்றவன்தான் எனஎடுத்து.

அங்கிருந்து ஊன்மொருந்திய உடம்பினை எடுத்துவரும் பொல்லாங்குடைய விடம்போல்வரும் பிறவி என்னும் கொடும்செயல் நீங்கி உலகத்தவர் உய்ந்திட ஞானம் யோகம் சரியை கிரியை என்னும் நான்கும் பூப்போல் இயல்பில் வாக்காக மலர்கின்ற நல்ல திருமந்திரமாலையை எம்பிரான்கு பாடி அணிகின்ற அத்தொண் டில் ஒவ்வொரு ஆண்டிற்கு ஒரு பாடலாக பரம்பொருளாய பன்றியின் கொம் பணிந்த பெருமான் சிவனை 'ஒன்றவன்தானை என'ப் பாடஎடுத்து: 26

மூன்னியஅப் பொருள்மாலைத் தமிழ்மூவா யிரஞ்சாத்தி
மன்னியமூ வாயிரத்தாண் டிப்புவிமேல் மகிழ்ந்திருந்து
சென்னிமதி அணிந்தார்தம் திருவருளால் திருக்கயிலை
தன்னில்அணைந் தொருகாலும் பிரியாமைத் தாளடைந்தார்,

பாடிடும் அப்பாமாலையில் தாம் நினைந்தருளிய ஞானம் முதல் நான்குபொருளும் சிறக்கும்படி பாடியருளும் தமிழால் மூவாயிரம் பாடல்கொண்ட அம்மாலைசாத்தி விளங்கிய மூவாயிரம் ஆண்டு இப்பூமிமேல் வாழ்ந்து மகிழ்ந்திருந்து அதன்பின் திருச் சடையின்மீது பிறையணிந்த பெருமானின் திருவருளால் திருக்கைலாயமலை யின் னிடத்துச் சென்று ஒருகாலும் எம்பெருமானைப் பிரியாதிருக்கும் பேரின்பமாம் ஈசன் திருவடி அணைந்துகொண்டார். 27

பிறவியின் கொடுமையாய ஓயாத நஞ்சுநீங்கி இறவாமைதரும் சிவஅமுது உண்ணப்பெற அருளின் திறத்தால் திருமூலதேவர் ஓர் ஆண்டுக்கு ஒருபாடலாக மொழிந்த தமிழ் மூவாயிரம் எனப்படும் அப்பாடலில் கடவுள் வாழ்த்தில் ஒருசில இங்கு தருகின்றோம். மற்றவைகளை திருமந்திரத்தில் கண்டுகொள்க.

திருமந்திரம்

ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள்
நின்றனன் மூன்றினுள் நான்குணர்ந் தான்ஐந்து
வென்றனன் ஆறு விரிந்தனன் ஏழும்பர்ச்
சென்றனன் தானிருந் தானுணர்ந் தெட்டே.

போற்றிசைத் தின்னுயிர் மன்னும் புனிதனை
நாற்றிசைக் கும்நல்ல மாதுக்கு நாதனை
மேற்றிசைக் குள்தென் திசைக்கொரு வேந்தனுங்
கூற்றுதைத் தானையான் கூறுகின் றேனே.

ஒக்கநின் றூனை உலப்பிலி தேவர்கள்
நக்கனென் றேத்திடு நாதனை நாள்தொறும்
பக்கநின் றுர்அறி யாத பரமனைப்
புக்குநின் றுன்னியான் போற்றிசெய் தேனே.

சிவனெனொக் குந்தெய்வந் தேடினும் இல்லை
அவனெனொப் பார்இங்கு யாவரும் இல்லை
புவனங் கடந்தன்று பொன்னெளி மின்னுந்
தவனச் சடைமுடித் தாமரை யானே.

அவனை ஒழிய அமரரும் இல்லை
அவனன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை
அவனன்றி மூவரால் ஆவதொன் றில்லை
அவனன்றி ஊர்புகு மாறறி யேனே.

நலஞ்சிறந்த ஞானயோ கக்கிரியா சரியையெலாம்
மலர்ந்தமொழித் திருமூல தேவர்தமலர்க் கழல்வணங்கி
அலர்ந்தபுகழ்த் திருவாரூர் அமணர்கலக் கங்கண்ட
தலங்குலவு விறல்தண்டி அடிகள்திறஞ் சாற்றுவாம்.

நலம் சிறந்த ஞான யோக கிரியை சரியையெலாம் மலர்ந்த திருவளம்மொழி யுடைய திருமூலதேவநாயனூர் மலர்ப்பாதத்தை அடியேன் வணங்கி; உலகெங்கும் பரவ விளங்கிய புகழுடைய திருவாரூரில் சமணர்கள் கலங்கிடும்படி கண்ட இப் பூமியில் என்றும் சிறந்துற்ற வலிமையுடைய தண்டியடிகள் நாயனார் தன்மை சொல்லுவாம். 28

திருமூலதேவநாயனூர் புராணம் முற்றும்.

தண்டியடிகள் நாயனூர் புராணம்

தண்டி யடிகள் திருவாரூர்ப் பிறக்கும் பெருமைத் தவமுடையார்
அண்ட வாணர் மறைபாட ஆடுஞ் செம்பொற் கழல்மனத்துக்
கொண்ட கருத்தின் அகநோக்குங் குறிப்பே அன்றிப் புறநோக்கும்
கண்ட உணர்வு துறந்தார்போல் பிறந்த பொழுதே கண்காணூர்.

தண்டியடிகள்நாயனூர் திருவாரூரில் சென்று பிறந்திடும் பெருமைத் தவமுடை யார். தேவர்கள் வேதங்கள்பாட ஆடிடும் செம்பொன்னின் திருவடிகள் மனத்தில் கொண்ட கருத்தில் உள்ளே நோக்குகின்ற குறிப்பேயல்லாது வெளியே நோக்கிக் கானும் உணர்ச்சிகளை நீக்கினூர்போன்று தாம் பிறந்தபொழுதே கண்குருடராகவே கண் காணப்பெரூரானூர். 1

காணுங் கண்ணுற் காண்பதுமெய்த் தொண்டேயான கருத்துடையார்
பேணுஞ் செல்வத் திருவாரூர்ப் பெருமா னடிகள் திருவடிக்கே
பூணும் அன்பி னுற்பரவிப் போற்றும் நிலைமை புரிந்தமரர்
சேணும் அறிய அரிய திருத்தொண்டிற் செறியச் சிறந்துள்ளார்.

காணு கின்ற கண்ணுல் காண்பது உண்மையான தொண்டே என்பதான கருத்து உடையவர் தண்டி அடிகள். அவர் பேணுகின்ற பெரும் செல்வமுடைய திருவாரூர்ப் பெருமானுகும் தியாகராசன் திருவடிக்கே பூணுகின்ற அன்பினுல் போற்றி வணங்கும் நலமையே செய்து அதனுல் வான உலகமும் இது இப்படியான பெருமை உடை யது என்று அறிய அரிய திருத்தொண்டில் மிகவும் பற்றுடையராய்ச் சிறந்துள் ளார். 2

பூவார் சடிலத் திருமுடியார் மகிழ்ந்த செல்வப் பூங்கோயில்
தேவா சிரியன் முன்னிறைஞ்சி வலஞ்செய் வாராய்ச் செம்மைபுரி
நாவால் இன்ப முறுங்காதல் நமச்சிவாய நற்பதமே
ஓவா அன்பில் எடுத்தோதி ஒருநாள் போல வருநாளில்

இவ்வாருக தொண்டு புரியும் தண்டியடிகள்; பூவார்ந்த கொன்றை எருக்கு மத்தம் இவை விளங்கும் சடைமுடி உடைய பெருமான் சிவன் மகிழ்ந்து உறை கின்ற பூங்கோயில் திருவாரூர் திருமுன்பு உள்ள தேவாசிரிய மண்டபத்தின் முன்பு வணங்கி; கோவிலே வலம் செய்வாராய்த் தமது நாவால் இன்பமுறுகின்ற காதலால் நமச்சிவாய என்ற நல்ல பதத்தையே ஓய்விலாத அன்பில் எடுத்து ஓதி ஒரு நாள் போல பல நாளும் அவ்வணமே அவர் செய்து வரும் நாட்களில். 3

செங்கண் விடையார் திருக்கோயிற் குடபால் தீர்த்தக் குளத்தின்பா ங்கு
எங்கும் அமணர் பாழிகளாய் இடத்தாற் குறைபா டெய்துதலால்
அங்கந் நிலைமை தனைத் தண்டி யடிகள் அறிந்தே ஆதரவால்
இங்கு நான்இக் குளம்பெருகக் கல்ல வேண்டும் என்றெழுந்தார்.

சிவந்த கண்உடைய இடபத்து எழுந்தருளும் பெருமானின் திருக்கோயிலின் மேற்குப் புறத்து உள்ள நீர்த்தக் குளத்தின் பக்கரில் சமணர்களின் மடங்களும் இருப்பிடங்களுமாக இதனல் அக்குளத்தின் இடப்பரப்பிற்கு குறைபாடு வந்தடை தலால் அங்கு அந்த நிலமையினைத் தண்டியடிகள் அறிந்து உள்ளத்துக்கொண்ட அன்பினலே இங்கு நான் இந்த குளம் அதன் பரப்பு பெருகும்படி தோண்டியிடல் வேண்டும் என்ற துணிவுடன் அதன் பிரகாரம் செய்யத்தொடங்கினர் .4

குழிவா யதனிற் குறிநட்டுக் கட்டுங் கயிறு குளக்கரையின்
இழிவாய்ப் புறத்து நடுத்தறியோ டிசையக் கட்டி இடைதடவி
வழியால் வந்து மண்கல்லி எடுத்து மறித்துந் த விப்போய்
ஒழியா முயற்சி யாலுய்த்தார் ஓதும் எழுத்தஞ் சுடனுப்பப்பார்.

குளத்தில் அகலும் குளியின் இடத்து தாம் இந்த இடத்தில் வெட்ட வேண் டும் என்று கண்தெரியாமையால் தடவிக் தேர்ந்து கொள்வதற்கு ஒரு குறித்தடி நட்டும் அதில் கட்டிய ஓர் கயிறை குளக்கரையில் மண் கொண்டு சென்று கொ ட்டுகின்ற இடமாய அப்புறத்து நட்டுக் கொண்ட குறித் தடியோடு சேரக்கட்டி அந்தக் கயிற்றைப் பிடித்து தடவித்தடவி அதன் குறி வழியால் வந்து மண்ணைத் தோண்டி எடுத்து திரும்பவும் அந்தக் கயிற்றுல் தடவிப் போய் வெளியில் கொட் டி இப்படி ஓய்விலா முயற்சியால் குளம் தோண்டி மண் கொட்டுகின்றார். அதைச் செய்திடும் போது ஐந்தெழுத்தை ஓதுதல் உடன் அதனைப் புரிவார். 5

நண்ணி நாளும் நற்றொண்டர் நயந்த விருப்பால் மிகப்பெருகி
அண்ணல் தீர்த்தக் குளங்கல்லக் கண்ட அமணர் பொருராகி
எண்ணித் தண்டி யடிகள் பால் எய்தி முன்நின் றியம்புவார்
மண்ணைக் கல்லிற் பிராணிபடும் வருத்த வேண்டாம் என்றுரைத்தார்

இவ்வாருக நாள்தோறும் சென்று நற்றொண்டர் தண்டியடிகள் உள்ளத்து நயந்த விருப்புனலே அந்த ஆசை மிகப்பெருகி ; எம் பெருமானுடைய தீர்த்தக் குளத்தை தோண்டக் கண்ட சமணர் பொறுக்கமாட்டாராகி மனதில் வஞ்சனை எண்ணி எம் தண்டியடிகள் பால் சென்று முன் நின்று இதனைச் சொல்வார்; ''நீர் குளம் தோண்டினுல் அதிலே பிராணிகள் கொல்லப்படும். அதனுல் அப்பழியைப் புரிய வேண்டாம்'' என்று சொன்னர். 6

மாசு சேர்ந்த முடையுடலார் மாற்றங் கேட்டு மறுமாற்றம்
தேசு பெருகுந் திருத்தொண்டர் செப்பு கின்றார் திருவிலிகாள்!
பூசு நீறு சாந்தமெனப் புனைந்த பிரானுக் கான பணி
ஆசி லாநல் லறமாவ தறிய வருமோ உமக்(கு)?என்றார்.

அழுக்குப் பொருந்திய மேனியில் தூர்நாற்றம் உடைய சமணர் சொல்லிய வார்த்தை கேட்டு அதற்குப் பதிலான வார்த்தைஎளி பெருகும் திருமேனி உடை ய தண்டியடிகள் சொல்கின்றார்; திருவில்லாதவர்களே பூசும் நீறு தமது சந்தன வாசற் கலவை என அணிந்த எம்பிரான் சிவனுக்கு ஆன ஐந்தொண்டு ஏதுவா யினும் அதுநல்ல தருமமாவதென அறிய வருமோ உமக்கென்றார். 7

அந்த மில்லா அறிவுடையார் உரைப்பக் கேட்ட அறிவில்லார்
சிந்தித் திந்த அறங்கேளாய்; செவியும் இழந்தா யோ என்ன
மந்த உணர்வும் விழிக்குருடும் கேளாச் செவியும் மற்றுமக்கே
இந்த உலகத் துள்ளன என் றன்பர் பின்னும் இயம்புவார்.

முடிவிலாத பேரறிவின் திறமுடைய தண்டியடிகள் இதனைச் சொல்லிடக் கேட்ட அறிவிலாத சமணர் சொல்வார் நாங்கள் சிந்தித்து உனக்கு எடுத்து ஓதிய தரு மத்தைக் கேளாய் உனது காது கேட்பதையும் இழந்தாயோ என்று கூறிட அது கேட்ட தண்டியடிகள் சமணரை நோக்கி மந்தமான மூட உணர்வும் கண்குருடும் கேளாதகாதும் மற்று உமக்கேஇந்த உலகத்தில் உள்ளன என்று கூறிப் பின்னரும் சொல்வார் எவ்வா றனின். 8

வில்லால் எயில்மூன் றெரித்தபிரான் விரையார் கமலச் சேவடிகள்
அல்லால் வேறு காணேன்யான் அதுநீர் அறிதற் கார்? என்பார்
நில்லா நிலையீர்! உணர்வின்றி நுங்கண் குருடாய் என்கண்உல
கெல்லாங்காண்பன்யான்கண்டால்என்செய்வீர்? என்றெடுத்துரைத்தார்

மேருமலைவில்லால் புரங்கள் மூன்றினை எரித்த பெருமானது வாசனை பொலியும் தாமரைப் பூப்போலும் திருவடிகளே அல்யாது வேருென்றும் என் கண்ணுல் நான் காணேன். அப்படியாக வேறு பொருளை புறக்கண்ணுல் காணுமைக்கு குருடன் என எள்னை நீனைந்தீர் போலும்! அந்த பேரின்பமாய தரிசனத்தைப் பெறுதற்கு நீங்கள் ஆர்பரிப்க்குவமுடையீர் என்று கூறுபவர் இன்னமும் அவரிடம் ''அறிவாளிகளாம் பெரியோர் நில்லாத ஓர் நிலையில் நிற்பீரே! பார்வை உணர்வின்றி உங்கள் கண் குருடாக; எனது கண்ணுல் உலகு எல்லாம் காணும்படி செய்வேன்'' அவ்வாறு நான் கண்டால் என்செய்வீர் நீர்'' என்று கேட்டார். 9

அருகர் அதுகேட்(டு) உன்தெய்வத் தருளால் கண்நீ பெற்றுயேல்
பெருகும் இழ்வு தினில்நாங்கள் பின்னை இருக்கி லோம் என்று
கருகு முருட்டுக் கைகளால் கொட்டை வாங்கிக் கருத்தின்வழித்
தருகைக் கயிறுந் தறியுமுடன் பறித்தார் தங்கள் தலைபறித்தார்.

சமணர் அது கேட்டு ''உன்தெய்வத்தருளால் கண்ணினை நீ பெற்றுயென்றுல் பெருகிய இத் திருவாரூரில் நாங்கள் பின்னர் இருக்கில்லோம்'' என்று ஏளனமாகக் கூறி கறுத்த தங்கள் முட்டுக்கையால் தண்டியடிகளது மண்வெட்டும் ஆயுதத் தைப்பறித்துக் கொண்டு அவர் தமது உணர்ச்சியால் தடவிப்போதற்கு கட்டிவைத்த கயிற்றையும் குறித்தடியையும் பிடுங்கி உடன் எறிந்தார்கள்; அவர்களே தங்கள் தலை யில் உள்ளமயிரை வேதனையுற பிடுங்கி எடுப்பவர்கள். 10

வெய்ய தொழிலார் செய்கையின்மேல் வெகுண்ட தண்டி யடிகள்தாம்
மைகொள் கண்டர் பூங்கோயில் மணிவா யிலின் முன் வந்திறைஞ்சி
ஐயனே! இன் றமணர்கள் தாம்என்னை அவமா னஞ்செய்ய
நைவ தானேன்; இதுதீர நல்கும் அடியேற் கெனவீழ்ந்தார்.

தலையில் மயிரைப் பிடுங்கும் கொடும் தொழிலாளரான சமணர் செய்த இச் செயலின் மேல் வெகுண்டு வேதனையடைந்த தண்டியடிகள் நஞ்சுண்டு கருமையாய கண்டமுடைய கடவுள் சிவனது பூங்கோயில் எனப்படும் திருவாரூரின் அழகிய திரு வாயில் முன்பு வந்து வணங்கி என் ஐயனே! இன்று சமணர்கள் தாம் என்னை அவமானஞ் செய்திட நான் மனவேதனையுறுவதானேன். இது தீர்த்திட அருள் நல் கும் அடியேற்கு என அப்படியே நிலத்தில் வணங்கி வீழ்ந்தார். 11

பழுது தீர்ப்பார் திருத்தொண்டர் பரவி விண்ணப் பஞ்செய்து
தொழுது போந்து மடம்புகுந்து தூய பணிசெய் யப்பெரு(து)
அழுது கங்குல் அவர்துயிலக் கனவில் அகில லோகங்கள்
முழுதும் அளித்த முதல்வனுர் முன்நின் றருளிச் செய்கின்றார்.

தம்அடியார்க்குற்ற பழுதினைக்தீர்த்திடும்பெருமான் திருத்தொண்டர் இவ்வலக் போற்றி விண்ணப்பஞ் செய்து தொழுது அப்பால் சென்று தமது மடம்புகுந்து எம்பிரான்கு அன்று தூயதான பணிசெய்திடப் பெருமைக்கு நினைந்து அழுது இரவில் தண்டியடிகள் நித்திரை செய்திட; அவரது கனவில் அகில உலகங்கள் முழுவதை யும் படைத்த முதல்வனூர் திருவாரூர் அப்பன் தோன்றி முன்னின்று இதனைச் சொல்லியருள்கின்றார்: 12

நெஞ்சில் மருவுங் கவலையினை ஒழிநீ நின்கண் விழித்தந்த
வஞ்ச அமணர் தங்கண்கள் மறையு மாறு காண்கின்றாய்
அஞ்ச வேண்டாம் என்றருளி அவர்பால் நீங்கி அவ்விரவே
துஞ்சும் இருளில் அரசன்பால் தோன்றிக் கனவில் அருள்புரிவார்.

''தண்டியே! உன்நெஞ்சில் கொண்ட கவலையை ஒழிவாய் உனது கண்ணை நீ விழித்து பார்வை பெறவும் அந்த வஞ்சகராய சமணர் தங்கள் கண்கள் மறையும் படியாகவும் நீ காணப்போகின்றாய் பயப்படவேண்டாம்'' என அருளி அவரிடம் நீங்கி அந்த இரவிலே துயில் செய்யும் இருளில் அரசன் பாலாகத்தோன்றி கனவில் அவனிடம் இதனை அருள்செய்வார் எம்பெருமான். 13

தண்டி நமக்குக் குளங்கல்லக் கண்ட அமணர் தரியாராய்
மிண்டு செய்து பணிவிலக்க வெகுண்டான்; அவன்பால் நீமேவிக்
கொண்ட குறிப்பால் அவன்கருத்தை முடிப்பாய் என்று கொள்அருளித்
தொண்டர் இடுக்கண் நீங்கஎழுந் தருளினூர் அத் தொழிலுவப்பார்.

தண்டியடிகள் என்பான் நமக்கு குளம்தோண்டக் கண்ட சமணர் தாங்காது பொறுமையால் வன்மை செய்து அவன் பணியினை விலக்கியிட அவன் வெகுட்சி யால் வேதனைப்பட்டான். அவனிடன் நீ சென்று அவன் மனதில் கொண்டகுறிப் பின்வழி அவன்எண்ணத்தை முடிப்பாய் என்று அரசன் தன் அறிவில் அதனைச் கொண்டிடவும் அருள் புரிந்து தண்டி அடிகளது இடுக்கண் நீங்க அருள் செய்து மறைந்தருளினூர் அத்தொழிலைப் புரிவதில் பெருமகிழ்வு கொள்ளும் சிவபிரான். 14

வேந்தன் அதுகண் டப்பொழுதே விழித்து மெய்யின் மயிர் முகிழ்ப்பப்
பூந்தண் கொன்றை வேய்ந்தவரைப் போற்றிப் புலரத் தொண்டர்பால்
சார்ந்து புகுந்த படிவிளம்பத் தம்பிரானூர் அருள்நினைந்தே
ஏய்ந்த மன்னன் கேட்பஇது புகுந்த வண்ணம் இயம்புவார்.

அரசன் அக்கனக் கண்டு அப்பொழுதே விழித்து உடலின் உரோமம் சிலிர்த்திட குளிர்ந்த மலராய கொன்றைப் பூச்சூடினூரை போற்றி இருள் நீங்கி விடிந்திட உடன் தொண்டர் தண்டியடிகளிடம் சேர்ந்து தனக்கு நிகழ்ந்தபடி சொல்லிட அது கேட்டு தம்பெருமான் அருள் நினைந்து திருவருளின் வாய்ப்புடைய அரசன் கேட்ப இந்த வண்ணமாகச் சொல்வார் தண்டியடிகள். 15

மன்ன! கேள்யான் மழவிடையார் மகிழுந் நீர்த்தக் குளங்கல்லத்
துன்னும் அமணர் அங்கணைந்தீ(து) அறம் அன்(று) என்று பலசொல்லிப்
பின்னுங் கயிறு தடவுதற் கியான் பிணித்த தறிகள் அவைவாங்கி
என்னை வலிசெய் தியான் கல்லுங் கொட்டைப் பறித்தார் என்றியபிம்.

அரசே கேள்; யான் தருமதேவதையாய இடபமுடைய பெருமான் மகிழ்கின்ற நீர்த்தக் குளத்தைத் தோண்டிட; இதனைக்கண்டு அங்கு இருந்த சமணர் வந்து என்னைநோக்கி ஈது தருமம் அன்று என்று பல சொல்லி பின்னர் யான்குருட னமையின் தடவிச் செல்லக் கட்டிய கயிறு தடிகள் அவற்றைப் பிடுங்கி என்னை வலியுறுத்தி யான் வைத்திருந்த மண்வெட்டும் ஆயுதமும் பறித்தார்கள் என்று சொல்லிப் பின்னரும்: 16

அந்த ஞன உனக்கறிவும் இல்லை என்றூர் யான் அதனுக்(கு)
எந்தை பெருமான் அருளால்யான் விழிக்கில் என் செய் வீர்? என்ன
இந்த ஊரில் இருக்கிலோம் என்றே ஓட்டினூர்; இதுமேல்
வந்த வாறு கண்டிந்த வழக்கை முடிப்ப தெனமொழிந்தார்.

குருடனூன உனச்கு அறிவும் இல்லை என்றூர்கள். யான் அதற்கு எந்தை பெரு மான், அருளால் யான் கண்பார்வை பெற்று விழித்தால் என் செய்வீர்கள் என்ன அப்படியானூல் நாம் இந்த ஊரில் இருக்கமாட்டோம் எனபந்தயம் கட்டினூர்கள் இனி இதன்படி மேலாக வந்தவைகளைக் கண்டு நீ இந்த வழக்கை முடிப்பாய் என்று தண்டியடிகள் மொழிதலும் 17

அருகர் தம்மை அரசனும்அங் கழைத்துக் கேட்க அதற்கிசைந்தார்
மருவுந்தொண்டர் முன்போக மன்னன் பின்போய் மலர்வாவி
அருகு நின்று விறல்தண்டி யடிகள் தம்மை முகநோக்கிப்
பெருகுந் தவத்தீர்! கண் அருளாற் பெறுமா காட்டும் எனப்பெரியோர்.

அது கேட்ட அரசன் சமணரை அங்கு அழைத்து அவர்கள் ஒப்புக் கொண்ட படி செய்திட கேட்ப அதனிற்கு அச்சமணர் இசைவு கொண்டார். அது கேட்டு அப்படிச் செய்திட இறைவன் அருளால் சிறந்திடும் தொண்டர் தண்டியடிகள் முன்னுகச் செல்ல அரசன் பின்னுகச் சென்று மலர்கள் சிறந்திடும் குளத்தின் அருகே நின்று வலியுடைய தண்டியடிகள் நாயனூரை முகநோக்கி ''பெருகும் தவ முடையீர் உமது கண்ணினை அருளால் பெறுமாறு இங்கு காட்டும்'' என்னலும் அதுவேஜ பெரியோர் தண்டியடிகளும்: 18

ஏய்ந்த அடிமை சிவனுக்கியான் என்னில் இன்றென் கண்பெற்று
வேந்தன் எதிரே திருவாரூர் விரவுஞ் சமணர் கண்ணிழப்பார்
ஆய்ந்த பொருளுஞ் சிவபதமேஆவ தென்றே அஞ்செழுத்தை
வாய்ந்ததொண்டர் எடுத்தோதி மணிநீர் வாவி மூழ்கினூர்.

உண்மையில் பொருந்திய அடிமை உடையேன் சிவனுக்கு யான் என்றூல் இன்று என் கண்யான் பெற்றிட இந்த அரசன் எதிரே திருவாரூர் பொருந்திய சமணர் யாரும் கண்இழப்பார். இதுவன்றி ஆராய்ந்து தெளிந்த பொருளும் சிவனுடைய பரமபதமே யாவது என்று கூறியருளி திருவைந்தெழுத்தையும் திருவருள்வாய்ப்புற்ற எம்தொண்டர் தண்டியடிகள் எடுத்து ஓதி அழகிய நீர்க்குளத்தில் மூழ்கினூர்: 19

தொழுது புனல்மேல் எழுந்தொண்டர் தூய மலர்க்கண் பெற்றெழுந்தார்
பொழுது தெரியா வகைஅமரர் பொழிந்தார் செழுந்தண் பூமாரி
இழுதை அமணர் விழித்தேகண் ணிழந்து தடுமா றக்கண்டு
பழுதுசெய்த அமண்கெட்ட தென்று மன்னன் பகர்கின்றூன்.

குளம் மூழ்கித் தொழுது நீர் மேலாக எழுந்தொண்டர் தண்டியடிகள் தமது தூயதான மலர்க்கண் பெற்று எழுந்தார். அதுவேஜ வெளிஎதுவும் தெரியாவதை தேவர்கள் செழுமையாய பூமழை பொழிந்தார்; இந்நிலையில் பேய்களாகும் சமணர் கண்விழிந்திருந்தார் உடன் கண்பார்வை இழந்து தடுமாறக்கண்டு கொண்ட அரசன் பழுது செய்த சமணம் இனி கெட்டழிந்தது என்றிதனைக் கட்டளை செய்கின்றூன். 20

தண்டி யடிகள் தம்முடனே ஒட்டிக்கெட்ட சமண்குண்டர்
அண்டர் போற்றுந் திருவாரூர் நின்றும் அகன்று போய்க்கழியக்
கண்ட அமணர் தமைஎங்குங் காணு வண்ணந் துரக்க என
மண்டி வயவர் சாடுதலும் கண்கள் காணர் மனங்கலங்கி.

தண்டியடிகள் தம்முடன் பந்தயம் கொண்டு கெட்டழிந்த வஞ்சகச் சமணர்கள்; தேவர்கள் போற்றும் திருவாரூர் நின்றும் அகன்று போய் ஒழிந்திட நீங்கள் அவர் களைக் கண்டவிடத்தே இனி இங்கு காணு வண்ணம் கலையும் எனக் கட்டளை செய் தலும் அதன்படி அரசனது படைவீரர் அடித்துத் துரத்துதலும் கண்காணமுடியாத அவர்கள் அடிவிழ மனம் கலக்கம் கொண்டு: 21

குழியில் விழுவார்; நிலைதளர்வார்; கோலும் இல்லை எனஉரைப்பார்
வழியீ(து) என்று தூறடைவார் மாண்டோம் என்பர் மதிகெட்டூர்
அழியும் பொருளை வட்டித்திங் கழிந்தோம் என்பார் அரசனுக்குப்
பழியீ தாமோ என்றுரைப்பார் பாய்கள் இழப்பார் பறிதலையர்.

ஓடுகின்ற அவர்கள் குழியில் தடக்கி விழுவார் சிலர். செல்லும் நிலைதளர்வார் சிலர். அந்தோ எமக்கு ஊன்றுகோலும் இல்லையே எனச் சொல்வார் சிலர். வழி இதுவெனப் போய் செடி பற்றைகளில் மாட்டிக்கொள்வார். ஐயோ நாம் மாண்டோம் என்பார்!. அடே மதிகெட்டவர்களே அழிகின்ற பொருளைக் தம்பிட்டு நாமும் முடிவில் அழிந்தோம் என்பார். இப்படிச் செய்யும் அரசனுக்கு இதுவும் பழியாய் ஆகுமோ என்று சொல்வார். உடையான பாய்களும் இழப்பார்கள் பிடுங்கிய மயிருடைய தலையராம் அச்சமணர். 22

பீலி தடவிக் காணாது பெயர்வார் நின்று பேதுறுவார்
காலி லேடு கைமுறியக் கல்மேல் இடறிவீழ்வார்கள் சால
நெருங்கி எதிரெதிரே தம்மிற் ரூமே முட்டிடுவார் மாலும்
மனமும் அழிந்தோடி வழிகள் அறியார் மயங்குவார்.

மயற்பீலியை கீழேவிழுத்தி அதனைத்தடவிக்காணாது போவார் சிலர்; நின்று நடுங்குவார் சிலர்; காலிலேடு கைகள் முறியக் கல்லில்மேல் இடறி வீழ்வார்கள்; மிகவும் நெருங்கி தாங்களில் தாங்கள் வந்து முட்டிக்கொள்வார்கள்; மயக்கமும் மனமும் கெட்டழிந்து ஓடுவார்; வழியும் அறியாது மயங்குவாரயாயினர் கண்கெட்ட அந்தச் சமணர். 23

அன்ன வண்ணம் ஆரூரில் அமணர் கலக்கங் கண்டவர்தாம்
சொன்ன வண்ண மேஅவரை ஓடத் தொடர்ந்து தூந்ததற்பின்
பன்னும் பாழிப்பள்ளிகளும் பறித்துக் குளஞ்சூழ் கரைபடுத்து
மன்னன் அவனும்மனமகிழ்ந்து வந்து தொண்டர் அடிபணிந்தான்.

அன்னவாறுக திருவாரூரில் சமணர் கலங்கிடக் கண்டவராகிட; அச்சமணர் தாங்கள் முன்னர் சொன்னவண்ணமே அவரை ஓடிடும் படி தொடர்ந்து கலைத்த பின்பாக; சொல்லப்பெறும் சமணப் பள்ளிகளையும் இடித்துத் தள்ளி குளத்தைச் சூழ்ந்த கரையையும் அகலச்செய்து நன்ருக்கி அரசனும் மன மகிழ்ந்து வந்து தொண்டர் தண்டியடிகள் திருப்பாதம் பணிந்தான். 24

மன்னன் வணங்கிப் போயினபின் மாலும் அயனும் அறியாத
பொன்னங் கழல்கள் போற்றிசைத்துப் புரிந்த பணியுங் குறைமுடித்தே
உன்னும் மனத்தால் அஞ்செழுத்தும் ஓதி வாழுவா தொழுகியே
மின்னுஞ் சடையார் அடி நீழல் மிக்க சிறப்பின் மேவினர்.

அரசன் வணங்கிப்போன பிற்பாடு திருமாலும் அறிந்திடாத எம்பெருமானது பொன்னின் அழகிய திருவடிகளை போற்றிப்பாடி தான் செய்த குளம் தோண்டும் திருப்பணியின் குறையினையும் முடித்து சிந்திக்கும் மனத்தால் திருவைந்தெழுத்தும் ஓதி; தமது பணியில் வழுவின்றி ஒழுகிவந்து பின்னுக மின்னும் சடையுடைய பெருமானது திருவடி நிழற்கீழ் மிக்க சிறப்பில் பொருந்தினர் தண்டியடிகள் நாயனர். 25

கண்ணின் மணிக ளவையின்றிக் கயிறு தடவிக் குளந் தொட்ட
எண்ணில் பெருமைத் திருத்தொண்டர் பாதம் இறைஞ்சி இடர்நீங்கி
விண்ணில் வாழ்வார் தாம் வேண்டப் புரங்கள் வெகுண்டார் வேற்காட்டூர்
உண்ணிலாவும் புகழ்த் தொண்டர் மூர்க்கர் செய்கை உரைக்கின்றும்.

தமது கண்ணின் பார்வை மணிகள் இலாது கயிறு தடவிக்குளம் தொட்ட எண்ணிலாத பெருமை உடைய திருத்தொண்டர் தண்டியடிகள் திருப்பாதத்தை அடியேன் வணங்கி; எனது இடர் யாவும் நீங்கி இப்பால் வானில் வாழும்தேவர்கள் அவர் வேண்ட முப்புரங்களையும் எரித்தபெருமான் விரும்பி உறையும்திருவேற்காட்டூரில் நிலவிய புகழுடைய தொண்டர் மூர்க்க நாயனரது செயலினை எடுத்து மொழிவோம். 26

தண்டியடிகள் நாயனர் புராணம் முற்றிற்று

மூர்க்க நாயனர் புராணம்

மன்னிப் பெருகும் பெருந்தொண்டை வளநா டதனில் வயல்பரப்பும்
நன்னித் திலவெண் டிரைப்பாலி நதியின் வடபால் நலங்கொள்பதி
அன்னப் பெடைகள் குடை வாவி அலர்புக் காடஅரங்கினிடை
மின்னுக் கொடிகள் துகிற்கொடிகள் விழவிற் காடு வேற்காடு.

விளங்கிப் பெருகும் பெருந்தொண்டைநாட்டிடத்தாக வயலில் நீர் பரப்பிடும் நல்ல முத்துப்போலும் திரையுடைய பாலிநதியின் வடபுறத்தாக நலம்கொள்ளும் ஓர் நகரம்; அதனிடத்து அன்னப்பறவைகள் குடைத்தாடும் குளங்களில் உள்ள தாமரைப்பூக்களில் புகுந்து நின்றுஆட; நாட்டிய அரங்குகளிடை மின்னிடும் இடையுடைய பெண்களும் துகிலின் கொடிகளும் ஆடுகின்ற சிறப்புடைய விழாக்கள் நிறைந்த வேற்காடு என்னும் நாமமுடையது அந்த நகரம்.

செம்பொற் புரிசைத் திருவேற்கா டமர்ந்த செய்ய சடைக் கற்றை
நம்பர்க்(கு) உம்பர்க் கமுதளித்து நஞ்சை அமுது செய்தவருக்(கு)
இம்பர்த் தலத்தில் வழிஅடிமை என்றுங் குன்ரு இயல்பில்வரும்
தம்பற் றுடைய நிலை வேளாண் குலத்திற்றலைமை சார்ந்துள்ளார்.

செம்பொன்னின் மதில்சூழ்ந்த திருவேற்காடாய அத்தலத்து அமர்ந்த செம்மையாய கற்றைச் சடையுடைய எம்பெருமானுக்கு; தேவர்க்கு அமுதுகொடுத்து தாம் நஞ்சை அமுதுசெய்தவருக்கு; இந்தப்பூமியில் வழிவழியடிமை என்றும் குன்ரூத இயல்பில் வருகின்றமை பெரிதும் தம்பற்றுக உடைய நிலையுடைய வேளாளரது குலத்தில் தலைமைபெற்றுடையவர் மூர்க்கர் என்னும் இந்த நாயனர். 3

கோதில் மரபிற் பிறந்துவளர்ந் தறிவு கொண்ட நாள் தொடங்கி
ஆதி முதல்வர் திருநீற்றின் அடைவே பொருள் என் றறிந்தரனூர்
காதல் அடியார்க் கமுதாக்கி அமுது செய்யக் கண்டுண்ணும்
நீதி முறைமை வழுவாத நியதி பூண்ட நிலைமையார்.

குற்றம் எதுவும் இலாது நடந்துவந்த நல்ல ரபில் பிறந்துவளர்ந்து அறிவு கொண்ட நாட்தொடங்கி ஆதியாய முதல்வன் சிவனது திருநீற்றின் சார்பே மேலான பொருள் என்று அறிந்து அவர் எம்பிரான்பால் காதலுடைய அடியார் கட்கு அமுதாக்கி அவாகள் அமுதுசெய்திடத் தாம் அதனைக்கண்டு உண்கின்ற நீதி முறைமை தவருத ஓர் நியதி பூண்டுகொண்ட நிலையுடையார் அந்த மூர்க்கர். 3

தூய அடிசில் நெய்கன்னல் சுவையின் கறிக ளவை அமைத்து
மேய அடியார் தமைப்போற்றி விருப்பால் அமுது செப்வித்தே
ஆய பொருளும் அவர்வேண்டும் படியால் உதவி அன்புமிக
ஏயு மாறு நாடோறும் இனைய பணிசெய் தின்புற்ரூர்.

தூய அன்னம் நெல் சரும்பின்கட்டி சுவையுடைய கறிகள் அவைஅமைத்து தம்பால் எழுந்தருளிவந்த அடியார்களை வணங்கி விருப்புடனே அமுதுசெய்வித்து தம்மிடமுள்ள பொருளும் அடியார் அவர்வேண்டும்படி கொடுத்து அன்புமிகப் பொருந்துமாறு நாள்தோறும் இத்தகைய பணியே செய்கின்ரூர் மூர்க்கநாயனர். 4

இன்ன செயலின் ஒழுகுநாள் அடியார் மிகவும் எழுந்தருள
முன்னம் உடைமை யானபொருள் முழுதும் மாள அடிமையுடன்
மன்னும் காணி யான நிலம் மற்றும் உள்ள திறம்விற்றே.
அன்னம் அளித்தே மேன்மேலும் ஆராமனத்தா ராயினர்.

இன்னவகையான செயலில் மூர்க்கநாயனர் ஒழுகிவரும் நாளில் அடியார்கள் மிகமிக எழுந்தருளிவந்திட அவர்க்கு ஏற்ற பணி புரிந்திடலால் தமது முன்னைய உடமைகளாய பொருள் முழுதும் ஒழிய; தம்மிடத்து விளங்கிய அடிமையுடன் காணியான நிலம் மற்றுமுள்ள தோட்டம் யாவும் விற்று அடியார்க்கு அன்னம் கொடுத்து அதனால் மேன்மேலும் ஆசைதிறையாத மனத்தராயினர். 5

அங்கண் அவ்வூர் தமக்கொருபற் றடியார் தங்கட் கமுதாக்க
எங்கும் காணு வகைதோன்ற இலம்பா டெய்தி இருந்தயர்வார்
தங்கும் வகையால் தான்முன்பு கற்ற தன்மை நற்சூதால்
பொங்கும் பொருளாக் கவும்அங்குப் பொருவார் இன்மை யினிற்போவார்

அவ்வாறு நிகழ அங்கு அவ்வூரில் இனி ஒருபொருளும் அடியார்தமக்கு அமுதாக்க எங்கும் காணுவகைதோன்ற மிக வறுமைப்பாடுகொண்டு தொண்டுசெய்வதற்கு வழிகாணுது இருந்து அயர்பவர்; தம்மிடத்து மறவாது கொண்டிடும்வகை தாம் பழகிக் கற்றுக்கொண்டதாய நல்ல சூதினுல் பொருள் தேடிக்கொள்வதற்கு சூதில் தம்முடன் பணயமாக எதிர்ஏற்பார் அந்த நாட்டில் ஒருவருமிலாமையால் வேறிடம் போவார்; 6

பெற்றம் ஏறிப் பலிக்குவரும் பெருமான் அமருந் தானங்கள்
உற்ற அன்பாற் சென்றெய்தி உருகும் உள்ளத் தொடும்பணிந்து
கற்ற சூதால் நியதியாங் கருமம் முடித்தே கருதாரூர்
செற்ற சிலையார் திருக்குடந்தை அடைந்தார் வந்து சிலநாளில்.

இடபவாகனமேறி பிச்சைக்கு எழுந்தருளிவரும் எம்பெருமான் அமர்கின்ற தலங்களை மூர்க்கநாயனர் தமக்கு உற்ற அன்பினுல் சென்றடைந்து உருகும் உள்ளத்தொடும் பணிந்து; தான்கற்ற சூதினுல் பெறும்பொருளால் தமது நியமமான அடியார்க்கு அமுதூட்டும் கருமம் முடித்து பின்னர் தம்மை நீணயாத முப்புரத்து அசுரரது ஊரினை அழித்த வில்லுடைய பெருமானின் திருக்குடந்தை என்னும் தலத்தை சிலநாளில் வந்து அடைந்துகொண்டார்; 7

இருளாரும் மணிகண்டர் அடியார்க்கின் னமுதளிக்கப்
பொருளாயம் எய்துதற்குப் புகழ்க்குடந்தை அம்பலத்தே
உருளாயச் சூதாடி உறுபொருள் வென் றனநம்பர்
அருளாக வேகொண்டங் கமுதுசெய்வித் தின்புறுவார்.

இருள்விளங்கும் அழகிய திருக்கண்டமுடைய பெருமான் அடியார்க்கு இனிய திருவமுதாக்கப் பொருளாய நியமம் பெறுதற்கு புகழ்நிறைந்த திருக்குடந்தை நகரினில் பேர்பெற்ற பொதுமடம் ஒன்றில் காய் உருட்டும் சூதாடி; அதனுல் பெறும் பொருள் பெருமளவில் வென்று; அதனை எம்பெருமான் அருளாகவேகொண்டு அங்கு அப்பொருளால் அடியார்க்கு அமுதுசெய்வித்து இன்புறுகின்றார் மூர்க்க நாயனர்; 8

முற்சூது தாந்தோற்று முதற்பணய மவர்கொள்ளப்
பிற்சூது பலமுறையும் வென்றுபெரும் பொருளாக்கிச்
சொற்சூதால் மறுத்தாரைச் சுரிகைஉரு விக்குத்தி
நற்சூதர் மூர்க்கர்எனும் பெயர்பெற்றார் நானிலத்தில்

சூதாடும்பொழுது முதற்சூதாட்டத்தில் வைத்த பந்தயக் காசினை தான்தோற்று எதிர்வைத்தார் அதைப்பெறும்படிசெய்து; பின்னர் தமது சாதுரியத்தால் அவர் முன்பெற்ற பணத்தின் மிகுதிவால் பணயம் வைக்கும் எல்லாக் காசினையும் பல முறையும் வென்று பெரும்பொருள் சேகரித்து; இப்படியாகச் சூதாடும்பொழுது பேச்சுமாறி மறுத்து வாதிடுவாரைத் தமது வாள்உருவிக் குத்தி இத்தன்மையால் நல்ல கெட்டித்தனமான சூதர் மூர்க்கர் என்னும் பெயரைப் பெற்றார் இப்பெரிய உலகில்; 9

சூதினில்வென் றெய்துபொருள் துரிசற்ற நல்லுணர்வில்
நீதகல அமுதாக்கு வார்கொள்ளத் தாந்தீண்டார்
காதலுடன் அடியார்கள் அமுதுசெயக் கடைப்பந்தி
ஏதமிலா வகைதாமும் அமுதுசெய்தங் கிருக்குநாள்.

சூதினுல் வென்றுபெற்ற பொருள் முழுவதையும் பழுதற்ற தமது நல்லுணர்வினுல் அத்தினங்களெலாம் நீங்க அடியார்கட்கு அமுதாக்குவார் கையில் பெறும்படி

யாகக் கைசெடுத்து தாம் அதனில் ஒருசதமேனும் தீண்டார்; நல்லன்புடன் அவர் கொடுக்கும் திருவமுதை அன்பினுல் அடியார்கள் அமுதுசெய்திட பின்னர் தாம் சுடைப்பந்தியில் இருந்து ஏதம் ஏதும் இலாவகை அளவிற்கு போசனத்தை உண்டு அங்கு இருக்கும் நாட்களில்; 10

நாதன்தன் அடியார்க்கு நல்லடிசில் நாடோறும்
ஆதரவி னுல்அமுது செய்வித்தங் கருளாலே
ஏதங்கள் போயகல இவ்வுலகை விட்டதற்பின்
பூதங்கள் இசைபாட ஆடுவார் புரம்புக்கார்.

எம்பெருமானது அடியார்க்கு நல்ல அமுதை நாள்தோறும் அன்பினுல் அமுது செய்வித்து பின்னர் அங்கு எம்பெருமானது அருளாலே தமது குற்றங்கள்போய் நீங்க இந்த உலகைவிட்டு அதன்பின்னுக பூதங்கள் இசைபாட பொற்பெதுவில் ஆடும் பெருமானது உலகினைச் சென்றடைந்தார் எம்பிரான் மூர்க்கநாயனர். 11

வல்லார்கள் தமைவென்று சூதினுல் வந்தபொருள்
அல்லாருங் கறைக்கண்டர் அடியவர்கள் தமக்காக்கும்
நல்லார்நற் சூதராம் மூர்க்கர்கழல் நாம்வணங்கிச்
சொல்லார்சீர்ச் சோமாசி மாறர்திறஞ் சொல்லுவாம்.

சூதில் வல்லமை உடையார்களை வென்று சூதினுல் வந்தபொருள் முழுமையும் கருமைவிளங்கும் கண்டமுடைய பெருமான் அடியவர்கட்கு அமுதாக்கிடும் நல்லவர் நல்ல சூதாட்டக்காரர் மூர்க்கநாயனருடைய மலர்கழல் வணங்கி இப்பால் உலகில் பெரிதும் புகழ்ந்து பேசப்படும் சீருடைய சோமாசிமாறநாயனர் தன்மை சொல்லுவாம். 12

மூர்க்கநாயனர்புராணம் புராணம் முற்றும்.

சோமாசிமாற நாயனர் புராணம்

சூதம்பயி லும்பொழில் அம்பரில் தூய வாய்மை
வேதம்பயி லும்மறை யாளர் குலத்தின் மேலோர்
ஏதம்புரி யும்எயில் செற்றவர்க் கன்பர் வந்தால்
பாதம்பணிந் தாரமு தூட்டுநற் பண்பின் மிக்கார்.

மாமரங்கள் விளங்கி நிற்கும் சோலையுடைய திருஅம்பர் என்னும் ஊரில் தூய வாய்மையாய வேதத்தைப் பயில்கின்ற ஓர் அந்தணர்களது குலத்தில் வந்தவதரித்த பெரியோர் சோமாசிமாற நாயனர். அவர் துன்பம் புரியும் முப்புரம் எரிசெய்த சிவபிராற்கு அன்பராம் அடியார்கள் தம்மிடம் வந்தால் அவர்களது பாதம் பணிந்து நன்முக அன்புடன் அமுதூட்டுகின்ற நற்பண்பில் மிகுந்தவர்; 1

யாழின்மொழி யாள்தனிப் பாகரைப் போற்றும் யாகம்
ஊழின் முறை மைவழு வாதுல கங்க ளான
ஏழும்உவப் பப்புரிந் தின்புறச் செய்த பேற்றுல்
வாழுந்திறம் ஈசர் மலர்க்கழல் வாழ்த்தல் என்பார்.

யாழின் இனிமை போலும் மொழி உடைய உமையம்மையார் பாகர் சிவனைப் போற்றும் யாகம் முன்புதொட்டு நிகழவரும் விதி முறை வழாது மேலாய இந்த உலகங்களான ஏழும் உவந்திடப் புரிந்து அங்குவாழும் சிவகணநாதர் முதல் எல்லாரும் இன்புறச் செய்திடும் பேற்றுல் வாழ்கின்றதன்மையே ஈசன் சிவனுடைய திருவடி மலர் வாழ்த்தும் செயலாகும் என்பார் சோமாசி மாறர்; இன்னும்; 2

எத்தன்மைய ராயினும் ஈசனுக் கன்பர் என்றுல்
அத்தன்மையர் தாம்நமை யாள்பவர் என்று கொள்வார்
சித்தந்தெளி யச்சிவன் அஞ்செழுத் தோதும வாய்மை
நித்தந் நியமம் எனப்போற்றும் நெறியில் நின்றார்.

"எத்தன்மைய ராயினும் அவர் எம்பிரான் சிவனுக்கு அன்பர் என்றுல் அத் தன்மை உடையவர் தாம் நம்மை ஆள்பவர் என்று கொண்டிடும் திறமுடையார். தன்னுடைய சித்தம் தெளிவுகொண்டிட சிவனது நாமம் நமச்சிவாய எனும் ஐந்து எழுத்து ஓதும் வாய்மை ஒழுக்கம் தமது நித்தலும் கொள்ளும் கடமை என்று அவ் வாறு போற்றும் ஒழுக்கத்தில் நின்றூர் அவர். 3

சீருந்திரு வும்பொழி யுந் திருவாரூர் எய்தி
ஆரந்திகழ் மார்பின் அணுக்கவன் றொண்டர்க் கன்பால்
சாரும்பெரு நண்பு சிறப்ப அடைந்து தங்கிப்
பாரும்விசும் பும்பணி யும்பதம் பற்றி யுள்ளார்.

அவர் சீரும் திருவும் பொழியும் திருவாரூர் கோயில் அடைந்து அங்கு வாழும் மாலிதகழும் மார்புடைய எம்பிரான் சிவனுக்கு அணிமையாய சுந்தரமூர்த்தி சுவாமிகட்கு அன்பால் சேரும் பெரு நண்பு சிறப்பப் பெற்றுக் கொண்டு அதனுல் திருவாரூர்தங்கி; இப்பூமியும் வான் உலகும் பணிகின்ற சுந்தரமூர்த்தி சுவாமிகளது பாதமே தமது பெரும் பற்றுகப் பற்றிக் கொண்டார். 4

துன்றும்புலன் ஐந்துடன் ஆறு தொகுத்த குற்றம்
வென்(று) இங்கிது நன்னெறி சேரும் விளக்கம் என்றே
வன்றொண்டர் பாதந்தொழு தான சிறப்பு வாய்ப்ப
என்றுந்நில வுஞ்சிவ லோகத்தில் இன்பம் உற்றூர்.

இயல்பில் சேட்டைகட்கு ஆளாக்கும் ஐந்து புலன் களுடன் காமாதி முதல் குற்றங்களாகக் பெரியோர்களால் நிச்சயித்த குற்றம் ஆறும் வென்று நீக்கி; இங்கு இந்த சனமார்க்கமே நன்னெறிசேரும் விளக்கமாகும் என்று அத்தகைய குற்றக் குணங்களே வென்றிட சுந்தரமூர்த்தி சுவாமிகளது திரும்பாதம் தொழுது அதனுல் வருவதான சிறப்பு வாய்ந்திட அப்பேற்றுல் என்றும் நிலவிய அழிவிலாத சிவயோ கத்துச் சென்று இன்பமுற்றூர் சோசிமாற நாயனூர். 5

சோமாசி மாற நாயனூர் புராணம் முற்று

சுந்தரமூர்த்திசுவாமிகள் துதி

பணையுந் தடமும் புடைசூழும் ஒற்றி யூரில் பாகத்தோர்
துணையுந் தாமும் பிரியாதார் தோழத் தம்பி ரானூரை
இணையுங் கொங்கைச் சங்கிலியார் எழில்மென் பணைத்தோள் எய்துவிக்க
அணையும் ஒருவர் சரணமே அரண மாக அடைந்தோமே.

வயல் பண்ணைகளும் குளமும் புறத்தே சூழ இனிதுடன் விளங்கும் திருவொற் றியூரில் பாகத்துவைத்த துணைவியான பார்வதி அம்மையும் தாமும் பிரியாதிருக் கிறை பெருமான்; தனக்கு ஒரு தோழனுய பெருமான்; அவரிடம் இணையான பருத்த தனமுடைய காதலி சங்கிலி அம்மையாரை தனதுபெருத்த தோள் அணைந்து சேர வருவிக்கும் படி திருமணம் செய்துவைத்திடச் சென்றணைந்த ஒருவராம் நம் பெருமான் சுந்தரது திருப்பாதமே நமக்கு காப்பாக நாம் அடைந்தோமே. 1

வம்பரு வரிவண்டுச் சருக்கம் முற்றும்.

சருக்கம் 6—க்கும் திருவிருத்தம் 3639.

வார்கொண்ட வனமுலையாள் சருக்கம்

சாக்கியநாயனூர் புராணம்

அறுசமயத் தலைவராய் நின்றவருக் கன்பராய்
மறுசமயச் சாக்கியர்தம் வடிவினுல் வருந்தொண்டர்
உறுதிவரச் சிவலிங்கங் கண்(டு) உவந்து கல்லெறிந்து
மறுவில்சரண் பெற்றதிறம் அறிந்தபடி வழுத்துவாம்.

ஆறு வகையாய சமயங்கட்கும் ஏகனுய ஒரு கடவுளாய் நின்ற சிவனுக்கு அன் பராகி; புறச்சமயத்து ஒழுகும் புத்தருடைய கோலத்தினுல் வருகின்ற ஒரு தொ ண்டர் தமது சித்தத்து இதுவே உறுதி எனத் தெளிந்து கொள்ளும் தெளிவின் ஆனந்தம் வர; அத்தன்மையாய மிக மகிழ்ச்சியால் சிவலிங்கம் கண்டு இதுவே பொருள் என உவந்து கல்எறிந்து சிவனது மாறேதும் இலாத திருவடி பெற்ற வரலாற்றை நாம் அறிந்தபடி சொல்லித் தொழுவோம். 1

தாளாளர் திருச்சங்க மங்கையினில் தகவுடைய
வேளாளர் குலத்துதித்தார் மிக்கபொருள் தெரிந்துணர்ந்து
கேளாகிப் பல்லுயிர்க்கும் அருளுடைய ராய்க்கெழுமி
நீளாது பிறந்திறக்கும் நிலையொழிவேன் எனநிற்பார்.

தாழ்வு ஏதும் அறியாது செம்மை நெறிநின்ற மக்கள் வாழும் திருச்சங்க மங் கை என்னும் பதியில் மிக்க தகவு உடைய வேளாளர் குலத்து வந்து அவதரித் தார் ஒருவர்; அவர் உலகில் மேலான அப் பொருளின் உண்மை நிலை தெரிந்து உணர்ந்து அதனுலே பல உயிர்க்கும் தாம் சுற்றமாவது போன்ற இரக்கமுடை யராய்ப் பொருந்தி இத்தகைய எல்லா உயிரிடத்தும் கொண்ட அன்பின் முதிர்ச் சிப்பேற்றுல் விளைந்த அறிவில் இனியாளும் நெடுகவும் பிறந்து இறக்கும் நிலையை ஒழிவேன் எனத் துணிந்து நிற்பார். 2

அந்நாளில் எயிற்காஞ்சி அணிநகரஞ் சென்றடைந்து
நன்ஞானம் அடைவதற்குப் பலவழியும் நாடுவார்
முன்னுகச் சாக்கியர்தாம் மொழி அறத்தின் வழிச்சார்ந்து
மன்னுத பிறப்பறுக்குந் தத்துவத்தின் வழிஉணர்வார்.

அந்த நாளில் அழகுடைய காஞ்சி நகரம் சென்று சேர்ந்து நல்ல ஞானம் அடைவதற்கு பல வழியையும் நாடுகின்ற அவர் முன்னுக பௌத்தர்கள் தாங்கள் மொழிந்த பௌத்த தருமத்தின் வழியில் அணைந்து பெருமையிலாத பிறவியை அறுத் திடும் தத்துவங்கள் அப்பௌத்தர்கள் சொல்லிய அவற்றின் வழிகளாக உணர் வார். 3

அந்நிலைமைச் சாக்கியர்தம் அருங்கலைநூல் ஓதிஅது
தன்நிலையும் புறச்சமயச் சார்வுகளும் பொருளல்ல
என்னும்அது தெளிந்(து) ஈசர் அருள்கூட ஈறில்சிவ
நன்னெறியே பொருளாவ தெனஉணர்வு நாட்டுவார்.

அந்த நிலைமையில் அப்பெரியவர் அந்த பௌத்தர்களது அரிய கலைஞ்ஞான நூல்எல்லாம் ஓதி அதனது நிலையும் இதுவன்றி இன்னும் ஏனையபுறச் சமயத்தின் சார்புகளும் உணர்ந்து ஓதிப்பார்த்து அவையாவும் உண்மையில் பிறப்பொழிக்கும் பொருளாக அச்சமயங்களில் இல்லை என்னும் அதனைத் தெரிந்திடும் காலத்தில் ஈசன் கருணை இவர்பால் கூடுதலால் அவன் அருளால் முடிவில்லாத சிவ நன்நெறியே பெரும்பொருளாவது என உணர்வில் திடங்கொண்டனர்.

செய்வினையுஞ் செய்வானும் அதன்பயனுங் கொடுப் பானும்
மெய்வகையால் நான்காகும் விதித்தபொருள் எனக் கொண்டே
இவ்வியல்பு சைவநெறி அல்லவற்றுக் கில்லை என
உய்வகையாற் பொருள்சிவன் என்(று) அருளாலே உணர்ந்தறிந்தார்.

செய்கின்ற செயலும் அதற்கு ஏதுவாய ஊழும் ஊழின் கருமத்தைச் செய்யும் உயிரும் அச்செயலின் பயனும் அதனைச் சேர்த்து வைப்பவனுய கடவுளும் உண்மைவகையாக அன்றும் இன்றும் என்றும் நிச்சயித்த பொருள் நான்காகும் என மனதில் உறுதி கொண்டு; இந்த இயல்பு சிவசம்பந்த மாய சைவநெறிக்கு அல்லாது வேறு எச்சமயத்திற்கும் இல்லை என; முன்னர் செய்த தவத்தால் தாம் உய்யும் வகை; ''உண்மைப் பொருள் சிவன்'' என இறைவன் அருளாலே உணர்ந்து அதனைத் தனது அனுபவத்திலே அறிந்து தூய சைவரானார்; 5

எந்நிலையில் நின்றாலும் எக்கோலங் கொண்டாலும்
மன்னியசீர்ச் சங்கரன்தாள் மறவாமை பொருள் என்றே
துன்னியவே டந்தன்னைத் துறவாதே தூயசிவந்
தன்னைமிகும் அன்பினால் மறவாமை தலைநிற்பார்.

''எந்த நிலையில் நின்றாலும் எந்தக்கோலம் கொண்டாலும் என்றும் விளங்கிய சீருடைய சிவன் திருவடி மறவாதிருப்பது பொருள்'' என்றே கொண்ட விளக்கத்தாலே இதற்கென ஓர் மாதிரியான கோலம் உடை வேண்டாமென்ற துணிவில் தாம் பெளத்தனாக இருந்து கொண்ட அந்த வேடத்தினை நீக்கிடாது தூயதாய் பிறப்பிறப்பெலாம் கடந்த பெருமானை சிவனை மிகுந்த அன்பினால் மறவாமையாய செயலில் தலைநின்றார் சாக்கிய நாயனார். 6

எல்லாம் உடைய ஈசனே இறைவன் என்ன அறியாதார்
பொல்லா வேடச் சாக்கியரே யாகிப் புல்ல ராகுவார்
அல்லார் கண்டார் தமக்கிந்த அகில மெல்லாம் ஆள்என்ன
வல்லார் இவர்அவ் வேடத்தை மாற்று தன்பின் வழிநிற்பார்.

எல்லாம் உடைய ஈசன் சிவனே கடவுளாவர் என்ன அறியாதார் பொல்லாத மஞ்சள் உடையில் உள்ள சாக்கியரேயாகி தமது வேடத்தை மதித்து தம்மை பெருமையாக எண்ணிக்கொள்ளும் அற்ப அறிவுடையராகுவார். ஆனால் நஞ்சுண்ட கண்டமுடைய சிவனிற்கே இந்த உலகம் எல்லாம் ஆளாக உடையது எனத்துணியும் வல்லமை உடைய இந்நாயனார் தனது இந்த பௌத்த வேடத்தை மாற்றுது அன்பின் வழியில் ஒழுகி நிற்பார். 7

காணுத அருவினுக்கும் உருவினுக்குங் காரணமாய்
நீணுகம் அணிந்தார்க்கு நிகழ்குரியாஞ் சிவலிங்கம்
நாணுது நேடியமால் நான்முகனுங் காணநடுச்
சேணுருந் தழற்பிழம்பாய்த் தோன்றியது தெளிந்தாராய்.

காணப்பெறுத அருவாய இறைவனது திருமேனிக்கும் உருவாய திருமேனிக்கும் காரணமாக; நீண்ட நாகபாம்பினை அணிந்த பெருமானுக்கு நிகழ்ந்த ஓர் குறியாகும் சிவலிங்கம். அதுவேதான் கொஞ்சமும் நாணமிலாது தேடிப்பார்த்த திருமாலும் நான்கு முகமுடைய பிரமனும் காணும்படி நடுவாக வானை அடையும் சோதிப் பிழம்பாய் தோன்றி நின்ற தன்மையைத் தெளிந்து கொண்டவராய எம் சாக்கியநாயனார். 8

நாடோறுஞ் சிவலிங்கம் கண்டுண்ணு மதுநயந்து
மாடோர்வெள் ளிடைமன்னுஞ் சிவலிங்கங் கண்டுமனம்
நீடோடு களியுவகை நிலைமைவரச் செயலறியார்
பாடோர்கல் கண்டதனைப் பதைப்போடும் எடுத்தெறிந்தார்.

நாள் தோறும் தாம் சிவலிங்கம் கண்டு உண்கின்றதை விரும்பி நினைந்தபோது அந்நிலையில்தம் பக்கராக ஓர் வெளியில் விளங்கிடும் சிவலிங்கம் ஒன்று கண்டபோது மனதில் நீளப்பெருகிய மகிழ்ச்சிவர தாம் செய்வதறியாராய் தம்பாகரில் ஓர் கல்லினைக் கண்டு அதனைப்பதைப்புடன் எடுத்து எறிந்தார். 9

அகநிறைந்த பேருவகை அடங்காத ஆதரவால்
மகவுமகிழ்ந் துவப்பார்கள் வன்மைபுரி செயலினுல்
இகழ்வனவே செய்தாலும் இளம்புதல்வர்க் கின்பமே
நிகழுமது போலதற்கு நீள்சடையார் தாமகிழ்வார்.

எம் சாக்கிய நாயனார் உள்ளத்து நிறைந்த பேரானந்தத்தில் அடங்கிடாது எழுந்த கருணையின்பால் எறிந்த கல் சென்று எம்பிரான் சிவலிங்கத் திருமேனியில் படுதலும்; அப்போது தம் குழந்தையை தூக்கிவைத்து மகிழ்வார்கள் அக் குழந்தைக்கு தம் மகிழ்ச்சியால் இறுகத்தழுவி அடித்து கிள்ளுவதுபோல இகழுமாறு சிலசெயல் செய்தாலும் அன்பின் வழி அந்த இளம் புதல்வர்க்கு இன்பமே நிகழுமாதலால் அதுபோல கல் எறிந்த அதற்கு நீண்ட சடையுடைய பெருமானும் தாம் மகிழ்ந்தார்.. 10

அன்றுபோய்ப் பிற்றைநாள் அந்நியதிக் கணையுங்கால்
கொன்றைமுடி யார்மேல்தாங் கல்லெறிந்த குறிப்பதனை
நின்றுணர்வார் எனக்கப்போதிதுநிகழ்ந்த தவர் அருளே
என்றதுவே தொண்டாக என்றும் அது செயநினைந்தார்.

அன்று கல் எறிந்த அதுபோல் பின் ஒருநாள் சிவலிங்கம் கண்டு உண்ணும் அந்த நியதிக்கு நேரும் போது முன்னர் கொன்றை மாலை முடியுடைய பெருமான் மேல்தாம் கல் எறிந்த குறிப்பினை நின்று உணர்பராம் சாக்கிய நாயனார் ''எனக்கு அப்போது கல்எறியும் இது நிகழ்ந்தது அவர் அருளே'' என நினைந்து அச்செயலையே செய்யும் தொண்டாக; என்றும் அதனைச் செய்திட நினைந்தார்; 11

தொடங்கியநாள் அருளியஅத் தொழிலொழியா வழிதொடரும்
கடன்புரிவார் அதுகண்டு கல்லெறிவார் துவராடைப்
படம்புனைவே டந்தவிரார் பசுபதியார் தஞ்செயலே
அடங்கலும்என் பதுதெளிந்தார் ஆதலினால் மாதவர்தாம்.

சிவலிங்கம் வழிபடத் தொடங்கிய நாள தமக்கு வழிபாடு இது என அருளப் பெற்ற கல் எறியும் தொழில் ஒருநாளும் ஒழியாத வழிதொடரும் கடனாகச் செய்வாராய்அன்று கண்டு கல் எறிந்த அதுவே கடனாக என்றும் கல் எறிவார். காவி ஆடைப் போர்வையின் வேடம் நீங்கார். பசுபதி யாகும் சிவன் செயலே அடங்கலும் என்பது தெளிந்தார் சாக்கிய நாயனார் ஆதலால் அவர் உண்மையின் பெரிய தவமுடையரானார். 12

இந்நியதி பரிவோடும் வழுவாமல் இவர்செய்ய
முன்னுதிருத் தொண்டர்நிலை முடிந்தபடி தான்மொழியில்
துணையிலமெய் யன்புடனே எழுந்தவினை தூயவர்க்கு
மன்னுமிகு பூசனையாம் அன்புநெறி வழக்கினால்.

இந்த சிவலிங்கம் கண்டு கல்எறிந்து வணங்கி பின்னர் திரு வமுதுண்பதை அன்புடன் வழுவாது இவர் செய்திட அதுவே எம்பிரான் விரும்பிய திருத்தொண்டாகி முடிந்த படியாம் அத்தன்மையினை எடுத்துச் சொன்னால் விளங்கிய மெய் யன்புடன் எழுந்த இச்செயல் தூயவரான சிவனுக்கு விளங்கிய மிகுந்த மேம்பாடுடைய பூசனையாகும் அன்பு நெறியின் வழக்கத்தால். 13

கல்லாலே எறிந்ததுவும் அன்பான படிகாணில்
வில்வேடர் செருப்படியுந் திருமுடியின் மேவிற்றால்
நல்லார்மற் றவர்செய்கை அன்பாலே நயந்ததனை
அல்லாதார் கல்லென்பார் அரனார்க்கஃ தலராமால்.

கல்லாலே எறிந்த அதுவும் எம்பெருமானுக்கு அன்பான படி நாம் கண்டு கொண்டால்; வில் ஏந்தியவேடர் கண்ணப்பரது செருப்படியும் எம்பிரான் திருமுடி மேல் பொருந்தியதே; நல்லாராகிய மற்ற அந்த சாக்கிய நாயனார் அன்பாலே நயந்து புரிந்தசெய்கை அதனை உலக பந்தங்களில் ஈடுபட்டு நிற்கும் உண்மை அன்பிலாத அவர்கள் கல் என்று சொல்வார்கள். ஆனால் அச்செய்கை தான் சிவனார்க்கு மலராக அமைந்தது. 14

அங்கொருநாள் அருளாலே அயர்ந்துண்ணப் புகுகின்றார்
எங்கள்பிரான் தனைஎறியா தயர்ந்தேன்யான் எனஎழுந்து
பொங்கியதோர் காதலுடன் மிகவிரைந்து புறப்பட்டு
வெங்கரியின் உரிபுனைந்தார் திருமுன்பு மேவினார்.

அப்படி ஒழுகிவரும் சாக்கிய நாயனார் அங்கொருநாள் திருவருளின் செயலாலே மறந்து உண்ணப்போகின்றவர் இன்று எம்பெருமானே உண்ணுமுன்பு ஏறியாது மறந்தேன் யான் என்று எழுந்து உள்ளத்து பொங்கிய தொருகாதலுடன் மிக விரைந்து புறப்பட்டுச்சென்று கொடிய யானையின் தோல்போர்த்த பெருமானது சிவலிங்கத்தின் திருமுன்பு சேர்ந்தார். 15

கொண்டதொரு கல்லெடுத்துக் குறிகூடும் வகையெறிய
உண்டிவினை ஒழித்தஞ்சி ஓடிவரும் வேட்கையொடும்
கண்டருளுங் கண்ணுதலார் கருணைபொழி திருநோக்கால்
தொண்டரெதிர் நெடுவிசும்பில் துணைவியொடுந் தோன்றினார்.

கண்டு கொண்ட தொரு கல் எடுத்து எம்பிரானது திருக்குறியாய சிவலிங்கத்தை அக்கல் சேரும்வகை எறிந்திட தாம் உணவுண்ணும் செயலினையும் விடுத்து பயந்து பெரும் ஆவலுடன் ஓடிவரும் சாக்கிய நாயனாரைக் கண்டருளும் கண்ணுதற்பெரு மான் சிவன் தாம் கருணைபொழிந்த திருநோக்கினால் ஓடிவந்த தொண்டர் சாக்கிய நாயனார் திருமுன்பு நெடியவானத்தில் தமது துணைவியாம் அம்மையுடன் வந்து தோன்றினார். 16

மழவிடைமேல் எழுந்தருளி வந்ததொரு செயலாலே
கழலடைந்த திருத்தொண்டர் கண்டுகரம் குவித்திறைஞ்சி
விழ அருள்நோக் களித்தருளி மிக்கசிவ லோகத்தில்
பழ அடிமைப் பாங்கருளிப் பரமரெழுந் தருளினார்.

தருமதேவதையாய இடபத்தின்மேலாக எழுந்தருளி வந்ததொரு செயலாலே எம்பிரான் திருவடியே சரணமாக அடைந்த எம்திருத் தொண்டர் சாக்கிய நாயனார் கண்டு கைகூப்பித் தொழுது வீழ்ந்து வணங்க அவரிடத்து எம்பெருமான் கருணை நோக்கு ஈந்தருளி மிக்க சிறப்புடைய சிவலோகத்தில் தமக்குற்ற பழைய அடிமைத்திறத்தின் பாங்கினைக் கொடுத்தருளி என்றும் இன்பமுற வைத்து எம் பிரான் தனது துணைவிபோடும் எழுந்தருளி மறைந்துபோயினார். 17

ஆதியார் தம்மை நாளுங் கல்லெறிந் தணுகப் பெற்ற
கோதில்சீர்த் தொண்டர் கொண்ட குறிப்பினை அவர்க்கு நல்கும்
சோதியார் அறிதலன்றித் துணிவதென் அவர்தாள் சூடித்
தீதினை நீக்க லுற்றேன் சிறப்புலி யாரைச் செப்பி.

ஆதியான சிவனை சிவலிங்கம்கண்டு நாளும் கல்எறிந்து எம்பெருமானை அடைந் திடப் பெற்ற குற்றமிலாத சிறப்புடைய தொண்டர் சாக்கிய நாயனார் கொண்ட குறிப்பினை அவர்க்கு அருளீந்த சோதியாய பெருமான் அறிதல் அன்றி நாம் துணி வது எப்படி? ஆதலின் அந்த சாக்கிய நாயனாரது திருவடி என்தலைமேல் சூடி வணங்கி என் தீதெல்லாம் நீக்கலுற்றேன் சிறப்புலி நாயனாரின் திறம் சொல்லி. 18

சாக்கிய நாயனார் புராணம் முற்றிற்று

சிறப்புலி நாயனார் புராணம்

பொன்னிநீர் நாட்டின் நீடும் பொற்பதி புவனத் துள்ளோர்
இன்மையால் இரந்து சென்றோர்க் கில்லைஎன் னுதே ஈயும்
தன்மையார் என்று நன்மை சார்ந்தவே தியரைச் சண்பை
மன்னனார் அருளிச் செய்த மறைத்திரு வாக்கூர் அவ்வூர்.

காவிரியின் நீர் வளம் சிறந்த சோழ நாட்டில் நீடிந்த திருவுடைய பொற்பு மிக்க தொருபதியாகும் அதுதான் இப்பூமியில் உள்ளோர்கள் தங்களிடம் பொருள் இன்மையால் இரத்தலே மேற்கொண்டு சென்றால் அவர்க்கு இல்லை என்னாதே கொடுக் கின்ற தன்மை உடையவர் என்று நன்மை சோந்த அவ்வூர் அந்தணரை சோழி அரசர் திருஞான சம்பந்தப் பெருமான் தம்திருப்பதிகத்து வைத்து சிறப்பித் தருளிச் செய்த தமிழ் மறையாகும் வாக்கிலே சிறந்துற்ற திருவாக் கூராகும். தேவாரத் திருப்பதிக்தது வந்தமையால் திருவாக்குஊர்திருவாக் கூர் எனப்பட்டது.

தூமலர்ச் சோலை தோறும் சுடர்நெடு மாடந் தோறும்
மாமழை முழக்கந் தாழ மறையொலி முழக்கம் ஓங்கும்
பூமலி மறுகில் இட்டபுகை அகில் தூபந் தாழ
ஓமநல் வேள்விச் சாலை ஆகுதித் தூபம் ஓங்கும்.

திருவாக்கூரில் தூயமலர்ச்சோலைதோறும் ஒளிபொருந்திய நெடுமாடம்தோறும் பெருமழை மேகத்தின் முழக்கஒலியும் தாழ வேதம்பயிலும் யாகம் நிகழுமிடத்து பெருவேதங்களின முழக்க ஓசை மிகுந்தெழும். பூக்கள் மலிந்த வீதியில் இட்டபுகை விடும் அகிலின் பொடித் தூபம் தாழ்த்திட ஓமம்புரியும் நல்ல வேள்விச் சாலை தோறும் வெளிப்படும் ஆகுதித் தூபம் ஓங்கும். 2

ஆலைசூழ் பூகவேலி அத்திரு வாக்கூர் தன்னில்
ஞாலமார் புகழின் மிக்கார் நான்மறைக் குலத்தி னுள்ளார்
நீலமார் கண்டத் தெண்டோள் நிருத்தர்தந் திருத்தொண்டேற்ற
சீலராய்ச் சாலும் ஈகைத் திறத்தினில் சிறந்த நீரார்.

கரும்பு ஆலைகள் சூழ கமுக மரங்கள் வேலியாக அமைந்த அத் திருவாக் கூர் தன்னில் வந்து அவதரித்து இப்பூமியில் பெருகிய புகழில் மிகுந்து கொண்ட ஓர் நாயனார் அவர் நான்கு வகையான வேதநெறி ஒழுகும் அந்தணர் குலத்தில் உள்ளவர். அவர் நீலநிறம் சிறந்த கண்டமும் எண்தோளு முடைய வராய் உலகுய்ய நடமாடும் பெருமாற்கு ஏற்ற திருத்தொண்டு பூண்ட சீலமுடையவராய்: இல்லாத வர்க்கு தம்மிடம் உள்ளவை ஈந்து வரும் சால்பு பொருந்திய கொடைத்திறத்தில் சிறந்த தன்மை உடையவர். அவரது நாமம் சிறப்புலியார் எனப்படும். 3

ஆளும்அங் கணருக் கன்பர் அணைந்தபோ தடியிற் முழ்ந்து
மூளும்ஆதரவு பொங்க முன்புநின் றினிய கூறி
நாளும்நல் லமுத மூட்டி நயந்தன எல்லாம் நல்கி
நீளும்இன் பத்துள் தங்கி நிதிமழை மாரி போன்றார்.

தம்மை ஆளும் கண்ணுதற் பெருமாற் கான அன்பர்கள் தம்முன்வந்தபோது அவர் திருவடிகளில் சிறப்புலிநாயனார் தாழ்ந்து உள்ளத்து எழும் ஆதரவுபொங்கிட அவர் திருமுன்பு நின்று இனியவை கூறி நாளும் அவர்கட்கு நல்ல அமுதம் ஊட்டி அவர் விரும்பியது எல்லாம் கொடுத்து கொடையின் சிறப்பால் நீடித்த இன்பத்துள் தங்கி இரப்பார்க்கும் அடியார்க்கும் ஓர் நிதிமழை போன்றிருந்தார். 4

அஞ்செழுத் தோதி அங்கி வேட்டுநல் வேள்வி எல்லாம்
நஞ்சணி கண்டர் பாதம் நண்ணிடச் செய்து ஞாலந்(து)
எஞ்சலில் அடியார்க் கென்றும் இடையறு அன்பால் வள்ளல்
தஞ்செயல் வாய்ப்ப ஈசர் தாள்நிழல் தங்கி னாரே.

சிறப்புலி நாயனார் திருவைந்தெழுத்தை நியமாக ஓதி மூன்று அக்கினிகள் வளர்த்து யாகம் புரிந்து அந்த யாகம் எல்லாம் நஞ்சணிந்த கண்டமுடைய கட வுட்கே சேரச் செய்து; இப்பூமியில் குறைவிலாத அடியார்கட்கு என்றும் இடை யறுத அன்பால் கொடுத்து வரும் ஈகையின் பெரும் சிறப்பு வாய்த்திட அப்பேற் றினால் ஈசன் சிவன் திருவடி நீழல் சென்று தங்கினார். 5

அறத்தினில் மிக்க மேன்மை அந்தணர் ஆக்கூர் தன்னில்
மறைப்பெரு வள்ள லார்வண் சிறப்புலி யார்தாள் வாழ்த்திச்
சிறப்புடைத் திருச்செங் காட்டங்குடியினிற் செம்மை வாய்த்த
விறற்சிறுத் தொண்டர் செய்த திருத்தொழில் விளம்பலுற்றேன்.

ஈகை என்னும் தருமத்தில் மிக்க மேன்மையுடைய அந்தணர்வாழும் திருவாக் கூரினில் வேதவழி ஒழுகும் பெரும் குறைவிலாத கொடை வள்ளலார் சிறப்புலி யாரை அன்பினால் வாழ்த்தி வணங்கி இப்பால் சிறப்புடைய திருச்செங் காட்டங் குடியினிற் செம்மைவாய்ந்த வீரர் சிறுத்தொண்ட நாயனாரது திருத்தொண்டை சொல்லலுற்றேன். 6

சிறப்புலி நாயனார் புராணம் முற்றிற்று

சிறுத்தொண்டர் நாயனர் புராணம்

உருநாட்டுஞ் செயல்காமன் ஒழியவிழி பொழிசெந்தீ
வருநாட்டத் திருநுதலார் மகிழ்ந்தருளும் பதிவயலில்
கருநாட்டக் கடைசியர்தங் களிகாட்டுங் காவேரித்
திருநாட்டு வளங்காட்டுஞ் செங்காட்டங் குடியாகும்.

உலகில் உருவத் தோற்றத்தை நாட்டிட தனது செயல் காட்டும் காமச் செயல லதிபதியாம் மன்மதன் எரிந்தொழிய தமது திருவிழி பொழியும் செந்தீவரும் கண் உடைய நெற்றிக் கடவுள் சிவமூர்த்தி மகிழ்ந்து உறைந்தருளும் இடமாவது கருமை யான கண்உடைய சகீபிடுங்கும் பெண்கள் தங்களது களியாடல்களைக் காட்டுதற் கிடமாய காவேரித் திருநாடு என்று சொல்லப்பெரும் சோழ நாட்டில் திருச்செங் காட்டங்குடி எனும் இடமாகும். 1

நிலவியஅத் திருப்பதியில் நெடுஞ்சடையார் நீற்றடைவால்
உலகில்வளர் உயிர்க்கெல்லாம் உயர்காவற் றொழில்பூண்டு
மலர்புகழ்மா மாத்திரர்தங் குலம்பெருக வந்துள்ளார்
பலர்புகழுந் திருநாமம் பரஞ்சோதி யார்என்பார்.

சிருடன் நிலவிய அந்த செங்காட்டங் குடியில் நெடும் சடையுடைய சிவபிரா னது திருநீற்றின் நெறியை சார்ந்து ஒழுகும் நிலையால் உலகில் வளரும் உயிர் கட்கு எல்லாம் உயர்ந்த சேவையாகும் காவல் தொழில் பூண்டு புகழ்மலர்ந்த மாமா த்திரர் குலம் பெருகி ஓங்கவந்து அக்குலத்தில் அவதாரம செய்தருளினர் ஒருவர் அவர்தான் பலரும் புகழும் திருநாமம் பரஞ்சோதியார் எனப்படுவார்; 2

ஆயுள்வே தக்கலையும் அலகில்வட நூற்கலையும்
தூயபடைக் கலத்தொழிலும் துறைநிரம்பப் பயின்றவற்றுல்
பாயுமதக் குஞ்சரமும் பரியும்உகைக் கும்பண்பு
மேயதொழில் விஞ்சையினும் மேதினியில் மேலானர்.

பரஞ்சேசதியார் ஆயுள் வேதம் என்னும் வைத்தியக் கலையும் அளவு இல்லாத வட நூலாம் ஆரியக்கலையும் தூயதான படைக்கலம் பாவித்திடும் தொழிலும் இவை யாவும் அதன் அதன்துறைகள் நீரம் பிடக்கற்று; அந்த படைக்கலத் தொழில் அவற் றுல் மதம் பாயும்யானையையும் குதிரையையும் செலுத்திடும் பண்புகளில் பொருந் திய தொழில் வித்தைகளில் இப்பூமியில் மிக மேலாயின ஒருவரானர். 3

உள்ளநிறை கலைத்துறைகள் ஒழிவின்றிப் பயின்றவற்றுல்
தெள்ளிவடித் தறிந்தபொருள் சிவன்கழலிற் செறிவென்றே
கொள்ளும்உணர் வினில்முன்னே கூற்றுதைத்த கழற்கன்பு
பள்ளமனட யாய்என்றும் பயின்றுவரும் பண்புடையார்.

தனது உள்ளத்து நிறைய விரும்பிய வேறுகலைகளின் துறைகள் ஒழிவிலாது பயின்று அவற்றுல் தெள்ளி வடித்து எடுத்தது போன்று அறிந்த செம்பொருளாவது சிவன் திருவடியில் மனச்செறிவு கொள்ளலே என்று கொள்ளுகின்ற தன் உணர்வில் பரஞ்சோதியார் என்பவர் முன் பெருகால் இயமனை உதைத்த பெருமானரின் திரு வடிக்கே அன்பு பள்ளத்தை நாடும் மடையின் வெள்ளம் போன்ற இயல்பில் பழகி வரும் பண்புடையரானர். 4

ஈசனடி யார்க்கென்றும் இயல்பான பணிசெய்தே
ஆசில்புகழ் மன்னவன்பால் அணுக்கராய் அவற்காகப்
பூசல்புனைக் களிறுகைத்துப் போர் வென்று பொரும்அரசர்
தேசங்கள் பலகொண்டு தேர்வேந்தன் பாற்சிறந்தார்.

பரஞ்சோதியார் எம்பிரான் அடியார்க்கு என்றும் இயல்பிலான பணிசெய்து; குறைவிலாத புகழ்உடைய சோழ அரசனிடத்து மிக நெருங்கிய தூணைவராய் இருந்து அந்த அரசனுக்காக பாரிடும் பலபோர் முனைகளில் யானைப்படை செலுத்தி போரினை வெற்றி கொண்டு தம்முடன் போரிட்ட பல அரசருடைய தேசங்களைக்

கைப்பற்றி அத்தகைய சிறப்புக்களால் அரசனிடமாக பெரும் சிறப்புடையரானர் பரஞ்சோதியார் 5

மன்னவர்க்குத் தண்டுபோய் வடபுலத்து வாதாவித்
தொன்னகரந் துகளாகத் துளைநெடுங்கை வரையுகைத்துப்
பன்மணியும் நிதிக்குவையும் பகட்டினமும் பரித்தொகையும்
இன்னனஎண் ணிலகவர்ந்தே இகலரசன் முன்கொணர்ந்தார்.

இன்னமும் பரஞ்சோதியார் அரசனுக்காகப் படை எடுத்துச் சென்று வடதே சத்தினை தாக்கி அங்கு வாதாபி எனப்படும் தொன்மையான தலைநகரம் துகளாகும் படி துளையுடைய நெடுங் கையுடைய மலைபோன்ற யானைப் படைசெலுத்தி அழிவு செய்து அந்நகரம் வென்று அங்கு கைப்பற்றிய பொருளாக பல மணிகளும் நிதிக்கு வியல்களும் யானையின் நல் இனமும் குதிரைத் தொகையும் இன்னவகையான பொருள்கள் எண்ணற்றன எடுத்துக் கொண்டு திரும்பி அங்கு தமது அரசன் முன் பு கொணர்ந்தார். 6

கதிர்முடிமன் னனும்இவர்தங் களிற்றுரிமை ஆண்மையினை
அதிசயித்துப் புகழ்ந்துரைப்ப அறிந்தஅமைச் சர்களுரைப்பார்
மதியணிந்தார் திருத்தொண்டு வாய்த்தவலி யுடைமையினுல்
எதிரிவருக் கிவ்வுலகி லில்லை என எடுத்துரைத்தார்.

வடதேசத்தின் தலைநகராம் வாத பியைத்தாக்கி அங்குள்ளபடைகளின் முரணழித் து பூரண வெற்றியுடன் திரும்பிவந்த இவரது செயலில் ஒளிபொருந்திய இரத்தின முடிசூடிய அரசனும் இப்போரில் அவனுடைய யானைப்படை செலுத்திடும் தலை வராய சேனாபதி என்ற அவரது அதி நுட்பமாக யானைப்படை செலுத்தி பகை வரை அழித்து வெலலும் ஆண்மையினை அதிசயித்து புகழ்ந்து பாரட்ட; அவர் வரலாறு நன்குணர்ந்த மந்திரிகள் சொல்வார் அரசே; இவர்க்கு பிறை சூடிய பெரு மானின் திருத்தொண்டு வாய்த்த வலியுடைமையால் எதிரிவருக் கிவ்வுலகில் இல்லை யென்ற வெற்றிக்கு மூலமாய காரியத்தை எடுத்து மொழிந்தார்கள். 7

தம்பெருமான் திருத்தொண்டர் எனக்கேட்ட தார்வேந்தன்
உம்பர்பிரான் அடியாரை உணராதே கெட்டொழிந்தேன்
வெம்புகொடும் போர்முனையில் விட்டிருந்தேன் எனவெருவுற்று
எம்பெருமான்! இதுபொறுக்க வேண்டும் என இறைஞ்சினன்.

அம் மந்திரிகளது வாக்காலே தனது பெருமானின் திருத்தொண்டர் எனக் கேட்ட மாலைசூடிய அரசன் தேவர்கள் பெருமானது அடியவர் இவரை அவர் மாண்பு உணராதே கெட்டொழிந்தேனே; அப்பெரியவரை வெம்மை சேரும் கொ டுந் தொழிலாய போர் முனையில் விட்டிருந்தேனே! என நினைந்து அஞ்சி எழுந்து பரஞ்சோதியாரை நோக்கி எம்பெருமானே நீர் நான் செய்த இப்பிழையைப் பொறுத்திட வேண்டும் என வணங்கினன். 8

இறைஞ்சுதலும் முன்னிறைஞ்சி என்னுரிமைத் தொழிற்கடுத்த
திறம்புரிவேன் அதற்கென்னே? தீங்கென்ன ஆங்கவர்க்கு
நிறைந்தநிதிக் குவைகளுடன் நீடுவிருத் திகள் அளித்தே
அறம்புரிசெங் கோலரசன் அஞ்சலிசெய் துரைக்கின்றான்.

அவ்வாறு அரசன் பணிதலும் தாமும் அவனை பரஞ்சோதியார் முன்வணங்கி அர சே எனது பாரம்பரிய உரிமையாய சேனாபதித் தொழிலிற்த எற்பவந்த செயலினைச் செய்வேன்; அதனால் உமக்குநேரும் தீங்கு யாதாமோ என் மொழிய: அங்கு அரசனும் அப்பொழுதே அவர்க்கு நிறைந்த நிதிக்குவைகளுடன் நீடித்தாக வரு வாய் தரும் பலவகை நிலம் முதல் மான்னியங்களைக் கொடுத்து தருமத்தையே செய்திடும் செங்கோலுடைய அரசன் அஞ்சலி கூப்பிநின்று இதனை பரஞ்சோதியார்க் குச் சொல்கின்றான். 9

உம்முடைய நிலைமையினை அறியாமை கொண்டுய்த்தீர்
எம்முடைய மனக்கருத்துக் கினிதாக இசைந்(து) உமது
மெய்ம்மைபுரி செயல்விளங்க வேண்டியவா றேசரித்துச்
செம்மை நெறித் திருத்தொண்டு செய்யும் என விடைகொடுத்தான்.

பரஞ்சோதியாரே உம்முடைய நிலைமையினை அறியாமல் கொண்டு இவை செய்தீர். இனி எம்முடை மனதின் எண்ணத்திற்கு இனிதாக இசைவு கொண்டு; உமது உண்மை யாகப் புரியும் சிவப்பணியின் செயல் விளங்கிட; நீர் வேண்டியவாறு வாழ்ந்து செம்மையாய நெறிபரப்பும் திருத்தொண்டைச் செய்யும் என அவர்க்கு தனது அன்பின் வேண்டுதலாக மொழிந்து தமது அரசபணி புரிதலை நீங்கி சிவ தொண்டு புரியச் செல்லுமாறு விடைகொடுத்தான் செங்கோல் அரசன். 10

மன்னவனை விடைகொண்டு தம்பதியில் வந்தடைந்து
பன்னுபுகழ்ப் பரஞ்சோதி யார்தாமும் பனிமதிவாழ்
சென்னியரைக் கணபதீச் சரத்திறைஞ்சித் திருத்தொண்டு
முன்னைநிலை மையில்வழுவா முறைஅன்பிற் செய்கின்றார்.

செங்கோல் அரசனை வணங்கி விடைபெற்றுக் கொண்டு தமது இடம் செங்காட்டங் குடியில் வந்து சேர்ந்து; பலராலும் போற்றப் பெறும் புகழ் நிறைந்த பரஞ்சோதியார் தாமும் குளிர்ந்த இளம் பிறை வாழும் சடையுடைய பெருமானை கணபதிச்சரம் என்னும் தலத்தில் வணங்கி: எம்பிராற்கு திருத்தொண்டு முன் செய்த அந்நிலமையின் வழுவாத முறைமையாய அன்பில் செய்கின்றார். 11

வேதகா ரணர்அடியார் வேண்டியமெய்ப் பணிசெய்யத்
தீதில்குடிப் பிறந்ததிரு வெண்காட்டு நங்கைஎனும்
காதல்மனைக் கிழத்தியார் கருத்தொன்ற வரும்பெருமை
நீதிமனை அறம்புரியும் நீர்மையினை நிலைநிற்பார்.

வேதங்கள் தோன்றுதற்கு முதற்காரண ராய சிவ பெருமான் அடியார் விரும்பியமையின் பணிசெய்திட; இதுகாறும் பிரமச்சரிய நெறியில் நின்ற பரஞ்சோதியார்; தீதில்லாத குடிப்பிறந்த திருவெண்காட்டு நங்கை எனும்தம் பால் காதல்புரியும் மனைவியார்; தமது கருத்துடன் இயைந்து இறைவன் அடியார் பணி செய்திடற்கு ஏற்ற பெருமையான பண்புடைய அம்மையாரைத் திருமணம் புரிந்து; இருவரும் கூடி நீதியால் இல்அறம் செயும் நீர்மையில்; இல்வாழ்வான் திருவருள் நிலையுடைய பிரமச்சாரிகள் வானப்பிரத்திகள் சந்நியாசிகள் என்ற மூன்று வருக்கத்தினர்க்கும் நல்ல வழியில் நின்று பணிபுரியும் துணைவராவார் என்பது நிலைப்ப அதன் வழி நிலைநிற்பார் பரஞ்சோதியார். 12

நறைஇதழித் திருமுடியார் அடியாரை நாடோறும்
முறைமையினில் திருவமுது முன்னூட்டிப் பின்னுண்ணும்
நிறையுடைய பெருவிருப்பால் நியதியா கக்கொள்ளும்
துறைவழுவா வகையொழுகுந் தூயதொழிற் றலைநின்றார்.

வாசனை யுடைய கொன்றை மாலைத் திருமுடியார் சிவன் அடியாரை நாள் தோறும் முறைமையாம் படி திருவமுது முன்னுக உண்பித்து தாம் அதன்பின் உண்பதான வழிபாட்டின் நிறைவுடைய பெருவிருப்பால் அத்தன்மையே தனது நியதியாம் படி கொண்டிடும் நெறிவழுவாது ஒழுகி வரும் தூய செயலில் தலை நின்றார் எமது பெருமான் பரஞ்சோதியார். 13

தூயதிரு அமுதுகனி கன்னல்அறு சுவைக்கறிநெய்
பாயதயிர் பால்இனிய பண்ணியம்உண் நீர்அமுதம்
மேயபடி யால்அமுது செய்விக்க மிசைந்தடியார்
மாயிருஞா லம்போற்ற வரும்இவர்பால் மனமகிழ்ந்தார்.

எமது பெருமான் சிவன் அடியார்கட்கு தூயதான திருவமுது கனிவகை கரும்பின் கட்டி; அறுசுவையுடைய கறி நெய் கட்டியாக உறைந்த தயிர் பால் இனிய பலகார வகையானவையுடன் உண்ணும் நீராகார அமுதமான அவைகளும் நன்று பொருந்திய படியால் அமுது செய்வித்திட; இந்த திருவமுதூட்டற்கு அடியார்களும் இசைந்து உண்டருளி; இப்பெரும் பூமி இவரது செயலை போற்றிடப் பணி புரியும் இவரிடத்து மன மகிழ்ச்சி கொண்டார்கள். 14

சீதமதி அரவினுடன் செஞ்சடைமேற் செறிவித்த
நாதனடி யார்தம்மை நயப்பாட்டு வழிபாட்டால்
மேதகையா ரவர்முன்பு மிகச்சிறிய ராய் அடைந்தார்
ஆதலினற் சிறுத்தொண்டர் எனநிகழ்ந்தார் அவனிபின் மேல்.

குளிர்ந்த பிறையை பாம்புடன் பகைதீர்த்து செஞ்சடைமேல் புனைந்தருளிய எம் நாதன் சிவன் அடியார் தங்களை; மனதில் கொண்ட நயப்பாட்டின் வழிபாட்டால்; மேன்மையுடைய அடியார்களை வரவேற்று உபசரித்திடும் பொழுது அவர் முன்பு பரஞ்சோதியார் மிகவும் பணிவுடன் தம்மை ஓர் பொருளென எண்ணுத சிறுமையுடன் சேர்த்து பேணிவருவார். ஆதலினல் இவர்க்கு சிறுத்தொண்டர் எனச் சிறந்ததொரு நாமம்நிகழ இப்பூமிமேல் பரஞ்சோதியார் வாழ்ந்துவருவார். 15

கண்ணுதலார் கணபதீச் சரத்தின்கட் கருத்தமர
உண்ணிறை அன்பினிற் பணிசெய் தொழுகுவார் வழுவின்றி
எண்ணில்பெருஞ் சீரடியார் இடைவிடா தமுதுசெய
நண்ணியபே ருவகையுடன் நயந்துறையு நாளின்கண்.

சிறுத்தொண்டர் நாயனார் கண்ணுதற் பெருமான் அமர்ந்த கணபதிச்சரத்தின் இடத்து தனது கருத்துப்பொருந்திட உள்ளத்து நிறைந்த பணிசெய்து ஒழுகி வருவார். ஏதும் ஒரு குறைபாடின்றி எண்ணற்ற பெருஞ் சிறப்புடைய அடியார்கள் இடைவிடாது தம்பால் திருவமுது செய்திட அதனல் மிகுந்தெழும் பெரும் உவகையுடன்நயந்து வாழும் நாட்களில். 16

நீராருஞ் சடைமுடியார் அருளினுல் நிறைதவத்துப்
பேராள ரவர் தமக்குப் பெருகுதிரு மனையறத்தின்
வேராகி விளங்குதிரு வெண்காட்டு நங்கைபால்
சீராள தேவர்எனுந் திருமைந்தர் அவதரித்தார்.

நீரார்ந்த சடைமுடியுடைய பெருமான் சிவனது அருளால் நிறைந்த தவ முடைய பேராளர் சிறுத்தொண்டர் அவர்தமக்கு; பெருகும் சிறப்புடைய இல்லற தருமத்தின் வேராகி; அவர் பணிசிறந்திட சொல்லாதே தாம் உணர்ந்து செயல் புரியும் பெருமை உடையவளாய் விளங்கிய; திருவெண் காட்டு நங்கை என்னும் அம்மையிடமாக "சீராள தேவன்" என்னும் நாமமுடைய திருமைந்தர் ஒருவர் வந்து அவதரித்தார். 17

அருமையினிற் றனிப்புதல்வர் பிறந்தபொழு தலங்கரித்த
பெருமையினிற் கிளைகளிப்பப் பெறற்கரிய மணிபெற்று
வருகிமழ்ச்சி தாதையார் மனத்தடங்கா வகைவளரத்
திருமலிநெய் யாடல்விழாச் செங்காட்டங் குடிஎடுப்ப.

சிறுத்தொண்டர்க்கு மிக அருமையாக இந்த தனிப்புதல்வர் பிறந்தபொழுது தமது நகர் செங்காட்டங் குடியினை அலங்கரித்த பெருமையாம் செயலில் அவரது சுற்றம் மகிழ்சிறப்ப தாம்பெறுதற்கரிய மணிபெற்றது போன்று வருகின்ற மகிழ்ச்சியானது தந்தையார் சிறுத்தொண்டரது மனத்து அடங்கிடாவகை வளர; திருமலிந்த நெய்யாட்டு விழாவினை செங்காட்டங்குடி முழுவதுமே சிறந்து எடுத்திட. 18

மங்கலநல் லியம்முழக்கம் மறைமுழக்கம் வானளப்ப
அங்கணர்தஞ் சீரடியார்க் களவிறந்த நிதியளித்துத்
தங்கள்மர பினிலுரிமைச் சடங்குதச தினத்தினிலும்
பொங்குபெரு மகிழ்ச்சியுடன் புரிந்துகாப் பணிபுனைந்தார்.

மங்கல மாய நல்ல வேதமுழக்கம் வானினை அடைந்திட ஓதி: நெற்றியிற் கண்ணுடைய பெருமானின் சீரிய அடியவர்க்கெல்லாம் அளவிறந்தபொருள் கொடுத்து தங்களது மரபிற்கு ஏற்றதான சடங்குகள் குழந்தை பிறந்த நாள்முதல் பத்து நாட்களிலும் மேன்மேல் எழும் பெருமகிழ்ச்சியுடன் புரிந்து திருநீற்றுக் காப்பு முதல் காப்பு அணிகின்ற செயலின் உற்ற சடங்கினையும் செய்தனர். 19

ஆர்வநிறை பெருஞ்சுற்றம் அகமலர அளித்தவர்தாம்
பார்பெருகு மகிழ்ச்சியுடன் பருவமுறைப் பாராட்டுச்
சீர்பெருகச் செய்யவளர் திருமகனார் சீறடியில்
தார்வளர்கிண் கிணிஅசையத் தளர்நடையின் பதஞ்சார்ந்தார்.

குழந்தை பிறந்த ஆர்வம்நிறைந்த பெருஞ் சுற்றத்திற்கும் அவரதுஉள்ளம் நிறைய பொருள் கொடுத்து நின்ற சிறுத்தொண்ட நாயனார் இப்பூமி அளவு பெருகும் மகிழ்ச்சியுடன் குழந்தைக்கு உற்ற பருவமுறைகளில் நிகழும் பாராட்டு விழாச் சிறப்புகள் சீர்பெருகச் செய்திட வளரும் திருமகனார் சிறியபாதங்களில் மாலையாக கோத்தணிந்த கிண்கிணிகள் அசைந்தொலி செய்ய தளர் நடைபயிலும் பருவம் சேர்ந்தார். 20

சுருளுமயிர் நுதற்சுட்டி துணைக்காதின் மணிக்குதம்பை
மருவுதிருக் கண்டநாண் மார்பினில்ஐம் படைகையிற்
பொருவில்வயி ரச்சரிகள் பொன்னரைஞாண் புனைசதங்கை
தெருவிலொளி விளங்கவளர் திருவிளையாட்டினிலமர்ந்தார்.

சுருண்ட மயிர்கொண்ட தலையில் நெற்றிச் சுட்டியும் துணையான இருகாதின் அழகிய காதணியாகும் குதம்பையும்; பொருந்திய திருக்கழுத்தில் சங்கிலியும்; நெஞ்சில் பஞ்சாயுதமும்; கைகளில் நிகரற்ற வைரக் காப்பும் அரையில் பொன்னின் கயிறும்; திருவடிகளில் அணிகின்ற சதங்கைகள் ஒலிப்ப சீராளதேவர் தெருவினில் ஒளிவிளங்க வளரும் திருவிளையாட்டினில் விரும்பி ஆடுவார். 21

வந்துவளர் மூவாண்டில் மயிர்வினைமங் கலஞ்செய்து
தந்தையா ரும்பயந்த தாயாருந் தனிச்சிறுவர்
சிந்தைமலர் சொற்றெளிவிற் செழுங்கலைகள் பயிலத்தம்
பந்தமற வந்தவரைப் பள்ளியினில் இருத்தினார்.

இவ்வகை சிறப்புடன் வளரும் சீராளதேவர்க்கு மூன்று வயதில் மயிர் நீக்கும் மங்கலச் செயலும் செய்து; தந்தை சிறுத்தொண்டநாயனாரும் தாயார் திருவெண் காட்டு அம்மையும் தமது தனிமைந்தர் சீராள தேவர் சிந்தையில் மலரும் சொல்லின் தெளிவில் சிறப்பாய கலைகளை பயின்றிடற்கு தமது பந்தம் அற்று பரமபதம் அடைய வைத்திடும் படிவந்தவரித்த அவரை பள்ளியில் கொண்டு சென்று சேர்த்தினார். அவரும் பள்ளிசென்று கலை பயின்று வருவரானார். 22

அந்நாளிற் சண்பைநகர் ஆண்டகையார் எழுந்தருள
முன்னுக எதிர்கொண்டு கொடுபுகுந்து முந்நூல்சேர்
பொன்மார்பிற் சிறுத்தொண்டர் புகலிகா வலனார்தம்
நன்னுமச் சேவடிகள் போற்றிசைத்து நலஞ்சிறந்தார்.

அந்த நாட்களில் சீகாழிநகரின் தலைவர் திருஞான சம்பந்தர் எழுந்தருளிடலும் அவரை சிறுத்தொண்ட நாயனார் முன்னுகச் சென்று எதிர்கொண்டு அழைத்துக் கொண்டுவந்து, முப்புரி நூலணிந்த பொன்மார்புடைய சிறுத்தொண்டர் சீகாழி காவலராம் சம்பந்தப் பெருமானது நன்நாமமுடைய திருவடிகளை போற்றிப் பணிந்து துதிசெய்து நன்மை சிறந்திடப்பெற்றார். 23

சண்பையர்தம் பெருமானும் தாங்கரிய பெருங்காதல்
பண்புடைய சிறுத்தொண்டருடன் பயின்று மற்றவரை
மண்பரவுந் திப்பதிகத் தினில்வைத்துச் சிறப்பித்து
நண்பருளி எழுந்தருளத் தாமினிது நயப்புற்றார்.

சீகாழிப்பதிப் பெருமான் திருஞான சம்பந்தரும் தாங்குதற்கரிய பெரும் காதல் கொண்டு சேவைசெய்யும் பண்புடைய சிறுத்தொண்ட நாயனாருடன் நட்பால் அங்கிருந்து; மற்று அந்த சிறுத்தொண்ட நாயனரை இப்பூமி போற்றும் தமது திருப்பதிகத்து வைத்து சிறப்பித்து அவர்பால் தமது நண்பினை அருள் செய்து அங்கு நின்றும் நீங்கிட சம்பந்தப் பெருமானுடைய அருளிப்பாட்டிற்கு சிறுத்தொண்டர் இனிதாய சிறப்படைந்திடப் பெற்றார். 24

இத்தன்மை நிகழுநாள் இவர்திருத்தொண் டிருங்கயிலை
அத்தர்திரு வடியிணைக்கீழ்ச் சென்றணைய அவருடைய
மெய்த்தன்மை அன்புநுகர்ந்தருளுதற்கு விடையவர்தாம்
சித்தமகிழ் வயிரவராய்த் திருமலைநின் றணைகின்றார்.

இத்தன்மையாக சிறுத்தொண்டர் வாழ்ந்திருக்கும் நாட்களில் இவரது திருத்தொண்டு; பெருங்கைலைமலை அமர்ந்த பெருமான் திருவுளம் கொள்ளுமாறு அவர்பால் சென்றுசேர; அந்த சிறுத்தொண்டநாயனரது மெய்த்தன்மையாய அன்பினைத் தாம் நுகர்ந்து அருள்புரியும்பொருட்டு இடபவாகனராய எம்பெருமானும் காண்பார் கண்குளிரவைத்திடும் மனமகிழ்வுடைய வயிரவராம்படி கோலம் கொண்டு திருக்கைலாய மலைநின்றும் இப்பூமியில் திருச்செங் காட்டங்குடி வருகின்றார். 25

மடல்கொண்ட மலரிதழி நெடுஞ்சடையை வனப்பெய்தக்
கடல்மண்டி முகந்தெழுந்த காளமே கச்சுருள்போல்
தொடர்பங்கி சுருண்டிருண்டு தூறிநெறித் தசைந்துசெறி
படர்துஞ்சின் கருங்குஞ்சி கொந்தளமா கப்பரப்பி.

மடல் கொண்ட அழகிய கொன்றைப்பூச் சூடிய நெடும் சடையை வனப்பெய்தும்படி, கடல் படிந்து நீர் உண்டு எழுந்த கருமேகத்தின் சுருள் போன்று தொடர்ந்து நீண்ட தலைமயிர் சுருண்டு இருண்டு அடர்ந்து நிமிர்ந்து அசைந்து செறிந்து படரும் வரிசை உடைய தாம்படி மேலே கொத்துப்போல ஆக்கி பெரும்சடையாகப் பரப்பி. 26

அஞ்சனமஞ் சனஞ்செய்த தனையஅணி கிளர்பம்பை
மஞ்சினிடை இடைஎழுந்த வானமீன் பரப்பென்னப்
புஞ்சநிரை வண்டுதேன் சுரும்புடை படர்ந்தார்ப்பத்
துஞ்சினுனித் தனிப்பரப்புந் தும்பைநறு மலர்தோன்ற.

மைக்குழம்மால் முழுக்குச் செய்துவைத்ததுபோல அழகு மிளிரும் கருமயிராய அம்மேகத்திடை முளைத்து எழுந்து தோன்றும் வெள்ளிகளின் கூட்டமென்ன; திரளாக நிறைவுற்ற வரிசைகளில் வண்டினங்கள் கூட்டாக சடைமயிரின் பக்கத்திலே ஒலித்திட சடை வரிசைகளின் விளிம்பிலே தனித்தனி பரப்பிய தும்பைமலர் விளங்க 27

அருகுகிரு முடிச்செருகும் அந்திஇளம் பிறைதன்னைப்
பெருகுசிறு மகயாக்கிப் பெயர்த்துச்சாத் தியதென்ன
விரிசுடர்ச்செம் பவளஒளி வெயில்விரிக்கும் விளங்குசுடர்த்
திருநுதன்மேல் திருநீற்றுத் தனிப்பொட்டுத் திகழ்ந்திலங்க.

தருமுடியின் அருகு செருகிய அந்திக் காலத்து இளம்பிறையினை எடுத்து அழகு சிறந்த சிறிய இளம்பிறையாக்கி; நிரம்பவும் அதனைச் சாத்தியதென்ன விரியும் சுடருடைய செம்பவளத்தின் ஒளியின் சோதி பரப்பும் படி விளங்கிய பிரகாசமுடைய திருநெற்றியின் மேல் திருநீற்றுத் தனிப்பொட்டு திகழ்ந்திலங்க. 28

வெவ்வருக்கன் மண்டலமும் விளங்குமதி மண்டலமும்
அவ்வனற்செம் மண்டலமும் உடன்அணைந்த தென அழகை
வவ்வுதிருக் காதின்மணிக் குழைச்சங்கு வளைத்ததனுள்
செவ்வரத்த மலர்செறித்த திருத்தோடு புடைசிறக்க.

வெப்பமுடைய சூரியனது மண்டலமும் விளங்கும் சந்திர மண்டலமும் அந்த நெருப்பினைத்தரும் அக்கினி மண்டலமும் உடன் ஒருங்கு வந்ததென அழகைப்பற்றி நிற்கும் திருக்காதினிலே அழகிய முத்தின் குண்டலமாக சங்குவளைக்கப் பெற்ற அதனுள் செவ்வரத்தம் பூச்செருகிய திருத்தோடு இருபுறமும் சிறந்திட; 29

களங்கொள்விடம் மறைத்தருளக் கடலமுதக் குமிழிநிரைத்
துளங்கொளிவெண் திரட்கோவைத் தூயவடம் அணிந்ததென
உளங்கொள்பவர் கரைந்துடலும் உயிருமுரு கப்பெருக
விளங்குதிருக் கழுத்தினிடை வெண்பளிங்கின் வடந்திகழ.

திருக்கழுத்தில் கொண்ட நஞ்சினை மறைத்தருள வேண்டி கடலிருந்த அமுதக் குமிழிகளினை நிரையாகக் கோத்து துலங்கிய வெள்ளிய திரளின் கோவையான தூயமாலை ஒன்று கழுத்தில் அணிந்தது என்னும்படி; எம் வயிரவரைக் காண்பவர் மனமும் கரைந்து உடலும் உயிரும் உருகும்படி பெருகவிளங்கிய திருக்கழுத்தின் இடையாக வெண் நிறமான பளிங்குமாலை திகழ. 30

செம்பரிதி கடலளித்த செக்கரொளி யினை அந்திப்
பம்புமிருள் செறிபொழுது படர்ந்தணைந்து சூழ்வதெனத்
தம்பழைய கரியுரிவை கொண்டுசமைத் ததுசாத்தும்
அம்பவளத் திருமேனிக் கஞ்சுகத்தின் அணிவிளங்க.

செவ்வொளி உடைய சூரியன் கடலில் மூழ்கும் போது தருகின்ற செக்கர் ஒளியினை மாலைக் காலத்தில் செறிகின்ற இருள் கொண்ட இராப்பொழுது படர்ந்து வந்து சூழ்வதென தமது பழைய யானைத்தோல்கொண்டு செய்த அதனை போர்த் திக்கொள்கின்றது போன்று அழகிய பவளத்திருமேனி மேல் போர்த்த கருமையான சட்டையின் அழகு திகழ. 31

மிக்கெழும் அன் பர்கள்அன்பு திருமேனி விளைந்ததென
அக்குமணி யாற்சன்ன வீரமும் ஆரமும் வடமும்
கைக்கணிகொள் வளைச்சரியும் அரைக்கடிசூத் திரச்சரியும்
தக்கதிருக் காற்சரியும் சாத்தியஒண் சுடர்தயங்க.

அன்பர்களிடையே மேல் ஓங்கி எழுகின்ற அன்பானது தமது திருமேனியின் மேல் அங்கங்கு உருவமைந்து விளைந்தது போன்றதான எலும்பு மணிகளால் அமைத்த சன்னவீரமும் ஆரமும் கோவை வடங்களும் கைக்கு அழகுற அணியப் பெற்ற காப்புகளும் திருவரையில் அணிகின்ற அரைஞாணும் தகுந்த திருப்பாத அணிகளும் சாத்தப் பெற்று அவை சிறந்த அழகு விளங்க. 32

பொருவில்திருத் தொண்டர்க்குப் புவிமேல்வந் தருள்புரியும்
பெருகருளின் திறங்கண்டு பிரானருளே பேணுவீர்
வரும்அன்பின் வழிநிற்பீர் எனமறைபூண் டறைவனபோல்
திருவடிமேல் திருச்சிலம்பு திசைமுழுதுஞ் செலஒலிப்ப.

நிகரிலாத அருட்பேறுடைய சிறுத்தொண்டர்க்கு இப்புடி மானிடமேனி தாங்கி வந்து அருள்புரியும் பெருக்கமுடை அருளின் திறமைகண்டு எம்பிரான் சிவனது அருளே பேணுவீர்களாகி வாழும் அன்பின்வழியே நிற்பீராக; என்று வேதங்கள் பாதச்சிலம்பு வடிவாயிருந்து ஒதுவன போன்று; எம்வயிரவரது திருவடிமேல்அணியப் பெற்ற கால்சிலம்பு திசைமுழுவதும் சென்றிடும்படி ஓசைசெய்ய. 33

அயன்கபா லந்தரித்த இடத்திருக்கை யால் அணைத்த
வயங்கொளிமூ விலைச்சூல மணித்திருத்தோள் மிசைப்பொலியத்
தயங்குசுடர் வலத்திருக்கைத் தமருகத்தின் ஒலிதழைப்பப்
பயன்தவத்தால் பெறும்புவியும் பாததா மரைசூட.

பிரமன் மண்டைஓடுதரித்த இடத்திருக்கையாலணைத்த; வெற்றிவிளையும் பேரொளி யுடைய முச்சுடர் சூலமாவது ஒன்று அழகிய திருத்தோள் மேலாகப் பொலிந்திட சுடர் பரந்துவிளங்கும் வலத்திருக்கையில் கொண்ட உடுக்கின் ஓசை தழைத்தோங்க; தான்செய்த தவத்தால் விளையும் பயனைப் பெறுகின்ற இப்பூமியும் இன்று எம்பிரானது பாத தாமரையை சூடிக்கொள்ள. 34

அருள்பொழியுந் திருமுகத்தில் அணிமுறுவல் நிலவெறிப்ப
மருள்பொழிமும் மலஞ்சிதைக்கும் வடிச்சூலம் வெயிலெறிப்பப்
பொருள்பொழியும் பெருகன்பு தழைத்தோங்கிப் புவி ஏத்தத்
தெருள்பொழிவண்டமிழ் நாட்டுச் செங்காட்டங் குடிச்சேர்ந்தார்.

அருள்பொழியும் திருமுகத்தில் அழகிய புன்சிரிப்பு நிலவுபரப்ப; மயக்கத்தை வருவிக்கும் மும்மலத்தையும் சிதைக்கும் வடித்த சூலப்படை வெயில் ஒளிகால அழிவிலாத பொருள் பொழிகின்ற பெருகிய அன்பு தழைத்து ஓங்கி இப்புவி துதித் நிடத் தெளிவு தோற்றுவிக்கும் வண்மை நிறைந்த தமிழ்நாட்டில் இக்கோலமுடன் ஏம் உயிர்க்கு உயிராய கடவுள் வயிரவராகி செங்காட்டங்குடி வந்து சேர்ந்தார். 35

தண்டாத தொருவேட்கைப் பசியுடையார் தமைப்போலக்
கண்டாரைச் சிறுத்தொண்டர் மனைவினவிக் கடிதணைந்து
தொண்டானூர்க் கெந்நாளுஞ் சோறளிக்குந் திருத்தொண்டர்
வண்டார்பூந் தாரார்இம் மனைக்குள்ளா ரோ? என்ன.

குறையாத ஒரு வேட்கையுடைய பசி உடையார் போன்று விளங்கி; கண்டால் ஊனையும் உருக்கும் படியான வயிரக்கோலத்துடன் செங்காட்டங் குடியில் வந்துவழி யில் காண்பாரை சிறுத்தொண்ட நாயனரது மனை எங்கே என வினவிக் கேட்டு அவர்மனை அடைந்து வெளிநின்று தொண்டுபட்டார்க்கு எந்நாளும் சோறு கொடுக் கும் சிறுத்தொண்டர் வண்டுகள் மொய்த்திடும் பூமாலை மார்புடையவர் இந்த வீட்டினுள் இருப்பாரோ எனக்கேட்டருள. 36

வந்தணைந்து வினவுவார் மாதவரே யாம் என்று
சந்தனமாந் தையலார் முன்வந்து தாள் வணங்கி
அந்தமில்சீர் அடியாரைத் தேடிஅவர் புறத்தணைந்தார்
எந்தமை ஆளுடையவரே! அகத்துளெழுந் தருளும் என.

தம் மனை வாய்தலில் வந்து சேர்ந்து கேட்பவர் ஓர் பெரும் தபோனரே போலும் என்று நினைந்து சந்தனத்தார் என்னும் பணிப்பெண்ணை அம்மை சுவாமி திருமுன்பு வந்து திருத்தாள் பணிந்து ''ஐயனே அவர் முடிவிலாத சிருடைய அடியார்களை அழைத்து அமுதூட்ட தேடிக்கொண்டு வெளியே சென்றுள்ளார். எம்மை ஆளுடைய பெருமானே! நீர் வீட்டினுள் எழுந்தருளி வருக'' என வேண்டுதலும் 37

மடவரலை முகநோக்கி மாதரார் தாமிருந்த
இடவகையிற் றனிபுகுதோம் என்றருள அதுகேட்டு
விடஅகல்வார் போலிருந்தார் எனவெருவி விரைந்துமனைக்
கடனுடைய திருவெண்காட் டம்மைகடைத் தலைஎய்தி.

மட மெனும் சீரிய குணமுடைய அப்பெண்ணை முகம் நோக்கி நாம் பெண் கள் தனியே இருந்திடும் இடத்துப் போகமாட்டோம் என்று எம்பெருமான் கூறி யருள அது கேட்டு இவர் எம்மிடம் மனையில் வந்தவர் நாயகர் இலாதபடியால் இவ் விடம் விட்டுப் போவார் போலிருந்தார் இவர் பேச்சால்; என்று அஞ்சி அதி விரை வாக இல்லறத்தின் பெரும் கடமைப் பாடுடைய திருவெண் காட்டம்மை உள் ளிருந்து மனையின் முன் கடை வாயிலில் வந்து. 38

அம்பலவர் அடியாரை அமுதுசெய்விப் பார்; இற்றைக்(கு)
எம்பெருமான் யாவரையுங் கண்டிலர்தே டிப்போனர்
வம்பெனநீர் எழுந்தருளி வருந்திருவே டங்கண்டால்
தம்பெரிய பேறென்றே மிகமகிழ்வர்; இனித்தாழார்.

எம்பெருமான் வயிரவரை வணக்கமுடன் நோக்கி எம்பெருமானே எம் கணவர் அம்பலத்து ஆடிய பெருமான் அடியவரை இம்மனையில் அமுதுசெய்விப்பவர். ஆனால் இன்று அவர் யாரையுமே இம்மனையில் வரக்கண்டிலராய் தேடிப் போனர். ஆனால் நீர் எந்நாளுமின்றி இன்று புதிதாக எழுந்தருளி வருகின்ற இந்த வேடத்தைக் கண்டால் தம்பெரிய பேறென்றே எம் கணவர் மிக மகிழ்வர். அவரும் இனிவர தாமதிக்கார். 39

இப்பொழுதே வந்தணைவார்; எழுந்தருளி இரும் என்ன
ஒப்பில்மனை யறம்புரப்பீர்! உத்தரா பதியுள் ளோம்
செப்பருஞ்சீர்ச் சிறுத்தொண்டர் தமைக்காணச் சேர்ந்தனம்யாம்
எப்பரிசும் அவரொழிய இங்கிரோம் என்றருளி.

இப்பொழுதே என்கணவர் வந்து சேர்வார். இவ்வளவும் உள்ளே நீர் எழுந் தருளி இரும் என்று கூறிட; அம்மையை அவர் நோக்கி; ஒப்பில்லாவகை உம் மனையில் தருமத்தை வளர்த்திருப்பீர்! நாம் வடதேசத்து ஓர் பதியில் வாழ்வோம். சொல்லற்கரிய சிருடைசிறுத்தொண்டர் தமைக் காணச் சேர்ந்த யாம். எத்தன்மை யிலும் நாம் அவர் இலாது இங்கிருக்கமாட்டோம் என்று கூறியருளினர் வயிரவராக வந்த எம்பெருமான். 40

கண்ணுதலிற் காட்டாதார் கணபதீச் சரத்தின்கண்
வண்ணமலர் ஆத்தியின்கீழ் இருக்கின்றோம்; மற்றவர்தாம்
நண்ணினுல் நாமிருந்த பரிசுரைப்பீர் என்றருளி
அண்ணலார் திருவாத்தி அணைந்தருளி அமர்ந்திருந்தார்.

கண்ணினைத் தன் நெற்றியில் காட்டாது வந்த கடவுள் பின்னரும் திருவெண் காட்டம்மையை நோக்கி நாம் சென்று கணபதீச் சரத்தின் இடம் உள்ள அழகிய மலருடைய தி வாத்தி மரத்தின் கீழ் இருக்கின்றோம். மற்று சிறுத்தொண்டர் இங்கு வந்தால் நாம் அங்கிருக்கும் தன்மை சொல்வீராக என்று கூறியருள் செய்து எம்பெருமான் வயிரவர் திருவாத்தி மரத்தைக் சேர்ந்தருளி அமர்ந்திருந்தார். 41

நீரார் சடையான் அடியாரை நேடி எங்குங் காணுது
சீரார்தவத்துச் சிறுத்தொண்டர் மீண்டுஞ் செல்வமனை எய்தி
ஆரா இன்ப மனைவியார்க் கியம்பி அழிவெய் திடஅவரும்
பாரா தரிக்கும் திருவேடத் தொருவர் வந்த படிபகர்ந்தார்.

இவர் செயல் இப்படியாக; நீரார்ந்த சடையாரின் அடியாரைத் தாம் எங்கும் தேடிக் காணுது சீரார்ந்த தவமுடைய சிறுத்தொண்டர் மீண்டும் தம் மனைசேர்ந்து குறையாத இன்பத்து துணைவியாம் மனைவியார்க்கு அடியாரை அன்று காண்கிலாமை சொல்லி கவலைமிகுந்து மனம் சோரும் நேரத்து மனைவியார் அவரும் இப்பூமிகண்டு போற்றி உய்யும் படியாய திருவேடத்துடன் ஒருவர் தம்மனைவந்த அத்தன்மையை எடுத்துக் கூறினர். 42

அடியேன் உய்ந்தேன் எங்குற்றூர் உரையாய்? என்ன அவர்மொழிவார்
வடிசேர் சூல கபாலத்தர்: வடதேச சத்தோம் என்றூர்; வண்
துடிசேர் கரத்துப் பயிரவர்; யாஞ்சொல்ல இங்கும் இராதேபோய்க்
கடிசேர் திருவாத்தியின் நிழற்கீழ் இருந்தார் கணப தீச்சரத்து.

அதனைக்கேட்டலும் ''அடியேன் உய்ந்தேன் எங்குற்றூர் அவர்சொல்வாய்'' எனக் கேட்க அம்மைசொல்வாள் அவர்தாம் வடித்தெடுத்த கூரிய சூலப்படையுடன் பிச்சை ப்பாத்திரமும் கைக்கொண்டவர். தாம் வடதேசத்தோம் என்றூர். அவர் நல்லஓசை தரும் உடுக்கேந்தியகையுடைய வயிரவர். அவரை நாம் இங்கிருக்கச் சொல்லவும் இங்கிராது போய் வாசனை சேர்ந்த திருவாத்தி மரத்தின் நிழற் கீழ்இருந்தார் கண பதீச்சரக் கோவிலில். 43

என்று மனைவி யார்இயம்ப எழுந்த விருப்பால் விரைந் தெய்தி
சென்று கண்டு திருப்பாதம் பணிந்து நின்றூர் சிறுத்தொண்டர்
நின்ற தொண்டர் தமைநோக்கி நீரோ பெரிய சிறுத்தொண்டர்
என்று திருவாய் மலர்ந்தருள இறைவர் தம்மைத் தொழுதுரைப்பார்.

என்று மனைவியார் சொல்ல மனதில் எழுந்தவிருப்பால் சிறுத்தொண்டர் விரைந்து போய் அங்கு சென்று எம்பிரான் வயிரவரைக் கண்டு திருப்பாதம் பணிந்து நின்றூர். அவ்வணம் நின்ற சிறுத்தொண்டரை நோக்கி ''நீரோ பெரிய சிறுத்தொண்டர்'' என்ன எம்பிரான் திருவாயால் கேட்டு அருள் புரிந்திட அதுவோ சிறுத்தொண்டர் எம்பெருமானைத் தொழுது இதனைச்சொல்வார். 44

பூதி அணிசா தனத்தவர்முன் போற்றப் போதேன் ஆயிடினும்
நாதன் அடியார் கருணையினுல் அருளிச் செய்வார்; நான்என்று
கோதில் அன்பர் தமைஅமுது செய்விப் பதற்குக் குலப்பதியில்
காதலாலே தேடியுமுன் காணேன்; தவத்தால் உமைக்கண்டேன்.

எம்பிரானே நீறணியும் சாதனையுடைய பெரியோர் திருமுன்பு நானும் ஒருவன் என போற்றுதற்கு போதாதவன் என்றூலும் எம்பிரானுடைய அடியார்கள் சிறுத் தொண்டன் நான் என்று கருணையினுல் அருளிச்செய்வார்கள். எம்பிரானே குறை விலாத அடியார்களை அமுதுசெய்விப்பதற்கு இந்த நற்குலப் பதியில் காதலாலே தேடி யும் எனமுன் ஒருவரையும் காணுனுக இருந்தவன் நான் செய்த தவப்பேற்றூல் இன்றுமைக் கண்டேன். 45

அடியேன் மனையில் எழுந்தருளி அமுது செய்ய வேண்டும் என
நெடியோன் அறியா அடியார்தாம் நிகழந் தவத்தீர் உமைக்காணும்
படியால் வந்தோம்: உத்தரா பதியோம்; எம்மைப் பரிந்தூட்ட
முடியா துமக்குச் செய்கைஅரி தொண்ணு தென்றுமொழிந்தருள.

அடியேனது மனையில் நீர் எழுந்தருளிவந்து அமுது செய்திட வேண்டும் என வேண்டிட அதுவேனு நெடிய திருமாலும் பன்றியாய்ச் சென்றறியாத வயிரவராம் அடியவரும் சிறுத்தொண்டரை நோக்கி ''சிரடன் நிகழும் தவ நடையீர்; உம்மைக் காணும் படியால் நாம் இங்கு வந்தோம்; வடதேசத்து வாழ்வோம்; எம்மைப் பரிவுடன் அமுதூட்டுதல் உமக்கு முடியாது. உமக்கு அச்செயல் அரிது. ஆதலின் உம் மால் செய்ய ஒண்ணுது;'' என்று மொழிந்தருள. 46

எண்ணு தடியேன் மொழியேன்; நீர் அமுது செய்யும் இயல்பதனைக்
கண்ணுர் வேடம் நிறைதவத்தீர்! அருளிச் செய்யுங் கடிதமைக்கத்
தண்ணுர் இதழி முடியார்தம் அடியார் தலைப்பட் டால்தேட
ஒண்ணு தனவும் உளவாகும்; அருமை இல்லை எனஉரைத்தார்.

அது கேட்டு சிறுத்தொண்டர் சுவாமியை நோக்கி எதனையும் அதன் தன்மையை எண்ணுது நான் சொல்லமாட்டேன்! நீர் திருவமுது செய்திடும் இயல்பாம் தன் மையினை கண்ணுர்ந்த வேடம் நிறைந்த தபோதனரே சொல்லி அருளிச்செய்திடும் விரைவுடன் நான் அதனை அமைப்பதற்கு. எம்பிரானே! குளிர்ந்த கொன்றைமாலை முடியுடையார் தமது அடியார் எம்முன்னுக வந்து தெரிசனப் பட்டால் தேட முடியாததும் வருவதாகும். ஆதலாலே எனக்கொன்றும் அருமைஇல்லை என கூறினர். 47

அரிய தில்லை எனக்கேட்ட பொழுதில் அழகு பொழிகின்ற
பெரிய பயிர வக்கோலப் பெருமான் அருளிச் செய்வார் யாம்
பரியுந் தொண்டூர்! மூவிருது கழித்தாற் பசுவீழ்த் திட உண்ப(து)
உரிய நாளும் அதற்கின்றூல்; ஊட்ட அரிதாம் உமக் கென்றூர்.

எனக்குயாதும் அரியதில்லை எனச் சிறுத்தொண்டர் கூறக்கேட்ட அப்பொழுதில் அழகு பொழிகின்ற பெரியபைரவக் கோலமுடைய பெருமான் சொல்லியருள் கின் றூர் என்னை அமுதூட்ட அன்பு கொண்டவரே நாம் ஆறு மாதங்கள் கழித்தால் பசுவினை அரிந்து அதன் ஊனை அமுதாக்கி இட்டுஉண்பது. அப்படி உண்பதற்குரிய நாளும் இன்று. அவ்வணம் எனக்கு அமுதூட்ட உமக்கு அரிய தொன்றுகும் என்றூர். 48

சால நன்று! முந்நிரையும் உடையேன்; தாழ்விங் கெனக் கில்லை
ஆலம் உண்டார் அன்பர்! உமக் கமுதாம் பசுத்தான் இன்னதென
ஏல அருளிச் செய்பெற்றூல் யான்போய் அமுது கடிதமைத்துக்
காலந் தப்பா மேவருவேன என்று மொழிந்து கைதொழுதார்.

சிறுத்தொண்டர் அது கேட்டு எம்பிரானே மிக நன்று. அடியேன் பசுக்கூட்டம் ஆட்டுக் கூட்டம் எருமைக் கூட்டம் எனும் மூன்றுவகை நிரையும் உடையேன். தாழ்வு எனக்கு இங்கில்லை! நஞ்சுண்ட கடவுளுக்கு அன்புபூண்ட முனிவரே உமக்கு அமுதாகும்படி விரும்பிய பசு (மிருகம்) த் தான் இன்ன தென்று நன்றுடன் நீர் அருளிச் செய்தால் நான்போய் அவ்வகையான அமுது விரைவில் அமைத்து காலம் தாமதியாது வருவேன் என்று கூறி சுவாமியைக் கைகொழுதார். 49

பண்பு மிக்க சிறுத்தொண்டர் பரிவு கண்டு பயிரவரும்
நண்பு மிக்கீர்! நாம்உண்ணப் படுக்கும் பசுவும் நரபசுவாம்
உண்பதஞ்சு பிராயத்துள் உறுப்பில் மறுவின் றேல்இன்னம்
புண்செய் நோவில் வேலெறிந்தாற் போலும் புகல்வ தொன் றென்றூர்.

பண்பால் மிகுந்த சிறுத்தொண்டரது பரிவை எம்பிரான் வயிரவர் கண்டு எம் பால் நண்புமிக்கீர் நாம் உண்டிட வெட்டும் பசுவும் நரபசுவாகும். அதுவும் நாம் உண்பது ஐந்து வயதிற் குட்பட்டதாக உறுப்பில்மறு ஏதும் இல்லா திருப்பதொன்றை இன்னமும் புண்கொண்ட வேதனையில் வேல் எறிந்தால் போலச் சொல்வதொன்று உண்டு என்றூர். 50

யாதும அரிய தில்லைஇனி ஈண்ட அருளிச் செய்யும் என
நாதன் தானும் ஒருகுடிக்கு நல்ல சிறுவன் ஒருமகனைத்
தாதை அரியத் தாய்பிடிக்கும் பொழுதில் தம்மில் மனமுவந்தே
ஏதம் இன்றி அமைத்தகறி யாம்இட்டுண்ப(து) எனமொழிந்தார்.

அது கேட்ட சிறுத்தொண்டர் சொல்வார் ''எம் பெருமானே எனக்கு யாதும் அரியதில்லை; அதனை வெளிப்பட சொல்லியருளும் என எம்பெருமான் தானும்; நான் விரும்பிய நரபசுவும் ''ஒருகுடிக்கு நல்ல சிறுவனுக உள்ள ஒருமகனை தந்தை அப் பிள்ளையை அரியதாய் பிடித்திடும் பொழுது தம்மில் தாங்கள் மனம் உவந்து தவ றின்றி சமைத்தகறி அதனையே யாம் இட்டு உண்பது'' என்று கூறினார் சுவாமி. 51

அதுவும் முனைவர் மொழிந்தருளக் கேட்ட தொண்டர் அடியேனுக்(கு)
இதுவும் அரிதன்(று) எம்பெருமான்! அமுது செய்யப் பெறில் என்று
கதுமென் விரைவில் அவர் இசையப் பெற்றுக் களிப்பாற் காதலொடு
மதுமென் கமல மலர்ப்பாதம் பணிந்து மனையில் வந்தணைந்தார்.

அதனையும் முதல்வர் மொழிந்தருளிடக் கேட்ட சிறுத்தொண்டர் அடியேனுக்கு இதுவும் அரிதன்று எம்பெருமான் இன்று திருவமுது செய்யப்பெற்றால் என்று மிக அவசரமான தொரு விரைவினுல் சுவாமியை விரும்பியபடியே அமுதுசெய இசை ந்திடப் பெற்றுக் கொண்ட களிப்பால் காதலுடன் தேன் சொரியும் மென்மை யான தாமரை போலும் திவ்விய மலர்ப்பாதம் பணிந்து தமது திருமனையில் வந்து சேர்ந்தார். 52

அன்பு மிக்க பெருங்கற்பின் அணங்கு திருவெண் காட்டம்மை
முன்பு வந்து சிறுத்தொண்டர் வரவு நோக்கி முன்னின்றே
இன்பம் பெருக மலர்ந்தமுகங் கண்டு பாத மிசை இறைஞ்சிப்
பின்பு கணவர் முகநோக்கிப் பெருகுந் தவத்தோர் செயல்வினவ.

சிறுத்தொண்டர் வந்ததும்: அன்பு மிக்க பெரும் கற்பின் பெண்தெய்வமாகும் திருவெண்காட்டம்மை முன்பாக வந்து சிறுத்தொண்டர் வரவினை நோக்கி முன் னின்று அவரது இன்பம் பெருக மலர்ந்த திருமுகம் கண்டு சாலடியில் வணங்கி எழுந்து பின்பு தம் கணவனுர் முகநோக்கி தங்கள் முன்அப்பொழுது வந்த பெருகும் தவமுடைய வயிரவரது செயல் கேட்டருளலுர்: 53

வள்ள லாரும் மனையாரை நோக்கி வந்த மாதவர்தாம்
உள்ளம் மகிழ அமுதுசெய இசைந்தார் குடிக்கோர் சிறுவனு மாய்க்
கொள்ளும் பிராயம் ஐந்துளனுய் உறுப்பிற் குறைபாடின்றித்தாய்
பிள்ளை பிடிக்க உவந்துபிதா அரிந்து சமைக்கப் பெறின் என்னூர்.

வள்ளலார் சிறுத்தொண்டரும் தம் மனைவியாரை நோக்கி முன்பு வந்த அந்த பெரும் தபோதனரும் தாம் உள்ளம் மகிழ அமுது செய்ய இசைவு கொண்டார் எப்படி எனில் குடிக்கு ஒரே ஒரு சிறுவனுமாய் அச் சிறுவன் கொண்ட வயதும் ஐந்துளனுகி உறுப்பினில் குறைபாடு ஏதும் இன்றி தாய் பிள்ளையைப் பிடித்திட மனமகிழ்ந்து பிதா அரிந்து அப்பிள்ளையைக் கறியாகச் சமைக்கப்பெறின் என்னூர். 54

அரிய கற்பின் மனைவியார் அவரை நோக்கி உரைசெய்வார்
பெரிய பயிர வத்தொண்டர் அமுது செய்யப் பெறுவதற்கிங்(கு)
உரிய வகையால் அமுதமைப்போம்; ஒருவனுகி ஒருகுடிக்கு
வருமச் சிறுவன் தனைப்பெறுமா றெவ்வா(று)? என்று வணங்குதலும்.

பெறற்கரிய கற்பு நிலையுடைய திருவெண் காட்டம்மை தம் கணவர் அவரை நோக்கி சொல்வார் பெரிய கோலமுடைய அந்த வயிரவத் தொண்டர் அமுது செய்திடப் பெறுவதற்கு இங்கு ஏற்ற வகையால் அமுது சமைப்போம் ஆனல் அவர்விரும்பிய படி கறியாக்க ஒருகுடிக்கு ஒருவனுகி வருகின்ற அச்சிறுவனை நாம் எப்படிப் பெறுவோம் எனமொழிந்து கணவனுரை வணங்குதலும். 55

மனைவி யார்தம் முகநோக்கி மற்றித் திறத்து மைந்தர் தமை
நினைவு நிரம்ப நிதிகொடுத்தால் தருவா ருளரே? நேர்நின்று
தனையன் தன்னைத் தந்தைதாய் அரிவார் இல்லைத் தாழாமே
எனைஇங் குய்ய நீபயந்தான் தன்னை அழைப்போ மியாம் என்னூர்.

அதுகேட்ட சிறுத்தொண்டர் தம் மனைவியாரின் முகம் நோக்கி சொல்வார் அந்தவயிரவர் சொல்லிய இத்தன்மை பொருந்திய மைந்தரை ஒருவர் அவர் மனத்தில் கொண்டளவு நிரம்ப நிதிகொடுத்தால் தருவார் யாரும் உள்ளாரோ? அப்படி தருவாராயினும் நேராக நின்று தமது பிள்ளையைத் தந்தை தாய் அரி வார் இல்லை! இனித் தாழ்வு இன்றி என்னை இன்று இங்கு உய்ந்திட நீபெற்று எடுத்த மைந்தன் தனை கறி சமைத்திட அழைப்போம் யாம் என்னூர். 56

என்று கணவர் கூறுதலும் அதனுக் கிசைந் தெம்பிரான் தொண்டர்
இன்று தாழா தமுதுசெய்யப் பெற்றிங் கவர்தம் மலர்ந்தமுகம்
நன்று காண்ப தென நயந்து நம்மைக் காக்க வருமணியைச்
சென்று பள்ளி யினிற் கொண்டு வாரும் என்னூர் திருவனையார்.

என்று தம் கணவர் கூறுதல் கேட்டு அதற்கு இசைவு கொண்டு திருவெண் காட்டம்மையும் எம்பெருமானது வயிரவத் தொண்டர் இன்று இனித் தாழாது அமுது செய்யப் பெற்று இங்கு அவர்தமது மலர்ந்த முகம் நன்றுடன் காண்பது நல்லதே என மிக நயந்து கணவனுர் சிறுத்தொண்டரை நோக்கி நம்மைக் காத் திட வருகின்ற கண்மணியாம் எம்புதல்வனை நீர் சென்று அவன் கல்விபயிலச் சென்ற பள்ளிதின்றும் அழைத்து வாரும் என்னூர் இலக்குமியையே ஒத்த அம்மை யார். 57

காதல் மனையார் தாங்கூறக் கணவ னுருங் காதலனை
ஏதம் அகலப் பெற்றபே றெல்லாம்எய்தி னுர்போல
நாதர் தமக்கங் கமுதாக்க நறுமென் குதலை மொழிப்புதல்வன்
ஓத அணைந்த பள்ளியினில் உடன்கொண் டெய்தக் கடி தகன்னூர்.

காதலியாம் மனைவியார் இது கூறக்கேட்ட கணவனுரும் தம் அரும்புதல்வனை தம் குறைபாடு நீங்கிடப் பெற்றபேறு எல்லாம் அடைந்திடப் பெற்றுர் போன்று எம்பெருமானுக்கு அங்கு திருவமுதாக்க இனிய மென்மையான குதலை மொழி பேசும் தனிப்புதல்வன் கல்வி பயிலவந்தணைந்த திருந்த பள்ளியிற் சென்று மகனை உடன் அழைத்துவர விரைவாக அப்பள்ளியில் சென்று சேர்ந்தார். 58

பள்ளி யினிற்சென் றெய்துதலும் பாதச் சதங்கை மணியொலிப்பப்
பிள்ளை ஓடி வந்தெதிரே தழுவ எடுத்துப் பியலின் மேல்
கொள்ள அணைத்துக் கொண்டுமீண் டில்லம் புகுதக் குலமாதர்
வள்ள லார்தம் முன்சென்று மைந்தன் தன்னை எதிர்வாங்கி.

பள்ளியில் சென்று தந்தையார் சேர்தலும் தந்தையைக் கண்டதும் பாதச் சலங்கை மணி கிண்கிணென ஒலித்திட தன்பிள்ளை ஓடி வந்து அப்பா என முன் னுல் தழுவிக் கொள்ள மைந்தனுரைத் தூக்கி எடுத்து தோளின் மேல் வைத்துக் கொண்டு மீண்டுதம் மனைசேருதலும் குலத்துவந்த திருவெண் காட்டு அம்மையார் வள்ளலார் சிறுத்தொண்டர் முன்பு சென்று மைந்தனை நேராக வாங்கி; 59

குஞ்சி திருத்தி முகந்துடைத்துக் கொட்டை அரை நாண் துகள்நீக்கி
மஞ்சள் அழிந்த அதற்கிரங்கி மையுங் கண்ணின் மருங்கொதுக்கிப்
பஞ்சி அஞ்சும் மெல்லடியார் பரிந்து திருமஞ் சனமாட்டி
எஞ்சல் இல்லாக் கோலஞ் செய் தெடுத்துக் கணவர் கைக்கொடுத்தார்.

மைந்தனுரது குலைந்திருந்த மயிரை ஒழுங்காக்கி முடிந்து முகம்கழுவித் துடைத்து காதணியிலும் அரைஞாண் கயிற்றிலும் பள்ளியில் விளையாடிய போது படிந்த தூசு நீக்கி தாம் பள்ளி விடுத்திடும் போது பூசிய மஞ்சள் அணிந்து போன அதற்கு இரங்கி கண்ணில் எழுதிய மையும் ஒருபுறமாக ஒதுக்கி; செம்பஞ்சிலும் மிருதுவாய மெல்லிய அடியுடைய அம்மையார் அன்புடன் மகனுருக்கு திருமஞ்சனமாம் நீராட் டி குறைவேதும் இலாத தெய்வக் கோலம் புனைந்து எடுத்துவந்து கணவனுரின் கையில் கொடுத்தார். 60

அச்சம் எய்திக் கறியமுதாம் என்னும் அதனுல் அரும் புதல்வன்
உச்சி மோவார் மார்பின்கண் அணைத்தே முத்தந் தாமுண்ணுர்
பொச்சம் இல்லாத் திருத்தொண்டர் புனிதர் தமக்குக் கறிஅமைக்க
மெச்சு மனத்தால் அடுக்களையின் மேவார் வேறு கொண்டனைவார்.

அரிய தம் மகனரின் இனிமையான அற்பதக் கோலம் கண்டு அவர் இறைவன் அடியார்க்கு கறியமுதாவர் என்ற பயத்தால் அப் பிள்ளேயின் உச்சியில் முத்தமிட்டார். மார்புடன் அணைத்து முத்தமும் உண்ணமாட்டார். பொய்மையில்லாத வஞ்சனை அறியாத திருத்தொண்டர் அவர் புனிதனும் சிவன் அவர்க்கே அப்பிள்ளேயை கறியாக்க மேச்சிடும் மனமுடையார் இருவரும் அடுக்களேக்குள் செல்லார் வேறெருபுனிதமாய இடம் கொண்டு செல்வார்கள். 61

ஒன்று மனத்தார் இருவர்களும் உலகர் அறியார் எனமறைவில்
சென்று புக்குப் பிள்ளேதனேப் பெற்ற தாயார் செழுங்கலங்கள்
நன்று கழுவிக் கொடுசெல்ல நல்ல மகனே எடுத்துலகை
வென்ற தாதை யார்தலேயைப் பிடிக்க விரைந்து மெய்த்தாயர்.

எம்பிரான் வயிரவர்க்கு பிள்ளேயைக் கறி சமைத்திட ஒருமைப்பாடு கொண்ட மனத்தார் இருவர்களும் இதனே உலகமக்கள் அறியார்கள் என்று மறைவில் தம் புதல்வனே எடுத்துச் சென்று அங்கு புகுந்து; பிள்ளேயைப் பெற்ற தாயார் செழுமையாய நல்லபாத்திரங்கள் நன்றுடன் கழுவி எடுத்துச் செல்ல அங்கு அம்மறைவில் சேர்ந்து: இந்த உலகை வென்ற தந்தையார் தம்மகனரின் தலேயைப்பிடித்திட மிகுவிரைவாக மெய் நெறி நின்ற தாயாரும். 62

இனிய மழலேக் கிண்கிணிக்கால் இரண்டும் மடியின் புடைஇடுக்கிக்
கனிவாய் மைந்தன் கையிரண்டும் கையாற் பிடிக்கக் காதலனும்
நனிநீடுவகை யுறுகின்ருர் என்று மகிழ்ந்து நகைசெய்யத்
தனிமா மகனேத் தாதையார் கருவி கொண்டு தலேயரிவார்.

திருமகனரின் இனிய மெல்லசைதரும் கிண்கிணியணிந்த காலினே இரண்டையும் தன் மடியின் பக்கரில் இடுக்கி கனிந்த வாயுடைய மகனது கையிரண்டையும் தம் கையால் பிடித்திட அச்செயலால் அப்பிள்ளேயும் தம் தாய் தந்தையார் மிகவும் பெரிய தொரு மகிழ்ச்சி கொள்கின்ருர் இப்படி பிடித்து என்ற மலர்ச்சியால் மகிழ்ந்து சிரித்திட; தமக்கு உற்ற ஒரே ஒரு மைந்தனே தந்தையார் தம் வாள்கொண்டு தலேயினே அரிவார். 63

பொருவில் பெருமைப் புத்திரன்மெய்த் தன்மை அளித்தான்எனப்பொலிந்து
மருவு மகிழ்ச்சி எய்தஅவர் மனேவி யாருங் கணவனூர்
அருமை உரிரை எனக்களித் தான் என்று மிகவும் அகமலர
இருவர் மனமும் பேருவகை எய்தி அரிய வினேசெய்தார்.

தனக்கொப்பாரில்லாத பெருமையுடைய மைந்தன் என்றும் உறுதியாய உண்மைத்தன்மையினே இன்று கொடுத்தான் எனப்பொலிந்து பொருந்தும் மகிழ்ச்சியை சிறுத்தொண்டர் கொண்டிட; அவர் மனேவியாரும் தம புதல்வன் தம் கணவனுரது அருமை உயிரைக் எனக்குக் கொடுத்தான் என்று மிகவும் உள்ளம் மலர இப்படியாக தந்தையும் தாயும் ஆய இருவரது மனமும் பெருமகிழ்வு எய்தி செயற்கரிய அச்செயலாம் தம்பிள்ளேயை அரிதலேச் செய்தார்கள். 64

அறுத்த தலேயின் இறைச்சிதிரு வமுதுக் காகா தெனக் கழித்து
மறைத்து நீக்கச் சந்தனத்தார் கையிற் கொடுத்து மற்றைஉறுப்(பு)
இறைச்சி எல்லாங் கொத்தி அறுத் தெலும்பு மூனே திறந்திட்டுக்
கறிக்கு வேண்டும் பலகாயம் அரைத்துக் கூட்டிக் கடிதமைப்பார்.

அறுத்த பிள்ளேயின் தலேஇறைச்சி திருவமுதுக்கு ஆகாது என அதனேக் கழித்து அதனே மறைத்து நீக்க தம் பணிப்பெண் சந்தனத்தாரின் கையில் கொடுத்து மற்றைய தம்பிள்ளேயின் உறுப்பு இறைச்சி எல்லாம் கொத்தி அறுத்து எடுத்து எலும்பின் மூளேப்பகுதியை எலும்பை வெட்டி எடுத்து அவற்றை கறிக்கு வேண்டும் படியாக அரைத்த காயம் பல கூட்டி விரைவில் கறியமைப்பார். 65

மட்டு விரிபூங் குழல் மடவார் அடுப்பில் ஏற்றி மன மகிழ்ந்தே
அட்ட கறியின் பதம்அறிந்தங் கிழிச்சி வேருர் அருங்கலத்துப்
பட்ட நறையால் தாளித்துப் பலவும் மற்றுங் கறிசமைத்துச்
சட்டவிரைந்து போனக மும்சமைத்துக் கணவர் தமக்குரைத்தார்.

தேன் சொரிய மலர்ந்த பூச்சூடிய பெண்களும் கறி வகையை ஆடுப்பில் வைத்து மன மகிழ்ந்து சமைத்த கறியின் பதத்தினே அறிந்து இறக்கி வேருரு நற்பாத்திரத்து தெரிந்த வாசனேப் பொருள் இட்டவகையால் தாளித்து இன்னும் வேண்டும் கறிசமைத்து மிகு விரைந்து அமுதும் சமைத்து சமையல் முடிந்த தன்மையை தம் கணவனுர்க்கு மொழிந்தருளினுர் 66

உடைய நாதர் அமுதுசெய உரைத்த படியே அமைத் தவதற்
கடையும் இன்பம் முன்னேயிலும் ஆர்வம் பெருகிக் களிகூர
விடையில் வருவார் தொண்டர்தாம் விரைந்து சென்று மென்மலரின்
புடைவண் டறையும் ஆத்தியின்கீழ் இருந்த புனிதர் முன்சென்ருர்.

தம்மை உடைய நாதன் வயிரவர் அமுதுசெய்திட அவர் சொல்லியபடியே அமைத்த அதற்கு அடைகின்ற இன்பம் முன்னேயிலும் ஆர்வம் பெருகிக் உள்ளம் களிகூர்ந்திட, இடபத்துமேல் எழுந்தருளிவரும் எம்பெருமானது தொண்டர் சிறுத்தொண்டர் விரைவாகச்சென்று மென்மலரின் பக்கலிலே தேன் உண்ண வண்டு இரையும் ஆத்திமரத்தின்கீழ் இருந்த புனிதனுய வயிரவர் முன்சென்ருர். 67

அண்ணல் திருமுன்(பு) அணேந்திறைஞ்சி அன்பர்மொழிவார் அடியேன்பால்
நண்ணி நீரிங் கமுதுசெய வேண்டும் என்று நான்பரிவு
பண்ணி னேனுய்ப் பசித்தருளத் தாழ்த்த தெனினும் பணிசமைத்தேன்
எண்ணம் வாய்ப்ப எழுந்தருள வேண்டும் என்றங் கெடுத்துரைப்பார்.

அன்பர் சிறுத்தொண்டர் எம் கடவுள்முன்பு சென்று வணங்கிச் சொல்கின்ருர். ''எம்பெருமானே அடியேனிடத்து எழுந்தருளிவந்து நீர் இங்கு அமுது செய்திட வேண்டும் என்று நான் அதற்குரியவகை பரிவுடன் சமையல் செய்வித்தேன்; அதனல் தேவரீர் பசியுடன் இருந்தருளத் தாமதமாயிற்று என்ருலும் இப்படிச் செய்யெனச் சொல்லியவண்ணம் நான் சமைத்தேன். அடியேனது விருப்பம் நிறைவேறும்படி அமுதுசெய எழுந்தருளி வரவேண்டும்'' என்று அங்கு வயிரவர்க்கு எடுத்து மொழிந்தார். 68

இறையுந் தாழா தெழுந்தருளி அமுது செய்யும் என்றிறைஞ்சக்
கறையும் கண்டத் தினில்மறைத்துக கண்ணும் நுதலிற் காட்டாதார்
நிறையும் பெருமைச் சிறுத்தொண்டீர்! போதும் என்ன நிதிஇரண்டும்
குறைவன் ஒருவன் பெற்(று) உவந்தாற் போலக் கொண்டு மனே புகுந்தார்.

''எம்பிரானே! இனி இறைப்பொழுதும் தாமதமின்றி எழுந்தருளி அமுதுசெய்திடும்'' என்று சிறுத்தொண்டர் வணங்கலும், அதுவேளே நஞ்சின் கறையும் கழுத்தில் மறைத்து கண்ணும் நெற்றியில் காட்டாதுவந்த வயிரவக் கோலமுடைய சிவபெருமான் சிறுத்தொண்டரை நோக்கி நிறையும் பெருமை உடைய சிறுத்தொண்டரே சரி உம் மனேக்குச் செல்வோம் என்ன அதுகேட்டு சங்கநிதி பதுமநிதி இரண்டும் ஒருங்கே வறியவன் ஒருவன் பெற்று மகிழ்ந்தாற்போல சுவாமியை அழைத்துக்கொண்டு தம்மனே சேர்ந்தார் சிறுத்தொண்டர். 69

வந்து புகுந்து திருமனேயில் மனேவி யார்தாம் மாதவரை
முந்த எதிர்சென்றடி வணங்கி முழுதும் அழகு செய்தமனேச்
சந்த மலர்மா லேகள்முத்தின் தாமம் நாற்றித் தவிசடுத்த
கந்த மலர் ஆசனங்காட்டிக் கமழ்நீர்க் கரகம் எடுத்தேந்த.

சிறுத்தொண்டர் சுவாமியுடன் மனேயில்வந்து புகுந்திட அவரது மனேவியார் முன்னுக தாம் எதிர்சென்று திருப்பாதம் வணங்கி முழுவதும் அழகுசெய்த தமது அம்மனேயில் நல்ல வாசனே உடைய பூமாலேகள் முத்தின்மாலேகள் தூக்கி அதனிடத்து இருந்த சிம்மாசனத்தை ஒத்த மலராசனம் ஒன்றின்மீது இருந்திடக் காணபித்து இருத்தி அம்மையார் தமகரத்து வாசனேநீர் நிறைந்த பாத்திரத்தை எடுத்து; ஏந்திட 70

தூய நீரால் சிறுத்தொண்டர் சோதி யார்தங் கழல்விளக்கி
ஆய புனிதப் புனல்தங்கள் தலேயேல் ஆரத் தெளித்தின்பம்
மேய இல்லம் எம்பருங்கும் வீசி விரைமென் மலர்சாந்தம்
ஏயுந் தூப தீபங்கள் முதற்பூ சனேசெய் திறைஞ்சுவார்.

சிறுத்தொண்டர் சுவாமி திருமுன்பு இருந்து சோதியாய்த் தோன்றும் உருவாய பெருமானின் திருவடிகளை மனைவியார் பாத்திரத்து நீர்வார்ப்ப விளக்கி விளக்கிய தூய பாதநீர்த்தத்தை தங்கள் தலைமேலாகத் தெளித்து பின்பு இன்பம் பொருந்திய தமது இல்லம் எங்கும் அப்புனித தீர்த்தத்தை வீசி எம்பிரானது திருப்பாதங் கட்கு வாசனையுடைய மிருதுவாய மலர் சந்தனம் அப்பி சிறந்துற்ற தூபம்காட்டி தீபம்காட்டி இவைமுதல் வகையானபாத பூசனைபுரிந்தார். 71

பணிவெண் டிங்கள் சடைவிரித்த பயில்பூங் குஞ்சிப் பயிரவராம்
புனிதர் தம்மைப் போனகமும் கறியும் படைக்கும் படிபொற்பின்
வனிதை யாருங் கணவரும்முன் வணங்கிக் கேட்ப மற்றவர்தாம்
இனிய அன்ன முடன்கறிகள் எல்லாம் ஒக்கப் படைக்க என.

பாத பூசனைபுரிந்த பிற்பாடு குளிர்ந்த வெண்பிறை யணியும் திருச்சடையை; அழகிய தலைமயிராக விரித்து விளங்கிடக் கொண்ட வயிரவ வேடமுடைய எம் பெருமானை; அவர் திருவமுது செய்திட அமுதும் கறியும் படைந்திடும் படி எவ் வாறு என பொற்புடைய திருவெங்காட்டம்மையும் கணவர் சிறுத்தொண்டரும் உடனுக வணங்கிக் கேட்டருள வயிரவரும் அவர்க்கு இனிய அன்னமுடன் கறி களெல்லாம் ஒருமித்தே படைத்திடுக என்னலும். 72

பரிசு விளங்கப் பரிகலமும் திருத்திப் பாவா டையில் ஏற்றித்
தெரியும் வண்ணஞ் செஞ்சாலிச் செழும்போ னகமும் கறியமுதும்
வரிசை யினில்முன் படைத்தெடுத்து மன்னும் பரிகலக்கான் மேல்
விரிவெண் துகிலின் மிசைவைக்க விமலர் பார்த்தங் கருள்செய்வார்.

அந்த முறையினை கேட்டறிந்தவுடன் நற்பண்பு விளங்கும்படி அமுதுசெயும் பாத்திரத்தை தூய்மையாக விளக்கி அதனை விரித்த சீலையின் மேல்வைத்து அமுது வகைகள் தெரியும்படி செஞ்சாலி நெல் அமுதும் கறியமுதும் வரிசையுடன் முன் னுகப் படைத்து எடுத்து அந்தப்பாத்திரத்தை விளங்கும் முக்காலி மேலாகவிரித்த வெள்ளை சீலையின் மேல்வைத்திடலும் எம்பிரான் அதனைப்பார்த்து அவர்க்கு சொல்லி யருள்வார். 73

சொன்ன முறையிற் படுத்தபசுத் தொடர்ந்த உறுப் பெல்லாங்கொண்டு
மன்னு சுவையிற் கறியாக்கி மாண அமைத்தீரே? என்ன
அன்னம் அனையார் தலையிறைச்சி அமுதுக்காகா தெனக்கழித்தோம்
என்ன இதுவுங்கூட நாம் உண்ப தென்றூர் இடர்தீர்ப்பார்.

நான் சொன்னவகையான முறையில் வெட்டிய நரபசுவினது தொடர்ந்த உறுப்புக்கள் எல்லாம் விளங்கும் நற்சுவையின் கறியாக்கி மாண்புடன் இங்கு நீர் வைத்தீரல்லவோ எனக்கேட்க அதுகேட்ட அன்னப்பறைவை ஒத்த திருவெண் காட்டு அம்மை சொல்வார் அப்பிள்ளையின் தலைஇறைச்சி திருவமுது செய்தற்கு ஆகாது எனக்கழித்தோம் என்றலும்; அது கேட்டு அந்த தலைஇறைச்சியும் சேர்த்துத் தான் நாம் உண்பது என்றூர் தன்னை அடைந்தார் வினையினைத் தீர்க்கவல்ல கடவுள் வயிரவர். 74

சிந்தை கலங்கிச் சிறுத்தொண்டர் மனையா ரோடுந் திகைத் தயரச்
சந்த னத்தார் எனுந்தாதி யார்தாம் அந்தத்தலை யிறைச்சி
வந்த தொண்டர் அமுதுசெயும் பொழுது நினைக்க வரும்என்றே
முந்த அமைத்தேன் கறிஅமு(து) என் றெடுத்துக்கொடுக்க முகமலர்ந்தார்.

சுவாமி அதுசொல்லக் கேட்டவுடன் சிறுத்தொண்டர் சிந்தை கலங்கி அப்போது அது கூடாதென்று நீக்கச் சொன்னோம இப்பொழுது தலைஇறைச்சியும் சேர்த்து உண்பது என்றூரே என் செய்வோம் என்று திகைத்துச் சோர; அயல் நின்ற பணிப் பெண் சந்தனத்தார் தாமும் இவர்களை நோக்கி அந்தத் தலைஇறைச்சி வந்ததொண் டர் அமுதுசெய்யும் பொழுது நினைக்கவரும் என்று முன் நான் அதனையும் சமைத் தேன் தலைகறிக்கறியமுது என்று அதனை எடுத்துக் கொடுக்க சிறுத்தொண்டர் முக மலர்ந்தார். 75

வாங்கி மகிழ்ந்து படைத்ததற்பின் வணங்குஞ் சிறுத்தொண்டரை நோக்கி
ஈங்கு நமக்குத் தனியுண்ண ஒண்ணுதீசன் அடியார்இப்
பாங்கு நின்றூர் தமைக்கொணர்வீர் என்று பரமர் பணித்தருள
ஏங்கிக் கெட்டேன் அமுது செய்ய இடையூ றிதுவோ? எனநினைவார்.

அதனை வாங்கி மகிழ்ந்து படைத்த பிற்பாடு வணங்கிய சிறுத்தொண்டரை நோக்கி ஈங்கு நமக்கு தனியே இருந்து சாப்பிடமுடியாது. ஈசன் அடியார்கள் இப் பக்கலில் நின்றூர் தங்களை இங்கு அழைத்துக் கொண்டு வாரும் என சுவாமி பணித் தருளிட அதனைக் கேட்டலும் ஏங்கி கெட்டேன் நான் இப்பொழுது அமுதுசெய்ய இடையூறு இதுவோ என நினைவார் சிறுத்தொண்டர். 76

அகத்தின் புறத்துப் போய்அருளால் எங்குங் காணூர் அழிந் நினைந்து
முகத்தில் வாட்டம் மிகப்பெருகப் பணிந்து முதல்வர்க் குரைசெய்வார்
இகத்தும் பரத்தும் இனியாரைக் காணேண்; யானுந் திரு நீறு
சகத்தில் இடுவார் தமைக்கண்டே இடுவேன் என்று தாழ்ந்திறைஞ்ச.

சுவாமி சொற்படி மனையினுள்ளும் வெளியேயும் சிறுத்தொண்டர் அடியார் களைத் தேடிப்போன பொழுது அருளினால் அடியார்களைக்காணாது இனி என் செய லாகும் என்மனம் அழிந்து மீண்டு சுவாமிபாலாக வந்து முகத்தில் வாட்டம் மிகப் பெருகப் பணிந்து முதல்வர்க்கு உரைசெய்கின்றூர். ஐயனே இவ்வுலகிற்கும் அவ்வுல கிற்கும் இனியவராம் சிவனடியாரைக் காணேன். யானும் திருநீறு இப்பூமியில் அணி வார்தமைக் கண்டு அணிவேன் என்று தாமும் ஓர்அடியவராம் தன்மையை எடுத்து மொழிந்து தான் கூட இருந்து உண்ணலாம் என்று கருத்து வெளிப்பட மொழிந்து எம்பிரானைத் தாழ்ந்து வணங்கலும். 77

உம்மைப் போல நீறிட்டார் உளரோ? உண்பீர் நீர் என்று
செம்மைக் கற்பில் திருவெண்காட்டம்மை தம்மைக் கலந்திருத்தி
வெம்மை இறைச்சி சோறி தனில் மீட்டுப் படையும் எனப்படைத்தார்
தம்மை ஊட்ட வேண்டி அவர் உண்ணப் புகலுந் தடுத்தருளி.

ஓகோ உண்மை போல் நீறிட்ட அடியார் இவ்வுலகில் உளரோ! நீர் கூடஉண் பீர் என்று செம்மைக் கற்பிற் திருவெண்காட்டம்மையைநோக்கி "பாத்திரம் திருத்தி நமக்கு சமைத்து படைத்திடக் கொண்ட புதல்வனன் கறியமுதான இறைச்சி சோறு அவற்றில் மீட்டும் இவர்க்கும் படையும்" என அருளலும் அவ்வணமே சிறுத்தொண்டர்க்கும் அம்மை படைத்தாள். படைத்தலும் சுவாமியை இனிதாமதம் செய்யாது உண்பிக்க வேண்டி கூடஇருந்த தாம் முதல் அதனை உண்ணப்போதலும் அப்படிச் செய்திடாது தடுத்தருளினர் எம் பெருமான். 78

ஆறு திங்கள் கழித்துண்போம் உண்ணும் அளவுந் தரியாது
சோறு நாளும் உண்பீர்முன் உண்ப தென்? நம் முடன் துய்ப்ப
மாறின் மகவு பெற்றீரேல் மைந்தன் தன்னை அழையும் என
ஈறும் முதலும் இல்லாதார்க்(கு) இப்போ துதவான் அவன் என்றூர்.

தடுத்தருளி சிறுத்தொண்டரை நோக்கி இதென்ன இது "ஆறுமாசம் கழித்தே நாம் உண்பவன். அவ்வணம் பொறுமையுடைய நான் உண்ணுமுன்பாக சோறு நாளும் உண்கின்ற நீர் முன்னுக உண்பது எக்காரணம்? ஆதலால் கூட இருந்து உண்டிட நீர்தகாது நம்முடன் இருந்து உண்ண மாறில்லாத நல்ல குழந்தை பெற் றிரேல் அம்மைந்தன் தன்னை அழையும் என்ன அதுகேட்டு சிறுத்தொண்டர்" எம் பிரானே! முடிவும் முதலும் இலாத அடியவராம உமக்கு உடன் இருந்து உண்ண இப் போது அப்பிள்ளை உதவான் என்றூர். 79

நாமிங் குண்ப தவன்வந்தால் நாடி அழையும் என நம்பர்
தாமங் கருளிச் செயத்தரியார் தலைவர் அமுது செய்தருள
யாமிங் கென்செய் தாலாகும்? என்பார் விரைவுற் றெழுந்தருளால்
பூமென் குழலார் தம்மோடும் புறம் போய் அழைக்கப் புகும்பொழுது.

"எதுவாயினும் நாம் இங்கு உண்பது அவன் வந்தால்" ஆதலின் எங்கே அவன் என்று தேடி அழையும் என எம்பிரான் தாமும் அங்கு அருளிச் செய்திட; சிறுத் தொண்டர் அதுகேட்டுத் தரியாராகி எழுந்து மனையியாருடன் எம்பெருமான் திரு

வமுது செய்திட இனியாம் இங்கு என்செய்தால் ஆகும் என்பார் விரைவுற்று அருளால் எழுந்தருளிச் சென்று பூச்சூடிய மென்மையான கூந்தலுடைய அம்மை யாருடன் வெளியே சென்று திருமகளரை அழைத்திடப் போகும் பொழுது; 80

வையம் நிகழுஞ் சிறுத்தொண்டர் மைந்தா! வருவாய் என அழைத்தார்
தைய லாரும் தலைவர் பணிதலை நிற்பாராய்த் தாம் அழைப்பார்
செய்யமணியே! சீராளா! வாராய் சிவனார் அடியார்யாம்
உய்யும் வகையால் உடனுண்ண அழைக்கின்றார் என்றேலமிட

இப்பூமியில் என்றும் நிகழும் சிறுத்தொண்டர் என்மைந்தா வருவாயாக என அழைத்தார். அதுவேளை திருவெண்காட்டு அம்மையாரும் எம்பெருமானது பணியில் நிற்பாரராகி தாமும் அழைக்கின்றார் ''செவ்விய என்கண்மணியே சீராளா வருவாய்! சிவனார் அடியார் யாம் உய்யும் வகையால் உடன் உண்ண உன்னையே அழைக்கின்றார்', என்று ஓலம் இட்டு அழைத்திட. 81

பரமர் அருளால் பள்ளியினின் றோடி வருவான் போல் வந்த
தரமில் வனப்பின் தனிப்புதல்வன் தன்னை எடுத்துத் தழுவித்தங்
கரமுன் அணைத்துக் கணவனார் கையிற் கொடுப்பக் களிகூர்ந்தார்
புரமூன்றெரித்தார்தி ருத்தொண்டர்உண்ணப்பெற்றோம்எனும்பொலிவால்

அவர்கள் மெய்மறந்து அழைத்தலும் எம் பெருமானது அருளால் பள்ளியில் நின்று ஓடி வருவான் போல் வந்த; இவ் வகையென எடுத்துச் சொல்லொணாத அழகு உடைய தனிப்புதல்வனை அம்மை தூக்கி எடுத்துத் தழுவி தமது கரத்துடன் முன்னை அணைத்து தம் கணவனாரது கையில் கொடுத்திட அது கண்டு மகிழ்ச்சி கொண்டார்; இனி முப்புரம் எரித்தார் சிவனது திருத்தொண்டர் திருவமுது உண்ணப் பெற்றோம் எனும் மலாச்சியின் பொலிவால். 82

வந்த மகனைக் கடிதிற்கொண் டமுது செய்விப் பான் வந்தார்
முந்த வேஅப் பயிரவராம் முதல்வர் அங்கண் மறைந்தருளச்
சிந்தை கலங்கிக் காணாது திகைத்தார்; வீழ்ந்தார்; தெருமந்தார்
வெந்த இறைச்சிக் கறியமுதும் கலத்திற் காணார் வெருவுற்றார்.

வந்த மகனை விரைவாகக் கொண்டு சுவாமியுடன் அமுது செய்விக்கும் படி திருமனையில் வந்தவர் அவர் வருமுன்பே அந்தப் பயிரவக்கோலமுடன் வந்தருளிய சிவமூர்த்தி அங்கண் மறைந்தருள தம் சிந்தை கலங்கி அவரைக் காணாது; திகைத்தார்; வீழ்ந்தார்; மனம் சுழன்று மயங்கினார் வெந்த பிள்ளைக் கறியமுது பாத்திரத்தில் காணாராகி இதென்னை! என்றுமிகு அச்சமுற்றார். 83

செய்ய மேனிக் கருங்குஞ்சிக் செழுங்கஞ் சுகத்துப் பயிரவர்யாம்
உய்யஅமுது செய்யாதே ஒளித்ததெங்கே? எனத்தேடி
மையல் கொண்டு புறத்தணைய மறைந்த அவர் தாம் மலைபயந்த
தைய லோடுஞ் சரணத்துத் தனய ரோடுந் தாம் அணைவார்.

சிவந்த மேனியும் கறுத்த சடையும் சிறந்த சட்டையும் அணிந்த அவ்வயிரவர் யாம் உய்ய அமுது செய்யாது எங்கே சென்று ஒளித்தது! என்று மனை எங்கும் தேடிக் காணாது மையல் கொண்டு வெளியே வந்திட; மறைந்த எம்பெருமான் அவர் தாமும் சிறுத்தொண்டர் முன்பாக இமையம் தந்த பிராட்டி உமையம்மை யுடன் சரவணப் பொய்கையிடத்து உதித்தருளி குழந்தை முருகனோடும் அவர் தம் மைக்கண்ணால் காணும்படி முன்னை வருவார். 84

தனிவெள் விடைமேல் நெடுவிசும்பில் தலைவர் பூத கணநாதர்
முனிவர் அமரர் விஞ்சையர்கள் முதலா யுள்ளோர் போற்றிசைப்ப
இனிய கறியும் திருவமுது அமைத்தார் காண எழுந்தருளிப்
பனிவெண் மதிங்கள் முடிதுளங்கப் பரந்த கருணை நோக்களித்தார்.

தன்னம் தனியான வெள்ளை இடபவாகன மேலாக; நெடிய வானத்தில் எம் பிரான் பூதகணங்களும் அவர் தலைவரும் முனிவரும் தேவரும் விஞ்சையர்கள் முதலாயினோர்கள் போற்றிப் புகழ்ந்திட தமக்கு இனிய பிள்ளைக் கறியும் திருவமுதும்

சமைத்துப் படைத்த சிறுத்தொண்டர் நேராகக் கண்டு கொள்ள: அவ்வகை எழுந்தருளி வந்து குளிர்ந்த வெண்பிறை சூடிய திருமுடி பிரகாசமுற சிறுத்தொண்டர்க்குப் பரந்த கருணைத் திருநோக்கினைக் கொடுத்தருளினார்சிவபெருமான். 85

அன்பின் வென்ற தொண்டரவர்க்(கு) அமைந்த மனைவியார்மைந்தர்
முன்பு தோன்றும் பெருவாழ்வை முழுதுங் கண்டு பரவசமாய்
என்பும் மனமும் கரைந்துருக விழுந்தார் எழுந்தார் ஏத்தினார்
பின்பு பரமர் தகுதியினும் பெரியோ ரவருக் கருள்புரிவார்,

எம்பிரான் பாலாகக் கொண்ட அன்பினால் உலகை வென்று அருள் ஒளியுள் சிறந்திடும் பேறுற்ற சிறுத்தொண்டர், அவர்க்கு என வாய்த்த மனைவியார் இரு வெண் காட்டு நங்கை திருமைந்தராம் இவர்கள் யாவரும் தம்முன்பு தோன்றும் பெருவாழ்வாம் புண்ணியனை எம் அம்மையை அவர் புதல்வராம் எம் கணமணி முருகனை முழுவதும் ஊனக் கண்ணால் கண்டு பரவசமாகி அன்பும் மனமும் கரைந்துருக நிலமிசை வணங்கி உடன் விழுந்தார்: எழுந்தார் தோத்திரம் செய்தார் பின்பாக எம்பெருமானும் தமக்கு உற்ற பணி செய்த தகுதியினால் பெரியவராம் சிறுத்தொண்டர்க்கு அருள்செய்கின்றார். 86

கொன்றை வேணி யார்தாமும் பாகங் கொண்ட குலக்கொடியும்
வென்றி நெடுவேல் மைந்தரும்தம் விரைப்பூங் கமலச் சேவடிக்கீழ்
நின்ற தொண்டர் மனைவியார் நீடுமகனார் தாதியார்
என்றும் பிரியா தேயிறைஞ்சி இருக்க உடன்கொண் டேகினார்.

கொன்றை மாலைச் சடையுடைய பெருமானும் தமது பாகத்துக் கொண்ட அருள் முதல்வியாகும் இமயம் தந்த பூங்கோடி போலும் உமையம்மையும் வெற்றி வீரத்திடும் ஞானஒளியாம் நெடுவேல் ஏந்திய குமரனும் தமது வாசனை நிலவிய தாமரை மலர் போன்ற திருவடிக்கீழாக நின்ற சிறுத்தொண்டர் மனைவி திருவெண்காட்டம்மை நீடித்த சிறப்புடைய சீராள தேவர் என்னும் திருமகனார் சந்தனத்தார் என்னும் தாதியார் இவர்யாரும் தம்மை என்றும் பிரியாது இறைஞ்சி இன்புற்று இருந்திட பேரருள் புரிந்து அவர்களை அந்நிலையில் அழைத்துக்கொண்டு எம்பிரான் சென்றருளினார். சிவம் சிவம் சிவம். 87

ஆறு முடிமேல் அணிந்தவருக்கு அடியார் என்று கறியமுதா
ஊறி லாத தனிப்புதல்வன் தன்னை அரிந்தங் கமுதூட்டப்
பேறு பெற்றார் சேவடிகள் தலைமேற்கொண்டு பிறஉயிர்கள்
வேறு கழறிற் றறிவார்தம் பெருமை தொழுது விளம்புவாம்.

கங்கையாற்றைத் திருமுடிமேல் அணிந்த கடவுள் சிவபிரானுக்கு அடியவர் இவர் என்று துணிந்து அவர்க்கு கறிய முதாக அமைந்திட; ஊறு ஏதும் இலாத அழகுடைய தனிப்புதல்வன் தன்னை அரிந்து அங்கு அமுதூட்டப் பேறுபெற்ற எம்பெருமான் சிறுத்தொண்டரது சேவடிகள் என் தலைமேல் கொண்டு வாழ்த்தி வணங்கி; அதன் அருளாலே இப்பால் பிற உயிர்கள் வேறுக மொழிவன வற்றை அறிகின்ற திருவருள் பேறுடைய கழறிற்று அறிவார் சேரமான் பெருமான் நாயனாரது பெருமையினை தொழுதுகொண்டு சொல்லுவோம். 88

சிறுத்தொண்ட நாயனார் புராணம் முற்றும்

கழறிற்றறிவார்நாயனார் புராணம்

மாவீற் றிருந்த பெருஞ்சிறப்பின் மன்னுந் தொன்மை மலைநாட்டுப்
பாவிற் றிருந்த பல்புகழார் பயிலும் இயல்பிற் பழம்பதிதான்
சேவீற் றிருத்தார் திருவஞ்சைக் களமும் நிலவிச் சேரர்குலக்
கோவீற் றிருந்து முறைபுரியும் குலக்கோ மூதூர் கொடுங்கோளூர்.

சகல ஐசுவரியங்களும் தருகின்ற திருமகள் வீற்றிருக்கும் பெரிய சிறப்பினுள் விளங்கும் தொன்மையான மலை நாட்டில் பழம் தமிழ் பாடல்களில் பெரும் சிறப்புக் கொண்டு சிறந்திருந்த புகழ் உடையார்கள் பயில்கின்ற இயல்பில் விளங்கிடும் பழைய நகரம் ஒன்று; அது தான் இடபமேல் வீற்றிருந்த பெருமானரின் திருவஞ்சைக் களம் என்னும் தலமும் பொருந்திடப் பெற்று; அங்கு சேர அரசர்களது குல வேந்தர் வீற்றிருந்து செங்கோல் முறை அரசாளும் சிறந்துற்ற மேலான முதிய ஊர் கொடுங்கோளூர் எனப்படுவது. 1

மாலை எழும்பல் கலியினெலி களிற்றுக் கன்று வடிக்குமொலி
சோலை எழுமென் சுரும்பினெலி துரகச் செருக்காற் சுலவுமொலி
பாலை விபஞ்சி பயிலுமொலி பாட லாடல் முழவினெலி
வேலை யொலியை விழுங்கிஎழ விளங்கி யோங்கும் வியப்பினதால்.

அந்தத் தலை நகரம் கொடுங் கோளூரில் காலில் எழுகின்ற பல கலைகளின் ஒதுதல் ஓசையும்; யானைக்கன்றுகள் ஒலமிடும் பிளிற்றோசையும் சோலைகளில் எழுகின்ற வண்டின் ஓசையும்: குதிரைகள் செருக்கினுலே கனைத்துச் சுழலுகின்ற ஒசையும், பாலை விபஞ்சி இவ்வகையான யாழ் பயிலும் ஓசையும், பாடலும் ஆடலும் நிகழும் அரங்குகளில் முழக்கிடும் முரசமேளத்தின் ஓசையும் இவையாவும் கடல் ஓசையை உண்டு அடக்கி எழ விளங்கி ஓங்கும் அற்புதமாய சிறப்புகள் நிலவுவன. 2

மிக்க செல்வம் மனைகள்தொறும் விளையும் இன்பம் விளங்குவன
பக்க நெருங்கு சாலைதொறும் பயில்சட் டறங்கள் மல்குவன
தக்க அணிகொள் மடங்கள் தொறும் சைவ மேன்மை சாற்றுவன
தொக்க வளங்கொள் இடங்கள் தொறும் அடங்க நிதியம் துவன்றுவன.

அங்கு மிக்க செல்வ மனைகள் தோறும் பெருகும் இன்பம் விளங்குவன: பக்கத்தில் நெருங்கிய சாலைகள் தோறும் செய்யப்பெறும் பலவகை தருமச் செயல்கள் பெருகுவன. தக்க அன்பர்கள் தங்கிய மடங்கள் தோறும் சைவத்தின் உண்மை நிலையை எடுத்துச் சொல்வனவாயின. தொகுதியான பல வளங்களும் கொள்ளும் இடங்கள் தோறும் அடங்கவும் நிரம்பி வழிவன செல்வப் பொருள்கள். 3

வேத நெறியின் முறைபிறழா மிக்க ஓழுக்கம் தலைநின்ற
சாதி நான்கு நிலைதழைக்கும் தன்மைத் தாகித் தடமதில்சூழ்
சூத வகுள சரளநிரை துறையுஞ் சோலை வளர்நகர்தான்
கோதை அரசர் மகோதைஎனக் குலவு பெயரும் உடைத்துலகில்.

வேத நெறியின் முறைவழுவாத மிக்க நல் ஒழுக்கம் தலைநின்ற அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் எனப்படும் நான்கு சாதியும் நன் நிலை தழைத்திடும் தன்மை உடையனவேயாகி; பெருமதில் சூழ வரிசையாக மாவும் மகிழும் நீண்ட இலையுடைய தேவதாருவகையுள் ஒன்றுன சரளம் இவற்றின் நிரைகள் நெருங்கிய சோலை உடைய அந்தக் கொடுங்கோளூர் நகரம் தான் உலகத்தில் கோதை அரசர் எனச் சிறப்பிக்கப்பட்ட சேர அரசரது தலைநகரம் மகோதை என விளங்கிய பெயரும் ஒன்று உடையது இந்த உலகிலே. 4

முருகு விரியும் மலர்ச்சோலை மூதூ ரதன்கண் முறைமரபின்
அருகி அழியுங் கலிநீக்கி அறங்கொள் சைவத் திறந்தழைப்பத்
திருகு சினவெங் களியானைச் சேரர் குலமும் உலகுஞ்செய்
பெருகு தவத்தால் அரனருளால் பிறந்தார் பெருமாக் கோதையார்.

வாசனை விரியும் மலர்ச்சோலையுடைய முதிய ஊர் அதனிடத்து முறையான நன்மரபின் ஒழுக்கத்தால்; நன்மைகளைக் குறைத்து அழிவு செய்திடும் கலியின் கொடுமையை நீக்கி; தருமத்தை நிலைபெறக் கொள்கின்ற சைவத்தின் உண்மைத் தன்மை தழைத்திட; முறுக்கி எழும் சினமுடைய மதத்தால் களிகொள்ளும் யானைப் படையுடைய சேர அரசரது குலமும் உலகமுஞ் செய்த பெருகிய தவத்தால் சிவன் அருளால் பிறந்தார் பெருமாக்கோதையார் என்னும் அரச குழந்தை ஒருவர். 5

திருமா நகரம் திருஅவதா ரஞ்செய் விழவின் சிறப்பினுல்
வருமா களிகூர் நெய்யாடல் எடுப்ப வான மலர்மாரி
தருமா விசும்பின் மிகநெருங்கத் தழங்கும் ஒலிமங் கலந்தழைப்பப்
பெருமா நிலத்தில் எவ்வுயிரும் பெருகு மகிழ்ச்சி பிறங்கினவால்.

திருவுடைய பெருநகரம் கொடுங்கோளூர் சேர அரசர் திருஅவதாரம் செய்திட எடுக்கும் விழாவின் சிறப்பினுல் வருகின்ற பெரும் களிப்புக் கொள்ளும் நெய்யாடல் விழாவினை கொண்டாட; வானத்து மலர் மழையானது அதனைத் தருகின்ற அவ்வாலத்தில் மிக நெருங்கிட; விளங்கும் மங்கல ஓசை தழைத்திட: இத்தகவால் பெருமாக்கோதையாரின் பிறப்பால் பெரிய இப்பூமியில் எவ்வுயிரும் பெருகிய மகிழ்ச்சியைக் கொண்டுற்றன. 6

மண்மேற் சைவ நெறிவாழ வளர்ந்து முன்னை வழி அன்பாற்
கண்மேல் விளங்கு நெற்றியினர் கழலே பேணுங் கருத்தினராய்
உண்மே வியஅன் பினராகி உரிமை அரசர் தொழில் புரியார்
தெண்ணீர் முடியார் திருவஞ்சைக் களத்தில் திருத்தொண் டேபுரிவார்.

இப்பூமிமேல் சைவமயத்தின் உண்மை நெறிவாழ பெருமாக்கோதையார் என்னும் அரச குழந்தை வளர்ந்து முன்னைய பிறப்பில் தொடங்கி எம்பிராற்கு உற்ற வழிஅன்பினுல் கண்மேலாக விளங்கும் நெற்றியுடைய சிவபெருமானது திருவடிகளே பேணுகின்ற கருத்தை உடையராய்; அதனுல் அவர் உள்ளத்து எம் பிரான் சிவன்பால் பொருந்திய அன்பினராகி தமக்கு உரிமையாம் அரசரது படைக்கலப் பயிற்சி முதலியன செய்திடாது அதன் பதிலாக; தெளிந்த கங்கை முடியுடைய பெருமானின் திருவஞ்சைக்களம் என்னும் கோயிலினிடத்து தமக்கியன்ற திருத்தொண்டே செய்வார். 7

உலகின் இயல்பும் அரசியல்பும் உறுதியல்ல என உணர்வார்
புலரி எழுந்து புனல்முழ்கிப் புனித வெண்ணீற் றினும்முழ்கி
நிலவு திருநந் தனவனத்து நீடும் பணிகள் பலசெய்து
மலரும் முகையும் கொணர்ந்துதிரு மாலை சாத்த மகிழ்ந்தமைத்து.

உலகில் இன்புற்று வாழும் அந்த இயல்பும் அரசபதவியில் வரும் சிறப்பும் தமக்கு உறுதியல்ல என உணரும் பெருமாக்கோதையார் எனும் அவர் வைகறைக் காலத்து எழுந்து நீரில் முழ்கி பின்னர் புனிதமாகும் திருவெண்ணீற்றையும் நிறைய மேனிஎலாம் பூசி திருவஞ்சைக் களத்து கோவிலில் விளங்கிய நந்தவனத்து நீள விருக்கின்ற பல பணிகள் செய்து பூவும் முகையும் கொணர்ந்து திரு மாலையாக்கிச் சாத்த அம்மலர்களை பல வேறு மாலையாக அமைத்து. 8

திருமஞ் சனமும் கொணர்ந்துதிரு வலகும் இட்டுத் திருமெழுக்கும்
வரும்அன் புடன்இன் புறச்சாத்தி மற்றும் உள்ள திருப்பணிகள்
பெருமை பிறங்கச் செய்தமைத்துப் பேணும் விருப்பில் திருப்பாட்டும்
ஒருமை நெறியின் உணர்வுவர ஓதிப் பணிந்தே ஒழுகுநாள்.

திருமஞ்சன நீரும் கொணர்ந்து திருவலகால் தூய்மையும் செய்து திருமெழுக்கும் உள்ளத்து வருகின்ற அன்புடன் இன்பமுறப் புரிந்து: மற்றும் எம்பிராற்கு அங்குள்ள திருப்பணிகள் பெருமை விளங்கிடச் செய்தமைத்து எம்பிராணைப் பேணுகின்ற விருப்பினுல் திருப்பாட்டும் ஒருமையாய நல்நெறியின் உணர்வுவர ஓதிப் பணிந்து இவ்வகை பெருமாக்கோதையார் தொண்டு செய்து ஒழுகும் காலத்து. 9

நீரின் மலிந்த கடலகழி நெடுமால் வரையின் கொடி மதில்சூழ்
சீரின் மலிந்த திருநகர மதனிற் செங்கோற் பொறையனெனும்
காரின் மலிந்த கொடைநிழல்மேற் கவிக்குங் கொற்றக் குடைநிழற்கீழ்த்
தாரின் மலிந்த புயத் தரசன் தரணி நீத்துத் தவஞ்சார்ந்தான்.

நீரினுல் சிறந்துற்ற கடல் போன்ற அகழியும் நெடிய பெருமலை போன்ற கொடி நாட்டிய மதிலும் சிறந்துற்ற சீரினுல் பெருக விளங்கியுற்ற அந்த கொடுங் கோளூர் என்னும் தலைநகரில் இருந்து அரசாண்ட செங்கோல் பொறையன் எனும் மேகம் போல் பொழியும் கொடைத்திறன் என்னும் அதன் நிழலிலும்: உயிர்கட்கு நன்மை தர விளங்கும் வெண் கொற்றக் குடை நீழலிலும் இருந்து அரசாண்ட மாலைகள் சிறந்திட அணியப் பெற்ற தோளுடைய அந்த அரசன் உலக அரசாட்சியினை நீக்கித் தவத்தினை மேற்கொண்டான். 10

வந்தமரபின் அரசளிப்பான் வனஞ்சார் தவத்தின் மருவியபின்
சிந்தை மதிநூல் தேரமைச்சர் சிலநாள் ஆய்ந்து தெளிந்தநெறி
முந்தை மரபில் முதல்வர் திருத்தொண்டு முயல்வார் முதற்றாக
இந்து முடியார் திருவஞ்சைக் களத்தில் அவர்பால் எய்தினார்.

அரசுரிமைக்கு வந்த மரபின் உள்ள செங்கோற் பொறையன் எனும் அரசன் காட்டினை அடைந்து தவத்தைச் சேர்ந்து கொண்ட பிற்பாடு அவனிலாமையால் அரசுரிமைக்கு ஒரு வரைப்பெற; சிந்தையில் நல்மதிதரும் நூலெத்தேர்ந்த மந்திரிகள் சிலநாளாக ஆராய்ந்து தெளிந்தமுறையால் அவனது முந்திய மரபின் முதல்வராகி; திருத்தொண்டுபுரியும் பெருமாக்கோதையார் என்பவரே உரித்துடையவராக; அதன் படி அவரையே அரசாட்சிப் பொறுப்பை ஏற்றம்படி அவர் இருந்த இளம்பிறை சூடிய பெருமானது திருவஞ்சை களத்தில் அவரிடம் சென்றார்கள். 11

எய்தி அவர்தம் எதிரிறைஞ்சி இருந்தண் சாரல் மலை நாட்டுச்
செய்தி முறைமை யால்உரிமைச் செங்கோல் அரசு புரிவதற்கு
மைதீர் நெறியின் முடிசூடி அருளும் மரபால் வந்த தெனப்
பொய்தீர் வாய்மை மந்திரிகள் போற்றிப் புகன்ற பொழுதின்கண்.

திருவஞ்சைக் களத்து மந்திரிகள் சேர்ந்து பெருமாக்கோதையாரை அடைந்து அவர் எதிர் வணங்கி ''பெரும் குளிர்ச்சியுடைய சாரல் சோலைகள் நிறைந்த மலை நாட்டுச் செய்திமுறையால் மலைநாட்டின் உரிமையாய செங்கோல் அரசாட்சி புரிந்திடற்கு குற்றம் தீர்ந்த நல்நெறியில் முடிசூடி அரசாளும் மரபால் வேண்டிக்கொள்ள அவரிடம் வந்தது'' என்று பொய்மை தீர்ந்த வாய்மை உடைய மந்திரிகள் போற்றி சொன்ன நேரத்தில். 12

இன்பம் பெருகுந் திருத்தொண்டுக் கிடையூ றாக இவர்மொழிந்தார்
அன்புநிலைமை வழுவாமை அரசு புரக்க அருளுண்டேல்
என்பும் அரவும் புனைந்தாரை இடைபெற் றறிவேன் எனப்புக்கு
முன்பு தொழுது விண்ணப்பஞ் செய்தார் முதல்வர் அருளினால்.

அதுகேட்ட பெருமாக்கோதையார் இன்பம் பெருகும் திருத்தொண்டிற்கு இடையூறு வருவிக்கும்படியாக அரசாட்சிப் போறுப்பேற்கும்படி இவர் சொன்னார் அப்படியாக எம்பிரானது அருள்நிலை வழுவாமை யாம் அரசு புரிந்திடற்கு எம்பெருமான் அருள் உண்டாகில் எலும்பும் பாம்பும் அணிந்த பெருமானை நான் அடைந்து அவரது குறிப்பால் அதனை அறிவேன் என்று எம்பிரான் கோவில் புகுந்து திருமுன்பு தொழுது தம்கருத்தை விண்ணப்பம் செய்தார் பெருமாக்கோதையார்: அப்பொழுது இறைவர் அருளாலே. 13

மேவும் உரிமை அரசளித்தே விரும்பு காதல் வழி பாடும்
யாவும் யாரும் கீழறினவும் அறியும் உணர்வும் ஈறில்லாத்
தாவில் விறலும் தண்டாத கொடையும் படைவா கனமுதலாம்
காவல் மன்னர்க் குரியனவும் எல்லாங் கைவந் துறப்பெற்றார்.

தமக்கெனப் பொருந்திய அரசின் உரிமையால் அரசாண்டு இறைவனை விரும்பும் காதல் வழிபாடும்; மிருகம் முதல் உயிர்யாவும் யாரும் மொழிந்தனவற்றை அறிகின்ற உணர்வும் முடிவிலாத பெரும் குறைவற்ற வலிமையும் குறையாத கொடையும் படைகள் வாகனங்கள் முதலான உலகைக் காக்கும் அரசர்க்கு உரித்தான எல்லாப் பொருளும் தமக்கென பெற்றுக்கொள்ளும் அருளிப்பாட்டை இறைவனிடம் பெற்றார். 14

ஆன அருள்கொண் டஞ்சலிசெய் திறைஞ்சிப் புறம் போந் தரசளித்தல்
ஊனம் ஆகுந் திருத்தொண்டுக் கெனினும் உடையான் அருளாலே
மேன்மை மகுடந் தாங்கு தற்கு வேண்டும் அமைச்சர்க் குடன்படலும்
மான அமைச்சர் தாள்பணிந்தவ் வீனமேற் கொண்டு மகிழ்ந்து தெழுந்தார்.

எம்பெருமானது இத்தகைய அருளிப்பாட்டைப் பெற்றுக் கொண்டு பெருமானை அஞ்சலி செய்து வணங்கி வெளியேசென்று அரசாளல் திருத்தொண்டிற்கு ஊனமாகும் எனினும் தமது பெருமான் அருளாலே மேன்மையான திருமுடிதாங்குதற்குவேண்டிப் பணிந்த மந்திரிகட்கு உடன்பாடு கொள்ளலும் அதுகண்டு நீதியின் மானமுடைய மந்திரிகள் பெருமாக்கோதையார் திருவடி பணிந்து அந்த முடிசூடற்குற்ற செயலினை மேற்கொண்டு மிகு மகிழ்ச்சியுடன் செயல்புரிய எழுந்துகொண்டனர். 15

உரிமை நாளில் ஒரைநலன் எய்த மிக்க உபகரணம்
பெருமை சிறக்க வேண்டுவன எல்லாம் பிறங்க மங்கலஞ் செய்(து)
இருமை உலகுக் கொருமைமுடி கவித்தார்; எல்லா உயிரும்மகிழ்
தரும நிலைமை அறிந்துபுவி தாங்குங் கழறிற் றறிவார்தாம்.

முடிசூடற்கு உரிய அந்த நாளில் நல்முர்த்த வேளை நலம் சேரும்படி வந்தெய்திட அவ்வேளையில் முடிசூடற்கு பெருமை சிறக்க வேண்டிய மிக்க உபகரணப் பொருள்களியாவும் விளங்கிட அமைத்து மங்கலம் நிகழச் செய்து இந்த உலகு அந்த உலகு என்ற இருமையாய உலகிற்கும் ஒருமையாய முடியே சூடினார் எல்லா உயிரும் மகிழ்ந்து வாழும் தருமநிலை உணர்ந்து உலகைத்தாங்கி அரசாளும் கழறிற்றறிவார் எனும் சேரமான்பெருமாள். 16

தம்பி ரானார் கோயில்வலங் கொண்டு திருமுன் தாழ்ந்து தெழுந்து
கும்ப யானை மேல்கொண்டு கொற்றக் குடையுஞ் சாமரையும்
நம்பும் உரிமை யவர்தாங்க நலங்கொள் நகர்சூழ் வலங்கொள்வார்
மொய்ம்பில் உவரின் பொதிசுமந் தோர் வண்ணான் முன்னே வரக்கண்டார்.

கழறிற்றறிவார் முடிசூடியபின்பு தம்பெருமான் கோவில்சென்று தாம் அந்தக் கோயிலினை வலங்கொண்டு சுவாமி திருமுன்பு தாழ்ந்து வணங்கி எழுந்து பெரும் மத்தகமுடைய யானை மேல் ஏறிக்கொண்டு அவர்மீது வெண்கொற்றக் குடையைப் பிடித்தும் வெண்சாமரையை வீசியும் இப்பணிக்கென்று வழிவழிவந்த உரிமை உடையவர்களாகும் மெய்காப்பாளர் பணி செய்திட நலங்கொண்ட கொடுங்கோளூர் நகரை சூழ வலம்கொண்டு வருபவர்முன்பாக, தம்தோளில் உடை தேய்க்க உதவும் உவர்மண்ணை சுமந்து கொண்டு ஓர் வண்ணன் வரக்கண்டார். 17

மழையிற் கரைந்தங் குவர்ஊறிமேனி வெளுத்த வடிவினில்
உழையிற் பொலிந்த திருக்கரத்தார் அடியார் வேடம் என்றுணர்ந்தே
இழையிற் சிறந்த ஓடை நுதல் யானைக் கழுத்தின் நின்றிழிந்து
விழைவிற் பெருகுங் காதலினில் விரைந்து சென்று கைதொழுதார்.

அவ் வண்ணான் சுமந்த உவர் மண்பொதி மழைபட்டுக் கரைந்து அங்கு உவர் ஊறி படிந்து மேனி வெள்ளைநிறமான வெளுத்த வடிவினில் விளங்கக் கண்டு அவனை அரசர் நீறணிந்த கோலமுடைய மான்றன்று பொலிந்த திருக்கரமுடைய சிவபிரானது அடியவர் வேடம் என்று உணர்ச்சி கொண்டு நல்ல அணிகலங்களில் சிறந்த பட்டத்தினை அணிந்த தமது யானையின் கழுத்தில் நின்றும் இறங்கி அந்த வண்ணான் முன் அன்புபெருகும் காதலினில் விரைந்து சென்று கைதொழுதார். 18

சேரர் பெருமான் தொழக்கண்டு சிந்தை கலங்கி முன் வணங்கி
யாரென் றடியே னைக்கொண்ட தடியேன் அடிவண்ணான் என்னச்
சேரர் பிரானும் அடிச்சேரன் அடியேன் என்று திருநீற்றின்
வாரவேடம் நீனைப் பித்தீர்; வருந்தா தேகும் எனமொழிந்தார்.

அவ் வண்ணான் சேர அரசர் பெருமான் தன்னைத் தொழக் கண்டு தன் சிந்தை கலங்கி சேரர்பிரானை முன்னுகவணங்கி அரசே யார் என்று அடியேனைக்கொண்டது. அடியேன் உம் திருவடித்தொண்டு செய்யும் வண்ணான் ஆவேன் என்று கூறிட அவ் வண்ணானை நோக்கி சேரர்பெருமானும் உம் அடித்தொண்டு செய்யும் சேர அரசன் அடியேன் என்று கூறி; நீர் இன்று எம்பிரான் அணியும் திருநீற்றின் அன்புடைய வேடத்தை நினைப்பித்தீர். நாம் வணங்கியதற்கு வருந்தாது உம்மனைசெல் வீராக எனமொழிந்தார். 19

மன்னர் பெருமான் திருத்தொண்டு கண்டு மதிநீ டமைச் சரெலாம்
சென்னி மிசைஅஞ் சலிசெய்து போற்றச் சினமால் களிறேறி
மின்னு மணிப்பூண் கொடிமாட வீதிமூதூர் வலங்கொண்டு
பொன்னின் மணிமாளிகை வாயில் புக்கார் புனைமங் கலம்பொலிய.

சேர அரசர் பெருமானின் திருத்தொண்டு கண்டு அறிவால் நீடித்த மந்திரிகள் எல்லாம்; தம் உச்சிமீது அஞ்சலி கூப்பி கரமெடுத்துப் போற்றிசெய; தினங்கொண்ட மதயானைமேல் கழறிற்றறிவார் சேரமான்பெருமாள் ஏறி மின்னிடும் மணிகள்பூண்ட கொடிநாட்டிய மாளிகைகளுடைய வீதிகள் நிறைந்த கொடுங்கோளூரை வலங்கொண்டு பொன்னினால் இயற்றிய அழகுடைய மாளிகையின் வாயிலினைவந்து சேர்ந்தார் எங்கும் சிறந்திடச்செய்த மங்கலம் பொலிந்திட; 20

யானை மிசைநின் றிழிந்தருளி இலங்கும் மணிமண்ட பத்தின் கண்
மேன்மை அரியாசனத்தேறி விளங்குங்கொற்றக் குடைநிழற்றப்
பானல் விழியார் சாமரைமுன் பணிமாறப்பன் மலர்தூவி
மான அரசர் போற்றிடவீற் றிருந்தார் மன்னர் பெருமானர்.

மாளிகை வாய்தலில் யானையின் மேல் நின்று இறங்கியருளி பிரகாசமுறும் இரத்தின மண்டபத்தினிடத்து இருந்த மேன்மையுடைய சிம்மாசனத்து ஏறி விளங்கும் கொற்றக்குடை நிழல்செய்திட பால்போலும் நல்வீழியுடைய பெண்கள் வெண் சாமரை வீசிட பல மலர் தூவி ஏனைய தேசத்து அரசர் போற்றிட அரசாண்டு வீற்றிருந்தார் அரசர்க்கெல்லாம் பெருமானர் கழறிற்றறிவார்: 21

உலகு புரக்குங் கொடைவளவர் உரிமைச் செழியர் உடன்கூட
நிலவுபெருமுக் கோக்களாய் நீதி மனுநூல் நெறிநடத்தி
அலகில் அரசர் திறைகொணர அகத்தும் புறத்தும் பகையறுத்து
மலருந் திருநீற் றொளிவளர மறைகள் வளர மண்ணளிப்பார்.

உலகை நெறிப்பட அரசாளும் கொடையிற் சிறந்த சோழரும் உரிமை உடைய பாண்டியரும் இவ்விருவருடன்கூடி நிலவுகின்ற பெருமையுடைய மூவேந்தராகி நீதியை மனு நூலின் நெறிப்பட நடாத்தி அளவிலாத அரசர் திறைப்பொருள் கொண்டு வந்து சேர்ப்ப தமிழ் நாட்டில் உள்ளும் புறத்தும் வரும் பகையினை நீக்கி; எங்கும் மலர்கின்ற எம்பெருமானது திருநீற்று ஒளிவரை வேதங்கள் வளர உலகினைக் காத்து அரசாண்டிருந்தார் கழறிற்றறிவார் சேரமான் பெருமாள்; 22

நீடும் உரிமைப் பேரரசால் நிகழும் பயனும் நிறை தவமும்
தேடும் பொருளும் பெருந்துணையும் தில்லைத் திருச்சிற் றம்பலத்துள்
ஆடுங் கழலே எனக்தெளிந்த அறிவால் எடுத்த திருப்பாதம்
கூடும் அன்பில் அர்ச்சனைமேற் கொண்டார் சேரர் குலப்பெருமாள்.

நீடவந்த உரிமையாய பெரும் அரசாட்சியினால் வருகின்ற பயனும், நிறைந்த தவமும், தேடுகின்ற பொருளும், பெரும் துணையும், தில்லைச்சிற்றம் பலத்துள் ஆடுகின்ற திருவடிகளே எனத் தெளிந்துகொண்ட அறிவால் ஆட எடுத்த திருப்பாதத்தை கூடுகின்ற உள்ளத்தின் அன்பால் அர்ச்சனை செய்ய மேற்கொண்டார் சேரர்குலத்துப் பெருமாள் கழறிற்றறிவார்: 23

வாசத் திருமஞ் சனம்பள்ளித் தாமஞ் சாந்தம் மணித்தூபம்
தேசிற் பெருகுஞ் செழுந்தீபம் முதலா யினவும் திருவமுதும்
ஈசர்க்கேற்ற பரிசினில் அருச்சித் தருள எந்நாளும்
பூசைக் கமர்ந்த பெருங்கூத்தர் பொற்பார் சிலம்பின் ஒலி அளித்தார்.

ஆடஎடுத்த அடித்தாமரை பரவ; வாசனை உடைய திருமஞ்சன நீரும் திருப்பள்ளித் தாமமலரும், சந்தனமும், அழகிய தூபமும், ஒளியில் பெருகும் செவ்விய தீபமும் முதலாயினவும் திருவமுதும் எம்பிரானிற் ஏற்றது வகையால் அருச்சித்தருள எந்நாளும் அவர் பூசனையை ஏற்றிருந்த பெரும்கூத்தர் தில்லை மன்றில் ஆடியபெருமான் தமது பொற்பார்ந்த பாதச் சிலம்பின் ஒசையை சேர அரசர் கழறிற்றறிவார் கேட்குமாறு கொடுத்தருளினர்: 24

நம்பர் தாளின் வழிபாட்டால் நாளும் இன்புற் றமர்கின்றூர்
இம்பர் உலகில் இரவலர்க்கும் வறியோர் எவர்க்கும் ஈகையினால்
செம்பொன் மழையாம் எனப்பொழிந்து திருந்து வென்றி யுடன்பொருந்தி
உம்பர் போற்றத் தம்பெருமாற் குரிய வேள்வி பலசெய்தார்.

எம்பெருமானுடைய திருவடிவழிபாட்டால் கழறிற்றறிவார் நாளும் அவர் கொடுத்த மாசிலாத சிலம்போசை கேட்டு இன்புற்று இருப்பவர், இந்த உலகில் இரப்பார்க்கும் வறியோர் எவர்க்கும் கொடையினால் செம்பொன்னின் மழை போல மனம்சுரந்து கொடுத்து; திருத்தமுற்ற வெற்றியுடன் பொருந்தி தேவர்கள் போற்றிடத் தமது பெருமானுக்கு உரிய யாகங்கள் பல செய்தார்.

யாவும் எல்லாம் பேசியதை உணர்பவராதலாலே கழறிற்றறிவார் எனப் பெயர்கொண்டவர் சேர அரசர் பெருமாக்கோதையார்; 25

இன்ன வண்ணம் இவரொழுக எழில்கொள் பாண்டி நன்னாட்டு
மன்னும் மதுரைத் திருவால வாயில் இறைவர் வரும் அன்பால்
பன்னும் இசைப்பா டலிற்பரவும் பாண னர்பத் திரனர்க்கு
பன்னும் நீடு பெருஞ்செல்வம் நல்க வேண்டி அருள் புரிவார்.

இன்ன தன்மையாக இவர் ஒழுகி வர எழில் கொண்ட பாண்டி நன்நாட்டினில் விளங்கிய மதுரை நகரில் இருக்கும் திருவாலவாய் என்னும் கோவிலில் அமர்ந்த கடவுள் தம்மிடத்துக் கொண்ட அன்பால் தம்மையே புகழும் இசையின் பாடலால் போற்றிடும் யாழ்வாசித்து பாடும் பாணனர் பத்திரனர்க்கு நன்மை நீடித்த பெரும் செல்வம் கொடுத்திட வேண்டி அருள் புரிகின்றூர். 26

இரவு கனவில் எழுந்தருளி என்பால் அன்பால் எப்பொழுதும்
பரவு சேரன் தனக்குனக்குப் பைம்பொற் காணம் பட்டாடை
விரவும் கதிர்செய் நவமணிப்பூண் வேண்டிற் றெல்லாங் குறைவின்றித்
தரநம் ஓலை தருகின்றேம் தாழா தேகி வருகென்று.

பாணபத்திரனரது கனவில் இரவில் எம்பெருமான் எழுந்தருளிச் சென்று அவரிடம் என்னிடத்தாக எப்பொழுதும் போற்றுகின்ற சேரஅரசன் தனக்கு; உனக்கு வேண்டிய பரியபொற்காசு பட்டாடை பரந்த ஒளிசெய்யும் நவ இரத்தின ஆபரணங்கள் இன்னும் நீ வேண்டிய தெல்லாம் குறைவின்றித் தந்திடுவதற்கு நமது ஓலை ஒன்று எழுதித்தருகின்றேம்; அந்த ஓலையாய திருமுகத்தை நீ தாமதமின்றி எடுத்து சேரன்பால் சென்று கொடுத்து நிதிபெற்று வருவாயாக'' என்று; 27

அநிர்கழல் உதியர் வேந்தற் கருள்செய்த பெருமை யாலே
எதிரில்செல் வத்துக் கேற்ற இருநிதி கொடுக்க என்று
மதிமலி புரிசை என்னும் வாசகம் வரைந்த வாய்மைக்
கதிரொளி விரிந்த தோட்டுத் திருமுகங் கொடுத்தார் காண.

எம்பெருமான் அதிரும்சிலம்பு அணிந்த சேரஅரசர்க்கு தாமே அரசாட்சி முதல் பொன்பொருள் யாவும் கொடுத்த பெருமையாலே சேரஅரசரை ''உன்பால் உள்ள நிகரில் செல்வத்திற்கு ஏற்ற பெருநிதியை பத்திரனர்க்கு கொடுத்திடுவாய்'' என்று எழுதப்பெறும்''மதிபடியும் உயர்மாடமுடை மதுரைநகர் சிவன்யான் எழுதும் வார்த்தை, பருவமேகம் பொழிதல்போன்று பாடலர்க்கு உரிமையால் உதவி ஒளிதிகழும் குடைக்கீழ் அரசாளும் சேரனே அறிக; இப்பத்திரம் கொண்டுவரும் நாணபத்திரன் உன்னைப்போல் அன்பன். அவன் உன்னைக்காண்பது கருதி வந்தனன். அவனுக்கு மாண்புடைய பொருள்கொடுத்து வரவிடுப்பாய் எனும் கருத்துடைய பாடல், 'மதிமலிபுரிசை' எனத்தொடங்கி வார்த்தை எழுதிய பிரகாசமுடைய ஓலை இதழினில் எழுதிய பத்திரத்தை பாணபத்திரனர் கண்ணில்கண்டு பெறும்படி கனவில் அருள்செய்தவாறு கொடுத்தார் எம்பெருமான்: 28

சங்கப் புலவர் திருமுகத்தைத் தலைமேற் கொண்டு பத்திரனர்
அங்கப் பொழுதே புறப்பட்டு மலைநா டணைய வந்தெய்தித்
துங்கப் புரிசைக் கொடுங்கோளூர் தன்னிற் புகுந்து துன்னு கொடி
மங்குல் தொடக்கும் மாளிகைமுன் வந்து மன்னர்க் கறிவித்தார்.

சங்கப்புலவரின் தலைவராய பெருமான் சிவன் கொடுத்த அப்பத்திரத்தை; பாணபத்திரனர் பெற்றுத் தம்தலைமீது கொண்டு மதுரைநின்றும் அப்பொழுதே புறப்பட்டு மலைநாடாய சேரநாடு வந்துசேர்ந்து அதன் உயர்ந்த மதிலுடைய தலை நகரம் கொடுங்கோளூரில் புகுந்து, விளங்கிட நாட்டிய கொடிகள் மேகத்தினை முட்டும் உயர்ந்த அரசமாளிகையின் முன்னுக வந்து தமதுவரவை சேர அரசர் கழறிற்றறிவார்க்கு அறிவித்தார். 29

கேட்ட பொழுதே கைதலைமேற் கொண்டு கிளர்ந்த பேரன் பால்
நாட்டம் பொழிநீர் வழிந்திழிய எழுந்து நடுக்கம் மிக எய்தி
ஓட்டத் தம்பொன் மாளிகையின் புறத்தில் உருகுஞ் சிந்தையுடன்
பாட்டின் தலைமைப் பாணனர் பாதம் பலகால் பணிகின்றூர்.

அதனைக்கேட்ட அப்பொழுதே கழறிற்றறிவார் கைகளை தலைமேற்கொண்டு உள்ளத்து எழுந்த பேரன்பால் கண்கள் பொழியும் ஆனந்தநீர் வடிந்தோட எழுந்து நடுக்கம் மிகஎய்தி; உருக்கி ஓடவிட்ட அழகிய பொன்னொளி விளங்கும் மாலிகையின் புறத்தில் உருகும் சிந்தையுடன்வந்து வாய்தலில்நின்ற பாட்டினில் தலைமையுடைய பாணபத்திரனரின் திருவடிகளை அன்பால் பலமுறை பணிகின்றார். 30

அடியேன் பொருளாக் கிருமுகங்கொண் டனைந்த தென்ன அவர்தாமும்
கொடிசேர் விடையார் கிருமுகங்கைக் கொடுத்து வணங்க கொற்றவனர்
முடிமேற் கொண்டு கூத்தாடி மொழியுங் குழறிப் பொழிகண்ணீர்
பொடியார் மார்பிற் பரந்துவிழப் புவிமேற் பலகால் வீழ்ந்தெழுந்தார்.

அடியேனை ஒருபொருளாகக்கொண்டு திருமுகப்பத்திரம் கொண்டனைந்ததோ! என்று கூறிட; பாணபத்திரரும் சேர்பிரானது திருக்கையில் இடபக்கொடி உடைய சிவனது திருமுகத்தைக் கொடுத்து வணங்கிட அதனை சேரஅரசர் பெருமான் தனது முடிமேல்கொண்டு கூத்தாடி வாய்குழறி கண்ணில்பொழியும் நீர் நீறனிந்த அவர்மார்பில் எங்கும்பரந்து வடிந்துவீழ பூமிமேல் பலகாலும் வீழ்ந்து எழுந்து வணங்கினார்: 31

பரிவிற் போற்றித் திருமுகத்தைப் பலகால் தொழுது படி எடுக்க
உரிய வகையால் எடுத்தோதி உம்பர் பெருமான் அருள் போற்றி
விரிபொற் சுடர்மா லிகைபுக்கு மேவும் உரிமைச் சுற்றமெலாம்
பெரிது விரைவிற் கொடுபோந்து பேணும் அமைச்சர்க் கருள்செய்வார்.

அன்பினில் போற்றிசெய்து திருமுகப்பத்திரத்தைப் பலகாலும் தொழுது; அதனைக் காப்புநீக்கிட உற்றவகையால் எடுத்து ஓதி தேவர்பெருமானது திருவருளின் திறம்போற்றி பொன்னொளிவிரிந்த சுடர்மாலிகைபுகுந்து அங்கு இருந்த தமது உரிமைஉடைய சுற்றத்தவர் எல்லாரையும் பெரிதும் விரைவில் கொண்டுவந்து சேர்ந்து அவர்முன் தம்மைப்பேணும் மந்திரிகட்கு இதனை சொல்லியருள்வார் கழறிற்றறிவார்: 32

நங்கள் குலமா லிகையகனுள் நலத்தின் மிக்க நிதிக் குவையாய்ப்
பொங்கி நிறைந்த பல்வேறு வகையிற் பொலிந்த பண்டாரம்
அங்கண் ஒன்றும் ஒழியாமை அடையக் கொண்டு புறப்பட்டுத்
தங்கும் பொதிசெய் தாளின்மேற் சமைய ஏற்றிக் கொணரும் என.

நங்களது நல்லகுலத்து மாளிகையிலுள்ள நலத்தால் மிகுந்துதேடிய திரவியங்களாய் பொங்கிநிறைந்த பல்வேறுவகையிற் பொலிந்த நிதியின் குவையாய சேமிப்புகளில் அங்கஞ்ஞன்றும் தவறுமல் முழுவதும் எடுத்துக்கொண்டு புறப்பட்டு வெவ்வேறு வகையில் அவைதங்கும்படி பொதிசெய்து அப்பொதிகளை சுமைகாரரின் மேல் நிறைய ஏற்றிக்கொண்டு வாருங்கள் என்றிடலும்: 33

சேரர் பெருமான் அருள்செய்யத் திருந்து மதிநூல் மந்திரிகள்
சாரு மணி மாளிகையுள்ளாற் றனங்க ளெல்லாம் நிறைந்த பெருஞ்
சீர்கொள் நிகியம் எண்ணிறந்த எல்லாம் பொதிசெய் தாளின்மேல்
பாரில் நெருங்க மிசைஏற்றிக் கொண்டு வந்து பணிந்தார்கள்.

கழறிற்றறிவார் சேரர்பெருமான் இவ்வகை அருள்செய்ய அதுகேட்டு, திருத்தமுற்ற அறிவும் நீதிதுரல் வீளக்கமும் உடைய மந்திரிகள், அழகு சேருகின்ற அரசமாளிகையுள் இருந்த திரவியங்களெல்லாம் நிறைந்த, பெருஞ்சீர்கொண்ட சேமிப்பு நிதியம் எண்நிறைந்த எல்லாவற்றையும், பொதிசெய்து ஆட்களின்மேல் இப்பூமி நெருங்க சுமை ஏற்றிக்கொண்டுவந்து சேர அரசர்பெருமானைப் பணிந்தார்கள்: 34

பரந்த நிதியின் பரப்பெல்லாம் பாண ரைப்பத் திரனர்க்கு
நிரந்த தனங்கள் வெவ்வேறு நிரைத்துக் காட்டி மற்றிவையும்
உரந்தங் கியவெங் கரிபரிகள் முதலாம் உயிருள் ளனதனமும்
புரந்த அரசும் கொள்ளும் என மொழிந்தார் பொறையர் புரவல ர்

சுமையாட்கள் சுமந்துகொணர்ந்த பரந்த நிதியின் தொகையெல்லாவற்றையும் பாணனார் பத்திரனர்க்கு அங்கு நிறைந்த செல்வங்கள் வெவ்வேறுவகையான வற்றை நிரையாகக் காட்டி பின்னர் அவரைநோக்கி மற்றிந்த நிதிக்குவையும் வலிமைதங்கிய கொடிய யானை குதிரைகள் முதலான உயிருள்ள செல்வமும் நாம் அரசாண்ட அரசாட்சியையும் பெற்றுக்கொள்ளுமென மொழிந்தார் சேரர்களது தலைவர் கழறிற்றறிவார். 35

பாண ரைப்பத் திரனரும் பைம்பொன் மௌலிச் சேரலனர்
காணக் கொடுத்த நிதிஎல்லாங் கண்டு மகிழ்வுற் றதிசயித்துப்
பேண எனக்கு வேண்டுவன அடியேன் கொள்ளப் பிழ்ஞகனர் ஆணை
அரசும் அரசுறுப்புங் கைக்கொண் டருளும் என இறைஞ்ச.

அவ்வேளை பாணபத்திரனரும் பசிய பொன் முடிசூடிய சேரர் பெருமான் தன் கண் காணக் கொடுத்த நிதிகளின் சிறப்பு எல்லாம் கண்டு மகிழ்வுற்று அதிசயம் கொண்டு சேரர் பெருமானை நோக்கி நான் அநுபவித்திடற்கு போதுமான வற்றை அடியேன் பெற்றுக் கொண்டிட மற்றும் இறைவரது ஆணையின் படி அரசாட்சியும் அரசஉறுப்புக்களாய படைமுதல் யாவும் நீர்கைக் கொண்டருளும் என்று சேரர் பெருமானை பாணபத்திரனர் வணங்கிட: 36

இறைவர் ஆணை மறுப்பதனுக் கஞ்சி இசைந்தார் இகல் வேந்தர்
நிறையும் நிதியின் பரப்பெல்லாம் நிலத்தை நெளிய உடன்கொண்டே
உறைமும் மதத்துக் களிறுபரி உள்ளிட்டன வேண் டுவகொண்டோர்
பிறைவெண் கோட்டுக் களிற்றுமேல் கொண்டு போந்தார்; பெரும்பாணர்.

இறைவரது ஆணையின் படி இவை திரும்பப் பெறும் என்ற ஈசனது ஆணையை மறுத்திட அச்சம் கொண்டு அவ்வகை இசைவு கொண்டார் வலியுடைய அந்த சேரஅரசர். இப்பால் நிறைந்த நிதியின் குவைகள் யாவையையும் நிலத்தை நெளியும் படி பல பேர்சுமந்து சென்றிட உடன் அவற்றைக் கொண்டு அவற்றுடன் அங்கிருந்த உறையும் மும்மதத்து யானை குதிரை இவை உள்ளிட்ட வேறு பொருள்களும் வேண்டியது கொண்டு ஓர் பிறை போலும் வளைந்த கொம்புடைய யானை மேல் ஏறிக் கொண்டு மதுரை சென்றார் பாணபத்திரனர். 37

பண்பு பெருகும் பெருமாளும் பாண ரைப்பத் திரனர்பின்
கண்கள் பொழிந்த காதல்நீர் வழியக் கையால் தொழுதணைய
நண்பு சிறக்கும் அவர்தம்மை நகரின் புறத்து விடைகொண்டு
திண்பொற் புரிசைத் திருமதுரை புக்கார் திருந்தும் இசைப்பாணர்.

பண்புபெருகும் கழற்றறிவார் சேரமான் பெருமாளும் பாணபத்திரனர் பின்பாக தமது மலர்ந்த முகத்து ஆனந்த மாகும் கண்கள் பொழிந்த காதல் நீர்வழிந்தோட கையால் தொழுதுசெல்ல; நண்புசிறந்திடும் பெருமானை சேர அரசரை நகரின் புறத்தே வந்து விடைபெற்றுக் கொண்டு திண்ணிய பொன்மதில் சூழ்ந்த திருவுடைய மதுரை நகர்சென்று சேர்ந்தார் திருந்திய இசையுடைய பாணபத்திரனர். 38

வான வரம்பர் குலம்பெருக்கும் மன்ன ருரும் மறித்தேகிக்
கூனல் இளவெண் பிறைக்கண்ணி முடியார் அடிமை கொண்டருளும்
பான்மை அருளின் பெருமையினை நினைந்து பலகால் பணிந்தேத்தி
மேன்மை விளங்கு மாளிகைமண் டபத்துள் அரசு வீற்றிருந்தார்.

சேரர்களது தெய்வத் தன்மைவிளங்கும் சேர குலத்தைப் பெருக்கும் மன்னராம் கழற்றறிவாரும் பாணர்க்கு விடைகொடுத்து மீண்டுசென்று; கூனிய இளமையான வெண்பிறைக் கண்ணியை அணிந்த முடியுடைய சிவபெருமான், அடியார்களின் அடிமைத் தன்மை கொண்டருளும் மேலாம் திருவருளின் பெருமையினை நினைந்து பலகால் போற்றி மேன்மை விளங்கும் தமது மாளிகை மண்டபத்து அரசாண்டு வீற்றிருந்தார். 39

அளவில் பெருமை அகிலயோ னிகளும் கழறிற் றறிந்த வற்றின்
உளமன் னியமெய் யுறுதுயரம் ஒன்றும் ஒழியா வகை அகற்றிக்
களவு கொலைகள் முதலான கடிந்து கழறிற் றறிவார் தாம்
வளவர் பெருமா னுடன் செழியர் மகிழுங் கலப்பில் வைகுநாள்;

அவரது அரசாட்சியில் அளவில்லாத பெருமை உடைய உலகத்து யோனிவாய்ப் பட்டுப் பிறந்திடும் உயிர் எல்லாம் சொல்வதை தாம் அருளால் உணர்ந்து அவற்றின் உள்ளத்து விளங்கிய உண்மையான துயரத்தை ஒன்றும் ஒழியாதவகை அகற்றி நாட்டில் களவு கொலை நிகழாது அவற்றை தண்டித்து நீக்கி; கழற்றறிவார் சேரமான் பெருமாள் தாமும் சோழ அரசர் பெருமானுடன் பாண்டிய அரசனும் கூடிக் கலந்து சிறக்கும் நட்பாய கூட்டத்துடன் இருக்கும் நாளில் 40

வானக் கங்கை நதிபொதிந்த மல்கு சடையார் வழிபாட்டுத்
தூநற் சிறப்பின் அர்ச்சனையாந் தொண்டு புரிவார் தமக்கொரு நாள்
தேனைக் கலர்ந்த கொன்றையினர் ஆடற் சிலம்பின் ஒலி முன்போல்
மானப் பூசை முடிவின்கட் கேளா தொழிய மதி மயங்கி.

ஆகாய கங்கையாறு பொதியப் பெற்று விளங்கிடும் சடையுடைய சிவனது வழிபாட்டில் தூய நற்சிறப்பின் அர்ச்சனை யாகும் தொண்டினைச் செய்து வரும் எமது அரசர் பெருமான் கழறிற்றறிவார்க்கு; அவ்வித அர்ச்சனையில் ஒரு நாள் தேன் சொட்ட மலர்ந்த கொன்றை மாலைசூடிய எம்பெருமானது மாசிலாத ஆடலின் சிலம்போசை முன்போல் அன்று சிறப்புடைய அப்பூசையின் முடிவிடத்து அவர் கேளாதுபோக தன் மதிமயங்கினர் சேர அரசர். 41

பூசை கடிது முடித்(து) அடியேன் என்னை பிழைத் த(து)? எனப்பொருமி
ஆசை உடம்பால் மற்றினிவே றடையும் இன்பம் யா தென்று
தேசின் விளங்கும் உடைவாளை உருவித் திருமார் பினில்நாட்ட
ஈசர் விரைந்து திருச்சிலம்பின் ஓசை மிகவும் இசைப்பித்தார்.

சிலம்போசை கேளாது மயங்கி பூசனையை விரைவாக முடித்து அடியேன் இன்று சிலம்போசை கேளாது போனதற்கு என்னை பிழை செய்தது! என்று அழுது பொருமி: ''ஆசையுடன் பேணிய இவ்வுடம்பால் மற்று இனி அடையும் இன்பம் வேறு யாது'' என்று இன்றுடன் என் வாழ்வை ஒழிப்பேன் என ஒளியுடன் விளங்கும் தமது உடைவாளை உருவி திருவுடைய நெஞ்சில் குற்றும்படி ஊன்ற எம்பிரான் விரைவுடன் தம் திருப்பாதச் சிலம்போசையைக் மிகவும் கேட்பித்தார். 42

ஆடற் சிலம்பின் ஒலிகேளா உடைவாள் அகற்றி அங்கை மலர்
கூடத் தலைமேற் குவித்தருளிக் கொண்டு விழுந்து தொழ தெழுந்து
நீடப் பரவி மொழிகின்றார்; நெடுமால் பிரமன் அரு மறைமுன்
தேடற் கரியாய்! திருவருள்முன் செய்யா தொழிந்த தென்? என்றார்.

திருப்பாதச் சிலம்போசை கேட்டு நெஞ்சில் நாட்டிய உடைவாளை நீக்கி அழகிய தம் மலர்க்கை உச்சிமேல் சூடி கூப்பி அருளிக் கொண்டு தொழுதுவிழுந்து எழுந்து நெடுகலும் எம்பிரானைப் போற்றி சேர அரசர் மொழிகின்றார், ''நெடிய திருமாலும் பிரமனும் அரிய வேதமும் முன் தேடற்கரியவனே! திருச்சிலம்போசையை வழமை போல் இன்று கேட்டிட முன்னர் திருவருள் செய்யா தொழிந்தது எக் காரணமோ?'' என்றார். 43

என்ற பொழுதில் இறைவர்தாம் எதிர்நின் றருளா தெழும் ஒலியால்
மன்றி னிடைநங் கூத்தாடல் வந்து வணங்கி வல்லெருண்டன்
ஒன்றும் உணர்வால் நமைப்போற்றி உரைசேர் பதிகம் பாடுதலால்
நின்று கேட்டு வரத்தாழ்த்தோம் என்றார் அவரை நினைப்பிப்பார்.

என்று கழறிற்றறிவார் கேட்டபொழுது ஈசன் தானும் அவர் முன்பு நின்று அருளால் எழுகின்ற அசரீரிவாக்கால் ''கனகசபையிடத்து நமது கூத்தாடல் வந்து வணங்கி சுந்தரன் ஒருமைப்பாடுடைய உணர்வால் நமைப்போற்றி பொருள் சேர்ந்த பதிகம் பாடுதலால் அதனை நின்று கேட்டு உன்பால் வரத்தாமதமாயினேம்'' என்றார் எம்பெருமான். அத்தன்மை அருள்செய்து சுந்தரமூர்த்தி சுவாமிகளை அவர்க்கு நினைப்பிக்கின்றார். 44

என்னே! அடியார்க் கிவர் அருளுங் கருணை இருந்தவா றென்று
பொன்னேர் சடையார் திருநடஞ்செய் புலியூர்ப்பொன்னம்பலம்இறைஞ்சித்
தன்நே ரில்லா வன்றொண்டர் தமையுங் காண்பன் எனவிரும்பி
நன்னீர் நாட்டுச் செலநயந்தார் நாமச் சேரர் கோமானார்.

இந்த அசரீரியின் வாக்குக் கேட்டலும் என்னவாறு அடியார்கட்கு எம் பெருமான் இவர் அருளும் கருணை இருந்த அற்புதம் என்று; அத்துடனே பொன்னேரும் சடையுடைய பெருமான் திருநடம் செய்திடும் திருப்புலியூரில் சென்று பொன்னம்பலத்தை வணங்கி பின்னர் சென்று தனக்கு நேரில்லாத சுந்தரமூர்த்தி சுவாமிகளையும் காண்பேன் என்று விரும்பி நல்ல நீர் நாடாம் சோழ நாடு செல்ல விரும்பினர் பெரிய புகழுடைய சேர அரசர் கழறிற்றறிவார். 45

பொன்னார் மௌலிச் சேரலனார் போற்றும் அமைச்சர்க் கஃதியம்பி
நன்னாட் கொண்டு பெரும்பயணம் எழுக என்று நலஞ்சாற்ற
மின்னார் அயில்வேற் குலமறவர் வென்றி நிலவுஞ் சிலைவீரர்
அந்நாட் டுள்ளார் அடையநிரந் தணைந்தார் வஞ்சி அகல்நகர்வாய்.

பொன்னார்ந்த முடியுடைய சேர அரசர் அதனை; தம்மைப் போற்றுகின்ற மந்திரிகட்கும் சொல்லி; நல்ல நாள் தெரிந்து கொண்டு பெரும் பயணம் செல்ல எழுங்கள் என்று நன்மை மொழிய, அவ்வார்த்தை கேட்டு மின்னிடும் கூரிய வேல் உடைய சேரர் குலவீரரும் வெற்றி நிலவும் வில் வீரர்கள் அந்த நாட்டுள்ளார் முழுவதும் நிரந்து வந்து சேர்ந்தார் வஞ்சிநகரம் என்று சொல்லப்படும் கொடுங் கோளூர் நகரத்திடையாக. 46

இட்ட நன்னாள் ஓரையினில் இறைவர் திருவஞ் சைக்களத்து
மட்டு விரிபூங் கொன்றையினர் தம்மை வலங்கொண் டிறைஞ்சிப்போய்ப்
பட்ட நுதல்வெங் களிறானைப் பிடர்மேற் கொண்டு பனிமதியம்
தொட்ட கொடிமா ளிகைமூதூர் கடந்தார் உதியர் தோன்றலார்.

பயணம் புறப்பட நிச்சயித்த அந்த நல்ல நாளில் உற்ற சுபவேளையில் எம் பெருமானது திருவஞ்சைக் களத்துச் சென்று இதல்விரியும் பூங்கொன்றை சூடிய பெருமானரை வலங்கொண்டு வணங்கிப் போய் நெற்றிப்பட்டத்தை அணிந்த யானையின் கழுத்தில் ஏறிக் கொண்டு; குளிர்ந்த இளம்பிறை தொட்டிட உயர்ந்த கொடி நாட்டிய மாளிகை நிரைகள் கொண்ட முதிய ஊர் கொடுங் கோளூரைக் கடந்து சென்றார் சேரரது அரசர் கழறிற்றறிவார் நாயனார். 47

யானை அணிகள் பரந்துவழி எங்கும் நிரந்து செல்லுவன
மான மலைநாட் டினில்மலிந்த மலைக ளுடன்போ துவபோன்ற
சேனை வீரர் புடைபரந்து செல்வ தங்கண் மலைசூழ்ந்த
கானம் அடைய உடன்படர்வ போலுங் காட்சி மேவின தால்.

பயணம் புறப்பட்ட சேர அரசரது அணியில் யானைகளின் வரிசைகள் பரந்து வழி எங்கும் நிரந்து செல்லுவன எப்படி இருந்ததெனில் அழகிய மலைநாட்டில் மலிந்துற்ற மலைகளும் உடன்செல்வனபோன்றன. அந்த யானைகளைச் சூழ்ந்து சேனை வீரர்கள் பக்கரில் பரந்துசெல்லுவது அங்கு மலையினைச் சூழ்ந்த காடுகளும் உடன் கூடிச்செல்வதுபோலும் காட்சி உடையனவாயின. 48

புரவித் திரள்கள் ஆயோகப் பொலிவின் அசைவிற் போதுவன
அரவச் சேனைக் கடல்தரங்கம் மடுத்து மேன்மேல் அடர்வனபோல்
விரவிப் பரந்து சென்றனவால் மிசையும் அவலும் ஒன்றுக
நிரவிப் பரந்த நெடுஞ்சேனை நேமிநெளியச் சென்றனவால்.

குதிரைக்கூட்டங்கள் தமக்குற்ற கெம்பீரமான பொலிவுடன் பாய்நீது அசைந்து செல்வன; பெரும் ஆரவாரிப்புடன் செல்லும் சேனையான கடலில் அதன் திரைகள் எழுந்தெழுந்து புரள்வனபோன்று நெருங்கிப் பரந்துசென்றனவாயின. மேடும் பள்ளமும் ஒன்றுக நிரவிப்பரந்த நெடியசேனை இப்பூமி அவற்றின் செலவைத் தாங்காது நெளிந்திடச் சென்றது. 49

அந்நாட் டெல்லை கடந்தணைய அமைச்சர்க் கெல்லாம் விடையருளி
மின்னார் மணிப்பூண் மன்னவனார் வேண்டு வாரை உடன்கொண்டு
கொன்னார் அயில்வேல் மறவர்பயில் கொங்கர் நாடு கடந்தருளிப்
பொன்னுட் டவரும் அணைந்தாடும் பொன்னி நீர்நாட் டிடைப்போவார்.

மலைநாட்டின் எல்லைகடந்து அப்பால் தொடரும் எல்லையில் தம்முடன்வந்த மந்திரிகட்கு எல்லாம் நிற்குமாறு விடைகொடுத்தருளி மின்பொலியும் இரத்தினபரணம் சூடிய சேரமரசர் தமக்கு வேண்டியவரை உடன் அழைத்துக்கொண்டு கூரிய வேல் ஏந்திய பெருவீரர் வாழும் கொங்கநாடு கடந்துபோய் தேவ உலகத்தாரும் வந்து நீராடும் சிறப்புடைய காவிரியின் நீர் நாட்டில் செல்வார். 50

சென்ற திசையிற் சிவனடியார் சிறப்பி னேடும் எதிர்கொள்ளக்
குன்றுங் கானும் உடைக்குறும்பர் இடங்கள்தோறும் குறைவறுப்பத்
துன்று முரம்பும் கான்யாறும் துறுகற் சுரமும் பலகடந்து
வென்றி விடையார் இடம்பலவும் மேவிப் பணிந்து செல்கின்றார்.

காவிரியின் வளம் சிறந்த சோழ நாட்டிடை சென்ற திக்குகளில் சிவனடியார்கள் சிறப்பினோடும் எதிர் கொண்டிட மலையும் காடும் உடைய குறு நில மன்னர்களது இடங்கள்தோறும் அவர்கள் சேரர் பிரானுக்கு வேண்டிய சிறப்புச் செய்து உபசரிக்க; விளங்கிய பரல்கற்களுடைய மேட்டு நிலங்களும் காட்டாறுகளும் செல்லமுடி யாதபடி வருத்திடும் கற்கள் மிகுதியுடைய காடு பல கடந்து அங்கங்கு வெற்றி இடபத்தினை உடைய பெருமானது இடம் பலவும் சேர்ந்து பணிந்து செல்கின்றார். 51

பொருவில் பொன்னித் திருநதியின் கரைவந் தெய்திப் புனிதநீர்
மருவுந் தீர்த்தம் மகிழ்ந்தாடி மருங்கு வடபாற் கரைஏறித்
திருவிற் பொலியுந் திருப்புலியூர்ச் செம்பொன் மன்றுள் நடம்போற்ற
உருகு மனத்தினுடன் சென்றார் ஒழியா அன்பின் வழிவந்தார்

நிகரில்லாத காவிரி என்னும் திருநதியின் கரையை வந்தடைந்து அங்கு புனித நீர்பொருந்திய தீர்த்தத்தில் மகிழ்ந்து நீராடி அதனருகாக வடபுறத்து கரையேறிச் சென்று திருவில் பொலிகின்ற நகரம் திருப்புலியூரில் செம் பொன்னாலான சபையில் நிகழும் திருக் கூத்து வணங்கிட உருகிய காதல் மனத்துடன் சென்றார் ஒழியாத அன்பின்வழி இப்பூமி மேல் வந்த கழறிற்றறிவார் நாயனார். 52

வந்து தில்லை மூதூரின் எல்லைவணங்கி மகிழ்ச்சியினால்
அந்தணாளர் தொண்டர்குழாம் அணைந்த போதில் எதிர்வணங்கிச்
சந்த விரைப்பூந் திருவீதி இறைஞ்சித் தலைமேற் கரம்முகிழ்ப்பச்
சிந்தை மகிழ எழுநிலைக்கோ புரத்தை அணைந்தார் சேரலனார்.

இன்ன வாறுவந்து புலியூரெனும் தில்லை நகரின் எல்லையை வணங்கி மகிழ்ச்சியினால் அவரை எதிர் கொள்ளும் பொருட்டாக தில்லை வாழ் அந்தணர்களும் தொண்டர் கூட்டங்களும் அணைந்த போது அவர்கள் எதிர்தாம் வணங்கி அழகிய வாசனை நிலவிய பூக்களால் அலங்கரிக்கப் பெற்ற திருவீதியை வணங்கித் தலைமேல் கைகள் குவிய சிந்தை மகிழ எழு நிலைகளுடைய கோபுரத்தைச் சென்று அணைந்தார் சேரமான் பெருமாள். 53

நிலவும் பெருமை எழுநிலைக்கோ புரத்தின் முன்னர் நிலத்திறைஞ்சி
மலருங் கண்ணீர்த் துளிததும்பப் புகுந்து மணிமாளிகைவலங்கொண்(டு)
உலகு விளக்குந் திருப்பேரம் பலத்தை வணங்கி உள்ளணைந்தார்
அலகில் அண்டம் அளித்தவர்நின்றருடந் திருச்சிற் றம்பலமுன்.

என்றும் நிலவிய பெருமை உடைய ஏழுநிலை களுடைய கோபுரத்தின் முன்பாக நிலத்தில் வணங்கி கண்களில் துளித்து மலரும் ஆநந்தக் கண்ணீர் பெருக உள்புகுந்து அழகிய மாளிகையை வலங்கொண்டு உலகம் எல்லாம் விளங்கும் திருப்பேரம் பலத்தை வணங்கி உட்சென்று சேர்ந்தார் அளவிலாத அண்டங்கள் எல்லாம் தந்த பெருமான் நின்று ஆடுகின்றதிருச்சிற்றம்பலத்தின் முன்பாக. 54

அளவில் இன்பப் பெருங்கூத்தர் ஆட எடுத்த கழல்காட்ட
உளமும் புலனும் ஒருவழிச்சென் றுருகப் போற்றி உய்கின்றார்
களனில் விடம்வைத் தளித்தஅமு தன்றி மன்றில் கழல்வைத்து
வளருந்திருக்கூத் தமுதுலகுக் களித்த கருணை வழுத்தினார்.

அளவிலாத இன்பம்தரும் பெருங்கூத்தர் ஆட எடுத்த தம் திருப்பாதம் காண்பித்தருள அதுகண்டதும் சேர அரசரது உள்ளமும் புலன்களும் ஒருவழி ஒடுங்கிச் சென்று ஊனும் உருகிட எம்பெருமானைப்போற்றி உய்கின்றவர்; உலகை அழிக்க வந்த நஞ்சினைக் கண்டத்தில்வைத்து உலகினைக் காத்ததுமல்லாமல் கனகசபையில் திரும்பாதம்வைத்து ஆடியருளி வளரும் திருக்கூத்தாம் அமுதினை உலகுக்கு கொடுத்தருளிய கருணையின் சிறப்பைப் போற்றிசெய்தார். 55

அரா ஆசை ஆனந்தக் கடலுள் திளைத்தே அமர்ந்தருளால்
சீரார் வண்ணப் பொன்வண்ணத் திருவந்தாதி திருப்படிக்கீழ்ப்
பாரா தரிக்க எடுத்தேத்திப் பணிந்தார் பருவ மழைபொழியும்
காரால் நிகர்க்க அரியகொடைக் கையார் கழற்றறிவார்தாம்.

தெவிட்டாத ஆசைபெருகும் பேரானந்தக்கடலுள் திளைத்து இன்புற்று இருந்து எம்பிரான் அருளால் சீர்விளங்கச் சிறந்த திருவருளின் பேற்றின் பொன்வண்ணமாய அதனை திருப்பொன்வண்ணத்து திருவந்தாதிப் பாடலாக மொழிந்து எம் பிரானுடைய திருப்படிக்கீழ் இப்பூமி அன்புடன் ஆதரிக்க எடுத்துப் போற்றிப் பணிந்தார் பருவத்துக்கேற்ற மழையினைப் பொழியும் மேகமும் நிகராக வருதற்கரிய கொடைக்கையார் கழறிற்றறிவார் என்னும் சேரமான்பெருமாள். 56

அவர்பாடிய பொன்வண்ணத்தந்தாதியின் சில பாடல் கீழே தருகின்றோம்;

பொன்வண்ணத்தந்தாதி

திருச்சிற்றம்பலம்

பொன்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம் மேனி பொலிந் திலங்கும்
மின்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம் வீழ்சடை வெள்ளிக்குன்றம்
தன்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம் மால்விடை தன்னைக்கண்டாள்
என்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம் ஆகிய ஈசனுக்கே. 1

ஈசனைக் காணப் பலிகொடு செல்லலற் றேஇவளோர்
பேயனைக் காமுறு பிச்சிகொ லாமென்று பேதையர்முன்
தாயனை ஈர்ப்பத் தமியேன் தளரஅக் தாழ்சடையோன்
வாவெனைப் புல்கவென் றுன்இமை விண்டன வாட்கண்களே. 2

கண்களங் கஞ்செய்யக் கைவளை சோரக் கலியுஞ்செல்ல
ஒண்களங் கண்ணுதல் வேர்ப்பஒண் கொன்றையந் தார்உருவப்
பெண்களங் கம்மிவள் பேதுறும் என்பதோர் பேதைநெஞ்சம்
பண்களங் கம்மிசை பாடநின் றாடும் பரமனையே. 3

பரமனை யேபலி தேர்ந்துநஞ் சுண்டது பன்மலர்சேர்
பிரமனை யேசிரங் கொண்டுங் கொடுப்பது பேரருளாம்
சரவனை யேஉடம் பட்டும் உடம்பொடு மாதிடமாம்
வரமனை யேகிளை யாகும்முக் கண்ணுடை மாதவனே. 4

தவனே உலகுக்குத் தானே முதல்தான் படைத்தவல்லாம்
சிவனே முழுதுமென் பார்சிவ லோகம் பெறுவர்செய்ய
அவனே அடல்விடை ஊர்தி கடலிடை நஞ்சம் உண்ட
பவனே எனச்சொல்லு வாரும் பெறுவர்இப் பாரிடமே. 5

இடமால் வலந்தான் இடப்பால் துழாய்வலப் பால்ஒண்கொன்றை
வடமா லிடந்துகில் தோல்வலம் ஆழி இடம்வலம்மான்
இடமால் கரிதால் வலஞ்சே திவனுக் கெழில்நலஞ்சேர்
குடமால் இடம்வலங் கொக்கரை யாம்எங்கள் கூத்தனுக்கே. 6

கூத்துக் கொலாம்இவர் ஆடித் திரிவது கோல்வளைகள்
பாத்துக் கொலாம்பலி தேர்வது மேனி பவளங்கொலாம்
ஏத்துக் கொலாம்இவர் ஆதரிக் கின்ற திமையவர்தம்
ஓத்துக் கொலாம்இவர் கண்ட(து) இண் டைச்சடை உத்தமரே. 7

உத்தம ராய்அடி யார்உல காளத் தமக்குரிய
மத்தம் அராமதி மாடம் பதிநலஞ் சீர்மைகுன்று
எத்தம ராயும் பணிகொள்ள வல்ல இறைவர்வந்தென்
சித்தம ராய் அக லாதுடன் ஆடித் திரிதவரே. 8

திரிதவர் கண்ணுள்ளும் உள்ளத்தின் உள்ளுந் திரிதரினும்
அரிதவர் தன்மை அறிவிப்ப தாயினும் ஆழிநஞ்சேய்
கரிதவர் கண்டம் வெளிதவர் சாந்தம்கண் மூன்றொடொன்றும்
பரிதவர் தாமே அருள்செய்து கொள்வர்தம் பல்பணியே. 9

பணிபதம் பாடிசை ஆடிசை யாகப் பலிமலரால்
அணிபதங் கன்பற் கொளப்பணி அத்தவற் கேஅடிமை
துணிபதங் கரமுறு தோலொடு நீறுடல் தூர்த்துநல்ல
தணிபதங் காடிடுஞ் சஞ்சலம் நீளன் தனிநெஞ்சமே. 10

திருச்சிற்றம்பலம்

தம்பி ரானைக் கெதிர்நின்று தமிழ்ச்சொன் மாலைகேட்பிக்க
உம்பர் வாழ நடமாடும் ஒருவர் அகற்கப் பரிசிலெனச்
செம்பொன் மணிமன் றினிலெடுத்த செய்ய பாதத் திருச்சிலம்பின்
இம்பர் நீட எழுந்தஒலி தாமும் எதிரே கேட்பித்தார்.

தமது பெருமானுக்கு முன்பாகநின்று பொன்வண்ணத்தந்காதியாம் தமிழ்ச் சொல்மாலை பாடி அதனை இறைவரைக் கேட்பிக்க அகற்கு தேவர்வாழ நடமாடும் ஒருவராம் சிவன் காம்கொடுக்கும் பரிசில் இதுவென்ன செம்பொன்னாலாய அழகிய சபையில் இனிதுடன் ஆடஎடுத்த சிவந்த திருப்பாதத்துக் திருச்சிலம்பின் இவ்வுலகில் பரந்து நீளஎழுந்த ஓசையை நேராகச் சேரஅரசர் கழறிற்றறிவாரைக் கேட்பித்தார்: 57

ஆடற்சிலம்பின் ஒலிகேட்பார் அளவில் இன்ப அனந்தம்
கூடப்பெற்ற பெரும்பேற்றின் கொள்கை வாய்ப்பக் கும்பிடுவார்
நீடப் பணியுங் காலமெலாம் நின்று தொழுது புறம்போந்து
மாடத் திருமா ளிகைவீதி வணங்கிப் புறத்து வைகினர்.

எம்பிரானது திருக்கூத்தாடற்சிலம்பின் ஒசையைக் கேட்கும் கழறிற்றறிவார் அளவிலாத இன்பந்தரும் ஆனந்தம் கைகூடப்பெற்ற பெரும்பேற்றின் கொள்கை வாய்ப்பக் கும்பிடுவாராய் நீளவும் பணியும் காலமெலாம் நின்று திருப்பெருங் கூத்தைத் தொழுது வெளியேவந்து அடுக்குமாடங்கள் உடைய திருமாளிகையின் வீதி வணங்கி வெளிப்புறத்துத் தங்கிஇருந்தார். 58

பரவுந் தில்லை வட்டத்துப் பயில்வார் பைம்பொன் அம்பலத்துள்
அரவும் புனலும் சடையாட ஆடுவார்கூத் தாராமை
விரவுங் காதல் மிக்கோங்க வேதம் படியுந் திருப்படிக்கீழ்
இரவும் பகலும் பணிந்தேத்தி இன்பஞ் சிறக்கும் அந்நாளில்

யாவரும் வணங்கும் தில்லையின் எல்லைக்குட்பட்ட இடத்துத் தங்கியிருக்கும் சேரமான்பெருமாள் பசிய பொன்னின் அம்பலத்துள் பாம்பும் நீரும் சடையிலாட ஆடுவாரின் பொருங்கூத்தினைத்புதம் தெவிட்டாது பெருகும் காதல் மிக்கோங்க வேதம் தேடிவந்து படியும் திரும்படியின் கீழாக இரவும் பகலும் பணிந்துபோற்றி இன்பம் சிறந்திருக்கும் அந்நாளில். 59

ஆடும் பெருமான் பாடல்கேட் டருளித் தாழ்த்த படிதமக்குக்
கூடும் பரிசால் முன்பருளிச் செய்த நாவ லூர்க்கோவை
நீடும் பெருங்கா தலிற்காண நிறைந்த நினைவு நிரம்பமால்
தேடும் பாதர் அருளினுல் திருவா ரூர்மேற் செலஎழுந்தார்.

திருக்கூத்தாடும்பெருமான் சுந்தரமூர்த்திசுவாமிகளது பாடல்கேட்டருளி தம்மிடம்வரத் தாமதித்ததன்மையால் தமக்கு சுந்தரரது தோழமை கூடும்முறையால் முன்பே அருளிச் செய்துவைத்த அந்த திருநாவலூர்மன்னர் சுந்தரரை நீடுகின்ற பெருங்காதலால் காணவேண்டுமென உள்ளத்து நிறைந்த நினைவு நிரம்பிக்கொள்ள, திருமால் தேடுகின்ற திருப்பாதமுடைய சிவனது அருளால் திருவாரூரைநோக்கிச் செல்வதற்கு எழுந்துகொண்டார் சேரமான்பெருமாள். 60

அறிவின் எல்லை யாயதிருத் தில்லை எல்லை அமர்ந்திறைஞ்சிப்
பிறிவிலாத திருவடியைப் பெருகும் உள்ளத்தினிற்பெற்றுச்
செறியும் ஞான போனகர்வந் தருளும் புகலிசென்றிறைஞ்சி
மறிசேர் கரத்தார் கோயில்பல வணங்கி மகிழ்ந்து வழிக்கொள்வார்.

அறியும் அறிவின் எல்லையாகும் திருத்தில்லைச் சிதம்பரத்தின் எல்லையில் தங்கி வணங்கி என்றும் பிரிவிலாத திருவடியை பெருகுகின்ற அன்பின் உள்ளத்தினில் பெற்றுக்கொண்டு சீரிய விளக்கமுடைய ஞான அமுதுண்ட திருஞானசம்பந்தப்பெருமான் திருவவதாரம் செய்தருளும் சீகாழி சென்றுவணங்கி அப்பால் மான்கன்று சேரும் கையுடைய கடவுளின் ஆலயங்கள் பல வணங்கி மகிழ்ச்சியுடன் வழிக்கொண்டு திருவாரூர் செல்கின்றார் சேர அரசர். 61

வழியிற் குழியிற் செழுவயலின் மதகின் மலர்வா விகளின்மடுச்
சுழியிற் றரளந் திரைசொரியுந் துறைநீர்ப் பொன்னி கடந்தேறி
விழியிற் றிகழுந் திருநுதலார் விரும்பும் இடங்கள் இறைஞ்சியுகக்
கழிவிற் பெருவெள் ளமுங்கொள்ளாக் கழனி ஆரூர் கண்ணுற்றார்.

வழியிலும், குழியிலும்; செழுமையான வயலிலும். மதகிலும், மலர்க்குளங்களிலும், குட்டைகளின் சுழியிலும் முத்துக்களை அலைகள் சொரிகின்ற துறையினை உடைய நீர் நிறைந்த காவிரியாற்றைக் கடந்து அப்பால்போய் கண்ணுல் சிறந்துற்ற நெற்றியுடைய பெருமான் விரும்பும் இடங்கள்சென்று வணங்கி, உலகங்களின் கடையாய பிரளய காலத்தில் பெருகும் பெருவெள்ளமும் தன்னுள்முழுக அமிழ்த்திக்கொள்ள முடியாத வயல்சூழ்ந்த திருவாரூர்க் கோயிலைக் கண்ணுற்றார். 62

நம்பி தாமும் அந்நாட்போய் நாகைக் காரோ ணம்பாடி
அம்பொன் மணிப்பூண் நவமணிகள் ஆடை சாந்தம் அடற்பரிமா
பைம்பொற் சுரிகை முதலான பெற்று மற்றும் பலபதியில்
தம்பி ரானைப் பணிந்தேத்தித் திருவா ரூரிற் சார்ந்திருந்தார்.

இப்பால் சுந்தரமூர்த்திசுவாமிகள், சேரஅரசர் வருகின்ற இந்தநாட்களிற் போய் திருநாகைக்காரோணம் என்னும் தலத்தில் எம்பெருமானைப்பாடி அவரிடமிருந்து பொன், இரத்தினம் இவற்றாலாய ஆபரணம். முத்துமாலை, நவரத்தினங்கள், சந்தனம், வலிமையுடைய குதிரை, பசிய பொன்வாள் முதலியனபெற்று அப்பாலும்சென்று வேறுபல தலங்களில் தமது பெருமானைப் பணிந்துபோற்றி மீண்டு வந்து திருவாரூரில் சேர்ந்திருந்தார். 63

திருநாகைக்காரோணத்து எம்பெருமானை சுந்தரமூர்த்திசுவாமிகள் பாடியருளிய தேவாரம் இதுவாகும். இப்பாடலிலே சுவாமியை பொன்னும் ஆபரணமும் கேட்டுவிண்ணப்பித்தல் காணலாகும்.

திருநாகைக்காரோணம்

பண்—கொல்லிக் கௌவாணம்

திருச்சிற்றம்பலம்

பத்தூர்புக் கிரந்துண்டு பலபதிகம் பாடிப்
பாவையரைக் கிறிபேசிப் படிருடித் திரிவீர்
செத்தார்தம் எலும்பணிந்து சேவேறித் திரிவீர்
செல்வத்தை மறைத்துவைத்தீர் எனக்கொருநா ளிரங்கீர்
முத்தாரம் இலங்கிமிளிர் மணிவயிரக் கோவை
அவைபூணத் தந்தருளி மெய்க்கினிதா நாறுங்
கத்தூரி கமழ்சாந்து பணித்தருள வேண்டும்
கடல்நாகைக் காரோணம் மேவியிருந் தீரே.

வேம்பினெடு தீங்கரும்பு விரவிஎனைத் தீற்றி
விருத்திநான் உமைவேண்டத் துருத்திபுக்கங் கிருந்தீர்
பாம்பினெடு படர்சடைகள் அவைகாட்டி வெருட்டிப்
பகட்டநான் ஓட்டுவனே பலகாலும் உழன்றேன்
சேம்பினெடு செங்கழுநீர் தண்கிடங்கில் திகழும்
திருவாரூர் புக்கிருந்த தீவண்ணர் நீரே
காம்பினெடு நேத்திரங்கள் பணித்தருள வேண்டும்
கடல்நாகைக் காரோணம் மேவியிருந் தீரே.

பூண்பதோர் இளஆமை பொருவிடையொன் றேறிப்
பொல்லாத வேடங்கொண் டெல்லாரும் காணப்
பாண்பேசிப் படுதலையிற் பலிகொள்கை தவிரீர்
பாம்பினொடு படர்சடைமேல் மதிவைத்த பண்பீர்
வீண்பேசி மடவார்கை வெள்வளைகள் கொண்டால்
வெற்பரையன் மடப்பாவை பொறுக்குமோ சொல்லீர்
காண்பினிய மணிமாடம் நிறைந்தநெடு வீதிக்
கடல்நாகைக் காரோணம் மேவியிருந் தீரே: 3

விட்டதோர் சடைதாழ வீணைவிடங் காக
வீதிவிடை ஏறுவீர் வீண் அடிமை உகந்தீர்
துட்டரா யினபேய்கள் சூழநடம் ஆடிச்
சுந்தரராய்த் தூமதியஞ் சூடுவது சுவண்டே
வட்டவார் குழல்மடவார் தம்மைமயல் செய்தல்
மாதவமோ மாதிமையோ வாட்டம்எலாந் தீரக்
கட்டியெமக் கிவதுதான் எப்போது சொல்லீர்
கடல்நாகைக் காரோணம் மேவியிருந் தீரே: 4

மிண்டாடித் திரிதந்து வெறுப்பனவே செய்து
வினைக்கேடு பலபேசி வேண்டியவா திரிவீர்
தொண்டாடித் திரிவேனைத் தொழும்புதலைக் கேற்றும்
சுந்தரனே கந்தமுதல் ஆடைஆ பரணம்
பண்டாரத் தேயெனக்குப் பணித்தருள வேண்டும்
பண்டுதான் பிரமாணம் ஒன்றுண்டே நும்மைக்
கண்டார்க்குங் காண்பரிதாய்க் கனலாகி நிமிர்ந்தீர்
கடல்நாகைக் காரோணம் மேவியிருந் தீரே. 5

இலவவிதழ் வாய்உமையோ டெருதேறிப் பூதம்
இசைபாட இடுபிச்சைக் கெச்சுச்சம் போது
பலவகம்புக் குழிதர்வீர் பட்டோடு சாந்தம்
பணித்தருளா திருக்கின்ற பரிசென்ன படிறே
உலவுதிரைக் கடல்நஞ்சை அன்றமரர் வேண்ட
உண்டருளிச் செய்ததுமக் கிருக்கொண்ணு திடவே
கலவமயில் இயலவர்கள் நடமாடுஞ் செல்வக்
கடல்நாகைக் காரோணம் மேவியிருந் தீரே. 6

தூசுடைய அகலல்குல் தூமொழியாள் ஊடல்
தொலையாத காலத்தோர் சொற்பாடாய் வந்து
தேசுடைய இலங்கையர்கோன் வரைஎடுக்க அடர்த்துத்
திப்பியகீ தம்பாடத் தேரொடுவாள் கொடுத்தீர்
நேசமுடை அடியவர்கள் வருந்தாமை அருந்த
நிறைமறையோர் உறைவீழி மிழலைதனில் நித்தல்
காசருளிச் செய்தீர்இன் றெனக்கருள வேண்டும்
கடல்நாகைக் காரோணம் மேவியிருந் தீரே: 7

மாற்றமேல் ஒன்றுரையீர் வாளாநீர் இருந்தீர்
வாழ்விப்பன் எனஆண்டீர் வழியடியேன் உமக்கு
ஆற்றவேற் றிருவுடையீர் நல்கூர்ந்தீர் அல்லீர்
அணியாரூர் புகப்பெய்த அருநிதியம் அதனில்
தோற்றமிகு முக்கூற்றில் ஒருகூறு வேண்டும்
தாரீரேல் ஒருபொழுதும் அடியெடுக்கல் ஒட்டேன்
காற்றனைய கடும்பரிமா ஏறுவது வேண்டும்
கடல்நாகைக் காரோணம் மேவியிருந் தீரே. 8

மண்ணுலகும் விண்ணுலகும் உம்மதே ஆட்சி
மலையரையன் பொற்பாவை சிறுவனையுந் தேறேன்
எண்ணிலிஉண் பெருவயிறன் கணபதிஒன் றறியான்
எம்பெருமான் இதுதகவோ இயம்பீ யருள் செய்யீர்
திண்ணெனஎன் உடல்விருத்தி தாரீரே ஆகில்
திருமேனி வருந்தவே வலைக்கின்றேன் நாகைக்
கண்ணறையன் கொடும்பாடன் என்றுரைக்க வேண்டா
கடல்நாகைக் காரோணம் மேவியிருந் தீரே: 9

மறிஏறு கரதலத்தீர் மாதிமையேல் உடையீர்
மாதியந்தி தருவனென்று வல்லீராய் ஆண்டீர்
கிறிபேசிக் கீழ்வேளூர் புக்கிருந்தீர் அடிகேள்
கிறியும்மாற் படுவேனே திருவாணை உண்டேல்
பொறிவிரவு நற்புகர்கொள் பொற்சுரிகை மேலோர்
பொற்பூவும் பட்டிகையும் புரிந்தருள வேண்டும்
சுறிவிரவு நெய்சோறு முப்போதும் வேண்டும்
கடல்நாகைக் காரோணம் மேவியிருந் தீரே. 10

பண்மயத்து பொழிப்பரவை சங்கிலிக்கும் எனக்கும்
பற்றுய பெருமானே மற்றுரை உடையேன்
உண்மயத்த உமக்கடியேன் குறைதீர்க்க வேண்டும்
ஒளிமுத்தம் பூணரம் ஒண்பட்டும் பூவும்
கண்மயத்த கத்தூரி கமழ்சாந்தும் வேண்டும்
கடல்நாகைக் காரோணம் மேவியிருந் தீரென்
றண்மயத்தால் அணிநாவ லாரூரன் சொன்ன
அருந்தமிழ்கள் இவைவல்லார் அமருலகாள் பவரே: 11

திருச்சிற்றம்பலம்

வந்து சேரர் பெருமானர் மன்னுந் திருவா ரூரெய்த
அந்தணாளர் பொருமானும் அரசர் பெருமான் வரப்பெற்றுச்
சிந்தை மகிழ எதிர்கொண்டு சென்று கிடைத்தார்; சேர லனர்
சந்த விரைத்தார் வன்றொண்டர் முன்பு விருப்பி னுடன் தாழ்ந்தார்.

சேரர்பெருமானர்வந்து விளங்கும் திருவாரூர்சேர அவர்வரவு கேட்டு அந்தணர்களின்பெருமான் சுந்தரமூர்த்திசுவாமிகளும் அரசர்பெருமான் கழறிற்றறிவார் சேரமான்பெருமாள் வரப்பெற்று சிறந்து சிந்தைமகிழ அவரை எதிர்கொண்டு போய் காணப்பெற்றார். சேரமான்பெருமானும் வாசனையுடைய மாலையணிந்த சுந்தரமூர்த்திசுவாமிகளை கண்டதுமே முன்பாக பெருவிருப்பினுடன் தாழ்ந்து வணங்கினர்; 64

முன்பு பணிந்த பெருமானைத் தாமும் பணிந்து முகந் தெடுத்தே
அன்பு பெருகத் தழுவவிரைந் தவரும் ஆர்வத் தொடுதழுவ
இன்ப வெள்ளத் திடைநீந்தி ஏற மாட்டா தலைவார்போல்
என்பும் உருக உயிர்ஒன்றி உடம்பும் ஒன்றும் என இசைந்தார்.

முன்பு பணிந்த சேரமான்பெருமானை சுந்தரமூர்த்திசுவாமிகள் பணிந்து அன்புடன் அணைத்தெடுத்து அன்புபெருகத் தழுவ விரைந்து சேரரும் ஆர்வத்தொடும் சுந்தரரைத்தழுவ இந்நிலையால் இருவரும் இன்பவெள்ளத்திடை நீந்தி கரையேற மாட்டாது அலைவார்போல் அன்பினால் என்பும் உருக உயிர் ஒன்றுகி உடம்பும் ஒன்றும் எனும்படி நின்றனர். 65

ஆன நிலைமை கண்டதிருத் தொண்டர் அளவில் மகிழ் வெய்தி
மானச் சேரர் பெருமானர் தாமும் வன்றொண்டருங்கலந்த
பான்மை நண்பால் சேரமான் தோழர் என்று பார்பரவும்
மேன்மை நாமம் முனைப்பாடி வேந்தர்க் காகி விளங்கியதால்.

அந்தநிலைமைகண்ட திருத்தொண்டர்கள் அழவற்ற மகிழ்ச்சிபொங்க, மானம் மிக்க சேரமான்பெருமானர் தாமும் சுந்தரமூர்த்திசுவாமிகளும் அன்பினால் கலந்த பான்மை நட்பின் காரணமாக ''சேரமான் தோழர்'': என்று இப்பூமி வணங்கும் மேன்மையுடைய நாமம் திருமுனைப்பாடிநாட்டுத் தலைவர் சுந்தரமூர்த்திசுவாமிகளுக்கு மொழியப்பெற்ற அன்றிலிருந்து விளங்கியது. 66

ஒருவர் ஒருவ ரிற்கலந்த உணர்வால் இன்ப மொழி யுரைத்து
மருவ இனியார் பால்செய்வ தென்னும்? என்னும் மகிழ்சியினால்
பருவ மழைச்செங் கைபற்றிக் கொண்டு பரமர் தாள் பணியத்
தெருவு நீங்கிக் கோயிலினுட் புகுந்தார் சேர மான்தோழர்.

ஒருவர் ஒருவரில் கலந்த அன்பின் பெருக்கால் அன்பமொழியுரைத்து நண்பு பயில இனியவராம் சேரர்பால் யாது செய்வது என்று மகிழ்ச்சியினல் கூறி, பருவ மழைபோல் கரவின்றிக் கொடுக்கும் சேர அரசர்பெருமானது சிவந்த கையினைப் பற்றி அழைத்துக்கொண்டு சிவபெருமான் திருவடி பணிய வீதியினவிடுத்து நீங்கி கோயிலினுட் புகுந்தார் சேரமான்தோழர் சுந்தரமூர்த்திசுவாமிகள். 67

சென்று தேவா சிரியனமுன் இறைஞ்சித் திருமா ளிகை வலங்கொண்(டு
ஒன்றும் உள்ளத் தொடும்புகுவார் உடைய நம்பி முன்னுக
நின்று தொழுது கண்ணருவி வீழ நிலத்தின் மிசைவீழ்ந்தே
என்றும் இனிய தம்பெரு மான் பாதம் இறைஞ்சி ஏத்தினர்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் சேர அரசரை அழைத்துச் செல்ல அவர் சென்று தேவாசிரிய மண்டபத்தை முன்னுக வணங்கி கோயில் திருமாளிகையினை சுற்றி வலங்கொண்டு ஒருமைப்பாடுடைய உள்ளத் தொடும் சுவாமி திருமுன்பு போகும் சேரஅரசர்; ஆளுடைய தலிவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள் முன்னுக நின்று புற்றிடம் கொண்ட பெருமானைத் தொழுது கண்கள் ஆநந்த நீர் வடிந்து விழ நில மிசையாக வீழ்ந்தே என்றும் இனிய தமது பெருமான் திருப்பாதம் வணங்கிப் போற்றினர். 68

தேவர் முனிவர் வந்திறைஞ்சுந் தெய்வப் பெருமாள் கழல் வணங்கி
மூவர் தமக்கு முதலாகு மவரைத் திருமும் மணிக் கோவை
நாவலூரர் தம்முன்பு நன்மை விளங்கக் கேட்பித்தார்
தாவில் பெருமைச் சேரலனூர் தம்பி ரானூர் தாங்கொண்டார்.

தேவர்கள் முனிவர்கள் வந்து வணங்கும் தெய்வங்கட் கெல்லாம் பெருமான் திருவாரூர் நாதன் திருவடி வணங்கி: பிரமன் திருமால் உருத்திரன் மூவர்க்கும் முதல்வராய ஆதிப்பெருமானே ''எனத் தொடங்கும் திருமும் மணிக்கோவைப் பாடலே திருநாவலூர் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருமுன்பு நன்மை விளங்கப் பாடி எம்பிரானைக் கேட்பித்தார் குறைவிலாத பெருமை உடைய சேரஅரசர் எமது பெருமானும் அப்பாடலே ஏற்றுக்கொண்டார். 69

அவர் பாடிய பாடலில் ஒன்று கீழே தருகிறோம்

திருவாரூர் மும்மணிக்கோவை

திருச்சிற்றம்பலம்

விரிகடல் பருகி அளறுபட் டன்ன, கருநிற மேகம் கல்முகடு ஏறி
நுண்துளி பொழிய நோக்கி ஓண்தொடி, பொலங்குழை மின்னப் புருவ வில்லிட்டு
இலங்கெழிற் செவ்வாய் கோபம் ஊர்தரக், கைத்தலம் என்னும் காந்தள் மலர
முத்திலங் கெயிறெனும் முல்லை அரும்பக், குழலுஞ் சுணங்குங் கொன்றை காட்ட
எழிலுடைச் சாயல் இளமயில் படைப்ப, உள்நிறை உயிர்ப்பெனும் ஊதை ஊர்தரக்
கண்ணீர்ப் பெருமழை பொழிதலின் ஓண்ணிறத், தஞ்சனக் கொழுஞ்சே றலம்பிளஞ்சா
மணியும் பொன்னும் மாசறு வயிரமும், அணிகிளர் அகிலும் ஆரமும் உரிஞ்சிக்
கொங்கை என்னுங் குவட்டிடை இழிதரப், பொங்குபுனல் காட்டியோளே கங்கை
வருவிசை தவிர்த்த வார்சடைக் கடவுள், அரிவை பாகத் தண்ணல் ஆரூர்
எல்லியில் இரும்பலி சொரியும் கல்லோ, சென்ற காதலர் மனமே. 1

மனமால் உறுதே மற்றென்செய் யும்வாய்ந்த
கனமால் விடைஉடையோன் கண்டத்—தினமாகித்
தோன்றினகார் தோன்றிலதேர் சோர்ந்தனசங் கூர்ந்தபீர்
கான்றன நீர் ஏந்திழையாள் கண். 2

கண்ணூர் நுதல்எந்தை காமரு கண்டம் எனஇருண்ட
விண்ணுல் உருமொடு மேலது கீழது கொண்டல் விண்ட
மண்ணுர் மலிமேல் இளமயி லால்மட மான் அனைய
பெண்ணும் இவள்இனி என்னுய்க் கழியும் பிரிந்துறைவே; 3

திருச்சிற்றம்பலம்

அங்கண் அருள்பெற் றெழுவாரைக் கொண்டு புறம் போந் தாரூரர்
நங்கை பரவை யார்திருமா ளிகையில் நண்ண நன்னுதலார்
பொங்கு விளக்கும் நிறைகுடமும் பூமா லைகளும் புகை அகிலும்
எங்கும் மடவார் எடுத்தேந்த அணைந்து தாமும் எதிர்கொண்டார்.

இப்பாடல் பாடி எம்பிரானது அருளை அங்கு பெற்று வணங்கி எழுகின்ற சேரஅரசரை அழைத்துக்கொண்டு வெளியே வந்து சுந்தர மூர்த்தி சுவாமிகள் பெண் பரவையாரது திருமாளிகையில் சேரலும்: பரவைஅம்மையும் திருமாளிகையில் பொங்கும் சுடருடைய தீபமும் நிறைகுடமும் பூமாலைகளும் புகைபரக்கும் அகில் தூபமும் எங்கும் பெண்கள் எடுத்துப் போற்ற வந்து சேர்ந்து மாளிகை வாய்தலில் தோழர்களை எதிர்கொண்டு வரவேற்றார். 7

சோதி மணிமா ளிகையின்கண் சுடரும் பசும்பொற் காலமளி
மீது பெருமாள் தமைஇருத்தி நம்பி மேவியுட னிருப்பக்
கோதில் குணத்துப் பரவையார் கொழுந னுர்க்குந் தோழர்க்நம்
நீதி வழுவா ஒழுக்கத்து நிறைபூ சனைகள் முறையளித்தார்.

எதிர் கொண்டு அழைத்துச் சென்று சோதி ஒளிவீசும் அழகிய அம் மாளிகையில் பிரகாசமுறும் அழகிய பொற்காலுடைய ஆசனத்தின் மீது சேரமான் பெருமானை இருத்தி சுந்தரரும் கூடி உடன் இருப்ப அப்போது குற்றமில்லாத குணமுடைய பரவை அம்மையார் தனது கணவனுர்க்கும் அவர் தோழர்க்கும் நீதிதவறுத நல் ஒழுக்கத்தால் நிறைவுடைய பூசனைகளை முறைப்படி செய்து கொண்டார். 71

தாண்டும் புரவிச் சேரர்குலப் பெருமாள் தமக்குத் திரு வமுது
தூண்டுசோதி விளக்கனையார் அமைக்கத் துணைவர் சொல்லுதலும்
வேண்டும் பரிசு வெவ்வேறு விதத்துக் கறியும் போனகமும்
ஈண்டச் சமைப்பித்துடன்வந்தார்க்கெல்லாம்இயல்பின்விருந்தமைத்தார்.

அப்பொழுது தாவிப் பாயும் குதிரைப்படை உடைய சேரர்குலப் பெருமானுக்கு; தருவமுது கொடுத்திடற்கு வேண்டியபடி; தூண்டும் சோதியுடைய விளக்கை ஒத்த பரவையாரை அமைக்கும் படி சுந்தரர் பெருமான் சொல்லுதலும் பரவையாரும் அதற்குற்ற பரிசினுல் வெவ்வேறு விதத்து கறியும் அமுதம விரைவுடன் சமைப்பித்து சேரர் பிரானுடன் வந்த யாவர்க்குமே இயல்பாக விருந்து அமைத்தருளினர். 72

அரசர்க் கமைத்த சிறப்பினும்மேல் அடியார்க் கேற்கும் படியாக
விரவிப் பெருகும் அன்பினுடன் விரும்பும் அமுது சமைத்ததற்பின்
புரசைக் களிற்றுச் சேரலனூர் புடை சூழ்ந்த தவரோ டமுதுசெயப்
பரவைப் பிறந்த திருவனைய பரவை யார்வந் தறிவித்தார்.

அரசர்க்கு விருந்தமைக்கும் சிறப்பில் மேலாக அடியார்க்கு ஏற்கும் படியாகப் பொருந்திப் பெருகும் அன்பினுடன் விரும்பிப் பெறும் அமுது சமைத்த பிற்பாடு பட்டது யானைமேல் வந்த சேரர் பிரான் அவரைச் சூழவந்த பரசனருடன் வந்துதிருவமுது செய்திட; கடலில் பிறந்த இலக்குமியை ஒத்த பரவையாரும் தமது நாயகர் சுந்தரர்க்கு அறிவித்தார். 73

சேரர் பெருமான் எழுந்தருளி அமுது செய்யச் செய் தவத்தால்
தாரின் மலிபூங் குழல்மடவாய்! தாழா தமுது செய்வி எனப்
பாரின் மலிசீர் வன்றொண்டர் அருளிச் செய்யப் பரிகலங்கள்
ஏரின் விளங்கத் திருத்திக்கால் இரண்டிற் படியா ஏற்றுதலும்.

அது கேட்டருளி; சேரர் பெருமான் உனது மாளிகையில் எழுந்தருளி அமுது செய்திடமுன் செய்த தவத்தால் பேறுடைய மாலை மலியும் பூங்குழற் பரவையே! தாழாது நீ அவரை அமுது செய்வித்திடுவாய் என்று இப்பூமியில் சிறந்த சிருடைய சுந்தரமூர்த்தி சுவாமிகள் சொல்லியருள, அப்போது உணவருந்தும் நற்பாத்திரங்கள் சிறப்பு விளங்கிடும்படி தூய்மை செய்து முக்காலி இரண்டில் முறையாக ஒன்று பட எடுத்துவைத்தலும்.

ஆண்ட நம்பி பெருமானே உடனே அமுது செய்தருள
வேண்டும் என்ன ஆங்கவரும் விரைந்து வணங்கி வெருவுறலும்
நீண்ட தடக்கை பிடித்தருளி மீண்டும் நேரே குறைகொள்ள
ஈண்ட அமுது செய்வ தனுக் கிசைந்தார் பொறையர்க் கிறையவனூர்.

எம்மை ஆண்ட சுந்தரர் பெருமான் சேரமான் பெருமானே தம் முடனே அமுது செய்ய வேண்டுமென மொழிந்திட அது கேட்டு சேரஅரசரும் உடன் வணங்கி அது தகாது என வெருவுறலும் அது வேனே சேரர் பிரானுடைய நீண்ட பெரும் கையை எட்டிப் பிடித்தருளி மீண்டும் அமுது செய்யத்தான் வேண்டுமென வேண்டிக்கொள்ள உடன் அமுது செய்வதற்கு இசைவு கொண்டார் சேரமக்களுக்கு அரசனூர் கழறிற்றறிவார். 75

ஒக்க அமுது செய்தருள உயர்ந்த தவத்துப் பரவை யார்
மிக்க விருப்பால் அமுதுசெய்வித் தருளி மேவும் பரிசனங்கள்
தக்க வகையால் அறுசுவையுந் தாம்வேண்டியவா றினிதருந்தத்
தொக்க மகிழ்ச்சி களிசிறப்பத் தூய விருந்தின் கடன்முடித்தார்.

சேரர் பிரானும் சுந்தரர் பெருமானும் ஒருங்கேயிருந்து அமுது செய்தருளலும் உயர்ந்த தவத்தின் பேறுடைய பரவை அம்மையாரும் மிக்க விருப்பினால் அவர்களை திருவமுது செய்வித்தருளி சேர அரசருடன் வந்த பரிசன மக்களும் தக்க வகையால் அறுசுவைக் கறியுடன் தாம் வேண்டியவாறு இனிதே உண்டிட பெருகும் மகிழ்ச்சியும் களிப்பும் சிறந்திட தூயவிருந்தளிக்கும் செயலை முடித்துவைத்தார் பரவையார். 76

பனிநீர் விரவு சந்தனத்தின் பசுங்கர்ப் பூர விரைக் கலவை
வனிதை யவர்கள் சமைத்தெடுப்பக் கொடுத்து மகிழ்மான் மதச்சாந்தும்
புனித நறும்பூ மாலைகளும் போற்றிக் கொடுத்துப் பொற்கொடியார்
இனிய பஞ்ச வாசமுடன் அடைக்காய் அமுதும் ஏந்தினர்.

திருவமுது உண்டபின் பனி நீருடன் பொருந்திய சந்தனத்தினுடன் பசிய கர்ப்பூர வாசச் சந்தனக் கலவையை அதனை அரைத்தெடுக்கும் பணிப்பெண்கள் சேர்த்தமைத்துக் கொடுத்திடவும் அத்துடன் மகிழ்ச்சிதரும் கத்தூரிக் குழம்பும் புனிதமுடைய வாசனைப் பூமாலைகளும் சிறப்புறக்கொடுத்தும்; பொன்னின் கொடி போலும் பெண்கள் இனிய ஐந்து வெவ்வேறு வாசனையுடைய தக்கோலம் குங்குமப்பூ இலவங்கம் கற்பூரம் சாதிக்காய் முதலிவற்றுடன் வெற்றிலைபாக்காகும்; உண்டபின் அருந்தும் அடைக்காயமுதும் அப்பெண்கள்ஏந்தினர். 77

ஆய சிறப்பிற் பூசனைகள் அளித்த எல்லாம் அமர்ந் தருளித்
தூய நீறு தங்கள்திரு முடியில் வாங்கித் தொழுதணிந்து
மேய விருப்பி னுடனிருப்பக் கழறிற் றறிவார் மெய்த்தொண்டின்
சேய நீர்மை அடைந்தாராய் நம்பி செம்பொற் கழல் பணிந்தார்.

இவ்வாறான சிறப்பில் செய்திட்ட பூசனைகள் எல்லாம் கணவரும் தோழரும் ஏற்று இருந்தருளி; பின்னர் தூய திருநீற்றை வாங்கித் தங்கள் திருமுடியில் தொழுது அணிந்து: பொருந்திய விருப்பத்துடன் சேர அரசர் பெருமானுடன் சுந்தரர் பெருமான் இருந்திட; அதுவேளை கழறிற்றறிவார் உண்மையாம் தொண்டின் செவ்விய நலத்தை அடைந்தவராய் எழுந்து சுந்தர மூர்த்தி சுவாமிகளது செம்பொன் மயமான திருவடிகளைப் பணிந்தார்; 78

மலைநாட் டரசர் பெருமானூர் வணங்க வணங்கி எதிர் தழுவிக்
கலைநாட்பெருகு மதிமுகத்துப் பரவை யார்தங் கணவனூர்
சிலைநாட் டியவெல் கொடியாரைச் சேரத் தந்தார் எனக்கங்கை
அலைநாட் கொன்றை முடிச்சடையார் அருளை பேற்றி யுடனமர்ந்தார்.

மலைநாட்டின் அரசர் சேரர் பெருமானூர் வணங்க சுந்தரர் பெருமானும் வணங்கி; முன்பாகத்தழுவி பூரண கலையுடன் பொலியும் சந்திரனின் ஒளிமுகமுடைய பரவையாரின் கணவனூர் சுந்தரரும்; வில்நாட்டிய கொடியுடைய சேரஅரசரை தோழமையாகச் சேரத் தந்தார் தமக்கு என்று கங்கையாறு அணித்திடும் அன்றலர்

ந்த கொன்றைப் பூச்சூடிய சடையுடைய சிவன் அருளே போற்றி அவருடன் இருந்தார். 79

செல்வத் திருவா ரூர்மேவுஞ் செம்பொற் புற்றில் இனிதமர்ந்த
வில்வெற் புடையார் கழல்வணங்கி வீதி விடங்கப் பெருமானே
மல்லற் பவனி சேவித்து வாழ்ந்து நாளும் மனமகிழ்ந்து
சொல்வித் தகர்தாம் இருவர்களுந் தொடர்ந்த காதலுடன்சிறந்தார்.

செல்வமுடைய திருவாரூரில் பொருந்திய செம்பொன்னின் புற்றின் மீது இனிதே தங்கிய; வில்லாக மலையை உடைய சிவபெருமான் திருவடிகளை வணங்கி வீதி விடங்கர் எனும் சிறப்புப் பெயருடைய தியாகராசப் பெருமானே அவர் திருவுலாவரும் பேரற்புதமான பவனியில் சேவித்து வாழ்வு பெற்று; நாளும் மனம் மகிழ்ந்து சொல்லின் வித்தகர் சேரரும் சுந்தரருமாய இருவரும் தொடர்ந்து எழும் பெருவிருப்பால் சிறந்து அங்கிருந்தனர். 80

இவ்வா றிருழகு நாளின்கண் இலங்கு மணிப்பூண் வன்றொண்டர்
மைவாழ் களத்து மறையவனூர் மருவும் இடங்கள் பலவணங்கிச்
செய்வார் கன்னித் தமிழ்நாட்டுத் திருமா மதுரை முதலான
மொய்வார் சடையார் மூதூர்கள் இறைஞ்ச முறைமை யால் நிறைந்தார்.

இவ்வாறு இவர் ஒழுகி வரும் நாட்களில் இலங்கிடும் இரத்தினபரணமுடைய சுந்தரர் கரிய நஞ்சு வாழும் அழகிய கண்டமுடைய கடவுள் வாழும் இடங்கள் பல வணங்கி செம்மை நிலவும் கன்னி நாடு என்னும் பாண்டி நாடாம் தமிழ் நாட்டில் திருவுடைய மதுரை முதலான மெய்மையான சடையுடைய பெருமானின் முதியஊர்கள் சென்றுவணங்கிட திருஅருளின் முறமையால் நிறைந்தார்; 81

சேரர் பிரானும் ஆரூரர் தம்மைப் பிரியாச் சிறப்பாலும்
வாரம் பெருகத் தமக்கன்று மதுரை ஆல வாயமர்ந்த
வீரர் அளித்த திருமுகத்தால் விரும்பும் அன்பின் வணங்கு தற்குச்
சார எழுந்த குறிப்பாலும் தாமும் உடனே செலத் துணிந்தார்.

அது வேனே சேரர் பெருமானும் சுந்தரமூர்த்தி சுவாமிகளை பிரியாத நண்பின் சிறப்பாலும் அன்பு பெருகத் தமக்கு அன்று மதுரை நகரில் திருவாலவாயில் அமர்ந்த கடவுள் கொடுத்தனுப்பிய திருமுகப்பாசுரத்தால் விருப்பமுறும் அன்பினால் வணங்கிடுதற்கு சார்புதோன்றி எழுந்த உள்ளக் குறிப்பாலும் தாமும் சுந்தரருடனே கூடச்சென்றிடத் திருவுளம் துணிந்து கொண்டார். 82

இருவர் திருவுள் ளமும்இசைந்த பொழுதில் எழுந்து திருவாரூர்
ஒருவர் மலர்த்தாள் புக்கிறைஞ்சி உடன்பாட் டருளால் போந்தருளி
மருவும் உரிமைப் பெருஞ்சுற்றம் வரம்பில் பணிகள் வாகனங்கள்
பொருவில் பண்டா ரங்கொண்டு போது வார்கள் உடன்போத.

சுந்தரர் சேரர் இருவரது திருவுள்ளமும் பாண்டி நாடுசெல்ல இசைந்த பொழுதில் எழுந்து திருவாரூர் இருந்த ஒருவர் சிவனது மலரடிகளை; கோயில் சென்று வணங்கி; திருவருளின் உடன்பாட்டால் அப்பால் இருவரும் சென்றருளி நம்முன் பணிசெய்யப் பொருந்திய பெரும் சுற்றத்தோர் அளவற்ற ஆபரணங்களையும் வாகனங்களையும் நிகரற்ற நிதியங்களையும் கொண்டு செல்வார்கள் கூடச் செல்லவும் 83

சேவித் தணையும் பரிசனங்கள் சூழத் திருவா ரூரிறைஞ்சிக்
காவிற் பயிலும் புறம்பணையைக் கடந்து போந்து கீழ்வேளூர்
மேவிப் பரமர் கழல்வணங்கிப் போந்து வேலைக் கழிக்கானல்
பூவிற் றிகழும் பொழில்நாகை புகுந்து காரோ ணம்பணிந்தார்.

சேவகம் செய்து வரும் ஏவலர்கள் சூழ; திருவாரூர் வணங்கிச் சென்று சேவலையால் சிறந்து விளங்கிடும் திருவாரூர் புறம்சூழ்ந்த இடங்களைக் கடந்து போய் கீழ்வேளூர் என்னும் தலம்சென்று அடைந்து சிவபெருமான் திருவடி வணங்கிப் போய் சமுத்திரத்து கரையில் கழிநிலத்தில் வெப்பம் உடன்மலர்கள் சிறந்தசோலைகளை உடையநாகபட்டினத்துச் சென்று எம்பெருமானது திருநாகைக்காரோணம் என்னும் தலத்தைச் சேர்ந்து பணிந்தார்; 84

திருக்கா ரோணச் சிவக்கொழுந்தைச் சென்று பணிந்து சிந்தையினே
உருக்கார் வச்செந் தமிழ்மாலே சாத்திச் சில நாள் உறைந்துபோய்ப்
பெருக்கா றுலவு சடைமுடியார் இடங்கள் பலவும் பணிந்தேத்தி
அருட்கா ரணர்தம் திருமறைக்கா டணைந்தார் சேரர் ஆரூரர்.

திருக்காரோணக் கோயிலில் இருந்த சிவக்கொழுந்தை சென்று பணிந்து அன்பர் சிந்தையினே உருக்கிடும் ஆர்வமுடைய செந்தமிழ் மாலே பாடி எம்பிராற்கு பாமாலே அணிந்து; சில நாள் அங்கு தங்கி அப்பால் போய்; பெருகும் கங்கையாறுடைய கடவுள் அமர்ந்த இடங்கள் பலவும் பணிந்து போற்றி திருவருட்கு முதற்காரணராய சிவன் அமர்ந்த திருமறைக்காடு (வேதாரணியம்) என்னும் கோவிலேச் சேர்ந்தார்கள் சேரரும் சுந்தரரும். 85

முந்நீர் வலங்கொள் மறைக்காட்டு முதல்வர் கோயில் சென்றிறைஞ்சிச்
செந்நீர் வாய்மைத் திருநாவுக் கரசும் புகலிச் சிவக்கன்றும்
அந்நேர் திறக்க அடைக்க எனப் பாடுந் திருவா யிலே அணைந்து
நன்னீர் பொழியும் விழியினராய் நாயன் மாரை நினைந்திறைஞ்சி.

பெருங்கடல் வலம் கொள்ளும் திருமறைக் காட்டில் தம்முதல்வர் கோயில் சென்று வணங்கி செப்பமாய வாய்மை மொழியால் பெருமானேப் பாடிடும் திருநாவுக்கரசரும் சீகாழிச் சிவக்குழந்தையாய சம்பந்தப் பெருமானும் முன்னர் அங்கு வந்து அன்று நின்று வேதம் காப்பிட்டகதவை நேராகத் திறக்கவும் அடைக்கவும் பாடிடும் அருள் உடைய அத்திருவாயிலே அணைந்து: நல்ல நீர் பொழியும விழியுடையராய் நாயன் மாராம் அப்பெரு மக்கள் இருவரையும் நினைந்து வணங்கி. 86

நிறைந்த மறைகள் அர்ச்சித்த நீடு மறைக்காட் டருமணியை
இறைஞ்சி வீழ்ந்து பணிந்தெழுந்து போற்றி யாழைப் பழித்து என்னும்
அறைந்த பதிகத் தமிழ்மாலே நம்பி சாத்த அருட்சேரர்
சிறந்த அந்தா தியிந் சிறப்பித் தனவே யோதித் தினைத்தெழுந்தார்.

நிறைந்த வேதங்கள் அர்ச்சனைபுரித்த நீடித்த சிறப்புடைய திருமறைக்காட்டமர்ந்த அருமணியைக்கண்டு வணங்கிவிழ்ந்து பணிந்து எழுந்து போற்றி யாழைப்பழித்து, எனத்தொடங்கி உரக்கப் பாடிய திருப்பதிகத் தமிழ்ப்பாமாலேயை சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடியருளி பாமாலே சூட்ட; எம்பெருமானே சிறந்ததொரு அந்தாதியில் சிறப்பித்தார் சேரர்பெருமான். 87
சுந்தரமூர்த்தி சுவாமிகள் அங்கு பாடிய பதிகம் இதுவாகும்.

திருமறைக்காடு

பண்—காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

யாழைப்பழித் தன்னமொழி மங்கையொரு பங்கன்
பேழைச்சடை முடிமேற்பிறை வைத்தான்இடம் பேணில்
தாழைப்பொழி லூடேசென்று பூழைத்தலே நுழைந்து
வாழைக்கனி கூழைக்குரங் குண்ணும்மறைக் காடே. 1

சிகரத்திடை இளவெண்பிறை வைத்தான்இடம் தெரியில்
முகரத்திடை முத்தின்னெளி பவளத்திரள் ஓதத்
தகரத்திடை தாழைத்திரள் ஞாழற்றிரள் நீழல்
மகரத்தொடு சுறவங்கொணர்ந் தெற்றும்மறைக் காடே. 2

அங்கங்களும் மறைநான்குடன் விரித்தானிடம் அறிந்தோம்
தெங்கங்களும் நெடும்பெண்ணையும் பழம்வீழ்மணற்படப்பை
சங்கங்களும் இலங்கிப்பியும் வலம்புரிகளும் இடறி
வங்கங்களும் உயர்கூம்பொடு வணங்கும்மறைக் காடே. 3

நரைவிரவிய மயிர்தன்னெடு பஞ்சவ்வடி மார்பன்
உரைவிரவிய உத்தமனிடம் உணரல்லுறு மனமே
குரைவிரவிய குலேசேகரக் கொண்டற்றலே விண்ட
வரைபுரைவன திரைபொருதிழிந் தெற்றும்மறைக் காடே. 4

சங்கைப்பட நினையாதெழு நெஞ்சேதொழு தேத்தக்
கங்கைச்சடை முடிஉடையவர்க் கிடமாவது பரவை
அங்கைக் கடல் அருமாமணி உந்திக்கரைக் கேற்ற
வங்கத்தொடு சுறவங்கொணர்ந் தெற்றும்மறைக் காடே. 5

அடல்விடையினன் மழுவாளினன் அலராலணி கொன்றைப்
படருஞ்சடை முடியுடைவர்க் கிடமாவது பரவைக்
கடலிடையிடை கழியருகினிற் கடிநாறுதண் கைதை
மடலிடையிடை வெண்குருகெழு மணிநீர்மறைக் காடே. 6

முளைவளரிள மதிஉடையவன் முன்செய்தவல் வினைகள்
களைகளைந்தெனே ஆளல்லுறு கண்டன்னிடஞ் செந்நெல்
வளைவிளைவயற் கயல்பாய்தரு குணவார்மணற் கடவாய்
வளைவளையொடு கலஞ்சலங்கொணர்ந் தெற்றும்மறைக் காடே. 7

நலம்பெரியன சுரும்பார்ந்தன நங்கோன்இடம் அறிந்தோம்
கலம்பெரியன சாருங்கடற் கரைபொருதிழி கங்கைச்
சலம்புரிசடை முடிஉடையவர்க் கிடமாவது பரவை
வலம்புரியொடுசலஞ்சலங் கொணர்ந்தெற்றும் மறைக்காடே. 8

குண்டாடியுஞ் சமணுடியுங் குற்றுடுக்கையர் தாமும்
கண்டார்கண்ட காரணம்மவை கருதாதுகை தொழுமின்
எண்டோளினன் முக்கண்ணினன் ஏழிசையினன் அறுகால்
வண்டாடுதண் பொழில்சூழ்ந்தெழு மணிநீர்மறைக்காடே. 9

பாரூர்பல புடைசூழ்வள வயல்நாவலர் வேந்தன்
வாரூர்வன முலையாள்உமை பங்கன்மறைக் காட்டை
ஆரூரன தமிழ்மாலைகள் பாடும்மடித் தொண்டர்
நீரூர்தரு நிலனேடுயர் புகழாகுவர் தாமே. 10

திருச்சிற்றம்பலம்

சேரர் பெருமானது திருமறைக் காட்டில் பாடிய அந்தாதி தெரியப்படவில்லே

எழுந்து பணிந்து புறத்தெய்தி இருவர் பெருந்தொண்டருஞ் சிலநாள்
செழுந்கண் பழனப் பதியதனுள் அமர்ந்து தென்பால் திரைக்கடல்நஞ்
சழுந்து மிடற்றூர் அகத்தியான் பள்ளி இறைஞ்சி அவிர்மதியக்
கொழுந்து வளர்செஞ் சடைக்குழகர் கோடிக் கோயில் குறுகினர்.

திருமறைக்காட்டு ஈசனே வணங்கி எழுந்து பணிந்து வெளிவேவந்து; இருவரும் பெருந்தொண்டருடன் சிலநாள் செழுமையாய வயல்சூழ்ந்த அப்பதியுள் தங்கிஇருந்து பின்னர் சென்று தென்திசையில், திரைக்கடல் எழுந்த நஞ்சினே உண்டு தங்கவைத்த கண்டமுடையகடவுளின் திருஅகத்தியான்பள்ளி என்னும் கோயில் வணங்கி அப்பால்போய் அழகிய பிறையின் கொழுந்து வளரும் செஞ்சடையுடன் தோடணிந்த பெருமானின் திருக்கோடிக் கோயில் சென்றடைந்தார். 88

கோடிக் குழகர் கோயில் அயல் குடிகள் ஒன்றும் புறத் தெங்கும்
நாடிக் காணு துள்புக்கு நம்பர் பாதந் தொழுதுள்ளம்
வாடிக் கடிதாய்க் கடற்காற்(று) என் றெடுத்து மலர்க்கண் ணீர்வாரப்
பாடிக் காடு காள்புணர்ந்த பரிசும் பதிகத் திடைவைத்தார்.

திருக்கோடிக்கோயிலில் குழகர்என்னும் நாமமுடைய பெருமானது அக்கோயில்அயலே குடிகளி ஒன்றும் புறத்தே எங்குமே தேடியும் காணாது பின்பு கோயில் உள்ளே சென்று எம்பெருமானது பாதம் தொழுது உள்ளம் கவலையால் வாடி "கடிதாய்க் கடற்காற்று எனத்தொடங்கி பாடலெடுத்து மலர்போன்ற திருக்கண்ணில் நீர்வடிந்திடப்பாடி காடுகாள் என்னும் வனதேவதைகளுடன் சுவாமி தனியே சேர்ந்திருந்த சிறப்பையும் எடுத்து தம்திருப்பதிகத்திடை வைத்து சிறப்பித்து அருளினர் எம்பிரானர் சுந்தரர். 89

அவர் பாடியபதிகம் இதுவாகும்.இப்பதிகத்து சுவாமிஅயலே குடியின்றி தனித்திருக்கக்கண்ட கவலையும் தோன்றக்காண்க.

திருக்கோடிக்குழகர்

பண்—கொல்லி

திருச்சிற்றம்பலம்

கடிதாய்க் கடற்காற்று வந்தெற்றக் கரைமேல்
குடிதான் அயலே இருந்தாற் குற்றமாமோ
கொடியேன் கண்கள்கண் டனகோடிக் குழகீர்
அடிகேள் உமக்கார் துணையாக இருந்தீரே. 1

முன்னருன் கடல்நஞ்சம் உண்ட அதனாலோ
பின்னருன் பரவைக் குபகாரம் செய்தாயோ
குன்றுப் பொழில்சூழ் தருகோடிக் குழகா
என்னருன் தனியே இருந்தாய் எம்பிரானே. 2

மத்தம் மலிசூழ் மறைக்கா டதன்தென்பால்
பத்தர் பலர்பாட இருந்த பரமா
கொத்தரர் பொழில்சூழ் தருகோடிக் குழகா
எத்தால் தனியே இருந்தாய் எம்பிரானே. 3

காடேல் மிகவா லிதுகா ரிகைஅஞ்சக்
கூடிப் பொந்தில் ஆந்தைகள் கூகைகுழற
வேடித்தொண்டர் சாலவுந் தீயர் சழக்கர்
கோடிக் குழகா இடங்கோயில் கொண்டாயே. 4

மையார் தடங்கண்ணீ பங்கா கங்கையாளும்
மெய்யாகத் திருந்தனள் வேறிடம் இல்லை
கையார் வளைக்காடு காளோடும் உடனைக்
கொய்யார் பொழிற்கோடி யேகோயில் கொண்டாயே. 5

அரவேர் அல்குலாளை ஓர்பாகம் அமர்ந்து
மரவங் கமழ்மா மறைக்கா டதன்தென்பால்
குரவப் பொழில்சூழ் தருகோடிக் குழகா
இரவே துணையாய் இருந்தாய் எம்பிரானே. 6

பறையுங் குழலும் மொலிபாடல் இயம்ப
அறையுங் கழலார்க்க நின்றுடும் அமுதே
குறையாப் பொழில்சூழ் தருகோடிக் குழகா
இறைவா தனியே இருந்தாய் எம்பிரானே. 7

ஒற்றியூ ரென்றஊ னத்தினு லதுதானே
அற்றப் படஆ ரூரதென் றகன்றுயோ
முற்று மதிசூடிய கோடிக் குழகா
எற்றுல் தனியே இருந்தாய் எம்பிரானே. 8

நெடியானெடு நான்முக னும்மறி வொண்ணாப்
படியான்பலி கொள்ளும் இடங்குடி இல்லை
கொடியார்பலர் வேடர்கள் வாழுங் கரைமேல்
அடிகேள் அன்பதா யிடங்கோயில் கொண்டாயே. 9

பாரூர்மலி சூழ்மறைக் காடதன் தென்பால்
ஏரார்பொழில் சூழ்தரு கோடிக் குழகை
ஆரூரன் உரைத்தன பத்திவை வல்லார்
சீருர்சிவ லோகத் திருப்பவர் தாமே. 10

திருச்சிற்றம்பலம்

அங்கு வைகிப் பணிந்தருளாற் போவார் அகன்சோ ணாட்டரனூர்
தங்கும் இடங்கள் வணங்கிப்போய்ப் பாண்டி நாடு தனைச்சார்ந்து
திங்கள் முடியார் திருப்புத்தூர் இறைஞ்சிப் போந்து சேண்விளங்கும்
மங்குல் தவழும் மணிமாட மதுரை மூதூர் வந்தணைந்தார்.

அங்கு தங்கிப்பணிந்து அருளின் செயலால் மேற் கொண்டு செல்வராகும் எம் சுந்தர மூர்த்தி சுவாமிகளும் கழறிற்றறிவார் சேரமான் பெருமானும்; சோழ நாட்டில் எம்பிரான்சிவன் தங்கி இருக்கும் இடங்கள் வணங்கிச்சென்று பாண்டிநாட்டினைச் சேர்ந்து இளம் பிறையை முடியில் சூடிய பெருமானின் திருப்புத்தூரினை வணங்கி அப்பால் போய் வானில் விளங்கும் மேகம் தவழும் அழகிய உயர்ந்த மாடங்கள் உடைய மதுரை எனும்முதிய நகரினை வந்தடைந்தார்கள். 90

சேரமான் தோழரும்அச் சேரர் பிரா னும்பணிப்பூண்
ஆரமார் பரைமதுரை ஆலவா யினில்வணங்க
வாரமா வந்தணைய வழுதியார் மனக்காதல்
கூரமா நகர்கோடித் தெதிர்கொண்டு கொடுபுக்கார்.

சேர அரசரது தோழர் சுந்தரரும் அச்சேரர் பெருமானும் பாம்பினை ஆபரணமாக மார்பில் பூண்ட கடவுளை மதுரை நகரில் உள்ள திருவாலவாய்க்கோவிலில் வணங்கிட மனதில் ஆர்வமுடன் வந்து சேர; அது அறிந்த பாண்டிய அரசரும் மனதில் இவர்பால் பெரும் காதல் கொள்ள நகரினை அலங்கரித்து வழி எதிர்கொண்டு வரவேற்று அழைத்துச் சென்றனர். 91

தென்னவர்கோன் மகளாரைத் திருவேட்டு முன்னரே
தொன்மதுரை நகரின்கண் இனிதிருந்த சோழனூர்
அன்னவர்கள் உடன்கூட அணையஅவ ருங்கூடி
மன்னுதிரு வாலவாய் மணிக்கோயில் வந்தணைந்தார்.

அதுவேளை பாண்டிய நாட்டு அரசனின் மகளாரைத் திருமணம் செய்து எம்பிரான் இவர்கள் வருமுன்பே பழைய நகரமாகும் மதுரையில் இனிதிருந்த சோழ அரசரும் அங்கு இவர்களுடன் வந்து சேர; அங்கு சோழஅரசருடனும் பாண்டிய அரசருடனும் கூடி சீர்விளங்கிய திருவாலவாய் என்னும் அழகிய கோவிலினை வந்தடைந்தார் எம்பிரான் சுந்தரர். 92

திருவால வாயமர்ந்த செஞ்சடையார் கோயில்வலம்
வருவார்முன் வீழ்ந்திறைஞ்சி வன்றொண்டர் வழித்தொண்டு
தருவாரைப் போற்றிசைத்துத் தாழ்ந்தெழுந்து வாழ்ந்துதமிழ்ப்
பெருவாய்மை மலர்பூணைந்து பெருமகிழ்ச்சி பிறங்கினார்.

திருவாலவாயில் அமர்ந்தருளிய செஞ்சடை உடைய பெருமானது கோயிலினை வலம் வரும் சுந்தரர்; எம்பிரான் திருமுன்பு வீழ்ந்து வணங்கி; இறைவன்பால் நல் வழிபெறும் தொண்டு தருகின்ற பெருமானை போற்றிப் பாடி தாழ்ந்து எழுந்து என்றும் அழிவிலா உண்மை வாக்கால் தேவார மாலை பாடிச் சூட்டி பெருமகிழ்ச்சியுடன் விளங்கினார். 93

படியேறு புகழ்ச்சேரர் பெருமானும் பார்மிசைவீழ்ந்து
அடியேனைப் பொருளாக அளித்ததிரு முகக்கருணை
முடிவேதென் றறிந்திலேன் எனமொழிகள் தடுமாறக்
கடியேறு கொன்றையார் முன்பரவிக் களிகூர்ந்தார்.

அதுவேளை இப் பூமியில் என்றும் பெருகவிளங்கிய புகழுடைய சேரமான் பெருமானும் என்பிரான் திருமுன்பு பூமிமீது வீழ்ந்து வணங்கி அடியேனையும் ஒருபொருளாகக்கொண்டு அன்று கொடுத்தருளிய திருமுகத்தின் கருணையின் முடிவுஎ தினையும்யான் அறியமாட்டேன் எனதமது மொழி அன்பின்பெருக்கால் பேசோணவகை தடுமாறிட வாசனை மிகுந்த கொன்றை மாலை முடியுடைய பெருமான் முன்பாகப் போற்றி மகிழ்ச்சி கொண்டார். 94

செம்பியனு ருடன்செழியர் தாம்பணிந்து சேரருடன்
நம்பியுமூன் புறத்தனைய நண்ணியபே ருவகையால்
உம்பர்பிரான் கோயிலினின் றுடன்கொடுபோய் இருவர்க்கும்
பைம்பொன் மணிமாளிகையில் குறைவறுத்தார் பஞ்சவனர்.

பாண்டிய அரசருடன் சோழ அரசரும் எம்பிரானைப் பணிந்து சேரருடன் சுந்தரமூர்த்திசுவாமிகளும் தம்முன்பு வெளியேவந்திட; அவரைக்கண்டு தம்மிடத்துற்ற பெருமகிழ்ச்சியால் தேவர்களது பெருமான் கோவிலில் நின்றும் உடன் அவர்களை அழைத்துச்சென்று; இருவருக்கும் தமது பைம்பொன் மாளிகையில் விருந்துபசரணைகள் சிறப்புறச்செய்து மகிழ்ந்தார் பாண்டியமன்னனர். 95

உளமகிழக் கும்பிட்டங் குறையுநா ளுதியருடன்
கிளரொளிப்பூண் வன்றொண்டர் தாமிருந்த இடங்கெழுமி
வளவனர் மீனவனர் வளம்பெருக மற்றவரோடு
அளவளா வியவிருப்பால் அமர்ந்துகலந் தினிதிருந்தார்.

இவ்வாறு எமது தலைவர் சுந்தரர் தம் உள்ளம் மகிழக் கும்பிட்டு அங்கு தங்கி இருக்கும் நாளில் சேர அரசருடன் ஒளிகிளரும் இரத்தினவாபரணமணிந்த சுந்தரர் இருவரும் இருந்த திருமடத்தில் வந்து சோழ அரசரும் பாண்டிய அரசரும்கூடி நல்வளம் பெருகும் உபசரிப்புப் பொருளகளுடன் சேர்ந்து அவைகளை காணிக்கையாக வைத்து மற்று அவருடன் அளவளாவிய அன்பினுல் தங்கி நட்புரிமையால் கலந்தினிதிருந்தனர். 96

அன்னுளின் மதுரைநகர் மருங்கரனர் அமர்பதிகள்
பொன்னுர மணிமார்பில் புரவலர்மூ வருமபோதச்
செந்நாவில் முனைப்பாடி திருநாடர் சென்றிறைஞ்சிச்
சொன்மாலை களும்சாத்தி தொழத் திருப்பூ வணத்தணைந்தார்.

அந்த நாட்களில் மதுரைநகரின் அயலே உள்ள எம்பெருமான் அமர்ந்த பதிகள் பலவற்றிலும்' பொன்மாலை அணிந்த மார்புடைய சேரர், சோழர், பாண்டியராகும் மூவேந்தருடன் செல்ல செந்தமிழ் நாவலராகும் திருமுனைப்பாடி எனும் திருநாட்டின் அருள்அரசர் எம்பிரான் சுந்தரர் சென்று, வணங்கி, சொல் நிரம்பிய பாமாலைகளும் சாத்திவணங்கி அப்பால் திருப்பூவணம் என்னும் தலத்தைச்சென்று சேர்ந்தார். 97

நீடுதிருப் பூவணத்துக் கணித்தாக நேர்செல்ல
மாடுவரும் திருத்தொண்டர் மன்னியவப் பதிகாட்ட
தேடுமறைக் கரியாரைத் திருவுடையார் என்றெடுத்துப்
பாடுசையில் பூவணமீதோ வென்று பணிந்தணைவார்.

நீடித்த திருவுடைய திருப்பூவணம் என்னும் தலத்துக்கு சமீபமாக சுந்தரமூர்த்திசுவாமிகள் நேரே செல்லலும், அதுவேளை அவர் அருகில்வரும் திருத்தொண்டர் விளங்கிய அத் திருப்பூவணப்பதியினைக் காட்டிட கண்டுகொண்டு அப்பதிஅமர்ந்த தேடிய வேதங்களுக்கும் அரிய பெருமானை 'திருவுடையார்' எனப் பாடஎடுத்து இசையுடன் பாடி : திருப்பூவணம் ஈதோ' என்று முடித்து பணிந்துசென்று அங்குசேர்வார். சுந்தரமூர்த்திசுவாமிகள் 98

அவர் திருப்பூவணத்துப் பெருமானை அவரது கோயில்செல்லும்போது பாடிய பதிகம் இதுவாகும்.

திருப்பூவணம்

பண்—இந்தளம்

திருச்சிற்றம்பலம்

திருவுடை யார்திரு மால்அய னுலும், உருவுடை யார்உமை யாளோர் பாகம்
புரிவுடை யார்அடை வார்வினை தீர்க்கும், புரிவுடை யார்உறை பூவணம் ஈதோ.1

எண்ணி இருந்து இடந்து நடந்தும், அண்ண லெனுதினை வார்வினை தீர்ப்பார்
பண்ணிசை யார்மொழி யார்பலர் பாடப், புண்ணிய னுர்உறை பூவணம் ஈதோ.2

தெள்ளிய பேய்பல பூதம வற்றொடு, நள்ளிருள் நட்டம தாடல்ந வின்றூர்
புள்ளுவ ராகும் அவர்க்கவர் தாமும், புள்ளுவ னுர்உறை பூவணம் ஈதோ. 3

நிலனுடை மான்மறி கையது தெய்வக், கனலுடை மாமழு ஏந்தியோர் கையில்
அனலுடை யார்அழ காரர்தரு சென்னிப், புனலுடை யார்உறை பூவணம் ஈதோ.4

நடையுடை நல்லெரு தேறுவர் நல்லார், கடைகடை தோறிடு மின்பலி என்பார்
துடியிடை நன்மட வாளொடு மார்பில், பொடியணி வார்உறை பூவணம் ஈதோ.5

மின்னனை யாள்திரு மேனிவி ளங்கவொர், தன்னமர் பாகம தாகிய சங்கரன்
முன்னினை யார் புரம் மூன்றெரி ஊட்டிய, பொன்னனை யான்உறை பூவணம் ஈதோ.6

மிக்கிறை யேயவன் துன்மதி யாலிட, நக்கிறை யேவிர லால்இற ஊன்றி
நெக்கிறை யேநினை வார்தனி நெஞ்சம், புக்குறை வான்உறை பூவணம் ஈதோ.7–8

சீரின் மிகப்பொலி யுந்திருப் பூவணம், ஆரவி ருப்பிட மாஉறை வான்றனை
ஊரன் உரைத்தசொல் மாலைகள் பத்திவை, பாரில் உரைப்பவர் பாவம் அறுப்பரே.10

திருச்சிற்றம்பலம்

சென்றுதிருப் பூவணத்துத் தேவர்பிரான் மகிழ்கோயில்
முன்றில்வலங் கொண்டிறைவர் முன்வீழ்ந்து பணிந்தெழுந்து
நின்றுபர விப்பாடி நேர்நீங்கி யுடன்பணிந்த
வென்றிமுடி வேந்தருடன் போந்தங்கண் மேவினர்.

திருப்பூவணத்துச் சென்று தேவர்பெருமான் மகிழ்ந்திருந்த கோயில்முன்றில் (உள்வீதி) வலங்கொண்டு சுவாமிமுன் வீழ்ந்து பணிந்து எழுந்துநின்று போற்றி சந்நிதிநின்றும் நீங்கி தம்முடன்பணிந்த வெற்றி முடிவேந்தர் மூவருடன்போய் அப்பதியில் தங்கினர் சுந்தரமூர்த்திசுவாமிகள். 99

அப்பதியி லமர்ந்திறைஞ்சிச் சிலநாளி லாரூரர்
முப்பெருவேந் தர்களோடு முதன்மதுரை நகரெய்தி
மெய்ப்பரிவில் திருவால வாயுடையார் விரைமலர்த்தாள்
எப்பொழுதும் பணிந்தேத்தி இன்புற்றங் கமர்கின்றூர்.

அப்பதியில் தங்கி வணங்கி சிலநாள் கழிந்தபின் சுந்தரர் முப்பெரும் வேந்தர்களோடும் பாண்டிநாட்டில் முதன்மையுடைய மதுரைநகரடைந்து; உண்மை அன்பால் திருவாலவாய்க் கோயிலினை உடைய சோமசுந்தரப்பெருமானின் வாசமுடை மலரடிகள் எப்பொழுதும் பணிந்துபோற்றி இன்பமுடன் அங்கு இருக்கின்றூர். 100

செஞ்சடையார் திருவாப்ப னூர்திருவே டகம்முதலாம்
நஞ்சணியுங் கண்டரவர் நயந்தபதி நண்ணியே
எல்சலிலாக் காதலினுல் இனிதிறைஞ்சி மீண்டணைந்து
மஞ்சணையும் மதில்மதுரை மாநகரில் மகிழ்ந்திருந்தார்.

அங்கிருக்கும் நாள் செஞ்சடையுடைய பெருமானது கோயில் திருவாப்பனூர் திருவேடகம் முதலாயுள்ள நஞ்சு அணியும் கண்டமுடை நம்பெருமான் நயந்த

தலங்கள் சென்றடைந்து குறைவிலாத காதலினல் எம்பெருமானே இனிதேவணங்கி மீண்டுவந்து மேகங்கள் படிகின்ற மதிலுடை மதுரைமாநகரில் மகிழ்ந்திருந்தார் சுந்தரர். 101

பரமர்திருப் பரங்குன்றில் சென்றுபார்த் திபரோடு
புரமெரித்தார் கோயில்வலங் கொண்டுபுகுந் துள்ளிறைஞ்சிச்
சிரமலிமா லேச்சடையார் திருவடிக்கீழ் ஆட்செய்யும்
அருமைநினைந்(து) அஞ்சுதும் என்றூரூரர் பாடுவார்.

பின்னர் எம்பெருமானது திருப்பரங்குன்றத்து முப்பெரு வேந்தரோடும்சென்று முப்புரமெரிசெய்த பெருமானது அக்கோயிலே வலங்கொண்டு உள்ளேபுகுந்து வணங்கி தலைகள் மலிந்த மாலைசூடிய பெருமானின் திருவடிக்கீழாக ஆட்பட்டு தொண்டுசெய்யும் அருமையினை நினைந்து அஞ்சுதும் என்று எம்பிரானைச் சுந்தரர் பாடுவார். 102

கோத்திட்டை என்றெடுத்துக் கோதில்திருப் பதிகஇசை
மூர்த்தியார் தமைவணங்கி முக்கோக்களுடன் முன்பே
ஏத்தியவண் டமிழ்மாலை இன்னிசைபா டிப்பரவிச்
சாத்தினார் சங்கரனார் தங்குதிருப் பரங்குன்றில்.

''கோத்திட்டையும்'' என தொடங்கிப் பாட எடுத்த கோதிலாத இசையுடைய திருப்பதிகமதைப்பாடி எம்பெருமானே வணங்கி முப்பெருவேந்தர்கள் முன்பாக எம்பெருமானைப் போற்றிய அத்தமிழ்மாலையை இனிய இசையுடன் பாடிப்போற்றி திருப்பரங்குன்றமர்ந்த சோதியார் சிவனுக்குச் சாத்தினார். 103

அவர் மூவேந்தர் முன்பாக திருப்பரங்குன்றமர்ந்த சோதியாம் சிவனே அவர் திருவடிக்கீழாக ஆட்செய்யும் அருமைநினைந்து அஞ்சுதும் என மொழிந்த திருப் பதிகம் இதுவாகும்.

திருப்பரங்குன்றம்

பண்—இந்தளம்

திருச்சிற்றம்பலம்

கோத்திட்டையும் கோவலும் கோயில்கொண் டூர்உமைக்
கொண்டுழல் கின்றதோர் கொல்லேச் சில்லேச்
சேத்திட்டுக் குத்தித் தெருவே திரியும்
சில்பூத மும்நீ ரும்திசை திசையன
சோத்திட்டு விண்ணோர் பலரும் தொழநும்
அரைக்கோ வணத்தோ டொருதோல் புடைசூழ்ந்
தார்த்திட் டதும்பாம்பு கைக்கொண்ட தும்பாம்(பு)
அடிகேள் உமக்காட் செயஅஞ் சுதுமே. 1

முண்டம் தரித்தீர் முதுகா டுறைவீர்
முழுநீ றுமெய்பூசு திர்மூக்கப் பாம்பைக்
கண்டத்தி லும்தோளி லும்கட்டி வைத்தீர்
கடலேக் கடைந்திட்ட தோர்நஞ்சை உண்டீர்
பிண்டம் சுமந்தும் மொடும்கூட மாட்டோம்
பெரியா ரொடுநட் பினிதென் றிருந்தும்
அண்டம் கடந்தப் புறத்தும் இருந்தீர்
அடிகேள் உமக்காட் செயஅஞ் சுதுமே. 2

மூடாய முயலகன் மூக்கப் பாம்பு
முடைநா றியவெண் தலைமொய்த்த பல்பேய்
பாடா வருபூதங் கள்பாய் புலித்தோல்
பரிசொன் றறியா தனபா ரிடங்கள்
தோடார் மலர்க்கொன் றையும்துன் எருக்கும்
துணைமா மணிநா கம்அரைக் கசைத்தோன்
மூடா தன வேசெய் தீர்எம் பெருமான்
அடிகேள் உமக்காட் செயஅஞ் சுதுமே. 3

மஞ்சுண்ட மாலை மதிசூடு சென்னி
மலையான் மடந்தை மணவாள நம்பி
பஞ்சுண்ட அல்குற் பணைமென் முலையா
ளொடுநீரும் ஒன்றாய் இருத்தல் ஒழியீர்
நஞ்சுண்டு தேவர்க் கமுதம் கொடுத்த
நலம்ஒன் றறியோம் உங்கைநா கமதற்
கஞ்சுண் டுபடம் அதுபோ கவிடீர்
அடிகேள் உமக்காட் செயஅஞ் சுதுமே. 4

பொல்லாப் புறங்காட் டகத்தாட் டொழியீர்
புலால்வா யனபே யொடுபூச் சொழியீர்
எல்லாம் அறிவீர் இதுவே அறியீர்
என்றிரங் குவேன்எல் லியும்நண் பகலும்
கல்லால் நிழற்கீழ் ஒருநாட் கண்டதும்
கடம்பூர்க் கரக்கோ யிலின்முன் கண்டதும்
அல்லால் விரகொன் றிலம்எம் பெருமான்
அடிகேள் உமக்காட் செயஅஞ் சுதுமே. 5

தெண்ணத் தெணத்தெத் தெணஎன்று பாடிச்
சில்பூ தமும்நீ ரும்திசை திசையன
பண்ணன் மறைபா டுதிர்பா சூர்உளீர்
படம்பக் கம்கொட்டுந் திருவொற்றி யூரீர்
பண்ணூர் மொழியா ளோயொர்பங் குடையீர்
படுகாட்ட டகத்தென் றுமோர்பற் றொழியீர்
அண்ணா மலையேன் என்றீர்ஆ ரூருளீர்
அடிகேள் உமக்காட் செயஅஞ் சுதுமே. 6

சிங்கத் துரிமூ டுதிர்த்தே வர்கணம்
தொழநிற் றிர்பெற்றம் உகந்தே றிடுதிர்
பங்கம் பலபே சிடப்பா டும்தொண்டர்
தமைப்பற்றிக் கொண்டாண்டு விடவுங் கில்லீர்
கங்கைச் சடையீர் உம்கருத் தறியோம்
கண்ணுமூன் றுடையீர் கண்ணேயாய் இருந்தால்
அங்கத் துறுநோய் களைந்தா ளகில்லீர்
அடிகேள் உமக்காட் செயஅஞ் சுதுமே. 7

பிணிவண் ணத்தவல் வினைதீர்த் தருளீர்
பெருங்காட் டகத்திற் பெரும்பே யும்நீரும்
துணிவண் ணத்தின்மே லுமொர் தோல் உடுத்துச்
சுற்றும்நா கத்தராய்ச் சுண்ணநீ றுபூசி
மணிவண் ணத்தின்மே லுமொர்வண் ணத்தராய்
மற்றுமற் றும்பல் பலவண் ணத்தராய்
அணிவண் ணத்தராய் நிற்றீர்எம் பெருமான்
அடிகேள் உமக்காட் செயஅஞ் சுதுமே. 8

கோளா ளியகுஞ் சரங்கோள் இழைத்தீர்
மலையின் தலைஅல் லதுகோ யில்கொள்ளீர்
வேளா ளியகா மனைவெந் தழிய
விழித்தீர் அதுவன் றியும்வேய் புரையும்
தோளாள் உமைநங் கையொர்பங் குடையீர்
உடுகூ றையும்சோ றும்தந்தா ளகில்லீர்
ஆளா ளியவே கிற்றீர் எம் பெருமான்
அடிகேள் உமக்காட் செயஅஞ் சுதுமே. 9

பாரோ டுவிண்ணும் பகலும் ஆகிப்
பனிமால் வரைஆ கிப்பரவை ஆகி
நீரோ டுதீயும் நெடுங்காற் றும்ஆகி
நெடுவெள் ளிடையாகி நிலனு மாகித்
தேர்ஓ டவரை எடுத்த அரக்கன்
சிரம்பத் திறுத்தீர் உமசெய் கைகளல்லாம்
ஆரோ டுங்கூடா அடிகேள் இதுவென்
அடியோம் உமக்காட் செயஅஞ் சுதுமே. 10

அடிகேள் உமக்காட் செயஅஞ் சுதும்என்
றமரர் பெருமானே ஆரூரன் அஞ்சி
முடியால் உலகாண்ட மூவேந்தர் முன்னே
மொழிந்தாறு மோர்நான்கு மோரொன் றினையும்
படியா இவைகற்று வல்ல அடியார்
பரங்குன்றம் மேய பரமன் அடிக்கே
குடியாகி வானோர்க்கும் ஓர்கோவும் ஆகிக்
குலவேந்த ராய்விண் முழுதாள் பவரே. 11

திருச்சிற்றம்பலம்

இறைவர் திருத்தொண்டுபுரி அருமையினை இருநிலத்து
முறைபுரியும் முதல்வேந்தர் மூவர்களுங் கேட்டஞ்சி
மறைமுந்நூல் மணிமார்பின் வன்றொண்டர் தமைப்பணிந்தார்
நிறைதவத்தோர் அப்பாலும் நிருத்தர்பதி தொழநினைந்தார்.

இறைவனது திருத்தொண்டு புரியும் அருமைப்பாட்டை அத்திருப்பதிகம் மூல மாக எடுத்துமொழிய; அதனை இப்பெரிய பூமியில் செங்கோலாட்சிபுரியும் முதல் வர்களாய முப்பெரு வேந்தர்களும் கேட்டு அஞ்சி அருமையுணர்ந்து, வேதநெறியின் முப்புரிநூலணிந்த மார்புடைய பெருமான் சுந்தரரைப் பணிந்தார். நிறைந்த தவமுடைய சுந்தரரும் அப்பாலும்சென்று சிவபெருமானுடைய கோவில்கள் தொழு திடநினைந்தார். 104

அந்நாட்டுத் திருப்பதிகள் பலவும் அணைந்திறைஞ்சமலி
நன்னாட்டு வேந்தருடன் நம்பிதாம் எழுந்தருள
மின்னாட்டும் பன்மணிப்பூண் வேந்தர்இரு வரும்மீள்வார்
தென்னாட்டு வேண்டுவன செய்தமைப்பார் தமைவிடுத்தார்.

தாம்நினைந்தவாறு பாண்டிநாட்டிலுள்ள திருத்தலங்கள் பிறவும் அணைந்து வணங்கிடற்கு மலைநாட்டு நல்வேந்தர் சேரருடன் எழுந்தருளிச் சென்றிடலும், அதுவேளை மின்னொளிவிளங்கும் பல முத்தாபரணங்களுடைய பாண்டியநம் சோழ ரும் தொடராது மீண்டுகொள்பவர், தென்பாண்டிநாட்டில் எம்பெருமக்கள் இரு வருக்கும் வேண்டிய சௌகரியங்களை செய்தமைக்க தமது பரிசனர்களை இவர்க ளுடன் அனுப்பினர்; 105

இருபெருவேந்தரும் இயல்பின் மீண்டதற்பின் எழுந்தருளும்
பொருவருஞ்சீர் வன்றொண்டர் புகழ்ச்சேர் உடன்புனிதர்
மருவியதா னம்பலவும் பணிந்துபோய் மலைச்சாரல்
குருமணிகள் வெயிலெறிக்குங் குற்றாலஞ் சென்றடைந்தார்.

சோழர் பாண்டியர் எனும் இருபெரும் அரசரும் இயல்பாகவே மீண்டபிற்பாடு, அப்பாற்செல்ல எழுந்தருளிக்கொள்ளும் நிகரற்ற சிறப்புடைய சுந்தரரும்; புகழ் நிறைந்த கழறிற்றறிவாருடன் கூடி சிவன் அமர்ந்த கோயில்கள் பலவும் பணிந்து போய், மலைகளின் சாரல்களில் அழகிய இரத்தினங்கள் சோதிப்பிரகாசமுடன் வெயில்போலெறிக்கும் திருக்குற்றாலமென்னும் கோயிலைச் சென்றடைந்தார். 106

குற்றாலத் தினிதமர்ந்த கூத்தர்குரை கழல்வணங்கிச்
சொற்றமும மலர்தூனைந்து குறும்பலாத் தொழுதிப்பால்
முற்றாவெண் மதிமுடியார் பதிபணிந்து மூவெயில்கள்
செற்றார்மன் னியசெல்வத் திருநெல்வே லியைஅணைந்தார்.

திருக்குற்றாலத்தலத்தில் இனிதே தங்கிய பெரும்கூத்தராம் சிவனது ஒலிக்கும் சிலம்பணிந்த பாதம் வணங்கி சொல்லின் மாலையான பாமாலைசூட்டி வணங்கி அடுத்த தலமான திருக்குறும்பலாவைத் தொழுது; அதன்பின் பாண்டிநாட்டிலுள்ள முற்றாத வெண்பிறைசூடிய பெருமானின் தலங்கள்பணிந்து முப்புரங்களினையும் அழித்த பூரமான் சிவன்தங்கிய செல்வம் நிறைந்த திருநெல்வேலி என்னும் தலத் தைச் சேர்ந்தார்கள், 107

நெல்வேலி நீற்றழகர் தமைப்பணிந்து பார்திகழ்
பல்வேறு பதிபிறவும் பணிந்தன்பால் வந்தணைந்தார்
வில்வேட ராய்வென்றி விசயனெதிர் பன்றிப்பின்
செல்வேத முதல்வரமர் திருவிரா மேச்சரத்து.

திருநெல்வேலியில் திருநீற்றின் அழகுடைய ஏம்பெருமானைப் பணிந்து பதிகம் பாடி; நிகழும் பல்வேறு தலங்கள் பிறவும்பணிந்து அன்பினல்வந்து சேர்ந்தார்கள்; முன்பொருகால் வில்லுடை வேடராய் வடிவுகொண்டு வெற்றியினையுடைய அருச் சுனன்முன்பாக பன்றியின்பின்னல் சென்றுகொண்ட வேதங்கட்கு முதல்வராய சிவன் அமர்ந்த திருஇராமேச்சரம் என்னும் கோயிலிடத்து. 108

மன்னுமிரா மேச்சரத்து மாமணியை முன்வணங்கிப்
பன்னுதமிழ்த் தொடைசாத்திப் பயில்கின்றூர் பாம்பணிந்த
சென்னியர்மா தோட்டத்துத் திருக்கேதீச் சரஞ்சார்ந்த
சொன்மலர் மாலைகள்சாத்தித் தூரத்தே தொழுதமர்ந்தார்.

விளங்கிய திருஇராமேச்சரத்து பெருமனியாய சிவனை முன்னுகவணங்கி புகழ்ந்து சொல்லப்பெறும் தமிழ்ப்பாமாலை பாடிச்சாத்தி அங்குதங்கியிருப்பவர், பாம் பணிந்த சடையுடைய பெருமானுரது மாதோட்டநகரின்கண் விளங்கிய திருக் கேதீச்சரத்தை சேர்ந்த சொல்லின்மலர்மாலைகள் பாடிச்சாத்தி தூரத்தேநின்று தொழுதிருந்தார். 199

அவர் திருக்கேதீச்சரத்தமர்ந்த பெருமானை இராமேச்சரத்திருந்து தொழுது பாடிய பதிகம் இதுவாகும்,

திருக்கேதீச்சரம்

பண்–நட்டபாடை
திருச்சிற்றம்பலம்

நத்தார்படை ஞானன்பசு ஏறிந்நனை கவிழ்வாய்
மத்தம்மத யானைஉரி போர்த்தமழு வாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்
செத்தார்எலும் பணிவான்திருக் கேதீச்சரத் தானே. 1

சுடுவார்பொடி நீறுந்நல துண்டப்பிறைக் கிளும்
கடமார்களி யானைஉரி அணிந்தகறைக் கண்டன்
படவேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
திடமாஉறை கின்றுந்திருக் கேதீச்சரத் தானே. 2

அங்கம்மொழி அன்னரவர் அமரர்தொழு தேத்த
வங்கம்மலி கின்றகடல் மாதோட்டநன் னகரில்
பங்கஞ்செய்த பிறைசூடினன் பாலாவியின் கரைமேல்
செங்கண்ணர வசைத்தான்திருக் கேதீச்சரத் தானே. 3

கரியகறை கண்டனல்ல கண்மேல்ஒரு கண்ணன்
வரியசிறை வண்டியாழ்செயும் மாதோட்டநன் னகருள்
பரியநிரை எறியாவரு பாலாவியின் கரைமேல்
தெரியும்மறை வல்லான் திருக்கேதீச்சரத் தானே. 4

அங்கத்துறு நோய்கள்அடி யார்மேல்ஒழித் தருளி
வங்கம்மலி கின்றகடல் மாதோட்டநன் னகரில்
பங்கஞ்செய்த மடவாளொடு பாலாவியின் கரைமேல்
தெங்கம்பொழில் சூழ்ந்ததிருக் கேதீச்சரத் தானே. 5

வெய்யவினை யாயஅடி யார்மேல்ஒழித் தருளி
வையம்மலி கின்றகடல் மாதோட்டநன் னகரில்
பையேர்இடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
செய்யசடை முடியான்திருக் கேதீச்சரத் தானே. 6

ஊனத்துறு நோய்கள்ளடி யார்மேல்ஒழித் தருளி
வானத்துறு மலியுங்கடல் மாதோட்டநன் னகரில்
பானத்துறும் மொழியாளொடு பாலாவியின் கரைமேல்
ஏனைத்தெயி றணிந்தான்திருக் கேதீச்சரத் தானே. 7

அட்டன்அழ காகவ்வரை தன்மேல்அர வார்த்து
மட்டுண்டுவண் டாலும்பொழில் மாதோட்டநன் னகரில்
பட்டவ்வரி நுதலாளொடு பாலாவியின் கரைமேல்
சிட்டன்நமை ஆள்வான்திருக் கேதிச்சரத் தானே. 8

மூவரென இருவரென முக்கண்ணுடை மூர்த்தி
மாவின்கனி தூங்கும்பொழில் மாதோட்டநன் னகரில்
பாவம்வினை அறுப்பார்பயில் பாலாவியின் கரைமேல்
தேவன்எனை ஆள்வான்திருக் கேதிச்சரத் தானே. 9

கறையார்கடல் சூழ்ந்தகழி மாதோட்டநன் னகருள்
சிறையார்பொழில் வண்டியாழ்செயுங் கேதிச்சரத் தானை
மறையார்புகழ் ஊரன்னடித் தொண்டன்னுரை செய்த
குறையாத்தமிழ் பத்துஞ்சொலக் கூடாகொடு வினையே. 10

திருச்சிற்றம்பலம்

திருவிரா மேச்சரத்துச் செழும்பவளச் சுடர்க்கொழுந்தைப்
பரிவினுல் தொழுதகன்று பரமர்பதி பிறபணிந்து
பெருவிமா னத்திமையோர் வணங்குபெருந் திருச்சுழியல்
மருவினுர் வண்டெருண்டார் மலேவேந்த ருடன்கூட.

திருஇராமேச்சரத்து நிறைந்த செழும்பவள சுடர்க்கொழுந்தாம் சிவனை அன்பினுல்தொழுது நீங்கி, எம்பெருமானது தலங்கள் பிறவும்பணிந்து வந்து பெரிய விமானங்களில் தேவர்கள்வந்து வணங்கும் பெரும் திருச்சுழியல் என்னும் கோவிலேச் சேர்ந்துகொண்டார் சுந்தரர்பிரான் மலேநாட்டரசர் சேரருடன்கூட. 110

திருச்சுழிய லிடங்கொண்ட செம்பொன்மலேச் சிலேயாரைக்
கருச்சுழியில் வீழாமைக் காப்பாரைக் கடல் விடத்தின்
இருட்சுழியு மிடற்றுரை இறைஞ்சிஎதிர் இதழிமலர்ப்
பருச்சுழியத் துடன் ஊனுய்உயிர் எனும்பா மலர்புனேந்தார்.

திருச்சுழியல் என்னும் தலத்தில் இடங்கொண்ட செம்பொன்னுய மேருமலேயை வில்லாக உடைய பெருமானே இன்னெரு பிறவியில் ஓர் தாய்வயிற்றின் கருவில் வீழாது காப்பவனே; கடல்கொடுத்த நஞ்சின் இருளாய நீலகண்டம் உடையவனே வணங்கி; தமது திருமுடிமேல் எம்பிராணனிந்த கொன்றைமலரின் பெருமாலேயுடன் தமது பாமாலேயும்சேர "ஊனுய் உயிர்" எனத் தொடங்கி எடுத்துப் பாடிய சொல்மலரின்மாலே சூட்டினுர்.

அவர் பாடியணிந்த பதிகம் இதுவாகும். 111

திருச்சுழியல்

பண்—நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

ஊனுய்உயிர் புகலாய்அக லிடமாய்முகில் பொழியும்
வானுய்அதன் மதியாய்விதி வருவான்இடம் பொழிலின்
தேனுதரித் திசைவண்டினம் மிழற்றுந்திருச் சுழியல்
நானுவிதம் நினேவார்தமை நலியார்நமன் தமரே: 1

தண்டேர்மழுப் படையான்மழ விடையான்எழு கடல்நஞ்
சுண்டேபுரம் எரியச்சிலே வளேத்தான்இமை யவர்க்காத்
திண்டேர்மிசை நின்றுனவன் உறையுந்திருச் சுழியல்
தொண்டேசெய வல்லார்அவர் நல்லார்துயர் இலரே: 2

கவ்வைக்கடல் கதறிக்கொணர் முத்தங்கரைக் கேற்றக்
கொவ்வைத்துவர் வாயர்குடைந் தாடுந்திருச் சுழியல்
தெயவத்தினே வழிபாடுசெய் தொழுவார் அடிதொழுவார்
அவ்வத்திசைக் கரசாகுவர் அலராள்பிரி யாளே. 3

மலேயான்மகள் மடமாதிட மாகத்தவன் மற்றுக்
கொலேயானேயின் உரிபோர்த்தளம் பெருமான்திருச் சுழியல்
அலேயார்சடை உடையான்அடி தொழுவார்பழு துள்ளம்
நிலேயார்திகழ் புகழால்நெடு வானத்துயர் வாரே; 4

உற்றுன்நமக் குயரும்மதிச் சடையான்புலன் ஐந்தும்
செற்றுர்திரு மேனிப்பெரு மானூர்திருச் சுழியல்
பெற்றுன்இனி துறையத்திறம் பாமைத்திரு நாமம்
கற்றுரவர் கதியுட் செல்வர் ஏத்தும்மது கூடனே. 5

மலந்தாங்கிய பாசப்பிறப் பறுப்பீர்துறைக் கங்கைச்
சலந்தாங்கிய முடியான்அமர்ந் திடமாந்திருச் சுழியல்
நிலந்தாங்கிய மலராற்கொழும் புகையால்நினேந் தேத்தும்
தலந்தாங்கிய புகழாம்மிகு தவமாஞ்சது ராமே. 6

சைவத்துசெவ் வுருவன்திரு நீற்றன்உரு மேற்றன்
கைவைத்தொரு சிலேயால்அரண் மூன்றும்மெரி செய்தான்
தெய்வத்தவர் தொழுதேத்திய குழகன்திருச் சுழியல்
மெய்வைத்தடி நினேவார்வினே நீத்தல்லெளி தன்றே. 7

பூவேந்திய பீடத்தவன் முனும்மடல் அரியும்
கோவேந்திய வினயத்தொடு குறுகப்புகல் அறியார்
சேவேந்திய கொடியானவன் உறையுந்திருச் சுழியல்
மாவேந்திய கரத்தான்எம சிரத்தான்றன தடியே. 8

கொண்டாடுதல் புரியாவரு தக்கன்பெரு வேள்வி
செண்டாடுதல் புரிந்தான்திருச் சுழியற்பெரு மானேக்
குண்டாடிய சமண்ஆதர்கள் குடைச்சாக்கியர் அறியா
மிண்டாடிய அதுசெய்தது வானுல்வரு விதியே, 9

நீரூர்தரு நிமலன்திரு மலேயார்க்கயல் அருகே
தேரூர்தரும் அரக்கன்சிரம் நெரிந்தான்திருச் சுழியல்
பேரூரென உறைவான்அடி பெயர்நாவலர் கோமான்
ஆரூரன தமிழ்மாலேபத் தறிவார்துயர் இலரே, 10

திருச்சிற்றம்பலம்

அங்கணரைப் பணிந்துறையும் ஆரூரர்க் கவ்வூரில்
கங்குலிடைக் கனவின்கட் காணேயாந் திருவடிவால்
செங்கையினிற் பொற்செண்டுந் திருமுடியிற் சுழியமுடன்
எங்குமிலாத் திருவேடம் என்புருக முன்காட்டி.

நெற்றிக் கண்ணுடைய பெருமானேத் திருச்சுழியலில் பணிந்து தங்கியிருக்கும் சுந்தரமூர்த்திசுவாமிகட்கு; அந்தஊரில் இரவில் யாமத்திடத்து அவரது கனவிலே வாலிபக் கோலமுடைய திருவடிவத்துடன் தமது செங்கையினில் பொற்செண்டும் திருமுடியில் தலேப்பாகையுமுடையராகி, எங்கும் இப்படி அழகுடன் காணமுடியாத திருவேடத்தை சுந்தரரது எலும்பும் உருகும்படி முன்னுகக் காண்பித்தருளி 112

கானப்பேர் யாம்இருப்ப தெனக்கழறிக் கங்கையெனும்
வானப்பே ராறுலவும் மாமுடியார் தாமகல
ஞானப்பே ராளர் உணர்ந் ததிசயித்து நாகமுடன்
ஏனப்பே றெயிறணிந்தார் அருளிருந்த பரிசென்பார்.

சுந்தரரைநோக்கி யாம் இருப்பது கானப்பேர் என மொழிந்து; கங்கையாறு என்னும் வானத்தில் உள்ள பெரும் ஆறுலவும் திருச்சடைமுடியுடைய கடவுள் நீங்கிட; அதுவேஞ ஞானத்தின் பேரறிவாளராய சுந்தரர் நித்திரைநீங்கி எழுந்து எம்பெருமான் கனவில் வந்தருளியமை உணர்ந்து அதிசயித்து "நாகமுடன் பன்றியின் கொம்பணிந்த கடவுளின் அருள் இருந்தவாறு" என மொழிவார், 113

கண்டருளும் படிமுழறிற் றறிவார்க்கு மொழிந்தருளிப்
புண்டரிகம் டலற்கழயற் புனிதர்கபல் வணங்கிப்போய்
அண்டர்பிரான் திருக்கானப் பேரணைவார் ஆரூரர்
தொண்டரடித் தொழலும் எனுஞ் சொற்பதிகத் தொடைபுனைவார்.

தாம் கண்டருளும் கனவின் அத்தன்மையை கழறிற்றறிவார் சேரஅரசர்க்கும் மொழிந்தருளி தாமரைமலரும் நீர்க்குளங்களைக்கொண்ட திருக்கழியலில் இருந்த புனிதனரும் பெருமான் திருவடி வணங்கிச்சென்று தேவர்களது பெருமானின் திருக் கானப்பேர் என்னும் கோவிலைச் சென்றுசேரும் சுந்தரர்; எம்பெருமானை தொண்ட ரடித்தொழலும் எனத்தொடங்கும் சொல்லின் பதிகமாலை பாடிச்செல்வார்; 114

காளையார் தமைக்கண்டு தொழப்பெறுவ தெல்லென்று
தாளைநா ளும்பரவத் தருவார்பால் சார்கின்றார்
ஆளைநீ ரிடைக்காண அஞ்சியநீர் நாய்அயலே
வாளைபாய் நுழைப்பழன முணைப்பாடி வளநாடர்.

பாட எடுத்தருளிய அப்பதிகத்து கனவினில் கண்டருளிய காளைவடிவுடன் வந்த கடவுளைக் கண்டு தொழப்பெறுவது என்று பாடி; திருவடிகளை நாளும் வணங்கிடத் தருகின்ற ஈசன் அவரிடம் செல்கின்றார், ஆனை நீண்டவெளியில் காணப்பயந்த நீர் நாயின் அருகில் வாளைமீன்பாயும் நீர்வளமுடைய வயல்களிருக்கும்—திருமுணைப்பாடி நாட்டுத் தலைவர் சுந்தரர். 115

அவர் கனவில்கண்ட அற்புதமாம் வடிவுடைய பெருமானைக் கண்டுதொழுவது என்று எனை பாடிவந்த அப்பதிகம் இதுவாகும்.

திருக்காளப்பேர்

பண் — புறநீர்மை
திருச்சிற்றம்பலம்

தொண்டர் அடித்தொழலும் சோதி இளம்பிறையும்
சூதன மென்முலையாள் பாகமும் ஆகிவரும்
புண்ட ரிகப்பரிசாம் மேனியும் வானவர்கள்
பூசலிடக் கடல்நஞ் சுண்ட கருத்தமரும்
கொண்டல் எனத்திசழுங் கண்டமும் எண்தோளும்
கோல நறுஞ்சடைமேல் வண்ணமும் கண்குளிரக்
கண்டு தொழப்பெறுவ தென்றுகொ லோ அடியேன்
கார்வயல் சூழ்கானப் பேருறை காளையையே. 1

கூதல் இடுஞ்சடையும் கோளர வும்விரவும்
கொக்கிற குங்குவிர்மா மத்தமும ஒத்நுனதாள்
ஓதல் உணர்ந்தடியார் உன்பெரு மைக்குநினைந்
துள்ளுரு காவிரசும் ஓசையைப் பாடலும்நீ
ஆதல் உணர்ந்தவரோ டன்பு பெருத்தடியேன்
அங்கையின் மாமலர்கொண் டெங்கண தல்லல்கெடத்
காத லுறத்தொழுவ தென்றுகொ லோஅடியேன்
கார்வயல் சூழ்கானப் பேருறை காளையையே. 2

நானுடை மாடெனவே நன்மை தரும்பரனை
நற்பதம் என்றுணர்வார் சொற்பதம் ஆர்சிவனைத்
தேனிடை இன்னமுதை மற்றத னில்தெளியைத்
தேவர்கள் நாயகனைப் பூவுயர் செல்வியனை
வானிடை மாமதியை மாசறு சோதியனை
மாருத மும்மனலும் மண்டலு மும்மாய
கானிடை மாநடனென் றெய்துவ தென்றுகொலோ
கார்வயல் சூழ்கானப் பேருறை காளையையே. 3

செற்றவர் முப்புரம்அன் றட்ட சிலைத்தொழிலார்
சேவகம் முந்நினைவார் பாவக முந்நெறியும்
குற்றமில் தன்அடியார் கூறும் இசைப்பரிசம்
கோசிக மும்மரையிற் கோவண மும்மதனும்

மற்றிகழ் திண்புயமும் மார்பிடை நீறுதுதை
மாமலை மங்கைஉமை சேர்சுவ டும்புகழக்
கற்றன வும்பரவிக் கைதொழல் என்றுகொலோ
கார்வயல் சூழ்கானப் பேருறை காளையையே: 4

கொல்லை விடைக்கழகுங் கோல நறுஞ்சடையிற்
கொத்தல ரும்மிதழித் தொத்தும் அதனருகே
முல்லை படைத்தநகை மெல்லிய லாள்ஒருபால்
மோகம் மிகுத்திலங்குங் கூறுசெய் எப்பரிசும்
தில்லை நகர்ப்பொதுவுற் றூடிய சீர்நடமும்
திண்மழு வங்கைமிசைக் கூரெரி யும்அடியார்
கல்ல வடப்பரிசுங் காணுவ தென்றுகொலோ
கார்வயல் சூழ்கானப் பேருறை காளையையே: 5

பண்ணுத லைப்பயனூர் பாடலும் நீடுதலும்
பங்கய மாதனையார் பத்தியும் முத்தி அளித்
தெண்ணுத லைப்பெருமான் என்றெழு வார்அவர்தம்
ஏசற வும்மிறையாம் எந்தையை யும்விரவி
நண்ணுத லைப்படுமா றெங்ஙனம் என்றயலே
நைகிற என்னைமதித் துய்யும்வ ணம்அருளும்
கண்ணுத லைக்கனியைக் காண்பதும் என்றுகொலோ
கார்வயல் சூழ்கானப் பேருறை காளையையே.

மாலை உரித்ததள்கொண் டங்கம் அணிந்தவனை
வஞ்சர் மனத்திறையும் நெஞ்சணு காதவனை
மூவர் உருத்தனதாம் மூல முதற்கருவை
மூசிடு மால்விடையின் பாகனை ஆகம்உறப்
பாவகம் இன்றிமெய்யே பற்று மவர்க்கமுதைப்
பால்நறு நெய்தயிரைந் தாடு பரம்பரனைக்
காவல் எனக்கிறைஎன் றெய்துவ தென்றுகொலோ
கார்வயல் சூழ்கானப் பேருறை காளையையே. 7

தொண்டர் தமக்கெளிய சோதியை வேதியனைத்
தூய மறைப்பொருளாம் நீதியை வார்கடல்நஞ்
சுண்ட தனுக்கிறவா தென்றும் இருந்தவனை
ஊழி படைத்தவனை டொள்ளரி யும்முணரா
அண்டனை அண்டர்தமக் காகம நூல்மொழியும்
ஆதியை மேதகுசீர் ஓதியை வானவர்தம்
கண்டனை அன்பொடுசென் றெய்துவ தென்றுகொலோ
கார்வயல் சூழ்கானப் பேருறை காளையையே. 8

நாதனை நாதமிகுத் தோசைய தானவனை
ஞான விளக்கொளியாம் ஊன்உயி ரைப்பயிரை
மாதனை மேதகுதன் பத்தர் மனத்திறையும்
பற்று விடாதவனைக் குற்றமில் கொள்கையனைத்
தூதனை என்றனையாள் தோழனை நாயகனைத்
தாழ்மக ரக்குழையுந் தோடும் அணிந்ததிருக்
காதனை நாயடியேன் எய்துவ தென்றுகொலோ
கார்வயல் சூழ்கானப் பேருறை காளையையே: 9

கன்னலை இன்னமுதைக் கார்வயல் சூழ்கானப்
பேருறை காளையைஒண் சீருறை தண்டமிழால்
உன்னி மனத்தயரா உள்ளுரு கிப்பரவும்
ஒண்பொழில் நாவலர்கோன் ஆகிய ஆரூரன்
பன்னும் இசைக்கிழவி பத்திவை பாடவல்லார்
பத்தர் குணத்தினராய் எத்திசை யும்புகழ
மன்னி இருப்பவர்கள் வானின் இழிந்திடினும்
மண்டல நாயகராய் வாழ்வது நிச்சயமே: 10

திருச்சிற்றம்பலம்

மன்னுதிருக் கானப்பேர் வளம்பதியில் வந்தெய்திச்
சென்னிவளர் மதியணிந்தார் செழுங்கோயில் வலங்கொண்டு
முன்னிறைஞ்சி உள்ளணைந்து முதல்வர்சே வடிதாழ்ந்து
பன்னுசெழுந் தமிழ்மாலை பாடினுர் பரவினுர்.

திருவிளங்கி இருக்கும் திருக்கானப்பேர் என்னும் வளமுடைய அப்பதியில் வந்து சுந்தரர் பெருமான் சேர்ந்து திருமுடி மீது பிறையணிந்த பெருமானின் செழுமையான கோயிலினை வலங்கொண்டு முன்பாக வணங்கி உள்ளே புகுந்து முதல்வராம் சிவனுடைய செவ்விய திருவடிகளை தாழ்ந்து எம் பெருமானைப் போற்றிடும் தமிழின் பாமாலை பாடினுர்: வணக்கம் புரிந்தார். 116

ஆராத காதலுடன் அப்பதியிற் பணிந்தேத்திச்
சீராருந் திருத்தொண்டர் சிலநாளங் கமர்ந்தருளிக்
காராரு மலர்ச்சோலைக் கானப்பேர் கடந்தணைந்தார்
போரானேற் றுர்கயிலைப் பொருப்பர்திருப் புனவாயில்.

எம்பிரான் பால் நிராத காதலுடன் அத்தலத்தில் பணிந்து போற்றி செய்து சீர்விளங்கும் திருத்தொண்டர் சுந்தரர் பிரானும் சேரரும் சில நாள் அங்கு தங்கியருளி; மேகங்கள் தங்கிட உயர்ந்த மலர் சோலையினை உடைய அந்தத் திருக்கானப்பேரினை நீங்கி வந்து சேர்கின்றார்கள் போரிடும் இடப ஏற்றினை வாகனமாக உடைய பெருமானும் கைலை மலையை இருப்பிடமாக உடையவருமான சிவபிரானது திருப்புனவாயில் என்னும் பதியினை. 117

புனவாயிற் பதிஅமர்ந்த புனிதர் ஆலயம்புக்கு
மனஆர்வ முறச் சித்தந்நிலைன் லெடுஎன்றே
வினவான தமிழ்பாடி வீழ்ந்திறைஞ்சி அப்பதியில்
சினயானை உரித்தணிந்தார் திருப்பாதந் தொழுதிருந்தார்.

திருப்புனவாயில் என்னும் தலத்தில் இருந்த புனிதராம் சிவனின் கோவிலினில் உட்புகுந்து மனதில் ஈசன்பால் ஆர்வம் பொருந்த அருளையே "சித்தமே நீநினை என்னெடு" என்றே தம் உள்ளத்தை விளுவிய படியான தமிழ்ப்பதிகம் பாடி வீழ்ந்து வணங்கி; அந்தத்தலத்திலேயே கோபமுடைய யானையை உரித்து அதன் தோல் போர்த்த பெருமானின் திருப்பாதம் தொழுது தங்கி யிருந்தார் சுந்தரர் பெருமான்: 118
அவர் தமது சித்தத்தை வேறுபுலன் எண்ணுது தன்னுடன் இறைவனை நினைந்திடுவாய் என எடுத்துப் பாடிய அப்பதிகம் இப்பால் தருகிறோம்:

திருப்புனவாயில்

பண்—பழம்பஞ்சுரம்

திருச்சிற்றம்பலம்

சித்தம் நீநினை என்னெடு சூளறும் வைகலும்
மத்த யானையின் ஈருரி போர்த்த மணுளனுர்
பத்தர் தாம்பலர் பாடிநின் ருடும் பழம்பதி
பொத்தில் ஆந்தைகள் பாட்ட ருப்புன வாயிலே. 1

கருது நீமனம் என்னெடு சூளறும் வைகலும்
எருது மேற்கொளும் எம்பெரு மாற்கிடம் ஆவது
மருத வானவர் வைகும் இடம்மற வேடுவர்
பொருது சாத்தொடு பூசல் அருப்புன வாயிலே: 2

தொக்காய மனம் என்னெடு சூளறும் வைகலும்
நக்கான் நமை யாளுடை யான்நவி லும்மிடம்
அக்கோ டரவார்த்த பிரான் அடிக் கன்பராய்ப்
புக்கார் அவர்போற்றெழி யாப்புன வாயிலே: 3

வற்கென் றிருத்திகண் டாய்மனம் என்னெடு சூளறும்வைகலும்
பொற்குன்றஞ் சேர்ந்ததோர்காக்கைபொன்னு மதுவேபுகல்
சுற்குன்றுந் தூறுங் கடுவெளி யுங்கடற் கானல்வாய்ப்
புற்கென்று தோன்றிடும் எம்பெரு மான்புன வாயிலே: 4

நில்லாய் மனமே என்னெடு சூளறும் வைகலும்
நல்லான் நமை யாளுடை யான்நவி லும்மிடம்
வில்லாய்க் கணை வேட்டுவர் ஆட்ட விருண்டுபோய்ப்
புல்வாய்க் கணம் புக்கொளிக் கும்புன வாயிலே. 5

மறவல் நீமனம் என்னெடு சூ றும் வைகலும்
உறவும் ஊழியும் ஆயபெம் மாற்கிடம் ஆவது
பிறவு கள்ளியின் நீள்கவட் டேறித்தன் பேடையைப்
புறவங் கூப்பிடப் பொன்புனஞ் சூழ்புன வாயிலே. 6

ஏசற்று நீநினை என்னெடு சூளறும் வைகலும்
பாசற்றவர் பாடிநின் ருடும் பழம்பதி
தேசத் தடியவர் வந்திரு போதும் வணங்கிடப்
பூசற் றுடி பூசல் அருப்புன வாயிலே. 7

கொள்ளி வாயின கூரெயிற் றேனம் கிழிக்கவே
தெள்ளி மாமணி தீவிழிக் கும்மிடஞ் செந்தறை
கள்ளி வற்றிப்புல் தீந்துவெங் கானங் கழிக்கவே
புள்ளி மானினம் புக்கொளிக் கும்புன வாயிலே. 8

எற்றே நினை என்னெடு சூளறும் வைகலும்
மற்றேதும் வேண்டா வல்வினை ஆயின மாய்ந்தறக்
கற்றாறு காரிக் காட்டிடை மேய்ந்தகார்க் கோழிபோய்ப்
புற்றேறிக் கூகூ எனஅழைக் குப்புன வாயிலே: 9

பொடியாடு மேனியன் பொன்புனஞ் சூழ்புன வாயிலை
அடியார் அடியன் நாவல ஊரன் உரைத்தன
மடியாது கற்றிவை ஏத்தவல் லார்வினை மாய்ந்துபோய்க்
குடியாகப் பாடிநின் ருடவல் லார்க்கில்லை குற்றமே. 10—11

திருச்சிற்றம்பலம்

பருப்புனவா யிற்பதியில் அமர்ந்தசிவ னர்மகிழும்
விருப்புடைய கோயில்பல பணிந்தருளால் மேவினுர்
பொருப்பிலெடு கானகன்று புனற்பொன்னி நாடணைந்து
பருப்பதவார் சிலையார்தம் பாம்பணிமா நகர்தன்னில்.

திருப்புனவாயில் என்னும் அத்தலத்தே இருந்த சிவபிரான் மகிழ்ந்து உறைதற்கு விருப்பமுடைய கோயில் பல இன்னமும் பணிந்து வந்து அருளினுல் சேர்ந்து கொண்டார் எங்கெனில் தமது யாத்திரையில் மலைகளுடன் காடுகளையும் விடுத்து நீங்கி நீர்வளமுடைய சோழநாட்டை சேரவந்து அங்கு மேருமலையை அழகிய வில்லாகக் கொண்ட சிவன் அமர்ந்த திருப்பாம்பணி எனும் பெயருடைய பெரு நகரத்திடத்தாக. 119

பாதாளீச் சரமிறைஞ்சி அதன்மருங்கு பலபதியும்
வேதாதி நாதர்கழல்வணங்கிமிகு விரைவினுடன்
சூதாருந் துணைமுலையார் மணிவாய்க்குத் தோற்றிரவு
சேதாம்பல் வாய்திறக்குந் திருவாரூர் வந்தணைந்தார்.

பாம்பணி எனும் நகரிடத்தாக இருந்த திருப்பாதாளீச்சரம் என்னும் கோவிலை வணங்கி; அதன் அருகே பல தலங்களிலும் வேதங்கட்கு ஆதி நாயகனை சிவனது திருவடி வணங்கி; மிகு விரைவுடன்; உலக மக்களை மயங்கிட வைத்தலாலே வஞ்சனை நிரம்பியது போல் பருத்த முலையுடைய பெண்களின் அழகிய வாய்க்கு தோற்றதால் பகலில் தன் வாய் திறந்து மலராது இரவில் செவ்வாம்பல் மலர் வாய் திறந்து மலரும் திருவாரூர் சென்று சேர்ந்தார். 120

திருநாவ லூர்வேந்தர் சேரர்குல வேந்தருடன்
வருவாரைத் திருவாரூர் வாழ்வார்கள் எதிர்கொள்ளத்
தருகாத லுடன்வணங்கித் தம்பெருமான் கோயிலினுள்
பெருகார்வத் தொடுவிரும்பும் பெரும்பேறு பெறப்புகுந்தார்.

திருநாவலூர் அரசர் சுந்தரர்; சேரர் குலமக்களது அரசர் கழறிற்றறிவாருடன் வருகின்ற வரை திருவாரூர் வாழும் மக்கள் எதிர் கொண்டிட: அவர்களிடம் கொண்ட மிகு விருப்புடன் வணங்கி தமது பெருமானது கோயில் உள்ளாக பெருகும் ஆர்வத்துடனே இறைவனையே விரும்பிடற்கு உற்ற பெரும் பேறு பெற்றுக் கொள்ளச் சென்று சேர்வுற்றார். 121

வாசமலர்க் கொன்றையார் மகிழ்கோயில் வலங்கொண்டு
நேசமுற முன்னிறைஞ்சி நெடும்பொழுதெ லாம்பரவி
ஏசறவால் திருப்பதிகம் எடுத்தேத்தி எழுந்தருளால்
பாசவினைத் தொடக்கறுப்பார் பயில்கோயில் பணிந்தணைவார்.

வாசமுடைய கொன்றை மாலையணிந்த சடையுடைய சிவபெருமான் மகிழ்ந்திருந்த திருவாரூர்க் கோவிலினை வலம் கொண்டு வந்து அன்பு கொள்ள முன் வணங்கி நெடும் காலமெலாம் 'போற்றி செய்து: பிரிந்திருந்த மையால் வந்த கவலையால் திருப்பதிகமும் எடுத்துப் போற்றி வணங்கி எழுந்து அருளினால்; பாச வினைகளின் வேர் அறுத்திடும் பெருமான் வீற்றிருந்த திருக்கோயிலினைப் பணிந்து வெளியே செல்வாராகி: 122

பரவையார் மாளிகையில் பரிசனங்கள் முன்னெய்த
விரவுபே ரலங்கார விழுச்செல்வம் மிகப்பெருக
வரவெதிர் கொண்டடி வணங்கவன்றொண்டர் மலைநாட்டுப்
புரவலனு ரையுங்கொண்டு பொன்னணி மாளிகைபுகுந்தார்.

பரவையம்மையாரது திருமாளிகையில் தமது ஏவல் தொண்டு செயும் பரிசனர்கள் முன் செல்ல; அங்கு நெருங்கிய பெரும் அலங்காரத்தின் சிறந்த செல்வம் மிகப் பெருகி நல்ல மங்கலச் செயல் யாவும் நிறைந்திட; பரவையம்மை மாளிகை வாய்தலில் வந்து எதிர் கொண்டு திருவடி வணங்க எம் சுந்தரர் மலைநாட்டின் அரசர் சேரரையும் அழைத்துக்கொண்டு பொன்னின் அழகுடைய அம் மாளிகையில் புகுந்தார். 123

பரவியே பரவையார் பரிவுடனே பணிந்தேத்தி
விரவியபோ னகங்கறிகள் விதம்பலவா கச்சமைத்துப்
பரிகலமும் பாவாடை பகல்விளக்கும் உடனமைத்துத்
திருவமுது செய்வித்தார் திருந்தியதேன் மொழியினார்.

உட்புகுந்த சுவாமிகளையும் சேரரையும் பரவை அம்மை அன்புடன் போற்றிப் பணிந்து வணங்கி; சிறப்புடன் இயைந்த திருஅமுதும் கறிகளும் விதம் பலவாகச் சமைத்து உணவருந்தும் நற்பாத்திரமும் அவை வைக்கும் பாவாடையும் பகல் விளக்கும் அமைத்து விருந்தளித்திடற்கு உரியவற்றுடன் தோழர்களைத் திருவமுது செய்வித்தார் திருந்திய தேன்மொழி பயிலும் பரவை அம்மையார். 124

மங்கலமாம் பூசனைகள் பரவையார் செயமகிழ்ந்து
தங்கிஇனி தமர்கின்றார் தம்பிரான் கோயிலினுட்
பொங்கு பெருங்காலமெலாம் புக்கிறைஞ்சிப் புறத்தணைந்து
நங்கள் பிரான் அருள்மறவா நல்விளையாட்டினை நயந்தார்.

மங்கலம் நிறைந்த பூசனைகளை பரவை அம்மை செய்திட அங்கு தங்கி இனிதே அமர்கின்ற சுந்தரர் சேரர் ஆகிய இருவரும் தமது பெருமானின் கோவிலினில் அருள்பெருகும் காலமெலாம் சென்று வணங்கி வெளியே வந்து நங்கள் பெருமானது திருவருள் மறவாத நல்விளையாடல்களை ஆடுவதில் விரும்பிக் கொண்டனர். 125

நிலைச்செண்டும் பரிச்செண்டும் வீசிமிக மகிழ்வெய்தி
விலக்கரும்போர்த் தகர்ப்பாய்ச்சல் கண்டருளி வென்றிபெற
மலைக்குநெடு முட்களைக்கால் வாரணப்போர் மகிழ்ந்தருளி
அலைக்குமறப் பலபுள்ளின் அமர்விரும்பி அமர்கின்றார்.

நிலத்திருந்து செண்டு வீசுவதும் குதிரை மீதிருந்து செண்டுவீசுவதும் ஆனவிளையாடல் மிகப்புரிந்து மகிழ் வெய்தியும்; விலக்கரிய போர்செயும் ஆட்டுக்கடாவினது பாய்ச்சல் கண்டருளியும் வெற்றி பெறப் போரிடும் நீண்ட முள்ளினைக் கொண்ட கலைக் காலுடைய சேவல் போர் கண்டு மகிழ்ந்தருளியும் இன்னும் அவ்வாறே போரிடும் கொடுமை உடையபல பட்சிகளின் போர்விரும்பி அங்கு தங்குகின்றார். 126

விரவு காதல் மீக்கூர மேவு நாள்கள் பலசெல்லக்
கரவில் நெஞ்சக் கேரளனார் தங்கள் கடல்சூழ் மலைநாட்டுப்
பரவை யார்தங் கொழுநனார் தம்மைப் பணிந்து கொண்டணைவான்
இரவும் பகலும் தொழுதிரக்க இசைந்தார் அவரும் எழுந்தருள.

சுந்தரர் பெருமானும் சேரஅரசரும் ஒருவர் மீது ஒருவர் நட்பினால் கொண்ட காதல் மிகச் சிறக்க கூட இருக்கும் நாள்கள் பல சென்றிடலும்; வஞ்சனையிலாத கொடையின் சிறப்புடைய சேரஅரசர் தங்களது கடல் சூழ்ந்த மலை நாட்டிற்கு பரவை அம்மையாரது கணவர் சுந்தரரைக் பணிந்து அழைத்துக்கொண்டு சென்றிட வேண்டி இரவும் பகலும் தொழுது வரும் படி வேண்டிட; சுந்தரரும் அங்கு எழுந்தருளிச் சென்றிட இசைவு கொண்டார். 127

நங்கை பரவை யாருள்ளத் திசைவால் நம்பி எழுந்தருளத்
திங்கள் முடியார் திருவருளைப் பரவிச் சேரமான் பெருமாள்
எங்கும் முள்ள அடியாருக்கேற்ற பூசை செய்தருளிப்
பொங்கு முயற்சி இருவரும்போய்ப் புக்கார் புனிதர் பூங்கோயில்.

பரவை அம்மையாரது உள்ளச் சம்மதத்துடன் தலைவர் சுந்தரர் எழுந்தருளிட; அது உணர்ந்த சேரமான் பெருமாள் திங்களை முடி மீது சூடியகடவுளது திருவருள் இதுதான் எனப்போற்றி திருவாரூர் எங்குமுள்ள அடியார்களுக்கு ஏற்ற பூசை செய்தருளி தம்மைத்தாம் உயர்த்திடும் திருவடி பேணும் முயற்சியில் இருவரும் போய் புகுந்தார் புனிராகும் சிவன் அமர்ந்த பூங்கோயிலிடத்தாக; 128

தம்பிரானைத் தொழுதருளாற் போந்து தொண்டர் சார்ந்தணைய
நம்பி யாரூ ரருஞ்சேரர் நன்னாட் டரசனாய பைம்பொன்
மணிநீள் முடிக்கழறிற் றறிவார் தாமும் பயணமுடன்
செம்பொன் நீடுமதிலாரூர் தொழுது மேல்பாற் செல்கின்றார்.

அங்கு தமது பெருமானைத் தொழுது திருவருளால் வெளிவந்து; அடியார்கள் வந்து சேர; சுந்தரமூர்த்தி சுவாமிகளும்; சேரநன்னாட்டின் அரசராய பசிய பொன் மணிகள் பெருக விளங்கும் நீண்ட முடியுடைய கழறிற்றறிவாரும் பயணம் புறப்பட்டு செம்பொன்னால் நீளச் சிறந்த மதிலுடைய திருவாரூர் தொழுது மேற்குப் புறமாகச் செல்கின்றார். வேறு 129

பொன்பரப்பி மணிவரன்றிப் புனல்பரக்குங் காவேரித்
தென்கரைபோய்ச் சிவன்மகிழ்ந்த கோயில்பல சென்றிறைஞ்சி
மின்பரப்புஞ் சடைஅண்ணல் விரும்புதிருக் கண்டியூர்
அன்புருக்குஞ் சிந்தையுடன் பணிந்து புறத்தணைந்தார்கள்.

செல்லும் அவர்கள்; பொன்னைப்பரப்பி மணிகள் வாரி நீர் பரந்தோடும் காவேரித் தென் கரையாகச் சென்று சிவன் மகிழ்ந்துறைந்த கோயில் பல சென்று வணங்கி மின் ஒளி பரப்பிடும் சடைமுடி யுடைய கடவுள் விரும்பும் திருக்கண்டியூர் என்னும் கோவிலை அன்பு உருகிடும் சிந்தையுடன் பணிந்து வெளியே வந்தார்கள். 130

வடகரையில் திருவையா றெதிர்தோன்ற மலர்க்கரங்கள்
உடலுருக உள்ளுருக உச்சியின்மேற் குவித்தருளிக்
கடல்பரந்த தெனப்பெருகுங் காவிரிபைக் கடந்தேறித்
தொடர்வுடைய திருவடியைத் தொழுவதற்கு நினைவுற்றார்.

திருநாவலூர் அரசர் சுந்தரர்; சேரர் குலமக்களது அரசர் கழறிற்றறிவாருடன் வருகின்ற வரை திருவாரூர் வாழும் மக்கள் எதிர் கொண்டிட: அவர்களிடம் கொண்ட மிகு விருப்புடன் வணங்கி தமது பெருமானது கோயில் உள்ளாக பெருகும் ஆர்வத்துடனே இறைவனையே விரும்பிடற்கு உற்ற பெரும் பேறு பெற்றுக் கொள்ளச் சென்று சேர்வுற்றார். 121

வாசமலர்க் கொன்றையார் மகிழ்கோயில் வலங்கொண்டு
நேசமுற முன்னிறைஞ்சி நெடும்பொழுதெ லாம்பரவி
ஏசறவால் திருப்பதிகம் எடுத்தேத்தி எழுந்தருளால்
பாசவினைத் தொடக்கறுப்பார் பயில்கோயில் பணிந்தணைவார்.

வாசமுடைய கொன்றை மாலையணிந்த சடையுடைய சிவபெருமான் மகிழ்ந்திருந்த திருவாரூர்க் கோவிலினை வலம் கொண்டு வந்து அன்பு கொள்ள முன் வணங்கி நெடும் காலமெலாம் போற்றி செய்து: பிரிந்திருந்த மையால் வந்த கவலையால் திருப்பதிகமும் எடுத்துப் போற்றி வணங்கி எழுந்து அருளினால்; பாச வினைகளின் வேர் அறுத்திடும் பெருமான் வீற்றிருந்த திருக்கோயிலினைப் பணிந்து வெளியே செல்வாராகி: 122

பரவையார் மாளிகையில் பரிசனங்கள் முன்னெய்த
விரவுபே ரலங்கார விழுச்செல்வம் மிகப்பெருக
வரவெதிர் கொண்டடி வணங்கவன்றொண்டர் மலைநாட்டுப்
புரவலனு ரையுங்கொண்டு பொன்னணி மாளிகைபுகுந்தார்.

பரவையம்மையாரது திருமாளிகையில் தமது ஏவல் தொண்டு செயும் பரிசனர்கள் முன் செல்ல; அங்கு நெருங்கிய பெரும் அலங்காரத்தின் சிறந்த செல்வம் மிகப் பெருகி நல்ல மங்கலச் செயல் யாவும் நிறைந்திட; பரவையம்மை மாளிகை வாய்தலில் வந்து எதிர் கொண்டு திருவடி வணங்க எம் சுந்தரர் மலைநாட்டின் அரசர் சேரரையும் அழைத்துக்கொண்டு பொன்னின் அழகுடைய அம் மாளிகையில் புகுந்தார். 123

பரவியே பரவையார் பரிவுடனே பணிந்தேத்தி
விரவியபோ னகங்கறிகள் விதம்பலவா கச்சமைத்துப்
பரிகலமும் பாவாடை பகல்விளக்கும் உடனமைத்துத்
திருவமுது செய்வித்தார் திருந்தியதேன் மொழியினார்.

உட்புகுந்த சுவாமிகளையும் சேரரையும் பரவை அம்மை அன்புடன் போற்றிப் பணிந்து வணங்கி; சிறப்புடன் இயைந்த திருஅமுதும் கறிகளும் விதம் பலவாகச் சமைத்து உணவருந்தும் நற்பாத்திரமும் அவை வைக்கும் பாவாடையும் பகல் விளக்கும் அமைத்து விருந்தளித்திடற்கு உரியவற்றுடன் தோழர்களைத் திருவமுது செய்வித்தார் திருந்திய தேன்மொழி பயிலும் பரவை அம்மையார். 124

மங்கலமாம் பூசனைகள் பரவையார் செயமகிழ்ந்து
தங்கிஇனி தமர்கின்றார் தம்பிரான் கோயிலினுட்
பொங்கு பெருங்காலமெலாம் புக்கிறைஞ்சிப் புறத்தணைந்து
நங்கள் பிரான் அருள்மறவா நல்விளையாட்டினை நயந்தார்.

மங்கலம் நிறைந்த பூசனைகளை பரவை அம்மை செய்திட அங்கு தங்கி இனிதே அமர்கின்ற சுந்தரர் சேரர் ஆகிய இருவரும் தமது பெருமானின் கோவிலினில் அருள்பெருகும் காலமெலாம் சென்று வணங்கி வெளியே வந்து நங்கள் பெருமானது திருவருள் மறவாத நல்விளையாடல்களை ஆடுவதில் விரும்பிக் கொண்டனர். 125

நிலைச்செண்டும் பரிச்செண்டும் வீசிமிக மகிழ்வெய்தி
விலக்கரும்போர்த் தகர்ப்பாய்ச்சல் கண்டருளி வென்றிபெற
மலைக்குநெடு முட்களைக்கால் வாரணப்போர் மகிழ்ந்தருளி
அலைக்குமறப் பலபுள்ளின் அமர்விரும்பி அமர்கின்றார்.

நிலத்திருந்து செண்டு வீசுவதும் குதிரை மீதிருந்து செண்டுவீசுவதும் ஆனவிளையாடல் மிகப்புரிந்து மகிழ் வெய்தியும்; விலக்கரிய போர்செயும் ஆட்டுக்கடாவினது பாய்ச்சல் கண்டருளியும் வெற்றி பெறப் போரிடும் நீண்ட முள்ளினைக் கொண்ட கலைக் காலுடைய சேவல் போர் கண்டு மகிழ்ந்தருளியும் இன்னும் அவ்வாறே போரிடும் கொடுமை உடையபல பட்சிகளின் போர்விரும்பி அங்கு தங்குகின்றார். 126

விரவு காதல் மீக்கூர மேவு நாள்கள் பலசெல்லக்
கரவில் நகைக் கேரளனார் தங்கள் கடல்சூழ் மலைநாட்டுப்
பரவை யார்தங் கொழுநனார் தம்மைப் பணிந்து கொண்டணைவான்
இரவும் பகலும் தொழுதிரக்க இசைந்தார் அவரும் எழுந்தருள.

சுந்தரர் பெருமானும் சேரஅரசரும் ஒருவர் மீது ஒருவர் நட்பினால் கொண்ட காதல் மிகச் சிறக்க கூட இருக்கும் நாள்கள் பல சென்றிடலும்; வஞ்சனையிலாத கொடையின் சிறப்புடைய சேரஅரசர் தங்களது கடல் சூழ்ந்த மலை நாட்டிற்கு பரவை அம்மையாரது கணவர் சுந்தரரைக் பணிந்து அழைத்துக்கொண்டு சென்றிட வேண்டி இரவும் பகலும் தொழுது வரும் படி வேண்டிட; சுந்தரரும் அங்கு எழுந்தருளிச் சென்றிட இசைவு கொண்டார். 127

நங்கை பரவை யாருள்ளத் திசைவால் நம்பி எழுந்தருளத்
திங்கள் முடியார் திருவருளைப் பரவிச் சேரமான் பெருமாள்
எங்கும் முள்ள அடியாருக்கேற்ற பூசை செய்தருளிப்
பொங்கு முயற்சி இருவரும்போய்ப் புக்கார் புனிதர் பூங்கோயில்.

பரவை அம்மையாரது உள்ளச் சம்மதத்துடன் தலைவர் சுந்தரர் எழுந்தருளிட; அது உணர்ந்த சேரமான் பெருமாள் திங்களை முடி மீது சூடியகடவுளது திருவருள் இதுதான் எனப்போற்றி திருவாரூர் எங்குமுள்ள அடியார்களுக்கு ஏற்ற பூசை செய்தருளி தம்மைத்தாம் உயர்த்திடும் திருவடி பேணும் முயற்சியில் இருவரும் போய் புகுந்தார் புனிராகும் சிவன் அமர்ந்த பூங்கோயிலிடத்தாக; 128

தம்பிரானைத் தொழுதருளாற் போந்து தொண்டர் சார்ந்தணைய
நம்பி யாரூ ரருஞ்சேரர் நன்னாட் டரசனராய பைம்பொன்
மணிநீள் முடிக்கழறிற் றறிவார் தாமும் பயணமுடன்
செம்பொன் நீடுமதிலாரூர் தொழுது மேல்பாற் செல்கின்றார்.

அங்கு தமது பெருமானைத் தொழுது திருவருளால் வெளிவந்து; அடியார்கள் வந்து சேர; சுந்தரமூர்த்தி சுவாமிகளும்; சேரநன்னாட்டின் அரசராய பசிய பொன் மணிகள் பெருக விளங்கும் நீண்ட முடியுடைய கழறிற்றறிவாரும் பயணம் புறப்பட்டு செம்பொன்னால் நீளச் சிறந்த மதிலுடைய திருவாரூர் தொழுது மேற்குப் புறமாகச் செல்கின்றார். வேறு 129

பொன்பரப்பி மணிவரன்றிப் புனல்பரக்குங் காவேரித்
தென்கரைபோய்ச் சிவன்மகிழ்ந்த கோயில்பல சென்றி றைஞ்சி
மின்பரப்புஞ் சடைஅண்ணல் விரும்புதிருக் கண்டியூர்
அன்புருக்குஞ் சிந்தையுடன் பணிந்து புறத்தணைந்தார்கள்.

செல்லும் அவர்கள்; பொன்னைப்பரப்பி மணிகள் வாரி நீர் பரந்தோடும் காவேரித் தென் கரையாகச் சென்று சிவன் மகிழ்ந்துறைந்த கோயில் பல சென்று வணங்கி மின் ஒளி பரப்பிடும் சடைமுடி யுடைய கடவுள் விரும்பும் திருக்கண்டியூர் என்னும் கோவிலை அன்பு உருகிடும் சிந்தையுடன் பணிந்து வெளியே வந்தார்கள். 130

வடகரையில் திருவையா றெதிர்தோன்ற மலர்க்கரங்கள்
உடலுருக உள்ளுருக உச்சியின்மேற் குவித்தருளிக்
கடல்பரந்த தெனப்பெருகுங் காவிரிபைக் கடந்தேறித்
தொடர்வுடைய திருவடியைத் தொழுவதற்கு நினைவுற்றார்.

அதுவேலை காவிரியின் வடகரையில் திருவையாறு எனும் தலம் நேர்தோன்ற தமது மலர்க்கைகளை உடலுருக உள்ளம் உருக உச்சியின் மேலாகக் கூப்பியருளி கடல்பரதந்து எனப் பெருகும் காவிரி நதியைக் கடந்து அப்பால் சென்று தாம் தொடர்புடைய திருவடியைத் தொழுவதற்கு நினைவுற்றார் இருவர்களும். 131

ஐயா றதனைக் கண்டுதொழுதருளா ரூரர் தமைநோக்கிச்
செய்யாள் பிரியாச் சேரமான் பெருமாள் அருளிச் செய்கின்றார்
மையார் கண்டர் மருவுதிரு வையாறி றைஞ்ச மனமுருகி
நையா நின்ற திவ்வாறு கடந்து பணிவோம் நாம் என்ன.

திருவையாறுதனைக் கண்டு தொழுதருளும் நம்பியாரூரரை நோக்கி திருமகள் பிரியாத சேரமான் பெருமாள் சொல்லியருள்கின்றார் ''கருமை விளங்கும் கண்ட முடைய கடவுள் பொருந்தும் தலம் திருவையாற்றைச் சென்று வணங்கிட மனம் உருகி இரந்து நின்றது; ஆதலின் இந்த ஆறு கடந்து சென்று பணிவோம் நாம்'' என்னலும்: 132

ஆறு பெருகி இருகரையும் பொருது விசும்பில் எழுவதுபோல்
வேறு நாவாய் ஓடங்கள் மீதுசெல்வா வகை மிகைப்ப
நீறு விளங்குந் திருமேனி நிருத்தர் பாதம் பணிந்தன்பின்
ஆறுநெறியாச் செலவுரியார்தரியா(து) அழைத்துப் பாடுவார்.

அந்த ஆறுமோ பெருகி இருகரையும் மோதி வானில் எழுவது போன்று விளங்க; அதன் மீது வேறு தோணிகளாவது அல்லது ஓடங்களாவது மேற்செல்ல முடியாதபடி நீர் மிகுந்திட திருநீறு விளங்கும் திருமேனியுடன் திருக்கூத்தாடும் பெருமானுரது திருப்பாதம் பணிந்து அன்பின் வழியே செல்லும் அதற்கு உரியார் சுந்தர மூர்த்தி சுவாமிகள் தரிப்பின்றி ஐயா றமர்ந்த பெருமானே அழைத்துப் பாடுவார்: 133

பரவும் பரிசொன்(று) எடுத்தருளிப் பாடுந் திருப்பாட்டின் முடிவில்
அரவம் புனைவார்தமை ஐயாறுடைய அடிகளோ என்று
விரவும் வேட்கை யுடனழைத்து விளங்கும் பெருமைத் திருப்பதிகம்
நிரவும் இசையில் வன்றொண்டர் நின்று தொழுது பாடுதலும்.

''பரவும் பரிசு,, எனத் தொடங்கிப் பாட எடுத்தருளி பாடுகின்ற திருப்பாட்டின் முடிவில் பாம்பு அணிகின்ற பெருமானுர் தமை ஐயாறு உடைய அடிகளோ என்று பொருந்தும் வேட்கையுடன் அழைத்திட்டு; பெருமை விளங்கும் அத்திருப்பதிகத்தினை நிரம்பிய இசையுடன் சுந்தரர் நின்று ஐயாறமர்ந்த செம்பொற்சோதியினைத் தொழுது பாடுதலும். 134

அவர் ஆற்றின் இக்கரை நின்று அப்பனிடம் செல்ல உள்ள வேட்கையுடன் ஆதரித்து அழைத்துப்பாடிய திருப்பதிகம் இதுவாகும்.

திருவையாறு

பண்–காந்தாரபஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

பரவும் பரிசொன் றறியேன் நான் பண்டே உம்மைப் பயிலாதேன்
இரவும் பகலும் நினைந்தாலும் எய்த நினைய மாட்டேன் நான்
கரவில் அருவி கமுகுண்ணத் தெங்கங் குலைக்கீழ்க் கருப்பாலே
அரவந் திரைக்கா விரிக்கோட்டத் தையா றுடைய அடிகளோ. 1

எங்கே போவே னுயிடினும் அங்கே வந்தென் மனத்திராய்ச்
சங்கை ஒன்றும் இன்றியே தலைநாள் கடைநாள் ஒக்கவே
கங்கை சடைமேற் கரந்தானே கலைமான் மறியுங் கனல்மழுவும்
தங்குந் திரைக்கா விரிக்கோட்டத் தையா றுடைய அடிகளோ. 2

மருவிப் பிரிய மாட்டேன் நான் வழிநின் றொழிந்தேன் ஒழிகிலேன்
பருவி விச்சி மலைச்சாரற் பட்டைகொண்டு பகடாடிக்
குருவி ஒப்பிக் கிளிகடிவார் குழல்மேல் மாலை கொண்டோட்டந்
தரவந் திரைக்கா விரிக்கோட்டத் தையா றுடைய அடிகளோ. 3

பழகா நின்று பணிசெய்வார் பெற்ற பயனென் றறிகிலேன்
இகழா துமக்காட் பட்டோர்க்கு வேக படமொன் றரைச்சார்த்தி
குழகா வாழைக் குலைத்தெங்கு கொணர்ந்து கரைமேல் எறியவே
அழகார் திரைக்கா விரிக்கோட்டத் தையா றுடைய அடிகளோ; 4

பிழைத்த பிழையொன் றறியேன்நான் பிழையைத் தீரப் பணியாயே
மழைக்கண் நல்லார் குடைந்தாட மலையும் நிலனுங் கொள்ளாமைக்
கழைக்கொள் பிரசங் கலந்தெங்குங் கழனி மண்டிக் கையேறி
அழைக்குந் திரைக்கா விரிக்கோட்டத் தையா றுடைய அடிகளோ 5

கார்க்கொள் கொன்றை சடைமேல்ஒன் றுடையாய் விடையாய் கையினில்
மூர்க்கர் புரமூன் றெரிசெய்தாய் முன்நீ பின்நீ முதல்வன்நீ
வார்க்கொள் அருவி பலவாரி மணியும் முத்தும் பொன்னுங்கொண்
டார்க்குந் திரைக்கா விரிக்கோட்டத் தையா றுடைய அடிகளோ. 6

மலைக்கண் மடவாள் ஒருபாலாய்ப் பற்றி உலகம் பலிதேர்வாய்
சிலைக்கொள் கணையால் எயில்எய்த செங்கண் விடையாய் தீர்த்தன்நீ
மலைக்கொள் அருவி பலவாரி மணியும் முத்தும் பொன்னுங்கொண்டு
அலைக்குந் திரைக்கா விரிக்கோட்டத் தையா றுடைய அடிகளோ; 7

போழும் மதியும் புனக்கொன்றைப் புனல்சேர் சென்னிப் புண்ணியா
சூழும் அரவச் சுடர்சோதீ உன்னைத் தொழுவார் துயர்போக
வாழும் அவர்கள் அங்கங்கே வைத்த சிந்தை உய்த்தாட்ட
ஆழுந் திரைக்கா விரிக்கோட்டத் தையா றுடைய அடிகளோ. 8

கதிர்க்கொள் பசியே ஒத்தேநான் கண்டேன் உம்மைக் காணுதேன்
எதிர்த்து நீந்த மாட்டேன்நான் எம்மான் தம்மான் தம்மானே
விதிர்த்து மேகம் மழைபொழிய வெள்ளம் பரந்து நுரைசிதறி
அதிர்க்குந் திரைக்கா விரிக்கோட்டத் தையா றுடைய அடிகளோ; 9

கூடி அடியார் இருந்தாலும் குணம்ஒண் றில்லீர் குறிப்பிலீர்
தேச வேந்தன் திருமாலும் மலர்மேல் அயனுங் காண்கிலாத்
தேசம் எங்குந் தெளித்தாடற் தெண்ணீர் அருவி கொணர்ந்தெங்கும்
வாசந் திரைக்கா விரிக்கோட்டத் தையா றுடைய அடிகளோ; 10

கூடி அடியார் இருந்தாலும் குணம்ஒன் றில்லீர் குறிப்பிலீர்
ஊடி இருந்தும் உணர்கிலேன் உம்மைத் தொண்டன் ஊரனேன்
தேடி எங்கும் காண்கிலேன் திருவா ரூரே சிந்திப்பன்
ஆடுந் திரைக்கா விரிக்கோட்டத் தையா றுடைய அடிகளோ; 11

திருச்சிற்றம்பலம்

மன்றில் நிறைந்து நடமாடவல்லார் தொல்லை ஐயாற்றில்
கன்று தடையுண் டெதிரழைக்கக் கதறிக் கனைக்கும் புனிற்றுப்போல்
ஒன்றும் உணர்வால் சராசரங்கள் எல்லாங்கேட்க ஓலம் என
நின்று மொழிந்தார் பொன்னிமா நதியும் நீங்கி நெறிகாட்ட.

கனகசபையில் நிறைந்து நின்று நடமாடவல்ல பெருமானுர் மிக முந்திய திருவையாற்றில் இருப்பவர்; கன்று தடைப்பட்டு நின்று தாய்ப்பசுவை நோக்கிக் கதறிட அதுகேட்டு தானும் கதறிக் கனைக்கும் தலையீற்றுப் பசுவைப் போன்று எல்லாம் ஒருங்கேயாய உணர்வால் சரம் அசரமாய உயிர்ப்பொருள் யாவும் கேட்டிட ஓலம் என்று மொழிந்தார். அத்துடன் காவிரி என்னும் பெரும் ஆறும் பெருக்கு நீங்கி வழிவிட்டுக் காண்பித்திட. 139

விண்ணில் முட்டும் பெருக்காறு மேல்பாற் பளிக்கு வெற்பென்ன
நண்ணி நிற்கக் கீழ்பால்நீர் வடிந்த நடுவு நல்லவழிப்
பண்ணிக் குளிர்ந்த மணற்பரப்பக் கண்ட தொண்டர் பயில்மாரி
கண்ணிற் பொழிந்து மயிர்ப்புளகம் கலக்கக்ங்க அஞ்சலிகுவித்தார்.

வாலினை முட்டும் பெருக்குடைய ஆறு மேற்புறத்தில் பளிங்கு மலைபோன்று நீர் ஓடாது திரண்டு நின்றிட கீழ்புறம் நீர் ஒடி வடிந்து நடுவே நல்ல வழி உண்டாகி குளிர்ந்த மணல் பரப்பக் கண்டதொண்டர் அற்புத பரவசத்தால் பெருகும் கண்ணீர் மழை பொழிந்து உரோமங்கள் சிலிர்த்துக் கூச்செறிய கைகளை அஞ்சலியாகக் குவித்தார்கள். 136

நம்பி பாதஞ் சேரமான் பெருமாள் பணிய நாவலூர்ச்
செம்பொன்முந்நூல் மணிமார்பர் சேரர் பெருமான் எதிர் வணங்கி
உம்பர் நாதர் உமக்களித்த தன்றே? என்ன உடன்மகிழ்ந்து
தம்பிரானைப் போற்றிசைத்துத் தடங்காவேரி நடுவணைந்தார்.

சுந்தரருடைய திருப்பாதத்தை சேரமான் பெருமாள் பணிந்திட திருநாவலூர் வந்த செம்பொன்னின் நூல் அணிந்த திருமார்பர் சுந்தரரும் சேரர் பெருமானது முன்பாக வணங்கி அரசரே! தேவர் பெருமான் உமக்காக இந்த வழி கொடுத்த தல்லவோ என்றிட உடன் மகிழ்வுற்று தமது பெருமானைப் போற்றித் துதித்து விசாலித்த காவேரி யாற்றின் நடுவணைக் சேர்ந்து கொண்டார்கள். 137

செஞ்சொற் றமிழ்நா வலர்கோனும் சேரர்பிரானும் தம்பெருமான்
எஞ்ச லில்லா நிறையாற்றின் இடையே அளித்த மணல்வழியில்
தஞ்ச முடையபரிசனமும் தாமும் ஏறித் தலைச்சென்று
பஞ்ச நதிவா ணரைப்பணிந்து விழுந்தார் எழுந்தார் பரவினர்.

செஞ்சொல்லின் தமிழ் நாவலர் பெருமானும் சேரர் பெருமானும் தம்பெருமான் குறைவின்றிப் பெருகி நிறைந்த ஆற்றின் இடையாகக் கொடுத்த மணல் வழியில்: தம்பால் தஞ்சமுடைய பரிசனமும் தாமும் ஏறிப்போய் முன்சென்று ஐந்து ஆறுகள் சங்கமப்பட்ட புண்ணிய இடத்தில் அமர்ந்த பெருமானைப் பணிந்து விழுந்தார் எழுந்தார் போற்றினார்கள். 138

அங்கண் அரனூர் கருணையினை ஆற்றூ தாற்றித் திளைத்திறைஞ்சித்
தங்கள் பெருமான் திருவருளால் தாழ்ந்து மீண்டுந் தடம்பொன்னிப்
பொங்கு நதியின் முன்வந்த படியே நடுவு போந்தேதறத்
துங்க வரைபோல் நின்றநீர் துரந்து தொடரப் பெருகியதால்.

அங்கு ஐயாறமர்ந்த செல்வர் தமக்குக் கொடுத்த கருணையினை சகித்திட முடியாது சகித்து வணங்கி தங்களது பெருமான் திருவருளால் தாழ்ந்து மீண்டும் விசாலித்த காவிரியாறெனும் பொங்கிய ஆற்றில் முன் வந்தபடியே நடுவே போய் திரும்பிடலும்; பெருமலைபோல் ஒருபுறமாக தடைபட்டு நின்ற நீர் விரைந்து தொடர்ந்து பெருகிக்கொண்டது. 139

ஆய செயலின் அதிசயத்தைக் கண்டக் கரையில் ஐயாறு
மேய பெருமான் அருள்போற்றி வீழ்ந்து தாழ்ந்து மேல்பாற்போய்த்
தூய மதிவாழ் சடையார்தம் பதிகள் பிறவுந் தொழுதேத்திச்
சேயகொங்க நாடணைந்தார் திருவாரூரர் சேரருடன்.

இவ்வாறுன செயலின் அதிசயத்தைக் கண்டு அக்கரையில் நின்று திருவையாறு மேய பெருமான் அருள் போற்றி வீழ்ந்து வணங்கித் தாழ்ந்து மேற்கு புறமாகச் சென்று தூய பிறைவாழும் சடையுடைய பெருமானது ஆலயங்களை பிறவும் தொழுது போற்றி மிகுதூரமாய கொங்க நாட்டை வந்து சேர்ந்தார்கள் திருவாரூராய சுந்தரர் சேரருடனுக. 140

கொங்கு நாடு கடந்துபோய்க் குலவு மலைநாட் டெல்லையுற
நங்கள் பெருமான் தோழனூர் நம்பி தம்பிரான் தோழர்
அங்கண் உடனே அணையவழுந்தருளா நின்றூர் எனும் விருப்பால்
எங்கும் அந்நாட்டுள்ளவர்கள் எல்லாம் எதிர்கொண்டின் புறுவார்.

கொங்கு நாட்டினைக் கடந்து சென்று; நலம் குலவும் மலை நாட்டின் எல்லையில் சேர; "நாங்கள் அரசர் சேரமான் பெருமாள் தோழர்; சுந்தரர்; சிவபெருமானது தோழர் அங்கு எமது சேரர் பெருமானுடன் இந்நாட்டு எழுந்தருளி வருகின்றார்" என்னும் மனவிருப்பால் மலைநாட்டில் எப்பக்கரிலுமுள்ளார்கள் எல்லாரும் கூடி வந்து எம்பிரான் சுந்தரரை வரவேற்று ஆனந்தம் உறுகின்றனர். 141

பதிக ளெங்கும் தோரணங்கள் பாங்க ரெங்கும் பூவனங்கள்
வதிகளெங்கும் குளிர்பந்தர் மனைக ளெங்கும் அகிற்புகைக்கார்
நதிக ளெங்கும் மலர்ப்பிறங்கல் ஞாங்க ரெங்கும் ஓங்குவன
நிதிக ளெங்கும் முழவினொலி நிலங்களெங்கும் பொலஞ்சுடர்ப்பூ.

மலைநாட்டின் இருப்பிடம் எங்கும் தோரண முகப்புக்களும்: பக்கங்கள் எங்கும் செயல் முறையாக அமைத்த பூவனங்களும்; வழிகள் எங்கும் குளிர்ச்சி செய்யும் பந்தர்களும்; மனைகள் எங்கும் மேகம்போல் திரளும் அகிற்புகையும்; ஆற்றிடமெங்கும் பூவின் குவியல்களும் அந்த நதிகளின் பக்கர் எங்கும் முத்தும் மணிகளின் குவியலும் ஓங்குவன; முரசப்பறை ஓசை எங்கும் முழங்குவன; நிலங்கள் எங்கும் அழகிய பொற்பூவின் மழையுமாக மலைநாடு முழுவதும் அழகு பெருகுகின்றது. 142

திசைள் தோறும் வரும்பெருமை அமைச்சர் சேனைப் பெருவெள்ளம்
குசைகொள் வாசி நிரைவெள்ளம் குப்ப யானை அணிவெள்ளம்
மிசைகொள் பண்ணும் பிடிவெள்ளம் மேவுஞ் சோற்று வெள்ளங்கண்(டு)
அசைவில் இன்பப்பெருவெள்ளத் தமர்ந்து கொடுங்கோளூரணைந்தார்.

திசைகள் தோறும் நின்று வரும் பெருமையின் சிறப்புடைய மந்திரிகளும் சேனைப் பெருவெள்ளங்களும்; செண்டுடன் பிடரிமயிர் உடைய குதிரை நிரைகளின் வெள்ளங்களும்; மத்தகமுடைய யானையின் அணிவெள்ளங்களும்: மேல் எழுந்து கொள்ளும் படியாக உள்ள பெண் யானை வெள்ளங்களும்: எங்கும் விருந்துபசரிப்பின் சோற்று வெள்ளங்களுமாகப் பெருக துயர் பகை இவை நீங்கி அசைவிலாத இன்பப் பெருவெள்ளத்தின் வரவேற்புபசரிப்பின் அமர்ந்து கொடுங்கோளூரைச் சென்று சேர்ந்தார் எம்பிரான் சுந்தரர். 143

கொடுங்கோளூரின் மதில்வாயில் அணிகோ டித்துமறு கிலுடுத்
தொடுங்கோ புரங்கள் மாளிகைகள் சூளி குளிர்சாலைகள் தெற்றி
நெடுங்கோ நகர்கள் ஆடரங்கு நிரந்த மணித்தா மங்கமுகு
விடுங்கோ தைப்பூந் தாமங்கள் நிரைத்து வெவ்வே றலங்கரித்து.

மலைநாட்டின் தலைநகராய கொடுங்கோளூரின் மதில்வாய்தலை அழகுற அலங்கரித்து; நகர வீதியில் உள்ள; மான வேள்ளிகளைத் தொடுப்படி யோங்கிய கோபுரங்கள் மாளிகைகள் சூளிகைகள் குளிர்ச்சாலைகள் திண்ணைகள் நெடிய அரசநகர்கள் நாட்டிய அரங்குகள் எங்கும் நிரையாக தூக்கி யமுத்து மாலைகள் கமுகுகள் தூங்கும் பூமாலைகள் தூக்கி வெவ்வேறு விதமாக அலங்கரித்து. 144

நகர மாந்தர் எதிர்கொள்ள நண்ணிஎண்ணில் அரங்கு தொறும்
மகரக் குழைமா தர்கள்பாடி ஆடபணி வீதியில் அணைவார்
சிகர நெடுமா ளிகைஅணையார் சென்று திருவஞ்சைக்களத்து
நிகரில் கொண்டர் தமைக்கொண்டு புகுந்தார் உதியர் நெடுந்தகையார்.

கொடுங்கோளூர் நகர மனிதர் வந்து எதிர் கொண்டிட நகருள்புகுந்து; எண்ணற்ற நடன மேடைகள் தோறும் மகரகுண்டலங்கள் அணிந்த பெண்கள் பாடி நடமாடிட அழகிய நகரவீதியில் வருவார்கள்; தமது மாளிகை நேர்நோக்கிச் செல்லாதவராகி பின்னர் எம்பெருமானது கோயில் திருவஞ்சைக் களத்து நேர்சென்று நிகரிலாத வன்றொண்டர் சுந்தரரைக் கொண்டு புகுந்தார் சேரஅரசர் பெரும் தகையார் கழற்றறிவார். 145

இறைவர் கோயில் மணிமுன்றில் வலங்கொண் டுறைஞ்சி எதிர்புக்கு
நிறையுங் காத லுடன்வீழ்ந்து பணிந்து நேர்நின் றூரூரர்
முறையில் விளம்புந் தருப்பதிகம் முடிப்பது கங்கை என்றெடுத்து
பிறைகொள் முடியார் தமைப்பாடிப் பரவிப் பெருமா ளுடன்தொழுதார்.

திருவஞ்சைக்களம் புகுந்து ஈசனுடைய கோயில் திருமுற்றத்தினை வலங் கொண்டு வணங்கி சுவாமி திருமுன்பு சென்று நிறையும் காதலுடன் எம்பெருமானை வீழ்ந்து பணிந்து எழுந்து நேர் நின்று எம்பிரான் சுந்தரர் முறையாகப் பாடிடும் திருப்பதிகம ''முடிப்பது கங்கை'' எனத் தொடங்கி எடுத்து பிறைசூடிய பெருமானுரை பாடிப் போற்றி சேரமான் பெருமாளுடன் தொழுதார். 146

அவர் திருவஞ்சைக்களத்து அப்பனைப் பாடியருளிய திருப்பதிகம் இதுவாகும்.

முடிப்பது கங்கை

பண்—கொல்லிக்கௌவாணம்

திருச்சிற்றம்பலம்

முடிப்பது கங்கையுந் திங்களுஞ் செற்றது மூவெயில்
நொடிப்பது மாத்திரை நீறெ ழுக்கணை நூறினார்
கடிப்பதும் ஏறுமென் றஞ்சு வனறிருக் கைகளால்
பிடிப்பது பாமபன்றி இலலை யோஎம பிரானுக்கே. 1

தூறன்றி ஆடரங் கில்லை யோசுட லைப்பொடி
நீறன்றிச் சாந்தமற் றில்லை யோஇம வான்மகள்
கூறன்றிக் கூறுவ தில்லை யோகொலலைச் சில்லிவெள்
ளேறன்றி ஏறுவ தில்லை யோஎம பிரானுக்கே 2

தட்டெனுந் தட்டெனுந் தொண்டர் காள்தடு மாற்றத்தை
ஒட்டெனும் ஒட்டெனும் மாநி லத்துயிர் கோறலைச்
சிட்டன் திரிபுரஞ் சுட்ட தேவர்கள் தேவனை
வெட்டெனப் பேசன்மின் தொண்டர் காள்எம பிரானையே. 3

நரிதலை சுவ்வநின் றேரி கூப்பிட நள்ளிருள்
எரிதலைப் பேய்புடை சூழ ஆரிருட் காட்டிடைச்
சிரிதலை மாலை சடைக்க ணிந்தஎஞ் செல்வனைப்
பிரிதலைப் பேசன்மின் தொண்டர் காளெம் பிரானையே 4

வேயன தோளி மலைம களைவி ரும்பிய
மாயமில் மாமலை நாடன் ஆகிய மாண்பனை
ஆயல சொல்லிநின் றூர்கள் அல்லல் அறுக்கிலும்
பேயனே பித்தனே என்ப ராள்எம பிரானையே. 5

இறைவனென் றெம்பெரு மானை வானவர் ஏத்தப்போய்த்
துறையொன் றித்தூ மலரிட் டடியினை போற்றுவார்
மறையன்றிப் பாடுவ தில்லை யோமல்கு வானிளம்
பிறையன்றிச் சூடுவ தில்லை யோஎம பிரானுக்கே. 6

தாருந்தண் கொன்றையுங் கூவி ளந்தவி மத்தமும்
ஆரும் அளவறி யாத ஆதியும் அந்தமும்
ஊரும் ஒன்றில்லை உலகெ லாம்உகப் பார்தொழப்
பேருமோ ராயிரம் என்ப ராள்எம பிரானுக்கே. 7

அரியொடு பூமிசை யானும் ஆதியும் அறிகிலார்
வரிதரு பாம்பொடு வன்னி திங்களும் மத்தமும்
புரிதரு புன்சடை வைத்த எம்புனி தற்கினி
எரிஅன்றி அங்கைக்கொன் றில்லை யோஎம பிரானுக்கே. 8

கரிய மனச்சமண் காடி யாடு கழுக்களால்
எரிய வசவுணுந் தன்மை யோஇம வான்மகள்
பெரிய மனந்தடு மாறவேண் டிப்பெம் மான்மதக்
கரியின் உரியல்ல தில்லை யோஎம பிரானுக்கே. 9

காய்சின மால்விடை மாணிக்கத் தெங்கறைக் கண்டத்
தீசனை ஊரன் எட்டோ டிரண்டு விரும்பிய
ஆயின சீர்ப்பகை ஞானியப் பன்அடித் தொண்டன்ருன்
ஏசின பேசுமின் தொண்டர் காள்எம பிரானையே. 10

திருச்சிற்றம்பலம்

தொழுது திளைத்துப் புறம்போந்து தோன்றப் பண்ணும் பிடிமேற்பார்
முழுதும் ஏத்த நம்பியைமுன் பேற்றிப் பின்பு தாமேறிப்
பழுதில் மணிச்சா மரைவீசிப் பைம் பொன் மணிமா ளிகையில் வரும்
பொழுது மறுகில் இருபுடையும் மிடைந்தார் வாழ்த்திப் புகல்கின்றார்.

எம்பிரானைத் தொழுது அருளில் திளைத்து வெளியே வந்து; நான்கு புறமும் தெரியும்படியான பெண் யானை மீது; இப்பூமி முழுவதும் கைகூப்பி வணங்கிட சுந்தரர் பெருமானை எற்றி; பின்பு தாம் ஏறி இருந்து சுந்தரப் பெருமானுக்கு தாம் சாமரை வீசி பசிய பொன் மாளிகையில் வரும் பொழுது வீதியின் இரு புடையிலும் நெருங்கினர் வாழ்த்தி மொழிகின்றார்: 147

நல்ல தோழர் நம்பெருமாள் தமக்கு நம்பி இவர் என்பார்
எல்லை இல்லாத் தவமுன்பென் செய்தோம்? இவரைத் தொழஎன்பார்
செல்வம் இனியென் பெறு வதுநஞ் சிலம்பு நாட்டுக் கெனஉரைப்பார்
சொல்லுந்தரமோ பெருமாள் செய் தொழிலைப் பாரீர் எனத் தொழுவார்.

நல்ல தோழர் நமது சேரமான் பெருமானுக்கு இந்த தலைவர் சுந்தரர் என்பாரும் நாம் எல்லையில்லாத தவம் முன் என்னசெய்தோம் இவரைத்தொழுதிட என் பாரும்; இந்தக் காட்சிக்கு மேலாக செல்வம் இனி என்ன பெறுவது இந்த மலைநாட்டுக் கென்பாரும்; இதனை நாம் சொல்லுதற்கும் முடிவதோ என்பாரும் நமது பெருமாள் எம்பிரான் சுந்தரர் அவர்க்குச் செய்யும் தொழிலைப் பாரும் என்று தொழுவாரும் 148

பூவும் பொரியும் பொற்றுகளும் பொழிந்து பணிவார் பொருவில் இவர்
மேவும் பொன்னித் திருநாடே புவிக்குத் திலதம் எனவியப்பார்
பாவுந் துதிகள் எம்மருங்கும் பயில வந்து மாளிகையின்
மாவுங் களிறும் நெருங்குமணி வாயில் புகுந்து மருங்கிழிந்தார்.

பூவும் நெற்பொரியும் பொன்னின் துகளும் சொரிந்து வழிபடுவார்: நிகரிலா த இப்பெரியோரிவர் இருக்கும் காவிரித் திருநாடே இப்பூமியின் மங்கல திலகப் பொட்டாகும் என வியந்து பாராட்டுவர்; இவ்வாறு எம்பெருமான் சுந்தரரை யானை மேல் கண்டு போற்றித் துதித்திடும் வார்த்தைகள் எப்பக்கரிலும் சிறப்புற வந்து; சேர அரசரது மாளிகையின் குதிரையும் யானையும் நெருக்கமாகக் கூடிடும் அழகிய வாய்தலில் புகுந்து அதன் அருகு பெண்யானை நின்றும் இறங்கினர் சுந்தரர் பிரானும் சேர அரசரும். 149

கழறிற் றறியுந் திருவடியுங் கலைநா வலர்தம் பெருமானும்
முழவிற் பொலியுந் திருநெடுந்தோள் முனைவர் தம்மை உடன்கொண்டு
விழவிற் பொலியும் மாளிகையில் விளங்கு சிங்கா சனத்தின்மிசை
நிழல்திக் கொளிரும் பூணரை இருத்தித் தாமும் நேர்நின்று.

கழறிற்றறிவார் நாயனரும் கலைவல்லபமான நாவலரின் பெருமானரும் முரசப்பறைபோல் திரண்ட நெடும் தோளுமுடைய சுந்தர மூர்த்தி சுவாமிகளை உடன் அழைத்துச் சென்று விழாக்களால் பொலியும் தமது மாளிகையில் விளங்கிடும் சிங்காசனத்தின் மேலாக; திக்கெல்லாம் ஒளிரும் பூக்கள் அணிந்த நம் பெருமான் சுந்தரரை இருத்தித் தாமும் நேராக நின்று;: 150

செம்பொற்கரக வாசநீர் தேவி மார்கள் எடுத்தேந்த
அம்பொற் பாதந் தாம்விளக்கி அருளப் புகலும் ஆரூரர்
தம்பொற்றூள வாங்கி இதுதகா தென் றருளத் தரணியில் வீழ்ந்(து)
எம்பெற் றிமையால் செய்தனஇங் கெல்லாம் இசைய வேண்டும் என.

செம்பொன்னின் பாத்திரத்தில் நிறைந்த வாசநீரை தமது தேவி மார்கள் கைகளில் எடுத்து ஏந்திவார்ப்ப; அந்நீரினில் எம்பிரான் சுந்தரருடைய அழகிய பொற்பாதத்தை தாம் கையால் விளக்கியருளப் போதலும்; அது கண்ட சுந்தர மூர்த்தி சுவாமிகள்; தமது பொன் பாதத்தை உள்ளாக இழத்து; இச்செயல் தகாது என மொழிந்தருள உடன் சேர அரசர் பூமியில் வீழ்ந்து வணங்கி என் இயல்பால் நான் இங்கு செய்தன எல்லாம் இசைந்திடப் பெறல் வேண்டும் என னலும்; 151

பெருமாள் வேண்ட எதிர்மறுக்க மாட்டார் அன்பிற் பெருந்தகையார்
திருமா நெடுந்தோள் உதியர்பிரான் செய்த எல்லாங் கண்டிருந்தார்
அருமா னங்கொள் பூசனைகள் அடைவே எல்லாம் அளித்ததற்பின்
ஒருமா மதிவெண் குடைவேந்த ருடனே அமுது செய்துவந்தார்.

சேரமான் பெருமாள் வேண்டிட; அதனை எதிர் மறுக்கமாட்டாது அன்பின் பெரும் தகையார் சுந்தரரும்; திருவுடைய பெரும் தோளர் சேரர் பிரான் அங்கு தமக்குச் செய்த அன்பின் பூசை எல்லாம் கண்டிருந்தார். அருமையான பத்தி சிறந்த பூசனைகள் முழுவதும் எல்லாம் செய்த பிற்பாடு ஒரு பெரும் சந்திரவட்டக் குடைக்கீழ் அரசாளும் சேர அரசருடனே சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவமுது செய்து மகிழ்ந்தார். 152

சேரருடனே திருவமுது செய்த பின்பு கைகோட்டி
ஆரம் நறுமென் கலவைமான் மதச்சாந் தாடை அணிமணிப்பூண்
ஈர விரைமென் மலர்ப்பணிகள் இனைய முதலாயினவருக்கம்
சார எடுத்து வன்றொண்டர்ச் சாத்தி மிக்க தமக்காக்கி.

சேர அரசருடனே சுந்தரர் திருவமுது செய்த பின்பு; சேர அரசர் தமது கைகளால் அள்ளி நல் மணமுடைய மெல்லிய கலவைச் சாந்து கத்தூரிக் குழம்பு பட்டாடைகள் அழகிய முத்தாபரணம் ஈரமான வாசமலர் மாலை இன்னும் வேறு வித ஆபரணங்களின் வகைகளை நன்முக எடுத்து சுந்தரமூர்த்தி சுவாமிகட்கு அணிந்து மிகுதியாகவுள்ள வற்றை தமக்கும் அணிந்து. 153

பாடல் ஆடல் இன்னியங்கள் பயிறல் முதலாம் பண்ணியினில்
நீடும் இனிய விநோதங்கள் நெருங்கு காலந் தொறுநிகழ
மாடு விரைப்பூந் தருமணஞ்செய் ஆரா மங்கள் வைகுவித்துக்
கூடமுனைப்பா டியர்கோவைக் கொண்டு மகிழ்ந்தார் கோதையார்.

அதன் பின் சுந்தர மூர்த்தி சுவாமிகள் திருமுன்பு பாடல் ஆடல் இனிய வாத்தியம் முதல் இசையிலும் இன்பநிகழ்ச்சிகளில்பெண்கள் குழாமாக நிகழ்த்திகளிப்புறச் செய்வன வாகும் நீடித்த விநோதங்கள் அங்கு நெருக்கமாய காலம் தோறும் நிகழ; அரண்மனையின் புறத்தே வாசப்பூக்களின் மரங்கள் மணம்தரும் சோலைகளில் இருந்து கண்டு இன்புறும்படி செய்வித்து திருமுனைப்பாடி அருள் அரசர் எம்பிரான் சுந்தரரை தம்முடன் சேரக் கொண்டு மகிழ்ந்தார் சேர அரசர். 154

வேறு

செண்டாடுந் தொழில்மகிழ்வுஞ் சிறுசோற்றுப் பெருஞ் சிறப்பும்
வண்டாடு மலர்வாவி மருவியநீர் விளையாட்டும்
தண்டாமும் மதகும்பத் தடமலைப்போர் சலமற்போர்
கண்டாரா விருப்பெய்தக் காவலனூர் காதல்செய்நாள்

பந்தாடுகின்ற தொழிலின் மகிழ்ச்சியும்; பலவகையான (சித்திரான்னம்) அமுதின் வகையான உணவின் பெரும் சிறப்பும்; வண்டுகள் ஆடுகின்ற மலர்க்குளங்களில் அணைந்து நீராடும் விளையாடல்களும்; குறையாத மும் மதம் பொழியும் மலை போலும் கும்ப யானைகளின் பெரும் போரும் வேகமுடன் செயும் மல்யுத்தமும் சுந்தர மூர்த்தி சுவாமிகள் கண்டு குறையாத விருப்படையும் படி சேர அரசனூர் செய்வித்து வரும் நாட்களில். 155

நாவலர்தம் பெருமானும் திருவாரூர் நகராளும்
தேவர்பிரான் கழலொருநாள் மிகநினைந்த சிந்தையராய்
ஆவியை ஆரூரானை மறக்கலுமா மே என்னும்
மேவியசொற் றிருப்பதிகம் பாடியே வெருவுற்றார்.

இப்படி இருக்கும் போது நாவலரின் பெருமான் சுந்தர மூர்த்தி சுவாமிகள் திருவாரூர் நகரை ஆண்டருளும் தேவர்களது பெருமான் தியாகராசனுடைய செவ்விய திருவடிகளை ஒருநாள் மிகவும் நினைந்து கொண்ட சிந்தை உடையராய் ''என் உயிரை ஆரூரனை மறக்கலுமாமோ'' எனப் பொருந்திய சொல்லின் திருப்பதிகம் பாடி மறந்திருந்தமைக்கு பெரிதும் அஞ்சினர். 156

அவர் பாடிய அந்த அற்புதமான திருப்பதிகம் இப்பால் தருகிறோம்:

பண்—தக்கேசி

திருச்சிற்றம்பலம்

பொன்னும் மெய்ப்பொரு ளுந்தரு வானைப் போக முத்திரு வும்புணர்ப் பானைப்
பின்னை என்பிழை யைப்பொறுப் பானைப் பிழையெ லாந்தவி ரப்பணிப் பானை
இன்னை தன்மையன் என்றறி யொண்ணு எம்மா னைஎளி வந்தபி ரானை
அன்னம் வைகும் வயற்பழ னத்தணி ஆரூ ரானை மறக்கலு மாமே. 1

கட்ட மும்பிணி யுங்களை வானைக் காலற் சீறிய காலுடை யானை
விட்ட வேட்கைவெந் நோய்களை வானை வீரவி ஞல்விடு தற்கரி யானைப்
பட்ட வார்த்தை பட நின்ற வார்த்தை வாரா மேதவி ரப்பணிப் பானை
அட்ட மூர்த்தியை மட்டவிழ் சோலை ஆரூ ரானை மறக்கலு மாமே. 2

கார்க்குன் றமழை யாய்ப்பொழி வானைக் கலைக்கெ லாம்பொரு ளாய்உடன் கூடிப்
பார்க்கின் றவயிர்க் குப்பரிந் தானைப் பகலுங் கங்குலும் ஆகிநின் றானை
ஓர்க்கின் றசெவி யைச்சுவை தன்னை உணரும் நாவினைக் காண்கின்ற கண்ணை
ஆர்க்கின் றகட லைமலை தன்னை ஆரூ ரானை மறக்கலு மாமே 3

செத்த போதினில் முன்நின்று நம்மைச் சிலர்கள் கூடிச் சிரிப்பதன் முன்னம்
வைத்த சிந்தைஉண் டேமனம் உண்டே மதிஉண் டேவிதி யின்பயன் உண்டே
முத்தன் எங்கள் பிரான்என்று வானோர் தொழநின் றதிமில் ஏறுடை யானை
அத்தன் எந்தைபி ரான்எம்பி ரானை ஆரூ ரானை மறக்கலு மாமே. 4

செறிவுண் டேல்மனத் தாள்தெளி வுண்டேல் தேற்றத் தால்வருஞ் சிக்கன வுண்டேல்
மறிவுண் டேல்மறு மைப்பிறப் புண்டேல் வாளுள் மேற்செல்லும் வஞ்சனை உண்டேல்
பொறிவண் டாழ்செயும் பொன்மலர்க் கொன்றை பொன்போ லுஞ்சடை மேற்புனைந்
[தானை]
அறிவுண் டேஉட லத்துயிர் உண்டே ஆரூ ரானை மறக்கலு மாமே. 5

பொள்ளல் இவ்வுட லைப்பொருள் என்று பொருளுஞ் சுற்றமும் போகமும் ஆகி
மெள்ள நின்றவர் செய்வன எல்லாம் வாரா மேதவிர்க் கும்விதி யானை
வள்ளல் எந்தமக் கேதுணை என்று நாள்நா ளும்அம ரர்தொழு தேத்தும்
அள்ள லங்கழ னிப்பழ னத்தணி ஆரூ ரானை மறக்கலு மாமே. 6

கரியா னைஉரி கொண்டகை யானைக் கண்ணின் மேல்ஒரு கண்ணுடை யானை
வரியா னைவருத் தங்களை வானை மறையா னைக்குறை மாமதி சூடற்
குரியா னைஉல கத்துயிர்க் கெல்லாம் ஒளியா னைஉகந் துள்கிநண் ணுதார்க்(கு)
அரியா னைஅடி யேற்கெளி யானை ஆரூ ரானை மறக்கலு மாமே. 7

வாளா நின்று தொழும்அடி யார்கள் வான்ஆ ளப்பெறும் வார்த்தையைக் கேட்டும்
நாணு ளும்மலர் இட்டுவ ணங்கார் நம்மை ஆள்கின்ற தன்மையை ஓரார்
கேளா நான்கிடந் தேஉழைக் கின்றேன் கிளைக்கெ லாந்துணை யாம்எனக் கருதி
ஆளா வான்பலர் முன்பழைக் கின்றேன் ஆரூ ரானை மறக்கலு மாமே. 8

விடக்கை யேபெருக் கிப்பல நாளும் வேட்கை யாற்பட்ட வேதனை தன்னைக்
கடக்கி லேன்நெறி காணவு மாட்டேன் கண்கு ழிந்திரப் பார்கையில் ஒன்றும்
இடக்கி லேன்பர வைத்திரைக் கங்கைச் சடையா னைஉமை யாளையோர் பாகத்
தடக்கி னானைஅத் தாமரைப் பொய்கை ஆரூ ரானை மறக்கலு மாமே. 9

ஒட்டி ஆட்கொண்டு போய்ஒளித் திட்ட உச்சிப் போதனை நச்சர வார்த்த
பட்டி யைப்பக லேஇருள் தன்னைப் பாவிப் பார்மனத் தூறுமத் தேனைக்
கட்டி யைக்கரும் பின்தெளி தன்னைக் காத லாற்கடற் சூர்தடிந் திட்ட
செட்டி யப்பனைப் பட்டனைச் செல்வ ஆரூ ரானை மறக்கலு மாமே. 10

ஒருர் என்றுல கங்களுக் கெல்லாம் உரைக்க லாம்பொரு ளாய்உடன் கூடிக்
காரூ ருங்கமழ் கொண்றைநன் மாலை முடியன் காரிகை காரண மாக
ஆரு ரைம்மறத் தற்கரி யானை அம்மான் தன்திருப் பேர்கொண்ட தொண்டன்
ஆரூ ரன்அடி நாய்உரை வல்லார் அமர லோகத் திருப்பவர் தாமே. 11

திருச்சிற்றம்பலம்

திருவாரூர் தனைநினைந்து சென்றுதொழுவேன் என்று
மருஆர்வத் தொண்டருடன் வழிக்கொண்டுசெல்பொழுதில்
ஒருவாநண் புள்ளுருக உடனெழுந்து கைதொழுது
பெருவான வரம்பனுர் பிரிவாற்றூர் பின்செல்வார்

திருவாரூரினை சுந்தரர் பெருமான் நினைந்து நான் அங்கு சென்று தொழுவேன் என்று; பொருந்திய பேரன்புடைய அடியார்களுடன் கூடி வழிக்கொண்டு திருவாரூர் நோக்கிப் புறப்படும் பொழுது; சேர அரசர் பெருமான் நீக்கிடாத பெரும் நட்பு உள்ளத்தை உருக்கிட: உடன் எழுந்து கைகூப்பித்தொழுது பெரிய வான நெறியாளர்க்கு வரம்பினைப் போலும் அச் சேரர் பெருமான் எம்பிரான் சுந்தரைப் பிரிந்திருக்க மாட்டாராய் சுந்தரர் பின் செல்வார். 157

வன்றொண்டர் முன்னெய்தி மனமழிந்த உணர்வினராய்
இன்றுமது பிரிவாற்றேன் என்செய்கேன் யான் என்ன
ஒன்றுநீர் வருந்தாதே உமதுபதி யின்கணிருந்(து)
அன்றினுர் முனைமுருக்கி அரசாளும் எனமொழிந்தார்.

பின் சென்ற சேர அரசர் சுந்தரர் பெருமான் திருமுன்பு போய் மனம் அழிந்த உணர்வினராய் எம்பிரானே இன்று உமது பிரிவினைச் சகியேன் யான் என்செய்கேன் என்ன; அது கேட்ட வன்றொண்டர் சுந்தரரும் நீர் ஒன்றிற்கும் வருத்தமுறுமல் உமது நகரிடத்து இருந்து பகை கொண்டாரின் வீரமெலாம் அழித்து அரசாள்வீராக என மொழிந்தருளினர். 158

ஆரூரர் மொழிந்தருள அதுகேட்ட அருட்சேரர்
பாரோடு விசும்பாட்சி எனக்(கு) உமது பாதமலர்
தேரூரும் நெடுவீதித் திருவாரூர்க் கெழுந்தருள
நேரூரும் மனக்காதல் நீக்கவும்அஞ் சுவன் என்றூர்.

சுந்தரர் அதனை மொழிந்தருளலும் அது கேட்ட அருளுடைய சேரமான் பெருமாள் ''இப்பூமியுடன் வானுலக ஆட்சி எனக்கு உமது பாத மலர் சேவை'' ஆனல் தேர் ஊரும் நெடிய வீதியுடைய திருவாரூருக்கு நீர் எழுந்தருளிட நேராக உமது திருவுளத்தில் கொண்ட காதலை நான் தடை செய்திடவும் அஞ்சுவன் என்றூர். 159

மன்னவனுர் அதுமொழிய வன்றொண்டர் எதிர்மொழிவார்
என்னுயிருக் கின்னுயிராம் எழிலாரூர்ப் பெருமானை
வன்நெஞ்சக் கள்வனேன் மறந்திரேன் மதியணிந்தார்
இன்னருளால் அரசளிப்பீர் நீர்இருப்பீர் எனஇறைஞ்ச.

சேர அரசர் அது மொழிய வன்றொண்டர் சுந்தரர் பதில் மொழிவார் என் உயிருக்கு இனிய உயிராய அழகுடைய திருவாரூர்ப் பெருமானை வன்மை உடைய நெஞ்சைக் கொண்ட கள்வன் யான் மறந்திரேன் பிறையணிந்த பெருமானுரின் இனிய அருளால் நீர் அரசாண்டிருப்பீர் இங்கு என்று சேர அரசரை வணங்கிடலும்: 160

மற்றவரும் பணிந்திசைந்தே மந்திரிகள் தமைஅழைத்துப்
பொற்புநிறை தொன்னகரில் இற்றைக்கு முன்புகுந்த
நற்பெரும்பண் டாரநா னுவருக்க மானவெலாம்
பற்பலராம் ஆளின்மிசை ஏற்றிவரப் பண்ணும் என.

மற்று அந்தசேர அரசரும் பணிந்து இசைவுகொண்டு, தனது மந்திரிமார்களை அழைத்து, அவரை நோக்கி'' நீவிர் எமது பொற்பு நிறைந்த பழைய நகரில் இன்றைக்குமுன்னுக வந்து சேர்ந்த நற்பெரும் வருமானங்களாய நிதிகளின் வெவ்வேறு வருக்கமான எல்லாவற்றையும் பற்பலவான ஆட்களின் மேலாக ஏற்றி இங்குகொண்டு வரச் செய்வியும் என்னலும். 161

ஆங்கவரும் அன்றுவரை ஆயமா கியதனங்கள்
ஓங்கியபொன் நவமணிகள் ஒளிர்மணிப்பூண் துகில்வருக்கம்
ஞாங்கர்நிறை விரையுறுப்பு வருக்கமுதல் நலஞ்சிறப்பத்
தாங்குபொதி வினைஞர்மேல் தலமலியக் கொண்டணைந்தார்.

அது கேட்ட அம்மந்திரிகளும் அன்று வரையும் திறைப் பொருளாக வந்து சேர்ந்த தனங்கள் மேம்பட்ட பொன் நவரத்தினம் ஒளிரும் முத்தாபரணம் ஆடைகளின் வகைகள், பக்கம் எங்கும் நிறையும் வாசனைத் திரவியங்கள் முதல் இவையாவும் நலம் சிறக்கும்படி கட்டிக் கொண்ட பொதிகளாக்கி அவைகளை சுமையாளர் மேல் கொடுத்து இப்பூமி மலிந்திட அவைகளைக் கொண்டு வந்தார். 162

மற்றவற்றின் பரப்பெல்லாம் வன்றொண்டர் பரிசனத்தின்
முற்படவே செலவிட்டு முனைப்பாடித் திருநாடர்
பொற்பதங்கள் பணிந்தவரைத் தொழுதெடுத்துப் புனைஅலங்கல்
வெற்புயர்தோ ளுறத்தழுவி விடைஅளித்தார் வன்றொண்டர்.

மற்று அந்த பொதிகளின் பரப்பை எல்லாம் சுந்தரருடைய தொண்டர்களின் முன்னுக அவர்களைக் கொண்டு செல்லும் படி விடுத்து; திருமுனைப் பாடி நாடர் சுந்தரர் பெருமானுடைய பொற்பாதங்களைப் பணிந்த சேர அரசரை பதில் வணங்கி கைகளால் எடுத்து நல்ல மாலை அணிந்த மலைபோல் உயர்ந்த தோளுடன் சேரத் தழுவி விடை கொடுத்தார் சுந்தரமூர்த்தி சுவாமிகள். 163

ஆரூரர் அவர்தமக்கு விடைஅருளி அங்ககன்று
காரூரு மலைநாடு கடந்தருளிக் கற்சுரமும்
நீரூருங் கான்யாறும் நெடுங்கானும் பலகழியச்
சீரூருந் திருமுருகன் பூண்டிவழிச் செல்கின்றூர்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் சேர அரசரை தங்கும்படி விடைகொடுத்தருளி அங்கு நின்றும் நீங்கி மேகம் ஊரும் மலைநாட்டினை கடந்து சென்று கற்கள் நிறைந்த பூமிகளும்; நீர்பெருகும் காட்டாறும் நெடிய காடும் பல கழிந்திட சீர்பெருகும் திருமுருகன் பூண்டி என்னும் தலத்தின் வழியாக வந்து கொள்கின்றூர்; 164

திருமுருகன் பூண்டிஅயற் செல்கின்ற போழ்தின்கண்
பொருவிடையார் நம்பிக்குத் தாமேபொன் கொடுப்பதலால்
ஒருவர்கொடுப் பக்கொள்ள ஒண்ணுமைக் கதுவாங்கிப்
பெருகருளால் தாங்கொடுக்கப் பெறுவதற்கோ அதுஅறியோம்.

திருமுருகன் பூண்டித் திருத்தலத்தில் அருகே செல்கின்ற நேரத்தில் போரிடும் இடபமுடைய பெருமான் எம்தலைவர் சுந்தரருக்கு தாமே பொன்கொடுப்பது அல்லாமல் இன்னுமொருவர் கொடுத்திட அதனை அவர்வாங்கிடற்கு முடியாமைக்கு; அந்தபொருளை தான் எடுத்து பெருகும் அருளால் அவரிடம் பின்னர் கொடுக்க; இத்திருவிளையாடல் கொண்டாரோ அதனை நாம் அறிய மாட்டோம்; 165

வென்றிமிகு பூதங்கள் வேடர்வடி வாய்ச்சென்று
வன்றொண்டர் பண்டாரம் கவர அருள் வைத்தருள
அன்றினுர் புரமெரித்தார் அருளால்வேட் டுவப்படையாய்ச்
சென்றவர்தாம் வரும்வழியில் இருபாலுஞ் செயிர்த்தெழுந்து.

வெற்றி மிகுந்த பூதங்கள் வேடர்வடிவாகிச் சென்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் சேரரிடமிருந்து பெற்றுவரும் நிதிக்குவியல்களைக் கவர்ந்து கொளளும்படி திருவருள் செய்திட; பகையசுரர் புரமெரித்த பெருமானது அருளிப் பாட்டால் அப்பூதங்கள் வேடுவப் படையாகி; சுந்தர மூர்த்தி சுவாமிகள் வரும் வழியில் இருபுறமும் நின்று; நிதிகொண்டுவரும் சுமைகாரரைக் கண்டதும் கோபத்தால் பொங்கி எழுந்து 166

வில்வாங்கி அலகம்பு விசைநாணிற் சந்தித்துக்
கொல்வோம்இங் கிட்டுப்போம் எனக்கோபத்தாற்குத்தி
எல்லையில்பண் டாரமெலாங் கவர்ந்துகொள இரிந்தோடி
அல்லலுடன் பறியுண்டார் ஆரூரர் மருங்கணைந்தார்.

வில்லையும் வளைத்து கூரிய அலகுடைய அம்பினை விசையுடைய நாணில் பூட்டி உம்மை ''கொல்வோம் இங்கு இட்டுப்போம்'' என்று கோபத்தால் குத்தி எல்லையிலாத திரவியத்தை யெல்லாம் பறித்தெடுத்துக் கொள்ளலும் அதனால் அவர்கள் பயந்து ஓடிமிகு அல்லற் பாட்டுடன் திரவியம் பறியுண்டார் யாவரும் சுந்தரர் பக்கராக வந்து கொண்டார்; 167

ஆரூரர் தம்பால்அவ் வேடுவர்சென் றணையாதே
நீரூருஞ் செஞ்சடையா அருளினல் நீங்கஅவர்
சேரூராம் திருமுருகன் பூண்டியினிற் சென்றெய்தப்
போரூரு மழவிடையார் கோயிலைநா டிப்புக்கார்.

அப்போது திருவாரூரர் சுந்தரர் பாலாக; அவ்வேடுவர் சென்று சேராதே கங்கை நீர் ஊரும் செஞ்சடையுடைய பெருமான் அருளால் பொருளுடன் மறைந்து நீங்கிட; அது உணர்ந்து அந்த வேடுவர் சேர்ந்த ஊராகும் திருமுருகன் பூண்டியி னைச் சென்றடைந்து; போரினை மேற்கொண்டு செல்லும் தரும தேவதையான இடபமேற் செல்லும் பெருமானுடைய கோயிலை நாடிச் சென்று சேர்ந்தார். 168

அங்கணர்தங் கோயிலினை அஞ்சலிகூப் பித்தொழுது
மங்குலுற நீண்டதிரு வாயிலினை வந்திறைஞ்சிப்
பொங்குவிருப் புடன்புக்கு வலங்கொண்டு புனிதநதி
திங்கள்முடிக் கணிந்தவர்தந் திருமுன்பு சென்றணைந்தார்.

நெற்றியில் கண்ணுடைய சிவபெருமானது கோயிலை அஞ்சலி கூப்பித்தொழுது மேகம்படிய நீண்ட திருவாயிலினை வந்து வணங்கி; உள்ளத்தில் பொங்கும் விருப்பு டன் புகுந்து வலம் கொண்டு புனிதமான கங்கையாற்றையும் பிறையையும் முடிக் கணிந்த பெருமானுர் திருமுன்பு சென்று சேர்ந்தார். 169

உருகியஅன் பொடுகைகள் குவித்துவிழுந் துமைபாகம்
மருவியதம் பெருமான்முன் வன்றொண்டர் பாடினுர்
வெருவுறவே டுவர்பறிக்கும் வெஞ்சுரத்தில் எத்துக்கிப் (கு)
அருகிருந்தீர் எனக் கொடுகு வெஞ்சிலை அஞ்சொற்பதிகம்

சேர்ந்து உருகிய அன்பொடு கைகள் குவித்து விழுந்து உமையம்மை பாகம் பொருந்திய பெருமான் முன்பாக வன்தொண்டராம் சுந்தரர் பதிகம பாடினுர் ''பெருமானே அச்சமுற வேடுவர் வழிப்பறி செய்திடும் கொடும் காட்டில் எதற் காக இங்கருகிருந்தீர் நீர் எனத் தொடங்கிய ''கொடுகு வெஞ்சிலை'' எனத்தொடங்கும் அழகிய சொல்லுடைய திருப்பதிகம்.
அவர் எம்பிரானை வினவிப்பாடிய பதிகம் இதுவாகும். 170

திருமுருகன்பூண்டி

பண்—பழம்பஞ்சுரம்

திருச்சிற்றம்பலம்

கொடுகு வெஞ்சிலை வடுக வேடுவர் விரவ லாமை சொல்லித
திடுகு மொட்டெனக் குத்திக் கூறைகொண் டாற லுக்குமிடம்
முடுகு நாறிய வடுகர் வாழ்முரு கன்பூண்டி மாநகர்வாய்
இடுகு நுண்ணிடை மங்கை தன்னெடும் எத்துக் கிங்கிருந் தீர்எம்பி ரானிரே. 1

வில்லைக் காட்டி வெருட்டி வேடுவர் விரவ லாமை சொல்லிக்
கல்லி னல்எறிந் திட்டும் மோதியுங் கூறை கொள்ளுமிடம்
முல்லைத் தாது மணங்கமழ் முருகன் பூண்டி மாநகர்வாய்
எல்லை காப்பதொன் றில்லை யாகில்நீர் எத்துக் கிங்கிருந் தீர்எம்பி ரானிரே. 2

பசுக்க ளேகொன்று தின்று பாவிகள் பாவம் ஒன்றறியார்
உசிர்க்கொ லூபல நேர்ந்து நாள்தொறுங் கூறை கொள்ளுமிடம்
முசுக்கள் போற்பல வேடர்வாழ் முருகன் பூண்டி மாநகர்வாய்
இசுக்கழியப் பயிக்கங் கொண்டுநீர் எத்துக் கிங்கிருந் தீர்எம்பி ரானிரே: 3

பீறற் கூறை உடுத்தொர் பத்திரங் கட்டி வெட்டனராய்ச்
சூறைப் பங்கிய ராகி நாள்தொறுங் கூறை கொள்ளுமிடம்
மோறை வேடுவர் கூடிவாழ் முருகன் பூண்டி மாநகர்வாய்
ஏறு காவிற்ற தில்லை யாய்விடில் எத்துக் கிங்கிருந் தீர்எம்பி ரானிரே. 4

தயங்கு தோலை உடுத்த சங்கரா சாம வேதம்ஓதி
மயங்கி னரிடு பிச்சை கொண்டுணும் மார்க்கம் ஒன்றறியீர்
முயங்கு பூண்முலை மங்கை யாளொடு முருகன் பூண்டி மாநகர்வாய்
இயங்க வும்மீடுக் குடைய ராய்விடில் எத்துக் கிங்கிருந் தீர்எம்பி ரானிரே: 5

விட்டி சைப்பன கொக்க ரைகொடு கொட்டி தத்தளகம்
கொட்டிப் பாடுமித் துந்து மியொடு குடமுழா நீர்மகிழ்வீர்
மொட்ட லர்ந்து மணங்கமழ் முருகன் பூண்டி மாநகர்வாய்
இட்ட பிச்சைகொண் டுண்ப தாகில்நீர் ஏத்துக் கிங்கிருந் தீர்எம்பி ரானிரே. 6

வேதம் ஓதிவெண் ணீறு பூசிவெண் கோவணந் தற்றயலே
ஓதம் மேவியஞற்றி யூரையும் முத்திரநீர்மகிழ்வீர்
மோதி வேடுவர் கூறை கொள்ளும் முருகன் பூண்டி மாநகர்வாய்
ஏது காரணம் ஏது காவல்கொண் டெத்துக் கிங்கிருந் தீர்எம்பி ரானிரே: 7

படவ ரவுநுண் ணேரி டைப்பணைத் தோள்வ ரிநெடுங் கண்
மடவ ரல்லுமை நங்கை தன்னையோர் பாகம் வைத்து கந்தீர்
முடவர் அலலீர இடரிலீர் முருகன் பூண்டி மாநகர்வாய்
இடவம் ஏறியும் போவ தாகில்நீர் எத்துக் கிங்கிருந் தீர்எம்பி ரானிரே. 8

சாந்த மாகவெண் ணீறு பூசிவெண் பற்ற லைகலனு
வேய்ந்த வெண்டலைக் கண்ணி தன்னையோர் பாகம் வைத்துகந்தீர்
மோந்தை யோடு முழக்கரு முருகன் பூண்டி மாநகர்வாய்
ஏந்து பூண்முலை மங்கை தனனெடும் எத்துக் கிங்கிருந் தீர்எம்பி ரானிரே: 9

முந்தி வானவர் தாந்தொழு முருகன் பூண்டி மாநகர்வாய்ப்
பந்த ணைவிரற் பாவை தன்னையோர் பாகம் வைத்தவனைச்
சிந்தை யிற்சிவ தொண்ட னூரன் உரைத்தன பத்துங்கொண்டு
எந்தம் அடிகளை ஏத்து வார்இடர் ஒன்றுந் தாம்இலரே. 10

திருச்சிற்றம்பலம்

பாடியவர் பரவுதலும் பரம்பொருளாம் அவரருளால்
வேடுவர்தாம் பறித்தபொரு ளவையெல்லாம் விண்ணெருங்க
நீடுதிரு வாயிலின்முன் குவித்திடலும் நேரிறைஞ்சி
ஆடுமவர் திருவருளால் அப்படியே கைக்கொண்டார்.

திருப்பதிகம் பாடி எம்பிரான் சுந்தரர் போற்றுதலும் பரம்பொருளாய சிவனது நல்லருளால் வேடுவர் அவர் பறித்த பொருள் எல்லாம் வானம் நெருங்கும்படி நீண்ட திருவாயிலினிடத்து குவிக்கப்பெற்றிடலும்; அதுகண்டு நேர்வணங்கி நட மாடுகின்ற தேவாதிதேவனது திருவருளால் அப்பொருள் யாவையும் அப்படியே கைக்கொண்டார். 171

கைக்கொண்டு கொடுபோம்அக் கைவினைஞர் தமைஏவி
மைக்கொண்டமிடற்றுரை வணங்கிப்போய்க்கொங்கன்று
மெய்க்கொண்ட காதலினுல் விரைந்தேகி மென்கரும்புஞ்
செய்க்கொண்ட சாலியுஞ்சூழ் தி நவாரூர் சென்றணைந்தார்

இழந்த பொருளினை கைக் கொண்டு போகும்படி கையாட்களை விடுத்து பின்னர் கருமைகொண்ட கண்டமுடைய பெருமானுரை வணங்கிப் போய் கொங்கநாடு நீங்கி; உண்மையாகக் கொண்ட காதலால் விரைந்து சென்று; மெல்லிய கரும்பும் செவ்விய செஞ்சாலி நெல்வயலும் சூழ்ந்த திருவாரூர் சென்று சேர்ந்தார். 172

நாவலர்மன் னவர்அருளால் விடைகொண்ட நரபதியார்
ஆவியின்ஒன் றுநண்பின் ஆரூரர் தமைநினைந்து
மாவலரு மலர்ச்சோலை மகோதையினில் மன்னிமலைப்
பூவலயம் பொதுநீக்கி அரசுரிமை புரிந்திருந்தார்.

நாவலர்களின் அரசர் சுந்தரமூர்த்தி சுவாமிகளது நல்ல அருளால் விடை பெற்றுக் கொண்ட சேர அரசர் கழறிற்றறிவார்; தம் உயிர்போல் ஒன்றுன நண் புடைய சுந்தரமூர்த்தி சுவாமிகளை நினைந்து வண்டினம் பாடமலரும் சோலையுடைய மகோதையினில் தங்கி; மலைநாட்டின் எல்லையில் உள்ள இடமெலாம் தனதன்றி வேறொருவரது ஆணை இல்லாது அரசாட்சி செய்திருந்தார். 173

இந்நிலைமை உதியர்பிரான் எம்பிரான் வன்றொண்டர்
பொன்னிவள நாடகன்று மகோதையினில் மேற்புகுந்து
மன்னுதிருக் கயிலையினில் மதவரைமேல் எழுந்தருள
முன்னர்வயப் பரிஉகைக்குந் திருத்தொழில்பின் மொழிகின்றும்.

சேரர்பெருமானர் இந்த நிலைமையாக; எம்பெருமான் சுந்தரர் மீண்டும் காவிரியின்வளநாடு நீங்கி மகோதை மேலாகச் சென்று விளங்கும் திருக்கையிலை மலைக்கு மதயானை மீது எழுந்தருளிட; அவர் திருமுன்பு சேர அரசர் வீரக்குதிரை செலுத்திடும் அற்புதமுடைய திருத்தொழில பின்னர் மொழிகின்றேரும். 174

மலைமலிந்த திருநாட்டு மன்னவனர் மாகடல்போல்
சிலைமலிந்த கொடித்தானைச் சேரலனர் கழல்போற்றி
நிலைமலிந்த மணிமாட நீள்மறுகு நான்மறைசூழ்
கலைமலிந்த புகழ்க்காழிக் கணநாதர் திறமுரைப்பாம்.

மலைமலிந்த திருநாட்டின் மன்னவராகி, பெரும்கடல் போல்பெருகிய வில் லின் சின்னம் கொண்ட கொடிச் சேனையுடைய சேர அரசரின் திருவடிகளை அடி யேன் போற்றி; இப்பால் நல்நிலைகளால் சிறந்த அழகிய மாடங்கள் நீண்டவீதியிலே பெரு வேதங்கள் சூழும் கலைமலிந்த புகழுடைய சீகாழிக் கணநாதர் திறத்தை எடுத்து மொழிவேன் 175

கழற்றறிவார் புராணம் முற்றும்

கணநாத நாயனர் புராணம்

ஆழி மாநிலத் தகிலமீன் றளித்தவள் திருமுலை அமுதுண்ட
வாழி ஞானசம் பந்தர்வந் தருளிய வனப்பின தளப்பில்லா
ஊழி மாகடல் வெள்ளத்து மிதந்துல கினுக்கொரு முதலாய
காழி மாநகர்த் திருமறை யவர்குலக் காவலர் கணநாதர்.

கடல் சூழ்ந்த இப்பெரும் பூமியாய உலகம் எல்லாவற்றையும பெற்றுக் காத்த உமையம்மையார் திருமுலையின் ஞான அமுதப்பால் உண்ட; என்றும் வாழிய திரு ஞானசம்பந்தர் வந்து திருஅவதாரம் செய்தருளிய வனப்பினை உடையதாய்; அள விலாத தாகப் பெருகும் ஊழியின் பெருவெள்ளத்து மிதந்து உலகினுக்கு இது ஒரு முதலாய சீகாழி என்னும் நகரத்து வாழும் திருவுடைய அந்தணர்களின் குலத்திற்கு காவலர் எனப்படும் அருட் திறம் உடையவர் கணநாத நாயனர்.

ஆய அன்பர்தாம் அணிமதிற் சண்பையின் அமர்பெருந் திருத்தோணி
நாயனர்க்குநற் றிருப்பணியாயின நாளும்அன் பொடுசெய்து
மேய அத்திருத் தொண்டினில் விளங்குவார் விரும்பிவந் தணைவார்க்குத்
தூய கைத் தொண்டினில் அவர்தமைத் துறைதொறும் பயில்விப்பார்.

அந்த கணநாதர் என்னும் அன்பர் தாமும் அழகிய மதில் சூழ்ந்த சீகாழியில் இருந்த பெரும் திருத்தோணிபுரக் கோவிலில் அமர்ந்த கடவுளார்க்கு நல்ல திருப்பணியாயின நாளும் அன்பொடு புரிந்து; மேலோங்கிய அத்திருத் தொண் டில் விளங்குவாராய்; அத்தொண்டினைப் புரிந்திடத் தம்பால் விருப்பமுடன் அண்டி வருவோர்க்குத் தூய்மைப்படுத்தும் கைகளால்எம்பிராற்குச் செய்யும் அத்திருத்தொண் டினில் அவர்களை அந்த அந்த துறைகளில் பயிற்று விப்பார். 2

நல்ல நந்தன வனப்பணி செய்பவர் நறுந்துணர் மலர்கொய்வோர்
பல்ப ணித்தொடை புனைபவர் கொணர்திரு மஞ்சனப் பணிக்குள்ளோர்
அல்லும் நண்பக லுந்திரு அலகிட்டுத் திருமெழுக் கமைப்போர்கள்
எல்லையில் விளக்கெரிப்பவர் திருமுறை எழுதுவோர் வாசிப்போர்.

எம்பிராற்கென; நல்ல நந்தனவனத்து பணி செய்வோரும்; வாச முடை கொத்தாக மலர்ந்த பூக்களைக் கொய்வோரும் பல பூமாலைகளைத் தொடுப்போரும் திருமஞ்சன மாட்ட நீர் கொண்டு வரும் பணிகளில் ஈடுபட்டுள்ளோரும் இராவும் நற்பகலும் எம்பிரானது ஆலயத்தில் திருவலகிட்டும் திருமெழுக்கும் அமைப்போ ரும்; எல்லையிலாத விளக்கு எரிப்போரும்; திருமுறை எழுதுவோரும் வாசிப்போ ரும். 3

இனைய பணிகளில் அணைந்தவர்க் கேற்ற அத்திருத்தொண்டின்
வினைவி ளங்கிட வேண்டிய குறை எலாம் முடித்துமே விடச்செய்தே
அனைய அத்திறம் புரிதலில் தொண்டரை ஆக்கி அன் புறுவாய்மை
மனைய றம்புரிந் தடியவர்க் கின்புற வழிபடுந் தொழில் மிக்கார்.

இத்தகைய வாய பல திருப்பணிகளில் அங்கு தம்பால் வந்தார்க்கு ஏற்ற ஏற்ற அத்திருத்தொண்டின் செயல் விளங்கிட; அவ்வவர்பால் உற்ற குறையெ லாம் நீக்கி நல்நிலையடையச் செய்து அந்தச் செயல்களைப் புரிவதில் தொண்டரை ஆக்கி அன்பின் சிறந்த தமது மொழிதட்டாத வாழ்க்கைத்துணைவியுடன் உண்மை பேணும் இல்லறம் நடத்தி அடியார்கட்கு இன்பமுற வழிபடும் தொழிலில் மிகுந் துளாராயினர். 4

இப்பெ ருஞ்சிறப் பெய்திய தொண்டர்தாம் ஏறுசீர் வளர்காழி
மெய்ப்பெ ருந்திரு ஞானபோ னகர்கழல் மேவிய விருப்பாலே
முப்பெ ரும்பொழு தருச்சனை வழிபாடுமுளும் அன்பொடுநாளும்
ஒப்பில் காதல்கூர் உணங்களி சிறந்திட ஒழுகினர் வழுவாமல்

இந்தப் பெரும் சிறப்பு அடைந்த தொண்டர் கணநாத நாயனரும்; சீர் பெருகி என்றும் வளரும் சீகாழித் திருநகரில் அவதரித்து அழிவிலாத உண் மையான பெரும் திருஞான அமுதுண்ட திருஞானசம்பந்தப் பெரு மானது திருவடி மீது விடாது கொண்ட பற்றாலே; காலை மத்தியானம் மாலை எனும் மூன்று பெரும் காலங்களிலும் எம்பிரான் சம்பந்தரது அருச்சனை வழிபாடு உள்ளத்து எழும் அன்பொடு நாள்தோறும் புரிந்து: அந்தவழிபாட்டில் ஒப்பில்லாத காதல் கூரும் தம் உள்ளம் மகிழ்வெய்திட தவறிலாது ஒழுகினர். 5

ஆன தொண்டினில் அமர்ந்தபேரன்பரும் அகலிடத்தினிலென்றும்
ஞான முண்டவர் புனைடரீ கக்கழல் அருச்சனை நலம்பெற்றுத்
தூந றுங்கொன்றை முடியவர் சுடர்நெடுங் கயிலைமால் வரைஎய்தி
மான நற்பெருங் கணங்கட்கு நாதராம் வழித்தொண்டின் நிலைபெற்றார்.

இவ்வணம் முற்றவத்தின் பேற்றிலான இத்திருத்தொண்டில் தங்கி வழிபட்டு வந்த பேரன்பர் கணநாத நாயனரும் இப்பெரும் பூமியில் என்றும் ஞான அமு துண்ட திருஞான சம்பந்தப் பெருமானது செந்தாமரை மலர்த்திருவடி அருச்சனை வழிபாடு நலம் பலிதமாக; அதனால் தூயவாசக் கொன்றைப் பூச்சூடிய முடிய வரது சுடர் கொண்ட நெடிய கையிலை மால் வரையினை அடைந்து; அங்குறையும் அருமந்த நற்பெரும் புண்ணியராம் கணங்கட்கு நாதராகி என்றும் முடிவிலாத வழித்தொண்டின் நன்மை பெற்று முத்தி எய்தினர். 6

உலக முய்யநஞ் சுண்டவர் தொண்டினில் உறுதிமெய்யுணர்வெய்தி
அலகில் தொண்டருக் கறிவளித் தவர்நிறம் அவனியின் மிசையாக்கும்
மலர்பெ ரும்புகழ்ப் புகலியில் வருங்கண நாதனர் கழல்வாழ்த்திக்
குலவு நீற்றுவண் கூற்றுவ னர்நிறங் கொள்கையின் மொழிகின்றும்.

உலகம் உய்ய நஞ்சுண்ட சிவனது தொண்டினில்: அதுவே பொருள் என உறுதி கொண்ட உணர்வு பூண்டு அத்தொண்டினிலிலே அளவிறந்த தொண்டர்கட்கு அறிவு கொடுத்து அப்பனது சிவதொண்டின் செயலே இப்பூமியில் பெருக ஆக்கும் மலரும் பெரும்புகழுடைய சீகாழிப் பதியில் வரும் கணநாத நாயனர் திருவடி வாழ்த்தி அப்பால் சிறப்பு விளங்கிடும் நீற்றின் பொலிவுடைய வலியால் சிறந்த கூற்றுவ நாயனர் செயலை கொள்கையால் எடுத்து மொழிகின்றேரும்.

கணநாத நாயனர் புராணம் முற்றும்

கூற்றுவ நாயனர் புராணம்

துன்னர் முனைகள் தோள்வலியால் வென்று சூலப்படையார்தம்
நன்னு மந்தந் திருநாவில் நாளும் நவிலும் நலமிக்கார்
பன்னுள் ஈசன் அடியார்தம் பாதம் பரவிப் பணிந்தேத்தி
முன்னுகியநற் றிருத்தொண்டின் முயன்றார் களந்தை முதல்வனர்.

பகைவரது போர்முனைகளைத் தமது தோளின் வலியால் வென்று; சூலப்படையுடைய சிவபெருமானது நல்ல நாமம் தமது திருநாவில் என்றும் ஓதும் நலத்தில் மிக்கார் இவர்; பலநாளும் ஈசன் அடியார்களது பாதம் வழிபட்டுப் பணிந்து போற்றி முற்பிறவியின் பேற்றால் வந்துற்ற நல்ல சிவதொண்டில் செயல்பட்டு வருவார் திருக்களந்தை என்னும் நாட்டின் முதல்வர் கூற்றுவநாயனார். 1

அருளின் வலியால் அரசொதுங்க அவனி எல்லாம் அடிப்படுப்பார்
பொருளின் முடிவுங் காண்பரிய வகையால் பொலிவித் திகல்சிறக்க
மருளுங் கவிறு பாய்புரவி மணித்தேர் படைஞர் முதல்மாற்றார்
வெருளுங் கருவி நான்கு நிறை வீரச் செருக்கின் மேலானார்.

இறைவனது அருளின் வலியால் பகையரசரது அரசாட்சிகள் சுவிழ்ந்திட இப் பூமிமுழுவதையும் கம் குடைக்கீழ் ஆளவைத்திடும் இக் கூற்றுவ நாயனார் அவரிட முள்ள எல்லாப் பொருளின் முடிவும் அளவு காணபரிய வகையால் பொலிவித்து ஆண்மை சிறந்திட மத மயக்கமுடைய யானைப் படையும் பாயும் குதிரையும் மணித் தேரும் காலாட் படையும் முதல் பகைவர் கண்டு அஞ்சும் போர்ப்படைகள் நான்கும் நிறைந்திடப் பெற்று அதனாலே வீரச் செருக்கில் மேலானார். 2

வென்றி விஜயின் மீக்கூர வேந்தர் முனைகள் பலமுருக்கிச்
சென்று தும்பைத் தறைமுடித்துஞ் செருவில் வாகைத் திறங்கெழுமி
மன்றல் மாலை மிலைந்தவர்தம் வளநா டெல்லாங் கவர்ந்துமுடி
ஒன்றும் ஒழிய அரசர்திரு வெல்லாம் உடைய ராயினார்.

இப்படை மீகுதியால் பலபோர் முனைகளில் வெற்றி கொள்ளும் செயலில் அரசரை போர்க்களத்தில் வென்று பகையிலாது செய்து சென்று; பகைமுழுது மிலாது நிலம் முழுதும் வென்றதற்கு குறிப்பாக தும்பைப் பூமாலை சூடிபோரில் வெற்றியின் சிறப்பு பெற்றுக்கொண்டு வெற்றிமாலை சூடிய கூற்றுவநாயனார்: உலகில் வளங்கொண்ட நாடெல்லாம் ஆட்சிகொண்டு; உரிமையாய முடி ஒன்றுமட்டும் இல்லாது அரசர்க்கு உற்றதிரு எல்லாம் உடையவராய் இருந்தார். 3

மல்லல் ஞாலம் புரக்கின்றார் மணிமா மவுலி புனைவதற்குத்
தில்லை வாழந் தணர்தம்மை வேண்ட அவரும் செம்பியர்தம்
தொல்லை நீடுங் குலமுதலோர்க் கன்றிச் சூட்டோம் முடி என்று
நல்கா ராகிச் சேரலன்றன் மலைநாடனைய நண்ணுவார்.

முடிசூடா மன்னராகி பெரிய இப்பூமி எலாம் தனது ஆணைசெலுத்தி அரசாளும் கூற்றுவ நாயனார் அழகிய இரத்தினப் பெரு முடி சூட்டுவதற்கு: தில்லைவாழ் அந்தணரை வரும்படி வேண்ட; அவர்களும் அவர்வேண்டுதலை நிராகரித்து தாம் சோழ அரசர் மரபில் வருகின்ற மிக்க பழைமை வாய்ந்த அரச குலமுதல் வர்க்கன்றி ஏனைய எந்த வகை அரசர்க்கு முடி சூட்டிக் கொள்ளோம்; என்று தாம் இவரது முடிசூடற்கு கிரியைகள் செய்திட மறுத்தனராகிநிற்ப; அதனால் கூற்றுவ நாயனார் சோழ நாடு நீங்கி சேர அரசனின் மலைநாட்டைச் சேரப் போய்க் கொள்வார். 4

ஒருமை உரிமைத் தில்லைவாழந் தணர்கள் தம்மில் ஒருகுடியைப்
பெருமை முடியை அருமைபுரி காவல் பேணும் படிஇருத்தி
இருமை மரபுந் தூயவர்தாஞ் சேரர் நாட்டில் எய்தியபின்
வரும்ஐ யுறவால் மனந்தளர்ந்து மன்றுள் ஆடும் கழல்பணிவார்.

ஒருமைப் பாட்டான உரிமை பூண்ட தில்லைவாழ் அந்தணரில் ஒருகுடியை; பெருமையுடைய அரசமுடியை அருமையுடன் காவல் பேணும்படி இருத்தி; இருமையாய மரபிலும் தூயவரான கூற்றுவ நாயனார்: சேரர் நாட்டில் எய்திய பின் தனக்கு தில்லைவாழ் அந்தணர்கள் முடி சூட்டாமைக்கு வருகின்ற ஐயுறவால் மனம் தளர்ந்து திருபாசமுத்திரமாய் கனகசபையில் ஆடும் பெருமான் திருவடிபணிவார். 5

அற்றை நாளில் இரவின்கண் அடியேன் தனக்கு முடியாகப்
பெற்ற பேறு மலர்ப்பாதம் பெறவே வேண்டும் எனப்பரவும்
பற்று விடாது துயில்வோர்க்குக் கனவில் பாத மலரளிக்க
உற்ற அருளால் அவைதாங்கி உலகம் எல்லாந் தனிப்புரந்தார்.

அன்றைய நாளின் இரவினிடத்து ''அடியேனுக்கு முடியாகப் பெற்றபேறாக தேவரீரது திருமலர்பாதமே பெறவேண்டும்'' என்று எம்பிரான் திருவடியிலே பற்று விடாது துயிலுகின்ற கூற்றுவ நாயனார்க்கு கனவில் எம்பிரான் தோன்றித் தம் திருப்பாத மலர்சூட்டிடலும் அவைபெறற் குற்ற அருளால் தாங்கி உலகம் யாவையும் தாம் அரசாண்டார். 6

அம்பொன் நீடும் அம்பலத்துள் ஆரா அமுதத் திருநடஞ்செய்
தம்பிரானார் புவியில்மகிழ் கோவில் எல்லாந் தனித்தனியே
இம்பர் ஞாலம் களிகூர எய்தும் பெரும்பூ சனைஇயற்றி
உம்பர் மகிழ அரசளித்தே உமையாள் கணவன் அடிசேர்ந்தார்.

அழகிய பொன்னினால் நீடித்த கனகசபையில் தீராத இன்பமுடைய திருநடம் புரியும் தமது பெருமானார் இப் பூமியில் மகிழ்ந்து உறையும் கோயில்கள் எல்லாம் தனித் தனியே இப்பூமி களி கூரும்படி வைத்திடும் பெரும் பூசனைகளைப் புரிந்து தேவர்கள் மகிழ்வுற நீதி நீலைபெற அரசாண்டு உமையம்மை யார் கணவர் சிவனது திருவடி சேர்ந்தார் கூற்றுவநாயனார். 7

காதற் பெருமைத் தொண்டின்நிலைக் கடல்சூழ் வையங் காத்தளித்துக்
கோதங் ககல முயல்களந்தைக் கூற்ற னார்தங் கழல் வணங்கி
நாத மறைதந் தளித்தாரை நடைநூற் பாவில் நவின்றேத்தும்
போத மருவிப் பொய் யடிமை இல்லாப் புலவர் செயல்புகல்வாம்.

இறைவன் பால்காதல் கொண்ட பெருமைத் தொண்டின் நல்நிலை பெருக; கடல் சூழ்ந்த இப்பூமியினைக் காத்து அரசாண்டு குற்றம் யாவும் அகல முயலும் திருக்களந்தை நகர்வந்த கூற்றுவ நாயனார் திருவடி வணங்கி; நாதவடிவான வேதத்தினை உலகில் தந்து உலகினைக் காத்த பெருமானை நடை நூல் விதியின் பிரகாரம் பாடலால் நவின்று போற்றும் ஞானம் பெற்ற பொய்க்கு அடிமையிலாத புலவர்களது செய்கையை எடுத்து மொழிவோம். 8

கூற்றுவ நாயனார் புராணம் முற்றும்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் துதி

தேனுங் குழலும் பிழைத்தஇரு மொழியாள் புலவிதீர்க்கமதி
தானும் பணியும் பகைதீர்க்குஞ் சடையார் தூது தருந்திருநாள்
கூனுங் குருடுந் தீர்த்தேவல் கொள்வார் குவவு மலர்ப்பாதம்
யானும் பரவித் தீர்க்கின்றேன் ஏழு பிறப்பின் முடங்குகூன்.

தேனின் இனிமையும் குழல் ஓசையின் இனிமையுமே பிழைத்திடும்படி இனிய மொழி பேசும் பரவை அம்மை; தம்பால் கொண்ட புலவி (பிரிவின் கோபம்) தீர்த்திட; இளம்பிறையும் பகையுடைய பாம்பும் ஒருங்காகப்பகை தீர்த்து சடைமேல் வைத்தருளும் பெருமானார் தூது சென்று பரவை அம்மையது புலவி நீங்கச் செய்த நாளில்; தாம் பரவை அம்மை மனைநோக்கி புறப்படும் பொழுது; தம்முடன் அங்கிருந்த பரசனரில் ஒருவன் கூனனாகவும் குருடனாகவும் தம்முடன் வரமுடியாது வருந்திய நேரம் அக் கூனனுடைய கூனினையும் குருட்டினையும் அருளால் நீக்கி தமக்கு ஏவல்கொள் வாராய சுந்தரமூர்த்தி சுவாமிகளது விளங்கும் மலரடிகளை யானும் போற்றி தீர்ந்து கொள்கின்றேன் எனக்கு வரவிருக்கின்ற ஏழுபிறப்பில் என்னை முடங்கச் செய்திடுகின்ற பெரும் அல்லலாம் கூனினை. 1

வார்கொண்ட வனமுடையாள் சருக்கம் முற்றிற்று

பொய்யடிமை யில்லாத புலவர் சருக்கம்

பொய்யடிமை யில்லாத புலவர் புராணம்

செய்யுள்நிகழ் சொற்றெளிவும் செவ்வியநூல் பல நோக்கும்
மெய்யுணர்வின் பயன்இதுவே எனத் துணிந்து விளங்கி யொளிர்
மையணியுங் கண்டத்தார் மலரடிக்கே ஆளானார்
பொய்யடிமை யில்லாத புலவர் எனப் புகழ்மிக்கார்.

தாம்பாடும் செய்யுள்களில் நிகழும் சொல்லின்தெளிவும் செப்பமாய நூல்கள் பலவற்றை அறிதலும் அவற்றுல் தெளிந்த உண்மை உணர்வின்பயன் இதுவே எனத் துணிந்து; விளங்கி ஒளிரும் சருமை அழகுடைய நீலசண்டப் பெருமான் மலரடி சட்கே ஆளானர்கள் பொய்மைக்கு அடிமையிலாத புலவர்கள் ஏஞப்போற்றப் பெறும் புகழ்மிக்கு உடையவர்; 1

பொற்பமைந்த அரவாரும் புரிசடையார் தமையல்லால்
சொற்பதங்கள் வாய்திறவாத் தொண்டுநெறித் தலைநின்ற
பெற்றியினில் மெய்யடிமை யுடையாராம் பெரும்புலவர்
மற்றவர்தம் பெருமையார் அறிந்துரைக்க வல்லார்கள்.

பொற்புடன் அமைந்த பாம்பு விளங்கும் சடையுடைய பெருமானுரை அல்லாமல் சொல்லின் பதங்கள் பிரயோகித்து பாடற்கு தம் வாய் திறவாத அத்தொண்டு நெறியின் தலை நின்ற பெற்றிமையால் மெய்மைக்கு அடிமை உடையராம் பெரும் புலவோரின் பெருமையை யார் அறிந்து பாட வல்லவர்கள்.

பொய்யற்ற நக்கீரன்முதலாம் புலவோர் இவர் என அந்தாதியில் சிறப்புறக் கூறினுலும் எல்லாரையும் பொதுப்பட ஆசிரியர் சங்கத்து இருந்தவர் அன்றி ஏனையரையும் போற்றிக்கொள்கின்றுர். மாணிக்கவாசகரான பெருமானும் இவர்களுடனே வைத்து போற்றப்பட்டார் எனவும் கொள்ளலாம்: 2

ஆங்கவர்தம் அடியிணைகள் தலைமேற்கொண்ட வனிஎலாம்
தாங்கியவெண் குடைவளவர் குலஞ்செய்த தவமனையார்
ஓங்கிவளர் திருத்தொண்டின் உண்மையுணர் செயல்புரிந்த
பூங்கழலார் புகழ்ச்சோழர் திருத்தொண்டு புகல்கின்றும்.

ஆங்கு அப்பெரும் பொய்யடிமையில்லாத புலவர்களுடைய திருவடியிணைகளை அடியேன் தலைமீது சூடிக்கொண்டு; இப்பூமி எல்லாவற்றையும் ஒருகுடைக் கீழ் தாங்கி இருந்து அரசாண்ட சோழ குலம் செய்த தவத்தை ஒப்பவர்; ஓங்கிவளரும் திருத்தொண்டின் உண்மை உணர்ந்து செயல்புரிந்த பூப்போலும் வீரக் கழல் அணிந்த புகழ்ச் சோழ பிரானது திருத்தொண்டினை நாம் எடுத்துமொழிகின்றோம். 3

பொய்யடிமை யிலாத புலவர் புராணம் முற்றும்

புகழ்ச்சோழ நாயனுர் புராணம்

குலகிரியின் கொடுமுடிமேல் கொடிவேங்கைக் குறியெழுதி
நிலவுதரு மதிக்குடைக்கீழ் நெடுநிலங்காத் தினிதளிக்கும்
மலர்புகழ்வண் டமிழ்ச்சோழர் வளநாட்டு மாமூதூர்
உலகில்வளர் அணிக்கெல்லாம் உள்ளுறையூ ராம்உறையூர்.

உலகிற்கு ஒருபெருமலையாய இமயத்தின் தலைசிறந்த முடி மீது தமது கொடியின் சின்னமாய புலியின் சின்னம் எழுதி நிலவுதருகின்ற சந்திர வட்டக் குடைக்கீழ் நெடிய இப்பூமியினைக் காத்து இனிதே அரசாண்ட புகழ்மலரும் வண்மையுடைய தமிழ் சோழ அரசரின் வளமுடைய நாட்டினில் பெரும் நகரமாயது உலகில் வளரும் அழகிற் கெல்லாம் உறைவிடமான நகரம் உறையூர் எனப்படும்: 1

அளவில்பெரும் புகழ்நகரம் அதனில்அணி மணிவிளக்கும்
இளவெயிலின் சுடர்ப்படலை இரவொழிய எறிப்பனவாய்க்
கிளரொளிசேர் நெடுவானப் பேர்யாற்றுக் கொடி கெழுவும்
வளரொளிமா ளிகைநிரைகள் மருங்குடைய மறுகெல்லாம்.

அளவிலாத பெரும்புகழுடைய நகரம் அதனில் அழகிய மணிகள் விளங்கிடச் செய்யும் இளம் கதிரொளியின் சுடர்ப்பரப்பு இரவின் இருள் நீங்க பிரகாசிப்பனவாய் ஒளிகிளர்ந்து விளங்கும் நெடியவானத்துள்ள பேராறு கங்கையில் மூட்டும் படி உயர்ந்த கொடி நாட்டிய ஒளிவளரும் மாளிகைகளின் நிரைகள் இருபுறமும் உடைய வீதிகளைக் கொண்டது. 2

நாகதலத் தும்பிலத்தும் நானிலத்தும் நலஞ்சிறந்த
போகம்அனைத் தினுக்குறுப்பாம் பொருவிறந்த வளத்தினவாய்
மாகநிறைந் திடமலிந்த வரம்பில்பல பொருள்பிறங்கும்
ஆகரமொத் துளஅளவில் ஆவணவீ திகளெல்லாம்

தேவ உலகத்தும் பாதாள உலகத்தும் பூமியிலும் உள்ள நலம் சிறந்த போகம் அனைத்தினுக்கும் இந்நகரில் இருந்திடும் உறுப்பாய நிகரிலாத வளம் உடைய தாய்; வானம் நிறைந்திட மலிந்த எல்லையிலாத பொருள் பெருகி எடுத்திடக் குறையாது மீளவும் நிரம்பிடும் நிலைமை உடையதான ஆகாத்தை ஒத்துளது; உறையூர் எனும் நகரில் உள்ள அளவிலாத கடை வீதிகள் எல்லாம். 3

பார்நனைய மதம்பொழிந்து பனிவி சும்பு கொளமுழங்கும்
போர்முகவெங் கறையடியும் புடையினமென்றடையவரும்
சோர்மழையின் விடுமதத்துச் சுடருநெடு மின்னுடைக்
கார்முகிலும் பலதெரியா களிற்றுநிரைக் களமெல்லாம்.

பூமி நனைய மதம் பொழிந்து குளிர்ந்த வானம் கொள்ள முழங்கும் ஒளிரும் முகபடத்து போர்த் தொழில் வாய்ந்த கொடியானைகளும்; அந்தயானைகளின் தோற்றத்தால் இவை தமது இனமென்று பக்கரிலே வந்து சேரும்: பொழியும் மழையாக விடும் மதமும் ஒளிரும் மின்னலாம் முகபட்டகரிய மேகங்களும் படிதலால் பலவும் தெரியாத படி இருப்பன யானை நிரைக்களம் எல்லாம். 4

படுமணியும் பரிச்செருக்கும் ஒலிகிளரப் பயில்புரவி
நெடுநிரைமுன் புல்லுண்வாய் நீர்த்தரங்க நுரைநிவப்ப
விடுசுடர்மெய் உறையடுக்கல் முகில்படிய விளங்குதலால்
தொடுகடல்கள் அனையபல துரங்கசா லகளெல்லாம்

ஒலிக்கின்ற மணிகளுடன் இயல்பாய குதிரைச் செருக்கின் கனைப்புமுடன் விளங்கும் குதிரைகள் நீண்ட வரிசையில் நின்று புல் உண்ணும் வாயால் பெருகிய நீர் கடலின் அலையிலுள்ள நுரை ஒப்ப: அக்குதிரைகள் போர்த்த கவசங்கள் மலை என உயர்ந்த அவைமீது முகில்படிவதாகவும் விளங்குவதால் தொடுத்த பெரும் கடலைப் போல விளங்குவன அந்த பல குதிரைச்சாலைகள் எல்லாம். 5

துளைக்கைஐரா வதக் களிறுந் துரங்கஅர சுந்திருவும்
விளைத்தஅமு துந்தருவும் விழுமணியுங் கொடுபோத
உளைத்தகடல் இவற்றொன்று பெறவேண்டி உம்பரூர்
வளைத்ததுபோன்றுள தங்கண்மதில் சூழ்ந்த மலர்க்கிடங்கு.

துளையினைக் கொண்டதுதிக் கையுடைய ஐராவத யானையும்: குதிரைகளின் அரசாய உச்சிச் சிரவம் எனும் குதிரையும்; மகா இலக்குமியும் கடைந்த அமுதும் கற்பக விருட்சமும் சிந்தாமணியும் ஆகிய இவற்றை யெல்லாம் பாற்கடலில் நின்றும் எடுத்து தேவர்கள் சென்றிட; அதனுல் வருத்த முற்ற அக்கடல் அவற்றின் ஒன்றைத் தான் திரும்பபெறவேண்டி தேவ உலகை வந்து வளைத்தது போன்றது; உறையூர் என்னும் இந்த நகரின் மதில் சூழ்ந்த பூவுடைய அகழிக்கிடங்கு. 6

காரேறுங் கோபுரங்கள் கதிரேறும் மலர்ச்சோலை
தேரேறும் அணிவீதி திசையேறும் வசையிலணி
வாரேறும் முலைமடவார் மருங்கேறும் மலர்க்கணையொண்
பாரேறும் புகழ்உறந்தைப் பதியின்வளம் பகர்வரிதால்

மேகங்கள் தவழ்ந்தேறும் கோபுரங்களும்; சூரிய சந்திரர் ஏறும் படியான உயர்ந்த மலர் சோலையும் தேர்கள் ஒய்வின்றிச்செல்லும் அழகிய வீதிகளும் திசையெலாம் பரவும் வசையிலாத அலங்காரங்களும் வார்பூட்டிய முலையுடைய பெண்களின் இருமருங்கும் புரளும் அழகிய கண்களாய மலர்கணையும் அதனுல் வரும் போகச் சிறப்புமாக; சிறந்த இப்பூமிமேல் பெருகும் புகழுடைய உறையூர் என்றும் அப்பதியின் வளம் சொல்வதற்கு அரியதாகும்: 7

அந்நகரில் பாரளிக்குங் அடலரச ராகின்றுர்
மன்னுதிருத் தில்லைநகர் மணிவீதி அணிவிளக்கும்
சென்னிநீ டனபாயன் திருக்குலத்து வழிமுதலோர்
பொன்னிநதிப் புரவலனுர் புகழ்ச்சோழர் எனப்பொலிவார்.

அந்த உறையூர் நகர்இருந்து பூமியை ஆளும் அரசராகின்றார்; விளங்கும் திலலை நகரின் அழகிய வீதிகளை மேலும் அழகுற விளக்கும் சோழன்; நீடித்த திருவுடைய அநபாயனுய எமதுசோழ அரசனது குலத்தின் முன்னைய வழிமுதல்வர் காவிரி நதியின் வளமுடைய சோழ நாட்டை அரசாளும் வண்மை அரசர்: புகழ்சோழர் எனும் நாமமுடன் பொலிகின்றபெருமானர்.

8

ஒருகுடைக்கீழ் மண்மகளை உரிமையினில் மணம்புணர்ந்து
பருவரைத்தோள் வென்றியினுல் பார்மன்னர் பணிகேட்பத்
திருமலர்த்தும் பேருலகுஞ் செங்கோலின் முறைநிற்ப
அருமறைச்சை வந்தழைப்ப அரசளிக்கும் அந்நாளில்

ஒரு குடைக்கீழ் பூமிதேவியை தனது உரிமையாக கைவசம் கொண்டு அரசாண்டு; பருத்தமலை போன்ற தோள்வலியின் வெற்றியினுல் இப்பூமியில் உள்ள அரசர் தம் பணி கேட்டிட திருவை மலரவைக்கும் பெரிய உலகமும் தமது செங்கோலின் முறையாக நடந்திடச்செய்ய அரிய வேதத்தின் பயனை சைவமும் தழைத்திட புகழ்ச் சோழ அரசர் அரசாட்சி செய்திடும் அந்நாட்களில்

9

பிறைவளருஞ் செஞ்சடையார் பேணுசிவா லயமெல்லாம்
நிறைபெருமபூ சனைவிளங்க நீடுதிருத் தொண்டர்தமைக்
குறையிரந்து வேண்டுவன குறிப்பன் வழிகொடுத்தருளி
முறைபுரிந்து திருநீற்று முதல்நெறியே பாலிப்பார்.

பிறைவளரும் செஞ்சடையுடைய பெருமான் பேணி வீற்றிருந்த சிவாலயமான வெல்லாம் நிறைந்த பெரும் பூசனைவிளங்கிடவும்; நீடித்த திருத்தொண்டு புரியும் அடியார்கள் அவர்களை அவர் விரும்பியதை பெற்றுக் கொள்ள அவரை அடுத்து குறையிரந்து வேண்டியும்; அவர்கள் விரும்பியதை குறிப்பின் வழி கொடுத்தருளியும் இவ்வகை தமது அரசியலைப் புரிந்து திருநீற்றின் முதன்மையான நெறியே நிலைபெற அரசாட்சி செய்திடுவார்.

10

அங்கண்இனி துறையுநாள் அரசிறைஞ்ச வீற்றிருந்து
கொங்கரொடு குடபுலத்துக் கோமன்னர் திறைகொணரத்
தங்கள்குல மரபின்முதற் றனிநகராங் கருவூரில்
மங்கலநாள் அரசுரிமைச் சுற்றமுடன் வந்தணைந்தார்,

அவ்வாறுக அரசாண்டு இனிதுறையும் நாட்களில் அரசர்கள் வந்து வணங்க வீற்றிருந்து; கொங்க நாட்டவரொடு மேற்கு நாட்டுள்ள தலையாய அரசரும் திறை கொண்டு வந்திடத்தங்களுடைய குலமரபின் முதன்மையான தனி நகராம் கருவூரில் நல்ல தொரு மங்கல நாளில் அரசியற்குரிய தம்பரிவாரத்துடன் வந்து சேர்ந்தார் புகழ்ச் சோழ அரசர்.

11

வந்துமணி மதிற்கருவூர் மருங்கணைவார் வானவர்சூழ்
இந்திரன்வந் தமரர்புரி எய்துவான் எனஎய்திச்
சிந்தைகளி கூர்ந்தரனூர் மகிழ்திருவா னிலைக்கோயில்
முந்துறவந் தணைந்திறைஞ்சி மொய்யொளிமா ளிகைபுருந்தார்.

வந்து அழகிய மதிலுடைய கருவூரின் அருகே சேர்பவர் தேவர்கள் சூழ இந்திரன் வந்து தேவ உலகின் தலை நகரமாய அமராபுரி புகுவது போன்ற சிறப்புடன் கருவூரில் புகுந்து: மனம் களிகூர்ந்து சிவனூர் மகிழ்ந்து இருந்தருளும் திரு ஆனிலை என்னும் கோவிலை முன்னுக வந்து சேர்ந்து வணங்கி பின்னர் மொய்திடும் ஒளியுடைய தம் மாளிகையில் புகுந்தார்.

12

மாளிகைமுன் அத்தாணி மண்டபத்தின் மணிபூனபொற்
கோளரிஆ சனத்திருந்து குடபுலமன் னவர்கொணர்ந்த
ஒளிநெடுங் களிற்றின் அணிஉலப்பில்பரி துலக்கனகம்
நீளிடைவில் இலகுமணி முதல்திறையுந் திறைகண்டார்.

மாளிகை புகுந்து; முன்புள்ள அத்தாணி மண்டபத்தின் இரத்தினத்தால் அழகுடன் செய்திடப்பெற்ற பொன்னின் சிங்காசனத்தின் மீதாக புகழ் சோழ அரசர் இருந்து; மேற்கு நாட்டு அரசர் கொண்டு வந்த: நீண்ட வரிசையாக நிறுத்தப்பட்ட ஒளியுடைய யானையின் வரிசையும்: அளவிறந்த குதிரைகளின் வரிசையும் எடை சரியாக உள்ள பொன்னும் நீண்ட தூரம் ஒளி வீசும் இரத்தினமும் என்று இவை முதலான திறைப்பொருள் எல்லாம் கண்டார்.

13

திறைகொணர்ந்த அரசர்க்குச் செயலுரிமைத் தொழிலருளி
முறைபுரியுந் தனித்திகரி முறைநில்லா முரண் அரசர்
உறைஅரண உளவாகில் தெரிந்துரைப்பீர் எனஉணர்வு
நிறைமதிநீ டமைச்சர்க்கு மொழிந்தருளி நிகழுநாள்

திறைப்பொருள் கொண்டு வந்த அரசர்க்கு அவர் அவர்க்கு உற்ற செயலான உரிமை அரசாட்சியினை வகுத்துக் கொடுத்து; பின்னர் "உலகெங்கும் நீதியினைப் புரியும் தனியான எமது ஆஞ்ஞாசக்கரத்தின் வழிமுறை நில்லாத கொடும் முரடனை அரசர் உளர் என்றுல் அவர் யாரென தெரிந்து நீர் கூறுவீர் என்று நல் உணர்வின் நிறைந்த மதியுடைய பெரும் மந்திரிகட்கு மொழிந்தருளி நிகழும் நாட்களில்.

14

சென்றுசிவ காமியார் கொணர்திருப்பள் ளித்தாமம்
அன்றுசித றுங்களிற்றை அறவெறிந்து பாகரையும்
கொன்றவறி பத்தர்எதிர் என்னைங்கொன் றருளும்என
வென்றிவடிவாள் கொடுத்துத்திருத் தொண்டில் மிகச்சிறந்தார்.

சிவகாமியாண்டார் திருஆனிலைக் கோயில் பெருமானுக்குச் சாத்திட சென்று கொணர்ந்த திருப்பள்ளித் தாம மலர்களை அன்று சிந்திய யானையை அறவே வெட்டி வீழ்த்தி பாகரையும்கொன்ற எறிபத்த நாயனூர் முன்பு சென்று யானை செய்த சிவ அபராதத்திற்கு என்னையும் கொன்றருளும் என்று தமது வெற்றிதரும் வடிவாளைக் கொடுத்து திருத்தொண்டில் மிகவும் சிறப்புடையரானூர் புகழ்ச்சோழ நாயனூர்.

15

விளங்குதிரு மதிக்குடைக்கீழ் வீற்றிருந்து பாரளிக்கும்
துளங்கொளிநீள் முடியார்க்குத் தொன்முறைமை நெறி அமைச்சர்
அளந்ததிறை முறைகொணரா அரசன் உளன் ஒருவன் என
உளங்கொள்ளும் வகைஉரைப்ப உறுவியப்பால் முறுவலிப்பார்.

விளக்கும் திருவுடைய சந்திர வட்டக் குடைக்கீழ் வீற்றிருந்து பூமியை அரசாளும் துலங்கும் ஒளியுடைய நீண்ட முடியார் புகழ்ச்சோழர்க்குத் தொன்மை நீதி முறைமையின் நெறியுடைய மந்திரிகள திறை கொடாத அரசரை ஆராய்ந்து சொல்பவர் தேவரீரது கட்டளைப்படி இட்ட திறைப்பொருளை முறைப்படி கொணராத அரசன் ஒருவன் உளன் என்று அவனது தன்மையை புகழ்ச்சோழ அரசரது உள்ளத்து எடுத்திடும் வகைமொழிந்திட; அதனுல் உற்ற ஆச்சரியத்தால் புன்சிரிப்புக் கொள்பவராகி.

16

ஆங்கவன்யார் என்றருள அதிகன் அவன் அணித்தாக
ஓங்கெயில்சூழ் மலைஅரணத் துள்ளுறைவான் எனஉரைப்ப
ஈங்குநுமக் கெதிர்நிற்கும் அரணுளதோ படைஎழுந்தப்
பாங்கரணந் துகளாகப் பற்றுப்பீர் எனப்பகர்ந்தார்.

ஆங்கு அந்த அரசன் யார் என்று அவர் கேட்டருள அதுகேட்ட மந்திரிகள் அவன் அதிகன் என்பவன். அருகாக உள்ள நாட்டில் ஓங்கிய மதில் போலச்சூழ்ந்த மலைகளின் அரணத்துள் இருக்கின்றன் என்று சொல்லுதலும்; அதுகேட்ட அரசர் ஈங்கு நுமக்கு எதிராகநிற்கக் கூடிய அரண் ஒன்றும் அப்படி உளதோ? படையுடன் எழுந்து அந்த மலையின் பாங்குடைய அரணத்தைத் தூளாகச் செய்து அவனது ஆட்சியை அறுப்பீராக எனமொழிந்தார்.

17

அடலவளவர் ஆணையினுல் அமைச்சர்களும் புறம்போந்து
கடலனைய நெடுபடையைக் கைவகுத்து மேற்செல்வார்
படர்வனமும் நெடுங்கிரியும் பயில்அரணும் பொடியாக
மிடலுடைநாற் கருவியுற வெஞ்சமரம் மிகவிளைத்தார்.

வலிமை கொண்ட புகழ்ச்சோழ அரசரது ஆணையிலை மந்திரிகளும் வெளியே வந்து கடலை ஒத்த நெடும் படையை அணியாக கைவகுத்து போர் மேலாகச் செல்பவர்; படர்ந்த காடும் நெடுமலையும் அதனுல் அமைந்த அந்த சிங்கள அரண மும் பொடியாக மிடல்உடைய நான்கு விதமான சேனைகளும் தாக்கு தலைச்செய்ய கொடிய போரினைப் புரிந்தனர்.

இவர்போரிட்ட நாடு சிங்கள நாடு என்ன அந்தாதியால் தெரிந்திடலாம். 18

வளவனுர் பெருஞ்சேனை வஞ்சிமலர் மிலைந்தேற
அளவில் அரணக்குறும்பில் அதிகர்கோன் அடற்படையும்
உளநிறைவெஞ் சினந்திருகி உயர்காஞ்சி மிலைந்தேறக்
கிளர்கடல்கள் இரண்டென்ன இருபடையும் கிடைத்தனவால்.

புகழ்ச்சோழ நாயனரது பெருஞ்சேனை தாக்குதலுக்குரிய வஞ்சிப்பூமாலை சூடித் தாக்கிட; சொல்லொணுத அளவுடைய மலையரணத்துக் காப்பில் இருந்த குறுநில மன்னன் அதிகன் என்பவனின் வலியுடைய படையும் உள்ளம் நிறைந்த கொடும் கோபம் பெருகி: உயர்ந்த காஞ்சிப் பூச்சூடிப் போர்க்குவந்திடபொங்கும் கடல்கள் இரண்டும் எதிர்த்து போரிடல் போன்று இருவரது பெரும் படையும் போர்செய்திட ஒன்றை ஒன்று கிட்டின. 19

வேறு

கயமொடு கயமெதிர் குத்தின; அயமுடன் அயமுனை முட்டின
வயவரும் வயவரு முற்றனர்; வியனமர் வியலிட மிக்கதே.

அவ்வாறு போரிடும் பொழுது; யானையோடு யானை எதிர்குத்தின. குதிரை யொடு குதிரைஅணிகள் மோதின. வீரரும் வீரரும் எதிர்த்தனர்: பெரும்போர் அவ்விடத்தில் மிகுந்து கொண்டது. 20

மலையொடு மலைகள் மலைந்தென; அலைமத அருவி கொழிப்பொடு
சிலையினர் விசையின் மிசைத்தெறு; கொலைமத கரிகொலை யுற்றவே.

மலைகளோடு மலைகள் போரிட்டென அலைத்திடும் மதம் அருவிபோல் கொழிப் பொடு; வில்வீரர்கள் மேலாக விடுகின்ற அம்பின் விசையில் வலிமேல்கொண்டு அழிவுசெய்யும் மதயானைகள் கொலையுண்டன. 21

வேறு

சூறை மாருதம் ஒத்தெதிர்; ஏறு பாய்பரி வித்தகர்
வேறு வேறு தலைப்பெய்து; சீறி ஆவி செகுத்தனர்.

சூறைவளிக்காற்றை ஒத்து எதிர்த்திடும் மேல் எழுந்து பாயும் குதிரை மேல் இருந்த வீரர்கள் வேறு வேறுகளதிர்த்துச் சினந்து ஒருவரை ஒருவர் கொன்றனர் 22

மண்டு போரின் மலைப்பவர்; துண்ட மாயிட உற்றெதிர்
கண்டர் ஆவி கழித்தனர்; உண்ட சோறு கழிக்கவே.

நெருக்கமாக எதிர்த்த அப்போரிலேபோரிடும் வீரர் துண்டமாகவெட்டுண்டிட; அவருடன் எதிர்த்து வெட்டிய அவ் வீரரும் வேருெரு வீரரால் வெட்டுண்டு தமது உயிர் நீங்கினுர் தாமுண்ட சோற்றுக்கடன் கழித்திடுவாராய் 23

வீடி னுர்உட லிற்பொழி; நீடு வார்குரு திப்புனல்
ஓடும் யாறென ஒத்தது; கோடு போல்வ பிணக்குவை.

இறந்தார் உடலிற் பொலிகின்ற நீடித்துப் பெருகி வடிந்திடும் இரத்த நீர்; ஓடுகின்ற ஆறு போல ஒத்திருப்பது: இறந்தாரின் பிணக்குவியல்கள் மலைபோல உயர்ந்து உள்ளன. 24

வானி லாவு கருங்கொடி; மேனி லாவு பருந்தினம்
ஏனை நீள்கழு கின்குலம்; ஆன ஊணை டெழுந்தவே.

வானில் உலவிபறக்கும் கறுத்த காகமும்: மேல்வானில் உயரப் பறக்கும் பருந் துகளும் ஏனைய பெருத்த கழுகின் வகைகளும் போர்க்களத்தில் வந்து குவிந்து இறந்தோரின் ஊனினைக் கொத்திக் கொண்டெழுந்தன. 25

வேறு

வரிவிற்கதைசக் கரமுற்கரம்வாள்; சுரிகைப்படைசத் திகழுக்கடைவேல்
எரிமுத்தலகப் பணமெற்பயில்கோல்; முரிவுற்றனதுற் றனமொய்க்களமே.

வரியுடைய வில், கதாயுதம்; சக்கரம்; முன்கைபிடிக்கும் ஆயுதம் வாள் குற்று வாட் படை சிறுசூலம் கழுமுள் வேல் தீப்போலப் பாயும் சூலம் கப்பணம் ஒளியு டைய அம்பு முரிவுற்று அவையின் துகளாகி எங்கும் கிடந்தன 24

வடிவேலதிகன் படைமாளவரைக்: கடிசூழ்அரணக் கணவாய்நிரவிக்
கொடிமாமதில்நீ டுகுறும்பொறையூர்; முடிநேரியனுர் படைமுற் றியதே.

வடித்த வேலுடைய அதிகன் என்னும் அரசனின் படை மாண்டிட: மலைகளின் வரிசைகளால் காவல் அரணமாக அமைந்த அதன் உட்புகு வழியில் (கணவாய்) தமது படையை நிறுத்தி கொடி நாட்டிய பெருமதில் நீண்டிருக்கும் தலை நகராயதை முடி சூடிய புகழ்ச் சோழ அரசருடைய படை முற்றுகை இட்டது. 25

முற்றும்பொருசே னைமுனைத் தலையில்: கற்றிண் புரிசைப் பதிகட் டழியப்
பற்றுந்துறைநொச் சிபரிந் துடையச் :சுற்றும் படைவீ ரர்துணித் தனரே.

முற்றுகையிட்ட சோழ அரசரது போரிடும் பெரும் சேனை முன்பு போர்முனை உடைய கல்லாலாய திண்மையுடைய அரண் மதில் சூழ்ந்த தலைநகர் இடிந்து சரியவும் அதனைச் சூழ்ந்து பற்றிய மதில் நொருங்கி உடைபட்டுத் துகளாகவும் சுற்றி நின்ற படைவீரர் துணித்தார்கள். 26

மாறுற் றவிறற் படைவா ளதிகன்; நூறுற் றபெரும் படைநூ ழில்படப்
பாறுற் றஎயிற் பதிபற் றறவிட்(டு);ஏறுற் றனன் ஓடி இருஞ் சுரமே.

மாறுபாட்டுடன் எடுத்த வலியுடைய வாட்படை வீரன் அதிகன் என்னும் அரசன்தனது அரசின் பெரும் தொகையான படை துகள்பட்டு அழிந் துபோறிப்போன மதில் உடைய அப்பதியில் கொண்ட பற்றையும் விடுத்து பயந்தோடிச் சென்று சேர்ந்தான் கொடிய பெரும் காட்டிடத்தாக. 27

அதிகன்படைபோர்பொருதற்றதலை; பொதியின்குவைஎண்ணிலபோயினபின்
நிதியின் குவைமங் கையர்நீள் பரிமா; எதிரங் கரிபற் றினர்எண் ணிலலே.

அதிகனுடைய படை போர் செய்து தோற்றோடிய நேரத்து இறந்தாருடைய தலைகளை எடுத்து பொதிந்த குவைகள் எண்ணற்றன அனுப்பிய பின்பு; அங்குள்ள நி யின் குவியல் பெண்கள் நீண்ட குதிரைகள் எதிர்க்கும் யானை இவை எண்ணற் றனவற்றை சோழப் படைவீரர் பிடித்தனர். 28

அரண்முற் றிஎறிந்தஅமைச்சர் கடாம்: இரணத்தொழில்விட் டெயில்சூழ்கருவூர்
முரணுற் றசிறப் பொடுமுன் னினர்நீள்; நரணித் தலைவன் கழல்சார்வுறவே.

மதில் அரணை முற்றுகையிட்டு போர் வென்று எழுந்த மந்திரிகள் தாமும் போர்த் தொழிலை விடுத்து வந்து; மதில்சூழ்ந்த தமது தலைநகர் கருவூரைச் சேர்ந்து வெற்றி கொண்ட சிறப்புடன் சேர்கின்றூர்கள் நீண்ட பூமியின் தலைவனை புகழ்ச் சோழ அரசன் திருவடிகள் சேரும்படியாக. 29

மன்னுங் கருவூர்நகர்வா யிலின்வாய்;முன்வந்தகருந் தலைமொய்குவைதான்
மின்னுஞ்சுடர்மாமுடிவேல்வளவன்;தனமுன்புகொணர்ந்தனர்தாணையுளோர்

விளங்கும் கருவூர்த் தலைநகரின் வாயில் இடத்தாக முன்னுக வரப்பெற்ற இறந்த வீரரின் கரும் தலைகளின் மொய்த்த குவியல் அதனைக்கொண்டு; மின்னிடும் சுடருடைய பெருமுடியணிந்து வேல் ஏந்திய புகழ்ச்சோழ அரசன் முன் அத்தலைகளைக்கொண்டு வந்தனர் அவன் சேனையில் உள்ள அவ்வீரர்கள். 30

மண்ணுக்குயிராமெனும்மன் னவனுர்;எண்ணிற் பெருகுந்தலையா வையினும்
நண்ணுகொணருந்தலையொன்றினடுக்;கண்ணுற்ற தொழுன்சடைகண்டனரே

அதுவேனே இப்பூமிக்கு உயிராம் என்னும் படி அரசாளும் புகழ்ச்சோழ மன்னவனுர் தம்முன்பு கொணரப் பெற்ற எண்ணிக்கையில் பெருகும் தலையாவற்றிலும் ஒன்றுகப்பொருந்தி அங்கு கொணர்ந்த தலை ஒன்றில் நடுவாக காணப்பெற்றதோர் ஒவன் அடியவர் கொண்ட தொரு புரிபுன் சடை கண்டனரே. 13

வேறு

கண்டபொழு தேநடுங்கி மனங்கலங்கிக் கைதொழுது
கொண்டபெரும் பயத்துடனும் குறித்தெதிர் சென்றது கொணர்ந்த
திண்டிறலோன் கைத்தலையில் சடைதெரியப் பார்த்தருளிப்
புண்டரிகத் திருக்கண்ணீர் பொழிந்திழியப் புரவலனுர்.

எம்பிரான் சிவனது அருட் குறியாகும் புரிபுன் சடையை அத்தலையின் நடுவில் கண்ட பொழுதே நடுங்கி; மனங்கலங்கி கைகூப்பித்தொழுது உள்ளத்துக்கொண்ட பெரும் பயத்துடன் அத்தலையை நோக்கி முன் சென்று; அத்தலை கொண்டு வந்த திண்மையின் திறலுடைய வீரனது கையிற் கொண்ட அத்தலையில்: சடை நன்கு தெரிந்திடப் பார்த்தருளி; தமது தாமரை மலர் போன்ற திருக்கண்ணீர் பொழிந்து வழியும் படியாக எம்அரசர் பெருமானுர் புகழ்ச்சோழர் சொல்வார். 32

முரசுடைத்திண் படைகொடுபாய் முதலமைச்சர் முனைமுருக்கி
உரைசிறக்கும் புகழ்வென்றி ஒன்றெழிய ஒன்றுமால்;
திரைசரித்த கடலுலகில் திருநீற்றின் நெறி புரந்தியான்
அரசளித்த படிசால அழகி தென அழிந்தயர்வார்.

முரசப்பறை முழக்குடைய திண்மையாய பெரும் படை கொண்டு போய் முதன்மையுடைய என் மந்திரிகள் போர் முனையைத் தாக்கி பலரும் புகழ்ந்து பாடும் பெருவெற்றி ஒன்று நீங்க இதுவொன்றுயிற்று; ஆதலின் திரைகள் சஞ்சரிக்கும் கடல் சூழ்ந்த இவ்வுலகில் திருநீற்றின் நெறியினைக் கடைப்பிடித்து யான் அரசாண்ட விதம் மிகவும் அழகாயது எனச் சொல்லி மனம் சோர்வார். 33

தார்தாங்கிக் கடன்முடித்த சடைதாங்குந் திருமுடியார்
நீர்தாங்குஞ் சடைப்பெருமான் நெறிதாங்கண் டவரானுர்
சீர்தாங்கும இவர்வேணிச் சிரந்தாங்கி வரக்கண்டும்
பார்தாங்க இருந்தேனே? பழிதாங்கு வேன் என்றுர்.

போர்க்குரிய மாலை சூடி தன்தேச அரசனுக்காகக் கடன் முடித்த புரிபுன் சடை தாங்கும் திருமுடியுடைய இவர் கங்கை நீர் தாங்கும் சடையுடைய சிவபெருமானது நெறிப்படி ஒழுகிக் கண்டு தாம் அவரேயானுர். சீர் கொண்ட இவரது புரிபுன் சடையாய தலை தாங்கி என்முன்வரக் கண்டும் நான் இன்னமும் இப்பூமியை அரசாள இருந்தேனே? அந்தோ பெரும் பழிதாங்குவேன் என்றுர் புகழ்ச்சோழ மன்னர். 34

என்றருளிச் செய்தருளி இதற்கிசையும் படிதுணிவார்
நின்றநெறி அமைச்சர்க்கு நீள்நிலங்காத் தரசளித்து
மன்றில்நடம் புரிவார்தம் வழித்தொண்டின் வழிநிற்ப
வென்றிமுடி என்குமரன் தனைப்புனைவீர் எனவிதித்தார்.

என்று இன்னவகை புகழ்ச்சோழ மன்னர் அருளிச் செய்து இந்த அபராதச் செயலிற்கு ஏற்றது செய்திட இசையும் படி துணிவாராகி; அங்குநின்ற நன்நெறியின் மந்திரிகட்கு நீடித்த திருவுடைய இப்பூமியைக் காத்து அரசாண்டு கனகசபையில் நடம்புரியும் கடவுளின் வழித்தொண்டின் வழியாக நின்றிடற்கு இனி வெற்றியுடைய முடியினை என் மைந்தனுக்கு சூடுவீராக எனப்பிரகடனம் செய்தார். 35

அம்மாற்றங் கேட்டழியும் அமைச்சரையும் இடரகற்றிக்
கைம்மாற்றுஞ் செயல்தாமே கடனுற்றுங் கருத்துடையார்
செம்மார்க்கந் தலைநின்று செந்தீமுன் வளர்ப்பித்துப்
பொய்ம்மாற்றுதிந் திருநீற்றுப் புனைகோலத் தினிற்பொலிந்தார்.

அம்மாற்றம் கேட்ட உடனே அவர் திருவுள்ளக் கருத்துணர்ந்த மந்திரிகள் மனமழிந்து சோர்வார் கொண்ட கவலையை தமது நீதியின் வாக்குகளால் நீக்கி; புரிபுன்சடைத் தலைவெட்டுண்டற்கு பதிலாகச் செய்திடும் தண்டனையை தாமே கடனுகச் செய்திடும் கருத்துடைய புகழ்ச் சோழஅரசர் செம்மையான நல்மார்க்கத்தில் தலையாக நின்று ஒளிரும் செந்தீயினை தமது முன்னுக வளர்ப்பித்து; பொய்மையாம் தன்மையை அறவே நீக்கிடும் திருநீற்றினை தம் மேனி முழுவதும் நிரம்ப அணிந்திடும் கோலத்தில் பொலிகின்றுர். 36

கண்டசடைச் சிரத்தினையோர் கனகமணிக் கலத்தேந்திக்
கொண்டுதிரு முடித்தாங்கிக் குலவுமரி வலங்கொள்வார்
அண்டர்பிரான் திருநாமத் தஞ்செழுத்தும் எடுத்தோதி
மண்டுதழற் பிழம்பினிடை மகிழ்ந்தருளி உள்புக்கார்.

தாம் கண்டு கொண்ட புரிபுன் சடைத்தலையை ஓர் பொன்னலும் முத்தாலும் செய்த பாத்திரத்தில் வைத்து ஏந்திக் கொண்டு; தம் முடிமீது வைத்து ஒங்கி எரியும் நெருப்பினை புகழ்ச் சோழ அரசநாயனுர் வலங்கொள்பவர் தேவர்கள் பெருமான் திருநாமம் ஐந்து எழுத்தையும் எடுத்து மொழிந்து சுவாலித்தெரியும் நெருப்பின் சுடரிடத்து மகிழ்ச்சியுடன் உட்புகுந்தார். 37

புக்கபொழு தலர்மாரி புவிநிறையப் பொழிந்திழிய
மிக்கபெரு மங்கலதூ ரியம்விசும்பின் முழக்கெடுப்பச்
செக்கர்நெடுஞ் சடைமுடியார் சிலம்பலம்பு சேவடியின்
அக்கருணைத் திருநிழற்கீழ் ஆராமை அமர்ந்திநந்தார்.

புகுந்த பொழுது பூவின் மழை இப்பூமியெலாம் நிறைந்திடப் பொழிந்து சொரிய; மிகுந்த ஓசையுடைய தேவப்பெருமங்கல வாத்தியஓசை வானத்தில் முழங்கிக் கொள்ள; செக்கர் போலும் சிவந்த நெடும் சடைமுடியுடைய பெருமானரின் சிலம்புகள் ஒலித்தும் திவ்விய சேவடியின் உணர்தற்கரிய அக்கருணையின் நிழல்கீழாக ஆனந்தம் ஆராத முறையாக அமர்ந்திருந்தார் எம்பெருமான் புகழ்ச்சோழநாயனுர். 38

முரசங்கொள் கடற்றானை மூவேந்தர் தங்களின்முன்
பிரசங்கொள் நறுந்தொடையல் புகழ்ச்சோழர் பெருமையினைப்
பரசுங்குற் றேவலினுல் அவர்பாதம் பணிந்தேத்தி
நரசிங்க முனையர்திறம் நாமறிந்த படிஉரைப்பாம்.

முரசப்பறை முழங்கிட கடல் போன்று பரந்து செல்லும் சேனையுடைய சேர சோழ பாண்டியர் என்னும் மூன்று அரசர் தங்களின் முன்னுன முதன்மை உடைய தேன் கொண்ட வாச மலர் மாலையணிந்த புகழ்ச்சோழ அரசர் பெருமையினை மொழிந்திடும் தொண்டாய குற்றேவலினுல் அவர் திருப்பாதம் பணிந்து போற்றி இனி நரசிங்க முனையரய நாயனுர் தன்மையை நாம் அறிந்தபடி மொழிவோம். 39

புகழ்ச்சோழ நாயனுர் புராணம் முற்றும்.

நரசிங்கமுனையரைய நாயனுர் புராணம்

கோடாத நெறிவிளக்கும் குலமரபின் அரசளித்து
மாடாக மணிகண்டர் திருநீறே மனங்கொள்வார்
தேடாத பெருவளத்தில் சிறந்ததிரு முனைப்பாடி
நாடாளுங் காவலனுர்; நரசிங்க முனையரையர்.

கோணுதல் இலாத செங்கோலின் நெறி விளங்கிடும் நற்குலமரபின் அரசாண்டு மாண்புடனுக திருநீலகண்ட முடைய பெருமானின் திருநீறே மெய்ப் பொருளாவது எனமனம் கொள்பவர்; தேடமுடியாத பெருஞ் செல்வத்தில் சிறந்த திருமுனைப்பாடி என்னும் நாட்டினை ஆளும் அரசனுர் நரசிங்க முனையரையர் என்னும் திருநாம முடையவர். 1

இம்முனையர் பெருந்தகையார் இருந்தரசு புரந்து
போய்த் தெம்முனைகள் பலகடந்து திங்குநெறிப் பாங்ககல
மும்முனைநீள் இலைச்சூல முதற்படையார் தொண்டுபுரி
அம்முனைவர் அடிஅடைவே அரும்பெரும்பே றென அடைவார்.

இந்த முனையர் மரபின் வந்துதித்த பெரும் தகையார் நரசிங்கமுனையரையர் அரசாண்டு சென்று பகைவரது கொடும்போர் முனைகள் பல வென்று; உலகில் திங்காகிய நெறிகளின் பாங்குகள் அகன்றிட மூன்று முனைகளை உடைய நீண்ட இலைபோலும் சூலமாய முதன்மை பெற்ற படையுடைய சிவனது தொண்டு புரிகின்ற அந்தவழியவரின் திருவடி அடைதலே பெறுதற்கரிய பேறென எண்ணி அதனைச் சார்ந்து கொள்வார். 2

சினவிடையார் கோயில்தொறுந் திருச்செல்வம் பெருக்குநெறி
அனஇடைஊர் உயிர்துறக்க வருமெனினும் அவைகாத்து
மனவிடை ஆமைத்தொடையல் அணிமார்பர் வழித்தொண்டு
கனவிடையா கிலும்வழுவாக் கடனுற்றிச் செல்கின்றூர்.

கோபமுடைய இடபவாகனத்து எழுந்தருளி வரும் எம்பெருமான் சிவனது கோவில் தோறும் திருவுடைய செல்வத்தை பெருக்கிடும் வழிவகைகளில் தமது அரிய உயிரைப் போக்கிட வருமெனினும் அவை காத்து; அக்குமணியுடன் ஆமை ஓட்டையும் மாலையாக அணிந்துள்ள அழகிய திருமார்புடைய சிவமூர்த்தியின் வழியடிமைத் தொண்டு கனவில் என்றுலும் வழுவாத முறையில் தம்கடன் புரிந்து செல்கின்றூர். 3

ஆறணிந்த சடைமுடியார்க் காதிரைநா டொறுமென்றும்
வேறுநிறை வழிபாடு விளங்கியபூ சனைமேவி
நீறணியும் தொண்டர்அணைந் தார்க்கெல்லாம் நிகழ்பசும் பொன்
நூறுகுறை யாமல்அளித் தின்னமுது நுகர்விப்பார்.

இவ்வாறுன செய்கையில் கங்கை அணிந்த சடைமுடியுடைய கடவுளார்க்கு திருவாதிரை நாட்கள் தோறும் என்றும் எம்பிராற்கு வேறுன நிறைந்த வழிபாடு விளங்கிய பூசனை புரிந்து அன்று தம்மிடம் திருநீறு அணிந்திடும் அடியார்கள் தம்பால் அணைந்தார்க் கெல்லாம் நிகழும் பசுமையான பொற்காசு நூறு குறையாது கொடுத்து அவரை இனிய அமுதும் உண்ணும் படி செய்வார். 4

ஆனசெயல் முறைபுரிவார் ஒருதிருவா திரைநாளில்
மேன்மைநெறித் தொண்டர்க்கு விளங்கியபொன் னிடும்பொழுதில்
மானநிலை அழிதன்மை வருங்காமக் குறி மலர்ந்த
ஊனநிகழ் மேனியராய் ஒருவர்நீ றணிந்தணைந்தார்.

இவ்வாறுன செயன்முறை செய்பவர் ஒரு திருவாதிரை நாளில் மேன்மையான திருநீற்று நெறியுடைய தொண்டர்க்கு விளங்கிய நூறு பொன்னினைக் கொடுத்திடும் பொழுதில் தனது மானமான நிலையழிந்த தன்மையில் (உடைஇலாது) தமது காமக் குறியும் வெளிப்படத்தோன்றிட ஊனமுடைய மேனியராய் ஒருவர் திருநீறு அணிந்து அங்கு நரசிங்கமுனையரிடம் வந்தார். 5

மற்றவர்தம் வடிவிருந்த படிகண்டு மருங்குள்ளார்
உற்றஇகழ்ச் சியராகி ஒதுங்குவார் தமைக்கண்டு
கொற்றவனுர் எதிர்சென்று கைகுவித்துக் கொடுபோந்தப்
பெற்றியினுர் தமைமிகவுங் கொண்டாடிப் பேணுவார்.

மற்று இப்படி வந்தவரின் வடிவிருந்த தன்மைகண்டு பக்கரில் உள்ளார்கள் தாம் தாம்கொண்ட இகழ்சியராகி ஓர் புறமாக ஒதுங்குவாரை நரசிங்கமுனையரையர் கண்டு: அந்த வெற்று மேனியுடன் வந்த அடியவர்முன் சென்று கைகூப்பி வணங்கி அழைத்துக்கொண்டு சென்று அந்த வெற்று மேயராய் நீறணிந்து வந்த அடியவரை மிகவும் கொண்டாடிப் பேணிக்கொள்வார். 6

சீலம்இலரே எனினும் திருநீறு சேர்ந்தாரை ஞாலம்
இகழ்ந் தருநரகம் நண்ணுமல் எண்ணுவார்
பாலணிந்தார் தமக்களித்த படிஇரட்டிப் பொன்கொடுத்து
மேலவரைத் தொழுதினிய மொழிவிளம்பி விடைகொடுத்தார்.

சீலம் இல்லாதவரே என்றுலும் திருநீறு அணிந்து கொள்வாரை இப்பூமி இகழ்ந்து கொடிய நகரம் சேராமல் இருக்க எண்ணிடும் நரசிங்க முனையரையர் பெருமான் தம்பால் வந்தார்கட்கு கொடுத்தபடியான நூறுபொற்காசில்; இவர்க்கு இருமடங்கான இருநூறு பொன் கொடுத்து பின்பு மேலான அவரைத் தொழுது இனிய மொழி பகர்ந்து செல்லுமாறு விடை கொடுத்தார். 7

இவ்வகையே திருத்தொண்டின் அருமைநெறி எந்நாளும்
செவ்வியஅன் பினிலாற்றித் திருந்தியசிந் தையராகிப்
பைவளர்வாள் அரவணிந்தார் பாதமலர் நிழல்சேர்ந்து
மெய்வகைய வழிஅன்பின் மீளாத நிலைபெற்றூர்.

இவ்வகையாக திருத்தொண்டின் அருமை நெறியை எந்நாளும் செவ்விய அன்பினுல் செய்து திருத்திய சிந்தைஉடையராகி நஞ்சின்பைவளரும் நாகபாம்பினை அணிந்த கடவுளாரின் பாதமலர் நீழலில் சேர்ந்து உண்மையான வழியன்பில் மீண்டிடாத நிலையினைப் பெறுது முத்தி இன்பம் பெற்றூர்: 8

விடநாகம் அணிந்தபிரான் மெய்த்தொண்டு விளைந்தநிலை
உடனுகும் நரசிங்க முனையர்பிரான் கழலேத்தித்
திடநாக மதஞ்சொரியத் தனஞ்சொரியுங் கலஞ்சேரும்
கடனுகை அதிபத்தர் கடனுகைக் கவினுரைப்பாம்.

நஞ்சுடைய நாகத்தைப் பூணுக அணிந்த பெருமானரின் மெய்ம்மையாம் தொண்டு விளைந்த நிலைவிளங்கிய நரசிங்கமுனையர் பெருமான் திருவடி போற்றி பெருத்த யானைமதம் சொரியத் தனமும் கொண்டுவந்து சொரியும் கப்பல்கள் சேரும் கடல் அருகே இருந்த நாகபட்டினத்து வாழ்ந்த அதிபத்த நாயனரின் திருத்தொண்டின் அழகை எடுத்து மொழிவோம். 9

நரசிங்க முனையரைர் நாயனர் புராணம் முற்றும்

அதிபத்த நாயனர் புராணம்

மன்னி நீடிய செங்கதி ரவன்வழி மரபின்
தொன்மை யாம்முதற் சோழர்தந் திருக்குலத் துரிமைப்
பொன்னி நாடெனும் கற்பகப் பூங்கொடி மலர்போல்
நன்மை சான்றது நாகப்பட்டினத்திரு நகரம்.

நீடித்து விளங்கிய சூரியன் வழியில் வந்த மரபாகிய தொன்மை கொண்ட முதற்சோழர்களது திருக்குலத்தினிற்கு உரிமையுடைய தான காவிரி நாடு எனும் கற்பகத்தின் பூங்கொடி ஒன்றில் மலர்ந்த மலர்போல் நன்மை பூண்டது கடற்கரையில் விளங்கிய நாகபட்டினத்திரு நகரம். 1

தாம நித்திலக் கோவைகள் சரிந்திடச் சரிந்த
தேம லர்க்குழல் மாதர்பந் தாடுதற் றிகள்சூழ்
காமர் பொற்சுடர் மாளிகைக் கருங்கடல் முகந்த
மாமு கிற்குலம் மலியென ஏறுவ மருங்கு.

அந்நகரில்; நமது மேனியில் அணிந்த முத்தின் மாலைக்கோவைகள் சரிந்திட தேன்சொட்டும் பூச்சூடியகூந்தலும் அவிழ்ந்து சரிந்திட பெண்கள் பந்தாடல் புரிந்திடும் வீதிகள் சூழ்ந்த அழகிய பொன்னின் சுடருடையமாளிகைகள் மீது அருகாக வந்த; கறுத்த கடலிலே நீர்உண்டு எழுந்த பெருமுகிற் கூட்டங்கள் அவைகளை மலை ஏணக்கொண்டு ஏறுவன அருகாக. 2

பெருமை யிற்செறி பேரொலி பிறங்கலின் நிறைந்த
திரும கட்குவாழ் சேர்விட மாதலில் யாவும்
தருத லின்கடல் தன்னினும் பெரிதெனத் திரைபோல்
கரிப ரித்தொகை மணிதுகில் சொரிவதாங் கலத்தால்.

பெருமையிற் செறிந்த பேரோசை அங்கு கேட்கப்படுதலில்; நிறைந்து இலக்குமிதேவி தாம் வாழ்வதற்கு சேரும் இடமாதலில்; யாவையுமாம் பொருள்களைத் தருதலில் அத்திருவுடைய நகரமும்; கடல் தன்னிலும் பார்க்கப்பெரிதென விளங்கி தன்னிடத்து கடலின் திரைபோல யானை குதிரை மணிகள் பட்டாடை இவற்றை கப்பல் மூலமாகக் கொண்டு வந்து சொரியும் இயல்புடையது. 3

நீடு தொல்புகழ் நிலம்பதி னெட்டினும் நிறைந்த
பீடு தங்கிய பலபொருள் மாந்தர்கள் பெருகிக்
கோடி நீள்தனக் குடியுடன் குவலயங் காணும்
ஆடி மண்டலம் போல்வதவ் வணிகிளர் மூதூர்.

நீடித்தபழமையாம் புகழ் உடைய நிலங்கள் பதினெட்டு வகையிலும் நிறைந்த பெருமை தங்கிய பொருள்களுடைய மனிதர் அங்கு கூடிப்பெருகி கோடிக் கணக்கில் நீண்ட செல்வங்கள் நிறைந்த குடியுடன் அங்கு வாழ்தலால் இப்பூமிதேவி அப்பதினென் வகை நிலத்தோரையும் காணும் படியாக வைத்த கண்ணாடி மண்டலம் போல் விளங்குவது அழகுகிளரும் அம்முதியஊர். 4

அந்நெடுந்திரு நகர்மருங் கலைகடல் விளிம்பில்
பன்னெடுந்திரை நுரைதவழ் பாங்கரின் ஞாங்கர்
மன்னு தொன்மையின் வலைவளத் துணவினில் மலிந்த
தன்மை வாழ்குடி மிடைந்தது தடநுளைப் பாடி.

அந்த நீடித்த திருவுடைய நகரின் பக்கரில் அலைகளை உடைய கடலின் விளிம்பில் பல நெடிய திரைகள் வந்து மோதிஎழுந்த நுரைகள் தவழும் பக்கரில் இப்பூமியில் விங்கிய பழமையில் வலைகொண்டு வீசி மீன்பிடித்து வாழும் வலையின் செல்வத்து உணவால் பிறந்த தன்மையில் வாழும் குடிநெருங்கிய தாகக்காணப்பெறுவது ஓர் விசாலித்த பரதவரின் பாடி; 5

புயல ளப்பன எனவலை புறம்பணை குரம்பை
அயல ளப்பன மீன்விலைப் பசும்பொனின் அடுக்கல்
வியல ளக்கரில் விடுந்திமில் வாழ்நகர்தள் கொணாந்த
கயல ளப்பன பரத்தியர் கருநெடுங் கண்கள்.

அத்தகைய பரதவரியின் இருப்பிடமாய பாடியில் குடிசைகளின் அயலாக மேகங்களை அளப்பன போன்ற வலைகள் தூக்கி உலர விடப்பட்டிருக்கும்: அக்குடிசைகள் அயலே மீன்விற்றதனல் பெற்ற பொற்காசுகளின் குவியல் அளந்திடப் பெறுவன: பெரிய சமுத்திரத்தில் செலவிடுகின்ற தோணிகளின் தொழிலால் வாழ்கின்ற பரதவர் பிடித்து வந்த மீன்களின் பெறுமதியை அப்பரதவருடைய பெண்களாம் பரத்தியரின் கரிய நெடுங் கண்கள் அளந்திடுவன. 6

உணங்கல் மீன்கவர் உறுநசைக் குருகுடன் அணைந்த
கணங்கொள் ஓதிமம் கருஞ்சினைப் புன்னையங் கானல்
அணங்கு நுண்ணிடை நுளைச்சியர் அசைநடைக் கழிந்து
மணங்கொள் கொம்பரின் மருங்குநின் றிழியல மருளும்.

காயவத்த மீன்களைக் கவர்ந்திட உற்ற ஆசை கொண்ட பறவையுடன் சேர வந்த கூட்டமாகிய அன்னப்பறவைகள்; கரிய கொம்பினை உடைய புன்னை மரத்தின் காட்டருகே எழிலுடன் நடந்திடும் சிற்றிடையுடைய பெண்களின் அழகிய நடைக்குத் தோற்று; மணம் கொண்ட மலருடைய அப்புன்னை மரத்தின் கொம்பரின் கீழ் இறங்காது மருண்டிருக்கும். 7

வலைநெடுந்தொடர் வடம்புடை வலிப்பவ ரொலியும்
விலைப கர்ந்துமீன் குவைகொடுப் பவர்விளி யொலியும்
தலைசிறந்தவெள் வளைசொரி பவர்தழங் கொலியும்
அலைநெடுங்கடல் அதிரொலிக் கெதிரொலி அனைய.

வலைகளின் நெடிய தொடர்புடைய வடக்கயிறுகளை பக்கராக இழுத்து வலிப்போரது ஓசையும்; விலைபேசி மீன்குவியல் கொடுப்போரது கூற்றின் ஓசையும்; மிகச்சிறந்த வெள்ளைச் சங்கினைக் கொணர்ந்து குவிப்போரது விளங்கும் ஓசையும்; அலைத்திடும் நெடும் கடல் ஒலிக்கும் எதிரொலிக்கும் படியாக உள்ளன. 8

அனைய தாகிய அந்நுளைப் பாடியில் அமர்ந்து
மனைவ ளம்பொலி நுளையர்தங் குலத்தினில் வந்தார்
தனை இளம்பிறை முடியவர் அடித்தொண்டு புரியும்
வினைவி ளங்கிய அதிபத்தர் எனநிகழ் மேலோர்.

அனைய வளம் உடைய தாகிய அந்த பரதவர் சேரியில் தங்கி இல்லறத்தின் வளம் பொலியும் பரதவருடைய குலத்தினில் வந்து அவதரித்து வந்தார். இளம்பிறை சூடிய முடியவர் சிவனது திருவடித்தொண்டு புரிகின்ற செயல் விளங்கிய அதிபத்தர் எனும் நாமமுடன் நிகழ்ந்திடும் ஓர்பெரியவர். 9

ஆங்கவ் வன்பர்தாம் நுளையர்தம் தலைவராய் அவர்கள்
ஏங்கு தெண்டிரைக் கடலிடைப் பலபட வியக்கிப்
பாங்கு சூழ்வலை வளைத்துமீன் படுத்துமுன் குவிக்கும்
ஓங்கு பல்குவை உலப்பில உடையராய் உயர்வார்.

ஆங்கு அந்த அன்பர் அதிபத்தர் தாமும் அங்குவாழும் மீனவர்க்கு எல்லாம் தலைவராய்: அவர்களை இரையும் தெள்ளிய திரையுடைய கடலிடத்து பலதன்மையாகச் செல்லும்படி செலுத்தி பக்கராக சூழவலித்திடும் வலைகளைவளைத்து மீன் பிடித்து கொணர்ந்து கரைமுன்னைக் குவித்திடும் ஓங்கியபலவகை வளம் அளவிலாத குறைவின்றிப் பெருகும் இயல்புடையராய் அத்துறையில் உயர்ந்திருப்பார், 10

முட்டில் மீன்கொலைத் தொழில்வளத் தவர்வலை முகந்து
பட்டமீன்களில் ஒருதலை மீன்படு தோறும்
நட்ட மாடிய நம்பருக் கெனநளிர் முந்நீர்
விட்டு வந்தனர் விடாதஅன் புடனென்றும் விருப்பால்.

குறைதலிலாத மீனைப்பிடித்திடும் கொலைத்தொழிலின் செல்வத்தவர் அவர் வலை வீசிவளைத்த போதுபட்ட மீன்களில் ஒருதலைப்பாடுடைய மீன்படுகின்ற நாள்தோறும் அதனை நடமாடுகின்ற எம்பிரான் சிவனுக்கென அழகிய கடலிடத்து விட்டு வந்தனர்; விடாத அன்புடன் என்றும் அச்செயலில் கொண்டவிருப்பால். 11

வாகு சேர்வலை நாளொன்றில் மீனொன்று வரினும்
ஏக நாயகர் தங்கழற் கெனவிடும் இயல்பால்
ஆகு நாள்களில் அநேகநாள் அடுத்தொரு மீனை
மேக நீர்படி வேலையிற் படவிட்டுவந்தார்.

வலிமை உடைய வலைவீச்சலின் நாள்ஒன்றில் ஒருமீனை வந்து பட்டாலும் ஏக நாயகரான சிவனது திருவடிக்கே இதுவாகும் என கடல்நீரிடை திரும்பவிடும் இயல்பால்; அவ்வாருகிய நாள்களில் அடுத்து ஒருமீனை நாள் தோறும் வந்து வலையில் படவும்; அம்மீனை மேகம் நீர்குடிக்கப் படிந்திடும்கடலிடத்துசிவனுக்கென சேரும்படி விட்டுவந்தார். 12

மீன்வி லைப்பெரு குணவினில் மிகுபெருஞ் செல்வம்
தான்ம றுத்தலின் உணவின்றி அருங்கலை சாம்பும்
பான்மை பற்றியும் வருந்திலர் பட்டமீன் ஒன்று
மான்ம றிக்கரத் தவர்கழற் கெனவிட்டு மகிழ்ந்தார்.

அப்படியே செய்து வருதலால் மீன்விற்றுண்ணும் பேருணவில் மிகுந்திருந்த பெரும் செல்வம் தானுகக் குறைந்திட; அதனால் உணவிற்கும் வகையிலாது அரிய தனது சுற்றம் சோர்ந்து பசியால் வாடும் அத்தன்மை பற்றியும் அதிபத்தர் வருந்தினரல்லர். நாள்தோறும் பட்டுவரும் அந்தமீன் ஒன்றையும் மான்மறி ஏந்திய கரமுடைய கடவுளுக்கேயாம் எனவிட்டு மகிழ்ந்தார். 13

சால நாள்கள்இப் படிவரத் தாம்உண வயர்த்துக்
கோல மேனியுந் தளரவுந் தந்தொழில் குறையாச்
சீல மேதலை நின்றவர் தந்நிறந் தெரிந்தே
ஆலம்உண்டவர் தொண்டர் அன்பெனும் அமுதுண்பார்.

சால நாள் இப்படிவந்திடத் தாமும் உணவு நீங்கி; அழகிய வனப்புடைய தமது மேனியும் தளரவும் தனது தொழிலுக்குறையாது தன்னுடைய மீன் ஒன்று சிவனுக்கென கடலில் விடும் சீலமே தலைநின்று அத் தொண்டுபுரியும் அதிபத்தரின் அத்தன்மை தெரிந்து நஞ்சுண்ட கண்டமுடைய கடவுள் தன்தொண்டர் அன்பு என்னும் அமுதையே பெற்று உண்பாராயினர். 14

ஆன நாளொன்றில் அவ்வொரு மீனும்அங் கொழித்துத்
தூநி றப்பசுங் கனகநற் சுடர்நவ மணியால்
மீனு றுப்புற அமைத்துல கடங்கலும் விலையாம்
பான்மை அற்புதப் படியதொன் றிடுவலைப் படுத்தார்.

அவ்வாருன நாட்களில் ஒன்றில் அந்த ஒருமீனுமே அங்கு ஒழிந்து தூய நல் நிறமுடைய பசிய பொன்னும் நற்சுடருடைய நவ இரத்தினமும் சேர்ந்து மீனின் உறுப்புற அமைந்து அதனிற்கு உலகம் அடங்கலுமே விலையாகக் கொடுத்திடக் கூடிய அற்புதமுடையதான தொருமீன் அன்று வீசி இழுத்திடும் வலையில் அகப்படுத்தினர். 15

வாங்கு நீள்வலை அலைகடற் கரையில்வந் தேற
ஓங்கு செஞ்சுடர் உதித்தென உலகெலாம் வியப்பத்
தூங்கு பேரொளி தழைத்திடக் காண்டலும் எடுத்துப்
பாங்கு நின்றவர் மீனொன்று படுத்தனம் என்றார்.

வீசி இழுத்திடும் நீண்டவலை அலைத்திடும் கடலின் கரையில் வந்து சேர: அவ்வலையினுள் ஒங்கிய செஞ்சுடரின் சூரியன் உதித்தால் போல உலகெலாம் கண்டு வியந்திட அதலிடத்துக் கொண்ட பேரொளி தழைத்திட அம்மீனினைக் காண்டலும் எடுத்து பக்கராக நின்றவர் இன்று அற்புதமான மீன் ஒன்றுபிடித்தனம் என்றார். 16

என்று மற்றுளோர் இயம்பவும் ஏறுசீர்த் தொண்டர்
பொன் திரட்சுடர் நவமணி பொலிந்தமீன் உறுப்பால்
ஒன்றும் மற்றிது என்னை ஆளுடையவர்க் காகும்
சென்று பொற்கழல் சேர்கெனத் திரையொடுந் திரித்தார்.

என்று இவ்வாறு மற்று அங்குள்ளோர் சொல்லவும்; சீர் ஏறிவரும் தொண்டர் அதிபத்தர் தாமும் பொன்னின் திரளின் சுடரும் நவ இரத்தினமும் பொலிந்த மீன் நல்லுறுப்பால் ஆன ஒன்று இது. இது என்னை ஆளுடைய ஈசன் சிவனுக்கேயாகும். ''மீனே நீசென்று எம்பிரான் பொற்கழல் சேர்வாயாக'' என்று அம்மீனை கடலிடம் விடுத்தார் அதிபத்தர். 17

அகில லோகமும் பொருள்முதற் றுமெனும் அளவில்
புகலும் அப்பெரும் பற்றினைப் புரையற எறிந்த
இகலில் மெய்த் திருத்தொண்டர்முன் இறைவர்தாம் விடை மேல்
முகில் விசும்பிடை அணைந்தனர்; பொழிந்தனர் முகைப்பூ.

அகில உலகமும் பொருள்தான் முதன்மையுடையது எனச் சொல்லப் பெறும் அப்பற்றினை ஏதும் ஒரு தவறின்றி அகற்றிய வலிமையுடைய தொண்டர் அதிபத்தர் முன்பாக; எம்பிரானும் இடபவாகனத்தின் மேலாக முகில் தவழும் வானத்திடை வந்தருளினர். அதுபொழுது தேவர்கள் வாசமுடைய முகையவிழ்ந்த மலர்களைச் சொரிந்தனர். 18

டஞ்ச நாதமும் எழுந்தன அதிபத்தர் பணிந்தே
அஞ்ச லிக்கரஞ் சிரமிசை அணைந்துநின் றவரை
நஞ்சு வாண்மணி மிடற்றவர் சிவலோகம் நண்ணித்(து)
அஞ்சி றப்புடை அடியர்பாங் குறத்தலை அளித்தார்.

ஐந்து பேரோசையும் வானில் எழுந்தன. அதிபத்தரும் எம்பெருமானைப் பணிந்து கைகளை அஞ்சலி கூப்பி சிரமிசைக் கொண்டு வணங்கி நின்ற அவரை; நஞ்சு ஒளிரும் அழகிய திருக்கண்டமுடைய கடவுள் தமது சிவலோகத்தினைச் சேர்ந்து அங்கு அழகிய சிறப்புடைய அடியவர் பாலாக இருந்திடும் படி தலையன்பு புரிந்தார். 19

தம்ம றம்புரி மரபினில் தகும்பெருந் தொண்டு
மெய்ம்மை யேபுரி அதிபத்தர் விளங்குதாள் வணங்கி
மும்மை யாகிய புவனங்கள் முறைமையிற் போற்றும்
செம்மை நீதியார் கலிக்கப்பர் திருத்தொண்டு பகர்வாம்.

மீன் பிடித்திடும் தமது கொலைத் தொழில் மரபினில் வந்துற்றும் தமக்குற்ற தகுதியான பெரும் தொண்டு உண்மையாகவே புரிகின்ற அதிபத்தர் பெருமானுடைய விளங்கும் திருவடிகளை வணங்கி; மேலுலகம் பூமி பாதாளம் என்னும் உலகம் மூன்றும் முறைமையாகப் போற்றுகின்ற செம்மை நிலைநின்ற நீதியுடைய கலிக்கம்பர் நாயனார் செய்தருளிய திருத்தொண்டு எடுத்து மொழிவோம். 20

அதிபத்த நாயனார் புராணம் முற்றும்.

கலிக்கம்ப நாயனார் புராணம்

உரிமை ஒழுக்கம் தலைநின்ற உயர்தொன் மரபில் நீடுமனைத்
தரும நெறியால் வாழ்குடிகள் தழைத்து வளருந் தன்மையதாய்
வருமஞ் சுறையும் மலர்ச்சோலை மருங்கு சூழ்ந்த வளம்புறவில்
பெருமை யுலகு பெறவிளங்கும் மேல்பாற் பெண்ணை கடமூரார்.

தங்கூட்குரிய உரிமையான ஒழுக்கம் தலை நின்று ஒழுகிய; உயர்ந்த முன்னைய மரபில் வந்து நீடித்த இல்லறம் புரிந்து தருமநெறியால் வாழும் குடிகள் தழைத்து ஓங்கி வளரும் தன்மை உடைய தாய்; வானில் எழுந்து வரும் மேகங்கள் உறைகின்ற மலர்ச்சோலைகள் புறத்தே சூழ்ந்த வளம் உடைய முல்லை நிலத்தில் இவ்வுலகம் பெருமையுற விளங்கும் மேல்புறத்தில் (நடுநாட்டின் மேற்குப்புறம்) உள்ளது திருப்பெண்ணைகடம் என்னும் முதிய ஊர். 1

மற்றப் பதியி னிடைவாழும் வணிகர் குலத்து வந்துதித்தார்
கற்றைச் சடையார் கழற்காதல் உடனே வளர்ந்த கருத்துடையார்
அற்றைக் கன்று தூங்கானை மாடத் தமர்ந்தார் அடித்தொண்டு
பற்றிப் பணிசெய் கலிக்கம்பர் என்பார் மற்றூர் பற்றில்லார்.

மற்று அந்தப் பதி பெண்ணைகடத்தின் இடையாக வாழும் வணிகர் குலத்து வந்து அவதரித்தார் ஒருவர். அவர் கற்றையான சடையுடைய சிவன் திருவடிப்பற்றின் காதலுடனே வளர்ந்த கருத்துடையவர். அன்று அன்றாக திருத்தூங்கானை மாடத்து அமர்ந்த சிவனது திருவடித்தொண்டினை மேலாகப்பற்றி என்றும் அவர்க்கே பணி செய்யும் கலிக்கம்பர் என்னும் நாமம் உடையவர். அவர் சிவனது பணியன்றி மற்றொரு பற்றில்லார். 2

ஆன அன்பர் தாமென்றும் அரனூர் அன்பர்க் கமுது செய
மேன்மை விளங்கு போனகமும் விரும்பு கறிநெய் தயிர்நீம்பால்
தேனின் இனிய கனிகட்டி திருந்த அமுது செய்வித்தே
ஏனை நிதியம் வேண்டுவன எல்லாம் இன்பமுற அளிப்பார்.

அவ்வாறான அன்பர் கலிக்கம்பர்; என்றும் சிவபிரானுடைய அன்பர்க்கு அமுது செய்திட மேன்மை விளங்கும் அன்னமும்; விரும்பும் சுவையுடைய கறி நெய் தயிர் நித்திப்பான பால் தேன் இனியகனி கற்கண்டு இவை முதல் பலவும் திருத்தமாக அமைத்து அமுது செய்வித்து இவையன்றி இன்னமும் வேண்டுகின்ற ஏனைய பொருள்கள் யாவும் இன்பமுறக் கொடுத்து வருவார். 3

அன்ன வகையால் திருத்தொண்டு புரியுநாளில் அங்கொருநாள்
பன்னு மனையில் அமுதுசெய வந்த தொண்டர் தமை எல்லாம்
தொன்மை முறையே அமுது செயத் தொடங்கு வீப்பார் அவர் தம்மை
முன்னர் அழைத்துத் திருவடிகள் எல்லாம் விளக்க முயல்கின்றார்.

அன்னதன்மையாகத் திருத்தொண்டை கலிக்கம்பர் நாயனார் செய்யும் நாளினில் அங்கு ஒரு நாள் விளங்கும் தமது மனையில் அமுதுசெய வந்த அடியார்கள் தமை எல்லாம்; முன்பு தாம் உபசரித்திடும் முறையாகவே அமுது செயத்தொடங்கப் பண்ணுவிப்பாராகி; அவர்களை தம்முன்பாக அழைத்து அவர் திருப்பாதமெல்லாம மனைவியார்நீர் வார்க்க தாம் கழுவிவிளக்கிடமுற்படுவாராகி; அதற்குமுயல்கின்றார் .4

திருந்து மனையார் மனையெல்லாந் திகழ விளக்கிப் போனகமும்
பொருந்து சுவையிற் கறியமுதும் புனிதத் தண்ணீருடன் மற்றும்
அருந்தும் இயல்பில் உள்ளனவும் அமைத்துக் கரக நீரளிக்க
விரும்பு கணவர் பெருந்தவர்தாள் எல்லாம் விளக்கும் பொழுதின்கண்.

திருந்திய நற்குணமுடைய மனைவியார் தமது மனைகள் எல்லாம் திகழும்படி விளக்கித் தூய்மைபடுத்தி அலங்கரித்து அமுதும் பொருந்திய சுவையுடைய கறி வகைகளும் புனிதத் தண்ணீருடன் மற்றும் அருந்தும் வகைக்கு பொருத்தமான இயல் புடைய உணவுவகைகள் உள்ளனவும் அமைத்து; தம்கரத்து நீரெடுத்துக் கொடுத்திட; அடியார்க்கு அமுதூட்ட விரும்பிய கணவனார் கலிக்கம்பர்; பெரிய தபோதனர்களது திருவடிகள் எல்லாம் நீரால் விளக்கிடும் நேரத்தில். 5

முன்புதமக்குப்பணி செய்யுந்தமராய் ஏவல் முனிந்து போய்
என்பும் அரவும் அணிந்தபிரான் அடியாராகி அங்கெய்தும்
அன்பருடனே திருவேடந் தாங்கி அணைந்தார் ஒருவர்தாம்
பின்பு வந்து தோன்ற அவர்பாதம் விளக்கும் பெருந்தகையார்.

முன்பு தமக்குப் பணிசெய்யும் இனத்தவராய் இருந்து; தம்முடன் ஏதோ காரணத்தால் அப்பணியினை செய்திட மறுத்து கோபித்துச் சென்று; பின்பு அவர்தாம் எலும்பும் பாமபும் அணிந்த சிவபெருமானது ஏவல் தொண்டராகி அங்கு கலிக்கம் பருடைய மனையில் அன்று சேரும் அடியவருடனே; அடியார் திருவேடம் தாங்கி வந்துள்ள ஒருவர்; அடியார்கள் பாதம் கலிக்கம்பர் விளக்கிய பின்பாக வந்துதோன் றிட; அந்த வேடமுடைய அவர்பாதத்தையும் தம்கரம் தீண்டி விளக்கிடும் பெரும் தகையார் கலிக்கம்பர். 6

கையால் அவர்தம் அடிபிடிக்கக் காதல் மனையார் முன்பேவல்
செய்யா தகன்ற தம்போலும் என்று தேரும் பொழுது மலர்
மொய்யார் வாசக் கரகநீர் வார்க்க முட்ட முதற்றொண்டர்
மையார் கூந்தல் மனையாரைப் பார்த்து மனத்துட் கருதுவார்.

தமதுகையால் அவருடைய திருவடியைப் பிடித்திட; அதுகண்ட அவரது காதல் மனைவியாரும் ஓகோ இவ்வேடத்துடன் வந்தார் முன்பு எமக்கு ஏவல் செய்யாது அகன்று போன இனத்தவர் தாமபோலும் என்று தெளியும் போது அவருடைய மலர் போலும் அழகிய கையில் கொண்ட வாசமுடைய நீரை வாராது நின் றிட; அதுவோ முதன்மையுடைய தொண்டர் கலிக்கம்பர் தமது மைபோல் விளங் கிடும் கரிய கூந்தலுடைய மனைவியாரைப் பார்த்து மனத்துள் எண்ணுவார். 7

வெறித்த கொன்றை முடியார்தம் அடியார் இவர் முன் மேவுநீலம்
குறித்து வெள்கி நீர்வாரா தொழிந்தாள் என்று மனங்கொண்டு
மறித்து நோக்கார் வடிவாளை வாங்கிக் கரகம் வாங்கிக்கை
தறித்துக் கரக நீரெடுத்துத் தாமே அவர்தாள் விளக்கினார்.

என்முன் நின்றவர் இவர் வெறித்த தேனுடைய கொன்றைப் பூச்சூடிய முடி யுடைய பெருமானின் அடியவர். இவர்முன்பு கொண்ட நீலகுறித்து என்மனைவி வெட்கி நீர்வராது விட்டாள் என மனதில் எண்ணி: இந்த அபராதத்திற்கு இதுவே தகுது என வேறொன்றும் பாராதவராகி வடிவாளை உருவி; நீர் வார்க்க மனைவி யார் கையில் வைத்திருந்த பாத்திரத்தை தாம் வாங்கிக் கொண்டு; அவளினது கையை வாளால் வெட்டி பின்னர் பாத்திர நீரெடுத்து தாமே நீர்வார்த்து அந்த வேடமுடைய அடியவர் திருப்பாதம் விளக்கினார். 8

விளக்கி அமுது செய்வதற்கு வேண்டு வனதா மேசெய்து
துளக்கில் சிந்தை யுடனொண்டர் தம்மை அமுது செய்வித்தார்
அளப்பில் பெருமை யவர்பின்னும் அடுத்த தொண்டின் வழிநின்று
களத்தில் நஞ்சம் அணிந்தவர்தாள் நிழற்கீழ் அடியாருடன் கலந்தார்.

திருப்பாதம் விளக்கி அமுது செய்யும் அதனிற்கு வேண்டுவனதாமே செய்து அசைவில்லாத சிந்தையுடன் அத்தொண்டர் தம்மை அமுது செய்வித்தார். இவ் வகையாக தம்மனைவியார் கையினை வெட்டிய அளவற்ற பெருமையுடைய கலிக் கம்பநாயனார் பின்னரும் தமக்கேற்ற அப்பணியின் வழியில் நின்று கண்டத்தில் நஞ்சு அணிந்த பெருமான் திருவடி நிழற்கீழ் அடியாருடன் கலந்துகொண்டார். 9

ஓத மலிநீர் விடமுண்டார் அடியார் வேடம் என்றுணரா
மாத ராரக்கை தடிந்தகலிக் கம்பர் மலர்ச்சே வடிவணங்கிப்
பூத நாதர் திருத்தொண்டு புரிந்து புவனங் களிற்பொலிந்த
காதலன்பர் கலிநீதி யார்தம் பெருமை கட்டுரைப்பாம்.

கடலில் எழுந்த நஞ்சுண்ட பெருமானது அடியார்வேடம் இதுவென்று உணராத தம் மனவியாரது கைவெட்டிய கலிக்கம்ப நாயனரின் மலர் போன்ற திருவடிகள் பணிந்து; பூதங்கட்கெல்லாம் நாயகனான சிவபெருமானது திருத்தொண்டு செய்து இவ்வுலகெங்கும் பொலிந்துற்ற காதலுடைய அன்பர் கலியர் என்னும் நீதிஉடைய பெருமானின் பெருமையை எடுத்து மொழிவோம். 10

கலிக்கம்ப நாயனார் புராணம் முற்றும்

கலிய நாயனார் புராணம்

பேருலகில் ஓங்குபுகழ்ப் பெருந்தொண்டை நன்னாட்டு
நீருலவுஞ் சடைக்கற்றை நிருத்தர்திருப் பதியாகும்
காருலவு மலர்ச்சோலைக் கன்னிமதில் புடைசூழ்ந்து
தேருலவு நெடுவீதி சிறந்ததிரு வொற்றியூர்.

பெருத்த இவ்வுலகிலே ஓங்கும் புகழுடைய பெரும் தொண்டை நன் நாட்டில் கங்கையாற்று நீர் உலவிய சடையின் கற்றை உடைய கடவுள்: உலகுய்ய நடமாடும் சோதி; அமர்ந்த திருப்பதியாகின்றது; மேகம் தவழும் உயர்ந்த மலர்ச்சோலை யுடன் கன்னிகாவலுடைய மதில் புறமே சூழ்ந்து தேர் உலவிடும் நெடிய வீதி சிறந்துற்ற திருவொற்றியூர் என்னும் நகரம். 1

பீடுகெழுவும் பெருந்தெருவும் புத்தருடன் பீலிஅமண்
வேடமுடை யவர்பொருள்போல் ஆகாச வெளிமறைக்கும்
ஆடுகொடி மணிநெடுமா ளிகைநிரைகள் அலகமுகில்
காடனைய கடல்படப்பை எனவிளங்குங் கவின்காட்டும்.

அத் திருவெற்றியூர் நகரில் பெருமை விளங்கும் பெரும் தெருக்களில்; புத்தர் களுடன் மயிலின் பீலியுடைய சமணரும் அறியாமையால் மிகுந்து தம்மைப்பற்றிய அகந்தையினுல் கொண்ட பொருளைப்போல்; ஆகாசத்தின் வெளியினை மறைத்திடும் ஆடுகின்ற கொடி நாட்டிய அழகிய நெடிய மாளிகைகளின் நிரைகள்; காற்றால் அலைப்புணும் கமுகபரங்களின் வரிசைபோல் இருபுறமும் உள்ளன. நகரத்தை அடுத்த கடலானது கமுக மரவரிசைகள் புறம் சூழ உள்ள பயிர்நிறைந்த தோட்டம்போல் அழகு காட்டும். 2

பன்னுதிருப் பதிகஇசைப் பாட்டோவா மண்டபங்கள்
அன்னநடை மடவார்கள் ஆட்டவோ அணிஅரங்கு
பன்முறைதூ ரியமுழங்கு விழவோவா பயில்வீதி
செந்நெல்அடி சிற்பிறங்கல்உணவோவா திருமடங்கள்.

ஓதப்பெறும் திருப்பதிகங்களின் இசையின் பாடல் ஓய்வின்றி நிகழும் மண்ட பங்களும்: அன்னப்பறவையின் நடை அழகுடைய பெண்கள் ஆடல் ஒழியாத அழ கிய நடன அரங்குகளும்: பலமுறைகளான வாத்தியங்கள் முழங்குதலின் விழாக்கள் ஓயாது நிலவிய திருவீதிகளும்; செஞ்நெல்லின் சோறு மலைபோன்று பெருகும் உணவு வழங்கல் ஓய்வின்றி நடைபெறும் திருமடங்களும் அந்நாட்டில் உள்ளன. 3

கெழுமலர்மா தவிபுன்னை கிளைஞாழல் தேன அவிழும்
கொழுமுகைய சண்பகங்கள் குளிர்செருந்தி வளர்கைதை
முழுமணமே முந்நீரும் கமழமலர் முருகுயிர்க்கும்
செழுநிலவின் துகளனைய மணற்பரப்புந் திருப்பரப்பு.

நிறைந்த மலர்களுடைய குருக்கத்தி மரமும் புன்னைமரமும் கிளைகளுடைகுங்கும மரமும் இதழ்கள் அவிழ்கின்ற கொழுத்த முகைகளுடைய சண்பக மரமும் குளிர்ச் சியான செருந்திமரமும் வளரும் தாழை மரங்களும் மலர்ந்து இவற்றின் வாசனை கள் கடல் நீரும் கமழ மலர்ந்து வாசனைபரப்பும்; செழுமையான நிலவின்துகள் போன்ற மணற்பரப்பின் எல்லையுடையதாயது திருவொற்றியூர். 4

எயிலனையும் முகில்முழக்கும் எறிதிரைவே லையின்முழக்கும்
பயில்தருபல் லியமுழக்கும் முறைதெரியாப்பதியனுள்
வெயிலணிபன் மணிமுதலாம் விழுப்பொருளா வனவிளக்கும்
தயிலவினைத் தொழில்மரபில் சக்கரப்பா டித்தெருவு

மதிலைச் சேரும் முகிலின்முழக்கமும்; திரை எறியும் கடலின் முழக்கமும்; பயி லப்படுகின்ற வாத்தியங்களின் முழக்கமும் வகைபிரித்து அறியாதவகையில் நிகழ் வறும் திருவொற்றியூர் அதனில்; ஒளி அழகுடன் மிளிரும் இரத்தினங்கள் முதலான பொருள்கள் விளக்கும படியான திருவுடையது; எண்ணெய் ஆட்டும் இயந்திரம் இயக்குகின்ற தொழிலின் மரபால் குடிகள் நிறைந்த சக்கரப் பாடித்தெருவு. 5

அக்குலத்தின் செய்தவத்தால் அவனிமிசை அவதரித்தார்
மிக்கபெருஞ் செல்வத்து மீக்கூர விளங்கினார்
தக்கபுகழ்க் கலியனார் எனுநாமந் தலைநின்றார்
முக்கண்இறை வர்க்குரிமைத் திருத்தொண்டின் நெறிமுயல்வார்.

அந்த சக்கரபாடித் தெருவில் வாழும் தயிலவினைபுரியும் குலத்தோர் செய்த தவத்தால் இப்பூமிமீது அவதரித்தார் ஒருவர். அவர் மிக்க பெரும் செல்வத்து மிகப் பெருக்கமுடன் விளங்கினர். தம் தகவிற்கேற்ற புகழுடைய கலியனர் என னும் நாமம் தலையாகப் பெற்றுடையர். அவர் முக்கண்ணுடைய சிவமூர்த்திக்கு உரி மையானபெரும் திருத்தொண்டின் செயலே முயன்றுவருவார். 6

எல்லையில்பல் கோடிதனத் திறைவராய் இப்படித்தாம்
செல்வநெறிப் பயனறிந்து திருவொற்றி யூரமர்ந்த
சொல்லை மழ விடையார்தங் கோயிலின்உள் ளும்புறம்பும்
அல்லு நெடும் பகலும்இடந் திருவிளக்கின் அணிவினைத்தார்.

எல்லையற்ற கோடிக் கணக்கான தனங்கட்கு அதிபராய்: அவ்வகைதாம் பெற்ற செல்வத்தினை பிரயோகித்திடும் நெறிகளை அறிந்து; அதன் வழியால் திருவொற்றி யூரில் அமர்ந்த அருளாய கொல்லையின் தருமமெனும் இடபத்து எழுந்தருளி வரும் பெருமானரது கோயில் உள்ளாக உள்ளுக்கும் வெளியிலும் இரவும் நெடும் பகலும் இடுகின்ற திருவிளக்கின் அலங்காரத்தினைப் புரிவார் கலியநாயனர். 7

எண்ணில்திரு விளக்குநெடு நாளெல்லாம் எரித்து வரப்
புண்ணியமெய்த் தொண்டர்செயல் புலப்படுப்பார் அருளாலே
உண்ணிறையும் பெருஞ்செல்வம் உயர்த்தும் வினைச் செயல்ஓவி
மண்ணில்அவர் இருவினைபோல் மாண்டதுமாட் சிமைத்தாக.

எண்ணற்ற திருவிளக்கு நெடு நாட்கள் எல்லாம் எரித்து வருதலாலே புண்ணிய முடைய அத்தொண்டரின் செயலினை உலகறியப் புலப்படுத்தும் பெருமான் சிவ னாரின் அருளாலே; அவர் மாளிகையின் உள்ளே நிறைகின்ற பெரும் செல்வம் பெருக்க வரும் செயலின் தொழில் யாவும் குறைந்து இப்பூமியில் அவரது கொடிய இருவினைகள் போன்று; மாட்சிமையுடன் அழிந்துபோயது. 8

திருமலிசெல் வத்துழனி தேய்ந்தழிந்த பின்னையுந்தம்
பெருமைநிலைத் திருப்பணியில் பேராத பேராளர்
வருமரபில் உள்ளோர்பால் என்னெய்மா றிக்கொணர்ந்து
தருமியல்பிற் கூலியினுல் தமதுதிருப் பணிசெய்வார்.

திருமலிந்த தமது செல்வத்தின் பெருக்க ஓசை தேய்ந்து அழிந்த பிற்பாடும் தம்முடைய பெருமை நிலையாய திருப்பணியில் தவிராத பேராளர் கலிநாயனர்; தமது மரபில் உள்ள அவர்களிடத்து எண்ணை பெற்றுக் கொண்டு வந்து அதனை விற்று வருகின்ற கூலியாய எண்ணை கொண்டு தமது திருப்பணியினைச் செய்திடு வார். 9

வளமுடையார் பால்எண்ணெய் கொடுபோய்மா றிக்கூலி
கொளமுயலுஞ் செய்கையும்மற் றவர்கொடா மையின்மாறத்
தளருமன முடையவர்தாஞ் சக்கரஎந் திரம்புரியும்
களனில்வரும் பணிசெய்து பெறுங்கூலி காதலித்தார்.

வளம் பொருந்திய எண்ணை வாணிபர் பாலாக எண்ணை மாறிக் கொண்டு சென்று விற்கின்றதனால் வரும் ஆதாயமாய கூலியினைப் பெற்று விளக் கெரித்து வரும் நாட்களில் அவ்வாறுக் கூலிக்கு எண்ணை மாறி விற்பதற்கு உற்ற அவரது இச்செயலில் எண்ணை முதலாளிமார் தாமே முழு ஆதாயத்தையும் பெறும் ஆசையால் இவர்க்கு விற்றிட எண்ணை கொடுக்காது போயிட: அதனால் என்னை நம்பி இவர்கள் எண்ணை தருகிறார் இல்லையே என்று மனம் தளரும் அவர் எண்ணை யாட்டும் சக்கர இயந்திரம் தொழில்படும் சாலையில் தமக்கு கைவரக் கூடிய பணிசெய்து அதனால் பெறுகின்ற கூலியினைப் பெற்றிடக் காதல் கொண்டார் 10

செக்குநிறை எள்ளாட்டிப் பதமறிந்து திலதயிலம்
பக்கமெழ மிகவுழந்தும் பாண்டில்வரும் எருதுய்த்தும்
தக்கதொழில் பெறுங்கூலி தாங்கொண்டு தாழாமை
மிக்கதிரு விளக்கிட்டார் விழுத்தொண்டு விளக்கிட்டார்.

செக்கு நிறைந் திடப்போடப் பட்ட எள்ளை தாம் கூலியாளாக நின்று ஆட்டி அதன்பதம் அறிந்து எள்ளின் தைலம் பக்கராக மேல் எழ மிகவும் தன்னை உள் வைத்து கிளறிமாற்றுகின்ற மிக கடூரமான செயலில் உலவுபட்டும் செக்கின் உலக் கையை வலம் திரிக்கும் எருதுகளைச் செலுத்தியும் இந்த தகுதியான தொழிலைச் செய்து பெற்றிடும் கூலியை பெற்றுக் கொண்டு தாழ்வின்றி மிக்க திருவிளக்கு திருவொற்றியூர் அப்பனுக்கு இட்டார் அச்செயலால் சிவதொண்டிற்கு விளக் கிட்டார். 11

அப்பணியால் வரும்பேறும் அவ்வினைஞர் பலருளராய்
எப்பரிசுங் கிடையாத வகைமுட்ட இடருழந்தே
ஒப்பில்மனை விற்றெரிக்கும் உறுபொருளும் மாண்டதற்பின்
செப்பருஞ்சீர் மனையாரை விற்பதற்குத் தேடுவார்.

செக்காட்டி கூலிபெறும் அப்பணியினைப் புரிதலால் வருகின்ற பேறும் அந்த செக்காட்டும் தொழிலாளர் பலருளராய்; அதற்காகத் தமக்குத் தொழில் புரிந்திட எந்த ஒரு இடத்திலும் வேலை இலாது போயிட: அதனால் பெரும் கவலை கொண்டு ஒப்பற்ற தமது மனையில் இருந்த எல்லாப் பொருளினையும் விற்று திருவொற்றியூர் பெருமானுக்கு விளக்கு எரித்திட: அவ்வகை விற்றெரிக்கக் கூடிய எல்லாப் பொருளும் மாண்டு போன பிற்பாடு சொல்லுதற்கரிய கற்பின் சிறுடைய தமது மனைவியாரை பிறர்க்கு விற்பதற்கு வாங்குவாரைத் தேடுவாராயினர். 12

மனமகிழ்ந்து மனைவியார் தமைக்கொண்டு வளநகரில்
தனமளிப்பார் தமைவங்குங் கிடையாமல் தளர்வெய்திச்
சினவிடையார் திருக்கோயில் திருவிளக்குப் பணிமுட்டக்
கனவினுமுன் பறியாதார் கையறவால் எய்தினார்.

மனதில் பெருமகிழ்ச்சியுடன் மனைவியாரையும் கொண்டு வளமுடைய திரு வொற்றியூர் நகரில் தம் அழகுடைய மனைவியாரைப் பெற்றுப் பொருள் கொடுப் பதற்கு எங்காகிலும் ஒருவர் கிடைத்திடப் பெறாமல் தளர்ச்சியடைந்து சினமுடைய இடபத்து எழுந்தருளிவரும் பெருமானுடைய திருக்கோவிலில் தாம் செய்திடும் திருவிளக்கிடும் தொண்டு இலாமல் போக கனவிலும் முன்பு அறியாத கலிய நாயனர் அன்று மிகவும் கவலையால் அடைந்தார் கோவிலை. 13

பணிகொள்ளும் படம்பக்க நாயகர்தம் கோயிலினுள்
அணிகொள்ளுந் திருவிளக்குப் பணிமாறும் அமையத்தில்
மணிவண்ணச் சுடர்விளக்கு மாளிலியான் மாள்வன் எனத்
துணிவுள்ளங் கொளநினைந்தவ் வினைமுடிக்கத் தொடங்குவார்.

மனதில் கவலையுடன் தம்மைப் பணிகொள்ளும் திருவொற்றியூரமர்ந்த படம் பக்கநாதன் கோயிலுள் சென்று அழகு விளங்கும் திருவிளக்கு இடும் தொண்டு தாம் வழமையாகச் செய்திடும் நேரத்தில் அழகிய வண்ணமுடைய என்அப்பருக்கு இடும் கடர் விளக்கு மாளில் யானும் மாள்வேன் என்ற துணிவு தனது உள்ளங் கொண்டிடக் கலியநாயனர் நீணந்து அச்செயலை முடித்திடத் தொடங்குவார். 14

திருவிளக்குத் திரிஇட்டங் ககல்பரப்பிச் செயல்நிரம்ப
ஒருவிய எண்ணெய்க்கீடா உடல்உதிரங் கொடுநிறைக்கக்
கருவியினல் மிடறறிய அக்கையைக் கண்ணுதலார்
பெருகுதிருக் கருணையுடன் நேர்வந்து பிடித்தருளி.

எம்பிரார்க்கு திருவிளக்கெரித்திட; விளக்கின் திரியினை எடுத்து தகழிகளில் முறையாகப் பரப்பி அந்தச் செயலை முடித்த பிற்பாடு தகழிகளில் வார்ப்பதற்கு இன்று இல்லாது போன எண்ணெய்க்குப் பதிலாக தனது உடலத்து இரத்தம் கொண்டு நிறைத்திட: கத்தியினல் தம் கழுத்தை அரிந்தார். அரிந்த கலியனுடைய அந்தக் கையை கண்ணுதற் பெருமானும் பெருகும் திருக்கருணையுடன் நேராக தம் திருக்கையால் பிடித்தருளி. 15

மற்றவர்தம் முன்னுக மழவிடைமேல் எழுந்தருள
உற்றவு றதுநீங்கி ஒளிவிளங்க உச்சியின்மேல்
பற்றியஞ் சலியினராய் நின்றவரைப் பரமர்தாம்
பொற்புடைய சிவபுரியில் பொலிந்திருக்க அருள்புரிந்தார்.

மற்று அந்த கலியநாயனர் முன்பாக தருமம் என்னும் அழகிய இடபமேல் எழுந்தருளி எம்பெருமான் வந்திடலும் அவர் கழுத்தரிந்த ஊறும் உடன் நீங்கலும் மேனிஎலாம் ஒளிமயமாய் விளங்கிட கலியநாயனர் உச்சி கூப்பிய கையுடனை வணங்கி நின்றுரை சிவபெருமானும் பொற்புடைய தம் சிவபுரியில் பொலிந்து என்றும் இருக்கும் படி அருள்புரிந்தார். 16

தேவர்பிரான் திருவிளக்குச் செயல்முட்ட மிடறறிந்து
மேவரிய வீணைமுடித்தார் கழல்வணங்கி வியனுலகில்
யாவரெனு தரடியார் தமைஇகழ்ந்து பேசினரை
நாவரியுஞ் சத்தியார் திருத்தொண்டின் நலமுரைப்பாம்.

அவ்வாறு அருள் ஒளியால் என்றும் மாளாத உடம்புடன் சிவலோகம் எய்திய தேவர்கள் பெருமான் சிவனது திருவிளக்கிடும் செயல் தடைபட தம் கழுத்தை அரிந்து செய்திட அரிய செயலைப் பூர்த்திசெய்த கலிய நாயனர் கழலடி வணங்கி; அப்பால் யாவரென்றும் பாராது சிவனடியாரை இகழ்ந்து பேசினரை அவர் நாக்கரியும் தொழிலுடைய சத்தி நாயனரின் திருத்தொண்டின் நன்மையை மொழிவோம். 17

கலிய நாயனர் புராணம் முற்றிற்று

சத்தி நாயனர் புராணம்

களமர் கட்ட கமலம் பொழிந்ததேன்
குளநி றைப்பது கோலொன்றி லெண்டிசை
அளவும் ஆணைச் சயத்தம்பம் நாட்டிய
வளவர் காவிரி நாட்டு வரிஞ்சையூர்.

வயல்களத்தில் தொழில் புரிவோர் களைந்தெடுத்த தாமரைமலர் பொழிந்த தேன் சென்று குளத்தினை நிறைப்பது: ஓர் செங்கோல் வலிமையால் எட்டுத்திக்கினையும் அரசாளும் ஆணைவலியுடைய வெற்றித் தம்பம் நாட்டிக்கொண்ட சோழ அரசர்களது காவிரியின் வளமுடைய சோழ நாட்டில் வரிஞ்சை ஊர்என்பது. 1

வரிஞ்சை யூரினில் வாய்மைவே ளாண்குலம்
பெருஞ்சி றப்பும் பெறப்பிறப் பெய்தினர்
விரிஞ்சன் மால்முதல் விண்ணவர் எண்ணவும்
அருஞ்சி லம்பணி சேவடிக் காட்செய்வார்.

அந்த வரிஞ்சை ஊரினில் வாய்மை குன்றுத வேளாளர் குலம் பெரும் சிறப்பை உலகில் அடைந்திட வந்து பிறந்தார் ஒருவர். அவர் தான் பிரமன் திருமால் முதல் கடவுளரெல்லாம் எண்ணுதற்கும் அரிய சிலம்பு அணிந்த சிவனது சேவடி கட்கே ஆட்பட்டுத் தொண்டு செய்பவராவர். 2

அத்தராகிய அங்கணர் அன்பரை
இத்த லத்தில் இகழ்ந்தியம் பும்உரை
வைத்த நாவை வலித்தரி சத்தியால்
சத்தி யார்எனும் நாமமும் தாங்கினர்.

அவர் எம்பெருமானுகிய கண்ணுதற் கடவுளின் அன்பர்களை இந்த பூமியில் இகழ்ந்து சொல்லும் வார்த்தைகள் கொண்ட எவரது நாவையும் வலித்து இழுத்து அரிகின்ற சத்தி உடமையால் சக்தியார் என்னும் நாமம் பெற்றுள்ளார். 3

தீங்கு சொற்ற திருவிலர் நாவினை
வாங்க வாங்குதண் டாயத்தி னுல்வலித்
தாங்க யிற்கத்தி யால்அரிந் தன்புடன்
ஓங்கு சீர்த்திருத் தொண்டி னுயர்ந்தனர்.

அடியார்களைத் தீங்கு மொழிந்த புண்ணியமிலாத அவர்களுடைய நாக்கினை அரிந்தெடுத்திட; அந்நாவை இழுத்தெடுத்திடற்கு உற்ற வளைந்த தண்டாயுதத்தால் வலித்து இழுத்து தமது கையில் கத்தியால் அரிந்து இச்செயலை அன்பினுல் புரிந்து; இகழ்ந்த அவரெல்லாம் அருநரகத்துச் செல்ல ஆளாகாமல் பாதுகாத்திட மேற் கொண்ட சீர் ஓங்கிய திருத்தொண்டால் உயர்வுற்றனர் 4

அன்ன தாகிய ஆண்மைத் திருப்பணி
மன்னு பேருல கத்தில் வலியுடன்
பன்னெ டும்பெரு நாள்பரி வாற்செய்து
சென்னி ஆற்றினர் செந்நெறி ஆற்றினர்.

அவ்வாருகிய எவராலும் செய்திடமுடியாத ஆண்மை உடைய திருப்பணியை விளங்கிய இப்பெரிய உலகத்தில் மிகுவலிமை உடன் பல நெடுநாளாக அன்பினுல் புரிந்து அதனுலே திருமுடி மீது கங்கை அணிந்த சிவபெருமானது செவ்விய நெறியை புரிந்து வந்தனர். 5

ஐய மின்றி அரிய திருப்பணி
மெய்யி னுற்செய்த வீரத் திருத்தொண்டர்
வைய முய்ய மணிமன்று ளாடுவார்
செய்ய பாதத் திருநிழல் சேர்ந்தனர்.

சிவன் ஒருவனுக்காக புரிந்திடும் இப்பணியினை ஐயம் ஏதும் இலாது புரிந்து அப்பணியினை உண்மையால் செய்த வீரமுடைய சத்திநாயனர் இந்த உலகம் உய்ந்திட கனக சபையில் ஆடியருளும் அப்பனது செவ்விய திருப்பாத நீழலில் சேர்ந்திருந்தார். 6

நாயனர் தொண்டரை நலங் கூறலார்
சாய நாவரி சத்தியார் தாள்பணிந்(து)
ஆய மாதவத்(து) ஐயடி கள்எனுந்
தூய காடவர் தம்திறஞ் சொல்லுவாம்.

எம்பெருமானுடைய அடியார்களை நன்மை சொல்லாத கொடியவரின் கோணிய நாக்கை அரிந்த சத்திநாயனரது திருவடிகளைப் பணிந்து இறைவனுக்கே ஆட்படும் வாய்ப்புடைய பெரும் தபோதனர் ஐயடிகள் எனப்படும் தூய்மை உடைய காடவர் என்னும் சோழ அரச மரபில் வந்துதித்த பெருமானர் செயலை மொழிவோம். 7

சத்தி நாயனர் புராணம் முற்றும்.

ஐயடிகள் காடவர்கோன் நாயனர் புராணம்

வையநிகழ் பல்லவர்தங் குலமரபின் வழித்தோன்றி
வெய்யகலி யும்பகையும் மிகையொழியும் வகை அடக்கிச்
செய்யசடையார் சைவத் திருநெறியால் அரசளிப்பார்
ஐயடிகள் நீதியால் அடிப்படுத்துஞ் செங்கோலார்.

இப்பூமியில் என்றும் சிறப்புடன் நிகழும் பல்லவச் சோழ அரசரது குலமரபின் வழியில் வந்து அவதரித்து கொடிய கலியும் (ஆசையின் விபரீத வாழ்க்கை)பகையும் (உயிர்களே தமது நலனுக்காக வெறுப்பது) மிகைப்பட்டுப் போகாது ஒழிந்திடும் படி அடக்கி; செவ்விய திருச்சடை உடைய பெருமானது திருநெறி விளங்கிட அந்நெறியால் அரசாள்வார் அவர்தான் ஐயடிகள் என்னும் நாமமுடன் இந்த உலகை நீதி உடைய செங்கோலின் அரசாட்சியால் தன்கை வசப்படுத்திய அரசர் பெருமானர். 1

திருமலியும் புகழ்விளங்கச் சேணிலத்தில் எவ்வுயிரும்
பெருமையுடன் இனிதமரப் பிறபுலங்கள் அடிப்படுத்துத்
தருமநெறி தழைத்தோங்கத் தாரணிமேற் சைவமுடன்
அருமறையின் துறைவிளங்க அரசளிக்கும் அந்நாளில்.

திருமலிகின்ற புகழ் விளங்கவும் இப்பரந்த பூமியில் எல்லா உயிரும் பெருமையுடன் இனிதே வாழ்ந்திடவும்: துட்டத்தனம நிகழும் வேற்று நாட்டின் அரசரை போரில் வென்று தருமநெறி தழைத்து ஓங்கிட; இப்பூமிமேல் சைவமுடன் அரிய வேதங்களின் மார்க்கங்கள் விளங்கிட ஐயடிகள் காடவகோனர் அரசாண்டு வரும் அந்த நாட்களில். 2

மன்னவரும் பணிசெய்ய வடநூல்தென் றமிழ்முதலாம்
பன்னுகலைப் பணிசெய்யப் பாரளிப்பார் அரசாட்சி
இன்னல் என இகழ்ந்ததனை எழிற்குமரன் மேலிழிச்சி
நன்மைநெறித் திருத்தொண்டு நயந்தளிப்பா ராயினர்.

பல நாட்டு அரசரும் தமக்குப் பணி செய்திட வட நூலாய ஆரியமும் தென் மொழியாய தமிழ் முதலாகச் சொல்லப் பெறும் பலகலையும் விளங்கி நிகழ்ந்து தமக்கு அறிவினைப் பெருக்கிட; இந்த உலகை அரசாள்வார்; நல்ல கலைகள் உணர்ந்த அறிவின் முதிர்ச்சியால்; அரசாட்சி; அரும் பொருளாய நித்திய இன்பத்தை பெறற்கு இன்னலாகும் என அதனை விடுத்து; அரசாளும் பொறுப்பை எழிலுடைய தனது அழகிய குமரன் மீது சுமத்தி; அதன் பின் தாம் நன்மை நெறியின் திருத்தொண்டினை நயப்பாட்டுடன் செய்து வருவராயினர். 3

தொண்டுரிமை புரக்கின்றூர் சூழ்வேலை உலகின்கண்
அண்டர்பிரான் அமர்தருளும் ஆலயங்க ளானஎலாம்
கண்டிறைஞ்சித் திருத்தொண்டின் கடனேற்ற பணிசெய்தே
வண்டமிழின் மொழிவெண்பா ஒரொன்ரு வழுத்துவார்.

எம்பிரான் சிவனுக்கே உரிமையாம் தொண்டினையே மேற்கொண்டு அதனை ஆள்கின்ற ஐயடிகள் காடவகோனர்; கடல் சூழ்ந்த உலகினிடத்து தேவாதிதேவன் சிவன் அமர்ந்தருளிய ஆலயங்களான எல்லாவற்றையும் சென்று கண்டு வணங்கி தாம் புரியும் திருத்தொண்டின் கடனிற்கு ஏற்ற பணிகள் செய்து அங்கு வண்மையாம் தமிழினல் மொழிந்திடும் வெண்பாக்கள் ஒவ்வோர் தலத்திற்கும் ஒவ்வொன்ருகப் பாடி வணங்குவார். 4

பெருத்தெழுகா தலில்வணங்கிப் பெரும்பற்றத் தண்புலியூர்த்
திருச்சிற்றம் பலத்தாடல் புரிந்தருளுஞ் செய்யசடை
நிருத்தனுர் திருக்கூத்து நேர்ந்திறைஞ்சி நெடுந்தகையார்
விருப்பினுடன் செந்தமிழின் வெண்பாமென் மலர்புனைந்தார்.

அவ்வகையால் ஐயடிகள் காடவர் கோனர் உள்ளத்து பெருகி எழும் காதலால் சென்று வணங்கி பெரும் பற்று விளங்க நின்ற கருணை செறிந்த தில்லைச்சிதம் பரத்தில் சென்று அங்கு ஆடல்புரிந்தருளும் சிவந்த சடையுடைய பெருமானரது திருக்கூத்தை நேர் சென்று கண்டு வணங்கி; அங்கு பெருந்தகையாம் ஐயடிகள் காடவகோனர் விருப்புடன் எம்பெருமாற்கு செந்தமிழின் வெண்பாவாகும் செம்மையான ஓர் பாடலின் மலர் சூட்டினர்

அவர் தில்லையம்பலத்து ஆடல் உகந்த அருள் வள்ளலை வணங்கி சூட்டிய வெண்பா மலர் இதுவாகும். 5

கோத்திரத் திருவெண்பா
திருச்சிற்றம்பலம்

ஒடுகின்ற நீர்மை ஒழிதலுமே உற்றுரும்
கோடுகின்ருர் மூப்புங் குறுகிற்று - நாடுகின்ற
நல்லச்சிற் றம்பலமே நண்ணுமுன் நல்நெஞ்சே
தில்லைச்சிற் றம்பலமே சேர். 1

திருச்சிற்றம்பலம்

அவ்வகையால் அருள்பெற்றங் கமர்ந்துசில நாள் வைகி
இல்வுலகில் தம்பெருமான் கோயில்களெல் லாமெய்திச்
செவ்வியஅன் பொடுபணிந்து திருப்பணிஏற் றனசெய்தே
எவ்வுலகும் புகழ்ந்தேத்தும் இன்றமிழ்வெண் பாமொழிந்தார்.

அவ்வகையாக பாடிப்பணிந்து அருள்பெற்று அங்குதங்கி சிலநாள்வரை இருந்து இந்த உலகில் தமது பெருமானது கோயில்கள் எல்லாம் சென்று செம்மையாய அன்புடன் பணிந்து திருப்பணிகள் ஏற்பன புரிந்து ஒவ்வோர் தலத்தலும் எல்லா உலகமும் புகழ்ந்து போற்றும இனியதமிழ் வெண்பா பாடியருளினர்.
அவர் ஏனைய தலங்களில் பாடிய வெண்பாக்களில் சிலவற்றை இங்கு தருகின்ரும். 6

திருச்சிற்றம்பலம்

கடுவடுத்த நீர்கொடுவா காடிதா என்று
நடுநடுத்து நாவடங்கா முன்னம் - பொடியடுத்த
பாழ்க்கோட்டஞ் சேராமுன் பன்மாடத் தென்குடந்தைக்
கீழ்க்கோட்டஞ் செப்பிக் கிட 2

குந்தி நடந்து குனிந்தொருகை கோலான்றி
நொந்திருமி ஏங்கி நுரைத்தேறி - வந்துந்தி
ஐயாறு வாயாறு பாயாமு நெஞ்சமே
ஐயாறு வாயால் அழை. 3

காளை வடிவொழிந்து கையுறவோ டையுறவாய்
நாளும் அணுகி நலியாழன் - பாளை
அவிழ்கமுகம் பூஞ்சோலை ஆரூரற் காளாய்க்
கவிழ்கமுகம் கூம்புகளன் கை. 4

வஞ்சியன நுண்ணிடையார் வாட்தடங்கண் நீர்சோரக்
குஞ்சி குறங்கின்மேற் கொண்டிருந்து - கஞ்சி
அருத்தொருத்தி கொண்டுவா என்னுமுன் நெஞ்சே
திருத்துருத்தி யான்பாதஞ் சேர். 5

காலைக் கலியிழையாற் கட்டித்தன் கையார்த்து
மாலை தலைக்கணிந்து மையெழுதி - மேலோர்
பருச்கோடி மூடிப் பலரழா முன்னம்
திருக்கோடி காஅடைநீ சென்று. 6

மாண்டுவாய் அங்காவா முன்னம் மடநெஞ்சே
வேண்டுவா யாகி விரைந்தொல்லைப் - பாண்டவாய்த்
தென்னிடைவாய் மேய சிவனுர் திருநாமம்
நின்னிடைவாய் வைத்து நினை. 7

தொட்டுத் தடவித் துடிப்பொன்றுங் காணாது
பெட்டப் பிணமென்று பேரிட்டுக் - கட்டி
எடுங்களத்தா என்னுமுன் ஏழைமட நெஞ்சே
நெடுங்களத்தான் பாதம் நினை. 8

அழுகு நிருகுரம்பை ஆங்கதுவிட் டாவி
ஒழுகும் பொழுதறிய ஒண்ணு - கழுகு
கழித்துண் டலையாமுன் காவிரியின் தென்பாற்
குழித்தண் டலையானைக் கூறு. 9
படிமுழுதும் வெண்குடைக்கீழ்ப் பாரெலாம் ஆண்ட
முடியரசர் செல்வத்து மும்மைக் - கடியிலங்கு
தோடேந்து கொன்றையந்தார்ச் சோதிக்குத் தொண்டுபட்டு
ஓடேந்தி உண்ப துறும். 10

திருச்சிற்றம்பலம்

இந்நெறியால் அரனடியார் இன்பமுற இசைந்தபணி
பன்னெடுநாள் ஆற்றியபின் பரமர்திரு வடிநிழற்கீழ்
மன்னுசிவ லோகத்து வழிஅன்பர் மருங்கணைந்தார்
கன்னிமதில் சூழ்காஞ்சிக் காடவரை அடிகளார்.

இந்தவகை ஒழுக்கத்தால் ஈசன் அடியார்கள் இன்பமுறும் படி இசைவுற்ற பணி பல நெடுநாளாகப் புரிந்த பிற்பாடு; எம்பெருமானது திருவடி நிழற்கீழாக விளங்கிடும் சிவலோகத்து; வழியடிமைபேணி அங்கு சென்ற அன்பர் பாங்காகத் தாமும் சென்று சேர்ந்தார் கன்னி காப்புடைய மதில் சூழ்ந்த காஞ்சி நகரின் தலைவர் ஐயடிகள் காடவ கோன் நாயனார். 7

பையரவ மணியாரம் அணிந்தார்க்குப் பாவணிந்த
ஐயடிகள் காடவனார் அடியிணைத்தா மரைவணங்கிக்
கையணிமான் மழுவுடையார் கழல்பணிசிந் தனையுடைய
செய்தவத்துக் கணம்புல்லர் திருத்தொண்டு விரித்துரைப்பாம்.

நஞ்சின் பையுடைய பாம்பின் ஆபரண மணிந்த பெருமானுக்குப் பாடல் மலர் சூட்டிய ஐயடிகள் காடவர் கோன் நாயனார் திருவடியிணைத் தாமரை வணங்கி அப்பால் திருக்கையில் அணிந்த மானும் மழுவாயுதமும் உடைய பெருமானது திருவடிகள் பணியும் சிந்தனையுடைய முற்பிறவியின் செய்தவத்தின் பேறுடைய கணம்புல்ல நாயனார் திருத்தொண்டை விரித்து ஓதுவோம். 8

ஐயடிகள் காடவர் கோன் நாயனார் புராணம் முற்றிற்று

சுந்தரமூர்த்தி சுவாமிகள் துதி

உளத்திலொரு துளக்கமிலோம் உலகுய்ய இருண்டிருக்
களத்துமுது குன்றர்தரு கனகம்ஆற் றினிலிட்டு
வளத்தின்மலிந் தேழுலகும் வணங்குபெருந் திருவாரூர்க்
குளத்திலெடுத் தார்வினையின் குழிவாய்நின் றெனையெடுத்தார்.

எம் உள்ளத்தில் என்றும் ஏதொன்றுக்கும் ஓர் அசைவு இல்லோம் நாம் எவ்வாறெனில் உலகம் உய்ந்திட இருண்ட நஞ்சுடைய கண்டத்து திருமுது குன்றத்தமர்ந்த பெருமான் தருகின்ற பன்னிரண்டாயிரம் பொன்னையும் முத்தாற்றிலே போட்டு பின்பு வந்து வளத்தால் பெருகி ஏழு உலகமும் வணங்கும் பெருந் திருவாரூர் குளத்தில் அப்பொன்னை எடுத்த எம்பிரான் சுந்தரமூர்த்தி சுவாமிகள் தம்மையே தஞ்சமான என்னையும் கொடிய வினையின் படுகுழியில் நின்றும் எடுத்து ஆண்டு கொண்டார். 1

கறைக்கண்டன் சருக்கம்

கணம்புல்ல நாயனார் புராணம்

திருக்கிளர்ச்சீர் மாடங்கள் திருந்துபெருங் குடிநெருங்கிப்
பெருக்குவட வெள்ளாற்றுத் தென்கரைப்பால் பிறங்கு பொழில்
வருக்கைநெடுஞ் சுளைபொழிதேன் மடுநிறைத்து வயல்வினைக்கும்
இருக்குவே ளூர்என்ப(து) இவ்வுலகில் விளங்குபதி.

திரு நிகழும் சீர்பொருந்திய மாடங்களில் திருந்திய வாழ்வுடைய பெரும் குடிகள் நெருங்கிட பெருக்கமாக ஓடும் வடவெள்ளாற்றுத் தென்கரைப் பாலாக; விளங்கும் சோலையில் வளரும் பலாமரத்திலுள்ள பழத்தின் சுளை முற்றிப் பொழிந்த தேன் குளத்தை நிறைத்து வயலையும் விளைவு படுத்தும் பெருமை உடைய இருக்கு வேள் ஊர் என்பது இந்த உலகில் விளங்கும ஒரு நல்ல ஊராகும். 1

அப்பதியில் குடிமுதல்வர்க் கதிபராய் அளவிறந்த
எப்பொருளும் முடிவறியா எய்துபெருஞ் செல்வத்தார்
ஒப்பில்பெருங் குணத்தினுல் உலகின்மேம்பட நிகழ்ந்தார்
மெய்ப்பொருளா வனஈசர்கழல் என்னும் விருப்புடையார்.

அந்த ஊரில் வாழும் குடிகட்கு முதல்வராகி; அளவிறந்த எந்தப் பொருள் இவரிடத்திலுள்ளன என்று முடிவு அறியாவகை பெற்றுக் கொண்ட பெரும் செல்வமுடையவர் ஒருவர். அவர்தாம் ஒப்பில்லாத பெரும் குணம் உடையவராதலாலே உலகில் மேன்மையுடன் வாழ்ந்து கொண்டவர். அவை யெலாமிருந்தும் உண்மைப் பொருளாவன சிவன் கழலே எனத்தெளிந்து அதன் பால் விருப்பமுடையவர். 2

தாவாத பெருஞ்செல்வம் தலைநின்ற பயன்இது என்(று)
ஓவாத ஒளிவிளக்குச் சிவன்கோயி லுள்ளெரித்து
நாவாரப் பரவுவார் நல்குரவு வந்தெய்தத்
தேவாதி தேவர்பிரான் திருத்தில்லை சென்றடைந்தார்.

குறையாத பெரும் செல்வம் தாம் பெற்றதனுல் தலைமைப் பாடாக எனக்கு நின்ற பயன் இதுதான் என்று ஓயாத ஒளியுடைய விளக்கு சிவன் கோவில் உள்ளாக எரித்து: நாக்கினுல் முடிந்த வரை எம்பிரானைத் துதிப்பாராய் வாழும் இவர் தமக்கு வறுமை வந்தடைந்திடலும் தமது ஊரை விடுத்து தேவாதிதேவன் சிவன் அமர்ந்த திருவுடைய தில்லைச்சிதம்பரம் சென்று சேர்ந்தார். 3

தில்லைநகர் மணிமன்றுள் ஆடுகின்ற சேவடிகள்
அல்கியஅன் புடனிறைஞ்சி அமர்கின்றூர் புரமெரித்த
வில்லியார் திருப்புலீச் சரத்தின்கண் விளக்கெரிக்க
இல்லிடைஉள் ளனமாறி எரித்துவரும் அந்நாளில்.

தில்லைச்சிதம்பரத்தில் அழகிய சபையில் ஆடுகின்ற சேவடிகளை பெரிய அன்புடன் பணிந்து அங்கு தங்குகின்றவர் முப்புரமெரி செய்த வில்லுடைய சிவபெருமான் அமர்ந்த திருப்புலிச்சரம் என்னும் தலத்து; விளக்கு எரித்திடும் படியாக தனது இல்லத்துள்ள பொருளை விற்று எண்ணை பெற்று விளக்கெரித்து வரும் நாளில் 4

ஆயசெயல் மாண்டதற்பின் அயலவர்பால் இரப்பஞ்சிக்
காயமுயற் சியில்அரிந்த கணம்புல்லுக் கொடுவந்து
மேயவிலைக் குக்கொடுத்து விலைப்பொருளால் நெய்மாறித்
தூயதிருவிளக்கெரித்தார் துளக்கறுமெய்த் தொண்டனார்.

அந்தவகை தம்மிடம் உள்ள பொருளும் அழிந்த பின்பாக அயலவரிடத்து பின்பாக அயலரிடத்து இரப்பதற்குப் பயந்து தனது உடம்பால் முயன்று பொருள் தேடும்படி தாம் சென்று கணம்புல்லு அரிந்து கொண்டு அதனை பொருந்திய விலைக்குக் கொடுத்து அதன் விலைக்காசால் நெய்மாறிக் கொண்டு வந்து தூய்மையுடைய விளக் கெரித்தார் அச்சமும் கேடுமிலாத மெய்த் தொண்டர் அவர். இதனால் இவர்க்கு கணம் புல்லர் என்னும் நாமமும் பெற்றனர். 5

இவ்வகையால் திருந்துவிளக் கெரித்துவர அங்கொருநாள்
மெய்வருந்தி அரிந்தெடுத்துக் கொடுவந்து விற்கும்புல்
எவ்விடத்தும்விலைபோகா தொழியவும்இப் பணியொழியார்
அவ்வரிபுல் லினைமாட்டி அணிவிளக்கா யிடஎரிப்பார்.

இவ்வகையாகத் திருந்திய விளக்கு எரித்துவர அங்கு ஒரு நாள் தனது உடலம் வருந்தி அரிந்து எடுத்துக்கொண்டு வந்து விற்கும் கணம் புல் எந்த இடத்திலும் குறித்த விலைக்கு விற்க முடியாது போகவும்: தாம் செய்திடும் திருவிளக்கெரிக்கும் திருப்பணி ஒழியாராய் தாம் அரிந்த கணம்புல்லை மாட்டி அழகிய சுடர் விளக்காயிட அப்புல்லை எரித்திடுவார். 6

முன்புதிரு விளக்கெரிக்கும் முறையாமங் குறையாமல்
மென்புல்லும் விளக்கெரிக்கப் போதாமை மெய்யான
அன்புபுரி வார்அடுத்த விளக்குத்தம் திருமுடியை
என்புருக மடுத்தெரித்தார் இருவினையின் தொடக்கெரித்தார்.

இப்படியாக எம்பெருமானது கோயில் திருமுன்பு அவர் திருவிளக்கு எரிக்கும் முறைப்படி அங்கு அதற்கென உள்ள யாமம் வரையும் குறையாமல் விளக்கெரித்திடற் குத்தாம் கொணர்ந்த கணம்புல்லுப் போதாமையால்; உண்மையான அன்பை ஈசன் பால் புரியும கணம் புல்ல நாயனார் அடுத்து எரிக்கும் விளக்கிற்கு தமது திரு முடியை என்பும் உருகும் அன்பினால் வெட்டி எடுத்து எரித்தார். அச்செயலால் கொடிய இருவினையின் தொடர்ச்சியினை எரித்திட்டார். 7

தங்கள்பிரான் திருவுள்ளஞ் செய்துதலைத் திருவிளக்குப்
பொங்கியஅன் புடன்எரித்த பொருவில் திருத்தொண்டருக்த
மங்கலமாம் பெருங்கருணை வைத்தருளச் சிவலோகத்(து)
எங்கள்பிரான் கணம்புல்லர் இனிதிறைஞ்சி அமர்ந்திருந்தார்.

அத்தகைய அன்பின் செயலிற்கு அவர்களது பெருமான் திருவுள்ளம் செய்து தலையின் திருவிளக்கு உள்ளதனைப் பொங்கிய அன்புடன் எரித்த நிகரிலாத வலிமை உடைய தொண்டருக்கு மங்கலமாகும் பெரும் கருணை வைத்தருளலும்; அக்கருணையின் பெருக்கால் எங்கள் பெருமான் கணம் புல்லர் சிவலோக மடைந்து எம்பிரானை இனிதிறைஞ்சி அமர்ந்திருந்தார். 8

மூரியார் கலியுலகின் முடியிட்ட திருவிளக்குப்
பேரியா றணிந்தாருக் கெரித்தார்தங் கழல்பேணி
வேரியார் மலர்ச்சோலை விளங்குதிருக் கடவூரில்
காரியார் தாஞ்செய்த திருத்தொண்டு கட்டுரைப்பாம்.

பெரிதே ஆர்க்கும் கடல் சூழ்ந்த ஆசைவயப்படும் உலகில் முடியை வெட்டி இட்ட திருவிளக்கை பெரும் ஆறணிந்த பெருமானுருக்கு எரித்த கணம்புல்ல நாயனரின் கழலடி வணங்கி; தேனுரும் மலர்ச்சோலைகள் விளங்கிடும் திருக்கடவூரில் காரி நாயனார் செய்த திருத்தொண்டை எடுத்து மொழிவோம். 9

கணம்புல்ல நாயனர் புராணம் முற்றும்.

காரி நாயனர் புராணம்

மறையாளர் திருக்கடவூர் வந்துதித்து வண்டமிழின்
துறையானபயன் தெரிந்து சொல்விளங்கிப் பொருள்மறையக்
குறையாத தமிழ்க்கோவை தம்பெயராற் குலவும்வகை
முறையாலே தொகுத்தமைத்து மூவேந்தர் பாற்பயில்வார்.

வேத நெறியாளர் அந்தணர் வாழும் திருக்கடவூரில் வந்து அவதரித்து வண்மை உடைய தமிழின் துறையான பயன் இதுதான் எனத் தெரிந்து: சொல் விளங்கி அதன் பொருள மறைந்திருப்ப; குறைவிலாத தமிழ் பாடற் கோவையினைத் தமது பெயராலே விளங்கிடும் வகை முறையால் தொகுத்து அமைத்து சேர சோழ பாண்டிய அரசர்பால் சென்று தாம் பாடிய பாடல் மொழிந்து அவருடன் பழகு வாராகி. 1

அங்கவர் தாம்மகிழும்வகை அடுத்தஉரை நயமாக்கிக்
கொங்கலர்தார் மனைனவர்பால் பெற்றநிதிக் குவைகொண்டு
வெங்கண் அராவொடுகிடந்து விளங்கும இளம்பிறைசென்னிச்
சங்கரனூர் இனிதமருந் தானங்கள் பலசமைத்தார்.

அங்கு அந்த அரசர்கள் மகிழும் வகை அடுத்து எடுத்து தாம் பாடிய பாடல் களை நயமுடையதாக்கி: அவைகளை மொழிந்து நல்மலர்மாலை அலர்ந்து விளங்கும் அரசரிடமாக தாம் சன்மானமாகப் பெற்ற நிதியின் குவியல் கொண்டு கொடிய கண் உடைய பாம்புடன் கிடந்து விளங்கும் இளம்பிறைச் சடையுடைய எம்பெரு மான் இனிதே அமரும் கோயில்கள் பல கட்டினர். 2

யாவர்க்கும் மனமுவக்கும் இன்பமொழிப் பயனியம்பித்
தேவர்க்கு முதற்றேவர் சீரடியார் எல்லார்க்கும்
மேவுற்ற இருநிதியம் மிகஅளித்து விடையவர்தம்
காவுற்ற திருக்கயிலை மறவாத கருத்தினராய்.

யாவர்க்கும் மனம் உவந்திடும் இன்பமுடைய மொழியின் பயனான உரைகள் மொழிந்து தேவாதிதேவன் சிவன் சீரடியார் எல்லார்க்கும் பொருந்திடக் கொண்ட பெரும் செல்வம் மிகவும் கொடுத்து; எம்பிரான் சிவனுடைய சோலையுடைய திருக்கைலாய மலையையே ஒரு பொழுதும் மறவாத கருத்துடையராகி வாழ்ந்து.3

ஏய்ந்தகடல் சூழுலகில் எங்குந்தம் இசைநிறுத்தி
ஆய்ந்தஉணர்(வு) இடையறு அன்பினராய் அணிகங்கை
தோய்ந்தநெடுஞ் சடையார்தம் அருள்பெற்ற தொடர்பினால்
வாய்ந்தமனம் போலுடம்பும் வடகயிலை மலைசேர்ந்தார்.

பொருந்திய கடல் சூழ்ந்த உலகில் எங்கும் தமது புகழை நிறுத்தி இறைவனை நாடி ஆராய்ந்த உணர்வில் இடையறாது கொண்ட அன்புடையவராய்; அழகிய கங்கை யாறுதோய்ந்த நெடும் சடையுடைய பெருமானார் தம் அருள் பெற்ற தொடர்ச்சியினால்; அவரை நினைந்து தியானிப்பவாய்ப்புடைய மனம் போன்று தமது உடம்பும் நேராக வடக்கே உள்ள திருக்கைலாய மலைக்குச் சென்று சேரப் பெற்றார்.4

வேரியார் மலர்க்கொன்றை வேணியார் அடிபேணும்
காரியார் கழல்வணங்கி அவரளித்த கருணையினால்
வாரியார் மதயானை வழுதியர்தம் மதிமரபில்
சீரியார் நெமாறர் திருத்தொண்டு செப்புவாம்.

அவ்வாறு மனம்போன்று உடம்பும் கைலைப் பதியானிடம் நேர்சென்று அமர்ந் திடப் பெற்று தேன் சொட்டும் மலர்க்கொன்றை சடைமுடியுடைய பெருமானரின் திருவடிகளைப் பேணுகின்ற காரி நாயனார் திருவடிகளை அடியேன் வணங்கி அவர் அடியேற்குக் கொடுத்த கருணையினால் வடிந்தோட மதம் சொரியும் யானைப்படை யுடைய பாண்டிய அரசரது சந்திரகுலத்தில் வந்து அவதரித்த சீரிய பெருமை உடைய நெடுமாற நாயனார் திருத்தொண்டு எடுத்து மொழிவோம். 5

காரி நாயனர் புராணம் முற்றிற்று

நின்றசீர் நெடுமாற நாயனர் புராணம்

தடுமாறும் நெறியதனைத் தவமென்று தம்முடலை
அடுமாறு செய்தொழுகும் அமண்வலையில் அகப்பட்டு
விடுமாறு தமிழ்விரகர் விணைமாறுங் கழலடைந்த
நெடுமாற னுர்பெருமை உலகேழும் நிகழ்ந்ததால்.

தடுமாற்றமுடைய ஓர்ச மயத்தைப்பற்றி அது தான் தவம் என்று தம்முடலை வருத்து மாறு செய்து உழன்று திரிந்து ஒழுகும் சமணருடைய வஞ்சனை வலையில் அகப்பட்டு நின்று; பின்னர் அதனை விடுமாறு தமிழ் விருப்பாளர் திருஞான சம்பந் தப் பெருமானுடைய வினைகளை மாற்றிடும் திருவடிகளை அடைந்த நெடுமாறன் என்னும் பாண்டிய அரசனுர் பெருமை ஏழு உலகமும் நிகழ்ந்தது. 1

அந்நாளில் ஆளுடைய பிள்ளையார் அருளாலே
தென்னுடு சிவம்பெருகச் செங்கோல்உய்த் தறம்அளித்துச்
சொன்னமநெறி போற்றிச் சுரர்நகர்க்கோன் தனைக்கொண்ட
பொன்னுரம் அணிமார்பிற் புரவலனுர் பொலிகின்றுர்.

அவ்வாறு தனது பெருமை எங்கு முறநெடுமாறன் பாண்டிய அரசர் அரசாண்டு வரும் காலத்தில் எம்மை ஆளுடைய திருஞானசம்பந்தப் பெருமான் அருளாலே தென்னுட்டில் சிவம் பெருகச் செங்கோலினை நடத்தி தருமத்தைக் காத்து: இறை வன் நாம மொழியாம் திருவைந்தெழுத்தின் நெறியாய சைவத்தைக் காத்து தேவர்க்கு அரசனை இந்திரனை வெற்றி கொண்டதற்கு உற்ற பொன்னின் மாலை திகழும் அழகுடைய மார்புடன் பாண்டிய அரசனுர் பொலிகின்றுர். 2

ஆயஅர சளிப்பார்பால் அமர்வேண்டி வந்தேற்ற
சேயபுலத் தெவ்வரெதிர் நெல்வேலிச் செருக்களத்துப்
பாயபடைக் கடல்முடுகும் பரிமாவின் பெருவெள்ளம்
காயுமதக் களிற்றின்நிரை பரப்பிஅமர் கடக்கின்றார்.

அவ்வாறான வகை அரசாளும் எங்கள் நெடுமாறன் பாண்டியனார்; தம்முடன் போர் செய்திட விரும்பி; போர் ஏற்ற மிகத் தூரதேசத்துள்ள ஓர்பகைவர் எதிரில் நெல் வேலியில் நடை பெற்ற போர்க்களத்தில் பரவிய சேனையின் கடலையும் முடுகிப்போடும் குதிரைப் படைகள் வெள்ளங்களையும் கொன்றிடும் மதயானைப் படையின் நிரைகளையும் பரப்பி அணிவகுத்து தனது பகைவனுடன் போரிட்டு வெல்கின்றார். 3

எடுத்துடன்ற முனைஞாட்பின் இருபடையிற் பொருபடைஞர்
படுத்தநெடுங் கரித்துணியும் பாய்மாவின் அறுகுறையும்
அடுத்தமர்செய் வயவர்கருந் தலைமலையும் அலைசெந்நீர்
மடுத்தகடல் மீளவந்தாம் வடிவேல்வாங் கிடப்பெருக.

படை எடுத்துப் போரிட்ட அப்போர்க்களத்திலே இரு திறத்து படைகளின் போர்வீரர்கள் கொன்ற நெடும் யானைத் துண்டமும் பாயும் குதிரைகளின் அறுந்த குறையும் நேரிட்டு எதிர்த்துப் போர்செய்த வீராது வெட்டுண்ட கறுத்ததலைகளின் மலையுமாக இரத்த நீரும் பெருகி ஓடிக் கலந்த கடலானது; இவர் முன்னாக ஆண்ட உக்கிரகுமார பாண்டியனார் பெருகிய அக் கடல் வற்ற வேல்விட்டது போல் மீண்டும் அக்கடல் மீது இவர் வேல் விடும்படி பெருகியதோ எனப்பெருகிட. 4

வயப்பரின் களிப்பொலியும் மறவர்படைக் கலஒலியும்
கயப்பொருப்பின் முழக்கொலியும் கலந்தெழுபல்லிய ஒலியும்
வியக்குமுகக் கடைநாளின் மேகமுழக் கெனமீளச்
சயத்தொடர்வல் லியும்இன்று தாம்விடுக்கும் படிதயங்க.

வெற்றியுடைய குதிரைகளின் களித்த கனைப்போசையும் வீரரது படைக்கலங்களின் ஓசையும் மலைபோன்ற யானையின் முழக்க ஓசையும் கலந்த பல வாத்தியங்களின் ஓசையும் வியக்கும்படி வரும் இந்த யுகத்தின் முடிவு நாளில் முழங்கும் மேகத்தின் கர்ச்சனை போல மூண்டு கொள்வதால்; அன்று மேகங்கள் பெருமுழக்கத்துடன் மதுரையை மழைபெய்து அழித்திட எழுந்த போது அவைகளை அடக்க உக்கிரகுமார பாண்டியனார் விலங்கிட்டது போல இன்றும் இந்த களத்து ஓசையை அடக்கிட இவரும் விலங்கினை மீண்டும் விடும்படியாதோ என அவை ஒலிப்ப. 5

தீயுமிழும் படைவழங்குஞ் செருக்களத்து முருக்குபடல்
தோயுநெடுங் குருதிபடுக் குளித்துநிணந் துய்த்தாடிப்
போயபரு வம்பணிகொள் பூதங்க ளேயன்றிப்
பேயும்அரும் பணிசெய்ய உணவளித்த தெனப்பிறங்க.

நெருப்பை உமிழும் படைகளைச் செலுத்தும் அப்போர்க்களத்து வெட்டுண்ட உடல் தோயும் படி பெருகிய நெடும் இரத்தக்குளத்தில் குளித்து பிணம் தின்று துணங்கைக் கூத்தாடி: முன்னாளில் வந்த பகைவரை அழித்து வெல்ல பணிகொண்ட பூதங்கட்கல்லாமல் இன்று பேயும் அரிய பணியை செய்திட அதற்கு உணவு கொடுத்ததோஎன அக்களம் விளங்கிட; 6

இனையகடுஞ் சமர்வினைய இகலுழந்த பறந்தலையில்
பனைநெடுங்கை மதயானைப் பஞ்சவனார் படைக்குடைந்து
முனையழிந்த வடபுலத்து முதல்மன்னர் படைசரியப்
புனையுநறுந் தொடைவாகை பூழியர்வேம் புடன்புனைந்து.

இவ்வாறான வெற்றியுடன் பெரும் போர் விளைந்திட வலிமை நாட்டிய போர்க்களத்து; பனை போன்ற நீண்ட துதிக்கையுடைய மதயானைகளின் படையுடைய நெடுமாறன் பாண்டிய அரசனரது படைகட்குத் தோற்று கம்போர்அணி இழந்து வடதேசத்து முதன்மையுடைய அரசரது படைகள் பயந்தோடிட அதனால் அணியும் வெற்றி மாலையை பாண்டிய அரசரின் வழமையாய வேப்பமாலையுடன் சேர அணிந்து. 7

வளவர்பிரான் திருமகளார் மங்கையருக் கரசியார்
களபமணி முலைதிளைக்குந் தடமார்பிற் கவுரியனார்
இளவளவெண் பிறைஅணிந்தார்க் கேற்றதிருத் தொண்டெல்லாம்
அளவில்புகழ் பெறவிளக்கி அருள்பெருக அரசளித்தார்.

வெற்றி பூண்டு; சோழர் பெருமானின் திருமகளார் மங்கையர்க்கரசி அம்மையாரது சாந்தணிந்த முலைகள் திளைத்திடும் பெருமார்பினுடன் எம்பிரான் நெடுமாற பாண்டியனார் இளநாகமுடன் வெண்பிறையும் அணிந்த சிவபெருமானார்க்கு ஏற்ற திருத்தொண்டுகள் எல்லாம் அளவிலாத புகழ் பொருந்த விளங்கிடச் செய்து உலகில் அருளும் பெருக அரசாண்டார். 8

திரைசெய்கடல் உலகின்கண் திருநீற்றின் நெறிவிளங்க
உரைசெய்பெரும் புகழ்விளக்கி ஓங்குநெடு மாறனார்
அரசுரிமை நெடுங்காலம் அளித்திறைவர் அருளாலே
பரசுபெருஞ் சிவலோகத் தின்புற்றுப் பணிந்திருந்தார்.

திரைசெய்யும் கடல் சூழ்ந்த உலகிலே திருநீற்றின் நெறி விளங்கிட யாவரும் துதித்திடும் படி பெரும் புகழை இவ்வுலகில் விளக்கி; அருள் ஓங்கிய நெடுமாறன் பாண்டியனார் தனது அரசாட்சி உரிமையை நெடுங் காலமாக ஆண்டு சிவன் அருளாலே; யாவரும் போற்றும் சிவலோகமடைந்து இன்புற்று எம் சிவமூர்த்தியை பணிந்திருந்தார். 9

பொன்மதில்சூழ் புகலிகா வலர் அடிக்கீழ்ப் புனிதராந்
தென்மதுரை மாறனார் செங்கமலக் கழல்வணங்கிப்
பன்மணிகள் திரையோதம் பரப்புநெடுங் கடற்படப்பைத்
தொன்மயிலை வாயிலார் திருத்தொண்டின் நிலைதொழுவாம்.

பொன்னின் மதில் சூழ்ந்த சிகாழி நகர்க்காவலர் திருஞானசம்பந்தப் பெருமான் திருவடிக் கீழாக அன்பு கொண்டு; பழைய பாவவினை நீங்கி புனிதமடைந்த தென் மதுரை நகராண்ட நெடுமாற பாண்டிய மன்னனரின் நிறைந்த செந்தாமரை மலர் போன்ற திருவடிகளை அடியேன் வணங்கி; பல மணிகளை திரைக்கடல் தன் கரை இடத்துப் பரப்புகின்ற நீண்ட கடற்கரையில் உள்ள தொன்மையான நகரம் மயிலாப்பூரில் வந்த வாயிலார் நாயனாரது திருத்தொண்டின் நிலையினை மொழிந்து தொழுவோம். 10

நின்றசீர் நெடுமாற நாயனார் புராணம் முற்றும்.

வாயிலார் நாயனார் புராணம்

சொல்வி ளங்குசீர்த் தொண்டைநன் னாட்டிடை
மல்லல் நீடிய வாய்மை வளம்பதி
பல்பெ ருங்குடி நீடு பரம்பரைச்
செல்வம் மல்கு திருமயி லாபுரி.

பலராலும் போற்றிய சொல் விளங்கிடும் சிறந்த தொண்டை நாட்டினில்; நன்குடன் நீடித்த ஒழுக்கமுடைய வாய்மை சிறந்த வளம்பதி ஒன்றுவது; பல பெரும் குடிகள் நீடித்து வாழ்கின்ற பரம்பரைச் செல்வம் விளங்கும் திருமயிலாபுரி எனப்படுவது. 1

நீடு வேலைதன் பால்நிதி வைத்திடத்
தேடும் அப்பெருஞ் சேமவைப் பாமென
ஆடு பூங்கொடி மாளிகை அப்பதி
மாடு தள்ளு மரக்கலச் செப்பினால்.

நீண்ட கடல் தன்பாலுள்ள நிதியினை வைத்திடற்கு தேடுகின்ற அப்பெரும் சேமவைப்பின் பாதுகாப்பான இடம் இது தான் என்று காட்டும் படியாக பூங்கொடிகள் ஆடும் மாளிகைகளில்; அப்பதியின் அருகாக வந்து நின்று கடலில் ஓடும் கப்பல்கள் தம் பொருள்களை நேரே தள்ளிடும் செயலால் விளங்குவது. 2

கலஞ்சொரிந்த கரிக்கருங் கன்றுமுத் து)
அலம்பு முந்நீர் படிந்தஃ மேகமும்
நலங்கொள் மேதிநன் ஞகுந் தெரிக்கொணு
சிலம்பு தெண்டிரைக் கானலின் சேணெலாம்.

கப்பல் கொண்டு வந்து சொரிந்த யானையின் கறுத்த கன்றும்; முத்துக்கள் அலம் பிடும் கடல் நீர் படிந்து வரும் மேகமும்; நலங்கொண்ட எருமையின் கன்றும் இனம் தெரிய முடியாதபடி விளங்குவது ஒலிக்கின்ற தெள்ளிய திரையுடைய கடற் கரையின் பரந்த நிலம்எங்கும். 3

தவள மாளிகைச் சாலை மருங்கிறைத்
துவள்ப தாகை நுழைந்தஃ தூமதி
பவள வாய்மட வார்முகம் பார்த்தஞ்சி
உவள கஞ்சேர்ந் தொதுங்குவ தொக்குமால்.

வெண்ணிறமுடைய மாளிகைகளின் சாலைகளின் பக்கத்தில் வீட்டிறப்புக்களில் அசைந்தாடும் கொடிகள் ஊடாகநுழைந்து போகும் தூயசந்திரன்; அங்குள்ள பவளம் போலும் வாயுடைய பெண்களின் அழகுடைய முகம்பார்த்துப் பயந்து வெட்கி: மறைதற்கு ஓர் இடத்தினைச் சேர்ந்து ஒதுங்குவது போலும். 4

வீதி எங்கும் விழா அணி காணியர்
தூதி யங்குஞ் சுருப் பணி தோகையர்
ஓதி எங்கும் ஒழியா அணிநிதி
பூதி எங்கும் புனைமணி மாடங்கள்.

அத்திருமயிலாபுரி வீதி எங்கும் விழாக்களின் அலங்காரங்களும்; இளம் காதல் ஆடவரின் தூது போல் வந்து சேரும் வண்டுகள் மொய்ப்பன பெண்களின் கூந்த லில் எங்கும்: வெண்மையின் சுண்ணச்சாந்து பூசிய அழகிய மாடங்கள் எங்கும் ஒழியாத அழகிய செல்வங்கள் நிறைந்துள்ளன. 5

மன்னு சீர்மயி லைத்திரு மாநகர்த்
தொன்மை நீடிய சூத்திரத் தொல்குல
நன்மை சான்ற நலம்பெறத் தோன்றினார்;
தன்மை வாயிலார் என்னும் தபோதனர்.

இவ்வாறு விளங்கும் சிருடைய மயிலாபுரித் திருநகரில் மிகவும் பழைமை நீடித்த சிறப்புடைய வேளாளரது தொன்மையான குலம் நன்மை கொண்ட நலம் பெற்றிட வந்து அவதரித்தார் ஒருவர். அவர் உயர் வாம்தன்மையில் வாயிலார் என்னும் குடியின் நல்நாமம் தமக்கு உடைய ஓர் தபோதனர். 6

வாயி லாரென நீடிய வாக்குடித்
தூய மாமர பின்முதல் தோன்றியே
நாய னார்திருத் தொண்டின் நயப்புறு
மேய காதல் விருப்பின் விளங்குவார்.

வாயிலார் என நீடித்த புகழ் உடைய பெரும் குடியின் தூய பெருமரபின் முதல்வராகத் தோன்றி; எம்பெருமான் சிவனது திருத்தொண்டின் நயப்புற்றுப் பொருந்திய காதல் விருப்பினால் விளங்கிக் கொள்வார் அத்த போதனர் 7

வேறு

மறவாமை யான்அமைத்த மனக்கோயில் உள்ளிருத்தி
உறவாதி தனையுணரும் ஒளிவிளக்குச் சுடரேற்றி
இறவாத ஆனந்தம் எனுந்திருமஞ் சனம்ஆட்டி
அறவாணர்க் கன்பென்னும் அமுதமைத்தர்ச் சனைசெய்வார்.

அவர் தமது சித்தம் மறவாது இறைவனைத் தியானம் செய்யும் தன்மை யால் அமைத்துக் கொண்ட தம் மனதான கோயில் உள்ளே இருத்தி; அப்பெருமானுய ஆதியை உணரும் படியான நுண் உணர்வாகும் ஒளிவிளக்கின் சுடரை ஏற்றி; என்றும் அழியாத ஆனந்தமயம் என்னும் திருமஞ்சன நீரால் அபிஷேகம் செய்து; தருமமே சொரூபமாக அமைந்த பெருமானுர்க்கு அன்பு என் னும் அமுதினைப்படைத்து இவ்வகையே அன்பினால் தன் அகத்து மௌனத்தின் பெருவினைவான அர்ச்சனை புரிவார். 8

அகமலர்ந்த அர்ச்சனையில் அண்ணலார் தமைநாளும்
நிகழவரும் அன்பினால் நிறைவழிபா டொழியாமே
திகழநெடு நாட்செய்து சிவபெருமான் அடிநிழற்கீழ்ப்
புகல மைத்துத் தொழுதிருந்தார் புண்ணியமெய்த் தொண்டனார்.

தமது உள்ளம் மலர்ந்த அர்ச்சனையால் எம்கடவுளை நாளும் தம்மிடம் நிகழ வருகின்ற அன்பினால் நிறைந்த வழிபாடு ஒழியாத வகையாகத்திகழும் படி நெடு நாட்கள் புரிந்து: சிவபெருமானது திருவடி நிழல் கீழாக தமது புகலிடத்தை அமைத்து; என்றும் இறவாத மெய் நிலையில் தொழு திருந்தார்: அவ்வாறான அரும் பேறு எய்துதற்கு புண்ணிய முடைய மெய்த்தொண்டர் வாயிலார் நாயனர். 9

நீராருஞ் சடையாரை நீடுமன ஆலயத்துள்
ஆராத அன்பினால் அருச்சனைசெய் தடியவர்பால்
பேராத நெறிபெற்ற பெருந்தகையார் தமைப்போற்றிச்
சீராருந் திருநீடூர் முனைஅடுவார் திறமுரைப்பாம்.

கங்கை நீரார்ந்த சடையுடைய கடவுளை நீடிய மனம் என்னும் ஆலயத்தில் குறையாத அன்பினால் அர்ச்சனை புரிந்து அடியார்களிடம் எப்பொழுதும் விட்டு நீங்காத சிவானந்த நெறிபெற்ற பெருந்தகையார் வாயிலார் நாயனரைப் போற்றி; சிர்பொருந்தி விளங்கும் திருநீடூரில் வாழ்ந்த முனை அடுவார் நாயனர் திறத்தை இனி நாம் மொழிவோம். 10

வாயிலார் நாயனர் புராணம் முற்றிற்று

முனையடுவார் நாயனர் புராணம்

மாறு கடிந்து மண்காத்த வளவர் பொன்னித் திருநாட்டு
நாறு விரைப்பூஞ் சோலைகளின் நனைவாய் திறந்து பொழிசெழுந்தேன்
ஆறு பெருகி வெள்ளமிடும் அள்ளல் வயலின் மள்ளர் உழுஞ்
சேறு நறுவா சங்கமழுஞ் செல்வ நீடூர் திருநீடூர்.

தமது பகைமையை நீக்கி அடக்கி; இப்பூமியினைக் காத்த சோழ அரசரின் காவி ரியின் திருநாட்டில்; மணக்கும் வாசனையுடைய பூஞ்சோலைகளில் பூமொட்டுக்கள் வாய்திறந்து பொழிந்த செழும் தேன் ஆருகப்பெருகி வெள்ளமாகப் பெருக்கும் சேற்று வயலில் உழவர்கள் உழுகின்ற வயல்சேறும் நல்ல வாசனை கமழும் செல் வத்தால் நீடித்த ஊர் திருநீடூர். 1

விளங்கும் வண்மை மிக்குள்ள வேளாண் தலைமைக் குடிமுதல்வர்
களங்கொள் மிடற்றுக் கண்ணுதலார் கழலிற் செறிந்த காதல்மிகும்
உளங்கொள் திருத்தொண்டு நிலைமையினில் உள்ளார் நள்ளார் முனைஎறிந்த
வளங்கொ டிறைவர் அடியார்க்கு மாறு தளிக்கும் வாய்மையார்.

அங்கு வாழும் விளங்கும் கொடையின் மிகுந்துள்ள வேளாளர்கள்து தலைமை கொண்ட குடிகளின் முதல்வர் ஒருவர்; அவர் கரு நஞ்சுகொண்ட கண்டமுடை கண்ணுதற் பெருமான் சிவனது திருவடிகளில் செறிந்த காதல் மிகுந்த தம் உள் ளத்துக் கொண்டு செய்யும திருத்தொண்டின் உரிமையில் உள்ளவர். தமக்குற்ற பகைவரது போர்முனைகளில் கொண்ட வெற்றியினால் வருகின்ற செல்வத்தைக் கொண்டு ஈசன் அடியார்கட்கு மாறாது கொடுத்து வரும் கொடையின் சிறப்பு டையவர். 2

மாற்றூர்க் கமரில் அழிந்துள்ளோர் வந்து தம்பால் மாநிதியம
ஆற்றும் பரிசு பேசினால் அதனை நடுவு நிலைவைத்துக்
கூற்றும் ஒதுங்கும் ஆள்வினையால் கூலி ஏற்றுச் சென்றெறிந்து
போற்றும் வென்றி கொண்டிசைந்த பொன்னுங் கொண்டு மன்னுவார்.

தமது பகைவருடன் போரில் தோற்று வந்துள்ளார் யாரேனும் இவரிடம் வந்து அப்பகைவரை வென்றிடற்கு இவாபோர்புரிந்து வெற்றிபெற்றுத் தந்தால் அதற்காக அவர் கொடுக்கும் காசின் அளவுபேசினால்; அதனை நீதியுடைய நிலை

யில் வைத்து போரிடத் துணிந்து இயமனும் ஒதுங்கும் படியான போர்வலியின் சிறப்பால் தம்மிடம் வந்தோரிடம் அவாபகை நீக்கத்தருகின்ற கூலியினை ஏற்றுச் சென்று; அவரது பகைவரை அழித்து பலரும் புகழும்படியான வெற்றி கொண்டு கூலியாக அவர் கொடுப்பதற்கு இசைந்த பொன்னும் கொண்டு விளங்குவார் இந்த முனையடுவார். 3

இன்ன வகையால் பெற்றநிதி எல்லாம் ஈசன் அடியார்கள்
சொன்ன சொன்ன படிநிரம்பக் கொடுத்துத் தூய போனகமும்
கன்னல் நறுநெய் கறிதயிர்பால் கனியுள் ளூறுத்த கலந்தளித்து
மன்னும் அன்பின் நெறிபிறழா வழித்தொண்டாற்றி வைகினார்.

இன்னவகையால் பெற்ற செல்வம் எல்லாம் ஈசன் அடியார்கள் தாம் கேட்ட கேட்டபடி நிரம்பக்கொடுத்து அவர்க்கு தூய்மை உடைய அமுதும் கரும்பின் கட்டியும் நல்ல நெய்யும் கறியும் தயிரும் பாலும் பழமும் இவை உள்ளாக உற்ற வேறு வகை உணவும் கலந்து கொடுத்து விளங்கிய அன்பின் நெறிதவறிடாத இறைவனது வழித்தொண்டு புரிந்து வாழ்ந்து வருவார். 4

மற்றிந் நிலைமை பன்னெடுநாள் வையம் நிகழச் செய்துவழி
உற்ற அன்பின் செந்நெறியால் உமையாள் கணவன் திருவருளால்
பெற்ற சிவலோ கத்தமர்ந்து பிரியா உரிமை மருவினர்
முற்ற உழந்த முனையடுவார் என்னும் நாமம் முன்னுடையார்.

மற்று இந்த நிலமையின பல நெடுநாட்கள் வரை இவ்வுலகில் நிலவிடச் செய்து அதுவே வழியாக உற்ற அன்பின் செவ்விய நெறியதனால்; உமையம்மையார் கணவனது திருவருளால பெற்ற சிவலோகத்து அமர்ந்தருளி எம்பிரானைப் பிரிந்து கொள்ளாத உரிமையைப் பெற்றுக் கொண்டார்; போர்க்களத்தில் வெற்றி பெறப் போரிட்ட முனையடுவார் என்றும நாமம் முன்னுக உடைய அப்பெரியவர். 5

யாவ ரெனினும் இகலெறிந்தே ஈசன் அடியார் தமக்கின்பம்
மேவ அளிக்கும் முனையடுவார் விரைப்பூங் கமலக் கழல் வணங்கித்
தேவர் பெருமான் சைவநெறி விளங்கச் செங்கோல் முறைபுரியும்
காவல் பூண்ட கழற்சிங்கர் தொண்டின் நிலைமை கட்டுரைப்பாம்.

யாவரெனினும் அவரது பகை நீக்கிப் பொருள் பெற்று சிவன் அடியார்கட்கு இன்பம் கொள்ளக் கொடுத்தருளிய முனையடுவார் நாயனரது வாசமுடைய தாமரைப் பூப்போலும் திருவடிவணங்கி; அப்பால் தேவர்களது பெருமான் சிவனது சைவ நெறி உலகில் விளங்கிடச் செங்கோலின்முறை அரசாண்டு உலகினைக் காவல் பூண்ட கழற்சிங்க நாயனரது தொண்டின் நிலமையை எடுத்து மொழிவோம். 6

முனையடுவார் நாயனர் புராணம் முற்றிற்று

சுந்தரமூர்த்தி சுவாமிகள் துதி

செறிவுண் டென்று திருத்தொண்டிற் சிந்தை செல்லும் பயனுக்கும்
குறியுண் டொன்று கிலுங்குறையொன் றில்லோம் நிறையுங் கருணையினல்
வெறியுண் சோலைத் திருமுருகன் பூண்டிவேடர் வழிபறிக்கப்
பறியுண் டவர்எம் பழவினைவேர் பறிப்பார் என்னும் பற்றாலே.

எமக்கு இதில் ஓர் சிறப்பின் செறிவு உண்டு என்று இத் திருத்தொண்டில் எம் சிந்தை செல்வதால் வரும் பயனுக்கும், ஓர் குறியுண்டு. அக்குறிப்பால் எமக்கு யாதும் ஓர்குறையும் இல்லோம். எவ்வாறு இதுவாகும் என்றால் நிறைந்த கருணையுடன் வெறித்திடும் தேன் சொட்டும சோலையுடைய திருமுருகன் பூண்டி வழியாக வரும்பொழுது வேடர்கள் அவர்பொருளைப் பறித்தெடுத்திட அதனால் பொருள்பறியுண்ட எம் சுந்தர மூர்த்தி சுவாமிகள் எம்மை மீள மீளத்துயரத்து ஆளாக்கும் பழைய வினையின் வேரெல்லாம் பறித்தெடுப்பார் என்னும் பற்றாலே.

ஈசன் கருணையால் பொருள் பறியுண்டவர் அவர் ஆதலால் அத்தகைய கருணைக்கு இலக்கானவர் எமது வினையின் வேரையும் அழித்து உய்ந்திட வைப்பார் என்னும் பற்றாலே இதல் ஓர் செறிவு உண்டு என்று திருத்தொண்டில் எம் சிந்தை செல்லும் பயனுக்கும் ஓர் குறியுண்டாயது என்க. 1

கடல்சூழ்ந்த சருக்கம்

கழற்சிங்க நாயனர் புராணம்

படிமிசை நிகழ்ந்த தொல்லைப் பல்லவர் குலத்து வந்தார்
கடிமதில் மூன்றுஞ் செற்ற கங்கைவார் சடையார் செய்ய
அடிமலர் அன்றி வேறொன் றறிவினிற் குறியா நீர்மைக்
கொடிநெடுந் தானை மன்னர் கோக்கழற் சிங்கர் என்பார்.

இப்பூமிமீது நிகழ்ந்த முன்னைய சிறப்புடைய பல்லவச் சோழர் குலத்து வந்து அவதரித்தார்; காவலுடைய அசுரது மதில் மூன்றும் அழித்த கங்கையாறு விளங்கும் சடையுடைய சிவபெருமானது செவ்விய திருவடி மலரே அன்றி வேறென்றும் தனது மனதில் கொள்ளாத நல்நீர்மை உடைய கொடியுடைய நெடும் சேனைக்கு அதிபரானமுடியுடைய அரசர் கழற்சிங்கர் என்னும் நாமமுடையவர். 1

காடவர் குரிசி லாராங் கழற்பெருஞ் சிங்க னர்தாம்
ஆடக மேரு வில்லார் அருளினல் அமரிற் சென்று
கூடலர் முனைகள் சாய வடபுலங் கவர்ந்து கொணடு
நாடற நெறியில் வைக நன்னெறி வளர்க்கு நாளில்.

காடவச் சோழர் குலத்து தலைமையுடைய வராகும் வீரக்கழல் புனைந்த கழற் சிங்க நாயனர்;பொன் னன மேருமலையை வில்லாக உடைய பெருமான் அருளினல் போர் மேலாகச்சென்று பகைவரது போர் முனைகள் அழிந்திட வடதேசம் எல்லாம் வெற்றிகொண்டுபொருளும் கொண்டு வந்து நாடானது தருமத்தின் நெறியில் தங்கிட நல்நெறியினை உலகில் வளர்க்கும் நாளில். 2

குவலயத்(து) அரனூர் மேவுங் கோயில்கள் பலவுஞ் சென்று
தவலரும் அன்பில் தாழ்ந்துதக்கமெய்த் தொண்டுசெய்வார்;
சிவபுரி என்ன மன்னும் தென்திரு வாரூர் எய்திப்
பவமறுத் தாட்கொள் வார்தங் கோயிலுட் பணியப்புக்கார்.

இப்பூமியில் சிவபெருமான் தங்கிய கோவில்கள் பலவற்றும் சென்று குறையாத அன்பினல் தாழ்ந்து தகுதியுடைய மெய்த் தொண்டு செய்பவர்; சிவபுரி இது என விளங்கிடும் தென் நாட்டின் திருவாரூர் நகர் அடைந்து;அங்குபாவங்களை எல்லாம் அறுத்து ஆண்டருளும பெருமானது கோயில் உள்ளாகப் பணிந்திடும் படி சென்று புகுந்தார். 3

அரசியல் ஆயத் தோடும் அங்கணர் கோயி லுள்ளால்
முரசுடைத் தானை மன்னர் முதல்வரை வணங்கும் போதில்
விரைசெறி மலர்மென் கூந்தல் உரிமைமெல் லியலார் தம்முள்
உரைசிறந் துயர்ந்த பட்டத் தொருதனித் தேவி மே வி.

தம்முடன் வந்த அரசியலில் உள்ள பிரதானிகளாகும் சேனைபதிகள் மந்திரிகள் முதலாயினரோடு; நெற்றிக் கண்உடைய கடவுளின் கோயில் உள்ளாக முரசப் பறையினை உடைய சேனைகட்கு அரசர் கழற்சிங்கர் அங்கு புற்றிடம் கொண்ட முதல்வராம் சிவனை வணங்கிடும போதில்; அரசரது வாசனை செறிந்த மலர் சூடிய கூந்தலுடைய உரிமையாய மனைவியர்களுள்ளே மிகவும் புகழ்ந்திடப் பெற்று விளங்கிய பட்டத்தின் ஒரு தனித் தேவி மிக அழகுடைய அவள் அங்கு வந்து; 4

கோயிலை வலங்கொண் டங்கண் குலவிய பெருமை எல்லாம்
சாயல்மா மயிலே போல்வாள் தனித்தனி கண்டு வந்து
தூயமென் பள்ளித் தாமம் தொடுக்குமண் டபத்தின் பாங்கர்
மேயதோர் புதுப்பூ அங்கு விழுந்த தொன்றெடுத்து மோந்தாள்.

தாமும் திருவாரூர்க் கோயிலை வலங்கொண்டு வருபவள் அங்கு விளங்கி இருந்த பெருமை எல்லாவற்றையும் நற்சாயலுடைய மயிலே போலும் சிறப்புடைய அவள் தனித்தனியாகக் கண்டு மகிழ்ந்து: தூய்மை உடைய திருப்பள்ளித் தாமம் (மலர் மாலை) தொடுக்கும் மண்டபத்தின் அருகாக பொருந்தி இருந்த புதுப்பூ (சுவாமிக்கு சாத்திடாத பூ) விழுந்திருந்ததை எடுத்து மணந்தாள். 5

புதுமலர் மோந்த போதிற் செருத்துணைப் புனிதத் தொண்டர்
இதுமலர் திருமுற் றத்துள் எடுந்துமோந் தனளாம் என்று
கதுமென ஓடிச் சென்று கருவிகைக் கொண்டு பற்றி
மதுமலர்த் திருவொப் பாள்தன் மூக்கினைப் பிடித்து வார்ந்தார்.

எம்பிராற்குச் சாத்திட வந்த பூவை அப்படிச் செய்யலாமோ என அறியாது எடுத்து அந்த புது மலரை மணந்தபோது அங்கு நின்ற செருத்துணை என்னும் புனிதமுடைய அடியவர் இந்தப்பூ திருமுற்றத்து எடுத்து மணந்தனளாம் என்று எண்ணி விரைவாகஓடிச் சென்று தனது கையில் வாளினைக் கொண்டு பட்டத்து தேவியைப் பிடித்து தேன் சொட்டும் தாமரை மலர் இருக்கும் இலக்குமியை ஒத்திடும் அழகுடைய அவளின் மணந்த மூக்கினை (கருணையின் செயலால்) பிடித்து அரிந்தெடுத்தார். 6

வார்ந்திழி குருதி சோர மலர்க்கருங் குழலுஞ் சோரச்
சோர்ந்துவீழ்ந் தரற்றுந் தோகை மயிலெனத் துளங்கி மண்ணில்
சேர்ந்தயாந துரிமைத் தேவி புலம்பிடச் செம்பொற் புற்றுள்
ஆர்ந்தபே ரொளியைக் கும்பிட் டரசரும் அணைய வந்தார்.

மூக்கு அரிபட்டதும் வடிந்தோடும் இரத்தம் பெருக அழகிய மலர் சூடிய கறுத்த கூந்தலும் சோர சோர்ந்து விழ்ந்து பதைத்தவாறு; மயிலைப் போன்று துடி துடித்து மண்ணில் கிடந்தயரும் உரிமையுடைய பட்டத்துத் தேவிபுலம்பிட; அதுவேளை செம்பொன் மயமான கறையான் புற்றில் இடங்கொண்ட புண்ணியப் பொருளாக விளங்கும் ஒளியைக் கும்பிட்டு எமது கழற்சிங்க அரசரும் அங்கு கிட்டவாக வந்தார். 7

வந்தணைவுற்ற மன்னர் மலர்ந்தகற் பகத்தின் வாசப்
பைந்தளிர்ப் பூங்கொம் பொன்று பார்மிசை வீழ்ந்த தென்ன
நொந்தழிந் தரற்று வாளே நோக்கி இவ்வண் டத்துள்ளோர்
இந்தவெவ் வினைஅஞ் சாதே யார்செய் தார்? என்னும் எல்லை.

கிட்டவாக வந்து சேர்ந்த அரசர் பெருமான் மலர்ந்தகற்பக மரத்தின் வாசமுடைய பூங்கொம்பு ஒன்று; பூமிமீது விழுந்தது போன்று மனம் நொந்துசோர்ந்து கிடந்து அழுதலறிடும் பட்டத்து தேவியை நோக்கி; இந்த அண்டத்துள்ளவர்கள் இத்தகைய கொடும் செயலை அஞ்சாது செய்தார் யார் என்ற அந்த உடனே. 8

அந்நிலை அணைய வந்து செருத்துணை யாராம் அன்பர்
முன்னுறு நிலைமை அங்குப் புகுந்தது மொழிந்த போது
மன்னரும் அவரை நோக்கி மற்றிதற் குற்ற தண்டம்
தன்னைஅவ் வடைவே யன்றே தடிந்திடத் தகுவ தென்று.

அந்த இடத்தில் கிட்டவந்து செருத்துணை என்னும் குறையாத அன்பர் முன்னல் நேர்ந்த நிலைமைகள் அங்கு நேர்ந்துள்ளதை எடுதது மொழிந்தபோதில்; அதனைக் கேட்ட கழற்சிங்க அரசர் பெருமானும் செருத்துணை நரயனரை நோக்கி ''அன்பனே மற்று இவள் செய்த அபராதற்திற்கு தண்டனை அக்குற்றங்கள் செய்யப்பட்ட முறைப்படியன்றே தண்டித்திடத்தகுவது'' என்று 9

கட்டிய உடைவாள் தன்னை உருவி அக்கமழ்வாசப் பூத்
தொட்டுமுன் னெடுத்த கையாம் முற்படத் துணிப்ப தென்று
பட்டமும் அணிந்து காதல் பயில்பெருந் தேவி யான
மட்டவிழ் குழலாள் செங்கை வளையொடும் துணித்தாரன்றே.

கழற்சிங்க அரசர் உடன் தமது அரையில் கட்டிய உடைவாளை உருவிஎடுத்து அந்த வாசம் கமழும் பூவைத் தொட்டு முன்பாக எடுத்த கைதான் முன்னர் துண்டிக்கப்பட வேண்டுமென்று; அரசாட்சிக்குரிய பட்டமும் அணிந்து தான் காதலித்து திருமணம் செய்த பெரும் பட்டத்து தேவியான தேன்சொரியும் கூந்தல் உடையாளது பூத்தொட்ட சிவந்தகையை அணிந்திருந்த வளைகளோடும் வெட்டி வீழ்த்தினர். 10

ஒருதனித் தேவி செங்கை உடைவாளால் துணித்த போது
பெருகிய தொண்டர் ஆர்பின் பிறங்கொலி புவிமேற் பொங்க
இருவிசும் படைய ஓங்கும் இமையவர் ஆர்ப்பும் விம்மி
மருவிய தெய்வவாச மலர்மழை பொழிந்த தன்றே.

தனது ஒரு தனித்தேவியினுடைய செங்கையை கழற்சிங்க அரசர் பெருமான் வாளால் வெட்டிய போது; இறைவன் பால் அன்பு பெருகிய அடியார்களது ஆரவாரிப்பின் பெரும் ஒலி இந்த பூமி மீது பொங்கி எழுந்திட பெருவானத்திடை ஓங்கிப் பெருகிய தேவர்களது ஆரவாரிப்பும் விம்மிப் பெருகியது. அதனுடன் இணைந்து தெய்வ வாசனை உடைய பூ மழை பொழிந்தது. 11

அரியஅத் திருத்தொண் டாற்றும் அரசனார் அளவில்காலம்
மருவிய உரிமை தாங்கி மாலயற் கரியார் மன்னும்
திருவருட் சிறப்பினாலே செய்யசே வடியின் நீழற்
பெருகிய உரிமை யாகும் பேரருள் எய்தி னாரே.

செய்திடற்கரிய அத்திருத்தொண்டை ஆற்றிய தொண்டனார் கழற்சிங்கர் அளவற்ற காலம் தமக்கெனப் பொருந்திய அரசாட்சியினைப் புரிந்து திருமாற்கும் பிரமனுக்கும் காண்டற்கரிய சிவன் தமக்கு ஈந்த திருவருளின் சிறப்பினாலே செவ்விய பெருமானது திருவடி நிழலின் கீழ் இருந்திடும் பெருக்கமுற்ற உரிமையாகும் பேரருளை அடைந்து கொண்டார். செய்த தொண்டு திருவடிக் கீழ் இருந்திடும் உரிமை தந்தது என்பதாயது 12

வையக நிசழக் காதல் மாதேவி தனது செய்ய
கையினைத் தடிந்த சிங்கர் கழலினை தொழுதுபோற்றி
எய்திய பெருமை அன்பர் இடங்கழியார் என் றேத்தும்
மெய்யருளுடைய தொண்டர் செய்வினை விளம்ப லுற்றாம்.

இவ்வாறு இப்பூமியில் என்றும் நிகழ்ந்திட; தனது காதல் மாதேவியாயவளின் புதுப்பூவினைத் தொட்ட செவ்விய கையினை வெட்டிய கழற்சிங்க நாயனரது திருவடியினைகளைப் போற்றி; இவ்வுலகில் தம்பால் அடைந்திடக் கொண்ட பெருமை உடைய அன்பர் இடங்கழியார் என்று ஓதப்பெறும் மெய் அருளுடைய தொண்டரின் செயலினை எடுத்து இனி மொழிதலுற்றோம். 13

கழற்சிங்க நாயனார் புராணம் முற்றும்.

இடங்கழி நாயனார் புராணம்

எழுந்திரைமா கடலாடை இருநிலமா மகள்மார்பில்
அழுந்துபட எழுதும்இலைத் தொழில்தொய்யில் அணியினவாம்
செழுந்தளிரின் புடைமறைந்த பெடைகளிப்பத் தேமாவின்
கொழுந்துணர்கோ திக்கொண்டு குயில்நாடு கோனாடு.

திரை எழுகின்ற பெரும் கடலை ஆடைபோல சூழ அணிந்திடக் கொண்ட பெரு நிலமாகிய பூமி தேவியின் அகன்ற மார்பில் நன்கு அழுந்திட எழுதியிட்ட இலை போன்ற வடிவின் தொய்யில் குறியின் அழகு போன்றது; செழுமையான மாந்தளிரின் பக்கராக மறைந்திருந்த பெண்குயில் மகிழ்ந்திட சிறந்த மாமரங்களில் உள்ள கொழுந்தாய இலைகளைக் கோதிக் கொண்டு ஆண்குயில் தனது பெண்குயிலை நாடும் கோனாடு என்பது. 1

முருகுறுசெங் கமலமது மலர்துறைந்த மொய்யளிகள்
பருகுறுதெண் டிரைவாவிப் பயில்பெடையோ டிரையருந்தி
வருகுறுதண்டு ளிவாடை மறையமா தவிச்சூழல்
குருகுறங்குங் கோனாட்டுக் கொடிநகரங் கொடும்பாளூர்.

வாசனை உற்ற செந்தாமரையின் தேனினை பூவில் படிந்த வலியாய வண்டுகள் பருகுதற்கிடமான தெள்ளிய திரையுடைய குளத்தில் பயல்கின்ற பெண் பறவையுடன் இரை உண்டுஅருகாக வந்து மோதி வீசும் வாடைக்காற்றுக்காக மறைந்திட: குருக்கத்தி மரச்சோலையில் ஆண்பறவையுடன் உறங்கிடும் அக்கோனாட்டில் கொடி நாட்டிய தலைநகரமாயது கொடும் பாளூர் என்னும் ஊர். 2

அந்நகரத் தினிலிருக்கும் வேளிர்குலத் தரசளித்து
மன்னியபொன் னலம்பலத்து மணிமுகட்டின் பாங்கொங்கின்
பன்னுதலைப் பசும்பொன்னுற் பயில்பிழம்பாம் மிசையணிந்த
பொன்னெடுந்தோள் ஆதித்தன் புகழ்மரபிற் குடிமுதலோர்.

அந்த நகரத்தினில் சோழ அரசர் மரபில் நின்றும் தோன்றிய இருக்கு வேளிர் குலம் என்னும் அரசகுலத்தில் தோன்றி அரசாண்டு: அருள் விளங்கிய பொன்னம் பலத்தின் (சுவாமி திருநடனம் புரியும் சபையின்) அழகிய முடியில் சிறந்த கொங்க நாட்டில் நின்றும் பெற்ற நன்குமொழியப் பெறும் எடையுடைய பசிய பொன் விளங்கும் கூரையாக மேலே அணிந்த பொன்போலும் நெடுந்தோளுடைய ஆதித்த சோழ அரசரது புகழுடைய மரபின் குடிமுதல் வராய் விளங்குவார் ஒருவர். 3

இடங்கழியார் எனவுலகில் ஏறுபெரு நாமத்தார்
அடங்கலர்முப் புரமெரித்தார் அடித்தொண்டின் நெறியன்றி
முடங்குநெறி கனவினிலும் முன்னுதார் எந்நாளும்
தொடர்ந்தபெருங் காதலினுல் தொண்டர்வேண் டியசெய்வார்.

அவர்தாம் இடங்கழியார் என இவ்வுலகில் பெருகும் புகழுடைய நாமத்தை உடையவர். அருட் தன்மைக்கு அடங்காத அசுரருடைய முப்புரத்தை எரித்த சிவ பெருமானது திருவடித் தொண்டின் நெறியே அல்லாது வேறு கோணுதலுடைய மார்க்கங்கள் கனவிலும் நினையாதவர். அவர் எந்த நாளும் எம்பெருமானையே தொடர்ந்த பெரும் காதலினுல் அப்பன் அடியார்கள் விரும்பி வேண்டியதையே தாம் புரிவாராயினர். 4

சைவநெறி வைதிகத்தின் தருமநெறி யொடுந்தழைப்ப
மைவளருந் திருமிடற்றூர் மன்னியகோ யில்களெங்கும்
மெய்வழிபாட் டர்ச்சனைகள் விதிவழிமேன் மேல்விளங்க
மொய்வளர்கண் புகழ்பெருக முறைபுரியும் அந்நாளில்.

சைவ மார்க்கமான வைதிக மார்க்கம் அதற்குற்ற தருமவழியுடன் தழைத்திட நஞ்சின் கருமை வளரும் திருக்கண்ட முடைய பெருமான் வீற்றிருக்கும் கோயில்ள எங்கும் உண்மை வழிபாடு அர்ச்சனைகள் வேத விதியின் வழி மேல் மேல் விளங்கிட; பொருந்தி எங்கும் வலிமையுடன் வளரும் வண்மையுடைய புகழ்பெருகி வர செங்கோன்முறை ஆண்டுவரும் அந்த நாளில். 5

சங்கரன்றன் அடியாருக் கமுதளிக்குந் தவமுடையார்
அங்கொருவர் அடியவருக் கமுதொருநாள் ஆக்கஉடன்
எங்கும்ஒரு செயல்காணு தெய்தியசெய் தொழில்முட்டப்
பொங்கிவரும் பெருவிருப்பால் புரியும்வினை தெரியாது.

ஓர் நாள் சிவபெருமானுடைய அடியார்கட்கு அமுது கொடுத்திடும் தவ முடைய அங்குள்ள ஒருவர்; சிவனடியார் கட்கு அமுது ஒருநாள் சமைத்திட வேண்டிய பொருள் பெற தன்னிடத்து எங்கும் ஓர் செயல்காணுது வந்துற்ற வறுமை யால் அடியார்க்கு அமுதூட்டும் தம்செயல் தவறிட; அடியார்க்கு அமுதூட்ட வேண்டு மென்று மனதில் பொங்கி எழும் பெருவிருப்பத்தாலே தான் இனி என்செய் வது என்பதையே தெரியாராகி.

மேற்கொண்டு செய்வதில் நன்மை தீமை உணரமுடியாராகி. 6

அரசரவர் பண்டாரத் தந்நாட்டின் நெற்கூட்டின்
நிரைசெறிந்த புரிபலவா நீலக்கொட்ட காரத்தில்
புரைசெறிநள் ளிருளின்கண் புக்குமுகந் தெடுப்பவரை
முரசெறிகா வலர்கண்டு பிடித்தரசன் முன் கொணர்ந்தார்.

அரசனுடைய திறைப் பொருளாக விளங்கிய அந்நாட்டில் இருந்த நெற்கூடு களின் வரிசையாக உள்ள மதில் காவலிடன் விளங்கிய களஞ்சிய கொட்டகை யில்; ஏங்கும் மிகுந்து இருள் நிறைந்த நடுச் சாமத்தில் ஓநவகையாகச் சென்று நெல்லை அள்ளி எடுத்திட அதுவேளை அந்த அன்பரை; நாழிகைக் காலம் தோறும் முரசப்பறை அடித்து இரவு முழுதும் காவல் இருந்த சேவகர்கள் கண்டுபிடித்து; அரசன் முன்பாகக் கொண்டு வந்தனர். 7

மெய்த்தவரைக் கண்டிருக்கும் வேல்மன்னர் வினவுதலும்
அத்தனடி யாரையான் அமுதுசெய்விப் பதுமுட்ட
இத்தகைமை செய்தேன் என் றியம்புதலும் மிக இரங்கிப்
பத்தரைவிட்(டு) இவரன்றே? பண்டாரம் எனக்(கு) என்பார்.

கைதாகித் தன் முன் கொணர்ந்த உண்மையாய தபோதனரைக் கண்டு அங்கிருக்கும் வேல் அரசர் இடங்கழியார் நெல் களவாண்டதற்கு காரணம் கேட டலும் அந்த தபோதனர் அரசரை நோக்கி ''அரசே! எம்பிரானது அடியவரை யான் அமுது செய்வித்திடற்கு பொருள் இலாது தடைப்பட்டிட இந்த செயலைப் புரிந்தேன் என்று மொழிதலும் அதுகேட்ட அரசர் அவர் பால் மிகவும் இரக்கம் கொண்டு அ! த தபோதனரை உடன் விடுவித்து ''இவரல்லவோ எனது திரவிய முடைய பண்டாரம்'' என மொழிந்தார். 8

நிறையழிந்த உள்ளத்தால் நெற்பண்டா ரமும்அன்றிக்
குறைவில்நிதிப் பண்டார மானஎலாங் கொள்ளை முகந்(து)
இறைவனடி யார்கவர்ந்து கொள்க என எம் மருங்கும்
பறையறையப் பண்ணுவித்தார் படைத்தநிதிப் பயன்கொள்வார்.

உண்மையின் உணர்வால் தனது அரசஅதிகாரம் யாவும் அழிந்த உள்ளத்தைக் கொண்டு என்னிடத்துள்ள நெற்பண்டாரமன்றி குறைவற்ற நிதியின் பண்டாரங் களையுமே எல்லாவற்றையும் ஈசன் அடியார்கள் வேண்டிய அளவு அள்ளிப் பெற்றுக் கொள்க என்று தனது தேசத்தின் எப்பக்கரிலும் பறை அறைந்திடப் பண்ணுவித் தார் தாம் பெற்ற நிதியின் பயனினைக் கொள்வாராய். 9

எண்ணில்பெரும் பண்டாரம் ஈசனடி யார்கொள்ள
உண்ணிறைந்த அன்பினுல் உறுகொள்ளை மிகஊட்டித்
தண்ணளியால் நெடுங்காலந் திருநீற்றின் நெறிதழைப்ப
மண்ணிலருள் புரிந்நிறைவர் மலரடியின் நிழல்சேர்ந்தார்.

எண்ணற்ற தமது திறைப் பொருளின் சேமிப்பான பண்டாரங்கள் யாவும் ஈசனுடைய அடியார்கள் பெற்றுக்கொள்ள உள்ளத்து நிறைந்த அன்பினுல்; அடி யார் யாவரும் கொள்ளைப் பொருள் போல் அள்ளிக் கொள்ள மிகக்கொடுத்து; இச்செயலால உலகத்து உயிர்க் கெல்லாம் பெரும் கருணையில் நெடுங்காலம் திருநீற் றின் நெறிதழைத்திட இப்பூமியில் அருளுடன் அரசாண்டு; பின்னர் ஈசன் திருவடி நீழல் சேர்ந்தார். 10

மைதழையும் மணிமிடற்றூர் வழித்தொண்டின் வழிபாட்டில்
எய்துபெருஞ் சிறப்புடைய இடங்கழியார் கழல்வணங்கி
மெய்தருவார் நெறியன்றி வேறொன்றும் மேலறியாச்
செய்தவராஞ் செருத்துணையார் திருத்தொண்டின் செயல்மொழிவாம்.

கருமை தழைகின்ற அழகிய கண்டமுடைய சிவபெருமானது வழியடிமைத் தொண்டின் வழிபாட்டில் அடையப் பெற்ற பெரும் சிறப்புடைய அரசர் இடங் கழியார் பாதங்களே அடியேன் கும்பிட்டு; இப்பால் மெய்மையைத் தருகின்ற சிவனது நெறியே அல்லாது வேறொன்றும் மேலாக அறியாத நற்தவம் செய்தும் செருத்துணை நாயனரின் திருத்தொண்டின் செயலை மொழிவோம். 11

இடங்கழி நாயனர் புராணம் முற்றும்.

செருத்துணை நாயனர் புராணம்

உள்ளும் புறம்புங் குலமரபின் ஒழுக்கம் வழுக்கா ஒருமைநெறி
கொள்ளும் இயல்பிற் குடிமுதலோர் மலிந்த செல்வக் குலப்பதியாம்
தெள்ளுந் திரைகள் மதகுதொறுஞ் சேலுங் கயலுஞ் செழுமணியும்
தள்ளும் பொன்னி நீர் நாட்டு மருகல்நாட்டுத் தஞ்சாவூர்.

உள்ளும் புறம்பாகவும் குலத்தின் மரபிலுள்ள ஒழுக்கம் வழுவாத ஒருமைப் பாடுடைய நெறியினைக் கொண்டிடும் இயல்பில்; குடிமுதல்வர்கள் சிறந்து பெருக்க முற்ற செல்வக் குலப்பதியானது; தெள்ளிய நீர்த்திரைகள் கொணர்ந்து வடிகாலின் மதகுகள் தோறும் சேல்மீனும் கயல் மீனும் செழுமையான முத்தும் தள்ளுகின்ற காவிரியாற்றின் நீர் வளமுடைய சோழநாட்டில் உள்ள மருகநாட்டில் தஞ்சாவூர் என்னும் ஊராகும். 1

சீரின் விளங்கும் அப்பதியில் திருந்து வேளாண்குடி முதல்வர்
நீரின் மலிந்த செய்யசடை நீற்றர் கூற்றின் நெஞ்சிடித்த
வேரி மலர்ந்தபூங் கழல்சூழ் மெய்யன்புடைய சைவரெனப்
பாரில் நிகழ்ந்த செருத்துணையார் பரவுந் தொண்டின் நெறி நின்றார்.

சீரினால் விளங்கிய அப்பதியினிலே திருந்துகின்ற சீரின் நலப்பாடுடைய வேளாளரது குடிமுதல்வராய்; கங்கை நீரினால் மலிந்துற்ற செவ்விய திருச்சடை யினது அழகும் திருநீற்று ஒளி அழகும் விளங்கும் எம் சிவபெருமானது இயமனின் நெஞ்சை இடித்து வீழ்த்திய தேன் மலர்ந்த தாமரை போலும் திவ்விய திருவடி களையே சூழ்கின்ற: மெய்யன்புடைய சைவர் இவர் என்று இப்பூமியில் என்றும் நிகழ்ந்த செருத்துணையார் எனும் நாமமுடையவர். அவர் எம்பெருமானைப் போற்று கின்ற தொண்டின் நெறிவழியே நின்று கொள்பவர். 2

ஆன அன்பர் திருவாரூர் ஆழித் தேர்வித் தகர் கோயில்
ஞான முனிவர் இமையவர்கள் நெருங்கு நலஞ்சேர் முன்றிலினுள்
மான நிலவு திருப்பணிகள் செய்து காலங் களின் வணங்கிக்
கூனல் இளவெண் பிறைமுடியார் தொண்டு பொலியக் குலவுநாள்.

இவ்வாறான திருவுடைய அன்பர் செருத்துணை யார் திருவாரூரில் விளங்கும்; திருவாரூர் தேர்அழகு என ஓதப்பெறுதற்கு உடையதாய் பெரும் சில்லுடைய தேரிற்கு முதல்வராய மெருமானின் கோவிலில் ஞான உணர்வுடைய முனிவர்கள் தேவர்கள் நெருங்கும நலஞ்சேர்ந்த திருமுற்றத்தினுள்ளாக பெருமை சிறந்துற்ற திருப்பணிகள் ஆனவற்றைப் புரிந்து உரியகாலங்களில் புற்றிடம் கொண்ட புண்ணி யப் பொருளை வணங்கி: கோணிய இளம்பிறையை திருச்சடையில் உடைய பெருமானின் தொண்டு பொலிந்திடும் படி வாழும் நாட்களில். 3

உலகு நிகழ்ந்த பல்லவர்கோச் சிங்கர் உரிமைப் பெருந்தேவி
நிலவு திருப்பூ மண்டபத்து மருங்கு நீங்கிக் கிடந்ததொரு
மலரை எடுத்து மோந்ததற்கு வந்து பொருமை வழித்தொண்டர்
இலகு சுடர்வாய்க் கருவி எடுத் தெழுந்த வேகத் தாலெய்தி.

கடல் சூழ்ந்த உலகமெல்லாம் காக்கின்ற பெருமானுய் நிகழ்ந்த பல்லவச் சோழ அரசர் கழற்சிங்க நாயனரது பெரும் பட்டத்துத் தேவி; திருவாரூர் நிலவிய திருப்பூபண்டபத்து புறம்பாக நீங்கிக்கிடந்த தொருபூவை எடுத்து மணந்த அதற்கு அப்படியாவதொரு செயலைக்கண்டு சகித்திட முடியாத வழியடிமைத் தொண்டர் செருத்துணையார் அலகு கூரினால் மினுங்கிடும் ஓர்வாளினை எடுத்துக் கொண்டு உள் ளத்து எழுந்த வேகத்தால் வந்து; 4

கடிது முற்றி மற்றவள்தன் கருமென் கூந்தல் பிடித் தீர்த்துப்
படியில் வீழ்த்தி மணிமூக்கைப் பற்றிப் பரமர் செய்யசடை
முடியில் ஏறுந் திருப்பூமண் டபத்து மலர் மோந் திடும்மூக்கைத்
தடிவன் என்று கருவிபினால் அரிந்தார் தலைமைத் தனித்தொண்டர்.

விரைவாகச் சேர்ந்து அவளுடைய கறுத்த மெல்லிய கூந்தலைப்பிடித்து இழுத்து நிலத்தில் வீழ்த்தி அவளது மூக்கினைப் பிடுத்துக் கொண்டு சிவபெருமரனுடைய முடியில் சாத்திடப் பெறும் திருப்பூ மண்டபத்துள்ள பூவை மணந்திடும் இம் மூக்கை அரிவேன் என்று கூறி வாளினால்அரிந்தார்தலைமைப்பாடுடைய தனித்தொண் டர் செருத்துணை நாயனர். 5

இச்செயல் பட்டத்துத் தேவி நரகம் அடையாது காத்த கருணையின் பொருட் டும் உலகிற்கு உய்தியும் தருவதொன்றாக நிகழ்த்தப்பட்டது.

அடுத்த திருத்தொண் டுலகறியச் செய்த அடலே றனையவர்தாம்
தொடுத்த தாம மலரிதழி முடியார் அடிமைத் தொண்டுகடல்
உடுத்த உலகில் நிகழச்செய் துய்யச் செய்ய பொன்மன்றுள்
எடுத்த பாத நிழலடைந்தே இறவா இன்பம் எய்தினார்.

தம் நிலைக்கு ஏற்ற திருத்தொண்டு அதனை உலகறியச் செய்திட்ட அடலுடைய சிங்கம்போலும் செருத்துணையார் அவர் தாமும்; தொடுத்த மாலையான கொன்றை மலர் முடியுடைய பெருமானது அடிமைத் தொண்டு கடல் சூழ்ந்த உலகில் நிகழ்ந் திடச் செய்து: உலகம் உய்ந்திடும் பொருட்டால் செவ்விய பொன்மயமான கனக சபையுள் ஆட எடுத்த திருப்பாத நிழலில் சேர்ந்து இறவாத இன்பம் அடைந் தார். 6

செங்கண் விடையார் திருமுன்றில் விழுந்த திருப்பள் ளித்தாமம்
அங்கண் எடுத்து மோந்தஅதற் கரசன் உரிமைப் பெருந்தேவி
துங்க மணிமூக் கரிந்தசெருத் துணை யார் தூய கழலிறைஞ்சி
எங்கு நிகழ்ந்த புகழ்த்துணையார் உரிமை அடிமை எடுத்துரைப்பாம்.

சிவந்த கண்ணுடைய இடபத்தின் மீது எழுந்தருளி வரும் சிவனது திருவாரூர்க் கோயில் திருமுற்றத்தில் விழுந்த திருப்பள்ளி மலரினை அங்கு எடுத்து மணந்த அதற்கு அரசனுடைய உரிமையாய பெரும் பட்டத்து தேவியினுடைய பெருமை மிக்க அழகிய மூக்கினை ஏதுக்கும் அஞ்சாது அரிந்த செருத்துணை நாயனரது தூய்மையான திருவடிகளை அடியேன் வணங்கி; இப்பால் எங்கும் நிகழ்ந்த புகழ் உடைய புகழ்த்துணை நாயனரது உரிமையாய அடிமையின் தன்மையை எடுத்து மொழிவோம். 7

செருத்துணை நாயனர் புராணம் முற்றும்.

புகழ்த்துணை நாயனர் புராணம்

செருவிலிபுத் தூர்மன்னுஞ் சிவமறையோர் திருக்குலத்தார்
அருவரைவில் லாளி தனக்(கு) அகத்தடிமை யாமதனுக்(கு)
ஒருவர்தமை நிகரில்லார் உலகத்துப் பரந்தோங்கிப்
பொருவரிய புகழ்நீடு புகழ்த்துணையார் எனும்பெயரார்.

திருவுடைய செருவிலி புத்தூர் என்னும் ஊரில் வாழும் சிவப்பிராமணர் குலத்து அவதரித்து வந்தவர். இவர் அரிய மேருமலையை வில்லாகக் கொண்ட சிவபெருமான் தனக்கு தன் உள்ளம் அடிமையாகின்ற அதனிற்கு ஒருவர் தமக்கு நிகரில்லாதவர். உலகத்தில் பரந்து ஓங்கிய நிகர்ப்பரிய புகழால் நீடித்த புகழ்த்துணை யார் என்னும் பெயர் உடையவர். 1

தங்கோனைத் தவத்தாலே தத்துவத்தின் வழிபடுநாள்
பொங்கோத ஞாலத்து வற்கடமாய்ப் பசிபுரிந்தும்
எங்கோமன் தனைவிடுவேன் அல்லேன் என் நிராப்பகலும்
கொங்கார்பன் மலர்கொண்டு குளிர்புனல்கொண் டருச்சிப்பார்.

தனது கடவுளை தவத்தின் பேற்றாலே தத்துவங்களின் நிலையாய ஆகமவிதிப் படி சிவபூசை புரிந்து வழிபட்டு வருகின்ற நாட்களில் பொங்கும் கடல் சூழ்ந்த உலகத்து எங்கும் பஞ்சமாக; அதனாலே பசியடைந்தும்; எனது பெருமானை நான் விடுவேன் அல்லேன் என்று இரவும் பகலும் வாசனை கமழும் பல நல் மலர் கொண்டும் குளிர்ந்த நீர் கொண்டும் அர்ச்சித்திடுவார். 2

மாலயனுக் கரியானை மஞ்சனம் ஆட்டும் பொழுது
சாலவுறு பசிப்பிணியால் வருந்திநிலை தளர்வெய்திக்
கோலநிறை புனல்தாங்கு குடந்தாங்க மாட்டாமை
ஆலமணி கண்டத்தார் முடிமீது வீழ்த்தயர்வார்.

இவ்வாறுக பசிப்பிணியால் வாடி உடலம் தளரியமே இலாது திருமால் பிர
மலுக்கும் அரிய கடவுளே அர்ச்சித்திடும் பொழுதில்; மிகவும் உற்றபசிப்பிணியால்
வருந்தி தனது நிலைதளர்வடைந்து கோலமுடைய நீர் தாங்கிய குடத்தையே
தாங்க மாட்டாது அக்குடத்தை நஞ்சுண்ட கண்டமுடைய கடவுளது திருமுடி 3
மீது வீழ்த்தி விட்டு நின்று நடுங்கி அயர்ச்சி கொள்வார்.

சங்கரன்தன் அருளாலோர் துயில்வந்து தமையடைய
அங்கணனுங் கனவின்கண் அருள்புரிவான் அருந்துணவு
மங்கியநாட் கழிவளவும் வைப்பதுநித் தமுப்ஓரு கா(சு)
இங்குனக்கு நாம் என்ன இடர்நீங்கி எழுந்திருந்தார்.

அவ்வாறுக அயரும் அவருக்கு சிவபிரான் அருளாலே ஓர் நித்திரை வந்து
சேர நெற்றியில் கண்ணுடைய கடவுளும் கனவிடத்து அருள் செய்கின்றார்
''நீ அருந்தும் உணவு இல்லாமல் போகும் நாட்கள் நீங்கும் அளவும் நித்தலும்
ஒரு காசு இங்கே உனக்குவைப்பது நாம்'' என்று அருள்புரிய தனது பசிப்பிணி 4
யால் வரும் தளர்ச்சி எல்லாம் நீங்கி எழுந்திருந்தார்.

பெற்றம்உகந் தேறுவார் பீடத்தின் கீழ்ஒருகா(சு)
அற்றம்அடங் கிடஅளிப்ப அன்பரும்மற் றதுகைக் கொண்(டு)
உற்றபெரும் பசியதனால் உணங்கும்உடம் புடன்உவந்து
முற்றுணர்வு தலைநிரம்ப முகமலர்ந்து களிகூர்ந்தார்.

தாம் அருள் புரிந்தவாறே இடபத்தின் மீதுகந்து ஏறியருளும் பெருமான்
தமது பீடத்தின் கீழாக ஒரு காசினை குற்றம் யாவும் நீங்கிட வைத்தருள; அன்பர்
புகழ்த்துணையாரும் அதனைக் கைக்கொண்டு தமக்கு உற்ற பெரும் பசியால் வாடும்
உடம்புடன் பெரிதும் மகிழ்ந்து முழுவதும் சோர்வுற்ற தனது உணர்ச்சி தலைமை 5
பெற்று நிரம்பிட முகம் மலர்ந்து ஆனந்தமுற்றார்.

அந்நாள்போல் எந்நாளும் அளித்தகா சதுகொண்டே
இன்னுத பசிப்பிணிவந் திறுத்தநாள் நீங்கியபின்
மின்னுர் செஞ் சடையார்க்கு மெய்யடிமைத் தொழில்செய்து
பொன்னுட்டின் அமரர்தொழப் புனிதரடி நிழல்சேர்ந்தார்.

அந்த நாள் போல் எந்நாளும் எம்பிரான் கொடுத்த காசு அது கொண்டு
தமக்கு இனிமையிலாத பசிப்பிணி வந்து துன்பப்படுத்திய நாள் நீங்கிய பிற்பாடு
மின்னல் விளங்கிடும் செஞ்சடையுடைய பெருமானுர்க்கு உண்மையாய அடிமைத்
தொழில் புரிந்து தேவ உலகத்து தேவர் எல்லாம் தொழும்படி புனிதராய சிவ
மூர்த்தியின் திருவடி நீழல் சேர்ந்தார் புகழ்த்துணை நாயனுர்.

பந்தணையு மெல்விரலாள் பாகத்தார் திருப்பாதம்
வந்தணையு மனத்துணையார் புகழ்த்துணையார் கழல்வாழ்த்திச்
சந்தனியு மணிப்புயத்துத் தனிவீர ராந்தலைவர்
கொந்தணையும் மலரலங்கல் கோட்டபுலியார் செயலுரைப்பாம்.

பந்து சேரும்படி அழகிய மென்மையான விரல்களை உடைய உமையம்மை
பாகமுடைய சிவபெருமான் திருப்பாதம் வந்து சேருகின்ற மனத்துணை பெற்ற
வராகும் புகழ்த்துணை நாயனுரது திருவடிகளை அடியேன் வணங்கி வாழ்த்தி;
சந்தனம் அணிகின்ற அழகிய தோளுடைய தனிவீரரான தலைவர் கொத்தாகப்
பொருந்தக் கட்டிய மலர்மாலையுடைய கோட்புலி நாயனுரது செய்கையை இனி 7
மொழிவோம்.

புகழ்த்துணை நாயனுர் புராணம் முற்றும்.

கோட்புலி நாயனுர் புராணம்

நலம் பெருகுஞ் சோணாட்டு நாட்டியத்தான் குடிவேளாண்
குலம்பெருக வந்துதித்தார் கோட்டபுலியார் எனும் பெயரார்;
தலம்பெருகும் புகழ்வளவர் தந்திரியாராய்வேற்றுப்
புலம்பெருகத் துயர்விளைப்பப் போர்விளைத்துப் புகழ்விளைப்பார்.

நலம் பெருகும் சோழ நாட்டினிலே நாட்டியத்தான் குடி என்னும் ஊரில்
சிறந்த குடியாகிய வேளாளரது குலம் பெருக வந்து ஒருவர் உதித்தார். அவர்
கோட்புலியார் என்னும் பெயருடையவர். இப்பூமியில் பெருகும் புகழ் உடைய
சோழ அரசரின் போர்த்தந்திரியாகி; வேற்று நாட்டு அரசர்களது கொடுங்கோன்
மைக்கு ஆளாய அந்த நாட்டில் கொடுமைக்குத் துயர்விளைந்திட தாம் வேற்று
நாட்டில் போர் புரிந்து வென்று பெரும் புகழை நிலை நிறுத்துவார். 1

மன்னவன்பால் பெறுஞ்சிறப்பின் வளமெல்லாம் மதியணியும்
பிஞ்ஞகர்தங் கோயில்தொறுந் திருவமுதின் படிபெருகச்
செந்நெல்மலைக் குவடாகச் செய்துவரந் திருப்பணியே
பன்னெடுநாள் செய்தொழுகும் பாங்குபுரிந் தோங்குநாள்.

இவ்வாறுக சோழ அரசனின் சேனாதிபதியாகிக் கடமை புரிவதில் அரசன்
பாலாகப் பெறுகின்ற சிறப்பின் வளம் யாவற்றையும் பிறையணியும் பெருமானது
கோயில் தோறும் சுவாமிக்குத் திருவமுதாம் படி பெருகிட; தாம் தம்மிடத்து
செந்நெல்லின் மலைக்குவியலாகவே செய்து வரும் திருப்பணியே பல நெடுநாளா
கச் செய்து வரும் கடமை செய்து; அந்தப் பணியினில் ஒன்றிவரும் நாட்களில். 2

வேந்தனே வலிற்பகைஞர் வெம்முனைமேல் செல்கின்றூர்
பாந்தள்பூ ணினை அணிந்தார் தமக்கமுது படியாக
ஏந்தலார் தாமெய்து மளவும்வேண் டுஞ்செந்நெல்
வாய்த்தகூ டலைகட்டி வழிக்கொள்ளார் மொழிகின்றூர்.

அரசனுடைய ஏவலின் படி ஓர் நாள் ஓர்பகையரசருடைய கொடிய போர்
முனை மேலாகப் போரிடச் செல்பவர்; பாம்பினை ஆபரணமாக அணிந்த பெரு
மானுக்கு தாம் கொடுத்திடும் அமுதிற்கு படித்திறமான நெல்லாக; எம்பெருமான்
கோட்புலியார் தாம் போர்க்குச் சென்று திரும்பிவருமளவும் செந்நெல்லாக
வேண்டிச் சேகரிக்கப்பட்ட நெற் கூட்டினைக் கட்டி வைக்து; போருக்குச் செல்ல
வெளிப்படுபவர் இதனைச் சொல்கின்றூர். 3

தந்தமர்க் ளாயினுர் தமக்கெல்லாந் தனித்தனியே
எந்தையார்க் கமுதுபடிக் கேற்றியநெல் லிவைஅழிக்கச்
சிந்தைஆற் றுநினைவார் திருவிரையாக் கலி என்று
வந்தனையால் உரைத்தகன்றூர் மன்னவன்மாற் றூர்முனைமேல்.

தமது சுற்றமாய மனைவி முதல் யாவர்க்கும் எல்லாம் தனித்தனியே எந்தை
பெருமானுய சிவனுக்கு அமுது படைத்திட நான் சேமித்திட்ட நெல் இவற்றை
நீங்கள் எடுத்து பாவிப்பதற்கு நினைந்தால் அது உமது செல்வம் அழிவுறும் துயர
மாகும் என்று மிகு வந்தனையுடன் யாவருக்கும் சொல்லிப் போனுர் அரசனுக்காக
போரிடுகின்ற போர்க்களம் மேலாகக் கோட்புலியார். 4

மற்றவர்தாம் போயினபின் சிலநாளில் வற்காலம்
உற்றலும்அச் சுற்றத்தார் உணவின்றி இறப்பதனில்
பெற்றப்உயர்த் தவர்அமுது படிகொண்டா கிலும்பிழைத்துக்
குற்றமறப் பின்கொடுப்போம் எனக்கூடு குலைத்தழித்தார்.

கோட்புலியார் போர் முனைக்கு போன பிற்பாடு சில நாளில் வரட்சியால்
வரும் பஞ்சகாலம் வருதலும் அது கண்டு வருந்தும் சுற்றத்தார் சொல்வார்
''பஞ்சத்தால் நாம் இறப்பதனில் இடபக் கொடியினை உயர்த்திய பெருமானுரது
திருவமுதிற்கு படித்திறமாக எம் தலைவர் கோட்புலியார் சேமித்து வைத்த நெல்லை
எடுத்துக் கொண்டாகிலும் நாம் உண்டு உயிர் பிழைத்து பின்னர் வரும் வினைவில்
இதனை எடுத்திடும் குற்றம் நீங்கிடக் கொடுப்போம் என்றே கூறித்தீர்மானித்து
அந்த நெற் கூடுகளைக் குலைத்து அந்நெல்லை எடுத்து அழித்திடுவார். 5

மன்னவன்றன் தெம்முனையில் வினைவாய்த்து மற்றவன்பால்
நன்நிதியின் குவைபெற்ற நாட்டியத்தான் குடித்தலைவர்
அந்நகரில் தமர்செய்த பிழையறிந்த தறியாமே
துன்னினுர் சுற்றமெலாந் துணிப்பன் எனுந் துணிவினராய்.

இப்படியாக இவர் சிவனுக்குரிய நெல்லை எடுத்திடலும்; அரசனுடைய போர் மேலாகப் போன நாட்டியத்தான் குடி நகரின் தலைவர் கோட்புலியார் கொடிய போர்க்களத்தில் தனது செயல் வாய்த்து வெற்றி கொண்டு; மற்று அரசன் பாலாக நல்ல நிதியின் குவியல் பெற்ற அவர்; திரும்பி வருதலும்; தமது இனத்தவர் செய்த நெல் எடுத்த பிழையை அறிந்து தாம் அதனைத் தெரியாதவ போல் வந்தார் "எம்பிரானது நெல்லை எடுத்த என் சுற்றமெல்லாம் வெட்டி எ றி வேன்" என்னும் ஆதரவுடனுக. 6

எதிர்கொண்ட தமர்க்கெல்லாம் இனியமொழி பலமொழிந்து
மதிதங்கு சுடர்மணிமா ளிகையின்கண் வந்தணைந்து
பதிகொண்ட சுற்றத்தார்க் கெல்லாம்பைந் துகில்நிதியம்
அதிகந்தந் தளிப்பதனுக் கழைமின்கள் என்றுரைத்து.

ஊர் வந்து சேர தம்மை எதிர் கொண்ட சுற்றத்தவர்க்கெல்லாம் இனிய வார்த்தை பலமொழிந்து; சந்திரன் தங்கும் படியான சுடருடைய அழகிய மாளி கையினிடத்து வந்து சேர்ந்து; தமது இடத்து தங்கி வாழும் சுற்றத்தார்க்கெல்லாம் பசிய பட்டாடை பொன் அதிகமாகக் கொடுத்து உபசரிப்பதனிற்கு எல்லாரையும் இங்கு அழையுங்கள் என்று கூறி. 7

எல்லாரும் புகுந்ததற்பின் இருநிதியம் அளிப்பார்போல்
நல்லார்தம் பேரோன்முன் கடைகாக்க நாதன்றன்
வல்லானை மறுத்தமுது படிஅழித்த மறக்கிளையைக்
கொல்லாதே விடுவேனே எனக்கனன்று கொலைபுரிவார்.

எல்லாரும் அழைப்பின் பேரில் வந்து சேர்ந்த பிற்பாடு பெருநிதியம் கொடுப் பார் போல் நல்ல தன் பெயரினை உடைய ஒரு காவலன்; ஒருவரும் வெளிப்போ காது மாளிகை வாய்தலில் நின்று காத்திட; எம்பிரான் சிவன்மேல் ஆணையிட்டு நெல் எடுக்கக் கூடாது என்ற என் நாயகனது சத்தியத்தை மீறி அவர்க்குரிய அமுதின் படித்திற நெல்லை அழித்த கொடிய என் சந்ததியினரைக் கொல்லாது விடுவேனே எனக்கோபித்து எல்லாரையும் கொலை செய்வார். 8

தந்தையார் தாயார்மற் றுடன்பிறந்தார் தாரங்கள்
பந்தமார் சுற்றத்தார் பதியடியார் மதியணியும்
எந்தையார் திருப்படிமற் றுண்ணஇசைந் தார்களையும்
சிந்தவாள் கொடுதுணித்தார் தீயவினைப் பவந்துணிப்பார்.

தன் தந்தையார் தாயார் மற்றும் உடன் பிறந்தார் மனைவிமார் பந்தமுடைய சுற்றத்தார் தமது வழி அடிமைகள் இவையன்றி பிறையணிந்த எந்தை பெருமானது திருப்படி நெல்லை உண்டிட இசைவு கொண்டார் எல்லாரையும் வெட்டுண்டு சிந்த வாளால் வெட்டினர் இதனல் தீய வினையின் பாவத்தை அறவே வெட்டுவாராகிய வரானர். 9

பின்னங்குப் பிழைத்ததொரு பிள்ளையைத்தம் பெயரோன் அவ்
வன்னந்துய்த் திலதுகுடிக் கொருபுதல்வன் அருளும் என
இந்நெல்லுண் டாள்முலைப்பால் உண்ட தென எடுத்தெறிந்து
மின்னல் வடிவாளால் இருதுணியாய் விழவேற்றார்.

பின்னுக அங்கு பிழைத்திருந்த ஒரு பிள்ளையைத் தம் பெயராக இருந்ததை அந்த அன்னத்தை இப்பிள்ளை உண்ணவில்லை. குடிக்கு ஒரே ஒரு புதல்வன் இதை யாகுதல் விட்டுவைப்பீர் என்றலும். இந்தப் பிள்ளை இந்த நெல்லுண்டவளின் பால் உண்டது என அதனைத் தூக்கி எறிந்து மின்னல் ஒளிரும் கூரிய வாளைக் கீழே கொடுத்து இரு துணியாக துண்டித்து விழும்படி ஏற்றுக்கொண்டார். 10

அந்நிலையே சிவபெருமான் அன்பரெதிர் வெளியேநின் (று)
உன்னுடைய கைவாளால் உறுபாசம் அறுத்தகிளை
பொன்னுலகின் மேலுலகம் புக்கணையப் புகழோய்நீ
இந்நிலைநம் முடன்அணை கென் றேவிஎழுந் தருளினர்.

அந்த நிலையில் சிவ பெருமான் அன்பர் கோட் புலியார் முன் வெளிப்படத் தோன்றி நின்று உன்னுடைய கைவாளால் உனக்குற்ற பாசத்தை அறுத்த உனது கிளைகளானேர் பொன் உலகின் மேல் உலகம் சென்றிட; புகழுடைய நீ இந்த நிலையில் நம்முடன் அணைவாயக என்று அவ்வாறு அவரும் எம்பிரானுடன் செல்ல அருள் புரிந்து எழுந்தருளிச் சென்னூர் எம்சிவமூர்த்தி. 11

அத்தனுய் அன்னையாய் ஆருயிராய் அமிர்தாகி
முத்தனும் முதல்வன்தாள் அடைந்துகிளை முதல்தடிந்த
கொத்தலர்தார்க் கோட்புலியார் அடிவணங்கிக் கூட்டத்தில்
பத்தராய்ப் பணிவார்தம் பரிசினையாம் பகருவாம்.

தந்தையாயிகித் தாயாகி அரிய உயிராகி அமிர்தாகி முத்தி இன்பமாகி நின் றமுதல் வராகும் சிவன் திருவடிகளை அடைந்து அந்த பற்றுய உறுதியால் தனது சுற்றமாய கிளைகளை முதலோடு வெட்டிய; கொத்தாக அலர்ந்த மாலையுடைய கோட்டபுலி நாயனரது திருவடிகளை வணங்கிப் போற்றி; இப்பொது திருக்கூட் டத்து அடியவராவார்களில் பத்தராய்ப் பணிவாரது தன்மையை எடுத்து மொழி வோம். 12

கோட்புலி நாயனர் புராணம் முற்றும்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் துதி

மேவிய பெருந்தவம்யான் முன்புவிளைத் தனஎன்னே
யாவதும்ஓர் பொருளல்லா என்மனத்தும் அன்றியே
நாவலர்கா வலர்பெருகு நதிகிழிய வழிநடந்த
சேவடிப்போ தெப்போதுஞ் சென்னியினும் மலர்ந்தனவால்.

பெறுதற்கரிய பெரும் தவம் நான்முன்பு செய்தன என்னவாமோ; யாவதும் ஓர் பொருள அல்லாத என்மனத்தும் அன்றியே நாவன்மை உடைய புலவர் கட் கெல்லாம் காவலராய எம் பெருமான் சுந்தரது பெருகிய ஆறுகிழிய வழி நடந்த சிவந்ததாமரை மலர் போலும்திருவடி எப்போதும் என் உச்சி மீதும் மலர்ந்து கொண்டது

அவர் திருப்பாதமே பொருளென உணர்ந்து இப்பிறப்பில் என் சென்னிமீது கொண்டு தொழுதிட அடியேன் முற்பிறவியில் செய்த தவம் யாதோ! என்னூர். 13

பத்தராய்ப் பணிவார் சருக்கம்

பத்தராய்ப் பணிவார் புராணம்

ஈசருக்கே அன்பனுர் யாவரையுந் தாம்கண்டால்
கூசிமிகக் குதுகுதுத்துக் கொண்டாடி மனமகிழ்வுற்(று)
ஆசையினுல் ஆவின்பின் கன்றணைந்தாற் போலணைந்து
பேசுவன பணிந்தமொழி இனியனவே பேசுவார்.

ஈசனுக்கே அன்பானர் யாவரையும் தாம் கண்டு கொண்டால் கணவனைக் கண்ட மனைவிபோல் கூசி மிகவும் பரிவான அன்பு கொண்டு கொண்டாடி மனம் மகிழ்வுற்று ஆசையினுலே பசுவின் பின் அதன் கன்று சென்றூற் போல் சென்று பேசுவன பணிவான மொழிகளாய் அதுவும் இனியனவே பேசுவார் பத்தராய்ப் பணிவார் எல்லாரும். 1

தாவரிய அன்பினுற் சம்புவினை எவ்விடத்தும்
யாவர்களும் அர்ச்சிக்கும் படிகண்டால் இனிதுவந்து
பாவனையால் நோக்கினுல் பலர்காணப் பயன்பெறுவார்
மேவரிய அன்பினுல் மேலவர்க்கும் மேலானர்.

குறைவிலாத அன்பினுல் எம்பிரான் சிவனை எவ்விடத்தும் யாவர் களும் அர்ச் சிக்கும் படி கண்டால் இனிது மகிழ்ந்து தமது பாவனையாலும் அருள் நோக்கா லும் பலரும் திருவருள் பேறுகாண தாம் கண்டுபயன் பெறுவார்; இதுவன்றி அவர் அடைந்திடற்கரிய அன்பினுல் மேலவர்க்கும் மேலானவர்கள்; 2

அங்கணனை அடியாரை ஆராத காதலினுல்
பொங்கிவரும் உவகையுடன் தாம்விரும்பிப் பூசிப்பார்
பங்கயமா மலர்மேலோன் பாம்பணையான் என்வறிவர்கள்
தங்களுக்குஞ் சார்வரிய சரண்சாருந் தவ முடையார்.

நெற்றியில் கண்ணுடைய பெருமானை அவன் அடியவரை குறையாத அன் பின் காதலால் உள்ளத்துப் பொங்கி வரும் உவகையுடன் தாம் விரும்பிப் பூசிப்பார். தாமரை மலர் மேல் இருந்திடும் பிரமன்; பாம்பினைச் சயன அணையாகக் கொண் ட நராயணன் என்ற இவர்கள் தங்களுக்கும் சேர்ந்திடற் கரிய சிவனது திருவடி களைச் சாரும் தவமுடையவர். 3

யாதானும் இவ்வுடம்பாற் செய்வினைகள் ஏறுயர்த்தார்
பாதார விந்தத்தின் பாலாக எனும்பரிவால்
காதார்வெண் குழையவர்க்காம் பணிசெய்வார் கருக்குழியில்
போதார்கள் அவர்புகழ்க்குப் புவனமெலாம் போதாவால்.

யாதொன்றுயினும் இந்த உடம்பால் செய்யும் செயல்கள் இடபக்கொடியினை உயர்த்திய சிவபெருமானது பாதார விந்தத்தின் பாலாகட்டும் என்னும் அன்பி னல் திருக்காதில் ஆர்ந்து விளங்கிடும் குண்டலமுடைய பெருமானுக்காம் பணி செய்வார்கள். ஓர் தாய் வயிற்றின் கருக்குழியில் இனி பிறந்திடப் போகார்கள் பத்தராய்ப் பணிவார்கள். அவரது புகழினிற்கு இந்த உலகமேல்லாம் ஈடாகிடப் போதாது. 4

சங்கரனைச் சார்ந்தகதை தான்கேட்குந் தன்மையராய்
அங்கணனை மிகவிரும்பி அயலறியா அன்பினுல்
கங்கைநதி மதிஇதழி காதலிக்குந் திருமுடியார்
செங்கமல மலர்ப்பாதஞ் சேர்வதனுக் குரியார்கள்.

சிவபெருமானைச் சார்ந்த கதைகள் தான் கேட்டிடும் தன்மை உடைய வராய் நெற்றியில் கண்ணுடைய பெருமானை மிகவும் விரும்பி: அயல் வேறு எதனினும் பற்றுத அன்பினுல் கங்கையாற்றையும் பிறையையும் கொன்றையையும் காதலித்து அணியும் திருமுடி உடைய சிவபெருமானது செந்தாமரை மலர் போன்ற திருப் பாதம் சேர்வதற்கு உரிமை உடையவர்களாயினர். 5

ஈசனையே பணிந்துருகி இன்பமிகக் களிப்பெய்திப்
பேசினவாய் தழுதழுப்பக் கண்ணீரின் பெருந்தாரை
மாசிலா நீறழித்தங் கருவிதர மயிர்சிலிப்பக்
கூசியே உடல்கம்பித் திடுவார் மெய்க் குணமிக்கார்.

எம்பெருமான் சிவனை பணிந்து அன்பினுல் உருகி இன்பம் மிகக் கொண்டு களிப்படைந்து; அந்த சிவானந்தப் பெருக்கால் பேசின வாய் தழுதழுத்திட; கண்ணீரின் பெரும் தாமரை பெருகி வடிந்து தமது மேனிமேல் பூசிய மாசிலாத தருநீற்றை அழித்து அருவிபோல் சொரிய; உரோமம் சிலிர்ப்பக் கூச்செறிந்து உடல் சிலிர்த்துக் கொள்வார்கள். இவர்கள் இத்தகையால் பத்தியின் குணம் மிக் குள்ளவர்கள். 6

நின்றுலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும்
மென்றுலும் துயின்றுலும் விழித்தாலும் இமைத்தாலும்
மன்றுடும் மலர்ப்பாதம் ஒருகாலும் மறவாமை
குன்றுத உணர்வுடையார் தொண்டராம் குணமிக்கார்

தாம் நின்றுலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும் உண்டாலும் உறங் கினுலும் விழித்தாலும் கண்முடினுலும் கனகசபையில் ஆடியருளும் மலர்ப்பாதம் ஒருகாலும் மறவாத உணர்வுடமை குன்றுத உணர்வுடையார்கள் அடியார்களா கும் குணத்தில் மிகுந்த பத்தராய்ப் பணிவாராகும் இவர். 7

சங்கரனுக் காளான தவங்காட்டித் தாமதனுல்
பங்கமறப் பயன் துய்யார் படிவிளக்கும் பெருமையினுர்
அங்கணனைத் திருவாரூர் ஆள்வானை அடிவணங்கிப்
பொங்கிளழுஞ் சித்தமுடன் பத்தராய்ப் போற்றுவார்.

சிவன் ஒருவனுக்கே ஆளாகிய தவத்தினைக் காண்பித்து தாம் அந்த தவத்தின் பெருமையால் ஏதும் குறைகள் இலாது பயன் பெற்றிடுவார். இப்பூமியை எப் பொழுதும் தீங்கின்றி வாழ்ந்திட விளக்கும் பெருமையினை உடையவர். நெற்றியிற் கண்ணுடைய சிவனை திருவாரூர் நகராளும் சோதியைத் திருவடி வணங்கி உள் ளத்துப் பொங்கி எழும் சித்தமுடன் சிவபெருமானைப் பத்தராய் போற்றும் திருக் கூட்டத்தில் சேர்ந்த இவர்.
இவர்கள் ஒரு காலத்து உள்வர் அன்று. நீட உலகில் எக்காலமும் தோன்றுபவர் ஆதலின் இவரது குறிகுணங்கள் இவ்வண்ணமானவை எனமொழிந்திடப்பெற்றது அவ்வாருன தொகைப்பட்ட யாவரையும் நாம் வணங்குவோம். 8

பத்தராய்ப் பணிவார் புராணம் முற்றும்.

பரமனையே பாடுவார் புராணம்

புரமூன்றுஞ் செற்றுனைப் பூணுகம் அணிந்தானை
உரனில்வரும் ஒருபொருளை உலகனைத்தும் ஆனுனைக்
கரணங்கள் காணுமல் கண்ணுர்ந்து நிறைந்தானைப்
பரமனையே பாடுவார் தம்பெருமை பாடுவாம்.

உலகமும் தேவரும் உய்ந்திட முப்புரங்களையும் எரித்த பெருமானை ஆபரண மாக நாகபாம்பினை அணிந்தானை ஞானமுதிர்ச்சியின் கலங்காத சித்தத்தின்திடத் தில் வரும் சோதியாய ஒரு பொருளை உலகம் எல்லாமே தான் ஒருவனுகி நிற்ப வனை எமது அந்தக் கரணங்கள் புறக்கரணங்கள் யாவுமே காணமுடியாதபடி; காணும் கண்ணிற் கலந்து நிறைந்தானை. எம் ஈசனை சிவனை பாடுகின்றஅடியார் பெருமையை நாம் பாடுவோம். 1

தென்றமிழும் வடகலையும் தேசிகமும் பேசுவன
மன்றினிடை நடம்புரியும் வள்ளலையே பொருளாக
ஒன்றியமெய் யுணர்வோடும் உள்ளுருகிப் பாடுவார்
பன்றியுடன் புட்காணப் பரமனையே பாடுவார்.

தென் நாட்டின் தமிழானதும்; வடதேசத்து ஆரியக்கலையும் இவையன்றி பிற தேசத்து வழங்கு கின்ற மொழிகளின் கலையும் கடவுள் என்று பேசுவன கனக சபையில் நடனம் செய்கின்ற அருள்வள்ளலாய சிவனையே பொருளாக. அவ்வாறு காண்டற் கரிய கடவுளை கனகசபேசனை உள்ளம் உருகிப்பாடுவார் எந்த ஒரு மொ ழியினராயினும் பன்றியாய திருமாலும் அன்னப் பறவையாய பிரமனும் தேடி யும் தெரிந்திடாத பரம் பொருளாம் சோதியையே பாடுகின்றவர்.
பரமனைப் பாடுவார் அவர் எம் மொழியிலா குதல் உண்மைவழி உள்ளுருகியே பாடுவார்கள். அந்த உருக்கமுடன் மொழிந்தவர் யாவரையும் நாம் வணங்கிரும்;

பரமனையே பாடுவார் புராணம் முற்றும். 2

சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார் புராணம்

காரணபங் கயம்ஐந்தின் கடவுளர்தம் பதங்கடந்து
பூரணமெய்ப் பரஞ்சோதி பொலிந்நிலங்கு நாகாந்தத்
தாரணையாற் சிவத்தடைந்த சித்தத்தார் தனிமன்றுள்
ஆரணகாரணக்கூத்தர் அடித்தொண்டின் வழியடைந்தார்.

படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்னும் எவற்றிற்கும் காரணமாய அகத் தாமரை ஆசனங்கள் ஐந்தில் இருப்பிடம் கொண்ட கடவுள ராகும் பிரமன் திருமால் உருத்திரன் மகேசுரன் சதாசிவன் என்னும் அதிதெய் வங்களின் பதந்தினையும் கடந்து (தொன்னூற்றுறு தத்து வங்களையும் கடந்து)

அப்பால் சென்றுல் முடிவு கூறமுடியாத பெரும் சோதியாய் பொலிந்திருக்கும் எல்லையை; நாதங்களின் (ஓசைகளின்) முடிலிடமாய அதனே மூலாதகாரத்து அங்கியினே மேலெழுப்பும் தாரணே (யோகம்) யால் சென்று சிவத்தை அடைந்தசித்தர்கள். அவர்கள் தனியான கனகசபையில் வேத காரணராய கூத்தப் பெருமானது திருவடித்தொண்டின் வழிஅடைந்து கொண்டவர். அவரை நாம் வணங்குவோம். 1

பரமனேயே பாடுவார் புராணம் முற்றும்

திருவாரூர்ப் பிறந்தார் புராணம்

அருவாகி உருவாகி அனேத்துமாய் நின்றபிரான்
மருவாருங் குழலுமையாள் மணவாளன் மகிழ்ந்தருளும்
திருவாரூர்ப் பிறந்தார்கள் திருத்தொண்டு தெரிந்துணர
ஒருவாயால் சிறியேனுல் உரைக்கலாந் தகைமையதோ.

அருவமாகியும் உருவமாகியும் அனேத்துப் பொருளுமாகியும் நின்ற பெருமான்; வாசனே உடை கூந்தல் உடையவளாகும் உமையம்மையாரின் கணவன்; மகிழ்ந்து வீற்றிருந்தருளும் திருவாரூரில் பிறந்தார் களுடைய திருதொண்டைத் தெரிந்து; நீங்கள் உணர்வதற்கு ஒருவாயால் சிறியேனுய என்னுல் சொல்லும் படியாம் தன்மை உடையாதோ? அது முடியாது. 1

திருக்கயிலே வீற்றிருந்த சிவபெருமான் திருக்கணத்தார்
பெருக்கியசீர்த் திருவாரூர்ப் பிறந்தார்கள் ஆதலினுல்
தருக்கியஐம் பொறிஅடக்கி மற்றவர்தந் தாள்வணங்கி
ஒருக்கியநெஞ் சுடையவர்க்கே அணித்தாகும் உயர் நெறியே.

திருக்கைலாய மலேயில் வீற்றிருந்த சிவபெருமானது திருக்கணத்தார்களே பெருக்கமான சிறப்புடைய திருவாரூரில் வந்து பிறந்தார்கள் ஆதலாலே தம்மை அகங்காரம் கொண்டிட வைக்கும் பஞ்சப் புலன்களேயும் அடக்கி அந்த திருவாரூர் பிறந்தார்களின் திருவடிகளே வணங்கி ஒருமைப்பாடு கொள்ளும் நெஞ்சு உடையவர்க்குத் தான் கிட்டவாக வந்து சேரும் உயர்ந்த நெறியானது. அவர் திருவடிகட்கு யாம் வணக்கம். 1

திருவாரூர்ப் பிறந்தார் புராணம் முற்றும்.

முப்போதும் திருமேனி தீண்டுவார் புராணம்

எப்போதும் இனியபிரான் இன்னருளால் அதிகரித்து
மெய்ப்போத நெறிவந்த விதிமுறைமை வழுவாமே
அப்போதைக் கப்போதும் ஆர்வமிதும் அன்பினராய்
முப்போதும் அர்ச்சிப்பார் முதற்சைவ ராம்முனிவர்.

எப்போதும் இனிய பெருமானது நல்அருளால் அதிகரிக்கப் பெற்று உண்மையாம் ஞான நெறி வந்த விதிமுறையில் வழுவாது: அப்போதைக்கு அப்போதில் உள்ளத்துப் பெருகும் ஆர்வம் மிகுந்திடப் பெறும் அன்புடையவராய் மூன்று காலமும் எம்பெருமான் சிவனே அருச்சிப்பவர் அவர் தாம் முதன்மை பெற்ற சைவர் என்னும் முனிவர்களாவர். 1

தெரிந்துணரின் முப்போதுஞ் செல்காலம் நிகழ்காலம்
வருங்கால மானவற்றின் வழிவழியே திருத்தொண்டின்
விரும்பியஅர்ச் சனேகள்சிவ வேதியர்க்கே உரியன அப்
பெருந்தகையார் குலப்பெருமை யாம்புகழும் பெற்றியதோ?.

நாம் தெரிந்து உணர்வதனுல் முப்போதும் என்பது சென்ற காலம் நிகழும் காலம் வரும் காலம் ஆன எக்காலமும் திருத்தொண்டினுல் விரும்பப் பெறும் அர்ச்சனேகள் சிவ அந்தணர்க்கே உரியன; அந்த பெரும் தகையாரின் குலப்பெருமையை யாம் புகழ்ந்து பாடும் படியான அளவினதோ? ஆகாது. 2

நாரணற்கும் நான்முகற்கும் அறிய ஒண்ணு நாதனே எம்பெருமானேஞான மான, ஆரணத்தின் உட்பொருள் கள் அனேத்து மாகும் அண்ணலே எண் ணியகாலம் மூன்றும் அன்பின், காரணத்தால் அர்ச்சிக்கும் மறையோர் தங்கள் கமலமலர்க் கழல்வணங்கிக் கசிந்தசிந்தைப், பூரணத்தால் முழுநீறுபூசி வாழும் புனிதர்செயல் அறிந்தவா புகல லுற்றேன்.

நாராயணக் கடவுளுக்கும் நான்கு முகமுடைய பிரமதேவனுக்கும் அறியமுடியாத கடவுளே எம்பெருமானே ஞானமான வேதங்களின் உட்பொருளாய அனேத்து மாகும் தலேவனே நாம் எண்ணிய காலங்கள் மூன்றிலும் அன்பின் காரணத்தால் அர்ச்சிக்கும் வேத அந்தணர் தங்களுடைய தாமரை போலும் திருவடிகள் பணிந்து சிந்தை கசிந்து உண்மைவிளேவின் பூரணத்தினுல் முழு நீற்றைப் பூசி வாழுகின்ற பற்றெல்லாம் கடந்த புனிதராம் அடியார்கள் செய்கையை அறிந்தவாறு சொல்லலுற்றேன். 3

முப்போதும் திருமேனி தீண்டுவார் புராணம் முற்றும்

முழுநீறு பூசிய முனிவர் புராணம்

ஆதார பாயனேத்தும் ஆகிநின்ற அங்கணன்எம் பெருமான் நீர்அணிந்த வேணிக், காதார்வெண் திருக்குழை யான் அருளிச் செய்த கற்பம் அநுகற்பம்உப கற்பந் தானும், ஆகாதென் றங்துரைத்த அகற்பம் நீங்கிஆ மென்று முன்மொழிந்த மூன்று பேதம், மோகாதி குற்றங்கள் அறுக்கும் நீற்றை மொழிவதுநம் இருவினேகள் கழிவதாக.

யாவற்றிற்கும் ஆதாரமாய் தானே யாவுமாகி நின்ற நெற்றியிற் கண்உடைய எம்பெருமான்; கங்கை நீர் அணிந்த சடையுடன் திருக்காதில் ஆர்ந்து விளங்கும் வெண்மை நிறமுடைய தோடணிந்த சிவபெருமான் அருளிச் செய்த; கற்பம் அநுகற்பம்; உபகற்பம் என்னும் திருநீற்றின் வகையில் இவை ஆகாது என அங்ஙு ஆகமத்து மொழிந்ததருளிய அகற்பம் என்னும் வகையை நீக்கி இவையே நல்லதாகும் என்று முன் மொழியப் பெற்ற மூன்று வகையான மோகாதி குற்றங்கள் அறுக்கும் திருநீற்றை மொழிவதாம் இதனுல் நமது பெருவினேகள் கழிந்து போவதாக: 1

அம்பலத்தே உலகுய்ய ஆடும் அண்ணல்உவந்தாடும் அஞ்சினேயும் அளித்த ஆக்கள், இம்பர்மிசை அநாமயமாய் இருந்த போதில் ஈன்றணிய கோமயமந் திரத்தினுல் ஏற்(று), உம்பர் தொழ எழுஞ்சிவமந்திரஓ மத்தால் உற்பவித்த சிவாங்கிதனில் உணர்வுக்கெட்டா, எம்பெருமான் கழல்நினேந் தங் கிட்ட தூநீறிது கற்பம் என்றெடுத்திங் கேத்த லாகும்.

தில்லே அம்பலத்தே உலகம் உய்ந்திட ஆடுகின்ற அண்ணல் சிவன் உவந்து திருமஞ்சனமாடுகின்ற கோசலம் கோமயம் பால் தயிர் என்ற ஐந்து பொருளினேயும் கொடுத்த பசுக்கள் இந்த உலகத்து நோயில்லாத வகையாக இருந்த நேரத்தில் கன்று ஈன்று அணிமையாக உள்ள காலத்தில் அப்பசு போடும் சாணத்தை அதற்குரிய சத்தியோசாத மந்திரம் சொல்லி ஏற்று; தேவர் தொழ எழுகின்ற: சிவ மந்திரங்கள் மொழிந்து உண்டாக்கப்பட்ட சிவாக்கினியில்; உணர்விற்கெட்டாத எம பெருமானது திருவடிகள் நினேந்து அங்கு இட்ட சாண உருண்டையால் பெற்ற தூய நீறு இதுவே கற்பம் என்று நாம் எடுத்து இங்கு போற்றலாகும். 2

ஆரணியத் துலர்ந்தகோ மயத்தைக் கைக்கொண் டழகுற நுண்பொடியாக்கி ஆவின் சுத்த, நீரணிவித் தத்தரமந் திரத்தினுலே நிசயமுறப் பிடித்தோம நெருப்பில் இட்டுச், சீரணியும் படிவெந்து கொண்ட செல்வத் திருநீரும் அநுகற்பம் தில்லே மன்றுள், வாரணியும் முலேயுமையாள் காண ஆடும் மாணிக்கக் கூத்தர் மொழிவாய்மை யாலே.

காட்டிடத்தே வரண்டு காய்ந்த கோமயத்தை கையில் எடுத்து அதனே அழகு பெறநுண்ணிய பொடியாக்கி பசுவின் சுத்த சலம விடுத்து அத்தர மந்திரம்மொழிந்து உருண்டையாகப் பிடித்து ஓமத்தியில் இட்டு சீர் கொள்ளும்படி வெந்து கொண்ட செல்வத்திரு நீறு அதுவே அநுகற்பம் எனப்படும். இவை தில்லேயம பலத்துள் வார் பூட்டிய முலே உடைய உமையம்மை காண ஆடும் மாணிக்கக் கூத்தருடைய திருவாக்கின் வேத மொழியால் தெரிந்தபடி. 3

அடவிபடும் ஆங்கியினுல் வெந்த நீறும் ஆனிலைகள் அனல் தொடக்க வெந்த நீறும், இடவகைகள் எரிகொளுவ வெந்த நீறும் இட்டிகைகள் சுட்டெரி பட்ட நீறும், உடனன்றி வெவ்வேறே ஆவின் நீரால் உரைதிகழ மந்திரங் கொண்(டு) உண்டையாக்கி, மடமதனில் பொலிந்திருந் தசிவாங்கி தன்னுல் வெந்ததுமற்(று) உபகற்பம் மரபிற் ஆகும்.

பசுக்கள் மேயும் காடு எரிய அதனிடத்து வெந்திட்ட நீறும் பசுவின் தொழு வங்கள் நெருப்பெரிய வெந்த நீறும் பசுக்கள் நின்ற இடவகைகள் நெருப்பெரிய வெந்த நீறும் செங்கல்லுகள் சுட்டபோது எரிபட்ட நீறும் இவையை ஒன்றுக்காது வெவ்வேறுக தனித்தெடுத்து பசுவின் சலத்தால் சிறப்பு மொழிதிகழும் மந்திரம் கொண்டு உருண்டையாக்கி திருமடங்களில் வளர்க்கப் பெற்று பொலிந்திருந்த சிவாக்கினியில் இட்டு வெந்திடப் பெற்ற நீறு உபகற்பம் என்னும் வகையைச் சேர்ந்ததாகும். 4

இந்தவகை யால்அமைத்த நீறுகொண்டே இருநிறமுஞ் சுத்திவரத் தெறித்தபின்னர், அந்தமிலா அரன் அங்கிஆறு மெய்ம்மை அறிவித்த குரு நன்மை அல்லாப் பூமி, முந்த எதிர் அணியாதே அணியும் பாதது முழு வதுமெய்ப் புண்டரஞ்சந் திரனிற் பாதி, நந்திஎரி தீபநிகழ் வட்டமாக நாதனடியார் அணிவர் நன்மை யாலே.

இந்த வகையால் அமைத்த திருநீறு கொண்டே அகம் புறம் என்னும் இரு நிறத்தும் சுத்தம் வரும்படி பாவித்து நிருதி மூலையிலே ஒரு சுண்டு விரலால் தெறித்த பிற்பாடு; முடிவிலாத கடவுள் சிவன் அக்கினி ஆறு உண்மை போதித்த குரு நன்மையில்லாத பூமி இவற்றின் முன்பு நின்று அணியாது; மற்றிடத்தில் அணியும் போது மேனி முழுவதும் மூன்று குறியாகவும் பாதிச்சந்திரன் போலவும் சுடரும் தீபம் போலவும் திகழும் வட்டமாகவும் சிவபிரானுடைய அடியார்கள் திருநீற்றை அணிவார்கள். 5

சாதியினில் தலியான தரும சீலர் தத்துவத்தின் நெறியுணர்ந்தோர் தங் கள் கொள்கை, நீதியினிற் பிழையாது நெறியில் நிற்போர் நித்தநிபமந்து நிகழ் அங்கி தன்னில், பூதியினைப் புதியபா சனத்துக்கொண்டு புலியதளின் உடை யானைப் போற்றி நீற்றை, ஆதிவரு மும்மலமும் அறுத்த வாய்மை அருமுனிவர் முழுவதுமெய் அணிவரன்றே.

சாதியினில் தலைமை ஒழுக்கமுடைய தருமசீலரும் தத்துவங்களின் நெறிகளை உணர்ந்தோரும் தங்கள் கொள்கை நீதியினில் பிழையாது நல்நெறியில் நிற்போரும் நித்திய தமது நியம அனுட்டானத்து செய்கின்ற அக்கினியில் பெறுகின்ற நீற்றை புதிய பாத்திரத்தில் ஏந்திக் கொண்டு; புலித்தோலாடையாக உடைய கடவுளைப் போற்றி: திருநீற்றை எடுத்து முன்னுகத் தொடர்ந்து வரும் மூன்று வகை மலங்களும் அறுத்த வாய்மை உடைய அரிய முனிவர் தம்மேனி முழுவதும் அணிவார்கள். இது முழு நீறுபூசிய முனிவரையும் நீற்றையும் வணங்கியவாறு 6

முழு நீறு பூசிய முனிவர் புராணம் முற்றும்

அப்பாலும் அடிச்சார்ந்தார் புராணம்

மூவேந்தர் தமிழ்வழங்கு நாட்டுக்கப்பால்முதல்வனுர்அடிச்சார்ந்த முறை மையோரும், நாவேய்ந்த திருத்தொண்டத் தொகையிற் கூறும்நற்றொண் டர் காலத்து முன்னும் பின்னும், பூவேய்ந்த செஞ்சடைமேல் அடம்புதும் பை புதியமதி நதி இதழி பொருந்த வைத்த, சேவேந்து வெல்கொடியான் அடிச் சார்ந் தாரும் செப்பியஅப் பாலும் அடிச்சார்ந்தார் தாமே.

சேர சோழ பாண்டியர் என்னும் மூன்று அரசருடைய தமிழ் வழங்கப்படும் நாட்டிற்கு அப்பால் உள்ள நாடுகளில் முதல்வன் சிவன் திருவடிகள் சேர்ந்த முறைமை உடையவரும்; நாவிற்கு பொருத்தமாக உள்ள திருத்தொண்டத் தொகை யிற் கூறும் நல்ல அடியவர் காலத்து முன்னுக உள்ள அடியவரும்; பின்னுக உள்ள

அடியவருமாக: பூ வேய்ந்த நெடிய திருச்சடைமீது அடப்பமலரும் தும்பைமலரும் புதிய இளம்பிறையும் கங்கையும் கொன்றையும் பொருந்தும்படி வைத்த; இடபக் கொடி ஏந்திய வெற்றிக் கொடியுடைய சிவபெருமானது திருவடிகளைப் பற்றுகச் சேர்ந்தார்கள் அவர்கள் தான் அப்பாலும் அடிச்சார்ந்தார்கள் என மொழியப் பட்டவராகும். அவர்கட்கு நாம் வணக்கம் 1

அப்பாலும் அடிச்சார்ந்தார் புராணம் முற்றும்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் துதி

செற்றூர்த்புரமெரித்தசிலையார்செல்வத் திருமுருகன்பூண்டியினிற்செல் லும் போதில், சுற்றுநஞ் சிலவேடர் கவர்ந்து கொண்ட தொகுநிதியின் பரப்பெல்லாஞ் சுமந்து கொண்டு, முற்றுத முலையுமையாள் பாகன்பூத முதற் கணமே உடன்செல்ல முடியாப் பேறு, பெற்றூர்தங் கழல் பரவ அடி யேன் முன்னைப் பிறவியினிற் செய்ததவம் பெரிய வாமே.

பகைவரது முப்புரம் எரிசெய்த வில்லுடைய சிவபெருமான் எழுந்தருளியிருந்த திருமுருகன் பூண்டித்தலத்தினிடம் செல்கின்ற நேரத்தில்; சுற்றி நின்று ஆர்த்து வில்வேடர் பறித்தெடுத்துக் கொண்ட பெரும்தொகையான நிதியின் பொதிகள் யாவையும் சுமந்து கொண்டு முற்றுத முலையுடைய உமையம்மை யார் பாகத்தமர் ந்த எம்பெருமான் சிவனது பூதப்படைகளின் முதன்மை உடைய கணங்களே தம்முடன் சென்றிடும் படியான அருளின் முடியாத பேறு பெற்ற சுந்தர மூர்த்தி சுவாமிகளது திருவடிகளைப் பாடலால் போற்றிட அடியேன் முன்னைப்பிறவியினிற் செய்த தவம் பெரியவாமே. 1

மன்னியசீர்ச் சருக்கம்

பூசலார் நாயனுர் புராணம்

அன்றினுர் புரமெரித்தார்க் காலயம் எடுக்க எண்ணி
ஒன்றும்அங் குதவா தாக உணர்வினுல் எடுக்குந் தன்மை
நன்றென மனத்தி னுலே நல்லஆ லயந்தான் செய்த
நின்றஊர்ப் பூசலார்தம் நிலைவினை உரைக்க லுற்றும்.

பகைமை உடையாரது முப்புரங்களையும் எரித்தருளிய எம்பெருமான் சிவனுக்கு ஆலயம் ஒன்றினைக் கட்டிட எண்ணியபோது அந்தச் செய்கைக்கு தன்னிடத்து ஒரு பொருளும் அங்கு உதவாது போதலும்; தன் மனதில் தனது சங்கற்ப உணர்வினுல் ஓர் ஆலயத்தை உண்டாக்குதல் நன்று என்று தன் மனத்தினுலே நல்ல தொரு ஆலயம் செய்து கொண்ட திருநின்ற ஊரில் வந்து அவதரித்த பூசலார் நாயனுரது நிலைவினை நாம் எடுத்து மொழிதலுற்றோம். 1

உலகினில் ஒழுக்கம் என்றும் உயர்பெருந் தொண்டை நாட்டு
நலமிகு சிறப்பின் மிக்க நான்மறை விளங்கு மூதூர்
குலமுதற் சீலம் என்றுங் குறைவிலா மறையோர் கொள்கை
நிலவிய செல்வம் மல்கி நிகழ்திரு நின்ற ஊராம்.

உலகினில் ஒழுக்கம் என்றும் உயர்கின்ற பெரும் தொண்டை நாட்டினிலே நலங்கள் மிகும் சிறப்பு வாய்ந்த நான்கு வேதங்களும் விளங்கும் முதிய ஊர் ஒன்று; அதுதான் தமது குலத்திற்குரிய முதன்மையான சீலங்கள் என்றும் குறை விலாது ஒழுகிவரும் அந்தணர்களது கொள்கை நிலவிய செல்வம் பெருகி நிகழும் திரு நின்ற ஊராகும். 2

அருமறை மரபு வாழ அப்பதி வந்து சிந்தை
தருமுணர் வான எல்லாந் தம்பிரான் கழல்மேற் சார
வருநெறி மாறு அன்பு வளர்ந்தெழ வளர்ந்து வாய்மைப்
பொருள்பெறு வேத நீதிக் கலையுணர் பொலிவின் மிக்கார்.

அரிய வேதங்களின் மரபு வாழ அந்தத் திரு நின்றஊரில் வந்து அவதரித்து தனது சிந்தை தருகின்ற உணர்ச்சி எல்லாம் தனது பெருமான் சிவன் திருவடி மேல் பற்றுகிட வருகின்ற ஒழுக்கத்து; மாறிலாத அன்பு வளர்ந்து எழ; வளர்ந்து உண்மைப் பொருளைப் பெறுகின்ற வேத நீதியின் கலைகளை உணரும் பொலிவின் மிகுந்துள்ளார் பூசலார் என்னும் அந்தணர். 3

அடுப்பது சிவன்பால் அன்பர்க் காம்பணி செய்தல் என்றே
கொடுப்பதெவ் வகையுந்தோடி அவர்கொளக் கொடுத்துங் கங்கை
மடுப்பொதி வேணி ஐயர் மகிழ்ந்துறை வதற்கோர் கோயில்
எடுப்பது மனத்துக் கொண்டார் இருநிதி இன்மை எண்ணுர்.

எமக்குப் பொருத்தமான தொழில் சிவன் பால் அன்புடையார்க்கு ஏற்றதான பணிவிடை செய்தல் என்று; அவர்க்குக் கொடுத்திடும் பொருள்கள் எவ்வகையும் தேடி; அடியார் அவர்கள் பெறும்படி கொடுத்து: இதுவன்றி கங்கையாறு பொதிந்த சடையுடைய எம் ஐயர்க்கு மகிழ்ந்து இருந்திடும்படி ஓர் கோயில் கட்டிட தனது மனத்துட் கொண்டார் பூசலார் நாயனுர்; ஆனல் அதற்கு தன்னிடதது பெரும் செல்வம் இல்லாமையை எண்ணினுரல்லர். 4

மனத்தினுற் கருதி எங்கும் மாநிதி வருந்தித்தேடி
எனைத்தும்ஓர் பொருட்பே றின்றிஎன்செய்கேன் என்று நைவார்
நினைப்பினுல்எடுக்க நேர்ந்து நிகழ்வுறு நிதிய மெல்லாம்
நினைத்துணை முதலாத் தேடிச் சிந்தையால் திரட்டிக் கொண்டார்.

இதை மனத்தில் எண்ணி கோயில் கட்டுவதற்கு எங்கும பெரும் நிதிவருந்தித் தேடினலும் அத்தேட்டங்களால் எத்துணையும ஓர் பொருள் பேறிலாது போயிட; நான் இனி என்ன செய்வேன் என்று வருந்திடும் அவர் இந்த ஆலயத்தை எனது மனநினைப்பினுல் எடுப்பேன் என்று திடம்கொண்டு கோயில் உண்டாக்கிடற்கு நிதியம் யாவையும் நினைத்துணையளவில் முதலாகக் கொண்டு தேடி சிந்தையால் கற்பித்துத் திரட்டிக் கொண்டார். 5

சாதனத் தோடு தச்சர் தம்மையும் மனத்தால் தேடி
நாதனுக் கால யஞ்செய் நலம்பெறு நன்னுட் கொண்டே
ஆதரித் தாக மத்தால் அடிநிலை பாரித் தன்பால்
காதலிற் கங்குற் போதுங் கண்படா தெடுக்க லுற்றூர்.

பொருள் கொண்டு கோயில் கட்டிடற்குரிய சாதனங்களோடு தச்சரையும் தம் மனத்தால் கற்பித்துத் தேடி தன் நாதனுக்கு ஆலயம் அத்திவாரமிடற்கு நலம் பெற்ற நன்நாள் கொண்டு உள்ளத்து ஆதரவுடன் ஆகம விதிப்பிரகாரம் அத்திவாரம் இட்டு பின்னுக அன்பினுல் கொண்ட விருப்பால் இரவில் நித்திரையும் செய்யாது மனத்தின் நினைப்பினுல் கோயில் கட்டுகின்றூர் பூசலார் நாயனுர். 6

அடிமுதல் உபானம் ஆதி யாகிய படைக ளெல்லாம்
வடிவுறுந் தொழில்கள் முற்ற மனத்தினுல் வகுத்து மான
முடிவுறு சிகரந் தானும் முன்னிய முழத்திற் கொண்டு
நெடிதுநாள் கூடக்கோயில் நிரம்பிட நினைவாற் செய்தார்.

அடி வரிமுதல் உபானம் ஆதியாய வரிகளாக வரும் அடுக்குகள் எல்லா வற்றையும் அந்த அந்த வரிசைகளில் பொருந்திய வடிவுறும் தொழில்களும் முடிவுற மனத்தினுல் வகுத்து விமானத்தன் முடிவில் வரும் சிகரத்தினையும் அவைக்குற்ற ஆகமம் சொல்லிய முழத்தின் அளவில் கொண்டு நெடிது நாள் சென்றிட மனநினைப் பால் கோயில் கட்டிப்பூர்த்தியாகிடச் செய்தார்;
கோயில் கட்ட எடுக்கும் காலம் எவ்வளவாயிடுமோ அவ்வளவும் தனது நினைவி னுலே அப்படி அப்படி மனதால் நினைந்தே செய்து பூர்த்தியாக்கினுர். 7

தூபியும் நட்டுமிக்க சுதையுநல் வினையுஞ் செய்து
கூவலும் அமைத்து மாடு கோயில்சூழ் மதிலும் போக்கி
வாவியுந் தொட்டு மற்றும் வேண்டுவ வகுத்து மன்னுந்
தாபரஞ் சிவனுக் கேற்க விதித்தநாள் சாரு நாளில்.

தமது மனத்தால் செய்த கோயிலினிற்குத் தூபியும் நட்டு மிகுந்த சுண்ணும் புச் சாத்தும் அழகு பெற மனதால் நினைந்து பூசி: கிணறும் மனதால் நினைந்து தோண்டி பக்கராக கோயிலினைச் சூழும் மதிலும் கட்டி: குளமும் தோண்டி மற் றும் வேண்டிய பொருள் எல்லாம வகுத்து அவை அவை உண்மையாம் படி நிகழ் வது போல மனதால கற்பித்து முடித்த பின்பு சிவன் அமர்ந்தருள எற்ப சிவலி ங்கமும் தாபித்திட விதிப்படியான நாள் சேர்கின்ற நாளில். 8

காடவர் கோமான் கச்சிக் கற்றளி எடுத்து முற்ற
மாடெலாஞ் சிவனுக் காகப் பெருஞ்செல்வம் வகுத்தல் செய்வான்
நாடமா றறியா தாரைத் தாபிக்கும் அந்நாள் முன்னுள்
ஏடலர் கொன்றை வேய்ந்தார் இரவிடைக் கனவி லெய்தி.

அந்த நாளில் காடவர் தலைவனன பல்லவச் சோழ அரசனும் காஞ்சியில் கல்லினுல் எம்பிராற்கு கோயில் எடுப்பித்து அதன்புறமெலாம் முழுவதும் சிவனுக் காகவே பெரும் செல்வம் வகுத்து நியமிக்கின்றவன்; நாடியும் திருமால் இன்ன மும் அறிய முடியாத எம்பெருமானுரை தனது ஆலயத்துள் தாபித்திடும் அந்த நாளின் முன்னுன நாளில்; நல்ல இதள் அலர்ந்த கொன்றைப்பூச் சூடினுர் சிவன் இராக் காலத்து அவன் கனவில் தோன்றி. 9

நின்றவூர்ப் பூசல் அன்பன் நெடிதுநாள் நினைந்து செய்த
நன்றுநீ டாலயத்து நாளைநாம் புகுவோம்; நீ இங்(கு)
ஒன்றிய செயலை நாளை ஒழிந்துபின் கொள் வாய் என்று
கொன்றைவார் சடையார்தொண்டர் கோயில்கொண்டருளப்போந்தார்.

அரசனை நோக்கி; ''திருநின்ற ஊரில் பூசலான் என்னும் என் அன்பன் நெடிது நாளாக நினைந்து செய்த நன்றுடன் நீண்ட பெரு ஆலயத்து நாளை நாம்போ வோம். நீ இங்கு எம்மைத் தாபிக்க; நாளை எடுத்துக் கொண்ட செயலை நாளை விடுத்து பின்னர்க் கொண்டிடுவாய்,, என்று மொழிந்தருளி கொன்றை மாலை வேய்ந்த சடையுடைய கடவுள் தொண்டர் பூசலார் செய்தருளிய மனக் கோயில் இடம் கொண்டருளப் போயினர். 10

தொண்டரை விளக்கத் தூயோன் அருள்செயத் துயிலை நீங்கித்
திண்டிறல் மன்னன் அந்தத் திருப்பணி செய்தார் தம்மைக்
கண்டுநான் வணங்க வேண்டும் என்றெழுங் காத லோடும்
தண்டலைச் சூழல் சூழ்ந்த நின்றவூர் வந்து சார்ந்தான்.

எமது தொண்டர் பூசலாரின் அன்பினை விளக்கிடச் செய்ய; தூபவரான எம் பெருமான் அருள் செய்திடலும் திண்மையின் திறலுடைய அரசன் நித்திரை நீங்கி எழுந்து; கனவில் கேட்டது நினைந்து அந்தக் கோயில் திருப்பணிசெய்த பெரிய வரைக் கண்டு நான் வணங்க வேண்டும் என்று உள்ளத்து எழுகின்ற காதலுடன் குளிர்ந்த பெரும் சோலை சூழ்ந்த திருநின்றவூரை வந்து சேர்ந்தான். 11

அப்பதி அணைந்து பூசல் அன்பர்இங் கமைத்த கோயில்
எம்புடையது? என் றங்கண் எய்தினுர் தம்மைக் கேட்கச்
செப்பிய பூசல் கோயில் செய்ததொன் றில்லை என்றூர்;
மெய்ப்பெரு மறையோ ரெல்லாம் வருக என் றுரைத்தான் வேந்தன்.

திருநின்றவூரை அரசன் அடைந்து: பூசலார் என்னும் அன்பர் இங்கு கட்டிய கோயில் எந்த இடத்தில் உள்ளது என்று அங்கு இருந்தாரைக் கேட்டிட; அது கேட்டவரும் அரசே நீர் சொல்லியவாறு பூசலார் என்பவர் செய்த கோயில் இங்கு ஒன்று இல்லை என்றூர்கள். அது கேட்ட அரசன் அங்குள்ள உண்மை நெறி யுடைய பெரிய அந்தணர்கள் எல்லாம் அவ்விடம் வருக எனக் கூறினுன்: 12

பூசுரர் எல்லாம் வந்து புரவலன் தன்னைக் காண
மாசிலாப் பூச லார்தாம் யார்? என மறையோ ரெல்லாம்
ஆசில்வே தியன்இவ் வூரான் என்றவர் அழைக்க ஓட்டான்
ஈசனூர் அன்பர் தம்பால் எய்தினுன் வெய்ய வேலான்.

அரசனுடைய ஆணை வழி அந்தணர்களெல்லாம் வந்து அரசனைக் கண்டிடலும் அவர்களை நோக்கி மாசு இலாத அன்பர் பூசலார் என்பார் ஆர் இங்கு உளர் எனக் கேட்டலும் அந்தணர் மொழிவார் அவர்'' குறைவிலாத ஒழுக்கமுடைய அந்தணர் இந்த ஊரில் இருப்பவர் ''என்று நாம் அவரை அழைத்துவரவோ என் றலும் அது கேட்ட அரசன் அவரை தன் முன் அழைத்துவர விரும்பிடாதவனுய் தானே ஈசன் அன்பர் பூசலார் திருமுன்பு சென்றுன்; துயர்க்கு வெம்மை செயும் வேலுடைய அந்த அரசன்: 13

தொண்டரைச் சென்று கண்ட மன்னவன் தொழுது நீர் இங்(கு)
எண்டிசை யோரும் ஏத்த எடுத்தஆ லயந் தான் யாதிங்(கு)
அண்டர்நா யகரைத் தாபித் தருளுநாள் இன்றென்(று) உம்மைக்
கண்டடி பணிய வந்தேன்; கண்ணுதல் அருள்பெற்(று) என்றான்.

பூசலார் என்னும் தொண்டரைச் சென்று கண்டு பல்லவச் சோழ அரசன் தொழுது நீர் இங்கு எட்டுத் திக்கில் உள்ளோரும் வணங்கிட எடுத்த ஆலயம் தான் யாதாகும். நீர் அண்டர் நாயகனை சிவனைத் தாபித்தருளும் நாள் இன்று என்று: உம்மைக் கண்டு திருவடி பணிந்திடவந்தேன். அதுவும் நெற்றியில் கண் உடைய சிவபெருமான் அருள் பெற்று என்று கூறி நின்றான். 14

மன்னவன் உரைப்பக் கேட்ட அன்பர்தாம் மருண்டு நோக்கி
என்னையோர் பொருளாக் கொண்டே எம்பிரான் அருள்செய் தாரேல்
முன்வரு நிதியி லாமை மனத்தினுல் முயன்ற கோயில்
இன்னதாம் என்று சிந்தித் தெடுத்தவா றெடுத்துச் சொன்னார்.

பல்லவச் சோழஅரசன் அதனை மொழிவதைக்கேட்ட அன்பர் பூசலாரும் மனம் மருண்டு அவனைநோக்கி; "என்னையும் ஒருபொருளாகக்கொண்டு எம்பெருமான் உமக்கு இப்படி அருள்செய்தாரேல்; நானும் எனக்கு முன்னைப் பெறும்பொருள் இவ்வாமையால் என் மனத்தினுல் நெடுங்காலம் முயன்று கட்டிய கோயில் இதுவே யாகும்" என மொழிந்து தான் எம்பிராற்கு ஓர் கோயில் தனது சிந்தனையால் சிந்தத்து எடுத்த வரலாற்றை உண்மையாம்படி விவரித்துச் சொன்னார். 15

அரசனும் அதனைக் கேட்டங் கதிசயம் எய்தி என்னே!
புரையறு சிந்தை அன்பர்பெருமை! என் றவரைப்போற்றி
விரைசெறி மாலை தாழ நிலமிசை வீழ்ந்து தாழ்ந்து
முரசெறி தானை யோடு மீண்டுதன் மூதூர்ப் புக்கான்.

அரசனும் அதனைக்கேட்டு அதிசய மடைந்து என்னே அற்புதம் வஞ்சனையற்ற சிந்தையுடைய இந்த அன்பர் பெருமை என்று கூறி அவரைப்போற்றி செய்து; வாசம் நிறைந்த தனது மாலை தாழும்படியாக நிலமீது வீழ்ந்து வணங்கி எழுந்து முரசப்பிறைமுழங்கிட வரும் சேனையோடு மீண்டு தனது முதிய ஊரில்புகுந்து கொண்டான். 16

அன்பரும் அமைத்த சிந்தை ஆலயத் தரனார் தம்மை
நன்பெரும் பொழுது சாரத் தாபித்து நலத்தி னேடும்
பின்புபூ சனைகளெல்லால் பெருமையிற் பலநாட் பேணிப்
பொன்புனை மன்று ளாடும் பொற்கழல் நீழல் புக்கார்.

இப்பால் அன்பர் பூசலாரும் தாம் அமைத்த சிந்தையினுலாய ஆலயத்தில் சிவபெருமானை நல்லபெரும் மூகூர்த்தம் சேரத் தாபித்து; நன்மைப்பாட்டுடன் பின்னை எம்பிராற்கு வேண்டிய பூசனைகள் யாவும் பெருஞ் சிறப்புடன் பலநாள் புரிந்து அவ்வண்ணமாக பொன் அணிந்த கனகசபையில் ஆடும் பொற்பாத நீழலில் சேர்ந்து கொண்டார். 17

நீண்ட செஞ்சடையி னுர்க்க நினைப்பினுல் கோயிலாக்கிப்
பூண்டஅன் பிடையறுத பூசலார் பொற்றுள் போற்றி
ஆண்டகைவளவர் கோமான் உலகுய்ய அளித்தசெல்வப்
பாண்டிமா தேவியார்தம் பாதங்கள் பரவ லுற்றேன்.

நீண்ட செஞ்சடையுடைய பெருமானுர்க்கு நினைப்பினுல் கோயில் கட்டி எம்பிரான்பால் கொண்ட அன்பு இடையறுத பூசலார் நாயனுரது பொன்னின் திருவடிகளைப் போற்றி ஆண்டகமை உடைய சோழர்களின் அரசன் உலகம் உய்ந்திடப் பெற்றெடுத்த செல்வம் நிறைந்த பாண்டி மாதேவியார் மங்கையர்க்கரசி யாரின் பாதங்கள் போற்றுதலுறுகின்றேன். 18

பூசலார் நாயனுர் புராணம் முற்றிற்று.

மங்கையர்க்கரசி அம்மையார் புராணம்

மங்கையர்க்குத் தனியரசி எங்கள்தெய்வம் வளவர்திருக்குலக் கொழுந்து வளைக்கை மானி, செங்கமலத் திருமடந்தை கன்னி நாடாள் தென்னர் குலப் பழிதீர்த்த தெய்வப்பாவை, எங்கள்பிரான் சண்பையர்கோன் அருளினுலே இருந்தமிழ்நாடுற்றஇடர் நீக்கித் தங்கள், பொங்கொளிவெண்டிருநீறு பரப்பினுரைப் போற்றுவார் கழல்எம்மால் போற்ற லாமே.

உலகில் வாழும் பெண்கள் இனத்திற்கு ஓர்தனி அரசியும்; எங்களது தெய்வமும்: சோழ அரசர்களது குலத்தின் தவக்கொழுந்தும் வளைகள் நிரம்பியகையுடைய பெண்ணும் செந்தாமரை மலரில் இருக்கும் இலக்குமியாயவளும்; கன்னி நாட்டின் தெய்வமானவளும்; பாண்டிய அரசர் குலத்தில் நேர்ந்த பழியினைத்தீர்த்த தெய்வப்பெண்ணும் எங்கள்பெருமான் சீகாழித் தலைவர் திருஞானசம்பந்தர் அருளினுலே பெரும் தமிழ் நாடாய பாண்டி நாடுகொண்ட சமணரின் துன்புறுத்தலாய இடர் நீக்கி தங்களது பொங்கும் ஒளியுடைய வெண்மையாம் திருநீற்று நெறி வளரச் செய்த அம்மை மங்கையர்க்கரசியாரைப் போற்றுகின்றுரை நாம் போற்றிக் கொள்ளத்தக்கதாகும். 1

பூசுரர்க்ளாபணியாம் புகலி வேந்தர் போனகஞானம்பொழிந்த புனித வாக்கால், தேசுடைய பாடல்பெறுந் தவத்தினுரைச் செப்புவதியா மென்ன றிந்து தென்னர் கோமான், மாசில் புகழ் நெடுமாறன் தனக்குச் சைவ வழித்துணையாய் நெடுங்காலம் மன்னிப் பின்னை, ஆசில்நெறி யவரோடுங் கூட ஈசர் அடிநிழற்கீழ் அமர்ந்திருக்க அருளும் பெற்றார்.

அந்தணர்களது தலைவராய சீகாழி வேந்தர் திருஞானசம்பந்தப் பெருமான் எவர்க்கும் அமுதான ஞானம் பொழிந்த தமது புனிதவாக்கினுல் ஒளியுடைய பாடல் "மங்கையர்க்கரசி எனத் தொடங்கி பாடப்பெறும் தவமுடைய அவரை யாம் என்ன அறிந்து சொல்வது" அந்த அம்மைதான் பாண்டிய அரசனுய மாசில்லாத புகழ் உடைய நெடுமாறன் பாண்டியனுக்கு சைவத்தின் சீலம் பெறும் வழித்துணையாக நெடுங்காலம் இருந்து பின்னர் என்றும் கெடுதலில்லாத அந்தநெறியால் நெடுமாற நாயனுடன் கூட; ஈசன் சிவன் திருவடிக்கீழாகபேரின்பம் பெற்றிருக்க திருவருளும் பெற்றுக் கொண்டார். 2

வருநாளென் றும்பிழையாந் தெய்வப் பொன்னி வளம்பெருக்க வளவர் குலம் பெருக்குந் தங்கள் திருநாடு போற்செழியர் தென்னர் நாடு சீர்விளக்குஞ் செய்யசீ றடிகள் போற்றி, ஒருநாளுந் தஞ்செயலில் வழுவா தன்பர்க் குடைகளும் கோவணமும் நெய்து நல்கும், பெருநாமச் சாலியர்தங் குலத்தில் வந்த பெருந்தகையார் நேசர்திறம் பேச லுற்றும்.

வருகின்ற எக்காலமும பிழையின்றி நீர்பெருகும் தெய்வ ஆருகும் காவிரியாற்றின்வளம் பெருகலாலே சோழா குலத்தை பெருக்கும் சிறப்புடைய சோழநாட்டைப் போன்று பாண்டிய அரசரது சீருடைய தென்னுடும் ஒளிர சைவநெறி விளக்கிய; ஒளி விளக்காம் மங்கையர்க்கரசியாரின் செவ்விய சிறந்த திருவடிகளை அடியேன போற்றிக்கொண்டு; ஒருநாளேனும் தனதுசெயலில் தவறிலாது சிவனடியார்க்கு கீள்உடையும் கோவண ஆடையும் தாமே நெய்து கொடுக்கின்ற பெரும் புகழுடைய சாலியர் குலத்தில் வந்துதித்த கொடையின பெரும்தகையாராம் நேச நாயனுர் செயலினைமொழியத் தொடங்கினேம். 1

மங்கையர்க்கரசியார் புராணம் முற்றிற்று.

நேசநாயனுர் புராணம்

சீர்வளர் சிறப்பின் மிக்க செயன்முறை ஒழுக்கங் குன்ரு
நார்வளர் சிந்தை வாய்மை நன்மையார் மன்னி வாழும்
பார்வளர் புகழின் மிக்க பழம்பதி மதிதோய் நெற்றிக்
கார்வளர் சிகர மாடக் காம்பீலி என்ப தாகும்.

சீர் என்றும் வளரும் சிறப்பில் மிகுந்த செயல்முறைகளின் ஒழுக்கம் குன்ருத இரக்கம் வளரும் சிந்தையும் உண்மை வார்த்தையும் கொண்ட நன்மையுடைய மக்கள் பொருந்தி வாழகின்ற இப்பூமியில் வளரும் புகழின் மிகுந்த பழமையான

தும் அதுதான் சந்திரன் படியும் படியான உயர்ந்த முடியினை உடைய மேகங்கள் படியும் சிகரங்களை உடைய மாடங்கள் விளங்கிடும் காம்பீலி என்னும் நகரமாகும். 1

அந்நகர் அதனில் வாழ்வார்; அறுவையர் குலத்துவந்தார்
மன்னிய தொழிலிற் தங்கள் மரபில் மேம்பாடு பெற்றூர்
பன்னகா பரணற் கன்பர் பணிதலைக் கொண்டு பாதம்
சென்னியிற்கொண்டு போற்றுந் தேசினர்; நேசர் என்பார்.

அந்த நகரமதனில் வாழும் ஒருவர் அறுவையர் (நெசவாளர்) என்னும் குலத்தில் வந்தவதவரித்தவர். நெசவுளனும் அத்தொழிலில் தொழிலில் தங்களுடைய மரபிலேமிக திறமையின் மேம்பாடு கொண்டவர். பாம்பினை ஆபரணமாக உடைய சிவபெருமானுக் கன்பர்களது பணிவிடைகளை தலையாகக் கொண்டு அவர் பாதங்களை தமதுதலை மீது கொண்டு போற்றிடும் தேசுடைய ஒழுக்கத்தவர் நேசனர் என்னும் நாம முடையவர். 2

ஆங்கவர் மனத்தின் செய்கை அரனடிப் போதுக் காக்கி
ஓங்கியவாக்கின் செய்கை உயர்ந்தஅஞ் செழுத்துக்காக்கித்
தாங்குகைத் தொழிலின் செய்கை தம்பிரான் அடியார்க் காகப்
பாங்குடை உடையும் கீளும் பழுதில்கோ வணமும் நெய்வார்.

ஆங்கு அந்த நேச நாயனர் தனது மனதின் செய்கையை சிவபெருமானுடைய திருவடி மலர்கட்காக்கி; ஓங்கிய தனது பேச்சின் செயல் உயர்வுடைய எம்பிரானது நாமமாம் ஐந்தெழுத்துக்காக்கி; தனது கையால் தாங்கிப் புரிகின்ற செயலாய நெசவின் செய்கை எல்லாம் எம் பெருமான் அடியார்க்காக அவர்க்கு; பாங்குடைய உடையும் கீளுடையும் பழுதில்லாத கோவணமும் நெய்வார். 3

உடையொடு நல்ல கீளும் ஒப்பில்கோ வணமும் நெய்து
விடையவர் அடியார் வந்து வேண்டுமா றீயு மாற்றூல்
இடையரு தளித்து நாளும் அவர்கழல் இறைஞ்சி ஏத்தி
அடைவுறு நலத்த ராகி அரனடி நீழல் சேர்ந்தார்.

புனையும் உடையுடன் நல்ல கீள்உடையினையும் ஒப்பில்லாத கோவணமும் நெய்து இடபத்தை வாகனமாக உடைய பெருமானது அடியார் வந்து வேண்டும் அளவிற்கு கொடுத்திடும் வகையால்; இடையருது அவற்றை நெய்து கொடுத்து நாள்தோறும் அடியார் பாதங்கள் பணிந்து போற்றிஅதனால் நலம் பெற்றுடையராகி; சிவபெருமான் திருவடி நீழலைச் சென்று சேர்ந்தார். 4

கற்றைவேணி முடியார்தங் கழல்சேர் வதற்குக் கலந்த வினை
செற்ற நேசர் கழல்வணங்கிச் சிறப்பால் முன்னைப் பிறப் புணர்ந்து
பெற்றம் உயர்த்தார்க் காலயங்கள் பெருக அமைத்து மண்ணுண்ட
கொற்ற வேந்தர் கோச்செங்கட் சோழர் பெருமை கூறுவாம்.

கற்றையான சடைமுடியுடைய சிவபெருமானது திருவடிகள் சேர்ந்திடற்கு: தம்மிடம் கலந்து நின்றவினைகளை தொண்டினால் அறுத்த நேசநாயனரது திருவடிகளை வணங்கி சிறப்பினாலே முன்னைய தன்பிறப்புணர்ந்து இடபக்கொடி உயர்த்திய பெருமானுர்க்கு ஆலயங்கள் பெருக்கமாக அமைத்து இப்பூமியை ஆண்டமேலான சிறப்புடைய அரசர் கோட் செங்கட் சோழ நாயனர் பெருமை கூறுவோம் 5

நேசநாயனர் புராணம் முற்றும்

கோச்செங்கட்சோழ நாயனர் புராணம்

துலையிற் புறவின் நிறையளித்த சோழர் உரிமைச் சோணாட்டில்
அலையிற் றரளம் அகிலொடுசந் தணிநீர்ப் பொன்னி மணி கொழிக்கும்
குலையிற் பெருகுஞ் சந்திர தீர்த்தின் மருங்கு குளிர்சோலை
நிலையிற் பெருகுந் தருமிடைந்த நெடுந்தண் கானம் ஒன்றுளதால்.

தராதில் ஓர்புறுவின் உடலிற்கு சமமான நிறையாக தனது தசை அரிந்து கொடுத்த சோழ அரசரது உரிமை விளங்கிய சோழ நாட்டில் தனது அலைகளில் முத்தும் அகிலுடன் சந்தனமும் திரட்டும்நீருடைய காவிரியாறு மணிகள் கொழித்து ஒதுக்கும் கரையில் பெருக விளங்கும் சந்திரதீர்த்தத்தன் மருங்கில் குளிர்ந்த சோலைகள் போன்று பெருக இருக்கும் மரங்கள் நெருங்கிய நீடித்த நல்லதொரு குளிர்ந்த காடு ஒன்றுளதாகும். 1

அப்பூங் கானில் வெண்ணுவல் அதன்கீழ் முந்நாள் அரிதேடும்
மெய்ப்பூங் கழலார் வெளிப்படலும் மிக்க தவத்தோர் வெள்ளானை
கைப்பூம் புனலும் முகந்தாட்டிக் கமழ்பூங் கொத்தும் அணிந்திறைஞ்சி
மைப்பூங் குவளைக் களத்தாரை நாளும் வழிபட் டொழுகு மால்.

அந்தப் பூஞ்சோலை வனத்தில் உள்ள வெண்ணுவல்மரம் அதன் கீழாக; முன்னாள் திருமாலும் பன்றியாய்த் தேடிய என்றும் அறிவிலாக பூங்கழலுடைய சிவபெருமான் தான் தோன்றியாக வெளிப்படலும்; எம்பெருமானை மிக்க தவமுடைய தொரு வெள்ளானை தனது துதிக்கை நிறைய நல்ல நீரும் அள்ளிவந்து திருமஞ்சனமாட்டி வாசனை கமழும் பூக்களின் கொத்தினையும் சூட்டிவணங்கி கரிய குவளை மலரின் நிறம்போலும் கண்டமுடைய அவரை நாளும் வழிபட்டு ஒழுகிவரும். 2

ஆன செயலால் திருவானைக் காஎன் றதற்குப் பெயராக
ஞான முடைய ஒருசிலந்தி நம்பர் செம்பொன் திரு முடிமேல்
கானல் விரவுஞ் சருகுதிரா வண்ணங் கலந்த வாய்நூலால்
மேனற் றிருமேற் கட்டிஎன விரிந்து செறியப் புரிந்துளதால்.

இவ்வாறான செயலால் அந்த இடத்திற்கு திருவானைக்கா என்றே பெயராகிட: இதனை உணர்ந்த ஞான அறிவுடைய தொரு சிலந்தி எம்பெருமான் செம்பொன்னின் திருமுடிமேல்; மேல் மாத்தில் நின்றும் காய்ந்த சருகுகள் உதிராதவண்ணம் தன்னிடத்துக் கலந்த வாயின் நூலால் மேலாக நல்ல தொரு திருமேற்சட்டியென எங்கும் விரிந்து செறிய தனது வலைப்பந்தரைக் கட்டியது. 3

நன்றும் இழைத்த சிலம்பிவலைப் பரப்பை நாகன் அடி வணங்கச்
சென்ற யானை அநுசிதம் என் றதனைச் சிதைக்கச் சிலம்பிதான்
இன்று களிற்றின் கரஞ்சுல விற்று என்று மீள இழைத்ததனை
அன்று கழித்த பிற்றைநாள் அடல்வெள்ளானை அழித்ததால்.

நன்றுடன் சிலந்திவரையால் இழைத்த வலையின் பரப்பினை எம்பெருமான் திருவடி வணங்கச் சென்ற யானை இது தூசு ஆகாது என்று அதனைச் சிதைத்திட; அதனைக் கண்ட சிலந்தியும் இன்று எம்பிராற்கு இட்ட என் வலைப்பந்தரை யானையின் கை சுழன்று அழித்திட்டது என கருதி மீண்டும் தன் வாயல் இழைத்திட அந்த வலைப்பந்தரையும் அன்று நீங்க மறு நாள் அடல் உடைய வெள்ளானை எம்பிரான் திருமுடிமேல் இச் சிலந்திவலை ஆகாது என அழித்தது. 4

எம்பி ரான்தன் மேனியின்மேல் சருகு விழாமை யான் வருந்தி
உம்பர் இழைத்த நூல்வலயம் அழிப்பதே என்றுருத்து எழுந்து
மெம்பிச் சிலம்பி துதிக்கையினிற் புக்குக் கடிப்ப வேகத்தால்
கும்ப யானை கைநிலத்தில் மோதிக் குலைந்து வீழ்ந்ததால்.

அதுகண்ட சிலந்தி எம்பெருமான் திருமேனி மேல் சருகுவிழாமையான் வருந்தி இந்த நிலையில் செய்த என் நூல் வலயப் பந்தரை அழிப்பதோ இந்த வெள்ளானை என வேகமுடன் சினந்து எழுந்து மனம் புழுங்கி சிலந்தி யானையின் துதிக்கையில் புகுந்து கடிக்கிட அதனைச் சகிக்கிட முடியாது வேகத்தால் வடி பெருமத்தை யான தன் துதிக்கையை நிலத்தில் மோதி அடித்து அறிவிழந்து நிலத்தில் வீழ்ந்தது. 5

தறையிற் புடைப்பக் கைப்புக்க சிலம்பி தானும் உயிர் நீங்க
மறையிற் பொருளுந் கருமாற்றூன் மதயா னைக்கும் வரங்கொடுத்து
முறையிற் சிலம்பி தனைச்சோழர் குலத்து வந்து முன்னுதித்து
நிறையிற் புவனங் காத்தளிக்க அருள்செய் தருள நிலத்தின்கண்.

வெள்ளானை நிலத்தில் அடித்திட அதன் துதிக்கை புகுந்த சிலந்தி தானும் தானும் தன் உயிர் நீங்க அது போது வேதங்களின் பொருளையும் எமக்கு கந்தருளும் அக்கருணைபோல; மகமுடைய வெள்ளானைக்கும் வரங்கொடுத்து எம் பெருமான் முறையாக அந்தச் சிலந்தியையும் சோழர் குலத்து வந்து அவதரித்து நிறைவுடன் இப்பூமியினைக் காத்து அரசாள அருள்செய்தருள: அதனாலே இந்த உலகில்: 6

தொன்மைதரு சோழர்குலத் தரசனுஞ் சுபதேவன்
தன்னுடைய பெருந்தேவி கமலவதி யுடன்சார்ந்து
மன்னுபுகழ்த் திருத்தில்லை மன்றுடும் மலர்ப்பாதம்
சென்னியுறப் பணிந்தேத்தித் திருப்படிக்கீழ் வழிபடுநாள்.

மிகவும் பழமை கொண்ட சோழர் குலத்து ஓர் அரசனுஞ் சுபதேவன் தன்னுடைய பெருந் தேவி கமலவதியுடன் சேர்ந்து; புகழ் மன்னிய திருத்தில்லை அம்பலத்து ஆடியருளும் மலர்ப்பாதத்தை தலை பொருந்த வணங்கிப் போற்றி எம்பிரான் திருப்படிக் கீழ் நின்று வழிபட்டு வரும் நாளில். 7

மக்கட்பே றின்மையினில் மாதேவி வரம்வேண்டச்
செக்கர்நெடுஞ் சடைக்கூத்தர் திருவுள்ளஞ் செய்தலினால்
மிக்கநிருப் பணிசெய்த சிலம்பிகுல வேந்துமகிழ்
அக்கமல வதிவயிற்றில் அணிமகவாய் வந்தடைய.

தமக்கு மக்கள் பேறு இல்லாமையால் கமலவதி அம்மை வரம் வேண்டிட அவளுக்கு அருளுமாறு செக்கர் போலும் நெடும் சடையுடைய திருமுடியார் சிதம்பரேசனும் திருவுள்ளம் செய்தருளுதலினால்; எம் பிராற்கு மிகுந்த பணி செய்த இந்தச் சிலந்தி அந்தக் கமலவதி அம்மையின் திருவயிற்றில் அழகிய தொரு குழந்தையாய் வந்து சேர; 8

கழையார் தோளி கமலவதி தன்பாற் கருப்ப நாள் நிரம்பி
விழைவார் மகவு பெறஅடுத்த வேலை யதனிற் காலம் உணர்
பழையார் ஓநா ழிகைகழித்துப் பிறக்கு மேல்இப் பசுங்குழவி
உழையார் புவனம் ஓருமூன்றும் அளிக்கும் என்ன ஒள்ளிழையார்.

மூங்கில்போலும் பசிய தோளுடைய கமலவதி அம்மைபாலாக கருப்பம் நாள் நிரம்பி பெரும் அன்புடைய குழந்தையைப் பெற்றிட வந்த அந்த நேரத்தில் காலங்களின் நல்நிலை உணரும் பழமையின் வல்ல சோதிடர்கள் ஒரு நாழிகை கழித்துப் பிறந்தால் இந்தப் பச்சிளங் குழந்தை இடமகன்ற இந்த உலகம் மூன்றையும் ஆளும் என்றிட அது கேட்ட ஒளி விளங்கும் அணி கலன் உடைய பட்டத்து தேவி கமலவதியும். 9

பிறவா தொருநா ழிகைகழித்தென் பிள்ளை பிறக்கும் பரிசென்கால்
உறஆர்த் தெடுத்துத் தூக்கும் என உற்ற செயல்மற் றதுமுற்றி
அறவா ணர்கள்சொல் லியகாலம் அணையப் பிணிவிட்டருமணியை
இறவாதொழிவாள் பெற்றெடுத்(து) என்கோச்செங் கண்ண னே!என்றுள்.

என்பிள்ளை இன்னுமொரு நாளிகை கழித்துப்பிறவாது. அப்படி அப்பிள்ளை நன்றுடன் பிறந்திடும் தன்மையாக என் காலைக் கட்டி எடுத்து மேலே தூக்கும் என்றிட அம்மை சொல்லிய வண்ணமே அதற்குற்ற செயலதனை முடித்து தரும நெறியால் வாழ்ந்திடும் சோதிடர்கள் சொல்லிய காலம் அணைய; காலைக்கட்டிய கட்டை அவிழ்த்து அருமணியான தன்குழந்தையை; என்றும் இறவாது நீங்கி இன்பப்பெருக்கை அடைந்திடும் கமலவதி பெற்று எடுத்து குழந்தை கண் சிவந்திருப்பக் கண்டு நாமமும் "என் கோச்செங்கண்ணனே" என்றுள். 10

தேவி புதல்வர்ப் பெற்றிறக்கச் செங்கோற் சோழன் சுபதேவன்
ஆவி அனைய அரும்புதல்வன் தன்னை வளர்த்தங் கணிமகுடம்
மேவும் உரிமை முடிகவித்துத் தானும் விரும்பு பெருந் தவத்தின்
நாவில் நெறியைச் சென்றடைந்து தலைவர் சிவலோ கஞ்சார்ந்தான்.

கரு வேதனையுடன் ஒருநாழிகை மேலும் இருக்க வந்தமையால் தன்குழந்தையை பட்டத்துத்தேவி பெற்று இறந்து விட; அதுவேளை செங்கோல் அரசன் சுபதேவன் தன் உயிர் போன்ற அரிய குழந்தையை வளர்த்து அங்கு அழகிய மகுடத்தினை சூடவரும் பருவத்தில் அந்த உரிமையின் முடியினைத்தம் மகனுர் கோச் செங்கட் சோழருக்குச் சூடியபின்னர் தானும் மேலாக விரும்புகின்ற பெரும் தவத்தின் குறைவற்ற நெறியைச் சென்று சேர்ந்து; தலைவரான பெருமானது சிவலோகம் சென்று சேர்ந்தான். 11

கோதை வேலார் கோச்செங்கட் சோழர் தாம்இக் குவலயத்தில்
ஆதி மூர்த்தி அருளால்முன் னறிந்து பிறந்து மண்ணுள்வார்
பூத நாதன் தான்மகிழ்ந்து பொருந்தும் பெருந்தண் சிவாலயங்கள்
காத லொடும் பல எடுக்குந் தொண்டு புரியுங் கடன்பூண்டார்.

இப்பால் மாலைகட்டிய வேல் ஏந்திய அரசர் பெருமானுர் கோச்செங்கட்சோழர் தாமும் இந்தப் பூமியில் ஆதியான சிவமூர்த்தி அருளால் தனது முற்பிறவியின் நிலை உணர்ந்து பிறந்து பூமியை ஆளுகின்றுர் ஆன்மாக்களுக்கெல்லாம் நாதன் சிவன் தான் மகிழ்ந்து பொருந்திய பெரும் கருணை உடை சிவாலயங்கள் அன்புடன் பல தாபித்து தொண்டு புரியும் அந்தகடனை மேற்கொண்டார். 12

ஆனைக் காவில் தாம் முன்னம் அருள்பெற் றதனை அறிந்தங்கு
மானைத் தரித்த திருக்கரத்தார் மகிழுங் கோயில் செய்கின்றுர்
ஞானச் சார்வாம் வெண்ணுவ லுடனே கூடநலஞ் சிறக்கப்
பானற் களத்துத் தம்பெருமான் அமருங் கோயிற் பணிசமைத்தார்.

திருவானைக் காவில் தான்முன்பு அருள்பெற்ற அதனை அறிந்து அங்கு மானைத்தரித்த திருக்கரமுடைய பெருமானுக்கு அவர் மகிழும்படியான கோயில் செய்கின்றவர்; ஞானச்சார்வுடைய வெண்நாவல் உடன் கூடிடும் நலம் சிறந்திட பால்போன்ற கண்டமுடைய தம்பெருமான் அமரும் அக்கோயில் திருப்பணியினைச் செய்துமுடித்தார். 13

வேறு

மந்திரிகள் தமைஏவி வள்ளல்கொடை அனபாயன்
முந்தைவருங் குலமுதலோ ராயமுதற் செங்கணுர்
அந்தமிழ்சீர்ச் சோணாட்டில் அகலுடு தொறுமணியார்
சந்திரசே கரன்அமருந் தானங்கள் பலசமைத்தார்.

இதுவேயன்றி தமது மந்திரிகளை அனுப்பி; கொடைவள்ளலாகும் எமது அநபாயச் சோழ அரசனது முன்னுக வரும் குலத்தில் உள்ளவரின் முதல்வராய கோச்செங்கட் சோழஅரசர் முடிவிலாத சிருடைய சோழ நாட்டில்; அகன்ற அதன் நகரங்கள்தோறும் அழகிய சந்திரனை அணிந்த எம்பெருமான் அமர்ந்திருக்கும் கோவில்கள் பல உண்டாக்கிவைத்தார். 14

அக்கோயில் தொறுஞ்சிவனுக் கமுதுபடி முதலான
மிக்கபெருஞ் செல்வங்கள் விருப்பினில் மிகஅமைத்துத்
திக்கனைத்துந் தனிச்செங்கோல் முறைநிறுத்தித் தேர்வேந்தர்
முக்கண்முதல் நடமாடும் முதற்றில்லை முன்னினுர்.

அந்தக் கோவில்கள் தோறும் சிவபெருமானுக்கு திருஅமுது முதலாய படித்திறங்கட்கு வேண்டிய மிகுந்த பெருஞ் செல்வங் விருப்பினில் ஏராளமாக வகுத்து அமைந்திடச் செய்து; திக்குகள் அனைத்திலும் தமது தனியான செங்கோலின் முறை அரசாட்சி நிலவிடச் செய்து; பெரும் தேவருடைய அரசர் கோட்செங்கட் சோழர் மூன்று கண்களை உடைய பெருமான் திருநடமாடும் எல்லாத்தலத்திற்கும் முதலாய திருவுடைய தில்லைநகர் சென்றருளினுர். 15

திருவார்ந்த செம்பொன்னின் அம்பலத்தே நடஞ்செய்யும்
பெருமானை அடிவணங்கிப் பேரன்பு தலைசிறப்ப
உருகாநின் றுளங்களிப்பத் தொழுதேத்தி உறையுநாள்
வருவாய்மை மறையவர்க்கு மாளிகைகள் பலசமைத்தார்.

திருவார்ந்த செம்பொன்னின் அம்பலத்தே திருநடம் புரியும் தேவர்பெருமான் திருவடிகள்வணங்கி பேரன்பு தலைசிறந்திட உள்ளம் உருகி நின்று ஆனந்தமுறத் தொழுது போற்றித் அங்கு தங்கி இருந்திடும் காலத்தில்; உண்மையின் வாக்கு வருகின்ற தில்லையில்வாழும் அந்தணர்கள் உறைந்திடற்கு பலமாளிகைகளைக் கட்டி முடித்தார் கோச் செங்கட் சோழ அரசர். 16

தேவர்பிரான் திருத்தொண்டிற் கோச்செங்கட் செம்பி யர்கோன்
பூவலயம் பொதுநீக்கி ஆண்டருளிப் புவனியின்மேல்
ஏவியநற் றிருண்டுபுரிந் திமையவர்கள் அடிபேற்ற
மேவினுர் திருத்தில்லை வேந்தர்திரு வடிநிழற்கீழ்.

தேவர்கட்கு எல்லாம் பெருமான் சிவனது திருத்தொண்டில் கோச் செங்கட் சோழ அரசர் பெருமான் ஈடுபட்டு: இப்பூமியில் சிவநெறியேயன்றி வேறுநெறி நிகழாது (பொது நீக்கி) அரசாண்டருளி தேவர்கள் வந்து அவர் திருவடி போற்றிடச் சேர்ந்து கொண்டார் திருத்தில்லையில் ஆடியருளும் அரசர்; சிவபெருமானது திருவடி நீழற்கிழாக பேரின்பத்துடன் 17

கருநீல மிடற்றூர் செய்ய கழலடி நீழல் சேர
வரு நீர்மை யுடைய செங்கட் சோழர்தம் மலர்த்தாள் வாழ்த்தித்
தருநீர்மை இசைகொள் யாழின் தலைவராய் உலக மேத்தும்
திருநீல கண்டப் பாணர் திறமினிச் செப்ப லுற்றேன்.

கரிய நீலநிறமுடைய கண்டத்து எம்பெருமானது செவ்வியதிருவடி நீழல் சேரும் படிவரும் படியான பிறவியின் பேறுடைய கோச் செங்கட் சோழ அரசரின் மலர்ப் போன்ற திருவடிகளை வாழ்த்தி; நல்நீர்மை தருகின்ற இசைகொண்ட யாழின் தலைவராகி உலகம் எல்லாம் போற்றும் திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனாருடைய திறத்தைச் செப்பலுற்றேன்: 18

கோச் செங்கட் சோழ நாயனார் புராணம் முற்றிற்று

திருநீலகண்டயாழ்ப்பாண நாயனார் புராணம்

எருக்கத்தம் புலியூர் மன்னி வாழ்பவர் இறைவன் தன்னீர்;
திருக்குகும் யாழிலிட்டுப் பரவுவார் செழுஞ்சோ ணைட்டில்
விருப்புறு கான மெல்லாம் பணிந்துபோய் விளங்கு கூடற்
பருப்பதச் சிலையார் மன்னும் ஆலவாய் பணியச் சென்றார்.

திரு எருக்கத்தம்புலியூரில் பொருந்தி வாழ்பவர் திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார்: அவர் இறைவனது புகழினைத் திருவுடன் குருந்த யாழில் இட்டுப்போற்றுவார்: செழுமை நிறைந்த சோழ நாட்டில் எம்பிரான் விரும்பிய தலங்கள் எல்லாம் பணிந்து சென்று விளங்கிடும் மதுரை நகரிலே மேருமலையை வில்லாக உடைய பெருமான் இருந்திடும் திருவாலவாய்க் கோயிலைப் பணிந்திடச் சென்றார். 1

ஆலவாய் அமர்ந்தார் கோயில் வாயிலை அடைந்து நின்று
பாலைஈரேழு கோத்த பண்ணினிற் கருவி வீக்கிக்
காலமா தரித்த பண்ணிற் கைபல முறையும் ஆராய்ந்(து)
ஏலவார் குழலாள் பாகர் பணிகள் யாழி விட்டார்.

திரு ஆலவாய்த்தலத்தில் அமர்ந்த பெருமானரது கோவில் வாய்தலை அடைந்து நின்று; (தாம் பாணர் வகுப்பைச் சேர்ந்தவராதலால் உட்புக விதியிலாது) பாலையாய் நின்ற பதினன்கு வகையில் நிறுவிய உரிய பண்ணினைப் பெறும்படி தனது யாழின் நரம்புகளை முறுக்கி; பண்கள் அவற்றில் கூம் வாசிக்க எடுக்கும் காலத்திற்கேற்ற பண் அமையும்படி தனதுகையால் யாழின் தந்திரி நிலையை பல முறையும் தடவிச் சோதித்து அழகிய வாசனை கமழும் கூந்தலுடைய பெருமாட்டி பாகராம் சிவனது அருளின் கீதங்களை தன் யாழில் இட்டுவாசிப் பாராயினர். 2

மற்றவர் கருவிப் பாடல் மதுரைநீ டால வாயில்
கொற்றவன் திருவுள் ளத்துக் கொண்டுதன் தொண்டர்க் கெல்லாம்
அற்றைநாட் கனவில் ஏவ அருட்பெரும் பாணனரைத்
தெற்றினர் புரங்கள் செற்றூர் திருமுன்பு கொண்டு புக்கார்.

மற்று அந்த திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனரது யாழின் பாடலினை மதுரைநகரில் நீடித்த சிறப்புடைய ஆலவாயிற் கடவுள் திருஉள்ளத்து கொண்டு தனது அடியார்க்கெல்லாம் அன்றைய நாளின் இரவில் கனவில் தோன்றி பாணனை நம் முன்பு கொண்டு வருவீர் என அருள்புரிந்து; செலுத்திட அதன்படி அவர்கள்; அருளுடன் சிறந்த பெரும் திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனரை பகைவரது புரங்கள் மூன்றையும் எரித்த சிவபெருமான் திருமுன்பு கொண்டு சென்றார்கள். 3

அன்பர்கள் கொண்டு புக்க பொழுதினில் அரிவை பாகன்
தன்பெரும் பணியாம் என்று தமக்குமெய் யுணர்த லாலே
மன்பெரும் பாணனாரும் மாமறை பாடவல்லார்
முன்பிருந் தியாழிற் கூடல் முதல்வரைப் பாடு கின்றார்.

அன்பர்கள் ஈசன் ஆணைவழி அவரைக் கொண்டு புகுந்த பொழுதினில்; பெண் ஒரு பாகராய சிவன் பெரும் பணி இதுவாகும் என்று தமக்கு உண்மை உணரப் பெறலாலே; மிகவும் மேலான பெருமை உடைய பாணனாரும் பெரும் வேதங்களைப் பாடவல்ல சிவன் முன்னர இருந்து தனது யாழிலே கூடல் ஆலவாய் அமர்ந்த அம்முதல்வரைப் பாடுகின்றார். 4

திரிபுர மெரித்த வாறும் தேர்மிசை நின்றவாறும்
கரியினை யுரித்த வாறும் காமனைக் காய்ந்த வாறும்
அரிஅயற் கரிய வாறும் அடியவர்க் கெளிய வாறும்
பரிவினற் பாடக் கேட்டுப் பரமனார் அருளினாலே.

எம்பிரான் திரிபுரம் எரிசெய்த வரலாறும்; வைதிகத் தேர் மீது நின்ற வரலாறும்; காயாசுரன் என்னும் யானையை உரித்த வரலாறும்; காமனைப் பொடியாக்கி எரித்தருளிய வரலாறும்: திருமாலும் பிரமனும் காண்டற்கரிய சோதியாய் நின்ற வரலாறும்; அடியவர்களுக்கு எளிதாக வந்து அருள் புரிந்த கருணையின் வரலாறும் உள்ளத்து எழுந்த அன்பினால் பாடக் கேட்டு அருள் புரியும் சிவனது அருளினாலே. 5

அந்தரத் தெழுந்த ஓசை அன்பினிற் பாணர் பாடும்
சந்தயாழ் தரையிற் சீதந் தாக்கில் வீக் கழியும் என்று
சுந்தரப் பலகை முன்நீர் இடும் எனத் தொண்ட ரிட்டார்
செந்தமிழ்ப் பாண னருந் திருவருள் பெற்றுச் சேர்ந்தார்.

வானத்தில் எழுந்த ஓர் அசரீரி ஓசை "அன்பினால் பாணர் பாடுகின்ற நல்ல சந்தமுடைய அவரது யாழ் தரையில் உள்ள குளிர் தாத்தினால் அதன் நரம்புகளின் இறுக்கம் தளர்வுறும்" ஆதலால் சுந்தரமுடைய ஓர் பொற்பலகையை பாணர் முன்பு நீர் இடும" என்றே அந்த அசரீரிஓசை எழுந்திட அடியார்கள் அவ்வணமே பாணனார்க்குப் பலகை இட்டார்; இப்பால் செந்தமிழின் பாடல் மொழியும் திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனரும் எம்பெருமானது அந்தத் திருவருள்பெற்று தொண்டரிட்ட பலகை மேல் எழுந்தருளிக் கொண்டனர். 6

தமனியப் பலகை ஏறித் தந்திரிக் கருவி வாசித்(து)
உமையொரு பாகர் வண்மை உலகெலாம் அறிய ஏத்தி
இமையவர் போற்ற ஏகி எண்ணில்தா னங்கள் கும்பிட்(டு)
அமரர்நா டாளா(து) ஆரூர் ஆண்டவர் ஆரூர் சேர்ந்தார்.

பொன்னை அப்பலகையில் ஏறி தந்திரி நரம்புடைய யாழை வாசித்து உமையம்மையை தனது ஒரு பாகத்துடைய சிவனது கருணையை உலகமெலாம் அறியப் போற்றி செய்து; அங்குநீங்கி தேவர்களும் போற்றிடச் சென்று எண்ணற்ற கோவில்கள்எல்லாம் பணிந்து போற்றி அப்பால் சென்று தேவ உலகை அங்கிருந்தாளாது; திருவாரூர் வந்து ஆண்டருளுகின்ற தியாகராசப் பெருமானது திருவாரூரைச் சென்று சேர்ந்தார் திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார்; 7

கோயில் வாயில் முன்னடைந்து கூற்றஞ் செற்ற பெருந்திறலும்
தாயின் நல்ல பெருங்கருணை அடியார்க் களிக்குந் தண்ணளியும்
ஏயுங் கருவி யிற்றெடுத்தங் கிட்டுப் பாடக் கேட்டங்கண்
வாயில் வேறு வடதிசையில் வகுப்பப் புகுந்து வணங்கினார்.

திருவாரூர் கோயில் வாய்தலில் முன்பாகநின்று எம்பெருமானது இயமனைஉதைத்தருளிய பெருவன்மையும்: பெற்றிருந்த தாயவளினும் பார்க்க பெருங்கருணையை அடியார்க்குக் கொடுத்திடும் கருணைக் கொடைத்திறனும் ஆன அருளினை தமமிடம் பொருந்திய யாழில் தொடுத்தமைத்துப் பாடக் கேட்டு; அவ்விடத்து அவர் தமது சந்நிதி வரும் படிவாய்தல் வேருக எம்பிரான் வடதிசையில் வகுத்தருள அந்த அருளிப் பாட்டுடன் உட்புகுந்து திருவாரூர் அமர்ந்த செல்வனை வணங்கினார்; 8

மூலத் தானத் தெழுந்தருளி இருந்த முதல்வன் தனை வணங்கிச்
சாலக் காலம் அங்கிருந்து தம்பி ரான்தன் திருவருளால்
சீலத் தார்கள் பிரியாத திருவா ரூரின் நின்றும் போய்
ஆலத் தார்ந்த கண்டத்தார் அமருந் தானம் பல வணங்கி.

திருவாரூர் திருமூலட்டானத்து எழுந்தருளி இருந்த முதல்வரை வணங்கி மிக நாள் அங்கிருந்து தனது பெருமானது திருவருளினாலே சீலமுடைய அடியார்கள் பிரியாத திருவாரூர் நின்றும் புறப்பட்டுச்சென்று; நஞ்சுண்ட கண்டமுடைய பெருமான் அமர் கின்ற கோயில்கள் பலவும் வணங்கினர் திருநீலகண்டயாழ்ப் பாண நாயனார். 9

ஆழி சூழுந் திருத்தோணி அமர்ந்த அம்மான் அருளாலே
யாழின் மொழியாள் உமைஞானம் ஊட்ட உண்ட ஏம்பெருமான்
காழி நாட்டன் கவுணியர்கோன கமல பாதம் வணங்குதற்கு
வாழி மறையோர் புகலியினில் வந்தார் சந்த இசைப்பாணர்.

இவ்வாறு பலதலமெலாம் வணங்கி; கடல்சூழும் திருத்தோணிபுரத்து வீற்றிருந்த சிவபெருமான் அருளாலே; யாழினைப்போலும் இனிய மொழி உடைய உமையம்மையார் ஞானப்பால் ஊட்டிட அதனை உண்ட எம்பெருமான்; சீர்காழிநாட்டன் கவுணியர்கோத்திரத்தலைவன்: திருஞானசம்பந்தனது தாமரைபோலும் திருவடி வணங்கிடற்கு வாழ்வுசிறந்த அந்தணர்களது சீகாழியில் வந்தருளினர் சந்தமுடைய யாழினை வாசிக்கும திருநீலகண்ட யாழ்ப்பாணநாயனர், 10

ஞானம் உண்டார் கேட்டருளி நல்ல இசையாழ்ப் பெரும் பாணர்க்(கு)
ஆன படியாற் சிறப்பருளி அமரும் நாளில் அவர் பாடும்
மேன்மைப் பதிகத் திசையாழில் இடப்பெற் றுடனே மேவியபின்
பானற் களத்தார் பெருமணத்தி லுடனே பரமர் தாளடைந்தார்.

இவ்வருகையை ஞானமுண்ட திருஞானசம்பந்தப்பெருமான் கேட்டருளி; நல்ல இசையுடைய யாழின் வல்லமை உடைய பெரும்பாணனர்க்கு ஏற்ற முறைப்படியால் வரவேற்பின் சிறப்பருளி அவருடனே பாணனூர் தங்கி இருக்கும் காலங்களில்? மேன்மையான அவரது திருப்பதிகத்தின் இசையைத் தமது யாழில் இட்டு வாசித்திடம்பெற்று அவருடன் இவ்வகையால் பலநாள்கூடி உறைந்த பிற்பாடு அழகிய பால்போன்ற நற்கண்டமுடைய சிவன் அமர்ந்த திருநல்லூர்ப்பெருமணத்தில சம்பந்தசுவாமிகளுடன் சிவன் திருவடிகளை அடைந்துகொண்டார். 11

வரும்பான் மையினிற் பெரும்பாணர் மலர்த்தாள் வணங்கி வயற்சாலிக்
கரும்பார் கழனித் திருநாவ லூரிற் சைவக் கலைமறையோர்
அரும்பா நின்ற அணிநிலவும் பணியும் அணிந்தார் அருள்பெற்ற
சுரும்பார் தொங்கற் சடையனூர் பெருமை சொல்ல லுறுகின்றும்.

இவ்வாறு சிவன் அருள்பெற்ற பெரும் சிறப்புடைய திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனரது மலரடிகளை அடியேன் வணங்கி; விளைந்த நல்ல செஞ்சாலி நெல் அருகே கரும்புகளின் சோலைநிறைந்த திருநாவலூரினிலே சைவக்கலை உணர்ந்த அந்தணர் ஒருவராகி; அரும்பியபடி நின்ற அழகிய பிறையும் பாம்பும் அணிந்த சிவன் அருள் பெற்ற சிறப்புடைய வண்டுகள் மொய்த்திடும் மாலைசூடிய சடையனூர் என்பவரின் பெருமை சொல்லத்தொடங்குகின்றேம். 12

திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனர் புராணம் முற்றும்.

சடைய நாயனர் புராணம்

தம்பி ரானைத் தோழமைகொண் டருளித் தமது தடம் புயஞ்சேர்
கொம்ப னர்பால் ஒருதூது செல்ல ஏவிக் கொண்டருளும்
எம்பி ரானைச் சேரமான் பெருமாள் இணையில் துணைவராம்
நம்பி யாரூ ரரைப்பயந்தார் ஞால மெல்லாங் குடிவாழ.

தனது பெருமானுய சிவனைத் தனக்குத் தோழனுகக் கொண்டருளி? அவரைத் தனது விசாலித்த தோள்சேரும் பூங்கொடி பரவையார் பால் ஒரு தூது செல்ல விடுத்திட ஏவல் கொண்டருளும் எம்பெருமானை சேரமான் பெருமாளுக்கு இணையிலாத நட்பின் துணைவனுகும் சுந்தரரைப் பெற்றெடுத்தார் இந்த சடையனுராம் அந்தணர் இந்தப் பூமியில் எல்லாரும் குடிகள் தழைத்து வாழ்ந்திட;
இப்பூமியின்நலம் விளங்க; நாம்விளங்க; நல்லதவத்தின் குலம் விளங்க எம்பெருமான் சுந்தரரைப் பெற்றெடுத்த பேரருளாளர் சடையனூர் திருவடிகள் போற்றுவோம்1

சடையனூர் புராணம் முற்றும்.

இசைஞானியார் புராணம்

ஒழியாப் பெருமைச் சடையனூர் உரிமைச் செல்வத் திருமனையார்
அழியாப் புரங்கள் எய்தழித்தார் ஆண்ட நம்பி தனைப்பயந்தார்
ஒழியாக் குலத்தின் இசைஞானிப் பிராட்டி யாரை என் சிறுபுன்
மொழியாற் புகழ முடியுமோ? முடியா தெவர்க்கும் முடியாதால்.

என்றும் ஒழியாத பெருமை உடைய அந்தணர் சடையனூரது உரிமையாம் செல்வத் திரு மனைவியார் இவர் அழியாத முப்புரங்களையும் அம்பெய்து அழித்த சிவன் ஆண்டருளிய நம்பியாரூரரைப் பெற்றெடுத்தவர். தாய் வழியும் தந்தை வழியும் ஏதும் ஓர் குறையிலாத நற்குலத்தின் அந்த இசை ஞானிப் பெருமாட்டியாரை எனது சிறிய அற்பமொழியால் புகழமுடியுமோ அது முடியாது! எவர்க்குமே முடியாது. 1

இசைஞானித் தாயார் திருவடிகளைப் பொன்னின் மலர் கொண்டு போற்றி உய்வோம்

இசைஞானி அம்மையார் புராணம் முற்றும்.

வெள்ளானைச் சருக்கம்

மூல மான திருத்தொண்டத் தொகைக்கு முதல்வராய் இந்த
ஞாலம் உய்ய எழுந்தருளும் நம்பி தம்பி ரான் தோழர்
காலை மலர்ச்செங் கமலக்கண் கழறிற் றறிவாருடன் கூட
ஆலம் உண்டார் திருக்கயிலை அணைந்ததறிந்த படி யுரைப்பாம்.

இப்புராணத்திற்கு மூலமானதும் எவர்க்கும் உய்தியின் வழிதருவதுமான திருத்தொண்டத் தொகைக்கு; பாடியருளும் முதல்வராய் இந்த பூமி உய்ந்திட எழுந்தருளி வந்த தலைவர் எம்பெருமான் சிவனது தோழர் சுந்தரர்; காலையில் மலருகின்ற செந்தாமரை மலர் போலும் அழகிய கண்உடைய கழறிற்றறிவார் சேரமான் பெருமாளுடன் கூட; நஞ்சினை உண்டு காத்தருளிய பெருமானது திருக்கைலை மலையை அணைந்த வரலாற்றை அறிந்தபடி யாம் மொழிவோம். 1

படியில் நீடும் பத்திமுதல் அன்புநீரிற் பணைத்தோங்கி
வடிவுநம்பியாரூரர் செம்பொன்மேனி வனப்பாகக்
கடிய வெய்ய இருவினையின் கனைகட்டெழுந்து கதிர்பரப்பி
முடிவி லாத சிவபோகம் முதிர்ந்து முறுகி விளைந்ததால்.

இப்பூமியில் நீடித்த சிறப்புடைய பத்தி என்னும் வித்து முளைத்து அன்பு என்ற நீரினுல் செழித்து ஓங்கி அதன் வடிவே நம்பியாரூரரெனும் ஒருவராய செம்பொன்னின் வனப்புடையதாக வளர்ந்து அந்தபத்திப் பயிரை வளராது தடுத்திடும் கொடிய இருவினைகளின் கனைகள் நீக்கப் பட்டு எழுந்து பருத்து சிவஒளியாய கதிர் கனைப் பரப்பி முடிவிலாத சிவபோகம் முதிர்ந்து முறுகி விளைந்திடப் பெற்றது.

சுந்தரர் என்பதே பத்தி எனும் வான் பயிராகி வளர்ந்து ஏனைய உயிர்கள் உண்டு உய்யக் கொள்ளும் சிவபோகம் என்னும் விளைவு முதிர்ந்து முறுகி விளைந்திடப் பெற்றது. 2

ஆரம் உரகம் அணிந்தபிரான் அன்பர் அணுக்க வன்றொண்டர்
ஈர மதுவார் மலர்ச்சோலை எழிலா ரூரில் இருக்கு நாள்
சேரர் பெருமாள் தனைநினைந்து தெய்வப்பெருமான் கழல்வணங்கிச்
சாரல் மலைநா டணைவதற்குத் தவிரா விருப்பி னுடன் போந்தார்.

மாலையாகப் பாம்பினை அணிந்த பெருமான் சிவனது அன்பர்; சிவனை சமீபித்து நெருங்கிய வன்மொண்டர்: இவ்வாறான சிவபோக முதிர்ச்சியுடன்: ஈரமுடைய தேன்தரும் பூஞ்சோலையின் எழில் அழகுடைய திருவாரூரில் இருக்கும் காலத்தில்; கழறிற்றறிவார் சேர அரசர்பெருமானை மிகவும் நினைந்து அவரிடம்போக எண்ணி தெய்வங்கட்கெல்லாம் பெருமானைய திருவாரூர்நாதன் சேவடிகளை வணங்கி எழுந்து விடைபெற்று திருவாரூர்விடுத்து நீங்கி நல்ல சாரல்சோழியுடைய மலைநாட்டைச் சேர்வதற்கு தவிர்க்கமுடியாததொரு விருப்பத்துடன் போய்க்கொண்டார்.

இன்று சுந்தரர்பெருமான் சேரநாடுபோக எழுந்த விருப்பம் அருளின் தொடர்புடையதானமையின் தவிரா விருப்பமாக நின்றது. 3

நன்னீர்ப் பொன்னித் திருநாட்டு நாதர் மகிழுந் திருப்பதிகள்
முன்னி இறைஞ்சி அகன்றுபோய் முல்லைப் படப்பைக் கொல்லைமான்
துன்னி உகைக்குங் குடக்கொங்கில் அணைந்து தூய மதிவான்நீர்
சென்னி மிசைவைத் தவர் செல்வத் திருப்புக் கொளியூர் சென்றடைந்தார்.

சென்றிடும் எம்பெருமான் சுந்தரர் நல்ல நீர்வளம் உடைய காவிரியின் திருவுடைய நாட்டில் எம்பெருமான் சிவன் அமர்ந்திட மகிழும சிறப்புடைய திருத்தலங்கள் நினைந்துசென்றுவணங்கி அங்கு நீங்கிப்போய் முல்லைநிலத்தின் தோட்டங்களில் மரன்கள் துள்ளி ஓடிடும் மேற்குத் திக்கில் உள்ள கொங்கநாட்டில் அணைந்து; தூயபிறையும் வானநீராய கங்கையையும் திருமுடிமீது வைத்தருளிய பெருமானது செல்வமுடைய திருப்புக்கொளியூர் அவிநாசி என்னும் தலத்தைச்சென்று சேர்ந்தார். 4

மறையோர் வாழும் அப்பதியின் மாடவீதி மருங்கணைவார்
நிறையுஞ் செல்வத் தெதிர்மனைகள் இரண்டில் நிகழ்மங் கலவியங்கள்
அறையும் ஒலியொன் றினில்ஒன்றில் அழுகை ஒலிவந் தெழுதலும் ஆங்(கு)
உறையும் மறையோர்களை இரண்டும் உடனே நிகழ்வ தென்? என்றார்.

அங்கு சென்றபோது அந்தணர்கள் வாழும் அந்த ஊரில் மாடங்கள் நிரம்பிய வீதியின்வழியாக வருபவர் நிறைகின்ற செல்வமுடைய எதிர் எதிர் இருக்கும் திருமனைகள் இரண்டில் ஒன்றில் நிகழ்ந்துகொண்டிருக்கும் மங்கலவாத்தியங்கள் முழங்குகின்ற ஓசையும்; நேராக அதற்கு எதிர்உள்ள மற்ற மாளிகை ஒன்றில் அழுகை ஓசையும்வந்து எழுதலும் அதுகண்ட எம்பெருமான் சுந்தரர் அங்கு வாழ்கின்ற அந்தணர்களை நோக்கி 'இந்தவகை இன்பமும் துன்பமும் இரண்டும் உடன் நிகழ்வது என்ன காரணம் எனக் கேட்டார்; 5

அந்த ணாளர் வணங்கி அரும்புதல்வர் இருவர் ஐயாண்டு
வந்தபிராயத்தினர் குளித்த மடுவில் முதலைஒருமகவை
முந்த விழுங்கப் பிழைத்தவனை முந்நூல் அணியுங் கலியாணம்
இத்தமனைமற்றந்தமனை இழந்தார் அழுகைஎன்றுரைத்தார்.

அதுகேட்ட அந்த அந்தணர்கள் எம்பெருமான் சுந்தரமூர்த்தியாரை வணங்கி, ''ஐயனே இந்த இரு மாளிகையிலும் வாழ்ந்த அரும்புதல்வர்கள் இரண்டுபேர் ஐந்துவயது வந்து நிரம்பப்பெற்றவர். தாங்கள் குளித்திடப்போனதொரு குளத்தில் இருந்த முதலை ஒரு பிள்ளையை முன்னுக விழுங்கிட: அப்போது தப்பிப் பிழைத்து ஓடிவந்த அந்த மற்றப் பிள்ளையை மூப்புரிநூல் அணிகின்ற கலியாண மங்கல ஓசை பொலிவது இந்தமனை; மற்று அந்தமனையில் முதலைவிழுங்கிய பிள்ளையை இழந்தாரின் அழுகை நிகழ்கிறது'' என்று கூறினர்கள். 6

இத்தன் மையினைக் கேட்டருளி இரங்குந் திருவுள் தினராம்
மொய்த்த முகைத்தார் வன்மொண்டர் தம்மை முன்னே கண்டிறைஞ்ச
வைத்த சிந்தை மறையோனும் மனைவி தானும் மகவிழந்த
சித்த சோகம் தெரியாமே வந்து திருத்தாள் இறைஞ்சினர்.

இத்தன்மையினைக் கேட்டருளி பிள்ளையை முதலைஉண்ட அவர்பால் இரங்கிடும் திருவுள்ளம் கொள்ளும்} வண்டுகள் மொய்த்த மாலைஅணிந்த எம்பெருமான் வன்மொண்டரை முன்னே ஒருநாளாகுதல் சென்றடைந்து வணங்கவேண்டும் என வைத்த மனம் உடைய; மகனை இழந்த துயரத்தால் இப்பொழுது அழுகின்ற அந்த அந்தணரும் அவரது மனைவியும் சுந்தரர் அவ்வழிவந்தரர் என்பது தெரிந்ததும் தமது சித்தத்து எழுந்த துயரமும் தெரியாது உடன் ஓடிவந்து சுந்தரர்பெருமானது திருவுடைய பாதங்களை வணங்கினர்; 7

துன்பம் அகல முகமலர்ந்து தொழுவார் தம்மை முகநோக்கி
இன்ப மைந்தன் தனைஇழந்தீர் நீரோ? என்ன எதிர்வணங்கி
முன்பு புகுந்து போனதது முன்னே வணங்க முயல்கின்றேம்
அன்பு பழுதா காமலெழுந் தருளப் பெற்றேம் எனத்தொழுதார்.

தமது துன்பம் அகல முகம் மலர்ந்து தொழுவார்தம்மை முகம்பார்த்து எம்பிரான் சுந்தரர் சொல்வார். ''இன்பமுடைய மைந்தனை இழந்தீர் நீரோ'' என்றிடலும் அவர்கள் மீளவும் வணங்கி ''ஐயனே அது முன்பு நடந்துபோனது. ஆனல் தேவரீரை முன்புள்ளகாலம் எல்லாம் பலநாள் தொடுத்து ஒருநாளாகுதல் வணங்க முயன்று கொண்டிருக்கின்றேம். அவ்வழி அன்புபூண்ட எமது அன்பு பழுதா காமல் தேவரீர் இன்று இங்கு எழுந்தருளப்பெற்றேம்'' என்றுகூறித் தொழுதார்கள். 8

மைந்தன் தன்னை இழந்ததுயர் மறந்து நான்வந் தணைந்ததற்கே
சிந்தை மகிழ்ந்தார் மறையோனும் மனைவி தானும் சிறுவனையான்
அந்த முதலை வாய்நின்றும் அழைத்துக் கொடுத்தே அவிநாசி
எந்தைபெருமான் கழல்பணிவேன் என்னூர் சென்னூர் இடர்களைவார்.

சுவாமி அதனைக் கேட்டலும் ''தமது அருமை மைந்தனை இழந்த துயரம் மறந்து நான் வந்தணைந்த அதனிற்குத் தமது சிந்தை மகிழ்ந்து நிற்கின்றார் அந்தணரும் அவரது மனைவிதானும்'' ஆனமையால் அந்தச் சிறுவன் உண்ட அந்த முதலைவாய் நின்றும் அந்தப்பிள்ளையை அழைத்துக்கொடுத்த பின்பே அவிநாசித்தலத்திருந்த எந்தைபெருமான் திருவடி பணிவேன் என்னூர் தன்னை அண்டினரது இடரினைக் களையும் எம்பெருமான் சுந்தரர்; 9

இவ்வா றருளிச் செய்தருளி இவர்கள் புதல்வன் தனைக் கொடிய
வெவ்வாய் முதலை விழுங்குமடு எங்கே? என்று வினவிக்கேட்(டு)
அவ்வாழ் பொய்கைக் கரையி லெழுந் தருளி அவனை அன்றுகவர்
வெவ்வாள் எயிற்று முதலைகொடு வருதற் கெடுத்தார் திருப்பதிகம்

இவ்வாறு மொழிந்தருளி அவ்வணமே அருள்புரிய ''இவர்களது அப்பிள்ளையைக் கொடியவாயுடைய முதலைவிழுங்கும் மடு எங்கே', என்று வினவிக் கேட்டு அந்த ஆழ்ந்த பொய்கைக்கரையில் எழுந்தருளிச் சென்று; அந்தப்பிள்ளையை அன்று பிடித்து விழுங்கிய கூரிய வாள்போன்ற பற்களை உடைய முதலை; விழுங்கிய அப்பிள்ளையைக்கொண்டுவந்து சேர்ப்பதற்கு திருப்பதிகம் பாடஎடுத்துக்கொண்டார் எம்பிரான் சுந்தர்மூர்த்தி. 10

உரைப்பார்உரை என் றெடுத்ததிருப் பாட்டு முடி யாமுன்னுயர்ந்த
வரைப்பான் மையில்நீள் தடம்புயத்து மறலி மைந்தன் உயிர்கொணர்ந்து
திரைப்பாய் புனலின் முதலைவயிற்றுடலிற் சென்ற ஆண்டுகளும்
தரைப்பால் வளர்ந்த தென நிரம்ப முதலை வாயில் தருவித்தான்.

'எற்றுன் மறக்கேன்' எனத் தொடங்சிய அப்பதிகத்து ''உரைப்பார் உரை உகந்து உள்கவல்லார் தங்கள் உச்சியாய்,, என்ற ஐந்தாவது திருப்பாட்டு முடியா முன்னர்; உயர்ந்த மலைபோன்ற பாங்குடைய பெரும் தோளுடைய இயமன் அந்த மைந்தனின் உயிரைக் கொணர்ந்து திரைகள் பாய்கின்ற நீருடைய அக்குளத்தில் இருந்த முதலையின் வயிற்றில்சேர்த்து அவ்விடத்து இப்பிள்ளை இப்பூமியில் அன்று தொட்டு இருந்திருந்தால் நிரம்ப வளரவேண்டிய அந்தச் சென்ற ஆண்டுகளுமே இப்பூமியில் இருந்து வளர்ந்துளான்போல உருவெடுத்து நிரம்பிடச்செய்து; அம்முதலை வாயால் அப்பிள்ளையைக் கக்கிடச்செய்தான்.

முதலை உண்டபிள்ளையை மீட்டிட அவர்பாடஎடுத்ததிருப்பதிகம் இதுவாகும் 11

திருப்புக்கொளியூர் அவநாசி

பண்–குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

எற்றுன் மறக்கேன் எழுமைக்கும் எம்பெரு மானையே
உற்றுய்என் றுன்னையே உள்குகின் றேன்உணர்ந்துள்ளத்தால்
புற்று டரவா புக்கொளி பூரவி நாசியே
பற்றுக வாழ்வேன் பசுபதி யேபர மேட்டியே. 1

வழிபோவார் தம்மோடும் வந்துடன் கூடிய மாணிநீ
ஒழிவ தழகோ சொல்லாய் அருளோங்கு சடையானே
பொழிலா ருஞ்சோலைப் புக்கொளி பூரிற் குளத்திடை
இழியாக் குளித்த மாணிளன் னைக்கிறி செய்ததே. 2

எங்கேனும் போகினும் எம்பெரு மானை நினைந்தக்கால்
கொங்கே புகினுங் கூறைகொண் டாறலைப் பார்இலை
பொங்கா டரவா புக்கொளி பூரவி நாசியே
எங்கோ னேஉனை வேண்டிக்கொள் வேன்பிற வாமையே. 3

உரைப்பார் உரைஉகந் துள்கவல் லார்தங்கள் உச்சியாய்
அரைக்கா டரவா ஆதியும் அந்தமும் ஆயினாய்
புரைக்காடு சோலைப் புக்கொளி பூரவி நாசியே
கரைக்கால் முதலையைப் பிள்ளை தரச்சொல்லு காலனையே. 4

அரங்காவ தெல்லா மாயிடு காடது அன்றியும்
சரங்கோலை வாங்கி வரிசிலை நாணியிற் சந்தித்துப்
புரங்கோட எய்தாய் புக்கொளி பூரவி நாசியே
குரங்காடு சோலைக் கோயில்கொண் டகுழைக் காதனே. 5

நாத்தா னும்உனைப் பாடல்அன் றிநவி லாதெனைச்
சோத்தென்று தேவர் தொழநின்ற சுந்தரச் சோதியாய்
பூத்தாழ் சடையாய் புக்கொளி பூரவி நாசியே
கூத்தா உனக்குநான் ஆட்பட்ட குற்றமுங் குற்றமே. 6

மந்தி கடுவனுக் குண்பழம் நாடி மலைப்புறம்
சந்திகள் தோறுஞ் சலபுட்பம் இட்டு வழிபடப்
புந்தி உறைவாய் புக்கொளி பூரவி நாசியே
நந்தி உனைவேண்டிக் கொள்வேன் நரகம் புகாமையே. 7

பேணு தொழிந்தேன் உன்னைஅல் லாற்பிற தேவரைக்
காணு தொழிந்தேன் காட்டுதி யேலின்னங்கா ண்பன்நான்
பூணுண் அரவா புக்கொளி பூரவி நாசியே
காணுத கண்கள் காட்டவல் லகறைக் கண்டனே. 8

நள்ளாறு தெள்ளா றரத்துறை வாய்எங்கள் நம்பனே
வெள்ளாடை வேண்டாய் வேங்கையின் தோலை விரும்பினாய்
புள்ளேறு சோலைப் புக்கொளி பூரிற் குளத்திடை
உள்ளாடப் புக்க மாணியென் னைக்கிறி செய்ததே. 9

நீரேற ஏறுநிமிர் புன்சடை நின்மல மூர்த்தியைப்
போரேற தேறியைப் புக்கொளி பூரவி நாசியைக்
காரேறு கண்டனைத் தொண்டன் ஆரூரன் கருதிய
சீரேறு பாடல்கள் செப்பவல் லார்க்கில்லை துன்பமே. 10

திருச்சிற்றம்பலம்

பெருவாய் முதலை கரையின்கண் கொடுவந் துமிழ்ந்த பிள்ளைதனை
உருகா நின்ற தாய்ஒடி எடுத்துக் கொடுவந் துயிரளித்த
திருவா ளன்தன் சேவடிக்கீழ்ச் சீல மறையோ னெடுவீழ்ந்தாள்
பருவார் தருவின் மலர்மாரி பொழிந்தார் விசும்பில் வானோர்கள்.

பெரிய வாயுடைய முதலை கரையினிடத்து கொண்டுவந்து கக்கி விட்டபிள்ளை தனைக் கண்டு உருகிய தாய் ஓடிச்சென்று அப்பிள்ளையை எடுத்துக் கொண்டு வந்து; அப்பிள்ளைக்கு உயிர்கொடுத்த திருவாளன் சுந்தரர் பெருமானது சிவந்த திருவடிக் கீழாக சீலமுடைய தனது கணவனுடன் பரவசமாகி வீழ்ந்தாள். அந்த அற்புதம் கண்டு வாசமுடைய கற்பகதருவின்பூமழையினை தேவர்கள் வானத்தில் பொழிந்தார்கள். 12

மண்ணி னுள்ளார் அதிசயித்தார்; மறையோ ரெல்லாம் உத்தரியம்
விண்ணில் ஏற விட்டார்த்தார்; வேத நாதம் மிக்கெழுந்த(து)
அண்ண லாரும் அவிநாசி அரனூர் தம்மை அருமறைய்யான்
கண்ணின் மணியாம் புதல்வனையும் கொண்டு பணிந்தார் காசினிமேல்.

இப்பூமியில் உள்ளார் இதுகண்டு அதிசயம் கொண்டனர் அந்தணர்கள் யாவரும் உத்தரியங்களை வானில் உயர எறிந்து ஆரவாரித்தார்கள். வேதங்களின் ஓசை மிக எழுந்து கொண்டது. அவ்வேளை எம் அண்ணல் சுந்தரர் பிரானும் திருப்புக்கொளியூர் அவி நாசித்தலத்திருந்த பெருமானை அரிய அப்பிராமணது எதுகண்ணின் மணிபோன்ற மைந்தனையும் கொண்டு சென்று பணிந்தார் இந்த உலகினில்

இந்த உலகினிற்தான் இந்த அற்புதம் நிகழ்ந்தது என்பதனையுணர்க. 13

பரவும் பெருமைத் திருப்பதிகம் பாடிப் பணிந்து போந்தன்பு
விரவு மறையோன் காதலனை வெண்ணூல் பூட்டி அண்ணலார்
முரசம் இயம்பக் கலியாணம் முடித்து முடிச்சே ரலர்தம்பால்
குரவ மலர்ப்பூந் தண்சோலை குலவு மலைநாடனைகின்றூர்.

அங்கு திருபுக்கொளியூர் அவிநாசிப் பெருமானைப் போற்றிடும் திருப்பதிகம் பாடிப் பணிந்து அப்பால் போய் தம்மிடம் அன்பு பூண்ட அந்த அந்தணனுடைய மைந்தனை வெண்ணிற மாய பூணூல் அணிந்திடச் செய்து எம்பிரான் சுந்தரர் அங்கு முரசப்பறை முழங்கிடக் அப்பூணூல் அணியும் கலியாணம் முடித்து; அப்பால் முடியுடைய சேர அரசர் பெருமானிடமாக; விளங்கிடும் பூக்கள் மலிந்த குளிர்ந்த சோலையுடைய மலை நாட்டைச் சேர்கின்றூர். 1

சென்ற சென்ற குடபுலத்துச் சிவனூர் அடியார் பதிகள் தொறும்
நன்று மகிழ்வுற் றின்புற்று நலஞ்சேர் தலமுங் கானகமுந்
துன்று மணிநீர்க் கான்யாறும் துறகற் சுரமுங் கடந்தருளிக்
குன்ற வளநாட் டகம்புகுந்தார்; குலவும் அடியேன் அகம் புகுந்தார்.

மலைநாடுநோக்கிச் செல்லும் போது சென்ற சென்ற மேற்குப்புறத்துள்ள நாடுகளில் சிவனது அடியவரிருந்திடும் தலங்கள் தோறும் எம்பிரான்சுந்தரை வரவேற்று உபசரித்திட அந்த இடங்கள் தோறும் நன்று மகிழ்வுற்று இன்புற்று; நலம் சேருகின்ற தலங்களும் காடுகளும்: அழகியமுத்துப்போல் நீருடைய காட்டு ஆறுகளும்; சிறிய கற்களுடைய வழிநிலங்களையும் கடந்து சென்றருளி மலைகள் நிறைந்த வளமுடைய நாட்டின் உள்ளே சென்றூர் விளங்கும் அடியேனது உள்ளத்திலும் புகுந்தருளினார் அவர். 15

முன்னுள் முதலை வாய்ப்புக்க மைந்தன் முன்போல் வரமீட்டுத்
தென்னு ரூரர் எழுந்தருளா நின்றூர் என்று சேரர் பிரார்க்(கு)
அந்நாட்டரனூர் அடியார்கள் முன்னே ஓடி அறிவிப்பப்
பொன்னூர் கிழியும் மணிப்பூணுங் காசுந்தூசும் பொழிந்தளித்தார்.

முன்னுளில் முதலை வாயில் புகுந்தமைந்தன் ஒருவனை முன்போல வரமிட்டுக் கொண்டு தென்னாட்டின்தெய்வம் நம்பியாரூரர் தம்மிடம் எழுந்தருளி வந்து கொண்டிருக்கின்றூர் என்ற வார்த்தையை அந்த மலைநாட்டில் வாழும் அடியார்கள் சேரர் பெருமானுக்கு முன்னதை ஓடிச் சென்று அறிவிப்ப; அதுகேட்டலுமே அந்த மங்கலவாக்கைச் சொன்ன அவர்கட்கு பொன்னின் பண முடிப்புகளும் அழகிய முத்தாபணமும் பொற்காசும் ஆடையும் எல்லாம் அள்ளிப்பொழிந்து

செய்வ தொன்றும் அறியாது சிந்தை மகிழ்ந்து களிகூர்ந்(து)
என் ஐயன் அணைந்தான் எனை ஆளும் அண்ணல் அணைந்தான் ஆரூரிற்
சைவன் அணைந்தான் என் துணையாம் தலைவன் அணைந்தான் நாணிலாம்
உய்ய அணைந்தான் அணைந்தான் என்றேகை முரசஞ் சாற்று வித்தார்.

இந்த வார்த்தை கேட்டு மகிழ்வால் செய்வதென்றும் தெரியாது மனம்மகிழ்ந்து ஆனந்த முற்று; எனது ஐயன் வருகின்றான்; திருவாரூரில் சைவன் வருகின்றான்; எனது துணையான தலைவன் வருகின்றான்; இப்பூமியெல்லாம் உய்யவந்த பெருமான் வருகின்றான். எல்லீரும் இதனை அறியுங்கள் என தனது நகரம் எங்கும் மங்கல மகிழ் வைத் தெரிவிக்கும் முரசப்பறையை முழக்கிச் சொல்வித்தார் சேரர்பெருமான் 17

பெருகு மதிநூல் அமைச்சர்களை அழைத்துப் பெரிபோர் எழுந்தருளப்
பொருவில் நகரம் அலங்கரித்துப் பண்ணிப் பயணம் புறப்படுவித்(து)
அருவி மதமால் யானையினை அணைந்து மிசைகொண் டரசர்பெருந்
தெருவு கழிய எதிர்வந்தார் சேரர் குலம் உய்ந் திடவந்தார்.

பெருகிய அறிவினை உடைய நூல்களைக் கற்றுத் தேர்ந்த தமது மந்திரிகளை அழைத்து பெரியோராம் நம்பியாரூரர் எழுந்தருளி வந்திட நிகரற்ற தனது நகரத்தை அலங்கரித்திடச் செய்து இன்னமும் அந்த நகர அலங்காரத்திற்கு வேண்டிய செயல்களைச் செய்து மலை நாட்டெல்லையினில் சென்று வரவேற்றிட எல்லாரையும் ஒழுங்காகத் திரண்டுவர பயணம் புறப்படுவித்து தாம்; ஓர் அருவிபோல் மதம்பொழியும் யானையை அடைந்து அதன்மீது ஏறிக்கொண்டு அரசரது பெரும் தெருக்கள் கழிந்திட நேராகவரவேற்க வருகின்றார் சேரஅரசர்குலம் உய்ந்திடவரும் கழறிற்றறிவார் சேரமான்பெருமாள். 18

மலைநாட் டெல்லை புட்புகுத வந்த வன்றொண் டரை வரையில்
சிலைநாட் டியவெல் கொடித்தானைச் சேரர் பெருமான் எதிர்சென்று
தலைநாட் கமலப் போதனைய சரணம் பணியத் தாவில்பல
கலைநாட் டமுத ஆரூரர் தாமுந் தொழுது கலந்தனரால்.

மலைநாட்டின் எல்லையிடத்து உள்ளேசென்ற எம்பெருமான் வன்றொண்டரை இமயமலையில் வில்லின் கொடிநாடிய வெற்றிக்கொடியுடைய சேனைக்கு அதிபராய சேரர்பெருமான் எதிர்சென்று சிந்தைமலர்ந்து முதல்நாள் மலர்ந்த செவ்விய தாமரைமலர்போன்ற திருவடிகள் பணிந்திட அதுவேலை குறைவிலாத பல கலையினையும் நாட்டிடும் அமுதம்போல் தித்திக்கும் ஒருவராய நம்பியாரூரர் தாமும் சேரர்பெருமானைத் தொழுது அவருடன் அன்பினால் கலந்தனர். 19

சிந்தை மகிழுஞ் சேரலனூர் திருவா ரூரர் எனுமிவர்கள்
தந்த மணிமே னிகள்வேறும் எனினும் ஒன்றுந் தன்மையராய்
முந்த எழுங்கா தலிற்றொழுது முயங்கு உதியர் முதல்வேந்தர்
எந்தை பெருமான் திருவாரூர்ச் செல்வம் வினவி இன்புற்றார்.

சுந்தரர்பெருமானைக்கண்டு தன்சிந்தை மலர்ந்து மகிழும் சேரர்பிரானும்: திருவாரூரர் என உலகம் உய்ந்திட நாம் உய்ந்திடவரும் சுந்தரர்பிரானும் ஆன இவர்கள் இருவரும் தத்தமது அழகிய மேனிகள் வேறுக உள்ளன என்றாலும் உயிர் ஒன்றுகி உள்ளனர் என்னும் தன்மையராய் முன்னுக எழுகின்ற அன்பினால் தொழுது இன்புற்ற பின்னர் சேரர்களது முதன்மை உடைய அரசர்பெருமான் எந்தைபெருமான் திருவாரூர் அப்பனின் அருட்செல்வம் வினவிக்கேட்டு இன்புற்றார். 20

ஒருவர் ஒருவ ரிற்கலந்து குறைபா டின்றி உயர் காதல்
இருவர் நண்பின் செயல்கண்ட இரண்டு திறத்து மாந்தர்களும்
பெருகு மகிழ்ச்சி கலந்தார்த்தார் பெருமாள் தமிழின் பெருமாளை
வருகை வரையின் மிசைஏற்றித் தாம்பின் மதிவெண் குடைகவித்தார்.

ஒருவர் ஒருவரிற் கலந்து குறைபாடு ஏதும் மூளாத்திடா உயர்ந்தநெறியின் அற்புதக்காதலால் பெருகிநிற்கும் இருவரது நண்பின் செயலினைக் கண்டுகொண்ட இரண்டு பக்கத்திலிருந்தும வ்விடம்சேர்ந்த மக்கள் அனைவரும் தத்தமது உள்ளம்பொங்கிப்

கலந்து ஆரவாரித்தார். அப்பொழுது சேரமான் பெருமாள் தமிழின் தெய்வப்பெருமாள் சுந்தரரை இயல்பாக தாம் எழுந்தருளிவந்த பட்டத்து யானையின்மேலாக ஏற்றி தாம் பின்னுக இருந்து எம்பெருமான் சுந்தரற்குமேலே வெள்ளைச் சந்திரவட்டக் குடையினைப் பிடித்தார். 21

உதியர் பெருமாள் பெருஞ்சேனை ஓதங் கிளர்ந்த தென ஆர்ப்பக்
கதிர்வெண் திருநீற் றன்பர்குழாம் கங்கை கிளர்ந்த தென ஆர்ப்ப
எதிர்வந் திறைஞ்சும் அமைச்சர் குழாம் ஏறும் இவுளித் துகள் ஆர்ப்ப
மதிதங் கியமஞ் சணி இஞ்சி வஞ்சி மணிவாயிலை அணைந்தார்.

எம்பெருமான் சுந்தரர் இவ்வாறு யானைமேல் எழுந்தருளிக் கொண்ட நேரத்து சேரஅரசருடைய பெருஞ்சேனை கடல் கிளர்ந்து பொங்கி எழுவது போன்று ஆரவாரிப்ப ஒளிவிடும் வெண்மை நிறமுடைய திருநீறு அணிந்த அன்பர் கூட்டம் கங்கையாறு கிளர்ந்து வருகின்றது என ஆரவாரிப்ப முன்னுக வந்து வணக்கம் செலுத்திடும் மந்திரிகள் ஏறியகுதிரைகள் வேகமுடன் வந்திடும்போது எழுகின்ற புழுதிகள் சுழன்றுர்ப்ப சந்திரன் தங்கும்படி உயர்ந்த மேகம் தவழும் மதில் சூழ்ந்த கொடுங்கோளூரின் அழகிய வாயிலை வந்து சேர்ந்தார் எம்பெருமான் சுந்தரர். 22

வேறு

ஆரண மொழிகள் முழங்கிட ஆடினர் குணலைகள் அந்தணர்
வார்ண மதமழை சிந்தின; வாசிகள் கிளரொளி பொங்கின
பூரண கலசம் மலிந்தன; பூமழை மகளிர் பொழிந்திடும்
தோரண மறுகு புகுந்தது தோழர்கள் நடவிய குஞ்சரம்.

அந்தநேரத்தில் எம்பிரான் சுந்தரரை யானை மீது கண்டுகண்குளிர்ந்து பரவசமாகி; அந்தணர்கள் வேதம்முழங்கிட குணலைக் கூத்தாடினர். யானைகள் மதமாய மழையைச் சொரிந்தன. குதிரைகள் வரிசைகளின்ஒளி பொங்கின. எங்கும் பூரணகும்பங்கள் மலிந்தன உள்ளத்துமலர்ச்சியுடன் பெண்கள் வாழ்த்திப்பொழிகின்ற பூமழை இடையாக பொலிகின்ற தோரண முகப்புடைய வீதியில் உட்சென்றது தோழர்கள் இருவரும் செலுத்திய அந்தபட்டத்து யானை 23

அரிவையர் தெருவில் நடம்பயில் அணிகிளர் தளிரடி தங்கிய
பரிபுர வொலிகள் கிளர்ந்தன; பணைமுர சொலிகள் பரந்தன
சுரிவளை நிரைகள் முரன்றன; துணைவர்கள் இருவரும் வந்தணி
விரிதரு பவன நெடுங்கடை விறல்மத கரியின் இழிந்தனர்.

பெண்கள் தெருவில் நடனம்செயகின்றபோது அவரது அழகிய தளிர்போன்ற அடியில் அணிந்த சிலம்புகளின் ஒலிகள் கலின் கலின் என மேல் எழுந்தன; பெருத்த முரசப்பறை ஓசைகள் எங்கும் பரந்தன. சுழியுடைய சங்குகள் வரிசை வரிசையாக எங்கும் ஊதப்பட்டன. இவ்வாறான சீரிய மங்களவரவேற்பின் ஓசையுடன் தோழர்கள் இருவரும் வந்து அழகே எங்கும் விரிந்தவாறு இருக்கும் அரண்மனையின் நீண்ட வாயிலில் தாம் செலுத்தி வந்தருளிய மிக்க வலியுடைய மதயானையின் நின்றும் இறங்கினர்கள். 24

தூநறு மலர்தர ளம்பொரி தூவிமுன் இருபுடை யின் கணும்
நான்மறை முனிவர்கள் மங்கல நாமநன் மொழிகள் விளம்பிட
மேனிறை நிழல்செய வெண்குடை விசிய கவரி மருங்குற
வானவர் தலைவரும் நண்பரும் மாளிகை நடுவு புகுந்தனர்.

அதுவேலை தூயவாசனை உடைய பூவும் முத்தும் நெற்பொரியும் சொரிந்து இருபுறத்தினிடமும் நான்குவேதவழி ஒழுகும் முனிவர்கள் மங்கல நாமங்களான நன்மைதரும் மொழிகள் விளம்பிட மேலாகநிறைந்த வெண்மையின் ஒளிகாலும் சந்திரவட்டக்குடை நிழலைச்செய்ய; இருபுறமும் வீசிய வெண்சாமரைகள் அருகாக அசைந்திட தேவர்கட்கு நாயகரான சுந்தரர்பெருமானும் நண்பர் சேரர்பெருமானும் மாளிகையின் நடுவிலே புகுந்துகொண்டனர். 25

அரியணை யதனில் விளங்கிட அடல்மழ விடைஎன நம்பியை
வரிமலர் அமளி அமர்ந்திட மலையர்கள் தலைவர் பணிந்துபின்
உரிமைநல் வினைகள் புரிந்தன உரைமுடி விலவென முன்செய்து
பரிசனம் மனமகி ழும்படி பலபட மணிநிதி சிந்தினர்.

மாலிகை உட்புகுந்தருளி அழகிய சிங்காசனமதனிலில் எங்கும் விளக்கமுற்றிட இருக்கும் ஓர் வலிமையுடைய தருமத்தின் வடிவான இளம் இடபம் பேன்ற சுந்தரமூர்த்திப் பெருமானை; வண்டுகள் மொயத்திடும் மலர்ஆசனத்தில் இருந்திட வைத்தருளி அவரை; மலைநாட்டவர் தலைவரான சேரமான்பெருமாள்பணிந்து பன்னுக அவர்க்கு தாம் செய்யும் உரிமையின் நற்செயல்களாவை பாதபூசை சொல்ல முடிலிலாதனமுன்பு செய்து அப்பால் அவரது பரிசனர்கள் மனம் மகிழும்படி பல லகைப்படமணிகளினையும் பொன்னையும் அவர்க்கு வாரிக்கொடுத்தார். 26

வேறு

இன்ன தன்மையில் உதியர்கள் தலைவர்தாம் இசை முனைப்பாடி
மன்னர் தம்முடன் மகிழ்ந்தினி துறையு நாள் மலைநெடு நாட்டெங்கும்
பன்ன கம்புனை பரமர்தந் திருப்பதி பலவுடன் பணிந்தேத்திப்
பொன்னெ டுந்திட மூதெயில் மகோ தையிற் புகுந்தனர் வன்றொண்டர்.

இன்ன தன்மையாக சேர அரசர்கள் தலைவர் சேரமான் பெருமாளும் தமது இடாயாவும் நீங்கிட திருமுனைப்பாடி நாட்டு அரசர் பெருமானுய சுந்தரமூர்த்தி சுவாமிகளுடன் மகிழ்ந்து இனிதே வாழ்கின்ற காலத்தில்; மலைநாடுகள் எங்கும் பாம்பணிந்த பெருமானுடைய திருத்தலங்கள் பலவுடன் பணிந்து போற்றிக் கொண்டு பின்னரும் பொன்னிலான நெடிய மதிலுடன் சிறந்த மகோதை எனும் தலைநகரில் புகுந்தார் எம்பிரான் சுந்தரர். 27

ஆய செய்கையில் நாள்பல கழிந்தபின் அரசர்கள் முதற் சேரர்
தூய மஞ்சனத் தொழிலினின் தொடங்கிடத் துணை வராம் வன்றொண்டர்
பாயகங்கைசூழ் நெடுஞ் சடைப் பரமரைப் பண்டுதாம் பிரிந்தெய்தும்
சேய நன்னெறி குறுகிடக் குறுகினர் திருவஞ்சைக் களந்தன்னில்.

இவ்வாறுன செயல்களில் பலநாட்கள் போயபிற்பாடு ஓர்நாள் சேர அரசரின் முதல வராய சுழற்றறிவார் சேரமான் பெருமாள் தூயதான திருமஞ்சனத் தொழிலில் தொடங்கிட; அவரது என்றும் துணைவராய; வன்தொண்டராய் ஆண்டருளப் பெற்ற சுந்தரமூர்த்தி சுவாமிகள்; பாயும் கங்கையாறு சூழும் நெடுஞ்சடையுடைய பரம்பொருளாய சிவனை முன்னர் தாம் பிரிந்து இங்கு வந்து இருந்திடும் அந்த தூரமாய இருந்த நல்நெறி இப்பொழுது அங்கு திருமுன்பு போயருளும் படியான எல்லையில்வந்தருள தாம்; அன்று அருளின் வகையால அதற்குற்ற திருவஞ் சைக்களம் என்னும் தலத்து வந்து சேர்ந்தருளினர். 28

கரிய கண்டர்தங் கோயிலை வலங்கொண்டு காதலாற் பெருகன்பு
புரியும் உள்ளத்தர் உள்ளணைந் திறைவர்தம் பூங்கழலிணைபோற்றி
அரிய செய்கையில் அவனியில் விழுந்தெழுந் தலைப்புறும் மனைவாழ்கை
சரிய வேதலைக் குத்தலை மாலை என் றெடுத்தனர் தமிழ்மாலை.

கருமை உடைய கண்டத்து எம்பெருமானது கோயிலை வலம் கொண்டு காதலால் பெருகுகின்ற அன்பு கொள்ளும் உள்ளத்தராய் உள்ளே சேர்ந்து ஈசனுடைய மலர்போன்ற திருவடி யிணைகளைப் போற்றி அரிதான செய்கையால் இப்பூமியில் வீழ்ந்து வணங்கி எழுந்துநின்று அவரை வைத்துத் துயருறுத்தும் மனைவாழ்க்கை சரிந்து நீங்கிடும்படி இறைவனை வேண்டுவாராகி ''தலைக்குத் தலைமாலை'' எனத்தொடங்கிடும் தமிழ்ப்பதிகமாலையை அப்பொழுது படியாருள எடுத்தனர்.

அவர்பாட எடுத்தருளிய திருப்பதிகம் அதனினை இப்பால் தருகின்றோம். 20

திருஅஞ்சைக்களம்

பண்—இந்தளம்

திருச்சிற்றம்பலம்

தலைக்குத் தலைமாலை அணிந்த தென்னே
சடைமேற் கங்கைவெள்ளம் தரித்த தென்னே
அலைக்கும் புலித்தோல்கொண் டசைத்த தென்னே
அதன்மேற் கதநாகக்கச் சார்த்த தென்னே
மலைக்குந் நிகர்ஒப் பனவன் திரைகள்
வலித்தெற் றிமுழங் கிவலம் புரிகொண்
டலைக்குங் கடலங் கரைமேல் மகோதை
அணியார் பொழில்அஞ் சைக்களத் தப்பனே. 1

பிடித்தாட்டி ஓர்நாகத் தைப்பூண்ட தென்னே
பிறங்குஞ் சடைமேற் பிறைசூடிற் றென்னே
பொடித்தான் கொண்டுமெய்ம் முற்றும் பூசிற்றென்னே
புகரே றுகந்தேறல் புரிந்த தென்னே
மடித்தோட் டந்துவன் றிரைஎற் றியிட
வளர்சங் கம்அங்காந்து முத்தஞ் சொரிய
அடித்தார் கடலங் கரைமேல் மகோதை
அணியார் பொழில்அஞ் சைக்களத் தப்பனே. 2

சிந்தித் தெழுவார்க்கு நெல்லிக் கனியே
சிறியார் பெரியார் மனத்தேறல் உற்றூல்
முந்தித் தொழுவார் இறவார் பிறவார்
முனிகள் முனியே அமரர்க் கமரா
சந்தித் தடமால் வரைபோல் திரைகள்
தணியா திடறுங் கடலங் கரைமேல்
அந்தித் தலைச்செக்கர் வானே ஒதியால்
அணியார் பொழில்அஞ் சைக்களத் தப்பனே. 3

இழைக்கு மெழுத்துக் குயிரேஒத் தியால்
இலையே ஒத்தியால் உணையே ஒத்தியால்
குழைக்கும் பயிர்க்கோர் புயலே ஒத்தியால்
அடியார் தமக்கோர் குடியே ஒத்தியால்
மழைக்குந் நிகர்ஒப் பனவன் திரைகள்
வலித்தெற் றிமுழங் கிவலம் புரிகொண்
டழைக்குங் கடலங் கரைமேல் மகோதை
அணியார் பொழில்அஞ் சைக்களத் தப்பனே. 4

வீடின் பயனென் பிறப்பின் பயனென்
விடையே றுவதென் மதயா னைநிற்கக்
கூடும் மலைமங் கைஒருத் தியுடன்
சடைமேற் கங்கையாளை நீசூடிற் றென்னே
பாடும் புலவர்க் கருளும் பொருளென்
நிதியம் பலசெய் தகலச் செலவில்
ஆடுங் கடலங் கரைமேல் மகோதை
அணியார் பொழில்அஞ் சைக்களத் தப்பனே. 5

இரவத் திடுகாட் டெரியாடிற் றென்னே
இறந்தார் தலையிற் பலிகோடல் என்னே
பரவித் தொழுவார் பெறுபண்டம் என்னே
பரமா பரமேட் டிபணித் தருளாய்
உரவத் தொடசங்க மொடிப்பி முத்தம்
கொணர்ந்தெற் றிமுழங் கிவலம் புரிகொண்
டரவக் கடலங் கரைமேல் மகோதை
அணியார் பொழில்அஞ் சைக்களத் தப்பனே. 6

ஆக்கும் மழிவும் ஐய நீ என்பன்நான்
சொல்லுவார் சொற்பொரு ளைவைநீ என்பன்நான்
நாக்கும் செவியுங் கண்ணும்நீ என்பன்நான்
நலனே இனிநான் உனைநன் குணர்ந்தேன்
நோக்குந் நிதியம் பலஎத் தனையும்
கலத்திற் புகப்பெய்து கொண்டேற நுந்தி
ஆர்க்குங் கடலங் கரைமேல் மகோதை
அணியார் பொழில்அஞ் சைக்களத் தப்பனே. 7

வெறுத்தேன் மனைவாழ்க் கையைவிட் டொழிந்தேன்
விளங்குங் குழைக்கா துடைவே தியனே
இறுத்தாய் இலங்கைக் கிறையா யவனைத்
தலைபத் தொடுதோள் பலஇற் றுவிழக்
கறுத்தாய் கடல்நஞ் சமுதுண் டுகண்டம்
கடுகப் பிரமன் தலையைந் திலும்ஒன்று
அறுத்தாய் கடலங் கரைமேல் மகோதை
அணியார் பொழில்அஞ் சைக்களத் தப்பனே.

பிடிக்குக் களிறே ஒத்தியால் எம்பிரான்
பிரமற் கும்பிரான் மற்றைமாற் கும்பிரான்
நொடிக்கும் அளவிற் புரம்மூன் றெரியச்
சிலைதொட்ட டவனே உனைநான் மறவேன்
வடிக்கின் றனபோற் சிலவன் திரைகள்
வலித்தெற் றிமுழங் கிலம்பு ரிகொண்டு
அடிக்குங் கடலங் கரைமேல் மகோதை
அணியார் பொழில்அஞ் சைக்களத் தப்பனே 9

எந்தம் அடிகள் இமையோர் பெருமான்
எனக்கென் றும்அளிக் கும்மணி மிடற்றன்
அந்தண் கடலங் கரைமேல் மகோதை
அணியார் பொழில்அஞ் சைக்களத் தப்பனை
மந்தம் முழவுங் குழலும் இயம்பும்
வளர்நாவ லர்கோன் நம்பியூ ரன்சொன்ன
சந்தம் மிகுதண் தமிழ்மா லைகள்கொண்டு
அடிவீ ழவல்லார் தடுமாற் றிலரே. 10

திருச்சிற்றம்பலம்

எடுத்த அத்திரு பதிகத்தின் உட்குறிப்(பு) இவ்வுல கினிற்பாசம்
அடுத்தவாழ்க்கையைஅறுத்திடவேண்டும்என் று அன்பர்அன்பினிற்பாடக்
கடுத்த தும்பிய கண்டர்தங் கயிலையிற் கணத்தவ ருடன்கூடத்
தடுத்த செய்கை தான் முடிந்திடத் தங்கழற் சார்புதந் தளிக்கின்றார்.

தாம் பாட எடுத்த திருப்பதிகத்தினில் உட்குறிப்பு இந்த உலகத்தினில் பாசம் உடைய இந்த வாழ்க்கையை அறுத்திட வேண்டுமென்றே அன்பாரம் எம்பிரான் சுந்தரர் அன்பினால் பாடிட; அதுவேளை அஃதுணர்ந்தருளிய நஞ்சு விளங்கிடும் கண்டமுடைய கடவுள் தனது திருக்கைலாயமலையில் சிவ கணங்களுடன் கூடிடும் படியானவகை தடுத்து இப்பூமியில் வைத்தருந்த விதியின் செய்கை; முடிந்திடும்படி தமது திருவடியின் சார்பினைக் கொடுத்து காத்தருள் புரிகின்றார். 31

மன்ற லந்தரு மிடைந்தபூங் கயிலையில் மலைவல்லி யுடன்கூட
வென்றி வெள்விடைப் பாகர்தாம் வீற்றிருந் தருளிய பொழுதின்கண்
ஒன்று சிந்தைநம் ஊரனே உம்பர்வெள்ளானையின் உடனேற்றிச்
சென்று சொண்டிங்கு வாரும் என்றபன் முதற்றேவர்கட் கருள்செய்தார்.

வாசனை அலரும் மலர்மரங்கள் நெருங்கிய பூங்கைலாய வெற்பில்; மலையரசன் புத்திரி உமையம்மையுடன் கூட; வெற்றி கொளும் வெளிய இடபத்து எழுந்தருளி எம்பெருமான் தாம் வீற்றிருந்தருளிய நேரத்தில்: திருமுன்பு இருந்தருளும் பிரமன் முதலாய கடவுளரை நோக்கி இவ்வுலக பாசம் நீங்கி நம்மையே அடைந்திட ஒருமைப்பாடு சிந்தையில் கொண்ட நமது நம்பியாரூரனை தேவ உலகத்து வெள்ளானையுடன் நீர் திருவஞ்சைக்களம் சென்று அதன்மீது அவனை ஏற்றிக் கொண்டு இங்குவாருங்கள் என்று அருள்செய்திடலும். 31

வான நாடர்கள் அரிஅயன் முதலினோர் வணங்கிமுன் விடைகொண்டு
தூந லந்திகழ் சோதிவெள் ளானையுங் கொண்டுவன் றெண்டர்க்குத்
தேன லம்புதண் சோலைசூழ் மகோதையில் திருவஞ்சைக் களஞ்சேரக்
கான லங்கொள வலங்கொண்டு மேவினர் கடிமதில் திருவாயில்.

எம்பெருமான் அருள்புரிதலும் வான உலக நாடர்களாகும் கடவுளர் திருமால் பிரமன் இந்திரன் முதலினோர் வணங்கி முன்னை விடைபெற்றுக் கொண்டு தூய நன்மை திகழும் சோதியமான வெள்ளை ஆனையையும் சுந்தரமூர்த்திசுவாமிகளை ஏற்றிவரும்படி கொண்டு; தேன் சொரியும் குளிர்ந்த மலர்ச் சோலை சூழும் மகோதையில் திருவஞ்சைக்களம் என்னும் கோயிலைச் சேர்ந்து; அங்கு தமது கால்கள் நிலத்திலே பொருந்திட கோயிலை வலங்கொண்டு வந்து சேர்ந்தனர் காவலுடைய மதிலின் திருவாயில் முன்பாக. 32

தேவர் தங்குழாம் நெருங்கிய வாய்தலில் திருநாவ லூரர்தம்
காவல் மன்னரும் புறப்பட எதிர்கொண்டு கயிலைவீற்றிருக்கின்ற
பூவ லம்புதண் புனற்சடைமுடி யவர் அருளிப்பா(டு) எனப்போற்றி
ஏவல் என்ற பின் செய்வதொன் றிலாதவர் பணிந்தெழுந் தெதிரேற்றார்.

அவ்வேளை தேவர் கூட்டம் நெருங்கிய அத்திருவாய்தலில் திருநாவலூர் வாழ்வாரது அருட்காவலராம் எம் சுந்தரமூர்த்திப் பெருமானும் வெளியில்வந்து புறப்படலும்; அவரை தேவர்கள் எதிர்கொண்டு இந்தயானை மீது எழுந்தருளி வரும்படி கைலையில் வீற்றிருக்கின்ற பூக்கள் மலர்ந்த குளிர்ந்த நீர்க் கங்கைச் சடைமுடியார் சிவபெருமான் அருளிப்பாடு என்று போற்றிடலும்; எம்பிரானுடைய ஏவல் இது என்றதும் பின்னை செய்வதற்கு ஒன்றும் இல்லாதவர் பணிந்து எழுந்து எமது இன்னருள் நிறையும் சோதியைச் சிவனை கையிலையில் சென்று சேர்வதற்கு ஏற்றுக் கொண்டார். 33

ஏற்ற தொண்டரை அண்டர்வெள் ளானையின் எதிர் வலங் கொண்டேற்ற
நாற்ற டங்கடல் முழக்கென ஐவகை நாதமீ தெழுந்தார்ப்பப்
போற்றி வானவர் பூமழை பொழிந்திடப் போதுவார் உயிரெல்லாம்
சாற்றுமாற்றங்கள் உணர்பெருந்துணைவரை மனத்தினிற்கொடுசார்ந்தார்.

கைலை சென்றிட ஏற்ற தொண்டர் ஈந்தரர் பெருமானைத் தேவர்கள் எதிராக வலங்கொண்டு வெள்ளானை மீது ஏற்றிடலும் நான்கு திக்கிலுமுள்ள கடல்களின் முழக்கம் போன்று ஐந்து வகையான தேவதுந்துபிகளும் எழுந்து ஆர்ப்பரிப்ப தேவர்கள் போற்றி பூவின் மழைசொரிந்திட வெள்ளையானை மீது எழுந்தருளிப் போகின்ற அவர்; உயிர்கள் எல்லாம் மொழிகின்ற அதனை உணர்கின்ற பெரும் துணைவராம் சேரர்பெருமானை மனத்தினில் நினைந்து கொண்டு திருக்கைலை செல்கின்றார். 34

சேரர் தம்பிரான் தம்பிரான் தோழர்தஞ் செயலறிந் தப்போதே
சார நின்றதோர் பரியினை மிசைக்கொண்டு திருவஞ்சைக் களஞ்சார்வார்
வீரவெண்களிறுகைத்துவிண்மேற்செலும்மெய்த்தொண்டர் தமைக்கண்டார்
பாரில் நின்றிலர் சென்றதம் மனத்தொடு பரியும் முன் செல விட்டார்.

சேரகுலத்தை பெருமான் கழறிற்றறிவாரும் அப்பொழுதே தம்பிரான் தோழராய சுந்தரர் பெருமானின் செயலறிந்து தனது பக்கராக நின்ற ஒருகுதிரையில் ஏறிக்கொண்டு திருவஞ்சைக்களம் என்னும் கோயிலைச் சேர்கின்றவர் வீரமுடைய வெள்ளானையைச் செலுத்தி வானமேல் செல்லும் உண்மைத் தொண்டர் சுந்தரமூர்த்தி சுவாமிகளைக் கண்டார். உடன் பூமியில் நின்றிலர். அவருடன் சென்ற மனத்தொடு தமது குதிரையையும் முன்னைச் செல்ல விட்டார். 35

விட்ட வெம்பரிச் செவியினிற் புவிமுதல் வேந்தர்தாம் விதியாலே
இட்ட மாஞ்சிவ மந்திரம் ஓதலின் இருவிசும் பெழப்பாய்ந்து
மட்டலர்ந்தபைந் தெரியல்வன் றெண்டர்மேல் கொண்டமாதங்கத்தை
முட்ட எயதிமுன் வலங்கொண்டு சென்றது மற்றதன் முன்னை.

முன்னைச் செல்லவிட்ட கொடுவேகமுடைய குதிரையின் திருக்காதில் இப்பூமியில் முதன்மையுடைய அரசர் கழறிற்றறிவாரும் விதிப்படி இட்டமாய சிவமந்திரத்தை ஓதுதலினால் அக்குதிரை வானம் எழப்பாய்ந்து எழுந்து போய் தேன் மலர மலர்ந்த பசிய மலர்மாலை அணிந்த வன்றெண்டர் மேல் கொண்டு எழுந்தருளிப் போகும் பெரும் வெள்ளானையை அணுகச் சென்று; முன்னை வலம் கொண்டு; அந்த யானையின் முன்னை சேர அரசர் பிரானுடைய அக்குதிரை சென்றது. 36

உதியர் மன்னவர் தம்பெருஞ் சேனையின் உடன் சென்ற படைவீரர்
கதிகொள் வாசியிற் செல்பவர் தம்மைத் தங்கட் புலப்படுமெல்லை
எதிர்வி சும்பினிற் கண்டுபின் கண்டிலர்; ஆதலின் எல்லாருங்
முதிரும் அன்பினில் உருவிய சுரிகையால் முறைமுறை உடல் வீழ்த்தார்.

சேர அரசருடை பெரும் சேனையினுடாக அரசரைப் பின் தொடர்ந்து திரு வஞ்சைக்களம் சென்ற படைவீரர்; மிக்க வேகத்தினுல் குதிரைமீது செல்லும் கழறிற்றறிவார் பெருமானே தமது கண்ணின் புலன்கள் காணப்படும் எல்லை வரையிலும் நேராக வானத்தில் கண்டு; பின்னுல் மிகு தூரம் சென்ற பின் காணமுடியாதவராய் எல்லாரும் சேரர் பெருமானிடத்துக் கொண்ட முதிர்ந்த அன்பினுல் தாம் தம் அரை நின்றும் உருவி எடுத்த சுழல்வாளினுல் முறை முறை தமது உடல்களைக் குற்றி நிலமிசை வீழ்த்தினர். 37

வீர யாக்கையை மேல்கொண்டு சென்றுபோய் வில்லவர் பெருமானைச்
சார முன்சென்று சேவக மேற்றனர் தனித் தொண்டர் மேல்கொண்ட
வாரும் மும்மதத் தருவி வெள்ளானைக்கு வயப்பரி முன்வைத்துச்
சேரர் வீரருஞ் சென்றனர் மன்றவர் திருமலைத் திசைநோக்கி.

அச் செய்கையால் வீர உடம்பினை உடன் எடுத்துக்கொண்டு சென்று போய்; வில்லின் கொடியுடைய சேரர் பெருமானைச் சேர முன் சென்று அவர்க்கு இவ்வுலகில் தாம் கொண்ட சேவகம் போல் அங்கும் கொண்டனர். அப்பொழுது தனியான தொண்டர் சுந்தரர் பெருமான் மேல் கொண்ட வாரும் மும்மதத்து அருவி வெள்ளம் சொரியும் வெள்ளானைக்கு வீரமுடைய தனது குதிரையை முன்னுக வைத்து சேரர்களின் வீரரான கழறிற்றறிவாரும் சென்றூர்; கனகசபையில் நடமாடும் பெருமானுடைய திருக்கைலாய மலைத்திசையினை நோக்கி; 38

யானை மேல்கொண்டு செல்கின்ற பொழுதினில் இமையவர் குழாமென்னும்
தானை முன்செலத் தானெனை முன் படைத்தான் எனுந் தமிழ்மாலை
மான வன்றொண்டர் பாடிமுன் னணைந்தனர் மதிநதி பொதிவேணித்
தேன லம்புதண் கொன்றையார் திருமலைத் தென்றிசைத் திருவாயில்.

வன்றொண்டராய மானமுடைய சுந்தரர் பெருமான் யானை மேல் கொண்டு செல்கின்ற நேரத்து தேவர்கள் கூட்டம் என்னும் சேனை முன்னுகச் சென்றிட: ''தான் எனை முன்படைத்தான்'' எனத்தொடங்கும் தமிழின் தேவாரப் பதிகமாலையைப் பாடியருளி முன்னுகச் சென்று சேர்ந்தார் பிறையும் கங்கையும் பொதிந்த சடையில் தேன் சொரியும் குளிர்ந்த கொன்றை மாலையும் சூடியருளிய சிவபிரானது திருக்கைலாய மலையின் தென்திசையில் உள்ள திருவாயிலிடத்து. 39

அவர் திருக்கைலாய மலை நோக்கிச் சென்றருளும் போது பாடியருளிய தமிழ் மாலையாம் அப்பதிகத்தை இப்பால் தருகின்றோம்.

திருநொடித்தான்மலை

பண்—பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

தானெனை முன்படைத்தான் அதறிந்துதன் பொன்னடிக்கே
நானென பாடலந்தோ நாயினேனைப் பொருட்படுத்து
வானெனைவந் தெதிர்கொள்ள மத்தயானை அருள்புரிந்து
ஊனுயிர் வேறுசெய்தான் நொடித்தான்மலை உத்தமனே. 1

ஆனை உரித்தபகை அடியேனெடு மீளக்கொலோ
ஊனை உயிர்வெருட்டி ஒள்ளியானை நினைந்திருந்தேன்
வானை மதித்தமரர் வலஞ்செய்தெனை ஏறவைக்க
ஆனை அருள்புரிந்தான் நொடித்தான்மலை உத்தமனே. 2

மந்திரம் ஒன்றறியேன் மனைவாழ்க்கை மகிழ்ந்தடியேன்
சுந்தர வேடங்களால் துரிசேசெயுந் தொண்டன்எனை
அந்தர மால்விசும்பில் அழகானை அருள்புரிந்த
துந்தர மோநெஞ்சமே நொடித்தான்மலை உத்தமனே. 3

வாழ்வை உகந்தநெஞ்சே மடவார்தங்கள் வல்வினைப்பட்டு
ஆழ முகந்தஉன்னை அதுமாற்றி அமரரெல்லாம்
சூழ அருள்புரிந்து தொண்டனேன்பரம் அல்லதொரு
வேழம் அருள்புரிந்தான் நொடித்தான்மலை உத்தமனே. 4

மண்ணுல கிற்பிறந்து நும்மைவாழ்த்தும் வழியடியார்
பொன்னுலகம் பெறுதல் தொண்டனேனின்று கண்டொழிந்தேன்
விண்ணுலகத்தவர்கள் விரும்பவெள்ளையானையின்மேல்
என்னுடல்காட்டுவித்தான் நொடித்தான்மலை உத்தமனே. 5

அஞ்சினை ஒன்றிநின்று அலர்கொண்டடி சேர்வறியா
வஞ்சனை என்மனமே வைகிவானநன் னாடர்முன்னே
துஞ்சுதல் மாற்றுவித்துத் தொண்டனேன்பர மல்லதொரு
வெஞ்சின ஆனைதந்தான் நொடித்தான்மலை உத்தமனே. 6

நிலைகெட விண்அதிர நிலம்எங்கும் அதிர்ந்தசைய
மலையிடை யானைஏறி வழியேதரு வேன்எதிரே
அலைகட லால்அரையன் அலர்கொண்டுமுன் வந்திறைஞ்ச
உலையாத யாதவண்ணம் நொடித்தான்மலை உத்தமனே. 7

அரவொலி ஆகமங்கள் அறிவார்அறி தோத்திரங்கள்
விரவிய வேதஒலி விண்ணெலாம்வந் தெதிர்ந்திசைப்ப
வரமலி வாணன்வந்து வழிதந்தெனக் கேறுவதோர்
சிரமலி யானைதந்தான் நொடித்தான்மலை உத்தமனே. 8

இந்திரன் மால்பிரமன் எழிலார்மிகு தேவரெல்லாம்
வந்தெதிர் கொள்ளஎன்னை மத்தயானை அருள்புரிந்து
மந்திர மாமுனிவர் இவர்என எம்பெருமான்
நந்தமர் ஊரனென்றுன் நொடித்தான்மலை உத்தமனே. 9

ஊழிதோ றூழிமுற்று முயர்பொன்நொடித் தான்மலையைச்
சூழிசை யின்கரும்பின் சுவைநாவல ஊரன்சொன்ன
ஏழிசை இன்தமிழால் இசைந்தேத்திய பத்தினையும்
ஆழி கடலரையன் அஞ்சைஅப்பர்க் கறிவிப்பதே. 10

திருச்சிற்றம்பலம்

மாசில் வெண்மைசேர் பேரொளி உலகெலாம் மலர்ந்திட வளர்மெய்ம்மை
ஆசில் அன்பர்தஞ் சிந்தைபோல் விளங்கிய அணிகிளர் மணிவாயில்
தேசு தங்கிய யானையும் புரவியும் இழிந்துசே ணிடைச்செல்வார்
ஈசர் வெள்ளிமா மலைத்தடம் பலகடந் தெய்தினர் மணிவாயில்.

மாசிலாத வெண்மை உடைய பேரொளி உலகம் எல்லாம் மலர்ந்திட; வளரும் உண்மை நிறைந்த குறையிலாத அன்பர்களது சிந்தை போன்று விளங்கிய அழகு செறியும் தென்திசைத் திருவாய்தல் முன்பாக தேசு தங்கிய வெள்ளானையையும் குதிரையையும் இறங்கி வானத்தில் மேல் எழுந்து செல்பவர் ஈசனுடைய வெள்ளி மயமான திருக்கைலாய மலைகளின் பல இடங்கள் கடந்து வந்து அழகிய திருவாயிலினைச் சேர்ந்தனர். 40

அங்கண் எய்திய திருஅணுக் கன்திரு வாயிலின் அடற்சேரர்
தங்கள் காவலர் தடையுண்டு நின்றனர் தம் பிரான் அருளாலே
பொங்கு மாமதம் பொழிந்தவெள் ளானையின் உம்பர்போற் றிடப்போந்த
நங்கள் நாவலூர் காவலர் நண்ணினூர் அண்ணலார் திருமுன்பு.

அங்கு சேர்ந்த திருஅணுக்கன் திருவாய்தலில் வலியுடைய சேரர் பெருமான் மேலும் செல்ல முடியாது தடைப்பட்டு நின்றனர். ஆனால் தனது பெருமான் திருவருளாலே பொங்கும் பெருமதம் பொழியும் வெள்ளானையில் தேவர்கள் போற்றிடச் சென்றருளிய நங்களது திருநாவலூர்க்காவலர் நம்பியாரூரம் சென்றடைந்தார் எம்பெருமான் சிவன் திருமுன்பாக. 41

சென்று கண்ணுதல் திருமுன்பு தாழ்ந்துவீழ்ந் தெழுந் துசேணிடைவிட்ட
கன்று கோவினைக் கண்டணைந்தது எனக் காதலின் விரைந்தெய்தி
நின்று போற்றிய தனிப்பெருந் தொண்டரை நேரிழை வலப்பாகத்
தொன்றும் மேனியர் ஊரனே! வந்தனை என்றனர் உலகுய்ய.

எம்பெருமான் சுந்தரர் சென்று கண்ணுதற் கடவுளின் திருமுன்பு தாழ்ந்து வீழ்ந்து எழுந்து மிக நெடுநாட்களாக விட்டிட்டிருந்த கன்று தன்தாய்ப் பசுவினைக் கண்டு ஓடிப்போவது போன்று காதலால் விரைந்து சென்று திருமுன்பு நின்று போற்றிய தனிப்பெரும் தொண்டர் சுந்தரர் பெருமானை நோக்கி; அழகிய ஆபரண மணிந்த அம்மையின் வலப்பாகத்து அவளும் தானுமாக இணைந்த மேனியுடைய சிவபெருமான் நம்பியாரூரனே! வந்தனை என அருள்புரிந்தார் உலகம் உய்ந்திட; 42

அடிய னேன்பிழை பொறுத்தெனை ஆண்டுகொண் டத்தொடக் கினைநீக்கி
முடிவு லாநெறி தரும்பெரும் கருணான் தரத்ததோ? என முன்னர்ப்
படியும் நெஞ்சொடு பன்முறை பணிந்தெழும் பரம்பரை ஆனந்த
வடிவு நின்றது போன்ற்ன்ப வெள்ளத்து மலர்ந்தனர் வன்றொண்டர்.

அது நேரம் வன்றொண்டராம் நம்பியாரூரர் எம்பிரானை வணங்கி ஐயனே அடியனேன் பிழை பொறுத்து என்னையாண்டு கொண்டு உலகத்தின் பாசம் வினை விக்கும் அத்தொடக்கு அறுத்து நீக்கி; முடிவிலாத சிவபோகம் தரும் நெறியினைத் தந்த பெருங்கருணை எம்மால் அறியும் தரத்ததோ என திருமுன்பு படியும் நெஞ்சமொடு பலமுறை பணிந்து எழுகின்றதொரு பரம்பரையின் ஆநந்த வடிவு நின்றது போன்று இன்பவெள்ளத்து மலர்ந்து நின்றார். 43

நின்ற வன்றொண்டர் நீரணி வேணிய! நின்மலர்க் கழல்சாரச்
சென்று சேரலன் திருமணி வாயிலின் புறத்நிலன் எனச் செப்பக்
குன்ற வில்லியார் பெரியதே வரைச்சென்று கொணர்கென அவரெய்தி
வென்றிவானவர்க்குஅருளிப்பாடுஎனஅவர் கழல்தொழ விரைந்தெய்தி.

அவ்வாறு மலர்ந்து நின்ற வன்றொண்டர் எம்பிரானை நோக்கி நீர் அணிந்த சடையுடைய மூர்த்தியே! தேவரீருடைய நிறைந்த ஆநந்தம் வினையும் மலர்பாதம் சேர்ந்திட வந்து; சேரஅரசன் திருவுடை அழகிய வாய்தலின் வெளியில் நின்றனன் என மொழிந்தருளலும்; அது போது மேருமலையை வில்லாகக் கொண்ட பெருமானும் தமது திருமுன்பு நின்ற கணங்கட்கெல்லாம் மூத்தவராய நந்தியெம் பெருமானை நோக்கியருளி; சேர அரசனை இங்கு கொணர்வாய் என்றிடலும் நந்தியெம்பிரான் சென்று சேர அரசரை நோக்கி'' தொண்டினுல் பெருவெற்றி அடைந்த தேவரே,, சந்நிதிவந்திட அருளப்பட்டது என்றிடலும் அது கேட்டருளி; கிருபாசமுத்திரமான ஈசன் திருவடிகள் பணிந்திட கழறிற்றறிவார் விரைந்து சென்று; 4

மங்கை பாகர்தந் திருமுன்பு சேய்த்தாக வந்தித்து மகிழ்வெய்திப்
பொங்கும் அன்பினிற் சேரலர் போற்றிடப் புதுமதி அலைகின்ற
கங்கை வார்சடைக் கயிலைநா யகர் திருமுறுவலின் கதிர்காட்டி
இங்கு நாம் அழையாமைநீ எய்திய தென் என அருள்செய்தார்.

பெண் ஒருபாகராய சிவன் திருமுன்பு சமீபமாகச் சென்று கண்டு வணங்கி மகிழ்வெய்தி உள்ளம் பொங்கும் அன்பினுல் சேர அரசர் போற்றிடலும்; அது வேளை புதிய பிறை கிடைந்து அலைகின்ற கங்கை நதி பொதிந்த சடையுடைய கயிலை நாயகர் சிவன் திருமுறுவலின் ஒளிகாட்டி சேர அரசரை நோக்கி இங்கு நாம் அழையாது நீவந்திட்டஎன்ன காரணம் என்றலும். 45

அரசர் அஞ்சலி கூப்பிநின்(று) அடியனேன் ஆரூரர் கழல்போற்றிப்
புரசை யானைமுன் சேவித்து வந்தனன் பொழியுநன் கருணைதெண்
டிரைசெய் வெள்ளமுன் கொடுவந்து புகுதலின் திருமுன்பு வரப்பெற்றேன்
விரைசெய்கொன்றைசேர்வேணியாய்இனியொருவிண்ணப்பம்உளதுஎன்று

அது கேட்டு சேரஅரசரும் அஞ்சலி கூப்பி நின்று பெருமானே! அடியேன் ஆரூரர் சுந்தரர் திருவடிபோற்றி அவரது உப்பரிகை உடைய வெள்ளானை முன் சேவித்து வந்தனன் அவ்வாறு வருகின்ற என்னை பொழியும் நினது கருணையின் தெள்ளிய திரை செய்யும் வெள்ளம் மிதத்தி உம்முன் கொடுவந்து சேர்த்தலில் திருமுன்பு வரப்பெற்றேன். வாசனை செய்யும் கொன்றை மாலை சேரும் சடையுடையாய் இனியொரு விண்ணப்பம் உளது என்று. 46

பெருகு வேதமும் முனிவரும் துதிப்பரும் பெருமை யாய் உனை அன்பால்
திருஉ லாப்புறம் பாடினேன் திருச்செவி சாத்திடப் பெறவேண்டும்
மருவு பாசத்தை அகன்றிட வன்றொண்டர் கூட்டம்வைத் தாய் என்ன
அருளும் ஈசருஞ் சொல்லுக என்றனர் அன்பருங் கேட்பித்தார்.

பெருகிடும் வேதமும் முனிவரும் துதிப்பதற்கு அரிதாய பெருமை உடையவனே! தேவரீரை அன்பால் திருஉலாப்புறம் பாடினேன். அதனை திருச்செவி சாய்த்திடப் பெறல் வேண்டும்; என்னை அடையும் பாசத்தை நீக்கிட வன்றொண்டாரம் சுந்தரது கூட்டத்தை அடியேற்கு வைத்தருளினீர் என்றிடலும் அதற்காக அருள்புரியும் கடவுளும் சேர அரசரை நோக்கியருளி சொல்லுக என்று அருள்புரிதலும் சேர அரசரும் அந்த திருஉலாப்பதிகத்தை பாடி கேட்பித்தார். 47

சேரர் காவலர் பரிவுடன் கேட்பித்த திருஉலாப் புறங் கொண்டு
நாரி பாகரும் நலம்மிகு திருவருள் நயப்புடன் அருள்செய்வார்
ஊர னுகிய ஆலால சுந்தரனுடமர்ந் திருவீரும்
சார நங்கண நாதராம் தலைமையில் தங்கும் என் றருள்செய்தார்.

சேரமக்களின் காவலராகும் கழறிற்றறிவாரும் அன்புடன்கேட்பித்தருளிய திருஉலாப்புறம்எனும் பதிகத்தைகேட்டருளிக் கொண்டு பெண்ஒரு பாகராய பெருமானும் திருவருள் நயப்புடன் அருள்செய்வார்; நம்பியாரூரனுகிய ஆலால சுந்தரனுடன் நீயும்அமர்ந்து இருவரும் எம்மைச் சாரும் கணங்கட்க நாதராகும் தலைமையில் தங்கி இருப்பீராக என்று அருள்புரிந்தார். 48

அன்ன தன்மையில் இருவரும் பணிந்தெழுந் தருள் தலை மேற்கொண்டு
மன்னும் வன்றொண்டர் ஆலால சுந்தரர் ஆகித் தாம் வழுவாத
முன்னை நல்வினைத் தொழில் தலை நின்றனர் முதற்சேரர் பெருமானும்
நன்மை சேர்கண நாதராய் அவர் செயும் நயப்புறு தொழில் பூண்டார்.

அன்னதன்மையாக இருவரும் பணிந்து எழுந்து எம்பெருமான் அருள் தலை மேற்கொண்டு; விளங்கும் வன்றொண்டர் ஆலாலசுந்தராகி தாம்என்றும் வழுவாது புரிந்த முன்னைய நற்செயலின் தொழிலில் தலைநின்றார். முதன்மை உடைய சேர அரசர் பெருமானும் நன்மை சேர்ந்த கணநாதராகி அவர்செய்திடும் விருப்புடைய தொழிலை மேற்கொண்டனர். 49

தலத்து வந்துமுன் னுதயஞ்செய் பரவையார் சங்கிலி யாரென்னும்
நலத்நின் மிக்கவர் வல்வினைத் தொடக்கற நாயகி அருளாலே
அலத்த மெல்லடிக் கமலினி யாருடன் அனிந்திதை யாராகி
மலைத்த னிப்பெரு மான்மகள் கோயிலில் தந்தொழில் வழிநின்றார்.

இப்பூமியிடத்து முன்வந்து பிறந்த பரவையார் சங்கிலியாரெனும் இவர்கள் நலத்தின் மிக்க அவரது வலிய வினையின் தொடர்ச்சி அற்று நீங்கிட எம்பிரட்டி அருளாலே செம்பஞ்சு சூட்டிய மெல்லடியினை உடைய கமலினி அனிந்திதை என்பவராகி மலையரசன் தனிப்பெரும் புத்திரியாம் உமையம்மை யாரது கோயிலில் தமக்குற்ற அடிமைத்தொழில் வழி நின்றார்கள். 50

வாழி மாதவர் ஆலால சுந்தரர் வழியிடை அருள் செய்த
ஏழி சைத்திருப் பதிகம்இவ் வுலகினில் ஏற்றிட எறிமுந்நீர்
ஆழிவேந்தனும் வருணனுக்(கு) அளித்திட அவனும்அவ் வருள்சூடி
ஊழி யிற்றனி யொருவர்தம் திருவஞ்சைக் களத்நிலுய்த் துணர்வித்தான்.

எமக்கு பெருவாழ்வு தரும் தபோதனர் ஆலால சுந்தரர் வெள்ளானை மீது கைலை மலை செல்லும் வழியிடை பாடியருளிய 'தானெனை முன் படைத்தான்' எனத் தொடங்கிடும் ஏழிசை பொருந்திய திருப்பதிகம் அதனை இந்த உலகத்தில் அறிந்திடச் செய்ய; அலைமோதும் கடல் அரசனும் வருணனிடம் அப்பதிகத்தை அறிந்திடக் கொடுத்து அதனை உலகில் அறியச் செய்யும் படி பணிப்ப; வருணனும் அந்த அருளிப் பாட்டை தலைக்கொண்டு ஊழிக் காலங்கட்கெல்லாம் தனி ஒருவர் சிவன் அமர்ந்த திருவஞ்சைக் களத்தில் சேர்த்து அதனை அடியவர் ஒருவர் பால் உணர்வித்தான். 51

சேரர் காவலர் விண்ணப்பஞ் செய்தஅத் திருவுலாப் புறம் அன்று
சாரல் வெள்ளியங் கயிலையிற் கேட்டமா சாத்தனார் தரித்திந்தப்
பாரில் வேதியர் திருப்பிட வூர்த னில் வெளிப்படப் பகர்ந்தெங்கும்
நார வேலைசூழ் உலகினில் விளங்கிட நாட்டினர் நலத்தாலே.

சேர மக்களது காவலர் கழறிற்றறிவார் கைலைமலைப் பெருமானுக்கு விண்ணப்பம் செய்த ''திரு உலாப்புறம்'' எனும்பாமாலையானது அன்று அதனை நல்ல சாரல் சோலையுடைய திருக்கையால மலையில் கேட்ட பெரும் தேவர் மாசாத்தனார் அதனைத் தாங்கி இந்தப் பூமியில் அந்தணர்களது திருப்பிடவூரில் வெளிப்பட மொழிந்த ருளி கடல் சூழ்ந்த இந்த உலகில் அப்பதிகம் விளங்கிட நாட்டினர் மிகு நன்மையினாலே. 52

அவர் பாடிய; திருக்கைலாய ஞானஉலா பதிகத்தின் முற்பகுதியிற்சில கீழே காண்க

திருக்கைலாய ஞானஉலா

திருச்சிற்றம்பலம்

திருமாலும் நான்முகனுந் தேர்ந்துணராது அன்றங்கு
அருமால் உற அழலாய் நின்ற—பெருமான்

பிறவாதே தோன்றினன் காணாதே காண்பான்
துறவாதே யாக்கை துறந்தான்—முறைமையால்

ஆழாதே ஆழ்ந்தான் அகலா தகலியான்
ஊழால் உயராதே ஓங்கினன்—சூழொளிநூல்

ஓதா துணர்ந்தான் நுணுகாது நுண்ணியான்
யாதும் அணுகா தணுகியான்—ஆதி

அரியாகிக் காப்பான் அயனாகிப் படைப்பான்
அரனாய் அழிப்பவனுந் தானே — பரனாய

தேவர் அறியாத தோற்றத்தான் தேவரைத்தான்
மேவிய வாறே விதித்தமைத்தான் — ஓவாதே

எவ்வுருவில் யாரொருவர் உள்ளுவார் உள்ளத்துள்
அவ்வுருவாய்த் தோன்றி அருள்கொடுப்பான்—...

திருச்சிற்றம்பலம்

வேறு

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித் துள்ளமும் ஓங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்.

இவ்வண்ணமாக என்றும் இன்பம் இவ்வுலகில் பெருகும் இயல்பினால் அடியார்கள் ஒருமைப் பாட்டுடன் இறைவனையே காதலித்து உள்ளம் ஓங்கிட; கனகசபையில் ஆடியருளும் அருட்சோதியின் அடியாரது மேலான புகழ்: எக்காலமும் நிலவி எங்கும் நின்றது இந்த உலகெலாம்; 53

வெள்ளானைச் சருக்கம் முற்றிற்று

பெரிய புராணமெனும் திருத்தொண்டர் புராணம் முற்றிற்று.

ஆகத்திரு விருத்தம்: 4281